9a.

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

கதைக் கோவை

தொகுதி IV

V.N.C.T.
ASSOCIATION
PAGANERI.
LIBRARY

பிரபல ஆசிரியர்கள்:

ராஜாஜி
எஸ். வி. வி.
ஏ. எஸ். பி. ஐயர், ஐ. ஸி. எஸ்.
திரு. வி. க.
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
ரா. பி. சேதுப்பிள்ளை
மகாகவி டாகூர்
பங்கிம் சந்திரர்
சரத் சந்திரர்
பிரேம்சந்த்
பண்டிட் நடேச சாஸ்திரி
வி. ஸ. காண்டேகர்
கி. வா. ஜகந்நாதன்
த. நா. குமாரஸ்வாமி
கு. ப. ராஜகோபாலன்
தி. ஜ. ர.
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
தி. நா. சுப்பிரமணியன்
க. நா. சுப்ரமண்யன்

எழுதிய நூல்கள் யாவும்
எங்களிடம் கிடைக்கும்

கலைமகள் கதை

தொகுதி IV

75 சிறந்த சிறுகதைகள்

75 எழுத்தாளர்
எழுதியவை

சென்னை மேயர்
திரு. எம். ராதாகிருஷ்ண பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
அவர்கள் முன்னுரை கொண்டது

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் : : சென்னை

காகிதம்] 1945 [ரூ. 10-8-0

தமிழ்நாட்டுச் சிறுகதைகள்

1. மங்கையர்க்கரசியின் காதல்
2. நீலமணி
3. கன்யாகுமாரி
4. சந்தனக் காவடி
5. சக்ரவாகம்
6. கனகாம்பரம்
7. தோட்டியை மணந்த அரசகுமாரி
8. பவழமாலை
9. வெண்தாமரை
10. அழகி
11. ஜடாதரன்
12. லக்ஷ்மீகடாக்ஷம்
13. குழலோசை

M. I. P. PROJECT
Microfilmed.

14. குழந்தையின் மனம்
15. வாடாவிளக்கு
16. பிள்ளை வரம்
17. தேவகி
18. சக்திவேல்
19. மோகினி
20. போகிற வழியில்
21. பட்டுப் புடைவை
22. ஆலமரத்துப் பிள்ளையார்
23. வைர டோலக்
24. ஐ. வி. எஸ். பிள்ளை
25. பட்டாசுக்கட்டு
26. கொந்தளிக்கும் பாசம்
27. வஸந்தா
28. விமோசனம்

கமீர் அச்சுக்கூடம், சென்னை
முதற் பதிப்பு – 6-8-45–810 பிரதிகள்

முகவுரை

தமிழ் நாட்டில் இப்போது உரைநடைக்கு நல்ல காலம். புத்தம் புதிய துறைகளில் எழுத்தாளர்கள் ஈடுபட்டு உரைநடை நூல்களை எழுதிக் குவிக்கும் காலம் இது. உலகம் முழுவதுமே உரைநடை ஆட்சிதான் எல்லா மொழிகளிலும் நிலவிவருகின்றது. விளம்பரமும் பிரசாரமும், சமயமும் விஞ்ஞானமும், கவிதை யுணர்ச்சியும் கலையறிவும் உரைநடையின் துணைகொண்டு மக்களை அணுகுகின்றன. தமிழ் நாட்டில் இன்று காணப்படும் உரைநடை முயற்சிகளுக்கு இந்தக் காலப்போக்கே மூலகாரணமாகும்.

மேல்நாட்டில் அண்மையில் உரைநடையில் பலபல புதுத் துறைகள் வந்துள்ளன. விரைவும் எளிமையும் வேண்டிநிற்கும் இன்றைய உலகத்தில் ஆழ்ந்து அமைந்த கருத்துக்களும் நீண்டு விரிந்த பொருள்களும் மக்களுடைய கருத்தை ஈர்ப்பதில்லை. பெரிய நவீனங்களைக் காட்டிலும் சிறுகதைகள் மலிந்திருக்கின்றன; பெரிய நாடகங்களைவிட ஒற்றையங்க நாடகங்களை மக்கள் மிகுதி யாக விழைகின்றார்கள்; ஆழ்ந்து அகன்ற அறிவு நூல்களைவிடச் சிறிய கட்டுரைகளை மிக விரும்பிப் படிக்கிறார்கள். இந்தக் கார ணத்தினால்தான் சிறுகதை என்ற இலக்கியவகை தான் தோன்றிய சிறிது காலத்துக்குள் பேரளவில் உலகமுழுவதும் பரவிவிட்டது. உலகத்து மொழிகள் எல்லாவற்றிலும் புதிய இலக்கிய வகை களில் சிறுகதை சிறப்பாக விளங்குகிறது. தமிழ் நாட்டில் சிறுகதை வளர்ச்சி வியத்தற்குரியது. அளவிலும் அழகிலும் தமிழ்ச் சிறுகதைகள் மிகச்சிறந்து விளங்குகின்றன.

அல்லயன்ஸ் கம்பெனியார் வெளியிட்டு வரும் கதைக் கோவைத் தொகுதிகள் தமிழ் நாட்டுச் சிறுகதை இலக்கியத்துக்கு அளவை கோலாக உதவும். தமிழ்ச் சிறுகதைகளின் சரித்திரத்தை இந்த அரிய தொகுதிகள் சொல்லுகின்றன.

இந்த நான்காவது தொகுதியில் 75 சிறுகதைகள் அடங்கி யிருக்கின்றன. தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களில் பலருடைய கதைகள் தனித்தனியே தொகுக்கப் பெற்றுத் தனிப்புத்தகங்க ளாகவும் வெளியாகியிருக்கின்றன. பல கதைகளை எழுதாவிட்டா லும் சில கதைகளை எழுதிய பலர் இப்போது தமிழ் நாட்டில்

இருக்கிறார்கள். சிறுகதைகளின் இலக்கணம் மிக நன்றாக அமைந்துள்ள கதைகளை இவர்கள் எழுதியிருக்கிறார்கள். தொகுதியாக வந்த புத்தகங்களின் ஆசிரியர்கள் எழுதிய கதைகளுக்கு இவர்களுடைய கதைகள் இணையாக நின்று விளங்கக் கூடியவையே. இந்த உண்மையை இந்தத் தொகுதி, இதற்கு முன்புள்ள தொகுதிகளைக் காட்டிலும் நன்றாக வெளிப்படுத்துகிறது.

இந்தக் கோவையிலுள் மனித உள்ளம், எப்படி எப்படியெல்லாம் உலகத்தைக் காண்கிறதென்பதை அறிந்து இன்புறலாம். உலகத்தில் நம் கண்முன் நிகழும் நிகழ்ச்சிகளை உருவாக்கிக் கதையாக்கிக் காட்டும் சித்திரங்கள் பல இத் தொகுதியில் உள்ளன. மனிதனது இருதயக் கொந்தளிப்பையும், உணர்ச்சி வேகத்தையும், குணவிசேஷத்தையும், வாழ்க்கையின் நுண்ணிய பகுதிகளையும் சொல்லாலே கோலஞ் செய்து உருவம் கொடுத்துக் காட்டும் கதைகள் பல உண்டு. வாழ்க்கையிலே நிகழும் சிக்கல்கள், சுவைப்பதற்குரிய முரண்பாட்டு நயம், விதியின் வலிமை, மேலோங்கி நின்று முடிக்கும் முடிவுகள், ஆண் பெண் தொடர்பு விநோதங்கள், தியாகத்தின் பிரிணாமங்கள், தீய உள்ளத்தின் கோணல்கள், வறுமையின் அலங்கோலக் காட்சிகள், பொருமையின் விளைவுகள் என்ற பலபல வேறுபாட்டு நயமுள்ள பொருள்களை மூலக் கருவாகக் கொண்ட கதைகள் இதில் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சுவை ; ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நடை.

முக்கியமாக ஒரு விஷயம் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது அவசியம். தமிழ்மொழி கட்டுக்கிடையாதது என்ற அபவாதத்துக்கு இடமில்லாமல், மனித உணர்ச்சிகளை எடுத்துக் காட்டும்படி அமைந்தது என்பதை இந்தக் கதைகள் புலப்படுத்தும். வெறும் வார்த்தைகளின் அடுக்காக இல்லாமல் உணர்ச்சித் துண்டுகளாக விளங்கும் சொற்றொடர்கள் நிறைந்தது இத் தொகுதி. தமிழினால் சொல்ல இயலாத பொருளே இல்லை என்ற பெருமிதம் நமக்கு உண்டாகிறது.

இருபது வருஷங்களுக்கு முன் 'தமிழ் நெளிவான மொழி அன்று ; நினைப்பதைச் சொல்வதற்கு வார்த்தை இல்லை' என்று ஆங்கில மோகத்தில் மூழ்கிய பலர் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இன்று அப்படிச் சொல்லுபவர் யாரும் இல்லையென்றே நினைக்கிறேன். அப்படி யாரேனும் இருந்தால் இந்தக் கதைக்கோவையைப் படித்துப் பார்க்கும்படி. அவரைக் கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுது அவருக்கு உண்மை தெரியும். 'தமிழில் லாகவம்

இல்லை என்பது பொய். எழுதுபவர்கள் எழுதினால், உணர்ச்சியோடும் அன்போடும் எழுதினால், தமிழைப்போல ஜீவன் நிறைந்த பாஷை மிகச் சிலவே உண்டென்பது உலகத்துக்குத் தெரியும்' என்பதை ஒப்புக்கொள்வர்.

தமிழ்த்தாய் இன்று தன் குழந்தைகளின் தமிழார்வத்தைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைவாள். தனக்கு அவர்கள் சூட்டும் விதவிதமான மாலைகளை மிக்க மகிழ்ச்சியோடு புனைந்துகொண்டு பூரிப்பாள்.

அல்லயன்ஸ் கம்பெனியார் இந்தக் கோவையைத் தொடுப்பதற்கு மிக்க உழைப்பை மேற் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேல், இந்தக் காலத்தில் இதை அச்சிடும் நிறத்தில் அவர்கள் பல அல்லல்களுக்கு ஆளாகியிருக்கக்கூடும். எல்லாவற்றையும் ஏற்று, தளராமல் இதை வெளியாக்கியதற்குத் தமிழர்கள் அவர்கள்பால் நன்றி பாராட்டவேண்டும்.

தமிழ் நாட்டுப் புத்திலக்கிய சிருஷ்டி மேலும் மேலும் ஓங்க வேண்டுமானால் தமிழர்கள் இத்தகைய வெளியீடுகளைப் போற்றி ஆதரிக்கவேண்டும். கடமை யுணர்ச்சியும், மொழியன்பும் மிக்க அவர்கள் அதைச் செய்வார்களென்றே நம்புகிறேன்.

எம். ராதாகிருஷ்ண பிள்ளை.

எமது நன்றி

கதைக் கோவையின் நாலாந்தொகுதியை இப்போதேனும் வெளியிட முடிந்ததற்குக் காரணமான இறைவன் திருவருளை முதலில் வழுத்துகிறோம். சென்ற வருஷத்தின் இறுதியிலேயே வெளி வந்திருக்கவேண்டிய இந்தத் தொகுதி, காகிதப் பஞ்சம் காரணமாகவும் அச்சுக்கூடங்களில் தொழிலாளர்களின் குறை வாலும் இவ்வளவு தாமதமாக வருவதுபற்றித் தமிழன்பர்கள் எங்களைப் பொறுத்துத் தங்கள் ஆதரவை வழக்கம்போல் காட்டுவார்கள் என்று நம்புகிறோம். "கதைக் கோவை எப்பொழுது வெளிவரும், எப்பொழுது வெளிவரும்?" என அன்பர்கள் அடிக்கடி விசாரித்தும் எழுதியும் வந்ததைப் பார்த்த போது இவ் வெளியீட்டில் அவர்களுக்கு உள்ள ஆவல் எங்கள் ஆவலிலிடப் பன்மடங்கு அதிகமானதென்றே தோற்றியது.

காகிதத்தைத் தேடிப்பிடித்து அச்சுக்கூடத்தாருடைய கூட் டுறவைப் பெற்றுப் பதிப்பிப்பதற்குள் எத்தனையோ கண்டங் களின் வாய்ப்பட்டு இத்தொகுதி வெளியாகிறது. அன்பர்க ளுடைய ஆதரவு ஒன்றுதான், அந்த இடையூறுகளைப் பொருட் படுத்தாமல் இதனை வெளியிடக் காரணமாயிற்று.

தமிழ் நாட்டில் சிறுகதை உலகத்தில் கதைக் கோவைத் தொகுதிகள் நிரந்தரமான ஸ்தானத்தை அடைந்துவிட்டன. எழுத்தாளர்களின் எழுத்துத் திறமையை ஒருங்கே பார்க்கும் கண்ணாடியாக இவை உதவுகின்றன. தமிழ் நாட்டில் புதிய உணர்ச்சியும் புதிய ஜீவனும் உண்டாகி அற்புதங்களை விளைவிக் கின்றன என்பதைக் கதைக்கோவைத் தொகுதிகள் புதிது புதிதாக வெளியாவதாலும், ஒவ்வொன்றிலும் புதிய புதிய எழுத்தாளர் களின் கதைகள் வெளியாவதாலும் தெரிந்துகொள்ளலாம்.

இந்த நாலாந்தொகுதியில் எழுபத்தைந்து கதைகள் இருக் கின்றன. தமிழ் நாட்டில் உள்ள சிறுகதை எழுத்தாளர்கள்

பலர், தங்கள் தங்கள் கதைகளை அனுப்பி உதவினார்கள். 600 கதை வரையில் பரிசோதனைக்கு வந்தன. அவற்றைப் படித்துப் பார்த்து வெளியிடுவதற்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் ஸ்ரீமான்கள் (1) கி. வா. ஜகந்நாதன், (2) தி. ஜ. ர. (3) கா. ஸ்ரீ. ஸ்ரீ. (4) வித்வான் த. நா. ஸேனுபதி ஆகிய அன்பர் கள் உதவி செய்தார்கள். அவர்கள்பால் மிக்க நன்றி பாராட்டு கிறோம்.

முதலில் இத்தொகுதியில் 70 கதைகளே வெளியிடுவதாக எண்ணியிருந்தோம். வந்த கதைகளின் அளவைப் பார்க்கும் போது 100 கதைகளைக்கூட வெளியிடலாம்போல் இருந்தது. கடைசியில் 75 கதைகளைத் தேர்ந்தெடுத்தோம்.

இந்த 75 கதைகளுக்கு மேலும் சில அன்பர்களுடைய கதை கள் வெளியிடக்கூடியனவாக இருந்தன. இந்த அளவுக்குமேல் வேண்டாமென்று தீர்மானித்துவிட்டபடியால் அவற்றை இத் தொகுதியில் வெளியிட இயலவில்லை. விரைவிலேயே வெளியிட உத்தேசித்திருக்கும் 5-ஆம் தொகுதியில் அவற்றைச் சேர்த்துக்கொள்ள எண்ணியிருக்கிறோம்.

1945-ஆம் வருஷம் வெளிவரவேண்டிய 5-ஆம் தொகுதியைக் காகித நிலைமை சீர்பட்டால் இவ்வருஷ முடிவுக்குள் அன்பர்களின் பேருதவியைக் கொண்டு வெளியிடலாமென்றே நம்பியிருக்கிறோம்.

இத்தொகுதியில் பல புதிய இளைஞர்களைக் காணலாம். முதிய எழுத்தாளர்களும் இருக்கிறார்கள். பல பெண்மணிகளுடைய கதைகளும் இதில் வெளியாகின்றன. பத்திரிகைகளில் ஆசிரியர் களாக இருப்பவர்களுடைய கதைகளும் உள்ளன.

தமிழ்ப் பத்திரிகைகளில் அவ்வப்போது வெளியான பல கதைகள் இத் தொகுதியில் சேர்ந்திருக்கின்றன. தமிழ்க் கதை களின் வளர்ச்சிக்குப் பத்திரிகைகள் செய்த தொண்டு மிகச்சிறந்த தென்பதற்குக் கதைக் கோவைத் தொகுதிகள் ஒரு சாட்சியாக இருக்கும்.

பத்திரிகைகளில் வெளியான கதைகளின் விவரம் வரு மாறு: ஆனந்த விகடன் - கதைகள் 12, 13, 36, 38, 55, 70; கல்கி - 16, 22, 30, 35, 56, 59; கலாமோகினி - 61; திருமகள் - 42;

கலைமகன் - 25, 29, 45, 66, 71 ; காவேரி - 58 ; கிராம ஊழியன் - 3, 7, 24 ; குமரி மலர் - 60 ; சங்கநாதம் - 48 ; சுதேசமித்திரன் (வாரம்) - 32, 49, 72 ; தினமணி - 14, 57 ; நவசக்தி - 44 ; நவயுவன் - 41 ; பாரததேவி - 15 ; பாரதமணி - 31, 43, 47, 69 ; ஜகன் மோஹினி - 10 ; பிரசண்ட விகடன் - 18, 19 ; ஹனுமான் - 68 ; சங்கு 21 ; வலந்தம் - 26, 46 ; ஸ்ராசுதார் - 34 ; லோகோபகாரி - 37 ; பாக்கிக் கதைகள், எந்தப் பத்திரிகையிலும் வெளிவராதவை.

கதைகளை அனுப்பி உதவிய அன்பர்களுக்கு எங்கள் நன்றி உரியது. இத்தொகுதியைப் படித்து அன்புடன் முகவுரை எழுதிய சென்னை மேயர், திரு. ராதாகிருஷ்ணப் பிள்ளையவர்கள் உதவியை என்றும் மறவோம்.

— பதிப்பாளர்.



பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	ர. அய்யாசாமி, எம். ஏ. இன்ப வேட்கை	1
2.	ஜே. அனந்தவிஜயம் சுவைத் தொழில்	5
3.	"கரிச்சான் குஞ்சு" பஞ்சினிலி	8
4.	ம. சீ. கல்யாணசுந்தரம், பி. ஏ. குடிமடி தர்மம்	20
5.	சூ. பா. கல்யாணராமன் அதிர்ந்த காற்றடி	35
6.	"கஜமுகன்" மறுமலர்ச்சி	38
7.	அ. வே. ர. கிருஷ்ணஸ்வாமி திர்ப்பு	47
8.	ஸ்ரீதரம் குருஸ்வாமி மன்னி	51
9.	என். ஆர். கேதாரிராவ், எம். ஏ., எல். டி. கீர வெங்கட்டு	60
10.	வி. சி. கோபாலரத்னம், பி. ஏ., பி. எல். பட்-பட்-பட்	64
11.	கி. ரா. கோபாலன் சாந்தி எங்கே?	76

பக்கம்

12. "கோபு"

நிபாவளி எப்படி? ... 82

13. சகுந்தலா ராஜன்

பச்சைச் சேலை ... 89

14. வெ. சந்தானம்

மைதிலியின் கலக்கம் ... 93

15. ஆர். கே. சாமி

இரு நிலைகள் ... 103

16. "சாவி"

நினைத்ததும் கடைத்ததும் ... 111

17. டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார், எம். ஏ.

'பாவாயில்லை' ... 117

18. தொ. மு. சிதம்பர ரகுநாதன்

புத்தியிர் ... 120

19. வீ. எஸ். சுந்தரராஜன்

பிரபுவின் மனம் ... 125

20. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

வேங்கை வீரன் ... 131

21. பாலபாரதி ச. து. சுப்பிரமணிய யோகி

முன்றங்கைக் குயில்கள் ... 138

22. சௌந்தரம்

தனக்கு வந்தால் தெரியும் ... 142

23. கே. ஞானம்பாள், எம். ஏ.

மாமன் என்ன? ... 147

24. திருலோக சீதாராம்

மன மலர்ச்சி ... 155

25. என். நாகராஜன்

உமார் ... 159

26. தா. நாகலிங்கம்

கம்பி மத்தாப்பு ... 163

27. க. நாராயணன்

எதிர்பாராதது ... 167

28. வே. நாராயணன், எம். ஏ., எம். எல்.

அவளும் அவனும் ... 171

29. கே. எஸ். நாராயணஸ்வாமி

சேதனை ... 179

30. "பகீரதன்"

மருதகாயகத்தின் மறைதகம் ... 188

31. ஏ. எஸ். பஞ்சாபகேசையர், எம். ஏ., ஐ. ஸி. எஸ்.

மூடிவு ... 194

32. "பட்டு"

சரோஜாவின் கிளி ... 199

33. கு. பாலசுப்பிரமணியன்

உத்தியோக சித்தி ... 204

34. கி. வா. பாலசுப்பிரமணியன்

பாசம் ... 208

35. எம். என். எம். பாவலர்

நச்சுப் பல் ... 211

36. "பூச்சி"

மறுமலர்ச்சி ... 221

37. "பெருசு"

உனக்காக உயிர் வாழ்வேன் ... 229

பக்கம்

38. ய. மகாலிங்க சாஸ்திரி, எம். ஏ., பி. எல்.
மீரான்சின் பயம்மை ... 240

39. எஸ். மாரிச் செட்டி, பி. ஏ. (ஆனர்ஸ்)
வாழ்வு மலர் ... 248

40. கி. முத்துஸ்வாமி
குல தெய்வம் ... 256

41. பி. கே. முத்துஸ்வாமி
பெண்மையும் உள்ளமும் ... 267

42. வே. ரங்கராஜன்
கலையும் கருணையும் ... 272

43. "ரஸிகன்"
பலாச்சுளை ... 285

44. வி. ராதாமணி
குறுங்கையின் வலிமை ... 292

45. எஸ். எஸ். ராமசாமி, பி. எஸ்.ஸி., பி. எல்.
காட்டக வாழ்க்கை ... 297

46. வெ. ராம ராவ்
அன்பின் அழைப்பு ... 303

47. திவான் பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி
போனதுபோல் வந்தான் 311

48. எஸ். ஏ. ராமநாதன்
எல் இலி ... 316

49. எஸ். ராமானுஜன்
வாழ்க்கையில் குறை ... 321

50. எஸ். என். ராமு
அகுபதியின் அகோதாள் 326

பக்கம்

51. "ராஜ்யஶ்ரீ"

இருண்ட பாதை ... 335

52. ஆர். எஸ். ருக்மிணி, எம். ஏ.

பெண் ஜன்மம் ... 340

53. பி. என். லக்ஷ்மி, பி. ஏ.

அன்பா? இரக்கமா? ... 350

54. ஏ. எஸ். லக்ஷ்மி

மன்னிப்பு ... 356

55. வி. லோகநாதன்

கழுவி விழுவானேன்? ... 363

56. "வஸந்தன்"

தூங்கா விளக்கு ... 378

57. எஸ். விசாலாக்ஷி

வருஷப் பிறப்பு ... 384

58. ல. ரா. விசுவநாத சர்மா

மின்னல் கொடி ... 395

59. "விந்தன்"

கண்ணம்மா ... 401

60. எஸ். வேங்கடசுப்பிரமணியன்

இருவேறுலகம் ... 407

61. எம். வி. வேங்கடராமன், பி. ஏ

இந்தியாணி ... 414

62. ஏ. ஜி. வேங்கடாசாரி, பி. ஏ.

பங்கன் கமலம் ... 419

63. சி. ஸ்ரீ. வேங்கடேசன்

வாழ்க்கை ஒரு கனவா? ... 427

பக்கம்

64. வ. வேணுகோபாலன்
சிற்பியின் தியாகம் ... 435

65. கே. வைத்தியநாதன்
சோப்புக்காரி ... 445

66. ஆர். ஜகந்நாதன், எம். ஏ
பாணிக்கிரகணம் ... 455

67. டி. எம். ஜம்புநாதன்
சாந்தி ... 460

68. கே. எஸ். ஜம்புநாதன்
கப்பாசை ... 464

69. ஆ. வெ. ஜயராமன்
பெரிய இடத்துச் சமாசாரம் ... 472

70. தி. ஜானகிராமன்
கமலியின் குழந்தை ... 477

71. கே. ஸ்ரீநிவாஸ், பி. ஏ.
என் தோட்டம் ... 483

72. ரா. ஸ்ரீநிவாஸன்
அவியாச் சுடர் ... 489

73. கா. மு. ஷெரீப்
கடமை ... 493

74. "ஸத்யதாமா"
குழந்தையின் பிரார்த்தனை ... 497

75. "ஹரிணி"
தெய்வப் பெண் ... 505

ர. அய்யாசாமி, எம். ஏ.

இன்ப வேட்கை 1

அவன் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டான். பாலைவனத்திலே பிருந்தாவனத்தைக் காணமுடியுமா? காட்டுத் தீயின் நடுவில் நில வொளியின் அமுத இன்பத்தை அனுபவிக்கக் கூடுமா? உலகம் அவனுக்குத் துன்ப மயமாகத் தோன்றியது. விடுதலைக்கு வழி இல்லையா?

அவன் ஒரு பக்தன். உடலும் உள்ளமும் குழைய ஈசுவர நாமத்தைப் பாடுவதே அவன் தொழில். ஆனால் பக்தியும் பஜனையும் அவனுக்கு ஆறுதல் கொடுக்கவில்லை. அமைதி எப்போது ஓயும்? சாந்தி வெள்ளத்தைப் பருகி எப்போது ஆன்ம வேட்கை தணியும்? விடுதலைக்கு வழியே இல்லையா?

தற்கொலை? — அதற்கு அவன் தயாராயில்லை. தற்கொலை மகாபாவம் என்னும் சாஸ்திர நியதியை அவன் பரிபூரணமாக நம்பினான். துறவு? — சர்வ சங்க பரித்தியாகத்துக்கு மேலான மோக்ஷ மார்க்கம் இல்லை யென்பது உண்மைதான். ஆனால் அவன் மனம் அதற்கு ஏற்ற பக்குவம் அடையவில்லை. ஒருநாள் வழக்கம் போல் அவன் கோவிலுக்குப் போனபோது உடலெங்கும் விபூதி அணிந்து திகம்பரனாகிய ஒரு துறவியைக் கண்டான். ஆலயத்துக்கு எதிரில் இருந்த பெரிய ஆலமரத்தின்கீழ் அந்த முனிபுங்கவன் உலகத்தை மறந்து அசஞ்சல பக்தியால் விழிகளைப் பாதி மூடித் தியானத்தில் வீற்றிருந்தான். வலிய ஆகர்ஷிக்கும் கம்பீரமான தோற்றம்; மாசற்ற இன்பத்தினால் ஒளிவாய்ந்த மணிவதனம்.

பக்தன் அவனை அணுகி, "ஐயனே! இந்த ஆனந்தத்துக்கு வழியென்ன? என் மனத்துயரம் என்று தீரும்? கொஞ்சம் கருணை செய்யுங்கள்" என்று வேண்டினான்.

துறவி கண்களை அகல விரித்துப் புன்முறுவல் பூத்த முகத்துடன், "குழந்தாய்! உன் ஆசை நிறைவேறும். பக்தியும் பஜனையுமே அதற்கு மார்க்கம்" என்றான்.

பக்தன் ஆச்சரியத்திலும் மலைத்தான். 'நான் இப்போது மேற் கொண்டுள்ள பக்தியும் பஜனையும் போதாவா? இந்த ஊரில் என்னைவிடச் சிறந்த மெய்யன்பன் இல்லையென்பது பொதுஜன வாக்கு. இதைவிட மேலான பக்தி எங்கிருந்து உண்டாகும்? எப்படி உண்டாகும்? உண்டாக வழியிருக்க வேண்டும். இல்லை யென்றால் எனக்கு மன அமைதி இல்லாததன் மர்மம் என்ன? இந்த யோகியின் அருள் வாக்கு ஒருபோதும் பொய்யாகாது. ஆனால் என் பக்தியில் என்ன குறையிருக்கிறது? என்ன பிழை யிருக்கிறது?' என்று சிந்திக்கத் தொடங்கினான்.

அதன்பின் இக்கேள்விக்கு விடை கண்டுபிடிப்பதே அவன் நோக்கமாயிற்று. உறக்கத்திலும் கனவிலும் அந்தத் துறவியின் வார்த்தை அவனை அலட்டத் தொடங்கியது. ஞானிகளை அணுகினான். அறிஞர்களை அடைந்து ஆலோசனை கேட்டான். பலரும் பலவிதமாகச் சொன்னார்கள். ஒன்றும் அவனுக்குத் திருப்தி அளிக்கவில்லை.

முடிவில் ஆசையும் சஞ்சலமும் பிடர்பிடித்துத் தள்ள அவன் ஊரை விட்டுப் புறப்பட்டான். 'உண்மையான ஆனந்தத்தை எங்கே பெறலாம்? குற்றமில்லாத பக்திச் சுடரை எங்கே அடையலாம்?'

உலகப்புகழ் வாய்ந்த ஒவ்வொரு கோவிலுக்கும் அவன் சென்றான். குயில் நாதம் தோல்வியுறும் மதுரமான குரலில் இறைவனுடைய ஆயிர நாமங்களையும் பாடி உருகினான். மதுரை, காஞ்சி, ஸ்ரீரங்கம், சிதம்பரம், ராமேசுவரம் ஆகிய எல்லா ஆலயங் களிலும் அவனுடைய அன்புவெள்ளம் பெருக்கெடுத்தோடியது. ஆனால், சாந்திமயமான இமயத்தின் சிகரத்திலே எழுந்தருளிய மீனாக்ஷியும், பறையனைப் பார்ப்பனனுக்கிய சிதம்பர மூர்த்தியும், காத்தலே தொழிலாகக் கொண்ட அரங்கநாதனும் அவனைக் கைவிட்டனர்.

உலகம் அவனைத் தொழுதது. அன்பர்கள் அவன் அடித் துகளைத் தலைமேல் அணிந்து மகிழ்ந்தனர். அவன் கீர்த்தி எங்கும் பரவியது. ஆனால் அந்தப் புகழும் ஆராதனையும் அவனுடைய ஆன்ம அதிருப்தியையே அதிகமாக்கின.

கால்கள் ஓய்வு கொள்ளவில்லை. ஓய்வுக்கு இடந்தான் ஏது? காடும் மலையும் கடந்தான். நதியும் பொழிலும் தாண்டி நடந்தான். கடைசியில் அவன் இயற்கை வனப்பு வாய்ந்த ஒரு சிற்றூரை அணுகினான். வாவென்று அழைக்கும் கோபுரங்களும் ஆயிரக்கால் மண்டபங்களும் தங்கச் சிலைகளும் உள்ளங்கவரும் சிற்பங்களும் அங்கே காணக் கிடைக்கவில்லை. வியாபாரிகள் தங்கள் சரக்குகளை விற்றுவிடவும், தாய்மார்கள் தங்கள் பெண்களுக்கு மணமக்களைத் தேடிப் பிடிக்கவும் அந்த அந்தப் பொருள்களுக்கு இல்லாத குணங்களையெல்லாம் ஏற்றிச் சொல்வதுபோலத் தங்கள் தங்கள் ஆலயங்களிலுள்ள விக்கிரகங்

களின் தனி வல்லமையைப்பற்றிக் கொட்டி முழக்கும் க்ஷேத்திர அதிகாரிகளும் அங்கே இருக்கவில்லை. ஒரு சிறு கோவில், யாதோர் அலங்காரமும் இல்லாத ஒரு சின்னஞ் சிறு சிவாலயந் தான் அந்த ஊரில் இருந்தது. சிவலிங்கத்தின் முன்னுல் ஒரு ரிஷப விக்கிரகமும் உண்டு.

பக்தன் நடந்த களைப்பினுல் அயர்ந்து தூங்கினுன். ஆனுல் வழக்கம்போல் அதிகாலையிலேயே கண் விழித்துப் பாட ஆரம்பித்தான்.

அது நடவு காலம். கோவிலின் உள்ளிருந்து வெளியே பார்த்தால் குடியானவர்கள் வயற்புறங்களில் பயிர் நடும் காட்சியைக் கண் எட்டும் திக்குகளிலெல்லாம் காணலாம்.

பக்தனுடைய குரலிலே இனிமை இருந்தது. ஆனுல் மனத்திலே இனிமை இருக்கவில்லை. "இந்த ஏழையின் சஞ்சலம் எப்போது நீங்கும்? அருட்பெருங் கடலாகிய இறைவனே! எனக்கு விமோசனமே இல்லையா?" என்று வேண்டிக்கொண்டு அவன் எழுந்தான்.

உடனே அவன் எதையோ கண்டவன்போலத் திடுக்கிட் டான். கோவிலுக்கு முன்னுல் இருந்த ரிஷப விக்கிரகம் அவனைப் பார்த்து இரங்கிக் கண்ணீர் விட்டு, "அன்பனே, உன்னை ஸ்வீகரிப் பதற்குப் பகவான் அந்த மூலஸ்தானத்தில் இல்லை" என்று சொல்வது போலவும், பிறகு மௌனமாகத் தலையை வயலின் பக்கம் திருப்புவது போலவும் தெரிந்தது. என்ன ஆச்சரியம்! பக்தன் நந்தியைக் கூர்ந்து கவனித்தான். இது உண்மைதானு? அல்லது வெறும் மன மயக்கமா? தலை வயற்புறந்தான் திரும்பி யிருந்தது. ஆனுல் அதன் கண்களில் நீர்த்துளி தென்படவில்லை. 'நான் கோவிலுக்குள் நுழைந்தபோது ரிஷபத்தின் தலை எந்தப் பக்கம் திரும்பியிருந்தது?' என்று அவன் நினைத்துப் பார்த்தான். ஆனுல் அதற்குச் சரியான பதில் கிடைக்கவில்லை.

பக்தன் வாயிற்படியில் நின்றுகொண்டு வயலை நோக்கினுன். நாட்டுப்புறத்தின் தெய்விக அழகு அவன் கண்வழியே நுழைந்தது. எங்கே பார்த்தாலும் தூய்மையின் நடனம்! காலையிளங் காற்று ஆனந்தமாகத் தவழ்ந்து கொண்டிருந்தது. உதய சூரியன் செங் கதிர்களை அள்ளித் தெளித்து இந்திர ஜாலம் செய்துகொண்டிருந் தான். பக்தனுடைய உள்ளத்தில் அவனை அறியாமலே ஒரு மாறுதல் ஏற்பட ஆரம்பித்தது. ஆத்ம வஞ்சனையின் கர்த்தன ரங்கமாகிய நகரங்களில் செல்வத்தின் நடுவில் இருந்து பழகிய அவனுக்குப் பிரகிருதி தேவியின் பரிசுத்தமான தோற்றம் ஆச்சரியகரமாக இருந்தது. நள்ளிரவில் ஒருவர் கண்ணுக்கும் தெரியாமல் வானின்றிழிந்து மலரிதழ்களை அவிழ்க்கும் பனித்துளி போல அந்தக் காட்சி அவன் மனத்தை மலரச் செய்தது.

பக்தன் அசையாமல் நின்றுன். ரமணீயமான அந்த வயல் வெளியைக் கண் கொட்டாமல் பார்த்தான். அங்கே அரை

நிர்வாணிகளான குடியானவர்கள் ஓய்வில்லாமல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். பச்சைப் பசேலென்ற நெற்பயிர்கள் மந்த மாருதத்தில் அசைந்தாடின. கொஞ்சம் தூரத்தில் காய்த்துக் குலுங்கும் தென்னை மரங்கள் தலை தூக்கி நின்றன. உழவர்களின் பாட்டும் காற்றிலே மிதந்து வந்து அவன் காதுகளில் இன்பத் தேனை ஊற்றியது. ஒருபுறம் பாம்பு நெளிவதுபோல் வளைந்து வளைந்து சென்ற சிற்றருவி ஒன்று தென்பட்டது. மற்றொரு புறத்தில், வயலுக்கும் தோப்புக்கும் அப்பால், ஒரு பெரிய குன்று நிமிர்ந்து நின்றது.

திடீரென்று கிடைத்த அந்த மன அமைதியைக் குறித்துப் பக்தன் சிந்தித்தான். அந்தி நேரம் வரையிலும், பின் உறங்கும் வரையிலும், அதற்குப் பிறகு கனவிலும் அதே எண்ணந்தான் அவன் நெஞ்சில் குடிகொண்டிருந்தது.

மறுபடியும் மனமயக்கந்தானு? அல்லது ரிஷபம் உண்மையிலேயே பேசுகிறதா? – பக்தன் மீண்டும் நந்தியின் தோற்றத்தைக் கண்டான்.

"அன்பனே! உன் துயரத்தைக் கண்டு மனம் இரங்கினேன். அதனால்தான் கண்ணீர் விட்டு வருந்தி வயற்புறம் திரும்பி உனக்கு ஆனந்த மார்க்கத்தைக் காட்டினேன். நீ ஒரு பக்தன் என்பதில் சந்தேகம் இல்லை. உன் பஜனை குற்றமற்ற தென்பதிலும் ஐயம் இல்லை. ஆனால் இறைவன் இருக்கும் இடத்தை இது வரையிலும் நீ கண்டுபிடிக்கத் தவறினாய். மீண்டும் சொல்லுகிறேன்: நீ ஒரு சிறந்த பக்தன். ஆனால் யாருடைய பக்தன்? கடவுளின் பக்தனு? அல்லது உன் சொந்தச் சகோதரர்களின் பக்தனு? நாள் முழுதும் வயலிலே உழைத்து மகிழும் அந்தப் பேதைகள் உன் உடன்பிறப்பல்லவா? ஜீவனத்துக்கு வழியில்லாமல் தயங்கினாலும் மனத்திருப்தியைக் கைவிடாத அந்த ஏழைகள் உன் சகோதரர்களல்லவா? நீ அவர்களைத் தொழுவதுண்டா? இறைவனைப் பழிப்பதால் நீ என்ன எதிர் பார்க்கிறாய்? செல்வமா? ஆம் என்றால், பூமித்தாய் தங்கக் கர்ப்பம் உள்ளவள். அந்த ஏழைகளுடன் ஏழையாய் நீயும் வயலில் இறங்கி வேலை செய்தால் கிடைக்காத பொருளும் உண்டோ? கடவுளின் மக்களைக் கைதூக்கி விடுவதைக் காட்டிலும் சிறந்த பஜனை ஏது? பக்தனே, உனக்குத் துக்கத்திலிருந்து விடுதலை வேண்டுமா? அப்படியானால் முதலில் உன் ஆத்மாவை மறந்துவிடு. அந்தப் பேதைகளை உன்னத நிலைக்குக் கொண்டுவரும் பெரும் பணியில் இறங்கு. உன் இன்ப வேட்கை நீருவதற்கு இதுவே சிறந்த வழி" என்று தூக்கத்தின் நடுவில் ரிஷபம் பேசுவதுபோல் இருந்தது.

அதற்குப் பின்னும் அவன் பக்தனாயிருந்தான்: கடவுளின் மக்களைப் பழிக்கும் பரம பக்தன். "எனக்கு விடுதலை வேண்டும்" என்ற அவன் ஆலயத்தோறும் நடந்து திரிந்து வருந்தவில்லை. பாடு பட்டு உடலை வருத்தித் துன்பம் கொள்ளவும் இல்லை.

அந்தச் சிறிய கோவில் இன்னும் இருக்கிறது. வயலின் பக்கம் திரும்பி அவனுக்கு இன்பவழியைக் காட்டின ரிஷப விக்கிரகமும் இருக்கிறது. ஏழைக் குடியானவர்கள் இன்னும் வயல்களில் வேலை செய்கிறார்கள். அந்தப் பக்தன் தன் இஷ்ட தெய்வத்தை ஏழைகளின் மத்தியில், ஏழையின் உருவத்தில் கண்டா னென்று மக்கள் நம்புகிறார்கள். அதையொட்டி அந்தச் சிறு கோவிலில் ஓர் உத்ஸவமும் நடக்கிறது. ஆனல் இன்று அந்த ஆலயத்துக்குத்தான் பிராதான்யம்; உத்ஸவத்துக்குத்தான் மகிமை. அக்கோவிலுக்கருகில் நின்றுகொண்டு வெகு நாட் களுக்கு முன் ஒரு மெய்யன்பன், "ஆத்ம சுகம் வேண்டுமானல் ஆத்மாவை மறந்து சொந்தச் சகோதரர்களுக்குத் தொண்டு செய்யுங்கள்" என்று அருளிய பெருந் தத்துவத்தை உலகம் மறந்துவிட்டது!

ஜே. அனந்தவிஜயம்

குலத் தொழில் 2

முன்பு, வானேங்கிய மரங்கள் அடர்ந்து கவிந்து படர்ந்து பரந்து கிடக்கும் இவ்வெளியில், காட்டு மிருகங்கள்கூட ஒரு காலத்தில் இருந்தன என்றுல் நம்பமாட்டீர்கள். ஆனல் நாற்பது ஐம்பது வருஷத்துக்கு முன்னெல்லாம் இதே காட்டிலேதான் சிறுத்தை, காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி எல்லாம் கிடந்தன. மான்களுக்கும் குதிரைகளுக்கும் காட்டெருமைகளுக்கும் குறைவில்லை. பிற்பகல் மூன்று மணிக்குப்பின் யாரும் அப்பக்கம் போகத் துணிய மாட்டார்கள்.

இன்று அவ்வளவு பெரிய காடு இல்லை. இருந்தாலும் முன் இருந்த பெருமை குலையாமல் இருக்க, இப்பொழுதும் மரங்கள் அடர்ந்து இருக்கின்றன; ஆனல் துஷ்டப் பிராணிகள் இல்லை. எல்லாம் வெள்ளைக்காரத் துரைகளின் துப்பாக்கிக்கு இரை யாயின. அன்று பயமற்ற கொடூரமான மனிதர்கள் இருந்து வந்தனர்; இன்று எங்கும் கோழைகள் மலிந்து கிடக்கின்றனர். அக்காட்டில் இன்று பயமே உருவாகிவந்த மான் கூட்டம் குடி யிருக்கிறது; நரிகளும் காணப்படுகின்றன.

என்ன இருந்தாலும், அன்று இருந்த பாம்புகளின் வம்சம் ஒழிந்தபாடில்லை. ஆனல் அந்தக் காட்டின் ஓரத்திலுள்ள கிராமத்திற்கு இடப்பட்டிருந்த **"பாம்பாட்டிப் புத்தூர்"** என்பதுமட்டும் மாறிப்போய்விட்டது.

பாம்புக்காடு என்று வழங்கி வரும் பெயருக்கொப்ப இக்காட்டில் அடர்ந்த புதர்களுக்கிடையில் உயர்ந்து வளர்ந்த புற்றுக்கள் ஏராளமாகக் காணக்கிடக்கின்றன. ஒவ்வொன்றும்

ஒரு விஷக்கோட்டைக்கு ஒப்பாகும். "எந்தப் புற்றில் எந்தப் பாம்போ!" என்று அஞ்சும்படியாகப் பாம்புகளின் அரசு நடந்து வந்தது.

* * * *

எழுபது வருஷத்திற்கு முன்புகூட இந்தக் காட்டிற்கு அருகில் உள்ள குறவர்கள் பாம்பு பிடிப்பதில் கைதேர்ந்தவர்கள். எந்த ஊரில் எந்தப் பாம்பு வந்தாலும், இந்த ஊர்க் குறவர்களுக்குத் தான் ஓலைவரும். அவர்கள் பாம்பு பிடித்தால் அவர்களுக்கு ஒரு ஜோடி வேஷ்டி, ஒரு கலம் நெல், இரண்டு ரூபாய் ஊரார் கொடுப்பது வழக்கம். இந்த ஊர்கூடக் கீழைப்பட்டு ஜமீன்தார் குறவர்களுக்கு மானியமாகக் கொடுத்ததுதான். அதிலே இருந்துதான் இந்த ஊருக்குப் பாம்பாட்டிப் புத்தூர் என்ற பேரே வந்தது.

"இதெல்லாம் பழைய மனுசர்களின் பேச்சு. இப்பொழுது பாம்பாட்டியைப் பார்த்தால் உளறியடித்துக்கொண்டு, 'வேலை யில்லியேடா? போடா போ' என்று விரட்டுவார்கள். எவ்வளவு கஷ்டப்பட்டு, கண்ணெல்லாம் கரிக்கும்படி புகைமூட்டம் போட்டு, உள்ளம் உருகும்படி மகுடி ஊதி, உதிரம் கொதிக்கும்படி நடுங்கிக்கிட்டே பிடித்துவந்த பாம்பைப் பார்த்து, அலக்ஷ்யமாக, 'போடா, போ, உம் பாம்பும் நீயும்!' என்று சொல்றுவளே. ஏ, பாம்பும் ... நானும், அல்லாமே, பாம்பும் அவுகளுமா இருக்கமுடியும்?

"என்னமோ, அப்பப் பாம்பு புடிக்க ஆசையும் இருந்துது. அதுக்கு ஆதரவும் இருந்துது. தெரியுமா? கூட, நாலுபேர் ஆதரவே போதுமே. இப்ப என்னடான்னு பாம்புத் தொழிலே அத்துப் போச்சு. பசங்கள் எல்லாம் படிக்கக் கிளம்பிட்டாங்க. இந்தப் பாருங்களேன். எம் மவ புள்ளே ஒருத்தன், ஏதோ எட்டுக் கிளாசு படிச்சுப் புட்டானும். இதோ சண்டைக்குப் போயிட்டான். இப்ப மாச மாசம் ரூ. 25 அனுப்புறான். இப்படி இருக்குது பொழப்பு" என்று பாம்பாட்டி நாகப்பன் தனது தள்ளாத வயசில் சொல்லி ஆற்றுமைப் பட்டான்.

* * * *

அது குறவன் வீடு போலவே நமக்குத் தெரியாது. நல்ல ஓட்டு வீடு. தரையெல்லாம் சாந்து போட்டது. உள்ளே போனேன்.

"என்னங்க சாமி, எங்கூட்டிலே வந்திட்டிங்களே! நீங்க எல்லாம் எங்க ஊட்டுக்கு வரக்கூடாதுங்களே! தோசமாச்சே" என்றான்.

"தோஷமாவது, மண்ணாங்கட்டியாவது!" என்று உள்ளே போனேன். ரிஷிகளின் ஆசிரமம்போல் இருந்தது தோற்றம். உட்காருவதற்கு அடிமரத்துண்டுகள் போடப்பட்டிருந்தன.

ஒரு மரத்துண்டின்மீது உட்கார்ந்தேன். அவனும் ஒரு கட்டிலில் உட்கார்ந்துகொண்டு, தெற்குப்புறத்திலுள்ள ஜன்னல் கதவுகளைத் திறந்தான். 'ஜில்' என்ற காற்று வீரஞ்சிறில் தவழ்ந்துவந்து தடவியது அவனது முகத்தை.

ஓர் இன்ப உணர்ச்சியோடு கூடிய புன்சிரிப்பு மீசை நுனிகளின் இருமருங்கிலும் ஏறி இறங்கின. கண்களில் மோகன ஒளி. நெற்றியில் சுருக்கங்கள். நரைத்த தலைமயிர்கள் இரண்டொன்று அவனது முகத்தில் புரண்டன. அவனுடைய கருத்தும் கண்களும் ஏதோ ஒன்றை ஞாபகத்திற்குக் கொண்டுவருபவை போன்றிருந்தன.

நான் சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். வடக்குச் சுவரோரத்தில் காபூல் திராட்சை ரசம் வரும் காலி ஜாடிகள்; நீலநிறக் கண்ணுடி ஜாடி, ஒன்று அல்லது இரண்டு அடி உயரத்தில் வைக்கப்பட்டு இருந்தன. அதே போலப் பொடி வர்ணத்தில் உள்ள மேரு எனச் சொல்லப்படும் கண்ணுடித்திராவக ஜாடிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வைக்கப்பட்டிருந்தன.

சுவரின்மேல் பலவிதமான பாம்புகளின் தோல்கள் உரித்துப் பதம் பண்ணித் தொங்கவிடப்பட்டு இருந்தன. சில பாம்புகளின் எலும்புக் கூடுகள் வாசலின் இருபுறங்களிலும் நெளிவோடு பொதிந்து வைக்கப்பட்டிருந்தன. சில பாம்புகள் உயிருள்ளவை போல் பஞ்சடைக்கப்பட்டுச் சுவரோரத்தில் சுருண்டு கிடந்தன. இதோ, இவ்வுயர்ந்த மேடைமீது அவன் பிடித்த பாம்புகளுக்குக் கிடைத்த பரிசுகள் வைக்கப்பட்டிருந்தன. இவைகளையெல்லாம் பார்த்தால், 'ஒரு ஜமீனின் கண்காட்சி அறையா, அல்லது சென்னை மியூசியமா?' என்று எண்ணும்படி இருந்தாலும், அது கைதேர்ந்த பாம்பாட்டி நாகப்பனின் வீடு என்று சொல்லவே வேண்டியதில்லை.

"என்னங்க சாமி" என்று கூறிக்கொண்டே, ஒரு கண்ணுடி ஜாடியிலிருந்து சாராயத்தை ஊற்றிக் குடித்தான் அவன்; "சாமி, கோவிச்சுக்காதிங்க; இது எங்க சாதிப் பழக்கம்" என்றான்.

"அது கிடக்கட்டும்; அதோ இருக்குதே, அவை யெல்லாம் சாராய ஜாடிகளா?" என்றேன் நான்.

"இல்லே, இல்லே,; இதோ பாருங்க" என்று ஒரு கம்பளிப் போர்வையை நீக்கினான். ஒரு மரத்துண்டின்மேல் வைக்கப்பட்ட உருண்டை வடிவமான கண்ணுடி ஜாடியில் மண்டலமிட்டுத் தலையை உயர்த்திக்கொண்டு மிகப் பெரிய, கர்ப்பம் கலங்கும் படியான சர்ப்பம் இருந்தது. வெளிச்சம் பட்டவுடன் சீறிக் கொண்டு படம் எடுத்தாடியது. அதன் மூச்சு வெளிவரமட்டும் துவாரமுள்ள சல்லடை போன்ற அடைப்பான் அடைத்து இருந்தது.

துணியை நீக்கினான். ஒரு பல்லி அந்த அடைப்பான்மேல் சென்றது. அவ்வளவுதான்! துள்ளித் துள்ளித் துடித்து இறந்தது.

"அப்பா; அவ்வளவு விஷக்காற்று அந்த ஜாடியின் முகப்பில்!" என்றேன் நான்.

கிழவனின் கண்களில் நீர் தளும்பியது. தழுதழுத்த குரலில், "அப்பா...உனக்கு...எமனுகப்...போச்சு!" என்று புலம்பினான்.

"என்ன நாகு, விஷயம் ஒன்றும் புரியல்லியே?" என்றேன் நான்.

"ஒண்ணும் இல்லே, எனக்குப் பேரப்புள்ளே ஒருத்தன் இருந்தான். வயசு மூணைதான் இருக்கும். புள்ளேன்னு புள்ளே ... அவனைப் போலப் புள்ளே இனிப் பார்க்கப் போகிறதில்லே. அவனும் இந்தக் கழுதைகள் கிடக்குதுன்னு பயப்படுவானு? இந்த வாசலிலே, இதுபோலக் கட்டுவிரியன்தான் கிடக்கும் எருமையாட்டம். பாப்பாரப் புள்ளேக பார்த்தாலே பயப்படுவாக. எம்புள்ளே அதோடே புரண்டு விளையாடுவான். அதுவும், அவனை வச்சுச் சுத்திக்கிட்டுக் கிடக்கும். ஏதோ தெய்வப் பொறப்புன்னுதான் நினைக்கணும். அவன்கூடப் போய் ... பத்துப் பன்னிரண்டு வருசமாச்சு" என்று விக்கினான்.

"எங்கே போய்விட்டான்?" என்றேன்.

"அதான், கவலையினமா வச்சிருந்த ஒரு பாம்பு ஜாடிகிட்டப் போயிட்டான். அது அவனைப் பார்த்துச் சீறிச் சீறி அடங்கியது. அதன் சத்தத்தைக் கேட்க மேல்மூடிகிட்டப் போய்ப் பார்த்தான். அவ்வளவுதான் ... எம்புள்ளே ... வாயால் நொரை நொரையாய்த் தள்ளிக்கிட்டு ... சுருண்டு, மடிஞ்சுபுட்டான்" என்றான்.

"ஐயோ பாவம்! ஏன் இப்படி, அந்தக் கொடிய பாம்புகள் வைத்திருக்க வேணும்?" என்றேன்.

"ஹூம்! நல்லா இருக்குது. நம்ம குலத்தொழிலை விட்டு விடலாமா? இப்ப எனக்கும் எழுபது எழுபத்திரண்டு வயசு ஆவுது. எப்பொழுதாச்சும் ஒண்ணு ரெண்டு பாம்பு புடிக்காமே இருக்கிறதில்லே. இண்ணைக்கும், இவ்வளவு சம்பத்துக்கும் காரணமா இருந்தது எது தெரியுமா? அது எங்க குலத் தொழில்தான்" என்றான்.

"கரிச்சான் குஞ்சு"

சஞ்சீவினி 3

வெளியிலும் பெரிய மழை பெய்து அப்பொழுதுதான் ஓய்ந்திருந்தது. வீட்டிற்குள்ளும் பல்மான விவாதம் ஏற்பட்டு ஒருவர்க்கு ஒருவர் இரைந்து பேசிக்கொண்டு அப்பொழுதுதான் ஓய்ந்திருந்தார்கள். விளையாட்டு வினை யாய்விட்டது. தன் கணவனைத் தன் தமையன்மார்கள் எல்லைமீறிப் பரிகாசம் செய்கிறார்கள்; 'அவர் தங்களைப்போலப் படிக்காதவர் என்பதற்காக எவ்வளவு தூரம்

பரிகாசம் செய்வது? அப்படிச் செய்து பிரயோசனந்தான் என்ன? இதில் என்னைத் துன்புறுத்துவதுதான் இவர்களுடைய நோக்கம்' என்று விபரீதமான ஓர் எண்ணம் தோன்றிவிட்டது சஞ்சீவினிக்கு. அவள் தன் பிறந்தகத்தை விட்டுக் கிளம்புவதற்கு ஏற்பாடு செய்து ஒற்றைக்காலால் நின்றாள். "இனி ஒரு க்ஷணமாவது இங்கே இருக்கமாட்டேன்" என்றாள். அவளுடைய கணவர் மல்லிநாதருக்கும் அதுதான் சரியென்று பட்டது.

"நாளே சரியாயில்லை" என்றார்கள் தமையன்மார்கள்.

"சரியாயிருக்கவேண்டாம்" என்றாள் சஞ்சீவினி.

"மழையில் பிரயாணம் செய்வது சுலபம் அல்ல" என்றார்கள் மதனிகள்.

"எனக்கு எல்லாம் சுபந்தான்" என்று ஆத்திரப்பட்டாள் அவள்.

தம்பதிகள் வண்டியில் ஏற வாசலுக்கு வந்தார்கள். "சஞ்சீவினி ரொம்பச் சமத்தாய்விட்டாள்" என்றான் மூத்த தமையன்.

முகத்தைத் திருப்பிக்கொண்டு, "நான் வருகிறேன்" என்று சஞ்சீவினி தன் மதனிகளிடம் சொல்லிக்கொண்டாள். மல்லிநாதர் சொல்லிக்கொண்டதை மைத்துனர்கள் கவனிக்கவேயில்லை. வண்டியில் ஏறும்போது, மணமக்கள் தலையில் அக்ஷதை விழுவதைப் போலச் சிறு தூற்றல்கள் விழுந்தன, அவர்கள் தலையில். "இப்படித் தூற்றலில், ஏன்னு..." என்று மதனிகள் இழுத்தபொழுது மைத்துனர்கள் முறைத்தார்கள். எப்படியும் பிரயாணம் நிற்கவில்லை.

வண்டி போய்க்கொண்டிருக்கிறது. சஞ்சீவினி ஏதோ யோசித்துக்கொண்டிருந்தாள். மல்லிநாதர் ஏதாவது பேசலாமென்று ஆரம்பிப்பார். அவள் எங்கேயோ கவனமாக இருப்பதைப் பார்த்துவிட்டுப் பேசாமல் இருந்துவிடுவார்.

* * *

சஞ்சீவினி ராமநாத தீர்த்தர் என்ற மகா பண்டிதருடைய பெண். இன்று வரையில், அதாவது தன் பதினெட்டாவது வயசு வரையில், தந்தை வீட்டிலேயே இருந்தவள். தமையன்மார்களும் வெளியிலிருந்து வந்த வித்தியார்த்திகளும் தன் தகப்பனாரிடம் பாடம் கேட்கும்போதெல்லாம் அவளும் கூடவேதான் இருப்பாள். தாயில்லாக் குழந்தையான அவளிடத்தில் தீர்த்தர் உயிராயிருந்தார். தமையன்மார்களின் பத்தினிகள் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அவளுக்கு என்ன வேலை இருக்கப் போகிறது? சதா ஸர்வகாலமும் இலக்கிய இலக்கண சர்ச்சையிலேயே கழித்துவந்தாள்.

மல்லிநாதர் பக்கத்து ஊர்தான். பாகவத சிம்மம் என்று பெயர் பெற்ற பிரகலாத பட்டரின் ஏக புத்திரர் அவர். அதுவும் பட்டருக்கு விருத்தாப்ய தசையில் பிறந்த குழந்தை. அதி பால்

யத்தில் தாயை இழந்த குலவிளக்கினிடத்தில் பட்டர் அதிகமான பிரியம் வைத்துச் செல்லம் கொடுத்தார் என்றால் யாரைக் குறை கூறுவது? பிரசித்திபெற்ற சமகாலப் பண்டிதர்கள் என்ற முறையில் பட்டரும் தீர்த்தரும் சம்பந்தம் செய்துகொண்டனர். எல்லை கடந்த அவர்களுடைய சிநேகம் மல்லிநாதருடைய படிப்பில்லாத்தன்மையை மறைத்துவிட்டது. தம் மக்களைக் கிருகஸ்தர்களாகப் பார்ப்பதையே லக்ஷ்யமாகக் கொண்டு பிறந்தவர்கள் போல் அது கைகூடிய உடனே இறந்துவிட்டார்கள் இருவரும். மாமனூர் வீட்டில் இருந்துவந்தார் மல்லிநாதர். தாம் படிக்காதவர் என்பதை அவர்கள் ஒரு க்ஷணமாவது மறக்காமல் ஏதாவது கிண்டல் செய்துகொண்டே இருந்தது அவருக்குத் தெரியாமற் போகவில்லை. தம் ஊரில் சொத்திருக்கிறது, வீடிருக்கிறது, அவளும் சம்மதித்துக் கிளம்பும்போது இங்கென்ன வேலை என்று நினைத்துக் கிளம்பினர். வரப்போகும் புதுக் குடித்தனத்தைப் பற்றி அவர் யோசித்துக் கொண்டிருந்தார், உருப்படியாய் ஒன்றும் புரியாமல்.

சிறிது தூரம் போன பிறகு வண்டிக்காரக் கிழவன் யோசித்தான். மாட்டை அதட்டி அதட்டி அவனுக்கும் வாய் வலிக்க ஆரம்பித்தது. சின்னஞ் சிறிசுகள் ஊருக்குப் போகும் போது எப்படி உத்ஸாகமாய் இருப்பார்கள் என்று அவனுக்கு நன்கு தெரியும். வண்டிக்குள்ளிருந்து வண்டிக்காரன் வரைக்கும் எட்டி, ஒரே சிரிப்பாய் இருக்கும் வழிமுழுதும். கிழவன் என்ற உரிமையில் அதிகமாய்க்கூடச் சிரிக்கச் சிரிக்கப் பேசுவதுண்டு அவன். இதெல்லாம் ஞாபகம் வந்ததும் மெதுவாய் உள்ளே திரும்பிப் பார்த்தான். கொஞ்சம் விலகியே பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள் இளந் தம்பதிகள்.

"ஐயா, மாப்பிள்ளை சாமி, கொஞ்சம் உள்ளே வாங்க; முன்பாரம் வேணும்" என்றான் சாதாரணமாய்; "அம்மா நீங்க நகரவேண்டாம்" என்றான் சிரித்துக்கொண்டு.

சிரிக்காமல் இருக்க முடியவில்லை சஞ்சீவினிக்கு.

"ஏ, அப்பா! ரொம்பப் புதிசாயிருக்கே நீங்க விளையாடறது! கண்ணுமூச்சிமாதிரி பேசாமூச்சியாம்மா இது? போவுது, கொஞ்சம் வெத்திலை பாக்குக் கொடுங்களேன்" என்று ஒருக் களித்து உட்கார்ந்துகொண்டு, கயிற்றைக் காலில் போட்டுக் கொண்டான் கிழவன்.

தன் கையில் சுருட்டிக் கசக்கி வைத்துக்கொண்டிருந்ததை அப்படியே அவனிடம் கொடுத்தாள் சஞ்சீவினி.

"வெத்திலையே இவ்வளவு சுடுதே" என்றான் கிழவன் வெகண்டையாய்.

இந்தத் தடவை சத்தம்போட்டே சிரித்தாள் சஞ்சீவினி. மல்லிநாதருக்கு மகா சந்தோஷம். "அம்மா கொளந்தே,

அவருக்கும் குடேன். சாமி வெத்தலே போடுங்க" என்று பொக்கை வாயால் அழுத்தமாய்ச் சிரித்தான் அவன்.

தாம்பூலம் தரித்துக்கொண்டார்கள் இருவரும். "எங்கே சாமீ, நல்லாச் செவந்திருக்கே; எங்கம்மாவுக்கு அதிருஷ்டந்தான்; பிரியமா வெச்சிப்பீங்க" என்றான் கிழவன்.

இருபக்கமும் பசுமை. எதிரிலும் பசுமை. நேரே செல்லும் வண்டி பசுமையில் முட்டிக்கொண்டு நிற்கவேண்டியிருக்குமோ என்று தோன்றுகிறது பாதை. கிழவன் பறவைகளைக் காட்டிக் காட்டி அவற்றின் குலகோத்திரங்களையும் குண விசேஷங்களையும் வர்ணித்துக்கொண்டு வந்தான். கொச்சைக் கவிதையில் அவற்றின் சகுனங்களை வேறு சொன்னான் அவன். மழை இல்லை. மோடம் கவிந்திருந்தது. கிழக்கு நோக்கிப் போகும் பிரயாணம் எதிர் வெயிலின் தாபம் இல்லாமல் சுகமாயிருந்தது. மூவரும் வெளியே பார்த்துக்கொண்டிருந்தார்கள். சவுக்கு காலக் கீர்த்தனைபோல, சுவட்டில் மந்தகதியில் போய்க்கொண்டிருந்தது வண்டி. "இதென்ன கிழக்கில் சூர்யாஸ்தமனம்?" என்று வியப்புடன் கேட்டாள் சஞ்சீவினி. அந்த இடம் உண்மையில் அப்படியேதான் இருந்தது. நெருங்கி வளர்ந்திருந்த புரச மரங்களில் அடர்ந்து கொத்துக் கொத்தாய்ப் பூத்திருந்தன சிவப்புப் பூக்கள். தூரப் பார்வைக்கு இருபுறமும் கூடுவதுபோல் தோன்றிய பசுமைக் கிடையில் மிளிரும் அந்தச் சிவப்பு, அந்தி என்ற பிரமையை வளர்த்தது.

மூவரும் அதையேதான் பார்த்தார்கள். தெரிந்தோ தெரியாமலோ, மல்லிநாதரும் அதைக் கூர்ந்தே கவனித்தார். சஞ்சீவினி இயற்கையின் வசப்பட்டு அதன் அழகில் மோகித்திருந்தாள். விரிந்த கண்களுடன் வண்டிக்காரக் கிழவனும் பார்த்தான்; ஆனால் கேலியாய்ச் சிரித்துக்கொண்டே பார்த்தான். சஞ்சீவினிக்கு அவன் சிரிப்பது புரியவில்லை. கிழவன் சொன்னான்: "பகட்டுச் சேப்பல்ல இது; கொரட்டாம் பழம். நல்ல மலையாளத்து அம்மாணைக் கணக்கா, அப்படியே உரிக்காமே விளுங்கிடணும் போலத்தான் இருக்கும். பறிச்சாலே நாறும்; தோலை உரிச்சால் கொடலைப்புடுங்கும்; அதைப்போயி இம்புட்டு அளகாப் படைச் சிருக்கான் ஆண்டவன். இதே கதைதான் புரசம்பூவுக்கும். வெறும் மண்ணுல்ல இது; பார்க்க அளகாத்தான் இருக்கும். எல்லாருக்கும் பூவுன்னு வாசனையின்னுட்டுல்ல நெனைப்பு வரும். இதுலே என்ன இருக்கு? படிப்பு அறிவுன்னு இதெல்லாம் இன்னதுன்னே தெரியாத வெத்தாளு மாதிரி அம்மா இது." நிறுத்த மனமில்லா தவன்போல நிறுத்தினான் கிழவன்.

மல்லிநாதர் சஞ்சீவினி இருவருக்குமே சுருக்கென்றது. ஒரு கணம் இருவரும் ஸ்தம்பித்துப்போய்ப் பார்த்துக்கொண்டார்கள். சஞ்சீவினி குனிந்துகொண்டாள். மல்லிநாதர் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார். கிழவன் இன்னும் புரசங்காட்டை

விட்டுத் தன் பார்வை கவனம் இரண்டையும் திருப்பவில்லை. 'ம்ச' என்று ஒரு தடவை சிரித்துவிட்டு, "இதைப் பார்க்கும் போதெல்லாம் சிரிக்காமே இருக்க முடியறதேயில்லை கொளந்தே" என்று சொல்லிக்கொண்டே திரும்பினன்.

தலை நிமிர்ந்து ஏக்கமாய் அவனைப் பார்த்தாள் சஞ்சீவினி. கலக்கம் புரண்டது அவள் கண்களில். "எங்கேயோ மெதுவாய் அடங்கிக் கிடந்த வேதனையைக் கிளறிவிட்டாயே" என்று சிணுங்கின அவளுடைய இமை மேடுகள். அவள் சஞ்சலப்பட ஆரம்பித்தாள். இஷ்டமே இல்லை; என்னவோ உறுத்தியதுபோல் இருந்ததால் கண்ணை மூடியவள் திறந்தபோது தானுய்ப் பெருக ஆரம்பித்தது உணர்ச்சி. அதி வேகமாய், தான் முன் தான் முன்னென்று பழைய ஞாபகங்கள் குவிய ஆரம்பித்தன, அவள் மனத்தில்.

மல்லிநாதருக்கும் ஒன்றும் புரியாமல் இல்லை. 'என்ன செய்வது' என்று கவலைப்படும் அளவுக்கு அவர் இதுவரை யோசித்ததில்லை; அவ்வளவுதான். ஆனல் இப்பொழுது அவர் தீர்மானத்திற்கே வந்துவிட்டார். "சஞ்சீவினி, நீ என்ன செய்யச் சொல்கிறயோ செய்கிறேன்; நீ அழுவது எனக்கு என்னவோ போல – ?" கெஞ்சும் முறையில் அவள் முகத்தைத் தூக்கினர் அவர். அவருடைய மணிக்கட்டு நனைந்தது. அப்பொழுதுதான் வாழ்க்கையிலேயே முதல்முதலாய் அவருடைய கண்களில் ஜலம் பெருகிற்று. "சஞ்சீ" என்று ஆரம்பித்தார். ஆனல் ஒன்றும் பேச முடியவில்லை. முகத்தைப் பிடித்துக்கொண்டிருந்த அவருடைய கை நடுங்கிற்று.

சஞ்சீவினி கண் திறக்கவில்லை. முகம் துவள ஆரம்பித்தது. நடுங்கும் விரல்களால் இமையைத் திறக்க முயன்றார் மல்லிநாதர்.

வண்டியை நிறுத்திக் கீழே குதித்துப் பின்புறம் வந்து நின்ற கிழவன், "என்னுங்க, என்னுங்க" என்றதற்கு இருவரும் பதில் சொல்லவில்லை. இரைந்து, "சாமி, கொளந்தே, கொளந்தே, அம்மா, சாமி" என்றான் கிழவன். "ஊ – ம்" என்று திரும்பிக் கொண்டே உதடுகளை நனைத்துக்கொண்டார் மல்லிநாதர். சஞ்சீவினியும் மெதுவாய்க் கண் விழித்தாள். பிழிந்த துணிபோல் பாதி ஈரத்தில் முறுக்கிக்கொண்டிருந்தன அவளுடைய கண்கள். தன் தலையை அப்படியும் இப்படியும் அசைத்துக் கைகளைக் கூப்பிக்கொண்டு இருவரையும் மாறி மாறிப் பார்த்தான் கிழவன். "கொளந்தே, சாமீ, சாதாரணமா அநுபவத்திலே பேசிக்கிற விஷயமின்னுட்டு, வேடிக்கையாச் சொன்னேனுங்க; வெத்தியா சமாயிருந்தா மன்னிக்கணும்; வெவகாரத்துக்கு, போது போறதுக்கு, அநுபவத்துலே, அறிவாலே தெரிஞ்சுக்கிட்டதை..." முடிக்க முடியவில்லை கிழவனுக்கு. குரல் நடுங்கிற்று. தான் ஒரு நோக்கமும் வைத்துப் பேசவில்லை என்பதை வெளியிடப் பாஷை கிடைக்காமல் குழறினன் அவன். தம்பதிகளை அழவிட்டதைத்

தான் செய்த பெரிய பாபமென்று நினைத்துக்கொண்டு அவன் தவியாய்த் தவித்தான்.

"வேறென்ன சொல்வது? அதெல்லாம் உன்னை ஒன்றும் சொல்வதற்கில்லை. சொல்லமாட்டோம்" என்று அழுத்தமாய்ச் சொன்னார் மல்லிநாதர்.

"வண்டி ஏன் நிற்கிறது?" என்று கேட்டாள் சஞ்சீவினி.

"ச...ஞ்...சீ..." நிறுத்தி நிதானமாய்க் கூப்பிட்டார் மல்லிநாதர்.

"ஒன்றுமே இல்லை" என்று மெதுவாய்ச் சிரித்துக்கொண்டு உதடுகளை வருடிக்கொண்டாள் சஞ்சீவினி.

"என்ன, ஒன்றுமே இல்லையே? மெதுவாய்ப் பல் வெளியே தெரிந்தால் அதற்குச் சிரிப்பென்ற பெயர்? நான் ஒரு..."

"காரியமும் செய்யவேண்டியதில்லை.—கிழவா, விடேன் ஏன் நிற்கிறாய்?" சமாளித்துக்கொள்வதாய் எண்ணம் சஞ்சீவினிக்கு.

மல்லிநாதர் ஆரம்பித்தார்: "நான் ஒரு பிரதிக்ஞை செய்யப்... ... செய்துவிட்டேன்."

"நான் ஒன்றும் தவறு..." அவள் கண் மறுபடியும் கலங்கிற்று; "ஒன்றுமில்லையே" என்று தழுதழுத்துக்கொண்டு கைகளால் கால்களைப் பிடிக்கப்போனாள்.

மல்லிநாதர் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டார். குழைந்த கண்களால் கெஞ்சி உருகினாள் சஞ்சீவினி.

"நீ திரும்பி ஊருக்குப் போ. இன்னும் இரண்டே வருஷங்களில் ஞானத்தைச் சம்பாதித்துக்கொண்டு உன்னை வந்து அழைத்துக் கொள்கிறேன். இது சத்தியம்" என்றார் மல்லிநாதர். அவர் கைகள் சஞ்சீவினியின் கைகளைப் பலமாய் அழுத்தின. அதைவிட அதிக அழுத்தம் தொனித்தது அவர் குரலில்.

மறுத்துப் பயனில்லை என்று நினைத்தாளோ, அல்லது அவளுக்கே அது இஷ்டமாயிருந்ததோ, அவளுடைய கண்கள் ஒப்புக்கொண்டன அந்தப் பிரதிக்ஞையை.

"ஊருக்கு நீங்களும் வந்துவிட்டு..." என்று இழுத்தான் கிழவன். வேண்டாமென்றார் மல்லிநாதர். வண்டியைக் கிழவன் திருப்பினான். மூவருடைய மனத்திலும் மிக அழகிய தெளிவு ஒன்று ஏற்பட்டு மூவருடைய முகமும் இயல்பில் பொலிந்தன.

"அவர்களிடம் எப்படிச் சொல்ல வேண்டுமோ, அப்படிச் சொல்" என்று கிழவனுக்குச் சொல்லிவிட்டு, "நான் வருகிறேன் சஞ்சீவினி; கவலைப்படாதே" என்று கிளம்பினார் மல்லிநாதர். கோதாவரிக் கரையில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு பண்டிதரிடம் வந்துசேர்ந்தார்.

ஆரம்பத்தில் பெண்கள் அந்த இடத்தைத் தாண்டும் பொழுது, சிரிப்புத் தாங்க முடியாமல் விரல்களால் உதட்டைப் பொத்திக்கொண்டு, குலுங்கி நடந்துசென்று, பத்தடிக்கப்புறம்

குடங்களை இறக்கிவைத்து மறுபடியும் அங்கிருந்து கிளம்புவது வழக்கம்.

"இந்தப் பிள்ளையாண்டான் பொறுமையைப் பார்த்தால் கழுதைகூட ..." என்பாள் ஒருத்தி.

"பச்சைக் குழந்தையடி, இப்பத்தான் அரிக்குழி நோண்டறது. எல்லாப் பல்லும்" விழுவதற்குள் சப்தமஞ்சரியை முடித்து விடுவான்!" என்பாள் மற்றொருத்தி.

இன்னொருத்தி, "இதுக்கும் ஒத்தி கழுத்தை ரீட்டினளே!" என்று அவருக்கு வாய்த்த அந்த அபாக்கியவதியைப் பற்றிக் கவலைப்படுவாள். தேர்ச் சீலைபோலச் சதா நெளிந்துகொண்டே இருக்கும் ஒருத்தி, அவளுடைய தாயின்மேல் அனுதாபத்தை அபிஷேகம் செய்வாள், "பெத்தாளே!" என்று.

இதற்குள் ஒரு துடுக்குக்காரி, "ஆள் நல்ல..." என்று கிண்டலாய்ச் சிரித்துப் பக்கவாட்டில் முழங்கைகளைத் தூக்குவாள். ஆகப்போக, ஒரு குட்டிக் கதம்ப நாடகம் ஆடிவிட்டுத்தான் துறைக்குப் போவார்கள் பெண்கள். வரும்போதும் பழைய நாடகத்தையே மௌனமாய் அபிநயத்தோடு சுருக்கமாகவாவது நடத்திவிட்டுத்தான் நகருவார்கள்.

இவ்வளவும் அவருக்குத் தெரிய வழியேயில்லை. தமக் கெதிரில் இருக்கும் மணலில் கையைத் தேய்த்து வர்ணமாலையை எழுதிக்கொண்டே இருப்பார் அழித்தழித்து. ஜீவன் முக்தனைப் போல, அவருக்குள்ளே புறத்தில், செய்கையில் பேச்சில், பார்வையில் எங்கும் ஒன்றே ஒன்று — அதுதான் எழுத்துக்கள்.

கிருகஸ்தனுய் விட்ட இருபத்தைந்து வயசு யுவ புருஷன், அக்ஷராப்பியாசம் ஆரம்பிக்கும் நிலையில் தம்மிடம் வந்தால் யார்தாம் ஆச்சரியப்படாமல் இருக்கமுடியும்! நம்புவதற்கே முடியாமல் இருந்தது கிருஷ்ண பண்டிதருக்கு. உண்மை தானு இந்தச் சிரத்தை என்பதைப் பரீட்சிக்கவே அவனைத் தன் வீட்டுவாசலில், ஊர்ப் பெண்களெல்லாம் நதிக்குச் செல்லும் ஒரே வழியில் உள்ள தம் வீட்டு வாசலில், மணலைக்கொட்டி எழுதச் சொல்லி, யுவாவைச் சிசுவாக்கியிருந்தார். சாப்பிடும் போதுகூட எழுத்துக்களையே தியானிக்கும் அந்த அகால மாணவர் இலையில், "க்வ, த்ய" என்று எழுதிக்கொண்டிருப்பார். அவர் ஏன் பெண்களை நிமிர்ந்து பார்க்கப் போகிறார்? இரண்டாவது மாதத்திலேயே சிறு காவியங்களைப் படிக்க ஆரம்பித்துவிட்டார். கேலி செய்த பெண்கள் ஆச்சரியப்பட்டு மரியாதைகூடக் காட்டத் தொடங்கினர். இரவும் பகலும் படித்துவந்தார் அவர்.

கிருஷ்ண பண்டிதருடைய மனைவி அவனிடமிருந்து சுகுருஷைகளை எதிர்பார்க்காததே பெரிய ஆச்சரியம் என்பது ஊரார் கருத்து. ஆனல், "அவள் இவனிடம் புத்திர வாஞ்சை வைத்திருக்கிறாள். இவனுக்கு அறிவு ஏற ஏற, இவனை விட்டுப் பிரிய வேண்டுமே என்று கவலைப்படுகிறாள்" என்கிறார் பண்டிதர்.

மல்லிநாதர் இப்பொழுது காவிய நாடகங்களைப் படித்து வருகிறார். நடுப்புதரில் மஞ்சளாய்த் தலை நீட்டும் தாழைபோல அவர் மனத்திற்குள் ஒரு மலர்ச்சி தோன்றியிருக்கிறது. கவி ஹிருதயத்தை அறிவதில் முனைந்து, சிந்தனை செய்யும் நிலையில் இருந்தார். இப்பொழுது, மிகப் பழைய கனவுகள் தேசலாய் அரை குறை உருவத்தில் ஞாபகத்திற்கு வந்து, விளங்காமலேயே மனத்தைச் சிந்தனைப் பாதையில் அழைத்துப் போகுமே சில சமயம், அதுபோலத் தன் மாமனார் வீட்டில் கேட்டதுபோல் உள்ள விஷயங்கள் ஞாபகத்திற்கு வந்தன அவருக்கு. அவை ஒரே தடவை கேட்ட அபூர்வ ராகத்தின் சஞ்சாரத் துணுக்குகள்போல் வாய்விட்டுச் சொல்ல உருவாகாதனவா யிருந்தன. அந்த ராக மூர்ச்சனை மட்டும் ஸ்பஷ்டமாய் ஞாபகம் இருப்பதுபோல, 'நாம் முழு மூடனையிருந்தோம்; மாமனார் வீட்டில் யாரும் அதை ஒரு கணமாவது மறக்கவில்லை' என்பது மாத்திரம் நினைவிருந்தது. அந்த நினைவிலேயே உக்கிரமாக முயன்றுவந்தார் அவர்.

அங்கு, அறுபது நாழிகையும் உத்ஸாகத்தோடு விளையாட்டும் கேலியுமாய் வளைய வந்துகொண்டிருந்த அதே பிறந்தகத்தில், மல்லிநாதரை எதிர்பார்த்துக்கொண்டு, தேய்பிறையின் இரவுகள் போலக் குழம்பிச் சோர்ந்து ஊர்ந்துகொண்டிருந்தாள் சஞ்சீவினி. வியாதியுற்ற குழந்தையை இடுப்பில் தூக்கிக்கொண்ட தாய் போல, தனது ஏக்கம் பிடித்த மனத்தோடு ஒன்றிலும் பாவாமல் என்னவோ இருந்துவந்தாள்.

அவளுடைய விரகம் உலக சரித்திரத்திலேயே புதுமை யானது. சந்திரனையும் சந்தனத்தையும் வெறுத்துக் கரித்துச் சுடும் விரகவேதனையை வர்ணிக்கும் பதினாயிரம் சுலோகம் தெரியும் அவளுக்கு. அவற்றில் எல்லாம் உண்மை என்ன என்பதும் அவள் அறிவாள். அவளுக்கு அந்தப் பாவம் இல்லை. அவளுடைய பருவமும் விரகத்திற்குப் பாத்திரம் ஆகக்கூடாதது அல்ல. அவள் கணவனைக் காணுவதற்குத் துடித்துக் கொண் டிருந்தாள்; விரகத்தால் அல்லவே அல்ல; விசனத்தால். பகீரதப் பிரயத்தனம் என்று சொல்வார்கள், வெறும் பேச்சிற்கு; உண்மை யிலேயே பகீரப்பிரயத்தனமல்லவா செய்து, ஞான கங்கையைக் கொண்டுவரக் இளம்பியிருக்கிறார் அவள் கணவர்? அது சாத்திய மாகி வெற்றியோடு திரும்பிவரவேண்டுமே அவர். வெற்றி கிடைக்காவிடில் பிரதிக்ஞைக்குப் பங்கம் வருமே என்று அவள் பயப்பட்டதாயிருந்தால் அது புராணம்; அவர் வெற்றி அடையா விட்டால் இருவர் வாழ்க்கையும் வறண்டுவிடுமே என்பதுதான் அவள் கவலையெல்லாம். அவளுடைய அறிவொளிதான் வழிகாட் டிது. கட்டாயம் வருவாரென்ற நம்பிக்கையில் இருந்து வந்தாள் சஞ்சீவினி.

இரண்டாவது வருஷம் ஆரம்பித்துச் சில மாதங்களும் கடந்தன. கிருஷ்ண பண்டிதர் கணக்குப்படி, இது ஐந்தாவது வருஷம்; அவனைவு லேகத்தில் பிடித்திருக்கிறார் மல்லிநாதர்.

பாஷா ஞானம் முதிர்ந்து பின் நயங்களை ஆராய்ந்து அறிந்த அவர், இலக்கணத்தை விரும்பவில்லை என்பதில்லை. பண்டிதரும் இலக்கண நூல்களின் போக்கைச் சிறிது காண்பித்துக் கொடுத்து விட்டு அனுப்பத்தான் எண்ணியிருந்தார். மல்லிநாதருக்கும் சிரத்தை குறைந்துவிடவில்லை; ஆஞல் சம்பளம் பையில் ஏறிய உடனேயே வீட்டுக்கு ஓடிவிடும் தன் மனத்தைப் பின்பற்றித் தானும் ஓட விரும்பும் உத்தியோகஸ்தனைப்போல, தன் அறிவைச் சஞ்சீவினிக்குக் காட்டி அவள் மனம் பொங்குவதைக் காண வேண்டிப் பறக்கும் மனத்தோடு அவர் ஆவல் கொண்டார்.

இரண்டாவது வருஷ ஆரம்பத்திலிருந்தே சஞ்சீவினிக்கும் தைரியம் குறைய ஆரம்பித்தது. சொந்தத் தேறுதல்கள் போதவில்லை மனத்திற்கு. அடிச்சுகடித் தைரியம் தேய்ந்து அதன் பிடியிலிருந்து விலகிச் சஞ்சரித்த சிந்தனை, சுருதியிலிருந்து விலகிய சங்கீதம் மாதிரி விரசமாய்க் கொண்டிருந்தது அவளுக்கே. மதனி மார்கள் அடிக்கடித் தேற்றுவார்கள்; தமையன்மார்களும் தேற்றுவார்கள். ஆனலும் வரவரச் சஞ்சீவினி பலஹீனமடைந்து வந்தாள். எப்பொழுதாவதுதான் அவள், தமையன்களும் வித்தியார்த்திகளும் இருக்கும் இடத்திற்கு வந்து தனியாய் நிற்பாள். அவர்களுடைய சர்ச்சைகளிலும் கலந்துகொள்வதில்லை. விக்கிரகமில்லாத கர்ப்பக் கிருகம்போல வெறிச்சென்றிருந்தது சர்ச்சைக் கூடம். அவர்களுக்கும் அன்றிலிருந்து இன்றுவரை வேதனையாய்த்தான் இருந்தது. மல்லிநாதர் எங்கு யாரிடம் படிக்கிறார் என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. யாரிடம் படித்தால் தான் என்ன? இனிமேலா அவருக்குப் பாண்டித்தியம் ஏற்படப் போகிறது? "எது எப்படியிருந்தாலும் சஞ்சீவினி இப்படி ஆக வேண்டாம், வருத்தப்படுத்த வேண்டுமென்று, இவ்வளவு தூரத்திற்கு வருமென்று தெரிந்துகொண்டா, பரிகாசம் செய்தோம்? வெறும் வேடிக்கைக்கு. இவள் பிரமாதப்படுத்திவிட்டாள். இப்பொழுது எல்லோரும் புழுங்கிச் சாகிறோம்." இப்படித்தான் பரிசிலனை செய்தார்கள், நிலைமையைத் தமையன்கள். "சரி, தாமே வந்து அழைத்துக்கொண்டு போவார், நாம் என்ன செய்யலாம்?" என்று தீர்மானித்திருந்தார்கள். அவர்கள் புருஷர்கள். அவர்கள் இயல்பிற்கு அது பொருந்திவிட்டது. மதனிகளுக்குத்தான் பெரிய சுமையாய்க் கனத்தது இந்த விஷயம். காத்தி என்றில்லாமல் சகோதரியைப்போல தினத்தே அவர்கள் மூன்பும் ரட்சித்தார்கள் சஞ்சீவினியை. ஏன்? தீத்தர் இருக்கும் போது, அவரே இதை வாய்விட்டுச் சொல்லி, தம் மாட்டுப் பெண்களைப் போற்றியிருக்கிறார். இப்பொழுதும் அவர்கள் இருவரும் பலவந்தம் செய்தாவது சஞ்சீவினிக்கு வேண்டியதைச் செய்து வந்தார்கள். "உடம்புக்காகாது; பட்டினி கிடக்கக்கூடாது; தலை காயக்கூடாது" என்று இதையெல்லாம் சொல்லலாமே தவிர, தாங்கள் செய்துகொண்டா அவளைப் போஷிக்கமுடியும்? தானுகக் கெடுத்துக்கொண்டு விட்டாள் உடம்பை.

அவளோடு மதனிகளும் பட்டினி கிடக்கவேண்டி ஏற்பட்டது ஒருநாள். சூரியன் உச்சிக்கு வந்த பிறகுதான், தனக்காக அவர்கள் பட்டினிகிடப்பது தெரிந்தது சஞ்சீவினிக்கு. அன்று, தானே எழுந்து சென்று, சாப்பிடுவதுபோல ஏதோ பாவனை செய்து அவர்களைச் சாப்பிடச் செய்தாள். பிறகு, பலதினங்களாக அந்தப் பக்கமே போகாதவள், சுவடிகள் இருந்த முன்பக்கத்து அறைக்குச் சென்று, ஏதோ புஸ்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள். கவனம் அதில் செல்லவில்லை. 'பட்டினி கிடக்கும் நிலைவரைக்குமா போய்விட்டது, தன் அதைரியம்?' என்று நினைத்துப் பார்த்தாள். அவளுக்கே வெட்கமாய்ப் போய்விட்டது; 'ஆச்சு, இன்னும் கொஞ்சநாளில் அவர் வந்துவிடப்போகிறார். அதற்குள்...?' இந்த நினைவே சற்று ஊக்கிவிட்டது அவளை. முனைந்துவிட்டால் மனிதனுக்கு முடியாததென்று ஒன்று இருக்கிறது? "அப்பொழுது நாங்கள் இருவரும் ஒரு சோகம் அனுபவித்தோமே வண்டியில், அது சோகநிலை தாண்டி மூர்ச்சைக்கும் அப்பால் போய் மரணமாகவல்லவா ஆய்விட்டிருந்தது? அந்தச் சில விநாடிகள் எங்கள் ஆத்மாவே ஓய்ந்து, அப்படியே மரத்தல்லவா போயிருந்தோம்? பிறகு ஞாபகமாய் வரவில்லையே! மறுபடியும் புதிய உயிரல்லவா பெற்றோம்? அந்தப் புதுப்பிறப்பில் செய்த பிரதிக்ஞை நிறைவேறுமலா போகும்?" இந்தச் சமாதானம் துவண்டுபோயிருந்த அவள் ஜீவனுதையை நிமிர்த்திற்று. அவள் நினைவும் மெதுவாய்ச் சிலிர்த்து விரிந்து படர ஆரம்பித்தது.

"அவர் வருவார்; கட்டாயம் ஞானத்தோடு வருவார்; நான் புதிதாய் இப்பொழுதுதான் அவரை, சுயம்வரமாய் மணக்கப் போகிறேன்; வாஸ்தவந்தான். எனக்கு இப்பொழுது வாசனை ஏது? அவர் வந்த பிறகுதான் நான் மணம் பெறுவேன். சீதை ராமனுடைய கனையாழியைப் பார்த்தபோதே ராமனை அடைந்து விட்டாள் என்கிறார் வால்மீகி. இருக்கட்டுமே; எல்லாம் பழைய ராமன்தானே? எனக்கு அப்படியில்லை. பின் எப்படி? அவரிடமே கேட்டுப் பதில் வாங்கவேண்டும். அசோகவன சர்க்கத்தை யெல்லாம் நிறுத்திப் படிக்கவேண்டும்; நான்தான் படிப்பேன். சீதையைப்பற்றி அவர் என்ன சொல்கிறார் என்று பார்க்க வேண்டும். அண்ணிவோடு சேர்ந்துகொண்டு மூன்பெல்லாம் செய்வதுபோல அவர் வாயைக் கிண்டலாமா? — சீ, சீ, தவிட்டு வியாபாரி தங்கவியாபாரி ஆனபிறகுங்கூட அவனிடம் தவிடு தண்டியதுபோலத் தங்கம் தண்டுவதா? வாயைக் கொடுத்துவிட்டு விழிக்கக்கூடாது. அப்புறம் ..." இப்படி இழைத்து நூற்றுக் கொண்டிருந்தது அவளுடைய மனராட்டை. சற்றே அவள் உதடுகள் விரிந்து மறுபடியும் கூடின. நூற்ற இழையைக் கதிரில் சுற்றுவதுபோல், நினைப்புகளைக் கூட்டி இணைக்கப் பார்த்தாள்.

பக்கத்து வீட்டுக் குழந்தை படித்துக்கொண்டிருந்தான். "ஐந்தில் வளையாதது ..... இளமூங்கிலை ....." சிந்தனை இழை விடுபட்டது. மனமும் காரியம் இல்லாமல் சுழன்றது. பழையபடி புது இழை தொடங்கவேண்டும், சிடுக்குகளைப் பிய்த்தெறிந்து விட்டு. குழப்பம் அடங்குவதற்குள் அவள் மனத்தில் சோகமும் வெறுப்பும் சுரந்தன. கல்யாணக் கனவு கலைந்தெழுந்த வயசான கன்னிகைபோல் அவள் மனம் நிராசையால் அயர ஆரம்பித்தது. வாய்விட்டுச் சொல்லமுடியாமல் ஏதோ அதிர்ச்சி ஏற்பட்டது போல் இருந்தது. மார்பு கலகலத்ததுபோல உணர்ந்தாள். உடல் முழுவதும் ஓய்ச்சல் பரவி முழுவதும் வியர்த்தது. தூணைப் பிடித்துக்கொண்டு தள்ளாடிக்கொண்டே நின்றாள். கால்கள் பூமியில் படுவதுபோலவே தோன்றவில்லை. தேய்த்துக்கொண்டே நடந்து சென்று படுத்துவிட்டாள். அன்றிரவு படுக்கையில் முக்கி முனகி உடம்பை முறித்துக்கொண்டாள் புரண்டு புரண்டு. அருகில் நெருங்கக்கூட முடியாதபடி உடம்பு அனலடித்தது. நாலைந்து நாட்களுக்கு இறங்கவே இல்லை ஜ்வரம்.

ஜ்வரம் போல் வந்ததே தவிர, என்னவெல்லாமோ படுத்தி விட்டுக் கடைசியில் வாய் பேசமுடியாமல் செய்துவிட்டது நோய். எவ்வளவோ முயற்சி செய்யாமலா இருப்பார்கள்? ஒன்றும் பயனில்லை. படுத்த படுக்கை, பேச்சில்லை, சைகைகூட மிகச் சிரமப்பட்டு, என்று ஆகிவிட்டாள் சஞ்சீவினி.

ஊரெல்லையில் வரும்போது சிலர் தம்மை வருத்தமாய்ப் பார்த்ததை அதிகமாய்க் கவனித்துப் புரிந்துகொள்ள முயலவில்லை மல்லிநாதர். 'சண்டை போட்டுக் கொண்டுபோய்த் திரும்பி வருவதால் அப்படிப் பார்த்தார்கள்; அதனுல் என்ன?' என்று நடையை வர வர வேகமாக்கிக்கொண்டு வந்தார். மாமனூர் வீட்டை நெருங்கும்போது மூத்த மைத்துனரைச் சந்தித்தார். அவர் ஓடி வந்து தம்மைக் கட்டிக்கொண்டு துக்கப்படும்போது மல்லிநாதருக்குப் பரந்து போய் விட்டது. "என்ன, என்ன?" என்றார். மைத்துனர் ஒன்றுமே பேசாமல் அவரை இழுத்துக்கொண்டு சஞ்சீவினியின் படுக்கைக்கு அருகில் விட்டார்.

பாய்ந்து சென்று, "ஹா, ஹா, ஹாங்!" என்று அவள் கையை, காலை, முகத்தை, இடுப்பைத் தொட்டு, "சஞ்சீ, சஞ்சீ!" என்று குழந்தைபோல் விசித்தார் மல்லிநாதர். மெல்லக் கண் திறந்தாள் சஞ்சீவினி. தமையன்மார்கள் ஒருபுறம் பெருமூச்சு விட்டார்கள்; மற்றொருபுறம் மதனிகள் கண்ணைத் துடைத்துக்கொண்டு நின்றிருந்தார்கள். எல்லோரையும் சுற்றிப் பார்த்துவிட்டு, தன் கன்னங்களை மெதுவாய்த் தடவும் மல்லிநாதரைப் பார்த்தாள் அவள். பக்கத்தில் துவண்டு கிடக்கும் தன் கைகளை மெல்ல அசைந்து நகர்த்திக்கொண்டே, பஞ்சடைந்த கண்களால் கணவர் முகத்தை ஏற இறங்கப் பார்த்தாள்.

"சஞ்சீ, படித்துவிட்டேன்; சஞ்சீ, நன்றாய்ப் படித்திருக்கிறேனே; இன்னும் என்ன? சந்தோஷமாயிரு; குணமாய்விடும்!" என்று கண்களை மலர்த்திக்கொண்டு தேற்றினார் மல்லிநாதர்.

அவருடைய முகப்பொலிவைப் பார்த்து அவளுடைய முகத்திலும் சோபையின் நிழல் ஒன்று படிந்தது. நெற்றி வியர்த்தது. துடைமேல் ஏற முடியாமல் அவள் கைகள் தவித்ததைப் பார்த்துக்கொண்டிருந்த மூத்த மதனி, அருகில் ஓடி வந்து அவற்றைச் சேர்த்துக் கொடுத்தாள். கணவர் முகத்தைத் தன் கைகளால் தாங்கினாள் சஞ்சீவினி. தம் கைகளால் அவற்றுக்குப் பலம் கொடுத்துக்கொண்டு ஒட்டித் தொய்ந்திருந்த அந்தக் கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டார் மல்லிநாதர். சஞ்சீவினியின் மார்பில் போர்த்தியிருந்த போர்வை ஏறி இறங்கிற்று, கொஞ்சம் துரிதமாய். அவர் கண்களிலிருந்து ஜலம் பெருகிற்று. அவர் மூச்சு விடும் வேகத்தில் சஞ்சீவினியின் வகிடு தெளிந்தது. அழகாய்ப் பார்த்துக்கொண்டிருந்த அவளுடைய கண்கள் சொருகிக்கொண்டே மூட ஆரம்பித்தன. மதனிமார் அவள் மார்பைத் தடவினர். தமையன்மார்கள் அவள் மோவாய்க் கட்டையைத் தொட்டார்கள். இதை எல்லாம் கவனிக்காமல் அவளுடைய கைகளையே கண்ணில் இழுத்து இழுத்து ஒத்திக் கொண்டிருந்தார் மல்லிநாதர். "ஐயோ, சஞ்சி!" என்று மைத்துனர்கள் அலறியதுந்தான் அவர் தம் முகத்தைத் தூக்கினார். கைகளை விட்டார். அவற்றை மார்பில் சேர்த்து வைத்தார்கள் மதனிகள். எல்லோரும் அலறினர். மல்லிநாதர் முக்கி முனகக்கூட வில்லை. வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்; அவ்வளவுதான்.

எல்லாம் ஆயிற்று. மகாவிசனத்தில் ஆழ்ந்திருந்தார் மல்லிநாதர். பம்பையில் ராமர் கதறுவதையும், இந்துமதிக்காக அஜன் பிரலாபித்ததையும் புரிந்துகொள்ள முடியாமல் பாமரயுவனாயிருந்த நிலையில், அவர் மகாபண்டிதையான சஞ்சீவினியை அடைந்துவிட்டார், அட்சரம் தெரியாத அந்தணன் மகாசாம்ராஜ்யத்தை அடைந்ததைப்போல. மந்திரிகள் ஆலோசனை கூறும்போது அந்தப் பிராமணன் விழிப்பது போலத்தான் அவர் விழித்தார், அவளும் அவள் சகோதரர்களும் காவிய சர்ச்சை செய்யும்போது. அப்பொழுது அவருக்கே தெரியாமல் ஊமைக்காயம் போல் பட்டிருந்த மனப்புண்தான் வண்டியில் உடைந்தது. எங்கோ சென்று அறிவுடன் திரும்பிவந்தார் பரம சுகத்தை எதிர்பார்த்து.

இங்கு, விபரீதமாகப் புரட்டிவிட்டது விதி. நிழல்கள் மாதிரி நடமாடும் மைத்துனர்களையும் அவர்கள் மனைவியையும் பார்க்கப் பார்க்க அவருடைய சோகம் எல்லை மீறிப் பொங்கியது. மிகச் சங்கடமான நிலை. யாருக்கு யார் தேறுதல் சொல்வது? சஞ்சீவினியின் சுவடிகளை விரிப்பதும், புரட்டுவதும், கண்ணில் ஒத்திக்கொள்வதுமாய், நீண்டுகொண்டே இருக்கும் அந்தச் சோக தினங்களைக் கழித்தார். அழுவும் இல்லை; ஒன்றுமே செய்யவில்லை. ஒருவித உணர்ச்சியுமின்றிச் சருகாய்ப்போன அவருடைய தோற்ற

மும், சிறிதும் சபதமில்லாத அவருடைய செயல்களும் அந்த ஊரையே அயரச்செய்திருந்தன. அயர்ச்சியும் மௌனமும் அவர்கள் வீட்டை ஊமை ஆவிகளின் இருப்பிடமாக்கிவிட்டன.

நடுப்பகல். இரைந்து தன் மைத்துனர்களைக் கூப்பிட்டார் மல்லிநாதர். அப்பொழுது, ஏட்டுச் சுவடிகளைத் தலையில் வைத்துக் கொண்டிருந்தார். ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாத மைத்துனர்கள் அவரைப் பேசவாவது வைப்போமென்று, "என்ன? என்ன சொன்னீர்கள்? எங்கே, சொல்லுங்கள்" என்று ஒருமிக்கக் கூவினர்கள். "சஞ்சீவினி வந்துவிட்டாள்! இதோ பாருங்கள்: இங்கே என் இருதயத்தில் தங்கியிருக்கிறாள். அவளுடைய சங்கேதங்கள் நிறைந்த காவியங்கள்தாம் இவை. இவற்றுக்கு அவளே வியாக்கியானம் எழுதப் போகிறாளாம்" என்று சாந்த மாய்ச் சொல்லிவிட்டுக் கிளம்பி நேரே தம் ஊருக்குச் சென்றார். இரவும் பகலுமாய் எழுதினர். காளிதாஸனுடைய காவியங் களுக்கு முதலில் வியாக்கியானம் எழுதினர். அதன் பெயர் "சஞ்சீவினி."

ம. சீ. கல்யாணசுந்தரம், பி. ஏ.

குடும்ப தர்மம் 4

திருநெல்வேலி குமாஸ்தா தனிகாசலம் செட்டியார் ஆவலுடன் தபாலை எதிர்பார்த்து நின்றார். நாலைந்து நாட்களின் ஏமாற்றத்திற்குப் பிறகு, நீண்ட பழுப்பு நிறமான கவர் ஒன்றைத் தபால்கார னுடைய கையில் காணவே, செட்டியாரின் இருதயம் கோணலும் மாணலுமாக அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. தபால்காரன் இரண்டு மூன்று கடிதங்களைக் கொடுத்துவிட்டுப் போனான். அதற்குள் செட்டியாரின் மனைவியும் அங்கே வந்துசேர்ந்தாள். "ஆபீஸ் கடுதாசி போலிருக்கிறதே!" என்று விநயத்துடன் தன் ஆவலைத் தெரிவித்தாள்.

"என்ன எழுதியிருக்கிறார்களோ, தெரியவில்லை" என்று சொல்லிக்கொண்டே, பதறும் கைகளுடன் அவர் தபால் உறையைப் பிரித்துக் கடிதத்தைப் படித்தார்; பிரமித்து நின்றார்.

"என்ன எழுதியிருக்கிறார்கள்?" என்று வேதவல்லியம்மாள் மூன்றாம் முறை கேட்டபின்புதான் செட்டியாருக்கு மறுபடி நினைவு வந்தது.

"நம்பிக்கைத் துரோகம்! முழு நம்பிக்கைத் துரோகம்! தலையில் பெருங்கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டார்கள்! அயோக் கியப் பயல்கள்! நாம் என்ன கோட்டை கட்டிக்கொண்டிருந் தோம்! நான் 'ஸ்தல மாற்றல் வேண்டும்' என்று கேட்டுக் கொண்டதன் பேரில், என்னைப் பண்ணுவுக்கு மாற்றியிருக்கிறார்

களாம்! என்ன கூத்து!" என்று செட்டியார் பதற்றத்துடன் சொன்னார்.

"பன்னுவா? அது எங்கே இருக்கிறது?"

"டில்லி, லாஹோர், ராவல்பிண்டிக்கெல்லாம் அப்பால் இருக்கிறது. வடமேற்கு எல்லைப்புறத்தில், 2000-மைல் தூரத்தில், சுத்தக் காட்டுமிராண்டி நாட்டில் இருக்கிறது. அந்தக் கொள்ளைக்கார ஊரில், பட்டப்பகலில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைத் தூக்கிக்கொண்டு போய்விட்டுப் பிறகு விடுதலைப் பணம் கேட்பார்கள்."

"ஐயோ, தெய்வமே!... ஏன் இப்படிச் செய்துவிட்டார்கள்? படுபாவிகள்!"

"போக்கிரித்தனம்! நம்பிக்கைத் துரோகம்! வேறு என்ன? ..... இருக்கட்டும். இதற்காக நீ கவலைப்படாதே."

* * *

தணிகாசலம் செட்டியார் ஆரம்பத்தில் சென்னையில் வேலையில் அமர்ந்தார். அப்பொழுது அவருக்கு ஊர் மாற்றல் என்ற தொந்தரவு இல்லை. 'ஸ்டேஷன் ஸெர்வி'ஸில் இருந்தார். ஆனல் சம்பளம் குறைவு. அந்தக்காலத்தில் 'ஜெனரல் ஸெர்விஸ்' என்னும் ஸ்தலமாற்றல் நிபந்தனைக்கு உட்பட்டு, அதிகச் சம்பளம் வாங்கிவந்தவர்கள் பெரும்பாலும் ஆங்கிலோ இந்தியரே. பிறகு ஒரு கிளர்ச்சியின் பலனுக அநேக இந்தியர்களும் 'ஜெனரல் ஸெர்வி'ஸில் எடுத்துக்கொள்ளப் பட்டார்கள். அவர்களுள் தணிகாசலஞ் செட்டியாரும் ஒருவர்.

அவர் 'ஜெனரல் ஸெர்வி'ஸில் சேர்ந்த உடனேயே, வெளியூர்களுக்கு மாற்றப்பட்டார். அவர் ஸெர்விஸ் பார்த்த கல்கத்தா, மாண்டலே, கோரக்பூர், லக்நௌ முதலான ஊர்களில் தமிழ்க் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் முதலிய வசதிகள் இல்லாமையால், அவர் தம் குடும்பத்தைச் சென்னையில் விட்டுவிட்டுத் தனி வாழ்க்கையே நடத்திவந்தார். அது அவருக்குப் பிடிக்கவே இல்லை. வாழ்க்கை ரசமற்று இருந்தது.

மனம் நொந்துகொண்டும், மாதம் எழுபது எண்பது ரூபாய் நஷ்டமானலும், 'ஜெனரல் ஸெர்வி'லிருந்து 'ஸ்டேஷன் ஸெர்வி'ஸுக்கு மாற்றிக்கொண்டு விடலாமா என்று சிந்தித்துக் கொண்டும் அவர் ஏழெட்டு வருஷங்கள் எப்படியோ கழித்தார். அதன்பிறகு அவர் நான்கு மாத ரஜாவுக்கு எழுதிப்போட்டார். கூடவே, தம் அசௌகரியங்களை விவரமாகத் தெரிவித்து, விடுமுறை தீர்ந்ததும் தமிழ் நாட்டிலேயே ஏதேனும் ஒரு பெரிய ஊரில் மாற்றிப் போட வேண்டுமென்று பிரார்த்தித்து ஒரு மனுவும் அனுப்பினர்.

ரஜா ஆரம்பித்ததும், அவர் நேராக டில்லிக்குப் போய், பெரிய ஆபீசில் தம் கஷ்டங்களைப் பற்றியும், தம் மனுவைப் பற்றியும் மேல் அதிகாரியிடம் சொல்லி, அவருடைய தலைமைக் குமாஸ்தா

வோடும் கலந்து பேசித் தம் மனுவின்மேல் சாதகமான உத்தரவு போட வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, காரியம் கைகூடினவர்போல் ஊர் வந்துசேர்ந்தார்.

ரஜாவில் மூன்று மாதங்கள் கழிந்து நான்காவது மாதம் ஆரம்பித்ததுமே, எந்த ஊரில் போடுவார்களோ என்ற கவலை அவருக்கு உண்டாயிற்று. 'மதுரையா, திருச்சிராப்பள்ளியா, பங்களூரா?' என்று நினைத்துக்கொண்டிருக்கும் போதே பன்னு என்ற இடி விழுந்தது. அவருக்கு வந்த கோபத்தில், "ஜெனரல் சர்விஸும் வேண்டாம், மண்ணுங்கட்டியும் வேண்டாம். நான் உடனேயே அதை ராஜிநாமா செய்துவிட்டு, 'ஸ்டேஷன் ஸர்வி' ஸுக்கு மாற்றிக்கொண்டு விடுகிறேன். அதில் கிடைத்த சம்பளம் போதும்" என்று பிடிவாதம் செய்தார். வேதவல்லி நல்ல வார்த்தை சொல்லி, "2000-மைல் தூரத்தில் நித்திய கண்டமான இடத்திற்குப் போவதென்றால், அந்தக் கஷ்டம் உங்களுக்கு மட்டுந் தானா? எனக்கு இல்லையா? ஆனாலும் நம் கடமையைச்செலுத்தித் தானே தீரவேண்டும்? திரைகடலோடியும் திரவியம் தேடுவது தானே புருஷர்களுக்கு அழகு? நீங்கள் தைரியமா யிருந்தால் தானே எனக்கும் தைரியம்? நம்முடைய குடும்பச் செலவு இரண்டு பங்கு, மூன்று பங்கு என்று அதிகரிக்கும் இந்தச் சமயத்தில், நாமாகவே வரவைக் குறைத்துக் கொள்ளலாமா? இன்னும் நாலைந்து வருஷங்கள் இதேமாதிரி பல்லைக் கடித்துக் கொண்டு சமாளித்து விட்டால், அதற்குள் பெரியவனுக்கு வேலை கிடைத்துவிடும். அதற்குப் பிறகு, நீங்கள் என்னவோ 28 மாத லீவ் என்கிறீர்களே, அதை வாங்கிக்கொண்டு சொஸ்தமாய் வீட்டில் வந்து உட்காரலாம்" என்று தைரியப்படுத்தினாள்.

செட்டியார் புறப்பட்டார். ரெயிலில் இரண்டு மூன்று வாலிபர்கள் டில்லியில் வேலை ஒப்புக்கொள்ளுவதற்காகப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சிறுபிள்ளைத்தனத்தையும் அட்டகாசத்தையும் கண்டு அவர் முதலில் அருவருப்பட்டார். பிறகு பரிதாபப்பட்டார். கடைசியாக, குடும்பத் தொல்லைகள் வந்து அழுத்தும் வரையிலாவது துள்ளி விளையாடட்டுமே என்று மானஸிக அனுமதி கொடுத்தார்.

* * * *

பன்னு அவர் நினைத்ததைவிட மோசமாக இருந்தது. ஒரு மண் மதில் கோட்டைக்குள் மற்ற ஆபீசுகளுடன் தந்தி ஆபீசும் இருந்தது. இரவு எட்டு மணிக்குப் பிறகு கோட்டைக்கு வெளியே, பொது ஜனங்கள் குடியிருக்கும் இடத்திற்குப் போக முடியாது; விசேஷ அனுமதி பெறவேண்டும். பகலிலும் ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்டிப்போனால் அவனுடைய உயிருக்குச் சர்க்கார் உத்தரவாதி அல்ல. தொழில் முறையில் போகவேண்டி நேர்ந்தால் ராணுவ மெய்காப்புடன்தான் போக வேண்டும். கோட்டைக்குள் நாம் எதிர்பார்க்கும்படி நல்ல பண்டங்கள் கிடைப்பது துர்லபம். கறிகாய், பால், தயிர் வாங்குவ

தானல், "அப்துல்லாவின் கடையைக் காட்டிலும், ரஹ்மானின் கடை ஒரு மாற்றுத் தேவலே" என்பதுதான் நமக்குக் கிடைக்கக் கூடிய ஆறுதல்!

செட்டியார் முடுக்கிவிட்ட யந்திரம்போல் ஆபீசுக்குப் போவதும், வீட்டுக்கு வந்து சாப்பாடானதும் ஒன்றிரண்டு பத்திரிகை புஸ்தகங்களைப் புரட்டிவிட்டுத் தூங்குவதுமாயிருந்தார். ஆனல் அந்தச் சாப்பாடு சாப்பாட்டில் சேர்த்தியா? தூக்கந்தான் கஷ்டப்பைப் போக்கும் சக்தியுள்ளதா? முருங்கைக்காய் ஸாம்பாரும் தேங்காய்ச் சட்டினியும் இட்டிலி தோசையும் நினைவுக்கு வந்துவிட்டால், பாவம், நாக்கிலும் கண்ணிலும் ஊற்றுக் கிளம்பிவிடும்! ஜெர்மன் கவி கெதேயின் வார்த்தைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பைச் செட்டியார் தாரக மந்திரம்போல் நாக்கால் உருட்டிக்கொண்டே இருப்பார்:—

"கண்ணீ ரூறிய அன்னமுண் ணுதோனும்
விடியுமோ விடியுமோ வெனத் தவம் காக்காதவனும்
உன்னை அறியார் அறியார் அறியார்
பராபரமே!"

செட்டியார் ஜனங்களோடு அதிகமாகக் கலப்பதில்லை. சர்க்கார் தம்மை வீணுக்குக் கஷ்டப்படுத்துகிறது என்ற எண்ணமும், வீட்டுக்கவலையுந்தான் அவருடைய நண்பர்கள் என்று சொல்லவேண்டும்.

இப்படி இருக்கும்போது ஒரு நாள் செட்டியார், ஒரு துர் சொப்பனத்தின் காரணமாக, முன்னிலும் அதிக மனக்கசப்புடன் தம் மனைவியின் விருப்பத்திற்கு விரோதமாயிருந்தாலுங்கூட, 'ஸ்டேஷன் ஸெர்வி'ஸுக்கு எழுதிப்போட வேண்டியதுதான் என்று தீர்மானித்துக்கொண்டு ஆபீசுக்குப் போனர். அங்கே ஓர் அழுக்கடைந்த முரட்டுப் பட்டாணி ஸ்திரீ, "பாபுஜி, தயவுசெய்து ஒரு தந்தி எழுதித்கொடுங்கள்" என்று வணக்கமாகக் கேட்டாள்.

"ஏன், கூலிக்கு எழுதுபவன் வாசலில் இல்லையா?" என்று செட்டியார் சற்றுக் கடுமையுடன் கேட்டார்.

"இருக்கிறான். சாதாரணச் செய்திகளை அவன் சுமாராக எழுதி விடுவான். இது கொஞ்சம் நாசுக்கான விஷயம். சற்றுவிசேஷமாகக் கவனம் செலுத்தி, அர்த்தம் புரள்வதற்கு இடமில்லாமலும், மரியாதைக்கு மரியாதையாகவும், கண்டிப்புக்குக் கண்டிப்பாகவும் எழுதவேண்டியிருக்கிறது. படிப்பாளிகள் எழுதினால் நல்லது."

"இது என் கடமையே அல்ல..... சரி என்ன விஷயம் சொல்."

"உங்கள் கடிதம் கிடைத்தது. ஒன்றும் அவசரப்பட்டுச் செய்துவிட வேண்டாம். பிரிவு உங்களுக்குத்தானே? எனக்கு இல்லையா? செலவும் பொறுப்பும் அதிகரிக்கும்போது, ஊர் பிடிக்கவில்லை யென்று சொல்லி நீங்கள் தொழிலை விட்டு

வருவது தர்மமா? அங்கேயும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் வசிக்கவில்லையா? நாம் கஷ்டப்பட்டால்தானே நம் பிள்ளைகள் கஷ்டப்படாமல் நல்ல நிலைமைக்கு வருவார்கள்? நான் ஒருத்தி காய்கனிகள் விற்று எவ்வளவு சம்பாதிக்க முடியும்? தைரியமா யிருங்கள். எனக்கும் தைரிய மூட்டுங்கள்."

இந்த வார்த்தைகளைக் கேட்டுச் செட்டியார் ஒரு க்ஷணநேரம் மெய்ம் மறந்திருந்தார். சொப்பனத்தில், யாரோ ஒருவர், தமக்கு உபதேசம் செய்வதுபோல் அவருக்குத் தோன்றிற்று. அவருடைய மனத்தில் ஒரு விபரீத மாறுதல் ஏற்பட்டது. பிறகு நினைவு வந்து, "இது கடிதமா, தந்தியா?" என்று அவர் கேட்டார்.

"ஐயா, தந்திதான்."

"ஊர்ப்பட்ட செலவாகுமே?"

"என்ன செய்யலாம்!"

"தபாலில் அனுப்பினால்? — அவ்வளவு அவசரமான சங்கதியா?"

"தந்தி, சுடுகஞ்சி; தபால், ஆறின கஞ்சி!"

செட்டியார் அந்த ஸ்திரீ சொன்னதை ஜாக்கிரதையாய் மொழிபெயர்த்து, நிதானமாய்ப் பிசகு ஏற்படாவண்ணம், ராவல் பிண்டி ஆபீசுக்கு அடித்துவிட்டு, ராவல்பிண்டி தந்தி குமாஸ்தாவிடம் அதைத் தாமதம் இல்லாமலும் பிழை இல்லாமலும் அப்பால் அனுப்பும்படி கேட்டுக்கொண்டார்.

செட்டியாருடைய மனோபாவமே மாறிவிட்டது. உலகமேபுதுப் பிரகாசத்தோடும் புதுப் பசுமையோடும் அவருக்குத் தோன்றிற்று. மற்றக் குமாஸ்தாக்களுடனும் அக்கம்பக்கத்தாருடனும் பழக ஆரம்பித்தார். குழந்தைகள் அவர் வீட்டிற்கு வர ஆரம்பித்தன. அவர் அவர்களுக்குப் பத்திரிகைகளிலிருந்து படங்கள் காட்டுவார்; கற்கண்டு, பாதாம் பருப்பு முதலியன கொடுப்பார்; அவர்களுடைய பாஷையைப் புரிந்துகொள்ள முயலுவார். விட்டத்தில் குளவிக் கூடையும், திண்ணையில் கறையான் புற்றையும் பார்த்தால், "ஆஹா, என்ன பொறுமை! என்ன சுறுசுறுப்பு!" என்று மெச்சுவார். தெருக்காரர்கள் அவருடைய புதுச் சிநேக பாவத்தைக் கண்டு, "மிஸ்டர் செட்டியார் டர்பி பந்தயத்தில் ஜயித்திருக்கிறாரோ?" என்று பேசிக்கொள்வார்கள்.

செட்டியார் தம் மனைவிக்கு எழுதின ஒரு கடிதத்தில் பின் வருமாறு எழுதியிருந்தார்:—

".....என்னைப்பற்றி நீ இவ்வளவு கவலை கொள்ளக் கூடாது. வந்த புதிதில் ஒரு மாதிரி இருந்தது, வாஸ்தவந்தான். இப்பொழுது பழகிப்போய் விட்டது. நான் உள்ளூர் ஆள் ஆகிவிட்டேன். இரண்டு மூன்று ஆப்த நண்பர்கள்கூடக் கிடைத்துவிட்டார்கள். இந்த வேடிக்கை பார்: மேல் மூடி போன்ற நடை உடை பாவனைகளை விலக்கிவிட்டால்

மனிதனின் உள்ளம் எங்கேயும் அநேகமாக ஒரேமாதிரிதான். இருக்கிறது.....காலம் சந்தோஷமாகக் கழிகிறது.....ஒவ்வொருவனும் தன் குடும்பப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக என்ன பாடுபடுகிறான்! பக்ஷிகளையும் தேனீக்களையும் பார்: தம் கஷ்டத்தை மறந்து குடும்பத்திற்காகவும் வம்சத்திற்காகவும் எப்படி ஏகமனசாய் உழைக்கின்றன! ஆச்சரியம்! ..... ஒரு நாள் ஓர் அழுக்கடைந்த முரட்டுப் பட்டாணிக்காரி என் ஆபீசுக்கு வந்தாள். அவள் புருஷன் மதுரை ஜில்லாவில் ஆண்டிப்பட்டிக்கு அருகே ரயில் கண்ட்ராக்ட் வேலை செய்துவருகிறான். பத்து வருஷமாய் அங்கேயே வசிக்கிறானும். அவன் தன் மனைவாட்டை நினைத்து நினைத்து என்ன பெருமூச்சு விடுகிறானே! தந்தூர் ரொட்டியின் நினைவும், பாசுமதி அரிசிப் புலாவின் நினைவும் அவனை எப்படித் துன்பப்படுத்திக் கொண்டிருக்கும்? மூன்று நான்கு மாதத்திற்கு ஒருமுறை 100 அல்லது 150 அனுப்புகிறான். இங்கே அவனுடைய மனைவி வீட்டைக் கவனித்துக்கொள்ளுகிறாள். அவர்களுக்கு நான்கு குழந்தைகள். பெரியவன் ஸ்கூல் பைனல் படிக்கிறான். அடுத்தவன் ஒரு தையற்கடையில் வேலை கற்கிறான். அவள் ஒரு நாள் தன் கணவனுக்குத் தந்தி அனுப்ப ஆபீசுக்கு வந்தாள். தந்தி சமாசாரம் வெளியே விடக்கூடாது.' ஆனால் உன்னிடம் சொல்வதற்கென்ன? ரூ. 7—5—0 செலவழித்து ஒரு நீளத்தந்தி அடித்தாள். அதில்....."

சூ. பா. கல்யாணராமன்

அறுந்த காற்றுடி 5

1

அறுபட்ட காற்றுடி காற்றின் போக்கில் மிதந்து சென்றது. அப்படித்தான் சிகாமணியும் பிறந்தபோதே அறுத்துவிடப் பட்டான். சாவுக் கத்திதான் தொடர்பு நூலைத் துண்டித்தது. அவன் பெற்றோர்கள் — யாரென்று தெரியாது — வியாதியால் ஒழிந்தார்கள்.

காற்றுடி காற்றின் போக்கில் மிதந்தது. சிகாமணியும் மிதந்து சென்றான். வாழ்க்கைச் சம்பவங்களின் ஓட்டத்தில் அவனும் ஓடினான்; அவற்றை எதிர்க்கவில்லை. குறிக்கோள் ஏதாவது இருந்தால்தானே எதிர்க்க? வாழ்க்கைச் சுழலில் பல சந்துகளிலும், வளைவுகளிலும் புகுந்து புரண்டிருக்கிறான். ஆனால் அவன் உள்ளம் மட்டும் தூய்மையாக இருந்தது.

ஆம், அவன் உள்ளம் தூய்மையாக இருந்தது; கறைப்படவில்லை.

மாலை ஐந்தரை மணி: வேலை செய்துவிட்டு வந்துகொண்டிருந்தான். ஐந்துக்கெல்லாம் வேலை முடிந்துவிடும். அரை மணியில் மவுண்ட்ரோடிலிருந்து ரிப்பன் மாளிகை வரை வந்துவிட்டான்.

அவன் கண்கள் சுழன்று சுழன்று பார்த்தன. பரந்து விரியும் ரோடின் நடுவே தண்டவாளத்தின்மேல் ஓடும் டிராம், மனித மூட்டையின் பாரத்தால் மெதுவாக ஓடுகிறது. அந்த டிராம் அவன் வேலை செய்துவந்த கம்பெனி ஹெட் கிளார்க்கை ஞாபகப் படுத்தியது. தண்டவாளத்தின்மேல் டிராம் ஓடியது. ஹெட் கிளார்க்கோ முதலாளி, மானேஜர் முதலியவர்கள் கிழித்த கோட்டின் மேலேயே ஓடினர். தண்டவாளத்தை விட்டுப் பெயர்ந்தால் வண்டி கவிழ்ந்துவிடாதா? மேலும் கம்பெனியின் சட்டதிட்டங்களும், அவர் தலைக்குமேல் தொங்கிக் கொண்டிருந்தன. அவை டிராம் வண்டியின்மேல் இருந்த மின்சாரக் கம்பிகளை ஞாபகப் படுத்தின. அவர் வேலைக்கு வேண்டிய அதிகாரத்தை, மின் சாரத்தை, அவை கொடுத்தன.

சிகாமணி ரிப்பன் மாளிகைப் பிளாட்பாரத்திலேயே நின்றான். அந்த 'ஹெட்கிளார்க்' பாவம்! மானேஜர் வேலையைக் கூடச் செய்யவேண்டி இருந்தது, டிராம் வண்டி படியில்கூடப் பிரயாணிகளை ஏற்றிக்கொள்வதைப்போல.

அவன் சிரித்தான். உலகத்தின் செயல்களை—பைத்தியக்காரத் தனமான அர்த்தமற்ற செய்கைகளை—க் கண்டு அநாவசியமாகச் சிரிக்கும் குழந்தைச் சிரிப்பு அது. அவனுள்ளிருந்த குழந்தைதான் சிரித்தது. ஒவ்வொருவர் உள்ளத்திலும் குழந்தை இருக்கிறது. துன்பத்தைக் கண்டு மனம் ஓடியாமல் சிரிக்கும்போது தன் உள் இருக்கும் குழந்தைதான் சிரிக்கிறது. அதை நாம் கொன்று விட்டோம்; கொன்று வருகிறோம்.

சிகாமணியின் கண்கள் அகன்ற தெருவை நோக்கின. ஆற்றின் நடுவில்தான் வேகம் அதிகம். அந்தப் பெரிய வீதி வழியாகப் பட்டின வாழ்க்கையின் வேகம், நுரை கிளம்பிச் சுழித்துச் சென்றது. கொந்தளிப்பு, அகோர வேகம், காது செவிடு படும் சத்தம்.....அப்பப்பா!

அதோ, பஸ் — பேய்போல இரைச்சலிட்டுப் புகைப் படலங்களை உதறிக் கொண்டே போகிறது. கார்கள்.....அப்பா! தலைதெறிக்கும் வேகத்தில் ஓடுகின்றன. கூட்டம்; பாதசாரிகள். பெண்கள், குழந்தைகள், ஆண்கள், வீதியின் இருபுறங்களிலும் புரள்கின்றனர். வீதியின் நடுவில் டிராம். இடது புறத்திலும், வலது புறத்திலும் கார்கள், ஜட்கா, சைக்கிள், கட்டைவண்டி, பஸ் முதலியன. ஓரங்களில், நடை பாதைகளில் பாதசாரிகள். தெரு எல்லையில் கடைகள், ஓட்டல்கள், சத்திரங்கள், ரெயில்வே ஸ்டேஷன்கள்.....எங்கோ ஓர் ஓட்டலிலிருந்து கிராமபோன் இரைகிறது; 'கிரீச்'சிட்டுக் கத்துகிறது.

சுழல்களின் போக்கில் போனான் சிகாமணி. ஜன சமுத்திரம் தன் போக்கில் அவனையும் அடித்துச் சென்றது. ரிப்பன் மாளிகைக்குப் பின்புறத்தில் வி. பி. ஹால். இரைச்சலே சமுத்திர அலைகளே, பேய் வண்டிகளே விட்டுச் சிகாமணி சந்தில் புகுந்தான்.

சத்தம் பின் தங்கிவிட்டது. புயலிலிருந்து தப்பி, வீட்டுக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொள்வதைப் போலிருந்தது சிகாமணிக்கு.

முச்சந்திக்கு வந்தான். மணி சரியாக 5-45. கார் ஒன்று வேகமாகச் சென்றது. வீதியைக் கடக்காமல் நின்றான்.

சைக்கிள் ஒன்று சென்றது. சைக்கிளை ஓட்டிக்கொண்டு போன உருவத்தைப் பார்த்தான் சிகாமணி. அவனது நிலையில் லாமல் சுற்றும் கண்கள் வழக்கத்துக்கு மாறுக நிலைபெற்றன; அந்த உருவத்தின்மீது பதிந்தன. திடீரென்று அந்த உருவத்தைப் பார்த்துக்கொண்டிருந்த கண்கள் விரிந்தன. வாயும் வேகமாக மூச்சை உள்ளிழுத்தது.....ஏன்?

சைக்கிள்மேல் இருந்தவள் ஒரு பெண்; ஆங்கிலோ இந்தியப் பெண். அதனாலோ சிகாமணியின் பதற்றம்? அல்ல. அப்பெண் அவனுக்கருகிலேயே விழுந்துவிட்டாள்.

நடுத்தெருவில் ஒரு பெண் அலங்கோலமாகக் கீழே விழுந்தது, சுற்றியிருந்த பேடிகளுக்குத் தமாஷாக இருந்தது. தாணுக்காரன்கூடப் பீடிப் புகையை விட்டுக்கொண்டே சிரித்தான்; ராஸ்கல்!

பதறியபடியே அப்பெண்ணை ஓடித் தூக்கினான் சிகாமணி. அவளது முழங்காலில் அடிபட்டு இரத்தம் கசிந்து கொண் டிருந்தது. வெள்ளைத் தோலில் ஒரே சிவப்புக் கறை.

2

பெஞ்சியில் உட்கார்ந்திருந்த சிகாமணியின் மனத்தில் எண்ணங்கள் அலைமோதின; கொந்தளித்தன.

அப்பெண்ணுக்கு மருந்து போட உள்ளே அழைத்துச் சென்றனர் நர்ஸ்களும், ஒரு டாக்டரும்.

சிகாமணி பெஞ்சியில் அவளுக்காகக் காத்துக் கொண் டிருந்தான். ஆஸ்பத்திரியின் மருந்து நாற்றங்களைக்கூடக் கவனிக்க வில்லை. காத்துக்கொண்டு இருக்கும் நோயாளிகளையுங்கூடக் கவனிக்கவில்லை. இளம் டாக்டர்களின் பிரட்டல்களையும், பீற்றல் களையும் கூடக் கவனிக்கவில்லை.

அவன் மனத்தில் பல எண்ணங்கள் அலைமோதின; கொந்த ளித்தன.....ஆம், அதனால்தான்.

அப்பெண் சிகாமணிக்குத் தெரியும். வருஷக் கணக்கில் அல்ல; மாதக் கணக்கில் அல்ல; நாள் கணக்கில்தான். பல நாட்களும் இல்லை. மூன்று நாட்களே.

வழக்கம் போலவே அன்றும் ஐந்து மணிக்கு வேலை முடிந்தது. அப்பெண்ணை முச்சந்தியில்தான் முதல் முதல் சந்தித்தான். அப்போது மணி 5-45. அவள் சைக்கிளில் அவனுக்கு எதிரில் சென்றாள்.

மறுநாளும் அப்படியே. மூன்றாவது நாளும் அப்படியே.

அம் முச்சந்தியில் வரும்பொழுது, அவனை அறியாமலே அவன் கண்கள் அவளை எதிர்பார்த்தன. ஒவ்வொரு நாளும் அவளைச் சந்திப்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது, விதியின் சதியா? அல்லது தற்செயலா?

என்ன இருந்தாலும் அவன் மனம் மட்டும் அவளை எதிர் பார்ப்பதை நிறுத்தவில்லை. மூன்று நாளே சந்தித்தான்; மூன்று நாளும் வெவ்வேறு விதமான உடைகளை அவள் உடுத் திருந்தாள். அவள் உடை போட்டோப்படத்தைப் போல் அவன் மனத்தில் பதிந்துவிட்டது.

முதல் நாள் சிவப்பில் பச்சை பார்டர்; 'ஜம்பர் கை', மூக்கோண வடிவத்தில் கழுத்து.

இரண்டாவது நாள் மஞ்சள் கலந்த சிவப்பு.....சைக்கிள் பின்னல் சில புத்தகங்கள்.

மூன்றாவது நாள்.....தூய வெள்ளைக் கவுன்; காலில் ரோஸ் கலர் மேல்ஜோடு. அழகான பாதம்; உயர்ந்த ஷூஸ்.

நான்காவது நாள்தான் இனிப்பச்சை.....

* * * *

உட்கார்ந்திருந்த சிகாமணி எழுந்தான்.

புன்முறுவலுடன் கட்டுப் போட்டுக்கொண்டு வந்தாள் அவள். நல்ல காலம், அவள் கொஞ்சம் வலியோடு நடந்தாலும், சாதாரண மாகவே நடந்தாள். சிகாமணியின் முகம் மலர்ந்தது.

ரிக்ஷாவில் அப்பெண் உட்கார்ந்து கொண்டாள். சைக்கிள் 'பங்க்சராகி' (Puncture) விட்டது. அதைத் தள்ளிக்கொண்டே ரிக்ஷாவின் பக்கத்தில் சென்றான் சிகாமணி.

ரிக்ஷாக்காரனிடம் அப்பெண், "குதிரை ஆஸ்பத்திரி தெரியுமா?" என்று கேட்டாள்.

தமிழ் அழகாகத்தான் பேசினாள் என்பதைச் சிகாமணி கவனித்தான்.

"தெரியும், மிஸி" என்றான் ரிக்ஷாக்காரன்.

"அதுக்கு எதிர் சந்து; மாதா கோவிலுக்குப் பக்கத்தில்" என்றாள். சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வந்த சிகாமணியைக் கடைக்கண்ணால் அவள் பார்த்தாள். அவனுக்கு நன்றிகூற

வாயெடுத்தாள். என்ன காரணத்தினலோ அவளுடைய சிவந்த முகம் பின்னும் சிவந்தது.

"தாங்கள் எனக்காக ரொம்பக் கஸ்டம் எடுத்துக் கொண்டீங்க" என்றாள், ஒரு விதமாக. அவள் குரலின் இனிமையைத் தான் சிகாமணி கவனித்தான். குறையைக் கவனிக்கவில்லை.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை" என்றான் சிகாமணி. பிறகு சிறிது நேரம் பொறுத்து, "இனிமேல் இந்தச் சைக்கிளை உபயோகப்படுத்த வேண்டாம். அதனல்தானே....."

"சைக்கிள் மேல் ஒண்ணும் பிசகில்லை. நான் 'ஸ்பீடாக' வந்தது தப்பு. வீட்டில் எனக்காக 'மதர்' காத்திருப்பாளே என்றுதான்....."

சம்பாஷணை முதலில் பொதுவாக இருந்தது. பிறகு அவளுடைய குடும்பத்தைப் பற்றித் திரும்பியது. அதிலிருந்து தாய், மகள் இருவரும் தனியாக இருக்கிறார்கள் என்றும், அவள் 'மெடிகல் காலேஜில்' படிக்கிறாள் என்றும் தெரிந்துகொண்டான்.

வீடு வந்தது. ரிக்ஷாவிலிருந்து இறங்கினுள். சிகாமணியின் உதவியைப் புன்சிரிப்போடு ஏற்றுக்கொண்டாள். பக்குவமாக அணைத்தவாறே வீடு சேர்த்தான். சிகாமணியே பணம் கொடுக்க முன்வந்தான். அவள் மறுத்துவிட்டாள்.

வெளியில் விட்டிருந்த சைக்கிளையும் வீட்டிற்குள் கொண்டு போனுன். அப்போதுதான் அவனது கண் அவ்வீட்டைச் சுற்றிப் பார்த்தது. வெள்ளைக்கார முறைப்படி அவ்வறை அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஜன்னலுக்கு 'பிளைண்ட்' (Blind) என்ற நிலத்துணி போடப்பட்டிருந்தது. கதவுகளின் மேல்பாகம் மெல்லிய துணியால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அறையின் குறுக்கில் ஒரு கம்பளி. பல சோபாக்களும், நாற்காலிகளும் சுற்றி இருந்தன. அறையின் நடுவில் இருந்த மேஜையின்மேல் புஷ்பச் செண்டுகள் வைக்கப் பட்டிருந்தன. எதிர்புறச் சுவரில் பெரிய ஏசுநாதரின் படம் மாட்டப்பட்டிருந்தது.

அவளுடைய தாய், கால் கட்டுடன் இருந்த தன் மகளைப் பார்த்துப் பதறிப் போனுள். "லார்ட் ஜீசஸ்" (Lord Jesus) என்று சொல்லியபடியே மகளை இறுகப் பற்றிக்கொண்டாள்.

மகள் சிகாமணியைச் சுட்டிக் காட்டினுள். "அவர்தாம் என்னைக் காப்பாற்றினர்....."

அவள் பெயர்தான் மேரி ஷெல்லட்.

சிகாமணி அவ்விட்டை விட்டு வெளிவர இரவு ஒன்பது மணி ஆயிற்று.

3

காற்றின் போக்கில் மிதந்துகொண்டிருந்த காற்றாடி, மரக் கிளையில் மாட்டிக்கொண்டது; காற்றை எதிர்த்து நின்றது.

சிகாமணிக்குக் குறிக்கோள் ஒன்று அகப்பட்டுவிட்டது. வாழ்க்கைக்குக் காரணம் கிளம்பிவிட்டது. சிகாமணி இப்பொழுது முற்றும் மாறிவிட்டான்.

அவனுடைய அலங்கோலமான உடைகள் போயின. சோம்பல் தோய்ந்த நடவடிக்கை அடியோடு ஓடிவிட்டது.

மேரி ஷெல்லட் என்ற அவள்தான் இவ்வளவிற்கும் காரணம். இருவரும் அன்றிலிருந்து நெருங்கிப் பழகினர்; தினம் தினம் சந்தித்தனர்.

முதலில் சிகாமணியிடம் அவள் மேலான அபிப்பிராயம் கொள்ளவில்லை. நாளடைவில் அவன் தன் இளமைச் சம்பவங் களைப்பற்றிக் கூறினான்.

சிகாமணிக்குப் பல வேலைகள் தெரியும். புதிதாகப் பார்க்கும் எந்த விஷயத்தையும் கிரகித்துக்கொள்வான்.

அவன் பல பேரோடு பழகி இருக்கிறான். நல்லவர்கள் கெட்டவர்கள், சிறியவர்கள் பெரியவர்கள், குடிகாரர்கள் குடியாதவர்கள், மைனர்கள் ஒழுங்கானவர்கள் எல்லோரிடமும் பழகியிருக்கிறான். உலகத்தில் இரு பாதியும் அவனுக்குத் தெரியும். உலகம் முதல் பாதி மறுபாதியாகப் பிரிக்கலாம். ஒரு பாதி முதலாளிகள். மறுபாதி தொழிலாளிகள். முதல் பாதியில் செல்வம், சுகம், சந்தோஷம், ஓட்டல், கிளப், மோட்டார் சவாரி, எஜமானத்துவம். மறுபாதி அதற்கு நேர் எதிர்: வறுமை, நோய், பசி, பிணி, அடிமைத் தொழில், சாவு.

இரண்டிலும் அவன் உள்ளம் ஒட்டவில்லை. வாழ்க்கை ஜலத்தில் அவனும் நீந்தினான்; ஜலம் ஒட்டவில்லை. மீனின்மேல் நீர் ஒட்டுமா?

சிகாமணிக்கு எந்த வேலையும் இழிவல்ல. மாட்டுக்காரனாக இருந்திருக்கிறான். புளி மூட்டையைக்கூடத் தெருவில் ஓட்டி விற்றிருக்கிறான். ஓட்டல் வேலை முதல் கிளார்க் உத்தியோகம் வரையில் எல்லாம் செய்திருக்கிறான். அவன் கல்வியெல்லாம் தன் சொந்த முயற்சியால் கற்றதுதான்.

ஆம், அவனைக் குழந்தை என்றுதான் சொல்லவேண்டும். மேரி அவன் மேல் இரக்கந்தான் கொண்டாள். அவனைத் திருத்தி மனிதனாக்க விரும்பினாள்.

உலகம் அவனை மதிக்க வேண்டும். பாவம்! அவனுக்கு நன்மை செய்வதாக அவள் எண்ணிக் கொண்டாள். ஆனால் தீமையைத்தான் புகட்டினாள்.

தினம் தினம் அவனுக்குப் போதிப்பாள்.

அவன் அலக்ஷ்யச் சிரிப்புச் சிரித்தான். ஆனலும் அவனிடம் மாறுதல் ஏற்பட்டு வந்தது. முன்பு சம்பளத்தை அப்படியே செலவு செய்வான். இப்பொழுது சேமித்து வைக்க ஆரம்பித்தான். அவளும் ஆதரவு காட்டினுள்.

நாளடைவில் சம்பளம் அதிகம் கிடைக்கும் உத்தியோகம் செய்ய விரும்பினுன்.

அவன் மாறுதல் அவனுக்கே தெரியவில்லை.

"நீ குழந்தையல்ல; மனிதன், மனிதன், வாலிபன்" என்றுள் அவள்.

அவன் சிரித்தான். ஆனலும், "நீ மனிதன், வாலிபன்" என்ற சொல்லை அவன் உள்ளம் மறக்கவில்லை.

4

ஆபீஸ் மணி 4-45 அடித்தது.

சிகாமணி எழுந்தான். நேரே மானேஜர் அறைக்குச் சென்றுன். மேஜைமேல் எழுதிக்கொண்டிருந்த அவர் சிகாமணியைக் கண்டதும் தலையை நிமிர்த்தினர்.

அவருடைய மூக்குக் கண்ணுடி, அவர் நிமிர்ந்த வேகத்தில், மூக்கின் பள்ளத்திலிருந்து கிளம்பி மறுபடியும் அமர்ந்தது. சிகாமணி, தாம் கூப்பிடாமல் வந்தது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

சிகாமணி ஒரு காகிதத்தை அவரிடம் நீட்டினுன்.

அதைப் பார்த்ததும் அவர் சிகாமணியை நிமிர்ந்து பார்த்தார். "என்ன இது?" என்று கேட்டார். அதிகாரம் செய்து பழகிய குரலில், பின்னும் அதிகாரம் தொனித்தது.

"எனது ராஜிகாமா" என்றுன் சிகாமணி, அமைதியாக.

"இது என்ன மூட்டாள்தனம்?" என்றுர் மானேஜர்.

சிகாமணி அமைதியை இழக்கவில்லை. சிறிது நேரம் சிகாமணியையே உற்றுப் பார்த்தார் மானேஜர். அவனைப் போலப் பலரை அடக்கி ஆண்டவரல்லவா அவர்?

"ஓ, இப்போது தெரிகிறது! நேற்றே முதலாளியிடம் உன்னைப் பற்றிச் சொன்னேன்—சம்பளம் உயர்த்துவதைப் பற்றி இங்கே பார்" என்று கையினுல் நோட்புக்கை விரித்து, ஓர் இடத்தைக் காட்டினுர். அது சம்பள ஜாப்தா. அவனுடைய பெயருக்கு எதிரில் ரூ. 20 என்று போடப்பட்டிருந்தது. யுத்த காலப்படியையும் நீக்கிப் பார்த்தால், சம்பள உயர்வு ரூ. 5.

சிகாமணி பேசாமல் இருந்தான்.

மானேஜருக்கு ஒன்றும் விளங்கவில்லை. சிகாமணி போய் விட்டால், ஆளுக்குப் பஞ்சம்!

மானேஜர் விட்டுக் கொடுக்க நினைத்தார். ரூ. 25 ஆக ஆக்கினர்.

சிகாமணி தான் உண்மையாகவே ராஜிநாமாச் செய்வதாக அவருக்குச் சொல்லி நம்ப வைக்கக் கால்மணி நேரம் ஆயிற்று. சண்டை போட்டுத் தனக்கு சேரவேண்டிய தொகையை வாங்கிக் கொண்டான்.

மணியைப் பார்த்தான்; 5-15 ஆகியிருந்தது.

அவசரமாக நடந்தான்; கால் மணி நேரத்தில் ரிப்பன் மாளிகை வரையில் வந்துவிட்டான்.

வேகமாகச் சந்தில் நுழைந்தான். அவன் மனத்தில் சொல்ல முடியாத ஓர் உணர்ச்சி, இன்ப வேதனை.

மூன்று மாதத்துக்கு முன் இருந்த சிகாமணி வேறு. பழைய சிகாமணி ஓடுவதை வெறுத்தான்; வேகத்தை எதிர்த்தான். புதிய சிகாமணியோ வேகத்தை விரும்பினன்.

மூச்சந்திக்கு ஓடினன். ரிப்பன் பில்டிங்க்ஸ் கடிகாரத்தைப் பார்த்தான்; 5-35 ஆகி இருந்தது. இன்னும் பத்து நிமிஷம் காத்திருக்க வேணும்.

மூன்று, மூன்று மாதத்திற்கு முன்பு, அவளைப் பார்ப்பதற்காக ஓடி வரவில்லை. இன்று ஓடி வந்திருக்கிறான்.

அந்தச் சந்திப்பிற்கு மூன் குழந்தையாக இருந்தான்; இப்போது .....

ஏன் அவள் இன்னும் வரவில்லை? ஏனோ, அவன் உள்ளம் காலையிலிருந்து நிலைகலங்கி இருந்தது. அவள் வருவாளா? ஒரு வேளை .....

அவன் மனம் நடந்ததை விட்டு இனி நடக்கப் போவதைச் சித்திரித்தது.

ஆம், இன்றுதான் அவள் தன்னை மணப்பதாகச் சொல்லி இருந்தாள். கிறிஸ்தவனாகி விட்டால் என்ன?

அழகான மனைவி, நல்ல வேலை, பணத்தில் புரளும் வாழ்க்கை.

அவன் மனம் என்ன என்னவோ எண்ணியது!

கடிகாரத்தைப் பார்த்துத் திரும்பினன். மணி நெருங்கி விட்டது. அவன் கை சம்பள ஜேபியில் விளையாடியது.

திரும்பினன். அதோ வருகிறாள், புன்சிரிப்புடன். புத்தம் புதிய சைக்கிள். புத்தம் புதிய உடை.

மகிழ்ச்சியால் பொங்கிய மனம் துள்ளியது. அவள் நெருங்கி விட்டாள்.

துள்ளிய மனம், 'பொடுக்'கென நின்றது!

அவனை நெருங்கிய சைக்கிளை எதிர் சந்திலிருந்து வந்த ராணுவ லாரி மோதியது. அவளுடைய உயிரற்ற உடம்பை, தசைப் பிண்டத்தைத் தரையில் மோதியது; அவள் உயிரைக் கவர்ந்துகொண்டு சென்றது. ராணுவ லாரியை ஓட்டிக் கொண்டு சென்ற, குடித்திருக்கும் டிரைவரின் எக்காளச் சிரிப்பு!

* * * *

நிலவு வெட்டப்பட்டது. காற்றடி, அறுபட்ட காற்றடி, ஊழிக் காற்றில் தள்ளாடி, உருண்டு உருண்டு மிதந்து கொண்டே சென்றது.

"கஜமுகன்"

மறுமலர்ச்சி 6

மழையை லக்ஷ்யம் செய்யாமல் ஒரு பெரிய கார் தெருவின் கடைசியில் வந்து நின்றது. அந்த மோட்டாரில் டிரைவரைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. காரை நிறுத்திவிட்டு டிரைவர் வெளியே வந்து மூன்றாவது வீட்டுக் கதவைத் தட்டினான்.

"யார் அது?" என்ற குரல் உள்ளே இருந்து கேட்டது.

"நான் ரேடியோ ஸ்டேஷனிலிருந்து வந்திருக்கிறேன்" என்றான் சாரதி.

"ஓ! இதோ வந்துவிட்டேன்" என்ற பதில் வந்தது. சில நிமிஷத்தில் முப்பது வயசிற்குள் இருக்கும் ஒரு பெண்மணி வெளியே வந்தாள். அவள் அழகான வெள்ளை 'ஸில்க்' புடைவை கட்டிக்கொண்டிருந்தாள். அதற்கு ஏற்றபடி மஞ்சள் ரவிக்கை போட்டுக்கொண்டிருந்தாள். அவள் அழகை அந்த உடை அதிகமாக எடுத்துக் காட்டியது. தலையில் சுருண்ட மயிர் அலக்ஷ்யமாகத்தான் வாரிவிடப்பட்டிருந்தது.

"ரேடியோவிற்கு மழை கிழை ஒன்றும் கிடையாதோ?" என்று புன்சிரிப்புடன் கேட்டாள்.

"அப்படி ஏதாவது இருந்தால்தான் தேவலையே!" என்று அலுப்புடன் பதிலளித்தான் காரின் சாரதி.

அவள் அவன் முகத்தைப் பரிதாபத்துடன் பார்த்தாள். சட்டென்று காரில் ஏறிக்கொண்டாள். "காஞ்சனை, ஜாக்கிரதை!" என்ற எச்சரிக்கைக் குரல் வீட்டிற்குள்ளேயிருந்து வந்தது. அது காஞ்சனுவுடைய தாயின் குரல்.

சட சடவென்று பெய்யும் மழையினிடையே விர்ரென்ற சப்தத்துடன் கார் சென்றது. கண்ணுடிக் கதவுகளால் அடை

பட்ட மோட்டாரின் உட்புறத்தில் நிசப்தம் நிலவியது. விர், விர் என்று அடிக்கும் காற்றும் மழையும் அவள் மனத்தில் எவ்வளவோ எண்ண அலைகளை எழுப்பிக்கொண்டிருந்தன. 'நம் வாழ்நாளிலே முதல் முதலாகப் பல ஜனங்களுக்குக் கான விருந்தை அளிக்கப் போகிறோமே' என்ற பெருமையும் அவள் இருதயத்தில் ஒரு மூலையில் சுடர் விட்டுக்கொண் டிருந்தது. மற்றொரு பக்கத்தில் பாடிப் பிழைக்கும் அவலப் பிழைப்புத் தனக்கு ஏற்பட்டுவிட்டதே என்ற துக்கம் வேறு இருந்தது.

* * * *

சரியாக மணி ஏழு அடித்தது. தம்புராவின் சுருதி 'ஙொய்' 'ஙொய்' என்று சப்தம் போட ஆரம்பித்தது. அதிலே ஓர் இன்ப ரசம் பொங்கியது. காஞ்சனை 'மைக்' கின் முன் உட்கார்ந்தாள். அவள் தேகம் ஒரு நிமிஷம் நடுங்கியது. முகத்தில் வேர்வை வழிந்தோடியது. நாக்கு ஒட்டிக்கொண்டுவிட்டது. அறிவிப் பாளர், "இப்பொழுது ஸ்ரீமதி காஞ்சனை தேவி அவர்கள் பாடு வார்கள். முதலில் கல்யாணி ராகத்தில் ... என்ற பாட்டு" என்று சொல்லி முடித்தார்.

காஞ்சனைவினுல் இனிமேல் ஒரு நிமிஷங்கூடத் தாமதிக்க முடியாது. வருகிறதோ வரவில்லையோ, பாடித்தான் ஆகவேண்டும். தன் பயத்தை எல்லாம் விட்டு விட்டு ஆரம்பித்தாள். ஆரம்பத்தில் கொஞ்சம் கரகரப்பாய் இருந்தது தொண்டை. பாடப் பாட மெருகு ஏறிக்கொண்டே போயிற்று. அபூர்வமான தேவகானம் வழிந்தோடியது ரேடியோ வழியாக; பிடிகளும், பிருகாக்களும் நட்சத்திரங்கள் உதிர்வதுபோல் உதிர்ந்தன. கல்யாணி ராகத்தின் முழுக் கலையும் சொட்டும்படி பாடினுள். அடுத்தது மோகன ராகத்தில் ஒரு பாட்டு; அபூர்வமான கற்பனைகள் அடங்கிய பாட்டு. கேட்போர் உள்ளம் அப்படியே கரைந்து உருகும்படி யிருந்தது அந்தப் பாட்டு.

கச்சேரி முடிந்தது. காஞ்சனையை அதே கார் வீட்டில் கொண்டுபோய் விட்டது.

"டிரைவர்! இந்தா, நீ ரொம்பவும் சிரமப்பட்டாய்" என்று கூறி அவனிடம் ஒரு ரூபாயைக் கொடுத்தாள் அவள்.

"நான் இதையெல்லாம் வாங்கக் கூடாது. வாங்கமாட்டேன்" என்று அவன் மறுத்தான்.

"இல்லை அப்பா; நீ வாங்கிக்கொள்ளத்தான் வேண்டும். நீ செய்யும் வேலை அதிகம். ஆனல் உனக்குக் கிடைக்கும் கூலி குறைவுதான். நான் கொடுக்கும் வெகுமதி அப்படி ஒன்றும் அதிகம் அல்ல. ஏதோ ஒரு நாளைக்கு உன் செலவுக்கு ஆகும் அல்லவா?" என்று கூறி அவனை அதை வாங்கிக்கொள்ளும்படி செய்துவிட்டு உள்ளே சென்றுள்.

"அந்தக் கையில் வாங்கி இந்தக் கையில் தர்மம் செய்கிறுயே; அப்படி என்ன மிதமிஞ்சி உனக்கு வரும்படி வந்துவிட்டது?" என்றுள் அவள் தாய் செல்லம்.

"மிதமிஞ்சி வந்தால்தான் தர்மம் செய்ய வேண்டுமா? கையில் இருக்கிறபோதுதானே அம்மா கொடுக்கப் போகிறோம்? பாவம்! அவன் ஏழை டிரைவர். கொட்டுகிற மழையிலும் தன் வேலையைச் செய்யவேண்டி யிருக்கிறது. அதற்குத் தக்க ஊதியம் ஒருவரும் அளிப்பதில்லை. நம்மைப்போல் உள்ளவர்கள் ஏதாவது கொடுத்தால் அவன் மனம் சந்தோஷம் அடையும். தான் பட்ட சிரமத்திற்குப் பலன் கிடைத்தது என்று மனத் திருப்தி ஏற்படும்."

"போதுமே உன் பேச்சு! தர்மம் என்று சொல்லிக்கொண்டு தானே நாம் இன்று ஓட்டாண்டியாய்ப் போய்விட்டோம்? பாடிப் பிழைக்கும் வழி ஏற்பட்டதே! அதை நினைத்தாவது நிலைமையை உணர்ந்து காரியத்தை நடத்தக் கூடாதா? என்னவோ இப்படி அசட்டுப் பெண்ணுய் இருக்கிறுயே!" என்று செல்லம் அங்கலாய்த்தாள். காஞ்சனுவின் அழகிய முகத்தில் சோகப் புன்னகை தோன்றி மறைந்தது.

"அம்மா, என் பாட்டு எப்படி யிருந்ததம்மா? எதிர்வீட்டு ரேடியோவில் கேட்டாயா?" என்று ஆவலுடன் கேட்டாள் காஞ்சனு.

"இல்லை. நான் அதைக் கேட்க விரும்பவில்லை. சோகத்தந்தி களிடையே எழும் நாதத்தைக் கேட்டு மனம் உருகுவதைவிடப் பேசாமல் இருப்பதே மேல் என்று இருந்துவிட்டேன்" என்றுள் செல்லம், கண்களைத் துடைத்துக்கொண்டே.

"அம்மா, அழாதே. நீ அழுதால் என் மனசில் ரத்தம் கசிவது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. அழுது அழுது வாழ்க்கையில் ஒன்றும் காணவில்லை. பிறந்தது முதல் உன் கண்களில் நீரைத் தவிர நான் வேறு ஒன்றும் பார்த்ததில்லை. கண்ணீர் வடிந்து வடிந்து உன் முகமே கறை படிந்துவிட்டது. இவ்வளவு நாள்தான் பணமில்லாமல் கஷ்டப்பட்டோம். என் சங்கீதம் பணம் சம்பாதித்துக்கொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இதுவரையில் ஏற்பட்டதில்லை. இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. சந்தோஷம் இல்லாத வாழ்க்கையாய்ப் போய்விட்டாலும் சோற்றுக்குத் திண்டாடும் பரதேசி வாழ்க்கை இல்லை அம்மா. ஒருவனிடம் கையைக் கட்டிக் கொண்டு கெஞ்சி நிற்கவேண்டிய அவசியம் இல்லை" என்று தன் தாய்க்கு ஆறுதல் சொல்ல முற்பட்டாள் காஞ்சனு.

"காஞ்சனு.....!" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் செல்லம்.

"ஏனம்மா?"

"உன் முகத்தைப் பார்க்கப் பார்க்க என் மனசு எவ்வளவு வேதனை அடைகிறது, தெரியுமா?"

"பாராமல் இரேன்!"

எப்படி இருக்க முடியும்? பெற்ற உள்ளம் கேட்குமா?

"காஞ்சனை.....எவ்வளவு அழகான பெயரடி! நீதான் எவ்வளவு அழகடி?"

"சரி அம்மா, உன் பிதற்றல்களை ஆரம்பித்துவிட்டாயா? அழகு! இது யாருக்குப் பிரயோஜனம்?" என்று மனம் வெதும்பிச் சிறுமனுள் தாயின்மேல். 'அழகு' என்றவுடன் இவ்வளவு நேரம் குடிகொண்டிருந்த சாந்தமெல்லாம் பறந்துவிட்டது. கண்கள் கோப ஜ்வாலையைக் கக்க ஆரம்பித்துவிட்டன. தாய் நடுங்கி விட்டாள். அதனுடன் அவர்கள் சம்பாஷணையும் முற்றிற்று.

* * *

காஞ்சனையின் தந்தை வேதமூர்த்தி நல்ல ஸ்திதியில் இருந்தவன். வேதத்திற்கு நாலைந்து சகோதரர்கள் உண்டு. எல்லோரும் வேதத்தின் தந்தை இருக்கிறவரையில் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தார்கள். அவர் காலமான பிறகு பாகப் பிரிவினை ஆயிற்று. சகோதரர்களுக்குள்ளே பாகப் பிரிவினை ஆன சில நாட்களில் உயிர்ப் பிரிவினையும் சில ஆய்விட்டது. ஐந்து சகோதரர்களில் எஞ்சி நின்றவர்கள் பிரணதார்த்தியும் வேதமுந்தான். பிரணதார்த்தி மூத்தவன்; வேதம் இளையவன். அந்தக் குடும்பத்தில் பிரணதார்த்திக்கும் வேதத்திற்கும் என்றுமே ஒத்துக்கொள்ளாது. இறந்த சகோதரர்களுக்கு வாரிசு ஒருவரும் இல்லை. ஆதலால் அவர்கள் சொத்தும் இவ்விருவரையே சேர்ந்தது. இவ்விருவருக்கும் சொத்து எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாயிற்றோ அவ்வளவுக்கவ்வளவு விரோதமும் அதிகமா யிற்று. இருவரும் ஒரே ஊரில்தான் இருந்தார்கள்.

பிரணதார்த்திக்கும் வேதத்திற்கும் இரண்டு வருஷங்களே வயசில் வித்தியாசம். குடும்பத்தில் கோரச் சாவுகள் நிகழ்ந்து, பிறகு அமைதி நிலவியபொழுது பிரணதார்த்திக்கு வயசு மூப்பது; வேதத்திற்கு இருபத்தெட்டு. இருவருக்கும் அப்பொழுது விவாகம் ஆகவில்லை. பலர் பெண் கொடுக்க முன்வந்தார்கள் இருவருக்கும். என்னதான் விரோதம் இருந்தாலும் அண்ணுவுக்குக் கல்யாணம் ஆகாமல் தான் கல்யாணம் செய்து கொள்வது நியாயமன்று என்று கருதிவந்தான் வேதம். அதனால் வந்த பெண்களைத் தட்டிக் கழித்தான். அவன் அப்படித் தட்டிக் கழித்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதுதான் செல்லம். செல்லம் பக்கத்து வீட்டுப் பெண். அதிக அழகு வாய்ந்தவள் என்றுதான் சொல்ல வேண்டும். குழந்தை முதற்கொண்டே வேதத்திற்கும் அவளுக்கும் பரஸ்பர அன்பு ஏற்பட்டு வந்தது. செல்லத்தின் தகப்பனாரும் அந்தக் குடும்பத்திலேயே செல்லத்தைக் கொடுக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தார். முக்கியமாக வேதத்திற்கு அவளைக் கொடுப்பதில் அவருக்குப் பரம திருப்தி. ஆனால், 'பிரணதார்த்தி கல்யாணமாகாமல் இருக்கும்பொழுது

எப்படி வேதத்திற்கு அவளைக் கொடுப்பது?' என்ற பிரச்னை எழுந்தது. பிரணதார்த்திக்கும் செல்லத்தைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. அதனால் அவனும் வந்த பெண்களைத் தட்டிக் கழித்துவந்தான்.

கடைசியில் துரதிருஷ்டவசமாகப் பிரணதார்த்தியின் ஜாதகம் செல்லத்துடைய ஜாதகத்துடன் பொருந்தவில்லை. வேதத்தின் ஜாதகத்தோடு பொருந்தி விட்டது. இது பிரணதார்த்திக்கு மிகவும் வருத்தந்தான்.

செல்லத்தின் தகப்பனாரின் பொறுமை போய்விட்டது. "வேதம்! நீ செல்லத்தைக் கல்யாணம் செய்துகொள்ளாவிட்டால் நான் வேறு இடம் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டார், ஒரு நாள்.

"அண்ணாவுக்குக் கல்யாணம் ஆகாமல் நான் எப்படிச் செய்து கொள்வது?" என்றான் வேதம்.

"அதற்கு என்ன செய்வது? உன் அண்ணா ஆயுள் முழுவதும் பிரம்மச்சாரி விரதம் அனுஷ்டித்தால் நீ அது மாதிரியே இருக்க இஷ்டப்படுகிறாயா? ஐயர் வரும் வரையில் அமாவாசை காத்திருக்குமா?" என்றார் அவர். வேதமூர்த்தியின் மனமும் திரும்பிவிட்டது. செல்லத்தைக் கல்யாணம் செய்துகொண்டு விட்டான். பிரணதார்த்தியின் மனம் பொறுமையால் பொங்கிற்று. தனக்குக் கிடைக்காதவள் தம்பிக்குக் கிடைத்து விட்டாளே என்ற ஆத்திரம் வேறு. தம்பியின் பேரில் தீராத வெறுப்பு உண்டாகவே, அந்த ஊரில் இருக்க மனமில்லாமல் ஊரை விட்டே போய்விட்டான். அவன் போன இடம் ஒருவருக்கும் தெரியவேயில்லை.

செல்லத்துடன் வேதம் அதிக வருஷங்கள் வாழ்க்கை நடத்தவில்லை. காஞ்சனா பிறந்த மறுவருஷம் அவன் இறந்துவிட்டான். காஞ்சனா தந்தையின் ஸ்பரிசத்தையும், அன்பையும் பெறாத அபாக்கியவதி யாகிவிட்டாள். செல்லத்தின் வாழ்க்கையில் அன்று ஏற்பட்ட துக்கம் மறையவே இல்லை. காஞ்சனாவைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவள் துக்கம் குமுறிக்கொண்டு வரும். அவள் அழகு மிகுந்த வதனத்தைச் சிறிது நேரம் கூர்ந்து பார்ப்பாள். அவள் மனத்தில் ஏதோ சாந்தி ஏற்பட்டதுபோல் தோன்றும். குமுறிய துக்கம் சிறிது நேரம் அடங்கும். அதற்குள் வேதமூர்த்தியின் முகம் அவள் மனக் கண்முன் வந்து நிற்கும். குழந்தையின் பேரில் பொட்டுப் பொட்டாகக் கண்ணீர் வடிப்பாள். தாயின் முகத்தை ஒரு நாளாவது மலர்ச்சியுடன் காஞ்சனா பார்த்ததேயில்லை என்றுகூடச் சொல்லலாம்.

காஞ்சனா வயசு வந்த பெண் ஆனாள். அவள் அழகும் பேச்சும் ஊரையே கொள்ளை கொண்டன. அவள் மனம் கருணை வடிவு கொண்டது. 'பிச்சை' என்று கேட்டால் 'இல்லை' என்று சொல்லும் வழக்கமே அவளிடம் இல்லை. தன் பெண்ணின்

தர்ம சிந்தனையைப் பார்த்துச் செல்லத்திற்கு ஒவ்வோரு சமயம் பெருந்த கவலை உண்டாகிவிடும். 'நம் சொத்து முழுவதும் இந்தப் பெண் இப்படியே தர்மத்தில் அழியும்படி செய்து விட்டால் நம் எதிர்காலம் என்னவாவது?' என்று யோசிப்பாள். ஆனல் காஞ்சனு எதையும் செய்யும்பொழுது தடுக்கமாட்டாள்.

காஞ்சனுவிற்குச் சங்கீதத்தில் நல்ல ஞானம். அபூர்வமான குரல். செல்லம் அவளுக்குத் தகுந்த சிகைஷ சொல்லி வைத்தாள். காஞ்சனு அதைச் சிரத்தையுடன் பழகி வந்து அதில் மிகவும் முன்னேற்றம் அடைந்தாள்.

காஞ்சனுவிற்குக் கல்யாண வயசு வந்தது. செல்லத்தின் கவலைகள் அதிகரித்தன. அல்லும் பகலும் இதே சிந்தனை : தகுந்த வரன் கிடைக்கவேண்டுமே என்று. தன் வாழ்க்கைபோல் அவள் வாழ்க்கையும் முடிந்துவிடக் கூடாது என்ற அர்த்தமற்ற பயம் வேறு அவள் மனத்தில் குடிகொண்டிருந்தது. காஞ்சனுவின் அழகைக் கண்டு எவ்வளவோ பேர் மோகித்தனர். ஆனல் காஞ்சனு தன் அழகைக் கண்டு மோகிப்பவர்களைக் கட்டோடு வெறுத்தாள். அபூர்வமான குணங்களும் எண்ணங்களும் நிரம்பிய வளாய் இருந்தாள் அவள். அவளுக்குத் தன் அழகைக் கண்டாலே ஒரு வெறுப்புத் தோன்றும். தன் அழகைப் புகழ்பவர்களையும் அவள் வெறுப்பாள். கடைசியில் அவள் தனக்கென்று ஒரு வரனைத் தேர்ந்தெடுத்தாள்.

* * * *

காஞ்சனுவின் கல்யாணம் நடந்ததே ஒரு விசித்திரமான முறை. ஹிந்து ஆசாரங்களுக்கெல்லாம் அநேகமாக விலக்கானது. முதல் விஷயம் : ஜாதகம் பார்க்கவில்லை. மனப் பொருத்தம் இருந்தால் எல்லாப் பொருத்தமும் சரியாகி விடும் என்ற நம்பிக்கையாகிய அஸ்திவாரத்தில் அவளது இல்வாழ்க்கையாகிய கட்டிடம் அமைந்தது; கல்யாணத்திற்குப் பத்திரிகையோ, அழைப்போ ஒருவருக்கும் அனுப்பவில்லை. கல்யாண மாப்பிள்ளை மட்டும் கல்யாணத்தன்று காலை வந்தான். இரண்டு வைதிகர்கள் முன்னிலையில் காஞ்சனுவின் கழுத்தில் தாலியைக் கட்டினன். அன்று முதல் அவன் காஞ்சனுவின் கணவன் ஆகிவிட்டான். அவள் சுகதுக்கங்களில் அவனுக்குப் பங்கு ஏற்பட்டது. செல்லம் தன் பெண் கல்யாண விஷயத்தில் அதிகமாக ஒன்றும் ஆட்சேபம் கிளப்பவில்லை. அவள் இஷ்டப்படியே நடக்கட்டும் என்று இருந்துவிட்டாள்.

காஞ்சனுவின் கணவன் பாலன் ஏதோ நல்ல உத்தியோகத்தில் இருந்தான். பார்ப்பதற்கு ஆள் வாட்ட சாட்டமாய் இருப்பான். அவனுடைய உறவினர்கள் ஒருவரும் அருகில் இல்லை. தகப்பனர் மாத்திரம் எங்கேயோ வடக்கே இருப்பதாகச் சொன்னன். அவரை விட்டுத் தனியாக இங்கு எதற்கு வரவேண்டும் என்று கேட்டால், தகப்பனுக்கும் பிள்ளைக்கும் ஆகாது போனதுதான் காரணம். செல்லம், அவன் தகப்பனரை ஆனமட்டும் கல்யாணத்

திற்கு வரவழைக்க வேண்டுமென்று மன்றாடினாள். பாலன், "முடியவே முடியாது" என்று சொல்லிவிட்டான். "எனக்குத் தகப்பனார் ஒருவர் இருக்கிறார் என்றே நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம். நான் அநாதைதான். என் உத்தியோகந்தான் என் வரும்படி. அதை நம்பி உங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுப்பதாய் இருந்தால் கொடுங்கள். அவளை நான் மனம் நோவாமல் வைத்துக்கொள்வேன்" என்றான் பாலன். பிள்ளையின் தாய்தகப்பன் பெயரைக் கூடத் தெரிந்துகொள்ளாமல் எப்படிப் பெண்ணைக் கொடுப்பது என்று செல்லம் முதலில் தீவிரமாக யோசித்தாள்.

"அம்மா, நீ இதையெல்லாம் யோசிக்க வேண்டாம். பழைய காலமெல்லாம் போய்விட்டது. ஜாதகமாவது, நட்சத்திரமாவது! பெயராவது, ஊராவது! மனந்தானே எல்லாவற்றிற்கும் காரணம்? அது சரியாக இருந்துவிட்டால் எல்லாம் சரியாய் நடக்கும். என்னவோ எனக்கு அவரை ரொம்பப் பிடித்திருக்கிறது" என்றாள் காஞ்சனை.

பிறகு செல்லம் தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு காஞ்சனாவின் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்தாள். கல்யாணமும் நடந்தது. அன்று காஞ்சனாவின் முகத்தில் ஏற்பட்ட வசீகரம் என்றுமே மறக்கமுடியாது. தம்பதிகளின் மனம் குதூகலத்தால் பொங்கிக் கொண்டிருந்தது. பாலன் தனக்கு இப்பேர்ப்பட்ட அழகுவாய்ந்த மனைவி கிடைத்தாளே என்று மனத்திற்குள்ளே பூரித்துப் போனான். ஆனால் செல்லத்தின் மனம் மட்டும் ஏதோ வேதனை அடைந்து கொண்டிருந்தது. அவள் இருதயத்தில் காரணமற்ற திகில் குடிகொண்டது. காஞ்சனாவின் வாழ்க்கையை நினைத்துப் பயங்கரமான எண்ணங்களுக்கு அடிமையானாள்.

கல்யாணமான இரவே பாலன் ஊருக்குப்போகும்படி ஆகி விட்டது. அவன் காரியாலயத்தில் ஒருநாள் விடுமுறை கிடைப்பதே குதிரைக் கொம்பான விஷயம். அதிருஷ்டவசமாய் அவனுக்கு லீவும் இரண்டுநாள் கிடைத்தன. போகவரப் பிரயாணத்திற்கு ஒருநாள் என்றும், கல்யாணத்திற்கு ஒருநாள் என்றும் இரண்டு நாளாக எடுத்தான். ஆதலால் அன்று கட்டாயம் புறப்படும் அவசியம் ஏற்பட்டது. காஞ்சனாவையும் அழைத்துப் போகிறேன் என்றான். செல்லம் அதற்குச் சம்மதிக்கவில்லை. காஞ்சனாவும் தன்னையே நம்பி வாழும் தாயைச் சட்டென்று பிரியச் சம்மதிக்க வில்லை.

பாலன் பிரியும்போது காஞ்சனாவின் கண்கள் கலங்கின. கண்ணீர் ஓரங்களில் கசிந்தது. பாலனின் முகத்தில் ஒரு பரிவு நிறைந்த பார்வை ஏற்பட்டது.

* * *

பாலன் ஊருக்குப் போனான். போனவனிடமிருந்து ஒரு கடிதமும் வரவில்லை. தாயும் மகளும் திகிலடைந்து போயினர்.

17 17 RAMAKRISHNA MISSION LIBRARY

எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கினர்கள். செல்லத்தின் மனம் தூசிபோல் அலைந்தது. தன்னுடைய எண்ணங்கள் பலித்து விடுமோ என்று அஞ்சினுள். பாலனுக்குக் கடிதம் எழுதினுள். பதில் இல்லை. நேரில் போய்ப் பார்க்கலாம் என்று நினைத்துக் காஞ்சனுவையும் அழைத்துக்கொண்டு போனுள். ஆனுல் ஆசாமி அங்கே இல்லை. திடீரென்று ஒருநாள் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டுப் போய்விட்டான் என்று தெரிந்தது. 'குலம் கோத்திரம் விசாரிக்காமல் கல்யாணம் செய்து கொடுப்பதன் பலன்கள் இப்படித்தான் முடியுமோ?' என்று எண்ணினுள். காஞ்சனு கண்ணீரை மாலையாகப் பெருக்கினுள்.

தாய்க்கும் மகளுக்கும் ஒரே திருப்தி: அதாவது நல்ல வேளை காஞ்சனுவின் கற்பு நிலை கெடவில்லை என்பதுதான். காஞ்சனு பரிசுத்தமாகவே இருந்தாள்.

ஒரு மாதம் ஓடிவிட்டது. பகல்பூரிலிருந்து காஞ்சனுவிற்கு ஒரு கடிதம் வந்தது. கடிதம் பாலனுல் எழுதப்பட்டிருப்பதைக் கண்டு தாயும் மகளும் பூரித்தார்கள். ஆனுல் மறு நிமிஷம் அவர்கள் பூரிப்பில் மண் விழுந்தது. ஏமாற்றமாகவும் அதிசய மாகவும் இருந்தது. அத்துடன் மட்டுமல்ல; நடக்கக்கூடாததும், இதுவரை நடந்திராததுமான காரியம் ஒன்று நடந்துவிட்டது!

"அன்புள்ள சகோதரி காஞ்சனு" என்ற முதல் வரியைப் பார்த்தவுடன் காஞ்சனுவின் இருதயம் நின்றுவிடும்போல் ஆகி விட்டது. சொந்த மனைவியை யாராவது சகோதரி என்று அழைப்பதுண்டா? மேலே தொடர்ந்து வாசித்தாள்:

* * *

காஞ்சனு, உன் அழகு இருக்கிறதே அதுவே உன் வாழ்விற்குச் சத்துருவாய் இருந்தது. அதனுல்தான் நீ அதை வெறுப்பதாய் உன் கல்யாணத்திற்குமுன் சொன்னுயோ? ஆனுல் நான் உன் அழகிற்கு அடிமையானவன்தான். உன் அழகு எனக்கு எங்கேயாவது கிடைக்காமல் போய்விடுகிறதோ என்று எண்ணித் தான் குலம், கோத்திரம், என் தந்தையின் பெயர் ஒன்றையும் கூருமல் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளத் துடித்தேன். உலகத்தவர், நம் ஹிந்து சமூகத்தவர், செய்யத்தகாத பாவத்தை நான் செய்துவிட்டேன். என் வாழ்வில் சாந்தியே கிடைக்காது இந்தப் பாவத்தினுல். செய்வதையும் செய்தாகிவிட்டது; இனி மேல் அதைப்பற்றி எவ்வளவு துக்கித்துத்தான் என்ன பயன்? ஆனுல் காஞ்சனு, ஒரே ஒரு புண்ணியம் செய்தேன். உனது தேகத்தூய்மைக்கு நான் பங்கம் விளைவிக்காமல் அந்தப் பாவத்தி லிருந்து தப்பினேன்.

காஞ்சனு, நான் உனக்கு ஒன்றுவிட்ட சகோதரன் முறை ஆகவேண்டும். இது எனக்குத் தெரியாது. என் தந்தையும் இதைப்பற்றி என்னிடம் சொல்லவே இல்லை. நீ ஒருத்தி இருக்கிருய் என்பது அவருக்கு இன்னமும் தெரியாது. அது தெரியாமல் இருப்பதே நல்லது.

நான் நம் கல்யாணத்திற்குப் பிறகு ஊருக்குப் போனேனல்லவா? அங்கே என்னை ஒரு தந்தி வரவேற்றது. என் தந்தை உடனே வரும்படி அடித்திருந்தார். எவ்வளவுதான் அவருடன் சண்டை போட்டுக்கொண்டு ஓடிவந்தாலும் தந்தியைக் கண்டவுடன் அவரைப் போய்ப் பார்க்காமல் இருக்க மனம் வரவில்லை. அன்றே பகல்பூர் கிளம்பிச் சென்றேன். என்னைக் கண்டவுடன், "பாலா, பாலா!" என்று கதறிக்கொண்டே என்னை ஆர்வத்துடன் கட்டிக்கொண்டார்.

"பாலா! நீ இல்லாமல் எனக்கு வாழ்க்கை இல்லை. உன் தாயும் என்னைக் கைவிட்டுப் போய்விட்டாள். நீயும் என்னை விட்டு ஓடினால் என் மனம் சகிக்குமா? இத்தனை நாள் உன் பிரிவைப் பொறுத்துக்கொண்டதே போதும். இனிமேல் போகாதே. நானும் இப்படித்தான் அந்தக் காலத்தில் வீட்டை விட்டு ஓடிவந்தேன். ஆனால் எனக்கு அப்பொழுது தாய் தந்தை இல்லை. என் பிரிவை நினைத்து வருந்த ஒருவரும் இல்லை. என் தம்பி ஒருவன்தான் இருந்தான். அவனால்தான் நான் ஓடிவரும்படி நேர்ந்தது; அதுவும் கல்யாண விஷயமாக. நான் அதை நினைத்து இப்பொழுது வருந்துகிறேன்.

"என்னுடைய மூர்க்ககுணமும் பொறுமை நிறைந்த உள்ளமுந்தான் அதற்குக் காரணம். என் தம்பி வேதமூர்த்தி பக்கத்து வீட்டில் இருந்த செல்லத்தைக் கல்யாணம் செய்துகொண்டான். அவளையே நானும் மணக்க விரும்பினேன். ஆனால் எனக்கும் செல்லத்துக்கும் ஜாதகப் பொருத்தம் இல்லை என்று தட்டிக் கழித்துவிட்டார்கள். அதனால் நான் அடைந்த ஏமாற்றத்திற்கு அளவில்லை. அதனுடன் என் தம்பியே அவளைக் கல்யாணம் செய்துகொண்டதால் எனக்கு அங்கிருக்கப் பிடிக்கவில்லை. என் சொத்துச் சுதந்தரங்களுடன் இங்கு வந்தேன். பிறகு உன் தாயை மணந்துகொண்டேன். உனக்கு ஆறு ஏழு வயசானவுடன் அவள் இறந்துவிட்டாள். அன்றுமுதல் உன் முகத்தைப் பார்த்துத்தான் நான் உயிரோடு இருந்துவருகிறேன். அப்படி இருக்கும்பொழுது நீயும் ஓடிவிட்டால் நான் என்ன செய்வேன்! விட்டுப் பிடிப்போம் என்றுதான் பேசாமல் இருந்தேன். ஆனால் உன் பிடிவாதமே, ஜயித்தது. உன்னைப் பிரிந்திருக்க மனம் இல்லை. அதனால்தான் உடனே வரும்படி தந்தி அடித்தேன்" என்றார்.

அவருடைய அந்த உருக்கமான பேச்சு என் மனத்தைப் பெரிதும் துன்புறுத்திவிட்டது. 'இவ்வளவு அருமையுள்ள தந்தைக்குச் சொல்லாமல்கூடக் கல்யாணம் செய்துகொண்டுவிட்டேனே!' என்று வருந்தினேன். அவரிடம் எப்படி நான் மணந்துகொண்டதைக் கூறுவது என்று தயங்கிக்கொண்டிருக்கும்பொழுது 'செல்லம்' என்ற பெயரை அவர் குறிப்பிட்டது ஞாபகத்துக்கு வந்தது. உன் தாயின் பெயரும் செல்லம் என்று எனக்குத் தெரியும். ஒரு வேளை அவர் குறிப்பிட்டது உன் தாயாகவே இருக்கலாமோ என்ற சந்தேகம் மனத்தில் உண்டாகியது. அதை நிவர்த்தி செய்து

கொள்ளவேண்டுமென்ற ஆவல் எனக்கு அதிகரித்தது. செல்லத்தின் அங்க அடையாளங்களை அவரிடம் கேட்டேன். என் சந்தேகம் நிச்சயமாகிவிட்டது. உன் தாய்தான் அவர் குறிப்பிட்ட செல்லமும் என்று தெரிந்தவுடன் என் உடலே நடுங்கிவிட்டது. கண்களில் நன்னீயும் அறியாமல் ஜலம் வந்தது. அதை அடக்கிக் கொண்டேன். தந்தைக்கு ஒன்றும் பதில் சொல்லாமல் தனியே தோட்டத்தின் பக்கம் சென்றேன்.

காஞ்சனு, என் நிலையை எவ்வாறு விவரிப்பது? எவ்வளவு மகத்தான பாப வலையில் சிக்கிவிட்டோம் நாம்? சகோதரனுக்கு யாராவது மாலையிடுவதை நாம் பார்த்திருக்கிறோமா? இது என்ன கலிகால அதிசயமா? என் தந்தையின் பெயரை ஆனமட்டும் கூறும்படி உன் தாய் கேட்டாளே? "அதெல்லாம் சொல்ல முடியாது. என்மீது நம்பிக்கையில்லையா? அப்படி நம்பிக்கை அற்றவனிடம் நீங்கள் சம்பந்தம் வைத்துக்கொள்ளவேண்டாம்!" என்று வெடுவெடுப்பாகப் பதிலளித்தேனே! அதைக் கேட்டாவது அவள் என் சம்பந்தத்தை அறுத்து எறிந்திருக்கக் கூடாதா? நீயும் என்னைக் கல்யாணம் செய்துகொள்வதாக ஒரே பிடிவாதம் பிடித்தாயே; அதன் பலன் எப்படி முடிந்தது பார்த்தாயா? 'கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு' என்று நம் ஹிந்து சமூகத்தில் விதித்திருக்கும் விதியை நாம் மீறியதன் பலன் எப்படி முடிந்தது பார்த்தாயா?

தன்னந்தனியாக இருந்த இரண்டு மாதர்களை என் வலையில் விழச்செய்தவன் நானல்லவா? என்மேலும் குறை சொல்ல முடியாது, காஞ்சனு. எல்லாவற்றிற்கும் உன் அழகுதான் காரணம். அதுதான் என் மனத்தை அப்படி மயங்க வைத்தது. அதுதான் ஜாதகமில்லை, கோத்திரமில்லை என்று பொய் சொல்ல வைத்தது. காஞ்சனு, என்னை மன்னித்து விடு. உனது வாழ்க்கையைக் குலைத்த பாவியை மன்னி! இனிமேல் உன் முகத்தில் நான் விழிக்க முடியாது. நீ இனிமேல் என்னைத் தேடுவதும் வீண் முயற்சிதான். உன் மாங்கல்யத்திற்காக நான் இந்த உலகில் உயிர்வாழத்தான் செய்வேன். இதனுல் தற்கொலை புரிந்து செத்துப்போகமாட்டேன். எவ்வளவுதான் என் தந்தை என்பேரில் அன்பைச் செலுத்தினாலும் இந்த விஷயத்தினுல் நான் அவரிடம் இருக்க முடியாதவனாகி விட்டேன். அவருக்கு இன்னமும் உன் தந்தை இறந்ததும், நீ ஒருத்தி இருக்கும் சமாசாரமும் தெரியா. எப்பொழுதாவது அவரைப் பார்த்தால் நான்தான் உனக்குத் தாலிகட்டிய கணவன் என்று சொல்லிவிடாதே.

நான் இதோ போகிறேன். எங்கே போவேனோ தெரியாது. என்னை ஒருவரும் தேடவேண்டாம்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள
பாவி பாலன்.

இதைப் படித்தவுடன் காஞ்சனாவின் இருதயம் சுக்கு நூறாக வெடித்துவிடுவதைப் போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது. "அம்மா!" என்று கதறினாள். செல்லத்தின் கண்களில் ரத்தக் கண்ணீர் வடிந்தது என்றுதான் சொல்லவேண்டும். செல்லத்தின் கைகள் காஞ்சனாவின் நெற்றியில் இருந்த திலகத்தை அழித்துவிட்டது. "காஞ்சனா! உன் எதிர்காலத் திட்டங்களுக்குச் சமாதி கட்டியாகி விட்டது. நீ இனிமேல் வாழ்க்கைப் பாதையினின்று ஒதுங்கிப் போனவள்தான். கல்யாணமாகியும் கன்னிப்பெண்தான். ஆனால் மங்கல ஒளி வீசும் திலகம் நெற்றியில் வேண்டாம். உன் அழகை மேன்மைப்படுத்தும் திலகம் அழிந்துபோகட்டும். அதனால் உனக்கு இனிமேல் ஒருவித நன்மையும் இல்லை. உன் அழகே உனக்குச் சத்துருவாய் முடிந்தது. உன் பெரியப்பாவே அன்றும் என் கல்யாணத்திற்கு முதலில் தடையாய் இருந்தார். அந்தத் தடையே சில நாட்களில் உன் அப்பாவின் வாழ்க்கைக்கு உலையாக முடிவதுபோல் இருந்தது. இன்றும் என் பெண்ணை உனக்கும் அதே பெரியப்பாவால்தான் வாழ்க்கை குலைய நேர்ந்தது. போ, அழாதே! நீ புனிதவதி. அந்தமட்டில் சந்தோஷம்" என்று உணர்ச்சியோடு கூறிப் புழுங்கினாள்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு இரண்டு வருஷங்கள் ஓடி விட்டன. தாயும் மகளும் சாந்தி அற்ற வாழ்க்கை நடத்திவந்தனர். இருந்த சொத்தைக் கரைத்துவிட்டனர்.

காஞ்சனா மேடை ஏறிக் கச்சேரி செய்ய விரும்பவில்லை. கௌரவமாகத் தன் சங்கீதத்திற்கு யாராவது மதிப்புக் கொடுத்து ஆதரிக்கிறவர்கள் இருக்கிறார்களா என்று அலசிப் பார்த்தாள். ரேடியோவைத் தவிர வேறு சரியான இடம் அவளுக்கு அமைய வில்லை. அதில்தான் ஆபத்து இல்லை, கௌரவமானது என்று அவள் நினைத்தாள். தாயின் சம்மதத்தின்பேரில் ஒரு மனுப் போட்டாள். குரல் பரிசோதிக்கப்பட்டது. அதிகாரிகள் பிரமித்துப்போனார்கள். அந்த மாதத்திலேயே ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

பாலன் காஞ்சனாவிற்குக் கடிதம் எழுதிவிட்டு எங்கே போனான் என்றே தெரியாமல் போய்விட்டான். அவன் தந்தை யாகிய பிரணதார்த்தியின் மனம் உடைந்துபோய்விட்டது. மேலும் அவருக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. கையில் இருக்கும் பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு ஸ்தல யாத்திரை கிளம்பிவிட்டார். வட இந்திய க்ஷேத்திராடனம் முடிந்தது. தென் பக்கம் திரும்ப ஆசை உதித்தது. அதனுடன் தம்பியைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலும் ஏற்பட்டது. பழைய குரோதங் களையெல்லாம் மறந்துவிட்டார். செல்லத்தின்பால் இருந்த காதலும் மடிந்துவிட்டது. எப்படியாவது தம்பியையும் செல்லத் தையும் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவலுடன் புறப்பட்டு வந்தார். ஆனால் ஊரில் வந்ததும், தம்பி இறந்த தகவலும், செல்லமும் அவள் பெண்ணும் ஊரை விட்டுப் போய்விட்

டார்கள் என்ற செய்தியும் கிடைத்தன. பிரணதார்த்தியின் துக்கம் கரைகடந்து போயிற்று. 'ஐந்து சகோதரர்களுடன் பிறந்து மருந்துக்குக்கூட ஒருவரும் இல்லாமல் பிரிந்து போய்விட்டார்களே! இருந்த ஒருவனுடனும் சண்டை போட்டுக்கொண்டு ஓடினேன். அவனும் கடைசியில் போய்விட்டான். ஐயோ! செல்லத்திற்கு இந்தக் கதியா வரவேண்டும்? அவள் இளமையும் இப்படிப் பாழடைந்து போய்விட்டதே! அவளுக்கு ஒரு பெண் இருந்தாள் என்று சொல்கிறீர்களே; தாயும் மகளும் எப்படி ஜீவனம் செய்கிறீர்களோ? சொத்து எத்தனை நாளுக்கு வந்திருக்கப்போகிறது!' என்று பலவிதமாக எண்ணித் துக்கித்தார். 'எப்படியாவது செல்லத்தைக் கண்டு அவளுக்கு ஆறுதல் சொல்லவேண்டும்' என்று திடமான உறுதி செய்துகொண்டார். ஊர் ஊராக அலைந்தார்.

காஞ்சனு ரேடியோக் கச்சேரி செய்த மறுநாள், பத்திரிகைகளெல்லாம் அவளுடைய பாட்டைப் பற்றி விசேஷமாகப் புகழ்ந்திருந்தன. அவள் போட்டோ வேறு பிரசுரமாயிருந்தது. பிரணதார்த்தி போட்டோவைப் பார்த்துத் திடுக்கிட்டுப்போனார். ஆதியில் செல்லம் எப்படியிருந்தாளோ அதேமாதிரி இருந்தது காஞ்சனாவின் முகம். பிரணதார்த்தி, அவள்தான் செல்லத்தின் பெண்ணாக இருக்கவேண்டுமென்று ஒரு நொடியில் திட்டம் செய்துகொண்டு விட்டார்.

இனிமேல் அவருக்குச் செல்லத்தைக் கண்டுபிடிப்பது சுலபமாகத் தோன்றியது. அன்றிரவே புறப்பட்டார்.

காஞ்சனாவின் வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்கும் பொழுதே பிரணதார்த்தியின் மனம் ஏதோ வேதனையை அடைந்தது. கதவைத் தட்டினார். காஞ்சனு கதவைத் திறந்தாள். பிரணதார்த்தி அப்படியே மலைத்து நின்றார், அவள் அழகைப் பார்த்து.

"நீங்கள் யார்?" என்றாள் காஞ்சனு.

"நானா? பிறகு சொல்கிறேன். உன் தாய் இருக்கிறாளா?" என்றார்.

"இருக்கிறாள். உள்ளே வாருங்கள்" என்றாள்.

செல்லம் ஒரு தூணில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

"அம்மா! உன்னைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்!" என்றாள் காஞ்சனு.

"இந்த அபலையைப் பார்ப்பதற்குக்கூட இந்த உலகத்தில் மனிதர்கள் இருக்கிறார்களா?" என்று திரும்பிப் பாராமல் பதிலளித்தாள்.

பிரணதார்த்திக்குச் சுருக்கென்று பட்டது.

"செல்லம், நான் ஒருவன் இருக்கிறேனம்மா; பாவி!" என்றார்.

செல்லம் திடுக்கிட்டுத் திரும்பினாள். பிரணதார்த்தியைப் பார்த்தவுடன் அப்படியே ஸ்தம்பித்துவிட்டாள். அவள் முகத்தில் வெறுப்பு, ஆச்சரியம் இரண்டும் குடிகொண்டிருந்தன.

"அண்ணா!" என்றாள். அவள் கண்களினின்று பொலபொல வென்று கண்ணீர்த்துளிகள் உதிர்ந்தன.

"அழாதே செல்லம்! நம் விதி இப்படியா நேரவேண்டும்? என்ன சோதனைக் காலம் நமக்குத்தான்!" என்று அவளைச் சமாதானப்படுத்தினார்.

காஞ்சனாவிற்குத் தன் பெரியப்பாவைப் பார்த்ததும் பின்னும் துக்கம் பொங்கிற்று. அவர்முன் நிற்க வெட்கப்பட்டுக்கொண்டு உள்ளே மறைந்து நின்றாள்.

"உன் பெண் உன்னையே உரித்து வைத்திருக்கிறது, செல்லம். அவள் முகத்தைப் பத்திரிகைகளில் பார்த்த பிறகுதான் உன்னைக் கண்டுபிடிக்க முடிந்தது. நம் குடும்பத்தின் பெயரைத் தன் சங்கீதத்தால் நிலை நாட்டுவதற்கு அவளாவது மாணிக்கம்போல் இருக்கிறாளே!"

"அண்ணா, அவள் உருவத்தில் மட்டும் என்னைப்போல் இல்லை. வாழ்க்கையிலும் எனக்குள்ள துக்கம் அவளுக்கும் இருக்கிறது. மாணிக்கந்தான்; ஆனால் அழுக்கடைந்த மாணிக்கம்."

"என்ன செல்லம், புதிர் போடுகிறாய்? உனக்கு என்ன கஷ்டம்?"

"கஷ்டம் ஒருவிதத்திலா? எவ்வளவோ விதத்தில்தான். அதையெல்லாம் ஒன்றும் கேட்காதீர்கள், அண்ணா. உங்கள் விஷயம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். உங்கள் மனைவி மக்கள் எங்கே?"

"செல்லம், என்னுடைய வாழ்க்கையிலும் நிம்மதி இல்லை. என் மனைவி இறந்துபோய்ச் சில வருஷங்களாகிவிட்டன. அவளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் நான் ஒரு பிள்ளையை வளர்த்துவந்தேன். அவனும் ஏதோ காரணத்தால் ஓடிவிட்டான். நிம்மதியில்லாமல் ஊர் ஊராகச் சுற்றினேன். கடைசியில் இங்கே வந்தேன்."

"பிள்ளையை வளர்த்தீர்களா? உங்களுக்குச் சொந்தப் பிள்ளை இல்லையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் செல்லம்.

"சொந்தப் பிள்ளை என்றுதான் எல்லோரும் கருதி வந்தார்கள். அவனும், என்னையும் என் மனைவியையும் தன் சொந்தத் தாய்தகப்பன் என்றுதான் எண்ணிக்கொண்டு வந்திருக்கிறான். இன்னமும் அவனுக்கு நான் வளர்ப்புத் தந்தை என்று தெரியாது. ஆனால் என்ன காரணத்தாலோ ஓடிவிட்டான்."

அந்த ஒவ்வொரு வார்த்தையும் செல்லத்தின் மனத்தில் நிமிஷத்திற்கு நிமிஷம் ஓர் உணர்ச்சியை எழுப்பியது. துக்கச்

சாயை படர்ந்திருந்த அவள் முகத்தில் மலர்ச்சியின் மோகனம் படர ஆரம்பித்தது.

"ஹ்ம்! அப்புறம்?" என்றாள்.

"குவெட்டா பூகம்பத்திற்குப் பிறகு நான் ஏழை மக்களுக்கும், திக்கற்றவர்களுக்கும் உதவிசெய்த 'கமிட்டி' ஒன்றில் சேர்ந்து தொண்டு செய்துவந்தேன். அந்தச் சமயம் ஒருநாள் ஒரு தென்னிந்தியப் பிராமணர் அந்தக் குழந்தையை என்னிடம் கொடுத்தார். அவர் சொன்னார்: 'ஐயா, இந்தக் குழந்தை நல்ல குலத்தைச் சேர்ந்ததுதான். இதன் தாய் தந்தையர் பூகம்பத்தின் கொடுமைக்கு ஆளாகி இறந்துவிட்டார்கள். இந்தக் குழந்தையை நான் காப்பாற்றினேன். எனக்கு இதை இதன் ஆயுள் முழுவதும் காப்பாற்றும் சக்தி இல்லை. நீங்கள் எடுத்துப்போய் வளருங்கள்' என்று. நானும் குழந்தையின் முகத்தைப் பார்த்து இரங்கி வளர்க்கச் சம்மதித்தேன். கடைசியில் எனக்கும் பிள்ளை ஏற்படவில்லையாதலால் அவனையே பிள்ளையென்று கருதி வந்தேன். ஆனால் இன்றோ அவன் எங்கேயோ போய்விட்டான்!" என்று சொல்லி வருத்தப்பட்டார்.

செல்லத்தின் மனம் இதைக் கேட்டுப் பூரித்தது. காஞ்சனு இவைகளை உள்ளேயிருந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் மனம் மறுபடியும் வாழ்க்கைச் சுவையைக் காண ஆவல்கொண்டது. 'நம் வாழ்க்கை விளக்கு இன்னும் அவியவில்லை' என்ற நம்பிக்கை ஊற்று அவள் இருதயத்தில் சுரக்க ஆரம்பித்தது. தன் அழகு தனக்குச் சத்துரு ஆகிவிடவில்லை என்ற திடமான அபிப்பிராயமும் ஏற்பட்டது.

பிறகு செல்லம் காஞ்சனுவின் கல்யாணத்தைப்பற்றி யெல்லாம் சொன்னாள். பிரணதார்த்திக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

"செல்லம், இந்தக் காரணத்தைக் கொண்டல்லவா அவன் எங்கேயோ ஓடிவிட்டான்? என்னிடம் அப்பொழுதே சொல்லியிருந்தால் இவ்வளவு தூரத்திற்கு வந்திராதே! எல்லாம் என்னுடைய மூட்டாள்தனந்தான். நான் அவனுடைய பிறப்பைப் பற்றி நினைவு தெரிந்தவுடனே கூறியிருக்கவேண்டும். ஏற்கனவே என்னோடு சண்டைக்கு நிற்கும் பேர்வழியாய் இருக்கிறானே, அவனிடம் போய் என்னுடைய உறவு முறையைச் சொன்னால் எங்கே என்பேரில் வெறுப்புக்கொண்டு ஓடிவிடுவானே என்று பயந்தேன். ஆனால் அதில்லாமலே போய்விட்டான். காஞ்சனுவின் வாழ்க்கையைப் பாழ்படுத்துவதற்கு நான்தான் ஒரு கருவியாக அமைந்தேன். செல்லம், உன்னைப் பார்ப்பதற்கே என் கண்கள் கூசுகின்றன. காஞ்சனு, இங்கே வா, அம்மா!" என்றார்.

"பெரியப்பா, நமஸ்காரம் செய்கிறேன், ஆசீர்வாதம் செய்யுங்கள்!" என்றாள் காஞ்சனு.

பிரணதார்த்தி அவனை வெறிக்கப் பார்த்தார். காஞ்சனை மண்டியிட்டு நமஸ்காரம் செய்தாள். அவள் கண்களின் ஓரத்தில் தேங்கியிருந்த நீர்த்துளிகள் கீழே விழுந்து பிரணதார்த்தியின் பாதத்தில் தெறித்தன.

"தீர்க்க சுமங்கலி பவ!" என்று மெதுவான குரலில் ஆசீர்வதித்தார். அந்த வாழ்த்து வாழ்த்தாகவே இருக்கவேண்டுமென்று காஞ்சனை மனத்திற்குள் பகவானை வேண்டிக் கொண்டாள்.

"செல்லம், காஞ்சனை, நான் எப்படியாவது பாலனைக் கண்டுபிடித்து வருகிறேன்; கவலைப்படாதீர்கள். அணைந்த தீபத்தை ஏற்றிவைப்பது என் கடமை. காஞ்சனை, உன் அழகு பாழாகிவிடாது. தைரியமாய் இரு!" என்று அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு வெளிக்கிளம்பினார் பிரணதார்த்தி.

செல்லமும், காஞ்சனையும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்துகொண்டார்கள். மனத்தில் ஏற்பட்டிருந்த கவலைகள் நீங்கின. பாலன் வருவான் என்ற நம்பிக்கையும் அவள் மனத்தில் தீவிரமாக எழுந்தது. சோகம் ததும்பிய அவள் முகம் மலர்ந்தது. பாலனின் வரவை நோக்கிக் காஞ்சனையின் அழகு காத்திருந்தது!

அ. வெ. ர. கிருஷ்ணஸ்வாமி

தீர்ப்பு 7

"அவன் கொலையாளிதான்" என்று நீதிபதி தீர்ப்புக் கூறிவிட்டார்.

ஜூரர்களின் ஏகமனசான முடிவும் அதுவே. அவனுக்கும் அது தெரிந்ததுதான். ஆனால் அவன் அறிவு அதை ஒப்புக் கொள்ள மறுக்கிறது; நீதிபதிக்கும் தனக்கும் வித்தியாசம் இல்லை என்று வாதமிடுகிறது. 'என்னைக் கொன்றுவிட வேண்டும் என்ற க்ஷாத்திரம் நீதிபதிக்கு இல்லை. எனக்கும் அப்படித்தான். வீரனை வேண்டுமென்றே கொன்றேன்? அவன்மீது எனக்குப் பகையோ, கோபமோ இல்லை. அவன் செய்த குற்றத்துக்குத் தண்டனை அது என்பதுதான் எனது தீர்ப்பு.' ஆனால் அதை யார் கேட்கிறார்கள்?

நீண்ட பெருமூச்சு எறிந்தான் சின்னண்டவன். அவன் கொலைகாரன்! அது எப்படி நேர்ந்தது என்றாலோ .....

சின்னண்டவனின் மாமனை வீரன் வம்புக்காரன்; முரடன். அவன் சும்மா இருந்தாலும் அவனுடைய வாயும் கையும் சும்மா இருப்பதில்லை. தினம் யார் காட்டிலாவது மாடு மேய்த்துவிடுவான். கதிரைக் கசக்குவான். புல் அறுத்துவிடுவான். சொந்தக்காரர் கண்டு கேட்டால் சண்டை பிரமாதமாக எழும். அதற்குப்

பயந்து அவர்களும் கண்டாலும் காணுதவர்கள்போலப் போய் விடுவார்கள்.

அவன் மாத்திரம் அல்ல. அவன் குடும்பமே அப்படித்தான். ஊரார் அவர்களைக் கண்டாலே அச்சம் கொள்வார்கள். அந்தக் குடும்பத்துக்குச் சர்க்கார் தண்டனை புதிதல்ல. அடி, உதைபடுவது சகஜம். வீரன் மகள் கறுப்பாயியைத்தான் சின்னுண்டவன் கல்யாணம் செய்துகொண்டான்.

சின்னுன் தூரத்து ஊர்க்காரன். வீரன் குடும்ப விஷயம் ஒன்றும் அவனுக்குத் தெரியாது. கல்யாணமான சிறிது காலத்திற்குப் பிறகு எல்லாம் அவன் காதில் பட்டன. தன்னைக் கண்டால் மற்றவர்கள் விலகிப் போவதும், ஜாடை மாடையாகப் பேசுவதும் தெரிந்தன. மனம் நொந்தான்.

அந்த ஊர்க்காரர்கள் வீரனிடம் வாய்ப்பேச்சுக்கூட வைத்துக் கொள்வதில்லை. அந்த ஊரில் பெரும்பான்மையான குடும்பங்கள் அவன் பந்துக்களே. கிராம நாட்டாண்மை, மணியம் முதலிய பதவிகளை வகித்தவர்களும் அவர்களே. அவர்களை வீரன் மதிப்பதே இல்லை. கட்டுப்பாட்டுக்கு அடங்காத முரட்டுக் காளை அவன். அதனால் ஊர்க்காரர்கள் அவனைக் கிராமப் பிரஷ்டம் செய்திருந்தார்கள்.

வீரன் குடும்ப இயல்பிற்கே விலக்கானவள் கறுப்பாயி. தாய் தந்தையரின் போக்கு அவளுக்குக் கொஞ்சங்கூடப்பிடிக்காது. அவள் தாய் வீட்டிற்கு வந்திருந்தாள். அவளை அழைத்துச் செல்வதற்காகத்தான் சின்னுண்டவன் மாமனார் வீட்டுக்கு வந்தான்.

அவனுக்கு அந்த ஊரில் இருப்புக் கொள்ளவே இல்லை. அவன் எந்த வீட்டில் போய் உட்கார்ந்தாலும், "இங்கு வராதே அப்பா. உன் மாமியார் கண்டால் பிடி பிடி என்று சண்டைக்கு வந்துவிடுவாள். சண்டை பிடிக்க எங்களால் ஆகாது" என்று சொல்லி அவனை அனுப்பிவிடுவார்கள்.

வழியில் எவரிடமாவது பேச்சுக் கொடுத்தால், "அதோ உன் மாமன் வருகிறான். நான் ஏதாவது சொல்லிக் கொடுத்து விட்டேன் என்று வீண் வம்பிழுப்பான். நான் வருகிறேன்" என்று போய்விடுவார்கள்.

அவன் மனம் வேதனையுற்றது. நல்ல மனிதர் முகத்திலே விழிக்க அவன் அஞ்சினான். ஊருக்குப் புறப்படக் கறுப்பாயியைத் தூண்டினான். ஆனால் அவள் தந்தை, "நீ வேண்டுமானால் போ. என் மகள் இப்பொழுது வரமாட்டாள்" என்று அதட்டி விட்டான். வீரன் கோபத்துக்கு அஞ்சிக் கறுப்பாயி ஒன்றும் பேசவில்லை.

சிலநாட்கள் சென்றன. சின்னுண்டவன் மானம் இனம் பறி போயிற்று. தீர்மானமாகக் கிளம்பிவிட்டான் ஊருக்கு. வீரன் தன் பாடத்தைத்தான் படித்தான். கறுப்பாயி கணவனுடன்

போகவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கவே மறுக்க முடியாமல் போயிற்று.

சாப்பாட்டுக்குப் பிறகு பிரயாணப்படுவதாகத் திட்டம். வேலை மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. வீரன் பலாக்காய் நறுக்கக் கைக் கொடுவாளைத் தீட்டிக்கொண்டிருந்தான்.

திடீரென்று தெருவில் பெரிய சப்தம் எழுந்தது. வீரன் மகன் ஒரு சிறு பாத்திரத்துடன் வீட்டுக்குள் ஓடிவந்தான். அவனைத் துரத்தி வந்த பெண் தன் பாத்திரத்தை வாங்கித் தரும்படி வீரனிடம் முறையிட்டாள். அவள் வீண் பழி சுமத்துவதாக அவன் கோபித்தான். அவள் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. தன்னை அவதூறு செய்தால் வீண் கஷ்டம் விளையும் என்று வீரன் உறுமினான்.

சண்டை பிடிப்பதற்காக, கையில் இருந்த அரிவாளைக் கீழே போட்டுவிட்டு, தெருவில் நின்ற வண்டியில் வந்து அமர்ந்தான். கூச்சலைக் கேட்டுக் கும்பல் கூடிவிட்டது. அவன் வீண் சண்டை பிடிப்பதைக் கண்டு சின்னண்டவன் மனம் நொந்தான்; பாத்திரத்தை அவளிடம் திரும்பக் கொடுத்துவிடும்படி சொன்னான்.

வீரனுக்கு அடக்க முடியாத கோபம். "போடா உள்ளே, வாயை மூடிக்கொண்டு" என உறுமினான்.

சின்னன் அஞ்சவில்லை. "ஏன் வீண் வம்பு? திருட்டுத் தொழில் நமக்கு எதுக்கு? சின்னப்பயல் தெரியாத்தனமாக அதை எடுத்து வந்தால், அவனைக் கண்டிப்பதல்லவா நியாயம்? அதை விட்டு ஊர் சிரிக்கும்படி வேலை செய்தால்?" என்றான்.

"சீ கழுதை! நீ யாருடா எனக்குப் போதிக்க? கொடுவாளை எடுத்தால் பலாக்காய் கொத்தறுப்பவலே கொத்திப்போடுவேன். யாருன்னு நெனச்சே?"

வீரனின் வார்த்தைகளைக் கேட்ட சின்னன் ஒரு கணம் திகைத்துவிட்டான். உண்மையையும் நியாயத்தையும் சொன்னதற்காகவா இவ்வளவு சீற்றம்? மீண்டும் பேசினான்: "என்ன மாமா, நான் என்ன சொல்லிவிட்டேன்? நியாயத்தை....."

"நீ மகா பெரியவன்! நியாயத்தைக் கண்டு விட்டானும் நியாயத்தை!" என்று கர்ஜித்துப் பாய்ந்தான் வீரன். சின்னன் அதற்குள் அரிவாளைத் தன் கையில் எடுத்துக்கொண்டான்.

வீரன், "வாளைக் கொடுடா இங்கே. முதலில் உன்னைப் பைசல் பண்ணுகிறேன். எனக்குப் போதிக்கவா பார்க்கிறே? அப்புறம் அந்தச் சிறுக்கியையும் தீர்த்து விடுகிறேன். என் மவன் கள்ளப் பயலா? ஊம், எங்கே?" என்று முன் வந்தான்.

வெறிகொண்ட வேங்கை போலச் சிலிர்த்து நின்ற அவனை எதுவும் செய்யத் தயங்கமாட்டான் என்பதைத் தீக்கங்கு போன்ற

அவன் கண்களும், துடிக்கும் மீசையும் காட்டின. சின்னான் மனத்தில் சலனம் ஏற்பட்டது.

"இப்படி இவனை விட்டு வைப்பானேன்? மனிதனைக் கொல்லும் நச்சுப் பாம்பை நாம் கொல்லுகிறோம். புலியையும், வெறி நாயையும் சுட்டுத்தள்ளுகிறோம். இந்த மூர்க்கமிருகத்தையும் அப்புறப்படுத்திவிட்டால் சமூகத்துக்கு நல்லதுதானே?"

'அதுதான் நியாயம்' என்றது அவன் உள்ளம். அவன் அதற்கு மேல் சிந்திக்கவில்லை. மின்னல்போல் வாள் வீரன்மேல் பாய்ந்தது. அவன் வீழ்ந்தான், இடிபட்ட நெடும்பனைபோல.

சின்னண்டவன் நேராகப் போலீஸ் ஸ்டேஷன் சென்றான்; தன் வாக்குமூலத்தைப் பதிவு செய்தான்; கைதியானான். வீரன் ஆஸ்பத்திரியில் மரணமடைந்தான்.

அந்தக் குற்றத்துக்காகவே சின்னான்மீது தீர்ப்புக் கூறப் பட்டது. தண்டனைக்காக அவன் வருந்தவில்லை; திடுக்குற வில்லை.

"நான் கஷ்டப்பட்டால் என்ன? இனியாவது அந்தக் கிராமத்தில் அமைதியும் சுகமும் நிலவுமல்லவா? வீரன் குற்றம் செய்து கொண்டிருந்தான். அதைத் தடுப்பது என் கடமை என்று எனக்குப் பட்டது. குற்றத்துக்கு தண்டனை அளித்தது தவறு?" என்று அவன் அறிவு வாதாடியது.

அவனது மனப் பண்பைக் கண்டு வியந்தார் நீதிபதி. 'அறிவின் வாதம் சரிதான். நாம் என்ன செய்கிறோமோ அதை அவனும் செய்தான். குற்றவாளி தண்டனைக்கு உரியவன் தான்" என்று அவர் உள்ளம் பேசியது.

ஆனால் சட்ட ஞானம் சொன்னதாவது: "அது சரி; இப்படி ஒவ்வொருவரும் தீர்ப்புக் கூறுவதைத் தன் தலைமீது போட்டுக் கொண்டு, தண்டனை அளித்தால் அப்புறம் சமூக நிலை? சமூகம் கட்டுப்பாடு சட்டதிட்டம் எல்லாம் காற்றில் பறந்துவிடாவா? இவன் யார் தண்டனை கொடுக்க? அது அரசாங்கத்தின் உரிமை. உரிய இடத்தில் முறையிட வேண்டியதுதானே இவன் கடமை?"

அவர் அந்தரங்கத்தில் நிகழ்ந்த போரின் வெற்றி போல் வார்த்தைகள் ஒலித்தன.- சின்னண்டவன் குற்றவாளி. அவனுக்கு மரண தண்டனை.

"வேண்டுமானால் கவர்னர் பிரபுவுக்கு மனுச் செய்து பார்க்கலாம். அவர் மரண தண்டனையை மாற்றித் தீவாந்தர சிக்ஷை கொடுப்பார்" என்றும் அவர் சொல்லிவைத்தார்.

அதைக் கேட்டும் சின்னண்டவன் பூரித்துவிடவில்லை.

ஸ்ரீதரம் குருஸ்வாமி

மன்னி

8

வெளிக்கதவைத் திறந்துகொண்டு யாரோ உள்ளே வரும் சத்தம் கேட்டது. "ராகவன் இருக்கிறாரா?" என்ற குரலும் காதில் விழுந்தது. ஹால் பக்கம் போனேன். சுமார் முப்பது வயசு இருக்கலாம். ஆனால் இன்னும் மிக இளைஞராகவே காணப்பட்டார். தூய்மையான கதர் அணிந்திருந்தார். மிகவும் அடக்க ஒடுக்கம். "இருக்கிறார். நீங்கள் யார்?" என்றேன்.

"கோபாலன் வந்திருக்கிறதாகச் சொல்லுங்கள்" என்றார் எங்கேயோ பார்த்துக்கொண்டு. "சற்று உட்காருங்கள். ஸ்நானம் செய்துகொண்டிருக்கிறார்; சீக்கிரம் வந்துவிடுவார்" என்று சொல்லிவிட்டு அண்ணாவிடம் தகவலைச் சொன்னேன்.

"கோபாலனா? சற்று உட்காரச் சொல், ஸரோஜா; இதோ ஆயிற்று" என்றார் அண்ணா உள்ளேயிருந்து.

ஹாலில் உட்கார்ந்துகொண்டு அங்கவஸ்திரத்தின் நுனியால் விசிறிக்கொண்டிருந்தார் வந்தவர். நான்போய் ஹாலிலுள்ள விசிறியின் ஸ்விட்சைப் போட்டுவிட்டுக் காபி தயார் செய்யப் போய்விட்டேன்.

ஜலப்பிராணியான அண்ணாகூட அன்றைக்குச் சீக்கிரம் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு ஹால் பக்கம் போனது தெரிந்தது. பங்குனி பிறந்துவிட்டால் அண்ணா கிணற்றடியிலேயே போதெல்லாம் ஸ்நானம் செய்துகொண்டே இருப்பார். கோடை ஆரம்பித்துவிட்டது என்பதற்கு எங்கள் வீட்டில் அதுதான் அடையாளம்.

"யார் அது வந்திருக்கிறது?" என்றாள் மன்னி.

"யாரோ புதிதாய் இருக்கிறது. ஆனால் அண்ணா அவசரப்படுகிறதைப் பார்த்தால் ரொம்பச் சிநேகம்போல் தோன்றுகிறது."

"ஆபீஸ் மனுஷ்யரா?"

"ஆபீஸ் தோரணையாகத் தெரியவில்லை. பார்த்தால் காங்கிரஸ்காரர், வடக்கத்தியார்போல் இருக்கிறது. ஆனால் தமிழ்தான் — நல்ல நம் தேசத்துத் தமிழ்" என்றேன்.

"அப்படியானால் கொஞ்சம் டிபனும் சேர்த்துப் பண்ணுகிறதுதானே?" என்றாள் மன்னி, சிரித்துக்கொண்டே. அவள் குழந்தையைக் கவனித்துக்கொண்டிருந்ததால் நானே சீக்கிரம் ஏதோ சிற்றுண்டியும் தயார் செய்தேன். என்றாலும் மன்னியைப் போல் அவ்வளவு செவ்வையாக 'டிபன்' பண்ண வராது எனக்கு.

* * *

இது நடந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. ஆனல் ஒன்று நன்ருக நினைவிருக்கிறது. நான் டிபன் கொண்டுபோய் வைத்தபொழுது ஒரு க்ஷணம் கோபாலன் கண்களை உயர்த்தி என்னைப் பார்த்தார். அவர் முகத்தில் சட்டென்று ஏதோ மாறுதல் ஏற்பட்டது. சமாளித்துக்கொண்டார். இருந்தாலும் அந்தப் பார்வையின் அர்த்தம் என்ன என்பது எனக்கு அப்பொழுது விளங்கவில்லை. ஏதோ புதிராக இருந்தது. இன்று அண்ணு மறுபடி அவர் பேச்சு எடுத்ததில்தான் தெரிந்துகொண்டேன்.

"அன்றைக்குக் கோபாலன் வந்திருந்தானே, நினைவிருக்கிறதா, ஸரோஜா?" என்ருர் ராத்திரி சாப்பிட உட்கார்ந்ததும்.

"யார், உங்கள் சகபாடி என்று சொன்னீர்களே, அண்ணு, அவர்தானே? நினைவிருக்கிறது. அவருக்கு என்ன?" என்றேன்.

"ஆமாம். அன்று ஏன் அவரைச் சாப்பிடக் கூட்டிக்கொண்டு வரவில்லை?" என்ருள் மன்னி; "அவருக்கும் சேர்த்துச் சமைத்து வைத்துக் காத்துக்கொண்டிருந்தேன். நான் தூங்கிப்போன பிறகு தான் வந்தீர்கள். அப்படியே ஒரு வார்த்தையும் சொல்லாமலா வந்தவரோடு பேசிக்கொண்டே போய்விடுவார்கள்?"

"அது தப்புத்தான், காமு. ஆனல் ஐந்து நிமிஷத்தில் வந்து விடலாம் என்று போனேன். நேரம் ஆகிவிட்டது ... அதற்கப் புறம் நாலைந்து தடவை அவனை இங்கே அழைத்தேன். வாசல் வரையில் பேசிக்கொண்டே வருகிருன். உள்ளே மாத்திரம் வராமல் ஏதோ சாக்குச் சொல்லிவிட்டுப் போய்விடுகிருன். என்ன காரணம் என்று தெரியவில்லை."

"அவர் வீட்டிற்கு நீங்கள் போவதில்லை என்ற மனஸ் தாபமோ? அவர் எங்கே இருக்கிருர்?" என்று கேட்டாள் மன்னி.

"அவனுக்கு வீடு என்று கிடையாது. தன்னுடைய பாங்கி யின் கிளை ஒன்று இந்த ஊரில் திறந்து வைத்தான். தலைமைக் காரியாலயத்தைவிடச் சீக்கிரம் இது பிரபலமாகப் போகவே, இங்கே, தானே நேரில் அதைக் கவனித்துக்கொள்ள வந்திருக் கிருன்."

"அவர், ஏன், இந்த ஊரில் இன்னும் குடித்தனம் வைக்க வில்லையா?" என்ருள் மன்னி.

"அதைத்தான் சொல்ல வாயெடுத்தேன். அவன் சுத்த ஏகாங்கி. பால்யத்திலேயே அவனுக்குக் கல்யாணம் ஆகியிருந்தது. ஆனல் காலேஜில் படித்த கடைசி வருஷம் அந்தப் பெண் செத்துப் போய்விட்டாள். அதற்கப்புறம் அவனிடம் யாரும் கல்யாணப் பேச்சை எடுப்பதற்கு அவன் விடுகிறதில்லை. அவனைக் கட்டாயப் படுத்த அவன் வீட்டில் பெரியவர்களும் இல்லை; கிட்டின பந்துக்களும் இல்லை."

"நீங்கள்தாம் ஏதோ தூரத்து உறவு என்றீர்களே. நீங்க ளாவது பிரயத்தனம் செய்து அந்தப் புண்ணியத்தைக் கட்டிக்

கொள்ளக்கூடாதா? பாங்கி வைத்திருக்கிறார் என்கிறீர்கள். அவ்வளவு பணத்தையும் அவரே ஒண்டியாய் எப்படிச் செலவு பண்ணுவார், பாவம்!" என்றாள் மன்னி. மன்னி பேச ஆரம்பித்து விட்டால் நான் மத்தியில் வாய் திறப்பதில்லை. அவள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல அண்ணு திணறுவதைப் பார்த்து ஒவ்வொரு சமயம் எனக்கே சிரிப்பு வரும்.

"நீ வினோயாட்டுக்குச் சொன்னாலும், காமு, வாஸ்தவம் என்னவோ அதுதான். ஆனால் கோபாலன் மற்றவர்களைப்போல அல்ல. மகா சங்கோசி. அநாவசியமாய் ஒருவரோடு பேச மாட்டான். நூறு மணி அந்தரங்கமாக ஒரு சிநேகிதனோடு பேசினாலும் அந்தச் சிநேகிதனுடைய குடும்ப விஷயங்களைப் பற்றிப் பிரஸ்தாபிக்கமாட்டான். அவனையும் யாரும் எதுவும் கேட்கத் தயங்குவார்கள். அப்படி அலாதி ஸ்வபாவம்."

"எப்பொழுதோ செத்துப்போன பெண்டாட்டிக்கு இன்னமும் துக்கம் கொண்டாடுகிறார்போல இருக்கிறது! அவள் முகங்கூட அவருக்கு மறந்து போயிருக்குமே."

"அவன் துக்கம் ஒன்றும் கொண்டாடுவதாகத் தெரியவில்லை. ரொம்பச் சிரிப்பும் குதூகலமும் நிறைந்த ஸ்வபாவம் அவனுடையது. ஆனால் எல்லாருக்கும் அது தெரியாது. நெருங்கிப் பழகினால், பழகுகிற ஒவ்வோரிடத்தில் அண்ணன் தம்பிகளைவிட அன்னியோன்னியமாக இருப்பான். மிருதுவாக, ஹாஸ்யமாக, அவன் பேசுகிறதே போதும். அலுக்காமல் கேட்டு ரஸித்துக் கொண்டே இருக்கலாம். அப்படி ஒரிரண்டு குடும்பத்திற்குமேல் யாரும் அவனைத் தெரிந்து கொண்டிருக்கமாட்டார்கள்."

"அப்படிப் பழகும் வீடுகளில் எங்கேயும் அவருக்குத் தகுந்த பெண் ஒருத்திகூடக் கிடைக்கவில்லையா? அவருக்கு என்ன, படித்த பெண்ணை வேண்டுமா? அல்லது கர்நாடக மரப்பாச்சி தான் பிடிக்குமா, எப்படி?"

இப்படிக் கேட்டுக்கொண்டே மன்னி என் பக்கம் திரும்பிப் பார்க்காமல் இருக்க விசேஷ முயற்சி செய்தது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. இருந்தாலும் அவள் ஜாடையாகச் சொன்னதை அண்ணு கவனிக்கவில்லை. கவனித்திருந்தால் அவர் ஏதாவது சொல்லியிருப்பார். இதற்குள் அவர் சாப்பாடு முடிந்துவிட்டது. எழுந்திருந்து கையலம்பிக்கொண்டு வந்து மறுபடி உட்கார்ந்து கொண்டார். நாங்கள் சாப்பிடும்பொழுது அவரும் ஒவ்வொரு சமயம் இப்படிக் கூட இருப்பதுண்டு. குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது.

"கோபாலனுக்கு ஏதோ தனிப் போக்கு. எங்கள் இரண்டு பேருக்கும் வயசிலும் வித்தியாசம், படிப்பிலும் வித்தியாசம். என்னைவிட இரண்டு மூன்று வயசு பெரியவன். ஹாஸ்டலில் சேர்ந்து இருந்ததனால்தான் மற்றப் பேரைவிட என்னிடம் அவனுக்குப் பழக்கம் ஜாஸ்தி. அவனுக்கு உயர்ந்த லக்ஷ்யங்கள் உண்டு. அந்தக் காலத்தில் இளையவனான எனக்கு அவனே ஒரு

லக்ஷ்ய புருஷனுகக்கூடத் தோன்றினன். அவ்வளவு அபூர்வ குணம். காரியத்தில் தீரன். இருந்தாலும் இருதயம் ஒரு பெண்ணி னுடைய இருதயம்போல இளகியது. ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு அவனிடம் எனக்குத் தோன்றிய மதிப்பு இன்றுவரை அதிகரித்திருக்கிறதே ஒழியக் குறையவில்லை."

"அதெல்லாம் நான் கேட்கவில்லை. அவர் என்ன சந்நியாசி யாகப் போய்விடப் போகிறாரா? அல்லது மறுபடி கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாரா? நீங்கள் வர்ணிக்கிற குணம் எல்லாம் நான் கேட்கவில்லை. மூத்தாளை ஒன்றும் அப்படிப் படுத்தினதாகக் காணேம் ஆகையினல் ராக்ஷஸ கணத்தில் சேரவில்லை; ஒன்று. குழந்தை இருக்கிறதோ? இல்லை; இரண்டு. வயசு முப்பதிற்குள்தான் அல்லவா? அடுத்த சமாசாரம்: அவலக்ஷணம் அல்லவே! நான் அன்றைக்குப் பார்க்கவில்லை; அதனல்தான் கேட்டேன். எல்லாவற்றிற்கும் மேல் பணம் இருக்கிறது. என்ன, இந்த ஆனிக்குள்ளாவது கல்யாணத்தை முடிக்கப் போகிறீர்களா, இல்லையா?"

அண்ணுவிற்கே என்ன சொல்வதென்று தெரியவில்லை. "இதோ பார், காமு: இவனே உன் பிள்ளை மாதிரி ஜீனத்துக்கொண்டு சட்டம் போடுகிறுயே எனக்கு! அவ்வளவு பொறுப்பு நான் ஏற்க முடியுமா? அவனேடு எவ்வளவு ஜாக்கிர தையாகப் பழகுகிறேன், தெரியுமா? ஒன்றும் கவனிக்காதவன் போல்தான் இருப்பான். கடைசியில் ஏதாவது அவன் மனசிற்கு விகல்பமாகப் படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்புறம் நம்மோடு பேசமாட்டான். நம் கண்ணில்கூடப் படமாட்டான்.

"அவ்வளவு முரடு. ஆட்டி வைக்கிறதற்கு ஓர் அகமுடை யாள் வேணும். அப்பொழுது எல்லாம் பதமாய்ப் போய்விடும்."

மன்னியின் வார்த்தைகள் ஆணித்தரமே தவிர அவள் பேசு கிறது குழையக் குழைய இருக்கும். சம்பந்தம் இல்லாத சில்லறை விஷயங்களைப்பற்றிக் கூடப் பிரமாதமாக ஜோடித்துக் கொண்டு போவதும், முக்கியமான சமாசாரங்களை ஏதோ சர்வ சாதா ரணமாகப் 'பைஸல்' செய்துவிடுவதும் அவளுடைய ஹாஸ் யத்தின் சுபாவம். மேலாகக் கவனிப்பவர்களுக்கு அவள் ஹாஸ்யம் முதலில் பிடிபடாது. இந்த மூன்று வருஷத்திற்குள் அண்ணுவின் தன்மையே மாறிப் போனதற்கு மன்னிதான் காரணம். முன்பெல்லாம் அண்ணு அசாத்திய முன் கோபி. அம்மாகூடச் சமயத்தில் ஏதாவது அவனிடம் சொல்லப் பயப் படுவாள். இப்பொழுது மன்னியின் சிகித்ஸை முறை அப்படியே பலித்துவிட்டது. ஆளே வேறு ஆகிவிட்டார். ஆனல் எல்லோ ருக்குமே அந்த மாதிரி மந்திரி கிடைத்துவிடுகிறதா?

"நான் ஸரோஜாவை என்ன கேட்க வந்தேன் என்றுல், அன்று நான் ஸ்நானம் செய்து கொண்டிருந்தேன் அல்லவா? நான் வருவதற்கு முன்னே என்ன நடந்தது? ஏன் அவன் மறுபடி நம் வீட்டிற்குள் நுழையாமல் ஏமாற்றுகிறுன்?"

"ஒன்றும் நடக்கவில்லை. வந்தவரை நான் உட்காரச் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டேன். பிறகு டிபன் கொண்டு வைக்க வந்ததுதான். சற்றைக்கெல்லாந்தான் நீங்கள் இரண்டு பேருமே வெளியே புறப்பட்டுவிட்டீர்களே, அண்ணு" என்றேன்.

"அதெல்லாம் என்ன கேள்வி? இந்த வருஷம் நம் அகத்திலே கல்யாணமே கிடையாது. நான் கல்யாணச் சாப்பாடு சாப்பிட்டு எத்தனையோ நாளாயிற்று. அவர் வீட்டிலேதான் பெரியவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். சாப்பாட்டுத் திட்டம் என்னுடையதாக இருக்கட்டும். ஏன்? கல்யாண நிர்வாகம் முழுவதுமே வேண்டுமானாலும் என்னிடம் ஒப்பித்துவிடச் சொல்லுங்கள். எப்படி நடத்துகிறேன் பாருங்கள்!"

"உன்னோடு பேச என்னால் ஆகாது காமு. கோபாலனைப் பார்த்தால் காணுமல்போனது எதையோ தேடுகிறவன் போல ஒவ்வொரு சமயம் எனக்குத் தோன்றும். கேவலம் அழகையோ படிப்பையோ கண்டு மயங்கிப் போகிறவன் அல்ல அவன். அவனைத் திருப்தி செய்கிறது கஷ்டம். நீ என்ன என்றால், முகூர்த்தம் வைத்தானது போல் சமையல்காரனைப் பிடித்து நாளைக்கே அட்வான்ஸ் கொடுப்பதைப்பற்றிப் பேசுகிறாய். அவன் இஷ்டப்பட்டிருந்தால் எப்பொழுதோ கல்யாணம் ஆகியிருக்கும்!"

எங்கள் சாப்பாடு முடிந்து ஹால் பக்கம் வந்தோம். அண்ணு சீக்கிரம் படுத்துக்கொள்ளப் போய்விடுவார். அதற்குள் பேச்சுச் சுவாரஸ்யத்தினால் நாங்களும் ஹாலில் வந்து உட்கார்ந்துகொண்டோம். சில்லறைக் காரியங்களை அப்புறம் செய்துகொண்டால் போகிறது.

"உங்களுக்கு என்ன ஆனாலும் கல் நெஞ்சு. உடனேடோத் தவர் கிளப்புச் சமையலோ சமையல்காரன் சமையலோ சாப்பிட்டுக்கொண்டு அவஸ்தைப் படுகிறார். நீங்கள் மாத்திரம் ஹாய்யாக அகத்தில் சப்புக் கொட்டிக்கொண்டு சாப்பிட்டு வந்தால் போதுமா? நல்ல சிநேகம் வேண்டியிருக்கிறது! நாளை புதன்கிழமை, ஸ்ரீராம நவமி. அவரை இங்கே எப்படியாவது சாப்பிட அழைத்துக் கொண்டுவர வேண்டியது உங்கள் பொறுப்பு. அப்புறம் நான் பார்த்துக் கொள்கிறேன். என்ன, நினைவிருக்குமா?"

* * * *

இன்று ஸ்ரீராம நவமி. மன்னி பத்து மணி மட்டும் சமையலறையை விட்டு வெளியில் வரவேயில்லை. நான் சிற்சிலாகச் சுற்றுக் காரியமெல்லாம் பார்த்து வந்தேன். மணி பதினொன்றடித்தது. எல்லாம் திருத்தமாக ஏற்பாடு செய்தாயிற்று. கடைசி வரையில் அவர் வருவார் என்ற நம்பிக்கை இல்லாததால் அண்ணு அவரை அழைத்துவரப் பாங்கிற்கே போனார். பாங்கி மாடியிலேயே அவர் ஜாகையாம்.

இரண்டு பேரும் அதோ வந்துவிட்டார்கள். ஹாலில் வந்து

உட்கார்ந்ததும் நான் போனேன். "இலே போட்டாயிற்றே" என்றேன்.

"சரி" என்றார் அண்ணு. கோபாலன் ஒன்றுமே பேசவில்லே. என் பக்கம் திரும்பவும் இல்லே. "போவோமே" என்று சொல்லி அண்ணு அவருக்குக் கால் அலம்ப ஜலம் கொடுத்து உள்ளே அழைத்துவந்தார்.

பூஜை முன்பே ஆகிவிட்டது. இலேயில் அவர்கள் உட்கார்ந்ததும், மன்னி பாயஸம் எடுத்துக்கொண்டு வந்தாள். நான் அசப்பில் அவரைக் கவனிக்க முடிந்தது. திடுக்கிட்டவர்போல் ஒருதரம் அவளைப் பார்த்தார். அவ்வளவுதான். அண்ணுவும் அப்பொழுது அவர் பக்கம் திரும்பி இங்கிலீஷில் அவளை முதலில் அறிமுகம் செய்து வைத்தார். "இதுதான் மிஸஸ் ராகவன், கோபு. இன்கம்ப்ளீட் இண்டர்மீடியெட். இண்டர்மீடியெட் இன்கம்ப்ளீட்டாகப் போனதற்கு நான்தான் ஜவாப்தாரி. அந்தக் குற்றத்திற்கு இன்னும் தண்டனை அனுபவிக்கிறேன், கோபு. புருஷனைவிட மனைவி கெட்டிக்காரி என்று பெயர் எடுக்கப் புருஷன் இடம் கொடுக்கமாட்டானும். அதனால்தான் அவள் படிப்பை நிறுத்திவிடச் சொன்னேனும். என் பொறுமையைப் பற்றி எப்பொழுதாவது ஒருதரம் அவள் சொல்லிக் காட்டாமல் இருப்பதில்லே."

மன்னி, பரிமாறிக்கொண்டிருந்தவள், லேசாகச் சிரித்தாள். கோபாலன் அதைக் கவனித்தார். அவர் முகத்திலும் கொஞ்சம் சிரிப்பு உதயமாயிற்று. ஆனால் அதே க்ஷணம் அவர் என் பக்கம் திரும்பினாற்போல் இருந்தது. மோர்க்குழம்புடன் நான் வந்து கொண்டிருந்தேன். அவர் தலை நிமிரவில்லே. ஆனால் புருவத்தைச் சுளித்துக்கொண்டிருந்தார். முன் மாதிரியே ஏதோ சந்தேகம், வேதனை, ஆச்சரியம், எல்லாம் கலந்த பாவனை முகத்தில் தோன்றியது. முகமும் சிவந்தது. அடுத்த க்ஷணம் எப்பொழுதும்போல் ஆகிவிட்டது.

அடுத்தாற்போல் அண்ணு என்னைப்பற்றிப் பேச்சு எடுத்தார். ஏனோ நம்முள் தீவிர தேசியவாதிகள்கூடச் சில சமயம் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்துவைக்க இங்கிலீஷ்தான் உபயோகிக்கிறார்கள்? அறிமுகம் செய்விப்பதற்குத் தகுந்த வார்த்தைகள் தமிழில் இல்லையா? ஆனால் இந்தத் தடவை அண்ணு ஸஹஜமான தமிழில்தான் பேசினார். நான் கட்டிக்கொண்டிருந்த கதர் புடைவைக்கு இங்கிலீஷ் பொருத்தம் இல்லே என்று அவர் மனசில் பட்டதோ, என்னவோ?

"கோபு, இவளைத்தான் முன்பே பார்த்திருக்கிறாயே. என் தங்கை, ஸரோஜா; பார்த்தால் சுத்த நாட்டுப்புறமாயில்லே? நிரக்ஷரகுக்ஷி என்றால் இவளுக்குத்தான் தகும். ஒரு வார்த்தை அனுவசியமாகப் பேசமாட்டாள். ஆனால் பி. ஏ. ஆனர்ஸ். அதிலேயும் 'லிட்ரேச்சர்' பரீக்ஷை எழுதி முடிந்ததும் நேரே எங்களுக்கு ஓத்தாசைக்கு வரவேணும் என்று இங்கே வந்தி

ருக்கிறாள். 'ரிஸல்ட்' வரும் வரையிலாவது இங்கேதான் இருப்பாள். அப்புறம், அவள் நினைக்கிறபடி, 'பஸ்ட் க்ளாஸ்' வந்துவிட்டால் ஏது, இப்பொழுது பேசும் ஒரிரண்டு வார்த்தை கூட நம்மோடு பேசுவாளோ மாட்டாளோ! வீட்டில் காமுவுக்கும் எனக்கும் வருகிற சண்டைக்கெல்லாம் இவள்தான் காரணம். அவ்வளவு திரிசமம்."

அண்ணு இத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த சிரிப்பை இப்பொழுது அடக்க முடியவில்லை. கட கடவென்று சிரித்தார். கோபாலனும் அதில் கலந்துகொள்வார் என்றுதான் அண்ணு எதிர்பார்த்தார். கோபாலன் ஏதோ பேச வாய் எடுத்தார். ஒன்றும் பேசாமலே இருந்துவிட்டார்.

அவர்கள் சாப்பிட்டு ஹாலிற்குப் போன பிறகு, அதாவது நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தபொழுதுதான், முதல் முதல் கோபாலனுடைய கலகலப்பான குரல் எங்கள் காதில் விழுந்தது; "அப்படியா? எனக்குத் தெரியாதே" என்றார். பிறகு இருவரும் வெகு ஸஹஜமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். புறப்படும் பொழுதுகூடக் கோபாலன் உள்ளே வந்து எங்களிடம் சொல்லிக் கொண்டு போனார். ஆளே இப்பொழுது வேறு என்று தோன்றியது. முகத்தில் அவ்வளவு பிரகாசம்!

* * * *

இன்று 'ரிஸல்ட்' வந்தது. சிநேகிதர்கள் கடிதங்களுங்கூட. எங்கிருந்தும் வாழ்த்துகள்.

சாயந்தரமாகக் கோபாலன் வந்தார். அவர் இப்பொழுது தினம் வருகிறார். அவர் வந்ததும் ராஜுவைக் கையில் எடுத்துக் கொள்வார். ராஜுவின் வாயிலிருந்து புதிது புதிதான அர்த்தமில்லாத தொனிகள் கிளம்பும். அதற்கெல்லாம் அவர் தூண்டுதல் தான் முக்கியமான காரணம். அவர் குரல் கேட்டுவிட்டால் போதும். மன்னி மடியில்கூடத் தரிக்கமாட்டான். கையைக் காலை உதைத்துக் கொண்டு பக்ஷிகளைப்போல ஏதோ கத்துவான். குழந்தையின் மழலைக்கு ஒத்து அவர் பேசுவது, கேட்க ஆனந்தமாயிருக்கும்.

நித்தியம் அஸ்தமன நேரம் வரை, அரை மைல் ஒரு மைல் சாலையோடு வெளியே எங்களை உலாவ அழைத்துச் செல்வார். குழந்தை அவர் கையில் இருக்கும். ஏதாவது பேசிக்கொண்டே மெள்ளப் போய்வருவோம். எங்களைத் தவிர மற்ற எல்லாவற்றையும் பற்றிப் பேசிக்கொள்வோம்.

இன்று மன்னி, கூடவரச் சௌகரியப்படவில்லை. எனக்கு வீட்டில் இருப்புக் கொள்ளாததால் வெளியில் அவருடன் புறப்பட்டேன். கால்போன வழியே வெகு தூரம் போனோம். தாழ்ந்த, மிருதுவான குரலில் அவர் பேசிக்கொண்டே வந்தார். அவ்வளவையும் நான் அமுதமாகப் பருகினேன். மாலை வேளையும், பக்ஷிகள் மேலே இரைந்துகொண்டே கூட்டை நோக்கிப் பறப்பதும், மரங்களின் உச்சியில் பொழிந்து தங்கிய பொன் கிரணக்

கிரீடமும், நாள் முழுவதும் அயர்ந்துகிடந்த காற்று விழித்தெழுந்து விர்ரென்று விசியதும், சாலியின் அமைதியும் எல்லாம் அனுகூலமாக இருந்தன. அன்று அவரே வெகு நேரம் பேசிக் கொண்டு வந்தார்.

தாம் வெகு நாள் தேடிய வஸ்து இப்பொழுதுதான் புதையலைப் போலத் தமக்குக் கிடைத்ததென்று சொன்னர். பெண்களில் இரண்டு விதந்தான் அவர் கண்களில் எங்கும் பட்டனவாம். தலையைக் குனிந்துகொண்டு கால் கட்டைவிரலைக் கவனித்துக்கொண்டே போகிறவர்கள் ஒரு தினுஸு. இவர்கள் கண்கள் மாத்திரம் எல்லாவற்றையும் கிரகித்துக்கொண்டுதான் வரும். தனிமையில், அல்லது மற்றப் பெண்களோடு பேசுவதற்கு நகை, புடைவை, முதலிய நாலைந்து விஷயங்களைத் தவிர வேறென்றும் இவர்களுக்குத் தெரியாது.

மற்றொரு வகை, அரை குறைப் படிப்பாம். யாரையும் வெறிச்சென்று கூசாமல் பார்ப்பது; தெரிந்த இங்கிலீஷ் எல்லாம் கொட்டி வலிய எந்தச் சம்பாஷணையிலும் கலந்துகொள்வது; இதுதான் இவர்கள் அடையாளமாம். வாழ்க்கையின் அடிப்படையான ஆத்ம உணர்ச்சி முதலியன இவர்களின் நவநாகரிக வாழ்க்கையில் இடம் பெறவில்லையாம்.

படிப்பு, அதோடு அமரிக்கை, அடக்கம்: இவற்றைத்தான் அவர் இத்தனை நாள் தேடிக்கொண்டிருந்தாராம். உயிர் தழைக்கச் செய்யும் உண்மை உணர்ச்சி வெள்ளம் எங்கே வற்றுது பெருகுகிறது என்றும் கவனித்துவந்தாராம். 'தனக்குத்தெரிந்ததை வெளிக்காட்ட வேண்டும் என்ற எண்ணமில்லாமல், பிறருடைய மனப்பான்மையை முதலில் சட்டென்று கிரகிக்கும் சூக்ஷ்ம உணர்ச்சி கிடைக்குமா?' எங்காவது என்று ஏங்கிப்போயிருந்தாராம். அழகை விட முகத்திலுள்ள குறுகுறுப்பு முக்கியம், அதையும் விட ஒரு பெண்ணின் கண்களிலுள்ள நேர்மை, திடமான, தெளிந்த பார்வை முக்கியம் என்பது அவர் கருத்தாம். என்னை அழகு என்றும் சொல்ல முடியாது, அழகு இல்லை என்றும் சொல்ல முடியாது; அப்போப்பட்ட நிலைதான் உயர்ந்தது என்று சொன்னர். "ஆத்மாவின் அழகு நடையுடை பாவனை ஒவ்வொன்றிலும் பிரதிபலிப்பதைவிடக் கண்களில்தான் அதிகம் ஒளிர்கிறது; அம்மாதிரியான கண்களுக்குத்தான் நான் இப்பொழுது அடிமையாகிவிட்டேன்!" என்று என்னவெல்லாமோ சொன்னர்

உலக அனுபவம் வாய்ந்த அவருடைய சொல் ஒவ்வொன்றும் கண்யமாயும் ஆழ்ந்த பொருள் உடையதாயும் இருந்தது. வீடு திரும்பினபொழுது அங்கே வேறு விருந்தினர்கள் வந்திருந்தது தெரிந்தது. எல்லோரும் சாப்பிட்டான பிறகு நான் வந்தவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்து அவர்களோடு பேசிக்கொண்டிருந்தேன். அண்ணாவும் மன்னியும் கோபாலனை வழியனுப்பிவிட்டு வந்தார்கள்.

ஆனால் அன்றிலிருந்து மன்னிக்கு என்னோடு அதிகம் பேச ஒழிகிறதில்லை. அவள்தான் கல்யாண திட்டத்தில் மூனைந்திருக் கிறாளே! ஜவுளிக் கடை, பாத்திரக் கடை முதல் சமையல் ஏற்பாடு வரை எல்லாவற்றிற்கும் அவளே சர்வாதிகாரியல்லவா?

* * *

இன்னும் நான்கே நாள் பாக்கி. இன்று வீட்டில் சிக்கிரமாக மூவரும் படுத்துக்கொண்டுவிட்டோம். அலைச்சலும் ஆயாஸமும் அதிகம் மன்னிக்கு. இருந்தாலும் அண்ணு ஏதோ சொல்லிக் கொண்டே வந்தார். மன்னியின் குரல் கடைசியில் எழுந்தது. "ஐயோ, இவ்வளவு அசடாகவா உங்கள் தங்கைக்கு வாய்க்க வேணும்? ஒரு வீட்டிற்குப் போனால் அங்கே எத்தனையோ பேர் இருப்பார்கள்."

"இல்லை, இல்லை. அன்று உன்னைக் கோபு பார்க்கவேயில்லை. ஸரோஜாவை மாத்திரந்தான் பார்த்தான். அவன் அப்படி முதலில் நினைத்ததில் தப்பில்லை. ஆனால் இரண்டாம் தடவை வந்தானே, சாப்பிடக் கூப்பிட்டிருந்தோமே, நினைவிருக்கிறதா?"

"நினைவில்லாமல் என்ன? நான் பண்ணின பிடிவாதந்தான் அது. அன்றைக்கே நான் இரண்டு பேருக்கும் முடிச்சுப் போட்டு விட்டேன். என் திட்டப்படியே நடந்ததா இல்லையா? துளியாவது பிசகு உண்டா, சொல்லுங்கள்."

"அதெல்லாம் சரி; உன் சமர்த்து யாருக்கு வரும்? இன்னொன்று அல்லவா சொல்லவந்தேன்: சாப்பிடும்பொழுது ஸரோஜா என் தங்கை என்று நான் சொன்ன பிறகுகூட அவன் கலக்கம் தீரவில்லையாம். கல்யாணம் ஆகியிருக்கும் என்றே நினைத்தானும். அன்றைக்கு ஹாலில் நானுகச் சொல்லாமல் போனால் இன்றுவரைகூட அப்படியே நினைத்துத்தான் வேதனைப் பட்டுக்கொண்டிருப்பான். வீட்டு வழி மறுபடி வந்திருக்க மாட்டான்."

"ஒரு பெண்ணைப் பார்த்தால் கல்யாணம் ஆனதும் ஆகாததும் கூடவா தெரியாமல் போய்விடும்?"

"நெற்றியில் என்ன எழுதி ஒட்டியிருக்கிறதா? அதுவும் நீங்கள் எல்லோரும் இப்பொழுது ஒரேவிதமாக வேறு புடைவை உடுக்கிறீர்கள்; எப்படித் தெரியும்? நான் உன்னை முதலில் காலேஜ் எக்ஸிபிஷனில் பார்த்தபோது என்ன நினைத்தேன் தெரியுமா? மற்றப் பெண்களைவிட ஒரு முழம் உயரமாகக்கூட இருந்தாய் நீ!"

"ஐயோ, போதுமே! புருஷர்களெல்லாம், ஆனாலும் இவ்வளவு அசடாயிருக்க வேண்டாம். அதிலும் உங்கள் சிநேகிதர் முழு அசடு, வடிகட்டின அசடு" என்றாள் அழுத்தம் திருத்தமாக.

நான் 'களுக்'கென்று என்னை அறியாமல் சிரித்துவிட்டேன். மன்னி காதில் விழுந்திருக்கும். தர்க்கம் அதோடு நின்றுவிட்டது.

என். ஆர். கேதாரி ராவ், எம். ஏ., எல். டி.

வீர வெங்கிட்டு 9

கும்பகோணம் பெரிய நெருவில் உள்ள ஒரு மாடிவீட்டில் ராமஸ்வாமி ஐயங்கார் என்ற பெரிய வக்கீல் இருந்தார். அவர் தொழிலைச் சரியாய் நடத்தி வந்தநால் பல கக்ஷிக்காரர்களிடம் அவருக்குக் கண்ணியம் ஏற்பட்டது. அதற்குத் தகுந்தாற்போல் அவருடைய வருமானமும் அதிகரித்தது. மாதம் சுமார் ஆயிர ரூபாய் அவர் சம்பாதிப்பார் என்பது மற்றவர்களுடைய மதிப்பு. அதற்கேற்ப அவர் சில தான தருமங்களையும் செய்யத் தொடங்கினர். ஜட்ஜ், கலெக்டர் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு அடிக்கடி 'தேநீர் விருந்து' அளிப்பார். கோவில் குளங்களுக்கும் தம்மா லான உதவி செய்வார். ஏழை உறவினர்களுக்கும் சமயோசிதம் போல் கை கொடுப்பார். ஆயினும் தம் பெண்சாதி குழந்தை களின் நன்மையையும் மறவார். அவருக்குச் சில நாள் வரையில் புத்திரபாக்கியமில்லாமல், கடைசியில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. திருப்பதியில் வீற்றிருக்கும் ஏழுமலையானின் அனுக் கிரகம் எனக் கருதி அதற்கு 'வெங்கடரமணன்' என்ற பெயர் வைத்தார்கள்.

இதற்குள் மூத்த பையன் முறையாகக் கற்றுத்தேர்ந்து பி. ஏ. பட்டமும் அடைந்தான். புத்திக்கூர்மையோடு கூடப் புஜபல பராக்கிரமும் இருந்தமையால் அவனைப் பலர் 'போலீஸ்' இலாகாவுக்குத் தகுந்தவன் என்று சொன்னார்கள். ஆயினும் இது தகப்பனாருக்குப் பிடிக்கவில்லை, ஜோசியர்களை ரகஸ்யமாகக் கேட்டதில், "புது மாதிரி உத்தியோகம் செய்து ஆகாசம் வரையில் கிளம்புவான்" என்று புதிர் போட்டது மாதிரி சொன்னார்கள்.

இதுவும் தாய் மூலமாகப் பையன் காதிற்கு எட்டியது. அதற்கேற்றபடி "ஹிந்து" முதலிய தினஸரிகளைப் புரட்டுவதில் 'ஆகாய விமானப் படைக்கு ஆள் தேவை' என்ற பத்தியும் தினம் தினம் அவன் கண்ணுக்குத் தென்பட்டது.

சுற்குடிப் பிறந்தோன், திடகாத்திரன், பெரிய பட்டம் பெற்றவன் என்ற இறுமாப்பால் சிறிய உத்தியோகத்தில் இறங்கு வது கௌரவக் குறைச்சல் என்று எண்ணினான். ஆதலால் ஒரு வருக்கும் தெரியாமல், தபாலாபீஸுக்குப் போய், எடுத்தவுடன் நூறு ரூபாகன், அதாவது முந்நூற்றைம்பது ரூபாய்க்குக் குறை வில்லாமல் தனக்குச் சம்பளம் கொடுத்தால்தான் விமானப் படையில் சேரமுடியும் என்பதைக் குறிப்பிட்டு, தன் ஸகல வல்லமைகளையும் விவரித்து ஒரு மனு மேலதிகாரிகளுக்குப் போட்டான். மகா யுத்தத்தின் பலனாய், முன்னால் இந்தியர்களுக் குக் கொடுபடாதிருந்த ராணுவ உத்தியோகங்களையும் கொடுப்ப

தாக அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருந்ததால், அவன் மனு வுக்குப் பத்து நாளுக்குள் பதில் வந்தது.

இனி வீட்டில் மறைத்துவைப்பதில் பலனில்லை என்று தெரிந்து, இரவு சாப்பாட்டுக்குப்பின் ஓய்வு நாற்காலியில் சாய்ந்து தம் மனையாளுடனும், குழந்தைகளுடனும் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்த தன் தகப்பனாரிடம் விஷயத்தைச் சொன்னான்.

முதலில் பெரிய சம்பளம் வருவதை மட்டும் கூறினதால், அவன் காரியம் ஒருவாறு பலித்தது. "கோழை மனசுடையான்" என்பது ஒரு வசைமொழி; அதை நாம் எப்படியும் தடுக்கவேண் டும் என்ற மனப்பான்மை மேற்கொண்டிருந்ததால் எல்லாரும் சுலபமாகவே சம்மதித்தார்கள்.

உடனே பெங்களூருக்குப் போய் அங்கே ராணுவ அதிகாரி களைப் பேட்டி கண்டு, அவர்களும், "இவன் நல்ல ஆளாமி" என்று சொன்னதால், வட இந்தியாவிலுள்ள அம்பாலா என்ற விமானப் பயிற்சி அளிக்கும் இடத்திற்குப் புறப்பட்டான்.

ஒவ்வொரு வாரமும், செல்லப் பிள்ளையாகிய வெங்கிட்டு விடமிருந்து கடிதம் வரும். நாலைந்து பக்கங்களுக்குக் குறைச்ச லில்லாமல் தான் பார்த்தும் கேட்டும் வரும் விஷங்கள் அனைத்தை யும் ஊரில் உள்ளவர்களுக்குத் தெரியும்படி எழுதுவது அவன் வழக்கமாய்விட்டது.

ராமஸ்வாமி ஐயங்காரும், ஒவ்வொரு கடிதத்தையும் தம் ஆப்த நண்பர்களிடம் காட்டி, அவர்களுடைய ஆனந்தத்தில் தாமும் ஈடுபட்டுச் சந்தோஷப்படுவார்.

இளங்காளை யாதலால் விமானம் ஓட்டும் வித்தையை வெகு சீக்கிரம் கற்றுன் வெங்கிட்டு. ஆதலால் தன் மேலதிகாரிகளுடன் சரி சமானமாய்ப் பழகுவானே ஒழியத் தான் சிறு பிள்ளை என்ற எண்ணம் அவனுக்கு இல்லவே இல்லை. போரின் கொடுமை அதிகரித்ததால் கைதேர்ந்த சில வீரர்களைப் பிரான்சு தேசத்துக்கு அனுப்பவேண்டும் என்ற உத்தரவு வந்தவுடன், முன்னணியில் நிற்கும் வெங்கிட்டுவின் பெயரும் ஐரோப்பாவுக்குச் செல்லும் வீரர்களின் ஜாப்தாவில் சேர்க்கப்பட்டது.

இந்தச் சமாசாரம் தகப்பனாருக்குத் தெரிந்தவுடன் குழந்தை யின் பெயரால் வீட்டில் ஸஹஸ்ர நாமார்ச்சனையும், கோவில்களில் விசேஷமான அபிஷேகம், பூஜை, நைவேத்தியம் முதலியனவும் செய்வதற்கு ஏற்பாடுகள் பண்ணினார். பையனிடமிருந்து ஒரு மாதத்துக்கொரு தடவையாவது, "க்ஷேமம் நீ கவலைப்படாதே" என்ற சில வார்த்தைகளடங்கிய தந்தி வந்துகொண்டிருந்தது.

இப்படியாக, ஆறு மாதத்தையும் ஆறு யுகமாகக் கழித்தனர், ராமஸாமி ஐயங்காரும் அவர் தர்ம பத்தினியும். ஊரை விட்டுப் போய் மூன்று வருஷங்கள் ஆனதால், இரண்டு மாதம் லீவ் வாங்கிக்கொண்டு வெங்கிட்டு கும்பகோணத்துக்குத் திரும்பினான்.

அவன் திரும்பி க்ஷேமமாய் வந்து சேர்ந்ததால் வீட்டில் ஒரே கூத்தும் கொம்மாளமும். தினம் ஒருவித பக்ஷணம். தினம் ஒரு கச்சேரி. தாயாருக்கும், தகப்பனுருக்கும் கடவுளிடம் இருந்த பக்தி மேலிட்டு, "திருவேங்கடத்தான் அருளால் எங்கேயாவது க்ஷேமமாய்த் தீர்க்காயுஸுடன் இருந்தால் போதும்" என்று அடிக்கடி சொல்லுவார்கள்.

இப்படியாக இந்த இரண்டு மாதமும் இரண்டு க்ஷணமாகப் பறந்தன. கல்கத்தாவுக்கு வரும்படி உத்தரவு பிறந்தது.

கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப்போய் ஒரு மாதத்துக்குள்ளாக, 'கொடிய ஜப்பானியரின் கொட்டத்தை அடக்கப் பல விமானிகள் வேண்டும்' என ராணுவக் கட்டளை பிறந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டதால் களைப்பற்ற வீரனும் வெங்கிட்டுவை மற்றவர்களுடன் பொறுக்கிப் போர் முனையில் அனுப்பியது ஆச்சரியமல்ல. ஒவ்வொரு தரமும் கல்கத்தாவுக்கு வரமுடியாது; ஆதலால் விமானத் தாக்குதல் ஆனபின் அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள ஒரு சிற்றூருக்கு வீரர்கள் திரும்புவது என்று ஏற்பாடாயிற்று. போர்முனையில் எவ்வளவு சௌகரியங்கள் கிடைக்குமோ அவ்வளவும் வெங்கிட்டுவுக்குக் கிடைத்தன. தனிக் கூடாரம். தன் உடுப்புக் களைச் சரிவரப் பார்த்து வருவதற்கு ஒரு சிப்பாய். தேயிலை, சொட்டி முதலிய ஆகாரங்கள், பதினைந்து நாளுக்கொருதரம் பெற்றோர்களுக்கு க்ஷேமலாபத்தைப்பற்றி எழுத வசதிகள், எல்லாம் இருந்தன.

ஒரு தரமல்ல, பல தரமும் ஜப்பானியர்கள் கூடி இருந்த இடங்களிலும், அவர்கள் ஆதிக்கமிருந்த இடங்களிலும் வெங்கிட்டுவின் குண்டு வீச்சு பலமாயிருந்தது. சத்துருக்கள் பீதி யடையும்படி ஒவ்வொரு தரமும் பலத்த நஷ்டம் ஏற்பட்டது. அவ்வளவுக் கவ்வளவு, நேசப்படைகளில் அவன் செல்வாக்கு அதிகப்பட்டது. வரவர, அவன் கையாண்ட முறைகளைக் கூர்மையாய்க் கவனித்த சத்துருக்கள் 'ஆக் ஆக்' பீரங்கிகளை உபயோகித்தனர். தண்ணீரில் எப்படி மீன் வளைந்து வளைந்து நீஞ்சுமோ அப்படியே வெங்கிட்டு ககன மார்க்கத்தில் கீழும் மேலுமாகப் புரண்டு புரண்டு அதிசாதுரியமாகத் தப்பிவிடுவான்.

இப்படிப் பலநாள் சென்றன. மாரிக்கால மத்தியில் அவன் எதிரிகளுக்கு ஏராளமான சேதம் ஏற்படுத்தித் திரும்பும்பொழுது ஒரு தரம் 'ஆக்-ஆக்' பீரங்கி அவன்மேல் சுடப்பட்டதைக் கண்டு, அவன் கீழே இறங்கப் பார்த்தான். விமானம் ஓட்டும் இயந்தரத்தைத் திருப்ப யத்தனித்ததில் கை கழுவிற்று. அவ்வளவுதான் தாமதம், விர்ரென்று குண்டு தன் விமானத்தைத் தாக்கவே, விமானம் தீக்கிரையாயிற்று. வெங்கிட்டு உடல் நீத்துக் கீழே விழுந்தான்.

விஷயம் ஊருக்குத் தெரிவதற்கு ஒரு வாரம் ஆயிற்று. வெள்ளிக்கிழமையன்று அவன் தாய்க்கு ஏதோ மனம்

அவன் திரும்பி க்ஷேமமாய் வந்து சேர்ந்ததால் வீட்டில் ஒரே கூத்தும் கொம்மாளமும். தினம் ஒருவித பக்ஷணம். தினம் ஒரு கச்சேரி. தாயாருக்கும், தகப்பனாருக்கும் கடவுளிடம் இருந்த பக்தி மேலிட்டு, "திருவேங்கடத்தான் அருளால் எங்கேயாவது க்ஷேமமாய்த் தீர்க்காயுஸுடன் இருந்தால் போதும்" என்று அடிக்கடி சொல்லுவார்கள்.

இப்படியாக இந்த இரண்டு மாதமும் இரண்டு க்ஷணமாகப் பறந்தன. கல்கத்தாவுக்கு வரும்படி உத்தரவு பிறந்தது.

கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப்போய் ஒரு மாதத்துக்குள்ளாக, 'கொடிய ஜப்பானியரின் கொட்டத்தை அடக்கப் பல விமானிகள் வேண்டும்' என ராணுவக் கட்டளை பிறந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டதால் களைப்பற்ற வீரனும் வெங்கிட்டுவை மற்றவர்களுடன் பொறுக்கிப் போர் முனையில் அனுப்பியது ஆச்சரியமல்ல. ஒவ்வொரு தரமும் கல்கத்தாவுக்கு வரமுடியாது; ஆதலால் விமானத் தாக்குதல் ஆனபின் அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள ஒரு சிற்றூருக்கு வீரர்கள் திரும்புவது என்று ஏற்பாடாயிற்று. போர்முனையில் எவ்வளவு சௌகரியங்கள் கிடைக்குமோ அவ்வளவும் வெங்கிட்டுவுக்குக் கிடைத்தன. தனிக் கூடாரம். தன் உடுப்புக் களைச் சரிவரப் பார்த்து வருவதற்கு ஒரு சிப்பாய். தேயிலை, ரொட்டி முதலிய ஆகாரங்கள், பதினைந்து நாளுக்கொருதரம் பெற்றோர்களுக்கு க்ஷேமலாபத்தைப்பற்றி எழுத வசதிகள், எல்லாம் இருந்தன.

ஒரு தரமல்ல, பல தரமும் ஜப்பானியர்கள் கூடி இருந்த இடங்களிலும், அவர்கள் ஆதிக்கமிருந்த இடங்களிலும் வெங்கிட்டுவின் குண்டு வீச்சு பலமாயிருந்தது. சத்துருக்கள் பீதியடையும்படி ஒவ்வொரு தரமும் பலத்த நஷ்டம் ஏற்பட்டது. அவ்வளவுக் கவ்வளவு, நேசப்படைகளில் அவன் செல்வாக்கு அதிகப்பட்டது. வரவர, அவன் கையாண்ட முறைகளைக் கூர்மையாய்க் கவனித்த சத்துருக்கள் 'ஆக் ஆக்' பீரங்கிகளை உபயோகித்தனர். தண்ணீரில் எப்படி மீன் வளைந்து வளைந்து நீஞ்சுமோ அப்படியே வெங்கிட்டு ககன மார்க்கத்தில் கீழும் மேலுமாகப் புரண்டு புரண்டு அதிசாதுரியமாகத் தப்பிவிடுவான்.

இப்படிப் பலநாள் சென்றன. மாரிக்கால மத்தியில் அவன் எதிரிகளுக்கு ஏராளமான சேதம் ஏற்படுத்தித் திரும்பும்பொழுது ஒரு தரம் 'ஆக்-ஆக்' பீரங்கி அவன்மேல் சுடப்பட்டதைக் கண்டு, அவன் கீழே இறங்கப் பார்த்தான். விமானம் ஓட்டும் இயந்தரத்தைத் திருப்ப யத்தனித்ததில் கை நழுவிற்று. அவ்வளவு தான் தாமதம், விர்ரென்று குண்டு தன் விமானத்தைத் தாக்கவே, விமானம் தீக்கிரையாயிற்று. வெங்கிட்டு உடல் நீத்துக் கீழே விழுந்தான்.

விஷயம் ஊருக்குத் தெரிவதற்கு ஒரு வாரம் ஆயிற்று. வெள்ளிக்கிழமையன்று அவன் தாய்க்கு எதோ மனம்

தாய்மார் இத்தேசத்தில் தோன்றவில்லையா? இப்போது நீயும் ஒரு வீரனின் தாயானாய். நாம் ஏன் அழவேண்டும்? மனிதன் சரீரமா? அல்லது ஆத்மாவா? பரமாத்வானின்றும் வேறாய் வந்த ஜீவன் மறுபடி பரமாத்மாவுக்குத் திரும்பிப் போயிற்று. இது ஸகஜந் தானே?" என்று ஒருவாறு தேற்றினர்.

எப்பொழுதுமே கொஞ்சம் தர்ம வாசனை உடையவர் ஐயங்கார். அதிலும் இந்தச் சம்பவம் நடந்தபிறகு, "உலகம் அநித்தியம்" என்ற உண்மையை நன்கறிந்தார்.

இரவில் தூக்கம் வராத சமயங்களில், தம் வாழ்வில் மின்னல் போல் தோன்றி மறைந்த தனயனைப்பற்றி நினைப்பார். அபூர்வ வாசனையுள்ள புஷ்பம், முழுதும் மலர்ந்து எல்லோருக்கும் இன்பம் தராமல் கருகிய மொட்டாய்விட்டதே என்று ஏங்குவார். பிறகு ஆத்மாவுக்கு ஒருவிதக் கிலேசமுமில்லை என்று கிருஷ்ணன் கீதையில் கூறிய வாக்கை நினைந்து தேற்றுவார்.

அவர் வாழ்க்கையிலேயே ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. சாத்விக குணம் மேலோங்கி ரஜோகுணமும் தமோ குணமும் பின் வாங்கின. மனத்தெளிவு அடைய அடைய, தம் பித்ருக்களின் ஆசீர்வாதத்தால் நிஜ வீரனைத் தாம் பிள்ளையாகப் பெற்றது ஒரு பாக்கியந்தான் என்ற முடிவுக்கு வந்தார். ஆதலால், எல்லாப் படியாலும் வெறும் வெங்கிட்டு வீர வெங்கிட்டுவாய்த் திகழ்ந்தான்.

வி. சி. கோபாலரத்னம், பி. ஏ., பி. எல்.

"பட் - பட் - பட்" 10

"ஆனந்தத் தாண்டவம்" என்னும் தமிழ்ப் பத்திரிகையின் சுபாலு வருஷத்திய ஆண்டு மலர் மிகவும் சிறந்து விளங்கிற்று. அதில் அநேக விதமான கட்டுரைகளும் கதைகளும் சிறந்த விமரிசனங்களும் நிறைந்திருந்தன. பிரபல எழுத்தாளர்களும் வித்துவான்களும் அந்த மலரை ஆதரித்திருந்தனர். அதில் அடங்கிய ரஸமான விஷயங்களில் மிகவும் விசேஷமாகச் சொல்லக்கூடியது ஒன்று இருந்தது. "தம்பதிகளுக்குள் பரஸ்பரம் காதலை நிலைக்க வைப்பதெப்படி?" என்று ஒரு கேள்வியைக் இளப்பி அதற்குரிய பதிலைப் பல ரகமானவர்களிடமிருந்து வருவித்து வெளியிட்டிருந்தனர். அம்மாதிரித் தங்களுடைய அபிப்பிராயங்களை தெரியப்படுத்தியவர்களில் சிலர்:—ஸ்ரீ மாஜி பூபாலாசாரி, மஹாகனம் ஸ்ரீ வேங்கடாசலபதி சாஸ்திரியார், ஸர் ஆறுமுகம் செட்டியார், திருவாங்கொச்சி சமஸ்தான மந்திரி ஸ்ரீ நிச்சயோத்தம, ஸர். ஸீதாநாத ஐயர், ஸ்ரீமதி ஸத்யபாமா தேவி, திரு. நண்டுவனை நரியார், ஸ்ரீ டாக்கி ராஜ பாகவதர், குமாரி குவலய சுந்தரி,

திவான் பகதூர் சரமாரி சாஸ்திரியார், ஸர் முஹம்மத் மலையப்ப மரக்காயர் முதலாயினோர். இதர உலக விஷயங்களில் மேற் சொன்னவர்கள் பல வேறு விதமான அபிப்பிராயங்களுடைய வர்களாயினும் இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் அவர்களும் மற்றவர்களும் ஒற்றுமையாய்த் தெரிவித்திருந்தார்கள். அதாவது:

"புருஷனே, மனைவியோ தன்னை மலிவாகச் செய்துகொள்ளக் கூடாது. பிறர் மதிப்பவற்றையே பின்பற்றிப் போவது பிறவிக் குணம். ஆகையால் புத்திசாலியான மனைவியோ, புருஷனே அப்போதைக்கப்போது தன்னைக் குறித்துத் தன் புருஷனே, தன் மனைவியோ பொருமைப் படுமாறு செய்து கொள்வதால், அவர் களுக்குத் தங்கள் மேல் உள்ள காதல் குறையாமல் வைத்துக் கொள்ள முடியும்" என்ற தாத்பரியமுள்ள செய்தி பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுக் கண்களைக் கவருமாறு அந்தப் பத்திரிகை மலரில் அமைக்கப்பட்டிருந்தது.

டம்பகோணத்தில் "யூனியன் கிளப்" என்று ஆண் பிள்ளைகள் கிளப் ஒன்று உண்டு. அதில் அநேகமாய் முக்கியமான மாத, வார, தினசரிப் பத்திரிகைகள் யாவற்றையும் வருவிப்பது வழக்கம். அவைகளில் 'ஆனந்தத் தாண்டவம்' ஒன்று. பிரதி மாதமும் ஏறக்குறைய எல்லா அங்கத்தினர்களும் 'ஆனந்தத் தாண்டவம்' படிக்காமல் இருப்பதில்லை.

* * * *

வாசு அல்லது பரவாசுதேவ ஐயங்கார், ஒரு பெரிய இன்ஷ் யூரன்ஸ் கம்பெனிக்குத் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு ஏஜெண்டு. ஏழைக் குடும்பத்தில் பிறந்து கூடியமட்டும் தங்கு தடையின்றி பரீக்ஷைகளில் தேறவே, கோணி வியாபாரம் செய்து கோடீசுவர ரான கோரோஜனமையங்கார் தம் பெண்ணை வலுவில் கொடுக்க முன்வந்தார். லௌகிக விஷயங்களில் அழுத்தமாகவே பேரத்தை முடித்துக் கொண்டு வாசு, கோரோஜனமையங்காரின் பெண் லக்ஷ்மியை விவாகம் செய்துகொண்டான். விவாகமான நான்காம் நாள் வாசு கப்பலேறிச் சீமைக்குப் போய்விட்டான். வாரம் தவறுமல் கோரோஜனமையங்கார் சீமைக்கு மணியார்டர் செய்து வந்தார். ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக்கென்று போன பிள்ளையாண் டான், ஐந்து வருஷங்களாகியும் ஒரு பரீக்ஷையிலும் தேறவில்லை. இந்தியாவின் ஞாபகத்தை இழந்தான். மனைவியை மறந்தான். அக்கறைச் சீமையில் அந்த மிகுந்த அப்ஸர ஸ்திரீகளுடன் அல் லும் பகலும் ஆனந்த சுகத்தில் ஆழ்ந்தேவிட்டான்.

பேரை மாற்றி மிஸ்டர் பி. வி. வடவார் என்று வைத்துக் கொண்டான். ஆனால், திடீரென்று ஒரு நாள் கோரோஜன மையங்கார் இருந்ததை யெல்லாம் இழந்து இன்ஸால்வெண்டாய் இறந்தார். வடவார் அவர்களுக்கு வாரந்தோறும் வந்து கொண் டிருந்த வரவுத் தொகைகள் வற்றிப்போய்விடவே, வேறு வழியில் லாமல், சிறிய கப்பலொன்றில் மூன்றாம் வகுப்பில் பிரயாணம்

செய்து ஊருக்கு வந்து சேர்ந்தான். தன் மனைவி லக்ஷ்மி நவ நாகரிக ரீதிகளில் நன்முய்ப் பழகியிருந்ததைப் பார்த்து மிகவும் திருப்திகரமாய் அவளை ஏற்றுக்கொண்டான்.

ஊரூராய்ச் சென்று உத்தியோகம் தேடினான். உபயோகப் படவில்லை. கடைசியில் அவனுடைய மாமனார் இருந்த ஸ்திதியையும், அவனுடைய வசிகரத் தோற்றத்தையும் கவனித்துப் பூகோள இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் முதலாளி, அவனைத் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு ஏஜெண்டாக நியமித்தார். அந்தக் கம்பெனி மிகவும் பிரபலமானபடியால் இந்த வேலை கிடைத்தது மிஸ்டர் வடவாருக்கு அதிருஷ்டமென்றே சொல்ல வேண்டும். ஆனல் வேலையைக் கொடுப்பதற்குமுன் கம்பெனி முதலாளி ஒரு காரியம் செய்தார். "மிஸ்டர் வடவார்! உங்களுக்கு வைத்த பேர் என்ன?" என்று கேட்டார்.

"வாசுதேவன்" என்று பதில் வந்தது.

"ஆனல் அப்படியே பேரை மறுபடியும் மாற்றிக்கொண்டால் தான் வேலை கொடுக்க முடியும். இந்த வடவாறு, வெண்ணுறு, வெட்டாறு எல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை" என்ருர் முதலாளி.

வாசு முணு முணுத்துக்கொண்டே ஒப்புக்கொண்டான். புத்திசாலி ஆதலால் வெகு சீக்கிரத்தில் நல்லபடி வேலையைக் கவனித்து உயர்ந்த சம்பளம் வாங்கி, லக்ஷ்மியிடத்தில் நீங்காத காதலுடன் விளங்கினன்.

ராஜு, அதாவது ஜே. ஜீ. ராஜகோபாலன், பி. ஏ. டம்ப கோணத்தில் போலீஸ் டிபுடி ஸூபரிண்டெண்டு. ஆசாமி நல்ல கட்டுமஸ்து, 32-வயசு. டென்னிஸ் முதலிய ஆட்டங்களில் நிபுணன். அவன் மனைவியின் பெயர் ஸரஸ்வதி. அவள் லக்ஷ்மிக்குக் கிட்டின பந்து, நல்ல புத்திசாலி, அழகுடையவள், பி. ஏ. பட்டம் பெற்றவள். லக்ஷ்மியும், சரஸ்வதியும் ஏறக்குறைய சமமான வயசுடையவர்களா யிருப்பதுடன், மிகவும் அன்யோன்ய மான சிநேகம் படைத்தவர்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் டம்பகோணம் லேடீஸ் கிளப்பில் சந்தித்து ஒன்முய்க் காலம் போக்கி உல்லாசமா யிருப்பது வழக்கம். அந்த லேடீஸ் கிளப்பி லேயும் 'ஆனந்தத் தாண்டவம்' பத்திரிகை வரவழைக்கப்பட்டு யாவராலும் வெகு ஆவலாய்ப் படிக்கப்படுவதுண்டு.

* * * *

வாசுவுக்கு ஒரு சந்தேகம் பிறந்தது. இரண்டு வருஷங்க ளுக்குமுன் தான் சீமையிலிருந்து திரும்பி வந்தபோது லக்ஷ்மிக்குத் தன்மேல் இருந்த காதல் இப்பொழுது மிகவும் குறைந்துவிட்டது போல் தோன்றிற்று. தன்னைக் கண்டவுடன் லக்ஷ்மி முன்போல் பரபரப்புடன் ஓடி வருவதில்லை. அடிக்கடி தலையைத் தொங்க விட்டுக்கொண்டு ஏதோ சிந்தையில் ஆழ்ந்திருப்பதுபோல் இருக்

கிறுள். தன்னுடன் இருக்கும்போதுகூட முன்னிருந்த கலகலப்பும் நகைப்பும் இல்லாமல் முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டிருக் கிறுள்.—"ஒரு வேளை என் மேலிருந்த காதலெல்லாம் போய் வேறேதாவது.....?" என்றெல்லாம் சந்தேகப்பட்டுக்கொண்டே 'ஆனந்தத் தாண்டவம்' ஆண்டு மலரின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தான். திடீரென்று மேற்சொன்ன கட்டுரை கண்ணில் தென்படவே மிகவும் ஊக்கமாய் அதைப் படிக்க ஆரம்பித்தான்.

ராஜுவுக்குச் சரஸ்வதியிடத்தில் காதல் மாத்திரம் இல்லை; அவளை ஒரு தேவதையாகவே பாவித்துப் பூஜித்துவந்தான். மணிக்கு ஒருமுறை அவளைப் பார்க்காவிடில் அவனுக்குத் திருப்தி இராது. அவள் குரலை எப்போதும் கேட்டவாறே இருக்க வேண்டும். அவளைச் சுற்றிச்சுற்றி வந்துகொண்டு, "கண்ணே", "மணியே", "மானே", "தேனே", என்று சொல்லிக் கொண் டிருந்தால்தான் சந்தோஷமாயிருப்பான். இம்மாதிரி தான் நடப்ப தால் எவ்வளவுதான் தன் மனைவிக்குத் தன்மேல் காதல் இருப்பி னும் நாளடைவில் வெறுப்புத் தட்டுமே என்று ராஜுவின் புத்தியில் சற்றேனும் நுழையவில்லை. ஆனல் ஒன்று மாத்திரம் கவனித்தான். சரஸ்வதி அடிக்கடி முகம் சுளிப்பதும், ஏக்கம் பிடித்த மாதிரி இருப்பதும், சில வேளைகளில் தான் கொஞ்சிப் பேசும் வார்த்தைகள் காதில்கூட விழாததுபோல் இருப்பதும் தென்படலாயின. அதனல் ராஜுவுக்கும் மனத்தில் குறையும், கவலையும் வந்து புகுந்துகொண்டன....."ஓ! ஓ! இனிமேல் வாழ்வில் என்ன இருக்கிறது? என்னைக் கண்டு சரஸ்வதி நகைத்து, சந்தோஷிப்பது நின்றபின் உயிர் வாழ்ந்து என்ன பயன்?" என்று பலவாருக யோசித்துக் கொண்டே இளப்பில் நுழைந்தான். இதையெல்லாம் நன்முய்க் கவனித்துக் கொண் டிருந்த குறும்பு குதர்க்க நாயர் 'ஆனந்தத் தாண்டவம்' பத்திரி கையைக் கொண்டுவந்து அவனிடம் கொடுத்து, "இந்தா! தம்பதிகள் காதலைப்பற்றி இதில் பெரியவர்களெல்லாம் சொல்லி யிருக்கிறுர்கள், படித்துப் பார். நன்மை செய்யும்" என்று சொல்லிக் 'கலகல' வென்று சிரித்துவிட்டுப் போய்விட்டார். ராஜு மிகவும் ஊக்கத்துடன் அதைப் படிக்க ஆரம்பித்தான்.

டம்பகோணம் லேடீஸ் இளப்பில் ஒரு சுகமான மெத்தை நாற்காலியில் சரஸ்வதி தனிமையாய் உட்கார்ந்துகொண்டு, 'ஆனந்தத் தாண்டவம்' பத்திரிகையின் பக்கங்களை அசட்டை யாய்ப் புரட்டிக் கொண்டிருந்தாள். அவள் மனம் மிகவும் ஏக்க மூற்றிருந்தது. கண்களில் நீர் ததும்பத் தயாராயிருந்தது. "ஐயோ! ராமா! ஏனே இந்தப் பிராமணருக்கு என் மனநிலைமை புரியவில்லை! அதைத் தெரிந்து கொள்ளாமல் நாளுக்குநாள் தம் முகத்தை அதிக ளிமாக வைத்துக் கொள்ளுகிறுரே - ஸ்திரீ களுடைய மனசை அறிந்துகொள்ள!"

"அடாடா - டாடாடா.....ஏன் இப்படி தனியாய் வாடின முகத்துடன் இருக்கவேண்டும்?" என்று கலகலவென்று வெண் கலமணி அடிப்பது போன்ற குரலில் சொல்லிக்கொண்டு லக்ஷ்மி உள்ளே நுழைந்தாள்.

சரஸ்வதி ஒன்றும் பதில் உரைக்காமல் மௌனமாய்த் தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"நாதனைக் காணுமல் வேதனைப்படும் நங்கையர்!" என்று லக்ஷ்மி ஆரம்பித்தாள்.

சரஸ்வதி, "லக்ஷ்மி! வா இப்படி, விளையாடாதே!" என்றாள். லக்ஷ்மி உடனே தன் தோழியின் சங்கடத்தைப் பார்த்துப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து, "என்னம்மா சரஸீ! உன் மனசில் என்ன குறை? சொல்லமாட்டாயா என்னிடம்?" என்றாள்.

சரஸ்வதி: உன் மனசில் இருக்கும் குறைதான் என் மனசிலும், லக்ஷ்மி! உன்னால் என்னிடம் ஒளிக்க முடியுமா? உன் சிரிப்பும், விளையாட்டும் வைத்துக் கட்டின மாதிரி இருக்கின்றனவே!

லக்ஷ்மி: உனக்கு எப்படித் தெரிந்தது?

அடுத்த அரைமணி நேரம் அந்த அறையில் குசு குசு வென்று தாழ்ந்து மெல்லிய பெண் குரல்கள் ஓயாமல் கேட்டுக் கொண் டிருந்தனவே யன்றிப் பேச்சுகளின் உருப்படி சற்றுத் தூரத்தில் கூடத் தெரியவில்லை. சற்று நேரம் கழித்துக் கஷ்டத்துடன் அடக்கப்படும் சிரிப்பும், கொக்கரிப்பும் கேட்டன. ஏதோ வேலை யாய் உள்ளே நுழைந்த வேலைக்காரி மெதுவாய்ப் பின் பக்கமாக வந்து எட்டிப் பார்த்தாள். இரண்டு அழகிய தலைகள் குனிந்து மிகுந்த கவனமாக 'ஆனந்தத் தாண்டவத்'தைப் படிப்பதைக் கண்டாள். சந்தடி செய்யாமல் கிளம்பிச் சென்றுவிட்டாள். அந்தச் சிறிது நேரத்திற்குள் அவள் காதில், "ஆம்! அதுதான் நல்ல உபாயம்", "அப்படிச் செய்துதான் பார்க்கலாமே" என்ற வார்த்தைகள் விழுந்தன.

ஸ்ரீமதி முக்தாமணி முகர்ஜி என்பவள் ஒரு வங்காள தேச விதவை. டம்பகோணத்துக்குச் சற்று வெளியே ஓர் அழகிய பங்க ளாவில் அவள் தனியாக வசித்து வந்தாள். கன்னிப் பருவத்தி லேயே தன் புருஷன் இறந்துபோய்விட்டதால் தன் ஆயுள் முழுவ தையும் கன்யா - விதவையாகவே கழித்துவிடப் போவதாகச் சொல்லி வந்தாள். முக்தாமணி நல்ல அழகி. நடை, உடை பாவனைகளில் வெகு சிரத்தையைச் செலுத்தி நவநாகரிக ரீதிகளை நன்றாய் உபயோகித்துப் பார்ப்பவர் மனங்களை எல்லாம் பரவசப் படுத்தி வந்தாள். தேக் கச்சேரியோ, மண விருந்தோ, டென்னிஸ் பார்ட்டியோ, மஹிளா ஸமாஜக் கூட்டமோ எதுவாயிருந்தாலும் முக்தாமணி இல்லாவிடில் அது மூளியென்றே சொல்லுவார்கள். அவள் எங்கே சென்றாலும் அவளைச் சுற்றி ஐந்தாறு ஆண்

பிள்ளைகளாவது சூழ்ந்துகொண்டு அவள் வாயைப் பார்த்தவாறே இருப்பார்கள். அவள் டம்பகோணத்து "ஸ்திரீ ரத்னங்களில்" நடுநாயகம். லேடீஸ் கிளப்புக்குக் காரியதரிசி. அவளுடைய உண்மையான வயசை ஒருவரும் அறியார். எப்போது பார்த்தாலும் நலுங்காத உடையும், தளராத நடையும், கோணுத முகமும் மாய்க் காட்சி அளிப்பாள். ஆடவர்களை வசியப்படுத்துவதிலேயே ஆனந்தம் அதிகம். மற்ற மாதர்கள் அவளை மறைவில் மனம் போன வாறு தூஷித்தும், எதிரில் பல்லை இளித்துப் பரிவுடன் புகழ்ந்தும் வருவது சகஜம். டென்னிஸ், பிலியர்ட்ஸ், பிரிட்ஜ் முதலிய நாகரிகமான ஆட்டங்களில் ஆண் பிள்ளைகளையும் வெல்லக்கூடிய திறமை வாய்ந்தவள் அவள். அடிக்கடி தன் வீட்டில் விருந்துகளையும், கூட்டங்களையும் அழகாய் நடத்துவாள். ஆண் பெண் அடங்கலும் அவைகளுக்கு அவள் அனுப்பும் அழைப்பை மறுக்கச் சக்தியற்றுத் தவறுமல் போய் வருவார்கள்.

லக்ஷ்மியின் மனத்தில் பொறுமையை உண்டாக்குவதற்காக, வாசு, முக்தாமணியைப் பின்பற்ற ஆரம்பித்தான். தனக்குத் தானே, "சீ! சீ! எனக்கு இந்த வங்காள ஸ்திரீயின் மேல் காதலா என்ன? ஒரு நாளும் இல்லை...ஏன்? சரிவர அவள் முகத்தைக்கூட நான் பார்த்ததில்லையே!" என்று பேசிக்கொண்டான். முதல் முறை முக்திக்குச் ('முக்தி' என்று முக்தாமணியின் பங்களா வுக்கு பெயர்) சென்றபோது, பத்து நிமிஷங்கள் கூடத் தங்கவில்லை. வீட்டுக்கு வரும் வழியில் ஏதோ முணுமுணுத்துக் கொண்டு வந்தான். "முத்துக் கோத்த மாதிரி பல் வரிசை என்ன அழகு!" என்று சில வார்த்தைகள் மாத்திரம் காதில் விழுந்தன. இரண்டாவது நாள் போனபொழுது ஒருமணி நேரம் தங்கினான். அதில் ஐம்பத்தொன்பது நிமிஷங்கள் அவள் கன்னங்களில் தோன்றித் தோன்றி மறையும் சிங்காரக் குழிகளைக் கண்கொட்டாமல் பார்த்த வாறு இருந்தான். ஆனால் வீட்டிற்குப் போகும்போது மாத்திரம், "என்ன இருந்தாலும் என் லக்ஷ்மி எங்கே? இவள் எங்கே? ஹி! ஹி! ஹி!" என்று கொஞ்சம் அசட்டுச் சிரிப்புடன் தனக்குத் தானே பேசிக்கொண்டான். மூன்றும் நாள் முக்தி வாஸம் மூன்று மணி நேரம். "அவள் விழிகளின் கருமை அதிகமா, கூந்தலின் கருமை அதிகமா?" என்று முழு நேரமும் யோசித்து ஒரு நிர்மானத்திற்கும் வரமுடியவில்லை. ஆனால் அப்போதைக் கப்போது தனக்குள், "இதெல்லாம் பாசாங்குக் காதல்தானே? உண்மையாக அவள் மேல் ஆசைப்படுகிறேனு என்ன? என் லக்ஷ்மி மேல்தான் எனக்கு நிஜமான காதல்" என்று சொல்லிக் கொள்வான். ஆனால் அம்மொழிகள் அவன் காதுகளுக்கே முற்றும் திடமமைந்தவைகளாய் ஒலிக்கவில்லை.

வீணாய் வளர்த்துவதேன்? ஒரு வாரத்திற்குள் வாசு முக்தா மணியின் காதலில் மூழ்கியேவிட்டான். ஆபீஸ் வேலை யெல்லாம் ஆலாய்ப் பறந்துவிட்டது. வீட்டில் கழிப்பது வீண்

போதென்று நினைத்து, இரண்டு நிமிஷங்கள்கூட லக்ஷ்மியுடன் இருப்பதில்லை.

பார்த்தாள் லக்ஷ்மி; "ஆஹா! அப்படியா? சரி, இருக்கட்டும். வேறு வழியில்லை" என்று பற்களைக் கடித்துக்கொண்டு தீர்மானம் செய்தாள்.

ராஜு வெகுநேரம் யோசித்தான். அநேக மங்கைமார்களை ஒவ்வொருவராய் மனத்தில் சீர்தூக்கி, கடைசியில் பந்தயம் கட்டுகிறவன் குதிரையைப் பொறுக்கி எடுப்பதுபோல் முக்தாமணியைப் பொறுக்கி யெடுத்தான். 'சரஸ்வதியின் மனசில் பொருமையை மூட்டுவதென்றால் அவ்வளவு எளிதல்ல. சாமான்ய மான ஒருத்தி வலையில் நாம் விழுந்துவிட்டதாகப் பாசாங்கு செய்தால் நம்பமாட்டாள். முக்தாமணி யென்றால், அவளுடைய ரூபம், குணம், யாவற்றையும் அனுசரித்துச் சரஸ்வதி சுலபமாய் நம்பமுடியும். ஆயினும் யாராயிருந்தா லென்ன?' என்று ராஜு யோசித்தான். "பாசாங்குக் காதல் தானே? என் சரஸ்வதியின் கால் விரலுக்குச் சமானமான வேறொரு ஸ்திரீயும் இருக்க முடியுமா? அவளுடைய நன்மைக்காகவே நான் செய்யவேண்டிய கடமை இது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அன்று சாயங்காலமே அந்தக் கடமையைச் செய்யத் தொடங்கினான். ஒவ்வொருநாளும் அந்தக் கடமையிலேயே அதிகமான காலத்தைக் கழிக்க ஆரம்பித்தான். களைத்துவிடும் வரையில் டென்னிஸ் ஆடியும், தேஜோமயமான தேவதையின் கரங்களிலிருந்து தேத்தண்ணீரைப் பெற்று அருந்தியும், மங்கின விளக்கு வெளிச்சத்தில் மங்கையின் காலடையே அமர்ந்து அவள் மதுரமான குரலைக் கேட்டுக்கொண்டே மயங்கிக் கிடந்தும் ராஜு தன் கடமையைச் செய்து வந்தான். அதிகமாய்ச் சொல்லுவானேன்? மூன்று நாட்களுக்குள் ராஜு முக்தாமணி அம்பாளின் சந்நிதானத்தில் முடிவணங்கிப் பூஜிப்பவனுய் விட்டான்.

காலைப் பூஜையைக் கருத்தாய்ச் செய்துவந்தவன் வாசு. மாலைப் பூஜையை மகிழ்வுடன் நடத்திவந்தவன் ராஜு. ஒருவன் செய்வது மற்றவனுக்குத் தெரியாது. இருவரும் முக்தாமணிக்குத் தான்தான் முதன்மையான பக்தனென்று திண்ணமாய் நம்பியிருந்தார்கள். இருவரும் வெகு சீக்கிரத்தில் தங்கள் அழகிய மனைவிகளை மறந்தனர். விளையாட்டுக் காதல் விளைக்காதலாய் முடிந்தது.

* * * *

காலைப் போஜனத்தைக் கால் வயிற்றுக்குக்கூடச் சாப்பிடாமல் வாசு அவசர அவசரமாய் உடை யணிந்துகொண்டு வெளிக் கிளம்பினான். தபால்காரன் வந்து மூன்று கடிதங்களைக் கொடுத்தான்.

"முல்லாராம் கடையிலிருந்து எனக்கு ஒரு பார்சல் வரவில்லையா?" என்று வாசு தபால்காரனைக் கேட்டான்.

"இல்லை ஸ்வாமி" என்று சொல்லிவிட்டுத் தபால்காரன் போய்விட்டான்.

வாசு கடிதங்களைப் பிரித்துப் பார்த்தான். முதல் கடிதம் ஆபீஸ் முதலாளியிடமிருந்து வந்தது. "மூன்று வாரங்களாய் உன்னிடமிருந்து சேதியே இல்லை. என்ன காரணம்? உடனே பதில்" என்று எழுதப்பட்டிருந்தது. இரண்டாவது கடிதம் "மதராஸ், மூல்லாராம் முடுக் சந்த் ஷாப்" பிலிருந்து வந்தது. அதில் :—"இன்று தங்களுடைய ஆர்டர் பிரகாரம் மூன்று முதல் தரமான பட்டு ஸாரிகளும், அதே வர்ணங்களில் ஸாரிக்கு இரண்டு வீதம் ஜாக்கெட் துணிகளும், இன்னும் இதர சாமான் களும் அடங்கிய பார்ஸலைத் தங்கள் விலாசத்துக்கு அனுப்பி இருக்கிறோம். போனவாரம் அனுப்பிய தங்க வேலை செய்த தந்த நகைப் பெட்டியின் விலை ரூபாய் 750-ஐயும் தயவுசெய்து அனுப் பும்படி கோருகிறோம்" என்று எழுதப்பட்டிருந்தது.

"அடாடா! என்ன இவ்வளவு அவசரம் பணத்திற்கு?" என்று சொல்லிக்கொண்டே வாசு மூன்றாவது கடிதத்தைப் பார்த்தான். முதல் வரியைப் படித்தவுடனே முகத்தைச் சுளித்து மறுபடியும் மேல் விலாசத்தைப் பார்த்தான். சரியாய்த்தான் இருந்தது — தன் பேர்தான். இல்லை! இல்லை! "மிஸஸ் வாசுதேவன்" என்று இருந்தது. ஆஹா! லக்ஷ்மிக்கு வந்த கடிதத்தைப் பிரித்து விட்டான். "ஆனால் இது வாஸ்தவமாயிருக்குமா? நம் கண்களே மோசம் செய்கின்றனவா?" — மறுபடியும் படிக்க ஆரம்பித் தான்.

"என் ஆசைக் களஞ்சியமே...ஐயோ! ஐயோ! இதென்ன அநியாயம்! என் கண்களை இந்த மொழிகள் நெருப்பைப்போல் தகிக்கின்றனவே! லக்ஷ்மிக்கு இம்மாதிரி எழுதக் கூடியவர் யார்? ஈசனே! ஈசனே!" என்று அலறிக்கொண்டு மறுபடியும் படிக்க ஆரம்பித்தான்.

"என் ஆசைக் களஞ்சியமே! இனி என்னால் பொறுக்க முடியாது! எத்தனை நாட்கள் உன்னைத் தூர நின்று தரிசித்து விட்டுத் துன்பத்துடன் போவது? எப்போது நான் உன் அருகில் வந்து உன் இணையற்ற வாயிலிருந்து வரும் இனிய மொழிகளைப் பருகுவது? உன் விழிகள் வீசுகின்ற கலகத்தை அடக்க ஒரு வழியே நான் அறிவேன். அது உன் மோவாய்க்கட்டையின் நடுவி லிருக்கும் அழகிய குழிவுக்கு முத்தமிடுவதுதான். உன் வளையல் கள் அசையும்போது உண்டாகும் ஓசைக்கு முன் வீணைகானம் என்ன செய்யும்?...இன்னும் எவ்வளவோ எழுதமுடியும். ஆனால் கஷ்டமுடன் பொறுத்துக் கொள்வேன். இன்றிரவு 10-மணிக்குக் காதலர் போற்றும் காவிரிக் கரை யோரத்தில் காட்டரச மரத்தின் கீழ்க் காமபாணத்தில் பட்டு உன் காலடைக் கிடந்து உன் காதார என் ஆசை மொழிகளைப் பொழிவேன். கண்ணே, மறவாதே! காத்திருப்பேன் உன்னடிமை!

உடை : நீண்ட அங்கியும் நீலநிற முகமூடியும்.

சமிக்ஞை : உன் மிருதுவான கைகளை மூன்று முறை தட்டுதல்.

பலன் : இந்திர போகம். உனக்காக உயிர்வாழும் உன் காதலன்."

இதைப் படித்ததும், வாசு தடுமாறி நிலை குலைந்தான். "ஆஹா! இவ்வளவு துரோகமா? என்ன மாயம்! என்ன மோசம்! இருக்கட்டும்!" என்று பற்களை நறநறவென்று கடித்தான். மறு படியும் கடிதத்தை முன்போலவே ஒட்டி லக்ஷ்மியின் அறையில் வைத்துவிட்டு வெளியேறினான். "இரவு பத்து மணிக்குக் காவிரி யோரத்தில் காட்டரச மரத்தின் கீழா சந்திக்கப் போகிறார்கள்? தகுந்த இடந்தான்! (சில வேளைகளில் வாசு முக்தாமணியைச் சந்தித்த இடமும் அதுதானே?) பார்ப்போம்! இன்று இரவு அவர்கள் படப் போவதை ஜன்ம முழுதும் மறக்கக்கூடாது" என்று தீர்மானித்துக்கொண்டான்.

ராஜு ஸ்நானம் செய்யும் அறைக்குள் நுழைந்தான். சரஸ்வதி அப்பொழுதுதான் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு வெளியே போனாள். அவள் அவிழ்த்துப் போட்ட புடைவையின் அருகில் ஒரு கடிதம் கிடந்தது. ராஜு அதை எடுத்து மெல்லப் பிரித்தான். ஆண் பிள்ளையின் கையெழுத்து!

வாசுவின் வீட்டில் நடந்த சம்பவங்கள் இங்கும் நடந்தன. அதேவிதமான கடிதம்! அதே விதமான கோபக் குறிகளும் சித் தீர்மானமும் ஏற்பட்டன.

8-மணிக்கு முக்தாமணி தன் மிருதுவான படுக்கையை விட்டு எழுந்தாள். பல்லை விளக்கிப் பலவிதமான வாசனைப் பொடிகளைக் கரைத்த பன்னீர் போன்ற வெந்நீரில் பளிங்கு போன்ற தன் மேனியைப் பரிசுத்தம் செய்துகொண்டாள். பளபள வென்று பிரகாசிக்கும் பட்டு உடையைத் தரித்தாள். பதமாய்ச் செய்யப் பட்ட காபியைப் பருகினாள். படிவழியே பரிசுகளைச் சுமந்து பல்லி இளித்துக்கொண்டு வரும் வாசுவின் வரவை எதிர்பார்த்தவாறு பத்திரிகையைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்.

வேலைக்காரி வெள்ளித் தட்டின்மேல் ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டு வந்து, "இப்பொழுது வந்ததம்மா" என்று வணக்கமாய் வைத்துவிட்டுப் போனாள்.

உயர்தரமான கடுதாசி! எழுத்தும் நூதனமாயிருந்தது. மேல் விலாசம், 'ஸ்ரீமதி முக்தாமணி முகர்ஜி அவர்களுக்கு' என்று அழகான எழுத்துக்களில் இருந்தது. ஒரு மூலையில் 'ப்ரைவேட்' என்று குனுக்கி எழுதி யிருந்தது. முக்தாமணிக்குக் கொஞ்சம் பரபரப்பும் குதூகலமும் அதிகரித்தன. நாஸூக்காய் லகோடா வைப் பிரித்துக் கடிதத்தை எடுத்துப் பார்த்தாள். முதல் வரியைப்

படித்ததும் மூச்சுத் திணற ஆரம்பித்தது. இருதயப் படபடப்புடன் முழுதும் படித்தாள்.

"ஆட்கொண்ட தெய்வமே!
உற்றெங்கு நோக்கினும் உன்னையே காண்கிறேன்!
ஊணுறக்க மற்ற உன்மத்த னானேன்.
குற்றமொன் றறியேன்—குறைதீர்க்கில் தரியேன்!
நற்றவப் பயனே நீ நல்குவாய் நங்காய்!
காதலர்க் கேற்றதாய்க் காவிரிக் கரையினில்
காட்டர சொன்றுமேல் ஓங்கியே காணுமாம்
ஆதவன் மறைந்ததும் ஆங்குனைத் தேடுவேன்.
நன்மைசெய் இரவினில் நாழிகை பத்தினில்
மதியுடன் ரேவதி மகிழ்ந்திடும் நாளினில்
நீண்டதோர் அங்கியும் நீலமுக மூடியும்
பூண்டவர்அங்குற்றுப் புற்றரையில் நின்று
பூவனைய கைகளால் 'பட்-பட்-பட்' டெனவே
மும்முறை ஓலித்திடில் என்முக்திமணிப் பாவாய்
மூவுலகை வென்றபயன் அன்றே அடைவாயே.—"

கையொப்பம் எதுவும் இல்லை. அதற்குப் பதில் இருதயத்தில் ஓர் அம்பு ஊடுருவி இருப்பதுபோல் ஒரு சித்திரம் வரையப் பட்டிருந்தது.

இதைப் பார்த்ததும் முக்தாமணிக்கு உடலெல்லாம் பூரித்தது. "ஆஹா! இது யாராயிருக்கக் கூடும்! என்ன அழகாய் எழுதப்பட்டிருக்கிறது! நன்றாய்ப் படித்து உயர்ந்த ஸ்திதியில் இருப்பவர் யாரோதான் இதை எழுதி யிருக்கக்கூடும்! வெகு நாளாய்க் காதல் கொண்டு தாங்க முடியாமல் இதை எழுதினவர் யாராயிருக்கும்?... இல்லை!...இல்லை!...இருக்குமா!...ஐயோ! அப்படி இருந்தால் வேறென்ன வேண்டும்? ஆயினும் இதை எழுதியவர் ஸப்-கலெக்டர் சங்கர ஐயராகத்தான் இருக்கவேண்டும்" என்று முக்தாமணிக்குத் திடமாய்த் தோன்றிற்று. நல்ல அழகும், படிப்பும் வாய்ந்தவர். பல மாதங்களாய் அவரைத் தன் வலையில் சிக்கவைக்க வேண்டி அவள் செய்துவந்த பிரயத்தனங்கள் கணக்கற்றவை. அப்பா! கடைசியில் அகப்பட்டார்!

இந்த விதமாய் முக்தாமணி தனக்குத் தானே பலவாறாய் ஆனந்த மடைந்து இரவு பத்து மணி எப்போது வருமென்று ஆவலாய் எதிர்பார்த்தாள்.

இரவு நல்ல நிசப்தமாயிருந்தது. பிறைச் சந்திரன் கீழ்வானத்தில் நக்ஷத்திரங்களிடையே தென்பட்டது. காவேரி நதியின் பிரவாகம் கலங்கிக் கரைபுரண்டு சலசலவென்று ஓய்வில்லாமல் ஓடிக்கொண்டிருந்தது. எங்கும் நிறைந்த நிசப்தத்தில் அப்போதைக்கப்போது சிறிய ஓசைகள் ஏற்பட்டு, அரசமரத்து இலைகள் ஆடுவதாலும், அருகிலிருந்த ஆந்தைகள் அலறுவதாலுமே உலகம் உயிர்த்திருப்பதாய்த் தோன்றிற்று.

இந்த நிசப்தமான உலகில், ஒரு மனிதன் மெதுவாய் அடிமேல் அடி வைத்துக்கொண்டும், அங்கும் இங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டும் பிரவேசித்துக் காட்டரச மரத்தடியில் வந்து கள்ளத்தனமாய் அதன்மேல் ஏறி ஒரு பெரிய கிளைமீது மறைந்து உட்கார்ந்து கொண்டான். அவன்தான் வாசு. "வரட்டும் அவள். கெட்டழிந்த கழுதை!" என்று பற்களைக் கடித்துக்கொண்டு முணு முணுத்தான். "மூன்றுவது முறை கைகளைத் தட்டினதும், அவள் கள்ளக் காதலன் தோன்றிக் கட்டி அணைப்பதற்குள் பழிவாங்கும் பேயைப்போல் நான் தோன்றிப் பதற வைக்கிறேன். காதலன் ஸ்பரிசத்திற்குக் காத்திருக்கும் கன்னத்தில் பேயறைவது போல் அறைகிறேன். பிறர் மனைவியை இச்சித்துவரும் சண்டாளனுக்குத் தகுந்த பரிசு!" என்று தன் கையில் வைத்திருந்த கனமான குட்டைத் தடியைத் தடவி ஆனந்தமடைந்தான்.

இந்த யோசனையில் இருக்கும்போது, மற்றோர் உருவம் வெகு ரகசியமாயும் சந்தடி செய்யாமலும் வந்து எதிரே இருந்த மற்றொரு மரத்தின்மீது ஏறி ஒளிந்துகொண்டதை வாசு பார்க்க வில்லை. அங்கிருந்து ராஜு சரஸ்வதியை நிந்தித்துச் சபித்ததும் அவளுடைய கள்ளக் காதலனைப் பலபல விதங்களில் சித்திரவதை செய்யப் போவதாய்ப் பேசிக் கொண்டதும் வாசுவின் காதில் விழவில்லை.

இரண்டு கைக்கடியாரங்களில் மணி பத்தாயிற்று. இரண்டு தலைகள் நிமிர்ந்து எந்தத் திக்கிலிருந்து சப்தம் வருகிறதென்று எதிர்பார்த்தன. எங்கும் நிசப்தம்! திடீரென்று ஒரு கழுதை கத்திற்று. "நமக்கு ஜயந்தான்" என்று இருவரும் சொல்லிக் கொண்டார்கள். மெள்ள மெள்ள ஐந்து நிமிஷங்கள் சென்றன. சற்றுத் தூரத்தில் சலசலவென்று சப்தம் கேட்டது. மார்புகள் படபட வென்று அடிக்க, கண்கள் கொட்டாமல் காரிருளைப் பிளக்கப் பார்க்க, இரண்டு காட்டு மிருகங்கள், மரங்களின் மீதிருந்து காத்திருந்தன.

நீண்ட அங்கியால் உடலை முற்றும் மறைத்துக் கொண்டு, முகத்தையும் முகமூடித் துணியால் மூடிக்கொண்டு, அடிமேல் அடி வைத்து ஓர் உருவம் காட்டரச மரத்தை நோக்கி வந்தது.

"வரட்டும்! துரோகி!" என்று உறுமிக்கொண்டான் வாசு.

"வா! வா! வஞ்சகக் கள்ளி!" என்று சிறினன் ராஜு.

உருவம் கிட்டக் கிட்ட வந்தது. அடிக்கடி நின்று நின்று சுற்று முற்றும் பார்த்துவிட்டு மறுபடியும் நடக்க ஆரம்பித்து, அணுகிற்று.

"ஆஹா! நான் பார்த்து அனுபவித்த அந்த இடை யசை வுடன் தன் சோர புருஷனைக் கூடி ஆனந்திக்கவா வருகிறாள்! ஐயோ லக்ஷ்மி!" என்று மனத்திற்குள் புலம்பினன் வாசு.

"என்னை மயக்கிய அந்தக் கழுத்தசைவால் கள்ளக் காதலனையும் மயக்கப் பார்க்கிறாளே!...சரஸீ" என்று முறுகினன்

ராஜு. உருவம் மரத்தடியில் வந்து சேர்ந்தது. கைகளை அசைத்தது. கலகலவென்று வளையல்கள் குலுங்கும் சப்தம். பிறகு "பட்-பட்-பட்" என்று மிருதுவாய் மூன்று முறை கைகளைத் தட்டும் சப்தம் கேட்டது.

ஒரே சமயத்தில் இரண்டு திக்கிலிருந்து இரண்டு பயங்கர உருவங்கள் இடிமுழக்கம்போல் கத்திக்கொண்டு வாயு வேகமாய் வந்தன. அடுத்த கணம் "பளீர்" "பளீர்" என்று இரண்டு அறைகள் இரண்டு கன்னங்கள் மேல் ஒரே சப்தத்துடன் விழுந்தன. இரண்டு குரல்கள் ஒரே சமயத்தில், "நீ யாரடா என் மனைவியை அடிப்பவன்?" என்று கூக்குரலிட இரண்டு கோர உருவங்களும் ஒன்றை யொன்று தாக்கித் 'தப்பு' 'திப்பு' என்று அடிகளாலும் குத்துகளாலும் ஓசையைக் கிளப்பின.

இதற்குள் இரண்டு பெண்ணுருவங்கள் எங்கிருந்தோ வேகமாய் உட்புகுந்து ஆளுக்கு ஓர் அசுரனைப் பிடித்து இழுத்துச் சண்டையை விலக்கப் பார்த்தன. ஒரே கோலாகலம். அரற்றி உருட்டும் ஆண் குரல்களும் அழுகையும் சிரிப்புமான பெண் குரல்களும் ஒரே சமயத்தில் முழங்கின. திடீரென்று எல்லாம் அடங்கி முழு நிசப்தம் உண்டாயிற்று.

உடம்பெல்லாம் காயங்களும், சிவந்த தாடைகளும், சிந்தின மூக்கும், கண்ணீரைப் பெருக்கும் கலங்கிய கண்களுமாய் ஒருத்தி இருபுறமும் நோக்கியவாறு நின்றாள். இரண்டு ஜோடித் தம்பதிகள் இரு புறங்களிலும் இணைத்த கரங்களும் இடைவிடா உடல்களுமாய் இருட்டில் மறைந்தனர். நின்றவளுக்கு ஆடைகள் கசங்கி முகமூடி கிழிந்துபோய் காதில் தொங்கிக்கொண்டிருந்த மாட்டல்களுடன் சிக்கிக்கொண்டு, கன்னங்கள் இரண்டும் விண் விண்ணென்று தெறித்துக் கொண்டிருந்தன. துச்ச மொழிகளையும், தூஷணைகளையும் பொழிந்துகொண்டு, முகமூடியை வெடுக்கென்று பிய்த்து எறிந்தாள். விம்மி விம்மி அழுது கொண்டு, விதியை நொந்தவாறு விரைந்து வீட்டை நோக்கி மறைந்தாள்.

"என் கண்மணி லக்ஷ்மி!" என்று வாசு தன் மனைவியை அன்றுதான் பார்ப்பவன்போல் ஒற்றைக் கண்ணால் ஓயாது நோக்கினான். அது அவன் மேல் குற்றம் இல்லை. மற்றொரு கண்ணைத் திறக்கமுடியாமல் மாங்காயளவு பெரிய வீக்கமொன்று அதன் மேல் இருந்தது.

"என் செல்வச் சிங்கக்குட்டியே!" என்று லக்ஷ்மி அவனை அணைத்துக் கொண்டு அழுகையும் சிரிப்பும் கலந்த குரலில் தாலாட்டித் தலைமயிரைத் தடவிக்கொடுத்து, அவன் பட்ட காயங்களிலிருந்து வடிந்த ரத்தத்தைத் தன் பட்டு முன்றானையால் துடைத்துக்கொண்டிருந்தாள். மறுநாள் "முல்லாராம்" ஷாப்பிலிருந்து மூன்று உயர்ந்த ஸாரிகள் பார்ஸல் தன் முரட்டுக் கணவன் பேருக்கு வருமென்று தெரியுமோ என்னவோ?

"போக்கிரிக் குட்டி! போகாதே எட்டி" என்று ராஜு தன் மனைவியை இழுத்து மறுபடியும் மடிமேல் அமர்த்திக்கொண்டு இரண்டு பற்களை இழந்து ரத்தம் பெருகும் தன் வாயை அவள் முகத்தருகில் கொண்டு போனான். சந்திரன் அடர்ந்த மேகத்தின் பின் மறைந்தான்.

"லக்ஷ்மி! லக்ஷ்மி! எங்கிருக்கிறாய்?"

"இதோ! இங்கேதான் சரஸு! வா இப்படி, அந்த அசட்டுப் புருஷனிடம்."

நால்வரும் மெல்ல ஒன்றாய் நடந்து செல்ல ஆரம்பித்தார்கள்.

"பைத்தியக்காரப் பெண்களே! இதென்ன காரியம்? ஒரு வார்த்தை சொல்லி யிருந்தால்..." என்று பேச ஆரம்பித்தான் வாசு. அதற்குள் அழகிய கை ஒன்று மேற் கிளம்பி அவன் வாயைத் திறக்க வொட்டாமல் தடுத்தது.

ஆனால் ராஜு "உங்களுடைய மனக் குறைகளை நாங்கள் அறிந்திருப்போமே!" என்று முடித்தான்.

லக்ஷ்மியும், சரஸ்வதியும் இருட்டில் மனமார ஆனந்த பாஷ்பம் சொரிந்தார்கள்.

"அந்த ஸ்திரீ யார்?" என்றான் வாசு.

"இந்தக் கந்தல் முகமூடியைக் கேளுங்கள்" என்றாள் சரஸ்வதி.

"முக்தி யளிப்பவள் முகத்தைக் காத்தது" என்றாள் லக்ஷ்மி.

"சக்தி இழந்தது சேரிடம் சென்றது" என்று ராஜு சொல்லிக்கொண்டே அதைச் சுருட்டி நடு ஆற்றில் எறிந்தான்.

"இதற்கெல்லாம் என்ன காரணம் இருந்திருக்கும்?" என்றாள் சரஸ்வதி. அதற்கு லக்ஷ்மி, "நான் மூன்று முறை கைகளைத் தட்டு கிறேன். மூன்றாவது முறை தட்டி முடிந்தவுடன் அவரவர்களுக்கு என்ன காரணம் தோன்றுகிறதோ அதைச் சொல்ல வேண்டும்" என்று சொல்லிவிட்டு, "பட்-பட்-பட்" என்று தட்டி முடித்தாள். நால்வரும் ஒரே குரலில், "ஆனந்தத் தாண்டவம் ஆண்டு மலர்" என்றார்கள்.

'முக்தி' யெனும் பங்களாவுக்குமுன் 'குடிக்கூலிக்கு விடப் படும்' என்று, பூட்டப்பட்ட கதவிலிருந்து ஓர் அறிக்கை தொங்குகிறது.

கி. ரா. கோபாலன்:

சாந்தி எங்கே? 11

மறுநாள் வரலக்ஷ்மி விரதம். அவள் அதிருஷ்டம் – ஏன்? புண்ணியம். அந்தப் பழைய சிறிய வீட்டின் சுவர்களுடைக் கொஞ்சம் சுண்ணாம்பைக் கண்டிருந்தது. சாஸ்திரம், சம்பிரதாயம்

இவையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்; அவளுக்குச் சித்திரக் கலையிலுள்ள ஆர்வத்தைக் காட்ட வரலக்ஷ்மி விரதம் பயனுள்ள தாயிற்று. வேண்டிய சாதனங்கள் - காவிக் கட்டி, கொட்டங்கச்சி, தேங்காய் நார், இத்தியாதிகளை யெல்லாம் சுறுசுறுப்பாகத் தயார் செய்துகொண்டு, சித்திரம் எழுத உட்கார்ந்தாள் ராஜி.

சில நிமிஷங்களில் சுவரில் லக்ஷ்மி பிரசன்னமாகிவிட்டாள். மேற்கொண்டு எடுபிடி சாமான்கள்: யானை, தாமரைப்பூ, வாழை மரம். சுவர் முழுவதும் ஒரே காவிக்கோடு. ராஜி, தான் எழுதிய சித்திரத்தைப் பார்த்துத் தானே வியந்துகொண்டாள். தனக்குச் சித்திரம் எழுதுவதிலுள்ள திறமையைப் பார்த்து அவளே பிரமித்து விட்டாள். அவளை அறியாமல், "ஆஹா! என்ன அழகு!" என்றுகூட வாய்விட்டுச் சொன்னாள்.

அவளுக்குப் பின்னடி யாரோ 'களுக்'கென்று சிரிப்பதைக் கேட்டுத் திரும்பினாள். மணி நின்று கொண்டிருந்தான். அவள் முகம் மலர்ந்தது. "ராஜி சுவரிலே என்ன எழுதி யிருக்கே?" என்றான் மணி.

"இது தெரியவில்லையா? லக்ஷ்மி" என்று பெருமையோடு சொன்னாள் ராஜி.

"லக்ஷ்மியா! சரிதான். எனக்குப் புரியல்லே. நான் ஏதோ துஷ்ட தேவதேன்னு நினைச்சேன்" என்று பரிகாசம் கலந்த குரலில் சிரித்தபடியே சொன்னான் மணி.

அவள் அவனிடமிருந்து இம்மாதிரி வார்த்தையையே எதிர் பார்க்கவில்லை. அவன் சொன்ன இப்பரிகாச மொழிகளால் அவள் உள்ளத்திலுள்ள பெருமையும் ஆனந்தமும் சின்னபின்னம் அடைந்தன. வெட்கமும் துக்கமும் அவளுடைய அழகிய வதனத் தைக் கருமையடையச் செய்தன. அவள் மணியின் முகத்தை நோக்கினாள். அவன் அந்தச் சுவரில் பிரசன்னமாகி யிருந்த லக்ஷ்மியைப் பார்த்துக்கொண்டே, "ஏன் இப்படி நல்ல சுவரை யெல்லாம் வீணடிக்கிறாய்?" என்றான்.

அவனுடைய பரிகாச நகைப்பு ஓயவில்லை. ராஜியின் உள் ளத்திலிருந்து அழுகையும், கோபமும் முண்டி முரணிக்கொண்டு வந்தது. "நீ நன்னாப் படமெழுதறே. கெட்டிக்காரன். இருந்தா லும் உனக்கு இவ்வளவு கர்வமும் ராங்கியும் இருக்கக் கூடாது" என்று படபட வென்று சொல்லிவிட்டுச் சட்டென்று உள்ளே போய்விட்டாள்.

ராஜியின் கோபத்தை அவன் லக்ஷியம் செய்யவில்லை. ஏன்? இது சகஜம். சிறு குழந்தையிலிருந்து அவள் எத்தனையோ தடவை கோபித்துக்கொண்டிருக்கிறாள். நிபந்தனையில்லாத சமாதானங் கள் எத்தனையோ தடவை ஏற்பட்டிருக்கின்றன. மணி ராஜியை அதோடு விடுவதாக இல்லை. அவளை இன்னும் பரிகாசம் செய்து அழவைக்க நினைத்தான். அதை அவன் பொழுதுபோக்கிற் கான விளையாட்டாய் நினைத்தான். அதற்கு எப்பொழுது

சந்தர்ப்பம் சரியாக இருக்கும் என்பதை யோசித்துக்கொண்டே தன் வீட்டிற்குப் போனான்.

மணி சித்திரம் எழுதுவதில் ஆர்வமுள்ளவன். நன்முகச் சித்திரம் எழுதுவான். அக்கிரகாரத்தில் பெரிய வீடு அவன் வீடுதான். நல்ல ஜவேஜி. அதிகம் படித்தவனுய் இல்லாவிட்டாலும், நல்ல புத்திசாலி. அவனுக்குப் பொழுதுபோக்கு, சித்திரமெழுதுவது; மற்ற நேரங்களில் குஞ்சு ஐயர் பெண் ராஜியுடன் பரிகாசமாக ஏதாவது விளையாடிக் காலத்தைக் கழிப்பது.

சதா சர்வ காலமும் சித்திரம் எழுதிக்கொண்டும், அவைகளிலேயே ஆராய்ச்சி செய்துகொண்டும் இருக்கிற மணிக்கு ராஜியின் 'லக்ஷ்மி' கொஞ்சம் ஏளனத்தைத்தான் உண்டாக்கியது. தவிர, பால்யதசை தாண்டாத அவனுக்குத் தான் அழகாகச் சித்திரம் எழுதுவதில் கர்வமடைய இது காரணமாகாதா? ராஜி எழுதிய சித்திர லக்ஷ்மி அன்று இரவு கனவில் கூடக் காட்சியளித்து அவனுக்குச் சிரிப்பு மூட்டிக்கொண்டிருந்தாள்.

அன்று வரலக்ஷ்மி விரதம். இரவு போட்டு வைத்திருந்த திட்டப்படி மணி ராஜியின் அகத்துக்கு வந்தான். அவள் எழுதிய லக்ஷ்மியை மறுபடியும் பார்த்துப் பரிகாசம் செய்ய அவனுக்கு ஆசை. ஆனல் அவன் நினைத்ததற்கு நேர்மாருக இருந்தது நிலைமை. நேற்று அந்தச் சுவரை எடுபிடி மகர தோரணங்களுடன் ஆக்கிரமித்துக்கொண்டிருந்த கஜலக்ஷ்மி, ஒரு சாமானைக் கூடப் பாக்கிவிடாமல் எடுத்துக்கொண்டு அந்தர்த்தானமாகி விட்டாள். மணி அதைப் பார்த்துப் பரிகாசம் செய்த பிறகு அழிப்பதற்குத் துளிக்கூடத் தயங்கவில்லை ராஜி. ஆனல் அதை அவள் அழித்ததனல் மணி தான் ஏதோ ஒரு பெரிய பொருளை இழந்து விட்டவன்போன்ற துக்கமடைந்தான். அவன் எவ்வளவு ஆர்வத்தோடு வந்தான், பாவம்! அவன் எண்ணத்தைப் பாழாக்கி விட்டு லக்ஷ்மி மறைந்துவிட்டாள். ராஜியைக் கிண்டலாகப் பரிகாசம் செய்வதற்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை இழந்த அவன் ஏன் துக்கப்படமாட்டான்.

ராஜி வந்தாள். "ராஜி, ஏன் அந்த லக்ஷ்மியை அழித்துச் சுவரை அலங்கோலப்படுத்தி யிருக்கே?" என்முன்.

அவளுக்குக் கோபம் பீறிக்கொண்டு வந்தது. "முன்னே இருந்த அலங்கோலத்துக்கு இது தேவலை. இனிமே சொல்லிப் பிட்டேன் மணி, நீ என்னேடே பேச வேண்டாம்."

"நிஜமாவா சொல்றே?"

அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அந்த விறைப்புத் தளராமலேயே உள்ளே போய்விட்டாள்.

மணி அப்பொழுதுகூட நகைத்தான். "இது எத்தனை நாளைக்கு?" என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான்.

ஒரு வாரம் ஆயிற்று. ராஜி மணியோடு பேசவேயில்லை. அவன் முகத்தைக்கூட அவள் சரியாகப் பார்ப்பதில்லை. மணியும் தளர்ச்சியடையாமல்தான் இருந்தான். அவளாகத்தான் நம்மோடு பேசட்டுமே என்ற பிடிவாதத்துடன் இருந்தான்.

திடீரென்று ஒரு மாறுதல். நெடு நாளாக மணி விருப்பங் கொண்ட விஷயம் பலித்தது. சித்திரகலை விஷயமாக ஆராய்ச்சி செய்ய, அவன் கல்கத்தா போக விரும்பினான். அவனுடைய தகப்பனார் அப்போதுதான் அனுமதி கொடுத்தார். அவனுடைய சந்தோஷத்திற்கு அளவில்லை. மறுநாளே புறப்படத் தயாரானான். ஊரில் எல்லோரிடமும் சொல்லிக்கொண்டாகி விட்டது, ராஜியைத் தவிர. அவள்தான் அவனைக் கண்டதும் திரும்பிப் பார்க்காமல் ஓடுகிறாளே! பிடிவாதமான மனத்தைச் சிறிது தளர்த்திக் கொண்டு அவளிடம் விடைபெறப் போனான். வாசற்படியில் நின்றுகொண்டிருந்த ராஜி மணியைக் கண்டதும் உள்ளே ஓடினாள். "ராஜி" என்று கூப்பிட்டு நிறுத்திவிட்டான். ஆனால் அவள் தலை நிமிர்ந்து அவனைப் பார்க்கவில்லை. "நான் கல்கத்தாவுக்குப் போகிறேன்." - இன்னும் ஏதோ அவன் சொல்ல நினைத்தான். அதற்கவள் துளியும் இடந்தராதவள்போல் "சரி" என்று அலக்ஷ்யத்துடன் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள். அவன் வெட்கத்துடன் வீடு திரும்பினான்.

மணி கல்கத்தாவிற்கு வந்து மூன்று வருஷகாலமாகிவிட்டது. இன்னும் அவன் ஆராய்ச்சி ஓயவில்லை. கல்கத்தா நகரம் அவனைப் பிடித்துக்கொண்டது. அவனுக்குத் தன் சொந்தக் கிராமத்தைப்பற்றிய சிந்தனையே இல்லை. அவன் எப்பொழுதாவது ராஜியை நினைத்துக்கொள்ளுவான். ஆனால் அது அவனுக்குப் பெரிய கிளர்ச்சியை உண்டாக்குவதில்லை. அவன் செய்துகொண்டிருந்த காரியமெல்லாம், சித்திரமெழுதுவது, அதைப்பற்றிச் சர்ச்சை செய்வது - இவைகளே. அதையே அவன் தன் வாழ்க்கை - வாழ்க்கையின் இன்பம் - வாழ்க்கையின் பொருள் என்று எண்ணினான்.

ரகுராமன் ஒரு கலா ரஸிகன். கல்கத்தாவில் அவன் ஒரு கம்பெனியில் வேலையில் இருந்தான். அவனுக்குச் சித்திரம் எழுதத் தெரியாவிட்டாலும் அதிலுள்ள குற்றங்குணங்களை எடுத்துச் சொல்வதில் சமர்த்தன் என்பது மணியின் அபிப்பிராயம். இதன் காரணமாகவேதான் மணி ரகுராமனின் நட்பை விரும்பினான். "மிஸ்டர் மணி, நான் நன்றாகச் சித்திரம் எழுதக்கூடிய பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன். அவள் எப்பொழுதும் சித்திரம் எழுதிக்கொண்டே இருக்கவேணும்; நான் அதைப் பார்த்து ரஸித்துக்கொண்டே இருக்கவேணும்" என்பான் ரகு அடிக்கடி மணியிடம். "அதெல்லாம் முடியாது ஸார். நம் நாட்டிலே, அதுவும் தமிழ் நாட்டிலே, அப்படிப்பட்ட பெண் சல்லடை போட்டுச் சலித்தால்கூட அகப்படமாட்டாள்" என்பான் மணி.

மணியின் வார்த்தை பொய்யாகிவிட்டது. ரகு சல்லடை போட்டுச் சலித்தானே, வலைபோட்டுப் பிடித்தானே, தமிழ் நாட்டிலிருந்து நன்முகச் சித்திரம் எழுதக் கூடிய பெண்ணை விவாகம் செய்துகொண்டு கல்கத்தா வந்துசேர்ந்தான்.

ரகுவின் மனைவி எழுதிய படங்களைப் பார்ப்பதற்காக ஒரு நாள் மணி ரகுவின் வீட்டிற்குப் புறப்பட்டான். ரகு வாசலிலிருந்து உபசாரம் செய்தபடியே அவனை வீட்டிற்குள் அழைத்துக் கொண்டு போனான். சுவரில் வரிசையாக அநேக வர்ணப் படங்கள் மாட்டியிருந்தன. மணி அவைகளைப் பார்த்துப் பிரமித்தான். "ரகு, நீங்கள் உண்மையில் பாக்கியசாலிதான்" என்று மணியை அறியாமல் வார்த்தைகள் வெளிவந்தன. ஒவ்வொரு படத்தையும் உற்றுப் பார்த்து, "ரொம்ப நன்முய் இருக்கிறது" என்று தன் திருப்தியைத் தெரியப்படுத்திக்கொண்டான் மணி. அவர்கள் இருவரும் படங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, ரகுவினுடைய மனைவி இரண்டு கிண்ணங்களில் காபியை எடுத்துக்கொண்டு அவர்கள் எதிரில் பிரசன்னமானுள்.

மணி தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான். திடுக்கிட்டு விட்டான். அவன் கால்கள்கூடத் தள்ளாட ஆரம்பித்தன. ஏதோ சொப்பன உலகிற்கு வந்துவிட்டவன்போல் மெதுவாக நாற்காலியைப் பிடித்துக்கொண்டு அதில் அமர்ந்தான். ஆம்! ராஜியும் தன் கையிலுள்ள காபிக் கிண்ணங்களைத் தவற விடாமல் மேஜைமீது வைக்க மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டாள். ஆனல் ரகுவின் ஆத்திரம், இவைகளை யெல்லாம் கவனிக்கச் சந்தர்ப்பம் அளிக்கவில்லை. "ராஜி! இவர்தாம் மணி – நான் சொல்லவில்லை? – என்னுடைய சிநேகிதர். நன்முகச் சித்திரம் எழுதுவார். நீ எழுதினதை யெல்லாம் காட்டினேன். ரொம்ப அழகு, ரொம்ப நன்முயிருக்கென்முர்" என்று மூச்சு விடாமல் சொல்லி முடித்தான். மணி தலை குனிந்து உட்கார்ந்திருந்தான். யாரைப்பற்றி நினைக்க அவனுக்கு ஒரு நிடிஷங்கூட அகப்பட வில்லையோ, அவளைப்பற்றிய நினைவு இப்பொழுது அவன் மனத்தை அட்டையாகப் பிடித்து உரிஞ்சியது. அதைச் சமாளிப்பதற்காகத் தான் தலையைக் குனிந்துகொண்டு பிரயத்தனம் செய்ய ஆரம்பித்தான்.

ராஜியின் குழம்பிய மனத்திலிருந்து எப்படித்தான் இப்படிப் பட்ட தெளிந்த வார்த்தைகள் வெளிவந்தனவோ! "ரொம்ப சந்தோஷம். என் மனத்திலிருந்த குறையெல்லாம் இப்படிப்பட்ட பெரியவாளுடைய ஆசியினலேயே நிவர்த்தியாகிவிட்டது. இனி மேல் நான் குறைப்பட ஒன்றுமே இல்லை" என்முள்.

மணியின் மனத்தில் இவ்வார்த்தை ரணத்தைக் கத்தி கொண்டு கிளறுவதுபோல் பட்டது. அவன் ஒருவிதமாகச் சுதாரித்துக்கொண்டு, "நான் ஒரு பெரிய நிபுணன்னு சொல்லிக்கொள்ள என்னிடம் அப்படியொன்றும் இல்லை. நான் பெரிய நிபுணன்னு கர்வப்பட்டால் வெட்கப்படத்தான் நேரும்" என்முன்.

ரகு இப்பொழுது வாயைப் பொத்திக்கொண்டிருக்க இஷ்டப் படவில்லை. "பெரிய நிபுணர்களெல்லாம் எப்பொழுதும் தங்களைக் குறைத்துக்கொண்டுதான் பேசுவது வழக்கம்" என்று உபசார வார்த்தை சொன்னான். இதற்குப் பதில் சொல்லும் சுறுசுறுப்பு அப்பொழுது மணியிடம் இல்லை. "மணி, அடாடா! காபி சாப்பிடுங்கோ. ஆறிப் போறதே!" என்றான் ரகு.

ராஜி அங்கு நிற்கப் பிரியப்படாதவளைப்போல் உள்ளே போய்விட்டாள். மணி ரகுவிடமிருந்து அவன் மனைவி எழுதிய படம் ஒன்றை ஞாபகார்த்தமாகப் பெற்றுக்கொண்டு அவனுடைய பலவந்த உபசாரங்களிலிருந்து தப்பித் தன்னுடைய அறைக்கு வந்து சேர்ந்தான்.

ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம்; அவனுக்கு நேற்றுவரையில் புராணக்கதைபோல் இருந்தது. ஆனால் இன்று நேற்று நடந்ததுபோல் அவன் மனக்கண்ணுக்குப்பட்டது. அவன் எதைக் குறித்து ஆச்சரியப்படுவான்? வருத்தப்படுவான்? அவன் மனக்கடல் 'ராஜீ, ராஜீ' என்று ஓலமிட்டுக்கொண்டிருந்தது. அவனுடைய மனத்தில் எழுந்த கேள்விகளுக்கு அவனால் விடைகூற முடியுமா? 'அவ்வளவு சிறியவளாய் இருந்த ராஜி எவ்வளவு உயரம் வளர்ந்துவிட்டாள்! எவ்வளவு அழகாய் இருக்கிறாள்! அடாடா! எப்படிச் சித்திரம் எழுதுகிறாள்! என்னை விட நன்கு எழுதுகிறாளே! என்னை அவமானப்படுத்தத்தான் – என் கர்வத்தைக் குலைக்கத்தான் – இவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறாள். இல்லை – அவளை நான் அப்படிப் பரிகாசம் செய்யலாமா? அவள் முதல் முதலில் எழுதிய சித்திரத்தைக் கண்டு பரிகாசம் செய்தோமே; அதை எவ்வளவு ஆர்வத்தோடும் ஆசையோடும் அவள் எழுதியிருப்பாள் என்று சிந்தித்தோமா? காலில் இடறிய தனத்தைக் கைவிட்ட கபோதிபோலல்லவா நான் ஆகிவிட்டேன்? நான் எவ்வளவு துரதிருஷ்டசாலி! இனிமேல் நான் எதற்காக வாழவேண்டும்? சித்திரக் கலைக்காகவா? – அதை வளர்க்கும் சக்தி? ஆமாம்! அது என்னிடம் இல்லை. அது ரகு ராமனிடம் போய்ச் சிக்கிக்கொண்டுவிட்டது. அவன் பாக்கியசாலி.' அவன் இரவு முழுவதும் தூங்காமல் இருக்க இந்தக் கேள்விகளும், விடையும், குழப்பமும் போதாவா?

மறுநாள் பொழுது விடிந்தது. மன நிம்மதிக்காகச் சித்திரம் எழுதலாமென்று உட்கார்ந்தான். ராஜி எழுதிய சித்திரம் சுவரில் மாட்டியிருந்தது. ஒரு சவக்குழி – சமாதி: அதன்மீது ஒரு பெண் சாய்ந்து அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தாள். கீழே 'சாந்தி' என்று எழுதியிருந்தது. – இதுதான் ராஜி எழுதிய சித்திரம்.

மணி தூரிகையை வர்ணத்தில் தோய்த்துக் குறையாயிருந்த ஒரு படத்தைப் பூர்த்தி செய்யப்போகும்பொழுது அப்படம் அவன் கண்ணில் பட்டது. அவன் கன்னங்களில் அவனை அறியாமல் நீர்

பெருகிற்று; கை நடுங்கிற்று. "சாந்தி" என்று ஒரு முறை சொன்னான். "சாந்தி எங்கே? சமாதியிலா?" சட்டென்று எழுந்து அப்படத்தைத் திருப்பி வைத்தான். மறுபடியும் எழுத ஆரம்பித்தான். அப்படத்தைத் திருப்பி வைத்ததனால் உலகமே மாறிவிட்டதா? மனம் நிம்மதி யடைந்துவிட்டதா? அவன் மனத் திரையில் பரிகாச நகை செய்துகொண்டிருக்கும் ராஜியின் உருவத்தை அழிக்க முடியுமா? திரைபோட்டு மறைக்க முடியுமா? அவன் மனக்குமுப்பத்தோடு கறுப்பு வர்ணத்தில் கோலத் தோய்த்து அவன் எழுதிக்கொண்டிருந்த சித்திர சுந்தரியின் முகத் தில் வைத்தான். எந்த மூட்டாள்தான் இப்படி ஓர் அழகான படத்தை வீணடிப்பான். அவன் பைத்தியம் பிடித்தவன்போல் திரும்பி உட்கார்ந்தான். அவன் கையிலிருந்த தூரிகை நழுவிக் கீழே விழுந்தது. 'சாந்தி எங்கே?' – 'சவக்குழியில்தான்' என்ற கேள்வியையும் விடையையும் அவன் மனமே சொல்லிக் கொண்டது.

"கோபு"

தீபாவளி எப்படி? 12

ஜானகி அம்மாள் தன் வீட்டு வாசலைப் பெருக்கிக் கோலம் போட்டுக்கொண் டிருந்தபோது தெருக்கோடியிலிருந்து ஒரு குடுகுடுப்பைக்காரன் தன் முழுப் பலத்துடன் 'குடு குடு' என்று அடித்துக்கொண்டு அவள் பக்கத்தில் வந்து நின்று, "நல்ல காலம் வருகுது! நல்ல காலம் பொறக்குது!" என்று கூவினான். ஜானகி அம்மாள் கோலம் போட்டுக்கொண் டிருந்தவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து, "வாடா அப்பா, வா! உனக்காகத்தான் பெருக்கி மெழுகிக் கோலம் போடறேன், வா" என்றாள்.

"ஆண்டவரு கொடுப்பாரு. குடு, குடு! புது மனுசங்க ரயில்லே வந்து இறங்கறாங்க. குடு குடு! வூட்டிலே கண்ணாலம் வறது; அம்மாவுக்குச் சந்தோசம் பொங்கிக்கிட்டு வரப் போறது!"

"போடா, கட்டேலே போறவனே! எப்போடா பொழுது விடியப்போறதுன்னு காத்திண்டிருந்தயோ?" என்று கேட்டுக் கொண்டே அம்மாள் உள்ளே சென்றுவிட்டாள்.

ஆனால் அவன் நின்ற இடத்தைவிட்டு நகராமல் என்னவெல் லாமோ பிதற்றிக்கொண்டிருந்தான். "ஏய், யாரடி உள்ளே! வாசல்லே அவனை நிறுத்தி வைச்சுண்டு எதுக்காக வேடிக்கை பார்த்திண்டிருக்கே? ரெண்டு அரிசியைப் போட்டுப் போகச்சொல் றதுதானே!" என்று ஐயர் கேட்டதும் ஜானகியம்மாள் ஒரு படியில் அரிசியைக் கொண்டுவந்து அவர் எதிரில் வைத்து,

"இந்தாங்கோ, அந்தக் கடங்காரனுக்கு நீங்களே கொண்டு தொலையுங்கோ. நான் போனு அது இதுன்னு என்னெல்லாமோ சொல்றான். எனக்குப் போனது வந்தது எல்லாம் ஞாபகத்துக்கு வந்து வேதனைப்படுத்தறது" என்றாள்.

அகோரமையர் போட்ட அரிசியைப் பணிவாக வாங்கிக் கொண்டு, "ஐயருக்குத் தீவிளி வருகுது; ஊட்டிலே சந்தோசமாக் கொண்டாடப் போறாரு" என்று சொல்லிக் கொண்டே சென்றான்.

"ஒரு வழியாத் தொலஞ்சானேன்னே கடங்காரன்? காலங் கார்த்தாலே வந்துட்டான், எனக்கு வரங் கொடுக்கறதுக்கு!" என்று அவனே வைதுவிட்டு ஜானகி யம்மாள் குடத்தை எடுத்துக் கொண்டு ஸ்நானத்திற்குச் சென்றுவிட்டாள்.

ஜானகி அம்மாளுக்கு இருந்ததெல்லாம் ஒரே ஒரு குறைதான். பகவான் அவளுக்குச் சொத்து சுதந்தரத்தைக் குறைக்கவில்லை. அகோரமையர் அந்தக் கிராமத்தில் பெரிய மிராசுதார். மிகவும் செட்டாகவும், தப்புத் தண்டா வழிகளில் இறங்காமலும் குடித்தனத்தை நடத்திவந்ததால், சொத்துக் கரையாமல் வளர்ந்து வந்தது. அவர்களுக்குப் புத்திர சந்தானத்திற்கும் குறைச்சல் இல்லை. பஞ்ச பாண்டவர்களைப்போல் ஐந்து பிள்ளைகளுக்குத் தாயாகும் பாக்கியத்தைப் பெற்றிருந்தாள் ஜானகியம்மாள். சில சமயம் அகோரமையர் அவளை வேடிக்கையாகக் 'குந்திதேவி' என்றுகூட அழைப்பதுண்டு. பிள்ளைகளில் ஒருவனுவது சோடை போகவில்லை. எல்லாப் பையன்களும் தலையெடுத்துச் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

மலை மலையாக ஐந்து பிள்ளைகள் இருந்து என்ன பயன்? தாய்க்கு இருந்த ஓர் அற்ப ஆசையை நிறைவேற்றி வைக்க ஒருவனுவது முன் வரவில்லை. ஜானகி அம்மாளுக்கு இந்த உலகத்தில் இருந்தது ஒரே ஆசைதான். அதாவது, தான் பிள்ளை யகத்துச் சம்பந்தியாகப் போய்ப் பெண் வீட்டில் அட்டகாசம் செய்து பார்க்கவேண்டும். பிள்ளையின் தலைத்தீபாவளிக்குத் தானும் தன் புருஷரும் ஒரு தடவையாவது போய் இருந்து பெண் வீட்டாரின் கண்களில் விரலைக் கொடுத்து ஆட்டவேண்டும். — ஜானகி யம்மாவின் மனோரதங்கள் இவ்வளவுதான். முதல் நான்கு பிள்ளைகளும் தாயின் இந்த மனோரதத்தை நிறைவேற்றி வைக்காமல் ஏமாற்றிவிட்டார்கள்.

"மூத்தது மோழை" என்று மூத்த பிள்ளை சினுவை வீட்டில் எல்லாரும் அடிக்கடி பட்டம் சூட்டிக் கூப்பிடுவதுண்டு. ஏனென்றால், குடும்ப விஷயத்தில் அவன் தலையிடுவதே இல்லை. எது எப்படிப் போனாலும் அவனுக்குக் கவலையில்லை. அவன் காரியம் ஒரு குறைவும் இல்லாமல் நடந்தால் சரிதான். ஆனால் கல்யாணமானதும் அவனுடைய மோழைக் குணங்கள் ஆச்சரியமாக மறைந்துவிட்டன. மாமனாரிடமிருந்து தலைத் தீபாவளிக்கு

வரும்படி அழைத்ததும் ஏதோ ஒரு வேகம் வந்தவன்போல் யாரைக்கண்டாலும் சிறி விழத் தொடங்கினன். "ஏண்டா, சீனு, நானும் வரலாமென்று பார்க்கிறேண்டா!" என்று ஜானகியம்மாள் ஸம்மனில்லாமல் ஆஜரானபோது, "ஏன், ஒரு நாய்க் குட்டியையும் அழைச்சிண்டு வா" என்று சிறினன்.

"அவன் எக்கேடு கெட்டுத் தொலையட்டும்; ஊமை ஊரைக் கெடுக்கும், பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்" என்று சீனுவைப் பற்றிய தன் அபிப்பிராயத்தைப் பெருமூச்சோடு அடிக்கடி சொல்லித் தனது துக்கத்தை அவள் மறைத்துக்கொண்டாள்.

இளைய பெருமாள், அதாவது இரண்டாவது பிள்ளை ராமு, வீட்டிற்கே மைனராக விளங்கினன். எல்லாருமே அவனை 'மைனர்' என்றுதான் அழைப்பார்கள். ஜானகிக்கோ ராமுவிடம் ஒரு தனிப் பிரியம் உண்டு. அவனும் தாயிடம் அன்பாகத்தான் இருந்தான். உலகமெல்லாம் தேடி ராமுவுக்குக் கடைசியாக ஒரு பெரிய உத்தியோகஸ்தரின் பெண் மனைவியாகக் கிடைத்தாள். ஜானகியம்மாள் இரண்டாவது சம்பந்தியைப்பற்றித் தினம் ஒரு தடவையாவது புகழ்ச்சியாகப் பேசாமல் இருக்கமாட்டாள். "மூத்த காளைதான் அப்படி ஓரே குதியாக் குதிச்சுட்டுப் போயிடுத்து. எங்க ராமுவின் தலைத் தீபாவளிக்கு எனக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கப் போகிறது! பாரு" என்று அடிக்கடிச் சொல்லிப் பெருமையடித்துக் கொண்டிருந்தாள்.

தீபாவளிக்கு ஒரு மாதத்திற்குமுன் ஓர் உத்தியோகம் காலி இருப்பதாகவும் உடனே கிளம்பி வரும்படியாகவும் ராமுவுக்கு மாமனாரிடமிருந்து தகவல் கிடைத்தது. அவன் அன்றே ஊருக்குக் கிளம்பிவிட்டான். வண்டியில் ஏறும் சமயத்தில் ஜானகியம்மாள் அவனிடம் வந்து, "கடுதாசு போடு; தீபாவளிக்கு ரெண்டு நாள் முந்தியே உங்கப்பாவை அழைச்சிண்டு வரேன்" என்றாள். "உம்" என்று போன 'மைனர் ராமு' தீபாவளிக்குப் பிறகுதான் போய்ச் சேர்ந்த விவரத்திற்குப் பெற்றோர்களுக்குக் கடிதம் எழுதினன். கடிதம் கிடைத்ததும், "பெண்டாட்டியாத்தே, பெரியாத்தே, பிழைக்கும் வழியைச் சொல்லாத்தேன்னு மாமனாரத்தையே சுத்த ஆரம்பிச்சுட்டாரோல்லியோ மைனர் ராமஸ்வாமி ஐயர்?" என்று ஜானகியம்மாள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள்.

கிட்டுவுக்கு வீட்டில் 'அப்பா பிள்ளை' என்று பெயர். ஏனென்றால் தகப்பனாருக்கு அடங்கி அவர் சொற்படி நடப்பான். அவனுக்கு அவரே பார்த்து ஒரு கிராமாந்தரப் பெண்ணை மணம் செய்துவைத்தார். கல்யாணத்தின் போதே கிட்டுவின் தலைத் தீபாவளிக்குத் தான் நிச்சயமாகப் போகலாம் என்று தீர்மானித்திருந்தாள் ஜானகியம்மாள். ஆனால் புரட்டாசி மாதக் கடைசியில் அகோரமையருக்கு உடம்பு சரியில்லாமல் படுக்கையில் போட்டு விட்டது. ஜானகியம்மாளுக்கு அவருக்குச் சுசுருஷை செய்யத்தான்

பொழுது சரியாயிருந்தது. மாமனரிடமிருந்து அழைப்பு வந்ததும் கிட்டு, "தகப்பனரின் உடம்பு அசௌகரியத்தால் இந்த வருஷம் எனக்குத் தீபாவளிக்கு வரச் சௌகரியப்படாது" என்று பதில் எழுதி அகோரமையரிடம் அதைக் காட்டியபோது, அவர், "சீ சீ! நன்ரு யிராது. அம்மாவை அழைத்துக்கொண்டு நீ போயிட்டு வா" என்ரூர்.

தீபாவளிக்கு முதல்நாள் கிட்டு கிளம்புவதாக இருந்தான். அன்று ஜானகியம்மாளும் கிட்டுவும் வண்டியில் ஏறும் சமயத்தில் சகுனம் சரியாயில்லாததைக் கிட்டு கவனித்துவிட்டான். உடனே வண்டியில் ஏறி உட்கார்ந்திருந்த ஜானகியைக் கீழே இறக்கி, "அம்மா, சகுனம் சரியாயில்லே. எனக்கு என்னவோ மனசு சரியாகப் பட வில்லே. அப்பா உடம்புதான் நமக்குப் பெரிசு. நீ அப்பாவைப் பார்த்துக்கொள்ள வேணும். நான் மட்டும் போய்விட்டு நாளை மறுநாள் கிளம்பி ஓடி வந்து விடுகிறேன்" என்ரூன்.

"நீ ஓடி வரவேண்டாமடா, அப்பா. மெதுவாக இருந்து ஆற அமர விருந்து சாப்பிட்டு வா!" என்று குறையோடு பதிலளித்து விட்டு அவள் உள்ளே போய்விட்டாள்.

"ஏன் நீ போகலேயா?" என்ரூர் அகோரமையர். "அப்பா பிள்ளையோன்னே! சகுனம் சரியாயில்லேயாம் அந்த ரிஷிக்கு! நீ அப்பாவைப் பார்த்துக்கொள் என்று உத்தரவு போட்டுவிட்டுப் போயிருக்கார் மகரிஷி" என்ரூர்.

பாலு ஜானகியின் நான்காவது பிள்ளை. அவனுக்கு வட்க்கு ஜில்லா ஒன்றில் பெண் நிச்சயம் செய்தபோது ஜானகி, "வடக்கே யெல்லாம் அவ்வளவாக மரியாதை தெரியாது. என்னமோ எதிர் ஜாமீனைக் கண்ணை மூடிண்டு கொடுக்கிரூன்னு எதை வேணுமானலும் இழுத்துப்போட்டுக் கட்டிப்பிடறதா என்ன?" என்று அகோரமையரிடம் கேட்டாள். ஆனல் பாலு பெண்ணைப் பார்த்துவிட்டு வந்தபின், "அவளைத் தவிர வேறு யாரையும் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டேன்" என்று பிடிவாதம் பிடித்த தனல் கல்யாணம் நிச்சயமாகி நடந்துவிட்டது. ஆனல் அவள் எதிர்பார்த்ததுபோல் கல்யாணத்தின்போது கொஞ்சங் கூட மரியாதை இல்லாமல் பெண்வீட்டார் பழகிக் கொண்டார்கள். கல்யாணத்தன்று ஜானகியம்மாள் மற்ற ஸ்திரீகளுடன் சம்பந்தி அதிகாரம் செய்துகொண்டு சாப்பிட்டபோது, யாரோ ஒரு பெண் பந்தியில் இருந்தபடியே,

"கந்தாடை சம்பந்தி கறுப்பில்மிக ஜோரு
அவருடைய பெண்ஜாதி அழகான மங்கு
அவளுடைய முகத்திலே மலேபோல மூக்கு
கண்டத்தைத் தின்னுமாம் அலேபோல நாக்கு
ஏரிக் கலுங்குபோல் இழிவான பல்லு
பாதாள பிலம்போலே பயமான கண்ணு
சம்பந்தி அம்மாளுக்கு ஒருகாது மூளி

மற்றொரு காதிலே பித்தளை வாளி
யாருக்கும் அடங்காத அவபத்ர 'காளி
அகப்பட்டால் சாப்பிடுவள் ஒருகூடை போளி
ஏலேலோ! ஏல லேலோ!"

என்று சம்பந்திப் பாட்டை ஓடமெட்டில் ஏற்றி இறக்கிப் பாடி முடித்ததும் கையை உதறிக்கொண்டு இளம்பிவிட்டாள் ஜானகியம்மாள். அன்று இரவே ஊருக்குத் திரும்பிவிட்டாள். அதுமுதல் அந்த மாட்டுப் பெண்ணைப்பற்றியோ அவளுடைய பெற்றோர்களைப்பற்றியோ அவள் பேசுவதே இல்லை. அதனால் பாலுவுடன் தலைத் தீபாவளிக்கு அவள் போகாததில் ஆச்சரியம் இல்லை.

கடைக்குட்டி மணிக்கு இந்த வருஷந்தான் கல்யாணம் நடந்தது. அவனுடைய தலைத் தீபாவளியைப்பற்றிய கவலைதான் இப்போது ஜானகியம்மாளைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தது. மணியோ டெல்லியில் உத்தியோகத்தில் இருக்கிறான். அவனுக்கு வரச் சௌகரியப்படுமோ, படாதோ ?

"அடுத்த பிள்ளையின் தீபாவளிக்குப் பார்த்துக்கொள்ளலாம்" என்று இத்தனை தடவையாகத் தள்ளிப்போட்டது போல் இந்தத் தடவை தள்ளமுடியாது. ஏனென்றால், 'ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு' என்று மணியின் தலைத் தீபாவளி ஒன்றுதான் பாக்கி. ஆதலால் ஜானகியம்மாளுக்கு அவள் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள மணியின் தலைத் தீபாவளி ஒன்றுதான் மணியான சந்தர்ப்பம். எப்படியும் இந்தத் தடவை ஏமாறக் கூடாது என்ற தீர்மானத்துடன், தாழ்வாரத்தில் நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்த அகோரமையரின் எதிரில் போய் அம்மாள் உட்கார்ந்துகொண்டாள்.

"என்னடி ஒரு மாதிரியாயிருக்கே! குடுகுடுப்பாண்டி ஏதாவது காலம்பரக் குருட்டு ஜோசியம் சொல்லி உன் மனசைக் குழப்பி விட்டிருக்காளே?" என்று அகோரமையர் அவள் வாயைக் கிளறினார்.

"எனக்கு என்ன குருட்டு ஜோசியம் வேண்டிக்கிடக்கு? உங்களுக்குத்தான் என்னமோ தீபாவளி கொண்டாடப் போறேளுன்னு வரங்கொடுத்துட்டுப் போயிருக்கான். சரி, தீபாவளியோ இன்னும் பத்து நாள் கூட இல்லை. இந்தச் சம்பந்திப் பிராமணன் ஏன் ஒரு கடுதாசு கூடப் போடலை? மணி கிட்டே யிருந்து நேத்திக்குக் கடுதாசு வந்துதே, என்ன எழுதியிருந்தான்? ஒண்ணுமே எங்கிட்டே சொல்றதில்லே..."

"ஏதாவது இருந்தால்தானே சொல்றதுக்கு? தலைத்தீபாவளிக்கு வரதாக உன் பிள்ளை எழுதி யிருக்கான். அவ்வளவு தான்."

"இங்கே ஏதுக்காக அவன் வரான்? இங்கே என்ன வச்சிருக்கு? தலைத் தீபாவளின்னு மாமனார் ராத்துக்குப் போறது,

பொண்டாட்டி கிட்டே பல்லே இளிக்கிறது, அப்பா அம்மாவை அன்னியிலேயிருந்து மறந்துடறது, இதுதானே உங்க பிள்ளைகளுக்குத் தொழில்? நானுந்தான் எத்தனே வருஷமாச் சொல்றேன், ஒரு தடவையாவது, ஒரு பிள்ளேயோடு தீபாவளிக்குப் போயிட்டு வரணும்னு! உம்..."

"உன்னேயும் கூட்டிண்டு போறதுக்குத்தான் மணி டெல்லியிலிருந்து நேரே இங்கே வரான். மற்றப் பிள்ளேகளேப்போல் நம்ம மணி இருக்கமாட்டான். கவலேப்படாமல் இரு."

"எரிகிற கொள்ளியிலே எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி? நானும் அப்படித்தான் எண்ணிண்டிருந்தேன். மூத்தவன் நாலு பேரும் நாமத்தைச் சாத்திட்டானுக. இவன் ஒருத்தன்தான் என்னே அப்படியே கோபுரத்திலே தூக்கி வச்சுண்டு கூத்தாடப் போருனுக்கும்! என்னமோ போங்கோ. அவன் என்ன நிலேமையிலே இருக்காணே? பெரிய உத்தியோகம் கிடைச்சுடுத்துன்னு தலேகால் புரியல்லேயோ என்னமோ? அதோடு அவன் மாமனூர் வேறே துப்பட்டி கலெக்டர் பண்ணூர். இவ்வளவு அந்தஸ்துலே அவன் எங்கே இந்தக் கிழத்தை லக்ஷ்யம் செய்யப் போருன்?"

"எல்லாத்தையும் நீயே சொல்லிவிடு. கட்டாயம் அழைச்சுண்டு போவான். மணியே ஒரு அலாதி தினுசு. அவன்களுக்கும் மணிக்கும் ரொம்ப வித்தியாசமுண்டு."

"என்னமோ, பார்ப்பம். மணி எப்போதுமே ஒரு கொரளி. நீங்க என்னமோ அவனே ஒசத்திண்டிருக்கேளே; உங்க எண்ணத்தையுந்தான் நான் கெடுப்பானேன்? எனக்கு மட்டும் நம்பிக்கை இல்லே. 'ஆண்டி பெத்தது அஞ்சும் குரங்கு' என்கிற கதையாய்த்தான் முடியுமோ என்னமோ?"

"சரி, ஏதாவது அஸ்து சொல்லிண்டிருக்காதே. நடக்கிறதை யெல்லாம் பொறுத்துண்டு பாரு" என்று அகோரமையர் ஜானகியம்மாளேச் சமாதானப்படுத்தி வைத்தார்.

"வந்து சேருகிறேன்" என்று எழுதியிருந்தபடியே மணி ஊருக்கு வந்து சேர்ந்தான். பிள்ளே வந்த சந்தோஷத்தில் ஜானகியம்மாளுக்குத் தலேகால் புரியவில்லே. மணியும் தாயுடன் பழைய கொரளித்தனத்தையெல்லாம் விட்டுவிட்டுப் பழகினுன். இது ஜானகிக்குக் கொஞ்சம் நம்பிக்கையைக் கொடுத்தது. ஒழிந்த நேரத்தில் மணியிடம் வந்து தீபாவளியின்போது மாமனூர் வீட்டில் அப்படி நடந்துகொள்ளவேணும், இப்படி நடந்து கொள்ளவேணும் என்றெல்லாம் கூறினுள். மணியும் தாய் சொல்வதற்கெல்லாம் தலேயை ஆட்டி வந்தான்.

தீபாவளிக்கு முதல் நாள் காலேயிலேயே ஆகாரத்தை முடித்துக்கொண்டு பத்து மணி வண்டிக்கு மணி, ஜானகியம்மாள், அகோரமையர் மூவரும் கிளம்பினுர்கள். ஸ்டேஷன் பிளாட்பாரத்துக்குச் சென்றதும் ஜானகியம்மாளுக்குச் சந்தோஷம் தாங்க

முடியவில்லை. வடக்கே யிருந்தும், தெற்கே யிருந்தும் வரும் வண்டிகள் அங்கேதான் சந்திப்பது வழக்கம்.

வடக்குப் பக்கத்திலிருந்து வரும் வண்டி வந்து நின்றதும் யாரோ, "மணி, மணி" என்று கூப்பிட்ட சத்தம் மட்டுந்தான் ஜானகியின் காதுகளில் விழுந்தது. மணி மாயமாய் மறைந்ததைத் தாய் தகப்பனார் இருவரும் கவனிக்கவில்லை.

சற்று நேரத்துக்கெல்லாம் தூரத்தில் மணியும் அவன் மாமனார் டிபுடி கலெக்டர் சுந்தரமூர்த்தி ஐயரும் வருவதை ஜானகியம்மாள் கவனித்தாள். "ஏன்னா, அதோ பார்த்தேளா? சம்பந்திப் பிராமணனும் மணியும் வராளே? பிராமணன் நம்மை எதிர் கொண்டு அழைக்க வரார் போலேயிருக்கு. அதெல்லாம், மணி மாமனார் மரியாதை விதரணை எல்லாம் தெரிஞ்சவர்தான்..." என்று சொல்லி முடிப்பதற்குள் அவர்கள் சமீபத்தில் வந்து விட்டார்கள்.

"வாருங்கோ, சம்பந்தி" என்று அகோரமையர் வாய்நிறையச் சொல்லி வரவேற்றார். சம்பந்தியும் பதிலுக்கு, "நேத்தே வந்து இருக்கணும்; இன்னிக்கு அநியாயக் கூட்டம். பொம்மனாட்டிகளே அழைச்சுண்டு வரத்துக்குள்ளே பிராணன்போய்ப் பிராணன் வந்துடுத்து. சரி, கிளம்பலாமே; அவாள்ளாம் தனியா நிக்கறா. எங்கே, சம்பந்தியம்மா கூட ஸ்டேஷனுக்கு வந்திருக்காப்பலே யிருக்கே?" என்றார்.

ஜானகியம்மாளுக்கு இடி விழுந்தது போலாகிவிட்டது. அகோரமையருக்கும் ஒன்றுமே புரியவில்லை. வந்தவர்களே வரவேற்காமல் என்ன செய்கிறது? எல்லாரும் திரும்பி ஊருக்கு வந்து சேர்ந்தார்கள்.

அன்று மாலை மணி மாட்டுக்கொட்டிலில் தனியாக இருந்த போது அகோரமையர் மணியைத் தொடர்ந்து சென்று, "என்னடா இது?" என்று கேட்டார்.

"டில்லியிலிருந்து மாமனாருக்கு நான்தான் கடிதம் எழுதியிருந்தேன். 'முடியுமானால் எங்கள் ஊருக்கு வந்து எங்கள் வீட்டிலேயே இந்த வருஷம் தீபாவளியை நடத்தலாம்' என்று எழுதியிருந்தேன். அதற்கு நான் கிளம்பும் வரை பதில் வரவில்லை. அதனால்தான் ரெயிலுக்கு நாம் எல்லோருமாகக் கிளம்பினது. அவர்கள் வராவிட்டால் நாம் அங்கே போய்விடலாமென்று தீர்மானித்திருந்தேன். அவர்களே இங்கே வந்து விட்டார்கள்" என்றான்.

ஜானகியம்மாள் தீபாவளியன்று விடியற்காலையில் அகோரமையரைத் தனியாகக் கூப்பிட்டு, "நான் சொன்னது சரியாப் போயிடுத்தா? 'ஆண்டி பெத்தது அஞ்சும் குரங்கு' தானே இப்போ?" என்று கேட்கும்போது வாசலில் குடுகுடுப்பைக்காரன் கூவும் சப்தம் இன்றைக்கும் கேட்டது!

பச்சைச் சேலை

13

"நான் வீட்டிலே வந்து நுழையறப்போ உள்ளே பேச்சுக் குரல் கேட்டுதே, செல்லி! ஆர் வந்திருந்தாங்க?" என்று மனோவியைக் கேட்ட வண்ணம் அவள் கொடுத்த மோரைப் பருகத் தொடங்கினான் கந்தப்பன்.

"மோரைக் குடியுங்க, சொல்றேன்" என்று கொஞ்சலாகச் சொல்லி அவன் காலடியில் உட்கார்ந்தாள் அவள். பிறகு ஏதோ எண்ணியவள்போல், "ஆமாம், உங்களுக்கு எந்தக் கலர் ரொம்பப் பிடிக்கும், சொல்லுங்க?" என்று கேட்ட வண்ணம் செல்லி எழுந்து உள்ளே சென்று புடவைப் பொட்டலம் ஒன்றுடன் திரும்பினாள்.

"அடே! எவ்வளவு அழகான பாசிப் பச்சைச் சேலை! உன் அம்மாவா வாங்கி அனுப்பிச்சிருக்கா?" என்றான் அவன்.

"ஆமாம்! போன மாசந்தானே ஒண்ணு அனுப்பிச்சாங்க? அதுக்குள்ளற ஆசையைப் பாரு! இந்தப் புடவை 25 ரூபாய்க்குக் கொடுக்கிறேன் என்கிறாங்க, வாங்கலாமா?"

"அப்படியானால் தேவலை! யார் அப்படி மலிவாய்க் கொடுக்கறது?"

"அடுத்த வீட்டிலே குடி வந்திருக்காங்களே. உங்களுக்குக் கூடத் தெரியுமாமே, அவள் மகன் முருகனை? போன மாசம் அவன் பட்டாளத்திலே சேர்ந்தூட்டானுமே?"

"உம். புதுப் புடவையை ஏன் அவங்க விக்கிறாங்களாம்?"

"கலர் அந்தம்மாவுக்குப் புடிக்கலியாம். 'உன் செவப்பு ஒடம்புக்கு ஏத்த கலர்' என்கிறாங்க" என்று கூறிச் சிறிது வெட்கத்தால் தலைகுனிந்தாள் செல்லி.

"பட்டாளத்திலே சேர்ந்த முருகன் தாயார் கொடுத்த பச்சைப் புடவையா?" என்று கேட்டுச் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான் கந்தப்பன்.

"ஏன், இந்தப் புடவைக்கு என்னங்க?" என்று வினவினாள் அவள்.

"நல்லாத்தான் இருக்கு, செல்லி! ஆனால் நமக்கு வாணும் அது! நான் வேறே வாங்கித் தரேன் உனக்கு!"

"இருவத்தஞ்சு ரூபாய்ப் புடவை வலுவிலே பதினஞ்சுக்கு வரது. வாங்கித் தர இஷ்டமில்லே. கடையிலே போய் வேறே வாங்கித் தாராராம், வாங்கி!" என்று முனகினாள் செல்லி.

"அந்தப் புடவை வேண்டாங்கறேன்! புத்தியில்லே உனக்கு?" என்று அதட்டினான் அவன் சிறிது உஷ்ணமாகவே.

என்றைக்கும் தன்னை ஒரு வார்த்தை கடினமாய்ச் சொல்லாத தன் புருஷன் - அதுவும் தான் முழுகாமல் இருந்த சமயம் - திடீ சென்று இப்படிக் கோபித்துக்கொண்டது அவள் மனத்திற்குப் பெரும் துயர் அளித்தது. ஸேட் கடையில் 35 ரூபாய் சம்பளத்தில் இருக்கும் அவன் இருபத்தைந்து ரூபாய்க்கு எப்படித் தனக்குப் புடைவை வாங்க முடியும்? - இதே யோசனையில் படுக்கையில் புரண்டாள் அவள்.

இரவு மணி பன்னிரண்டிருக்கும். மெள்ளத் தன் புருஷன் எழுந்து வெளியே செல்வதைக் கண்டு அவள் பதறினாள். 'கேவலம் ஒரு புடைவைக்காக அவர் மனசைப் புண்படுத்தி விட்டோமே! எங்கே போகிறாரோ என்னவோ!' என எண்ணி மெள்ளப் பின்தொடர்ந்தாள். பக்கத்துத் தெருவிலுள்ள ஸேட் கடைக்கல்லவா போகிறார் அவர்? ஏன்? பார்க்கலாமென்று தெருவில் ஒதுங்கி நின்றாள்.

எங்கும் நிசப்தம். ஒன்றிரண்டு நாய்களின் ஊளையும், காற்றில் அசையும் இலைகளின் சப்தமும் அந்த நிசப்தத்தைக் கலைத்தன. ஸேட்டின் கடைப் பூட்டைத் தன் கணவன் மறு சாவி போட்டுத் திறப்பதைக் கண்ட செல்விக்கு மூச்சு நின்றுவிடும் போல் இருந்தது. "ஐயோ! எனக்காகத் திருடவுமா துணிந்து விட்டார்!" என்ற கேள்வி எழுந்தது மனத்தில். அடுத்த நிமிஷம் "ஐயையோ! வேண்டாம்! வேண்டாம்! பச்சைப் புடைவை வேண்டாம்!" என்று அலறிவிட்டாள்.

"செல்வி! செல்வி! ஏன் இப்படி அலறுகிறே! செல்வி! ஏன் இப்படி நடுங்குகிறது உன் உடம்பு? இதோ நான் பக்கத்தில்தானே இருக்கிறேன்! கண்ணைத் திறந்து பாரேன்!" என்று அன்புடன் கூறி அவள் கைகளை நடுங்காதபடி பிடித்துக்கொண்டான் கந்தப்பன்.

"இங்கேதானே இருக்கீங்க? எங்கேயும் போகலியே!" என்று கூறிக் குருடிபோல் அவனைத் தடவிப் பார்த்தாள் அவள். அவனும் எழுந்து உட்கார்ந்துகொண்டான்.

"அப்பா! என்ன பயங்கரமான கனவு!" என்று எழுந்து உட்கார்ந்துகொண்டாள்.

* * * *

இரண்டு மாத காலமாயிற்று. புடைவைப் பேச்சே நின்றிருந்தது. "தை மாசம் பிறந்தால் உங்கம்மா வந்து உன்னை இட்டுக்கிண்டு போயிடுவா! இல்லையா, செல்வி?" என்றான் கந்தப்பன்.

"ஆமாம்! பின்னே?" என்றாள் அவள்.

"வருகிற பொங்கலுக்கு மூணு ஆசாமியாச்சு" என்றான் பெருமிதத்துடன்.

"அதை யார் கண்டாங்க?"

"ஏன்? சட்டை, குல்லாவெல்லாங்கூடத் தச்சு வச்சுப் பிட்டு..."

"சரிதான்! ஆனால் நான் வருகிறது மறு பிறவிதானே?"

"பயித்தியம்! பயமுறுத்துகிறதைப் பார்" என்று அவன் வெளிப்படப் பேசினான்.

எனினும், கந்தப்பனுக்கு மனத்தில் நடுக்கந்தான். செல்லியைப் போல மனைவி கிடைக்கப் புண்ணியம் செய்திருக்க வேணும். ஸேட் கடையில் வேலை கிடைக்க ஜாமீன் வேண்டி யிருந்தது. செல்லி அப்பொழுது எவ்வளவு சந்தோஷத்துடன் தன் அட்டிகையை அவனிடம் கழற்றிக் கொடுத்தாள்! அதைப் பற்றி என்றுவது பிரஸ்தாபித்திருப்பாளா அவனிடம்? அவனுக்குத்தான் அவள் கேட்டதை வாங்கிக் கொடுக்க யோக்கியதை யில்லை. தீபாவளிக்கு ஸேட் ஒரு சன்மானமும் அளிக்கவில்லை அவனுக்கு. 'முருகனின் தாய் அந்தப் பச்சைப் புடைவையைச் சும்மாக் கொடுத்தாலும் வேண்டாம் அது, செல்லிக்கு. பொங்கலுக் காவது அதே போல் ஒரு புடைவை வாங்க ஒத்தாசை செய்ய மாட்டாரா?' என்று எண்ணி மனம் புழுங்கினான் கந்தப்பன்.

பொங்கலன்று சாயங்காலம், "செல்லி...இ...ஈ! செல்லி!" என்று அழைத்தவண்ணம் தூக்கமாட்டாமல் சாமான்களைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான் அவன். "சோறு வடிச்சுண்டிருக்கேன். இதோ வரேன்" என்று பதில் சப்தம் போட்டாள் அவள். "இதோ பார்!" என்று பச்சைச் சேலையைப் பிரித்து அவளுக்குக் காண்பித்தான், அவளுடைய குதூகலம் நிறைந்த முகத்தை ஆசையுடன் காண ஆவல் கொண்டு. ஆனால் செல்லி, 'எனக்கு வேண்டியதில்லை' என்பது போல் தலை யாட்டினாள்.

"ஏன் செல்லி! என்மேல் கோபமா?" என்று கேட்டான் ஏக்கம் நிறைந்த குரலில்.

"பணம் கொடுத்துத்தானே வாங்கினீங்க?" என்று கேட்டாள் செல்லி ஒரு விம்மலுடன்.

"என்ன நெனைச்சே? பணம் கொடுக்காமே எங்கனாச்சியும் தூக்கி வந்தூட்டேன்னு? உன் புருசன் திருட்டுப் பயலுன்னு நெனைச்சே? இதோ பார், ஸேட் கொடுத்த பொங்கல் பணத்தில் மிச்சங்கூட இருக்கு" என்று ஓர் ஐந்து ரூபாய் நோட்டை வீசினான் அவளிடம். "இல்லே! இல்லே! அப்படி நெனைக்கல்லே ....." என்று ஏதோ குழறினாள் அவள்.

செல்லி ஊருக்குப் போய் மூன்றாவது மாதம். கையில் உள்ள தந்தியைப் படித்துப் படித்து ஆனந்தத்தில் ஆழ்ந்தான் கந்தப்பன்.

"அப்பாடா! இனிமேல் அவளிடம் விஷயத்தைச் சொல்லலாம். பயமில்லே...பெண் குழந்தையாமே? செல்வியைப்போல் இருக்குதோ! என்னைப்போல் நாகப் பழமாய் ஜொலிக்குதோ" என்று தானுகவே பேசிப் பூரித்தான்.

மூன்றுவது மாதமே திரும்பி விட்டாள் செல்வி. குழந்தை என்னவோ கந்தப்பன் சந்தேகித்தபடி நாவற்பழ வர்ணந்தான். இருந்தாலும் அவன் கண்ணுக்கு அது வெகு அழகாகவே தோன்றியது. "இந்த மாதிரி கறுப்பாய் இருக்கிறதற்குப் பிள்ளையாய் இருந்தால் கிருஷ்ணன்னு பேர் வைக்கலாம். இப்போ என்ன செய்யறது?" என்றான் அவன்.

"பேர் வைச்சாச்சு, திரௌபதின்னு" என்றுரைத்து, "ஆமாம். முன்னே ஒரு நாள் சண்டை போட்டீங்களே, அந்தப் பச்சைப் புடைவைக்கு....." என்று ஆரம்பித்தாள்.

"நானே சொல்லிப்பிடறேன்" என்றான் அவன் இடை மறித்து. செல்வி பொறுமையுடன் கேட்டாள்.

"முருகனுக்கு அவன் பொண்டாட்டி மேலே உசிரு. அவளுக்கு ஆசைப்பட்டு அதை வாங்கியாந்தான். புடவையைப் பிரிச்சு எடுத்துக் கட்டறத்துக்குள்ளே மாரடைச்சுச் செத்தூட்டா அவள். அந்தத் துக்கத்திலேயே அவன் பட்டாளம் போயிட்டான். அவன் தாயார் மெள்ள அந்தப் புடவையை உங்கிட்ட விக்கப் பார்த்தாள். பெண்டாட்டிக்குப் புடவை வாங்கின கதை யெல்லாம் எங்கிட்டச் சொல்லி முருகன் அழுதிருக்கான். இரு உசிருக்காரி கிட்ட அதை யெல்லாம் சொல்லிப் பயமுறுத்த வேண்டாமின்னுதான் நான் உங்கிட்ட சொல்லல்லே. அதை நீ கட்டியிருந்தால் கட்டாயம் இப்போ உசிரோடு, குழந்தை திரௌபதியோடே இங்கே கல்லுக் கணக்காய்க் குந்தியிருக்க மாட்டே!" என்றான்.

இதைக் கேட்டுச் செல்லி விழுந்து விழுந்து சிரித்தாள்.

"இதென்ன பரிகாசம், செல்வி?"

"அது இல்லே. அதே புடவையைத்தானே கடைசியிலே நீங்களும் வாங்கி யாந்தீங்க?"

"ஆர் சொன்னு! எங்க ஸேட்டுக் கடையிலே இந்த மாதிரி ஒண்ணே ஒண்ணு இருந்தது. அஞ்சு ரூபாய் தள்ளி இருபது ரூபாய்க்குக் கொடுத்தாரு" என்றான் சிறிது கோபத்துடன் கந்தப்பன்.

"நான் சொன்னு நம்பிக்கைப்படுமா? நான் சேலையை வேண்டாமின்னு சொன்ன மறு நாளே முருகன் தாயார் அதை வாங்கின ஸேட்டிடமே பதினஞ்சு ரூபாய்க்குக் கொடுத்துட்டதாகச் சொன்னுள். நீங்க வேலே செய்யும் ஸேட்டுக் கிட்டத்தான் வாங்கினுளாம் அதை. அங்கே அப்புறம் அந்தத் தினுஸுப்

புடவை வராததனுலே ஸேட் வாங்கிக் கொண்டானும். அதைத் தான் நீங்க எடுத்திருக்கீங்க!"

"ஆச்சரியமாய் இருக்கே! சரி! எடு அந்தப் புடவையை. இனிமேல் இங்கே அது வாணும்."

"ஐயய்யோ! இப்ப என்கிட்ட இல்லியே அது!"

"எங்கே, தொலைச்சுட்டாயா?"

"இல்லே. நான் ஊருக்கு வர ஒரு வாரம் இருக்கறப்போ, என் தங்கை வந்தா; ஒரு நாள் அந்தச் சேலையைக் கட்டிப் பார்த்தா. அண்ணைக்கு அவளுக்கு ஒரு லாட்டரிப் பரிசு விழுந்து டுத்து. 'நல்ல அதிருஷ்டச் சேலை அக்கா இது! எனக்குக் குடுத்துடு' என்று வாங்கிண்டு போயிட்டா அதை!"

"வேடிக்கையாத்தான் இருக்கு! ஒரே சேலை...அதனுல் ஒருத்தருக்கு அதிருஷ்டம், இன்னொருத்தருக்குத் துரதிருஷ்டமா?" என்று மூக்கில் கை வைத்துக்கொண்டான் கந்தப்பன்.

வெ. சந்தானம்

மைதிலியின் கலக்கம் 14

எங்கேயாவது மேளம் கொட்டினுல் போதும், உடனே என் தாய்க்கு வேலை ஓடாது; என்னைப் பார்ப்பாள், பெருமூச்சு விடுவாள், ஏங்குவாள். என்னிடம் பேச்சுக் கொடுக்கவும் வருவாள்; நான் முகத்தை வைத்துக்கொள்ளும் தினுசிலிருந்து பேசாமல் போய் விடுவாள்.

கல்யாணம் செய்துகொள்வதை நான் தட்டிக் கழித்ததற்குக் காரணம் கல்யாணம் செய்துகொள்ள வேண்டாம் என்ற வைராக்கியமல்ல. எல்லோரையும் போலப் பூச்சி மாதிரி நாமும் விவாகம் செய்துகொள்ளக் கூடாது; அதனுல் ஒரு பெரிய காரியத்தைச் சாதித்ததாக இருக்கவேண்டும்; திக்கற்ற பெண் ணைக் கல்யாணம் செய்துகொண்டு ஒரு குடும்பத்தின் கவலையைத் தீர்த்துவைக்க வேண்டும்; இல்லாவிடில் – ஒரு வாலிபன் மனத்தில் தோன்றும் உத்ஸாகமான அல்லது மிகவும் உயரிய எண்ணங்க ளெல்லாம் என் மனத்தில் இருந்தனவென்று வைத்துக்கொள் ளுங்களேன்.

நான் இல்லாத சமயங்களில் வீடு தடபுடல் படுமாம். "பிள்ளை"யைப் பற்றி விசாரிக்கும் "பெண்" வீட்டாருக்கு அம்மா பேட்டியளிப்பாளாம். இதெல்லாம் அடுத்த வீட்டு மைதிலியின் அண்ணு மூலம் நான் அறிந்தேன்.

மைதிலியின் அண்ணு என்று சொன்னே னல்லவா! அண்ணுவைத் தூர ஒதுக்கி வைத்துவிடுங்கள். இந்த மைதிலி

இருக்கிறாளே, அவள் மிகவும் சௌந்தர்யமான பெண். நாவல் எழுதுபவர்களெல்லாம் அழகிய மங்கையைக் கொடிக்கு ஒப்பிட்டு, மான்வரை இழுத்துவந்து என்னென்னவாறோ வர்ணிக்கின்றனர். அந்தச் சக்தியில் நூறில் ஒரு பங்கு எனக்கு இருந்தால் இந்த ஏடுகள் அந்தநீயும் மைதிலியின் அழகுப் புராணமாகச் செய்து விடுவேன்.

அவள் காதில் வைரத் தோடு போட்டுக் கொண்டிருப்பாள். அதுகூட எதற்கு? அவள் நேரே வந்தாளானால் இரண்டு வைர தேவதைகள் நம்முன் நின்று டால் வீசித் தகதகவென்றாடுவது போல இருக்கும். அவ்வளவு மினுமினுப்பான தேகம். இளமையும் எழிலும் கொழிக்கும் கட்டழகி! எவ்வளவோ பேர் விலையுயர்ந்த பட்டுப் புடைவைகள் கட்டிக் கொள்கின்றனர்; பூ வைத்துக் கொள்கின்றனர்; நகைகள் போட்டுக் கொள்கின்றனர்? ஆனால் அவர்கள் சம்பந்தப்பட்டமட்டில் புடைவைகள்தாம் அழகாக இருக்கின்றன; பூத்தான் வாசனையாக இருக்கிறது; நகை அணிந்து கொள்பவர்களின் அழகுப்பூண் அழகைக் கொலை செய்து விடுகிறது.

ஆனால் எங்கள் மைதிலியிடம் எல்லாரும் ஒதுக்கித் தள்ளும் சாதாரணப் புடைவையைக் கொடுத்து உடுத்துக்கொள்ளச் சொல்லிப் பாருங்கள்; புடைவை அழகு பெறும். வெறும் பவள மாலையைப் போடுங்கள்; உலகத்தில் பவளங்களின் மதிப்பே உயர்ந்துவிடும். சென்னையில் விற்கிறார்களே கனகாம்பரப்பூ, அதைக் கொண்டு வந்துதான் தலையில் வையுங்களேன்; அதை அவள் சூட்டிக்கொண்டால் உலகத்தில் உள்ள நறுமலர் யாவும் அந்தப் பூவிடம் பொறுமை கொள்ளும். எவ்வளவோ பெண்களுக்குத்தான் நெற்றி இருக்கிறது. ஆனால் மைதிலிக்குப் பிரம்மன் சமைத்த நெற்றி, நிலகம் அரசு செலுத்த என்று பிரத்தியேகமாகப் படைத்த நெற்றி. குங்குமம் இட்டுக்கொண்டு வந்து விட்டால், அவள் முகத்தில் உள்ள தேஜஸ் காவியம் பொழியும்.

மைதிலியை 12-வயசு முதல் நான் அறிவேன். அடக்கமான பெண். என் தாயிடம் ஏதாவது காரியமாக வந்தால் கூட, என்னைப் பார்க்க நேரிட்டால், "என்ன மாமா?" என்று சிரித்துக் கொண்டே போய் விடுவாள். அவள் அண்ணன் பார்த்தசாரதியுடன் பேசச் சில சமயங்களில் நானும் மைதிலியின் வீட்டுக்குச் செல்வதுண்டு. அப்போது மைதிலி அவன் அருகில் உட்கார்ந்து கொண்டு படித்துக் கொண்டிருப்பாள். "வாருங்கள்" என்று மரியாதையாக அழைத்துவிட்டு உள்ளே போய்விடுவாள். 12 வயசு முதல் அவளும் அழகும் படிப்படியாக வளர்ந்ததைக் கண்டிருக்கிறேன்.

15-ஆவது வயசில் அவள் ஸ்கூல்பைனல் பரீக்ஷையில் தேறினாள். பல புத்தகங்களை வாசித்தவள், சிந்திக்கும் சக்தியும்

அவளுக்கு உண்டு என்று அவள் அண்ணன் என்னிடம் கூறியிருக்கிறான்.

பரீக்ஷையில் தேறிய வருஷம் அவளுக்குக் கல்யாணம் செய்து விடவேண்டுமென்று பெற்றோர்கள் தீர்மானித்தனர். பல இடங்களில் வரன் பார்த்தனர். கடைசியில் தூர பந்து ஒருவருடைய குமாரன் வராகசாமிக்குக் கொடுப்பதென்று நிச்சயமாயிற்று. அவனும் நானும் ஒரே காலேஜில் வாசித்தவர்கள். தங்கமான பையன். தன் காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பான். நல்ல கிருகஸ்தனுக்கு வேண்டிய குணங்கள் நிரம்பியவன். இவைகளை நானும் மைதிலியின் பெற்றோர்களுக்குச் சொன்னேன். அவனுக்குக் கொடுப்பதில் எனக்குள்ள சந்தோஷத்தை – மைதிலியின் முன்கூடப் – பலதடவை சொன்னேன். நிச்சயம் செய்த தினத்தன்று நானும் கூடச் சென்றேன்.

ஒரு நாள் கல்யாணம்; முதல் நாளிலிருந்து கட்டுச் சாதக் கூடை வைக்கும் வரையில் ஒரு நிமிஷங்கூட உட்காராமல் சகல காரியங்களையும் நானும் பார்த்தசாரதியும் செய்தோம். கண்ணன் மைதிலிக்கு வராகசாமி போன்ற ஒரு நல்ல பையன் கிடைத்ததில் அவ்வளவு சந்தோஷம் எனக்கு. "மாமா எவ்வளவு காரியம் செய்தார்! அந்த மாதிரி ஆசையாக நமக்கு இந்த உலகத்தில் யாரும் செய்யமாட்டார்கள்" என்று மைதிலியே சொல்லிச் சந்தோஷப்பட்டாளாம். இதை என்னிடம் பார்த்தசாரதி சொன்ன போது எனக்குப் பரம திருப்தி ஏற்பட்டது.

கல்யாணம் ஒன்றும் குறைவில்லாமல் நடந்தது. மாப்பிள்ளை தான் மறுநாள் காலையிலே பம்பாய்க்குப் போய்விட்டான். அவன் இரண்டொரு நாள் தங்கியிருந்து மைதிலியுடன் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டுப் போயிருக்கலாம். இந்த விஷயத்தில் எல்லோருக்கும் கொஞ்சம் வருத்தந்தான். "லீவு இல்லை; பிறகு வருகிறேன்" என்று அவன் போய்விட்டான். எல்லோரும் மைதிலியைக் கேலி செய்து கொண்டிருந்தபோது, "கல்யாண தடபுடலில் நான் அவரைச் சரியாகக் கூடப் பார்க்கவில்லை" என்று ஒப்புக்கொண்டாளாம்.

அப்படிப் போன வராகசாமி போனவன்தான். ஒன்றரை மாதம் கழித்து ஒரு நாள் திடீரென்று ஒரு தந்தி வந்தது. இனி வராகசாமியை நாங்கள் காணமுடியாது. உயிர் நீத்தான். சாதாரண ஜுரந்தான்; ஆனல் அல்பாயுசு!

உலகம் "சே" என்று எனக்கு வெறுத்துவிட்டது. என்னவோ எனக்கு நேர்ந்த துக்கம்போல் அழுது புரண்டேன். வாழ்க்கை, தெய்வம், அதன் செயல்கள் ஆகியவைபற்றி என் மனசில் பல கோரமான எண்ணங்களெல்லாம் தோன்றின. மைதிலி வீட்டுக்கு நான் போவதே இல்லை.

மைதிலியை மனச் சாந்தியுடன் இருக்கச் செய்வதற்காக அம்மா அவளை அடிக்கடி என் வீட்டுக்கு அழைத்து வருவாள்.

அடுத்த வீடுதானே? தோட்டத்துப் பக்கமாகப் போக்குவரத்து இருக்கும். அப்போதெல்லாம் மைதிலியைப் பார்க்கமாட்டேன். ஓடி ஒளிந்து கொள்வேன். அவளும் அப்படித்தான். எனக்குத் துக்கம் காரணம். அவளுக்குத் தான் பாக்கியவதி இல்லை என்ற வெட்கம் காரணம்.

* * * *

தான் மணந்து கொண்டவனை அவள் சரியாகக் கூடப் பார்க்க வில்லை. ஆனால் மைதிலி விதவை! 15 வயசு! மடிசஞ்சிகள் வீட்டில் இருந்துவிட்டால் கேட்கவேண்டுமா?

அடுத்த வீட்டில் நடக்கும் அமர்க்களங்களை அம்மா தினசரி கதை கதையாகச் சொல்வாள். என் மனம் துடிக்கும். சில சமயங் களில் மைதிலி செய்வதும், கூறுவதும் சரியெனத் தோன்றும்.

"அம்மா! அந்த வீட்டில் இருக்கும் மடிசஞ்சிகள் தலைமயிரை எடுக்கவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்யும். பாவம், சின்னப் பெண்ணடி" என்று நான் வருத்தப்படுவேன்.

"ஆமாண்டா! அவள் பாட்டி மைதிலியின் தலை மயிரை எடுக்க வேண்டும் என்றாளாம். அம்மாவுக்கும், அப்பாவுக்கும் சம்மதமில்லை. உற்றார் உறவினர் ஏச்சுக்குப் பயப்படுகிறார்கள். பார்த்தசாரதி மட்டும் இல்லாவிடில் அந்தச் சின்னப் பெண்ணை அலங்கோலப்படுத்தி யிருப்பார்கள்" என்றாள் அம்மா.

பார்த்தசாரதி என்ன செய்தான் தெரியுமா? பாட்டியை மூட்டை கட்டி ஊருக்கு அனுப்பிவிட்டான்.

பார்த்தசாரதிக்கு ஓர் அத்தை உண்டு. அவள் சின்ன வயசில் கணவனை இழந்தவள். ஒரு நாளைக்கு அவள் மைதிலியை அழ வைத்துவிட்டாள். 'அவர்' மாண்ட பத்தாவது நாள் அந்த அத் தையை ஆற்றுக்கு அழைத்துக்கொண்டு போனார்களாம். அவள் அண்ணை, கழுத்தில் ஒரு புதுப் புண்டவையைப் போட்டுவிட்டு, "இனிமேல் உனக்குப் பட்டுப் புடவை கிடையாதடி!" என்று தலையிலடித்துக் கொண்டானும். இதையெல்லாம் அந்தப் புண்ணியவதி மிகப் பெருமையாக மைதிலியிடம் சொல்லி, மைதிலி இன்னும் கொஞ்ச நாள் கழித்தாவது தலை மயிரை எடுக்கா விடில் உலகமே அவர்கள் வீட்டு வாசலில் வந்து சிரிக்குமென்று பிரமாதமாகக் கூறினாள்.

மயில் ராவணன் தன் உயிரை வண்டுகளிடம் வைத்திருந் தான் என்பது கதை. ஆனால், மைதிலியிடம் தன் உயிரைச் சாரதி வைத்திருந்தான் என்பது நான் பல வருஷங்களாக என் கண்ணால் பிரத்தியக்ஷமாகக் கண்டுவரும் விஷயம். மைதிலி அறையில் அழுது கொண்டிருந்தாளாம். அதைப் பார்த்துப் பார்த்தசாரதியும் அழுது கொண்டே என்னிடம் வந்தான். "மைதிலி அழுகிறாள்" என்று சொன்னதைத் தவிர வேறு எதுவும் சொல்லவில்லை.

மறுநாள் அம்மா சொன்னாள்: "ரங்கா, இன்று மைதிலி இங்கு வந்து கதறினாள். 'மாமி, எல்லாம் என்னமோ சொப்பனம் போல் இருக்கிறது. நான் வாசலில் தலைகாட்டக் கூடாதாம். குங்குமம் இட்டுக்கொள்ளக் கூடாதாம். நல்ல புடவை கட்டிக் கொள்ளக்கூடாதாம். நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்? எனக்கேன் இந்தத் தண்டனை?' என்று அழுதாளப்பா!" என்று கூறினாள்.

இன்னொரு நாள் பார்த்தசாரதி வந்தான். "ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதடா? மைதிலியை அழைத்துக்கொண்டு எங்கேயாவது ஓடிவிடலாமா என்று தோன்றுகிறது" என்றான்.

"ஏன்?"

"நேற்றுக் காலேஜிலிருந்து வந்தேன். மைதிலி ஒரு புதுப் பட்டுப் புடவையை உடுத்துக்கொண்டு நகைகளையெல்லாம் போட்டுக்கொண்டு கண்ணாடி முன் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். திடீரென்று நான் நுழைந்தேன். 'ஐயோ! அண்ணா' என்று பதறிக் கூவி அப்படியே பக்கத்திலிருந்த சோபாவில் சாய்ந்துவிட்டாள். நான் உடனே அறையிலிருந்து வெளியே வந்துவிட்டேன். இன்னும் இதுவரை மைதிலி என் முன் வரவில்லை, பேசவில்லை" என்றான்.

நான் மௌனமாக இருந்தேன்.

"பாவம்! ஏதோ ஆசையில் செய்துவிட்டாள். அண்ணாதானே பார்த்தான்? எதற்காகப் பயப்படவேண்டும்? அந்தப் பச்சைக் குழந்தையிடம் வீட்டில் உள்ளோர் அவ்வளவு தூரத்துக்கு ஏன் கடுமையாக இருக்கிறார்கள்?" என்று கூறி வானத்தை நோக்கியவண்ணம் அரைமணி நேரம் உட்கார்ந்திருந்துவிட்டுப் போய்விட்டான்.

ஒரு நாள் மாலை ஆபீசிலிருந்து வந்தவுடன், "ஏ ரங்கா, நான் வேண்டுமென்று செய்யவில்லையப்பா. உங்கள் மைதிலியை அவமானப்படுத்தவேணும் என்று நான் நினைக்கமாட்டேன் என்பது உனக்குத் தெரியும். சுமங்கலி வந்தால் வெற்றிலை பாக்குக் கொடுக்காமல் எப்படியடா அனுப்புவது?" என்று என் தாய் நீண்ட பீடிகை போட்டாள்.

பாவிகள்! மைதிலி மனத்தைப் புண்படுத்தும் கைங்கர்யத்தில் என் தாயும் சேர்ந்து கொண்டிருக்கிறாள் என்றுதான் எனக்குத் தோன்றியது. கோபத்துடன், "என்ன நடந்தது?" என்று கேட்டேன்.

"கோடியகத்துப் பார்வதி வந்தாள். நானும் மைதிலியும் பல்லாங்குழி ஆடிக்கொண்டிருந்தோம். 'ஏண்டியம்மா ஒரு வருஷம் வீட்டு வாசலைத் தாண்டக் கூடாதே' என்று பார்வதி கேட்டுவிட்டாள். பாவம்! மைதிலியின் முகம் சுண்டிவிட்டது" என்றாள் அம்மா.

"ஆமாம், அதெல்லாம் சம்பிரதாயம் என்று நீங்கள் வைத்திருக்கிறபோது நாலுபேர் சொல்லத்தான் சொல்லுவார்கள். இதற்காகவாவது அவள் உங்கள் கண்களில் படாமல் எங்கேயாவது ஒழியக்கூடாதோ" என்று கத்தினேன் நான்.

"அதுகூட அவளை வருத்தவில்லை. பார்வதி போகிறேன் என்று எழுந்தாள். மைதிலியும் கிளம்பினாள். 'பார்வதி, இரு; மஞ்சள், வெற்றிலைபாக்கு வாங்கிக்கொண்டு போ' என்றேன். பார்வதிக்கு மட்டும் கொடுத்தேன். மைதிலி பெருமூச்சுடன் சடக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு பைத்தியம் பிடித்தவளைப் போல ஓடிவிட்டாள். எனக்குக் கஷ்டமாக இருந்தது. வந்த சுமங்கிலிக்கு வெற்றிலை பாக்குக் கொடுக்காமல் எப்படி அனுப்புவது?" என்றாள் என் தாய்.

"நீயேதான் கொடுக்கக் கூடாதே" என்றேன் நான். பல வருஷங்களுக்கு முன்பே என் தகப்பனார் காலமாகிவிட்டார்.

"அவளையே எடுத்துக்கொள்ளச் சொன்னேன். எனக்குத் தெரியாதா என்ன?" என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டாள் என் தாய்.

பூக்காரனுக்குக் கூட மைதிலி விதவை யென்று தெரிந்து விட்டது. அந்தத் தடிப்பயல் தினசரி தட்டு நிறையப் பூக்கொண்டு வந்து மைதிலி வாங்கித்தானாக வேண்டும் என்று பிடிவாதம் செய்கிறவன், இப்போதெல்லாம் பேசாமல் போகிறான்.

நேற்று மைதிலி மாடியில் நின்றுகொண்டிருந்தாள். பயந்து கொண்டேதான் உலகத்தை அவள் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். பூக்காரன் மைதிலியைப் பார்த்துச் சோகம் கலந்த சிரிப்பொன்று சிரித்துவிட்டு போய்க் கொண்டிருந்தான். தெருக் கோடியில் அவன் தலை மறையும் மட்டும் மைதிலியும் அவனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். இதை நானும் கவனித்தேன். நான் பார்ப்பதை அகஸ்மாத்தாகப் பார்த்த மைதிலி வெட்கமும் துக்கமும் பொங்கத் தலையைக் குனிந்து கொண்டு ஆவேசம் பிடித்தவளைப்போலத் திடுதிடுவென்று படிகளில் இறங்கிக் கீழே ஓடினாள்.

இந்தச் சம்பவம் நடந்து நாலைந்து தினங்கள் இருக்கும். அன்று எனக்கு லீவு. அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். மைதிலி வீட்டுக்குச் சென்ற என் தாய் வீட்டுக்குள் நுழைந்தாள்.

நான் உட்கார்ந்திருந்த உள் பக்கம் தன் தலையைக் காட்டி என்னைப் பார்த்து, "இதெல்லாம் ஆகுமோ?" என்று கூறிக் கொண்டே பரபரவென்று உள்ளே நுழைந்தாள்.

"எதெல்லாம் ஆகாதாம்?" என்று கேட்டுக்கொண்டே நானும் எழுந்து உள்ளே சென்றேன்.

காபி போடுவதற்காக அடுப்பை மூட்டிக்கொண்டே, "உங்க மைதிலிதான்! என்னமோ சமத்து என்று நினைத்துக்

கொண்டிருந்தேன். என்ன செய்தாள் தெரியுமா? குங்குமப் பொட்டு இட்டுக்கொண்டு பூவை நிறையத் தலையில் வைத்துக் கொண்டு கண்ணுடி முன் நின்று அழகு பார்த்துக் கொண்டாளாம்" என்றாள் அம்மா.

"அதனால் எந்தக் குடி முழுகிப் போயிடுத்தாம்? குழந்தை திடீரென்று ஆசைகளை உதறி எறிய முடியவில்லை" என்று அம்மாவுக்குத் தூபம் போட்டேன்.

அம்மா தன் தலையில் "லொட்" என்று ஓர் அடி அடித்துக் கொண்டாள்.

"நல்ல ஆசை! நல்ல குழந்தை! என்னமோ தெரியாமல் செய்துவிட்டேன் என்று சொன்னால் சரி. அவள் கற்ற வித்தையெல்லாம் தாயாரிடமே காட்டுகிறாள். கக்ஷி பேசுகிறாளாம். வாக்குவாதம் செய்கிறாளாம். அம்புஜம் மாமி தலையில் அடித்துக்கொள்கிறாள். ஏன் கூடாது என்று மைதிலி அதட்டுகிறாளாம்" என்று கூறிக்கொண்டே அடுப்பை விசிறினாள் அம்மா.

"திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியினால் இன்பக் கனவு கண்டுகொண்டிருந்த மனம் முறிந்துபோய் மூளையைக் குழப்பி விட்டிருக்கும். ஆசைகளை அடக்க முடியவில்லை. வெறுத்த மனம் கலக்கத்தில் இளம்புகிறது" என்று அம்மாவிடம் தந்தி பாஷையில் மனோதத்துவ சாஸ்திரம் பேசினேன். கருங்கல்மீது எய்த கூர்மையான அம்புகளின் கதியை அடைந்தது என் பேச்சு.

"போ! போ! நீதான் உன் மைதிலியை மெச்சிக்கொள்ள வேண்டும்" என்றாள்.

அறைக்குத் திரும்பினேன். அப்போது சாரதியும் வந்து சேர்ந்தான். இரு கைகளிலும் தலையைத் தாங்கிக்கொண்டு குனிந்தவண்ணம் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். பெருமூச்சு விட்டான். ஜ்வரம் வந்தவன் உடம்பு எப்படி ஓர் இடத்தில் கிடை கொள்ளாமல் இருக்குமோ அந்தமாதிரி தவித்தான்.

"ரங்கா, தாங்க முடியவில்லையடா?"

"என்னடா செய்வது? கஷ்டகாலம்!"

"இன்று வீட்டில் பெரிய ரகளை."

"என்னவாம்?"

"குங்குமம் இட்டுக்கொண்டு விட்டாள். அம்மா திட்டினாள். வாக்குவாதம்; சண்டைகூட."

"மைதிலி என்ன சொன்னாள்?"

"பூவும் குங்குமமும் பெண்களுக்கு என ஏற்பட்டனவாம். அப்படித்தான் அவள் செய்வாளாம்."

"பூவும் குங்குமமும் ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்ய ஏற்பட்டவை என்று சொல்லிப் பார்ப்பதுதானே?"

"எல்லாம் சொல்லியாச்சடா! குங்குமம் சுமங்கிலியின் சின்னம், அதனாலேதான் அதற்கு அவ்வளவு விசேஷம் என்று அப்பாகூடச் சற்றுக் கடுமையாகக் கூறினாராம். பூ வைத்துக் கொள்ளவும், குங்குமம் இட்டுக்கொள்ளவும் பெண்ணுக்கு தனக்கு உரிமையுண்டு என்று பதில் சொன்னாளாம்."

"பைத்தியந்தான் பிடித்துவிட்டது! அப்பாவை எதிர்த்து அவள் பேசியதே கிடையாதே."

"ஆமாம்! சதா சர்வகாலமும் இதே பிதற்றல், மூன்று நாளாக. அவளுக்குச் சித்தம் சரியாக இல்லை. சொல்லிக் கொள்ளாமல் ஓடிப்போகிறேன்."

"இரண்டு பைத்தியங்கள்."

"வழியே இல்லை."

நான் என்ன பதில் சொல்லமுடியும்? ஒரு வழியுண்டு; அதைச் செய்ய அவர்களுக்குத் தைரியம் உண்டா?

"மறு விவாகம் செய்வதுதான் வழி. தைர்யம் வேண்டும்" என்றேன் நான்.

பார்த்தசாரதி கண்கள் கலங்கின. "நடக்கிற காரியமா? எவன் செய்துகொள்வான்? இவர்கள் சம்மதிப்பார்களா?" என்று கூறிக்கொண்டே போய்விட்டான்.

மைதிலியின் பிரச்னை இப்போது முற்றிவிட்டது. அவள் உணர்ச்சியை யாரும் மதிக்கவில்லை. அசடு என்ற பெயர் வாங்கிக் கொண்டாள். என்ன இருந்தாலும் குங்குமம் இட்டுக்கொண்டது தப்புத்தான். ஆனால் அவள் அந்த உரிமை கேட்கிறாள். கம்பிகளுக்குப் பின் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் மைதிலி இருப்பது போல என் மனக்கண்முன் ஒரு சித்திரம் ஓடியது. கற்பனைதான். ஆனால் அது பொய்யாகவில்லை.

வெள்ளிக்கிழமை காலை நேரம்; மேற்கூறிய சம்பவங்கள் நடந்த இரண்டாவது நாள். அடுத்த வீட்டில் பேரிரைச்சல்; "ஐயோ!" என்று சாரதி அழும் குரல் கேட்டேன். ஓடினேன், என்ன கண்ணராவிக் காட்சி!

"இதைப் பார்த்துக்கொண்டு இன்னும் உயிரோடு இருக்கிறேனே!" என்று என் காலடியில் விழுந்து சாரதி கதறினாள். கை காட்டிய திசையைப் பார்த்தேன்.

ஒரு பீரோவின்மேல் மைதிலி ஏறி நின்றுகொண்டிருந்தாள். புதுப் புடைவை ஒன்றைத் தன்மீது கன்னாபின்னாவென்று போட்டுக்கொண்டிருந்தாள். இரண்டைக் கையில் வைத்துக் கொண்டிருந்தாள். நகைகளையெல்லாம் தாறுமாறாகப் போட்டுக் கொண்டிருந்தாள். வலது கையில் ஒரு குங்குமச் சிமிழ். அதை

உயரத் தூக்கிக் காட்டிக்கொண்டு நின்றிருந்தாள். தலைமயிர் வாரிவிடவில்லை; முகத்தில் வெறிக் களை!

"மைதிலி! இதென்னம்மா கூத்து? இறங்கி வா அம்மா" என்று கனிவுடன் கூறினேன்.

இடுப்பில் கையை வைத்துக்கொண்டு சிங்கம்போல என்னைக் கம்பீரமாக நிமிர்ந்து பார்த்து, "கத்தியால் குத்த இன்னொரு ஆளா? புல்லாக்குப் போட்டுவிடுவேன்! போ" என்றாள்.

"டேய்! இதெல்லாம் என் சொத்து! யாராவது கேட்டால் அவர்களை அப்படியே கடித்து விடுவேன்; பிடுங்க வந்தால் அப்படியே தொப்பென்று குதித்துச் செத்துப்போய் விடுவேன். உம்!" என்று உறுமினாள்.

என் மனம் பதறியது. 9-மணிக்குப் பீரோமீது ஏறியவளை 9½-மணி வரையில் கீழே இறக்க முடியவில்லை. பீரோவை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தால், குதிக்கிறேன் பார் என்று பீரோமீது நர்த்தனம் செய்கிறாள். பைத்தியம், கீழே குதித்து மண்டையை உடைத்துக் கொண்டாலும் உடைத்துக் கொள்ளும் என்று பயந்தோம். நயமாகச் சொல்லிப் பார்த்தோம்.

கடைசியில் சாரதியின் தந்தை மிரட்டலில் இறங்கிவிட்டார். "பேசாமல் இருக்கிறாயா? மண்டையை உடைக்கவா? பிரம்பை எடுடா!" என்று அதட்டினார்.

மைதிலியின் முகத்தில் கோரமான வெறிக்களை தோன்றியது.

"நீயா! விடுவேனா?" என்று சொல்லிக்கொண்டு தடாலென்று பூமியில் விழுந்தாள்.

"ஐயோ" என்று அலறிக்கொண்டே எல்லோரும் மைதிலியை அணுகினோம். மூர்ச்சையாகிக் கிடந்தாள். மண்டையில் ரத்தம் கசிந்தது.

பதினைந்து தினங்கள் கழிந்துவிட்டன. மைதிலியின் தலையில் ஏற்பட்ட காயங்கள் சொஸ்தமாகிக் கொண்டு வருகின்றன. இப்போது அவள் சமத்தாகிவிட்டாள். குங்கும உரிமைக் கோரிக்கையை விட்டுவிட்டாள்.

"வீளையாட்டுக்கு நேற்று ஒரு பட்டுப் புடைவையை அவளிடம் கொண்டுபோனேன். அதெல்லாம் என்னிடம் கொண்டுவராதே அண்ணா என்று கூறிவிட்டாள். சொன்னபடி கேட்கிறாள். பழைய சம்பவங்களை ஞாபகப்படுத்தினால், என்னமோ கெட்ட சொப்பனம், விடு என்கிறாள்" என்றான் சாரதி.

மைதிலி தோற்றாள்! ஆனால் நான் தீர்மானம் செய்துவிட்டேன். மைதிலியை விவாகம் செய்துகொள்வது என்பதே என் தீர்மானம். பெற்றோர்கள் ஒரு வேளை ஆட்சேபிக்கலாம். ஆனால் பார்த்தசாரதி என் கட்சியில்தான் இருப்பான். பிற்காலத்தில்

பெற்றோர் மனம், 'நடந்துபோன' காரியம் பற்றிச் சமாதான மாகிவிடும்.

மைதிலியிடம் செல்லவேண்டும். "என்ன மைதிலி சௌக்கியமா?" என்று நான் கேட்பேன். அவள் வெட்கத்தால் தலை குனிந்துகொண்டு, "சௌக்கியம்" என்பாள். "குங்குமம் இட்டுக் கொள்ளும் உரிமையை நான் உனக்கு அளிக்கிறேன்" என்று கூறிப் பார்த்தசாரதி, சூரியன் சாகூியாக அவள் நெற்றியில் குங்கு மத்தை இட்டுவிட வேண்டும். அதுதான் கல்யாணம். உடனே வேறு வீட்டில் பார்த்தசாரதி மைதிலியுடன் வசிப்பது என்று திட்டம் போட்டேன். அந்தத் திட்டத்தை இன்றே நிறைவேற்றி விடவேண்டும் என்று முடிவு செய்தேன்.

உள்ளே போனேன்; ஸ்வாமி அலமாரியில் இருந்த குங்குமச் சிமிழைப் பையில் போட்டுக்கொண்டேன்.

"சாரதி வா; மைதிலியைப் பார்க்கவேண்டும்" என்றேன்.

இருவரும் சென்றோம். "மைதிலிக்கு உடம்பு எப்படி இருக் கிறது?" என்று கேட்டுக்கொண்டே அவள் அறைக்குள் நுழைந் தேன். மைதிலி பதில் சொல்லவில்லை; புன்முறுவல் பூத்தாள். மெல்லிய மேகத்தினிடையே உள்ள சந்திரன்போலச் சோக ஒளி அவள் முகத்தில் வீசியது.

அருகில் நின்றேன். "மைதிலி! குங்குமம் இட்டுக்கொள்ளும் உரிமை கேட்டாயே; ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே பைக்குள் இருந்த குங்குமச் சிமிழை எடுத்தேன்.

அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது. "பரிகாசம் செய்யா தீர்கள், மாமா!" என்று கெஞ்சினாள்.

என்ன இது?

"அதற்காக விட்டுவிடுவோமா? அந்த உரிமையை நான் அளிக்கிறேன். இதோ உன் நெற்றியில் குங்குமம் இடுகிறேன். பார்த்தசாரதி....."

மைதிலி முகம் சிவந்தது. வருத்தத்தால் சுண்டியது. என் பேச்சை முடிக்கவில்லை. நான் சொன்னதையும் அவள் புரிந்து கொள்ள வில்லை.

"மாமா! எனக்குத் துக்கம், ஆசை முதலியவைகளெல்லாம் தாங்காமல் மனம் குழம்பி என்னவோ தப்புச் செய்துவிட்டேன். உங்கள் தங்கை மாதிரி என்னையும் கவனித்துக் கொள்ளுங்கள், மாமா! இனிமேல் பெரியவர்களாகிய நீங்களெல்லோரும் சொன்ன சொல்லை மீறமாட்டேன்" என்றாள் அவள். கண்ணீர் விட்டுக் கொண்டே தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

நானும், என் மனமும் சேர்ந்தாற்போலக் கிடு கிடு என்று பாதாளத்தில் விழுந்து கொண்டிருந்தோம். சமாளித்துக் கொண்டேன்.

"சாரதி; வா! போகலாம்" என்றேன். வீட்டுக்கு வந்து விட்டேன்.

குங்குமச் சிமிழைக் கையில் கொண்டுவந்து, மைதிலி அழும்படியாகக்கூட, நான் சற்றுக் கடுமையாகவே பரிகாசம் செய்துவிட்டதாகத்தான் அந்தச் சம்பவத்தைப்பற்றி இன்றுவரை சாரதி எண்ணிக் கொண்டிருக்கிறான். விதியின் பரிகாசம்!

ஆர். கே. சாமி

இரு ஜீவன்கள் 15

1

அன்று பௌர்ணமி. பரந்த மணற்பரப்பில் நிலவொளி தவழ்ந்து கொண்டிருந்தது. அதன் இடையில் கருநிறமுள்ள யமுனை, நிலவொளியைக் கண்டு மயங்கியவள்போல் சாந்தமாய்ச் சென்று கொண்டிருந்தாள். டில்லி நகரிலுள்ள ஆயிரக்கணக்கான கோரிகளும், ஸ்தூபிகளும் தலைதூக்கி நின்று அந்நிலவொளியைப் பிரதிபலிக்கச் செய்தன. சகல ஜீவராசிகளும் இயற்கையன்னையின் மடிமீது துயில்கொண்டிருந்தன.

எங்கும் அமைதி நிலவியிருக்கும் அவ்விரவில் ஓர் அழகிய இளைஞன் அந்த யமுனையின் மணற்பரப்பிலே அமர்ந்திருந்தான்; இயற்கையின் எழிலை அள்ளிப் பருகி இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தான். அவனுக்கு வயசு இருபத்தைந்து இருக்கலாம். புன்னகை தவழும் அழகிய முகமும், கருணை நிரம்பிய விசாலமான கண்களும் காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளத் தக்கனவாயிருந்தன. அவன் அணிந்திருந்த ஆடையும், உடைவாளும் அவன் அரசாங்கத்தில் ஏதோ நல்ல பதவியில் இருக்கிறானென்பதை எடுத்துக்காட்டின.

'ஜல் ஜல்' என்ற பாதசரத்தின் ஒலி கேட்டுத் திடுக்கிட்டான் அவன். அடுத்த கணம் அவனருகில் வந்துகொண்டிருந்தது ஒரு பெண் உருவம். நிலவொளியில் அவளது முகத்தைக் கண்ட இளைஞன் திடுக்கிட்டான்.

"யார், தாங்களா? இராஜகுமாரியா?..." என்று எழுந்து வணக்கம் செய்தான்.

"யார்? ராஜசிம்மனா? இந்த நள்ளிரவில் இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறீர்?"

"ஒன்றும் இல்லை; வழக்கம்போல் இப்படி உலாவுவதற்காக வந்தேன்.....இன்று அதிகநேரம் தாமதித்துவிட்டேன் போலிருக்கிறது.....ஆனால்.....தாங்கள்.....இந்த இரவில்?" என்றான் தயக்கத்துடன்.

"ஏன்? நான் இங்கே வந்தது உமக்கு ஆச்சரியமாய் இருக்கிறதோ? நீர் மாத்திரம் இந்த இயற்கையின் அழகை யெல்லாம் பார்த்து ரஸிக்க வேண்டுமோ? எனக்கு அதில் கொஞ்சங் கூட விட்டு வைக்கமாட்டீர் போலிருக்கிறதே..." என்று குறும்புப் புன்னகையுடன் கூறி அவன் முகத்தை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்தாள்.

நில வொளியில் ஜாஜ்வல்லியமான அழகுப் பிரதிமையாய்த் தோன்றும் ராஜகுமாரியைக் கண்ட ராஜசிம்மனின் கண்கள் கூசின. தன்னிடம் இவ்வள்வு ஹாஸ்யமாகப் பேசும் அந்த ராஜ குமாரியின் கருத்து என்ன? தன்னந் தனியே அந்த இடத்தில் அவள் ஏன் வந்தாள்? தான் இங்கு இருப்பதை அறிந்துதான் வந்திருக்கிறாளோ? — அவன் சிந்தனை படர்ந்தது. அவன் அதன் முடிவைக் காணவில்லை. அவன் கண்கள் சாந்தமாய் ஓடிக்கொண் டிருக்கும் யமுனையை நோக்கிக் கொண்டிருந்தன.

"தளகர்த்தரே, யுத்த களத்தில் எதிரிகளைத் துரத்தியடிக் கும் உமது வீரம் ஏன் இப்படிப் பதுங்கி ஒளிந்துகொண்டதோ? என்னைக் கண்டு ஏன் இப்படிப் பயப்படுகிறீர்? நான் என்ன புலியா, சிங்கமா? என்னுடன் பேசுவதற்குப் பிடிக்கவில்லையா?" என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனாள்.

தர்ம சங்கடமான நிலைமையில் தத்தளிக்கும் இளைஞன் சட்டென்று திரும்பினான். "மன்னிக்கவேண்டும், இளவரசியாரே! நான் தங்களைக் குறித்து அப்படியெல்லாம் நினைக்கவில்லை. தங்க ளிடம் பேசுவதில் எனக்கு யாதோர் ஆட்சேபமும் இல்லை" என்று கூறி வணங்கினான்.

"ராஜபுத்திர வீரரே, நீர் என்னை 'நீங்கள், தாங்கள்' என்று மரியாதை கொடுத்துப் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது உங்களுக்குப் பிடிக்க வில்லையா?" என்றாள் குறும்பு நகையுடன்.

"இல்லை; இல்லை. தங்களை நான் அவ்விதம் அழைப்பது தகாது. நான் தங்கள் அடிமை என்பதை மறந்தீர்கள் போலும்!"

"அடிமை என்னும் வார்த்தையை இனி என்னிடம் உபயோ கிக்கவேண்டாம். அது எனக்கு நரக வேதனையைக் கொடுக்கிறது. யாருக்கு யார் அடிமை? வீரரே, என் உள்ளத்தை நீர் நன்கு தெரிந்துகொள்ளவில்லை.....அதிருக்கட்டும். நாளைத் தினம் என் அந்தப்புரத்திற்கு வாரும். உம்மிடம் சில விஷயங்களைக் குறித்துப் பேச விரும்புகிறேன்.....தங்களுக்கு வருவதில் ஒன்றும் ஆட்சே பம் இல்லையே?" என்று கூறி, அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"இல்லை, இளவரசி. அவசியம் தங்கள் கட்டளைப்படியே வருகிறேன்."

"இப்பொழுதுதானே அந்தத் 'தாங்கள், நீங்கள்' எல்லாம் வேண்டாமென்று சொன்னேன்? மறுபடியும் என்னே வருத்து கிறீரே....."

"இல்லே.....இளவரசி.....இல்லே மும்தாஜ்.....நீ கூறியபடி அவசியம் வருவேன்....." என்று கூறிச் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

"ஆஹா! இப்போதுதான் என் மனம் குளிர்ந்தது. வீரரே, இந்த இரவில் என் உள்ளத்தில் எதிர்பாராத சந்தோஷத்தை நிரப் பினீர். நாளை உம் வரவை எதிர்பார்த்திருப்பேன்.....மறக்க வேண்டாம்....." என்று புன்முறுவலுடன் கொஞ்சிப் பேசிய வாறே அவ்விடத்தை விட்டு அகன்றாள். அவளுடைய ரூபத்திலும், பேச்சிலும் மயங்கிப்போன ராஜசிம்மன் அவள் மறையும்வரை யில் கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தான்.

டில்லி பாதுஷாவின் தளகர்த்தர்களில் ஒருவன் ராஜசிம்மன். தைரியத்திலும், வீரத்திலும், அழகிலும், பிற குணவொழுக் கத்திலும் அவனுக்கு அவன்தான் நிகர். பாதுஷா அவன்மீது அதிகமான பிரியமும் நம்பிக்கையும் வைத்திருந்தார். சந்தோஷ மாக இளம் மனைவி வாஸந்திகாவுடன் இன்ப வாழ்க்கை நடத்தி வந்துகொண்டிருந்தான். ஆனால் இன்று நடந்த சம்பவத்தால் அந்த இன்ப வாழ்க்கையில் இடி வீழ்ந்தது. அவன் அழகில் ஈடு பட்ட ஓர் ராஜகுமாரி அதை ஸ்வீகரித்துக்கொண்டாள். குண வொழுக்கத்தில் சிறந்த அவனது தூய உள்ளம், அழகே உருக் கொண்ட அந்த ராஜகுமாரியின்பால் இழுத்துச் செல்லப்பட்டது.

2

மறுநாள் மாலை: இளவரசி மும்தாஜ் அறையில், அவளைத் தவிர யாரும் இல்லை. சிறந்த வாசனைத் திரவியங்களின் நறுமணம் அவ்வறை முழுவதும் பரிணமித்திருந்தது. ஊதுவத்தி, மட்டிப் பால் இவைகளின் புகை அங்கே பலவிதமான கோலங்களைப் புனைந்து கொண்டிருந்தது. மும்தாஜ் மஞ்சத்தில் சாய்ந்தபடியே சிந்தனை லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். புன்னகையும், கோபமும் அவள் வதனத்தில் மாறி மாறித் தோன்றலாயின. அவைகளுடன் போட்டியிடுவதுபோல், அவள் தலையில் அணிந்து கொண்டிருந்த ரோஜாமலர்கள் பலபலவென்று மஞ்சத்தில் உதிர்ந் தன. சோகமும் வெறுப்பும் கலந்த பெருமூச்சு இடை யிடையே தோன்றி வியாபித்திருந்த அமைதியைக் குலைத்தது.

அடுத்த கணம் பணிப்பெண் மினாரி அங்கே தோன்றினாள். "பீகம், தளகர்த்தர் ராஜசிம்மர் வந்திருக்கிறார்.....தங்கள் ஆக்ஞை" என்றாள்.

மஞ்சத்தில் சாய்ந்திருந்த அவள் இதைக் கேட்டு எழுந்து நின்றாள். "போ! உடனே அழைத்துக்கொண்டு வருவதற்கென்ன?

கேட்டுக்கொண்டு நிற்கிறாய்? ஓடு. சீக்கிரம் அழைத்துவா" என்று பணிப்பெண்ணை விரட்டினாள். பாவம்! பணிப்பெண் பீதியுடன் அங்கிருந்து ஓடினாள்.

ராஜகுமாரியின் வதனம் மலர்ந்தது. மூன்பு படர்ந்திருந்த சோர்வும் சஞ்சலமும் எங்கே? ராஜசிம்மனை வரவேற்க அவள் உள்ளம் துடித்தது.

"உள்ளே வரலாமா?" என்று கேட்டுக்கொண்டே நுழைந்தான் ராஜசிம்மன்.

"ஆஹா! நீங்கள் இங்கே வருவதற்கு உத்தரவு ஒன்றும் வேண்டியதில்லையே! ஆமாம். ஏன் இவ்வளவு நேரம்?" என்ற வாறு அவன் கையைப் பிடித்து அழைத்து வந்து மஞ்சத்தில் இருத்தினாள்.

ராஜசிம்மன் ஒரே மயக்கத்தில் ஆழ்ந்தான். ராஜகுமாரியின் பேரெழிலை அப்படியே பருகி விடுவான்போல் பார்த்துப் பரவச மடைந்தான். நறுமணம் கமழும் அவ்வறையின் மங்கிய விளக் கொளியில் கனவுலகத்தில் இருப்பவன்போல் தள்ளாடினான். ராஜகுமாரி மும்தாஜ் இன்பக் கடலில் ஆழ்ந்துவிட்டாள். சில்லென்று இரண்டு கோப்பைகளில் ஷர்பத்தை நிரப்பினாள். இருவரும் அதைக் குடித்தார்கள். 'தங்களை மறந்து அன்னி யோன்னிய தம்பதிகள்போல் பழக ஆரம்பித்துவிட்டனர். அன்றைய இரவு அவர்கள் இருவருக்கும் இன்ப இரவாகக் கழிந்தது. ஆனால், அதே சமயத்தில் ஓர் அழகிய இளங்கை துக்கித்துப் புலம்புவது அவர்களுக்குத் தெரியுமா?

3

மனோகரமான அறை, சலவைக் கற்களால் அமைந்த சுவர்கள்; அவைகளின் மீது அழகான சித்திரங்கள்; தரையில் பளபளப்பான ரத்தினக் கம்பளம்; தந்தத்தினாலான மஞ்சம்; அதன்மீது அழகிய மகமல் மெத்தைத் திண்டுகள். விதவிதமான பாத்திரங்களில் நறுமணம் கமழும் மலர்க்கொத்துக்கள் அந்த அறை முழுவதையும் வாசனையால் நிரப்பின. இவைகளுக் கிடையே கந்தர்வ மங்கைபோல் படுத்திருந்தாள் வாஸந்திகா. அவள் கண்கள் சிவந்திருந்தன. அழுதழுது அவள் முகம் வீங்கி யிருந்தது. பக்கத்தில் ராஜசிம்மன் உட்கார்ந்து அவளைத் தேற்றிக் கொண்டிருந்தான்.

"வாஸந்திகா, ஏன் இப்படி என் மனசைத் துன்புறுத்து கிறாய்? நான் சந்தோஷமாயிருப்பது உனக்குப் பிடிக்க வில்லையா?.....இதோ என்னைப் பார்!" என்று கூறி அன்புடன் அவள் வதனத்தை நிமிர்த்தினான்.

'கணவனே தெய்வம்' என்று வழிபடும் பெண்களில் அவளும் ஒருத்தி. தனக்குத் துரோகம் செய்த கணவனை அப்பொழுதும்

அவள் தெய்வமெனவே நினைத்தாள். ஆதலின் அவன் அன்புடன் தேற்றியபொழுது உதாசினம் செய்யாது எழுந்து உட்கார்ந்தாள். இதுவரை மறைந்திருந்த புன்னகை அந்த எழில் வதனத்தில் மலர்ந்தது.

"ஆர்ய புத்திரா, தங்களையே இதுவரை நம்பியிருந்தேன். உலகத்தில் 'என்னைவிடப் பாக்கியசாலி யார்' என்று கூட இறுமாந்திருந்தேன். ஆனால்..." என்று சொல்லி நிறுத்திக்கொண்டாள். அதற்கு மேல் அவளால் பேசமுடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது.

"வாஸந்திகா, நீ என்ன சொல்லப்போகிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால், நான் என்ன செய்வேன்! அவளல்லவோ என்னை விரும்புகிறாள்? நான் புறக்கணித்தால் என் கதி என்ன வாகும் என்பதை நீ அறிவாயா? பாதுஷாவுக்குத் தெரிந்தால் மரண தண்டனை கிடைக்கும். அப்புறம் உன் கதி என்னவாவது? யோசித்துப் பார்.....ராஜகுமாரி என்மீது உண்மையிலேயே ஆசை வைத்திருக்கிறாள். என்னை மணக்கவும் பிரியப்படுகிறாள். உனக்குச் சம்மதமானால் நீயும் அவளும் ஒன்றாயிருக்கலாம். ஆனால் அவளிடம் விரோதித்துக்கொண்டால் நம் கதி அதோகதிதான்... வாஸந்திகா, நீ கொஞ்சம் மனம் இரங்கவேண்டும்" என்று இறைஞ்சினான்.

இதைக் கேட்ட வாஸந்திகா மிகவும் கோபமடைந்தாள். அவளுடைய சாந்தம், வணக்கம் எல்லாம் காற்றில் பறந்து விட்டன.

"நீங்கள் ஒரு ராஜபுத்திர வீரர். க்ஷத்திரிய வம்சத்தில் உதித்த நீங்கள் இவ்வளவு கோழைத்தனமாகப் பேசுவது எனக்கே வெட்கமாயிருக்கிறது. தேவலம் ஒரு பெண்! அவள் ராஜகுமாரியானால் என்ன? அவளுக்கென்ன அவ்வளவு சுதந்தரம்? கடவுளுக்குச் சத்புத்திரனாகத் தோன்றுவது உங்கள் கடமை. ராஜகுமாரிக்கு நீங்கள் அடிமையல்ல. நீங்கள் ஏதோ அவளுடைய ஆசை வலையில் வீழ்ந்து மிரண்டுவிட்டீர்கள். அவள் வஞ்சகப் பாம்பு. உங்களைப்போன்று ஆயிரக்கணக்கான ராஜபுத்திரர்களை அவளுக்குத் தெரியும். மூன்றே முக்கால் நாழிகை முத்துமழை சொரிவாள். நீங்கள் அதைத் தெய்விகம் என்று எண்ணி, என்னைப் புறக்கணிக்கப் பார்க்கிறீர்கள். பாதுஷாவின் தண்டனையையும் எதிர்பார்க்கிறீர்கள். இந்த ராஜ்யம் என்ன சாசுவதமா? பாதுஷாவின் எல்லையைத் தாண்டிக் கண் காணாத ஓர் ஊரில் ஒரு குடிசையில் வாழ்க்கை நடத்தலாமே!...ஆர்ய புத்திரா, உண்மையில் உங்கள் சந்தோஷத்தையே நான் எதிர்பார்க்கிறேன். வேண்டாம், அந்த ராஜகுமாரியை நம்ப வேண்டாம். அவளை மறந்து விடுங்கள். அவள் ஒரு கொடிய சர்ப்பம்" என்று ஆவேசம் வந்தவள் போல் படபடத்துக் கூறினாள்.

"வாஸந்திகா, என் கண்மணி, தயவு செய்து நான் சொல் வதைக் கொஞ்சம் கேள்....." என்று ஆரம்பித்தான் ராஜ சிம்மன்.

"நீங்கள் சொல்வதை நான் என்றும் தட்டியதில்லை. ஆனால் இந்த ஒரு விஷயத்தில் நான் தங்களுக்கு மாறுக நடப்பது பற்றி மன்னிக்கவேண்டும். நான் உயிருடன் இருக்கும்வரையில் அந்த ராஜகுமாரி என்னும் விஷப் பாம்பிடம் ஒப்படைக்க மாட்டேன். ஆண்டவன் பிரித்தாலன்றி என்னையும் உங்களையும் யாரும் பிரிக்க முடியாது" என்று அவள் கூறினாள். அவள் கண்கள் நீரைக் கக்கின. முகம் சிவந்தது. உதடுகள் படபடத்தன.

ராஜசிம்மன் அப்படியே ஒடுங்கிவிட்டான். அவன் கண்களில் கண்ணீர்த் துளிகள் தேங்கியிருந்தன. அவன் மனம் குழம்பி விட்டது. உடல் வேர்த்தது. வாஸந்திகாவை ஏறிட்டு நோக்கவும் அஞ்சினான். அவன் நெஞ்சு படபடத்தது. 'இவ்விருவரில் யாரைத் துறப்பது? வாஸந்திகா கூறும் ஒவ்வொன்றும் உண்மை தான். இளவரசியை விட அழகில் எவ்வளவோ மடங்கு சிறந்தவள் வாஸந்திகா. ஒழுக்கத்தில் அவளைவிட இவள் பன் மடங்கு சிறந்தவள். ஐயோ! அவள் அழகு என்னைப் பைத்திய மாக்கி விட்டதே! ஏன் அவள் அந்த யமுனைக் கரைக்கு வந்தாள்? அவளைக் காணும்போதெல்லாம் என் நெஞ்சம் மதுவுண்ட வண்டு போலாகி விடுகிறதே!...அவள் என் மீது அபாரமான பிரேமை கொண்டிருக்கிறாள்..... என்ன மதுரமான பேச்சு! நான் என்ன செய்வேன்?.....' என்று மன வேதனைகொண்டு தவிக்கலானான்.

4

மறுநாள் காலையில் ராஜசிம்மன் புது மனிதனைத் தோன்றி னான். வாஸந்திகாவுடன் அன்புடன் பேசிக் கொண்டிருந்தான். அவன் வழக்கமாகச் செல்லும் ராஜகுமாரியின் அந்தப்புரத்தை மறந்திருந்தான். தன் கணவன் இவ்வளவு சீக்கிரத்தில் திருந்தி விடுவான் என்று வாஸந்திகா எதிர்பார்க்கவில்லை. அவள் உள்ளம் அன்று சந்தோஷத்தில் பூரித்தது.

"ஏன், உங்கள் மும்தாஜ் ராஜகுமாரியை மறந்துவிட்டீர் களா? பாவம்! அவள் நேற்றிலிருந்து தேடிக் கொண்டிருப்பாளே! நீங்கள் போகவில்லையா?" என்றாள் கேலிச் சிரிப்புடன்.

"வாஸந்திகா, இனி இந்த ஜன்மத்தில் இல்லை. நான் ஒரு பாவக் குழியில் விழுவிருந்தேன். ஆனால் உன்னுடைய உதவியால் தப்பினேன். கண்மணி, உண்மையில் என்னைக் காக்க வந்த தெய்வம் நீ" என்றான். அவன் முகத்தில் என்றைக்கும் இல்லாத களையைக் கண்டாள் வாஸந்திகா. அந்த எழில் நிரம்பிய வதனத்தைப் பார்த்துப் பரவசமடைந்தாள்.

"ஆர்ய புத்திரா, நான் பூர்வ ஜன்மத்தில் என்ன புண்ணியம் செய்தேனோ! அதனால்தான் நான் உங்களை அடையப் பெற்றேன். இன்று என் உள்ளம் என்றும் இல்லாத ஆனந்தம் கொள்ளுகிறது" என்று கூறி முறுவலித்தாள்.

இருவருடைய சந்தோஷத்தையும் குலைத்தது ஒரு குரல் அப்பொழுது.

"யார் அது?" என்றான் ராஜசிம்மன். கடிதம் ஒன்றைக் கையிலேந்திக் காவலன் ஒருவன் தோன்றினான். பாதுஷாவை உடனே காணவேண்டுமென்று கண்டிருந்தது அதில்.

ராஜசிம்மன் அதைச் சாதாரணமாகத்தான் நினைத்தான். ஆனால் வாஸந்திகாவுக்கு மனத்தை என்னவோ செய்தது. அவன் அவளை நோக்கி, "நான் ராஜசபைவரை போய் உடனே திரும்புகிறேன்...வாஸந்திகா, நான் போய் வரட்டுமா?" என்று கூறியபொழுது, அவள் சிந்தனை பலவிதத்தில் பல இடங்களில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. அவளுக்குச் சுய நினைவு வரும் போது ராஜசிம்மன் அங்கில்லாதிருப்பதை உணர்ந்தாள். உடனே ராஜசபையின் ஞாபகம் வந்தது.

"திடீரென்று பாதுஷா நிருபம் அனுப்பியதன் மர்மம் என்ன?" என்ற கேள்வி திரும்பத் திரும்ப அவள் மனத்தில் எழுந்து நின்றது. அந்தக் கேள்விக்குப் பதில் விளங்கவில்லை.

5

பாதுஷாவின் அந்தரங்க அறையில், பாதுஷாவிற்கும் தளகர்த்தன் ராஜசிம்மனுக்கும் சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. பாதுஷாவின் குரலில் கோபம் தொனித்தது.

"ராஜசிம்மா, உன்னை நான் குணவான் என்று நினைத்தேன். நீ பெரிய ராஜத் துரோகி என்பதை இப்போது காட்டி விட்டாய்." அவர் உதடுகள் துடித்தன. கோபம் கண்களில் நிரம்பியிருந்தது.

"ராஜத் துரோகி" என்ற சொல்லைக் கேட்டதும் ராஜசிம்மன் நெருப்பை மிதித்தவன்போல் ஆகிவிட்டான். "அரசே, நான் என்ன குற்றம் செய்தேன்? ராஜத் துரோகியா நான்? நீங்கள் பேசுவது விபரீதமாயிருக்கிறதே!" என்றான்.

"இளவரசியின் மனத்தையும், மானத்தையும் கெடுத்த குற்றம். அந்தக் குற்றம் ராஜத்துரோகம் என்பதை நீ அறிய வில்லையா? அவளையே நீ மணந்தாக வேண்டும். இது என் ஆக்ஞை" என்றது பாதுஷாவின் கோபக் குரல்.

"அரசே, நான் நிரபராதி. எனக்கு ஒரு மனைவி இருக்கிறாள். நான் இளவரசியை எப்படி மணப்பது? மன்னிக்க வேண்டும்"

என்றான். அவன் குரல் கம்மிவிட்டது. கண்களில் நீர் நிரம்பியது.

"துரோகி, ராஜ ஆக்ஞையை மீறுகிறாயா? மணக்க மறுத்தாயானால் என்ன தண்டனை கிடைக்குமென்பதை அறிவாயா?"

"அறிவேன். எந்த விதமான தண்டனையையும் அனுபவிக்கச் சித்தனாயிருக்கிறேன். ஆனால் என் மனசிற்கு விரோதமாகத் தங்கள் ஆக்ஞையை ஏற்க மாட்டேன். என் சுதந்தரத்தை இழக்க மாட்டேன்." அவன் குரலில் கம்பீரமும், வீரமும் தொனித்தன.

பாதுஷாவின் கோபம் எல்லை கடந்தது. அந்தக் கோபத்தின் முடிவு ராஜசிம்மனுக்குக் காலனாகத் தோன்றியது.

அரசர் ஆக்ஞையை மீறிய ராஜசிம்மனுக்குக் கிடைத்த தண்டனை மகா பயங்கரமானது. ஆம்! நீதியற்ற, கருணையற்ற, மரண தண்டனைதான்.

6

அன்று பௌர்ணமி. யமுனை நதி தீரத்தில் ஒரு வீரனின் சவம் அடக்கம் செய்யப்பட்டது. பாதுஷாவின் கொடிய சட்டத் தினால் ஒரு வீரன் அங்கு அநியாயமாகப் புதையுண்டான். அந்த வீரனின் சமாதிமீது விழுந்து ஓலமிடும் ஓர் இளம்பெண்ணின் குரல் வானத்தை எட்டியது. அவள் கண்கள் அழுதழுது ரத்தம் போல் சிவந்துவிட்டன. சாந்தமாகச் சென்று கொண்டிருந்த யமுனையும் அதைக் காணச் சகியாதவள் போல் கொந்தளித்து அலைகளை எழுப்பிக்கொண்டு சென்றாள். அமைதி நிறைந்த அந்த இரவில் துக்கித்துப் புலம்பிய ஒரு பெண்ணின் குரல் அந்தப் பிரதேசத்தைச் சுற்றி எதிரொலித்தது.

"வாஸந்திகா!" என்றது ஒரு குரல். துக்கத்தில் புதைந் திருந்த வாஸந்திகா, அந்தக் குரல் கேட்டுத் திடுக்கிட்டாள். எதிரில் இளவரசி மும்தாஜ் நின்றுகொண்டிருந்தாள். அவள் கண்கள் நீரைப் பொழிந்துகொண்டிருந்தன.

"சோதரீ! வாஸந்திகா! என்னை மன்னிப்பாயா? நான் இதை எதிர்பார்க்கவில்லை; பாதுஷா இம்மாதிரி நியாயமற்ற முறையில் நடந்து கொள்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. வாஸந்திகா! உன்னை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்லேன்!" என்று மண்டியிட்டு வணங்கினாள்.

எல்லையற்ற துக்கத்தை ஒரு நொடியில் அநுபவித்த வாஸந்திகாவின் மனத்தில் சாந்தத்திற்கு இடமில்லை. மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கும் தன்னைப் போன்ற ஒரு பெண்ணுக்கு அவள் மன்னிப்பு அளிக்க விரும்பவில்லை. அந்த நிலவொளியில்

வீரத்துடன் எழுந்து நின்றாள். கொந்தளிப்புடன் செல்லும் யமுனையைப் பார்த்தாள். திடீரென்று ஒரு வறண்ட புன்சிரிப்பு இதழ்க்கடையில் தோன்றி மறைந்தது.

"தேவி! இந்த நீதியற்ற உலகத்தில் எனக்கு இனி வசிக்க இடமில்லை. உன்னிடம் வருகிறேன். பிரம்மாண்டமான உன் ஜலப்பிரவாகத்தில் எனக்கும் சிறிது இடம் கொடு" என்று கைகூப்பி வணங்கி யமுனையில் இறங்கினாள். கொந்தளித்துச் செல்லும் யமுனையும் அவளை ஸ்வீகரித்துக் கொண்டாள்.

'சாவி'

நினைத்ததும் நடந்ததும் 16

தீபாவளி நெருங்க நெருங்கக் காட்டுப் பாளையம் ஸ்டேஷன் மாஸ்டர் அடிக்கடி ரயில் எஞ்சினைப்போல் பெருமூச்சு விட ஆரம்பித்தார். காரணம், தம்முடைய நாலாவது பெண் மரகதத்தின் தலைத்தீபாவளியைக் கொண்டாடக் கையில் போதுமான பணமில்லாமைதான். அதிலும் இந்தக் கடைசி மாப்பிள்ளை மிகவும் முடுக்கான ஆசாமியாயிருந்தான். மூன் கோபி; அசல் பச்சை மிளகாய்!

போன தடவை அவன் தலை நோன்புக்கு வந்திருந்தபோதே மோதிரம் செய்து போடவில்லை என்று கோபித்துக்கொண்டு டிக்கட்கூட வாங்காமல் ரயில் ஏறி ஊருக்குப் போய்விட்டான். காரணம் அந்த ஸ்டேஷனில் டிக்கட் விற்பதும் ஸ்டேஷன் மாஸ்டரே. ஆகையால் மாப்பிள்ளை மாமனார் முகத்தில் விழித்து டிக்கட் வாங்க இஷ்டப்படவில்லை!

எனவே, இந்தத் தலைத் தீபாவளியிலாவது மாப்பிள்ளையின் பழைய கோபத்தை யெல்லாம் தீர்க்க எண்ணியே அடிக்கடி பெருமூச்சு விடலானார் ஸ்டேஷன் மாஸ்டர்.

அன்று புதன்கிழமை. ஏழரை மணிக்கு வரவேண்டிய மெயில் வண்டி வழக்கம்போல் தாமதமாக எட்டரை மணிக்கே வந்து சேர்ந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் கூட்டத்தில் தம் மாப்பிள்ளையும் இறங்கி வருவதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். அவன் 'கேட்'டண்டை வந்ததும் சமாளித்துக்கொண்டு, "வாருங்கோ, மாப்பிள்ளை" என்று உபசரித்தார்.

ஸ்டேஷன் மாஸ்டருக்கு அன்று இரவெல்லாம் தூக்கமில்லை. ஸ்டேஷனில் 'நைட் டியூடி' பார்க்கும்போது கூட நிம்மதியாகத் தூங்கக்கூடிய அவருக்கு மாப்பிள்ளை விஜயம் பெருத்த கவலையை உண்டுபண்ணி விட்டது. கையில் பணமில்லாத சமயத்தில்தானா இந்தப் பாழும் தீபாவளியும் மாப்பிள்ளையும் வந்து சேர வேண்டும்?

பாவம்! ஸ்டேஷன் மாஸ்டர் பெரிய குடும்பஸ்தர். இருபது வருஷ காலமாக ரெயிலிலேயே உத்தியோகம் பார்த்து இப்போது தான் 72½ ரூபாய் சம்பளம் வாங்குகிறார்.

இந்த நிலைமையில் தலைத் தீபாவளியை எப்படிக் கொண்டாடுவதென்றே அவருக்குப் புரியவில்லை. இன்னும் மூன்றே நாட்களில் ஏதேனும் ஏற்பாடு செய்தாகவேண்டுமே என்பதை நினைக்க நினைக்க ஸ்டேஷன் மாஸ்டருக்கு 'ரெட் ஸிக்னல்' அணைந்து அணைந்து எரிவதைப்போல் இருந்தது.

வெகு நேரம் வரையில் தீபாவளிச் செலவுக்கு என்ன செய்வதென்றே ஒன்றும் தோன்றுதவராய் யோசிக்கலானார். மனச் சோர்வினால் அவருடைய தலை கைகாட்டி மரம்போல் சாய்ந்து கிடந்தது. இதற்குள் கூட்ஸ் வண்டி ஒன்று வருவதாக அடுத்த ஸ்டேஷனிலிருந்து டெலிபோன் எச்சரிக்கை வந்தது. கூட்ஸ் வண்டியை வரவேற்பதற்காக அறையை விட்டு எழுந்து பிளாட் பாரத்துக்கு வந்தார். வண்டி வந்து நின்றதும் சாமான்களை எல்லாம் போர்ட்டர் மாரிசாமியைப் பார்ஸல் அறையில் கொண்டு போய்ப் போடச் சொல்லிக் கதவைப் பூட்டிச் சாவிக் கொத்தைக் கோட்டுப்பையில் போட்டுக்கொண்டார்.

இரவு வெகு நேரம் வரையில் தூக்கமே வரவில்லை. கூட்ஸ் வண்டியில் வந்த கார்டு கொடுத்துவிட்டுப் போன பழைய தினசரிப் பத்திரிகை ஒன்றை வைத்துப் படித்துக்கொண்டிருந்தார். அதில் "தபாலாபீஸில் கொள்ளை" என்ற ஒரு சிறு விஷயம் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. ஸ்டேஷன் மாஸ்டருக்கு அதிலிருந்து ஒரு சிறு எண்ணம் உதித்தது. அந்த எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக முற்றவே, கடைசியில் மனச் சாட்சிக்கும் அவருக்கும் ஒரு சிறு போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டத்தில் மனச் சாட்சிதான் தோல்வியுற்றது என்று சொல்லத் தேவையில்லை. அதன்படி பார்ஸல் அறைக்குள் புகுந்து வேண்டிய சாமான்களைக் கொள்ளையடிப்பதே சரி என்ற முடிவுக்கு வந்தார். போர்ட்டர் மாரிசாமி 'டிடி' முடிந்து வீட்டுக்குப் போனதும் பார்ஸல் அறைக்குள் புகுந்து உள்பக்கம் தாழிட்டுக் கொண்டார். மார்பு 'பட் பட்' என்று வேகமாய் அடித்துக்கொண்டது. வெகு தூரத்தில் போய்க் கொண்டிருந்த கூட்ஸ் வண்டியின் கீண்ட ஊதல் சத்தம் அவருடைய செய்கையை வேண்டாமென்று எச்சரிப்பதுபோல் இருந்தது. தேகம் குப்பென்று வியர்க்க ஜன்னல் வழியாய் ரயில் போகும் திக்கை நோக்கினார். தொலைவில் இருந்த கைகாட்டி மரத்தின் சிவப்பு விளக்கு, "அபாயம், அபாயம்" என்று கூறுவதைப்போல் கண்களைச் சிமிட்டியது.

ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு ஒவ்வொரு பார்ஸலாக எடுத்து அவை ஒவ்வொன்றின் மீதும் இருந்த விலாசத்தைப் படித்துப் பார்த்தார்.

பார்ஸலை நன்முகப் பிரித்ததில் வைக்கோல் கூளங்களும் ரம்பத் தூள்களுமாக வந்துகொண்டே இருந்தன. கடைசியாக அதற்குள் ஒரு காகிதப் பொட்டலம் தெரிந்தது. ஆவலுடன் அதைப் பிரித்துப் பார்த்தபோது ஸ்டேஷன் மாஸ்டருடைய முகம் பஸ்ஸைக் கண்ட பிரயாணியின் முகம்போல் மலர்ந்தது. ஆகா! என்ன ஆச்சரியம்! மூன்று கல்வைத்த மோதிரம்; ஒரு சவரன் இருக்கலாம். அளவும் தன் மாப்பிள்ளையின் விரலுக்குச் சரியாக இருக்கும் என்றே பட்டது. "சரி; இதை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டியதுதான்" என்று அதைத் தமது சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டார்.

அடுத்த பார்ஸலை உடைத்தார். அதில் இரண்டு பட்டுப் புடைவைகள் இருந்தன. "பேஷ்! மரகதத்துக்கும் அவளுக்கும் ஆச்சு!" என்முர்.

இன்னொரு பார்ஸலில் வேஷ்டிகளும் மற்றொன்றில் பட்டாசுக் கட்டுகளும் கிடைத்தன. கடைசியில் ஒரு சாக்கு மூட்டையை அமுக்கி அமுக்கிப் பார்த்தார். அவர் நினைத்தபடியே மூட்டை நிறைய உளுந்தா யிருந்ததைக் கண்டு, "நல்ல வேளை! தீபாவளிக்கு இட்டிலியும் தோசையுமாய் ஜமாய்த்துவிடலாம்" என்று சந்தோஷப்பட்டார்.

ஸ்டேஷன் மாஸ்டர் எல்லாச் சாமான்களையும் எடுத்து இரவோடு இரவாகக் கொண்டுபோய் வீட்டில் சேர்த்தார். ஸ்டேஷனுக்கும் அவர் வீட்டுக்கும் நேர் வழியில் போவதென்முல் ஒரு பர்லாங்கு தூரம் இருந்தது. அதற்காக அவர் பிளாட்பாரத்தின் இரும்பு வேலிச் சட்டங்களில் ஒன்றைப் பெயர்த்துக் குறுக்கு வழி போட்டிருந்தார். பார்ஸல் அறையில் களவாடிய சாமான்கள் அவ்வளவும் குறுக்கு வழியில்தான் வீடுபோய்ச் சேர்ந்தன என்று சொல்லத் தேவையில்லை.

பொழுது விடிவதற்குள் மற்றப் பார்ஸல்களையெல்லாம் ஒழுங்காக அடுக்கிவிட்டுக் கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு 'புக்கிங்' அறைக்குள் வந்து உட்கார்ந்துகொண்டார். ஏறக்குறையத் தீபாவளிக்கு வேண்டிய எல்லாச் சாமான்களும் சிரமமின்றிக் கிடைத்துவிட்டதைப்பற்றிப் பெருத்த சந்தோஷம் அடைந்தார். ஆனல் விஷயம் மேலதிகாரிகளுக்குத் தெரிந்து விட்டால் உத்தியோகத்துக்குச் 'சீட்டு' விழுவதோடு தலைக்கே அல்லவா திங்கு நேரிடும் என்று நினைக்கும்போது, அவர் தலை வேதனையால் கனத்தது.

'இரவு ஸ்டேஷனுக்கு வந்த பார்ஸல்கள் அனைத்துக்கும் கையெழுத்துப் போட்டல்லவா வாங்கி வைத்திருக்கிறோம்? மேலதிகாரிகளுக்கு எப்படிப் பதில் சொல்வது?' என்று யோசித்தார்.

'ஐயோ! விஷயம் தெரிந்துவிட்டால் ஊரெல்லாம் சிரிப்பார்களே! அப்புறம் நம்முடைய மானம் என்னத்திற்கு ஆச்சு? வந்தி

ருக்கும் மாப்பிள்ளைதான் என்ன நினைக்க மாட்டான்? தப்பித் தவறி விஷயம் தெரிந்துபோனால் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை' என்று முடிவு செய்தார். 'அப்படித் தற்கொலை செய்துகொள்வதா யிருந்தால் தூக்குப் போட்டுக் கொண்டோ, விஷம் அருந்தியோ உயிரை விடக்கூடாது. ரெயிலில் இருபது வருஷ ஸர்விஸுக்குப் பிறகு வேறு இடத்தில் போய் உயிரை விடுவதாவது! அப்படி உயிரை விட்டால் தண்டவாளத் தில் தலையை வைத்து ரெயிலடியிலேயேதான் உயிரைவிடுவேன்!' என்று தமக்குத் தாமே தீர்மானித்துக்கொண்டார்.

பலவிதமான யோசனைகள் இருதயத்தில் புகுந்துகொண்டு வேலை செய்ய ஆரம்பித்தன. போலீஸ்காரர்கள் வருவதுபோலவும் தம்மைக் கைது செய்துகொண்டு போவதைப் போலவும் நினைத்து நடுங்கினர். "கடவுளுக்கு ஏழைகளின்மீது இரக்கம் உண்டு என்பது நிச்சயமென்றுல் நம்மை இந்தப் பேராபத்தினின்றும் காப்பாற்ற வேண்டியது அவருடைய பொறுப்பாகும்" என்று பாரத்தைக் கடவுள்மீது போட்டார்.

பொழுது விடிந்ததும் ஸ்டேஷன் மாஸ்டர் மெதுவாகக் கூட்ஸ் வண்டி மாதிரி நடந்து வீட்டை அடைந்தார். ஆழ்ந்த யோசனையோடு இருக்கும்போது கூட்ஸ் வண்டி போலவும், உத்ஸாகமான சமயங்களில் மெயில் வண்டியைப் போலவும் நடப்பது அவருடைய வழக்கம்.

சாமான்களை யெல்லாம் கண்டதும் வீட்டில் மாப்பிள்ளை, பெண், மனைவி எல்லோரும் ஒரே குதூகலமாய் இருந்தார்கள். அந்த ஆனந்தத்தில் மாப்பிள்ளை எல்லோரையும் அழைத்துக் கொண்டு சினிமாவுக்குப் போவது என்று நிச்சயித்தான்.

அன்றிரவு எல்லோரும் சினிமாவுக்குப் போனதும் ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்டேஷனுக்கு வந்து தமது அறையில் உட்கார்ந்து சிந்தனை செய்யத் தொடங்கினர்.

இந்தக் காட்டுப்பாகாயம் ஸ்டேஷனுக்கு எவனாவது ஒரு திருடன் வந்து பார்ஸல் அறையைக் கொள்ளை யடித்துக்கொண்டு போனால், அந்த அறையிலிருந்து தாம் களவாடிய சாமான்களையும் திருடன் கொண்டுபோய் விட்டதாகச் சேர்த்துச் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாமே என்றுதான் ஸ்டேஷன் மாஸ்டர் அவ்விதம் வருத்தப்பட்டார். திருடர்கள் இருக்கும் விலாசம் தெரிந்தால் ஒரு கடிதம் போட்டாவது வரவழைக்கலாமே என்றும் வருத்தப்பட்டார்.

ஸ்டேஷன் மாஸ்டர் நினைத்தபடி அதிருஷ்ட வசமாய் அன்றிரவு வாஸ்தவமாகவே ஒரு திருடன் வந்தான்!

மணி பதினொன்று இருக்கலாம். எங்கே பார்த்தாலும் ஊமை இருட்டுச் சூழ்ந்துகொண்டிருந்தது. லேசாகத் தூற்றல் வேறு. அப்போது ஸ்டேஷன் வேலியின் சந்துவழியாக யாரோ ஓர் ஆசாமி உள்ளே நுழைந்து வந்தான். அவன் தன்னை ஒரு பிச்சைக்காரன்

என்றும், தூற்றலாய் இருப்பதால் இரவு படுத்துக்கொள்ளப் பிளாட்பாரத்தில் இடம் தரவேண்டும் என்றும் ஸ்டேஷன் மாஸ்டரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அவன் இஷ்டப்படியே ஸ்டேஷன் வராந்தாவிலேயே படுத்துக்கொள்ளச் சொன்னார். ஸ்டேஷன் மாஸ்டர் தயாராக மூன்று கஜ நீளத்தில் ஒரு கயிற்றைக் கொண்டுவந்து பக்கத்தில் வைத்துவிட்டுத் தூங்குவதைப் போல் பாவனை செய்து கொண்டிருந்தார். (மூன்று கஜக் கயிறு ஸ்டேஷன் மாஸ்டர் தூக்குப் போட்டுக் கொள்வதற்கென்று நேயர்கள் ஊகித்தால் அது தவறுகும்!)

மணி பன்னிரண்டு அடித்தது. ஓரே இருட்டு. ஸ்டேஷன் மாஸ்டர், வந்திருக்கிற பிச்சைக்காரன் திருடனாக மாறக்கூடாதா என்று கவலைப்பட்டார். அவர் எதிர்பார்த்தபடி – என்ன அதிசயம்! – படுத்துக்கொண்டிருந்த ஆசாமி மெதுவாக எழுந்துவந்து ஸ்டேஷன் மாஸ்டர் தூங்கிவிட்டாரா என்று கவனித்தான். ஸ்டேஷன் மாஸ்டர் தூங்குவதைப்போல் பாசாங்கு செய்தார். வந்தவன், ஸ்டேஷன் மாஸ்டர் நல்ல தூக்கத்தில் இருப்பதைக் கண்டு மெதுவாகப் பார்ஸல் அறைப் பக்கம் வந்து சிரமப்பட்டுக் கதவை உடைத்து உள்ளே நுழைந்தான். அந்தச் சமயம் பார்த்து ஸ்டேஷன் மாஸ்டர் அவன் பின்னல் வந்து அவனுடைய இரு கண்களையும் தம் இரு கரங்களாலும் பொத்திக்கொண்டார். "நான் யார் கண்டுபிடி!" என்று அவனிடம் 'கண்ணாமூச்சி' வேடிக்கை பண்ணினார். திருடன் நடுநடுங்கிப் போய் "ஐயோ!" என்று அலறினான். ஸ்டேஷன் மாஸ்டர் அவனைத் தைரியப்படுத்தி, "பரவாயில்லை; பயப்படாதே. பாவம், நீ என்ன செய்வாய்? நீபாவலிக்குச் சாமான்கள் இல்லாமல் கஷ்டப்படுவாயே! இதோ இந்தா" என்று சொல்லித் தாமாகவே சாமான்களையெல்லாம் எடுத்துத் திருடன் கையில் கொடுத்தார். வந்தவன் இதையெல்லாம் கண்டு திருடன் மாதிரி விழித்தான்!

ஸ்டேஷன் மாஸ்டர் மேலும் அவனைத் தைரிய மூட்டி, "ஆனால் நீ ஒன்றுமட்டும் செய்யவேண்டும். போகும்போது நீ என்னை என்னுடைய நாற்காலியில் கட்டிப் போட்டுவிட்டுப் போக வேண்டும். கயிறுகூடத் தயாராய் வைத்திருக்கிறேன். இல்லாவிட்டால் நீ திருடிக்கொண்டு போகும்போது நான் சும்மா பார்த்துக்கொண்டிருந்ததாகவோ அல்லது தூங்கிக்கொண்டிருந்ததாகவோ என்பேரில் குற்றம் ஏற்படும். அதற்காகத்தான் கட்டிப் போடச் சொல்கிறேன்" என்றார். திருடனுக்கு ஸ்டேஷன் மாஸ்டர் வார்த்தைகளில் நம்பிக்கை பிறந்தது. "இவர் இவ்வளவு சாதுவானவர் என்று தெரிந்திருந்தால் இந்த அறைக் கதவை உடைக்க இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லையே! முன்னடியே சாவியை இவரிடம் கேட்டு வாங்கித் திறந்திருக்கலாமே!" என்று வருந்தினான். பிறகு அவர் சொன்னபடியே நாற்காலியில் அவரைக் கட்டிப் போட்டுவிட்டுச் சாமான்களை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான். திருடன் ஓடி மறைவதை

நன்றியறிதலோடு பார்த்துக்கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டர் கண்கள் பச்சை விளக்குகளைப்போல் பிரகாசமாய் ஜொலித்தன.

மறுநாள் பொழுது விடிந்து மாரிசாமி 'டிடி'க்கு வந்தபோது ஸ்டேஷன் மாஸ்டர் நாற்காலியில் கட்டிப்போட்டுக் கிடப்பதையும் பார்ஸல் அறை உடைக்கப்பட்டுச் சாமான்கள் சிதறிக் கிடப்பதையும் கண்டு திடுக்கிட்டுப் போனான். ஸ்டேஷன் மாஸ்டரைக் கட்டுகளிலிருந்து விடுவித்துச் சங்கதியைத் தெரிந்துகொண்டான். உடனே ஸ்டேஷன் மாஸ்டர் தலைமை ஆபீஸுக்கு விஷயத்தைச் சுருக்கமாகக் தந்தி மூலம் அறிவித்தார். களவுபோன சாமான்கள் ஜாபிதாவுடன், தாம் எடுத்துக்கொண்ட சாமான்களையும் சேர்த்துத்தான் தந்தி கொடுத்தார் என்று சொல்லத் தேவையில்லை. பிறகு, அவருடைய வேதனைகள் எல்லாம் தீர்ந்து தலையிலிருந்து ஒரு பெரிய பாரம் இறங்கியதைப்போல் உணர்ந்தார். சாவதானமாக எல்லா வேதனைகளையும் முடித்துக்கொண்டு மன நிம்மதியுடன், "அப்பா! தீபாவளியை இனிச் சந்தோஷமாய்க் கொண்டாடலாம். இனிமேல் பயமில்லை. மேலதிகாரிகளோ, போலீஸோ நம்மீது சந்தேகப்படுவதற்குத் துளிக்கூட நியாயமில்லை. கதவு உடைபட்டிருந்ததையும் நான் நாற்காலியில் கட்டிப்போட்டுக் கிடந்ததையும் மாரிசாமியே கண்ணால் பார்த்திருக்கிறான். அவன் சொல்லும் சாக்ஷியே போதுமானது" என்று தம்மைத் தாமே சமாதானப்படுத்திக் கொண்டார்.

இந்த மனத் திருப்தியுடன் உத்ஸாகமாக மெயில் வண்டியைப் போல் நடந்து வீட்டை அடைந்தார். ஆனால், என்ன ஆச்சரியம்! ராத்திரி அவருடைய மாப்பிள்ளை, மனைவி எல்லோரும் கதவைப் பூட்டிக்கொண்டு வினிமாவுக்குப் போயிருந்த சமயம் அவர் வீட்டில் வேறு யாரோ ஒரு திருடன் புகுந்து தீபாவளிக்காக அவர் சேகரித்து வைத்திருந்த அவ்வளவு சாமான்களையும் கொள்ளையடித்துக்கொண்டு போயிருந்தான். வீட்டில் அவர் காலடி எடுத்து வைத்தபோது எல்லோரும் 'குய்யோ முறையோ' என்று அலறிக் கொண்டிருந்தார்கள். விஷயத்தைக் கேட்ட ஸ்டேஷன் மாஸ்டருடைய தலை ரெயில் சக்கரம்போல் சுழன்றது. முகம் பிரம்மஹத்தி பிடித்தமாதிரி களையிழந்து காணப்பட்டது.

இந்தக் கண்ணராவியைக் காணச் சகியாத மாப்பிள்ளை, மாமனார்மீது இரக்கம் கொண்டான்.

பிறகு மாமனாரை அழைத்து, "நடந்ததைப்பற்றிக் கவலைப் படாதீர்கள்; எனக்கு மோதிரம் ஒன்றும் வேண்டாம். என்னிடம் ஐம்பது ரூபாய் பணம் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு தீபாவளிப் பண்டிகையை நடத்துங்கள்" என்றான்.

மாப்பிள்ளை கொடுத்த பணத்தைக் கொண்டு ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டில் தலைத் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப் பட்டது. இந்தத் தடவை மாப்பிள்ளை ஊருக்குப் போகும்போது எந்த விதமான மனஸ்தாபமும் இன்றி மரகதத்தோடு டிக்கட் வாங்கிக்கொண்டே ரெயில் ஏறினான்!

'பரவாயில்லை' 17

"மன்னிக்க வேண்டும். தலைவரை அழைக்கப் போகிற அவசரத்தில் தவறிவிட்டேன்; பார்க்கவில்லை" என்று கூறி நிற்கிற ராமசாமியிடம், "பரவாயில்லை" என்று போய்விட்டாள் காமாட்சி.

அன்றிரவு ராமுவுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. என்ன என்னவோ கோட்டை கட்ட ஆரம்பித்துவிட்டான். 'ஆம், நான் அன்று மகளிருக்குப் பட்டக் கல்வி வேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்துப் பேசிக்கொண்டிருக்கையில் அவள் என்னையே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்க வில்லையா? மற்றொரு நாள், நான் கூட்டத்திற் உட்கார்ந்திருக்கும்போது நானும் சிரித்தேன்; அவளும் சிரிக்கவில்லையா? ஆம், இதில் ஏதோ தெய்வச் செயல் இருக்கிறது' என்று நினைத்து அல்லல் உறுவான் ஆனான்.

மறுநாள், காமாட்சி வரும் வழியை நோக்கி நின்றுகொண்டு இருந்தான். "உங்கள் மனோன்மணீயம் வேண்டும். நாளையே திருப்பித் தருவேன்" என்றான்; பெற்றான்.

அடுத்த வருஷம் ராமுவும் காமுவும் பேசிக்கொண்டு நிற்கிறார்கள்.

"ஏன் என்னை இப்படி வஞ்சித்தாய்?"

"எப்படி?" என்கிறாள்.

"என்மேல் அன்புள்ளவள்போல், காதல் உள்ளவள்போல், இவ்வளவு காலம் நடித்துவிட்டு இப்போது ஏமாற்றுவது நியாயமா?"

"எப்பொழுதாவது காதலிப்பதாக நான் சொன்னது உண்டா?"

"சொல்ல வேண்டுமா? சொல்லுவாயா? நீ நடந்துவந்த விதத்தில் நான் அறியவில்லையா? இப்பொழுது திடீரென்று —"

"நீங்களாகக் கோட்டை கட்டியிருந்தால் நான் என்ன செய்வது?" என முகத்தைச் சுளிக்கிறாள்.

"என்ன செய்வது? என்னை மணந்தால் வாழ்வேன்; அன்றேல் சாவேன். உறுதி" என்கிறான் ராமு.

"இது என்ன சங்கடம்? என்றும் நான் உங்களைத் தமையன் என்ற நிலையில் எண்ணி வந்தேனே தவிர வேறு இல்லை. உங்கள் அத்தை மகள் கமலாவைப்பற்றிக் கூறுவீர்களே; அவளை மணந்து கொள்ளுங்கள். ஒரு பெண்ணுக்காக உயிர் விடுவதெல்லாம் —"

"உயிர்விடவே துணிந்தேன். சந்தேகம் இல்லை. பயமுறுத்த வில்லை."

"உங்கள் படிப்பு இவ்வளவுதான் பயன்படுகிறதோ?"

"படித்த பெண் ஆனதால்தான் இப்படியெல்லாம் பேசுகிறாய். என் உயிர் உன் கையில் இருப்பது மாத்திரம் உண்மை. எந்த வாக்குக் கொடுக்கவேண்டும் எனினும் தயார்" என்கிறான் ராமு.

காமுவுக்கு உண்டான கலக்கத்திற்கோ எல்லையில்லை. "அம்மாடியோ" என்று ஓடிவிடலாமா எனப் பார்க்கிறாள். ஆயினும், உயிர்விடுவேன் எனக் கதறும் ராமுவுக்குத் தேறுதல் சொல்லாமற் போவதற்கும் விருப்பம் இல்லை.

"ராமு, வருந்தாதீர்கள். நான் இல்லாவிட்டால், எத்தனையோ பெண்கள் நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ள இருக்கிறார்கள். உங்கள் அறிவுக்குப் பொருத்தம் அன்று, நீங்கள் நினைக்கிறபடி எல்லாம் நடப்பது என்பது. வீட்டிற்குப் போய் நன்றாக யோசியுங்கள்."

"நீ வேண்டுமானால் போய் யோசித்துச் சொல். ஆனால், ஒன்று: நாளைக்குக் கண்டிப்பாக இதே இடத்திற் காண வேண்டும். பத்து மணிக்கு வந்து காத்திருப்பேன். இரவு தூங்கவே முடியாது. இல்லை என்று சொல்லாதே, காமு!" எனக் கெஞ்சுகிறான்.

இசைந்து சென்ற காமுவுக்கு இரவெல்லாம் சிந்தனை. தகப்பனிடம் இவ்விஷயத்தைச் சொல்ல இஷ்டமே இல்லை. "காலேஜு பிரின்சிபாலிடம்" என ஒரு கணம் நினைத்தாள். ஆனால் உடனே விடுத்தாள்.

மறுநாள் 9-மணியில் இருந்தே அவன் காத்திருக்கிறான். 10-25-க்குத் தலையை வகிராமல், பொட்டு வைக்காமல், காலிற் செருப்புப் போடாமல் பையப் பைய அந்தப் பக்கம் வருகிறாள், காமாட்சி.

"என்ன முடிவு செய்தாய்? இல்லையென்று சொல்லவும் துணிவாயா?" என ஏங்குகிறான் ராமு.

"என்னை மறந்துவிடுங்கள்" என்று அவள் ஓடப் பார்க்கிறாள்.

"பின் ஏன் நானே ஆகட்டும் என்றாய்?"

"நீங்கள்தாம் நானைச் சொல்லு என்று கூறினவர்."

"என்னை ஏமாற்றிவிட்டாயே! இதுதான் பெண்டிர்க்கு அழகோ?" எனக் கோபிக்கிறான் ராமு.

"பிதற்றுதீர்கள். என்றைக்கு நான் நம்பிக்கை கொடுத்தேன், இன்று ஏமாற்ற?"

"என்ன? என்றும்."

"எப்படி? பைத்தியமா என்ன?"

"டென்னிஸில் நான் சோழப்பனை வென்ற அன்று வாழ்த்தினாய்; இல்லையா?"

"காங்கிரேட்ஸ் (congrats) என்பதன் அர்த்தம் காதல் ஆகுமா?"

"ஆலிவர் அன்று பிரசங்கித்துக்கொண் டிருந்தபோது என்னைப் பார்த்துப் பார்த்துக் கூட்டத்திற் சிரித்தாய்; இல்லையா?"

"அது தப்பா? அட தெய்வமே!"

"என்னைக் கொல்வதுபோற் சிரித்தாயே! அதற்கு அர்த்தம் என்ன?"

"அர்த்தம்! உங்களை மணந்துகொள்வது போலும்! என்ன கேவலம்! அவர் கூறிய கருத்துக்கள் உங்கள் கருத்துக்களை ஒட்டி இருந்ததால் சிரிக்கப் போக, இப்படி வம்பாக விளைகிறதே!" என்று சொல்லி வருந்துகிறாள் காமு.

"முன், விடுமுறைக்குப் பிறகு நாம் சென்னை வந்துகொண் டிருந்தபொழுது —"

"அப்பொழுது என்ன?"

"செங்கற்பட்டு ஸ்டேஷனில் நான் பூவும் காபியும் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தேனே."

"ஆமாம், அதனால் நான் உங்கள் காதலை ஒப்புக்கொண்டேன் ஆக்கும்!"

"கொடுத்த பூவை வாங்கி அணிந்தால் உடம்பாடு என்று புஸ்தகம் சொல்கிறதே!"

"அந்தப் புஸ்தகத்தைக் கொண்டுபோய் உடைப்பிலே போடுங்கள். நான்தான் அதற்கு உரிய சில்லறையை அப்பொழுதே கொடுத்தேனே. நீங்களே பெறவில்லை. அதனால் இப்படி யெல்லாம் அர்த்தம் பண்ணிக்கொள்வதா? ரொம்ப நன்றாக இருக்கிறது!"

"விடுமுறை நாட்களில் ஊரிலே நீ வீட்டுத் திண்ணையிலும் வாசலிலுமாக நின்றுகொண்டு இருந்ததில்லையா?"

"நாயகர் ஆகிய தாங்கள் வருவீர்கள், காணலாம் என்ற ஆசையினாலே நின்றுகொண்டு இருந்தேன் ஆக்கும்! உள்ளே காற்றோட்டம் இல்லையே என்று நினைத்து வாசலண்டை வந்தேன். நாங்கள் வரவே கூடாது போலும்! என்ன அநியாயம்?"

"அநியாயமா? நியாயமே நான் சொல்வது. வாசற் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிற பெண் பிறரால் வசப்படுத்தத் தக்கவள் என்று காம சூத்திரம் சொல்லுகிறதே!"

"ரொம்ப பேஷ். அந்தச் சூத்திரத்தைக் கட்டிக்கொண்டு அழுங்கள். இன்னும் யாராவது அப்படிப்பட்ட பெண் இருக்கிறாளா என்று பாருங்கள்".

"அன்று என் முன்னிலையில் உன் அக்காள் குழந்தைக்கு நீ முத்தம் கொடுக்கவில்லையா?"

"குழந்தையை முத்துவதும் தப்பா?"

"ஆடவர் மத்தியில் குழந்தைக்கு முத்தம் இடுவது மாதர் காதலைக் காட்டும் என்று சாஸ்திரம் கூறுகிறதே!"

"அந்தச் சாஸ்திரம் எனக்குத் தெரிந்திருந்தால் செய்திருக்க மாட்டேனே என்னவோ! ஆனால், இந்தப் புஸ்தகங்களைப் படித்துத் தப்பாக என்னைப்பற்றி நினைத்துவிட்டீர்களே என்று தான் என் மனம் புண்ணாகிறது. இந்தப் புஸ்தகங்கள்—"

"அது கிடக்கட்டும். அன்று நான் உன்மீது இடித்துவிட்ட போது 'பரவாயில்லை' என்று சொன்னாயா இல்லையா?"

"அங்கேயா வந்தது தப்பு? நீங்களே இடித்துவிட்டீர்கள். பார்க்கவில்லை. கூட்டத்திற்குத் தலைவரை அழைக்கப் போகிற அவசரம், மன்னிக்கவேண்டும் என்று எல்லாம் சொன்னீர்கள். 'பரவாயில்லை' என்று போனேன். அதைப் போய்ப் பிரின்சி பாலிடம் சொல்லி வீணாகக் காரியதரிசிக்குத் தண்டனை வாங்கித் தர இஷ்டம் இல்லாததால், நீங்களும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதால் விட்டுப்போனேன். அது இவ்வளவு தூரத்துக்குக் கொண்டுவந்துவிடும் என்று தெரியாது போயிற்று. இப்பொழுது வேண்டுமானால்—"என்று சொல்லிக்கொண்டே இரண்டு அடி எடுத்து வைத்தாள் காமாட்சி.

தெருவிலே மண்டியிட்டு, "வேண்டாம், வேண்டாம். உன்னை அடியோடு மறந்துவிட்டேன். மன்னித்துவிடு. ஒன்றுஞ் சொல்லி விடாதே. மானம் போய்விடும்" என மன்றாடுகிற ராமுவைப் பார்த்து ஓர் இரக்கச் சிரிப்புச் சிரித்துவிட்டு, "என்றும் உங்கள் தங்கை" என்று கூறி நழுவுகிறாள் காமு.

"பரவாயில்லை!"

தொ. மு. சிதம்பர ரகுநாதன்

புத்துயிர் 18

ராஜீநாமாக் கடிதத்தை ஒருவாறு எழுதி முடித்தேன். ஒரு நீண்ட பெருமூச்சு, மனத்தின் பாரத்தை வெளியே தள்ள முயன்றது. ஆனால், மனமென்ன புகையா, கர்ப்பூரமா, காற்றோடு கரைந்து போவதற்கு? அது ஒரு 'குளோரபாரம்'; இன்பமும் துன்பமும் அளவுக்கு மிஞ்சும்போது, இந்தக் குளோரபாரம் மனிதனை மயக்கிவிடுகிறது.

ஹூம் ... வாத்தியார் உத்தியோகம்! இதுவும் ஓர் உத்தி யோகமா? "வாய்க்கரிசி அற்றவனுக்கு வாத்தியார் வேலை, போக்கற்றவனுக்குப் போலீஸ் வேலை" என்று சொல்வது சரியான வார்த்தைதான். 'மாதா பிதா குரு தெய்வமாம்!' அந்தக் காலம் மலையேறி விட்டதையா! நானும் ஒரு வாத்தியார்தான். ஆம். மந்தை மாடுகளைக் கட்டி மேய்க்கும் மாட்டிடையனைப் போலவுள்ள எலிமெண்டரி ஸ்கூல் வாத்தியார்தான். ஆனால்,

மட்டைகளை இழந்த மொட்டைப் பனைமரத்தின் லக்ஷ்யமற்ற பார்வைதான் என் வாழ்விலும் மிதந்துகொண்டிருந்தது.

ஆனால், அப்போது: நான்கு வருஷங்களுக்கு முன், நான் ஓர் ஆசிரிய மாணவன் என்று நெஞ்சை நிமிர்த்திக் காட்டிய அந்த நாட்களில் .....

அப்போது, நான் ஒரு மாணவ ஆசிரியன் - இல்லை - ஆசிரிய மாணவன்; எப்படி வைத்துக் கொண்டாலும் சரி. ஆம். வாத்தியார் வேலைக்காகத் தயாராகிக் கொண்டிருந்த ஒரு பள்ளி மாணவன்தான். போதனை முறைகளை எங்கள் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும்போது, என்னுடைய மனத்திலேதான் எத்தனை நினைவுகள்! கலைவாணியே நம்மைத்தான் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறாள் என்றெல்லாம் எண்ணிய காலம்; இந்தியாவின் எதிர்காலப் பிரமுகர்களைச் சிருஷ்டிக்கும் பொறுப்பு எங்கள் தலைமேல்தான் விழுந்திருக்கிறது என்று இறுமாந்திருந்த காலம். "கிராம்ய சமூகப் பிரச்னைகள்" (Rural Social Problems) என்றெல்லாம் படிக்கும்போது, அவ்வளவு கிராமங்களையும் சாந்திநிகேதனங்களாகவும், சேவா கிராமங்களாகவும் மாற்றி அமைத்துவிட முடியும் என்றெல்லாம் எண்ணினேன். பள்ளிக்கூடத்தை மையமாக வைத்துக்கொண்டு, இந்தியாவையே கைதூக்கி விடலாம் என்று மனக்கோட்டைகள் கட்டினேன். மனஸ்தத்துவ சாஸ்திரங்களைக்கொண்டு, சிறுவர்களைச் சிறந்த மேதாவிகளாக்கி விடலாம் என்றெல்லாம் கனவுகள் கண்டேன். இந்தியாவிலுள்ள 'இல்லிடரேட்ஸ்' (Illiterates) எல்லாம் எங்களையே எதிர்பார்ப்பதாக நம்பினேன்.

எல்லாம் எப்போது? கவலையற்றுக் கனவு காணும் பள்ளிப் பருவத்தில். ஆனால், இன்றோ?

அந்த ஆகாசக் கோட்டையின் அஸ்திவார மெல்லாம் கிடுகிடுத்துத் தவிடுபொடி யாகிவிட்டன. கொடிகட்டிப் பறந்த எனது மனத்தில் இன்று ஒரு மொட்டைக் கம்பந்தான் மிஞ்சி நின்றது. நைந்து பழங் கந்தையான அந்த லக்ஷ்யத் துவஜம் எங்கே சென்றது என்பதே எனக்கு விளங்கவில்லை.

ஆம். இன்று நான் ஒரு மாணவன் அல்ல. ஆனால், உலகத்தின் சிக்கல்களிடையே அகப்பட்டுத் தவிக்கும் ஒரு சாதாரண வாத்தியார். இந்த 'டானு' உத்தியோகமே, அதிலும் என்னைப் போன்ற எலிமெண்டரி 'டானு'வின் பாடு எப்போதும் ஆபத்துத் தான். ஹையர் கிரேடாம் ஹையர் கிரேடு! கிரேடுக்கு மட்டும் ஒரு குறைச்சல் இல்லை!

கொடுக்கிற சம்பளமோ ரூபாய் பதின்மூன்று. இதற்குள் ஒரு புருஷன், ஒரு பெண்ஜாதி, காணுங் காணுததற்கு ஒரு பிள்ளை வேறு. எப்படி ஐயா பிழைப்பது, இந்தப் பஞ்ச காலத்திலே? ஆனால், வேலை மட்டும் ஒரு வண்டிப் பாரத்துக்குக் கிடக்கும். இதிலே ஆயிரத்தெட்டு விஸிட்டுகள்! இன்ஸ்பெக்ஷன்கள்!

'சார்ட் எங்கே? படமெங்கே? அதெங்கே? இதெங்கே?' என்றெல்லாம் கேள்விமாரி வேறு. சார்ட் வேணுமாம் சார்ட்! சுண்டைக்காய் கால் பணமாம், சுமைகூலி முக்கால் பணமாம்! எப்படி இருக்கிறது கதை?

உஸ்...அப்பா! என்ன புழுக்கம்? இந்த அழகில் பட்டிக் காட்டுப் பக்கம் வேறு மாற்றித் தொலைக்கிறான்கள். இந்தப் பட்டியிலே, கண்ணெட்டும் தூரத்துக்கு, கட்டை மண் சுவர் கூடத் தெரியாத இந்தத் தண்ணீரில்லாக் காட்டிலே, மனுஷனைப் பிறந்தவன் என்ன செய்வான்?

பள்ளிக்கூடமோ, கேட்க வேண்டாம். வருகிற குழந்தைகளோ பூராவும் குடியானவக் குழந்தைகள். பாதி நாள் வரும், பாதி நாள் வயற்காரைக்கோ, சாணம் பொறுக்கவோ, புல் பிடுங்கவோ போய்விடும். மிஞ்சி நிற்கும் ஒன்றிரண்டும் 'பெரிய' வீட்டுச் 'சின்ன' எஜமான்கள். அவர்கள் எல்லாம் செல்வமாய் வருவார்கள்; போவார்கள். தூசி துரும்பு மேலே படக்கூடாது. இதுவும் போக, சில சமயங்களில் குருதேவரே சிஷ்யகோடிகளின் வீடுகளுக்குப் பிரதக்ஷிணம் செல்லவேண்டும். இந்த அழகிலே பள்ளிக்கூடம் நடக்கிறது. சிரிக்கிறீர்களா? சிரியுங்கள்! தொண்டை கிழியக் கத்தும் என்னைப் பார்த்தால் உங்களுக்கு ஏன் சிரிப்பு வராது?

'இதிலெல்லாமிருந்து விடுதலையடைய வழியே கிடையாதா? பதின்மூன்று ரூபாய்க்கும், பதினைஞ்சு ரூபாய்க்கும் 'லொண்டா' அடிப்பதைவிடப் பிச்சை யெடுப்பது நலம். ஆம். கட்டாயம் ராஜீநாமாச் செய்துவிட வேண்டியதுதான். கூலி வேலையுமா கிடையாது? அதைப்போலக் கௌரவமான பிழைப்பு வேறு ...'

இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தேன்.

"வாத்தியாரையா, எங்கம்மா" என்ற ஒரு பெண் குரல் என் சிந்தனையைக் குலைத்தது.

இந்த உலகிற்குத் திரும்பினேன். ராஜீநாமாக் கடிதம் மேஜை மேல் திறந்து கிடந்தது, சிறைக்குள்ளிருக்கும் கைதியை வெறித்து நோக்கும் வெளியுலகைப் போல.

எதிரே ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். நாட்கணக்காய், அலைமேல் அலையாய்ப் படிந்த சோகத் திரைகள் அவள் முகத்தில் நிறைந்திருந்தன. பக்கத்திலே ஒரு பெண் குழந்தை சிணுங்கிக் கொண்டிருந்தது.

"என்னம்மா, குழந்தை யாரு?" என்று பரிவோடு கேட்டேன், அந்தப் பெண்ணிடம். அவள் பதில் கூற வில்லை. பாதி படிந்த பாறையில், நீரடியில் ஓட்டிக் கிடக்கும் சிப்பிகளைக் காணும் ஓர் அபூர்வப் பார்வையால் என்னை வெறித்து நோக்கி நின்றாள்.

"படிக்க வந்திருக்குதா, அம்மா?" என்றேன் மறுபடியும்.

"ஆமாம்" என்று பதில் கூறிவிட்டுப் பழையபடி நின்றாள்.

நானும் அவளைப் பார்த்தேன். அந்தப் பெண்ணின் முகம், களிம்பேறிய பித்தளை விக்கிரகம் போன்ற அந்த முகம், எனக்கு எங்கோ பழகிய முகம்போல இருந்தது.

என் சிந்தனை, கடந்த காலத்தின் நினைவுச் சுழல்களில் சுழன்றது.

அப்போது: 'எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி, எட்டாத பேராசைக் கோட்டை கட்டி' வாழும் வாலிபப் பருவம் அது.

நான் எங்கள் கிராமத்தில் வாழ்ந்துவந்தேன். பள்ளிப் படிப்பின் மயக்கத்திலே மூழ்கி உத்சாகமாகத் துள்ளித் திரிந்த காலம். அப்போதுதான், அவள் என் மனத்தைச் சூறையாடிக் கொள்ளைகொண்டிருந்தாள். என்றைக்காவது ஒருநாள் அவளைக் காணுவிடில் யுகமாயிருந்த காலம். காதலா? பிரமையா? அன்பா? நேசமா? நட்பா? - எந்த வார்த்தையினால், அந்த உணர்ச்சியைப் புலப்படுத்த முடியுமோ, தெரியவில்லை. எதுவா யிருந்தால் என்ன? வேனிற்காலத்திலே வெம்பரப்பான மைதானத் திலே, ஒரு நிமிஷம் சுழித்தடிக்கும் காற்றைப்போல, அவள் என் வாழ்வில் இருந்தாள். எதுவாயிருந்தென்ன? எனக்குக் கல்யாண மாகிப் பேர் சொல்ல ஒரு மகனையும் பெற்றுய்விட்டது. எனினும், மனத்தின் கவனிப்பற்ற ஓர் மூலையில், அவளுடைய உருவம் நன்கு அழுந்தியிருந்தது. ஆனால், அவளைப்பற்றி நினைப்பதினும் பயனில்லைதான். அவளுக்குக் கல்யாணமாகி விட்டது.

பனிமூடிய மலைபோன்ற அந்த முகம், என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவள் முகந்தானா? என் எதிரே நிற்கும் இந்தப் பெண்தானா, அவள்? ஒருவேளை.....

"உங்கள் ஊர் எதம்மா?" என்றேன், மிகவும் ஆவலோடு.

"என்னுடைய ஊர் கருங்குளம். ஏன்?" என்றாள் தயக்கத்தோடு.

"இல்லை, நீ புதுவீட்டுப் பொண்ணுல்லே" என்றேன்.

"ஆமாம். நீங்களும் அன்னம்மா பிள்ளைதானே?" என்றாள் அவள். ஆம், அன்னம்மாள் என் தாய்தான். ஆனால், அவளுக்கு என்னுடைய இந்தக் கஷ்ட நிலையைப் பார்க்க ஈசன் வழி வைக்க வில்லை. ஹூம்! என் சந்தேகமும் தீர்ந்தது.

"உனக்கு இங்கேதான் கல்யாணமாயிருக்கிறதா? குழந்தை உன்னுடையதுதானா?"

"ஆமாம். அதுக்கொண்ணும் குறைச்சலில்லை. குழந்தை யாவது நல்லா வாழணும் என்பதுதான் என் கவலை."

"அப்படியென்ரூல், உன் புருஷன் ஏதேனும் ....."

"அதையேன் கேட்கிறீங்க! பிறந்த வீட்டிலே இருந்த சீர் சிறப்புக்கும் இங்கே வந்து சிரழிகிறேன். அவரோ வீட்டிலேயே தங்குகிறதில்லே. அடிக்கடி, பட்டணக்கரைக்குப் போரூர். ஊர் ஜனங்களோ, அவரைப் பத்தி என்னமோ குடியின்னும், கூத்தியின்னும் ....." என்று கூறி அழ ஆரம்பித்தாள்.

அவளது சோபையிழந்த கன்னங்களில் அந்தக் கண்ணீர் ஓட ஆரம்பித்தது. அப்பா! பசும்புல் தரை போன்ற அவளது யௌவனம் கனிந்த முகத்தில் காலதேவன் இப்படி நடந்து நடந்து அதைக் கருக அடித்திருக்கவேண்டாம். பட்டுப்போன பசுமையை எழுப்ப எண்ணும் அமுத தாரைபோலக் கண்ணீர் வழிந்தது.

"அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று மனசைச் சமாதானப் படுத்தவேண்டியது தான்."

"என்னமோ குழந்தைக்காகத்தான் உயிரோடிருக்கேன்... ம்...அது சரி. நீங்க இங்கேதான் இருக்கிறீங்களா"?

"ஆமாம், மாத்திவந்து மாசம் ஒண்ணேச்சு. ஒரு வசதியில்லே. குடும்பத்தோடுதான் தங்கியிருக்கேன். என்ன இருந்தாலும், நம்ம ஊரு மாதிரி இருக்குமா?"

"வீடு எங்கே?"

"அதோ அந்தக் காரை வீடு தெரியுது பார்; அதுக்கு எதிர்த்த வளவிலேதான்."

"நானும் அடுத்த தெருவிலேதான் இருக்கேன். என்னமோ நம்ம ஊர் மனுஷரும் ஒருத்தர் இருக்காரேன்னுதான் மனசை ஆத்திக்கொள்ள வேணும்.....விதிச்சது அவ்வளவுதான்."

"ஏம்மா சலிச்சிக்கிறே? இன்னைக்கிக் கெட்டவராயிருக்கிறவரு, நாளைக்கி நல்லவராயிடமாட்டாரா? நாம் நினைக்கிறபடியெல்லாம் நடக்குமாம்மா!" என் கண்களில் நீர் சுரந்தது, காரணமின்றி.

ஒரு கணைப்புக் கணைத்துக்கொண்டு, "குழந்தையை மட்டும் நல்லாக் கவனி. அதுதான் உனக்கு ஆறுதல்" என்றேன், மிகவும் அநுபவப்பட்ட புலிபோல.

"என்னமோ நானும் இருக்கேன். குழந்தைக்குத் தாங்கள் தான் ஸர்வமும். அதை முன்னிலைக்குக் கொண்டு வரவேண்டியது உங்கள் பொறுப்பு. நாளை..."

"அதற்கென்ன? உன் பிள்ளை வேறு, என் பிள்ளை வேரு?" என்றேன். அந்த நிமிஷத்திலேயே என் தலைமேல் ஓர் இன்ப கரமான சுமை ஏறுவதுபோல இருந்தது.

அவள் போய்விட்டாள்.

என் மனம் பழையபடி சுற்றி அலைந்தது.

துருப்பிடித்துக் கிடந்த என் மனத்தில் ஏதோ ஒரு புது மின்சார சக்தி பாய்வதுபோல இருந்தது. என்னுடைய நரம்பு களும், உணர்ச்சிகளும் ஏதோ புத்துயிர் பெற்றவைபோல் துள் ளின. வாடிக் கிடந்த எனது இருதயச் செடி தலை நிமிர்வதாகத் தோன்றியது.

அந்தக் குழந்தைக்கு வித்தியாப்பியாசம் செய்து, அதனை முன்னிலைக்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்பு இன்றியமை யாத நிர்ப்பந்தமாகக் காட்சி அளித்தது.

மேஜையின்மேல் கிடந்த ராஜீநாமாக் கடிதத்தை வெறித்து நோக்கினேன்; எடுத்தேன். அர்த்தமில்லாமல் இரண்டு மூன்று தடவை வாசித்தேன். உள்ளத்தில் உவகை ஊற்றெடுத்தது.

ராஜீநாமாக் கடிதத்தைக் கிழித்தெறிந்து வெளியில் பறக்க விட்டேன். மனம் குதூகலித்தது.

"ஸார், ஸார்! நம்ம வாழையிலே, புதுக் குருத்து விட்டிருக்கு ஸார்!" என்று ஓடிவந்தான், ஒரு சிறுவன்.

"அப்படியா!" என்றேன் நிம்மதி நிறைந்த மனத்தின் உவகையோடு.

வெ. ஸ்ரீ. சுந்தரராஜன்

சிற்பியின் மனம் 19

1

ஊரெல்லாம் அதே பேச்சாக இருந்தது. வழியில் யாரையாவது பார்த்தால் அந்தச் சந்நியாசியைப்பற்றியே கூறினார்கள். அவ ருடைய அபார சக்தியைக் குறித்துக் கதை கதையாகச் சொன் னார்கள். அவரிடம் ஏதோ மந்திரம் இருந்தது என்றும், அவர் வாய்ச்சொற்கள் யாவும் பலிக்கின்றன என்றும் கேள்விப் பட்டேன்.

எனக்கு ஜோசியத்தில் எப்பொழுதுமே நம்பிக்கை உண்டு. இதுவரை எவ்வளவோ பேரிடம் என் கையைக் காட்டியிருக் கிறேன். என் ஜாதகம் எவ்வளவு கைகள் மாறினவோ? தெருக் கோடியில் இருக்கும் பக்ஷி ஜோசியன் முதல்கொண்டு, பத்திரி கையில் முழுப்பக்க விளம்பரம் கொடுக்கும் சோதிட நிபுணர்வரை என் பிற்கால வாழ்வை நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் என் துரதிருஷ்டம்: அவர்கள் சொன்னதில் நூற்றுக்குத் தொண்ணூற் றொன்பது பொய்த்துப் போயின.

மலையடிவாரத்தில் தங்கியிருந்த சந்நியாசியின் மகிமையைக் கேள்விப்பட்டபின், 'அவரிடமுந்தான் நம் கையை நீட்டினால்

என்ன?' என்று ஓர் ஆசை எழுந்தது. ஒரு நல்லநாள் பார்த்து அவர் இருக்குமிடம் சென்றேன்.

நான் சென்றபொழுது அவ்வளவு கூட்டம் இல்லை. ஒவ்வொரு வராக வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். சுவாமியார் தனியாக உட்கார்ந்திருந்தார். அவரைச் சுற்றிலும் காணப்பட்ட அலங்காரங்கள் என் மனத்தைக் கவர்ந்தன.

அவரருகே இரண்டு படங்கள் இருந்தன. ஒன்று ஓர் இளைஞரின் புகைப்படம். சுவாமியார் இளைய வயசில் எடுத்ததாக இருக்கும் என்று எண்ணினேன். மற்றொன்று கையால் வரையப் பட்ட படம். ஆகா! அதுதான் எவ்வளவு அற்புதமாக இருந்தது, தெரியுமா! படத்தின் தலைப்பில் காணப்பட்ட, "எப்போ வருவாரோ" என்ற வாக்கியம் எவ்வளவு பொருத்தமாக அமைந் திருந்தது! படத்தினடியில் காணப்பட்ட 'சோமு' என்ற கையெழுத்து அப்படத்தை வரைந்தவர் இன்னார் என்பதைப் புலப் படுத்தியது.

என் தகப்பனாரும் ஒரு சித்திரகாரரே. ஆனால் எனக்குத் தெரிந்து இதுவரையில் அவர் இவ்வளவு அழகான, அற்புதமான, படத்தை வரைந்ததே இல்லை. அப்படத்தைப் பார்த்ததி லிருந்து அந்தச் சித்திரகாரரைப் பார்க்க வேண்டும்போலிருந்தது. என் மனோரதத்தை அச் சந்நியாசி நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டாயிற்று.

"என்னப்பா யோசிக்கிறாய்? வந்த விஷயம் என்ன?" என்று சுவாமியார் அன்பொழுகக் கேட்டார். உண்மையாகச் சொல்லு கிறேன். அச் சித்திரத்தைப் பார்த்துக்கொண்டு நின்றதில் வந்த விஷயங்கூட மறந்துவிட்டது. என் எண்ணத்தை அவரிடம் கூறி என் ஆவலைத் தணித்துக்கொள்ள நிச்சயித்தேன்.

"சுவாமிகளே, அந்தப் படத்தை எழுதியவர் யார், எங்கிருக் கிறார் என்பதை நான் அறிந்துகொள்ளலாமா?" என்று கேட்டேன்.

"அதோ அந்தப் புகைப்படத்தில் இருப்பவரே இதை எழுதினார். அவர்தாம் என் குரு. என்னைக் கரை யேற்றியவர்" என்றார்.

"ஆமாம், அவர் இப்போது இல்லையா?"

அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது. "அவர் உயிருடன் இருந்தால் நான் ஏன் இப்படி இருக்கிறேன்? அவர் இறந்து பதினைந்து வருஷங்களுக்கு மேலாகிறது. அதுமுதல் வாழ்க்கையில் வெறுப்புற்று இப்படி நாடோடியாகத் திரிந்து வருகிறேன்" என்றார்.

சற்று நிதானித்து, "அது போகட்டும். ஒருவரும் இதைப் பற்றிக் கேட்காமல் இருக்க நீ மட்டும் கேட்க என்ன காரணம்?" என்று கேட்டார்.

"இப்படத்தை வரைந்தவர் வாழ்க்கையில் ஏதாவது அதிசயம் இருக்கும் என்று தோன்றியது. அதனால் கேட்டேன்" என்றேன்.

பின்னால் அவர் கூறிய சம்பவங்கள் என்னை ஆச்சரிய வெள்ளத்தில் ஆழ்த்தின.

2

சிறுகுடியிலிருந்து 'ராமராயர் கலாபவன'த்திற்கு இரண்டு சிறுவர்கள் வந்து சேர்ந்தனர்: சேகரும், சோமுவந்தான்; அவ் விருவரும் மிகவும் நெருங்கிய நண்பர்கள்.

அண்டை வீட்டுக்காரர்களான அவ்விருவருக்கும் சித்திரக் கலையில் ஆர்வம் இருந்தது. ஒருவரை ஒருவர் மிஞ்சும்படி படம் வரைவார்கள். ஆனால் இருவரில் சேகர்தான் முதல். எந்தப் போட்டியிலும் சேகருக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும். இது சோமுவின் மனத்தில் சற்றே பொறுமையை உண்டாக்கும்.

சோமு பணக்காரர் பிள்ளை. சேகரோ ஏழை. அவனுக்கு மேற் கொண்டு தன் கலையை அபிவிருத்தி செய்துகொள்ள முடியும் என்ற நம்பிக்கையில்லை. தகுந்த சமயத்தில் சோமுவின் தந்தை கைகொடுத்தார். தன் மகனுக்குத் துணையாகச் சேகரையும் 'கலா பவன'த்திற்கு அனுப்பிவைத்தார். இந்த நன்றியை மறக்கவில்லை அவன். அதற்குப் பிரதியாக ஏதாவது செய்து தீருவேன் என்று உறுதி செய்துகொண்டான்.

ஓர் அழகிய கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த கலா பவனத்தைச் சுற்றி இயற்கையன்னை தாண்டவமாடிக்கொண் டிருந்தாள். சித்திரகாரர்களுக்கென்றே அமைந்த இடம் அது என்று கூறலாம். மேலும் அங்கே பயின்றுவந்த மாணவர்களும், அவர்களுடைய குரு ராமராயரும் பழங்காலத்துக் குருகுலங்களை ஞாபகப்படுத்தினர்.

சேகரும் சோமுவும் குருவுக்குப் பணிவிடை செய்துகொண்டு அங்கேயே வசித்துவந்தனர்; மற்ற மாணவர்களிடையே இரு நட்சத்திரங்களென ஜொலித்தனர்.

ராமராயர் அடிக்கடி தம் சிஷ்யர்கள் வரையும் படங்களைப் பத்திரிகைகளுக்கு அனுப்புவார். அவைகளிலிருந்து கிடைக்கும் பணத்தில் அவர்களுக்குச் சித்திரக் கருவிகள் வாங்கித் தருவார். கலாபவனத்தை விட்டு வெளிவருமுன்னரே அவர்கள் பெயரை அவர் முன்னணிக்குக் கொண்டுவந்தார்.

குருவுக்குச் சேகரிடத்தில் தனி மதிப்பு உண்டு. சோமுவும் அவருடைய அன்புக்குப் பாத்திரனாகிவிட்டான். இருவரும் அவருடைய செல்வப் பிள்ளைகளாயினர்.

அவ்வப்பொழுது அவ்விருவருக்கும், மற்ற மாணவர்களுக்கும் சித்திரப்போட்டி ஏற்படுத்துவார். அவைகளிலெல்லாம் சேகர்

முதலாவதாகவும், சோமு இரண்டாவதாகவும் தேறுவது வழக்கம். அதைக்கண்டு ராமராயர் மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளுவார். சித்திரக்கலை புத்துயிர் பெறுவது சிரமமல்ல என்று அவர் திடமாக நம்பினர்.

இந்த விஷயங்களைப் பெற்றோர்கள் அறிந்து பெரிதும் மகிழ்ந்தனர்.

* * * *

ராமராயர் சேகரிடம் காட்டிவந்த பிரத்தியேக அன்பு சோமுவின் மனத்தில் பொறுமைத் தீயைக் கிளப்பியது. தன் தகப்பனாரின் பணத்தைக்கொண்டு பயிலுபவன் தன்னைவிட நன்றாகப் படம் வரைவதா என்று சோமு ஆத்திரப்பட்டான். சில சமயங்களில் ராமராயர் இருவரையும் வைத்துக்கொண்டு சோமுவைக் கேலி செய்வார். "நீ என்னதான் முயற்சி செய்தாலும் சேகருக்கு இணையாகப் படம் வரையமுடியாது" என்பார். அது வேறு எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றினாற்போல ஆகும்.

நாளுக்கு நாள் வளர்ந்துவந்த பொறுமைத் தீ அவன் மனத்தில் கொடிய எண்ணங்களைக் கிளப்பிவிட்டுக் கொண்டிருந்தது. சேகரின்மீது பழி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவன் துடித்தான். "வாத்தியார் கேலி செய்ததை மனசில் வைத்துக் கொள்ளாதே!" என்று சேகர் அன்புடன், ஆறுதலாகச் சொல்லுவான். தன்னைக் கேலி செய்யவே அப்படிச் சொல்லுகிறான் என்றெண்ணிப் பதில் சொல்லாமல் சோமு போய்விடுவான்.

3

நான்கு மாதங்கள் சென்றன.

அன்று ராமராயர் வகுப்புக்குள் நுழைந்தவுடனே ஒரு சுற்றறிக்கையை வாசித்தார்.

'சித்திரக்கலையில் ஆர்வம் காட்டுவோர் தம் திறமையை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பம் வந்திருக்கிறது. உங்கள் கைத்திறனையெல்லாம் உபயோகித்து மிகச்சிறந்த படத்தை வரைந்து .....ந் தேதிக்குள் நமக்கு அனுப்பிவையுங்கள். மிகவும் நேர்த்தியான படத்திற்கு ஆயிரம் ரூபாய் பரிசு அளிக்கப்படும். நீங்கள் அனுப்பப் போகும் படங்களைக் கூடிய சீக்கிரம் இவ்வூரில் நடக்கப் போகும் கண் காட்சியில் வைக்கப் போகிறோம்.'

"என்ன, உங்களுக்குப் புரிந்ததா? இதற்கு நம் கலாபவனத்திலிருந்து சேகரும், சோமுவும் மட்டும் படம் அனுப்பினால் போதும். படங்களை வரைந்து என்னிடம் கொடுத்துவிடுங்கள். அல்லது நேரில் அவர்களுக்கே அனுப்பி விடுங்கள்" என்று முடித்தார் ராமராயர்.

சேகரின் முகம் மலர்ந்தது. தான் கைம்மாறு செய்யக்கூடிய சந்தர்ப்பம் வந்துவிட்டது என்று உளம் மகிழ்ந்தான்.

சோமுவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கோபம் கோபமாக வந்தது. 'சேகருக்கு இன்னொரு பரிசா? அவன் இந்தத் தடவை பரிசு வாங்கவொட்டாமல் அடிக்கவேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டான்.

தன் மனநிலை மற்றவர்களுக்குத் தெரிந்துவிடாமலிருக்க ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் சோமு. அவன் சிரித்த சிரிப்புக்கும், சேகர் அளித்த புன்னகைக்கும் எவ்வளவு வித்தியாசம்?

4

கண் காட்சிக்குப் படங்கள் வந்த வண்ணம் இருந்தன. ஏற்கனவே வந்திருந்த படங்களில் ஒன்று வருவோர் போவோரின் கவனத்தை மிகுதியாகக் கவர்ந்தது. அதன் தலைப்பில் 'எப்போ வருவாரோ!' என்று காணப்பட்டது.

"ஒரு குளம். நிறையத் தண்ணீர். பக்கத்திலே பச்சைப் பசேலென்று வளர்ந்திருக்கும் வயல்கள். இரண்டு தென்னை மரங்கள். அங்கே ஓர் இளங்கன்னி நின்று யாரையோ எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாள். ஆமாம்! அவரைத்தான். பூரண சந்திரன் அப்போதுதான் உதயமாகியிருந்தான்." — இதுதான் அப்படத்தில் இருந்த காட்சி.

படம் வரைந்தவர் யார் என்று தெரியவில்லை. ஆனால் சிலர், "அது சேகர் போட்டதுதான்" என்று கூறிக்கொண்டு போயினர்.

* * *

பரிசளிப்பு விழா நெருங்கிக் கொண்டிருந்தது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே போட்டி முடிவு வெளியிடப் படுவதாக இருந்தது.

அன்று ஏகக்கூட்டம். கூட்டத்தில் சேகர் மலர்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தான். அடிக்கடி அவன், 'எப்போ வருவாரோ!' என்ற குறிப்புள்ள படத்தைப் பார்த்துக்கொண்டிருந்ததைக் கொண்டு ஜனங்கள் அது சேகரின் படந்தான் என்று முடிவு செய்தார்கள்.

சோமுமட்டும் அங்கே காணப்படவில்லை. சேகருக்குப் பரிசளிப்பதைப் பார்க்க விரும்பவில்லை போலும்!

முடிவு செய்யும் குழுவினர் வந்துவிட்டனர். அடுத்த நிமிஷம் சேகரின் மனோரதம் ஈடேறப் போகிறது.

"இன்று நமது சித்திரப் போட்டியின் முடிவை வெளியிட முடியாமைக்கு வருந்துகிறோம்" என்று சொல்லிவிட்டு, "ஆயினும், அங்கே வைத்திருக்கும் 'எப்போ வருவாரோ?' தான் முதல் பரிசு

பெறும் என்று நினைக்கிறேன்" என்று கூறினர் குழுவின் தலைவர். யாவரும் 'சேகருக்குப் பரிசு!', 'சேகருக்குப் பரிசு' என்று கூறிக்கொண்டே எழுந்தனர்.

அப்பொழுதே வாசலில் பெரிய கூச்சல் கேட்டது. மறு கணம் ஒரே புகை மாற்றம். கண் காட்சிப் பந்தல் பற்றி எரிந்து கொண்டிருந்தது. ஜனங்கள் நாலுதிசையிலும் சிதறிப்போயினர்.

சோமு இதைத் தூர நின்று கவனித்துக்கொண்டிருந்தான். 'பயல் ஒழிந்திருப்பான்!' என்று அவன் வாய் முணு முணுத்துக் கொண்டிருந்தது. ஜனக்கூட்டம் கலைந்தது. தீ அணைக்கப்பட்டு, அழியாமல் இருந்தவற்றைச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள்.

சோமுவின் கண்களில் 'எப்போ வருவாரோ' படம் சிக்கி யது. ஆத்திரத்துடன் அதைக் கிழிக்கப் போனான். படத்தின் கீழ்க்கோடியில் இருந்த ஒன்று அவன் கண்களைக் கவர்ந்தது: 'சோமு!' அவன் கண்கள் சுழன்றன.

"ஐயோ! பாவியானேன்!" என்று கூவிக்கொண்டே கீழே மயங்கி விழுந்தான்.

5

"மறுபடியும் மூர்ச்சை தெளிந்து சோமு எழுந்தபோது அவனுக்கு உலகமே இருண்டு விட்டதுபோல இருந்தது. 'எப்போர்ப்பட்ட உத்தமனுக்கு - தன்னுடைய உயிர்த்தோழனுக்கு, புகழும், பணமும் சம்பாதித்துத் தரவேண்டும் என்ற எண்ணத் துடன் இருந்தவனுக்கு – நீங்கு செய்த மகாபாவி' என்று தன்னைத் தானே வெறுத்துக்கொண்டான். அவன்தானே தீ வைத்தவன்? சேகர் வெளியே வராமல் போகவே அவன் இறந்து சாம்பலாகி இருப்பான் என்று முடிவு செய்தான்.

"வாழ்க்கை கசந்தது. சேகர் இல்லாத வாழ்க்கை எதற்கு என்று எண்ணித் துறவு கொண்டான். தேச யாத்திரை செய்துவருகிறான்" என்று முடித்தார். அவர் கண்களில் ஜலம் பெருக்கெடுத்து ஓடியது.

அவர்தாம் சோமு என்று தெரிந்துகொண்டேன்.

"சுவாமி, நீங்கள் சேகர் விபத்தில் இறந்ததாக அல்லவா சொன்னீர்கள்? அது இல்லை என்று தெரிந்தால் உங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகும்?" என்றேன்.

"என்ன? என்ன? என் சேகர் உயிருடன் இருக்கிறானா? எங்கே, எங்கே?" என்று உளறினார் சாமியார்.

"உண்மையில் சேகர் உயிருடன்தான் இருக்கிறார். தீ விபத்திலிருந்து தப்பி இவ்வூருக்கு வந்துவிட்டார். சென்ற பதினைந்து ஆண்டுகளாக இங்கேதான் வசித்துவருகிறார். கல்யாண மாகி ஒரு பையனும் இருக்கிறான்" என்றேன்.

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?"

"எனக்குத் தெரியாமல் வேறு யாருக்குத் தெரியப் போகிறது?" என்றேன்.

"என்ன அப்படிச் சொல்லுகிறாய்? சேகர் உன் நெருங்கிய சிநேகிதரா என்ன?"

"சிநேகிதரல்ல. பெற்ற தந்தை!" என்றேன்.

"என்ன? சேகர் உன் தந்தையா?"

"ஆமாம்? அவன் என் பிள்ளைதான்" என்று கூறியவாறு என் தந்தை சேகர், உள்ளே நுழைந்தார்.

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

வேங்கை வீரன் 20

"ஒருவன் மலை எலி; மற்றவன் பாலை எலி. இருவரும் எம்மாத்திரம்? மாய்த்தே தீர வேண்டும். இன்றேல் நிம்மதி ஏது? ஏகாதிபத்தியமும் எங்ஙனம் சுடேறும்?" என்றான் ஔரங்கசீப்.

"எலிகளா இருவரும்? எலிகளாயின் பொறியில் சிக்கியிருக்குமே. இருவரும் புலிகள். வீரன புலிகள்! வெல்ல முடியாத புலிகள்! மாய்த்தல் எங்ஙனம்? மனப்பால் குடிப்பதேன்?" என்றான் அவி கான்.

"புலிகளா? நல்லது. மொகலாயச் சிங்கம் சும்மா விடுமோ? இருவரையும் வேரறுக்கும். அவர் வமிசத்தையும் பூண்டறுக்கும். வெங்கீரும் வார்க்கும். இன்றேல் வல்லரசு என்பது வீண் மயக்கு. வெறும் பேச்சன்று. வீளைவில் பார்க்கலாம்" என்று ஔரங்கன் பல்லைக் கடித்தான்.

"வேந்தர் வேந்தே! வீண் வீறுப்பு வேண்டாம். பாலைப் புலிதான் நம்மிடம் சேவகம் செய்கிறதே. தட்டிக் கொடுத்தால் போதும். உச்சி குளிர்ந்து உள்ளன்புடன் மிளிரும். நம் பொருட்டு உயிரையே வழங்கும். தந்தை ஷாஜஹான் வழியைப் பின்பற்றுங்கள். வர்மம் வேண்டாம். பாலைப்புலி - மாருவார வேந்தன் - யசோவந்த சிம்மன் - ராஜபுத்திர திலகம்" என்றான் அவி கான் எடுப்பாக.

நாட்கள் பல பறந்தன. மாதங்களும் கழிந்தன. மாருவார் மன்னவன் யசோவந்தனுக்கு எத்தனையோ ஆபத்து. உணவில் நஞ்சு, சம்மான ஆடையில் நிராவக விஷம், பானத்தில் பாங்கான பச்சைநாவி, விருந்தின் நடுவே வாள் வீச்சு, வேட்டை நேரத்தில் வஞ்சனை வீளைவு.

பாண்டவ வீமனே மாய்க்க அன்று துரியோதனன் பெருமுயற்சி புரிந்தான். எல்லாம் மண்ணைக் கவ்வின. காரணம் கண்ணபிரானது கருணை அங்ஙனமே யசோவந்தனை மாய்க்க ஓயாச் சதி, ஒழியா வஞ்சனை, அரிய சூழ்ச்சி, பெரிய பிரயத்தனம். எல்லாம் வீண். காரணம் முகுந்த தாஸனது பேரன்பு, மிகு வீரம், வெகு தீரம். அம்முகுந்தன் யார்? அவன் வரலாறு யாது?

மாருவார மன்னவனுக்கு அவன் பெருமித தளவாய். மதிநலம் படைத்த முதல் மந்திரி. பேர் பெற்ற பிரதானி. உயிர்த் தோழன். கும்பவந்தர் குலத்தவன். அக்குலத் தலைவனுமாம். அம்முகுந்தன் போரில் புகுந்தால், பகைவர் வீர சுவர்க்கம் புகவேண்டும். இன்றேல் முறிபட்டு ஓடவேண்டும். போர் வன்மை அத்தகைத்து.

புயவன்மை எப்படி? கருடப் பார்வை அன்பருக்குப் பரிவு ஊட்டும்; பகைவருக்கோ உதைப்பு உண்டாக்கும். கம்பீரமான தோற்றம். அது பலருக்கும் பிரமிப்பே விளைக்கும். அகன்று பருத்த தோள்கள். அவை குன்றின் முண்டுபோல் துலங்கும். பருத்துக் கொழுத்த பாதங்கள். அவை குட்டிக் குஞ்சரத்தின் கால்களே போல் துலங்கும். அரையிலே ஒரு பக்கம் பட்டாக் கத்தி, ஒரு பக்கம் குத்தீட்டி. உறைக்குள் கிடந்தாலும் ஒளியே வீசும்.

ஔரங்கசீபும் சரி, மொகலாய வீரரும் சரி, முகுந்தனது தோள்வலி கண்டு, உள்ளூற வியப்புக் கொள்வர்; பிரமிப்பும் எய்துவர். மாருவாரத்தை மண்ணுக்க மொகலாயர் விரும்பி நின்றனர் என்றால், மாருவார மன்னவனும் அவ்வல்லரசை வாட்டி வதைக்க வேளையை நோக்கி நின்றான். யசோவந்தன் எங்கே செல்லினும் சரி, நிழல்போல் உடனிருப்பான் முகுந்த தாஸன்.

அவ்வீர வேந்தன் அந்தப்புரஞ் செல்லுங்கால் பக்கத்து அறையிலே அத்தளவாய் படுத்திருந்து பாதுகாவல் புரிவான். ஔரங்கசீபின் பிரதான சிற்றரசரில் யசோவந்தன் ஒருவன். ஆதலின், அவன் அடிக்கடி ஆக்ரா நகருக்குச் செல்ல நேரும். உயிர் இருந்தால்தான் உடல் இயங்கும். முகுந்தன் உடன்சென்றால் என்ன, யசோவந்தன் ஆக்ரா நகர் போகான். அடுத்துக் கெடுக்க ஔரங்கன் முயன்றும் என்ன?

வஞ்சனை முனையில் தோல்வி கொண்ட மொகலாய சக்கரவர்த்தி மனம் மறுகினான். மூர்க்கம் மிகுந்தான். வைரமே கொண்டான். முகுந்தனைக் கண்டால் அவனுக்கு எரிச்சல் கிளம்பும்; அது புகைச்சல் கொள்ளும். மனக் கனலோ மண்டி எழும்; வகையின்றி மடங்கியும் விழும். எத்தனை நாளைக்கு இத்தகைய மனநிலை? ஒரு தினம் முன்கோபம் மூண்டுவிட்டது. அடக்க வழியில்லை. ஆற வழி தேடினர் அமைச்சர்.

சுருங்கச் சொல்லின் ஆக்கினை பிறந்து விட்டது முகுந்தனுக்கு. சக்கரவர்த்தியை அவமதித்த குற்றம், புலிக் கூண்டில்

போடவேண்டும் என்பதே ஆக்கினை. குரியோதயம் தடைப் படலாம். ஔரங்கசீபின் ஆணைக்குத் தடை ஏது? அதுவும் சிற்றரசனது சேவகன் விஷயத்தில். 'என்ன விளையுமோ? யாது நேருமோ?' என்று நடுங்காதார் இல்லை.

பதினைந்தடி வேங்கை, வங்கத்தின் காட்டில் வசித்தது. வேடரின் வல்லமையால் சிக்குண்டது. மூன்று தினங்களுக்கு முன்புதான் கானகத்தேயிருந்து வந்தது. அம்மூன்று தினங்களாக அது சுத்தப் பட்டினி. அடங்கி ஒடுங்க வேண்டும் என்று ஆகாரமே போடவில்லை. பசியின் கடுமை. வேங்கை தன் வால் கொண்டு கூண்டின் கதவைச் சாடுகிறது. முன்னங்கால் கொண்டு அறைகிறது. கேட்போர் கதிகலங்கக் கர்ஜனை புரிகிறது.

அத்தகைய வேங்கையின் கூண்டில் முகுந்தனைத் தள்ளப் போகின்றனரென்று நகரெங்கும் செய்தி பறந்தது. கண்டு களிக்க அனைவரும் திரண்டு வந்தனர். யானை மைதானத்திலே ஒரே ஜனத்திரளாக இருந்தது மைதானத்தின் அருகே மாளிகைச் சாளரத்தில் படிதாண்டாப் படுதாப் பத்தினிகள். நடுநாயகமான இடத்திலே சக்கரவர்த்தியின் சிம்மாசனம் அமைக்கப் பெற்றிருந்தது. சுற்றிலும் பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், சிற்றரசர், தளகர்த்தர் முதலியோர் வீற்றிருந்தனர்.

ராஜபுத்திரருக்கு அபினி மருந்தே அரிய சஞ்சீவி. போர்க் கோலம் கொள்ளுவதென்றால், புயவலி காட்டுவ தென்றால், பகைவனைப் பிளந்தெறிவதென்றால், ஆயுதங்கள் தரிக்குமுன்னம் அபினி அருந்துதல் வழக்கம். முகுந்த தாஸனுக்கோ அபினி மருந்தே ஆகாரம் என்னலாம். அபினியை அருந்திவிட்டால், அவன் கண்கள் சிவக்கும்; கனற் பொறி கக்கும். நாசியோ அக்கினி ஜ்வாலை வீசும். நரம்புகளோ முறுக்கேறும். மீசையோ துடிதுடிக்கும். முகத்திலே ருத்திரகளை ஜொலிக்கும்.

அந்த மைதானம் வந்து சேர்ந்தது வேங்கை வரிப்புலி. முகுந்த தாஸனும் மைதானத்தில் இறங்கினான்; குதித் தான் என்றே கூறவேண்டும். யசோவந்தனைப் பார்த்தான்; கையெடுத்துக் கும்பிட்டான்; இனத்தாரான ராஜபுத்திரரை நோக்கினான்; நோக்கிலேயே வணக்கம் புரிந்தான். சபையோரை ஏறிட்டு இங்குமங்கும் கண்களைத் திருப்பினான். நீண்டு வளர்ந்த மீசையை முறுக்கினான். வீர கர்ஜனை யொன்றும் காட்டினான்.

முகுந்த தாஸனைப் பார்த்தனர் பலரும். புலியையும் நோக் கினர். "என்ன மமதை இவனுக்கு? மகாராஜனை அவமதித் திருப்பான். ஏற்ற தண்டனைதான். சரீரக்கொழுப்பு வடிந்தாக வேண்டும்" என்றனர் சிலர்.

"என்ன அக்கிரமம்! என்ன தண்டனை! வேங்கையின் கூண்டிலா மானிடனைத் தள்ளுவது? ஆண்டவனுக்குச் சம்மதம் ஆகுமோ? அடுக்குமோ இது? எல்லாம் மொகலாய தர்பார்! ஏன்

என்று கேட்பார் யாவருளர்? செங்கோலுக்கு முன்னே சங்கீதம் ஏது?" என்றனர் சிலர் மனத்தூடே.

"எத்தகைய வேங்கையாயின் என்? சிங்கத்தின் கூண்டிலும் புகுந்து சிங்கநாதஞ் செய்யும் இப் புருஷசிங்கம். நம் அம்மை பவானி அருள் சுரப்பாள்" என்றனர் ராஜபுத்திர மாதரில் சிலர்.

"முடிவு என்னுகிறது பார்ப்போம். முகுந்தன் வாகையே சூடுவான். ஒருகால் விபரீதம் விளையின் மைதானத்தை ரணகளமாக்குவோம். நம் மரபையே அவமதிக்கிறான் ஔரங்கன். உடையில் வாள் உளது. ஒரு கை பார்க்கலாம்" என்று உள்ளூற உறுத்துநின்றனர் ராஜபுத்திர ஆடவர்.

"கோரக் காட்சியையா காணவந்தோம்? நரவாசனை கண்டு இம்மிருகம் பதைக்கிறது. முகுந்தன் கதி யாதாகுமோ? ஈசனே காத்தல் வேண்டும்" என்று கைகூப்பித் தொழுதனர் சிலர்.

பலரும் இங்ஙனம் பேசி நின்றனர். முகுந்தனோ சிறிதும் நடுங்கவில்லை. மதோன்மத்தனுக அக் கூண்டை நோக்கி நடந்தான். கால்கொண்டு கதவை உதைத்தான். கைகொண்டு கதவின் தாழைத் திறக்கலானான். சபையோர் நடுங்கும் வண்ணம் வீரகர்ஜனை ஒன்று புரிந்தான். தோள் தட்டினான்.

நரனை அருகே கண்டதுதான் தாமதம், பதினெறடி வேங்கை பயங்கரமாக உறுமியது. முன்கால் நகங்கொண்டு கூண்டைக் கீறியது. வரிகளமைந்த வாலை நேரே உயர்த்தியது. அவ்வீரன் மீது பாயவும் ஆயத்தமாயது.

முகுந்தன் அக்கூண்டினுள் நுழைந்தான். தன் தோள் இரண்டையும் தட்டினான். மீசையை முறுக்கினான். கண்கள் பிதுங்க நோக்கினான். கர்ஜனையும் செய்தான். பலரும் பதைத்தனர், திகைத்தனர், தேம்பினர்.

இடிமுழக்கம் போன்ற கர்ஜனை, கோவைப்பழம் போன்ற கண்ணெளி, இருப்புலக்கை போன்ற தோள்கள்; இவை எல்லாம் கண்டது அக்கானகப் புலி. கணநேரம் அசைவற்று நின்றது. கருத்தூடே கலக்கமும் கொண்டது; பின்னர் மெல்ல மெல்லப் பின்வாங்கியது. கூண்டின் ஓரம் சேர்ந்தது. வாலைச் சுருட்டிக் கால்களின் இடையே வைத்துக்கொண்டது. கதிகலங்கிக் குந்திக் கொண்டது.

பார்த்தான் முகுந்தன்; "மொகலாயப் புலியே! யசோவந்த சிங்கத்தின் முன்னே நிற்கவும் மொய்ம்பில்லை. உன்னை என் செய்வது?" என்று மீண்டும் முழக்கஞ் செய்தான். மூலையில் பதுங்கிக்கொண்ட புலியோ மேலும் ஒடுங்கிக் கூண்டில் சாய்ந்து, குலைந்த கோலமே காட்டியது.

அவ்வளவில், முகுந்தன் அக் கூண்டை விட்டு வெளியே வந்தான்; தோள்தட்டி ஆர்த்தான்; ஔரங்கனை நோக்கினான்; "மன்னர் மன்ன, உனது வேங்கை என் எதிரே நிற்கவும் தீரம்

கொள்ளவில்லை. பயந்து பதுங்குகிறது; பரிபவமும் அடைகிறது. நிமிர்ந்து நிற்க இயலாமல், ஓடுங்கும் பகையை எதிர்த்தால் எங்கள் மரபுக்கு ஈனம். ஆதலின் உன் புலி உயிர்ப்பிச்சை பெற்றது" என்று கோஷித்தான்.

ஔரங்கன் மூர்க்கம் மிகுந்தவன்; வைராக்கிய புருஷன்; எனினும் மெத்தப் படித்தவன். வீரனுமாம். எனவே முகுந்தனது வீரங் கண்டான்; வியப்புக் கொண்டான்; விழுமிய உவகையும் பூத்தான். ஏனைய மொகலாயரோ, முகுந்தனது மனவலி நோக்கினர்; உடல்வலியும் கண்டனர்; உடனே உள்ளம் ஓடுங்கினர். ஊமைகள்போல் ஆயினர்.

ஔரங்கசீப் அது கண்டு, "வீரமிகுந்த, வீராதி வீரன் நீ. வங்க வேங்கை உன் தோற்றம் கண்டு சாய்ந்துவிட்டது. உன்னை வேங்கை வேந்தன் என்பதா? வேங்கை வீரன் என்பதா?" வீரத்தின் அவதாரம் நீ. வீர வடிவு நீ. வீர விளக்கும் நீயே!" என்று புகழ்மாலை சூட்டினன். பொன்னுடையும் முத்தாரமும் பரிசளித்தான். வீரகண்டையும் வழங்கினன்.

'முகுந்தனுக்கு மக்கள் உளரோ?' என்றறிய ஆவல் கொண்டான் ஔரங்க சக்கரவர்த்தி. "வேங்கைவீர, உனக்கு மைந்தர் எத்தனை?" என்று வினவினன். "வேந்தே, சதா போர்முனை; இன்றேல் எங்கள் இறைவனைப் பக்கத்திருந்து பாதுகாக்கும் பொறுப்பு. இந்நிலையில் மனையாளுடன் மகிழ நேரம் ஏது? மக்களை அடையவும் வகை ஏது?" என்று விடையளித்தான் அவ்வேங்கை வீரன்.

பின்னர் யசோவந்தன் தன் ஆசனம் விட்டெழுந்தான். வேங்கை வீரனை எதிர்கொண்டு கைலாகு கொடுத்தான். அழைத்து வந்து அருகே அமர்த்திக்கொண்டான். ராஜபுத்திர வீரர் அனைவரும் உடனே அணிவகுத்து நின்று, உடைவாளை உருவி உயரத் தூக்கி, அரசனுக்கும் தளவாய்க்கும் அரிய வணக்கஞ் செய்தனர்; அப்பால் ஆனந்த ஆரவாரமும் புரிந்தனர்.

அந்த ஔரங்கனுக்கு அன்பான மைந்தன் ஒருவன் இருந்தான்; அவன் பெயர் காமபட்சன். பெயருக்கேற்பக் காமலோலனே. ராஜபுத்திரரின் வீரங் கண்டு சொக்குபவன். பாராட்டுபவன். வேங்கைவீரனை அவன் விருந்துக்கு அழைத்தான். விதவிதமான பண்டங்கள் அளித்தான். வியன் புகழுரையும் வழங்கினன்.

பின்னர் அவ்விளவலும் வேங்கை வீரனும் தாம்பூலம் தரித்துக் களித்தனர். காமபட்சனுக்கு உச்சி குளிர்ந்தது. "வீர, உன் வல்லமை காண எனக்கும் ஆவல் மிகுதி. பரிமீது நீ நாலு கால் பாய்ச்சலில் பறக்கவேண்டும். அவ்வேளை வழியிலே, தலைக்கு மேல் உள்ள மரக் கிளையில் தொத்திக்கொள்ள வேண்டும். இதனைக் காண, களிக்க, விழைகிறேன்" என்றான்.

அவ்வீர விளையாட்டில் கரணம் தப்பினால் மரணம். பலர் காலொடிந்தும் கைமுறிந்தும் போயுளர். இதனை முகுந்தன் அறிவான். அத்துடன் காமபட்சனது கர்வத்தைக் குலைக்கவும் உணர்ச்சி உண்டு. ஆதலின், "இளவரசே! இளம்பிள்ளாய்! என் வல்லமையை வாள் முனையில் காண்பதே மேல். விளையாட்டில் காணுதல் விழுமியதன்று" என்றான் எடுப்பாக.

"அங்ஙனமா? நல்லது. சூரதனை என் முன்னே கொணர்ந்து நிறுத்தவேண்டும். அவனைக் கண்டு களிக்கவேண்டும்" என்றான் காமபட்சன். சூரதன் யார்? அவனே சிரகநாட்டின் அதிபன். அன்னியர் எவருக்கும் வணங்காதவன். அடிமையரசர் முதல் ஓளரங்கன் வரையில் அவனை மடக்கப் பார்த்தனர். ஆயினும் ஆகவில்லை. ஒரு முறை காமபட்சன் அவனிடம் கடுந்தோல்வி அடைந்தான்.

வைரத்தின்மீது வைரம் பாய்வதுபோல் சூரதன்மீது வேங்கை வீரன் பாயவேண்டும். ஒரு நிபந்தனை கூறினன். ஆக்ராவின் எல்லைக்கு அச்சூரதன் வந்ததும் காமபட்சன் கால் நடையாக வந்து எதிர்கொள்ள வேண்டும். பின்னர்ச் சதுரங்க சேனை சகிதம் அவனை அழைத்துச் செல்லவேண்டும் என்பதே நிபந்தனை. சரி என்று சிரக்கம்பம் செய்தான் காமபட்சன்.

சுருங்கச் சொல்லின், முகுந்த தாஸன் சிரகநாடு சேர்ந்தான். அந்நாட்டின் தலைநகரம் அசைலகிரி. அக்கிரியின் சிகரத்தில் சூரதன் மாளிகை. அம்மாளிகைக்கு ஓரேயொரு கொடிப்பாதை. அதுவும் மகா அந்தரங்கமானது; சூரதனுக்கும் அவன் உயிர்த் தோழனுக்குமே தெரியும். கொடிப் பாதையைக் கண்டுகொள்ளினும், மாளிகையைச் சுற்றிப் பெரிய மதில்.

காமபட்சனுக்குக் கொடுத்த வாக்குறுதி ஒரு புறம். அவனுக்குப் புத்தி புகட்டவேண்டியது ஒரு புறம். சூரதன் கீர்த்திக்குப் பங்கம் நேரக் கூடாதென்பது ஒரு புறம். பாம்பின் கால் பாம்பறியும். அதுபோல் சூரதன் தன்மையும் காவலும் முருந்தனுக்குத் தெரியும். ஒரு தினம் நள்ளிரவு. முகுந்தன் தனைவர் அசைலகிரிக்கு அப்பால் நிற்கின்றனர்.

முகுந்தன் அக்கொடிப் பாதை கண்டு கிரியின்மீது ஏறினன். மதிலைத் தாண்டி உள்ளே குதித்தான். சூரதனை மஞ்சத்தில் அயர்ந்து தூங்குகிறான். மஞ்சத்துடன் அவனைத் தோளில் கொண்டான். கிரியை விட்டுக் கீழே இறங்கினன். இதற்குள் சூரதன் வீரர் விழித்துக் கொண்டனர். முகுந்தனை வழி மறித்தனர்.

முகுந்தன் மொழிவான்:—"வீரர்காள்! உங்கள் தலைவன் என் நண்பன். அவன் மானம் என் மானம். அவனுக்கு ஒரு தீங்கும் நேராது. முகுந்தன் சொன்ன சொல் தவறான். வீணே நீங்கள் கறுவிக் கிளம்பவேண்டாம். என் உடைவாளின்

மீது ஆணை. சூரதனும் சிரகமும் சிறப்பு எய்தலே என் நோக்கம். கடமையுமாம்."

மணி மந்திரங் காணின் நாகம் தன் படமடங்கும். சிரக வீரரும் முருகந்தன் சொற்கேட்டுச் சினம் விடுத்தனர். சிரகச் சூரதன் வந்தான் என்று கேட்டதும் யசோவந்தன் களிகூர்ந்தான். முருகந்தனை முதலில் மார்புறத் தழுவினான். பின்னர்ச் சூரதனைக் கட்டியணைத்தான். "நண்ப, உனக்கு ஊறொன்றும் நேராது" என்று உடைவாளைத் தொட்டுக் கூறினான்.

சூரதன் வருகை காமபட்சனுக்கு எட்டிற்று. அவனும் தன்னைத் தனியே விரைந்து வந்தான். சூரதனைப் பார்த்ததும் பிரமித்தான். பரவசமுங் கொண்டான். அப்பரவசத்தில் அவனைக் கையெடுத்தும் கும்பிட்டான். "அன்று போர் முனையில் உனக்குத் தோற்றேன். இன்றோ உன் தோற்றம் கண்டு தோற்றேன்" என்று கூறினான். பின்னர்க் காமபட்சன் மாளிகையிலே அனைவருக்கும் விருந்து நடந்தது.

ஔரங்கசீப் அனைத்தும் அறிந்தான். ஆத்திரம் கொண்டான். விருந்துண்ட அனைவரையும் அத்தாணி மண்டபத்துக்கு அழைத்தான். மொகலாய அரசவைக்குப் புதிதாக வருவோர், அங்குள்ள சிம்மாசனத்தை நோக்கி மண்டியிட்டுச் சலாம் செய்ய வேண்டும். சூரதன் அதற்கு மனமொப்புவனோ? பெரிய வீட்டு மருமகப் பிள்ளையேபோல் கம்பீரமாக அச்சபைக்குள் புகுந்தான். யசோவந்தனது அருகே வீற்றிருக்கலானான்.

பார்த்தான் ஔரங்கசீப். சூரதனைத் தன்னருகே அழைத்தான். பக்கத்தில் அமர்த்திக்கொண்டான். கோபக்குறி காட்டிப் பேச வாயெடுத்தான். உடனே சூரதன் சொல்லுவான் :—

"அரசே, கோபமேன்? தாபமேன்? முருகந்தனை நம்பி வந்தேன். யசோவந்தன் வாக்கை மதித்து இவண் போந்தேன். பிற மனிதனை வணங்குவதென்பது என் குலத்தாருக்கு இல்லை, இங்கிலையில் குலத்தலைவன் இச்சபையில் மண்டியிடுவனோ? உனது அவையில் உள்ளேன் என்பதை உணர்வேன். என் உயிருக்கு ஒருவேளை ஆபத்து நிகழலாம். முருகந்தனும் யசோவந்தனும் உளர், அந்த ஆபத்து நேராவண்ணம் பாதுகாக்க. எல்லாவற்றிற்கும் மேலாக என் உடைவாள் உளது."

அங்ஙனம் கூறிய சூரதன் தன் உடைவாளில் கை வைத்தான். சூரதனது முகப்பொலிவு, முருகந்தன் நிலை, யசோவந்தன் தன்மை இவற்றையெல்லாம் ஔரங்கசீப் நோக்கினான். உள்ளூற அறிவழிந்தான். "வீர, உனக்கு யாது வேண்டும்?" என்றான்.

"அரசே, பிறனிடம் நான் பெறுவது யாதுளது?" என்று பதிலிறுத்தான் சிரக வேந்தன் சூரதன். "நல்லது, நம் சபைக்கு வந்தனை. வறிதே போதல் அழகன்று" என்று கூறிப் பொன்னுடை வழங்கினான். வீரகண்டையும் பரிசளித்தான். வீரம் வாழ்க!

குளத்தங்கரைக் குயில்கள் 21

அழகிய குளம்; மாசு மறுவற்றுத் தெளிந்த ஜலம்; உருக்கி விட்ட வெள்ளிக் கம்பிபோல் சிலிர்க்கும் அலைவரிகள்; குளுகுளுக் காற்று; குளத்தில் தாமரையும் அல்லியும் ஏராளம்; தாமரைகளில் வண்டுகள் பாடுகின்றன. சுற்றிலும் பளிங்குப் படிக்கட்டு; நாற் புறமும் சோலைகள், சோலைகளில் ரோஜா மலர் சூரிய காந்தியை முத்தமிடுகிறது; மல்லிகையும் முல்லையும் நாணத்தால் குவிந் துள்ளன; பறவைகள் ஒன்றோடொன்று கொஞ்சிக் குலாவு கின்றன.

அன்று குளத்தங்கரைக் குயிலனுக்கும் குயிலிக்கும் 'கண்ணுலம்.' குயிலனுக்கு வயசு எட்டு, குயிலிக்கு வயசு ஏழு. சின்னப்போது முதற்கொண்டே இருவரும் இணைபிரியாத 'ஜோடிகள்.' அதிகாலையிலேயே குளத்தில் குளித்துவிட்டுத் தலையில் ரோஜா இதழ்க் கிரீடமும், கழுத்தில் தும்பைப் பூக் கா ரையும், காதுகளில் சின்னஞ் சிறிய பூவரசந் தோடுகளும், காலில் மஞ்சட்பூக் கொலுசும் பூண்டவளாய்க் குயிலி பரம சௌந்தர்யத் தோடு விளங்கினுள். குயிலனும் மூங்கிலின் வெள்ளாடை பூணந்து, காலில் குண்டு மணியாற் செய்த தண்டையோடு கல்யா ணத்திற்குத் தயாரானுன். காலை எட்டு மணிக்கு முகூர்த்தம்.

மணமக்களுக்கு எருக்கம்பூப் பஞ்சியினுல் வண்டுகள் சாமரை வீசின. கீலவர்ணப் பட்டுப் பூச்சிகள் ஒவ்வொரு மலர் வீட்டுக்கும் சென்று மகரந்தப் பொற்காசுகள் சேகரித்து வந்தன. குருவிகள் தான்யங்களைக் கொத்திக்கொண்டு வந்து குவித்தன. காக்கைக் கூட்டமொன்று ஒரு மிட்டாய்க் கடையை அப்படியே 'அபேஸ்' செய்துகொண்டு வந்து இங்கே கடை பரப்பிவிட்டது. வானம் பாடிச் சிறுமிகள் ஊரழைக்கப் போயிருந்தன.

கண்ணுலம் ஆரம்பமாயிற்று. குளத்தங்கரை ஆல மரத்தின் உச்சிக் கிளையிலே, ஐந்து தாமரை மலர்கள் கவிழ்த்த சிகரத்தின் கீழ்த் தம்பதிகள் வீற்றிருக்கின்றனர். கிழப் புரோகிதக் காக்கை யொன்று பட்சி பாஷையில் மந்திரம் கூறுகிறது. கக்கக்கா என்ருல் கடவுளாம்; கிக்கிக்கீ என்ருல் கிளிவாகனனுகிய மன்மதனும்; குக்குக்கூ என்ருல் குயிலாம். 'கடவுளும், மன்மதனும் குயில் தம்பதிகளைக் காப்பாராக!' என்ற பல்லவி அடிக்கடி எல்லோராலும் பாடப்பட்டது.

அச்சமயத்தில் வனதேவதைகள் வந்து இறங்கினர். ஆ! எவ்வளவு சௌந்தர்யம்! சின்னஞ் சிறு கன்னிகைகள், இறக்கை பெற்ற அல்லி மலர்கள், ஆவியாற் செய்த அன்னப் பேடுகள், மின்னலே வடித்த மின்னரசிகள் – அவர்கள் பாட ஆரம்பித்தனர். பாட்டாவது பாட்டு! இசை விசிறி கொண்டு கான மழையைச்

சலசலத்த அமுத தாரை. தம்பதிகளைச் சுற்றித் தேவதைகள் கூத்தாடினர், சமுத்திர அலையின்மீது சந்திரனொளி கூத்தாடுவது போல். எல்லோருடைய, ஏன் - எல்லா வஸ்துக்களுடைய பார்வையும் இவ்வானந்தக் கூத்தில் சொக்கிப் போய்ச் சொருகி விட்டது.

அப்போது அவர்களுள் தலைவியாகிய 'மதன மணி' என்னும் வனதேவதை கூறினாள்: "தோழிகளே, குயிலனும், குயிலியும் என்றும் இளைஞராய், எப்போதும் அழியாத இன்பமும் அன்பும் நிறைந்து விளங்கவேண்டும் என்று நான் ஆசீர்வதிக்கிறேன்." அதன வீணைக்குரலில் மற்றவர்களும் ஆமோதித்தனர்.

அடுத்த கணத்தில் வனதேவதைகள் மறைந்துவிட்டனர். குயிலனும், குயிலியும் ஒருவரை ஒருவர் தழுவி முத்தமிட்டுக் கொண்டனர். கண்ணுலம் முடிந்தது.

* * * *

ஒரு வாரம் கழிந்தது. துன்பக் கலப்பற்ற இன்ப உலகத்திலே ஒரு வாரம் ஒரு கணமாய்ப் புதுத் தம்பதிகளுக்குத் தோன்றியது. அவ்வனத்தில் அவர்கள் நடமாடாத சந்து பொந்து ஒன்றுமே இல்லை; விளையாடாத விளையாட்டில்லை; அனுபவிக்காத இன்பம் இனித்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்தச் சமயத்தில் வேற்று வனத்திற்குத் தன் மகளைக் காண்பதற்காகச் சென்றிருந்த 'கொள்ளிக் கண்ணி' என்ற கொடிய வனதேவதை திரும்பிவந்தாள். தான் இல்லாத சமயத்தில் குயிலனும் குயிலியும் கண்ணுலம் செய்துகொண்டதைக் கேட்டு ரௌத்திராகாரமான கோபமடைந்தாள். அவளுடைய கண்ணில் நெருப்புக் குழுறியது. மூச்சில் வெப்பம் கக்கியது; பறவைக ளெல்லாம் பயந்தோடின.

"ஆ! இவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டதா? நான் ஒரு கிழவி இருக்கிறேன் என்பதை நினைத்துப் பார்த்தார்களா? நான் வந்த பிறகு கல்யாணம் செய்தாலென்ன, குடி முழுகியா போய் விடும்? இருக்கட்டும், அவர்கள் வாழ்வதை ஒரு கை பார்க்கிறேன்" என்று கர்ஜித்தாள்.

குயிலனும் குயிலியும் அதே ஆலமரத்தின் கிளையில் உட்கார்ந்து ஒருவருக்கொருவர் கதை சொல்லிக்கொண்டிருந்தனர். அவ்விடத்திற்கு இக் கொடுங்கூளி கொள்ளிக்கண்ணி போய்ச் சேர்ந்தாள். தம்பதிகளை ஆசை தீர மனம் போனபடி திட்டினாள். அவர்கள் நடுநடுங்கிப் போய்விட்டனர். எவ்வளவு தூரமோ சமாதானம் செய்து பார்த்தனர். கிழவி அடங்குவதாகக் காணவில்லை. கடைசியில் குயிலனுக்குக் கோபம் வந்துவிட்டது. "அடி துஷ்டை! நீ இங்கிருந்து கத்தாதே. உனக்கு இஷ்டமானபடி செய்துகொள்" என்று எரிச்சலோடு கூறினான்.

அவ்வளவுதான்; அக்கினிக் கடலொன்று கொந்தளிப்பது போல் கிழவி ஆகாசத்துக்கும் மண்ணுக்குமாகத் தாண்டித் தாண்டிக் குதித்தாள். "ஆ! ஆ!" என்று உறுமினாள். கோபத்தோடு, "உங்கள் கண் அவிய" என்று குயில் தம்பதிகளுக்குச் சாபம் கொடுத்தாள்.

குயில் தம்பதிகள் குருடாயின. ஆனால் ஆச்சரியம்! வனம் முழுவதும் இருண்டுவிட்டது. பறவைகளெல்லாம் திசை யறியாது தடுமாறின. ஏனெனில் வெளியிலுள்ள ஒளியெல்லாம் குயில் காதலர்களின் உள்ளத்தில் ஒடுங்கிவிட்டது. குயிலியும் குயிலனும் ஒருவருக்கொருவர் கட்டித் தழுவிப் பிணைந்துகொண்டனர்.

கிழவிக்குக் கோபாவேசத்தில் தன்னைச் சுற்றி உண்டான மாறுதல் தெரியவில்லை. கண்ணவிந்த பிறகும் குயிலனும் குயிலியும் கட்டித் தழுவியதைப் பார்த்துவிட்டாள். அவ்வளவு தான், "உங்கள் இறகுகள் சக்தியற்றுப் போக" என்று மறுபடியும் சாபமிட்டாள்.

குயில்களுக்கு நகரவுங்கூட முடியவில்லை. ஆனால் வலிமைத் தேவனுகிய காற்று அவ்வனத்தை விட்டு நீங்கிவிட்டான். எல்லா விதமான அசைவுகளும் தீர்ந்துபோயின. ஒரே யோர் அசைவற்ற உறக்கம் வனத்தைப் பீடித்தது. குளத்து ஜலங்கூடப் பனிக்கட்டி போல் உறைந்துபோயிற்று. குயில்கள் மட்டும் ஒன்றையொன்று அணைத்தவாறே கூடிக் கலந்தன.

கிழவிக்குக் கோபம் தாங்க முடியவில்லை. "உடல் புழுக்க" என்று மூன்றும் முறை சாபம் இட்டாள். அவ்வளவுதான், குயில்களின் உடலில் சீழ் வடிய ஆரம்பித்தது. ஆனால் ஆச்சரியம், வனம் முழுவதும் புழுக்கள் நெளிந்தன. அப்போதுதான் கிழவிக்கு உண்மை தெரிந்தது. "இதென்ன உற்பாதம்?" என்று மயங்கினாள்.

* * * *

இங்கு நடப்பவைகளை யெல்லாம் தன்னுடைய வாகனமாகிய கிளி சொல்ல அறிந்த மதனதேவன் தன் உபாசகர்களுக்கு வந்த கதியைக் கேட்டுக் கோபமுற்றான். உடனே தென்றல் தேரில் ஏறி இவ்வனத்திற்கு விஜயம் செய்தான்.

எங்கும் இருளாயிருந்தது. வனம் முழுவதும் புழுக் கூட்டம். தென்றற்பரி தடைப்பட்டது. அப்போது கிளி சொல்லுகிறது: "எஜமானே! அக்கொள்ளிக்கண்ணி குயில்களின் இறக்கைகளை ஒடித்ததனால் அசைவுத் தேவனுகிய காற்று வெளியே போய் விட்டான். வனத்தின் அழகும், ஒளியும் காதலர்களின் உள்ளத்தில் புகுந்துவிட்டன."

மதனதேவன் உடனே ரதத்தை விட்டு இறங்கிக் கால்நடையாகவே அவ்வனத்துள் புகுந்தான். அவனைச் சுற்றி மட்டும் ஒரு வெண்பொன்னொளி வீசிக்கொண்டிருந்தது. சாதாரணமாய்ச்

சாந்தமான அவனது முகம் அப்போது கோபத்தால் சிவந்திருந்தது. கண் பார்வையில் மின்னல் வெட்டியது. கொள்ளிக்கண்ணியின் முன் மதனன் வந்துவிட்டான்.

கொள்ளிக்கண்ணியும் காதல் தேவனைக் கண்டுவிட்டாள். அவளுடைய தேகம் நகசிகை பரியந்தம் பயத்தால் நடுங்கியது. ஏதோ ஆபத்து வந்துவிட்டதென்று அவளுக்குத் தெரியும்.

மதனனது கம்பீரமான குரல் பேசலாயிற்று: "ஹே கொள்ளிக்கண்ணியே! என்னுடைய உபாசகர்களது ஜோலிக்குப் போவதில்லை என்று நீ சத்தியம் செய்துகொடுத்தது நினைவு இருக்கிறதா? பாவம். கள்ளங்கபடறியாத இச்சின்னக் குயிற் குஞ்சுகள் மேலா உனது கோபத்தைக் காட்டவேண்டும்? அப்படித்தான் காட்டினையே; உண்மையான காதலை, உயிரோடு உயிர் கலந்த அன்புக் கடலை, உன்னால் அழித்துவிட முடியுமா? அடி பேதையே! காதல்தானே இவ்வுலகத்தை யெல்லாம் ஆட்டி வைக்கிறது? காற்றும், ஒளியும், அழகும் எல்லாம் காதலின் விரிவே யல்லாது வேறென்ன? காதல் போய்விட்டால் உலகமும் அன்றே அழிந்துபோய்விடும். உன்னுடைய கோபத்தின் பயனைப் பார்த்தாயா? இவ்வழகான வனம் போயிருக்கும் போக்கைப் பார். சீ! நீயும் ஒரு வனதேவதையா? உனக்கு அவ்வுரிமை யார் கொடுத்தது? பிடி சாபம். நீ குருட்டு விழியும், ஒடிந்த இறகும், புழுத்த உடலும் உடைய கிழக் குயிலாக மாறிப் போ" என்று மதனன் கர்ஜித்தான்.

மறுகணம் கிழவி குயிலாக மாறிப்போய்க் கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்தாள். மன்மதன் மனம் இளகவில்லை.

அவன் குயிற் குஞ்சுகளைத் தன் மந்திரக்கோலால் தட்டி, "கண்ணும், சிறகும், உடலும் அழிந்தும் காதலழியாத சின்னக் குழந்தைகளே! நீங்கள் இருவரும் எல்லையில்லாத பேரழகுடைய வனதேவதைகளாய் மாறி, இவ்வனத்தை ராஜாவும் ராணியுமாய் ஆண்டுவருவீராக" என்று வரம் கொடுத்தான்.

ஆ! என்ன ஆச்சரியம்! குயிலனும் குயிலியும் அங்கில்லை. அதற்குப் பதில் மின்னலைக் குழைத்துச் செய்ததுபோன்ற, வான் சிறகுகள் பூண்ட ஓர் இளங்குமரனும், இளங்குமரியும் மன்மதனைத் தொழுகின்றார்கள்.

"ஐயனே! ஏதோ தெரியாத்தனத்தால் கொள்ளிக் கண்ணி எங்களுக்கு இழைத்த துன்பங்களை மறந்து அவளுக்குப் பழைய உருவைக் கொடுத்தருள வேண்டும்" என்று வனதேவதைகளான புதுக் காதலர்கள் மன்றாடினர்.

மதனனும் மனம் இளகினன். எனினும் கொள்ளிக்கண்ணி அவள் மகள் வீட்டை விட்டு வெளி வரலாகாது என்று உத்தர விட்டான். மன்மதன் மறைந்தான்.

* * * * *

வனத்தில் ஒளி புகுந்தது; மலர்கள் மலர்ந்தன; பறவைகள் பாடின. குளத்தில் பனிக்கட்டி உருகியது. வனதேவதைகள் தங்கள் ராஜனியும் ராணியையும் சுற்றிக் கூத்தாடினர்.

"காத லென்பதோர் மையம் - இந்தக்
காசினி வட்டச் சுழலதற் கச்சு
காதலில் தோன்றுது வாழ்க்கை - இன்பக்
காத லழிவு மரணத்தின் சேர்க்கை"

என்று இளி கவி செய்தது.

சௌந்தரம்

தனக்கு வந்தால் தெரியும்! 22

I

ரகுநாதன் காரியாலயத்திலிருந்து வந்து சட்டையைக் கழற்றிக் கொண்டிருந்தான். "அண்ணு, வாங்கிக்கொண்டு வந்தாயா?" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் விமலா.

"என்ன அது? என்னவோ நூல் என்று சொன்னுயே. அது தானே? என்ன கலர்? அது மறந்துபோய் விட்டதே. இன்றைக்கு மறந்துவிட்டேன். நாளைக்கு அவசியம் ஞாபகப்படுத்து. கலரையும் எழுதியாவது கொடு. வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்ருன் ரகுநாதன்.

"ஆமாம்! உனக்கு நான் சொன்னல் ஞாபகம் இருக்குமா, என்ன? அவள் சொன்னல் உடனே வாங்கிக்கொண்டு வருவாய்!"

"நீ என்ன கேட்டு நான் வாங்கித் தரவில்லையோ, தெரிய வில்லை! மறந்துபோய்விட்டால் பிரமாதப்படுத்துகிருயே!"

"சரி, அதுதான் மறந்துபோய்விட்டது. எனக்கு ஜாக்கெட் துணிகள் வாங்கவேண்டும், ஜவுளிக் கடைக்குப் போகலாம், வருகிருயா?"

"இல்லை, விமலா. நான் இப்பொழுது வர முடியாது. நாளைக்கு அவசியம் போகலாம்."

"நான் சொன்னல் வருவாயா? ஜானகி சினிமாவுக்குப் போக வேண்டுமென்றல் உடனே கிளம்பிவிடுவாய்!" என்று விமலா சொல்லிக் கொண்டிருந்தபோது, அதைக் கேட்டுக்கொண்டே கையில் காபியுடன் உள்ளே வந்தாள் ஜானகி. அங்கே விமலாவைக் கண்டதும், "என்ன, சினிமாவுக்குப் போக வேண்டுமா?" என்ருள் அவள்.

"ஆமாம்; அண்ணு சினிமாவுக்குப் போகப் போகிருனும், நீயும் கூடப் போ!" என்று படபடப்பாகச் சொல்லிவிட்டு வெளியே வந்துவிட்டாள் விமலா.

அவள் போனதும் ஜானகி, "என்ன இது? விமலா ஒரே கோபமாக இருக்கிறாளே?" என்றாள்.

"எல்லாம் உன்னால் வந்ததுதான்" என்றான் ரகுநாதன்.

"என்னால் என்னவாம்? நான் அவளைக் கோபித்துக் கொள்ளச் சொன்னேனா? நீங்கள் இப்படி யெல்லாம் சொன்னால் நானும் கோபித்துக்கொண்டு விடுவேன்!"

"வேண்டாம், ஜானகிதேவி. கோபித்துக்கொண்டு விடாதே. இந்தப் பொம்மனாட்டிகளே இப்படித்தான். ஒன்றும் இல்லாததற் கெல்லாம் கோபம், அழுகை எல்லாம் வந்துவிடும்!"

"பொம்மனாட்டிகளைக் கண்டு பயப்படுகிறவர்கள் ஏன் அவர்களைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்?"

"இல்லை; கல்யாணம் ஆவதற்குமுன் பயப்படவில்லை. ஆன பிறகுதான் பயப்படவேண்டி யிருக்கிறது."

"நீங்கள் ரொம்பத்தான் பயப்படுகிறவர்கள்.....போகட்டும், விமலாவுக்கு என்ன கோபம்?"

"நான் ஆபீஸுக்குப் போகும்போது ஏதோ கலர் நூல் வாங்கிக்கொண்டு வரச் சொன்னாள். வாங்கிக் கொண்டுவர மறந்துவிட்டேன். ஜாக்கெட் துணி வாங்க ஜவுளிக் கடைக்குக் கூப்பிட்டாள். நீயும் ஏதோ துணிகள் வாங்கவேண்டும் என்ற படியால் எல்லோருமாக நாளைக்குப் போகலாம் என்று சொன் னேன். அவளுக்கு ரொம்பக் கோபம் வந்துவிட்டது. எல்லா வற்றிற்கும் முக்கிய காரணம் நீதான். அவள் எப்பொழுதும் அப்படியில்லை. நீ வந்ததிலிருந்துதான் இப்படி நடந்துகொள் கிறாள். அவள் மனசு இப்பொழுதெல்லாம் சரியாயில்லை. எனக்கு அவள்மீது இருந்த பாசம் நீ வந்ததனால் குறைந்துவிட்டது என்று அவள் நினைக்கிறாள். எல்லாம் கொஞ்ச நாள் போனால் அவளுக்கும் தெரியும். ஆனால் அதுவரை நீதான் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்."

"இதுதானே? என்னவோ ஏதோ என்று பயந்துவிட்டேன். ஏன், இன்று கடைக்குப் போக முடியாதா?"

"இல்லை, இன்றைக்கு ஒருவரைப் பார்க்கப் போகவேண்டும். நாளைக்கு ஆகட்டும்" என்று சொல்லிவிட்டான் ரகுநாதன்.

2

அன்று இரவு விமலா ஒருவரோடும் கலகலப்பாகப் பேச வில்லை. சாப்பாடானதும் தலை வலிக்கிறது என்று சாக்குச் சொல்லிவிட்டுப் படுக்கைக்குச் சென்றுவிட்டாள்.

மறுநாள் சாயங்காலம் ஜானகி விமலாவைப் பார்த்து, "விமலா, டிரஸ் பண்ணிக்கொள். ஜவுளிக் கடைக்குப் போகலாம். நேற்று ஜாக்கெட்டுக்குத் துணி வாங்கவேண்டு மென்றாயே" என்றாள்.

"ஆமாம், நான் ஒன்றும் கடைக்கு வரவில்லை. நேற்று நான் கூப்பிட்டதும் வர முடியவில்லை அண்ணுவுக்கு. இன்று உனக்கு வாங்கவேண்டு மென்றதும் வர முடிகிறதாக்கும்! எனக்கு ஒன்றும் கடை தெரியாமல் போகவில்லை. நான் போய்க்கொள்ளுகிறேன்" என்றுள் விமலா.

"என்ன இது, விமலா? உனக்கு ஏன் இவ்வளவு கோபம்? நேற்று உன் அண்ணுவுக்கு வரச் சௌகர்யப்பட வில்லைபோல் இருக்கிறது. இன்று போனுல்தான் என்ன?"

"நீ ஒன்றும் எனக்குச் சமாதானம் சொல்லவேண்டாம்!"

"நான் ஒன்றும் குற்றமாகச் சொல்லவில்லை. நீ வருவதா யிருந்தால் வா, போவோம்!"

"நான் வருவதாயிருந்தால்தானே வரவேண்டும்? நான் வர வில்லை." இவர்கள் இப்படித் தர்க்கம் பண்ணிக் கொண்டி ருக்கையில் ரகுநாதன் மாடியிலிருந்து, "என்ன கிளம்பியாச்சா?" என்று கேட்டான்.

"அது என்னமோ எனக்குத் தெரியாது. விமலா வரவில்லை யாம். நானும் வரவில்லை!" என்றுள் ஜானகி.

"ஏன் விமலா? நேற்று வரவில்லையென்று கோபமா?" என்று கேட்டுக்கொண்டே கீழே வந்தான் ரகுநாதன்.

"எனக்கென்ன கோபம்? நேற்று நான் கூப்பிட்டதும் உனக்கு வேலை இருந்தது; இன்று மன்னி கூப்பிட்டதும் வேலை யில்லை! நான் உங்களுடன் வந்தால் மன்னிக்குச் சங்கடமா யிருக்கும் போலிருக்கிறது. அதுதான் அவள், 'வருவதாயிருந்தால் வா' என்கிறுள். நான் வரப்போவது இல்லை!" என்றுள் விமலா படபடப்பாக.

"நீ ஏன் அப்படிச் சொன்னுய்?" என்று ஜானகிமீது பாய்ந் தான் ரகுநாதன்.

"நான் சாதாரணமாகத்தான் சொன்னேன். அது அவளுக்குக் குற்றமாகப் பட்டுவிட்டது. அதற்கு நான் என்ன செய்ய முடியும்?" என்றுள் ஜானகி.

ரகுநாதனுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன விமலா! சாதாரணமாகப் பேசினுல்கூடக் கோபித்துக் கொள்ளுகிறுய்? நீ என்ன, குழந்தையா?" என்றுன் அவளருகில் வந்து.

"ஆமாம்; உனக்கு அவள் பேச்சுச் சாதாரணந்தான். நான் தான் கோபக்காரி!" என்று சொல்லும்போது விமலாவுக்கு அழுகை வந்துவிடும்போல் இருந்தது. மெள்ள அவளைச் சமா தானப் படுத்தினுன் ரகுநாதன்.

என்ன சொல்லியும் விமலா அன்று கடைக்கு வர மறுத்து விட்டாள். அப்புறம் நாலுநாள் கழித்து விமலாவின் இஷ்டப்படி கடைக்குப் போனுர்கள்.

இம்மாதிரி ஜானகி வந்ததிலிருந்து விமலாவுக்கு அடிக்கடி

கோபம் வந்துவிடும். திடீரென்று ஒருவருடனும் பேசமாட்டாள்; சாப்பிடமாட்டாள். ஜானகி கொஞ்சம் சொல்லிப் பார்ப்பாள். அதை விமலா லட்சியம் செய்யமாட்டாள். "சரி; தானே சரியாய்ப் போய்விடுவாள்" என்று ஜானகி பேசாமல் இருப்பாள்.

விமலாவுக்குக் கோபம் இல்லாமல் இருந்தால் ரகுநாதன் ஆபீஸிலிருந்து வந்ததும், "அண்ணு!" என்று குதித்துக்கொண்டு ஓடிவருவாள். கோபமாக இருந்தால் அவள் அறையில் போய்த் தலைவலி என்று படுத்துக்கொண்டு விடுவாள்.

ரகுநாதன் அவள் அறைக்குச் சென்று, "விமலா! ஏன், தலை வலியா, என்ன?" என்று கேட்டுக்கொண்டே அவள் நெற்றியைத் தொட்டுப் பார்ப்பான். அதற்கு அவள், "எனக்காக உனக்கு என்ன கவலை? என்னை யார் கவனிக்கப் போகிறார்கள்? உனக்கு அவள்தான் ஒசத்தி!" என்று அழ ஆரம்பித்து விடுவாள்.

3

விமலா நல்ல அழகி. நன்றாகப் படித்தவள். கொஞ்சம் முன் கோபம். ஒவ்வொரு சமயம் ஜானகியிடம் மிகவும் பிரியமாக இருப்பாள். விமலாவுக்கு நல்ல வரனைப் பார்த்துக் கொடுத்து விட வேண்டுமென்று ரகுநாதன் பார்த்துக் கொண்டிருந்தான். விமலாவின் அதிருஷ்டம் நல்ல வரனைக் கிடைத்துவிட்டது. மாப்பிள்ளை சங்கரனுக்கு நல்ல வேலை. இருநூறு ரூபாய் சம்பளம். விமலாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ரகுநாதன் நிறையச் சீர் வகைகள் செய்து அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தான்.

விமலா புக்ககம் வந்து ஒரு மாதம் ஆயிற்று. சங்கரன் அவளிடத்தில் மிகவும் அன்பாக இருந்தான். அவன் தாயும் அவளிடம் மிகவும் பிரியமாக இருந்தாள். அவள் நாத்தனார் ஸரஸுவுக்குப் பதினாறு வயசு. இன்னும் கல்யாணம் ஆகவில்லை. அவள் மாத்திரம் ஒரு தினுசாக இருந்தது போலிருந்தது விமலா வுக்கு. எங்கே போனாலும் விமலா, ஸரஸு, சங்கரன் மூவருமே போவார்கள்.

ஒரு நாள் ஸரஸு ஒரு சிநேகிதி வீட்டுக்குப் போயிருந்தாள். அந்தச் சமயத்தில் சங்கரன், "விமலா, ஸினிமாவுக்குப் போவோமா?" என்றான்.

"ஸரஸு இல்லையே!" என்றாள் விமலா.

அதற்குள் அவன் அம்மா, "நாளைக்கு அவள் போகட்டும்; நீயும் அவனும் இன்று போய்விட்டு வாருங்கள்" என்றாள் விமலாவைப் பார்த்து.

விமலாவும் சங்கரனும் ஸினிமாவிலிருந்து வந்ததும், ஸரஸு அவளுடன் பேசவே இல்லை. விமலாவுக்குக் காரணம் புரியவில்லை. என்னவோ பேசவில்லை என்று இருந்துவிட்டாள்.

மறுநாள் காலை விமலா மாடியிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்தாள். ஹாலில் ஸரஸு அழுதுகொண்டே அம்மாவிடம் ஏதோ பேசுவது கேட்டது.

"அம்மா, பார்த்தாயா அண்ணுவை? முன்பெல்லாம் 'ஸரஸு!' என்று எவ்வளவு அன்பாக அழைப்பான்! இப்பொழுது பார்த்தாயா, ஒருதரமாவது கூப்பிடுகிறானு என்று? அவள்தான் அவனுக்கு ஒசத்தி. நேற்று நான் இல்லாத சமயம் பார்த்து வினிமாவுக்குப் போயிருக்கிறானே; எனக்கு என்ன வினிமாவுக்குப் போகத் தெரியாதா? மன்னி வந்ததிலிருந்து அண்ணு வேறு தினுசாக மாறிவிட்டான்" என்று தன் தாயிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் ஸரஸு.

அதற்கு அவள் தாய், "போடி, பைத்தியமே, அண்ணுவாவது மாறிவிட்டதாவது? நீ எங்கேயோ போய்விட்டாய். அவன் அவளை அழைத்துக்கொண்டு போனான். நீ இன்று போய்விட்டு வாயேன்" என்றாள்.

விமலாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. மன்னி வந்ததும் தன் அண்ணுவைப்பற்றி அவள் நினைத்ததெல்லாம் அப்பொழுது அவளுடைய நினைவுக்கு வந்தது. 'நம் கணவர் நம்மீது ஆசையாக இருப்பது போல்தானே அண்ணுவும் இருந்திருப்பான்? நமக்கும் ஸரஸுவுக்கு இருப்பதுபோல் அம்மா இருந்திருந்தால் நிலைமை அவ்வளவு மோசமாக இருந்திராது' என்று அவள் தனக்குத் தானே உணர்ந்துகொண்டாள்.

அப்பொழுது, கல்யாணமாகி அவள் தன் கணவனுடன் ஊருக்கு வரும்போது, மன்னி நெற்றியில் குங்குமம் இட்டுக் கண்களில் ஜலம் ததும்ப, "விமலா, சமத்தாயிரு. முன்கோபத்தை விட்டுவிடு. அடிக்கடி தபால் எழுது" என்று சொன்னது விமலாவுக்கு ஞாபகம் வந்தது. உடனே ஜானகியைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. இந்தச் சமயத்தில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே சமையலறையிலிருந்து வந்த ஸரஸு விமலாவைக் கண்டதும், "ஏன், நேற்று ஸரஸுவின் நினைவில்லையோ?" என்று வள்ளென்று விழுந்தாள்.

விமலா களுக்கென்று சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்? என்னைப் பார்த்தால் சிரிப்பு வருகிறதா?" என்றாள் ஸரஸு கோபமாக.

"இல்லை, ஸரஸா, உனக்கும் கல்யாணம் ஆகி, நீயும் புக்ககம் போனால் அப்பொழுது தெரியும், நான் ஏன் சிரித்தேன் என்று" என்றாள் விமலா.

கே. ஞானம்பாள், எம். ஏ.

பயன் என்ன?

23

சிறுவயல் என்பது அழகிய கிராமம். சுமார் முந்நூறு வீடுகளே உண்டு. பெரும்பாலோர் உழைப்பாளிகள், விவசாயிகள். அவர்களது விடா முயற்சியினால் நிலமகளும், வேண்டியதைக் கொடுப்பவள்போலக் கொடுத்தாள். உள்ளதைக் கொண்டு உயர்வோடு வாழும் உத்தமர்கள்.

ஊர் நடுவே பெரியதோர் ஆலமரம். அதைச் சுற்றிலும் அந்நிறம் மறைக்கும் ஆடையே உடுத்திய சிறுவர் சிறுமியர் ஓடி விளையாடிக்கொண்டு கூச்சலிடுகிறார்கள். அவ் வால மரத்திற்குத் தென்திசையிலே இருந்த ஒரு சிறு குடிசையின் முன்புறத்தில் இரு சகோதரர்கள் கண்ணுங் கருத்துமாகக் குனிந்த தலை நிமிராமல் படிக்கின்றனர். அவர்கள் படிப்பது யாது? ஆசிரியர் இல்லாமலே தமிழ் இலக்கணத்தை உருப்போடப் பார்க்கிறார்கள். இருவர் முகங்களும் வறியவரது வாடிய இளமையைக் காட்டுகின்றன. மூத்தவனுக்குப் பதினாறு வயசிருக்கும். இளையவனுக்குப் பதினைந்து. இருவரும் கண்கள் நோகுமாறு படிக்கின்றனர். ஒரு சிறுமி துள்ளிவரும் மானைப்போல் கவலையின்றி ஓடிவந்து, இளையவனை, கந்தையனது கண்களைப் பொத்தினாள். அவன்தான் அவர்கள் சகோதரி முத்தம்மாள்.

"முத்தா, நீ ஏன் என்னை இப்படித் தொந்தரவு செய்கிறாய்? நான் இன்று மாலைக்குள் பத்துச் சூத்திரங்களையாவது மனப்பாடம் செய்ய வேண்டாமா?"

"வேண்டாம். நீங்கள் மட்டும் ஏன் இப்படிப் படிக்கவேண்டும்? அதோபார். உங்களைப்போன்ற பிள்ளைகள் எவ்வளவு ஆனந்தமாகப் பலிஞ் சப்ளான் ஆடுகிறார்கள்! வா அண்ணை. நீயும் வா. ஹ்ஹும்! உன் கண் வலிக்கும் வா" எனக் கூறி, உதட்டைப் பிதுக்கிக்கொண்டு நிற்கும் அவளைப் பார்த்தபொழுது, இருவர் உள்ளங்களும் குவிந்தன. கண்கள் கசிந்தன.

இச்சிறுவர்கள் தாம் அக்கிராமத்துப் பரம்பரைக் கொல்லனை வேலப்பனுடைய சிறுவர்கள். அச்சிறுமி அவர்கள் சகோதரி. ஐந்தாறு வருஷங்களுக்கு முன், அக் கிராமத்தில் வேலப்பனைப் போல் நிம்மதியான மனிதனே இல்லையென்று கூறலாம். மனத்திற்குகந்த மனைவி. நல்ல உழைப்பாளி. உள்ளதைக் கொண்டு உலகத்தை ஆளும் உத்தமி. தாயைப்போலப் பிள்ளைகளும் வளர்ந்தார்கள். வேலப்பனும் உலகமே அமைதியென நினைத்து வந்தான். ஆயினும் நடந்தது என்ன? நெறியினின்றும் பிறழாத தன் கணவன் ஒருநாள் தன் நினைவில்லாமல் வருவதை வள்ளி யம்மை கண்டாள். உலகத்தைத் தன் ஆதிக்கத்தில் வைத்து ஆட்டும் குடி அவனையும் ஆட்

கொண்டது என்பதை அறிந்தாள். அன்று முதல் குடும்பத்தின் அமைதி கெட்டது. வள்ளி யம்மையும் தான் அணிந்திருந்த சில நகைகளையும், தன் தாய் கொடுத்த சிறு நிலத்தையும் விற்று, ஐந்நூறு ரூபாய்களைத் தன் குழந்தைகளின் படிப்பிற்காகத் தன் சகோதரனிடம் கொடுத்து வைத்தாள். ஊருக்கு ஒரு கொல்லனு யிருந்த வேலப்பனது அதிருஷ்டம் குன்றியது. குடியினால் வேலையும் திறமையாகச் செய்ய இயலவில்லை. போதாக் குறைக்குப் போட்டிக்கு ஒரு புதிய கொல்லனும் சிறுவயலே வந்து அடைந்தான். வள்ளியம்மையின் ஜீவியம் மேலும் கஷ்டமாயிற்று. ஒரு வருஷத்திற்குள் நீங்கா உழைப்பினால் நோய்வாய்ப் பட்டு இறந்தாள். ஒரு நாள் குடிவெறியில் வேலப்பன் தன் மைத் துனனிடமிருந்த ரூபாயை வாங்கி வந்தான். தீர்த்தும் விட்டான்.

இன்று, தந்தையின் தீமைக்காகக் குழந்தைகள் மனங் குன்றி வருந்துகின்றனர். நாலு பேர் நடுவில் சென்று தலைகாட்டவும் வெட்கம். தாம் உய்வதற்கு வழி, ஆண்டியையும் அரசனோடு ஒப்பச் செய்யும் அன்னை கலைமகளின் ஆதாரந்தான் என்று அவர்களுடைய வாடிய மனங்கள் கூறின. ஏகலைவனைப் போலக் குருவில்லாமலே கல்வியைக் கடைப்பிடிக்க முழுமனத்தோடும் உழைத்தனர். அருகில் இருந்த ஊரில் சென்று ஆங்கிலம் கற்று ஆசிரியர்களாக வேண்டுமென்று மனக்கோட்டையும் கட்டினர். மூத்தவனை முருகையன் விடாப்பிடியுடையவன். வறுமையையும், அதன் துன்பத்தையும் மிதமிஞ்சி உணர்ந்ததால் குழந்தையின் உள்ளம் வெம்பி, பூக்காமலே முற்றியது. முகத்திலும் இளமை யின் புதுமை ஒழிந்தது. இளையவனை கந்தையனை ஆகாயத்தி னிடையே உலவும் பறவைகளோடு உறவுகொண்டவன். பசிய புல்லும், கிராமத்தின் அருகே பாய்ந்தோடும் காட்டாறும், அலைந்து திரியும் வண்ணத்திப் பூச்சியும், மலர்ந்து மகிழும் மலர்களும் அவன் உள்ளத்தை வானளவு உயரச் செய்யும். வாழ்க்கையின் பயனற்ற போராட்டத்தால் அவன் மனம் உடையவில்லை. இளமையின் புத்துணர்ச்சி அவன் உடம்பில் குதித்துச் சென்றது. ஆயினும் சகோதரனின் வற்புறுத்துதலால் மனம் நோவது உண்டு. "ல்ல லல லா" என்னும் பாட்டைக்கேட்டவுடன், வருத்தம் அப் பாட்டைப் பாடிய பறவையுடன் பறந்தோடிப் போகும். மூத்தம் மானைப்பற்றியோ கேட்க வேண்டாம். தன் இடையில் திகழ்ந்த கிழிந்த கறுப்புச் சிங்கப்பூர்ச் சீட்டிப் பாவாடையை ஒய்யாரமாகத் தூக்கி அவள் நடப்பதைப் பார்க்கும்போது, கற்காவியமான தாஜ் மஹாலின் சீமாட்டி மும்தாஜ் இவ்வளவு ஒய்யாரம் உடையவளா என ஐயம் எழும். இளமையின்பொலிவு, பெண்மையின் பெருமிதம். துள்ளி யோடும் மான் வேடனின் அம்பை நினைப்பது உண்டா? நினைத்தால் அது துள்ளுமா? இல்லை. அதைப்போல வறுமையின் துன்பமும், வருங் காலத்தைக் குறித்த மனக் குழப்பமும் முத்தம்மாளை அணுகுவதில்லை. ஏழைக்கும் செல்வனுக்கும்

யாவருக்கும் தாயான இயற்கை அவளைத் தன் மடியில் வைத்துச் சீராட்டி, செல்லக்குழந்தையாக வளர்க்கும்போது அவள் மனத்தில் கவலைக்கு இடம் ஏது? வானவில் போல, தன்னைக் கண்டு நொந்த, பாழ்பட்ட மனங்களையும் தன்னொளியால் மகிழ்விக்கக் கூடிய சோபை பெற்று விளங்கினாள். தன் சகோதரன் விளையாட வர மறுத்தவுடனே, வில்லினின்று செல்லும் அம்புபோல ஓடித் தன் சகாக்களை அடைந்தாள். அவர்களிடையே பாண்டியும் வெகு ஜோராக நடந்தேறியது.

முருகையன் ஏதோ சத்தத்தைக் கேட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தான். முகம் கோபத்தாலும் வெட்கத்தாலும் குன்றியது. ஆனந்தமாகப் புல்லைத் தின்னும் கழுதையைத் தொழுதவாறே பாடும் தன் தந்தையைக் கண்டான். உண்மை தெரிந்தது. ஒன்றும் பேசாமல் எழுந்து சென்று சிறிது நேரம் கழித்துத் திண்ணையை அடைந்தான். முகம் மட்டும் சாந்தமாக இல்லை. அண்ணனை நன்கறிந்த கந்தையன் மெதுவாகச் சாந்தமான குரலுடன், "அண்ணு, என்ன செய்தாய்?" என்றான். தம்பியின் தயைநிறைந்த குரல் முருகையனது கொதிப்பை ஒருவாறு அடக்கியது. கனைத்த குரலில், "உள்ளே அழைத்துவந்து படுக்க வைத்தேன். தூங்குகிறாள்" என்றான்.

"அவள் கண்டாளோ?"

"இல்லை. அண்ணு! முத்தா தந்தையின் நிலையை யறியக் கூடாதென்று நீ எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் பயன் என்ன? எவ்வளவு நாள் மறைக்க முடியும்? அவர் இழிவை ஒரு நாள் அவளும் அறியவேண்டியதுதானே?"

"இல்லை. கந்தா, நீ அறிய மாட்டாய். பச்சைக் குழந்தையின் மனம் புண்பட்டால் அதை ஆற்றமுடியாது. மேலும் அவள் பெண் குழந்தை. தந்தைக்கு நிகரானவர் இல்லையென்று, தந்தை தாய் இருவர்பாலும் வைக்கவேண்டிய அன்பு முழுவதையும் அவர்பாலே வைத்திருக்கிறாள். தந்தையின் உண்மையை அறிந்தால் அவள்மனம் உடையும். பின்னர் அதை ஒன்று படுத்துவது உன்னால், என்னால் மட்டுமல்ல; யாராலும் முடியாத தொன்றாக ஆகிவிடும். அவள் லட்சியம் கெடாமல் இருப்பதுதான் நாம் அவளுக்குச் செய்யக்கூடியது."

"அப்படியாயின் எவ்வளவு நாள் இப்படியே நடக்க முடியும்? ஒவ்வொரு நாளும் எப்போது அப்பா வருவாரென்று காத்திருந்து அவரைச் சமாதானம் செய்ய உன்னால் முடியுமா?"

"தம்பி, அதைப்பற்றி எண்ணி எண்ணி என் மனமும் தலையும் சுழலுகின்றன. இதற்கு வழி ஈசனே காட்ட வேண்டும்."

ஈசனும் காட்டினான். தன் பிள்ளையின் சொற்களைக் கேட்டு, முத்தாவின் நன்மைக்காக வேலப்பன் இலங்கைக்குக் கூலியா

ளாகச் சென்றுள். அறியாக் குழந்தையான முத்தம்மாள் தந்தை யுடன் செல்ல வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள். அவளைச் சமாதானம் செய்வது பெரும் பாடாகிவிட்டது. பெண் குழந்தை தானே? அப்பா நிறையப் புதுப்புடைவை, ரிப்பன், நகைகள் வாங்கி அனுப்புவார் என்று சமாதானம் செய்தார்கள்.

* * * *

பல ஆண்டுகள் கடந்தன. வாழ்க்கையைத் தைரியத்தோடு எதிர்த்துப் போராடி ஓரளவில் சகோதரர்கள் வெற்றிபெற் றார்கள். முருகையன் வேலூரில் ஆசிரியனாக இருக்கிறான். சாடை பழைய முருகையன் போலிருந்தாலும், முகத்திலிருந்த கடுகடுப்பு மட்டும் மாறவில்லை. அவனுடன் முத்தாவும் இருக்கிறாள். பழைய முத்தம்மாள் அல்ல. யௌவனத்தின் ஜொலிப்புள்ள முத்தா; உலகையும் அதன் அழகையும் கண்டு மகிழும் பெண். அடிக்கு ஒரு பாட்டு, நடைக்கு ஒரு வெட்டு. மினுக்கவேண்டுமென்று நினைத்துச் செய்வதல்ல. அது இயற்கை யன்னை அவளுக்குக் கொடுத்த கொடை. தந்தையின் உண்மையை இன்னும் அறியா தவள் அவள்.

முருகையனது பள்ளிகூடத் தலைமையாசிரியர் தனிப் பிரகிருதி. அவனைக் கண்டால் அவனுக்கு உயிர். பழுதற்ற நடையுடைகளைப் பெற்றவர். சலனமற்ற, கோதற்ற தொழிலில் அமர்ந்து, வாழ்க் கையின் சூழ்ச்சிகளையும், உலகத்தின் சுழல்களையும் அறியாததால், பிறர் குற்றங்களைப் பொறுக்கும் தன்மையைப் பெறவில்லை. மனிதன் ஏன் குற்றங்களைச் செய்ய வேண்டுமென்று நினைப் பாரே யன்றி, செய்தாயிற்று, இனி அவனை நல்வழிப்படுத்தும் வழி என்னவென்று நினையார். சுருங்கச் சொல்லின் அனுபவத்தால் விரியாத, குவிந்த மனமுடையவர். அது முற்றும் அவர் பிழையல்ல. குழந்தை இல்லாததால், தன் மைத் துனனைக் குழந்தை போல் வளர்த்தார். குமரையனும் அவரது பிரதிபிம்பமே. அவன் வாழ்க்கையும், தண்டவாளங்களின்மேல் செல்லும் ரயில்வண்டியைப் போல், குறித்த பாதையை விட்டு நீங்காமல் சென்றது. அவனையும் அறியாமல் அவன் உள்ளம் மட்டும் பள்ளத்தை நோக்கிச் செல்லும் நீரேபோல், முத்தாவைச் சென்று அடைந்தது. இதைப்பற்றி முருகையனுக்கும் திருப்தியே.

தம்பி கந்தையன் மிஷினரிமார் உதவியால் தஞ்சை வைத்தியக் கல்லூரியில் பயிற்சிபெற்று வருகிறான். முருகையன் தனக்குக் கிடைக்கும் சொற்பச் சம்பளத்திலும், தம்பியின் கல்விக்குக் குறை ஏற்படாமல், பணம் அனுப்பி வருகிறான். முருகையனது ஜப மந்திரந்தான் வாழ்க்கையின் முன்னணியில் நிற்கவேண்டும் என்பதைக் கந்தையன் நன்கறிவான். இன்று முருகையன் தஞ்சைக்கு வருவதாகக் கடிதம் வந்தது. ரயிலடிக்குச் சென்றான். அண்ணன் க்ஷேம லாபங்களை விசாரித்தபின், "தம்பி, உன்

மார்க்குகளைப் பார்த்தேன். இன்னும் சற்றுக் கவலையுடன் உழைக்க வேண்டும்" என்றான்.

"அண்ணா, முத்தாவின் விஷயம் என்ன?

"எல்லாம் நல்லதுதான். குமரையன் கல்யாணம் சீக்கிரம் நடக்கவேண்டுமென்கிறான். அடுத்த மாதம் நாள் குறிக்கப்பட்டுள்ளது."

"சரி. நீ அப்பாவைப்பற்றிச் சொன்னாயா?"

"என்ன? உனக்குப் பைத்தியமா? அப்பா குடிகாரன் என்றால், குமரையன் நம் முத்தாவை ஏறெடுத்தும் பார்ப்பானா?"

"சரி. சிறுவயல் சங்கதி ஏதாவது தெரியுமா?"

"ஏன்?"

"நான் நான்கைந்து நாட்களுக்குமுன் என் நண்பன் சங்கரனோடு சிறுவயலுக்குப் போனேன். நம் வீடு திறந்திருந்தது. அப்பா வெளித் திண்ணையில் படுத்திருந்தார். என்னைக் கண்டவுடன் சீறி எழுந்து, 'அப்பா குடிகாரன், இவன் இருந்தால் நமக்கு அவமானம் என்றுதானே என்னைக் கண்டிக்குத் துரத்தினீர்கள்? முருகையன் எங்கிருக்கிறானென்றும் எனக்குத் தெரியும். முத்தா பெரிய பணக்காரனைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாள் என்றும் தெரியும். அன்று உங்கள் வார்த்தையைக் கேட்டு ஏமாந்த வேலப்பன் அல்ல நான். என்ன செய்கிறேன் பார்' என்று இறைந்தார். நான் பேசாமல் தலைகுனிந்து வந்துவிட்டேன்."

"உண்மையாகவா? நீ ஏன் இதை முன்பே எனக்குச் சொல்லவில்லை?"

"சொல்லிப் பயன் என்ன? உன் மனமுந்தானே புண்படும்? நீ இதைக் குறித்து என்னைக் காட்டிலும் அதிகம் வருந்துவாயென்று தெரியும். அதனால்தான் சொல்லவில்லை."

"அவர் சொன்னபடியே செய்தால் முத்தாவின் கதி என்ன?"

இருவரும் பேசாமல் கந்தையனது விடுதிக்குச் சென்றனர். அன்றிரவே முருகையன் வேலூருக்குத் திரும்பினான். முத்தாவின் கதி என்னவென்று எண்ணும்போது அவன் தலை சுழன்றது.

ஒரு வாரம் ஆயிற்று. முத்தா காதலின் நிறைவால் களித்திருக்கிறாள். ஆயினும் அவள் இருதயத்தில் ஒரு சிறு குரல், உன் தந்தையை மறந்தாயோ என இடித்துக்கொண்டே இருந்தது. தன் அண்ணனை, அப்பாவிற்கு எழுதினாயா, எழுதினாயா என்று பிடுங்கி யெடுத்தாள். முருகையன் என்ன செய்வான்! தன் கடமையை மட்டும் நினைத்தான். இறக்குந் தறுவாயில் தன் தாய், 'முத்தாவின் நலமே உன் நலமெனப் போற்று' என்று கூறியது அவன் செவிகளில் பறைபோல் ஒலித்தது. மனச்சாக்ஷியின் துன்பம் பொறுக்க மாட்டாமல் கந்தையனை வருமாறு எழுதினான். கந்தையனும் வந்தான். இருவரும் முத்தாவின் நன்மைதான் முக்கிய

மானது எனத் தீர்மானித்தார்கள். மனிதன் நினைத்தவாறே முடியுமானால் உலகில் துன்பம் ஏது? விதிக்கு ஆற்றல் ஏது?

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. இரு சகோதரர்களும் வீட்டில் இருக்கிறார்கள். முத்தா தன் தோழிகளுடன் சினிமா போயிருக்கிறாள். வீதியில் ஒரே குழப்பம். யாரோ கிழவன் தள்ளாடிக் கொண்டு வருவதைக் கண்ட சிறுவர்கள், பைத்தியக்காரன் என்று அவன்மேல் கல்லெறிய, அவனும் திருப்பி எறிகிறான். இதுவே குழப்பம். முருகையன் வெளியே சென்று சிறுவர்களை மிரட்டி அனுப்பினான். கிழவனை அழைத்து வந்து சிரம பரிகாரம் செய்யுமாறு உபசரித்தான். கிழவனும் சற்றுநேரம் அவனைக் கண்கொட்டாமல் பார்த்துவிட்டு, "ஓகோ முருகையாதானா? தங்களைப் பார்க்கத்தானே அடியேன் வந்தேன்? பவிஷு மிஞ்சிப் போய்விட்டது போலும். பெற்ற தகப்பனைக் கூட அடையாளம் தெரியவில்லையா? தகப்பன் இல்லாமல் பெண்ணுக்குக் கல்யாணம் செய்யக்கூடத் துணிந்துவிட்டாயே" என மேலும் மேலும், வெந்த புண்ணில் வேல் செருகுவதைப்போலக் குழறிக் குழறிச் சொற்களை அடுக்கிக்கொண்டே போனான். திக்பிரமம் பிடித்தவன்போல் முருகையன் நின்றான். என்ன செய்வான்! தன் சக்தியெல்லாம் கொண்டு சமாதானம் செய்தான். ஊரார் கிழவன் யாரென்று அறிவதன்முன் தன் கையிலிருந்த பணத்தையும் கொடுத்துச் சிறுவயலுக்கு அனுப்பினான். அன்றோடு அவன் துன்பம் தீரவில்லை. அன்றே தொடங்கியது. முத்தாவும் நடந்ததை அறியாள்.

கல்யாணத்திற்கு இன்னும் மூன்று நாளே இருக்கின்றன. காலையில் ஒரு கடிதம் வந்தது. தன் தந்தை முத்தாவின் கல்யாணத்திற்கு வருவதாக எழுதியிருந்தார். கடிதத்தைப் பிடித்திருந்த விரல்கள் நடுங்கின. அப்பா வந்தால், அதிலும் குடிவெறியோடு வந்தால், முத்தாவின் கதி என்னவாகுமென்பதை மனத்தால் நினைக்கவும் முடியவில்லை. அன்றோடு அவள் வாழ்வு தொலைந்துவிடும் என்பது மட்டும் நிச்சயம்.

அன்றே சிறுவயலுக்குப் புறப்பட்டான். கந்தையனும் சிறுவயலுக்கு வந்தான். இருவரும் எவ்வளவு மன்றாடியும் கிழவன் பிடித்த பிடியை விடவில்லை. வந்தேதீருவேன் என்று சாதித்தான். செய்வது என்ன? சகோதரர்கள் மனமுடைந்து ஆற்றங்கரையை நோக்கி நடந்தனர். யாதொரு முடிவிற்கும் வர முடியாமல் தவித்தனர். கண்ணேபோல் வளர்த்த தம் தங்கையின் வாழ்க்கை, கடமையைத் துறந்த தம் தந்தையின் பிடிவாதத்தால் பாழ்படுவதா? இடையூறாக இருக்கும் அவரை வழியை விட்டு விலக்கினால் என்ன? — எவ்வாறு விலக்க முடியும்? சிறையில் அடைக்கலாமா? எந்தச் சட்டம் அதற்கு இடந் தரும்? பலவந்தமாக ஓர் அறையில் பூட்டி வைக்கலாமா? அவ்வாறு செய்தால் பொல்லாத உலகம் சும்மா இருக்குமா? தூற்றுமே! — இவற்றையெல்லாம் நினைக்க நினைக்க முருகையன் கைகள்

அவனையும் அறியாமல் முஷ்டியிட்டன. கண்களில் பயங்கரமான அறிகுறி தோன்றியது. இதைப் பார்த்துக்கொண்டே நின்ற கந்தையன், அவ்வுள்ளத்தின் குமுறுதலைக் கண்டு நடுங்கினான். தன் தந்தை இச்சமயம் வரக்கூடாது என்று தெய்வத்தைப் பிரார்த்தித்தான்.

ஆற்றங் கரையின் அமைதியைக் கலைப்பதுபோல் ஒரு பாட்டொலி கேட்டது. அக்கரையில் வேலப்பன் தள்ளாடிக் கொண்டே வருவதைப் பார்த்தார்கள். குடியினால் கால்கள் நிலத்தில் பதியவில்லை. வந்தவன் தன் கையில் இருந்த கழியைக் கரையில் நட்டுவிட்டு, கைகால் கழுவுவதற்காக இறங்கினான். கரையிலிருந்து பார்ப்பவரிடமிருந்து ஒரே காலத்தில், 'ஐயோ!' என்ற சப்தம் எழுந்தது. கந்தையன் அலறிக்கொண்டே முன்னால் பாய்ந்தான். திடீரென்று தன்னைப் பின்புறத்திலிருந்து யாரோ இழுப்பதை அறிந்தான். நிமிர்ந்து நோக்கியபோது முருகையன் தன் கையைப் பிடித்தவாறே, முழுகி முழுகி எழும் அவ் வுருவத்தைப் பார்ப்பதைக் கண்டான். அவன் பிடியினின்றும் திமிரிச் செல்ல நினைத்தபோது, "முத்தாவின் கதி" என்ற சொற்கள் கேட்டன. ஒரு கணத்தில் முத்தாவின் புன்னகை தவழும் முகம் அவன் கண்முன் தோன்றி மறைந்தது. அசைவின்றி மரம்போல் நின்றான்.

நடந்தது என்ன? கோடைக் காலத்தில் தண்ணீருக்காக ஆற்றின் நடுவே கிணறுகள் வெட்டியிருப்பதுண்டு. இன்று ஆற்றில் இரு கரைகளும் நிறைந்து தண்ணீர் ஓடுவதால் கிணறு தெரியவில்லை. வேலப்பனும் குடிமயக்கத்தால் கிணற்றில் காலை வைத்தான். மீன்குட்டி போல் நீஞ்சக்கூடியவன்தான். ஆயினும் குடியினால் உடலும் உள்ளமும் வலியற்றிருந்தன. செய்வ தறியாமல், "முத்தா! முத்தா!" என்று கூறியவாறே மூழ்கினான். மும்முறை பொறுக்கும் நீரும் பொறுமையை இழந்தது.

முத்தா குமரையனது வாழ்க்கை இன்பமானது. குமரையனது காதலும் வெற்றி பெற்றது. முருகையனது கனவும் நிறைவேறும் சமயம் வந்தது. கந்தையனது பரீக்ஷைக்கு இரண்டே மாதங்கள் உள. சிறுவயலிலிருந்து முருகையனைப் பார்க்க யாரோ ஒருவர் வந்திருந்தார். அவர் ஊர் வளப்பம் பேசும்போது ஒரு சங்கதி சொன்னார்; "ஆற்றில் நீர் வற்றியபோது, அதன் நடுவே உள்ள கிணற்றில் இரண்டு பாறைகளுக்கிடையில் ஓர் எலும்புக் கூடு சிக்குண்டு கிடந்தது. மீன்களும், பிற ஜந்துக்களும், மனித உடலின் மேல் தமக்கு இருக்கும் உரிமையால் அடையாளம் தெரியாமல் அரித்துவிட்டன. ஊரார் அக்கூட்டை, கோவிந்தாக் கொள்ளி யிட்டுக் கொளுத்தினர். ஆனால் எங்களில் சிலருக்கு மட்டும் ஒரு சந்தேகம் உண்டு. உங்கள் தந்தை, திடீரென்று ஒரு நாள் காணமல் போனார். அன்று முதல் அவரை நாங்கள் பார்க்கவே யில்லை" என்றார். முருகையனது முகமாற்றத்தை அவர் கவனிக்க வில்லை. ஆயினும் பாற்கடலில் நஞ்சைக் கலந்து சென்றார்.

அவர் சென்றதும், முத்தா அண்ணனை அடைந்தாள். தொடர்ந்து கேள்விகளைக் கேட்டாள். கடைசியில் நடந்ததை முருகையன் கூறினான். "ஐயோ! இப்படியும் செய்யலாமா? இதனால்தான என் கல்யாணத்திற்கு மூன்று நாள் முன்பு நான் ஆற்றங்கரையில் இருப்பதுபோலவும், அப்பா ஏதோ பெரிய ஆபத்தில் முத்தா, முத்தா என்று கூப்பிடுவதுபோலவும் கேட்டது? அப்பா! நீங்கள் எவ்வளவு மனம் வருந்தினீர்களோ? அண்ணு உனக்கு எப்படி மனம் வந்தது? குடிகாரனுயிருந்தாலும் அப்பா, அப்பாதானே? நான் எப்படியாவது என் கணவனிடம் கூறிச் சமாதானம் செய்திருப்பேன் அல்லவா? — என் வாழ்வின் இன்பத்தால் பயன் என்ன? அதைக் கண்டு மகிழ நீங்கள் இல்லையே!" என்று விம்மி விம்மி அழுதாள். முருகையன் ஒன்றும் பேசாமல் வெளியே சென்றான்.

ஒரு வாரம் கழித்துக் கந்தையனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. "அண்ணு, இனிமேல் என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. இரவும் பகலும் அப்பா முத்தா, முத்தாவென்று அலறுவதைப் போலவே கேட்கிறது. அவர் முழுகி முழுகி எழும் தோற்றம் என் கண்களை விட்டு மறைவதில்லை. நீ ஏன் என்னைத் தடை செய்தாய்? நான் அவரைக் காப்பாற்றி யிருப்பேன் அல்லவா? நாம் செய்ததால் பயன் என்ன? என்னால் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை" என்று எழுதியிருந்தான்.

ஒரு நாள் சிறுவயல் ஆற்றங் கரையில் நடு வயசுள்ள மனிதன் ஒருவன் கண்கொட்டாமல் ஆற்றையே பார்த்துக்கொண்டு நின்றான். அன்று வேலப்பன் ஊன்றிய மருதோன்றிக் கொம்பு இன்று அழகிய இளமரமாகிக் காற்றில் அசைந்து நின்றது. குடிகாரனாக இருந்தாலும் அப்பா, அப்பாதானே? ஆம். உண்மை தான். ஒரு வாழ்க்கையின் நன்மைக்காக வேறொரு ஜீவனைப் பலியிடுவதற்கு இவனுக்கு என்ன உரிமையுண்டு? இட்டதனால் பயனென்ன? வாழ்க்கையின் முன்னணியில் கந்தையன் நிற்க வேண்டுமென்று அரும்பாடு பட்டான். தனது செயலால் அவன் மனமுடைந்தது என நிந்தித்தான். முத்தா தன் வாழ்க்கையில் துன்பத்தை அறியக்கூடாது என்று தன் பிற பாசங்களையெல்லாம் காலின்கீழ் வைத்து நசுக்கினான். ஆனால் நடந்தது என்ன? தன் செய்கையால் முத்தா தன் வாழ்க்கையின் இன்பம் தொலைந்ததென முறையிட்டாள். என்னே உலகம்!

இன்று முருகையனைக் காணவேண்டுமென்றால் தஞ்சைக்குச் செல்லுங்கள். அங்கே கையில் ஓட்டை ஏந்தி, "மாயனூர் குயவன் செய்த மண்பாண்டம் ஓடடா" என்று பாடும் அப்பரதேசியே நம் முருகையன். இரந்துண்பதிலும் அமைதியில்லை. "நீ செய்ததன் பயனென்ன?" என்ற சொற்கள் அவனை விட்டு ஒரு கணமும் நீங்குவதில்லை. ஆம்; அவன் செய்ததன் பயன் என்ன?

மன மகிழ்ச்சி

24

கூண்டிலிருந்து விடுபட்ட குருவிக் கூட்டம்போல, பள்ளிக்கூடம் விட்டுக் குழந்தைகள் தெருவில் குதித்துப் போய்க் கொண்டிருந்தார்கள். ஊர் மாடுகள் மேய்ச்சலிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தன. தெருப் புழுதியோடு காய்ந்து உதிர்ந்த அரசிலைச் சருகுகள் காற்றில் சுழன்றன. வாசல் 'காம்பவுண்டு' ஓரமாக உள்பக்கம் 'பெஞ்சி' மீது உட்கார்ந்து, ராதை பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் விடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

காலடியில் துவளும் அவளுடைய புடைவையின் கரை ஈர மண்ணில் புரண்டு சொட்டிக் கொண்டிருந்தது. மார்பில் ஓடும் மெல்லிய மேலாக்கின் உள்ளே மின்னிக் கொண்டிருந்த மாங்கலியச் சரட்டுடன் கருக மணியும் 'செயினும்' முறுக்கிக் கொண்டிருந்தன.

பூவாளியின் துதிக்கையை மூல்லைச் செடிகளின்மீது சாய்த்தாள். புழுதி படிந்திருந்த தளிர்கள் அந்த நீர்ச் சிலிர்ப்பில் குளித்துக் குதூகலமாக ஆடி அசைந்தன. முத்தாக அரும்பியிருந்த மொட்டுக்கள் சிரிக்க முயன்று கொண்டிருந்தன. நீர் விட்டுக் கொண்டே ராதை அடிக்கடி என் பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டாள். அவள் பார்வை என் இருதயத்தை ஊடுருவி எதையோ தேடுவதுபோல் இருந்தது.

ராதை என்னிடம் வந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது. அவள் வந்த புதிதில் நான் அதற்காகப் பேரானந்தம் அடைந்து விடவில்லை. ஆயினும் நான் அவளை ஏற்றுக்கொண்டேன்.

* * * *

பண்ணுருட்டிக்கு மாற்றலாகி நான் வேலையை ஒப்புக் கொண்டபோது பெரிய கலெக்டர் ஜமாபந்தி நடந்துகொண்டிருந்தது. கலெக்டர் "கார்க்கோடகன்" என்று பிரசித்தமாக இருந்தது. வசூல் பூச்சியம் போடாத குற்றத்திற்காகப் பல கிராமாதிகாரிகள் கணக்கு மூட்டையைக் கீழே வைத்துவிட்டுப் போனார்கள்.

அப்பொழுது என் பிர்க்கா சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கு ஜமாபந்தி. நாளெல்லாம் கணக்கு மூட்டைகளுடன் ஓரியாடிக் கொண்டிருந்து விட்டு இரவு ஒரு மணிக்குத்தான் வீட்டுக்கு வர வேண்டியிருந்தது.

அன்று இரவு சாப்பிட்டு விட்டு, வாசலில் கட்டிலில் வந்து உட்கார்ந்தேன். அந்த அர்த்த ராத்திரியில் ஒருவர் என்னைத் தேடிக்கொண்டு வந்தார். நான் நினைத்தபடியே, வந்தவர் ஒரு

கிராம உத்தியோகஸ்தர்தாம். திருமலைப்பட்டி கிராம மணியகாரர் அவர். அவர் பெயர் சங்கரையர். அன்று தினம் "சஸ்பெண்ட்" ஆனவர்களில் அவரும் ஒருவர். அவர் எதற்காக வந்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும்.

"பதினெட்டு வருஷங்களாகப் பாக்கி போட்டதில்லை. இந்த வருஷமும் அப்படி ஒன்றும் அதிகப் பாக்கி இல்லை. இரண்டு நாள் வாய்தா கொடுத்தால் எப்படியும் பூஜ்யம் போட்டு விடுவேன், நீங்களீ மனசு வைக்க வேண்டும். இதுவரை இந்த மாதிரி நேர்ந்ததே இல்லை" என்று அவர் சொன்னார்.

தயக்கமும் தடுமாற்றமும் நிறைந்த அந்தக் குரலில் என்னதான் இருந்ததோ எனக்குத் தெரியாது. வேலைக்கு வந்த ஆபத்தைத் தடுக்கக் காக்காய் பிடிக்கும் சாதாரணக் கிராம உத்தியோகஸ்தர் என்று அவரை நான் நினைக்கவில்லை. பின்னல் அவர் கூறிய வார்த்தைகளிலிருந்து, லோக அபவாதத்திற்கும் தெய்வத்திற்கும் அவர் எவ்வளவு தூரம் பயந்தவர் என்பது தெரிந்தது.

"துரை மிகவும் கோபமாய் இருக்கிறானையா! யாரும் கிட்ட நெருங்க முடிய வில்லையே! ஏதோ என்னால் ஆனதைப் பார்க்கிறேன். எதற்கும் நாளைக் காலையில் கலெக்டர் ஜாகைக்கு வாருங்கள்" என்று சொல்லி அனுப்பினேன். அவர் போனதும் கோபு வந்தான்.

"துரை அதற்குள் படுக்கை ஆகிவிட்டாற்போல் இருக்கிறது. உனக்கென்னப்பா, பேஷ்கார்; ஆபீஸர்! என்னைப்போல் தாஸ்தாகுமாஸ்தாவா? என்னைச் சொல்லு! இப்பொழுதுதான் வீட்டுக்குப் போகிறேன். விடிய விடிய மறுபடியும் போய்த் தொலைய வேண்டும். அதுபோகட்டும்; சங்கரையர் உன்னிடம் வந்து விட்டுப் போகிறார் போலிருக்கிறதே! என்ன சொல்லி அனுப்பினாய்?" என்றான்.

"என்ன சொல்லி அனுப்புகிறது? மனிதனைப் பார்த்தால் பரிதாபமாய்த்தான் இருக்கிறது. நம் கையிலே இருக்கிறதா தூக்கிக் கொடுத்து விட? துரை 'புல்டாக்' மாதிரி விழுகிறானே."

"ஜமாபந்தி நடத்தி நாசமாய்ப் போனான். தராதரம் தெரியாமல் இப்படிக் கண்மூடி தர்பார் நான் பார்த்ததே இல்லை. தொலைகிறான். சங்கரையர் விஷயத்தில் நீ கொஞ்சம் மனசு வைத்தால் சுலபமாக முடிந்து விடும் என்று எனக்குத் தோன்றுகிறது. அவர் விஷயத்தில் எவ்வளவு செய்தாலும் தகும். நல்ல பாத்திரம். மிகவும் மானி."

"பாத்திரந்தான். அதற்காக நாம் போய் அந்தச் சிடுமூஞ்சியிடம் தொங்க முடியுமா? நம் மேலேயே சந்தேகப்பட்டாலும் பட்டான்."

"தொங்கவேண்டு மென்று நான் சொல்ல வில்லையே. நாளது வரைக்கும் அவர் பேரிலே ஒரு குற்றம் கிடையாது. இரண்டுநாள் வாய்தாதானே அவர் கேட்கிறார்?"

"அதிருக்கட்டும்; உனக்கென்ன, சங்கரையர் ஏதாவது உறவோ? இவ்வளவு இரக்கப் படுகிறயே."

"உறவிருந்தால் தானே? அவரைப் போல நல்ல மனிதன் ஆயிரத்தில் ஒருவன் கூட இருக்க மாட்டான். நான் இரக்கப் படுவது இருக்கட்டும். நியாயத்திற்குப் பாடுபட வேண்டு மென்று உனக்குத் தோன்ற வில்லையா? பரோபகாரம், தர்ம சிந்தனை யென்றெல்லாம் அளந்து கொண்டிருந்தாயே; அதெல்லாம் காலேஜிலேயே மூட்டை கட்டி வைத்து விட்டாயோ? வரவர 'ப்யூராகிராட்' ஆகிக் கொண்டிருக்கிறாய்."

"ஆமாம்! 'கெடுபிடி' ஆக இல்லாவிட்டால் உத்தியோகமே பார்க்க முடியாதே."

இந்தத் தோரணையில் எங்கள் பேச்சு வளர்ந்தது. சங்கரைய ருக்குப் பெரிய சம்சாரம். நாலு பெண்கள். மூத்த பெண் பார்வைக்கு நன்றாக இருப்பாளாம். ஆனால் கால் மட்டும் கொஞ்சம் ஊனமாம். வரன் கிடைக்காமல் திண்டாடுவது ஒருபுறம் இருக்கச் சமூக அபவாதம் வேறு.—பேச்சு வாக்கில் கிடைத்த இந்தத் தகவல்கள் அவரிடம் அனுதாப உணர்ச்சியை உண்டாக்கியது எனக்கு.

சங்கரையருக்குப் பரம சந்தோஷம். ஜமாபந்தி முடிந்து ஊருக்குப் போகும் போது, "நீங்கள் ஒருநாள் ஊரில் முகாம் போட்டால் சிரமமில்லாமல் வசூல் செய்து விடுவேன். தயை செய்யவேண்டும்" என்று விநயமாக அழைத்துவிட்டுப் போனார்.

சங்கரையரின் ஒரே வீடுதான் திருமலைப்பட்டி அக்கிரகாரம். உத்தியோக அலுவல்கள் உடனே முடிந்து விட்டாலும் அவர் விடவில்லை.

அவருடைய வீடு சர்வ சாதாரணமாகத்தான் இருந்தது. அவருடைய மனைவி காலமான பிறகு குழந்தைகளே குடும்ப நிர்வாகம். ராதை அவருடைய மூத்த பெண்ணும். நான்கு வருஷங்களாக வரன் தேடி அலுத்துப் போயிருந்தார் என்று தெரிந்தது.

"ராதைக்கும் கீழே இன்னும் மூன்று பெண்கள் கல்யாணத் துக்கு நிற்கின்றனர். இரண்டாம் பெண்ணுக்கு வடக்கே யிருந்து ஒரு வரன் வந்திருக்கிறது. நல்ல இடந்தான். ராதைக்கு ஏற்பாடாகாமல் இதை எப்படி முடிவு செய்கிறது? ராதை குழந்தையாயிருந்தபோது ஏழு வயசு வரையிலும் எழுந்து நடக்காமல் இருந்தாள். செய்யாத வைத்தியம் இல்லை. கடைசியில் கடவுள் கிருபையால் குழந்தை எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.

இப்பொழுது வயசு பதினெட்டாகிறது. ஆயிரம் இரண்டாயிரம் வரதக்ஷிணை கொடுப்பதாயிருந்தால் அவளுடைய ஊனத்தைப் பற்றி எவனும் யோசிக்க மாட்டான். நமக்கு எங்கே அவ்வளவு? கடவுள் என்ன வழி காட்டுவாரோ எனக்குத் தெரியவில்லை" என்று மன்னிப்புக் கேட்பது போன்ற பாவத்தில் அவர் கூறிய போது என் மனத்தில் முள் தைப்பதுபோல் இருந்தது.

"ராதைக்கு இனிமேலா கணவன் பிறக்கப் போகிறான்? எங்காவது பிறந்துதான் இருப்பான்" என்று ஏக்கமும் நம்பிக்கையும் கலந்த குரலில் அவர் கூறியபோது என் இருதயத்தில் என்னவோ வேதனை செய்தது. விளக்கமற்ற ஒரு கேள்விக்குறி என் சிந்தனை வட்டத்தில் சுற்றிச் சுழல ஆரம்பித்தது. அன்றெல்லாம் இதைப்பற்றிய யோசனைதான்.

சாயங்காலம் ராதை வாய்க்காலிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தாள். நான் கவனித்தேன். கால் கொஞ்சம் ஊனந்தான். மற்றப்படி ராதை அழகி. ஆனால் நவநாகரிகம் அல்ல. முகத்தில் பெண்மையின் வசீகரத்துடன் நிர்வாகக் கலை சொட்டிக் கொண்டிருந்தது.

என் மனத்தில் விவரிக்க இயலாத பல உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டு அந்தக் குருவிக் குடும்பம் எப்படியோ என் உயிரின் ஆழத்தில் இடம் தேடிக் கொண்டு விட்டது. அதை அகற்றி விட்டு நான் இனி அமைதியாக இருக்க முடியாதென்று நிச்சயமாக எனக்குத் தோன்றியது.

ஊருக்குப் போகும்போது நான் சங்கரையரிடம் தீர்மானமாகச் சொன்னேன். அவர் பிரமித்துப் போனார்.

"உண்மையாகவா? உங்கள் பெரியவர்கள் ....." என்று அவர் இழுத்தாற்போல் தயங்கினர்.

"இல்லை, நான் தீர்மானித்துவிட்டேன். நான் போய் ஏற்பாடு செய்கிறேன் ....." என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன். அவருக்கு அப்பொழுது கூட நம்ப முடியவில்லை.

மாங்கல்ய தாரணம் ஆகி ராதையும் நானும் அவருடைய பாதங்களில் நமஸ்கரித்த போது அவர் என்னைத் தழுவிக் கொண்டார். கண்களில் நீர் தளும்ப எங்களை ஆசீர்வதித்தார். அவருடைய பார்வையில் நன்றியும் ஆனந்தமும் பொங்கின. அவருடைய பாரத்தைக் குறைத்து விட்ட கர்வம் அன்று எனக்கு இருக்கத்தான் செய்தது.

மெட்டியின் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். ராதை பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். இந்த ஒரு வருஷத்திற்குள் அவள் எப்படியோ என்னை முற்றும் கவர்ந்து விட்டாள். அன்று சங்கரையரின் சந்தோஷத்துக்காகத்தான் நான் அவளை ஏற்றுக்கொண்டேன். ஆனால் இன்று என் வாழ்க்கையின் மணி விளக்கு ராதை. அவள் என்னில் எதையோ தேடிக் கண்டு

பிடித்து விட்டாள். ராதை 'தொடாத தந்தியில்' இசையை எழுப்பி விட்டாள். சுமையாகத்தான் வந்தாள்; சொர்க்கமாக மாறிவிட்டாள். அன்று கூனி குப்ஜையை மணந்த கண்ண பிராஞுக நான் என்னை நினைத்துக் கொண்டேன். இன்று ராதை என்னுடைய லீலி!

அதோ அந்த அறையில் அவள் எதையோ படித்துக் கொண்டிருக்கிறாள். ஏதோ ஒரு மாய உலகிலிருந்து வந்த அபூர்வ சுந்தரிபோல என் கண்களுக்குக் காட்சி தருகிறாள். அவள் என்ன படிக்கிறாள்? என் இருதய ஏட்டைத்தான் மெதுவாகத் திருப்பிக் கொண்டு வருகிறாளா? ஆம். அப்படித்தான் இருக்க வேண்டும்.

என். நாகராஜன்

உமார் 25

[உமார் ஒரு பாரசீகக் கவி. அவருடைய கதைகளும் காவியங்களும் மக்களின் உள்ளத்தை அப்படியே கொள்ளைகொண்டன. அவரைப்பற்றிய கதை ஒன்று அந்தக்காலத்தில் சொல்லிக்கொண்டார்கள். அது எவ்வளவு தூரம் நிச்சயம் என்பது மாத்திரம் இன்னும் தெரியவில்லை.]

காபூல் நகர் முழுதும் அன்று ஒரே சந்தோஷத்தில் மூழ்கிக் கிடந்தது. கஜினி முகம்மது இந்தியாவில் அடைந்த வெற்றியைக் குறித்துத்தான் அந்தக் குதூகலம். இயற்கையழகும் செயற்கை யழகும் பெற்றுவிளங்கும் நகரைப் பார்த்துக்கொண்டே வீதியில் சென்று கொண்டிருந்தார் உமார். அவர் மனத்தில் என்ன என்னவோ கற்பனைகள் தோன்றி மறைந்துகொண்டே இருந்தன.

நகரமத்தியில் இருந்த மசூதியண்டை வந்ததும் கவியின் கால்கள் மேலே செல்லாமலே நின்றுவிட்டன. ஆஹா, என்ன மாணிக்கம் பதித்த வாயிற்படிகள்! மினுமினுப்பான சுவர்கள்! சோமநாத புரத்தில் முகம்மது கொள்ளையடித்த வைரங்களையும் பச்சை மரகதங்களையும் கொண்டு ஒரு ஸ்வர்ண மசூதியைச் சிருஷ்டித் திருந்தான். அதன் அழகே ஒரு கண் கொள்ளாக் காட்சியா யிருந்தது.

உமாரின் கண்கள் வாயிற்படியில் நிற்கும் ஓர் உருவத்தின் மேல் சென்றன. அவை சற்றுநேரம் அப்படியே இமைக்காமல் நின்றுவிட்டன. அது ஒரு பொற்சிலைதானு என்று கூர்ந்து கவனித்தார் கவி. அவர் சந்தேகம் தெளிய அதிக நேரம் செல்லவில்லை. அது சற்று அசைவதாகத் தோற்றியது. அவள் ஒரு

யௌவன யுவதி. மருதியின் உள்ளே செல்லும்வரையில் கவியின் கண்கள் அவளை விட்டு அகலவேயில்லை.

அவள்தான் சலீமா; கஜினி முகம்மதின் அரண்மனையி லுள்ள ஒரு பணிப்பெண். உண்மையில் அவளிடம் அசாதாரண அழகும் யௌவனமும் அமைந்திருந்தன. கேவலம் அந்தப் பணிப் பெண்ணிடம் பாரசீகக் கவியின் உள்ளம் சென்றுகொண்டே யிருந்ததில் ஆச்சரியம் இல்லை.

அன்று இரவு என்றும் இல்லாத நிலவு காய்ந்து கொண்டிருந் தது. தன் விடுதியின் மேல்மாடியில் நின்றுகொண்டே வீதியின் விநோதங்களில் ஈடுபட்டிருந்தாள் சலிமா. ஒரு காலடிச் சத்தம் அவளைத் திரும்பிப் பார்க்கச் செய்தது.

"யார், உமாரா?" என்றாள் சலீமா.

அவள் முகத்தில் ஒரு வியப்புக்குறி தோற்றியது. "ஆம், உமார்தான். பாரசீகத்தில், ஏன், உலக முழுதுமே என்னை அறியாதவர்களே இருக்கமாட்டார்களே."

"உங்கள் புகழைப்பற்றி நான் நிரம்பக் கேள்விப்பட்டிருக் கிறேன். சற்று உட்காருங்கள். நீங்கள் இந்த அடிமையின் வீடு தேடிவர எவ்வளவோ கொடுத்து வைத்திருக்க வேண்டும்." இப்படிச் சொல்லிவிட்டு அவளுடைய கண்கள் உமாரைக் கூர்ந்து கவனித்தன. அவைகளினின்றும் ஒரு கற்பனை கவியின் உள்ளத் தில் தோன்றியிருக்க வேண்டும்.

"உன் நீல விழிகளில் சிக்கிவிட்ட எவனுல்தான் அவைகளிட மிருந்து தப்பமுடியப் போகிறது? நான் இங்கே வந்ததில் ஆச்சரியமே இல்லை. ஏன், நான் சொல்வது சரிதானே?" என்றார் கவி.

அதற்குப் பதிலாக அவள் ஒரு புன்னகை புரிந்தாள். அவளுடைய முத்துப்போன்ற பற்கள் வெளியே தெரிந்தன. அவள் முகத்தில் ஏற்பட்ட சிறிய லஜ்ஜை அதற்கு ஒரு தனிச் சோபையை அளித்தது. கொஞ்சநேரம் அவள் ஒன்றுமே பேச வில்லை.

"நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லை" என்றாள், சற்றுநேரம் கழிந்ததும்.

"உனக்கு ஏன் புரியப்போகிறது? அழகிய புஷ்பத்தைத் தேடி வண்டுகள் ரீங்காரம் செய்வது ஏன் என்றுகூட உனக்குத் தெரியாதா?" என்றார் உமார்.

இதன் உட்பொருளை அறிந்துகொள்ளச் சலீமாவுக்கு அதிக நேரம் செல்லவில்லை. உலகம் புகழும் பாரசீகக் கவி உமார்தாம் இப்படிப் பேசுகிறாரா என்று சந்தேகப்பட்டாள். அவர் உமார் தாமா என்று மறுபடியும் ஏற இறங்கப் பார்த்தாள். 'அதில்

சந்தேகமே இல்லை' என்று சொல்வதுபோல் அவர் இனிய வதனம் தோற்றம் அளித்தது.

"என் அழகுக்கு நானே இப்போது வருந்த வேண்டியிருக்கிறது. அது அநியாயமாக ஓர் அறிவாளியின் கற்பனை சக்தியை நாசமாக்கக் காத்திருக்கிறது!" என்றாள் ஒரு பெருமூச்சுவிட்டுக் கொண்டே. அவள் உட்கருத்தைக் கவியால் அறியவே முடிய வில்லை.

"காரணம் இல்லாமல் என்ன என்னவோ பிதற்றுகிறாய்? நான் கேட்ட கேள்விக்கு என்னதான் பதில்?" என்றார். அவரது பதிலுக்காக உமாரின் கண்கள் அவள் வாயையே பார்த்துக் கொண்டிருந்தன.

"சம்மதந்தான்; ஆனால் ....."

"ஆனால் என்ன?"

"ஒரு நிபந்தனை இருக்கிறதே."

"என்ன நிபந்தனை? எதுவாயிருந்தாலும் பாதகம் இல்லை. அதற்கு நான் தயாராகத்தான் இருக்கிறேன்."

"சொன்ன பிறகு வருத்தப்படுவீர்கள்?"

"இந்த உமாரா வருத்தப்படுகிறவன்?" இந்தக் கேள்வியே அவளுக்குப் போதுமான தைரியத்தைக் கொடுத்துவிட்டது.

"சரி, அப்படியானால் சொல்லட்டுமா?"

"தைரியமாகச் சொல்லலாம்."

"தாங்கள் கதைகள், கவிதைகள், கற்பனைகள். இவற்றை அறவே மறந்துவிட வேண்டும். அந்த வாசனையே எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்காது" என்று சொல்லிவிட்டுக் கவியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள் சலீமா.

உமார் இதைக் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவேயில்லை. தமது முக மாறுதலை வெளிக்காட்டாமல் அடக்கிக்கொண்டார். அழகும் கவிதா சக்தியும் அவர் மனத்தில் போராட ஆரம்பித்துவிட்டன. கடைசியில் அழகு வெற்றி பெற்றதில் ஆச்சரியமே இல்லை.

"நிபந்தனையை ஒப்புக்கொள்ளுகிறேன்." இப்படிச் சொன்ன போது அவர் குரலில் தோன்றிய நடுக்கத்தைச் சலீமா கவனிக் காமல் போகவில்லை.

"இந்த நிபந்தனை விஷயத்தை என்னை அறியாமல் எவ ரிடமும் சொல்லவே கூடாது."

"நிபந்தனை முடிந்துவிட்டதா?"

"முடிந்துவிட்டது."

"சரி" என்று கூறிக்கொண்டே அவளருகில் உட்கார்ந்து கொண்டார் உமார். பாரசீகக்கவியின் கற்பனைசக்தி முழுதும் அவள் அழகில் ஒளியின்றி மறைந்துவிட்டது.

உமாரின் மனத்தில் கற்பனைகள் ஆற்றில் தோன்றும் ஊற்றுப் போலவே பெருக்கெடுத்தன. அந்த ஊற்றைப் பறித்து இனிய கவிதைத் தண்ணீரை ஜனங்கள் பருக முடியாமலே போய் விட்டது. அன்று முதல் அவர் கதைகளும் காவியங்களும் வெளி வரவே இல்லை. அவை அவர் மனத்திலேயே செடியாகிப் பூத்து அழிந்தே போயின. தன் ஆஸ்தான மண்டபத்தில் வித்து வான்கள் மத்தியில் சந்திரனைப்போல் பிரகாசித்த உமாரின் முகத்தைக் காணுமல் அரசன் வருந்தினன். உமாரின் அழகிய கவிதைத் தேனை அள்ளிக் குடிக்க விரும்பிய அறிவாளிகளெல்லாம் பெரிய ஏமாற்றம் அடைந்தனர். அதன் காரணம் மட்டும் யாருக்குமே புலப்படவில்லை. காரணம் இருவருக்கு மட்டுந்தானே தெரியும்? ஆனல் கவியின் உள்ளம் சலீமாவுடன் மகிழ்ந்து அவளுடன் கூடியிருப்பதை மாத்திரம் வெளி உலகம் அறியாமல் போகவில்லை.

நான்கு ஐந்து வருஷங்கள் கழிந்துவிட்டன. பாரசீகக் கவியின் கற்பனைசக்தியை அடியோடு அழித்த பாவந்தானே என்னவோ, சலீமாவைக் கொடிய காச நோய் பிடித்துக் கொண்டது. அவள் அழகு கெட்டு அழிவதற்கு அதிக காலம் செல்லவில்லை. ஜீவனுக்கு மன்றாடிக்கொண்டு படுக்கையிலேயே கிடந்தாள். அப்பொழுதுதான், தான் செய்த பிழையை அவள் அறிந்து கொண்டாள். அதை நினைக்கும்பொழுதெல்லாம் அவ ளறியாமல் கண்களில் நீர் வழிந்தது.

அன்று சாயங்காலம், பொழுது இருட்டத் தொடங்கிற்று. விளக்கு இன்னும் ஏற்றப்படவில்லை. அவள் முகத்தையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார் உமார். அவர் முகத்தில் முன் வீசிய தெய்விக ஒளியே காணப்படவில்லை.

சலீமா கண்ணை விழித்துப் பார்த்தாள். தன் ஆயுள் முடிவடை யும் காலம் வந்துவிட்டதை அவள் நன்றாக அறிந்துகொண்டாள்.

"உமார்! ....." அவள் செய்த மன்னிக்க முடியாத தவறு மேலே பேச வொட்டாமல் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"என்ன?" என்று கேட்டுக்கொண்டே அவள் முகத்தருகில் சென்றார் உமார்.

"என் உயிர் போய்விடும்."

"அது எனக்கு நன்றாய்த் தெரியும்." அவர் குரலில் ஓர் உறுதி தொனித்தது.

"உயிர் போவதற்கு முன் ஒரே ஒரு வேண்டுகோள். நான் செய்தது மன்னிக்க முடியாத தவறு. இந்தப் பாவியை மன்னிப்பீர்களா?" — அவள் நாக்குக் குழறிற்று. கண்களை மூடிக் கொண்டாள்.

மறுபடி கண்ணை விழித்தபொழுது உமார் அவளையே நோக்கிக் கொண்டிருந்தார். பொழுது இருட்டி விட்டது. விளக்கு வெளிச்சத்தில் அவர் முகம் நன்றாய்த் தெரிந்தது. அவருடைய கண்கள் இரண்டும் குழிந்து போயிருந்தன. அப்பொழுது அவருக்கு வயசு நாற்பதுக்குமேல் இராது. ஆயினும் அவர் கன்னத்தில் ஏற்பட்ட சுருக்கங்கள் வயோதிகத்தின் அறிகுறியை அப்போதே காண்பிக்கத் தொடங்கிவிட்டன. சலீமாவின் மனத்தில் சட்டென்று என்னவோ தோன்றியது.

"என் நிபந்தனையை விலக்கிவிட்டேன். என் உயிர் சாந்தியடையக் கவிதாசக்தியை முன்போல் பரவச்செய்வதாக ஒரு வார்த்தை சொல்லுங்கள்." – இதை அவளால் சொல்லக்கூட முடியவில்லை.

உமார் ஒன்றுமே பேசவில்லை. தம் மனத்திற்குள்ளேயே சிரித்துக் கொண்டார். அவளுடைய ஆவி சாந்தியின்றியே வெளிக்கிளம்பிவிட்டது.

"காரியம் மிஞ்சிவிட்டது. இனி நான் ஒரு சாதாரண மனிதன்தானே? கவிதையின் ஊற்று முன்பே வற்றிவிட்டதே!" என்று சொல்லிக்கொண்டே வெளியில் சென்றார் உமார்.

அவர் சொன்னது உண்மையே. அதற்குப் பிறகு அவர் கதைகளும் காவியங்களும் வெளிவர ஆரம்பித்தன. ஆனால் அவைகளில் ஜீவனே இல்லை; கற்பனை ஊற்றுப் பெருகவே இல்லை. ஊற்று எடுக்க எடுக்கத்தானே பெருகும்?

தா. நாகலிங்கம்

கம்பி மத்தாப்பு 26

தீபாவளிக்கு முந்திய இரவு: மறுநாள் வரும் தீபாவளியை நினைவூட்டுவது போல் அங்கங்கே சீன வெடிகள் வெடிக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. இடையிடையே கொளுத்தப்பட்ட பச்சை சிவப்பு மத்தாப்புக்களும், கம்பி மத்தாப்புக்களும் குழந்தைகளைக் குதூகலத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தன.

குறும்புத்தனம் நிறைந்த இரண்டு கண்கள், ராவ் பகதூர் லக்ஷ்மணசாமி செட்டியார் வீட்டுக் குழந்தைகள் பட்டாசும் மத்தாப்பும் விடுவதை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தன. அக்கண்களின் சொந்தக்காரி கோமதி.

ரங்கம்மாளின் குலத்தை விளக்க வந்த ஒரே குலக்கொழுந்து கோமதி. ரங்கம்மாளின் கணவன் கோமதிக்கு ஒரு வயசு நிரம்பு முன்னே பிளேக்கில் இறந்துவிட்டதால், ரங்கம்மாள் கோமதியுடனே அனுதரவாய்க் கஷ்ட ஜீவனம் செய்ய வேண்டிய

நிலைமை ஏற்பட்டது. கையில் இருந்த சொற்ப நகைகளை விற்றுச் சிலகாலம் வாழ்ந்தார்கள். பிறகு வேலை செய்தால்தான் சோறு என்ற நிலை ஏற்பட்டது. கிளப்புகளில் மாவு அரைத்துக் கொடுத்து எப்படியோ காலத்தை ஓட்டிவந்தாள். தான் பட்டினி கிடந்தாலும் சரி, கோமதியின் வயிறு மட்டும் வாடாமல் பார்த்து வந்ததால் கோமதி கவலையே தெரியாமல் வளர்ந்துவந்தாள்.

இலவசமாகப் படிப்புச் சொல்லிக் கொடுக்கும் ஒரு பள்ளியில் கோமதியைச் சேர்த்து, அவ்வப்போது தானும் தனக்குத் தெரிந்ததைச் சொல்லிக் கொடுத்து வந்ததால் கோமதி நன்றாய் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டாள். சிற்சில சமயங்களில் வகுப்பில் முதல் ஸ்தானத்திற்குக்கூட வந்து கொண்டிருந்தாள். ஆனால் இதனால் கோமதிக்கு ஏற்படும் அற்ப சந்தோஷம் மற்றத் தோழிகள் தன் ஏழைமையைக் குறித்துப் பரிகாசம் செய்யும் போது இருக்குமிடம் தெரியாமல் ஓடி அவள் கண்களில் நீரைப் பெருக்கிவிடும். அழுதுகொண்டே சென்று தன் தாயிடம் சொல்லிப் பொருமுவாள்.

ரங்கம்மாள் அச்சமயத்திலெல்லாம் ஆறுதல் சொல்லித் தேற்றுவாள். அதில் தன் அழுகையை மறந்து சிட்டாய்ப் பறந்து விடுவாள் கோமதி, விளையாட. இந்த நிகழ்ச்சி சர்வ சாதாரண மாகிவிட்டது.

அன்றும் அப்படித்தான் நடந்தது. மறுநாள் தங்களுக்காக வாங்கியிருக்கும் பாவாடை, சட்டை, பட்டாசுக் கட்டுகள், கம்பி மத்தாப்புக்கள் ஆகியவற்றைப் பற்றிக் கோமதியின் தோழிகள் ஒருவரோடு ஒருவர் பிரமாதமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சம்பாஷணையில் கலந்து கொள்ளச் சென்ற கோமதியை அவர்கள் பரிகாசம் செய்து துரத்தி விட்டதால் மனம் உடைந்து அம்மாவிடம் ஆறுதல் தேடி வந்தாள் கோமதி. அந்த ஆறுதலுக்குப் பிறகுதான் தெருவில் நின்றபடி எதிர் வீட்டு ராவ்பகதூர் வீட்டுக் குழந்தைகள் பட்டாசு மத்தாப்பு விடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பொறி பொறியாய்ச் சிதறி ஒளியைச் சிந்திக் கொண்டிருந்த கம்பி மத்தாப்பின்மேல் கோமதியின் கண்ணும் கருத்தும் சென்றன. கண் கொட்டாது அதையே பார்த்துக்கொண்டிருந்தாள். தானும் அத்தகைய மத்தாப்பு ஒன்றைத் தன் கையில் பிடித்து விடவேண்டும் என்ற ஆசை அவள் உள்ளத்தில் எழுந்தது. ஆசை நிறைவேற என்ன செய்வதென்று அவளுக்குத் தோன்றவில்லை. தன் ஒரே ஜன்றுகோலான தாயை நோக்கி, "அம்மா அம்மா!" என்று கூவிக்கொண்டு ஓடினாள்.

ரங்கம்மாள் வீடு மெழுகிக் கொண்டிருந்தாள். ஓடி வந்த கோமதியைச் சாணிக் கையோடு வாரி அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பின் இன்பத்தால் நாம் எதற்காக வந்தோம் என்பதை ஒரு கணம் மறந்துவிட்டாள் கோமதி. பின் நிதானமாக

எதிர் வீட்டு ராவ்பகதூரின் குழந்தைகள் கம்பி மத்தாப்பு விடுவதையும், தனக்கு அதுபோல் ஒரு பெட்டி கம்பி மத்தாப்பு வேண்டு மென்பதையும் தெரிவித்தாள்.

ரங்கம்மாளின் கண்களில் நீர் துளித்தது. இறந்து போன தன் கணவன் முகம் அவள் மனக் கண்முன் காட்சி அளித்தது. அவளையும் மீறிப் பிரவகித்த கண்ணீர் கோமதியின் கன்னத்தில் சொட்டியது.

தன் தாய் எப்படியாவது மத்தாப்பு வாங்கிக் கொடுத்து விடுவாள் என்ற பரிபூரண நம்பிக்கையோடு வந்த கோமதிக்கு இது பெருத்த ஏமாற்றமாயிருந்தது. அதனுடன் தான் மத்தாப்பு கேட்டதால்தான் அம்மா அழுகிறாள் என்றும் அவளுக்குத் தோன்றியதால், "அம்மா, அம்மா! எனக்குக் கம்பி மத்தாப்பு வேண்டாம்மா! நீ அழாதேம்மா" என்றாள் பரிதாபமாக.

"இல்லே, கண்ணு; நான் அழலே; நீ சித்த நாழி வீதிக்குப் போய் வேடிக்கை பார்த்திட்டு இரு. நான் சீக்கிரம் மெழுகிட்டு உனக்குப் பணியாரம் சுட்டுத் தாறேன்" என்றாள் ரங்கம்மாள் கண்ணைத் துடைத்துக்கொண்டே.

"பணியாரம்" என்ற வார்த்தை, ஏக்கமும் ஏமாற்றமும் நிறைந்திருந்த கோமதியின் முகத்திற்கு ஒரு சோபையை அளித்தது. "பணியாரம், பணியாரம்!" என்று சொல்லிக் கொண்டே வீதியை நோக்கி ஓடி விட்டாள். மீண்டும் மெழுகுவதில் முனைந்தாள் ரங்கம்மாள்.

அம்மா பணியாரம் செய்து தருவாள் என்ற நம்பிக்கையால் மறைந்திருந்த ஏமாற்றத்தையும், ஏக்கத்தையும் எதிர் வீட்டில் கொளுத்திய கம்பி மத்தாப்பு, கிளறிவிட்டு விட்டது. அக் குழந்தைகளுக்கு அருகில் சென்று அவர்கள் மத்தாப்பு விடுவதைத் தன் விரிந்த கண்களால் பார்த்துக் கொண்டிருந்தாள் கோமதி.

"ஐயையோ! கோமதி வந்து விட்டாடி; மத்தாப்பெல்லாம் தள்ளி வையடி. எடுத்துட்டு ஓடிப் போயிடப் போறு" என்றாள் வருமுன் காக்கும் லக்ஷ்மி என்ற சிறுமி.

"ஆமாடி, அப்பவே இருந்து அவ எப்ப எடுத்துட்டுப் போகலாம்னு காத்திட்டிருக்கா" என்று அதை ஆமோதித்தாள் மற்றொரு சிறுமி.

அதுவரையில் எந்த விதமான எண்ணமும் இல்லாமல் இருந்த கோமதியின் குழந்தையுள்ளத்தில், 'இவர்களுக்கு இவ்வளவு இருக்கிறதே; நாம் ஒரு கம்பி மத்தாப்பு எடுத்துக்கொண்டு ஓடிவிட்டால் இவர்களுக்கு என்ன முழுகிவிடும்?' என்ற எண்ணம் எழுந்தது. அதற்கு ஏற்றவாறு, "படபட" வென்று வெடித்த பட்டாசுச் சத்தத்தைக் கேட்ட எதிர் வீட்டுக்

குழந்தைகள் தங்கள் முன்னாக்கிரதையை மறந்து தின்னையை விட்டு இறங்கி எட்டிப் பார்த்தார்கள். இதுதான் நல்ல சமயம் என்று அங்கிருந்த கம்பி மத்தாப்பை எடுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தாள் கோமதி.

இதைப் பார்த்துவிட்ட எதிர் வீட்டு லக்ஷ்மி, "மத்தாப்பை எடுத்துண்டு கோமதி ஓடறுடி!" என்று கத்திக் கொண்டே கோமதியைப் பின் தொடர்ந்து ஓடினாள். கோமதி அவளிடம் சிக்கிக்கொண்டாள். ஆனால் பாவாடை தடுக்கிக் கீழே விழுந்து விட்டாள். மண்டையில் பலமான அடி. கோமதி மூர்ச்சித்து விட்டாள்.

அவளைத் துரத்திக்கொண்டு போன லக்ஷ்மிக்கு, அவளை நாமே தள்ளி விட்டோமென்ற பயம் பிடித்துக்கொண்டது. திரும்பிப் பார்க்காமலே வீட்டிற்கு ஓடிவிட்டாள்.

* * *

சற்று நேரத்திற்குப் பிறகு ஏதோ சப்தம் கேட்டுக் கோமதி மெல்லக் கண்ணை விழித்துப் பார்த்தாள். தன் தாய் தன் தலையை வருடிக் கொண்டிருந்ததும், எதிர்வீட்டு லக்ஷ்மி இரண்டு பெட்டி கம்பி மத்தாப்பு, பட்டாசுக் கட்டு முதலியவற்றுடன் நின்று கொண்டு தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததும் மங்கலாகத் தெரிந்தன. அசதியில் சற்று நேரம் கண்ணை மூடிக் கொண்டிருந்து விட்டு மீண்டும் திறந்தபோது எதிரில் லக்ஷ்மி நின்று கொண்டிருப்பது தெரிந்தது. அவள் கையில் பட்டாசுக் கட்டுகளும் மத்தாப்புப் பெட்டிகளும் நிறைந்திருந்தன. அவள் கையில் இருந்த மத்தாப்புப் பெட்டிகளை ஆர்வம் பொங்கப் பார்த்தாள் கோமதி.

அந்த மத்தாப்பை எடுத்துக்கொண்டு ஓடி வரும்போது நாம் கீழே விழுந்தோம் என்பது அவளுக்கு ஞாபகம் வந்தது. என்னவோ நினைத்துக்கொண்டு சற்று நேரம் கண்களை மூடிக்கொண்டாள்.

திடீரென்று லக்ஷ்மியின் குரல் கேட்டது. கோமதி மெல்லக் கண் விழித்தாள். "கோமதி, கோமதி! இந்தா இதெல்லாம் பாரு. இதெல்லாம் உனக்குத்தான். இதோ, கம்பி மத்தாப்பு மூணு பெட்டி கொண்டு வந்திருக்கேன். இந்தா: இதை யெல்லாம் நீயே வச்சுக்கோ."

லக்ஷ்மி சொன்னதைக் கேட்டுக் கோமதி திகைத்து விட்டாள். அவ்வளவு பட்டாசும் மத்தாப்பும் தனக்குத் தான் என்பதை அவளால் நம்ப முடியவில்லை. மண்டையில் பலமாக அடிபட்டு விட்டதாலும், அதிர்ச்சியாலும் நகரக்கூட முடியாத நிலையில் அப்போது இருந்தாள் கோமதி.

லக்ஷ்மி தன் கையில் ஒரு கம்பி மத்தாப்பைக் கொளுத்திக் கொண்டு, "கோமதி! கோமதி! இந்தா மத்தாப்பு: இதெல்லாம் உனக்குத்தான்; கையிலே புடிச்சுக்கோ" என்று நீட்டினாள்.

தன்னையும் மீறிய சக்தியால் அதைக் கை நீட்டி வாங்கிக் கொண்டாள் கோமதி. கம்பி மத்தாப்பின் பிரகாசம் கோமதியின் மாசுமறுவற்ற முகத்தில் படிந்து, ரங்கம்மாள், லக்ஷ்மி ஆகிய இருவர் முகத்திலும் பிரதிபலித்தது.

ந. நாராயணன்

எதிர்பாராதது 27

வங்காளத்திலே வறட்டுப் பஞ்சம்: கல்கத்தா நகரத்தின் வீதிகளில் ஏழைகளின் எலும்புக் கூடு; தெருக்களில் செல்லும் வண்டிகளில் சில, பிணம் தூக்கும் வண்டிகள்; தெருக்களில் நடமாடும் தொண்டர்கள் அனைவரும் பிணங்களை அப்புறப்படுத்துகிறவர்கள். ஜீவ நதியாகிய கங்கையின் இருகரைகளிலும் வயல் பிரதேசம்; பச்சைப் பசேலென்ற பயிர்கள் வானத்தைப் பார்த்துச் சிரிக்கின்றன.

கங்கை தண்ணீரை மட்டும் தரவில்லை. வண்டல்களையும் வயல்களில் கொண்டுவந்து தள்ளுகிறாள். தானியங்கள் குவியல் குவியலாகக் களத்து மேட்டில் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால், பஞ்சம்! கோரப் பஞ்சம்! பத்து லக்ஷக்கணக்கான மக்களின் உயிரைப் பறித்துக்கொண்ட பாழும் பஞ்சம்!

தாராகஞ்சு ஒரு சிறிய கிராமம். அங்கே சிறிய குடிசையில் வாழும் சுரேந்திரன் மத்திய வகுப்பைச் சேர்ந்தவன். ஸந்தியா அவனுடைய தங்கை. தாய் தந்தையர் இல்லாதவள். நிலம் கரையில்லை. அந்த ஊர் ஜமீனில் குமாஸ்தா வேலை அவனுக்கு.

ஜமீனில் வேலை பார்க்கும் மானேஜர் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர். தற்செயலாக ஸந்தியாவைப் பார்த்தார். அவருடைய குரங்கு மனம் ஆசையைத் தூண்டிவிட்டது. இரு மனைவியர் இருக்கையிலே ஸந்தியாவையும் விவாகம் செய்துகொள்ள ஆசைப் பட்டார். சுரேந்திரனிடம் அதைச் சொன்னார். அவன் அதற்கு இணங்க மறுத்துவிட்டான். அதனால் மறுநாளே அவன் வேலையிலிருந்து நீக்கப்பட்டான்.

சுரேந்திரன் கையில் கொஞ்சம் பணம் இருந்தது. அதைக் கொண்டு ஏதேனும் வியாபாரம் செய்யலாமென்று எண்ணினான். வியாபாரத்திற்கு அந்தக் கிராமம் சரிப்படவில்லை. மேலும் அந்த மானேஜர் வேறு இடைஞ்சல் செய்துகொண்டே இருந்தார்.

அதனால் அவனுக்குச் சாப்பாட்டுக்கே உணவுப் பொருள் கிடைப்பது அரிதாயிருந்தது.

தங்கையை அழைத்துக்கொண்டு பக்கத்திலுள்ள நகரமாகிய கல்கத்தாவிற்கு வந்தான். நகரத்தின் நிலைமை அப்பொழுது சரியில்லாமல் இருந்தது. மேலே எதிரிகளின் குண்டு; வீதிகளில் பஞ்சத்தின் தாண்டவம்; உணவுப் பொருள் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. அவன் மட்டும் இருந்தால் எப்படியும் சமாளித்துக் கொள்ளலாம்; தங்கை வேறு இருக்கிறாளே!

ஆணுய் இருந்தாலும் பரவாயில்லை. அவளோ பெண்; அதிலும் மங்கைப் பருவமடைந்த யுவதி. அவனுக்கு அவள் பாரமாக இருந்தாள். என்ன செய்வதென்று தோன்றவில்லை. யாரோ தூரபந்து ஒருவரது வீட்டில் தங்கியிருந்தான். முன் பின் அதிகப் பழக்கமில்லாத அந்த வீட்டில், பழைய உறவை வைத்துக்கொண்டு எத்தனை நாட்கள் அங்கே தங்கியிருப்பது? திடீரென்று தனக்கு ஏற்பட்ட மாறுதலைக் கண்டு அவன் வருந்தினான். தங்கை சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வர எண்ணினான்.

அந்த நேரத்தில் கல்கத்தாவிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் புதிதாக ஒரு வியாபாரம் ஆரம்பமாகியிருந்தது. அதுதான் மங்கைப் பருவமடைந்த யுவதிகளையும், பஞ்சத்தால் அநாதையான ஆரணங்குகளையும் காசுக்கு வாங்கி விபசாரிகளாய் மாற்றிவிடும் தொழில். இதன் மூலம், அந்த வியாபாரத்தில் இறங்கிய ஒவ்வொருவனும் நல்ல லாபம் அடைந்தானென்று கேள்வி.

அதில் ஒரு தரகனைச் சுரேந்திரன் கண்டான். ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்துகொள்ளும் பொழுது, தன்னை ஒரு கல்யாணத் தரகனென்று சுரேந்திரனிடம் சொல்லிக்கொண்டான். அவர்கள் பிரியும்பொழுது, ஸந்தியாவுக்குச் சீக்கிரம் நல்ல இடத்தில் விவாகம் செய்து வைப்பதாக உறுதிமொழி கூறிப் பிரிந்தான் தரகன்.

சுரேந்திரன் சில நண்பர்களுடன் 'பிஸிம்' கம்பெனி ஆரம்பிக்க ஏற்பாடு செய்தான். தன் பங்குப் பணத்திற்குக் கையில் உள்ளது போக இன்னும் ஆயிர ரூபாய் தேவை. கம்பெனியை ஆரம்பிப்பதற்கு நாளும் குறிக்கப்பட்டது. அதற்குள் அவன் ரூபாய் கொடுக்கவேண்டும். முதலைப் போட்டுக் கம்பெனியை மட்டும் ஆரம்பித்துவிட்டால் லாபம் ஏராளமாகக் கிடைக்கும். ஆனால் பணத்திற்கு என்ன செய்வது?

எதிர்பாராத விதத்தில் முன்பு வந்த தரகனைக் கண்டான். அவன் சுரேந்திரனைக் கண்டதும், "ஐயா, உங்கள் மனசுபோல் ஸந்தியாவுக்கு நல்ல இடம் கிடைத்திருக்கிறது. மாப்பிள்ளை பாபு பெரிய வக்கீல். காசியில் வேலை. மாமனார் வீட்டுத் தொந்தரவு அதிகம் இல்லாத பெண்ணைகவும், கிராமத்தில் பிறந்து வளர்ந்த

பெண்ணைகவும், நல்ல அழகுடையவளாகவும் இருந்தால், ரூபாய் ஆயிரம் தந்து விவாகம் செய்துகொள்வதாகச் சொன்னார். உடனே உங்கள் தங்கையின் புகைப்படத்தைக் காட்டினேன். அவரும் சம்மதித்துவிட்டார்" என்றான். ஆனால் கல்யாண நாளும் கம்பெனி ஆரம்பம் செய்யும் நாளும் ஒன்றாக வந்தன. அந்த மாதத்தின் கடைசி நாளாகையால் வேறு நல்ல நாள் இல்லை. கல்யாணம் நடக்காவிட்டால் பணம் கிடையாது.

கடைசியாக ஸந்தியாவின் கல்யாண காரியம் அனைத்தையும் தாகனே சொந்தக்காரனைப்போல் பார்த்துக்கொள்வதாகவும், விவாகத்திற்குப் பின்பு ஒரு நாளைக்குத் தங்கை வீட்டிற்கு வருவ தாகவும் பேசி முடிந்தது. ரூபாய் ஆயிரமும் முன்பணமாகப் பெற்றுக்கொண்டான் சுரேந்திரன். பிலிம் கம்பெனி வேலையும் ஆரம்பமாயிற்று.

கண்ணீரும் கம்பலையுமாக நின்ற ஸந்தியாவைத் தைரியப் படுத்தினன் சுரேந்திரன். காசிக்குப் போனதும் கடிதம் போடும் படியும், மாப்பிள்ளையின் நோக்கமறிந்து நடக்கும்படியும், சில நாட்களுக்குள் காசிக்கு வரவேண்டியிருப்பதால் அப்பொழுது அவளுடைய வீட்டிற்கு வருவதாகவும் சொன்னன்.

சகோதரனை விட்டுப் பிரியும்பொழுது ஸந்தியா, தூக்கு மேடையில் இன்னும் கொஞ்ச நேரத்தில் உயிர்விடப் போகும் மனிதரைப்போல் காணப்பட்டாள். அவளுடைய முகம் வெளுத் துப் போய்விட்டது. தாயைப் பிரிந்த கன்றைப்போல் அழுது கொண்டே வண்டியில் ஏறினாள். அவளையே பார்த்துக் கொண்டு நின்ற சுரேந்திரன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

ஒரு மாதம் ஆகிவிட்டது. ஸந்தியாவிடமிருந்து இருபது நாட் களுக்கு முன்பு ஒரு கடிதம் வந்தது. அவளுக்கு நன்றாக எழுதத் தெரியாது. ஆகையால் யாரோ எழுதியிருந்தார்கள். கீழே கையொப்பம் மட்டும் அவள் போட்டிருந்தாள். சகோ தரனைப் பார்க்க ஆவலாக இருப்பதாகவும், கல்யாணம் நன்கு நடந் தேறியது என்றும், வக்கீல் பாபு தன்னை நன்றாக நடத்துவதாகவும் தெரிவித்திருந்தாள்.

தங்கையைப் பார்த்துவர வேண்டுமென்ற ஆவல் சுரேந்திர னுக்கு வளர்ந்து வந்தது. மேலும், இருபது நாட்களாக ஒரு கடிதங்கூட அவளிடமிருந்து வரவில்லை. அதைப்பற்றியும் எண்ணி அவன் மனம் வேதனையில் உழன்றது. சில நண்பர்களுடன் அவன் காசிக்குப் போகவேண்டி வந்தது. அப்பொழுது தங்கையையும் பார்த்துவரலாமென்று நினைத்தான்.

காசியில் சுகுமாரி என்னும் நடிகையைத் தங்களுடைய புதுப் படத்தில் நடிக்க ஏற்பாடு செய்திருந்தனர், சுரேந்திரன் கம்பெனி யாட்கள். சம்பள விஷயமாகக் கொஞ்சம் தகராறு ஏற்பட்டது.

நேரே சென்ரூல் நோக்கம்போல் பேசி முடிக்கலாம் என்ற தீர் மானத்துடன் காசிக்குப் புறப்பட்டனர். சுரேந்திரனும் உடன் சென்ரூன்.

காசியில் அவர்களுடைய கார் ஒரு பெரிய வீட்டின் முன்பு நின்றது. உள்ளே எல்லோரும் சென்றனர். ஆங்கிலேய மோகத் தில் ஆழ்ந்திருந்த இரண்டு ஆட்களும் இரண்டு பெண்களும் ஓர் மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர். மேஜைமீது பலவகையான குடி வகைகள் வைக்கப்பட்டிருந்தன. சிட்டுக் கச்சேரி பலமாக நடந்துகொண்டிருந்தது.

வந்தவர்களைக் கண்டதும் அங்குள்ளவர்கள் எழுந்து அஞ்சலி செய்தனர். அந்த வீடுதான் சுகுமாரியின் வீடு. அங்குள்ளவர்களே அந்த வீட்டை மேற்பார்வையிடுபவர்கள் போலும்! அவர் களிடந்தான் சுகுமாரியின் சம்பள விஷயமாகப் பேச்சு வார்த்தை நடந்தது.

சுரேந்திரன் மனம் சம்பாஷணையில் ஈடுபடவில்லை. 'தங்கை யின் வீடு எங்கே? அவர்கள் இருவரும் இப்பொழுது வீட்டில் இருப்பார்களா?' – அவன் மனம் அவனையே கேள்வி கேட்டது. பக்கத்தில் இருந்த நண்பரிடம் தன் தங்கை வசிக்கும் வீதியின் பெய ரைக் குறிப்பிட்டுக் கேட்டான். "இதே வீதிதான்" என்ற பதில் அவரிடமிருந்து வந்தது.

அப்படியானால் தங்கையின் வீடு அதிகத் தூரம் இராது. தேடிக்கொண்டிருக்க வேண்டிய கஷ்டம் இல்லை என்று நினைத் தான். அவன் மனம் கொஞ்சம் அமைதியுற ஆரம்பித்தது. ஆனால் அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது.

பக்கத்து அறையைத் திறந்துகொண்டு ஒரு மனிதர் வந்தார். வழுக்கைத் தலை, அலங்கோலமான உடை, வாயில் சிகரெட்டு, குப்பென்று நாற்றமடிக்கும் உயர்வகைப் பானத்தின் வீச்சம். அவர் யார்? அவரைக் கண்டு சுரேந்திரன் ஏன் திடுக்கிட வேண்டும்?

தாராகஞ்சு ஜமீனில் வேலை பார்த்த மானேஜரே அவர். சுரேந்திரனைப் பார்த்து அவர் அலட்சியமாகச் சிரித்தார். அதனால் தான் அவன் திடுக்கிட்டான். அவன் அருகில் வந்தார் அவர். "தம்பி, சௌக்கியமா? இப்பொழுது என்ன செய்துகொண்டிருக் கிறாய்?" என்ரூர் அவன் முதுகில் தட்டிக்கொண்டே.

"நம்ப கம்பெனி பார்ட்னரில் அவரும் ஒருவர்" என்ரூர் சுரேந்திரனோடு வந்த ஒருவர். இதைக் கேட்டதும் அந்தப் பழைய மானேஜர் விழுந்து விழுந்து சிரித்தார். "தம்பி, எப்பொழுதும் மமதை கூடாது. பார்த்தாயா? நான் உன்னிடம் கெஞ்சியது போக, நீ என்னிடம் பணம் கொண்டுவந்து வைத்துக்கொண்டு கெஞ்சுகிறாய்!" என்ரூர். அவர் வாயிலிருந்து நாற்றம் அதிகமாக வீசியது.

அதற்குள் மற்றவர்கள் சம்பள விஷயமாக ஒரு முடிவுக்கு வந்தனர். ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டனர். கடைசியில் சுரேந்திரனும் கையெழுத்திட்டான். அப்பொழுது அவனுடைய கை, அவனே அறியாமல் ஆடியது. இருதயம் பனிக்கட்டிபோல் உறைந்துவிட்டது. அந்த மானேஜர் சொன்ன வாக்கியங்கள் அவன் மனத்தில் சந்தேகத்தை எழுப்பின. தங்கையைச் சீக்கிரம் பார்த்துவிட வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான்.

"வந்தது வந்துவிட்டோம். சுகுமாரி அவர்களையும் நேரில் பார்த்து விடுவோம்" என்றார் சுரேந்திரனுடைய நண்பரில் ஒருவர். "ஆஹா! பேஷாய்ப் பார்க்கலாம். ஆட்சேபமே இல்லை. இதோ இந்த அறையில்தான் இருக்கிறார்" என்று, தாம் வந்த அறையைச் சுட்டிக் காட்டினார், அந்த மானேஜர்.

"தம்பி, சுரேந்திரா! நீயும் பார்க்க வேண்டுமா? அப்படியானால் வா." அவர் சொல்லிக்கொண்டே முன்னால் சென்று கதவைத் திறந்தார். சுரேந்திரனுக்கு உடம்பெல்லாம் ஆடியது. மனம் ஒரு நிலையில் இல்லை. மெதுவாக அவர்களைப் பின் தொடர்ந்தான்.

அந்த அறை என்ன, தெய்வ லோகமா? இந்திர பவனத்தையும், நந்தவனத்தையும் அவன் பார்த்திருக்க மாட்டான். ஆனால் பணத்தின் வன்மையால் ஓர் இன்ப உலகம் அங்கே உதயமாகியிருந்தது. பளிங்குப் பிரதிமைகள் நிர்வாணமாக நிர்மாணம் செய்யப்பட்டிருந்தன. ஓர் அரக்கன் தன்னுடைய மிருக இச்சையைத் தீர்த்துக்கொள்ள ஒரு மோகினிக்கு நிர்மாணித்திருக்கும் மணி பவனம் போலும்! பூச்சிகளைக் கவர்ந்து கொல்லும் ரத்ன தீபம் அங்கே சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும்; அந்த ரத்ன தீபம் எங்கே? அதுதான் சுகுமாரியா?

ஒவ்வொருவருக்கும் அஞ்சலி செய்தாள் அங்கே நின்ற சுகுமாரி. சுரேந்திரன் ஒரு பக்கமாக வந்தான். அவள் அவன் பக்கம் அஞ்சலி செய்யத் திரும்பினாள். அவனும் மற்றவர்களை விலக்கிக் கொண்டு முன்வந்தான். "அண்ணா!" என்ற சோகக் குரலோசை அந்த அறையையே இடுகிடுக்கச் செய்தது. அவன் பேச்சற்றுச் சுவரில் சாய்ந்தான். காரணம் என்ன? சுகுமாரி யார்? — ஸந்தியாதான்!

வே. நாராயணன், எம். ஏ., எம். எல்.

அவளும் அவனும் 28

அவளுக்கு லக்ஷ்மி என்று பெயர். அவன் பெயர் நாராயணன் என்பது. கல்யாணத்தின்போது, இந்தப் பெயர்ப் பொருத்தத்தையே பார்த்து நிச்சயித்தார்களோ என்று தோன்றிற்று. ஏனென்றால், அவர்களுக்குள் மனப்பொருத்தம் இருப்பதாகத்

தோன்றவில்லை. லக்ஷ்மி குக்கிராமத்தில் வளர்ந்த பெண் ; வீட்டுக் காரியங்களை யெல்லாம் நிர்வகித்து வீட்டை லக்ஷ்மீகரமாக வைத்துக்கொள்ளத் தெரியும் என்றாலும், இங்கிலீஷ் வாசிக்கத் தெரியாது. தமிழ்ப் பாடல்களைப் பாடி அவற்றின் அர்த்தத் தையும் ஓரளவாறு புரிந்துகொண்டு இன்புறுவாள் என்றாலும், வல்லின இடையின வித்தியாசம் தெரியாமல் பேசுவதைப்போலவே கொச்சையாக எழுதுவாள். 'கிளப்'பிற்குப் போய்ப் பந்த டிக்கவும் தெரியாது. சினிமாவுக்கோ பாட்டுக் கச்சேரிக்கோ போய் வருவதற்கு வேண்டிய துணிச்சலும் அவளுக்கு ஏற்பட வில்லை. வெளியில் போவதற்கே பயப்படுவாள் ; துணைவேண்டும் சுடு வெயிலிலும் செருப்புப் போட்டுக்கொண்டு நடக்கமாட்டாள்

இப்படிப்பட்ட பட்டிக்காட்டுப் பெண்ணை விவாகஞ் செய்து கொள்ள நாராயணனுக்குச் சம்மதமில்லை. அவனே தற்கால நாகரிகத்திலே பெரிதும் ஈடுபட்டவன் ; இங்கிலீஷ் பாஷையி லுள்ள சிறந்த நூல்களையும் செந்தமிழ் நூல்களையும் கற்று ணர்ந்து ரஸிப்பதோடு, வடமொழி நூல்களையும் பண்டிதர்களின் உதவியின்றியே படித்து ரஸிக்கும் திறமை வாய்ந்தவனாக இருந்தான். மும்மொழியிலுமுள்ள ரஸபரிதமான கவிதைகளைத் தன்னுடன் சேர்ந்து அனுபவிப்பதற்குரிய இல்லாளையே அவன் மனம் நாடியது. ஆயினும் பெற்றோர்கள் விருப்பங்கொண்டு நல்ல குலத்திலே பிறந்தவள் என்று தேர்ந் தெடுத்தவளை அவனால் மறுக்க முடியவில்லை. நாலு நாள் விவாகத்திற்கும் ஒப்புக்கொண்டான். தன் மனத்திலே உள்ள அருவருப்பை வெளிக்காட்டாமல் விளையாட்டும் வேடிக்கையுமாகவே நாலுநாட் பொழுதையும் போக்கினான். தன் மனைவியோடு தனித்துப் பேசப் பல சந்தர்ப்பங்கள் இருந்தும் அப்பொழுதெல்லாம் அவள் கூச்சப்படுவதும் மௌனமா யிருப்பதும் அவனுக்கு மனக்கசப்பை உண்டு பண்ணின. ஆயினும், நல்ல புத்திசாலியாகையால், நாளடைவிலே அவளை நம்மிஷ்டப்படி நடக்கும்படி வசக்கிக் கொள்ளலாம் என்று ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டான். விவாகமானவுடனேயே தன் வீட்டிற்கு அவள் வந்துவிட வேண்டும் என்று கண்டிப்பாய்த் தன் பெற்றோர்களிடம் சொல்லி விட்டான். சாரதா சட்டத்திற்குப் பிறகு நடந்த விவாகமாகை யால், பெண்ணைப் பெற்றவர்களும் ஆக்ஷேபிக்க இடமில்லா திருந்தது.

2

நாராயணனைச் சிறு வயசு முதற்கொண்டே எனக்குத் தெரியும். படிப்பில் அவன் துடியாய் இருப்பான். அவன் நடத் தையின் நேர்மையும் என்னை வசீகரித்தது. வயசிலும் பள்ளிக்கூட வகுப்பிலும் அவனைவிட நான் மூன்று வருஷங்கள் பெரியவன் ; ஆனாலும் பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் செல விடும் வேளைகளைத் தவிர, மற்றைப் பொழுதெல்லாம் இருவரும்

இணைபிரியாதிருப்போம். எங்கள் இருவரையும் சங்கரநாராயணன் என்று ஒருவராகவே கூறிப் பரிகசிப்பார்கள், எங்கள் தோழர்கள். நாராயணனுக்குப் பழைய முறையிலே ஸம்ஸ்கிருதம் சொல்லிக் கொடுத்திருந்தார் அவனுடைய தகப்பனார். இங்கிலீஷ் ஹானர்ஸ் படிப்பிற்கு அது மிகவும் அனுகூலமாயிருந்தது. பரீக்ஷையில் அவன் முதல்வனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். கலாசாலைப் படிப்பு முடிந்ததுமே நாராயணனுக்கு எங்கள் கலாசாலையிலேயே இங்கிலீஷ் வாத்தியார் வேலை கிடைத்தது. நானும் அதே சமயத்தில் வக்கீலாகத் தஞ்சாவூருக்குப் போய்விட்டேன்.

கல்யாணமான புதிதிலே நாராயணன் தான் குடும்பம் நடத்தப்போகும் விதத்தையெல்லாம் வருணித்துப் பேசுவான். "லக்ஷ்மிக்கு எழுத்து வாசனையில்லை என்பது ஒன்றுதான் குறை; அந்தக் குறையை நானே அவளுக்குக் கல்வி கற்றுக் கொடுத்து நீக்கிக்கொள்வேன்" என்று சொல்வான்; "அவளோடு நானும் கவிதைக் கனிகளைச் சுவைப்பதும் கவிதைக் கனுக்களைக் காணுவதுமாகப் பொழுது போக்குவேன்" என்பான்.

"அப்படியானால் இனி உனக்குச் சங்கரன் வேண்டியதில்லை" என்று நான் ஊடுவேன்.

"எப்படியிருந்தாலும் என் சங்கரனாகுமா?" என்பான்.

அவன் என்னிடம் கூறியவாறே தன் மனைவிக்குக் கல்வியும் நாகரிகமும் கற்றுக்கொடுக்க முயன்றான். ஆனால் லக்ஷ்மிக்குக் கல்யாணத்தின்போதே வயசு பதினைந்து நிரம்பிட்டது; அதனால் படிப்பிலே அவள் மனம் செல்லவில்லை. "அவளும் எவ்வளவோ முயன்று பார்த்தாள், பாவம்!" என்று நாராயணன் என்னிடம் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டான். "நீயும் என்னைப் பிரிந்து தஞ்சாவூர் போகிறாய்; நான் இனி யாரோடு ரஸித்துப் பொழுது போக்குவேன்!" என்று அவன் வருந்தியதை நான் இன்றும் மறக்கவில்லை.

3

நாராயணன் நவநாகரிகத்தில் மோகம் கொண்டவன்; தலை மயிரைக் 'கிராப்' செய்துகொண்டு எப்பொழுதும் காற்சட்டையும் 'பூட்'ஸும் தரித்துக் கொண்டிருப்பான். வெளியில் போகும் போது கையில் ஒரு 'ஹாட்.' தான் தன் இஷ்டப்படி நடக்கச் சுயேச்சை வேண்டும் என்று வாதிப்பான். பொதுஜனக் கட்டுப் பாட்டை மீறுவதிலே அவனுக்கு உத்ஸாகம் அதிகம். ஆண் மக்களைப் போலவே பெண் மக்களும் சுயேச்சைப்படி நடக்க வேண்டும் என்பான். "மனைவி மணாளனுக்கு அடங்கி நடக்க வேண்டும்; அவனைத் தெய்வமாகக் கொள்ளவேண்டும்" என்னும் கொள்கையை அவன் பரிகசிப்பான். "வேத காலத்தில் இம்மாதிரி இருந்ததில்லை; எல்லாம் பிற்காலத்து அநாகரிகம்" என்று பிரசங்கஞ் செய்வான். விவாக மந்திரங்களின் பொருள் அவனுக்கு

நன்முகத் தெரியும். அவற்றை உச்சரிக்கும்போது தன் மனைவிக்கு வீட்டு வியவகாரங்களிலெல்லாம் பூர்ண சுதந்திரம் அளிக்கிறேன் என்ற உணர்ச்சியோடேதான் உச்சரித்தான்.

ஆகவே, அவள் குடித்தனம் தொடங்கியபின், வீட்டுக் காரியங் களுக்கெல்லாம் அவளே நிர்வாகி ஆகிவிட்டாள். சமையல் முதலிய வேலைகளுக்காக ஆள் வைப்பதற்கு வேண்டிய அந்தஸ்தும் செல்வமும் இருந்தபோதிலும் அவளே சமையல் வேலை முழுவ தையும் செய்வாள். பூஜை, விரதங்கள், பழைய காலத்து அனுஷ் டானங்கள் ஆகியவற்றையும் கவனித்துக்கொள்வாள். நாராயண னுடைய பெற்றோர்களுக்குரிய பணிவிடைகளையும் மனங் கோணுமற் செய்வாள். தன் சகோதர வாஞ்சையைக் காட்ட ஒரு நாத்தனர்கூட இல்லாதது அவளுக்குப் பெருங் குறையாகவே இருந்தது. தன் காதற் கணவரோ ஒரு விஷயத்திலும் தன்னைக் கலந்து கொள்வதும் இல்லை; தன் விஷயத்திலே யாதொரு நிர்ப்பந் தம் செய்வதும் இல்லை. அடிக்கடி, அவள் கணவர் அவளை நிர்ப்பந் தப்படுத்தமாட்டாரா என்று அவளுக்குத் தோன்றுமாம்; சுபகாரி யங்களில் அவளிடம் கலந்து அவள் அபிப்பிராயத்தையும் கேட்க மாட்டாரா என்று தோன்றுமாம். அப்பொழுதெல்லாம் ஜாடை மாடையாக நாராயணனுக்கு அவள் கருத்தைத் தெரிவிப்பாளாம். "எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. நான் செய்வது அவ ளுக்குப் பிடிப்பதில்லை; அவள் செய்வது எனக்குப் பிடிப்பதில்லை. ஆனல் நாங்கள் இருவரும் அவரவர் இச்சைப்படியே நடந்து கொள்வது என்று நிர்மானித்துவிட்டேன். நான் செய்வதில் ஒரு தப்பும் இல்லாதவரையில் நான் ஏன் அவளைத் திருப்தி செய்வ தற்காக அவள் விருப்பப்படி நடக்கவேண்டும்? அவள் என்னைத் திருப்தி செய்வதற்காக என் இஷ்டப்படி யெல்லாம் ஆடத் தயார் தான். ஆனலும் அவள் மனம் செல்லாத வழியிலே அவளை வலிந்து இழித்துத் துன்புறுத்துவது என் கொள்கைக்கு விரோத மன்றோ?" என்று என்னிடம் தன் இல்லற வாழ்க்கையை வருணித்துக் கூறுவான்.

4

நான் தஞ்சாவூருக்கு வந்து பன்னிரண்டு வருஷம் ஆகி விட்டன. நாராயணன் குடும்ப வாழ்க்கை தொடங்கிப் பதினைந்து வருஷம் முடியும் சமயம். திடீரென்று ஒரு நாள் தினசரிப் பத்திரிகையில் லக்ஷ்மி இறந்துபோனுள் என்ற செய்தியைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன். அவள் நோய் வாய்ப்பட்டிருந் தாள் என்பது எனக்குத் தெரியாது. நாராயணன் நிலைமையை நினைந்து மிகவும் வருந்தினேன். சின்னதும் சிறியதுமாய் அவனுக்கு ஐந்தாறு குழந்தைகள். வயசோ இன்னும் முப்பத் தாறு நிரம்பவில்லை. தாயில்லாக் குழந்தைகளை வைத்துக் கொண்டு என்ன தவிப்புத் தவிக்கிருனே? கல்யாணமான மறு வருஷத்திலே அவனுடைய தாய் சுமங்கலியாய்ப் போய்ச்

சேர்ந்தாள்; அடுத்த வருஷத்திலே தகப்பனுரையும் இழந்து விட்டான். ஆனலும், வீட்டிலே பெற்றோர் பெரியோர் இல்லாத குறை அவனுக்குத் தோன்றுமல் இருந்தது; சிறு வயசிலேயே குடும்பப் பொறுப்பு முழுவதையும் வகிக்கும் திறமை லக்ஷ்மிக்கு இருந்தது. நாராயணனுக்கு ஒன்றும் தெரியாது; தன் புஸ்தகங் களுண்டு, தானுண்டு, தன்னிடம் கற்கும் மாணவர்களுண்டு. தனக்கு வேண்டிய காற்சட்டை, பூட்ஸ், ஹாட், நெக்டை, காலர் முதலானவற்றைப்பற்றிக்கூட அவனுக்குத் தெரியவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இவையெல்லாம் லக்ஷ்மிக்குப் பிடிக்க வில்லை யென்றுலும், கணவனுடைய விருப்பங்களை அறிந்து கொண்டு அவனுக்குப் பிடிக்கும் தினுசுகளைத் தேர்ந்தெடுத்து வாங்குவதிலும் அவள் திறமைவாய்ந்தவளாய் இருந்தாள். வண்ணுன் சட்டைகளைக் கிழித்துக்கொண்டு வந்துவிட்டால், வேறு துணி வாங்கிப் புதுச்சட்டைகளைத் தைக்கச்செய்து தயாராக வைத்திருப்பாள். பூட்ஸ் கிழியப் போவதைக் கவனித்துப் புதிய பூட்ஸ் தைக்க 'ஆர்டர்' செய்வாள். புஸ்தகங்களிலுள்ள விஷ யங்கள் அவளுக்குப் புரியாவிட்டாலும், அவற்றைப் பாகுபடுத்தி எங்கெங்கே வைக்கவேண்டும் என்பது லக்ஷ்மிக்கு நன்முகத் தெரியும். இப்படியுள்ள மனைவியை இழந்தால், கையொடிந்தது போல் இராதா என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கையில், தபால் வந்துசேர்ந்தது. அதில் நாராயணனிடமிருந்து ஒரு காகிதம் இருந்தது. அவசரமாகப் பிரித்துப் பார்த்தேன்.

5

சங்கரா!

லக்ஷ்மியைப் பறிகொடுத்து விட்டேன். திடீரென்று மாரடைப்பினுல் அவள் இறந்துபோனுள். சின்னஞ் சிறிசுகளை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வேன்! யாரிடம் என் மனம் உடைந்துபோனதைச் சொல்லி அழுவேன்! இந்த எண்ணம் தோன்றியதும் உன் நினைவு வந்தது. ஆனல் நீ இருநூறு மைலுக்கு அப்பாற் போய்விட்டாயே! தபால் மூலமாகத்தானே என் புலம்பல் உன் காதிற்படும்?

நேற்று ராத்திரி லக்ஷ்மி படுத்துக்கொள்ள வந்தபோது, நான் மரணத்தைப்பற்றிப் பேகன் எழுதிய கட்டுரையை வாசித்துக் கொண்டிருந்தேன். அவளுக்கு ஒன்றும் நோய் இருப்பதாக எனக்குத் தெரியாது. படுக்கை யறையுள் நுழைந்தவள் திடீரென்று மார்பைக் கையாற் பிடித்துக்கொண்டு நாற்காலியிற் சாய்ந்தாள். நான் திடுக்கிட்டு எழுந்தேன். ஏகாதசிப் பட்டினி யால் களைத்துப்போய்விட்டாள் என்று நினைத்தேன். 'என்னடி செய்கிறது? ஏன் இப்படிப் பட்டினிகிடந்து சாகிறுய்?' என்றேன். உடனே, அவள் படபடப்பாய் நாலு வார்த்தைகள் சொல்லிவிட்டு மௌனமாய் விட்டாள். என்ன சொன்னுள், தெரியுமா?

'என்னவோ செய்கிறது; நான் பிழைக்கமாட்டேன். பீடை ஒழிந்தது என்று உங்கள் மனசுக்கு இஷ்டமாய் நடக்கக்கூடியவளைப் பார்த்துக் கல்யாணம் செய்துகொள்ளுங்கள். என் குழந்தைகளை மாத்திரம் என் தாயாரிடம் அனுப்பிவிடுங்கள். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். உங்களுக்கு ஒன்றும் தெரியாது. அவற்றை வைத்துக்கொண்டு தவிக்க வேண்டாம்' என்றாள். தூங்கிக்கொண்டிருந்த குழந்தைகளையும் என்னையும் பிரேமை நிறைந்த பார்வையால் ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கண் மூடி விட்டாள். உடனே டாக்டருக்கு டெலிபோன் பேசினேன். அவரும் பத்து நிமிஷத்தில் வந்துவிட்டார். ஆனாலும் என்ன? மறு நிமிஷம் வந்திருந்தாலும் பயனில்லையே!

ராத்திரி முழுவதும் காளராத்திரிதான். குழந்தைகளை எழுப்பக்கூடாது என்று வாய்விட்டுப் புலம்பாமல் இருந்தேன். டாக்டரிடமே என் மாமியாருக்குத் தந்தி எழுதிக்கொடுத்து விட்டேன். விடியும்பொழுது அவளும் வந்துவிட்டாள்.

லக்ஷ்மி மகராஜி. ஏகாதசி மரணம், துவாதசி தகனம்; என் பிள்ளையிடம் புல்லி வாங்கிக்கொண்டு நானே எல்லாம் செய்து முடித்தேன். குழந்தைகள் இன்னும் பாட்டியைக் கட்டிக் கொண்டு அழுதவண்ணமாய் இருக்கின்றன. என் மனம் கல்; இல்லை; கல்லா யிருந்தால் வெடித்துப்போயிருக்கும்; மண்ணு யிருந்தால் கரைந்து போயிருக்கும். வெறும் மரம்; அதனாலே தான் காய்ந்து காய்க்கட்டையாய் விட்டது.

ஐ ஐ! நான் ஒரு மனிதனு? லக்ஷ்மியின் காதலுக்கு ஏற்ற பாத்திரமா? என்னை அவள் தெய்வமாகக் கொண்டாள். நான் அவளை முழுமுட்டாளான இரண்டுகாற் பிராணியாகப் பாவித்தேன். 'பிராணிக்குந் தான் பிரேமையும் அன்பும் இருக்கும். அதனால் அவள் கல்வியறிவு படைத்த லட்சியப்பெண்ணைய் விடுவாளா?' என்று நினைத்தேன். நானே முழு முட்டாள். புஸ்தகப் படிப்பு யாருக்கு வேண்டும்? வாழ்க்கையிலே கவிதையைக் காணுதவன் அன்றோ, புஸ்தகத்திலுள்ள கவிதையிலே மனம் செலுத்துவான்! கனியிருக்கக் காய் நுகர்ந்த மூடன் நான்! நிழலின் அருமை வெயிலிலே தெரியும் என்பார்கள். லக்ஷ்மியின் அருமை இப்பொழுதுதான் எனக்குச் சிறிது புலப்படுகின்றது; போகப் போகத்தான் முற்றும் புலப்படும்.

சங்கரா, நீ என்னைக் காண்பதற்காகப் புறப்பட்டு வராதே. உன் மனம் எனக்காக எவ்வளவு துன்புறும் என்பது எனக்குத் தெரியாதா? உன் கஷ்டங்களும் எனக்குத் தெரியும். "கோர்ட்டிலோ பெரிய கேஸ்; வீட்டிலோ பெண் பிரஸவத்திற்கு வந்திருக்கிறாள். இன்றோ நாளையோ என்று இருக்கிறது" என்று எழுதியிருந்த காகிதத்தை இப்பொழுதுதான் பார்த்தேன். உன் கடமையை நீ செலுத்த வேண்டும். என் கடமையை நான் செலுத்தாமல் இருந்துவிட்டேனே!

அதோ குழந்தைகள் ஓ வென்று அலறுகின்றன. இன்று முதல் நானே அவைகளுக்குத் தாயுமாய் இருப்பேன். நேற்று வரை அவள் அவைகளுக்குத் தாயும் தந்தையுமாய் இருந்தாள். என் கடமையை அவள் செய்தாள். அவள் கடமையையும் நானே செய்து முடிப்பேன். பள்ளிக்கூடம் போகும் வரையும் தாய் செய்யவேண்டிய காரியங்களைச் செய்வேன். பள்ளிக்கூடத்தில் விட்டு விட்டுக் காலேஜுக்குப் போவேன். காலேஜிலிருந்து 'இளப்'பிற்குப் போக மாட்டேன். நேரே பள்ளிக்கூடத்திற்குச் சென்று குழந்தைகளை அழைத்து வருவேன். என்ன செய்தாலும் குழந்தைகள் தாயை மறக்கக் கூடுமோ? என்ன முயன்றாலும் நான் லக்ஷ்மி ஆவேனே? அவளுக்கு இருந்த விவேகத்தில் ஒரு காற்பங்கு கூட எனக்கு இல்லையே! அவளை வைத்து விட்டு என்னைக் கொண்டு போயிருக்கக் கூடாதா அந்த யமன்?

பார்; அதற்குள் நான் வருங்கால வாழ்க்கைக்குத் திட்டம் போடத் தொடங்கி விட்டேன். குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு என்னுடன் இருப்பதற்கு அத்தை சம்மதித்துவிட்டாள் என்ற தைரியத்தாலன்றோ இப்படி யெல்லாம் எழுத முடிந்தது? அத்தை மட்டும் வந்திராவிட்டால், உன் நண்பனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கும். இந்தக் காகிதத்திற்குப் பதிலாக டாக்டரிட மிருந்து உனக்குத் தந்தி கிடைத்திருக்கும்.

இப்படிக்கு,
பைத்தியம் பிடியாதிருக்கும்
நாராயணன்.

6

நாராயணன் கேட்டுக் கொண்டபடியே துக்கம் விசாரிக்க நான் பட்டணம் செல்லவில்லை. ஏனென்றால் அன்று பிற்பகலி லேயே நான் தாத்தாவாகி விட்டேன். பிரஸவ வேதனையால் வருந்திய என் பெண்ணிற்கு உடம்பு குணமாவதற்கு மூப்பது நாளாயின. நான் ஜில்லா கோர்ட்டில் நடத்திக் கொண்டிருந்த வழக்கைக்கூட வாயிதாப் போடும்படி இருந்தது. பிறகு பத்து நாள் ஆயின அந்த வழக்கு முடிவதற்கு. இப்படியாக, இரண்டு மாதமான பின்பு, கிறிஸ்துமஸ் விடுமுறையிலேதான் பட்டணம் போய்வர முடிந்தது.

நாராயணன் முற்றும் மாறியிருந்தான். நன்றாய் அறியாதவர் களுக்கு அவனை அடையாளம் கண்டு கொள்வதுகூடச் சிரமமாய் இருக்கும். 'கிராப்'தலை போய் வைதிகக் குடுமி யாகிவிட்டது. பொட்டலிலே புல் முளைத்திருப்பதுபோல் மொட்டைத் தலையிலே விரற்கடை மயிர் இருந்தது. இடுப்பிலே பஞ்சகச்சம். மேலே யோக வேஷ்டி. நெற்றியிலே மூங்கிலிலை போல விளங்கும் கோபிச் சந்தனம். "காலேஜுக்கும் இப்படியேதான் போகிறாயோ?" என்று கேட்டேன். "இதோ பார்" என்று

அலமாரியைத் திறந்து காட்டினான். நெடுஞ்சட்டையும் தலைப் பாகையும் அலமாரியுள் தொங்கிக் கொண்டிருந்தன. 'பூட்ஸ்' வைத்திருந்த 'ராக்'கைக் காணவில்லை. அந்த மூலையில் மிதியடி ஜதை யொன்றுதான் காணப்பட்டது. "என்னடா இது?" என்று கேட்டேன். நாராயணன் சொன்னதை அப்படியே எழுதிக் கதையை முடித்துவிடுகிறேன்.

"சங்கரா, உன் பழைய நண்பன் நாராயணன் இறந்துபோய் விட்டான். இப்பொழுது உன்னுடன் பேசுவது வேறொரு நாராயணன். அந்த நாராயணனுக்குக் கல்விச் செருக்கும் படாடோபமும் இருந்தன. மூன்னோக்கைக் காட்டிலும் தான் மேதாவி என்று நினைத்தான். 'மனந்தானே சுத்தமாய் இருக்க வேண்டும்? வேஷத்தில் என்ன இருக்கிறது?' என்று மனம் போன போக்கிலே நடந்து வந்தான். அதனால் அவன் என்ன கண்டு விட்டான்! தன் மனைவியின் சிறப்பைக்கூட அறியாத பேதையா யிருந்தான். பண்டைக் காலத்திலிருந்து ஆசரிக்கப்பட்டு வந்த கட்டுப்பாடுகளை யெல்லாம் மீறி நடந்ததால், மனத்திற்காவது ஆனந்தம் உண்டா? இல்லை. மனைவியைத் துன்புறுத்துகிறோமே என்ற துக்கம் ஒரு புறம்; வீண் செலவுகளால் ஏற்பட்ட கஷ்டம் ஒரு புறம்; மனத்தைக் கட்டுப்படுத்தாததால் எழுந்த சஞ்சலம் ஒரு புறம். வெள்ளைக்காரரைத் திருப்தி செய்வதற்காக இப்படி வேஷம் போடுகிறான் என்ற அவதூறு ஒரு புறம். இப்படி நாற்புறமும் வேதனையே ஒழியச் சுகமே இல்லை என்பதை உணர்ந்துவிட்டேன். லக்ஷ்மி இறந்து போகவில்லை. அப்பொழுது வீட்டில் மட்டும் இருந்தாள். இப்பொழுது நான் எங்கே சென்றாலும் என்னருகிலேயே இருக்கிறாள். என் மார்பகத்தை விட்டுக் கணப்பொழுதும் அகல்வதில்லை. முதலில் அவளைத் திருப்தி செய்வதற்காக இப்படி வேஷம் போடுவது சரியா என்று தோன்றிற்று. நாளடைவிலே, 'இது வேஷமன்று; இதுவரை இருந்ததுதான் வேஷம்' என்பது விளங்கிற்று. வேஷம் பலித்து விட்டது. என் மார்பகத்திலே லக்ஷ்மி ஆனந்த நர்த்தனம் இடுகிறாள். அவளுடைய பாதசரமும் வளைகளும் ஒலிப்பதையும் மெட்டிகள் தாளம் போடுவதையும் உற்றுக் கேள்" என்று தன் மார்பைத் திறந்து காட்டினான். "குழந்தைகளுக்கு நானே தாயாகி விட்டேன். வளர்க்கும் பாட்டியை விட என்னிடத்திலேயே அவைகள் ஒட்டிக்கொள்கின்றன. இப்பொழுது என்னை வெறும் நாராயணன் என்று நினையாதே; நான் லக்ஷ்மி நாராயணனுக்கும்" என்றான்.

குழந்தைகள் தடதடவென்று மாடிப்படி ஏறி வரும் சத்தம் என் காதில் விழுந்தது. அவர்களுக்கும் தாயுமானவனுக்கு மிடையே நான் இருப்பது சரியென்று தோன்றவில்லை.

"லக்ஷ்மி, நான் போய் வருகிறேன்; நாழிகை யாகிற்று" என்று கிளம்பிவிட்டேன்.

கே. எஸ். நாராயணஸ்வாமி

சாதனை 29

1

நிலா பால்போல் காய்ந்துகொண்டிருந்தது. மொட்டை மாடியில் நானும் ராதையும் கதை பேசிக்கொண்டிருந்தோம். எனக்குப் பொழுது போனதே தெரியவில்லை. ராதை சிரித்துச் சிரித்து, ஆறு மாதங்களாகப் பேசாத எவ்வளவோ விஷயங்களைப் பற்றி யெல்லாம் வாய் ஓயாமல் சொல்லிக்கொண்டே இருந்தாள். தன் பிறந்தகத்துப் பெருமையைக் குறிக்கும் அநேக சம்பவங்களை அவள் வருணிக்கும்போது நடு நடுவே, "என்ன இருந்தாலும் இங்கே இருக்கிற மாதிரி சந்தோஷமாயிருந்தேன் என்று நினைக் கிறீர்கள்? இல்லவே இல்லை. மனசு மாத்திரம் என்னவோபோல் தான் இருந்தது. கடுதாசி வந்த இரண்டு நாள் நிம்மதியாயிருக்கும். அப்புறம் கவலையாய்த்தான் இருக்கும்" என்று சொன்னது எனக்கு என்னவோ மிகவும் பெருமையாயிருந்தது. அடக்கிவைத் திருந்த ஆசையையெல்லாம் அள்ளிக்கொட்டிப் பேசினாள் ராதை. அவள் முகத்தையே நான் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந் தேன். நிலவு மேகத்திற்குள் ஒளிந்து ஒளிந்து விளையாடிக்கொண் டிருந்தது.

"வா, ராதை, கீழே போகலாம். நாழியாகிறது; பனி உடம்புக்கு ஆகாது" என்று சொல்லிக்கொண்டு நான் எழுந் திருந்தேன். ராதையும் அரை மனசுடன் கிளம்பினாள். "இன்னும் கொஞ்ச நாழி....." என்று இழுத்தாள். "ஊஹூம் ..... இந்த உடம்பில் பனியில் நிற்கக்கூடாது.....குழந்தை எழுந்திருக்கும் சமயம்" என்றேன். ராதை மெல்ல இறங்கினாள். நான் மச்சுக் கதவைத் தாழிட்டுவிட்டு வந்தேன். நாங்கள் பாதிப்படி இறங்கு வதற்குள் கீழே தூங்கிக்கொண்டிருந்த குழந்தை விழித்துக் கொண்டு முனகும் சப்தம் கேட்டது. "நீங்கள் ஒரு தீர்க்கதரிசி யாக இருக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு ராதை கடகட வென்று சிரித்தாள். அந்தச் சிரிப்பை ஆமோதித்ததுபோல மச்சுக் கட்டிடம் எதிரொலித்தது.

2

ராதை அன்று காலைதான் பிறந்தகத்திலிருந்து வந்து சேர்ந் தாள். அவளைப் பிரிந்து சரியாக ஆறுமாதங்கள் ஆகிவிட்டன. தலைச்சன் பிரசவத்திற்காகக் கொண்டுபோய் விட்டேன். நல்ல படியாக வந்துசேர வேணுமே என்ற கவலையுடன் நான் திரும்பி வந்தேன். அதற்குப் பின்னர் வாரத்திற்கு ஒரு தடவை கடிதங்கள் எனக்கும் அவளுக்கும் நடுவில் தூது போய்க்கொண்டிருந்தன. முத்து முத்தான எழுத்துக்களில் என்னைப் பற்றி ஒவ்வொரு

கடிதத்திலும் மிகவும் கவலைப்பட்டு எழுதியிருப்பாள். சில சமயங்களில் அவள் கடிதத்தைப் படித்ததும் எனக்கு அழுகைகூட வந்துவிடும். பிரிவின் சோகத்தை, அவள் எழுதின கடிதங்கள் பிழிந்து காட்டுவனபோல் இருந்தன. பல்லைக் கடித்துக்கொண்டு நான் நாட்களைப் போக்கிக்கொண்டு வந்தேன். ஐப்பசி மாதக் கடைசி; தீபாவளியும் ஆகிவிட்டது. என் மாமனுரிடமிருந்து குங்குமம் தடவிய கடிதம் ஒன்று வந்தது.

"பேரன் பிறந்திருக்கிறான். புண்யாஹவாசனத்துக்கு அவசியம் வரவேணும். எல்லோரும் சௌக்கியம்" என்று அவர் ரத்தினச் சுருக்கமாக எழுதியிருந்தார். அதோடு ராதையும் ஒரு கடிதம் வைத்திருந்தாள். குழந்தை என்னையே உரித்துவைத்தது போல் இருப்பதாகவும், உடனே லீவு எடுத்துக்கொண்டு வர வேண்டும் என்றும் அதில் கண்டிருந்தது. கடிதத்தின் சாராம்சம் எனக்கு இருதயத்தில் அமிர்தத்தை வருவித்ததுபோல் இருந்தது.

புண்யாஹவாசனத்திற்கு ஒரு வாரம் இருந்தது. ஊருக்குப் போய் வரலாமா, வேண்டாமா என்று நான் யோசித்தவண்ணம் இருந்தேன். ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. ராதையைப் பார்த்து எத்தனை நாளாகிவிட்டது என்று எண்ணும்போது நெஞ்சு துடிக்கும். எப்படிப் போவது? லீவு கிடைக்க வேண்டாமா? நம்பிக்கை இல்லாமலே லீவுக்கு எழுதிப்போட்டேன். இரண்டு நாட்களாயின. நான் எதிர்பார்த்தபடியே லீவு இல்லைதான். எனக்குக் கோபம் கோபமாக வந்தது. துரையை, "மகாபாபி! உனக்கு ஜன்ம ஜன்மத்துக்கும் குழந்தை பிறக்காதடா" என்று சபித்தேன். ஏதோ நினைத்துக்கொண்டு சட்டென்று வாயைப் பொத்திக்கொண்டேன். நிழல் அசைவது எதிரே தெரிந்தது. திரும்பிப் பார்த்தேன். பின்னல் ரகுபதி வந்து நின்றான். எனக்குத் துணுக்கென்றது. ஒரு வேளை நான் சொன்னது அவன் காதில் விழுந்திருக்குமோ? இல்லாமற்போனால் அவன் முகம் சுண்டியிருப்பானேன்?

"ரகுபதியா? வா! என்ன கண்ணில் படவேயில்லை? ஊரில் இல்லையோ?" என்று நான் கேட்டேன்.

"ஆமாம்; கிராமத்துக்குப் போயிருந்தேன்" என்றான் ரகுபதி. அவன் பேசிய பேச்சில் ஜீவனே இல்லை. என்னவோ பேசவேண்டுமே என்று பேசியதுபோல் இருந்தது. கொஞ்ச நேரம் மௌனமாயிருந்துவிட்டு ரகுபதி மறுபடியும் பேசினான்; "நான் வரேன், அம்பி" என்று சொல்லிக் கிளம்பினான்.

"என்ன அவசரமடா உனக்கு? காபி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்; இருடா" என்று அவன் கையைப் பிடித்து இழுத்தேன்.

"இல்லை அம்பி, வேறொரு நாள் ஆகட்டும்" என்ற வண்ணம் ரகுபதி திமிறினான். அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன்;

கண்கள் கலங்கிப் போயிருந்தன. பலவந்தமாக விடுவித்துக் கொண்டு ரகுபதி பாய்ந்து சென்றுவிட்டான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரு விநாடி பிரமைபிடித்து நின்றேன். கூடத்தில் பெரிய கடிகாரத்தில் 'டங் டங்' என்று பத்து மணி அடித்தது. அவசர அவசரமாக உடையை மாற்றிக்கொண்டு ஆபீசுக்குக் கிளம்பினேன். மனசு ஒரு நிலையில் இல்லை. ரகுபதி நடந்து கொண்ட விதம் எனக்கு அர்த்தமாகவில்லை. அதோடு லீவு கிடைக்காதது வேறு. எல்லாம் சேர்ந்து என் மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்தன.

அன்று வெகு சீக்கிரம் நான் வீட்டிற்குத் திரும்பிவிட்டேன். வழியெல்லாம் என் சிந்தனை பலவிதமாகப் போய்க்கொண்டிருந்தாலும் இடையே ரகுபதியைப்பற்றின நினைவு வந்துவிடும். அதை மறக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. என்னதான் மனத்தைக் கட்டுப்படுத்தினாலும், 'ரகுபதி ஏன் கோபமாகப் போனான்? ஒரு வேளை நான் முணுமுணுத்ததை விகற்பமாக எடுத்துக்கொண்டானோ?' என்ற கேள்வியில் போய் மனம் முட்டும். வீட்டிற்கு வந்தவுடனும் நிம்மதி ஏற்படவில்லை. சாப்பிடாமல் கூடப் 'பொத்' என்று படுக்கையில் போய் விழுந்தேன். சோர்வினால் அப்படியே கண்ணயர்ந்து போய் விட்டேன். வெகு நேரம் தூங்கியிருப்பேன் என்று தோன்றிற்று. ஆனால் விழித்துப் பார்த்தபோது மணி பத்துக்கூட ஆகவில்லை. தனி வீட்டில், ஒருவரும் இல்லாத சமயத்தில் வாசற் கதவைக் கூடத் தாழிட்டுக்கொள்ளாமல் தூங்கிப்போன முட்டாள்தனத்திற்காக என்னையே நொந்துகொண்டு கதவை யெல்லாம் சாத்திவிட்டு, விளக்கையும் அணைத்துவிட்டுப் படுத்துக்கொண்டேன். மனத்தில், ஒரு மாதிரியாகக் கொந்தளிப்பு அடங்கியிருந்ததுபோல் தோன்றிற்று. மெல்லத் தூங்கிவிட்டேன்.

3

ரகுபதிக்கும் எனக்கும் பரிசயம் ஏற்பட்டு இன்றைக் கெல்லாம் இருந்தால் மூன்று வருஷங்களே இருக்கும். இந்தச் சொற்பகாலத்திற்குள் அவன் எனக்கு நெருங்கிய நண்பனாகி விட்டான். பிறருடன் பின்னிப் பின்னி அன்னியோன்னியமாகப் பழகும் சுபாவமுடையவன் ரகுபதி. அவன் நல்ல குணவான்; யோக்கியன்; புத்திசாலி. அவனுக்குக் கொஞ்சம் முன்கோபம் மாத்திரம் உண்டு. ஆனால் கோபம் தெளிந்தவுடன் தன் செய்கைக் காகப் பின்னால் பச்சாத்தாபப்படும் சுபாவமுடையவன். அவனுக்கு வேலை வெட்டி இல்லை. அவனுக்கு யாரிடமும் கை கட்டி உத்தியோகம் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தமே இல்லை. பிதுரார்ஜித சொத்து, பத்து லக்ஷத்துக்குமேல் இருந்தது. ஒருவிதக் கெட்ட பழக்கமும் உள்ளவன் அல்ல அவன். எனவே சுகவாசியாகக் காலந் தள்ளினான்.

ஆனால் வாழ்க்கை அவனுக்கு ஆனந்தம் அளித்தது என்று என்னால் சொல்ல முடியாது. என்னதான் சொத்து இருந்த போதிலும், மனத்தில் ஒரு பெருங் குறையைப் பகவான் அவனுக்கு வைத்திருந்தார். அது அவனை உள்ளுக்குள்ளே வதைத்துக்கொண்டிருந்தது. அந்த வேதனையைத் தாங்க முடியாமல் அவன் தவிப்பான். அகஸ்மாத்தாக ஒரு நாள் என்னைச் சந்தித்தான். அதிலிருந்து சிநேகம் வளர்ந்தது. அது அவனுக்குக் கொஞ்சம் மன அமைதியை உண்டாக்கிற்று. அடிக்கடி என் வீட்டிற்கு வருவான், இருவரும் மனம் விட்டுப் பேசுவோம். தன் அந்தரங்க எண்ணங்களை அவன் வெகு உருக்கமாக வெளியிடுவான். நான் ஆறுதலாக ஏதாவது சொல்லுவேன். இப்படியே பொழுது போகும். என்ன தோன்றியதோ அவனுக்கு: ஒருநாள் என் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "பிரமாணமாகச் சொல்லு, அம்பி, 'நான் உன் சிநேகத்தைத் திரஸ்கரிக்கிறது இல்லை' என்று" என்றான். அவன் வாய் குழறிற்று. கண்கள் நீரை உதிர்க்கத் தயாராயிருந்தன.

"இதென்னடா, ரகு, பைத்தியம் மாதிரி!" என்று சொல்ல நான் யத்தனித்தேன். ஆனால் அவன் விம்மி அழுவதைப் பார்த்த வுடன் எனக்குப் பேச்சு வரவில்லை. உணர்ச்சி மிகுதியினால் தொண்டை அடைத்துக்கொண்டது. ஒரு கணம் பிரமை பிடித்தவன்போல அசைவற்று நின்றேன்.

"அம்பி, மாட்டாயா?" என்றபடி ரகுபதி மறுபடியும் என் கைகளைப் பிடித்துக் குலுக்கினான். அவன் குரலில் ஆர்வம் நிறைந் திருந்தது. அழுததன் பயனைக் கண்கள் சிவந்திருந்தன. எனக்கு உணர்ச்சி எல்லை மீறிவிட்டது. "உன்னை ஒருகாலும் நான் மறக்க மாட்டேன்" என்று வாக்குறுதி கொடுத்தேன். என் குரல் தழுதழுத்து போயிருந்தது. ரகுபதி நீண்ட பெருமூச்சுடன் என் கைகளை விட்டான். நான் மேல் துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

எங்களிருவருக்கும் இடையே எவ்வளவு அன்னியோன்னியம் இருந்ததோ அதைவிடப் பன்மடங்கு ஒற்றுமையுடன் இருந் தார்கள், ராதையும் தங்கமும். முதல் முதலில் ரகுபதி என் வீட்டிற்கு வரும்போது தனியாகத்தான் வருவான். பின்னர், 'ஓஹோ! எனக்கு ஆறுதல் கிடைத்த இடத்தில் தங்கத்தின் மனச் சோர்வுக்கும் மருந்து உண்டுபோல் இருக்கிறதே' என்ற எண்ணம் 'ராதை' என்ற வஸ்துவைப் பார்த்தவுடன் ரகுபதிக்கு உண்டா யிருக்கவேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் நானும் ஒரு சமயம், "என்ன ரகுபதி, உன் அகமுடையாளையும் அழைத்துக்கொண்டு வரக்கூடாதா? ராதைக்கு இந்த ஊரில் பொழுதே போகவில்லை யாம். பேச்சுத் துணைக்குக்கூட மனுஷர் இல்லை என்று வருத் தப்படுகிறாள். நீ வரும்போது அவளையும் அழைத்துக்கொண்டு வந்தால் அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளச் சௌகரியமாய் இருக்கும்" என்றேன்.

இது நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு ரகுபதி மனைவியோடு வந்தான். கூடத்தில் இருந்தபடியே நான், "ராதை, ராதை! இங்கே வா! உன் தமக்கை வந்திருக்கிறாள்" என்றேன். ராதை வெட்கப்பட்டுக்கொண்டே வந்து தங்கத்தை அழைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

"அம்பி, ஒரு சந்தோஷ சமாசாரம்" என்றான் ரகுபதி.

நான் ஆவலுடன், "என்ன?" என்றேன்.

"இதோ எதிர்வீட்டில் குடியிருக்கிறார் பார், எலெக்டிரிகல் எஞ்ஜினியர்; அவருக்கு மதுரைக்கு மாற்றலாகிவிட்டது. நாளைக்கு வீட்டைக் காலி செய்யப் போகிறார். நான் புதுத்தெரு வீட்டிலிருந்து இங்கே வந்துவிடப் போகிறேன்" என்றான்.

"பேஷாய்ப் போச்சு! பழம் நழுவிப் பாலில் விழுந்தமாதிரி" என்று நான் குதூகலத்துடன் சொன்னேன். ரகுபதிக்கு அங்கு இரண்டு வீடுகள் உண்டு என்பதும் அவற்றில் ஒன்றை எதிர் வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு மற்றொன்றில் அவன் இருந்தான் என்பதும் எனக்குப் பின்னல் தெரியவந்தன.

ரகுபதி எதிர்வீட்டுக்கு வந்தவுடன்தான் அவனுடன் எனக்கு அதிகப் பழக்கம் ஏற்பட்டது. அப்பொழுதுதான் எனக்குத் தங்கத்தைப்பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. தங்கம் நல்ல அழகி. கொடிபோலச் சற்று உயரமாயிருப்பாள். முகம் குறுகுறுவென்று களையாயிருக்கும். குணத்திலும் அழகிலும் அவள் ராதைக்கு எவ்வகையிலும் குறைந்தவளல்ல. அதோடு அவளுக்குச் சங்கீதத்தில் நல்ல ஞானம். சாரீரமும் மிகவும் இனிமையாக அமைந்திருந்தது. கற்பனையும் ஜீவனும் ததும்பி நிற்கும் உயர்ந்தரகமான சங்கீதம் அவளுடையது. அதை அநுபவிக்கும் பாக்கியம் எனக்கில் கிடைக்காது. காரணம், அவளைப் 'பாடு' என்றால் பாடமாட்டாள். கர்வத்தினால் அல்ல; லஜ்ஜையினாலும் அல்ல. மனத்திலுள்ள ஒரு பாரம் அவள் சங்கீதத்துக்கு ஸ்வரூபம் கொடுக்காமல் உள்ளுக்கு இழுத்துக்கொள்ளும். ஆனால் ஒவ்வொரு சமயம் தன்னை அறியாமலே அவள் சில ராகங்களை மெதுவாக ஆலாபனம் செய்வாள். அப்பொழுது அவளுக்கு நெஞ்சில் கனம் தெரியவில்லை, தன்னை மறந்திருக்கிறாள் என்று அர்த்தம்.

அந்தத் தம்பதிகளது மனக்குறைக்கு நானும் ராதையும் மிகவும் வருந்தினோம். ஆனால் அதன் நிவர்த்திக்கு நாங்கள் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை. அது மனுஷ்ய யத்தனத்தினால் மட்டும் நடக்கக்கூடிய காரியம் என்று நான் நம்பவேயில்லை. இருந்தாலும் நான் ரகுபதிக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி அவனைத் தேற்றினேன். என்னுடைய உறவே ரகுபதிக்கும் தங்கத்துக்கும் இதம் அளிக்கிறது என்று அறிந்த நான் உண்மையிலேயே ஆனந்தப் பட்டேன். அவனை ஆகர்ஷிக்கக்கூடிய அம்சம் என்னிடம் என்ன இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் அவன்

எவ்வளவோ பழைய நண்பர்களைக் காட்டிலும் என்னையே மனப் பூர்வமாக நேசித்தான் என்பது மட்டும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. அதுமாதிரியே ராதைக்கும் தங்கத்தைப்பற்றி ஓர் அந்தரங்கமான அபிப்பிராயம் இருக்கும் என்று, ராதை நடந்து கொண்ட விதத்திலிருந்து ஒருவாறு ஊகித்துக்கொண்டேன். எனவே, ரகுபதி தம்பதியின் மனேவியாகுலத்தை மட்டுப்படுத்து வதில் நாங்கள் அக்கறை எடுத்துக்கொண்டோம். அது எதிர்பார்த் ததை விட அதிகப் பலனையே கொடுத்தது. கொஞ்ச நாளில் சிநேக பாவம் போய் உறவுகொண்டாடும் நிலைமைக்கு வந்து விட்டது. தங்கத்தை ராதை, 'அக்கா' என்று அழைப்பாள். நான் 'மன்னி' என்று கூப்பிடுவேன்.

4

இப்படியெல்லாம் இருந்துவிட்டுத் திடீரென்று எங்கள் சிநேகத்துக்குப் பங்கம் வரும்படியான காலம் ஏற்பட்டவுடன், அந்தத் துக்கத்தை என்னால் சகிக்க முடியவில்லை.

அன்று ரகுபதி என்னுடன் கலகலப்பாகப் பேசாமல் இருந்ததுதான் பின்னால் ஏற்பட்ட பிளவிற்கு ஆஸ்பதமாயிற்று என்ற விஷயம் எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரியவந்தது. ரகுபதி கோபித்துக்கொண்டு சென்ற மறுநாட் காலை என் மனம் முதல்நாள் சம்பவத்தைக் குறித்துச் சிந்திக்கத் தொடங்கியது. படச்சுருள் திரையில் சாயையைக் காட்டிவிட்டு ஓடுவதுபோல் நினைவு போய்க்கொண்டிருந்தது. எனக்கு லீவு கிடைக்காத கோபத்தில் நான் துரையைச் சபித்துக் கொண்டிருந்தேன். அப்போது ரகுபதி வந்தான். அது அவன் காதில் விழுந் ததும் ஒரு வேளை அவன் தன்னைக் குறித்துச் சொல்வ தாகத் தப்பர்த்தம் செய்துகொண்டானோ? ஏன் இருக்கக் கூடாது? அது அவனுக்குப் பொருத்தமாகத்தானே இருக் கிறது?...ஆனால் ரகுபதி அப்படி எடுத்துக்கொள்ள நியாயம் இல்லையே. அவன் என்ன அப்படிப்பட்ட முட்டாளா? முதல் நாள் வரைக்கும் சாதாரணமாகத்தானே இருந்தான்? மனத்தில் ஒன்றும் கல்மஷம் இருப்பதாகத் தெரியவில்லையே. அவ்வளவு சிக்கிரத்தில் என்ன நேர்ந்திருக்க முடியும்? அவனோ முன் கோபி; ஒருவேளை விகற்பமாக எண்ணிக்கொண்டானோ?.....இருக்கும். ...இருக்கும்....ஏன் இராது? அவன் மனம் இருக்கும் நிலைமையில் வாயை அசைத்தால் போதாதா?...

மனத்திற்குள் இதுமாதிரி தர்க்கம் ஒன்று நடந்துகொண் டிருந்தது; தெளிவில்லாத ஒரு போராட்டம். என்னதான் மண்டையை உடைத்துக்கொண்டாலும் குற்றம் என்மேல் இருப் பதாகத் தோன்றவில்லை. ஓடிப்போய் ரகுபதியிடம் விஷயத்தைத் தெளிவாகக் கேட்டுவிடுவோமா என்று தோன்றும். ஆனால் உடல் அவனிடம் போகக் கூசிற்று. அவன் உதறித் தள்ளும்போது நாய்

மாதிரி போய் நிற்பதாவது என்ற ஒருவிதக் கௌரவம் வந்து குறுக்கிட்டது. ஆனல் மனமோ அவனையே வட்டமிட்டுக் கொண்டு இருந்தது.

மூன்று நாட்கள் இப்படிச் சென்றன. இரவு பகல் இருபத்து நான்கு மணி நேரமும் எனக்கு இதே சிந்தனைதான். முடிவில் ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு ரகுபதியின் வீட்டிற்குப் போனேன். சிங்கத்தின் குகையில் நுழைவதுபோல் இருந்தது. ரேழியில் நின்றபடியே, "ரகுபதி" என்று உரக்கக் கூப்பிட்டேன். ஒரு நிமிஷம் வரை பதில் இல்லை. பின் ரகுபதியின் தாய் வந்தாள். "யார் அப்பா? உள்ளே வரப்படாதோ?" என்று சொல்லி என்னை வரவேற்றாள். "ரகுபதி எங்கே? அம்மாமி! கண்ணிலேயே காணவில்லை?" என்றேன்.

"ஆம்படையாளை அழைச்சிண்டு குத்தாலத்துக்குப் போயிருக்காண்டா அவன். உன்னுடன் சொல்லிக்கொள்ளவில்லையா?" என்றாள் அம்மாமி.

"இல்லையே...ஏதாவது அவசரக் காரியமோ?" என்று தலையைச் சொறிந்தபடி வினவினேன்.

"ஒண்ணும் இல்லை. ரொம்ப நாளாக உடம்பு சரியாயில்லைன்னு சொல்லிண்டிருந்தானேல்லியோ? அந்தப் பக்கத்துக் காத்துப் பட்டால் நல்லது என்று டாக்டர் சொன்னர். போய் ரெண்டு மாசந்தான் இருந்தூட்டு வரலாம்னு திரும்பிப் போனன்...."

5

புண்யாஹவாசனத்துக்குக்கூட வரவில்லை யென்று ராதை வருத்தப்பட்டுக்கொண்டு எழுதியிருந்தாள். எனக்கு இருந்த துக்கத்தில் ஒன்றுமே புரியவில்லை. ஒன்றையும் காட்டிக்கொள்ளாமல், "கால வித்தியாசந்தான் காரணம். வருத்தப்படாதே. எவ்வளவு சீக்கிரம் வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் வந்துவிடு" என்று நான் பதில் எழுதினேன்.

பிரசவித்த நாற்பத்தைந்தாம் நாள் ராதை வந்துவிட்டாள். என் மாமனுரே அவளைக் கொண்டுவந்து விட்டார். அவருக்கும் என்மீது கோபந்தான். லீவு கிடைக்கவில்லையென்றுல் அவர் நம்பவில்லை. இந்தத் தொல்லைக்கு என்ன செய்வது? "இரண்டு நாள் இருந்துவிட்டுப் போங்களேன் ....." என்று நான் சொன்னதற்கு லீவு கிடைக்கவில்லை என்று ஒரு மாதிரியாகச் சொல்லிவிட்டு அன்று சாயங்காலமே கிளம்பிவிட்டார்.

அன்றிரவுதான் முதலில் கூறியபடி ராதை ஆனந்தமாகப் பேசினுள். அவளுக்கு இருந்த சந்தோஷமாவது சந்தோஷம்! அப்படியே பொங்கி வழிந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

மணிக் கணக்காகப் பேசினுள். அவள் மகிழ்ச்சிக்கு முட்டுக்கட்டை போடக்கூடாது என்று நான் அப்பொழுது ரகுபதியைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவே இல்லை. அவளும் ஊரிலிருந்து வந்ததுமுதல் தங்கத்தைப்பற்றியோ, ரகுபதியைப் பற்றியோ யாதொரு விதமான பேச்சையும் கிளப்பாமல் இருந்தது எனக்கு மிகவும் வியப்பாயிருந்தது.

மறுநாள் நானே வீம்புக்காக, "ராதை, தங்கம் வந்து குழந்தையைப் பார்த்தாளோ?" என்று கேட்டேன்.

"தங்கத்தையும் காணேம்; வெள்ளியையும் காணேம்" என்று ராதை அலுத்துக்கொண்டாள்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது; "என்ன, என்ன!" என்று நான் சற்றுப் படபடப்புடன் கேட்டேன்.

ராதை தயங்கித் தயங்கி, "தங்கம் இங்கே வரமாட்டாள்" என்று பதில் சொன்னுள். அவள் சொன்னது எனக்கு அர்த்தமாகவில்லை. எனக்கும் ரகுபதிக்கும் ஏற்பட்ட மனஸ்தாபம் அவளுக்குத் தெரிந்துபோயிருக்குமோ என்று சிந்தித்தவண்ணம் இருந்தேன். ராதை குடுகுடுவென்று ஓடிப்போய் டிரங்குப் பெட்டியைத் திறந்து ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தாள். நான் உறையைப் பார்த்தேன். "ஸ்ரீமதி ராதை, ராமசந்திரையர் பார்வையிட்டு, வடக்கு மடவளாகம்." என்ற மேல் விலாசத்தை ரகுபதி ஆங்கிலத்தில் கிறுக்கிக் கிறுக்கி எழுதியிருந்தான். உள்ளே மணி மணியான தமிழ் எழுத்தில் பின்வரும் கடிதம் எழுதப்பட்டிருந்தது:

"பிரியமுள்ள ராதைக்கு அநேக ஆசீர்வாதம்.

திலகம் இடுவதற்குக்கூட நான் லாயக்கு இல்லை என்று நீ தீர்மானித்திருப்பது எனக்குக் கடைசி வரையில் தெரியாது. உன் மனசுக்கு அநாவசியமான கஷ்டம் கொடுத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு.

ஆண் மலடோ, பெண் மலடோ எனக்குத் தெரியாது. ஆனல் என் இருதயம் மலடல்ல என்று நீ தெரிந்துகொள்ளாதது என் துர்ப்பாக்கியம். யாரைச் சொல்லிப் பிரயோஜனம்? எனக்குப் பிராப்தம் அவ்வளவுதான்.

தங்கம்."

"ராதை, இந்தக் கடிதத்திற்கு என்ன அர்த்தம்?" என்று திகிலுடன் நான் கத்தினேன்.

ராதை விக்கிக்கொண்டே சொன்னுள்:

"ஊருக்குக் கிளம்பும்போது தங்கத்திடம் சொல்லிக் கொள்ளப் போனேன். அப்போது அவள் எனக்கு மஞ்சள் குங்குமம் கொடுத்து நெற்றியில் குங்குமம் இட வந்தாள். அவள் பொட்டிடுவது எனக்கு என்னவோ அச்சான்னியமாயிருந்தது.

பிரசவத்துக்குப் போகும்போது மலடி கையால் வெற்றிலைபாக்கு வாங்கிக்கொள்ள எனக்கு இஷ்டம் இல்லை. 'தங்கம். நீ பாக்கு வெற்றிலை கொடுக்காதே....' என்று ஆவேசத்துடன் சொல்லி விட்டேன். 'ஏண்டி?' என்றபடி தங்கம் கலவரத்துடன் என் நெற்றியில் குங்குமத்தை இட்டுவிட்டாள். 'ஐயையோ! பெண் மலடு பொல்லாது....' என்று நான் முணுமுணுத்தேன். தங்கம் விம்மிக்கொண்டே கொல்லைப்புறம் ஓடிவிட்டாள்....." என்று ராதை நிறுத்தினாள். அவள் கண்களில் நீர் பொங்கிற்று. முகத்தைத் தூணில் மறைத்துக்கொண்டு பொருமி விம்மி விம்மி அழுதாள்.

என் மனத்தில் பாறாங்கல்லால் அடித்ததுபோல் இருந்தது. "அட அசடே! இதற்காக அழுவாளோ?" என்று அவளைத் தேற்றினேன்.

"தோணித்து; சொன்னேன். என்னவோ அப்படி வந்து விட்டது. வெறுமனே புண்ணாக் குத்தாதிங்கோ" என்றாள் ராதை.

நான் மேலே பேசவில்லை.

6

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு ஞாயிற்றுக் கிழமை: நான் அப்பொழுதுதான் வெந்நீர் அறையில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தேன். எதிர் வீட்டிலிருந்து ரகுபதியின் தாய் கையில் ஒரு கடிதத்துடன் வேகமாக வந்தாள். கூடத்தில் ராதை குழந்தையை வைத்துக் கொஞ்சிக்கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தவுடன், "அடியே குழந்தை, இந்தக் கடுதாசியைக் கொஞ்சம் வாசிச்சுச் சொல்லேன். எனக்குக் கண்ணும் தெரியல்லே, மண்ணுந் தெரியல்லே.....வெள்ளெழுத்துக் கண்ணுடியும் கார்த்தாலே ஓடஞ்சு போச்சு....." என்றபடி ராதையிடம் ஓர் உறையைக் கொடுத்தாள்.

"பிள்ளையாண்டான் கடுதாசி போட்டிருக்கானு? அம்மாமி" என்று கேட்டவண்ணம் நான் ஒரு செம்பு ஜலத்தைத் தலையில் விட்டுக்கொண்டேன்.

"அவனுட்டமாத்தாண்டாப்பா இருக்கு. என்ன எழுதியிருக்கான், வாசிடியம்மா" என்று அம்மாமி ராதையைத் தூண்டினாள். உறையைக் கிழித்துவிட்டு ராதை கடிதத்தை உரக்க வாசித்தாள். ரகுபதி எழுதிய கடிதம் அது:

"க்ஷேமம்.

அம்மாவுக்கு ரகுபதி அநேக நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுது. நீ அனுப்பிய அப்பளாமும், வடாமும் வந்து சேர்ந்தன. இப்போது இங்கே உன் நாட்டுப்பெண் நாலு மாசமாக ஸ்நானம் பண்ணுமல் இருக்கிறாள். அவளுக்கு வரவர உடம்பு தள்ளவில்லை. இங்கே இனிமேல் இருக்க உத்தேசமில்லை,

ஆகையால் நாங்கள் அடுத்த புதன்கிழமை புறப்பட்டு வந்து விடுகிறோம். மற்றப்படி விசேஷம் இல்லை.

அம்பியின் குழந்தை நன்றாய் விளையாடுகிறதா? நீ அதை யெல்லாம் எழுதவில்லையே. பதில் போடு. அநேக கோடி நமஸ் காரம்.

ர்கு."

கடிதத்தில் கண்டிருந்தபடியே புதன்கிழமை காலை ரகுபதி வந்து சேர்ந்தான். அவன் வருமுன்பே நான் அவனை எதிர்பார்த்துக் கொண்டு வரவேற்பதற்காக எதிர்வீட்டில் வட்டமிட்டுக்கொண் டிருந்தேன். ராதையும் அங்கேதான் இருந்தாள். தம்பதிகள் ஜட்காவிலிருந்து இறங்கியதும் ராதை ஆலத்தி சுற்றினாள். எல்லோரும் உள்ளே போனோம்.

"என்ன அம்பி, சௌக்கியமா? உடம்பு இளைப்பாயிருக்கே?" என்றான் ரகுபதி. நான் மௌனமாயிருந்தேன். ரகுபதி வேக மாகப் போய்ப் பெட்டியிலிருந்து ஒரு கிலுகிலுப்பையை எடுத்துக் கொண்டு வந்து, "எங்கேடா, மாஸ்டர்?" என்றான்.

குழந்தையை எடுத்துக்கொண்டு ராதை வந்தாள். ரகுபதி குழந்தையை வாங்கிக்கொண்டு கொஞ்சினான். கிலுகிலுப்பையை ஆட்டினான். குழந்தை கிலுகிலுப்பையை வாயில் கௌவிற்று. "அடே! பயல் பலே கைகாரனுயிருப்பான்போல் இருக்கே!" என்று ரகுபதி சொல்லிச் சிரித்தான். தங்கமும் வந்து குழந் தையை எடுத்துக்கொண்டு கொஞ்சினாள். "அப்பாவையே உரிச்சு வச்சிருக்கே" என்று சொல்லித் தங்கம் என்னை நோக் கினாள்.

"ஏண்டா, என்ன பேர் வச்சிருக்கே? தாத்தா பேரையா...?" என்று ரகுபதி கேட்டான். நான் பதில் சொல்லுவதற்குள், "'ரகுபதி' இன்னு பெயர் வச்சிருக்கோம். அடுத்தது பெண்ணு யிருந்தால் 'தங்கம்'னு வைக்கலாம்னு உத்தேசம்" என்று ராதை பளிச்சென்று பதில் சொன்னாள்.

"பகீரதன்"

மருதநாயகத்தின் மனோரதம் 30

"கிராமப் புனருத்தாரணத்திலும், நிர்மான வேலைகளிலும் முதலில் ஈடுபடுங்கள்; நமது அடிமை நாட்டுக்குச் சுயராஜ்யம் தானே வந்துவிடும்" என்ற மகாத்மாவின் மணிவாக்கை அப்படியே பின் பற்றுகிறவர் எனக்குத் தெரிந்தவரையில் மருதநாயகம் பிள்ளையே. தஞ்சாவூர் ஜில்லாவில் மிகப் பிரசித்தி அடைந்திருக்கும் அதே மருதநாயகம் பிள்ளையைத்தான் இங்கே குறிப்பிடுகிறேன்.

கிராமப் புனருத்தாரணம் என்றால் அவருக்கு உயிர். அதற்காகவே அவர் தம்மூடைய வாழ்நாளைக் கிராமத்தில் கழிக்க ஆரம்பித்தார். இளிமங்கலம் கிராமத்தில் இப்போது ஆரம்பப் பள்ளிக்கூடம், இலவச வாசகசாலை, ஆஸ்பத்திரி என்றெல்லாம் இருக்கின்றன அல்லவா? அவற்றிற்கெல்லாம் காரணமானவர் மருதநாயகம் பிள்ளைதான்.

அவருக்கும் மகாத்மாவுக்கும் வாழ்க்கையில் இரண்டே இரண்டு வித்தியாசங்கள்தாம் இருந்தன. ஒன்று உடை, மற்றொன்று உண்ணுவிரதம். இதைத் தவிர இன்னொரு சிறிய வித்தியாசமும் இருந்தது. மகாத்மாவுக்கு வேர்க் கடலை என்றால் மிகவும் பிடிக்குமல்லவா? மருதநாயகம் பிள்ளைக்குப் பச்சைக் கடலை என்றால் அதிகமாகப் பிடிக்கும். அவருக்குக் கடலையின்மீது எவ்வளவு ஆசையிருந்ததோ, அவ்வளவு ஆசை கலைகளின்மீதும் இருந்தது. விசேஷமாய்ச் சிற்பம், சிலை என்றால் அவருக்குப் பிராணன் மாதிரி. இதன் காரணமாக அவர் பழைய கல்வெட்டுக்களில் செதுக்கப்பட்டிருக்கும் தலையெழுத்துப் போன்றவற்றைப் படித்துப் பிறர் அறிய விளக்குவதில் பெரிய நிபுணர் என்று பெயர் பெற்றிருந்தார்.

ஒரு நாள் அவர் தினசரியைப் புரட்டிக்கொண்டிருந்தபோது பின்வரும் விஷயம் அவர் கவனத்தைக் கவர்ந்தது:

புராதனச் சிற்பங்கள்?

அலகாபாத்துக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டன.

"அலகாபாத்துக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் குடி தண்ணீர் வசதிக்காகக் கிராம அதிகாரிகள் கிணறு வெட்டிக் கொண்டிருந்தபோது, சில அபூர்வ வேலைப்பாடுகள் அமைந்த புராதனச் சிற்பங்களும், மொகலாய மன்னர்கள் காலத்திய மிக முக்கியமான கல்வெட்டுக்களும் கிடைத்தன. அவற்றைப் புராதனச் சிற்ப வடிவ ஆராய்ச்சி இலாகாக்காரர்கள் டில்லிக்குக் கொண்டுபோய் விட்டனர்."

இந்தச் செய்தியைப் படித்து முடித்ததும், மருதநாயகம் பிள்ளை ஒரு துள்ளுத் துள்ளிக் குதித்தார். இந்தச் சமயத்தில் அவரைப் பார்ப்பதற்காக வந்த கிராம முனிசீப் அந்தக் கோலத்தில் அவரைக் கண்டதும் ஒன்றும் புரியாமல் விழித்தார். "என்ன பிள்ளைவாள், இதென்ன கூத்து?" என்று கேட்டார்.

பிள்ளையவர்கள் திரும்பிப் பார்த்தார். ஆனால் பதில் ஒன்றும் பேசவில்லை. மேலும் ஒரு துள்ளுத் துள்ளிக் குதித்தார்.

"என்ன இவ்வளவு சந்தோஷம்? ராஜாஜி பிரதம மந்திரியாக வரப்போகிறாரா?" என்றார் கிராம முனிசீப்.

"இல்லை" என்று இழுத்தார் பிள்ளை.

"என்ன இல்லை? ஹிட்லர் சரணாகதி அடைந்து விட்டாரா?"

"ஊஹூம், அதுவும் இல்லை."

"இல்லை யென்றால் சர்ச்சில் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுக்கப் போகிறாரா?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை."

"மகாத்மாவை விடுதலை செய்யப் போகிறார்களா?"

"விடுதலையும் இல்லை, கிடுதலையும் இல்லை. இந்தச் செய்தியைப் படித்துப் பாரும்" என்று சொல்லி அந்தப் பத்திரிகையை அவரிடம் கொடுத்தார் மருதநாயகம் பிள்ளை.

கிராம முனிசீப் அந்தப் பத்திரிகையைப் படித்துப் பார்த்து விட்டு, "பூ! இவ்வளவுதானா? இதற்குத்தானா இப்படித் துள்ளிக் குதித்தீர்?" என்று கேட்டார்.

"உமக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!" என்று சொல்லி மருதநாயகம் பத்திரிகையை வாங்கி மேஜையின்மீது போட்டார். பிறகு கிராம முனிசீப்பைப்பார்த்து, "மொஹன்ஜதாரோ, ஹரப்பா இவைகளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீரா?" என்று கேட்டார்.

"கேள்விப்பட்டிருக்கிறேன். அவைகளைப்பற்றி நேருஜிகூட அடிக்கடி சொல்வாரே? அதைத்தானே சொல்கிறீர்?" என்றார் கிராம முனிசீப்.

"ஆமாம், ஆமாம்! அதனால் நமது நாட்டுக்கு எவ்வளவு பெருமை தெரியுமா? மூன்று இந்தியாவில் எப்படிப்பட்ட உயர்ந்த நாகரிகம் பரவியிருந்தது என்பதை உலகம் தெரிந்துகொண்டு மூக்கில் விரலை வைக்கிற தல்லவா?" என்றார் மருதநாயகம்.

"ஓஹோ! அப்படியா?" என்று வாயைப் பிளந்தார் கிராம முனிசீப்.

"அது போகட்டும். நாளைக்கு நமது பங்களாத் தோட்டத்தில் கிணறு வெட்டப் போகிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? அங்கே நீங்கள் அவசியம் வந்துவிட வேண்டியது" என்றார் மருதநாயகம்.

"ஆஹா! அதற்கென்ன அப்படியே வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார் கிராம முனிசீப்.

மறுநாள் மருதநாயகம் பிள்ளை கிணறு வெட்டுவதற்கான ஏற்பாடுகளைப் பரபரப்பாகச் செய்ய ஆரம்பித்தார். கிராமம் முழுவதும் அலைந்து திரிந்து மணியான ஆட்களைக் கொண்டுவந்து சேர்த்தார். கிராம முனிசீபும் சரியான வேளையில் வந்து சேர்ந்தார். வேலைக்காரர்கள் கிணறு வெட்டுவதில் மும்முரமாக முனைந்தார்கள்.

இருபது அடி ஆழங்கூட வெட்டியிருக்க மாட்டார்கள். அதற்குள் கடப்பாரையில் ஏதோ 'டண்' என்று தட்டுப்பட்டது. ஆனால் அது என்னவென்று தெரியவில்லை. 'டக் டக்'கென்ற சத்தம் மட்டும் காதைத் துளைத்தது. அதைக் கூர்மையாகக்

கவனித்துக்கொண்டிருந்த கிராம முனிசிப், மருதநாயகம் பிள்ளை யின் அருகில் சென்று, "என்ன, பிள்ளைவாள்! ஏதாவது புதையலாக இருக்குமோ?" என்று ரகசியமாகக் கேட்டார்.

"இருந்தாலும் இருக்கும்" என்று அவரும் மிகவும் ரகசிய மாகச் சொன்னார்.

"சரி, இப்பொழுது நாம் ஒன்று செய்வோம். என்ன சொல் கிறீர்?" என்று கேட்டார் கிராம முனிசிப்.

"செய்வது இன்னதென்று முதலில் சொல்லும். அப்புறம் நான் சொல்கிறேன்" என்றார் பிள்ளையவர்கள்.

"செய்வது என்ன? நமக்கு நன்றாய்த் தெரிந்த ஓரிருவரைத் தவிர மற்றவர்கள் எல்லாரையும் வீட்டிற்கு அனுப்பிவிட வேண் டியது. அவர்களை வைத்துக்கொண்டு நாம் இருவரும் புதையலை எடுக்க வேண்டியது. பிறகு, அவர்களுக்குக் கொஞ்சம் கொடுத் துச் சமாதானம் செய்துவிட்டு மீதியை நாம் இருவரும் பங்கு போட்டுக் கொள்ளவேண்டியது. என்ன சொல்கிறீர்?" என்றார் கிராம முனிசிப்.

"ஓ! பேஷாக!" என்றார் மருதநாயகம் சாந்தத்துடன்.

உடனே கிராம முனிசிப் எல்லாரையும் விரட்டிவிட்டுத் தமக்குத் தெரிந்த இருவரை மட்டும் நிறுத்திக் கொண்டார். நண்பர்கள் இருவரும் ஒரு தரம் சுற்றுமுற்றும் பார்ப்பதும், பிறகு பள்ளத்தைப் பார்ப்பதுமாக இருந்தனர். கடைசியில் கடப்பா ரைக்குத் தட்டுப்பட்ட அந்தப் பெரும் புதையலை எடுத்துப் பார்த் தார்கள். அது ஒரு மூக்குப்போன விநாயகர் விக்கிரகம் என்பது வெளியாயிற்று!

பிள்ளையவர்கள் கிராம முனிசிபின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தார். அவரும் பிள்ளையவர்களின் முகத்தை அனுதாபத் துடன் பார்த்தார்.

"என்ன சாமி! எல்லாரையும் போய்க் கூட்டிக்கிட்டு வரட் டுமா?" என்று அந்த வேலைக்காரர்களில் ஒருவன் கிராம முனிசி பைப் பார்த்துக் கேட்டான்.

"ஓடுடா, சீக்கிரம்! கூட்டிக்கிட்டு வாடா!" என்றார் கிராம முனிசிப்.

அவன் ஓட்டம் பிடித்தான். "என்ன சாமி! கடைசியில் ஒண்ணுமே இல்லிங்களே!" என்று ஏமாற்றத்துடன் சொன்னான் இன்னொரு வேலைக்காரன்.

அவன் சொன்னதைக் கேட்டதும் கிராம முனிசிபின் மனசை என்னவோ பண்ணுவதுபோல இருந்தது.

இந்தச் சமயத்தில் அந்த மூக்குப்போன விக்கிரகத்துக்கு அடி யில் ஏதோ எழுதியிருப்பதைக் கண்டார் பிள்ளையவர்கள். "இங்கே வாரும்! ஓடிவந்து இதைப் பாரும்!" என்று ஆனந்தக் கூச்சலிட்டார் மருதநாயகம்.

"என்ன, என்ன?" என்று கேட்டுக்கொண்டே கிராம முனிசீப் ஓடோடியும் வந்து அந்த விக்கிரகத்துக்கு அடியில் செதுக்கப்பட்டிருந்த வார்த்தைகளை ஆவலுடன் படிக்க முயன்றார். ஆனல் அதில் எழுதியிருப்பது ஏதாவது புரிந்தால் தானே!

பிள்ளையாருக்கு அடியில் பின்வருமாறு பட்டும் படாமல் எழுதியிருந்தது:

"இந்த பியாள்ருக்கு டிஅயில் ஒபருடணட் இம்ருக்கிறது."

"என்ன ஐயா இது? இது தமிழ்ப் பாஷையா அல்லது மலையாளமா?" என்றார் கிராம முனிசீப்.

"எழுத்து தமிழ் எழுத்துத்தான்" என்றார் பிள்ளை.

"தமிழ் எழுத்தா, தலை எழுத்தா?" என்று கேட்டார் முனிசீப்.

"என்ன எழுதி யிருக்கிறதென்று எப்படியாவது கண்டு பிடித்துவிட வேண்டும்" என்றார் மருதநாயகம் பிள்ளை.

"இதெல்லாம் நம்மால் முடிகிற காரியமா, ஐயா? இருக்கவே இருக்கிறார்கள் 'ஆர்க்கலாஜிகல்' இலாகாக்காரர்கள். விஷயம் அவர்களுக்கு எட்டினல் விழுந்தடித்துக்கொண்டு வந்துவிட மாட்டார்களா?" என்றார் கிராம முனிசீப்.

நம்மால் அதைக் கண்டுபிடிக்க முடியும் என்பதை மருத நாயகம் பிள்ளை அப்பொழுது வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. "சரி, அப்படியே செய்துவிடுங்கள்!" என்று கூறி மௌனம் சாதித்துவிட்டார்.

கிராம முனிசீபின் மூலம் செய்தி ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு எட்டிற்று. அப்புறம் அது தாசில்தார் காதில் விழுந்தது. கலெக்டர் அந்தச் செய்தியைச் சென்னை ஆர்க்கலாஜிகல் டிபார்ட்மென்ட்டுக்கு அறிவித்தார்.

கிளிமங்கலம் எங்கும் ஒரே அமளி. எங்கே பார்த்தாலும் அன்று அந்த விக்கிரகத்தைப் பற்றிய பேச்சுத்தான். அந்தக் கிணற்றைச் சுற்றிப் போலீஸ் காவல் வேறு போட்டு விட்டார்கள்.

அன்றைத் தினசரிகளில் எல்லாம் கிளிமங்கலம் கிராமத்தில் அகப்பட்ட விக்கிரகத்தைப் பற்றிய செய்திகள் அடிபட்டன.

அந்த விக்கிரகத்தைப் பார்க்க ஊரெங்குமிருந்து ஜனங்கள் திரள் திரளாக வந்து குவிய ஆரம்பித்துவிட்டனர்.

* * * * *

ஒரு வாரத்திற்குப் பிறகு சென்னைப் புராதனச் சிற்ப வடிவ இலாகாக்காரர்கள் வேண்டிய ஆட்களுடன் வந்து கிளிமங்கலம் கிராமத்தை முற்றுகை யிட்டனர்.

முற்றுகை யிட்டு என்ன பயன்? அதற்கு அடியில் எழுதியிருப்பது அவர்களுக்குப் புரிந்தால்தானே? யார் யாரோ வந்து பார்த்தார்கள். கடைசியில் எல்லாரும் மருதநாயகம் பிள்ளையைத் தான் கேட்கவேண்டும் என்று முடிவுக்கு வந்தனர்.

இந்த முடிவை எதிர்பார்த்திருந்த மருதநாயகம் பிள்ளையும் அதை வைத்துக்கொண்டு பெரிய பெரிய புஸ்தகங்களை ஆராய்ச்சி செய்தார். கடைசியில், "இந்தப் பிள்ளையாருக்கு அடியில் ஒரு பட்டணம் இருப்பதாக எழுதியிருக்கிறது" என்று சொன்னார்.

சென்னை ஆர்க்கிலாஜிகல் இலாகாக்காரர்களுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "தென்னிந்தியாவில் ஒரு மொஹெஞ்ஜதாரோ, ஹரப்பா கிடைக்காதா?" என்ற ஆவலில் அந்த விக்கிரகம் அகப்பட்ட இடத்திற்கு அடியில் தோண்டிப் பார்ப்பதென்ற முடிவுக்கு வந்துவிட்டனர்.

மாதக் கணக்கில் ஏராளமான ஆட்கள் வேலை செய்தனர். சுமார் ஐந்து ஏக்கர் விஸ்தீரணத்துக்கு வெட்டிப் பார்த்தாய் விட்டது. எனினும் விக்கிரகத்தில் எழுதியிருந்தபடி நாட்டையோ நகரத்தையோ காணவில்லை.

"இப்படியே வெட்டிப் பார்த்துக்கொண்டிருந்தால் அமெரிக்காவுக்கே போய்விடலாம் போலிருக்கிறதே!" என்று சொன்னார் ஓர் அதிகாரி.

"அமெரிக்காவுக்குப் போவதென்ன? அதற்குள் தண்ணீர் அதிகமாக வந்துவிட்டால் ஆனந்த உலகத்திற்கே போய் விடலாமே?" என்றார் இன்னொரு நீந்தத் தெரியாத அதிகாரி.

கடைசியில் அலுத்துப் போன அவர்கள், "எப்பொழுதோ ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக இந்த விக்கிரகம் இங்கே வந்து ஒதுங்கி இருக்கவேண்டும்" என்ற முடிவுக்கு வந்து சென்னைக்குப் போய்ச் சேர்ந்தனர்.

இரண்டு நாளைக்குப் பிறகு பெய்த பெருமழை அந்த ஐந்து ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தையும் பெரிய ஏரியாக்கிச் சென்றது.

* * * * *

இந்தப் புயல் ஓய்ந்து அமைதி நிலவிய பிறகு, ஒரு நாள் மருதநாயகத்தின் மனைவி தன் கணவனைப் பார்த்து, "இருந்தாற் போலிருந்து ஊரையே ஒரே புரளி பண்ணி விட்டீர்களே!" என்றாள்.

"புரளியா செய்தேன்! புண்ணியம் செய்தேன் என்று சொல்லு" என்றார் மருதநாயகம்.

"புண்ணியமாவது, புருஷார்த்தமாவது! அப்படி என்ன செய்துவிட்டீர்?" என்று கேட்டாள் அவள்.

"நம் ஊரில் ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், போஸ்டாபீஸ் எல்லாம் இருக்கின்றன. ஆனால் ஓர் ஏரி இல்லாமல் விவசாயிகள்

எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள் தெரியுமா? நானும் 'மைனர் இரிகேஷன் டிபார்ட்மென்டு'க்கு எத்தனையோ மனுக்கள் எழுதிப் போட்டேன். என்னதான் எழுதினாலும் ஏதாவது பலன் கிடைத்ததா? ஒன்றுமில்லை. இப்பொழுது பார்! நமது ஊருக்கு முதல்தரமான ஏரி ஒன்று வெட்டியாகிவிட்டது. மந்திரத்தால் மாங்காய் விழுமா என்ன? எல்லாம் உலகத்தில் தந்திரத்தால் தான் நடக்கும்" என்று சொல்லிச் சிரித்தார் மருதநாயகம்.

"இதெல்லாம் உங்களுடைய வேலைதானே? நீங்கள்தானே அந்த மூக்குப் போன விக்கிரகத்தை அந்த இடத்தில் கொண்டு போய்ப் புதைத்து வைத்தது? என்னிடம் கூட உண்மையைச் சொல்லவில்லையே!" என்று சொல்லி வியந்தாள் மருதநாயகத்தின் மனைவி.

"உன்னிடம் சொல்வதும் ஒன்றுதான்; ஊர் முழுவதும் சொல்வதும் ஒன்றுதான்!" என்றார் மருதநாயகம்.

ஏ. எஸ். பஞ்சாபகேசையர், எம்.ஏ., ஐ.ஸி.எஸ்.

முடிவு 31

ராம நாராயணன் நாஸ்திகன். கடவுள், கர்மம், ஆன்மா ஆகியன இல்லையென்று கூறும் சமயவாதி. அவன் பெரிய வர்த்தகன். அவனுடைய தொழில்கள் அனைத்தும் மிக்க லாபகரமாக நடைபெற்று வந்தன. பல வருஷங்களாக அவன் வெறும் வியாபாரப் பொருள்களோடு பழகியதைத் தவிர வேறு பழக்கம் அறியான். எனவே தன் புலன்களாற் கண்டு உரைக்கக்கூடிய வஸ்துக்களே உண்மையென அவன் நம்பலாயினான். ஆன்ம விஷயங்களைப்பற்றி அவன் அக்கறை கொண்டதில்லை. "என் புலன்கள் உண்மையென்று உணர்ந்த பொருள்களையும் எனக்கு நேரில் ருஜுப் படுத்தக்கூடிய வஸ்துக்களையுமே நான் அறியமுடியும். அப்படி அறிய முடிந்தவற்றைத்தான் நான் நம்பவும் கூடும்" என்று அவன் சொல்வது வழக்கம்.

ஒருபுறத்தில் அவனுடைய நெற்குத்தும் யந்திர சாலைகளும், நீலக் கடலை யந்திரசாலைகளும் நல்ல பயனளித்தன; அவனுடைய புகையிலை வியாபாரமும் போக்குவரத்துத் தொழிலும் மின்சார வர்த்தகமும் செழித்தோங்கின; அவன் புகழும் வளர்ந்தது; அவனுடைய புகைப் படங்கள் பல மண்டபங்களை அலங்கரித்தன; நகர சபைகளும் மற்றுமுள்ள ஸ்தாபனங்களும் வாசித்துக் கொடுத்த வரவேற்புப் பத்திரங்கள் அவன் வீட்டுச் சுவரெல்லாம் நிறைந்திருந்தன.

ஆயினும் அவனுடைய வாழ்க்கை மட்டும் சூரிய வெளிச்சத்தில் கிடக்கும் பளிங்குக் கல்லைப்போல் சூன்யமாகத் தோன்

றியது. ஆனல் அவன் அவ்வாழ்க்கையே சிலாக்கியமென்று பெரு மிதம் அடைந்தான். "அறிவுக்கெட்டாத ரகசியப் பொருள் களைப்பற்றி நாம் ஏன் கவலைகொள்ளவேண்டும்?" என்பது அவனுடைய சித்தாந்தம்.

அவன் நற்பேறு பெற வேண்டுமென்று விரும்பிய சில நண்பர்கள் அவனைத் திருவண்ணுமலைக்குக் கார்த்திகைத் தீபம் காண அழைத்துச் சென்றார்கள். காற்றடித்தாலும் மழை பொழிந் தாலும் மூன்றுநாளும் விடாமல் தொடர்ச்சியாக ஜோதி எரியு மென்றும், மலைமேலுள்ள ஜோதியையும் கீழே கோவில் தீபங் களையும் ஐந்து உத்ஸவ மூர்த்திகளையும் கண்ட உடனே இன்ன தென விவரிக்க முடியாத அந்தரங்க ஆன்மிக உணர்ச்சி அவன் உள்ளத்தில் தோன்றுமென்றும், அவன் மனம் இவ்வுலக சிந்தனையி லிருந்து விடுபட்டு இறுதியில் மறுமைப் பயனும் சித்தியாகு மென்றும் அந்நண்பர்கள் அவனுக்கு எடுத்துரைத்தார்கள். ஆனல் அவர்கள் திருவண்ணுமலைக்குச் சென்ற தினம் பெரும்புயலொன்று கிளம்பியது. இடையருது மழையும் பொழிந்தது. ஜோதியைப் பார்க்க வந்திருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களும் முற்ற நனைந்து குளிரில் மெய் நடுங்கினர்கள். பல மணி நேரம் அவர்கள் கொட்டும் மழையில் அவதிப்பட்டார்கள். "கேவலம், தம் பக்தர்கள் மழையில் நனையாது பாதுகாக்கவும் இந்தக் கடவுளுக்குச் சக்தியில்லையே!" என்று ராம நாராயணன் பரிகாசம் செய்தான். "சக்தியில்லாமல் இல்லை. கடவுள் தம் பக்தர்களைப் பரிசோதிக் கிறார்" என்று ஒரு நண்பன் சமாதானம் கூறினன். ஆனல் ராம நாராயணன் அதை ஒப்புக்கொள்ளவில்லை.

முடிவில் பலவித வாண வேடிக்கைகளுக் கிடையில், கோவில் அதிகாரிகள் மலைமீது ஜோதியை ஏற்றினர்கள். பக்தர்கள் சிர மேற் கரங்கூப்பி ஜயகோஷம் செய்தனர். "மடையர்கள்" என்றன் ராம நாராயணன். "ஜோதியையும் அடிவார தீபங் களையும் பஞ்ச மூர்த்திகளையும் ஏக காலத்தில் காணமுடியாதென் னும் இவ்வற்ப விஷயம் இவர்களுக்கு எட்டாமல் போய்விட்டது. இந்தக் கடவுளின் பூஜாரிகள் இப்போதை மக்களை எவ்வளவு சுலபத்தில் ஏமாற்றி விடுகிறார்கள்!" என்று அவன் தன் நண்ப னிடம் கூறினன். "தமது பெரிய திருவிழாவைக் கெடுக்க வந்த புயலைத் தடுத்து நிறுத்தக் கூட இந்தக் கடவுளால் முடியவில்லை" என்றும் அவன் பழித்துரைத்தான். "நீ சொல்லுவது சரியல்ல" என்று நண்பன் மறுத்தான். "ஹிமாலய யாத்திரையைப்பற்றிய புஸ்தகங்களில் நீ படித்திருப்பாயே. இந்தப் பருவத்தில் ஒவ்வொரு நாளும் மாலை நான்கு மணிக்குக் கௌரி சங்கரில் பெரிய புயல் வீசுவது வழக்கம். பனி தோய்ந்த அம்மகா பருவதத்திலிருந்து வெகுதூரம் விலகியிருக்கும் இம்மலையிலும், மக்கள் அந்தப் புயலை ஓரளவு கண்டு அனுபவிக்க வேண்டுமென்பது இறைவருடைய விருப்பம்" என்று அவன் விளக்கிக் கூறினன். ராம நாராயணன் அதை அணுவளவும் அங்கீகரிக்கவில்லை. "இது பொருளற்ற

வெறும் பேச்சு; நமது மக்களின் அறிவீனத்தையே இது காட்டு கிறது. ஒன்றும் விளையாத ஹிமாலயத்தில் வாழ அவர்கள் ஆசைப் படுகிறார்கள்; ஆனல் கனியும் கிழங்கும் பயிராகும் தங்கள் மலை மீது வசிக்க அவர்கள் விரும்புவதில்லை. இப்போர்ப்பட்ட அறிவிலி களோடு நாம் என்ன செய்வது?" என்று அவன் ஆத்திரங்கொண் டான்.

இரவு எட்டு மணிக்கு ராம நாராயணனும் அவன் நண்பனும் வீடு திரும்பினர்கள். இருண்ட பின், வெளியே வீசிய பயங் கரமான புயற்காற்றையும், அந்தச் சூரூவளியிலும் மலைமீது மங்கி மங்கி எரிந்த ஜோதியையும் அவர்கள் பார்த்துக்கொண்டிருந் தார்கள்.

நண்பன் பேசத் தொடங்கினன்: "ஜடப் பொருள்களை விடச் சிறந்த வஸ்து வேறில்லை என்றல், பல ஆண்டுகள் தழைத்து வளர்ந்த இந்த மரங்கள் ஏன் ஒரு கணத்தில் ஒடிந்து விழவேண் டும்?" என்று வினவினன். ராம நாராயணன், "கடவுள் இருக் கிறார் என்பதை இது எப்படியும் நிரூபிப்பதன்று. பைசாசங்கள் இருக்கின்றன என்பதற்கு இது ஒருவேளை ருஜுவாகலாம்" என்று பதிலிறுத்தான்.

சுமார் நடுநிசி வேளையில் ஜோதி அணைந்துபோயிற்று. "பார், மூன்று நாள் எரியவேண்டிய ஜோதி அதோ அணைந்துவிட்டது. ஒரு மின்சார விளக்கையோ, அல்லது ஓர் உலையையோ இம்மாதிரி அணையவிட்டிருந்தால், நான் எப்படி முன்னுக்கு வந்திருக்க முடியும்?" என்று ராம நாராயணன் பேசலாயினன். "சிவனுக்கு வியாபார ஆற்றல் கொஞ்சமேனும் இல்லை. எந்த அமெரிக்க ஆங்கிலேய வர்த்தகனும், எந்த ஜெர்மானிய ஜப்பானிய வியா பாரியும் சிவனுக்கு வர்த்தக நுணுக்கங்களைப்பற்றிப் பாடம் சொல்லமுடியும். ஏன், நானும்கூட....." என்று ராமநாராயணன் வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்தினன். அடக்கத்தால் சற்றே நாணமடைந்தவனைப்போல் பாவனை செய்தான். உடனே நண்பன், "சிவன் இச்சைப்பட்டால் வடவைக் கனலையன்றே ஏவல் கொண் டிருப்பான்? சாதாரணத் தீயைவிட அது கோடிமடங்கு வெம்மை யுள்ளதல்லவா?" என்று கேட்டான். "அறிவற்ற பேச்சு!" என்று ராம நாராயணன் இடைமறித்தான். "வடவைக் கனல் என்று ஒரு பொருள் இல்லை. அது, பகுத்தறிவை இழந்த ஹிந்துக்களின் கற்பனையே தவிர வேறல்ல. கடலின் அடிப்புறத் தான் வடவைக் கனலின் இருப்பிடமாய் இருத்தல்வேண்டும். ஆனல் அந்த இடமோ, சொல்லமுடியாத அளவு குளிர்ச்சி பொருந்தியது" என்று அவன் வாதிட்டான். அதற்குமேல் நண்பன், தர்க்கம் செய்வது வீணென்று கண்டான். "இங்கு உனக்கு ஆத்ம தரிசனம் கிடைக்குமென்று எண்ணினேன். ஆனல் நீ பூண்டிருக்கும் வைஷ்ணவப் பெயர் அதற்கு ஒரு தடையா யிருக்குமோவென இப்போது அஞ்சுகிறேன். பிருந்தாவனத்தையொத்த ஒரு சிறந்த

வைஷ்ணவ க்ஷேத்திரத்துக்கு நீ போகவேண்டும்" என அவன் கேட்டுக்கொண்டான். ராம நாராயணனோ இந்த யோசனையை மதிகெட்டதென ஒதுக்கித் தள்ளினான். நண்பன் விடவில்லை. மீண்டும், "அவசியம் நீ பிருந்தாவனத்துக்குப் போய்த்தான் ஆக வேண்டும். இல்லையெனில் நீ உன் மனச்சாட்சிக்குத் துரோகம் செய்பவனாவாய். பிருந்தாவனத்தில் யமுனைக் கரையில், அழகிய மாலைப்பொழுதில், நீ தனித்திருக்க வேண்டும். அப்போதும் உனக்குப் பலனொன்றும் கிடைக்கவில்லையென்றால், நான் உன்னோடு ஆன்மிக விஷயத்தைப்பற்றிப் பேசுவதையே நிறுத்தி விடுகிறேன்" என்றான். "சரி, அங்கும் போய்ப் பார்க்கிறேன்" என ராம நாராயணன் ஒப்புக்கொண்டான்.

குறித்தவாறே, ராம நாராயணன் பிருந்தாவனத்துக்குப் போனான். மூன்று நாட்கள் க்ஷேத்திரம் முழுவதையும் சுற்றிப் பார்த்தான். "நெற் குத்தும் யந்திரசாலையோ அல்லது பால் பண்ணையோ வைத்து நடத்த இது எவ்வளவு பொருத்தமான இடம்!" என்று வியந்தான். அங்கிருந்த சாதுக்களையெல்லாம், "சோம்பேறிகள்! அடியார்கள்போல நடிக்கும் வேஷதாரிகள்!" என இகழ்ந்தான். "இங்கே ஒரு விசித்திரம் என்னவென்றால், ஒன்று தானம் செய்யவேண்டும்; அல்லது யாசிக்கவேண்டும். வியாபாரத்தில் இருப்பதுபோல் இடைவழி கிடையாது" என்று தனக்குத்தானே சிந்தித்தான். முடிவில் பின்வருமாறு தீர்மானித்தான்: "என் நண்பனுக்கு வாக்களித்தபடி, யமுனை தீரத்தில் ஒரு தனித்த இடத்தை நாடிச் சென்று இன்றைய மாலைப் பொழுதைக் கழிப்பேன். அங்கு எதுவும் நிகழவில்லையெனில் பேசாமல் ரயிலேறி ஊரை அடைவேன். ஏதும் நிகழாதென்பது நிச்சயம். ஆனால் ஏதாவது சம்பவிக்க வேண்டுமென்றே நான் ஆசைப்படுகிறேன். அனுதினமும் புகழும் விருந்தும் பெற்று அலுத்துப் போனேன். என் மனம் ஒரு மாறுதலை அவாவுகிறது. ஆயின் அது வாய்ப்பது துர்லபமே."

ராம நாராயணன் ஒரு பர்லாங்கு தூரம் மணற் பரப்பைக் கடந்து யமுனை ஆற்றங்கரையில் எவரும் அணுகாத இடத்தை அடைந்தான். ஸ்ரீ கிருஷ்ணன் அகன்றவுடன், தண்ணீரும் பிருந்தாவனத்தை விட்டு அகன்று போயிற்றெனச் சிலர் சொல்வதுண்டு. ராம நாராயணன் அக்கதை வெறுங் கற்பனையே யென்று மதித்தான். ஆனால் அன்று மாலை அவன் நீரினருகே நின்று கொண்டு, ஊர்ந்து செல்லும் படகுகளைப் பார்த்தபோது முன்னர்க் கேள்விப்பட்ட கதை உண்மையாயிருக்குமோவென ஐயமுற்றான். மணலின் மீது உட்கார்ந்து, அதைக் குறித்துச் சிந்திக்கத் தொடங்கினான். திடீரென்று இடியும் மின்னலும் தோன்றின. வானமே பிளந்தது போல மழை தாரை தாரையாகப் பொழிந்தது. சண்டமாருதமும் சேர்ந்துகொண்டது. ராம நாராயணன் உடல் முழுதும் நனைந்துபோனான். திருவண்ணாமலையில் நனைந்ததும் சட்டென அவனுக்கு ஞாபகம் வந்தது.

'இந்த இரண்டு ஸ்தலங்களுக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? சிவனும் விஷ்ணுவும் கூடி இந்தச் சதி செய்கிறார்களா?' என அவன் நினைக்கு முன்னே ஒரு பயங்கரக் காட்சியைக் கண்டான். கண்ணைப் பறிக்கும்படி வானத்தை ஊடுருவிய மின்னொளியில் கரைப் பக்கமிருந்து மலைபோல் தண்ணீர் புரண்டு வருவதை அவன் பார்த்தான். அபாய காலத்தில் மனந்தளராது சமயோசித மாகக் காரியம் செய்வதில் அவன் கைதேர்ந்தவன். ஆற்றின் பக்கமாயோடி ஒரு படகில் ஏறினால்தான் தப்ப முடியுமென அவன் உடனே உணர்ந்தான். கண்ணிமைக்குமுன் ஓடினான். எதிரே கண்ணிற் பட்ட ஒரு படகுக்காரனை உரத்த குரலிற் கூப்பிட்டான். அவன் குரல் நடுங்கிற்று. அதில் ஏக்கமும் தொனித்தது. இருளின் வயிற்றிலிருந்து ஒரு படகுக்காரன் வெளிப்பட்டான். அவனைப் போன்ற ஒரு மனித உருவத்தை ராம நாராயணன் அதற்கு முன் எங்கும் பார்த்ததில்லை. மின்னல் வெளிச்சத்தில் ஓரிரண்டு அவயவங்களே அவனுக்குப் புலப் பட்டன. ராம நாராயணன் படகில் குதித்தேறினான். கரைப் பக்கமிருந்து திரண்டு வந்த தண்ணீர் ஆற்றை நெருங்கப் படகும் புறப்பட்டு விட்டது. "பிழைத்தேன்" என்று அவன் பெருமூச் செறிந்தான். வந்த வெள்ளம் இடியெனக் குமுறி வட்டமிட்டு ஆற்றில் விழுந்தது. படகும் பல அடி உயரம் மேலெழும்பி விழுந்தது.

ராம நாராயணன் ஓடக்காரனைப் பார்த்து, "நீ யார்? உன் பெயர் என்ன? உன் கூலி என்ன?" என்று கேட்டான். பின்னால் இவ்விஷயமாக ஐயமும் சச்சரவும் இருக்கக் கூடாதென அவன் விரும்பினான். ராம நாராயணன் கேட்டு முடித்ததும், "நானே மரணத்தின் அதிபதி. என் பெயர் எமன். உன் உயிரே எனக்குச் சேரவேண்டிய கூலி" எனப் படகுக்காரன் பதிலுரைத்துத் தன் முகம் முழுவதும் தெரிய அவனிருந்த பக்கம் திரும்பினான். ராம நாராயணன் திடுக்கிட்டான். அச்சத்தால் நடு நடுங்கிக் கூக்குர லிட முயன்றான். ஆனால் நாவெழவில்லை. விஷயம் இன்னதென அறிய அவன் கீழே குனிந்தான். அதே சமயத்தில் மின்னலொன்று வானத்தைக் கிழித்துச் சென்றது. அந்த மின்னொளியில் அவன் தனக்கு உடலில்லை யென்பதையும், தன் உடல் யமுனை ஆற்றங் கரையில் கிடப்பதையும் கண்டான். "என் உடலும் நாஸ்திகமும் இப்படியா முடிவடைந்தன!" என அவன் சாந்தம் நிறைந்த குரலில் கூறினான்; உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கப் படகுக்கார னைப் பின்பற்றினான்.

பட்டு

ஸரோஜாவின் கிளி

32

ஆகாயத்தில் உல்லாசமாய்ச் சிறகடித்துப் பறந்து திரியும் பறவையைக் கூட்டில் அடைத்து வைப்பது மகா பாபம் அல்லவா? அதனுடைய சுதந்தரத்தைத் தடுத்துவைத்து என்னதான் பாலும் பழமும் ஊட்டினாலும் அதற்குப் பிடிக்கவே பிடிக்காது. இயற்கையான உத்ஸாகமும் உண்டாகாது.

இவ்வளவு பெரிய விஷயம் சின்னஞ்சிறு ஸரோஜாவுக்கு எப்படித் தெரியும்? புத்தப்புதுப் பாவாடை கட்டிக்கொண்டு பந்தாடுவதைப் போலவே அவளுக்கு அதுவும் ஒரு விளையாட்டு.

அவள் சாப்பாட்டு வேளையில்கூட அவர்கள் வீட்டுக் கூண்டில் அடைபட்டிருக்கும் பஞ்சவர்ணக் கிளியுடன் கொஞ்சுவாள். அவளுடைய அம்மா அவளை அதட்டிச் சாப்பிடச் சொல்லுவாள். ஸரோஜாவுக்கு அம்மா இப்படிச் சொல்லுவது எரிச்சலாய் இருக்கும். அந்த எரிச்சலை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் வேறு வழியின்றிச் சாப்பாட்டைக் கொரிப்பாள். அதைப் போலவே கூட்டிலிருக்கும் கிளியும் ஆகாரம் முழுவதும் சாப்பிடாமல் கொரித்துக் கொரித்து மீதியை வைத்திருக்கும். அது ஏன் என்பதைப்பற்றி ஸரோஜா யோசிப்பதேயில்லை.

'என்னமோ அதுக்குப் பிடிக்கவில்லைபோலிருக்கு' என்று எண்ணிக்கொள்வாளே தவிர, தன்னைப் போலவே அதற்கும் குஷியாக வெளியிலெல்லாம் தன் தோழிக் கிளியுடன் சுற்றி வரவில்லையே என்ற ஏக்கம் இருக்கும் என்று நினைப்பதே இல்லை. அவ்வளவுக்கு அவளால் யோசனை செய்ய முடியுமா?

தன்னோடு கூட இந்தக் கிளிக்குச் சிரித்து விளையாடுவதற்கு என்ன கேடு என்றுதான் அவளுக்குத் தோன்றும். ஆனாலும் அவளுக்கு அந்தக் கூட்டைத் திறந்து கிளியை வெளியே பறக்கவிட்டுப் பார்க்கவேண்டும் என்ற ஆசை இல்லாமல் இல்லை. அப்படிச் செய்ய அவளுக்குப் பயமாயும் இருந்தது. என்ன பயம் என்றும் அவளுக்குத் தெரியவில்லை.

அது தன்னைப் பரிதாபமாய்ப் பார்த்து விழிப்பதைக் காணும் போது, "உனக்குக் கோபமா? ஏன் என்னோடு பேச மாட்டியா?" என்றெல்லாம் அவள் கேட்பாள். ஒரு தடவை வேறு ஒரு கிளி அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் கத்தியதைக் கேட்டுவிட்டுக் கூண்டிலிருக்கும் கிளியும் கத்தியது. அது என்னதான் சொல்லிக் கத்தியதோ யாருக்குத் தெரியும்? ஸரோஜா இதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். தோட்டத்தில் போய்ப் பார்த்தாள். அந்தக் கிளி நாலு புறமும் பார்த்துவிட்டுப் படபடப்பாய்க் கத்தியது. உடனே உள்ளே வந்தாள். அவளுக்குத் திடீரென்று ஒரு விசித்

திரமான எண்ணம் தோன்றியது. தன் அண்ணு அகியாயமாய் இந்தக் கிளியை அடைத்து வைத்திருக்கிருனே, வெளியில் பஞ்சுக்குப் பதில் கத்திக்கொண்டிருக்கும் கிளியைப் பிடித்து அடைத்து இதை வெளியில் விட்டால் என்ன என்று நினைத்தாள்.

'ஐயோ! இந்தக் கிளியை வெளியில் விட்டுவிட்டால் அப்புறம் அண்ணு வந்து கொன்றுவிடுவானே' என்ற எண்ணம் வேறு ஒரு பக்கம்.

இப்படி அவள் எண்ணியபோது அந்தக் கிளி விடாமல் கத்திக்கொண்டே இருந்தது.

'என்னதான் சொன்னலும் இந்தக் கிளி இப்படி அடம் பிடிக்கக்கூடாது. எனக்கும் புரியக்கூடிய பாஷையில் இது பேசினுல் என்ன? என்னவோ வறட்டுத் தவளைமாதிரி கத்தறதே' என்று கோபங்கூட உண்டாயிற்று.

அடுத்த நிமிஷத்தில் அந்தக் கிளி கத்திக் கத்திச் சோர்ந்து போய்ப் பேசாமல் ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டு விட்டது. இப்பொழுது ஸரோஜாவுக்கு அழுகை வரும்போ லாகிவிட்டது. கண்களில் கப கபவென்று நீர் துள்ள அந்தக் கிளியையே உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தாள்.

'ஐயோ! இந்தக் கிளிக்கு அம்மா அப்பா அண்ணு ஒருத் தருமே இல்லையா? இருந்தால் அவைகளெல்லாம் எங்கே இருக்கும்? வெளியிலே கத்தின கிளி இதனுடைய அம்மாவா யிருக்குமோ? ஆமாம்; அப்படித்தான் இருக்கும். இல்லாவிட்டால் இப்படி மாறி மாறித் தொண்டை கிழியக் கத்துமா?'—அரைமணி நேரம் அவளுடைய சின்னஞ் சிறு உள்ளம் எதெதையோ எண்ணித் தவித்தது. 'அம்மா கூப்பிட்டதும் அடிக்குமே என்று இந்த கூண்டுக்கிளி பயப்படுமோ! ஆமாம்! இந்தக் கிளி எப்படி அந்தக் குறவன் கையில் அகப்பட்டுண்டது? அந்தக் கிளியின் அம்மா அதைக் கவனிக்காமே இருந்துட்டாளா? இருக்காது. அது எங்கேயானும் போய்ச் சாப்பாடு கொண்டுவரப் போயிருக்கும். இது வெளியிலே கன்னபின்னுன்னு திரிஞ்சிருக்கும். குறவன் பிடிச்சுட்டான். "ஏன் சொன்னதைக் கேக்காமே வெளியிலே போனே" என்று அந்த அம்மாக்கிளி இதைக் கொத்தினுல்? அப்படி யானுல் இந்தக் கிளியை வெளியிலே விடக்கூடாது. இத்தனை நாள் கழிச்சானும் நீ அகப்பட்டியே என்று அந்தக் கிளி இதைக் கட்டிண்டு அழுதால்.....?'—ஐயையோ! அதை நினைக்கும்போதே குழந்தை சரோஜாவின் கண்களில் நீர் பின்னும் வழிந்தோடிற்று.

அந்தச் சமயம் ஸரோஜாவின் தாய் உள்ளிருந்து கூப்பிட் டாள். ஸரோஜா உள்ளே போனுள்.

"ஏண்டி அழறே?" என்று கேட்டாள் அம்மா.

"இல்லேம்மா, அந்தக் கிளியின் அம்மா வந்து கத்தியது. நம்மாத்துக் கிளியும் கத்தித்து!"

"ஏன்னடி உளர்றே?"

"இல்லேம்மா, நிஜமாத்தான்" என்றாள்.

"சரி நீ போய் அண்ணுவைக் கூட்டிண்டு வா" என்றாள் அம்மா.

"அண்ணு இன்னும் பள்ளிக்கூடத்திலிருந்தே வரலேம்மா."

"என்னடி, மணி ஆறடிக்கப் போறது. இன்னும் வராமே என்ன? எங்கேயானும் வாசத் தெருவிலே நிற்பான். போய்ப் பார்" என்றாள் தாய்.

ஸரோஜா கூட்டிலிருந்த கிளியைப் பார்த்துக்கொண்டே அண்ணுவைத் தேடப் போனாள். வாசலில் அண்ணுவையும் காணவில்லே, ஆட்டுக் குட்டியையும் காணவில்லே. எதிர் வீட்டு ராமு, மணி, கிச்சு எல்லோரும் வந்துவிட்டார்கள். "ஏன் அண்ணு மட்டும் வரவில்லே?" - அவர்களைக் கேட்டதற்கு, "ஏனோ தெரியாது" என்று சொல்லிவிட்டார்கள்.

அம்மாவிடம் போய் விஷயத்தைச் சொன்னாள். "வரட்டும் அந்தத் தடிப்பயல். அடித்தோடையைப் பிடித்து நிமிண்டி, 'இனிமே பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டுக்கு வந்து டறயா?' என்று சொல்றேன்" என்று ஆத்திரத்துடன் இரைந்தாள் அவள் அம்மா: "வச்ச காபி பச்சைத் தண்ணியாய் போய்த் தொலேந்தது. இன்னும் அந்தக் கடனைக் காணுமே" என்றாள் ஏழு மணிக்கெல்லாம்.

ஸரோஜா ஒன்றுமே பேசவில்லே. அவளுக்குக் கவலேயாயும் பயமாயும் இருந்தது. திடீரென்று சாயங்காலம் வீட்டுக் கொல்லேயிலிருந்த கிளியும் கூட்டிலுள்ள கிளியும் கத்தியது அவளுக்கு ஞாபகம் வந்தது. 'இப்படித்தானே கூட்டிலிருக்கும் கிளியும் காணுமல் போனபோது அதன் அம்மா, அப்பா, தங்கை எல்லாருக்கும் பயமாயிருக்கும். அவைகளெல்லாம் எவ்வளவு வருத்தப்பட்டிருக்கும்! அதன் தங்கைக் கிளிக்கு எவ்வளவு வருத்தமாய் இருந்திருக்கும்! ஐயையோ!' இப்படியெல்லாம் தன் குழந்தைச் சுபாவப்படி எண்ணிக்கொண்டாள் அவள்.

அப்பா வந்ததும் தேடப் போனார். அவளுடைய அண்ணன் என்னவோ வரவேயில்லே. தெருவில் ஒரு வீடு பாக்கியில்லாமல் தேடிப் பார்த்தாகிவிட்டது. எல்லோரும் இரவெல்லாம் தூங்காமல் அழக்கூட ஆரம்பித்து விட்டார்கள். ஸரோஜாவும் மூலேயில் படுத்துக்கொண்டு விக்கி விக்கி அழுதாள். அவளுடைய அண்ணு காணுமற் போனது கூட அவளுக்கு அவ்வளவு வருத்தமாய் இல்லே. 'கூட்டிலிருந்த கிளியை வாங்கி அடைத்ததற்காக ஸ்வாமிதான் இப்படி அவனேயே காணுமற் போகும்படி பண்ணி விட்டார்!' என்று நினைத்துக்கொண்டபோது அவளுடைய துக்கம் இன்னும் அதிகரித்தது. உடனே அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. 'இந்தக் கிளியை நாம் வெளியில் விட்டுவிட்டால் ஸ்வாமி மனசு இரங்கி நம் அண்ணுவைக் கண்டுபிடிச்சுக் கொடுக்கமாட்டாரா? அப்படிச் செய்தால் என்ன?' என்ற

எண்ணம் தோன்றியதோ இல்லையோ, உடனே அவளுக்குச் சந்தோஷம் கூட வந்துவிட்டது. "ஆமாம், அண்ணு வந்து என்னை அடிச்சாலும் பட்டுக்கறேன். கட்டாயம் இந்தக் கிளியை அவ அம்மாகிட்டே போவதற்கு வெளியில் விட்டுடறேன்" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு எழுந்திருந்தாள். மெல்லக் கூட்டின் அருகில் போனாள். கிளியும் தூங்கவில்லை. பட பட வென்று சிறகை அடித்தது.

"ஐயோ! இதுவும் அம்மாகிட்டே போகணும் என்றுதானே அழுதுண்டே தூங்காமே இருக்கு? நானே மூதற்கொண்டு நீ உங்க அம்மா கிட்டப்போய் நன்னத் தூங்கு" என்று அந்தக் கிளியைப் பார்த்துக் கொஞ்சிக்கொண்டே சொன்னாள். பிறகு கூட்டை எடுத்துக்கொண்டு கூடத்தைத் தாண்டி வந்தாள். ரேழிக்கு வந்ததும் இருட்டில் வெளியில் போக அவளுக்குப் பயமாய் இருந்தது. கூட்டைத் திறந்து ரேழியிலேயே அதை வைத்து விட்டு வந்து படுத்துக்கொண்டாள். அதன் பிறகு அவளுக்கு நிம்மதியாய்த் தூக்கம் வந்தது. 'காலங்கார்த்தாலே' கண்டிப்பாய்த் தன்னுடைய அண்ணு வந்துடுவான் என்று அவளுக்கு இப்போது நம்பிக்கை வந்துவிட்டது.

காலையில் எழுந்ததும் மூட்டைகள் அடுக்கியிருக்கும் ரேழியைப் போய்ப் பார்த்தாள். கிளியைக் காணவில்லை. கூண்டு காலியாய்க் கிடந்தது. 'அம்மா' என்று வெகு உத்ஸாகமாய் ஓடினாள்.

"அம்மா, நம்ப அண்ணு இனிமே வந்துடுவன், கட்டாயம்" என்றாள் அம்மாவிடம்.

"எப்படியடி? யார் சொன்னு உனக்கு?" என்றாள் அம்மா.

"நான்தான் சொல்றேன்."

"கட்டாயம் பாரேன்" என்று அவள் தீர்மானமாய்ச் சொல்லிவிட்டு வாசற்பக்கம் வந்து அண்ணு வந்துவிட்டானு என்று பார்க்க ஆரம்பித்தாள். தூரத்தில் நான்கைந்து பேர்கள் வருவது தெரிந்தது. வர வர அவளுடைய அப்பா நடுவில் இருப்பதும், கையில் அவளுடைய அண்ணுவைப் பிடித்துக் கர கர வென்று இழுத்து வருவதும் தெரிந்தது.

ஒரே ஆச்சரிய மிகுதியால் அம்மாவிடம் கூவிக்கொண்டே ஓடினாள்.

"அம்மா, பார்த்தாயா? அண்ணு வந்துவிட்டான்" என்று சொன்னாள்.

கிளி கொண்டுவந்த ஒரு குறவனுடன் அவள் அண்ணு பள்ளிக் கூடம் விட்டதுமே போய்விட்டான் என்பது அப்பா வீட்டிற்கு வந்ததுந்தான் தெரிந்தது. எல்லோரும் அவனைத் திட்டினார்கள். ஆனால் ஸரோஜா மட்டும் அவனைப் பயத்துடன் பார்த்துக்

கொண்டே இருந்தாள். கிளியை வெளியில் விட்டதற்காக அடிப்பானே என்ற பயம் அவளைப் பிடுங்கித் தின்றது. அந்தக் கிளியை விடாமல் இருந்தால் அவன் எங்கே அகப்பட்டிருப்பான்? ஸ்வாமியாகப் பார்த்துத்தானே அவனே அகப்படும்படியாகச் செய்தார் என்று எண்ணினாள். 'ஆனாலும் இதைச் சொன்னாலும் அந்தப் பாழும் அண்ணு கேட்கமாட்டானே. கேட்காமல் பளீர் பளீர் என்று அறைஞ்சால்?' என்று அவளுக்குச் சந்தேகம் இருந்துகொண்டே இருந்தது.

அமளி துமளி அடங்கியதும், "இந்தக் கூட்டை யார் இங்கே கொண்டு வைத்தது?" என்று அவள் அம்மா ரேழியில் இருந்த கூட்டைப் பார்த்துக் கேட்டாள். ஸரோஜாவுக்கு மனம் திக்குத் திக்கு என்று அடித்துக்கொண்டது. அவளுடைய அண்ணு தாவிக் கொண்டு, "எங்கே கூண்டு? கிளிக்கூண்டு எங்கே?" என்று பாய்ந்துகொண்டு ஓடிவந்தான். ஸரோஜா வாயைத் திறக்கவில்லை. கூட்டில் கிளியைக் காணவில்லை. "எங்கே கூட்டில் இருந்த கிளி?" என்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு அதட்டினான்.

"அந்தக் கிளியை வெளியில் விடாட்டால் நீ எங்கே அகப்படறது? கிளியை வெளியில் விட்டதால்தான் ஸ்வாமியாப் பார்த்து அகப்பட வச்சார் உன்னை" என்றாள்.

அவனுக்குக் கோபம் தாங்கமுடியாமல் அவளை அடிக்கப் பாய்ந்தான். ஸரோஜா ஒரு மூட்டையில் ஏறி ஓடினாள். மறுபடியும் அவன் விடாமல் அவளை உதைப்பதற்கு விரட்டவே, அவள் ஒரு மூட்டைக்குள் ஒளிந்துகொண்டாள். கிசுமிசு என்று அவள் காலில் ஏதோ ஏறியது. உடனே ஏதோ பாம்போ, தேளோ என்று அவள் அலறினாள். ஆனால் அடுத்த நிமிஷமே அவள் கண்களில் தென்பட்டது என்ன? இரவில் கூண்டை விட்டுக் கிளம்பிய கிளிதான். அவளுக்கு ஆச்சரியம் தாங்கமுடிய வில்லை!

"நீ எனக்கென்று கொடுத்த கிளியைப் பார்டா?" என்று ஆச்சரிய மிகுதியால் கூவினாள். அவள் அண்ணன் பிரமித்துப் போய் நின்றான்.

"இந்தக் கிளியால்தானே நீ அகப்பட்டாய்? உன்னைக் காணமல் நாங்கள் தவித்ததைப்போலத்தானே அதன் அம்மா, அப்பா, தங்கை எல்லாரும் தவிப்பா? அதனால் இப்போதுதான் என் கிளியை வெளியே பறக்க விடப் போறேன்" என்று கிளியைப் பிடித்து வெளியில் விட்டுவிட்டாள் ஸரோஜா.

உத்தியோக சித்தி 33

கிருஷ்ணமூர்த்தி, எஸ். எஸ். எல். ஸி. வரையில் படித்திருந்தான். அவன் தம்பி முத்துவோ ஒன்பதாம் வகுப்போடு நின்றுவிட்டான். அதற்குமேல் படிக்க அவர்களுக்குப் போதிய ஆதரவு இல்லை.

ஒரு வேலையும் இல்லாமல் வீட்டிலே உட்கார்ந்து இருக்கக் கிருஷ்ணமூர்த்திக்கு இஷ்டம் இல்லை. அவன் வேலைக்கு மனுக்கள் தயாரித்துக்கொண்டான். ஒவ்வோர் ஆபீஸ் படியாய் ஏறி இறங்கினான்; கடைக்குக் கடை படை எடுத்தான்; கம்பெனிக்குக் கம்பெனி போய் நின்றான். ஒன்றும் பலிக்கவில்லை; உத்தியோகம் எதுவும் கிடைக்கவில்லை. ஒரு மூப்பது ரூபாய்க் காசுக்கு வழி இல்லை.

கிருஷ்ணமூர்த்தி மகா புத்திசாலிப் பையன் என்று எல்லோரும் சொல்லுவார்கள். அவன் மூளை, சின்ன வயசு முதலே கொஞ்சம் யுக்தியாய் வேலை செய்யும். அவன் யோசித்தான்; ஒரு வேலையும் கிடைக்காதவனுக்கு என்னதான் வழி என்று யோசித்தான். உலகத்தில் அதி புத்திசாலிகளுக்கெல்லாம் புலப்படுகிற வழி, அவனுக்கு மாத்திரம் புலப்படாமல் போகுமா? புலப்பட்டும் விட்டது. அவன் கதை எழுத ஆரம்பித்து விட்டான். கதை எழுதினால், கதாசிரியன் ஆகலாம். கதாசிரியன் பத்திரிகையில் நுழையலாம். இது எப்படியோ, அந்த வயசிலேயே அவனுக்குப் புலப்பட்டுவிட்டது. கிருஷ்ணமூர்த்தி கதை எழுதினான்.

இன்னோர் ஆச்சரியம்! இந்தக் காலத்தில், கலா ரசனையோடு கதை எழுதும் ரகசியமும் அவனுக்கு எவ்விதமோ உதயமாகி விட்டது. சிற்பம், காதல் இவ்விரண்டையும் கதைக்குள்ளே நுழைத்தால் கலா ரசனை தானே ஒரு நாய்க்குட்டி மாதிரி பின் தொடர்ந்து வரும் என்று அவன் தெரிந்துகொண்டான். ஒரு சிற்பியைச் சிண்டைப் பிடித்துக்கொண்டுவந்து கதைக்குள் புகுத்தினான். அவனுக்குப் பக்கத்திலே ஒரு நடன சுந்தரியை ஆடலும் பாடலுமாக வலம் வரச் செய்தான். அற்புதமான ஒரு வீணை கானத்தைக் காற்றிலே மிதக்கவிட்டான். கிருஷ்ணமூர்த்தி கதை எழுதி முடித்துவிட்டான்.

ஆமாம். கதையெல்லாம் எழுதியாயிற்று. கதையை என்ன செய்வது? - இந்தப் பிரச்னை இப்போதுதான் அவனுக்குத் தோன்றியது; இதுவரை தோன்றவில்லை. 'கதையை எதற்காக எழுத ஆரம்பித்தோம்?' என்று யோசித்தான். புத்திசாலி அல்லவா? காரியத்தை ஆராய்ந்தால் காரணம் புலப்படாதா? பத்திரிகைகளுக்கு அனுப்பவே கதை எழுதத் தொடங்கினோம் என்று ஞாபகம் வந்தது.

வரைத்து வரைத்துச் சொல்லுவானேன்? கிருஷ்ணமூர்த்தி, தன் முதல் கதையைப் பத்திரிகைகளுக்கு அனுப்பினான். அவை அதைத் திருப்பி அனுப்பின. இவன் கதைகளை அனுப்ப, அவை அவற்றைத் திருப்ப, மீண்டும் அனுப்ப, அவை மீண்டும் திருப்ப, இப்படியே இவனுக்கும் பல பத்திரிகைகளுக்கும் பலகாலம் மீண்ட போராட்டம் நடந்துகொண்டிருந்தது. கிருஷ்ணமூர்த்தி இந்தப் போராட்டத்தை யாருக்கும் தெரியாமலேயே நடத்தி வந்தான். என்றாலும், தம்பி முத்துவுக்கு இது எப்படியோ தெரிந்து விட்டது.

"அண்ணா!" என்றான் முத்து.

"ஏன்?" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

"சொன்னால் கோபித்துக் கொள்ளாதே."

"கோபிக்கக் கூடியதானால் கோபந்தான் வரும்."

"நல்லது சொன்னால் கூடவா?"

"அப்போது ஏன் பயப்படுகிறாய்?"

"ஒன்றும் இல்லை.....உன் கதை கலைச்சுவை நிறைந்தது. அதற்குக் கலைச் சுவையோடு படங்கள் எழுதி, கூடவே அனுப்பினால் நல்லது என்று எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது" என்றான் முத்து.

"சரிதான்" என்று அலக்ஷ்யமாகச் சொல்லி, "உன் ஜோலியைப் பார்த்துக்கொண்டு போ" என்று அதட்டினான் கிருஷ்ணமூர்த்தி.

"உன் இஷ்டம். ஆனால் நான் படங்கள் எழுதி வைத்திருக்கிறேன்" என்று மறுபடியும் சொன்னான் முத்து.

"அடடா! ரவி வர்மா கெட்டான்.....எங்கே கொண்டு வா உன் படங்களை?" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

முத்து தன் படங்களை அண்ணனிடம் காட்டினான்.

"இவையெல்லாம் கதைக்குத் தகாதவை. கொண்டு போய் அலமாரியில் வைத்துப் பூஜை செய்துகொண்டிரு" என்று, படங்களை முத்துவிடமே கொடுத்துவிட்டான்.

* * * * *

சில தினங்கள் கழிந்தன, ஒரு பத்திரிகையிலே, 'உதவி ஆசிரியர்கள் தேவை' என்று ஒரு விளம்பரம் வந்தது. யாரோ புதுப் பத்திரிகை ஆரம்பிக்கிறார்களாம். கதை முதலிய ஏதாவது ஏற்கனவே எழுதியவராயிருந்தால், அதையும் வைத்து விண்ணப்பம் அனுப்பும்படியும், புதிய பத்திரிகைக்கு உதவி ஆசிரியர் உடனே தேவை என்றும் அந்த விளம்பரத்தில் கண்டிருந்தது.

மூர்த்தி கதையை எழுதினான். விண்ணப்பத்தையும் கதையையும் அடக்கம் செய்தான். "தம்பீ! இதை உறையில் போட்டு, தபால் தலைகள் ஒட்டி, உடனே கொண்டு போய்ப் பெட்டியில் போடு" என்று முத்துவுக்குக் கட்டளை போட்டான்.

முத்து அதை வாங்கிக்கொண்டான். தபாலாபீஸிற்குப் போய் விட்டான்.

ஐந்தாறு நாட்கள் கழித்து மூர்த்திக்குப் பதில் வந்தது; மனுதார் மூர்த்தியை இன்ன தேதி இத்தனை மணிக்கு இன்ன ஆபீஸில் காண்க என்று பதில் கூறியது.

மூர்த்தி பெரிய பத்திரிகாசிரியரை அல்லவா பேட்டி காணப் போகிறான்? அவர் என்ன என்ன பரீட்சைகள் செய்வாரோ? தன் தோற்றத்தைக் கண்டு என்ன அபிப்பிராயப்படுவாரோ? - இவற் றையெல்லாம் நன்றாக ஆலோசித்தான். கச்சிதமாகத் தலை வாரி, நன்றாக உடை அணிந்துகொண்டான். ('ஸ்பெஷலா'க் கதர் வேஷ்டி, ஷர்ட், அங்க வஸ்திரம் எல்லாம் இதற்காகவே ஒரு 'ஸெட்' வாங்கித்தான் உடுத்துக்கொண்டான்.) இரண்டொரு புதிய 'பெங்வின்' புஸ்தகங்களையும் வாங்கி, கையோடு எடுத்துக் கொண்டான். (புஸ்தகம் ஹஸ்தபூஷணம் அல்லவா?) போனான் ஆசிரியரைப் பேட்டி காண.

ஆசிரியர் அவனை அன்போடு வரவேற்று உட்காரச் சொன்னார். பிறகு ஒரு கட்டு மனுக்களைப் பிரித்தார். அவன் கதையையும், மனுவையும் கையிலே எடுத்தார். அவனுக்கு உடம் பெல்லாம் வெட வெடத்தது. என்ன சொல்வாரோ, என்ன கேட் பாரோ என்ற ஓர் அச்சம்.

என்ன ஆச்சரியம்! அவன் கதையோடு சில சித்திரங்கள் இருந்தன. அந்த மூட்டாள் பயல், முத்து எழுதியவை! அவை களையும் அவன் இந்த மனுவோடு மூர்த்திக்குத் தெரியாமலே அனுப்பியிருக்கிறான்! என்ன அதிகப்பிரசங்கித்தனம்!

இப்படியெல்லாம் அவன் யோசித்துக்கொண்டே யிருக்கை யில், "நீங்கள் எழுதிய கதையைப் பார்த்தேன். மொழிபெயர்ப்பு இல்லையே?" என்று ஆசிரியர் கேட்டார்.

"இல்லை."

"தழுவல் இல்லையே?"

"இல்லை."

"நீங்களே எழுதியது?"

"ஆமாம்."

"நல்லது. இந்தப் படங்களும் நீங்கள் எழுதியவைகளா?"

"இல்லை."

"யார் எழுதியவை?"

தன் தம்பி என்று சொல்ல மூர்த்திக்குக் கூச்சம். அவர் என்ன நினைப்பாரோ என்று அஞ்சினான். "ஒரு சிநேகிதன்" என்றான்.

அவன் தயங்கித் தயங்கிச் சொன்ன பதிலைக் கேட்டு, அவர் கொஞ்சம் சந்தேகப்பட்டார்போல் தோன்றியது. என்ன நினைத் தாரோ தெரியவில்லை. "சரி; அந்த நண்பரையும் அழைத்துக்

கொண்டு, அடுத்த திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு என்னை வந்து பார்க்கிறீர்களா?" என்று கேட்டார்.

"ஆகட்டும்" என்று சொல்லிவிட்டு வெளியே இளம்பிணன் மூர்த்தி.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் கேள்விகளைக் கேட்ட தோரணை, அவனுக்கு என்னவோ போலிருந்தது. என்ரூலும், மறுபடியும் வரச் சொல்லியிருக்கிறாரே பார்க்கலாம் என்று எண்ணினான். அந்தப் பயல் முத்துவிடம் அவனுக்கு அடங்காத கோபம் வந்தது. அவன் படங்களால்தான் இத்தனை தொல்லைகளும் என்று நினைத்தான். அந்தப் பயலை வேறே அழைத்துக் கொண்டு போனால், அவன் என்ன உளறிவைப்பானோ என்று ஒரு பயமும் உண்டாயிற்று. இவ்வித எண்ணங்களோடு வீடு வந்து சேர்ந்தான்.

அடுத்த திங்கட்கிழமை முத்துவையும் அழைத்துக்கொண்டு பேட்டிக்குப் புறப்பட்டான். போகும் வழியிலே, "அங்கே அப்படி நடந்துகொள்ள வேண்டும்; இப்படி நடந்துகொள்ள வேண்டும்" என்றெல்லாம் உபதேசம் செய்துகொண்டே போனான். "ஆசிரியர்கள் என்ரூல் மதியூகமுள்ளவர்கள். அசட்டுப் பிசட்டென்று அவர்களிடம் பேசக்கூடாது" என்று எச்சரித்தான். ஆனால் ஒன்று மாத்திரம் சொல்ல மறந்துவிட்டான். யார் என்று கேட்டால் சிநேகிதன் என்று பதிலளிக்கும்படி சொல்லிவைக்கத் தவறிவிட்டான்.

இருவரும் ஆசிரியரை நேருக்கு நேரே கண்டார்கள்.

"இவர்தாம் அந்தப் படங்களைப் போட்டவரோ?"

"ஆமாம்" என்ரூன் மூர்த்தி.

"உங்கள் சாயலாகவே இருக்கிறாரே?"

முத்து 'களுக்'கென்று சிரித்துவிட்டான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"அண்ணனும் தம்பியும் ஒரே சாயலாய் இருப்பது ஓர் ஆச்சரியமா?" என்று கேட்டான் முத்து.

"நீங்கள் அவர் தம்பியா?"

"சாக்ஷாத் தம்பி" என்ரூன் முத்து.

மூர்த்தி பேந்தப் பேந்த விழிக்கலானான்.

"சிநேகிதன் என்றீர்களே?" என்று மூர்த்தியை நோக்கிக் கேட்டார் ஆசிரியர்.

"இல்லை.....அவன்...." என்று மென்று விழுங்கினான் மூர்த்தி.

"பரவாயில்லை.....கதை எழுதியவர் நீங்கள்; படங்களை வரைந்தது அவர். இதுவாவது உண்மைதானே?" என்று கேட்டார் ஆசிரியர்.

"ஆமாம். வேறே யாரும் இல்லே. அவசரத்தில் ஏதோ தவறிச் சொல்லிவிட்டேன்; மன்னிக்கவேணும்" என்றான் மூர்த்தி.

ஆசிரியர் இதற்குப் பதில் சொல்லவே யில்லை. சிறிதுநேரம் இருவரையும் ஏற இறங்கப் பார்த்தார். பிறகு, "சரி; போய் வாருங்கள். ஒரு வாரத்தில் உத்தரவு அனுப்புகிறேன்" என்று விடை கொடுத்தார்.

அண்ணனும் தம்பியும் வெளிப்பட்டார்கள். "முட்டாள்! உன்னாலே எத்தனை உபத்திரவங்கள் பார்! என்னைக் கேட்காமல் அந்தப் படங்களை உறைக்குள் உன்னை யார் வைக்கச் சொன்னது? சனியன் பிடித்த பயலே!....." என்று முத்துவை மூர்த்தி வழி நெடுகிலும் ஏதேதோ திட்டிக்கொண்டு வந்தான்.

* * * * *

ஒரு வாரம் கழிந்தது. புதிய பத்திரிகை ஆபீஸிலிருந்து உத்தரவு வந்துவிட்டது. யாருக்கு? மூர்த்திக்கல்ல; முத்துவை மாதம் எண்பது ரூபாய் சம்பளத்தில் சித்திரகாரராக நியமித் திருப்பதாகவும், மறுநாட் காலை முதற்கொண்டே வேலையில் வந்து சேரவேண்டும் என்றும் உத்தரவு!

கி. வா. பாலசுப்பிரமணியன்

பாசம் 34

அன்று கறுப்பனுக்குக் கோபம் தலைக்கேறி இருந்தது. அடுத்த நிலத்து முனியனின் வயல் மூன்றடி முன்னேறிவிட்டதே அவனுக் கிருந்த கோபத்திற்குக் காரணம். அவ்வூர் நாட்டாண்மைக்காரன் அவர்களை விலக்கியிராவிட்டால் அடிதடி முற்றியே இருக்கும்.

ருத்திர மூர்த்தியைப் போல் அவ்வளவு கோபத்துடன் வீட் டிற்கு வந்தான் கறுப்பன். உள்ளே அவன் மனைவி கறுப்பாயி சோறு சமைத்துக்கொண்டிருந்தாள். "கறுப்பாயி, சோறு ஆக்கி யாச்சா?" என்று கேட்டான் கறுப்பன்.

"கொஞ்சம் பொறுங்க. சோறு ஆயிக்கிட்டிருக்குது" என்றாள் கறுப்பாயி.

"என்ன? இன்னுமா ஆவலே? நான் வயலுக்குப் போவயி லேயே சோறுக்க ஆரம்பிச்சியே?"

"ஆயித்தானே ஆவணுங்க. அவசரப்பட்டா எப்படி முடி யுங்க?" என்று அடுப்பை ஊதிக்கொண்டே கூறினாள் கறுப்பாயி.

அன்று என்னவோ கறுப்பாயி என்ன செய்த போதிலும் அடுப்பு எரிவதாகக் காணவில்லை. வீடெங்கும் ஒரே புகை. கறுப் பனது கோபத்திற்கும் பசிக்கும் தூபம் போட்டதுபோல் இருந்தது அந்தப் புகை.

சிறிதுநேரம் பொறுத்துப் பார்த்தான் கறுப்பன். பசியை அவனால் தாங்க முடியவில்லை. "என்னா புள்ளே! சோறு ஆவுது ஆவுதூன்னு பொகையைக் கிளப்பிக் கண்ணே அவிய வைக்கிறே..." என்று ஏதாவது சொல்லிக்கொண்டே இருந்தான்.

கூடியவரையில் அவளும் அடுப்பை ஊதிப் பார்த்தாள். பற்றும் வழியாகக் காணவில்லை. கண்களில் எரிச்சல் வேறு. இதோடு அவன் கேள்விகளுக்கெல்லாம் பதில் வேறு. பார்த்தாள் அவள்: "நான் என்ன தேவேந்திர மவராசா குதிரைன்னு நெனச்சுக்கிட்டியா? அடுப்பு எரிஞ்சாத்தானே? இல்லேன்னா என்னே முறிச்சு அடுப்பிலே வச்சாத்தான் ஆவும்!" என்று ஒரே அடியாகக் கூறிவிட்டாள்.

இதைக்கேட்ட கறுப்பனது கோபம் அவனையும் மீறிவிட்டது. சமையலறைக்கு வெகு வேகமாய் ஓடினான்; அவள் காய்கறி நறுக்கிக்கொண்டிருந்த அரிவாள்மணையைப் பிடுங்கினான்; அவள் மீது வீசி எறிந்துவிட்டான்!

மறுகணம், "ஐயோ!" என்ற அலறலுடன் கீழே சாய்ந்தாள் கறுப்பாயி. அவள் தலையிலிருந்து ரத்தம் பெருகியது. அண்டை அயல் வீட்டார்கள் ஓடோடி வந்தார்கள். கறுப்பாயியின் மயக்கத்தையும், அவள் தலையிலிருந்து வரும் ரத்தத்தையும் பார்த்தார்கள். "அட பாவி மனுசா! ஒரு பொம்பிளையை இப்படியா அடிக்கிறது!" என்றார்கள். கறுப்பனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பேந்தப் பேந்த விழித்தான்.

சற்று நேரத்தில் போலீஸ் படையினரும் டாக்டரும் வந்து விட்டனர். கறுப்பன் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்லப்பட்டான். கறுப்பாயி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்.

மாலை மணி ஐந்து இருக்கும். கறுப்பாயிக்குச் சிறிது சிறிதாக மயக்கம் தெளிந்தது. ஞாபகசக்தி உண்டாயிற்று. உடனே எழுந்தாள்; யாரையோ தேடுவதுபோல் சுற்றுமுற்றும் பார்த்தாள். பக்கத்திலிருந்த நர்ஸுகள், "என்னம்மா? யாரையம்மா தேடுகிறாய்?" என்றார்கள்.

"எங்கே அவுங்க?" என்றாள் மெல்லிய குரலில்.

"யாரம்மா 'அவுங்க'?" என்று மறுபடியும் கேட்டார்கள்.

"அவுங்கதான்; என் ஓட்டுக்காரருங்க. அவுங்க எங்கே போயிருக்காங்க?" என்றாள்.

"யாரு, உன்னை அடிச்ச அந்தப் பாவியையா கேட்கிறாய்? அந்தக் குடிகாரன் இத்தனை நாழி விலங்கோடு ஜெயிலிலேதான் இருப்பான்."

"என்ன சொன்னீங்க? ஜெயில்லீங்களா! ஹா!" மறுபடியும் மூர்ச்சை.

*

இதற்குள் பெரிய டாக்டர் வந்துவிட்டார். நடந்த விஷயத்தை அறிந்துகொண்டார். என்ன செய்யவேண்டுமென்பதையும் அறிந்துகொண்டார். உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு ஏதோ கடிதம் எழுதிக்கொடுத்தார்.

* * * * *

கறுப்பனின் கோபம் சிறிது சிறிதாக அகன்றதும் தான் கறுப்பாயிக்குச் செய்த காரியத்தை நினைத்து நினைத்து வருந்தினான். சிறு குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுதான். அவள் இத்தனை நேரம் என்ன ஆனாளோ என்று எண்ணினான். அவனையும் அறியாமல் அவனுக்கு அவள்மேல் பாசம் ஏற்பட்டது. எப்படியாவது அவளைச் சந்தித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டாலொழிய அவள் முகத்தில் விழிக்கக்கூடத் தகுதியில் லாதவன் ஆவோம் என்று எண்ணியவாறே இருந்தான்.

சிறிது நேரத்தில் இரு போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அவனிடம் வந்தார்கள். அவனை அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றார்கள். கறுப்பன் மனக் கவலையுடனும் ஆவலுடனும் ஓடோடி வந்தான். அவன் கறுப்பாயிமுன் நிறுத்தப் பட்டான்.

"கறுப்பாயி!" என்று அவளை அணைந்தவாறே அவள் தலையையும் முகத்தையும் தடவிக்கொடுத்தான்.

கறுப்பாயி மெதுவாகக் கண்விழித்தாள். முன்னால் நிற்கும் உருவத்தைப் பார்த்தாள். அவளுடைய மயக்கமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்தது.

"நீங்களா!" என்றாள் வியப்புடன்.

"ஆமாம், கறுப்பாயி! நான்தான்; உன்னை அடிச்ச பாவியே தான்! என்னை நீ மன்னிச்சுக்குவாயா கறுப்பாயி?" என்றான் கெஞ்சுந் தொனியில்.

"என்ன! நீங்களா! உங்களையா! நான் மன்னிப்பது! நீங்க என்ன சொல்றீங்க? அருவாமணையை மேலே மாட்டும்போது தவறி எம்மேலே விழுந்துடுச்சு. அதுக்கு நான் ஏன் உங்களை மன்னிச்சுக் கணும்?" என்றாள்.

தன்னைத் தப்புவிக்கப் பார்க்கிறாள் என்பதைக் கறுப்பன் அறிந்துகொண்டான். தான் செய்த காரியத்திற்குத் தகுந்த தண்டனை அடைந்தாலொழிய அவள் மன்னிப்பைப் பெற்றதாக ஆகாதென்றே எண்ணினான். உடனே, "இல்லே கறுப்பாயி! பொய் சொல்லாதே; உண்மையை மறைச்சுடப் பார்க்காதே. நான்தானே கோபத்தில் வேணும்னு உம்மேலே எறிஞ்சேன்? அதனாலேதான் அத்தா பெரிய காயம் பட்டுச்சு. நான் பாவி! குத்தம் பண்ணினவன் நானேதான்!" என்று மடமட வென்று உண்மையைக் கூறிவிட்டான்.

போலீஸ்காரர்களால் அவனுக்கு விலங்கு பூட்டப்பட்டது.

"கறுப்பாயி, நீ மன்னிக்காவிட்டாலும் நான்....." என்று சொல்லிக்கொண்டே கறுப்பன் ஒரு பெரிய காரியத்தைச் சாதித்த வனைப்போல் பெருமிதத்துடன் கறுப்பாயியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே விலங்குடன் சென்றான். அதனால் அவன் மனத்திலுள்ள பாரம் சற்றுக் குறைந்தாற்போல் தோன்றிற்று அவனுக்கு.

எம். என். எம். பாவலர்

நச்சுப் பல் 35

"என் உசிரு இந்த உடலிலே இருக்கும்வரை நீ அந்தப் பயலோடு பேசப்படாது. அவனை மனசாலே நினைக்கவும் கூடாது. மீறினே, பெத்தபொண்ணுன்னு கூடப்பார்க்காமல் இந்தக்கொடுவாளாலே உன் தலையைச் சீவிப்போடுவேன். அம்பலகாரனுக்குப் பொண்ணுப்பொறந்தும் கொஞ்சங்கூட ரோசமில்லையா உனக்கு? ஜாக்கிரதை. போ. வீட்டு வேலையைப் பாரு. இன்னொரு தரம் அவன் என் கண்ணிலே படட்டும், சொல்றேன்" என்று கர்ஜித்தான் முத்துச்சாமி அம்பலம்.

செல்லம்மா முத்துச்சாமி அம்பலத்துக்கு ஒரே பெண். செல்லம்மாவுக்கு முன்வாரிசு ஒருவரும் இல்லை. அதுபோல்வே பின் வாரிசும் இல்லை. அவளை ஆணுக்கு ஆணுகவும் பெண்ணுக்குப் பெண்ணுகவும் வளர்த்து வந்தார்கள். முத்துச்சாமியும் அவன் மனைவியும் அதற்கு அடையாள மாகச் செல்லம் என்று பெயரிட்டார்கள். என்ன செல்வ மாய் வளர்த்தாலும் தன் மன அபிப்பிராயத்திற்கு விரோத மாக ஓர் ஆண் மகனுடன் செல்லம்மா பேசுவது தப்பிதமாகப் பட்டது முத்துச்சாமிக்கு. ஆனால் செல்லம்மாவுக்கும் அவளுடைய தாய்க்கும் அது பிசகாகத் தெரியவில்லை. முத்துச்சாமி போகிற போக்கு அவர்களுக்குப் பிடிக்கவில்லை. என்றாலும் அவர்களால் என்ன செய்ய முடியும்?

முத்துச்சாமி அம்பலத்தின் கோபத்தில் ஒரு பக்கம் நியாயமும் இருக்கிறது. அதே சமயத்தில் அநியாயமும் இருக்கிறது. செல்லம்மா ஓர் ஆண்மகனுடன் பேசினது குற்றந்தான் என்றாலும் அவன் வேறு யாருமல்ல. அவன் அவள் சொந்தக் கணவன் தானே? நாடறிய நகரறியத் தேவர் அறிய அஷ்ட திக்குப் பாலகரறிய, இரண்டு வருஷங்களுக்கு முன் தொட்டுத் தாலி கட்டியவன் தான். செல்லம்மா வேலாயுதத்திற்குக் கன்னிகாதானமாகக் கொடுக்கப்பட்டவள்தானே? இரண்டு வருஷத்திற்கு முன்பு கன்னிகாதானமாகக் கொடுத்த மகளை, கணவனுடன் பேசப்படாதென்று இன்று முத்துச்சாமி கட்டுத் திட்டம் செய்வதும், கழுத்தை அறுப்பேனென்பதும் கொடுமைதான்.

இவ்விதத் துஷ்டத்தனத்தில் வேலாயுதத்தின் குடும்பத்தினர் ஈடுபடுவார்கள் என்று முன்பே தெரிந்திருந்தால் முத்துச்சாமி பெண் கொடுத்திருப்பானு? அதிலும் ஒரே பெண். சொந்தப் புருஷனுடன் பேசவே கூடாது என்று கண்டிப்புச் செய்யும் அளவிற்கு வேலாயுதம் செய்த தவறு என்ன என்பதையும் நாம் ஆராயவேண்டுமல்லவா?

மேலப்பட்டியில் முத்துச்சாமி அம்பலம் நாட்டாண்மைக்காரன். ஐந்நூறு அம்பலகாரர்கள் தலைக்கட்டிற்கும் அவன் தான் அதிகாரஸ்தன். முத்துச்சாமி உட்காரு என்றால் உட்காருவார்கள்; எழுந்திரு என்றால் எழுந்திருப்பார்கள். தப்போ சரியோ முத்துச்சாமி அம்பலம் சொல்வதுதான் அவர்கட்கு வேதவாக்கு; சுருங்கக் கூறினால் முத்துச்சாமி சொன்னால் அழுத பிள்ளையும் வாய் மூடும்.

மேலப்பட்டிக்கு இரண்டு மைல் தூரத்தில் உள்ளது கீழ்ப்பட்டி. ராமாயண காலத்தில் இருபட்டிகளும் ஒரே ஊராக இருந்ததாகவும், சீதை ஸ்நானம் செய்வதற்காக ராமர், தமது வலது கால் பெருவிரலால் ஊருக்கு நடுவே ஒரு பெரிய ஏரியை உண்டாக்கினதாகவும், ஏரிக்குக் கீழ்புறம் இருப்பது கீழ்ப்பட்டியெனவும், ஏரிக்கு மேல்புறம் இருக்கும் ஊருக்கு மேலப்பட்டியெனவும் பெயர் ஏற்பட்டதாகவும் கர்ணபரம்பரையாகக் கூறி வருகிறார்கள். அந்த ஏரியின் தண்ணீர் சிறிது மஞ்சள் நிறமாக இருப்பதால் சீதாபிராட்டியார் மஞ்சள் குளித்து மூழ்கியதாகக் கூறி அவர்கள் தங்கள் கூற்றுக்கு ஆதாரம் காட்டுவார்கள். நான் மட்டும் தரையின் நிறம் நீரைச் சாரும் என்று நினைத்துப் போவேன். வெளியில் சொல்வதில்லை. சொன்னால் நம்பாமல் என்னையே முட்டாளாக்கி விடுவார்கள். ஏரித் தண்ணீர் உள்ள பூமியின் இயற்கை மஞ்சள். அதனால் வீடும் மஞ்சள் நிறந்தான் என்று பூமியைப் பெயர்த்துக் காட்டினாலும் சீதை குளித்தமஞ்சள் பூமியிலும் ஊறிப்போயிற்று என்றுதானே சாதிப்பார்கள் அவர்கள்?

ஏரிக்குக் கிழக்கே உள்ள கீழ்ப்பட்டியில் ஆறுமுகஞ் சேர்வை அவ்வூருக்கு அதிகாரஸ்தன். பரம்பரையாகவே அவ்வூர் நாட்டாண்மைக்காரன். முத்துச்சாமி அம்பலத்தைவிடச் சற்று அதிகமாகப் பூஸ்திதி உடையவன். இரு கிராமத் தலைவர்களும் உறவினர்களே. பந்துக்கள் கலந்து பேசி முத்துச்சாமி அம்பலத்தின் மகளை ஆறுமுகஞ்சேர்வை மகனுக்கு நல்ல முகூர்த்தத்தில் பாணிக்கிரகணம் செய்து கொடுத்தார்கள். அதன் பிறகு இரு குடும்பத்தினர்கட்கும் உறவு பலப்பட்டது.

இரண்டு பட்டியிலும் இரண்டு நாட்டாண்மைக்காரர்கள் இருப்பது போலவே, இரு மிராசுதாரர்களான ரெட்டியார்களும் இருக்கிறார்கள். மேலப்பட்டியில் இருப்பவர்கள் வேங்கடகிருஷ்ண ரெட்டியார். கீழ்ப்பட்டியிலிருக்கும் ரெட்டியாரின் பெயர், முத்து

கிருஷ்ண ரெட்டியார். இருவரும் தாயாதிகள். அவர்களுக்குள்ளே தாயாதிக் காய்ச்சல் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. முன்னோர்கள் எழுதிவைத்த உயிலைப் பற்றி ஒருவரை ஒருவர் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே யோசித்துவந்தனர். ஒரு ரெட்டியார் மற்றொரு ரெட்டியாரின் விவசாயிகளை ரகசியமாகச் சந்தித்துக் கோயில் திருவிழா அப்படிச் செய்தது சரியல்ல, இந்த வருஷம் தெருக்கூத்து ஏற்பாடு சரியல்ல, என்பது போன்ற தகராறுகளைக் கிளப்பிவிடுவார்கள். கீழ்ப்பட்டியில் நடப்பனவெல்லாம் மேலப்பட்டிக்காரர்களுக்குத் தகராறாகவும், மேலப்பட்டியில் நடப்பது எல்லாம் கீழ்ப்பட்டிக் காரர்கட்குக் குற்றமாகவுமே தெரியும். குடிபடைகட்கு அவ்வளவாகத் தெரியாவிட்டாலும் இரு மிராசுதாரர்கட்கும் அவசியம் தெரியும்.

இரு மிராசுதாரர்களும் பணமும் நிலபலமும் உடையவர்களேயன்றி, ஜனக்கட்டுப்பாடு உடையவர்கள் அல்ல. ஆவேசமும், வீரமும் பொருந்திய அம்பலகாரர்களும், சேர்வை வகுப்பினரும் உதவி செய்தாலொழிய ஒருவர் காரியமும் நிறைவேற வழியில்லை. மேலப்பட்டி ரெட்டியார் அம்பலகாரன் முத்துச்சாமியிடம், கீழ்ப்பட்டி ரெட்டியாரைப் பற்றி அடிக்கடி புகார் சொல்லி வருவார். கீழ்ப்பட்டி ரெட்டியார் மேலப்பட்டி ரெட்டியாரைப் பற்றிப் புகார் சொல்லிவருவார். வறுமையும், கல்வி அறிவின்மையும் உடைய அந்த இரு நாட்டாண்மைக்காரர்களோத் தங்கள் கையாட்களாகப்போட்டுக்கொண்டு ஒருவர் கொட்டத்தை மற்றவரால் அடக்கிவிடவேண்டுமென்பது அவர்களின் அந்தரங்க எண்ணம். ஆனால் அம்பலகாரனும் சேர்வைகாரனும் செல்வர்களல்லாவிடினும் சற்று முன்யோசனைக்காரர்கள். ஆதலால் அவர்களின் தாயாதிக்காய்ச்ச லென்ற சிக்கலுக்குள் தாங்கள் அகப்பட்டுக்கொள்ளக் கூடாதென்று சர்வ ஜாக்கிரதையாக இருந்தனர். எந்த ரெட்டியார் புகார் சொன்னாலும் பக்குவமாகப் பேசிக் காலந் தள்ளி வந்தனர்.

வேலாயுதத்திற்கும் செல்லம்மாவிற்கும் கல்யாணம் வெகு சிறப்பாக நடந்தேறியதல்லவா? முத்துச்சாமி அம்பலம் தன் பெண்ணைக் கன்னிகாதானமாகக் கொடுத்தது மட்டுமல்லாமல் அம்பலகாரர் குடும்பத்தில் அதுவரையில் அப்பேர்ப்பட்ட கல்யாணம் நடைபெற்றதே இல்லை என்று அம்பலகாரர்கள் சரித்திரத்தில் எழுதிவைக்க வேண்டிய விதத்தில் நான்கு நாள் கல்யாணம் தடபுடலாக நடந்தேறியது. கல்யாணத்திற்கு நாலு நாட்கள் முன்னதாக வந்திருந்து ஒருவாரம் பின்னதாகச் சென்ற பந்து ஜனங்கள் அக்கல்யாணத்தின் சீர்வரிசைகளையும், சாப்பாட்டின் விமரிசைகளையும் கண்டு உண்டு சுவைத்து இதுவரை அப்பக்கத்தில் இதுபோன்ற கல்யாணத்தைக் கண்டதும் இல்லை, இனி மேலும் காணப்போவதும் இல்லை என்று வானளாவிப் புகழ்ந்து போனார்கள்.

ஆனல் முத்துச்சாமி அம்பலத்தின் மன நிலைமையை யார் அறி வார்கள்? தன் கையில் ரொக்கமாகச் சேமித்து வைத்திருந்தது போக ரூபாய் ஐயாயிரம் மேற்கொண்டு செலவாகி விட்டது. அதை அவசரக் கடனுக வாங்கித்தான் செலவிட்டான். வாங்கிய கடனை ஒன்றிரண்டு வருஷத்திற்குள் எப்படியும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியது என்று முடிவு செய்துவிட்டான். அம்பலகாரனுக்கு விவசாயத்தைத் தவிர வேறு வருமானம் இல்லை. செய்துவரும் விவசாயத்தின் கண்டுமுதல், வாய்தாவுக்கும் வரிக் கும் மற்றக் குடும்பச் செலவிற்குந்தான் சரிக்கட்டி வரும். மேற் கொண்டு வருமானம் வேண்டுமென்றால் கூடுதலான நிலங்கள் பயிர் செய்தல் வேண்டும். முப்போகமும் விளைவு காணும் பகுதி யாதலால், வேறு ஒருவரும் வாரத்திற்கோ குத்தகைக்கோ பயிரிட நிலம் விடமாட்டார்கள் என்பதும் முத்துச்சாமிக்குத் தெரியும். முத்துச்சாமி இவைகளைப் பலவாறு யோசித்துத் தனது ஊர்ப் பெரியதனக்காரரான வேங்கடகிருஷ்ண ரெட்டியாரிடம் வாரத் திற்குப் பயிரிடச் சில ஏக்கர் நிலங்களைக் கேட்கலாமென்ற முடிவிற்கு வந்தான்.

மறுதினம் அதிகாலை முத்துச்சாமி பிராசுதாரர் வீட்டை அடைந்தான். அவனைக் கண்ட பிராசுதாரர் வேங்கடகிருஷ்ண ரெட்டியார் வெகு மகிழ்ச்சி அடைந்து மனத்தில் பல எண்ணங் களைக் கற்பித்துக்கொண்டார். ஏதோ காரணுர்த்தமாகத்தான் அம்பலகாரன் தம்மிடம் வந்திருப்பான், இந்தச் சமயத்தை நன்கு உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற தந்திரக்கருத்துடன், "வாங்க வாங்க, உட்காருங்க.....அடே, யாரங்கே? வெத்தலை பாக்குக் கொண்டுவாடா.....நான் கூட...இன்றைக்கு உங்களைப் பார்க்கலாமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதற்குள் நீங்களே வந்துவிட்டீர்கள். என்ன சேதி? அடே அம்பல காரருக்கு மோர் கொண்டுவாடா..." என்று குள்ளநரி உபசாரம் செய்தார் ரெட்டியார்.

"உங்க கிட்டத்தான் ஒரு முக்கிய விஷயமாக வந்தேன். வாய் திறந்து கேட்க முடியவில்லை" என்றுன் முத்துச்சாமி.

"பரவாயில்லை. என்ன வேணும் கேளுங்கள். உங்களுக் கெல்லாம் உபகாரம் செய்யத்தானே நானிருக்கிறேன்?"

"ஒன்றும் இல்லை; இந்தக் கல்யாணம் செய்ததாலே கொஞ்சம் கடன் ஏற்பட்டிருக்கிறது."

"இதுதானே? எவ்வளவு என்று சொல்லுங்கள்; கொடுக் கிறேன். நீங்கள் ரசீதுகூட எழுதிக் கொடுக்கவேண்டாம். உங்கள் வாய்ச்சொல்லே ரிஜிஸ்தர் செய்த பத்திரந்தானே?"

"அதற்கில்லிங்கோ; பணம் ஒன்றும் தேவையில்லை. நாலு காணி நிலம் வாரத்திற்குப் பயிரிட விட்டால் அது கொண்டு ஒருவாறு சமாளித்துக்கொள்ளலாம்" என்றுன் அம்பலகாரன்.

ரெட்டியார் யோசனையில் ஆழ்ந்தார். நிலங்கள்தாம் அங்கே செல்வங் கொடுக்கும் சிந்தாமணி. இதுவரை ஒரு குழிநிலங்கூட ஒருவருக்கும் பயிரிட விட்டதில்லை. அப்படியிருக்க அம்பலகாரனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் சங்கடப்பட்டு கடைசியாக ஒரு முடிவிற்கு வந்து ஏரிகரையின் கீழ்புறம் உள்ள எட்டு ஏக்கர் நிலத்தை அம்பலகாரனுக்கு வாரக்குத்தைகைக்கு விட்டார். அம்பலகாரனும் ரெட்டியாரின் தாராளத் தன்மையைப் புகழ்ந்து குத்தகை ரசீது ஒன்று எழுதிக்கொடுத்துவிட்டு வீடு திரும்பினன்.

வேங்கட கிருஷ்ண ரெட்டியார் வலிய வந்த அம்பலகாரனை மடக்கிப்போட்டதைப் பற்றிப் பெருமகிழ்ச்சி அடைந்தார். இனித் தமது சொற்படி அம்பலகாரன் அடங்கி நடப்பதுடன் கீழ்ப்பட்டி முத்துகிருஷ்ண ரெட்டியாரையும் சமயம்பார்த்து அவனைக் கொண்டு அடக்கிப் போடலாம் என்று மனப்பால் குடித்தார்.

முத்துச்சாமி அம்பலம் குத்தகைக்குப் பெற்ற நிலத்தில் பயிரிட்டான். நெற்கதிர் தக்க காலத்தில் உரம் நீர் முதலியன செலுத்தி நன்கு கவனித்துப் பயிரிட்டதால் கதிர்கள் தாழை மலர் போலக் கிளம்பின. கழுத்தளவிருக்கையில், கோடையில் ஏற்பட்ட தண்ணீர்ப் பஞ்சத்தால் ஒருபகுதி சாவியாகிவிட்டது. அன்று நீர்பாய்ச்சாவிடில் பயிர்கள் முழுதும் சாவியாய்விடும் போலிருந்த நிலைமையைக் கண்டு அம்பலகாரன் மனம் பதறி ரெட்டியாரிடம் ஓடி யோசனை கேட்டான். ரெட்டியார் மிகவும் அனுசரணையாகப் பேசி ஏரிப் பலகையை எடுத்துத் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளும்படி சொன்னார். அன்றிரவு அம்பலகாரனுடைய ஆட்கள் ஏரியின் மேல்பக்கமுள்ள அடைப்புப் பலகையை எடுத்துவிட்டு நீர்பாய்ச்சிக் கொண்டிருந்தார்கள்.

அன்று ஏரியிலிருந்து தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளும் முறை கீழ்ப்பட்டி கிராமத்தாருடையது. அன்று கீழ்ப்பட்டி பிராசுதார் முத்துகிருஷ்ண ரெட்டியார் நிலங்களுக்கும் ஆறுமுகஞ் சேர்வையின் நிலங்களுக்கும் தண்ணீர் பாயவேண்டிய முறை. கோடைக் காலமாதலால் அவர்கட்கும் நீர்ப்பஞ்சமதிகமாக இருந்தது. ஏரியின் கீழ்புறம் ஏரிப் பலகையை எடுத்துவிட்டு நீர்பாய்ச்சிக்கொண்டிருந்தார்கள். நீர் பாயும் வாய்க்காலில் வழக்கம்போல் தண்ணீர் காணவில்லை. அரை வாய்க்கால்தான் போய்க்கொண்டிருந்தது. அந்த நிலையில் நீர் பாய்வதானால், நிலங்களுக்கு நீர் பாய்ச்சிக்கொள்ளவே முடியாது. மேட்டு நிலங்களுக்கு நீர் பாயவே இல்லை. சேர்வை ஆட்களுக்குக் காரணம் தெரியாமல் ஏரியைச் சுற்றி வந்தார்கள். மேல் புறம் பலகை எடுக்கப்பட்டு நீர்பாய்வதைக் கண்டு கோபமடைந்தார்கள். அன்று அவர்களுக்குத்தான் முறைத்தண்ணீர் வரவேண்டியது. வெகுநாளைய சுட்டுப்பாடு. இன்று நேற்று ஏற்பட்டதில்லை. அப்படியிருக்க முறை தவறிக் காரியம் செய்பவர்களைத் திட்டிக்கொண்டே பலகையை

அடைத்தார்கள். அம்பலகாரனுடைய ஆட்கள் அவர்களைத் தடுத்து இன்னும் ஒரு மணி நேரத்தில் மூடிவிடுவதாகக் கூறினார்கள். கீழ்ப்பட்டி ரெட்டியார் ஆட்களும், சேர்வைகாரனின் ஆட்களும் அதற்கு இணங்கவில்லை. வழக்கத்தை மீறி நடப்பது அயோக்கியத் தனம் என்று கண்டித்தார்கள். தங்கள் பயிர்கள் காய்ந்துபோகு மென்றும் விட்டுக்கொடுக்க முடியாதென்றும் கண்டிதம் பேசினார் கள். அம்பலகாரனுடைய ஆட்களுக்குத் தங்கள் பலாபலத்தில் ஆவேசம் வந்துவிட அவர்களும் வீரம்பேசி, "ஏரிக்கதவை அடைத் தால் அப்புறம் தெரியும் சேதி" என்று ஆரவாரித்தார்கள். சேர்வைகாரன் மகன் வேலாயுதம் (செல்லம்மாவின் கணவன்) ஒரு துள்ளுத் துள்ளி, "என்னடா சேதி தெரியும்?" என்று கூறிக் கொண்டே ஏரிப் பலகையை மூடினான். அவ்வளவுதான். இரு பக்கத்து ஆட்களும் மூர்க்கமாகச் சண்டையிட ஆரம்பித்தனர். கத்தி, கழி, மண்வெட்டி, கடப்பாரை முதலியவைகள் ஆயுதங்க ளாகப் பிரயோகிக்கப்பட்டன. வேலாயுதம் உட்பட நாற்பது பேருக்குப் பலத்த காயம். அம்பலகாரனுடைய ஆட்களுக்கும் நல்ல அடி. நல்ல காலமாக உயிர்ச்சேதம் இல்லை.

மறுதினம் போலீசார் ஸ்தலத்திற்கு வந்து பல நாட்களாக விசாரணை செய்தனர். தண்ணீர்ச் சண்டையினால் நேரிட்ட கலகம் என்று விசாரணையை முடிவு செய்து அம்பலகாரன் பக்கம் 60 பேர் மீதும், சேர்வைகாரன் ஆட்கள் நாற்பத் திரண்டுபேர் மீதும் வழக்குத் தொடுத்து, அமைதிக்குப் பங்கம் ஏற் படாமலிருக்க நன்னடைத்தை ஜாமீன் வாங்கிவிட்டார்கள். இரு பக்கத்திலும் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவாயின. இரண்டு மிராசுதாரர் ரெட்டியார்களும் கொஞ்சம் பணம் கொடுத்துதவினார்கள். வேங்கட கிருஷ்ண ரெட்டியார் அன்று போட்ட விதை நாளடைவில் குருத்துவிட்டு வளர ஆரம்பித்தது. அவர் எண்ணம் பலித்தது. இரண்டு ஊராருக்கும் அடிக்கடி சில்லறைச் சச்சரவுகள் நடந்துகொண்டே இருந்தன. வெகு பக்குவமாக நடந்துவந்த அம்பலகாரர்களும் சேர்வைகாரர் களும் பெருஞ் சச்சரவில் வந்து நிற்க வேண்டியதாயிற்று. காரணம், தாயாதிக் காய்ச்சல்தான்.

இந்தக் கலகம் நடைபெறும் சமயத்தில் செல்லம்மாள் தன் தாய் வீட்டிற்கு வந்திருந்தாள். கலகம் நடைபெற்றுத் தன் கணவன் காயமடைந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டான் என்று கேள்வியுற்ற செல்லத்தின் உடல் பதைபதைத்தது. தன் கணவனைப் பார்த்து வரவேண்டுமென்று தாயிடம் முறை யிட்டாள். செல்லம்மாளின் தாய் மகளின் மனத்தை நன்கு தெரிந்து கொண்டாள். பாம்பின்கால் பாம்பறியும் என்றபடி பெண்களின் மனநிலை பெண்களுக்குத்தானே தெரியும்? அதற்கு மேலாக மகள் நிலை தாய்க்குத் தெரியாதா?

வேலாயுதத்தை ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காக கொண்டு சென்ற மூன்றுவது தினம், அடிதடியைப்பற்றி வேங்கடகிருஷ்ண

ரெட்டியாரிடம் அம்பலகாரன் கலந்து பேசினான். "பணப் பலம் என்னிடம் இருக்கிறது. படைப்பலம் உம்மிடம் இருக்கிறது. கடைசிவரைக்கும் ஒரு கை பார்த்து விடுவோம்" என்று தூக்கி விட்டார் ரெட்டியார். அம்பலகாரன் அடியுண்ட சிங்கம்போல் விழுந்தான். சற்றுச் சிரமபரிகாரம் செய்துகொண்டான்.

"செல்லம்மாள் உங்களே ஒரு சேதி கேட்கச் சொன்னாள்" என்றாள் அம்பலகாரன் மனைவி மெதுவாக.

"என்ன?"

"ஆஸ்பத்திரியிலே இருக்கிற மருமகப்பிள்ளையைப் பார்த்து விட்டு வரணுமிங்கரு."

"என்ன! இன்னொருதரம் அவனே மருமகன்னு சொன்னே உன் நாக்கை அறுத்தெறிவேன். கொஞ்சங்கூட யோசிச்சுப் பார்க்காமே நம் ஆளுகளே அடிச்சுப்போட்டானும். அவனைப் போய்ப் பார்க்கணுமா? ஆடு பகை, குட்டி உறவு கொண்டாடுகிறதோ!"

"உங்கள் ஆளுகள்தான் நம்ம மருமகப்பிள்ளேன்னு ஓசிக்காமே அடிச்சுப்பிட்டானுக. செல்லம் ரெண்டு நாளாப் பச்சைத் தண்ணியைப் பல்லுலே ஊத்தலே. போய்ப் பார்க்காட்டி ஊருதான் என்ன சொல்லும்?"

"சொல்லும் ஊரு! ஊர் எப்படியுந்தான் சொல்லும். அப்பன் சண்டை முகத்திலே நிற்கிறான்; மக புருசனோடே கொஞ்சப் போயிட்டாள் என்றுகூட ஊர் சொல்லும். நீ பேசாமே வாயை மூடிக்கிட்டுப் போ."

"பச்சைக் கொளந்தை. உங்களுக்குள்ளே சண்டையானால் பச்சைக் கொளந்தை என்ன செய்யும்?"

"ஒண்ணும் செய்ய வாணும். உள்ளே இருந்தாப்போதும். இதோ பார் வேலாயி. அந்தப் பொண்ணாலேதான் இவ்வளவு சங்கடமும். கடனோ உடனோ பட்டுக் கன்னிகாதானம் செய்து கொடுத்ததால் தானே அவனுக்கு அவ்வளவு திமிரு வந்து ஆளைக் கூட்டிக்கிட்டுச் சண்டைக்கு வந்தான்? என்ன ஆனாலும் சரி. இந்த அம்பல காரனுக்குப் பொறந்த பொண்ணுக்கும் ரோசம் இருக்கணும். ரோசத்தை விட்டுப்போட்டு அவனைப் பார்த்துட்டு வரேன், ஒரு பேச்சுப் பேசிட்டு வரேன்னு, அவள் அத்தோடதான்; பாலை ஊத்தித் தலையை முழுகிட வேண்டியதுதான். அப்பன் வேணும்னு இங்கே இருக்கட்டும். அவன் வேணும்னு ஒரே அடியாப் போயிடட்டும். அப்புறம் என் உசிர் உள்ளவரைக்கும் இந்த வீட்டிலே அவள் காலடி எடுத்து வைக்கப்படாது. மாரியாத்தா சாட்சியாகச் சொல்றேன். போ உள்ளே பேசாமல்" என்று கடுகடுத்தான் அம்பலகாரன்.

கிராமவாசிகட்கு மாரியாத்தா சாட்சியாகச் சொல்லிவிட்டால் பிறகு அப்பீல் ஏது? வேலாயியினால் மேற்கொண்டு ஒன்றும் பேச முடியவில்லை. மறைந்து கேட்டுக்கொண்டிருந்த செல்லம்மாள்

முகத்தைத் துணியால் மூடித் தேம்பிக்கொண்டே போய் ஒரு மூலையில் முடங்கிக்கொண்டாள். அதன்பிறகு வேலாயுதம் ஆஸ்பத்திரியிலிருந்து சுகமாக வந்தான். வழக்கு நடந்து நன்னடத்தை ஜாமீனும் வாங்கப்பட்டது. ஏறக்குறைய ஒரு வருஷகாலம் சென்றுவிட்டது. பல பெரிய மனிதர்கள் மகளே மாமனார் வீட்டிற்கு அனுப்பி வைக்கும்படி மறைமுகமாகவும் நேர் முகமாகவும் சொல்லிப் பார்த்தார்கள். யார் என்ன சொன்னாலும் கிழவன், "என் உசிருள்ளவரைக்கும் அவனோடு செல்லம்மாள் பேசவே கூடாது" என்று கூறி ஒரே அடியாக அடித்துவிட்டான். கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்றபடி அம்பலகாரனுக்கு வயசு அதிகமானாலும் ரோஷம் குறையவில்லை. அம்பலகாரன் சற்று மறந்திருந்தாலும் ரெட்டியார் குத்திக்கொடுக்க மறந்துவிடுவாரா?

இதற்குப் பிறகு இன்னொரு விசேஷமும் நடைபெற்றது. வருஷந்தோறும் கீழ்ப்பட்டியில் மாரியம்மன் செடல் உற்சவம் கொண்டாடுவது வழக்கம். வேலாயுதந்தான் கரகம் எடுப்பான். மேலப்பட்டி ஏரிகரையில் பூசைபோடப்பட்டு கரகம் எடுக்க வேண்டும். அதற்கு முன்னர் அம்பலகாரனுக்குத் தாம்பூலம் வைத்து அழைத்துப்போய்க் கரகம் எடுக்கவேண்டும். இந்த வருஷம் இரு கிராமத்திற்கும் ஏற்பட்ட பகைமையினால் கீழ்ப்பட்டிக்காரர் அம்பலகாரனுக்குத் தாம்பூல மரியாதை செய்யாமல், தங்கள் ஊர்ப் பக்கமே கரகத்தை வைத்துப் பூசை செய்து காரியத்தை முடித்து விட்டார்கள். அம்பலகாரனுக்குச் செய்த அவமரியாதையை வேங்கிடகிருஷ்ண ரெட்டியார் அவனுக்கு அடிக்கடி சொல்வதற்கு மறந்துபோய்விடவில்லை. அம்பலகாரன் அடிக்கடி யோசனை கேட்க வேங்கடகிருஷ்ண ரெட்டியார் வீட்டிற்குப் போவான். அவர் சொன்னபடியெல்லாம் கேட்பான். கீழ்ப்பட்டி சேர்வைகாரனும் அவனுடைய மிராசுதாரரிடம் பெட்டிப்பாம்பானான். மிராசுதாரர்கள் எதிர்பார்த்ததும் அதுதானே?

செல்லம்மாளுக்குத் தன் புருஷனைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் அதிகம். பல தடவை கனவுகூடக் காண்பாள். வேலாயுதத்திற்கும் மனைவிமீது ஆசையில்லாமல் போகுமா? ஒன்றுக வாழ்ந்த பட்சிகளைப் பிரித்துத் தனித்தனிக் கூண்டில் அடைத்து வைத்ததுபோல் இருந்தது. கீழ்ப்பட்டியிலிருந்து மேலப்பட்டிக்குத் தயிர்கொண்டு வந்து விற்கும் ஒரு கிழவி மூலம் செல்லம்மாள் தன் கணவனைப்பற்றி விசாரிப்பதுடன் தன் நிலைமையை எடுத்துச் சொல்லியும் அனுப்பினாள். வேலாயுதமும் புத்திசாலி; மனைவியின் நிலை கண்டு வருத்தப்பட்டான். ஒரு பக்கம் தகப்பனார்; மறுபக்கம் கணவன். என்ன செய்வாள் அவள்? வேலாயுதத்திற்கு மறு கல்யாணம் செய்து வைப்பதாகச் சேர்வைகாரன் அடிக்கடி சொல்லுவான். வேலாயுதம் இன்னும் கொஞ்ச காலத்தில் எல்லாம் சரியாய்ப் போய்விடும் என்று தடுத்துவிடுவான்.

மனைவியைப் பார்க்க வேண்டுமென்று வேலாயுதத்திற்கு ஆவல் அதிகமாயிற்று. கிழவி மூலம் சொல்லியனுப்பி ஒருநாள்

இரவில் அம்பலகாரனின் வீட்டுத் தோட்டத்தில் செல்லம்மாளைச் சந்தித்தான். சிறையிலிருந்து விடுதலை பெற்றதைப்போல் இருவரும் ஒருவரை யொருவர் கண்டு களிப்புற்றனர். காதோடு காதாய்ப் பல விஷயங்களைப் பேசினார்கள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அம்பலகாரன் அவ்வூரி லுள்ள துரோபதையம்மன் கோவிலுக்குச் சென்று இரவு ஒன்பது மணிக்குத்தான் வீடு திரும்புவான். அந்தச் சமயத்தில்தான் அந்தக் காதலர்கள் முள்வேலிக்குப் புறம்பே சந்தித்துப் பேசுவது வழக்கம். இந்த விஷயம் மெதுவாக ரெட்டியார் காதிற்கு எட்டியது. எப்படி எட்டிற்று என்று மட்டும் தெரியவில்லை. அவர் அம்பலகாரன் காதில் பக்குவமாகச் சொன்னார். அம்பல காரன் குடும்பத்தையும் சேர்வைகாரன் குடும்பத்தையும் ஒன்று சேரவிடாமலிருப்பதுதானே பிராசுதாரர் நோக்கம்? அம்பல கார முத்துச்சாமி இதனை முதலில் நம்பாவிட்டாலும் அடிக்கடி ரெட்டியார் சொன்னதன் பேரில் ஒரு வெள்ளிக்கிழமை தானே மோசூல் வைத்தான். அந்த இளம் தம்பதிகள் இச்சூதை அறியாமல் சந்தித்தனர். அம்பலகாரன் தன் கண்களால் இருவரையும் பார்த் தான். அவர்கள் அளவளாவிப் பேசுவதைக்கண்டு, அப்படியா சேதியென்று ஒரு பாய்ச்சலாகப் பாய்ந்தான், வேலாயுதத்தின் பேரில். அடுத்த க்ஷணம் ஆறடி உயரமுள்ள வேலியை வேலாயுதம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடிவிட்டான். எதிர்த்துப் பேசி அவன் தனது உரிமையை நிலை நாட்டலாம். இவைகளெல்லாம் அவன் மனத்துக்கு அச்சமயம் தோன்றவில்லை. தங்கள் கௌரவம் என்ற ஒன்றைமட்டும் நினைத்தான்.

செல்லம்மாள் விழுந்தடித்துக்கொண்டு வீட்டுக்குள் ஓடினாள். அம்பலகாரனும் உள் நுழைந்து ஓர் அரிவாளை எடுத்து உயரப் பிடித்தபடி பலவாறு செல்லம்மாளைக் கண்டித்து முடிவில், "உசிரு இந்த உடலிலே இருக்கும்வரை நீ அந்தப் பயலோடு பேசப்படாது. அவனை மனசாலேயும் நினைக்கவும் கூடாது. மீறினே, பெத்த பொண்ணுன்னும் பார்க்காமே இந்தக் கொடுவாளாலே உன் தலையைச் சீவிப்போடுவேன். அம்பலகாரனுக்குப் பொண்ணைப் பிறந்தும் கொஞ்சங்கூட ரோசமில்லையா உனக்கு? போ, வீட்டு வேலையைப் பாரு. இன்னொரு தரம் அவன் என் கண்ணிலே படட்டும் சொல்றேன்" என்று கர்ஜித்தான்.

செல்லம்மாள் அம்பலகாரன் தெரிவித்த விஷயத்தைத் தயிர்க்காரியிடம் தெரிவித்து வேலாயுதத்தைத் தன் தகப்பனார் கண்ணில் படாமல் இருக்கும்படி சொல்லி அனுப்பி விட்டாள். வேலாயுதத்திற்கு வீண் ரகளை செய்துகொள்வ தற்குச் செல்லம்மாளுக்கு இஷ்டம் இல்லை.

தம்பதிகள் ஒருவரை ஒருவர் நினைந்து நினைந்து ஏக்கப்படுவது தவிர வேறு வழியில்லாதிருந்தனர். காதலர்கள் வீட்டை விட்டு ஓடுவது என்ற உபாயத்தை அவர்கள் கேள்விப்பட்டவர்களே. இருப்பினும் குடும்பப் பெயர் கெட்டுப்போய்விடுமே என்று

அஞ்சினார்கள். இந்த இளங்காதலர்களின் உள்ளம் தவிப்பதற்குக் காரணம் அம்பலகாரன்தான் என்று ஊரில் பலர் கூறினார்கள். இவ்வளவு தீங்கிற்கும் காரணம் ரெட்டியார்களே என்று வேலாயுதம் சொல்லுவான். ரெட்டியார்கள் மனமாச்சரியமும் பகைமையும் வேலாயுதத்தின் குடும்ப வாழ்விற்குக் கெடுதலாக வந்து முடிந்தன.

மேலும் சில மாதங்கள் சென்றன. ஒரு வளர்பிறையில் அம்பலகாரனுக்கு இருமல் நோய் லேசாகக் கண்டது. அதோடு அது வளர்பிறை மதிபோல வளர்ந்தது. பதினைந்து நாட்களுக்குள் இருமல் கிழவனைப் படுக்கையிலேயே படுக்கவைத்து விட்டது. இரவில் கிழவனது நோயைப்போக்க நாட்டு வைத்தியர்கள் மந்திரவாதிகள் பூசாரிகள் முதலியவர்கள் தங்கள் கைவரிசைகளைக் காட்டினார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசையின் பேரில் கிழவனுக்குச் சீக்கிரமாகக் கபங் கட்டிவிட்டது. பெரு மூச்சுப் புறப்பட்டுவிட்டது. சொட்டுத் தண்ணீரும் உள்ளுக்கு இறங்க வில்லை. ஸ்மரணை பெரும் பகுதி இல்லை. அந்திய கால சிகிச்சையான துளசித் தீர்த்தத்தைச் சொட்டுச் சொட்டாக நாவில் வார்த்தார்கள். ஓர் ஆண்டியைப் பிடித்துவந்து திருவாசகம் படிக்கச் சொன்னார்கள். அம்பலகாரனின் வீரக்களை பொருந்திய முகம் சுருக்கம் கொடுத்தது.

ஒரு நாள் மாலை கிழவன் தன் ஒரே மகளை அழைத்துக் கன்னத்தோடு கன்னம் வைத்துக்கொண்டு விம்மினான். அவனுடைய இரு கடைக்கண்களிலிருந்தும் கண்ணீர் நீரூற்றுப் போல ஓடிக்கொண்டிருந்தது. என்னவோ சொல்ல வாயசைத்தான். உதடுகள் அசைந்தனவேயன்றி வாயைத் திறக்க முடியவில்லை. கைகளை மெதுவாகத் தூக்கி விரல்களால் ஜாடை காட்டினான். ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால் செல்லம்மாளுக்கு மட்டும் தெரிந்தது கிழவனின் குறிப்புகள். "மகளே, உன் வாழ்க்கையை வீணுக்கிய பாவியாகிய எனக்கு அந்திய காலம் நெருங்கி விட்டது. இளந்தளிரைக் கிள்ளியெறிந்தேன். என்னை மன்னிப்பாயா?" என்று கெஞ்சி அழுகிறான் அந்தக் கிழவன். மகள் ஒன்றும் சொல்லமுடியாமல் தேம்பிக்கொண்டிருந்தாள்.

இருந்தாற் போலிருந்து மாமனார் மரணவஸ்தையில் இருப்பதைச் சிலர் சொல்லக் கேட்ட வேலாயுதத்தின் மனம் துடிதுடித்தது. ஆனால் கிழவன் சொன்ன சபதம் குறுக்கே நின்று தடுத்தது. இருப்பினும் சாகுந் தறுவாயிலாவது சென்று கிழவனது மன்னிப்பையும், ஆசீர்வாதத்தையும் அடையலாமென்று எண்ணி ஒரே ஆவேசத்துடன் அம்பலகாரன் வீடு தேடி ஓடி வந்தான். வேண்டாமென்று பலர் தடுத்தும் பலனில்லை. பாசம் என்ற ஜீவசக்தி மற்ற விஷயங்களை மறக்கச் செய்தது. இங்கு நீண்ட நேரம் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான் கிழவன். மகள் தனது புடைவையின் முன்றானையால் கிழவனது கண்ணீரைத்

துடைத்துக்கொண்டு விசனப்பட்டுக் கொண்டிருந்தாள். கிழவன் தலையைத் தூக்கி முக்கி முனகி, "செல்லம்மா" என்றான், ஒருவித மான ஆவேசத்தோடு. "அப்பா!" என்று நெருங்கினாள் செல்லம் மாள். ஆனால் பிரயோசனம் இல்லை. கிழவன் அழைத்த அந்தக் கடைசி வார்த்தையின் மூலமே அவனது உடலில் வெகுநாட்களாக ஊசலாடிக்கொண்டிருந்த நூலிழைபோன்ற உயிரும் போய் விட்டது.

பலர் தடுத்தும் கேளாமல் மாமனுரைப் பார்க்க ஆவலாக ஓடிவந்த வேலாயுதம் வீட்டுக்குள் நுழைவதற்கும் அம்பல காரனின் உயிர் போவதற்கும் சரியாக இருந்தது. வீட்டுக் குள் நுழைந்து மாமனுர்மீது புரண்டு புரண்டு அழுதான் வேலாயுதம். தான் வெகு ஆவலுடன் ஓடிவந்தும் கிழவனின் உயிர்போய் விட்டதே யென்றும், அம்பலகாரக் கிழவனின் நச்சுப் பல் வார்த்தை உண்மையில் பலித்துவிட்டதே என்றும் வேலாயுதம் வெகுவாகப் பிரலாபித்து, உயிர் போனலும் வீரம் பொருந்தி யிருக்கும் அவனது முகத்தைக் கண்டு பயந்து அஞ்சலி செய்து நின்றான்.

"பூச்சி"

மறுமலர்ச்சி 36

1

சென்னைக் கடற்கரை, எலியட்ஸ் ரோட் கட்டம். மணலில் ஒரு மாணவன் உட்கார்ந்திருந்தான். அவனைப் பார்க்கும்போதே யாரையோ எதிர்பார்ப்பவன்போல் காணப்பட்டான். இன்னும் சற்று நன்றாய்க் கவனித்தால் யாருக்காக அங்கே உட்கார்ந்திருக் கிறான் என்று புரிந்துகொள்ளலாம். அவன் கண்கள் அடிக்கடி சற்றுத் தூரத்தில் உட்கார்ந்திருந்த மாணவிகள் கூட்டம் ஒன்றையே நோக்கிக் கொண்டிருந்தன. அதிலும் அவர்களிடையே இருந்த ஒருத்தியின் பேரில்தான் அதிகம் தங்கின. அந்த ஒருத்தி மிகவும் அழகு என்று சொல்ல முடியாது; சாதாரணந்தான். அவள் முக வெட்டும், அதிலிருந்த கனிவும், சிரிக்கும் கண்களும் யார் உள்ளத்தையும் கவர்ந்துவிடும். அவளும் அவனை ஒரு முறை திரும்பிப் பார்த்தாள்; தன்னைத்தான் கவனிக்கிறான் என்று தெரிந்ததும் அவன் பக்கமே திரும்பவில்லை. ஆனால் அவள் கண்கள் மட்டும் கள்ளத்தனமாக அவன் இருக்கும் பக்கமே அடிக்கடி பார்க்கத் தலைப்பட்டன.

இம்மாதிரி எத்தனையோ நாட்கள் சென்றன. ஆனால் அவை யனைத்தும் பயனற்றுக் கழியவில்லை. அவன் அவளைப்பற்றி அநேக தகவல்கள் தெரிந்து கொண்டான். அவளிடம் ஒரு முறைகூடப் பேசாமலேயே இருந்தபோதிலும், அவள் எங்கே

என்ன படிக்கிறாள் என்றெல்லாம் பல விஷயங்கள் தெரிந்து கொண்டான்; அவள் பெயரையும் கூடத்தான். மாலதி என்பது அவளுக்கேற்ற அழகான பெயர்தான் என்பது அவன் எண்ணம். அவன் காதல் வளர்ந்துகொண்டே வந்தது.

வாழ்க்கையில் காதல் ஒன்றுதானே? பரீட்சை வந்தது. என்ன தான் செல்லப்பிள்ளையா யிருந்தாலும் அவ்வளவு பணம் கொட்டித் தகப்பனார் தனக்குச் செய்வதற்குப் பிரதியாகத் தான் ஏதாவது செய்ய வேண்டாமா? படித்துத் தான் சாதிக்கப் போவது ஒன்றும் இல்லை. இருந்தாலும் படிப்பதை ஒழுங்காகப் படிக்க வேண்டுமென்பது மூர்த்தியின் கொள்கை. அவன் சுபாவத்திலேயே புத்திசாலி. அதனுடன் பரீட்சையில் நன்றாகத் தேற வேண்டுமென்ற அவா உண்டு. அந்த மும்முரத்தில் தன் காதலைக் கொஞ்சம் மறந்திருந்தான்.

2

பரீட்சை யெல்லாம் தீர்ந்தது. சுமை இறக்கிய பாவனையில் இருந்தது அவனுடைய மனோ பாவம்.

இத்தனை நாட்களாக எங்கோ புதைந்து கிடந்த எண்ணங்கள் எல்லாம் ஆயிரம் பங்கு வேகத்துடன் திரும்பி வந்தன. அவளைப் பற்றிய எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி அவன் மனத்தைத் நிறை அடித்துவிட்டன. அன்று எப்படியாவது அவளைக் கண்டு பேச வேண்டும், பிறர் என்ன நினைத்துக் கொண்டாலும் பரவாயில்லை என்று ஒரு வேகம் பிறந்தது. வழக்கமாகப் பரீட்சை முடிவடைந்த தினமே ஊருக்குப் புறப்படுபவன் ஒரு வாரம் கழித்து வருவதாக எழுதிப் போட்டுவிட்டான்.

மணி ஐந்தரை ஆகிவிட்டது. 'மெரினா'வில் வெகு அவசரமாக நடந்து கொண்டிருந்தான். அவள் வந்திருப்பாள், எப்படி அணுகுவது, பின் எப்படிப் பேசுவது என்ற யோசனையில் அவன் மனம் ஆழ்ந்திருந்தது. தன் எண்ணங்களிடையே திக்குமுக்காடினான். எப்படியோ வழக்கமாக அவன் உட்காரும் இடத்திற்கு வந்தான்.

அவள் வந்திருந்தாள்! அதுவும், அவன் அதிருஷ்டம், தனியாக உட்கார்ந்திருந்தாள், யாரையோ எதிர் பார்ப்பதுபோல். அவன் வருவதைக் கண்டதும் ஒரு முறை நிமிர்ந்து பார்த்து விட்டுத் தலையைக் குனிந்துகொண்டாள். பிறகு ஆகாயத்தில் முளைக்காத ஒரு நட்சத்திரத்தைத் தேடிக்கொண்டிருந்தன அவள் கண்கள்.

அவளைக் கண்டவுடன் மூர்த்தி அப்படியே நின்றுவிட்டான். அவன் மனக் குழப்பம் அதிகமாகி விட்டது. முகம் சிவந்தது. இன்னது செய்வது என்று புரியவில்லை. அங்கேயே உட்கார்ந்து விட்டான். பின்னாலேயே வந்துகொண்டிருந்தான் மற்றொரு மாணவன். அருகில் வந்ததும் தோள் மேல் கை வைக்கவே,

திடுக்கிட்டுத் திரும்பினான். "நான்தான், பயப்படாதே!" என்றான் வந்தவன்.

"என்னடா ஜகந்நாதா, கேலி செய்கிறாய்? நான் யாரோ என்று நினைத்தேன். எங்கே இப்படி?"

"உன்னைப் பார்க்கலாம் என்றுதான் வந்தேன்" என்றான் ஜகந்நாதன். அவன் முகத்தில் ஒரு குறும்புச் சிரிப்புத் தோன்றி மறைந்தது. ஜகந்நாதன் எப்பொழுதுமே கொஞ்சம் விஷமத்தில் பிரியமுள்ளவன். ஏதாவது செய்து பிறரை எக்கச்சக்கத்தில் கொண்டு விட்டுவிடுவான்.

"என்னப்பா, உன்னைப்பற்றி ஹாஸ்டலில் ஒரு மாதிரி பேசிக் கொள்கிறார்களே?"

"என்ன மாதிரி?" – மூர்த்திக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"இதுகூடத் தெரியாதா? நீ எதற்காக இங்கே தினம் வந்து கொண்டிருந்தாய், எதற்காக இன்று வந்திருக்கிறாய் என்று கூட அவர்களுக்குத் தெரியாதென்று நினைத்தாயோ? அவர்கள் பேச்சுக் கிடக்கட்டும். அது பிரயோசனமற்றது என்று உனக்குத் தெரியுமோ?"

"என்ன?"

"சொல்கிறேன், கேள்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, பின்னாலிருந்து யாரோ, "மாலதி!" என்று கூப்பிடுவது கேட்டது.

அதைக் கேட்டதுமே அவள் நிஷ்டை கலைந்து எழுந்தாள். விரைந்து அவர்களைக் கடந்து சென்றாள். மூர்த்தியின் விழிகள் அவளை அப்படியே விழுங்கி விடுவன போல் இருந்தன. மாலதி அங்கு நின்றுகொண்டிருந்த சற்று வயசான மனிதர் ஒருவருடன் போய்ச் சேர்ந்து கொண்டாள். இருவருமாக நடக்கத் தலைப் பட்டனர்.

இதையெல்லாம் கவனித்தான் ஜகந்நாதன்.

"டேய், பார்த்தாயா? மாலதி போகிறாள்" என்றான் ஒன்றும் அறியாதவன்போல்.

"போகட்டுமே" என்றான் மூர்த்தி அசிரத்தையாக.

"அதைத்தான் சொன்னேன். அவள் போய்விட்டாள், உன் வாழ்க்கையிலிருந்தே! தெரியுமா?"

"என்னடா உளறுகிறாய்?" என்றான் மூர்த்தி சற்றுக் கோபத்துடன்.

"நான் ஒன்றும் உளறவில்லை."

"பின் என்ன அர்த்தம்?"

"இதுகூடப் புரியவில்லையா? அவளுக்குக் கல்யாணமாகி விட்டது."

"என்ன, கதை விடுகிறாயா? நான் நம்பமாட்டேன்."

"அட பைத்தியமே! நிஜமாகத்தாண்டா."

"அப்படியானால் எனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே."

"நேற்று இன்று நடந்தாலல்லவோ தெரியும்? அது நடந்து ஐந்தாறு வருஷங்கள் இருக்கும். அதோ அவளுடன் போனாரே, அவரே அவள் கணவர்" என்று சொல்லி அவன் முகத்தைப் பார்த்தான். மூர்த்தியின் முகத்தில் இருந்து அதை அவன் நம்பிய தாகத் தெரியவில்லை. மெதுவாக, "இரண்டாம் தாரம்" என்றான்.

ஜகந்நாதன் முகத்தையும், அவன் சொன்ன தோரணையையும் பார்த்தால் ஒருவேளை அது நிஜமாக இருக்கலாமோ என்ற சந்தேகம் மூர்த்திக்குத் தோன்றியது. எப்படியோ அவனிடம் விடை பெற்றுக்கொண்டு மெதுவாக நடந்தான்.

3

அன்றிரவு முழுவதும் அவனுக்குத் தூக்கம் கொள்ளவில்லை. படுக்கையில் புரண்டு பலவாறு யோசித்துக்கொண் டிருந்தான். 'ஒருகால் அவள் நிஜமாக மணமானவளோ? அப்படியானால், சே! என்ன பாவம் செய்துவிட்டேன்! ஒருகால் அவள் என்னைக் கவனி யாமலே இருந்தாளோ இத்தனை நாளும்.....' இதை நினைத்ததும் ஒரு விநாடி அவன் மூச்சு நின்றுவிட்டது. அவள் தன்னைக் கவனி யாமலே இருந்திருப்பாள் என்று அவனால் நம்ப முடியவில்லை. 'ஒருவேளை.....ஜகந்நாதன்.....இருக்காது. அவன் இதில்கூடவா விளையாடுவான்?...சாப்பாடு, சினிமா என்றால் சரிதான்...இதில் கூடவா.....அவன் கூறியது பொய்யாயிருந்தால்...' அவன் முகம் சற்றே மலர்ந்தது. 'இதிலுமா பொய் சொல்லுவான்?' என்று அவன் மனம் திருந்தியது. இந்தச் சமயத்தில் அவன் மனக் கண் முன் அந்த வயசான மனிதரும் மாலதியும் நடந்து செல்லும் காட்சி தோன்றவே திடுக்கிட்டான். ஒரு வேளை ஜகந்நாதன் சொன்னது நிஜமாக இருந்தால்? நாழிகை ஆக ஆக, இந்தச் சந்தேகம் பலப்பட ஆரம்பித்தது. தூரத்தில் எங்கேயோ ஒரு கடிகாரம் மணி மூன்றடித்தது. அந்த நிசப்தத்தில் அவன் மனம் இருந்த நிலையில் அந்தச் சப்தங் கூட ஒரு தினுசாக இருந்தது. அவனை அறியாமலேயே தூங்க ஆரம்பித்தான்.

4

இதற்குமுன் எத்தனையோ தரம் அந்தக் கிராமத்துக்கு வந்திருக்கிறான். ஆனால் இப்பொழுது அது அவனுக்கு ஒரு புது வசீகரத்துடன் காணப்பட்டது. அங்கேதான் அவன் மனம் சிறிது சாந்தம் அடைந்தது.

அவன் மிகவும் சிரமப்பட்டு மாலதியை மறக்க முயன்றான். ஆனால் ஒவ்வொரு சமயம் அவள் ஞாபகம் தோன்றி

அவன் மனத்தைச் சஞ்சலப்படுத்தும். அவ்வெண்ணங்களை அடக்கி, பழைய சாரமற்ற அவ் வாழ்க்கையை மறக்க முயன்று வந்தான். எப்படியோ ஆறு மாதங்கள் ஆகிவிட்டன.

ஒரு நாள் மாலை தன் வீட்டுப் பையன் அதி வேகமாக ஓடி வருவதைக் கண்டான். மூர்த்தியைக் கண்டதும் அவன் இன்னும் வேகமாக ஓடி வந்தான். அவனை நிறுத்தி, "என்னப்பா விசேஷம்?" என்று கேட்டான். பையன் ஓடிவந்ததால் மூச்சுத் திணறிற்று; பேச முடியவில்லை. பையிலிருந்து ஒரு தந்திக் கவரை அவனிடம் நீட்டினான். அதைக் கண்டவுடனேயே அவனுக்கு ஒருவிதமான நடுக்கம் ஏற்பட்டது. "தந்தி வரப் பிரமேயம் ஏதும் இல்லையே! யாருக்குத் திடீரென்று அபாயம், அசௌகரியம் ஏற்பட்டிருக்க முடியும்? சே! இராது அப்பா ஏதாவது 'பெண் பார்த்திருக்கிறேன், வா' என்று தந்தி அடித்திருப்பார்." இதை நினைத்ததும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. "இல்லை. இருக்காது. நாம்தான் போன தரமே முடியாது என்று சொல்லி விட்டோமே. பின் வேறு எதுவா யிருக்கும்?....." அவன் மனத்தில் அநேக கேள்விகள் எழுந்தன. கவரைக் கையில் வாங்கியவன் சற்று நேரம் அப்படியே நின்றுவிட்டான். அவன் மனச் சாந்தி எல்லாம் எங்கோ மறைந்துவிட்டன. தூக்கத்தில் நடப்பவன்போல் நடந்து சென்றான்.

வீட்டிற்குச் சென்று கடிதத்தைப் பிரித்துதுந்தான் விளங்கிற்று. இருந்தாலும் அவன் மன நிலை சரியாயில்லை. "தகப்பனாருக்குத் திடீரென்று அப்படி என்ன நேரக்கூடும்? சென்ற வாரக் கடிதத்தில்கூட விசேஷமொன்றும் இல்லையே!" என்று அவன் ஒன்றும் புரியாமல் திகைத்தான்.

கடியாரத்தைப் பார்த்தான். மணி எட்டு. ஸ்டேஷன் இரண்டு மைல் தூரந்தான். வேகமாய் நடந்தால் அரை மணியில் போய்ச் சேரலாம்.

உடனே ஆவேசம் வந்தவனைப்போல் காரியம் செய்யலானான். முக்கியமான சில துணிமணிகளை மட்டும் எடுத்துக்கொண்டு ஸ்டேஷனை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

5

எப்படியோ மூன்று வாரங்கள் ஓடி மறைந்தன.

தகப்பனார் நிலை பரவாயில்லை. எமனுடன் போராடிக்கொண்டிருந்தவர் இப்பொழுது கொஞ்சம் தேறி நடக்கும் ஸ்திதியில் இருந்தார். ஒரு வழியாக மூச்சு விட்டான். இத்தனை நாட்களாக அவருக்குச் செய்துகொண்டிருந்த சுசுருஷையிலும், அவர் நிலையினால் ஏற்பட்ட கலவரத்திலும் மற்றெல்லாச் சிந்தனைகளுக்கும் இடமில்லாமல் இருந்தது. இப்பொழுது கலவரம் அடங்கியதும் பழைய நிலை வந்துவிட்டது. பழைய ஞாபகங்கள் இரட்டிப்பு வேகத்துடன் வீந்து அவன் மனத்தைத் தாக்க ஆரம்பித்தன.

வீட்டில் இருப்பவர்களும் அவனை இப்பொழுது நன்முகக் கவனிக்க ஆரம்பித்தார்கள். கவனித்துச் சும்மா இருந்தாலும் பரவாயில்லை. அவனைப்பற்றிப் பேசவும், கேள்விகள் கேட்கவும் தலைப்பட்டார்கள். ஏற்கனவே தனிமையை நாடிக்கொண்டிருந்த அவனுக்கு அவர்கள் பரிவு இன்னும் அசௌகரியத்தை அதிகப் படுத்தியது. இருந்தாலும் பொறுத்துவந்தான்.

தகப்பனுர் தேக நிலை சௌகரியமாகி அவர் முன்போல் நடக்க ஆரம்பித்தவுடன், மூர்த்தி தான் பட்டணம் போகப் போவ தாகவும், அங்கு ஏதாவது வேலை பார்க்கப் போவதாகவும் சொல்லிவிட்டுக் கிளம்பினன். அம்மா எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். "வேலை வெட்டி என்று ஓடுவானேன்? அவ்வளவு அவசியமா? வீட்டுடனேயே, ஏதோ கல்யாணம் கார்த் திகையென்று பண்ணிக்கொண்டு, இருப்பதை வைத்துக்கொண்டு சுகமாக இருக்கக் கூடாதோ? அந்த வெயிலிலும் புழுதியிலும் அலையாவிட்டால் மண்டை வெடித்துவிடுமா என்ன?" என் றெல்லாம் ஆயிரம் கேள்விகள் கேட்டாள். கொஞ்சநாள் கழித்து ஐ. சி. எஸ். ஸுக்குப் படிப்பதாக உத்தேசம் என்றும் அதற் காகவே போகப் போவதாகவும் அவன் சொன்ன உடனே அவள் மனம் கொஞ்சம் சமாதான மடைந்தது.

6

வாஸ்தவமாகவே அவனுக்கு அந்தப் படிப்பிலும் உத்தியோ கத்திலும் அவ்வளவு நம்பிக்கை இல்லை. அது தவிர அவன் கொள்கைகள் வேறு இருந்தன. ஆனல் பட்டணத்திற்கு வந்தால் அதற்குக் காரணம் சொல்லவேண்டுமே யென்று அந்த மாதிரி சொன்னுன். பட்டணத்திற்கும் வந்தாயிற்று. மேலே செய்வது என்ன? எதுவும் செய்வதற்குமுன் சிநேகிதர்களை யெல்லாம் ஒரு முறை பார்த்தான். அவர்களை யெல்லாம் பார்த்து விட்டு, சேவாக்கிராமம் போய் அங்கே ஆசிரமத்தில் கொஞ்சநாள் இருக் கலாம் என்பது அவன் உத்தேசம். அதற்குமுன் சிலரைப் பார்க்க வேண்டும். அவர்களைக் காணக்கூடிய இடமும் அவனுக்குத் தெரியும். நேரே பீச்சுக்குச் சென்றுன். வழக்கம்போல் மண லுக்குச் செல்லாமல் முன்னலுள்ள 'பெஞ்ச்' ஒன்றில் உட்கார்ந்துகொண்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவன் பக்கத்தில் ஒருவர் வந்து உட்கார்ந்தார். வயசு சுமார் ஐம்பது இருக்கும். ஆனல் பார்ப்ப தற்கு மிகக் குறைவாகவே மதிப்பிடத் தோன்றும்; அவ்வளவு இளமை பொருந்திய முகம். அவர் நடையுடை பாவனைகளும் அவர் வயசை வெளிப்படுத்தவில்லை. "ஆட்சேபம் ஒன்று மில்லையே?" என்று கேட்டுக்கொண்டே அவன் அருகில் உட்கார்ந்தார்.

மெதுவாகப் பேச்சு ஆரம்பித்தது. வெகுநாளைய நண்பர்கள் போல் இருவரும் பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். அவனுக்கு அவரை எங்கேயோ பார்த்தமாதிரி இருந்தது. எங்கே என்று ஞாபகம் வரவில்லை. அவர் கொஞ்சம் தாராளமாகவே பழகுபவ ராதலால் அவனைக் கண்டதுமே அவருக்குப் பிடித்துவிட்டது. அவரிடம் இருந்த ஏதோ ஒரு சக்தி அவனை அவர்பால் இழுத்தது. அவன் வந்த காரியங்களையும் மறந்து உலக வியவகாரங்கள், விஞ்ஞானம், தத்துவம் என்று பேசிக்கொண்டே இருந்தான். இதனிடையே அவரைப்பற்றிய சில தகவல்களையும் தெரிந்து கொண்டான். இருவரும் பரஸ்பரம் தகவல்களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

"அப்படியானால் நாளைக்கு ஊருக்குப் போகிறீர்களா?"

"ஆமாம், அப்படித்தான் உத்தேசம்."

"ரொம்ப முக்கியமான வேலையோ?"

"முக்கியம் ஒன்றுமில்லை. ஏதாவது உபயோகமாகப் பொழுது போக்கவேண்டாமா? அவ்வளவுதான்."

"ஆமாம், ஆமாம். செய்ய வேண்டியதுதான். அப்படியானால் நாளைக் காலையில் நான் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருப் பேன். என்னுடன் காபி அருந்திவிட்டு நேரே என் வீட்டி லிருந்து ஸ்டேஷனுக்குப் போகலாம். என்ன? ஏழு மணிக்குக் கட்டாயமாக வரவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே எழுந் தார். அவருடைய அழைப்பை மறுக்க இஷ்டமில்லாமல் ஒப்புக் கொண்டான்.

7

மறு நாள் மூர்த்தி சாமான்களை யெல்லாம் கட்டிக்கொண் டிருந்தபோது ஓர் ஆசாமி வந்தான்.

"நீங்கள்தானே மூர்த்தி?" என்று கேட்டான்.

"ஆமாம்."

"மாம்பலத்திலேயிருந்து ஐயா வண்டி அனுப்பிச்சாங்க. சாமான்களை எடுத்து வண்டியில் வைக்கட்டுமா?" என்றான்.

மூர்த்திக்குப் பதில் சொல்லவே தோன்றவில்லை. "ஏதடா, நாம் வேண்டாமென்றாலும் அவர் விடமாட்டார் போலிருக்கிறதே! சரி, என்ன முழுகிவிட்டது. போய்த்தான் வைப்போமே" என்று தோன்றியது; "சரி, எடுத்து வை" என்றான்.

மாம்பலத்தில் ஓர் அழகிய பங்களாவின்முன் கார் வந்து நின்றது. வாசலில் அவர் காத்துக்கொண் டிருந்தார். அவனைக் கண்டதும், "வரவேண்டும், உள்ளே வாருங்கள். டேய், சாமா னெல்லாம் வண்டியிலேயே இருக்கட்டும்" என்று சொல்லிக் கொண்டே மூர்த்தியை உள்ளே அழைத்துக்கொண்டு போனார். உட்கார்ந்ததும், "மாலதிகூட உங்களைப் பார்த்திருப்பதாகச் சொன்னாள்" என்றார்.

அவனுக்குத் திக்கென்றது. அப்பொழுதுதான் அவனுக்கு அவரை எங்கே பார்த்தோ மென்று ஞாபகம் வந்தது. அவன் முகம் வியர்த்தது. 'சாதாரணமாகத்தான் பேசினாரா? அல்லது தன்னைத் தெரிந்துகொண்டுதான் பேசினாரா? மாலதி அவரிடம் எவ்வளவு கூறியிருப்பாள்?' என்று அவனால் அறிய முடியவில்லை. 'ஏனடா இங்கே வந்தோம்' என்று ஆகிவிட்டது அந்த ஒரு நிமிஷத்தில். அவன் தயங்குவதைக் கண்டு, "ஏன், நீங்கள் கூட அவளைப் பார்த்திருக்கிறீர்களா? உங்கள் காலேஜுக்கு இரண்டு மூன்று தடவை வந்திருக்கிறாளே!" என்று அவர் ஏதோ சொல்லிக் கொண்டு போனார். அவன் ஒன்றும் பேசவேயில்லை. அப்போது உள்ளே யிருந்து இருவருக்கும் காபி எடுத்துக்கொண்டு வந்த பெண்ணைக் கண்டதும் மூர்த்தியால் தன் கண்களையே நம்ப முடிய வில்லை. எந்த உருவத்தை அவன் சதா தியானித்துக்கொண்டே யிருந்து, பிறகு அது சித்திக்காது என்று உணர்ந்து மறக்க முயன்று கொண்டிருந்தானோ அதே உருவம் அவன் கண்முன்னே நின்றுகொண்டிருந்தது. தன்னுடைய மனப் போக்கு வெளித் தெரியாமல் இருக்க முகத்தைப் பொத்திக்கொண்டான். அவர், "இதுதான் மிஸ்டர் மூர்த்தி...இவள் மாலதி; என் பெண்" என்றார்.

அந்தக் கடைசி வார்த்தைதான் மூர்த்தியை மலைக்கச் செய்தது. அவள் அவருடைய பெண்ணா? சரிதான்! அப்படியானால் இதுகாறும் அவன் பட்ட கஷ்டமெல்லாம் ஒரு தப்பெண்ணத் தாலா? அவன் மனம் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. யந்திரம்போல் சிரித்துக்கொண்டே, "நமஸ்காரம்" என்றான்.

அவளும் புன்னகையுடன், "நமஸ்காரம்" என்றாள்.

அவள் வார்த்தையைக் கேட்டவுடனேயே பிரக்ஞை வரப் பெற்றான். சட்டென்று என்னவென்று சொல்ல முடியாத ஓர் உணர்ச்சியினால் அவள் கழுத்தை நோக்கினான். அவன் செய்கை அவனுக்கே வெட்கமா யிருந்தது. இருந்தாலும் அவன் கண்கள் அவளையே நோக்கிக்கொண்டிருந்தன. கழுத்தில் ஒரு பொன் சங்கிலி மாத்திரம் இருப்பதைக் கண்டவுடன் அவன் மனத்தில் இருந்த பெரும் பாரம் நீங்கி, பெருமூச்சு விட்டான். பழைய மூர்த்தி யாகிவிட்டான்.

ஏதேதோ பேசிக்கொண் டிருந்தார்கள். "மணி ஆகி விட்டதே, ரயிலுக்குப் போகவேண்டாமா?" என்றார் அவர்.

"இல்லை. இன்று போக வேண்டாமென்று நிச்சயம் செய்து விட்டேன். சற்று முன்தான் ஞாபகம் வந்தது. ஜகந்நாதன் என்று என் நண்பன் ஒருவன் இருக்கிறான். அவனை முதலில் பார்க்க வேண்டும்" என்றான்.

"உனக்காக உயிர் வாழ்வேன்" 37

ஆறு, வாய்க்கால், குளம் எதுவும் அருகில் இல்லை என்றவுடன் கோடந்தூர் செழிப்பானதல்ல என்று நினைத்து விடக்கூடாது. நல்ல பள்ளத்தாக்கு. ஊரைச் சுற்றிலும் கிணற்றுத் தோட்டங்கள். ஒவ்வொரு தோட்டத்திலும் கிணற்றுப் பக்கத்தில் பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள். எனவே தூரத்துப் பார்வைக்கு அது பெரிய தென்னந் தோப்பின் நடுவில் அமைந்த ஒரு சிற்றூரைப் போல் இருக்கும். ஊருக்கு முன்புறத்தில் தோன்றும் மெத்தை வீடுதான் கோடந்தூர்ப் பெரிய பண்ணையம் முத்துசாமிக் கவுண்டருடையது. அவர்தாம் அவ்வூர் மணியக்காரர். வட கோடியில் இருக்கும் ஓட்டு வில்லை வீடு அவருடைய சிறிய தகப்பனார் குமாரர் செங்கோடருடையது. அவரைச் சின்னப்பண்ணையம் செங்கோடக் கவுண்டர் என்று சொல்லுவார்கள். இவை இரண்டையுந் தவிர மற்றவையெல்லாம் பனை ஓலையால் வேய்ந்த கூரை வீடுகள்.

பெரிய பண்ணையக்காரர் வீட்டிலிருந்து சுமார் நாற்பது கஜ தூரத்தில் விநாயகர் கோயில் இருக்கிறது. கோயிலுக்கு முன்னால் ஒரு பெரிய புளியந்தோப்பு. மரங்கள் ஒங்கி வளர்ந்து கிளைகளோடு கிளைகள் பின்னிக் கிடக்கின்றமையால், தோப்பில் இடையறாத நிழல் இருந்துகொண்டே இருக்கும். வெயில் வேளைக்குச் சிறுவர்கள் ஆடு மாடுகளை அதனடியிற் கிடத்திவிட்டு மரத்தில் ஏறிப் புளியம் பிஞ்சு பறிப்பார்கள். வீட்டில் அம்மாவுக்குத் தெரியாமல் எடுத்துவந்த உப்பு மிளகாயுடன் அதை வைத்துக் கொட்டி ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்கிட்டுத் தின்பார்கள். அங்கே கிடக்கும் பலகைக் கற்களில் அதற்கென்றே செய்த குழிகளும் கொட்டுவதற்குக் குண்டுக் கற்களும் அந்த ஊர் தோன்றின நாள்முதல் இருந்துவருகின்றன.

கோயிலில் எந்நேரமும் இரண்டொருவர் இல்லாமல் போக மாட்டார்கள். வேலை செய்யச் சக்தியற்றவர்களும், சோம்பேறிகளும் காலம் போக்குவதற்கு அதுதான் இடம். சிலர் கயிறு முதலியன திரித்துக்கொண்டு ஏதாவது கதையும் திரித்துக் கொண்டிருப்பார்கள். சிலர் புலிக்கட்டம் ஆடிக் கொண்டிருப்பார்கள். இன்னும் சிலர் அதைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நின்னைக் கற்களில் நாலைந்து புலிக்கட்டங்களாவது இருக்கும். அதுவும் கல்லிற் செதுக்கப்பட்டிருக்கும். மூலைகளிற் குவிக்கப்பட்டிருக்கும் சிறு கற்களும் ஓடுகளும் உடைந்து மழுங்கி யிருப்பதிலிருந்து அவை எவ்வளவு தூரம் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன என்பது விளங்கும்.

ஒருநாள் காலை, பொழுது வேலிக்கு மேல் வந்துவிட்டது. பெரிய பண்ணையம் முத்துசாமிக் கவுண்டர் சாப்பிட்டு விட்டுத் தமது மடிப்பையிலிருந்து வெற்றிலை பாக்கு எடுத்துப் போட்டுக் கொண்டு வீட்டிலிருந்து கிளம்பினார். ஊருக்கும் அவருடைய 'தொண்டுப்பட்டி'க்கும் (மாடு கட்டுமிடத்திற்கும்) இரண்டு பர்லாங்கு இருக்கும். அதை நோக்கி நடந்தார். அவருக்கு வயசு நாற்பத்தைந்து இருக்கும். நடுத்தரமான உயரமும் உயரத்திற்குத் தகுந்த பருமனும் உள்ளவர். இடுப்பில் பூங்காவி ஏறிய வேஷ்டி; காதில் ஓவ்வொன்றிலும் இரண்டு ஜோடிக் கடுக்கன்; கல் வைத்த வையல்ல; நீண்ட வட்ட வடிவமான சிறிய தங்க வளையங்கள். காலில் போட்டிருந்த செருப்பின் கனம் குறைந்தது கால் அடி இருக்கும். அவை ஓவ்வொன்றிலும் இரண்டு தோற் குஞ்சங்கள். இவை காலெடுத்து வைக்கும்போதெல்லாம் இப்படியும் அப்படியும் விழுந்து ஆடின. அப்பொழுதுதான் பூசின விபூதியானது நெற்றியில் துளிக்கும் வேர்வைநீரில் ஊறிக் கொண்டிருந்தது.

"யாரை வரும் பின்னே மணி யோசை வரும் முன்னே" என்பது போல் பண்ணையக்காரர் தொண்டுப்பட்டிக்கு இருபது கஜத்திற்கு இப்புறத்திலிருந்தே, "பழனீ, இன்னுமா தாளிக்குத் (மாட்டுக்குத் தண்ணீர் ஊற்றும் மண் தொட்டி) தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கிறாய்? தலை மறைந்ததும் உட்கார்ந்து கொள்வாயென்று எனக்குத் தெரியுமே" என்று கர்ஜித்துக் கொண்டே போனார். போனதும் அங்கு வேப்ப மரத்தடியிற் கட்டில் ஒன்றில் உட்கார்ந்து, "தாளிக்கெல்லாம் தண்ணீர் ஊத்தி விட்டு....." என்று ஆரம்பித்துச் சுமார் பத்து நிமிஷநேரம் வேலை சொன்னார். அவர் சொன்ன வேலையை யெல்லாம் பறந்து பறந்து செய்தாலும் இரண்டு 'தடியன்கள்' ஒரு நாளில் செய்து விட முடியுமா என்பது சந்தேகம்.

ஆனால் இவையெல்லாம் யாருக்குச் சொன்ன வேலைகள்? அங்கு ஒரு பெரிய மண்குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு கிணற்றிற்கும் தொண்டுப்பட்டிக்கும் நடந்து கொண்டிருந்த ஒரு பையனுக்கு. பழனியப்பன் என்ற அந்தப் பையனுக்கு வயசு பதினாறு இருக்கும். அவனைப் பார்த்தவுடன் ஓயாமல் வேலை செய்து சலித்தவனென்று தெரியும். அதிகமான பளுவை அடிக்கடி எடுத்து நடந்தமையின் அவனுடைய முழங்கால்கள் உட்புறமாக வளைந்து, நடக்கும்போது ஒன்றோடொன்று முட்டிக்கொண்டன. அவனது நெஞ்செலும்புக் கூட்டிலுள்ள விலா எலும்புகளை ஒன்று இரண்டு என்று எண்ணிவிடலாம். அவனுடம்பில் எலும்புந் தோலுமன்றி வேறொன்றும் இல்லை. ஆனால் வயிறு மட்டும் பருத்து முன்னால் நிமிர்ந்திருந்தது. இடுப்பில் ஒரு கௌபீனம், தலையில் குடம் சுமக்க ஒரு துணிப் பிரி - இவ்வளவுதான் அவன் உடை.

பண்ணையக்காரர் சொன்னதை யெல்லாம் அவன் நடக்கும் போதே கேட்டானே யல்லது நிற்கவில்லை. ஆனால் அவனும்

சும்மா நடக்கவில்லை; வாயில் ஏதோ முணுமுணுத்துக்கொண்டே நடந்தான். கட்டிலில் உட்கார்ந்திருந்த பண்ணையக்காரர் மெதுவாகச் செருப்பைக் கழற்றிவிட்டு, மேல் வேஷ்டியைத் தலையணையாகச் சுருட்டி வைத்துப் படுத்தார். அவ்வளவுதான். ஐந்தாறு நிமிஷத்தில் குறட்டை விட ஆரம்பித்துவிட்டார். பழனியப்பன் கொஞ்ச நேரத்தில் தண்ணீர் ஊற்றும் வேலையை முடித்து விட்டான். அடுத்தபடியாகப் போரிலிருந்து வைக்கோல் பிடுங்கவேண்டும். அதற்குள் வயிற்றுப் பசி. சோறு வருகிறதா என்று வழியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு பெண் தலையில் மண்கும்பத்தை வைத்துக்கொண்டு வேகமாக வந்தாள். அவளைக் கண்டானோ இல்லையோ பழனியப்பன் கிணற்றை நோக்கிப் போக ஆரம்பித்தான்.

அந்தப் பெண் கும்பத்திலிருந்து சோறூற்றப் பழனியப்பன் வெகு ஆவலுடன் இரு கைகளையும் ஏந்திக் குடித்துக் கொண்டிருந்தான். நடுவில் கை நிறையச் சோற்றை வாங்கிக் கொண்டு, "இந்த வேலை செய்து சாக என்னால் ஆகாது. எத்தனை செய்தாலும் சிடு சிடு என்று எரிந்துவிழுகிறார். கோழி கூப்பிடு முன் எழுப்பிச் 'சாணி எடு. இது பண்ணு அது பண்ணு' என்று இடித்துக்கொண்டே இருக்கிறார். ராத்திரிக்கும் வீட்டில் படுக்க விடுகிறதில்லை. எல்லாவற்றையும் விட, இந்தப் பாழும் தண்ணீர் சுமப்பதுதான் உயிரை வாங்கிவிடுகிறது. சுமந்து சுமந்து என் தலையும் மொட்டையாய்ப் போய்விட்டது. இனி ஆச்சு. மாடு மேய்த்துக்கொண்டு வந்தவுடன், மாட்டுக்கு ஏனடா வயிறு நிறையவில்லை யென்று ஒரு சண்டை. எவனால் முடியும்? இத்தனைக்கும் என்ன வாரிக்கொடுக்கிறார்கள்? மாதம் இருபது ரூபாய். அதற்குத்தான் இத்தனை இடியும் சண்டையும். வருகிற சித்திரையுடன் தொலைந்து விடுகிறேன். எங்காவது கண்டி, பினாங்கு போய்ப் பிழைத்தால் போகிறது" என்று சொல்லிக் கொண்டே கைச்சோற்றைக் குடித்தான்.

"கண்டி, பினாங்கு" என்றவுடன் அந்தப் பெண்ணின் முகம் வெளுத்தது. கண்களில் நீர் தளும்பிற்று. என்ன மறைத்தும் இதைப் பழனியப்பன் கண்டு விட்டான். உடனே அவன் மனத்திலும் ஓர் அலைப்பு உண்டாயிற்றென்பதை அவன் முகக்குறி காட்டிற்று. மறுபடியும் அவன், "கண்டிக்குப் போனால் என்ன? இதோ நீலம்பூர்க் களத்து வீட்டு மாரப்பன் போய் ஒரு வருஷந் தானாச்சு; போன மாசமே வந்து விட்டான். ரூபாய் 150, நல்ல நல்ல வேட்டித் துணி, ஒரு தங்க மோதிரம் எல்லாம் கொண்டு வந்திருக்கிறான். நேற்று நான் மாடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது அந்த வழியாக வந்தான். ஒரு நாழிகை பேசிக்கொண்டிருந்தோம். அங்கே வேலை வெகு சுலபமாம். காலையில் 6-மணிக்குப் போனால் 10-மணிக்கெல்லாம் வந்து விடலாமாம். அதுவும் என்ன வேலை? ரப்பர் பால் எடுப்பது. இதற்கே வாரம் 2 வெள்ளி கூலியாம். அதோடு நமக்கு இஷ்டம் இருந்தால்

மத்தியான்னம் கூலி வெட்டப் போகலாம். அதற்கு வேறு தனியாகக் கூலி. ஓர் ஆள் கூட்டிக்கொண்டு போனால் ரூ. 10 கிடைக்கும். நமக்கும் அதிருஷ்டமிருந்து கங்காணியாய் விட்டால் அடிக்கடி ஊருக்கு வரப்போக இருக்கலாம்" என்று சொல்லி முடித்தான். அந்தப் பெண் ஒன்றும் பேசாமல் கலியத்தைக் கழுவிக்கொண்டு புறப்பட்டாள். அவள் பழனியப்பனுடைய தங்கை. பெயர் காளியம்மாள். அவளுக்கு வயசு பதினொன்று அல்லது பன்னிரண்டிருக்கும். சேற்றில் பதிந்த மணியென அவள் அழகு வறுமையால் மங்கிக் கிடந்தது. கழுத்தில் கண்ணுடி மணிச்சரம் ஒன்று போட்டிருந்தாள். அதுதான் அவளுடைய நகை. இடுப்பில் கட்டியிருந்த சேலைத் துண்டின் அடிப்பாகம் கிழிந்து கிழிந்து சுற்றிலும் தொங்கிக் கொண்டிருந்தது. மேலே போட்டிருந்ததும் ஒரு சிறு துண்டுச் சேலை.

வழியில் அவள் அழுத கண்ணீர் ஆறுகப் பெருகியிருக்கும். 'கண்ணன் நிஜமாகத்தான் சொன்னனு? கண்டிக்குப் போய் விடுவானு? போய் விட்டால் நானும் அம்மாவும் எப்படிப் பிழைப்போம்! ஐயோ, கண்டிக்குப் போகிறவர்கள் வெகு பேர் திரும்பி வருகிறதில்லையே!' என்று தனக்குள் எண்ணித் துக்கித்துக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தாள். வீட்டுப் பக்கமாகப் போனதும் வெகு ஜாக்கிரதையாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவர்கள் குடியிருந்த வீடு பெரிய பண்ணையம் முத்துசாமிக் கவுண்டருக்குச் சொந்தம். இலவசமாக அவர்கள் அதிற் குடியிருந்தார்கள். ஒரே கூரை வீடு. அதற்குள் தான் சமையல், சாமான், படுக்கை யெல்லாம். வீட்டிற்குள் ஒரு மூலையில் காளியம்மாளின் தாய், ஒரு கிழக்கைம்பெண், ராகி நெரித்துக் கொண்டிருந்தாள். அவள் உள்ளே போனதும் வட்டிலை எடுத்து வைத்துச் சோற்றைப் போட்டுத் தின்றாள். தின்றதும் வெளியில் வந்து வீட்டுக்கு முன்னால் கட்டியிருந்த வெள்ளாடுகள் இரண்டையும் அவிழ்த்துவிட்டு ஓட்டிக்கொண்டு போய்விட்டாள்.

அன்றிரவு பழனியப்பன் வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டுத் தொண்டுப்பட்டிக்குக் காவலுக்காகப் போய்விட்டான். அவன் வந்ததுமுதல் காளியம்மாள் ஒரு மூலையில் உறக்கம் பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள். சோறு தின்னவும் இல்லை. அவள் தாய் வெகுநேரம் அழுத்திக் கேட்டபோது காலையில் பழனியப்பன் சொன்னதைக் கூறிவிட்டு அழுதாள். கிழவியும் அழத் தொடங்கினாள். அன்றிரவு அவர்கள் இருவரும் சாப்பிடவில்லை. அழுது கொண்டே படுத்திருந்தார்கள்.

பொழுதுவிடிந்ததும் கிழவி பண்ணையக்காரரிடம்போய் முறையிட்டாள். பையனை அடக்கிக் கண்டிக்குப் போகாமல் தடுக்கும்படி வேண்டிக்கொண்டாள். அவர், "அந்தப் பயலுக்கு அவ்வளவாய் விட்டதா? பேசிக்கொள் கிறேன் போ" என்று சொல்லி அனுப்பினார். அன்று தொண்டுப்பட்டிக்குப் போனதும்

பழனியப்பனைக் கூப்பிட்டுக் கேட்டார். அவன் ஒரு பதிலும் சொல்லவில்லை. அவர், "நீ என்ன செய்வாய்? தின்று திமிர் ஏறிவிட்டது. சரியானபடி வேலையில்லை. கண்டிக்கா போகிறாய்? நாகப்பட்டினம் போனாலும் சிண்டைப் பிடித்துக்கொண்டு வந்து விடுவேன். தெரியுமா?" என்று அதட்டினார். ஆனால் இந்த மிரட்டலெல்லாம் அவனது எண்ணத்தைச் சற்றும் மாற்றவில்லை.

ஒருவேளை அவர் அன்பாகப் பேசியிருந்தால் பையன் திரும்பி யிருக்கக்கூடும். பாவம் அவருக்கென்ன தெரியும்! பழனியப்பன் தின்ற திமிரினாலா கண்டிக்குப் போக நினைத்தான்? அவர் செய்த கொடுமை பொறுக்கமாட்டாமலன்றோ? அவர் அதை அறியாது மிரட்டவே அவனது மனம் பின்னும் உடைந்தது. அவரிடம் காலந்தள்ளுவது இயலாதென்று நினைத்தான். அதோடு பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையில்லாமல் போனாலும், வேறு ஊருக்குப் போகலாம் என்ற எண்ணம் அவனுக்கு மிகுந்த கவலையை உண்டாக்கிற்று. அது முதல் அவன் இரவிலெல்லாம் ரெயிலில் போவதாகவும், கண்டியில் இருப்பதாகவும் கனவு கண்டான். அடிக்கடி நீலம்பூர் மாரப்பனைக் கண்டு பேசினான்.

* * *

சித்திரை மாதம் பிறந்து மூன்று நாளாயின. எல்லாம் வழக்கம்போல் நடந்தன. காளியம்மாள், கிழவி, பண்ணைக்காரர் எல்லாரும் பழனியப்பன் சொன்னதை மறந்துவிட்டார்கள். நாலாம் நாள் இரவு பழனியப்பன் வீட்டில் வந்து சாப்பிட்டான். ஆனால் அன்று வழக்கம்போல் கைகழுவியதும் தொண்டுப்பட்டிக்கு ஓடவில்லை. வாசலிற் கிடந்த உரலின்மேல் உட்கார்ந்து ஏதோ சிந்திப்பவன்போல் கொஞ்சநேரம் இருந்துவிட்டு எழுந்து போய் விட்டான்.

மறுநாள் எப்போதும்போல் பண்ணையக்காரர் கோழி கூப்பிடுமுன் எழுந்து தொண்டுப்பட்டி சென்றார். சென்று கொஞ்சநேரத்திற்கெல்லாம் பழனியப்பன் வீட்டை நோக்கி வந்தார். வந்ததும் கிழவியை எழுப்பி இரவு பழனியப்பன் தொண்டுப்பட்டிக்குப் போகவில்லையா என்று கேட்டார். கிழவி போனதாகச் சொல்லவே, "பின் எங்கே போய்விட்டான்? நானும் கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தேன்; பேசவே இல்லை. ஒரு சமயம் முன்னால் படுத்திருந்தால் வந்து எழுப்பித் தொலைக்கிறானென்று போர் மறைவில் படுத்திருக்கிறானோ?" என்று சொல்லிக் கொண்டே போனார். பொழுது விடிந்தது. பழனியப்பன் எங்குமே இல்லை என்று தெரியவந்தது. அதைக் கேட்டுக் காளியம்மாளும், கிழவியும் அழுத அழுகையும், பட்ட துயரம் சொல்லி முடியா.

எங்கே போயிருப்பானென்று அவர்கள் வெகுதூரம் யோசிக்க, கண்டிக்குத்தான் போய்விட்டான் என்ற தீர்மானத் துடன் கிழவி நீலம்பூருக்கு ஓடினாள். அங்கே போனவுடன்,

மாரப்பன் ஏழு ஆட்களைச் சேர்த்துக்கொண்டு இரவு ஒன்பது மணிக்கே மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்விட்டதாகச் சொன்னார்கள். ஆமாம், பழனியப்பனுக்குக் கிராம மணியக்காரர் கையொப்பம் எப்படிக் கிடைத்ததென்று கேட்கலாம். இதெல்லாம் வெகு சுலபம். கோடந்தூர் மணியக்காரரே போடவேண்டும் என்பதில்லை. நீலம்பூர் மணியக்காரரே, "பழனியப்பன் நீலம்பூரில் இருக்கும் கறுப்பக்கவுண்டன் மகள். தாய் தகப்பன் சம்மதத்தின் பேரில்தான் இவன் வருகிறான்" என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுவிடலாம். அங்கு வேண்டியதெல்லாம் இரண்டு ரூபாய் தான். அது எப்போதும் ஏற்பட்ட கட்டளை. ஆள் உள்ளூராளுலும் வெளியூராளுலும் கங்காணி மணியக்காரர் கையெழுத்திற்காக இரண்டு ரூபாய் முடிந்துவைத்திருக்க வேண்டும். எல்லாம் பெருந்தன்மையாகவே நடக்கும்.

கிழவி வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு வீடு திரும்பினாள். பண்ணையக்காரரிடம் போய் அழுதாள். எப்படியாவது திருப்பிக் கூட்டிக்கொண்டு வரும்படி கெஞ்சினாள். அவர் இனிமேல் எங்கே போவார்? "இந்நேரம் அவன் திருச்சிராப்பள்ளி போயிருப்பான். நாம் அங்கே போவதற்குள் நாகப்பட்டினம் போய்க் கப்பலும் ஏறிவிடுவான். திமிர் எடுத்த நாய் போய்க் கெட்டலைந்து வரட்டும்" என்று சொல்லிவிட்டார். கிழவியும், காளியம்மாளும் என்ன செய்வார்கள்? பாவம்! இரண்டு மூன்றுநாள் சோறு தண்ணீர் குடிக்காமல் அழுதுகொண்டிருந்தார்கள்.

ஆனால் பண்ணையக்காரருக்கு என்ன? அவன் போனால் இன்னொருவன். மறுநாளே வேறு ஆள் சேர்த்துக் கொண்டார். ஆளோ அயலூரிலிருந்து வந்தவன். அவனுக்கு வீடுவேண்டும். பண்ணையக்காரர் பார்த்தால் வேறு வீடு கட்டிக்கொடுக்கலாம். ஆனால் பழனியப்பன் இருந்த வீட்டிற்கு என்ன வேலை? அவனே போய்விட்டான்; இனிமேல் அந்த வீட்டை, வந்திருக்கும் ஆளுக்குத்தானே கொடுக்க வேண்டும்? ஆகவே கிழவியை வேறு வீடு பார்த்துக்கொள்ளும்படி சொல்லி அனுப்பினர். கிழவிக்கும் காளியம்மாளுக்கும் என்ன செய்வதென்று தோன்றவில்லை. பண்ணையக்காரரிடம் போய் ஆனமட்டும் கெஞ்சினார்கள். கிழவி காலிற்கூட விழுந்து அழுதாள். ஒன்றும் பயன்படவில்லை. "புது ஆள் வீட்டுக்கு என்ன செய்வான்? நான் உன் மகனை ஓடு என்று அடித்தேன்? அவன் கொழுப்பு, ஓடிவிட்டான். வந்தவன் பெண்டாட்டி பிள்ளைகள் என் தலைமேலா இருக்கும்?" என்று கடுகடுத்தார்.

கோடந்தூரில் பண்ணையக்காரரைச் சேர்ந்தவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் ஏழைகள். ஒவ்வொருவருக்கும் ஒரு கூரை வீடுதான் இருக்கும். எனவே கிழவிக்குச் சின்னப் பண்ணையம் செங்கோடக் கவுண்டரை விட்டால் வேறு கதி இல்லை. அவரிடம் இருவரும் போனார்கள்; மிகவும் கெஞ்சிக் கேட்டார்கள். பழனி

யப்பன் திரும்பி வந்தவுடன் ஆன செலவைக் கொடுத்துவிடுவதாகச் சொல்லி அவருடைய நிலத்தில் ஒரு குடிசை கட்டிக் கொடுக்கும்படி வேண்டினர்கள். செங்கோடக் கவுண்டர் கொஞ்சம் மன இளக்கமுள்ளவர். அவர்கள் படும் துயரத்தைக் கண்டு அப்படியே செய்ய இசைந்தார்.

இப்போது இவர்கள் இருவரும் தாங்களாகச் சம்பாதித்துச் சாப்பிட வேண்டியதாயிற்று. ஆனால் கிழவி காடு தோட்டங்களில் போய் வேலை செய்யச் சக்தி அற்றவள். இச் சமயத்தில் தான் கதர் உற்பத்திக்காக அகில பாரத சர்க்கா சங்கத்தார் ஆங்காங்குக் கிளைகள் ஏற்படுத்தி ஊர்ப்பக்கங்களில் பஞ்சு கொடுத்து நூல் நூற்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். கோடந்தூரிலும் பஞ்சு கொண்டுவந்து போட்டார்கள். கிழவி சிறு வயசில் நூற்றவள். ஆகையால் ராட்டை ஒன்று சம்பாதித்துப் பஞ்செடுத்து நூற்க ஆரம்பித்தாள். இதில் அவளுக்கு வாரம் பத்து அணுவுக்குக் குறையாமல் கூலி கிடைத்தது. இரவு பகல் ஓயாது நூற்பாள். காளியம்மாள் மேய்த்துவந்த மாடுகளை விற்று விட்டார்கள். அவள் கூலி வேலைக்குப் போக ஆரம்பித்தாள். அநேகமாகத் தினம் $1\frac{1}{4}$ அணுக் கிடைக்கும். அதிகமாக வேலை யிருக்கும் சமயத்தில் 2 அணுக் கிடைக்கும். ஆனால் வருஷம் 365 நாளும் கிராமங்களில் வேலை கிடைக்காது. அவளும் கொஞ்ச நாளில் நூற்றுப் பழகிக் கொண்டாள். வேலையில்லாத சமயங்களிலும், இரவிலும் நூற்பதற்காக அவள் ஒரு ராட்டை வாங்கினாள். இப்படி அவர்கள் இருவரும் வயிறு வளர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

காளியம்மாளுக்கு வயசு பதின்மூன்று, பதினாலு ஆகவே 'புத்தி அறிந்தாள்'. இளமை தொட்டதை யெல்லாம் பொன்னுக்கும் தெய்வமல்லவா? 'காலை இள வெயிலிற் காண்ப தெல்லாம் காட்சி யன்றே?' இளமை! ஆம்; அது மனிதனுடைய அனல் வீசும், கொடிய நீண்ட வாழ்க்கைப் பாலைவனத்தின் நடுவில் நிற்கும் இனிய குளிர் தரு. சாதாரண மனிதர்கள் கூட இந்த உண்மையை உணர்ந்திருக்கிறார்கள். 'பருவத்திற்குப் பன்றிக்குட்டியும் பத்துப்பணம் பெறும்' என்பது உலக வாக்கு. காளியம்மாள் இயற்கையில் அழகு வாய்ந்தவள் அல்லவென்று சொல்ல முடியாது. அவளது பெரிய கண்களின் மருண்ட பார்வை, சிரித்த முகம், இவற்றின் அழகு வறுமை வாழ்க்கைச் சேற்றில் மூழ்த்து நிற்கும் அழகிய தாமரைபோல் விளங்கிற்று. இளமையின் எழிலான உதய ஞாயிற்றின் கிரணங்கள் தீண்டலும் அது தேன் நிறைந்த மலராய் மலர்ந்து இளமை அழகை நுகர இருக்கும் மனிதர் கண்ணுகிய வண்டுகளுக்கு விருந்தளித்தது.

இப்போது கிழவிக்கும் காளியம்மாளுக்கும் ஆதரவு செங்கோடக் கவுண்டர்தாம். கிழவி ஒரு நாள் அவரிடம் போய், "அவனும் போய் இரண்டு வருஷமாச்சு; செத்தானு பிழைத்தானு

என்பதுகூடத் தெரியவில்லை. நானும் இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்கிறேன். நான் சாவதற்குள் அந்தப் பெண்ணை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்து விட்டால் போதும். நீங்களே அதை முடிக்கவேண்டும்; உங்களை விட்டால் யார் எங்களுக்கு?" என்று கண்ணீர் பெருக்கிச் சொன்னாள். செங்கோடக் கவுண்டரும் இதைப்பற்றி யோசிக்காமல் இருக்கவில்லை. தம் பண்ணையத்தில் இருக்கும் வீரப்பனுக்கே கல்யாணம் செய்து விடலாமென்று உத்தேசம் பண்ணிக்கொண்டிருந்தார். வீரப்பனைக் கேட்டதில் அவன், "உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள். நான் உங்கள் பேச்சைத் தட்டிவிட்டு எங்கே போவேன்?" என்றான்.

வீரப்பன் ஓர் 'அப்பாவி'. கபடு சூது தெரியாதவன். ஓயாமல் வேலை செய்வான். நல்ல தேகக் கட்டுள்ளவன். அவனுக்கு வயசு 25-க்குக் குறையாது. அவனுடைய சொந்த ஊர் கோடந்தூர் அல்ல. சிறுவயசிலேயே அவனுடைய தாய்தகப்பன் இறந்து விட்டதால் கோடந்தூரில் அவன் மாமன் வீட்டில் வந்திருந்தான். வந்தது முதல் சின்னப் பண்ணையக்காரர் பண்ணையத்திலேயே இருந்துவந்தான். செங்கோடக் கவுண்டர் வீரப்பனைப்போல் ஓர் ஆள் கிடைத்ததற்காக மிகவும் சந்தோஷப்பட்டார். அவர் அவனுக்கு ஒருபோதும் வேலை சொன்னதில்லை; அவனே எல்லாம் செய்வான். "அவனுடைய கைராசி மாடு நன்றாகப் பெருகுகிறது" என்று எல்லோரும் சொல்வார்கள்.

காளியம்மாளுக்கும் வீரப்பனுக்கும் கல்யாணம் நடந்தது. கல்யாணத்தில் சின்னப் பண்ணையக்காரர் தம் மூத்த மகன் கல்யாணத்தைப்போல் ஒய்வொழிவின்றி அலைந்தார்.

கொஞ்ச நாளில் வீரப்பன் மாமன் வீட்டை விட்டுக் கிழவி வீட்டிற்கே வந்துவிட்டான். கல்யாணமாகி ஒரு மாதத்திற் கெல்லாம் அவர்கள் வீட்டில் எப்போதும் கேட்டுக்கொண்டிருந்த ராட்டைச் சத்தம் அடங்கிவிட்டது. கிழவிக்கு அடிக்கடி குளிர் ஜுரம் வர ஆரம்பித்ததால் ராட்டை சுற்ற ஆளில்லை. ஜுரம் வந்து பத்துப் பதினைந்து நாளில் கிழவி இறந்துபோய் விட்டாள்.

* * * * *

வீரப்பனும் காளியம்மாளும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். கிழவி இறந்து ஆறு மாதத்திற்குப் பிறகு பழனியப்பனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. தான் பினாங்கில் ஒரு ரப்பர்த் தோட்டத்தில் இருப்பதாகவும், போய் ஒரு வருஷத்தில் மீதம் பிடித்த நூறு ரூபாயும் ஒரு மாத காலம் தனக்கு உடம்பு சரியில்லாதிருந்தபோது செலவாகி விட்டதாகவும், இன்னும் ஒரு வருஷம் அங்கிருந்து பணம் சம்பாதித்துக்கொண்டு வருவதாகவும் எழுதியிருந்தான். வீரப்பன் அதற்கு எழுதிய பதில் கடிதத்தில் காளியம்மாளுக்குக் கல்யாணமானது, கிழவி இறந்துவிட்டது முதலிய எல்லாம் எழுதினான்.

மறு கடிதத்தில் பழனியப்பன் காளியம்மாளையும் அவள் புருஷனையும் அங்கு வரும்படி எழுதியிருந்தான். அதாவது இரண்டு மூன்றுபேர் சேர்ந்து குடும்பமாக வசித்தால் அதிகம் சம்பாதிக்க முடியுமென்றும், கொஞ்சம் பொருள் சம்பாதித்துக் கொண்டு எல்லோரும் திரும்பிப் போய்விடலாமென்றும் எழுதினான். இதைப் பார்த்ததும் வீரப்பனுக்குப் போக ஆசையுண்டாயிற்று. ஆனால் அவனை இதுவரை ஆதரித்து வந்த செங்கோடக் கவுண்டர்முதல் எல்லோரும் தடுத்தார்கள். அதோடு, அப்போது காளியம்மாள் கர்ப்பவதியாய் இருந்ததால் அவளைக் கூட்டிக் கொண்டு போவது பெரிய தப்பென்று ஊரெல்லாம் திட்டினார்கள். வீரப்பனுக்கு எப்படியும் போகவேண்டுமென்ற ஆசை வந்துவிட்டது. ஆகையால் காளியம்மாளை விட்டுவிட்டுத் தான் மட்டும் போகத் தீர்மானங் கொண்டான். ஆனால் காளியம்மாள் அதற்கு இசைவாளோ? அது முடியவே முடியாதென்று ஒரே பிடிவாதமாகச் சொன்னாள். இரவு பகல் ஓயாமல் அழ ஆரம்பித்தாள். என்ன செய்தும் வீரப்பன் மனம் இளகவில்லை. போயே ஆக வேண்டுமென்றான். கடைசியில் தன்னிடம் அப்போதிருந்த ஐம்பது ரூபாயையும் செங்கோடக் கவுண்டரிடம் கொடுத்துக் காளியம்மாளுக்கு வேண்டும்போது கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டு, போய் ஒரு வருஷத்தில் கட்டாயம் வந்துவிடுவதாகக் கூறிப் புறப்பட்டுவிட்டான்.

பொருள் சம்பாதித்துக்கொண்டு வந்து காடு, தோட்டம் பிடித்துச் சுதந்தர வாழ்வு வாழவேண்டுமென்ற ஆசை வீரப்பனை இப்படிச் செய்யும்படி தூண்டிற்று. அதனால் அவன் தன் மனைவியை அந்த அவதியான நிலையில் விட்டுப்போகவும் மனந் துணிந்தான். காளியம்மாள் பட்ட துயரம் இவ்வளவு அவ்வளவல்ல. பணமும் வேண்டாம், காசும் வேண்டாம், அரைவயிற்றுக் கஞ்சியானாலும் புருஷனுடனிருந்து வாழ்ந்தால் போதுமென்று நினைத்தாள்.

* * * * *

வீரப்பன் போய்விட்டான். போய் மாதம் ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். நான்கு மாதம் ஆயின; காளியம்மாளுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. இந்தச் சந்தோஷ சமாச்சாரத்தைக் கேட்டதும் வீரப்பன் மறு கடிதத்தில், தான் எட்டு மாதத்தில் வந்துவிடுவதாகவும் வரும்போது பழனியப்பனையும் கூட்டிக்கொண்டு, காளியம்மாளுக்குச் சேலை துணிகள், குழந்தைக்குச் சட்டைகள், பணம் எல்லாம் கொண்டு வருவதாகவும் எழுதினான்.

எட்டு மாதமும் ஆயின. வீரப்பன் திரும்பி வரவில்லை; கடிதத்தையும் காணவில்லை. இதற்குள் சின்னப் பண்ணையக்காரரிடமிருந்த ஐம்பது ரூபாயும் தீர்ந்து பத்து ரூபாய் கடனும் ஆகிவிட்டது. காளியம்மாள் பார்த்தாள். புருஷன் சம்பாதித்து

வருவானென்று சும்மா கடன் வாங்கித் தின்றுகொண்டிருந்தால் தானும் தன் பையனும் வாழ்நாள் முழுதும் சம்பாதித்துக் கட்டினாலும் தீராதென்று நினைத்தாள். ஜீவனோபாயத்திற்காகக் கூலி வேலை செய்யத் தீர்மானித்தாள். போகும்போதெல்லாம் குழந்தையையும் கொண்டு போகவேண்டியதாயிற்று. காடு, தோட்டங்களில் வேலை செய்யும்போது மரம் மட்டைகளில் தொட்டில் கட்டிக் குழந்தையை அதிலிட்டுத் தூங்க வைத்துவிட்டு வேலை செய்வாள். வேலை ஓய்ந்த சமயங்களில் வந்து குழந்தைக்குப் பால் கொடுப்பாள். அப்போது அவள் தனது கதியை நினைக்க, கண்களிலிருந்து நீர் பில்கும்: ஐயோ பாவம்! குழந்தை அவள் துக்கத்தை உணருமா? அது அவள் முகத்தைப் பார்த்துச் சிரிக்கும். உடனே அவள் துக்கமெல்லாம் பறந்துவிடும். "என் கண்ணே, நீ ஒருவன்தான் எனக்குக் கதி" என்று சொல்லி முத்தமிட்டு மறுபடியும் தொட்டிலில் தூங்க வைத்துவிட்டு வேலைசெய்யப் போவாள்.

பையனுக்கு வயசு மூன்று ஆயிற்று. தகப்பன் வரவில்லை. காளியம்மாள் கூலி வேலையின்றி வீட்டில் நூற்கும்போதெல்லாம் தன் நிலையை நினைத்து மாளாக் கண்ணீர் வடித்துக்கொண்டே இருப்பாள். இரவில் படுத்திருக்கும்போதுகூட, "ஐயோ! என்னையும் இக்குழந்தையையும் இப்படி நட்டாற்றில் விட்டுப் போய்விட்டானே பாவி!" என்று சொல்லி அழுவாள். அப்போது அவளுடைய பெரிய கண்களிலிருந்து வடியும் கண்ணீர் பக்கத்தில் தூங்கும் பையன்மேல் விழ அவன் திடுக்கென்று விழித்துக் கொள்வான். அப்போது அவன் இனிய மழலைச் சொற்களில் பேசும் இரண்டு வார்த்தைகளைக் கேட்டு அவள் துக்கம் நீங்குவாள்.

* * * * *

ராமசாமிக்கு (அந்தப் பையன் பெயர்) ஐந்து வயசாயிற்று. அந்த வயசில் அவனைப் போன்ற ஏழைப் பையன்கள் ஒரு பண்ணைக்காரரிடம் படிக்கூலிக்கு ஆளாக மாடு மேய்ப்பார்கள். ஆனால் ராமசாமியை அவன் தாய் பண்ணையத்தில் வைக்கவில்லை. தன் அண்ணன் சிறுவயசில் பெரிய பண்ணையக்காரரிடம் பட்ட பாட்டை அவள் மறந்துவிடவில்லை. செங்கோடக் கவுண்டரிடம் இன்னும் பத்து ரூபாய் கடனைப் பெற்று அதற்கு இரண்டு ஆடுகள் வாங்கி அவற்றை மேய்த்து வரும்படி செய்தாள்.

இப்படி இருக்கத் திடீரென ஒரு வதந்தி கிளம்பிற்று. கங்காணி நீலம்பூர் மாரப்பன் மறுபடியும் ஆள் கூட்டிக்கொண்டு போக வந்திருந்தான். அவனைச் சந்தித்த கோடந்தூர்க்காரர் ஒருவர் வீரப்பனைப்பற்றி விசாரித்ததில், வீரப்பன் இரண்டு மூன்று வருஷத்திற்கு முன்பே கைகால் வீங்கி இறந்துவிட்டதாகச் சொன்னான். அவர் கோடந்தூர் வந்ததும் இச்செய்தி ஊர் முழுதும் காட்டுத் தீப்போல் பரவிவிட்டது. காளியம்மாள் இதைக்

கேட்டதும், "அடே சண்டாளா!" என்று ஓலமிட்டு மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்துவிட்டாள். அங்கு நின்ற சிலர் அவளை வீட்டிற்குத் தூக்கி வந்து மூர்ச்சை தெளிவித்தனர். அவள் தன் நிலை மறந்தவளாய் பிரமை பிடித்தவள்போல ஒரு மூலையில் உட்கார்ந்து விட்டாள். ஊரிலுள்ளவர்கள் அவளிடம் 'இழவுகாண' வந்தனர். அப்படி வந்தவர்களைக் கண்டு மோதி அடித்துக்கொண்டு அழுவது வழக்கம். ஆனால் காளியம்மாள் கண்களிலிருந்து ஒரு துளி நீர்கூட வரவில்லை. செய்துவைத்த உருவம்போல் உட்கார்ந்திருந்தாள். வந்து பார்த்தவர்களில் சிலர், "அவள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால் பைத்தியம் பிடித்தவள்போல் இருக்கிறது, கண்டிப்பாய் அவளுக்குப் புத்தி சுவாதீனத்தில் இல்லை; பாவம்!" என்று இரக்கப்பட்டனர். சிலர், "அவள் உட்கார்ந்திருப்பதைப் பார். கொஞ்சமாவது புருஷன் செத்து விட்டானே என்ற விசனம் அவள் மூஞ்சியில் தெரிகிறதா? ஒரு சொட்டுக் கண்ணீர் வேண்டாமா? 'விட்டு விட்டு ஓடினவன்தானே? செத்தால் சாகிறான், என்றிருக்கிறாள் போலும்! என்ன இருந்தாலும் கட்டின தோஷத்துக்காகவாவது ஒரு குரல் அழவேண்டாமா?" என்று நிஷ்டூரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

காளியம்மாள் உட்கார்ந்தவள் உட்கார்ந்தவள்தான். இப்படி அப்படி அசையக்கூடவில்லை. சோறு தண்ணீர் ஒன்றும் குடிக்கவில்லை. இதற்குள் செங்கோடக் கவுண்டர் நீலம்பூர் மாரப்பனைக் கூட்டி வந்து கேட்டார். அவன் ஒன்றும் தனக்குச் சுயமாகத் தெரியாதென்று சொல்ல ஆரம்பித்தான். போனபோது தானும் வீரப்பனும் ஒரே தோட்டத்தில் இருந்ததாகவும், பிறகு கொஞ்ச நாளில் வீரப்பன் அவன் மைத்துனன் இருக்கும் இடத்திற்குப் போய் விட்டதாகவும், அதன் பிறகு இருவரும் சந்திக்கவில்லை யென்றும், ஆனால் தான் ஊருக்கு வரும்போது வீரப்பன் வேலை செய்த தோட்டத்திலிருந்து வந்த ஒருவன் வீரப்பன் இறந்துவிட்ட தாகச் சொன்னானென்றும் கூறினான்.

செங்கோடக் கவுண்டருக்கு எது நிச்சய மென்று விளங்க வில்லை. அவர் காளியம்மாளிடம் போய் எல்லாம் விளக்கமாகச் சொல்லி, வீரப்பன் இறந்தானென்பது பொய்யாக இருக்கவும் கூடும், ஆகையால் வருத்தப்பட வேண்டாம் என்று தேற்றினார். தன் புருஷன் உயிருடன் இருந்தாலும் இருப்பான் என்ற எண்ணம் அவளுக்குப் பெரிய ஆறுதலை அளித்தது.

* * * *

ஒரு வாரம் ஆயிற்று. ஒருநாள் சாயங்காலம் காளியம்மாள் நூல் நூற்கையில் தனது கதியை நினைத்து ஏதோ குறும்பாட்டுப் பாடிக்கொண்டும் இடையிடையே மூக்கைச் சிந்திக்கொண்டும் இருந்தாள். அப்போது தெருவில் இரண்டு பெண்கள் சண்டை பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஒருத்தி வசையம்பு சொரிந்தனள். அதில் ஒருத்தி, "போடி வெட்கங்கெட்ட முண்டே" என்றாள்.

உடனே மற்றவள், "நான் என்னடி வெட்கங்கெட்டவள்? என் புருஷன் மலைபோல் இருக்க என்னை எதற்கடி முண்டே என்றாய்? புருஷன் செத்து வருஷக்கணக்காகியும் கழுத்து நிறையத் தாலியும், சிவப்புச் சேலையும் கட்டிக்கொண்டு, மஞ்சள் பூசவும், மலர் முடிக்கவும் இருப்பவளெல்லாம் உலகத்தில் இருக்க என்னை வெட்கங்கெட்ட முண்டே என்கிறாய். இன்னொரு தரம் சொன்னால் அடிப்பேன் துடைப்பத்தால்" என்று கொக்கரித்தாள்.

இந்தப் பேச்சைக் காதிலே கேட்டாள் காளியம்மாள். ராட்டை சுற்றின கை தானாக நின்றுவிட்டது. துக்கம் நெஞ்சைப் பிளந்தது. துக்கத்தை விட ஆத்திரந்தான் அதிகமாக வந்தது; அப்படியே அசைவற்றிருந்தாள். கண்களிலிருந்து நீர் ஊற்றெடுத்து ஓடிற்று. எண்ணங்கள் கோடி மின்னலைப்போல ஒன்றின் மேல் ஒன்றாக வந்து நெஞ்சை உடைத்தன. வெகுநேரம் அப்படியே இருந்தாள். கடைசியாக இந்த நிலையில் உயிர் வாழ்வதினும் இறப்பதே மேல் என்று முடிவு கட்டிவிட்டாள். உடனே ஒன்றையும் கவனிக்கவில்லை. ராட்டைக்கெதிரில் சுற்றியிருந்த நூலும், கையிலிருந்த பஞ்சுத் திரியும் அப்படியே விடக்கவிட்டு வாசலில் ஆடு கட்டுவதற்கு அடித்திருந்த முளையிலிருந்த கயிறொன்றை அவிழ்த்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள். அப்போது அவள் முகத்தில் உறுதி, வெறுப்பு, வீரம், ஆங்காரம் எல்லாம் ஒன்றாக வடிந்தன. கதவு சாத்தப்பட்டது; 'சட்' என்று தாழிடும் சத்தம் கேட்டது.

இரண்டு நிமிஷம் இருக்கும். வாசலில், "அம்மா, சின்ன ஆட்டுக் கயிற்றைக் காணோம்; அது ஓடுகிறது. நான் பிடிக்க மாட்டேன் போ" என்று ஒரு சிறுவன் சிணுங்கின வார்த்தை களில் சொன்னான். உடனே கதவு 'டபார்' என்று திறந்தது. உள்ளே இருந்து காளியம்மாள் ருத்ர காளிபோல் கிளம்பினாள். "அடே கண்ணே, உன்னை மறந்தேண்டா. உனக்காக உயிர் வாழ்வேன்!" என்று அலறிக்கொண்டு எதிரில் நின்ற ராம சாமியை எடுத்து முத்தமிட்டாள்.

ய. மகாலிங்க சாஸ்திரி, எம். ஏ., பி. எல்.

ஸீதாவின் சுயம்வரம் 38

கந்தசாமி ஐயர் ஹைக்கோர்ட்டில் "இண்டர்பிரெட்டர்." மிகக் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர். பூர்விக ஐவேஜியும் உள்ளவர். அவருக்கு ஸீதை ஒரே பெண். அவள் மனோகரமான சௌந்தர்யமும் மதுரமான சாரீரமும் உடையவள். அவளுக்குச் சங்கீதம் சிறுபிராயம் முதல் சகஜமாகவே வந்தது. சில வருஷப் பயிற்சியில் அவள் தேறின சங்கீத விதூஷி யாகிவிட்டாள்.

பெற்றோருக்குச் செல்வக் குழந்தையானதால் ஒரு விசாரமும் இன்றி எந்நேரமும் கான ரஸத்திலேயே ஈடுபட்டு வந்தாள். கந்த சாமி ஐயர் தமக்கு ஓழிந்த நேர மெல்லாம் அவளைப் பாடச் சொல்லிக் கேட்டு அநுபவிப்பார். அவ்வப்போது தெலுங்கு ஸம்ஸ் கிருதக் கீர்த்தனைகளின் பாவ விசேஷங்களையும் எடுத்துக் காட்டு வார். சீதையின் சங்கீத சாகித்திய ஞானம் நாளுக்குநாள் வளர்ந்து வந்தது.

சீதைக்கு விவாக காலம் வந்தபோது கந்தசாமி ஐயர் எல்லா விதத்திலும் திருப்திகரமான வரனைத் தேடுவதில் சிரத்தை கொண்டார். சீதாவின் பூர்ண சம்மதத்தைப் பெற்ற வரனையே மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுக்க வேண்டு மென்று அவர் தீர்மானித்திருந்தார். ஆனல் சீதாவுக்குக் கல்யாணம் என்ற வார்த்தையே பிடிக்கவில்லை. அதிலும் முதலில் வந்த இரண்டொரு மாப்பிள்ளைகளைப் பார்த்ததுமே அவளுக்குச் சிரிப்பை அடக்குவது சிரமமாகிவிட்டது.

ஒரு பிள்ளையாண்டான் 'கிராப்' தலையை அடிக்கடி தடவிக் கொள்வதும், கைக் கடியாரத்தை நிமிஷத்துக் கொரு முறை பார்ப்பதும், கை மோதிரத்தை மீண்டும் மீண்டும் திருப்பிவிட்டுக் கொள்வதும், சிறிது நேரத்திற்கு ஒரு தடவை கைக் குட்டையால் முகத்திலிருந்து வேர்வையைத் துடைத்து விட்டுச் சட்டைப் பையி லிருந்து ஒரு சிறு கண்ணுடியை எடுத்து அதில் முகத்தைப் பார்த்துக் கொள்வதுமா யிருந்தான். அவனுடன் வந்திருந்த அவன் அக்காவுக்கே இது சகிக்கவில்லை. "ஏண்டா சாம்பு, நீ ஆம்படை யாளைப் பார்க்க வந்தயா? அல்லது உன் முகத்தையே நீ கண் ணுடியில் பார்த்துக் கொள்ள வந்தயா?" என்று அவள் கேட்டு விட்டாள். "சட், நான்ஸென்ஸ்! உன் வாயெல்லாம் இங்கே காண்பிக்க வேண்டாம். உன் ஆத்துக்காரருக்கு வச்சுக்கோ" என்ருன் சாம்பு. சற்று அசடு தட்டும் முகத்தைக் கோபக் குறியால் மறைத்துக்கொண்டான். அவனுடைய அக்காவுக்கு இது பொறுக்கவில்லை. 'வந்த இடத்தில் நாளைக்கு வரப்போகிற சம்பந்தி மூன்னிலையில் தன்னை உதாசீனமாய்ப் பேசிவிட்டான்' என்று அவளுக்குத் துக்கமும் ஆத்திரமும் பொங்கி வந்தன. பையன் உல்லாசமாய்க் கந்தசாமி ஐயர் இருக்கும் திக்கில் சுவரைப் பார்த்து, "ஏன், ஏதாவது பாடச் சொல்கிறது தானே?" என்ருன்.

தன் சுதந்தரத்தையும், தைரியத்தையும், சமயோசித புத்தி யையும் பார்த்து சீதை தனக்குள் பரவசமாகி விடுவாள் என்று அவன் மனத்தில் ஓடிய எண்ணம் அவன் முகமலர்ச்சியில் பிரதிபலித்தது. சீதை, "ப்ரோவ பாரமா, ரகுராமா" என்ற கீர்த்தனையை எடுத்தாள். மாப்பிள்ளை தனக்கும் சங்கீத ஞானம் உண்டென்று காண்பிக்கும் பொருட்டு, கூடவே தாளம் போட ஆரம்பித்தான். அவன் சேஷ்டைகளைப் பார்த்தால், எங்கே சிரிப்பு படீரென்று தன்னை மீறிக்கொண்டு வந்துவிடுமோ என்று பயந்து

ஸீதை முகத்தை வேறு புறமாக வைத்துக்கொண்டு பாடினாள். அவள் பல்லவி அநுபல்லவிகளைத் துரிதமாக ஓட்டி விட்டுச் சரணத்திற்கு வந்ததும் கண்கள் மேல் தளத்தின் அட்டைகளை இமை கொட்டாமல் நோக்க, அமுக்கப்பட்ட சிரிப்பு அக் கண்களில் தளும்பி வர, "கலசாம்புதிலோ தயதோ நமரு லகை யதிகாக கோபி" என்ற சாகித்தியத்தை திருப்பித் திருப்பிப் பாட ஆரம்பித்தாள். அந்த இடத்தில் நிரவல், ஸ்வரங்கள் பாடப் போகிறாள் என்று முதலில் எதிர்பார்க்கும்படி இருந்தது. ஆனால் அவள் அப்படி ஒன்றும் பாடாமல் 'கலசாம்பு சாம்பு' என்று அழுத்தம் திருத்தமாய்ப் பாடிக் கொண்டிருந்தாள். இப்படி இரண்டு மூன்று முறை அவள் திருப்பியதும் சாம்பு தாளம் போடுவதை நிறுத்தி விட்டான். அவன் முகம் வியர்த்தது. அம் முகத்தின் களையும் காந்தியும் எங்கேயோ போய்விட்டன. உதடுகள் துடிக்க, மூக்குச்சிவக்க, தலைசுற்ற அவன் தன் அக்காவை நோக்கினான். அவன் வேர்வை துடைக்கும் கைக் குட்டையை முகத்தை விட்டு எடுக்கவில்லை. ஸீதை மேலே பாடாமல் சரே லென்று எழுந்திருந்து உள்ளே போய் விட்டாள். அவள் தகப் பனார் அந்தர்ங்கம் அறிந்து கொண்டவராஞலும் வந்தவர்களுக்கு உகப்புக்காக, "குழந்தைக்கு வெட்கமும் பயமும் அதிகம்" என்று வியாக்கியானம் பண்ணிக்கொண்டு எழுந்து உள்ளே சென்றார். அங்கு ஸீதை ஒரு மூலையில் உட்கார்ந்து, இரு முழங்கால்களுக்கு மேல் தலையைக் கவிழ்த்து முன்றானையால் முகத்தை மூடிக்கொண் டிருப்பதைப் பார்த்தார். பக்கத்தில் நின்று கொண்டிருந்த அவள் தாய் அவளுடைய தலையை நிமிர்த்த யத்தனஞ் செய்து கொண்டு, "இந்தாடி, ஸீதை! வந்தவா என்ன நெனச்சுக்குவா? நீ பண்றது நன்னயில்லை!" என்று முணுமுணுத்துக்கொண் டிருந்தாள். கந்தசாமி ஐயருக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

"ஸீதை அழுகிறளா, என்ன?"

"இல்லை, அப்பா!" என்றாள் ஸீதை, தலை நிமிர்ந்து கலகல வென்று சிரித்துக்கொண்டு. கந்தசாமி ஐயர் கூடத்திற்கு வருமுன் மாப்பிள்ளையும் அவன் அக்காவும் வாசலில் ஸ்டேஷ னுக்குப் போக வண்டிச் சத்தம் பேசிக்கொண் டிருந்தார்கள்.

ஜம்பு கவர்ன்மெண்டு வக்கீல் ராவ்பஹதூர்...ன் செல்வப் புதல்வன். கந்தசாமி ஐயருக்கு அவன் தகப்பனார் பால்ய நண்பர். அவன் லா காலேஜில் வாசித்துக் கொண்டிருந்தான். கொஞ்சம் பருமனும் கருவலுமான சரீரம் உடையவன். பருமனுக்கு உயரம் போதாது. பார்ப்பவர்கள் அவனைக் 'கட்டை குட்டை' என்று சொல்லுவார்கள். அவன் பேசும்போது குரல் "க்ரீச்" என்று கத்தும். அவனுக்கு மெள்ளப் பேசவே தெரியாது. பேச ஆரம் பித்தால் வெண்கலக் கடையில் யானை புகுந்தது போல்தான். சிரித்த முகத்துடன் யாரிடமும் கலகல வென்று பேசுவான். மனதில் வித்தியாச மில்லாமல் பெண்களுடனும் தாராளமாய்ச்

சம்பாஷணை செய்வான். சீதை ஒரு நிமிஷத்தில் அவனை நிதானித்து விட்டாள். நமஸ்காரம் செய்துவிட்டு அவள் உள்ளே போக யத்தனிக்கும்போது ராவ்பஹதூரின் சம்ஸாரம், "அம்மா, குழந்தை, ஒரு பாட்டுப் பாடேன். நீ ரொம்ப நன்னுப் பாடுகிறாய் என்று கேள்விப்படுகிறேன்" என்றாள்.

கந்தசாமி ஐயர் தன் நண்பனின் சம்பந்தத்தில் ஆவலுடைய வராயிருந்ததால் சீதை பாடாமலிருப்பதே மேல் என்று நினைத்து, "அவளுக்கு ரொம்ப ஸங்கோசம். அதிலும் தொண்டை கட்டியிருக்கிறது. இப்போ பாடாத போனால் என்ன? பிற்பாடு பாட்டு இருக்கவே இருக்கு. எங்கே போகிறது?" என்று தட்டிக்கழிக்கப் பார்த்தார். ஆனால் 'மாப்பிள்ளை', "பெண் பார்க்க வருவதில் பாட்டு ஒரு முக்கியமான அயிட்டமல்லவா? அதற்கு 'எக்ஸ்க்யூஸ்' பண்ணிக்க முடியாது" என்று உரத்த குரலில் சொல்லிக்கொண்டு கடகடவென்று சிரித்தான்.

கந்தசாமி ஐயர், "ஆனால் ஒரு பாட்டு, சின்னதாய்ப் பாடி விட்டுப் போ, அம்மா. 'ராகஸுதாரஸ' பாடு. அதுதான் எனக்கு ரொம்பப் பிடிக்கும்" என்று எச்சரிக்கையை நாஸுக்காகச் செய்து அநுமதித்தார்.

சீதை பாட உட்கார்ந்ததும் "ஸ்ரீ கணபதி நி ஸேவிம்பரே" என்ற கீர்த்தனத்தை எடுத்தாள். மாப்பிள்ளைக்கு வெகு சந்தோஷம்; "உங்களுக்குப் பிடித்த கீர்த்தனத்தைப் பாடுவாளா? எனக்குப் பிடித்த கீர்த்தனம் இதுதான். அதைப் பாடுகிறாள்" என்று நிமிர்ந்து உட்கார்ந்தான்.

சீதைக்குக் கொஞ்சம் ஏமாற்றம் ஏற்பட்டது. "இந்த யானைக் குட்டிக்குக் 'கணபதி' என்றால் அர்த்தமாகவில்லையே! இருந்தாலும் சரணத்தில் குட்டை வெளிப்படுத்திவிடுகிறேன்" என்று எண்ணிக்கொண்டு அவள் பல்லவி அநுபல்லவிகளை ஒரு பாய்ச்சலில் தாண்டிவிட்டு, "பனஸ நாரி கேளாதி ஜம்பூ பல மூலாரகிஞ்சி" என்ற சரணத்தை எடுத்துப் பலமுறை திருப்பி "ஜம்பு"வைக் கமகங்களில் வைத்து இழைத்துவிட்டாள்.

சாம்புவைப்போல் இவள் ஜம்புவை நினைத்தது தவறுகி விட்டது. தன் பெயரை அவள் அழுத்தமாய் உச்சரித்ததும் ஜம்புவுக்கு உள்ளம் பூரித்துப் போய்விட்டது. "என் பெயரைக் கீர்த்தனத்தில் வைத்துப் பாடுகிறாள் பார்த்தீர்களா? அதற்காகத் தான் இந்தக் கீர்த்தனத்தை அவள் எடுத்தது. இப்போதாது புரிந்ததா உங்களுக்கு?" என்று அட்டஹாஸம் செய்தான் கந்தசாமி ஐயரைப் பார்த்து. கந்தசாமி ஐயருக்கு ஜம்பு மனஸ் தாபப்படாமல் அந்த மட்டும் பெருமை அடித்துக்கொண்டதில் ஆறுதல் ஏற்பட்டாலும் அவனுடைய கலகலப்பு சீதைக்கு வெறுப்பைத் தருமென்று அவருக்குத் தெரியுமாதலால் தம் நண்பரின் சம்பந்தம் கிடைக்கா தென்று நிச்சயித்துக் கொண்டார்.

ஸீதையின் ஏமாற்றத்தைச் சொல்ல முடியாது. இவனுடைய தடித் தோலுக்கு உணர்ச்சி வரும்படி எப்படிச் செய்வதென்று யோசிக்கலானாள். அப்போது ஜம்பு, கீர்த்தனை முடிந்ததும், "பேஷ், இன்னுமொரு கீர்த்தனை பாடு" என்று அவளிடம் நேரிலேயே உத்தரவிட்டான். ஸீதைக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது. "ஹா, இவ்வளவா உனக்கு" என்று நினைத்துக்கொண்டு "மானமு லேதா" என்ற கீர்த்தனையை எடுத்தாள். ஜம்பு "ஹ ஹ ஹ" என்று சிரித்துவிட்டு, "இது பிளேட்டில் இருக்கிறது. திருப்பித் திருப்பி வைத்துக் கேட்டுக்கொண்டிருப் பேன் பேஷ். எனக்கு ரொம்பப் பிடித்த பாட்டு" என்று கந்தசாமி ஐயருக்கு வெகு ரஸமாக விஷயத்தை வியாக்கியானம் செய்துகொண்டு அவர் பக்கம் திரும்பிக் கொண்டிருந்த சமயம் ஸீதை குபீரென்று சுருதிப் பெட்டியை விட்டு விட்டு எழுந் தோடிச் சமையல் அறையில் ஒளிந்து கொண்டாள். இந்தத் தடவை அவள் சிரிக்கவில்லை. "எருமைக் கடா! மந்தையில் போய் ஒரு பெண் பார்த்துக் கொள்ளுகிறது தானே?" என்று கோபத் தினால் அக்ஷரங்களைக் குதறி எறிந்துகொண்டிருந்தாள்.

ஜம்புவோ, "பாவம்! சங்கோசப்படுகிறப் போலே யிருக்கு" என்று அநுதாபத்தைத் தெரிவித்துவிட்டு எழுந்து சென்றான்.

கந்தசாமி ஐயருக்கு வர வரக் கவலை கடுமையாகி விட்டது. தன் அருமைப் பெண்ணைக் கடிந்துகொள்ள அவருக்கே மனம் இல்லை. அவர் ஸம்ஸாரமும், "ஸீதை தனக்குப் பிடித்தது பிடிக்காததை வாய்விட்டுச் சொல்வதற்குப் பதிலாய் இங்கிதமாய் வெளிப் படுத்துகிறாள். இதில் என்ன தப்பிதம்? அவளுக்குப் பிடிக்காத பிள்ளைக்கு அவளைக் கல்யாணம் செய்து வைப்பது பெரிய பிசகாகும். ஆகையால் இன்னும் பாருங்கோ. குழந்தைக்கு வயசு ரொம்ப ஆகிவிடவில்லை. இந்த வருஷம் இல்லாவிட்டா லும் அடுத்த வருஷம் நடந்தாலும் ஒன்றும் பாதகம் இல்லை. நல்ல வரனுகத்தான் இருக்க வேண்டும். அவளுடைய புத்திசாலித்தனத் திற்கும் யோக்கியதைக்கும் இந்தப் பூனையையும் யானையையும் கொண்டு வந்து காண்பித்தால் குழந்தை என்ன பண்ணுவாள்?" என்று உபந்நியஸித்தாள்.

கந்தசாமி ஐயரின் அம்மாஞ்சி சில ஜாதகங்களைச் சேகரித்துக் கொண்டு பட்டணம் வந்தார். அம்மாஞ்சியிடம் ஸீதையின் சங்கீத விஷயத்தைக் கந்தசாமி ஐயர் தனிமையில் பிரஸ்தாபித்து, "இவளுக்குக் கல்யாணம் லேசில் முடியாதுபோல் இருக்கிறதே!" என்று வருத்தப்பட்டார். அதற்கு அம்மாஞ்சி, "கந்தசாமி, நீ என்ன தெரியாமல் பேசுகிறாய்! இது ஸீதா கல்யாண மல்லவா? எவ்வளவு ராஜாக்கள் வில்லை வளைக்க முடியாமல் அவமானப் பட்டுக்கொண்டு போகவில்லை? அங்கே வில் பரீக்ஷை; இங்கே சங்கீதப் பரீக்ஷை. குட்டி பலே கெட்டிக்காரி. பாடச் சொன்னால் அவளுக்குத் தெரிந்த கீர்த்தனைகளைப் பாடுகிறாள். அதில் ஏதாவது குறிப்பான பதங்கள் வந்தால்...! அது தியாகையர் சாகித்தியம்.

அதற்கென்ன செய்கிறது? வந்தவர்கள் அதை யெல்லாம் ஏன் கவனிக்க வேண்டும்? சங்கீதத்தை அல்லவா ரஸிக்க வேண்டும்? ஆனல் குட்டியின் அந்தரங்கம் நமக்கு விளங்குவதற்கு அதில் ஸூக்ஷ்மம் வைத்துப் பாடுகிறுள். இவளுக்கு நல்ல வித்துவானுயும், சங்கீத ரஸிகனுயும், குலம் சிலம் இவைகளும் உத்தம லக்ஷணங்களும் அமைந்தவனுயும், சீதைக்கு ஸ்ரீராமன் வந்தது போல் ஒருவன் வரவேண்டும். அவன் வரத்தான் போகிறுன். அது வரை நாம் தேடுவதைத் தேடவேண்டியதுதான். அது அதுக்குக் காலம் வந்தால் எல்லாம் பொருத்தமாய் வந்து சேர்ந்து விடும். கவலேப்படாதே" என்று சமாதானம் சொன்னுர்.

அம்மாஞ்சி ராமஸ்வாமி ஐயருக்கு மைத்துனன் பிள்ளே சீனு ஒரு "கிராஜுவேட்". அவன் தனக்கு ஹைகோர்ட்டில் வேலே செய்துவைக்க வேண்டுமென்று கந்தசாமி ஐயரைப் பல நாட்கள் வந்து முற்றுகை போட்டுக்கொண் டிருந்தான். அவனுக்குக் கடைசியில் தஞ்சாவூர் சப் கோர்ட்டில் ஒரு 'கிளார்க்கு' வேலே கிடைத்தது. அவனுக்கு வயசு இருபத்தைந்துக்குமேல் இருக்கும். பிதுரார்ஜிதம் அதிகம் இல்லாதவன். அம்மாஞ்சி குறும்புத்தனமாக சீதைக்குக் காதில் படும்படி அவன் ஜாதகத்தைப்போல் வேறு ஒரு ஜாதகமும் சீதைக்குப் பொருந்தவில்லே என்று ஜோஸ்யர் சொன்னதாக மிகவும் பிரசம்ஸையாய்க் கந்தசாமி ஐயரிடம் பிரஸ்தாபிக்கலானுர். சீதையின் தொனியை அவர் எதிர் பார்த்தார். ஆனல் அவளுடைய கானம் கேட்கவில்லே. பிறகு அம்மாஞ்சியுடன் கந்தசாமி ஐயர் சாப்பிட்டுக்கொண் டிருக்கும் போது சீதை தன் அறையிலிருந்து, "ஸங்கல்பமேட்டிதோ மனஸா" என்ற கீர்த்தனத்தைப் பாடி அனுபல்லவியில், "பங்கேருஹாஸனு ஸீனுடைன" என்றும், சரணத்தில் "ஸர்வஜீவாந்த: கர்ணஸீனுடை" என்றும் பாடியபோது அம்மாஞ்சி ஒரு பிடி சாதத்தை வாயில் போட்டுக்கொண்டவர் திடீரென்று சிரித்தால் எங்கு மாரடைப்பு வந்துவிடுமோ என்று பயந்து சிரிப்பை அடக்க மிகவும் சிரமப்பட்டார்.

பெரிய ஸ்திரீ சைன்யத்தோடு வந்திருந்த ராஜு, மாப் பிள்ளேயாக நடித்தது யாருக்கும் சிரிப்பை மூட்டுவதாகவே இருந்தது. அவன் விசிறி மடிப்பு அங்க வஸ்திரத்தை அடிக்கடி தோள்மேல் தூக்கிவிட்டுக் கொள்வதும், மூக்குக் கண்ணுடியைக் கழற்றிக் கழற்றிப் போட்டுக்கொள்வதும், சந்தனத்தைத் தொட்டுத் தொட்டு மோந்து பார்ப்பதும், பாக்குத் தூளியும் சர்க்கரையையும் மாற்றி மாற்றி வாயில் போட்டுக் கொள்வதும், அம்மாமி, அக்கா, அம்மா இவர்கள் சொற்படி உட்காருவதும், எழுந்திருப்பதும், திரும்புவதும், 'காபி வேண்டாம், பழம் வேண்டாம், ஸொஜ்ஜி வேண்டாம்' என்று கைகளே விடாமல் ஆட்டிவிட்டுப் பிறகு ஒன்றையும் விடாமல் அங்கீகரித்துப் புசிப்பதும் சீதைக்குப் பெரியகாமிக்'காக இருந்தது. ராஜு மிகவும் சங்கோசி. பெண்ணேப் பார்ப்பதற்கே அவன் தலே நிமிரவில்லே.

ஸீதை அவனுக்கு, "பராமுக மேலரா" என்ற கீர்த்தனையை எடுத்தாள். அவள் சரணத்தில் "இபராஜு நீகு" என்று பாடும் போது ராஜு தலை நிமிர்ந்து பார்த்தான். ஸீதை அந்த இடத்தில் நிரவல் செய்ய ஆரம்பித்தாள். அதற்குள் ஸ்திரீ சைன்யம் கலவரம் செய்ய ஆரம்பித்துவிட்டது. "என்ன துணிச்சல் அடி! எத்தனையோ பெண்கள் பாடல்லையோ! இதென்னடி அதிசயமா யிருக்கு! இப்படிச் செல்லம் கொடுத்து வளர்த்திருக்காளே! இந்தப் பெண் ஓரிடத்துக்குப் போய் ஒருத்தனுக்கு அடங்கி வாழவேண்டாமோ?" என்றெல்லாம் கேட்டதும் கேட்காததுமாக ஏசிக்கொண்டு வந்த பெண்டுகள் வெளிக் கிளம்பினார்கள்.

சோமு ஹானர்ஸ் பரீக்ஷைக்குப் போயிருந்தான். அவன் திருச்சியில் ஸப் ஜட்ஜாக இருந்த சாம்பசிவையர் பிள்ளை. அவன் நல்ல சாரீரமும் சங்கீதப் பயிற்சியும் உள்ளவன்; சங்கீத அபிமானத்துடன் குடுமி அபிமானமும் அவனுக்கு இருந்தது. நல்ல அழகும் கம்பீரமுமான தோற்றமுடையவன். கந்தசாமி ஐயருக்கு அவனுடைய ஜாதகம் அவனுடைய காலேஜ் புரொபஸர் ஒருவர் மூலமாய்க் கிடைத்தது. ஜோஸ்யர் ஜாதக பாவத்தையும் பொருத்தங்களையும் பற்றி மிகவும் புகழ்ந்து பேசினார். ஸப் ஜட்ஜியும் தம் திருப்தியைத் தெரிவித்துப் பையனைப் பெண் பார்க்க அனுப்பினார்.

கந்தசாமி ஐயருக்குச் சோமுவிடம் பூர்ணமான பிரீதி ஏற்பட்டது. ஸீதையை அவனுக்குக் கொடுத்துவிடுவதென்று மனத்தில் நிச்சயித்துக் கொண்டார். ஆனால் ஸீதையின் சங்கீத விஷயத்தில் அவன் முறியடிக்கப்பட்டால்?—அப்படி ஒன்றும் நேராது என்று அவருக்கு நம்பிக்கை இருந்தது.

ஸீதை சோமுவின் முன் வந்ததும் அவனுடைய மலர்ந்த கண்களின் பார்வையில் தேனில் விழுந்த ஈயைப்போல் சிக்கிக் கொண்டாள். அவளுக்கு என்றும் இல்லாத பயமும் நாணமும் ஏற்பட்டன. குறும்புத்தனமான எண்ணங்கள் பறந்தோடிப் போய்விட்டன. கவிழ்ந்த முகத்துடன் தந்தப் பதுமைபோல் அவன் முன் நின்றாள். "நமஸ்காரம் பண்ணு" என்று யாரோ சொன்னது போலிருந்தது. அப்பாதான் சொல்லியிருப்பார். அப்பாவைப் பார்த்துக்கொண்டு அவர் பக்கமாய் நமஸ்காரம் செய்துவிட்டுத் தலை நிமிராமல் பின்னே நகர்ந்தாள். அம்மா, "உட்காரு" என்றாள். ஒரு பீரோவின் மறைவில் உட்கார்ந்தாள். எல்லோரும் பாடச் சொன்னார்கள். "மாப்பிள்ளை"யும் தன் பாட்டை எதிர்பார்ப்பதாக அவளுக்குத் தோன்றிற்று.

அவளுக்கு ஒரு பாட்டும் ஞாபகத்திற்கு வரவில்லை. "எதுடி நிலைத்தே பாடச் சொல்லுங்கள்" என்று சோமு புன்சிரிப்போடு கந்தசாமி ஐயரைத் தூண்டிவிட்டான். "எத்தையாவது பாடு" என்று அம்மாவும் உபத்திரவித்தாள். வேறு ஒரு பாட்டுக்கும்

அடி ஞாபகம் வராததால் "எதுட ஹிலேரிதே" என்று ஆரம்பித்தாள். ஆனால் "நீது ஸோ(ம்)மூ" என்ற வார்த்தைகளை உச்சரிக்கப் போகும்போது திடீரென்று பாட்டை நிறுத்தி விட்டாள். சோமு எதற்காக அந்தக் கீர்த்தனையை எடுத்துக் கொடுத்தான் என்று அவளுக்கு அப்போது விளங்கியது. தான் இவ்வளவு நாளாகப் பல பேர்களை வெருட்டி அடித்ததற்கு இந்தச் சிக்ஷை அன்று லபித்தது என்று எண்ணிக் கொண்டாள். "வேறு ஏதாவது பாடலாமே?" என்றான் சோமு விஷமமாக. அம்மா தூண்டுதல் செய்தாள். அப்பா ஆன மட்டும் சொல்லிப் பார்த்தார். சீதை வாய் திறக்க மறுத்துவிட்டாள்.

"சரி, அவள் பாட வேண்டாம். நான் பாடுகிறேன். அதை யாவது கேட்கட்டும்" என்று சொல்லிக் கொண்டு சோமு பாட ஆரம்பித்தான்.

"சிந்தயமாம் கந்தஸ்வாமி கன்யே. ஸீதே, ஸ்ரீ சோமாஸ் கந்தம்" என்று அவன் பாடியதும் எல்லோரும் கொல் என்று சிரித்துவிட்டார்கள். சீதைக்கும் சிரிப்பு வந்தது. சோமு கீர்த்தனையைப் பாடி முடித்துவிட்டு, "பெண் பார்க்க வந்தால் பின்னை பாடிப் பெண் கேட்கிறதா? அல்லது, பெண் பாடிப் பின்னை கேட்கிறதா? இப்போது அவள் பாடத்தான் வேண்டும்" என்று விளையாட்டாகப் பிடிவாதம் செய்ய ஆரம்பித்தான். சீதைக்குச் சோமுவின் பாட்டைக் கேட்டதும் ஒரு புதிய உணர்ச்சியும் உத்ஸாகமும் ஏற்பட்டன. 'அவர் பாடி விட்டார். பாட்டென்ன! எப்பேர்ப்பட்ட பாட்டு! அதில் என்ன என்ன குறும்புத்தனம்! நான் இப்போது பாடாவிட்டால் அவர் மனக் குறையுடன் போகும்படி நேரிடுமே! மேலும், அவர் தம் மனை பாவத்தை வெளிப்படுத்திய பிறகு நான் அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளா விட்டால் நன்ன யிராது' என்றெல்லாம் அவள் யோசித்திருக்கலாம். ஆனால் இப்படி யெல்லாம் யோசனை செய்ததாக அவளுக்கே தெரியாது. அவள் எந்தக் கீர்த்தனை பாடுவதென்று யோசிக்கவும் இல்லை. ஏதோ வாயில் வந்ததைப் பாடினாள். அதைத் தான் ஏன் பாடினாள் என்று அவளுக்கே தெரியாது. இனிமையான குரலில் தாளக் கட்டுடன் அக்ஷரசுத்தியுடன் அவள் பாடியது, "நன்னு பாலிம்ப நடசி வச்சிதிவோ நாப்ராண நாத" என்ற கீர்த்தனை. சிவதனுஸைப் பற்றிய தன் பிரதிக்ஞை நிறைவேறியதும் ஸ்ரீராமனை விவாக மண்டபத்தில் வரணை வரித்த ஜனக மஹாராஜாவின் ஆனந்தத்தின் அளவைக் கந்தசாமி ஐயர் அப்போது கண்டுகொண்டார்.

* * * * *

தீபாவளிக்கு முன் சீதாவிடமிருந்து சோமுவுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், "உங்களை அப்பா அழைத்திருப்பார். இருந்தாலும் என் ரூமில் ஒரு 'ரேடியோ ஸ்டேஷ'னும் உங்களிடத்தில் அதற்கு ஒரு 'ரிஸீவிங் செட்'டும் இருந்தால் நான் உங்களை எப்படி

அழைப்பேன் தெரியுமா? ஆனல் 'ராரா ஸீதா ரமணீ மனோஹரா' என்று இப்போது நான் இங்கே பாடுவது உங்களுக்கு எங்கே கேட்கப் போகிறது!" என்று எழுதியிருந்தாள்.

சோமுவுக்கு எப்படியோ அந்தப் பாட்டு அவள் பாடுவது போலவே திருவல்லிக்கேணியில் மாமனூர் வீட்டிற்கு அவன் போய் இறங்குகிற வரையில் நிரந்தரமாய்க் காதில் ஒலித்துக்கொண்டே இருந்தது.

எஸ். மாரிச் செட்டி, பி. ஏ. (ஆனர்ஸ்)

வாழ்வு மலர் 39

ஜமீன்தார்

இந்தத் தேவகி என் வீட்டில் இல்லாமல் இருந்தால் என் வாழ்க்கை பாலைவனத்தைப் போலல்லவோ போயிருக்கும்? அவளுடைய குறும்புக் கண்களும் புன்னகை தவழும் முகமும் என்னைப் பரவசப்படுத்தி விடுகின்றன.

என் நந்தவனத்தில் வளர்ந்துவரும் மான் குட்டி 'சந்துரு' வின் மீது அவளுக்கு அளவற்ற பிரியம். அழகிய மலரைப் பறித்து அணிந்து கொள்வதைப் போன்ற மகிழ்ச்சி அச்சிறு பிராணியைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவளுக்கு ஏற்படுகிறது.

எனக்குப் பெண் குழந்தை இல்லாத குறையை நீக்கினவள் தேவகிதான். தேவகி ஒருவருஷக் குழந்தையாயிருந்த போது அவள் தாய் – என் தங்கை – தன் கணவனுடன் வைசூரியில் இறந்துவிட்டாள்.

தேவகியின் குழந்தைப் பருவத்தை இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் என்மனம் குதூகலிக்கிறது. சின்னஞ்சிறு மலர்க் கைகளால் தொட்டில் கயிற்றைப் பிடித்துக் கொண்டு தூங்கும் பொழுது, அவள் கைகள் கனிந்துவிடுமே என்று என் உள்ளம் வருந்தும். ஆனல் தூக்கத்திலே நிலாவைப் பிடிக்கும் கனவுகளுடன் விளையாடிக் கொண்டு கனவுச் சிரிப்பில் இருக்கும் அவள் முகம் என் வருத்தத்தை அடுத்த கணம் துடைத்துவிடும். விழித்தெழுந்த பிறகு அவளது கிள்ளை மழலைச்சொற்கள் என்னை இன்பத்தில் ஆழ்த்திவிடும்.

மான் போன்று அங்கும் இங்கும் ஓடி, தேன்போன்று இனிதாகப் பேசி அந்த நாட்களிலே தளர்ந்த என் உள்ளத்திற்கு உத்ஸாகம் தந்து வந்தாள். வானத்தையே தன் ஒப்பற்ற தண் கதிர்களால் நிறைத்துவிடும் சந்திரன், இரவிலே அவளுக்கு விளையாட்டுக் கருவி. அமுத நிலவொளி பொழியும் அவ்விரவுகளிலே,

எனது தோளில் சாய்ந்துகொண்டு அர்த்தமில்லாத கேள்விகளைக் கேட்ட அந்நாட்கள் இனி என்று வரும்?

சம்பந்தத்தைத் தாய் இல்லாத குறைவினால் சிறுவயசி லிருந்தே பள்ளிக்கூட ஹாஸ்டலில் சேர்த்து விட்டேன். என் னுடைய ஒரே பையனை அவனை நான் லீவு நாட்களில்தான் பார்க்கமுடியும். கார்காலத்திலே தன்னை மறந்து இன்ப நடனத் தில் திளைத்திருக்கும் மயிலின் அழகு அற்புதமானது. வானத்திலே தோன்றும் அழகிய வானவில் மனத்தைப் பரவசப்படுத்தக் கூடி யது. ஆனால் அவை அதிகநேரம் இருப்பதில்லை. குமிழிகள் மறைந்து போவதைப் போல வெகுசீக்கிரத்தில் அவை மறைந்து விடுகின் றன. அது போலத்தான் லீவு நாட்களில் வரும் என் பையன் என்னை அற்புதத்தில் ஆழ்த்துவான். ஆனால் குயில் பறந்து போவதைப் போல வெகு சீக்கிரத்தில் சென்று விடுவான். அவன் பிரிவை மறக்கச் செய்பவளும் தேவகிதான்.

அடுத்த சனிக்கிழமை பரீக்ஷை எழுதிவிட்டுச் சம்பந்தம் வீட்டில் வருகிறானும். லீவு நாட்களை எதிர்பார்க்கும் மாணவன் போன்று என் பையனின் வரவை மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக் கொண் டிருந்தேன். இப்பொழுது தேவகி அர்த்தமில்லாத கேள்விகள் கேட்கும் சிறுமியல்ல. குழந்தை உள்ளத்தைக் கடந்த அவள் இப்பொழுதெல்லாம் பள்ளியில் கற்றதை என்னிடத்தில் தர்க்கிப் பதில் ஊக்கம் காட்டுபவளாயிருக்கிறாள்.

சம்பந்தத்தைப்பற்றிப் பேசும்பொழுதெல்லாம் தேவகி மௌனம் சாதிக்கிறாள். ஆனால் அப்பொழுது அவள் உள்ளத்தில் எழும் இன்ப உணர்ச்சியை மறைத்துக் கொள்ள அவள் படும் பாடு எனக்குத் தெரியாமல் போவதில்லை.

சம்பந்தம் ஊருக்கு வந்து ஒரு வாரம் ஆகிறது. பழத்தின் மீது ஆசையுடையவன் சும்மா மரத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தால் என்ன பயன்? நாளுக்கு நாள் என் மனத்திலே அரும்பி வந்த ஆசையை ஒருநாள் அவனிடத்தில் சொன்னேன்.

எப்பொழுது இவ்வார்த்தைகள் என்னிடமிருந்து வெளிப் படுமோ என்று எதிர்பார்த்து பரவசமடைந்த உள்ளத்துடன் தனது சம்மதத்தை சொல்லிவிடுவான் என்று நினைத்தேன். ஆனால் பழத்தின்மீது அடித்த கல் அடித்தவன் தலைமீது விழுந்தால் எப்படி இருக்குமோ, அங்ஙனம் இருந்தது அவன் வார்த்தை.

அது என்ன? தேவகியை மணஞ் செய்துகொள்ள மூடியா தென்று கூறினான். சிறு வயசிலிருந்தே அவனுக்குப் பிடிவாத குணம் உண்டு. ஒரே பிள்ளையாயிற்றே என்று கண்டிக்காமல் விட்டிருந்தேன்.

ஆனால் தான் வளர்த்த மாடு தன்னையே முட்ட வந்தால் அடித்து விரட்டத்தானே வேண்டும்? கோபம் மிகுந்த நான் அவனை நோக்கி, "என்னுடைய வார்த்தையை அலக்ஷ்யம்

செய்வதாயிருந்தால் இனி ஒருகணமும் என் வீட்டில் இருக்காதே" என்றேன். அதில் தவறு என்ன?

ஜன்னல் வழியே பார்த்தேன். அவன் வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது தெரிந்தது. அவன் செல்லட்டும். அவனுடைய நன்மைக்காகச் செய்யும் காரியம் என்பதைக் கற்றறிந்த அவன் உள்ளம் ஏன் அறியவில்லை? பெரியவர்கள் பேச்சை உதறித் தள்ளும் அவன் நமக்கு எதற்கு?

சம்பந்தம் :

கூட்டில் அடைபட்ட பறவையை வெளியே விட்டால் எவ்வளவு சந்தோஷமாகப் பறந்து போகிறது! அதுபோலத் தான் நான் தந்தையின் வார்த்தையைக் கேட்டதும் ரயிலேறிச் சென்னை வந்து சேர்ந்தேன்.

எனக்குச் சென்னையில் என்ன குறைவு ஏற்படும்? எனது காலேஜ் படிப்பு சென்னையில்தான். தெரிந்த நண்பர்கள் அங்கே பலர் இருக்கின்றனர். கையில் கொஞ்சம் பணம் இருக்கிறது. என் படிப்பின் உதவியால் வேலையில் அமர்ந்து சம்பாதிக்க மாட்டேனு?

சென்னை வந்து ஒரு வாரமாயிற்று. விளையாட்டுப் பொம்மையை வைத்துக்கொண்டிருக்கும் பையனைச் சிறுவர்கள் சூழ்ந்து கொள்வதைப்போல என்னுடன் பல நண்பர்கள் சேர்ந்தார்கள். அந்த வாரம் எவ்வளவு சந்தோஷமாகக் கழிந்து போயிற்று!

ஆனால் அடுத்த வாரத்தில் என்னிடம் பணம் இல்லாததால் நெருங்கிய நண்பன் ராமகிருஷ்ணனைக் கேட்டேன். கொடுப்பதாகச் சொல்லிப் போனபின் திரும்பி வரவே இல்லை. வீட்டிலே சென்று பார்த்தாலும் அவனைக் காண முடியவில்லை. அவனே இங்ஙனம் என்னைக் கவனிக்காதிருக்கும் பொழுது மற்ற நண்பர்களைக் கேட்கவா வேண்டும்?

சினிமாப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது திடீரென்று எல்லா விளக்குகளும் அணைந்து விட்டால் கொட்டகையில் எவ்வளவு பரப்பரப்பு ஏற்படுமோ அதுபோல என் மனமும் மிக்க பரபரப்பு அடைந்தது.

பத்திரிகையில் வெளிவந்த விளம்பரம் எல்லாவற்றிற்கும் மனு எழுதிப்போட்டேன். நான் ஏறி இறங்காத ஆபீஸ்கள் இல்லை. எங்கே சென்றாலும் வேலை காலியில்லை.

துன்பமும் இன்பமும் பருவகாலங்களைப் போல் மாறி மாறி வரும்போலிருக்கின்றன! சில நாட்களை மிகவும் கஷ்ட நிலையில் கழித்தேன். அதிருஷ்டவசமாகத் திடீரென்று ஒரு சிறு பாங்கியில் வேலை கிடைத்தது.

மாலை வேளையிலே கடற்கரைக்குச் சென்றேன். வானமும் கடலும் முகம் சிவக்க முத்தமிட்டுக்கொண்டிருந்தன. சற்று நேரம் அக்காட்சியை ஒளிந்து பார்த்துக்கொண்டே சந்திரன் கிளம்பினன். ஒளிவிடும் நட்சத்திரக் கூட்டங்களின் அழகிலே, வீசும் தண்ணிய காற்றின் இனிமையிலே, அலைகளின் புன்சிரிப்பு விளையாட்டிலே என் உள்ளம் நிலைத்தது.

நிம்மதியைப் பெற்ற மனம் அப்பாவைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. விவாகத்தினால் ஏற்படும் துன்பங்களை அவர் நினைக்கவில்லை. பெண்கள் செய்யும் சாகசம் அளவுகடந்தது என்பதையும் அவர் உணரவில்லை. என் உள்ளத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளாமல் அன்று கூறினர். என்றேனும் புத்தர் பிரானின் உள்ளமுருக்கும் கதையை அப்பா படித்ததுண்டா? எப்பொழுது பார்த்தாலும் நாகநாத சாஸ்திரிகள் இராமாயணம் வாசிக்கக் கேட்டுக் கொண்டிருப்பார்.

காலேஜில் வாசிக்கும்பொழுது புத்தர் கழகம் ஒன்று இருந்தது. வாரந்தோறும் பிரசங்கங்கள் ஏற்படுத்துவோம். பவானந்தர் என்னும் துறவி சங்கத்தில் அடிக்கடி பிரசங்கங்கள் நிகழ்த்துவார்கள். அவர் பேச்சிலே கம்பீரமான கருத்துக்கள் ஆற்றொழுக்குப் போன்று தங்கு தடையின்றி வரும். அவர் அடிக்கடி கூறுவார்: "உலகில் பெண்களைப் போல்க் கொடிய வர்கள் எவரும் இல்லை. பாம்பின் விஷத்திற்கு முறிவு மருந்து உண்டு. ஆனல் பெண்களின் சாகசத்திற்குத் தப்பிப் பிழைப்பது கடினம். ஆதலின் வாலிபர்களே, பெண்களின் கண்களைப் பகை வனின் விஷந்தீட்டிய அம்பைக் காட்டிலும் கொடியனவென்று நினையுங்கள். அவர்கள் உள்ளம் கற்பாறையை விடக் கடினம் என்று கருதுங்கள். அவர்கள் இதழ்களிலே தோன்றும் சிரிப் பைத் தீயென வெறுத்துத் தள்ளுங்கள். வேடன் வலை விரித்திருக் கிறான் என்பதை அறியாது பறவை வலையில் விழுந்து விடுகிறது. ஆனல், பெண்களின் வலையிலே கண்களைத் திறந்து கொண்டே விழுந்துவிடும் இக்கால வாலிபர்களை நினைத்தாலும் எனக்குச் சிரிப்பு வருகின்றது" என்பார்.

அவர் கம்பீரமான தோற்றமுடையவர். நான் சங்கக் காரிய தரிசியாதலால் அவருடன் அடிக்கடி சம்பாஷிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் இல்லத்திற்கும் ஓரிரண்டு தடவைகளில் போனதுண்டு.

* * *

ஒருநாள் வழக்கம்போல் பாங்கிக்குச் சென்று கொண்டிருந் தேன். வழியிலே திடீரென்று நாகநாத சாஸ்திரிகளைக் கண்டேன். எனக்கு ஆச்சரியம்! அவருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி.

"எப்பொழுது வந்தீர்கள், சாஸ்திரிகளே?"

"நேற்றே வந்துவிட்டேன். உன்னைக் காண எங்கெங்கே சுற்றியலைவது?"

"ஊரிலே அப்பா எல்லோரும் சுகந்தானே?"

"சுகத்திற்கு என்ன குறைச்சல், சம்பந்தம்!...அப்பா கோபத்தால் ஏதோ சொன்னரென்றால் திடீரென்று நீ வந்துவிடலாமா? நீ வந்த பிறகு அவர் உன் ஞாபகமாகவே இருக்கிறார். ஊரிலே வேறு பலர் வம்பு பேசுகின்றனர். நான் சொல்வதைக் கேள். என்னுடன் வந்துவிடு."

"நான் வர இயலாததற்கு வருந்துகிறேன், சாஸ்திரிகளே."

"இன்னும் உன் குழந்தைப் புத்தி போகவில்லையே! நீ வந்த அன்று தேவகி அழுத காட்சியைப் பார்த்திருந்தாயானால் இப்படிப் பேச மாட்டாய்."

"சாஸ்திரிகளே, பெண்களின் சாகசம் உமக்கு ஒன்றும் தெரியாது. சிரிப்பும் அழுகையும் அவர்களுக்குத் தண்ணீர்ப்பாடம். வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பும் உமக்குப் பெண்களின் உள்ளத்தை ஊடுருவிப் பார்க்கும் திறனேது? ஜமீன் கணக்கு கலை ஒழுங்காகப் பார்த்துக் கொள்ளத் தெரியுமே தவிர வேறு ஒன்றும் நீர் அறியமாட்டீர்...அப்பாவிடத்தில் நான் சுகமாக இருக்கிறேன் என்று தெரிவியுங்கள். அவருக்குப் பிரியமான இடத்தில் தேவகியை மணஞ் செய்து கொடுத்து விடச் சொல்லுங்கள். இதுவே எனது முடிவு."

மறுபடியும் தழுதழுத்த குரலில் ஏதேதோ பேசிக்கொண்டே நிழலைப்போல் என்னைத் தொடர்ந்து வந்தார். பாங்கி அருகில் வந்ததும் அவரைப் போகச் சொல்லிவிட்டு உள்ளே சென்று விட்டேன்.

அன்று காரியாலயத்திலிருந்து திரும்பிவரச் சற்று நேரம் ஆகிவிட்டது. என்மனம் சாஸ்திரிகளைத் திருப்பி அனுப்பிவிட்ட என் சாமர்த்தியத்தை நினைந்து களி வெறியுடன் இருந்தது. பவானந்தரை அப்பொழுதே பார்க்கத் துடித்தேன். விவாகத்தை வெறுத்து அதனால் சுற்றத்தையும் பெருத்த செல்வத்தையும் இழந்து நான் இருக்கும் நிலையைப் பார்த்தாலாவது அவர் மனம் எவ்வளவு மகிழ்ச்சி அடையும்!

மனித நடமாட்டத்திற்குச் சற்றுத் தள்ளினவாறு இயற்கையைத் தழுவிக் கொண்டிருந்தது அவரது குடிசை. நான் அதை அடைந்த பொழுது வழக்கத்திற்கு மாறுகக் குடிசை மூடப்பட்டு இருந்தது. உள்ளே விளக்கொளி தென்படவே கதவை மெதுவாகத் தட்டினேன். உள்ளிருந்து மதுவின் வாசனை லேசாக வந்து கொண்டிருந்தது. என்ன ஆச்சரியம்! சாதுவின் வீட்டில் மதுவா? சந்தேகங் கொண்டு பலமாகக் கதவைத் தட்டினேன். கதவு திறக்கப்படவில்லை. சற்று நேரம் மௌனம். மீண்டும் பலமாகத் தட்டினேன்.

பிறகு மெதுவாகக் கதவு திறக்கப்பட்டது. வெளியில் யார் உள்ளனர் என்பதை அறிய ஆவலுடன் ஓர் உருவம் தலையை

நீட்டிப் பார்த்தது. ஐயோ! இதென்ன காட்சி! என் தலை சுழன்றது. அவள் ஒரு பெண். என்னைக் கண்டதும் மின்னல் போன்று தெருவில் ஓடி மறைந்தாள்.

மறுபடி கதவு பூட்டப்பெறும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டு ஓடிப் பலங் கொண்டமட்டும் தள்ளித் திறந்தேன். என் எதிரில் பவானந்தர் மௌனமாக நின்று கொண்டிருந்தார். உள்ளிருந்து வந்த மதுவின் வாசனை என்னை உலுக்கிற்று. மங்கிய விளக் கொளியிலே அவரை வெறித்துப் பார்த்தேன். கண்ணாடி போன்று அவர் முகம் அவர் உள்ளத்தை எனக்குக் காட்டிற்று.

பெண்கள் விஷம் என்று சொல்லி வந்த பவானந்தரா இவர்? ஆசைக்கு அடிமையாகாதே என்று சொன்னதும் இவர்தாமோ?

குழம்பிய உள்ளத்துடன் திரும்பினேன். மனத்திலே பெரும் போராட்டம். அன்று பவானந்தருடன் பழகினபொழுது கலா சாலை நண்பர்களிற் சிலர் அவரைப் பலவாறு கூறி வந்தார்கள். அறியாமையைத் தழுவிக் கொண்டிருந்த என் மனம் அவர்கள் கூற்றை ஆராய அப்பொழுது மறுத்துவிட்டது.

ஆகாயத்திலே நட்சத்திரங்கள் என் நிலைமையைப் பரிகசிப் பன போல் மின்னிக் கொண்டிருந்தன. மேகத்தினிடமிருந்து தப்பித்துக்கொண்டு ஒளியுடன் சந்திரன் தோன்றினன். இருட்டு அறையில் வெளிச்சம் ஏற்படுவது போல என் மனத்திலும் ஒரு புத்தொளி வீசிற்று.

'உலகத்தைக் குருட்டுக் கண்களால் பார்த்தது போதும். இது வரை தூங்கிக் கொண்டிருந்தாய். இனி விழித்திரு. வாழ்வு மலர் வாடிப் போகுந் தன்மையுடையது. மலர் அலர்ந்துள்ள போதே பறித்து அணிந்து கொள், ஆசை கொடியதுதான். ஆனால் உலகப் பற்றைத் துறந்து நீ சாதிக்கக் கூடியது என்ன?' என்று என் மனம் போதித்தது.

என் தந்தை தாயில்லாச் சிறுவனும் ஒரே மகனுமான என்னை எவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்தார்! என்னையே தம் பிற்கால வாழ்க்கைக்கு ஊன்றுகோலாக நம்பி இருந்தார். பிச்சை கேட்டுக் கொண்டிருக்கும் குருடன் ஒருவன் பாத்திரத்தில் பிச்சை போடுவ தற்குப் பதில் அவன் பாத்திரத்தில் இருந்தவற்றைத் திருடினது போல் ஆனது என் நிலைமை. தந்தையின் அன்பை இழந்தேன். அவர் மன அமைதியைத் தொலைத்தேன். நான் தந்தைக்குச் செய்யும் நன்றி இதுவோ?

தேவகி சிறு வயதிலே சின்னஞ்சிறு சிட்டைப் போல் எவ்வளவு குதூகலமாய் என்னுடன் விளையாடிக் கொண்டிருப் பாள்! பெற்றோரை இழந்த அவளுக்கு நானும் அப்பாவுந்தான் எல்லாம். அப்பா தேவகிக்கு என்னை மணஞ் செய்து வைக்க விரும்பியதில் தவறில்லை. ஆனால் நான் செய்த குற்றத்திற்குப் பரிகாரம்?

அன்று நாகரீக சாஸ்திரிகள் என்னுடன் பேசினது இன்னும் என் காதில் ஒலிக்கிறது. அவரைத் துரத்தி விட்டது எவ்வளவு பாவம்! அவர் இன்னும் ஒரு நாள் இருந்திருந்தாரானால் என் வாழ்வு வேறு விதமாய்ச் சென்றிருக்கும்.

தேவகி :

அன்று அத்தான் வீட்டை விட்டுப் போனது முதல் எனக்கு உலகமே இருண்டது போலாயிற்று. சிறு வயசிலே இருவரும் எவ்வளவு பிரியமாய் விளையாடி இருந்திருக்கிறோம்! நிலா மலர்ந்த நாட்களில் நந்தவனத்தில் வந்து உட்கார்ந்து கொள்வோம். பூக்களைப் பறிப்பதில் எங்கள் இருவருக்கும் போட்டி ஏற்படும். அதில் ஜயிப்பது அவர்தாம். ஒரு சமயம் ரோஜாப்பூ ஒன்றை நான் பறித்துக் கொண்டிருந்தபொழுது ஒளிந்திருந்த முள்ளொன்று என்னைக் குத்த ரத்தம் பீரிட்டது. நான் போட்ட கூச்சலில் அவர் பயந்தே போனார். அன்று முதல் எங்கள் இருவருக்கும் ஓர் உடன்படிக்கை. பூப் பறிக்கவேண்டியவர் அவர். மாலையைக் கட்டுபவள் நான். பின்பு மாலையை எனக்கு அணிய வருவார். நான் எனது 'சந்துரு'வின் கூடவே ஓடுவேன். ஆகா, அந்தக் காலம் இனி வருமா?

அவ்வளவு பிரியத்தோடு இருந்த நாட்களை மறந்து அவர் அன்று என்னை வேண்டாமென்று சொன்னதேன்? ஒருவேளை என்னைவிட அழகில் சிறந்தவளைக் காதலித்திருக்கலாம். அவர் பெரிய ஜமீனுக்குச் சொந்தமானவர். அரிய படிப்பாளி. ஏழையாகிய என்னை அவர் நினைக்க முடியுமா? ஹோட்டலில் வைத்திருக்கும் தின்பண்டங்களின் நறுமணத்தை நுகர்ந்து ஏக்கப்பட்டிருக்கும் பிச்சைக்காரனைப் போன்று இருக்கிறது என் நிலைமை.

என் பெற்றோர் சென்றபிறகு என்னை என் அருமை மாமா வளர்த்து வருகிறார். என்னைக் கணநேரமும் விட்டுப்பிரியச் சம்மதிக்க மாட்டார். சிறு வயசிலே விதவிதமான விளையாட்டுப் பொம்மைகளை வாங்கிக் கொடுத்து என்னைப் பரவசப்படுத்தின அந்தக்காலம், இளநகை புரிந்து மருண்ட பார்வையுடன் கொஞ்சும் 'சந்துரு'வை எனக்குத் தந்த அக்காலம், ஒளியைச் சிந்தும் சந்திரனை விளையாட்டுக் காண்பித்து ஆறுதல் அளித்த அந்தக் காலம், சென்றுவிட்டது. ஆனால் அவர் அன்பை நான் மறக்க முடியுமா?

ஒரு நாள் வெளியே சென்ற பொழுது சில பெண்கள் எனக் கெதிரே பேசிக்கொண்டு வந்தார்கள்.

"குதிர் போல வளர்ந்திருக்கும் இவளுக்கு இன்னம் கல்யாணம் செய்து வைக்காமல் இருக்கிறாரடி, ஜமீன்தார்."

"அதிருக்கட்டுமடி, ஜமீன்தார் மகன் கல்யாணம் வேண்டாமென்று வீட்டை விட்டு ஓடி விட்டானும். இந்தக் காலத்துப்

பையன்களே இப்படித்தான். உலகம் போகிற போக்கைப் பார்த்தாயா?"

நான் அன்று கண்ட சிறு நெருப்பு, சில நாட்களில் பெரிய அக்கினிச் சுவாலையாக மாறிவிட்டது. ஊர் வம்பைக் கேட்டு முன்னமே நொந்துபோயிருந்த என் மாமாவின் உடல், நாளுக்கு நாள் இளைத்துவந்தது.

நிலைமையை வளரவிட விரும்பாத நாகநாத சாஸ்திரிகள் அத்தான் சென்னையில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரைக் கூட்டிவரப் புறப்பட்டுச் சென்றார். அவர் வெற்றியுடன் திரும்ப வேண்டுமென்று என் மனம் இறைவனைத் துதித்துக் கொண்டிருந்தது.

ஆனால் நாம் எண்ணுகிறபடி எதுதான் நடக்கிறது? இரண்டு நாட்களிலேயே திரும்பி வந்து விட்டார் சாஸ்திரிகள். தோல்வி என்பது அவர் நெற்றியில் எழுதி யிருந்தது. அத்தான் சுகமாக இருப்பதாகவும், ஆனால் யாருடைய போதனையினாலோ விவாகமே வேண்டா மென்னும் வேதாந்தப் பிரசாரத்தில் இறங்கிவிட்டார் என்றும், கெட்ட வழிகளில் செல்லவில்லை என்றும் தெரிவித்தார்.

அத்தான் வேறு யாரையும் காதலிக்கவுமில்லை, மணஞ்செய்து கொள்ளவுமில்லை என்று அறிந்த என் மனம் சற்று ஆறுதலை யடைந்தது. என் ஆறுதல் அதிக நாள் நீடித்திருக்கவில்லை.

அடுத்த வாரம் பரிதிவனம் ஜமீன்தார் நம் வீட்டிற்கு வந்தார். அவருடைய மகனுக்கு என்னை மணஞ் செய்து கொடுக்கும்படி கேட்டார். ஊர் வம்பிற்குப் பயந்து நான் எங்கேனும் சுகமாக இருந்தால் சரியென்ற மனத்துடன் அதற்கு மாமா சம்மதித்து என் விருப்பத்தைக் கேட்டார். இதுகாறும் அவர் அன்பிலே வளர்ந்துவந்த நானும், "இஷ்டப்படி செய்யுங்கள், மாமா" என்று சொல்லிவிட்டேன்.

பின்பு படுக்கையிலே முகம் குப்புற விழுந்து அழுதேன். என்னை மணஞ் செய்துகொள்பவர் எத்தகைய குணம் உடையவரோ? அத்தானைப் போன்ற நற்குணம் உள்ளவர் உலகில் இருக்க முடியுமா? இனிய தின்பண்டங்கள் வாங்கி வருகிறேன் என்று சொல்லிப்போன தகப்பனை எதிர்நோக்கும் சிறுமிபோல, என் எதிர்காலத்தைப்பற்றி இன்பகரமான மனக்கோட்டைகள் கட்டி யிருந்தேன். ஆனால் அவை யாவும் சமுத்திர அலைகளால் அழிக்கப்பெற்ற சிறுமிகளின் மணல் வீடுகளைப்போலாயின.

விவாகத்திற்குத் தடபுடலாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முகூர்த்த நாளிலே மணவறையில் பதுமைபோல் உட்கார்ந்து கொண்டிருந்தேன். ஆயிற்று, மேள சப்தத்தின் இடையே என் கழுத்தை நோக்கி இரு கைகள் வருவதைப்போன்றிருந்தது. மூர்ச்சை யடையும் நிலையில் இருந்தேன். அப்பொழுது

திடீரென அங்கே ஏற்பட்ட ஆரவாரம் என் மூர்ச்சையைத் தெளிவித்தது.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு சிறு போலீஸ் படை ஒன்று மண வறையை நோக்கி வந்தது. என்னை மணஞ் செய்துகொள்ள விருந்த ஜமீன்தார் மகன் ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருப் பதாகக் கைது செய்துகொண்டு போய்விட்டார்கள்.

சிறையிலே இருந்த ஒருவரைத் திடீரென்று விடுதலை செய்தால் எப்படி இருக்குமோ அங்ஙனம் என் உள்ளம் மகிழ்ந்தது.

ஆனால் எதிர்பாராத இந்தச் சம்பவம் என் மாமாவைப் படுக் கையில் தள்ளிற்று. "சம்பந்தம், சம்பந்தம்!" என்று அடிக்கடி ஜுரத்திலே பிதற்ற ஆரம்பித்தார். எனக்குச் சொல்ல முடியாத பயம் ஏற்பட்டது. நாகநாக சாஸ்திரிகள், "அப்பாவின் நிலைமை அபாயம். டாக்டருடன் வருக" என்று அப்பொழுதே தந்தி அடித்துவிட்டார் சென்னைக்கு.

அத்தான் அடுத்த நாள் டாக்டருடன் வந்து சேர்ந்தார். டாக்டர் மருந்து மாமாவின் ஜுர வேகத்தைத் தணித்தது.

"அப்பா, உங்கள் உள்ளத்தைச் சரியாக அறிந்து கொள் ளாமல் அன்று ஓடினேன். நான் செய்த பிழையை மன்னித்து விடுங்கள். தேவகியை மணஞ் செய்துகொள்ளுகிறேன்" என்று அத்தான் கூறினார்.

இரவு சென்று இரவி வந்தான். குவிந்த மலர் விரிந்தது. பட்சிகள் இனிமையாய்ப் பாடிச் சென்றன.

அடுத்த முகூர்த்தத்தில் அத்தானுக்கும் எனக்கும் மணம் நடந்தேறியது.

கி. முத்துஸ்வாமி

குல தெய்வம் 40

கார்த்திகை மாதத்து வெயில் மிதமான உஷ்ணத்துடன் காய்ந்து கொண்டிருந்தது. அந்த மாலை வெயிலில் கால்களை நீட்டிக் கொண்டு திண்ணையின்மீது உட்கார்ந்திருந்தான் கிழ வைரவன். அவன் கைகள் வெற்றிலை பாக்கு உரலை இடித்துக்கொண் டிருந்தன. 'தாத்தா!' என்ற குரலைக் கேட்டதும் இடிப்பதை நிறுத்திக்கொண்டு திரும்பினன் கிழவன்.

கையை நெற்றிக்கு நேரே பிடித்துச் சூரிய வெளிச்சத்தை மறைத்துக்கொண்டு, "யாரு, மருதாயியா? வா அம்மா. ஏன் வெயில்லே நிக்கிறே?" என்றான். அவன் குரலில் ஒருவித வாத்ஸல்யம் பிரதிபலித்தது.

"இல்லே தாத்தா, என் பாட்டனுக்குக் கால் சுளுக்கிக்கிடிச் சாம். அதுதான் ஒன்னைக் கேட்டுக்கிட்டு நாலு நொச்சித்தளே பொறிச்சுக்கிட்டுப் போவுலாமின்னு வந்தேன்" என்றுள் மருதாயி.

"அடேடே, இதைக் கேப்பானேன் குட்டி! நம்ம ஊட்டுக் கொல்லீலே இருக்குது; போயி எடுத்துக்கிட்டுப் போ."

மருதாயி வீட்டின் உட்பக்கம் பார்த்துக்கொண்டே நின்றுள்.

"அந்தப் பய ஊட்டுலே இல்லே; நீ போம்மா" என்றான் கிழவன்.

மருதாயி உட்பக்கம் சென்றதும் சிந்தனையில் ஆழ்ந்தான் வைரவன். அவன் மனச் சோர்வுகளைச் சற்று நேரத்திற்கு ஒரு தரம் வெளிப்பட்ட பெருமூச்சுகள் வெளிப்படுத்தின. மீண்டும், 'தாத்தா' என்ற குரல் கேட்டது.

கிழவன் சிந்தனையிலேயே லயித்திருந்தான்.

"என்ன தாத்தா, என்னு வேதனைப் பட்டுக்கிட்டிருக்கே?"

கிழவன் திரும்பினான்; "சாமுப் பயலாடா? என்னமோ, வியாகூலம்..."

"அண்ணன் இல்லியா?"

"பொளுது சாஞ்சிருச்சில்லே? அண்ணன் எப்படி ஊட்டுலே இருப்பான்? ஏன்? இப்படிக் குந்தேன்..."

சாமு உட்கார்ந்துகொண்டான்.

"சாமு, இதா பாரு: ஏதோ, நானும் நாலு நாயம் நீயம் தெரிஞ்சு வெச்சுக்கிட்டு இருந்தேன். அதோடே, ஊருக்கும் கொஞ்சம் 'பெரியவங்'கிற மொறையிலே, என்னே ஒரு ரோசனே கேக்கக் கொள்ள வெச்சுக்கிட்டிருக்கிறீங்க. இப்படி இருக்கையிலே இந்தப் பயமவன் – அதுதான் எனக்கு 'மவன்'னு ஒருத்தன் இருக்கிறானே – அந்தப் பயலோடே யோகியதையும், நடவடிக்கையும் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கல்லேப்பா. ஊம்...இதுக்கு என்னு பண்றது? ஊருக்குச் சொல்ற நாயம் எனக்கு இல்லே? நான் என்னுத்தைச் சொல்லுவேன் போ! மனசு ஒண்ணும் சரியில்லே –"

"தாத்தா, இதுக்காவவா மாஞ்சு போறே? இதோ பாரு: இந்த ஆட்டவாட்டமெல்லாம் கொஞ்ச நாளேக்கித்தான் பாரு; தானே அடங்கிடுவான்!"

"உம்! அவனுவது, அடங்கவாவது! இப்பவே 'தெய்வம் என்னுத்துக்கு, பூசை என்னுத்துக்கு'ங்கறான். இருக்க இருக்க ஜாஸ்தியாத்தானே போயிக்கிட்டிருக்கு? பெசகெல்லாம் எங்கிட்டத்தான்; அவனே ரெங்கூனுக்குப் போகவிட்டது பெசகு. பேசாமெ, நம்ம ஊட்டோடே, வாசலோட வெச்சுக்கிட்டிருந்தா இப்படி ஆவமாட்டானில்லே? குடிப்பளக்கமும் வந்திருக்காது...

உம்! போனதைச் சொல்லி என்ன?"– கிழவன் பெருமூச் செறிந்தான்.

"பேசாமெ இந்த வருசம் ஒரு கட்டையைக் கட்டிப் போட்டுடு, தாத்தா!"

"அதுதானே எனக்குக் கவலேயா இருக்குது! கட்டையைக் கட்டிப் போட்டுட்டாப்பிலே ஆயிடுச்சா? குடும்பம் பண்ண யோக்கிதை வாணுமா? அவளே என்னு பாடு படுத்துவானே? இல்லே, வர்ற மவராசிதான் என்னு தினுசா வர்ருளோ?"

"அதெல்லாம் நல்ல பொண்ணு வந்துடும் தாத்தா."

கதவு தாழிடும் சப்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தனர். கையில் தழையுடன் வெளியே வந்தாள் மருதாயி.

அவள் போனதும் சாமு, "தாத்தா, இதாரு? பொன்னன் பேத்தில்ல?" என்றான்.

"ஆமா, அந்தக் குட்டி மருதாயிதான்."

"நல்லா ராசாத்தியாட்டம் வளந்துட்டாளே!..." – சாமு கிட்டே நெருங்கி வந்து தாழ்ந்த குரலில், "தாத்தா, அண்ணனுக்கு இதைக் கட்டிப்போட்டுட்டா என்னு? மகாலெச்சுமியாட்டம்" என்றான்.

"அட, அது தங்கமான பொண்ணுடா; அதை இந்தப் பய லுக்குக் கட்டக்கூடாதப்பா–"

சாமுப்பயல் ஆச்சரியத்துடன், "என்னு?" என்றான்.

"ஆமாண்டா, மருதாயி உத்தமமான பொண்ணு. ஆயி, அப்பன் இல்லே. அதை இந்தப் பாவிப்பய குடிச்சுட்டு வந்து இமிஷை பண்ணினுன்னு என் மனசு கேக்காது."

"தாத்தா, அப்படியெல்லாம் சொல்லாதே. ஒனக்கு இருக்கிற நல்ல மனசுக்கு மாரியாத்தா ஒரு கொறையும் வெக்க மாட்டா, புடி!"

"என்னமோ அப்பா, நான் அவளேயேதான் நம்பிக்கிட்டு இருக்கேன். அவதான் என் குலதெய்வம். அவ கண் தெறந்து பார்த்துத்தான் இந்தப் பயல் மனசைச் சரிபண்ணணும்."

சாமு எழுந்திருந்தான்.

"ஏன் கிளம்பிட்டியா?"

"வாய்க்காங் கரை வரையிலே போயிட்டு வாரேன்."

"என்னமோ, என்னேக் கொஞ்சம் கவனிச்சுக்கோ அப்பா"

சாமு சென்றதும் வைரவன் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான்.

2

சின்னப்பன் நாட்டாண்மைக்கார வைரவனின் ஒரே மகன். இரண்டு வருஷங்களுக்குமுன் ஊரை விட்டுப் போகும்போது குயவர் தெரு முழுவதும் அவனுக்காக அங்கலாய்ப்படைந்தது.

ஊரில், 'நாட்டாமைக்காரன் மவனேப்போன்ற நல்ல பிள்ளே கெடையாது' என்ற பெயர் வாங்கியிருந்தான். அவனுடைய சிரித்த முகம், தெய்வபக்தி எல்லாம் தெருவாசிகளின் மனத்தைக் கவர்ந்திருந்தன. இவற்றையெல்லாம் அவனுடைய ரங்கூன் பிரயாணம் மாற்றிவிட்டது.

முன்னேப்போல் அவன் சௌஜன்யத்துடன் பேசுவதில்லே; தினமும் கள்ளுக் கடையையே சுற்றிக்கொண்டிருந்தான். "தெய்வம் ஏது, பூசை என்னத்துக்கு?" என்றான். அடிக்கடி அக்கப்போர்கள் நடத்திக் கொண்டிருந்தான். அவனேப் பற்றிப் பலர் பேசலாயினர்.

கிழ வைரவன் மனம் உடைந்து போனான். அந்திய காலத்தில் தன் மகன் இப்படி மாறி விடுவான் என்று அவன் எண்ணவில்லே. ஊருக்கெல்லாம் நியாயம் தீர்த்த அவன் உள்ளம், மகனுக்காகப் போராடியது. தெருவில் பலர் இழிவாகப் பேசும்பொழுது அவனல் பொறுக்க முடியவில்லே.

* * * *

அந்திவானத்தின் செவ்வர்ணம் மாறிக் கொண்டிருந்தது. சந்திரன் ஒளி சிறிது சிறிதாகப் பூமியைத் தழுவ ஆரம்பித்தது.

மருதாயி மண் துவைத்துக் கொண்டிருந்தாள். சின்னப்பன் இடுப்பில் கையைக் கொடுத்துக் கொண்டபடியே, அவளேப் பார்த்துக்கொண்டு நின்றான்.

"தா, ஏன் இப்படி இருட்டி ஏளு நாளி மூட்டும் மண்ணு தொவைச்சுக்கிட்டிருக்கே? இந்தக் குளிர்லே நின்னு காச்சல் வந்தா என்ன பண்ணுவே? இல்லே, ஒரு பூச்சி பொட்டு இருந்து கடிச்சாத்தான் என்ன செய்வே? உம்..."

"ஆமா! இன்னிக்கி, நேத்திக்கி வேலே செஞ்சா அது புதிசு; அதெல்லாம் எனக்குக் காச்சலும் வராது; பூச்சியும் வராது!" என்று மருதாயி திரும்பிப் பாராமலே பதில் இறுத்தாள்.

"ஏன், ஒங்க கிளவந்தான் தொவைச்சா என்ன? நீதான் இப்படிச் சாவணுமோ?"

மருதாயி அவனே ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தன் வேலேமீது கவனம் செலுத்தினுள்.

"அதுதான் ஓளுச்சு ஓளுச்சு ஓடாப் போயிட்டுதே. அது என்னத்துக்கு வேலே செய்யணும்? அது மவ செத்தத்துலேருந்து ரெண்டு வருசமா நான் அதை வேலே செய்ய உட்றதில்லே."

"ஆ! ஒங்க ஆயி செத்தத்துலேருந்தா நீ செய்யறே? அதுக்கு இந்த இருட்டிலே செய்யாட்டி என்ன?"

"இண்ணைக்கித் தொவைச்சுப் போட்டாத்தானே, நாளத் தெரிச்சு மறு நாளு ஊருக்கெல்லாம் அகஸ் போடலாம்?"

"காத்திகை வந்துடிச்சா? உம்...மருதாயி, தா –, எனக்கு நீ செய்யுறது ஒண்ணும் புடிக்கல்லே. இண்ணைக்கெல்லாம் இருந்து பாடுபட்டு வித்தாக்கூட ஒண்ணரை ரூவா கெடைக்குமா? இதுக்காவ ஏன் இப்படிச் சாவுறே? இந்தா, இந்த ரூவாவை நான்னூலும் தந்துட்டேன்...இந்தப் பளியிலே..." சின்னப்பன் மடியில் இருந்த பணப்பையை அவிழ்த்தான்.

"தா, வெச்சுக்க ஒன் காசை! நீ ஏன் என்னைத் தடுக்கறே? இண்ணைக்கி ஒன் காசை வாங்கிக்கிட்டு இருந்துட்டேன்...செய்யற வளமொறையை உட்டுட்டதா? நீ காசுக்காரன்!"

"மருதாயி, தெரியாதுங்கறது சரியா இருக்குதே. என்னு வளமொறை வேண்டியிருக்குது! தார்த்திகை, அப்புறம் மார்களி; என்னு இருக்குது இதுலே? எங்க ரெங்கூனிலே இந்த வள மொறை, தண்ணி மொறையெல்லாம் கெடயாது."

"ஆமாம் போ! ஒன் ரெங்கூனு! நீ அங்கதானே பொறந்து வளந்தே? அந்த ஊரு வளக்கத்தை ஒடப்பிலே கொண்டுபோடு! ஒரு கோயிலா, பூசையா, ஒண்ணு கெடயாது! அதுக்காவ, இந்த ஊரும் அப்படி இருக்கணுமா? ஊடு நெறைய வெளக்குக் கொளுத்தி வெச்சுக் கும்பிட்டா எவ்வளவு புண்ணியம் தெரியுமா?"

"ஆமா, கும்புட்ட ஒடனியே சாமி பிரத்யச்சமாகும்! எங்கப்பன் கூடத்தான் 'மாரியாயி காளியாயின்னு பினுத்துது. என்னு வேண்டியிருக்குது இதெல்லாம்!"

"தா, இப்படியெல்லாம் தாறுமாறு எங்கிட்டே தெய்வத்தைப் பத்திப் பேசாதே. நீதான் ஆளே மாறிட்டே."

சின்னப்பன் வாய்விட்டுக் கேலியாக நகைத்தான். அவனது கொக்கரிப்பு அவளது கோபத்தைத் தூண்டிற்று.

"ஒன் காசு பணம் ஒன்னுகிட்டே இருக்கட்டும். பேசாமெ அலுவலைப் பாத்துக்கிட்டு நட. எண்ணைக்கி நீ துண்ணூறு பூசிக்கிட்டுப் பசுவயபடி வர்றியோ அண்ணிக்குப் பேசிக்கலாம்."

மருதாயி அவனைத் திரும்பிப் பாராமலே கீழே இருந்த குடத்தை எடுத்துக்கொண்டு வீட்டினுள் நுழைந்தாள். சின்னப்பன் சிறிது நேரம் நின்றுவிட்டுச் சென்றான்.

3

"தம்பி, இங்கே வாயேம்பா –"

"ஏன்? என்னத்துக்குக் கூப்பிட்டே இப்போ?" – சின்னப்பனின் குரலில் அதிகாரம் பிரதிபலித்தது.

"கோபப்பட்றியே தம்பி; என்னமோ கிளவன்..."

"எப்பப் பாத்தாலுந்தான் இப்பிடிச் சொல்லிக்கிட்டிருக்கே. இந்தா, சொல்றத்தை யெல்லாம் சொல்லிடு இப்பவே. சும்மா

சும்மா மூட்டைப் பூச்சியாட்டம் அரிக்காதே. என்னு சொல்லப் போறே இப்போ?"—சின்னப்பன் மிடுக்குடன் வந்து உட்கார்ந்து கொண்டான்.

"கொளந்தை, ஒனக்குத் தெரியாதது நான் என்னு சொல்லப் போறேன்? ஊருலே, ஒன்னைப்பத்தி நாலுபேரு சொன்னு, எனக்கு ரோசமா இருக்காதா? அதுதான்..." வைரவன் நாற்றம் தாங்கமாட்டாது முகத்தைச் சுளுக்கிக்கொண்டான்.

"யப்பா, யாரு, யாரு? எவன் சொன்னுன் என்னைப்பத்தி? ஊம்..."—அவனுடைய பதற்றத்திற்குக் காரணம், அன்று 'அதிகப்படி' என்பது வைரவனுக்குப் புரிந்துவிட்டது. அவன் மெதுவாகச் சிரித்துக்கொண்டே பேச்சை மாற்றினுன்.

"நான் அதுக்காவச் சொல்லல்லே தம்பி. தைமாசம் வரப் போவுதே தெரியுமில்லே?"

சின்னப்பன் பழைய பேச்சை மறந்துவிட்டான்.

"ஆமா. தை மாசம் என்னு பண்ணணுங்கிறே?"

"அதுதானே சொல்ல வந்திருக்குறேன்: நம்ப மகமாயிக்குத் திருவிழா நடத்தி, 'தீமெரி' நடக்கப் போவுது. அண்ணக்கி நீ காணிக்கை செலுத்தணுமே; யாபகம் இருக்குதா?"

"நான் என்னு காணிக்கை செலுத்தறது?"

"நீயா? ஒனக்கு எட்டு வயசா இருக்கக்குள்ளே மகமாயி வாத்திருந்தா. நீ பொஸுக்கமாட்டேன்னிட்டே எல்லாரும் நெனச்சுட்டாங்க. அப்புறம் ஒங்க ஆயிதான், உசிரைப் போட்டி மாரியாத்தா, என் மவனைத் தீமெரிக்கச் சொல்றேன்னு வேண்டிக் கிட்டா. அதுதான். அதை நீ இப்ப வயசு வந்தப்புறமாவது செலுத்த வாணுமா?"

சின்னப்பன் மிகவும் கண்டிப்புடன் ஆரம்பித்தான்:

"யப்பா, இங்கே பாரு. இந்த எளவை யெல்லாம் என் காதுலியே போடாதே. 'தீமெரி, மாரியாயி'—இது எல்லாம் எனக்கு நம்பிக்கையே கெடயாது. ஆமாம், சொல்லிட்டேன்!"

சின்னப்பன் எழுந்திருந்தான். வைரவன் சிறிது நேரம் ஒன்றும் தோன்றுது உட்கார்ந்திருந்தான். மெதுவாகச் சிரித்துக் கொண்டே, "கொளந்தை, மகமாயிக்கித் தேகத்தாலே செய்ய றேன்னத்தை, அப்படி உட்டுடலாமா? ஒங்க ஆயி—அவ என்னு தவிதவிச்சுப் போயி வேண்டிக்கிட்டு இருந்திருப்பா?" என்றுன்.

"நான்தான் சொல்லி விட்டேனே; சும்மா சும்மா நச்சரிக் கிறியே!"

சின்னப்பன் வாயிற்கதவைத் திறந்துகொண்டு கிளம்பினுன். வைரவன் தன்னை மறந்து ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டான்.

4

இரண்டு தினங்கள் சென்றன. மருதாயி பானைகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். அவள் பாட்டனும் உட்கார்ந் திருந்தான். வெளியே சின்னப்பனின் குரல் கேட்டது.

"மருதாயி, மருதாயி, பாட்டனுக்கு மந்திரிக்கத் தெரியுமா மில்லே? சட்டுன்னு கூப்பிடு!"

மருதாயி வெளியே வந்து பாட்டனைக் கூப்பிட்டுக்கொண்டே, "ஏன்? என்னு கடிச்சுடுத்து?" என்றாள்.

"என் எடது காலைப் பாரு. வாய்க்காங்கரைப் பக்கம் போயிருந்தேன்; கடிச்சுடுச்சு. அது என்னமோ 'கூளைப் பாம்பு' இங்கறாங்க. கட்டையாட்டம் இருந்தது."

மருதாயியும் கிழவனும் அவன் பாதத்தைக் கவனித்தார்கள். சுண்டுவிரல் ஓரமாக ரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

"ஏ! ஆமாம் பாட்டா; கூளைப் பாம்புதான் கடிச்சிருக்குது. ஏன், ரொம்ப வலிக்குதா?"

"ரொம்ப வலி இல்லே –"

கிழவன் சிறிது நேரம் மந்திரித்துவிட்டு ஏதோ பச்சிலையைக் கசக்கி வைத்துக் கட்டினான்.

"இன்னிமே சரியாப்பூடுமில்லே?" என்றான் சின்னப்பன்.

கிழவன் தலையை ஆட்டினான்.

திடீரென்று மருதாயி, "பாட்டா, என்னது? மறந் துட்டியே!" அவள் உள்ளே சென்றுவிட்டு வந்தாள். கிழவன் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"பாட்டா, கடிச்சிருக்கிற எடத்தைக் கவனிச்சியா? கறுப்பா இல்லே?"

கிழவன் அவன் காலை நோக்கினான்.

மருதாயி சின்னப்பன் பக்கம் திரும்பி, "இந்தா, மூணுநாளக்கி உப்பில்லாப் பத்தியம் இருக்கணும்; அதோட, இதுலே ஒரு மருந்து இருக்குது. அதை மூணு வேளையும் ஒரு சிட்டிகை எடுத்து வெந்நித்தண்ணீலே போட்டுச் சாப்பிடணும். இந்தமாதிரி நாப்பது நாளக்கி. இந்த நாப்பது நாளும் பச்சைத்தண்ணி பல்லுலே ஊத்தக் கூடாது. அல்லாம் வெந்நித்தண்ணிதான். தெரிஞ்சிச்சா? என்னு பாக்கறே? அல்லாட்டி, கூளைப் பாம்புகடி பெரு ரோகத்துலே கொண்டுபோய் உட்டுடும். ஆமா!"

"என்னு என்னு? நாப்பது நாளைக்கா?" அவன் சஞ்சலத் துடன் அவளைப் பார்த்தான்.

"ஆமா; நாப்பது நாளக்கித்தான். பச்சைச் சாமாணு ஒண்ணும் நாடக்கூடாது. சுடுதண்ணி, சுடுசோறு எல்லாந் தான். வேறெ மோரு கீரு அதிகமா நாடவே கூடாது!"

"என்னென்னமோ தண்டனை யெல்லாம் குடுக்கிறியே, மருதாயி! பயமுறுத்திறியே!"

"இந்தா, செஞ்சாச் செஞ்சுக்க. அல்லாட்டி உட்டுடு. வெசம்ணு எம்புட்டு வேணும்? ஒனக்குத்தான் எதுலியுமே நம்பிக்கை கெடயாது. அப்புறம் ஏன்—" மருதாயி அவன் கையில் இருந்த பொட்டணத்தை வாங்கப் போனாள்.

"அடேடே, அதுக்குள்ளாறே கோவிச்சுக்கிட்டியே. நெசம் மாத்தான். அல்லாட்டி ரோகம் வந்திடுமா?"

"அட! ஒன்கிட்டப் பொய் சொல்லி என்னு ஆவணும்?"

அவன் அவள் முகத்தையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றான். அவன் முகத்தில் அசட்டுக்களை எல்லாமே றிப் பிரதிபலித்தது.

5

ஒரு மாதமாகச் சின்னப்பன் அடிக்கடி வந்து போய்க்கொண் டிருந்தான். மருதாயி, "பத்தியத்தை முறிக்காமே இருக் கிறயா?" — இதை வழக்கமாய்க் கேட்டுவந்தாள்.

ஒரு நாள் சின்னப்பன், "மருதாயி, நீ என்னமோ லேசாச் சொல்லிப்புட்டே. இந்த ஒருமாச காலமாச் சாயங்கால நேரத்துலே நான் படற அவஸ்தை!" என்றான்.

"ஆமா, கூளப் பாம்பு வெசம்ணு லேசுண்ணு நெனச்சிக்கிட் டிருக்கிறயா? அல்லாட்டிக் கண்டிப்பா ரோகமில்லே வந்துடும்?"

சின்னப்பன் விஷமத்துடன், "அடேடே, என் உசுருலே ஒனக்கு எவ்வளவு அக்கறை!" என்றான்.

மருதாயியின் முகத்தில் சிறு புன்னகை எழுந்தது.

சின்னப்பன் சுற்றுமுற்றும் ஒரு தடவை பார்த்துக் கொண்டான். அவன் குரல் தாழ்ந்தது.

"மருதாயி, நான் நெசம்மாச் சொல்றேன். ஒன் வார்த் தையிலே பயந்துக்கிட்டு நான் குடிக்காமெ இல்லே. ஒன் மொகந்தான் அதைக் கட்டுப்படுத்துது!"

அவன் அவள் முகத்தருகே கையைக் கொண்டுபோனான். அவள் தலை கவிழ்ந்தாள்.

"நீதான் ஊருலியே கெட்ட பேரு வாங்கிக்கிட்டிருக்கியே—" அவளது வார்த்தையிலிருந்து ஒருவித ஏக்கம் வெளிப்பட்டது.

"இன்னிமே யாரும் சொல்லமாட்டாங்க, பாரு."

"ஏன் சொல்லமாட்டாங்க?"

"நான் குடிக்கக் கொண்டுதானே சொல்றாங்க?"

"அப்புடீன்னு?"

"குடிக்கறத்தை உட்டுட்டேன்."

"உம்.....அது எங்கே?"

"ஏன் முடியாது? இப்ப ஒரு மாசமா இல்லியா?"

"காலமெல்லாம் இருப்பியா?"

"மருதாயி, உண்மையாச் சொல்லிட்டேன்.....கஷ்டமாத் தான் இருக்குது. ஆனு, காலமெல்லாம் ஒன் மொகத்தையே பாத்துக்கிட்டிருந்தா, அந்த யாபவமே வராது."

"ஏன் இந்த செம்பப் பேச்சு!"

"அட, சத்தியமாச் சொல்றேன்."

"நல்ல பேரெடுக்கறதுன்னு சாமான்னியமா இல்லே."

"அப்புறம்?"

"தெய்வத்தை யெல்லாம் பத்தி ஏன் பளிக்கிறே?"

"என்னமோ எனக்குத் தோணிச்சு."

"நான் சொல்றத்தை நல்லாக் கேட்டுக்க: நம்பிக்கை இல்லே, அது இதுன்னுல்லாம் என் காதுலியே போடக்கூடாது."

"நிச்சியமா இல்லே."

"வர்ற மாசம் மகமாயி கோயில்லே நீயும் தீ மெரிக்கணும்."

"அட! அது ஒனக்கு எப்புடித் தெரிஞ்சுச்சு மருதாயி?"

"ஏன் தெரியாது? அதுக்காவத்தானே போன வருசம் நாட்டாமைக்காரரு ஒன்னே வரவளைச்சாரு?"

"நான் மெரிக்கமாட்டேன்னு ஏன் நெனச்சே?"

"ஒனக்குத்தான் ஒண்ணுலியுமே நம்பிக்கை கெடையாதே!"

"அதெல்லாம் இனிமேலே இல்லே."

"அது எப்படி?"

"மருதாயி, நீதான் ஒரு மாசத்துக்கு மேலே பாத்துக்கிட்டு வர்றே. இந்நேரமுட்டும் சொல்லிக்கிட்டுருக்கேனே; அப்புறம் என்னைப் பெறட்டிப் பெறட்டி....."

"நெசம்மாத்தான் சொல்றியா? அல்லாட்டி....."

"சத்தியமா!"

அவன் வார்த்தையில் ஒருவிதமான திடம் இருந்தது. அவன் முகம் பரிதாபமாக இருந்தது. மருதாயியின் உள்ளத்தில் இரக்கம் நிறைந்தது.

"வெளக்கு வெக்கற நேரமாயிடுச்சே; ஊட்டுக்குப் போவுல்லியா?" என்றுள் மருதாயி.

"என்னைப் போவச் சொல்றியா?"

அவள் சுற்றிலும் பார்த்துக்கொண்டே தாழ்ந்த குரலில், "இல்லே, பாணை கொண்டுபோய்க் குடுக்க வெளியே போயிருக்குது

பாட்டன். அது வந்துடும்" என்றாள். நாணத்தால் முகம் சிவந்தது. பெண்மை அவள் முகத்தில் பிரகாசித்தது.

சின்னப்பன் பின்னல் ஓர் அடி நகர்ந்தான்.

"இந்தா, தாவத்துக்குச் சாப்பிட்டுப் போ!" மருதாயி மோர் கொண்டுவந்து கொடுத்தாள்.

சின்னப்பன் அதை வாங்கிக்கொண்டே, "இதெல்லாம் சாப்பிடக் கூடாதுண்ணியே, மருதாயி?" என்றான்.

"இல்லே, சாப்பிடலாம் புடி."

"இப்ப மாத்திரம் சாப்பிடலாமா?"

"எப்பவுமே."

"நீ குடுத்த மருந்துக்கு?"

மருதாயி வாய்விட்டு நகைத்தாள். சின்னப்பன் ஆச்சரியத்துடன் நோக்கினான்.

"அதைக் கொளச்சு நெத்தீலே பூசிக்கோ!"

"என்னு! துண்ணூரு அது?"

மருதாயி மீண்டும் நகைத்தாள்.

"மருதாயி, ஏமாத்திப்பிட்டீல்லே!"

"ஊருலே ஒன்னப்பத்தியெல்லாம் சொல்லக்குள்ளே ஒனக்கு ரோசமா இல்லே?"

"அதுக்கு ஒனக்கு என்னு?" அவனது கேள்வியில் குறும் புத்தனம் நிறைந்திருந்தது.

"எனக்கா—" அவள் தலை குனிந்துகொண்டாள். அவள் கால் கட்டைவிரல் பூமியைக் கிளறிற்று. மீண்டும் தலை நிமிர்ந்து, "நீ ஏன் இங்கிட்டு வர்றே?" என்றாள். அந்த விளையாட்டுக் கேள்வி அவன் உள்ளத்தில் இன்பத்தை வருஷித்தது.

"ஏ, அப்பா!"

"சரிதாம்ப போ!" மருதாயி நாணத்துடன் உள்ளே சென்றாள். சின்னப்பன் சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும் மறுபடியும் ஒருதரம் திரும்பிப் பார்த்தான்.

மருதாயி பார்வையை அப்பால் இழுத்துக்கொண்டாள்.

6

குயவர் தெருவில் ஒரு புரட்சிகரமான மாறுதல். சின்னப் பனைப்பற்றி முன்பெல்லாம் அடிபட்டுக்கொண்டிருந்த வார்த்தைகள் எல்லாம் மறைந்துவிட்டன. சின்னப்பன் பழைய சின்னப்பனாக மாறுவான் என்று யாரும் எண்ணவில்லை.

வைரவன் முன்போல் தெருத்திண்ணையில் உட்கார்ந்திருந்தான். மேற்கிலிருந்து வந்துகொண்டிருந்த அந்தி வெயிலால் அவன் கண்கள் கூசின. தெருவோடு போய்க்கொண்டிருந்த சாமுப்

பயலே அவன் கவனிக்கவில்லை. அவன் வெகு தூரத்திற்கு அப்பால் சென்றபின் கையைத் தட்டிக் கூப்பிட்டான் வைரவன்.

சாமு வந்தான். "என்ன தாத்தா, என்னு சேதி?"

"எலே, பாத்துட்டுத்தானே, பாக்காதுபோலே போறே?"

"இல்லே தாத்தா; ஏதோ யாபவமாப் போயிட்டேன்...ஆமா, அண்ணன் என்னு இப்படி மாறிடுச்சி? நான் அன்னக்கி ஒன்கிட்டச் சொன்னதுங்கூட, இவ்வளவு சீக்கிரமா ஒளுங்குக்கு வருமுன்னு நெனைக்கல்லியே!"

"எல்லாம் அந்த மாரியாத்தா செயலல்லடா! நம்ம செயல்லே என்னு இருக்குது?"

"ஏன் தாத்தா, அண்ணன் தீமெரிக்கப் போவுதாமே? எங்கிட்ட நேத்துச் சொல்லிச்சே!"

"ஒங்கிட்டச் சொன்னனு?"

"ஆமா, நேத்து மகமாயி கோயிலுப் பக்கம் போயிட்டு வந்தேன். இது கோயிலுக்குள்ளாறே இருந்து வந்து பேசிக்கிட்டு இருந்துது."

கிழவன் ஆச்சரியத்துடனே அவனைப் பார்த்தான்.

"அதுதான், தை மாசம் திருவிழாவுக்கப்பறம் நடக்கப்போற தீமெரி யண்ணக்கி அதுவும் மெரிக்கப் போவுதாம்."

"உம்!.....எப்படியோ மவராசி நல்ல வளிக்கிக் கொண்ணுந்தாளே."

"யாரு, யாரு. ஏன் தாத்தா, ஊருலே எல்லாம் அண்ணனுக்கும், பொன்னன் பேத்திக்கும் நீ கண்ணுலம் செய்து வெக்கப் போறதாகப் பேசிக்கிருங்களே; அது என்னு தாத்தா?"

"ஆமாண்டா; அந்த மவராசியைப் பத்தித்தான் சொல்ல வந்தேன். நீ ஒக்காரு." அவன் கையைப் பிடித்து உட்கார வைத்தான் வைரவன்.

"சாமு, இந்தப் பய ரெங்கூனிலேருந்து வந்ததுமொதல், ராப்பகலா வீசாரமுங் கவலெயுமாவே இருந்துக்கிட்டிருந்தேன். எனக்குத் தெரிஞ்சு நாலு தலெமொறையா இந்தமாதிரி இருந்ததே கெடயாது. என்னமோ, மாரியம்மா மனம் வெச்சு – ஏன் – அந்தக்குட்டி இருக்கிறு பாரு, அவ என்னு பொறவியோ! எப்படியோ இவனைத் திருத்திட்டாளே! வர்ற வெள்ளிக்கெளமை தேதி வெச்சிருக்கிறேன்....."

"என்னு, என்னு? வெள்ளிக்கெளமையா தேதி வெச்சுருக்கே? பாத்தியா தாத்தா; அந்தக் குட்டியை அண்ணனுக்குக் கட்டிஞ என்னுன்னு நான் கேக்கக்குள்ளே நீ என்னு சொன்னே?"

"அது என்னமோப்பா, அது ரெண்டுக்கும் மனசு ஒத்துப் போச்சு. என்னவோ இப்படியே சந்தோசமாவே கண்ணு மூடிட்டேன்னு, எனக்கு என்னு கொறை?"

"தாத்தா, யாரு ஒன்னைச் சொல்லப் போறுங்க? நீ மாரியாத் தாளேயே நம்பிக்கிட்டிருந்தே; அவ ஒன்னைக் கைவிடல்லே. இனிமே சரியாப் பூடும்னு நான் சொன்னது சரியாப் பூடிச்சா?"

"இப்பத்தான் என் பாரம் கொறஞ்சுதப்பா. அதுதான், நீ வெள்ளிக்கிளமை அண்ணிக்கி –"

"அதெல்லாம் வந்துட்றேன் தாத்தா."

சாமு சென்றதும் வைரவனும் கழியை எடுத்துக்கொண்டு கிளம்பினன்.

7

குயவர் தெரு அன்று தடபுடல் பட்டது. காரணம் நாட்டாண்மைக்கார வைரவன் மகன் சின்னப்பனுக்கும், பொன்னன் பேத்தி மருதாயிக்கும் நடந்த கல்யாணந்தான்.

சின்னப்பன் அவள் கரத்தைக் கோத்துக்கொண்டே வைரவன் காலில் விழுந்து நமஸ்கரித்தான். கிழவன் தன் நடுங்கும் கரங்களுடன் அவர்களைத் தூக்கி நிறுத்தினன்.

'மருதாயி, கொளந்தை! நான் என்னென்னவோ வெல்லாம் கவலைப்பட்டுக்கிட்டு இருந்தேன்.....நீதான் என் குடும்பத்துக்கு வெளக்கு ஏத்தி வெச்சிருக்கே. அதை முளுதும் வெளங்க வைக்கணும்.....பேரு வேறேயாயிருந்தாலும் நீதான் அந்த மாரியாத்தா. நீதான் என் கொலத்தைக் காப்பாத்தின குலதெய்வம்" என்றான். உணர்ச்சியினல் அவனுக்கு மேலே பேச முடியவில்லை. தொண்டை அடைத்துக்கொண்டது. அவன் கண்களிலிருந்து நீர் பெருகிற்று.

பி. கே. முத்துஸ்வாமி

வெள்ளமும் உள்ளமும் 41

1

அப்பாசாமியின் பிடிவாதம் அமெரி துரையையும் மிஞ்சிவிடும்போல் இருந்தது.

தந்தையின் தீவிரத் தாக்குதல், தாயின் நொந்துபோன உள்ளத்து அபிலாஷை, தங்கையின் கொஞ்சலுடன்கூடிய கெஞ்சல் – இவ்வளவும் சேர்ந்து அவனது அலாதியான உறுதியை அசைக்க முடியுமா என்று பார்த்தன. ஆனல் அவனது தூக்கி நின்ற 'ஊம்' என்ற முகத்துக்கு முன்னல் அவைகளெல்லாம் வெற்றிகரமாகத்தான் வாபஸாகவேண்டி யிருந்தது.

விஷயத்தைக் கேளுங்கள் : அப்பாசாமி ஓர் அருமைப் பிறவி. 'அவனுக்கு வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாது. அவ்வளவு தங்கக் கம்பி. இழுத்த இழுப்புக்கு வருவான்' என்று அவன் தகப்பனார் மாதுர்பூதம் நினைத்துக்கொண்டு, ஒரு பெண்ணை அவனுக்கு என்று தம் சொந்தச் சர்வாதிகாரத்தைக் கொண்டே நிச்சயம் செய்துவிட்டார்.

அப்பாசாமி பி. ஏ.க்கு எதேச்சாதிகாரம் துளிக்கூடப் பிடிக்க வில்லை. "அப்பாவும் அம்மாவும் சேர்ந்து என் சொந்த அபிப் பிராயத்துக்கு மதிப்பு வைக்காமல் இவ்வளவு பித்துக்கொள்ளி யாக என்னை அடிக்கிறார்களே ; அந்த நினைவைத் தவிடு பொடி செய்து விடுகிறேன் பார்!" என்று நிலைக்கண்ணுடிக்கு முன்னல் கிராப்புச் சீப்பு சாக்ஷியாகச் சபதம் செய்துகொண்டான். அதன் விளைவாகத்தான் அப்பாசாமியின் பிடிவாதம் அமெரி துரையிடம் போய் வீரகர்ஜனை செய்யும்போல் இருந்ததைக் கதையின் ஆரம் பத்தில் நீங்களும் நானும் பார்த்தோம்.

சொல்லப் போனல் யார்மேல் பிசகு என்று கண்டுபிடிப்பதே மிகச் சிக்கலான விஷயம். அவர்கள் பார்த்த பெண் அப்படி ஒன்றும் 'பட்டிக்காடு' அல்ல. 'மூக்கும் முழியு'மாய், டோலக்கும் காதுமாய், பௌடரும் முகமுமாய்த்தான் அதுவும் 'ஜம்' என்று இருந்தது. அதோடு ஏதோ கொஞ்சம் படிப்பும் உண்டு. பயலுக்கு இது விஷயத்தில் என்ன ஆக்ஷேபணை இருக்க முடியும் என்று தீர்மானித்து, சமயத்தில் சொல்லிக் கொள்ளலாம் என்று நிதானித்து, எல்லாக் காரியங்களையும் காதும் காதும் வைத்தாற் போல முடித்துவிட்டார் மாதுர்பூதம்.

ஆனல் அப்பாசாமி வெறும் அப்பாசாமியாக இருக்கும் பட்சத்தில் விவகாரமே இல்லை. அவன் பெயருக்குப் பின்னல் இப்போது 'பி. ஏ.' என்ற இரண்டு எழுத்துக்கள் ஒட்டிக்கொண் டிருக்கின்றனவே, அவை அவனைச் சும்மா விட்டு விடுகிறேன் என்கின்றனவா?

"முடியாது! முடியாது! நான் கல்யாணம் செய்து கொள்வ தற்கு **இவர்கள் யார் பெண் பார்க்க?**" – இப்படி அவன் உறுமுவதற்குக் காரணம் அந்த 'பி. ஏ.' தான். அவன் இருதயக் கோட்டையில் எந்தக் காலேஜ் மோகினி ஏறி அமர்ந்திருக் கிருளோ, யார் கண்டது?

ஆகவே, மாப்பிள்ளை அழைப்பிற்கு முதல் நாள் வரையில் அசடு போலவே நடித்துவிட்டு, அன்று இரவு போட்மெயிலில் ஒருவருக்கும் தெரியாமல் அப்பாசாமி கம்பி நீட்டிவிடத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டான். அதுபோலவே அவன் பிரயாணத் துக்கு அபசகுனமாக ஒரு பூனை எலிகூடக் குறுக்கே போகாமல் போட்மெயில் அவனை ஆனந்தமாக ஏற்றிக்கொண்டு திருச்சியை நோக்கிப் பெருமூச்சு விட்டது.

2

அதே இரவு: தனுஷ்கோடியிலிருந்து 'மெயின் லைனி'ல் சென்னை நோக்கி வரும் இண்டோ சிலோன் எக்ஸ்பிரஸ், தாங்க முடியாத கூட்டத்தைச் சுமந்துகொண்டு இருளைக் கிழித்தபடி வந்து கொண்டிருந்தது. மாயவரம் ஜங்க்ஷனை விட்டு வண்டி பெருங்குரல் பாய்ச்சிவிட்டுக் கிளம்பியபோது அடைமழை பிடித்துக்கொண்டது.

சோவெனக் கொட்டும் மழை; சுழன்று வீசும் சூறுவளி; பம்மும் இருட்டு. இந்த விதமான இடையூறுகளைச் சமாளித்துக் கொண்டு வண்டி ஊர்ந்துகொண்டிருந்தது.

திருப்பாதிரிப்புலியூர் வந்தபோது என்ஜின் டிரைவர் தடுமாறிப் போனார். மேற்கொண்டு அந்தக் கடும் மழையிலும், பேய்க் காற்றிலும் தம் சாமர்த்தியம் பயனளிக்காது என்று அவருக்குத் தோன்றிவிட்டது. ஆகவே, சில மணி நேரம் அந்த ஸ்டேஷனிலேயே வண்டியை நிறுத்திவைக்க நேர்ந்தது.

அந்த விதமான புத்திசாலித்தனம் மட்டும் சமயோசிதமாக அப்போது டிரைவருக்கு இல்லாமல் இருக்குமானால் வண்டி பெரிய விபத்துக்கு ஆளாகியிருக்கும். ஏனெனில், அடுத்த அரை மணி நேரத்தில் ஓரே வெள்ள மயம். முன்னும் பின்னும் ரெயில் பாதையில் உடைப்பு. வண்டி எந்தப் பக்கமும் நகர முடியாமல் நின்றுவிட்டது. அவ்வாறே சென்னையிலிருந்து தனுஷ்கோடி போகும் போட்மெயிலும், திருப்பாதிரிப்புலியூர் வரையில் வந்து எதிரும் புதிருமாக நின்றுவிட்டது. அந்த வண்டியில் அடைபட்டுக் கிடந்த ஆயிரக்கணக்கான பிரயாணிகளில் அப்பாசாமியும் ஒருவன்.

3

மறு நாள் பொழுது விடிந்தது. திருப்பாதிரிப்புலியூர் ஸ்டேஷன் தன் சரித்திரத்தில் என்றுமே கண்டிராத காட்சியை அன்று அனுபவித்தது. தன்னைச் சுற்றி நிரம்பக் கிடக்கும் நீர் வெள்ளத்தையும், ஜன வெள்ளத்தையும் அன்றுதான் பார்த்து அது ஆச்சரியப்பட்டிருக்க முடியும்.

இட்டிலி சாப்பிட வழி உண்டா, வண்டி என்று புறப்படும், நமக்குத் தெரிந்தவர்கள் இரண்டு வண்டிகளிலும் யாரேனும் இருக்கிறார்களா? இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள அப்பாசாமி துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு தன் இடத்தை விட்டு விர்ரென்று புறப்பட்டான்.

'இன்று ஆபீஸில் இருக்க வேண்டுமே' என்று எத்தனை குமாஸ்தா உள்ளங்கள் தவித்தன. 'கையில் காசு இல்லையே! யாரைப்போய்க் கடன் கேட்பது?' என்று தவியாய்த் தவித்த குடும்பங்கள் எவ்வளவு! "வண்டிகள் எப்போது கிளம்பும் என்று

நிச்சயமாய்ச் சொல்லிவிட முடியாது. வெள்ளம் வற்றி, உடைப்புகள் அடைபட வேண்டும்" என்று கண்டிப்பாக ஸ்டேஷன் மாஸ்டர் பெருமூச்சு விட்டுக்கொண்டே சொல்லிவிட்டபின் யார் என்ன செய்ய முடியும்?

இந்தக் காட்சிகளை ஒன்று விடாமல் பார்த்துக் கொண்டே வந்த அப்பாசாமி சட்டென்று ஒரு வண்டியின் அருகே நிற்கும் படி ஆயிற்று. அங்கே ஒரு சிறு குடும்பல் கூடி இரண்டு மாதர்களுக்கும் ஓர் ஆணுக்கும் ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்ததை அவன் பார்த்தான்.

அதில் உடல் குறுகிப்போய்க் கவலை படர உட்கார்ந்திருந்த சிறு பெண்ணுக்கு அழுது அழுது முகம் வீங்கிப்போயிருந்தது. சற்று வயசான ஒரு ஸ்திரீ பேச வாயில்லாமல் வார்த்தைகள் அடைபட்டுப் போய், வண்டியின்மேல் தலையைச் சாய்த்துக் கொண்டே விம்மிக்கொண்டிருந்தாள்.

அவருக்குப் பாவம், வயசு நாற்பத்தைந்து இருக்கும். அந்தச் சிறுமிக்குத் தகப்பனார்போல் இருந்தது. "கடவுளே! உனக்குக் கண் இல்லையா? என்னை இப்படிச் சோதிக்க நான் என்ன தவறு செய்தேன்!" என்று அவரது வாய் ஈனஸ்வரத்தில் முனகிக் கொண்டிருந்தது.

அவர்களது துக்கத்துக்குச் சரியான காரணம் இல்லாமல் இல்லை. அந்தச் சிறுமிக்கு அன்று சென்னையில் விவாகம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அங்கே வேலையில் இருக்கும் அவள் அண்ணன் அவர்களது வரவை எதிர்பார்த்துக்கொண்டு எல்லா ஏற்பாடும் செய்திருந்தான். தகப்பனாரும் தாயாரும் மணப் பெண்ணை அழைத்துக்கொண்டு போய்க்கொண் டிருக்கிறார்கள். நடுவே இந்த எதிர்பார்க்காத தெய்வ சோதனை. பெற்ற எந்த உள்ளந்தான் இதைக் கண்டு பொறுமாது?

அப்பாசாமி இந்தத் துயர் சம்பவத்தைக் கேட்டதும் அவனுக்கு என்னவோபோல் இருந்தது. இப்படித் தானே தன் தந்தையும் தாயும் தன்னைக் காணாமல் தவிப்பார்கள்? பெண் வீட்டுக்காரர்களின் நிந்தனைக்கு ஆளாவார்கள்? – இதை அவன் நினைத்துப் பார்த்தபோது என்ன காரியம் செய்துவிட்டோம் என்று புழுவெனத் துடித்தான். ஆனல் அதற்கு அடுத்த கணம் அவன் இருதயத்திலிருந்து ஏதோவொன்று கிளம்பி, "அப்பாசாமி, உன்னைக் கேட்காமல் அவர்கள் நிச்சயம் செய்தார்க ளல்லவா? அவர்களுக்கு வேண்டும். இன்னும் வேண்டும்!" என்று எதிரொலிப்பதுபோல இருந்தது. அரைச் சமாதானத்துடன் தன்னைத் தானே சரிப்படுத்திக்கொண்டு மேலும் சில விவரங்களை அறிய அந்த வண்டியில் ஏறினன்.

சில நிமிஷ அமைதிக்குப் பிறகு, "ஸார், சென்னையில் எந்த இடத்தில் கல்யாணம் நடப்பதாய் இருந்தது? பிள்ளையாண்டான் யார்?" என்று அப்பாசாமி ஆவலுடன் கேட்டான்.

அங்கவஸ்திரத்து நுனியால் தம் முகத்தின் ஒரு பகுதியை மறைத்துக் கொண்டிருந்த அந்தக் குடும்பி, தலையை வெளியே இழுத்து, தம் விஷயங்களைப் பற்றி இவ்வளவு அக்கறையுடன் விசாரிப்பவர் யார் எனப் பார்த்தார். வழிந்து வரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, "அதை ஏன் கேட்கிறீர்கள்? என் பெண் கொடுத்து வைத்தது அவ்வளவு தான். அதிருஷ்டக் கட்டை. இல்லாவிட்டால் இப்படி யெல்லாம் நேருமா?..... ஹூம்....." என்று சொல்லி அவர் நிறுத்திக்கொண்டார்.

அப்பாசாமி அவ்வளவுடன் அவரை விட்டுவிடத் தயாராக இல்லை. "பாவம்! இதற்கு யார் என்ன செய்வார்கள்? எதிர் பாராத சோதனை? ஆமாம்...மாப்பிள்ளை யார் என்று சொல்ல..."

"பையன் பெயர் அப்பாசாமியாம். இந்த வருஷந்தான் பி.ஏ., பரீக்ஷையில் முதன்மையாகத் தேறி வெளி வந்திருக்கிறானும். அவன் தகப்பனார் மாதுர்பூதமையரும் என் மூத்த பிள்ளை துரைசாமியும் ஒரே ஆபீஸில் உத்தியோகமாம். எல்லா ஏற்பாடும் அவன் பார்த்துச் செய்தது. என்ன செய்கிறது? மாதக் கடைசி முகூர்த்தம். நல்ல சம்பந்தம்...நமக்குப் பிராப்தம்..." அவருக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

4

"அப்பாசாமி" என்று அவர் சொன்னவுடனேயே, அப்பா சாமி நின்ற இடத்திலிருந்து ஓர் அடி மேலே எழும்பினான். "அடாடா! எப்படியெல்லாம் நேர்ந்துவிட்டது!" என்று அவன் வாய் முணுமுணுத்தது. கண்களைச் சுழற்றி மூலையிலே இருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தான். ஏக்கம் தத்தும்பும் அந்த விழிகள் அவன் இருதயத்தைத் துளையிட்டு, "நமஸ்காரம் நாதா!" என்று முறையிடுவனபோல் இருந்தன. "நாம் என்னவோ நினைத்தோம். தெய்வம் என்னவோ நினைத்துவிட்டதே" என்று அவன் இருதயம் ஓலமிட்டது.

அதிகம் விவரிப்பானேன்? அப்பாசாமியின் இரக்கம் வற்றிப் போகாத இருதயம் அடுத்த சில நிமிஷங்களுக்குள் அவனைப் பழைய அப்பாசாமியாக மாற்றி, அதாவது அசடாக அடித்து, அவனை யார் என்று அறிவித்து அந்தக் குடும்பத்தினரைப் பிரமிக்கச் செய்தது.

5

அடுத்த சில மணி நேரங்களில் திருப்பாதிரிப்புலியூர்ப் பாட லீசுவரர் சந்நிதியில் "டும்டும்" என்ற மேளசப்தம் முழங்கிற்று. நூற்றுக் கணக்கான ரயில் பிரயாணிகள் சாக்ஷியாக ஸ்ரீ **அப்பா சாமி** பி. ஏ., க்கும், ஸ்ரீமதி **அபிராமி**க்கும் ஆனந்தமாக அதே முகூர்த்தத்தில் கன்னிகாதானம் நிறைவேறிற்று. **வெள்ளம்** வந்தால் என்ன? தெய்வத் திரு **வுள்ளம்** வேறு விதமாக இல்லையே!

வே. ரங்கராஜன்

கலையும் காதலும் 42

1

அந்த மங்கிய ஒளியிலும் அவ்வாலிபன் வர்ணங்களைக் குழைத்துத் தீட்டப் பார்க்கிறான். திருப்தி இல்லை. மறுபடியும் வேறு அளவில் கலந்து குழைத்துப் பார்க்கிறான்; அவ்வளவாகத் திருப்தி இல்லை. சாந்தமாக, நிதானமாக வேறோர் அளவில் கலந்து குழைத்தான். தீட்டிப் பார்த்தான். பிறகு மிக்க கவனத்துடன் சலாகையை அவ்வர்ணத்தில் தொட்டுத் தீட்டத் தொடங்கிவிட்டான், அந்த ஓவியன்.

அஸ்தமன சூரியனின் ரத்தம் கலந்த செம்பொன் நிறத்தை அப்படியே சித்திரிக்க வேண்டுமென்பது அவன் ஆவல். அதற்குத் தான் அவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டிருந்தான்.

அவன் சித்திரங்கள் கலையின் நுட்பங்கள் நிறைந்தவை. மனத்திற்குப் பிடித்ததையே அவன் வரைவான். அஸ்தமன சூரியனின் அழகிய காட்சியை வரைவான். புகார்த் துறையில் கப்பல்கள் பொன்னின் பாரம் தாங்காது நெளிந்து நெளிந்து கொண்டு வருவதை வரைவான். பெண்கள் தினைப்புனத்தில் கிளிகளை ஓய்யாரமாக ஓட்டுவதைத் தீட்டுவான். நட்சத்திரக் கூட்டங்களிடையே நின்று விளையாடும் மதியை வரைவான். மதுரமான தேனைக் கூட்டில் கூட்டித் தருவதுபோல், சிருஷ்டியில் சிதறிக் கிடக்கும் சௌந்தர்யங்களை ஒரே முகமாகத் திரட்டித் தீட்டுவான். அதுவே அவனுக்கு மகிழ்ச்சியைத் தருவது. அதுவே அவன் வாழ்க்கையின் லக்ஷ்யங்கூட.

இரவு நெடு நேரம் விழித்திருந்து சித்திரத்தை முடித்து விட்டுத்தான் படுப்பான். காலையில் சூரிய கிரணங்கள் குடிசையின் ஓட்டைகளின் வழியே தங்குதடையின்றி உள்ளே பிரவேசித்து அவன் முகத்தில் பட்டபிறகுதான் கண் விழிப்பான். உடனே துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு ஆற்றை நோக்கி நடப்பான். அவன் புழுதி அடைந்த உடையையும் சீப்பையே அறியாத தலையையும் பார்த்து விட்டு, "இவன் கையிலிருந்தா அவ்வழகிய சித்திரங்கள் ஜனிக்கின்றன?" என்று ஓர் ஐயம் கலந்த வியப்புடன் பார்த்துவிட்டுச் செல்வர் சிலர்.

* * * *

அதிகாலை: சூரியனை வரவேற்பது போல் மாங்கனிகளில் மறைந்து 'கூ கூ' என்று குயில்கள் கீதம் இசைக்கின்றன. இதை அனுபவித்துக் கொண்டே தான் முதல்நாள் இரவு புனைந்த பாட்டைப் பூபாள ராகத்தில் பாடிக்கொண்டிருந்தான், ஒரு யுவன். ஆற்றோரத்தில் இருந்த ஆலமரத்தடியில் உட்கார்ந்திருந்தான்

அவன். அவன் கண்களில் ஒருவிதமான கவிதா மலர்ச்சி தோன்றிய திலிருந்து அவன் ஒரு கவிஞன் என்று ஊகிக்கலாம். அவன் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். நேரம் ஆக ஆக ஆவல் அதிகம் ஆயிற்று.

நாம் குடிசையில் கண்ட ஓவிய இளைஞன் ஓர் ஒற்றையடிப் பாதை வழியாக அவ்விடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். கவிஞன் அவனைப் பார்த்ததும், "ரஞ்சனு, வா, வா; ஏனப்பா இவ்வளவு நேரம்?" என்று கேட்டுக்கொண்டே, அவன் நெருங்கியதும், ஓடித்துச் செப்பனிட்டுத் தயாராய் வைத்திருந்த ஆலம் விழுதை அவனிடம் நீட்டினான்.

பிறகு கவிஞன் முதல்நாள் இரவு புனைந்த பாடல்கள் நாத வெள்ளமாகக் கிளம்பின. அதிலேயே லயித்திருந்தவனுய்ப் பல் குச்சியின் வழியாக எச்சில் ஒழுக உட்கார்ந்திருந்தான் ரஞ்சன். "ஆகா! அருமை, அற்புதம்! நான் அந்தக் கடைசிப் பாட்டைச் சித்திரமாக வரையப் போகிறேன்" என்று கூறி அவன் முதுகில் ஒரு 'ஷொட்டுக்' கொடுத்தான் ரஞ்சன்.

கவிஞன் சொன்னான்: "ஆமாம்! நான் ஏதோ கன்னு பின்னு வென்று பாடல்கள் புனைகிறேன். அதை உன்னிடம் பாடுகிறேன். நீ தலையாட்டுகிறாய். உன் மனத்திற்குப் பிடித் திருக்கிறதென்றும் எனக்குத் தெரிகிறது. அவைகளுக்கு ஏற்றபடி கண்ணையும் கருத்தையும் கவரும் ஓவியங்களும் வரைகிறாய். என் பாடல்கள் என் மனத்தில் பதிவதைவிட அச் சித்திரங்கள் என் கண்களை விட்டு அகலமாட்டேன் என்கின்றன. ஆனல் நாம் எத்தனை நாள்தான் இந்த வறுமையில் உழன்றுகொண்டிருப்பது? கரிகாற் பெருவளத்தான் ஆட்சி செய்யும் சோழ வளநாட்டில் இருக்கிறோம். இக்கலைகளை வைத்துக்கொண்டு நாம் ஏன் துன்பப் படவேண்டும்? நான் பாடிய கடைசிப் பாட்டுக்குச் சித்திரம் வரைந்து கொடு. நான் அரசனைப் போய்ப் பார்க்கத்தான் போகிறேன்."

ரஞ்சன் ஒரு பெருமூச்சு விட்டு, "பார்க்கலாம்; ஆனல் அரசர் சபையில் எத்தனையோ புலவர்கள் இருக்கின்றனர்; எத்தனையோ ஓவியர்கள் இருக்கின்றனர். அவர்கள் பாடாத பாட்டும் வரையாத சித்திரமும் நாம் தோற்றுவிக்க முடியுமென்று நான் எண்ணவில்லை."

இதைக் கேட்ட கவிஞனுக்கு உத்ஸாகம் ஒருபடி குறைந்தது. "இருக்கட்டுமே; அதனல் என்ன? நம் கலைகளில் ஜீவ ஒளி இருப்பின் அவை எங்கும் பிரகாசிக்கும். நீ இதுவரையில் சொன்ன சமாதானங்களைக் கேட்டதுபோல் நான் இன்னும் கேட்டுக்கொண் டிருக்க விரும்பவில்லை. சித்திரத்தைச் சீக்கிரம் தீட்டிவை. நான் போகத்தான் போகிறேன். ஆமாம்; நீ நேற்றிரவு என்ன சித்திரம் வரைந்தாய்? நெடுநேரம் விழித்திருந்தாய் போலிருக்கிறதே! அதனல்தான் கண்கள் அவ்விதம் சிவந்திருக்கின்றனவா?.....சரி,

வா, போவோம்!" என்று கூறிக்கொண்டே எழுந்தான் கவிஞன். ரஞ்சனும் அவனுடனே எழுந்தான். அவ்விருவரும் நமக்குப் புரியாத கலைப் பாஷையில் ஏதேதோ பேசிய வண்ணம் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு அக்குடிசையை நோக்கிச் சென்றனர்.

2

ரஞ்சன் பரம்பரைச் சித்திரகாரர் குடும்பத்தில் பிறந்தவன். அவனுடைய முன்னோர்களெல்லாம் தென்னாட்டு அரசர்களிடமும் சிலர் வடநாட்டு அரசர்களிடமுங்கூட அரண்மனைச் சித்திரகாரர்களாக இருந்ததுண்டு. ரஞ்சனின் தந்தை ஒரு சமயம் ஒரு வடநாட்டு அரசனின் கோபத்திற்கு உள்ளாக நேரிட்டது. அதன் விளைவுதான் ரஞ்சன் அக் காவிரிக்கரைக் கிராமத்தில் நட்சத்திரங்களைப் போல் ஓட்டைகள் மலிந்த குடிசையில் வாழ நேரிட்டது.

அவனுக்குச் சுமார் இருபது வயசுதான் இருக்கும். அதற்குள் அவன் சித்திரத்தில் பிரபல சித்திரகாரர்கள் வரையும் சித்திரங்களின் சாமுத்திரிகா லக்ஷணங்கள் நிறைந்திருந்தன.

ஆள் வாட்ட சாட்டமாய் இருப்பான். செக்கச் செவேலென்ற மேனி. பல சித்திரகாரர்களுக்கு இல்லாத சில நல்ல பழக்கங்கள் அவனிடம் இருந்தன. இதனால் ஒரே ஒரு தாயில்லாப் பெண்ணை வைத்திருந்த இரண்டு காணி மிராசுதாரன், தன் பெண் செல்லத்தை ஊரோடு வைத்துக்கொள்ள எண்ணி அவனுக்கு மணம் செய்வித்தான். இரண்டு வருஷங்களில் அவன் இறந்துவிட்டான். செல்லம் நல்ல அழகி. அந்த வட்டாரத்திலேயே அவள்தான் அழகி என்று சொல்லலாம். ரஞ்சன் அவளைவிட அழகில் குறைந்தவன் அல்ல. அவளுக்கு ரஞ்சனின் மேல் அபாரப் பிரேமை. ஆனால் ரஞ்சன் அநேகமாக இருபத்து நான்கு மணி நேரமும் சலாகையும் கையுமாகவே இருப்பான். கலைமீதுதான் அவனுக்குக் காதல். செல்லத்திற்கு அதற்கு அடுத்த இடத்தைத்தான் கொடுத்தான் அவன்.

செல்லந்தான் குடும்ப பாரத்தைப் பொறுப்பேற்று நடத்தி வந்தாள். அச்சிறு பெண் தன்னாலான சாமர்த்தியத்துடன்தான் நிர்வகித்தாள். ஆனால் ஓர் ஆண்பிள்ளை 'குந்தியிருந்து தின்றால் குன்றும் கரையத்தானே செய்யும்.' அவர்கள் வாழ்க்கையில் வறுமை தாராளமாய்க் கலந்திருந்தது.

கவிஞனைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. அவன் ஒரு பெரிய குடும்பி. இருபத்தைந்து வயசிற்குள் நெற்றியில் விழுந்திருக்கும் சுருக்கங்களும், குழியடைந்திருக்கும் கன்னங்களும் அவன் வாழ்க்கைப் போராட்டங்களுக்கு இடையே உழன்று கொண்டிருப்பவன் என்பதை வெளிப்படுத்தின. குறு நில மன்னர்களையும், பிரபுக்களையும் பாடிப் பாடி அவன்

நா வறண்டதே தவிர, அவன் வறுமை வறண்டு போகவில்லை. ஆகையால் அவன் கரிகாலச் சோழ மகாராஜாவைப் போய்ப் பார்க்கவேண்டுமென்று சொன்னதில் வியப்பில்லை அல்லவா?

3

அன்று பௌர்ணமி தினம். மேற்கே அஸ்தமன சூரியனின் பொன்னிறம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருந்தது. கீழ்த் திசையில் தங்கக் கேடயத்தைப் போல் 'தக தக' வென்று தேஜோமயமாய்த் தென்னங் கீற்றுக்களிடையே தோன்றினான் சந்திரன். சிறிது சிறிதாய்க் கோயில் கோபுரத்தின் உச்சிக்கு வந்து விட்டான். பிரம்மாண்டமான விளக்குத்தண்டின் உச்சியில் கொழுந்து விட்டு எரியும் சுடர்விளக்கைப் போன்று இருந்தது அத் தோற்றம். இவை யாவற்றையும் பார்த்துக் கொண்டே காவிரிப்பூம்பட்டினத்தின் ராஜ வீதியின் வழியாய்த் தேசாந்தரி விடுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தான், கவிஞன். ஒரு கையில் மிகக் கவனமாகத் துணியாற் சுற்றப்பட்ட ஒரு வஸ்து இருந்தது. ஆம்; அது சித்திரந்தான். அதனுடன் சில இடங்களில் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் ஓலைச் சுவடிகளைப் பாருங்கள். அன்றிரவைச் சத்திரத்தில் கழித்து விட்டு மறுநாள் அரசரைப் பார்க்கும் உத்தேசத்துடன் செல்கிறான், கவிஞன்.

மறுநாள் காலையில் புதிதாக வந்த புலவர்கள் எல்லோரும் சோழ மன்னன் கரிகாலனின் பேட்டிக்குக் காத்திருந்தனர். அப் புலவர்கள் இருந்த அறைக்குச் சற்றுத் தூரத்தில் சரஸ்வதி மகாலில் அரண்மனைப் புலவர்கள் புடைசூழ வீற்றிருந்தான், கரிகாலச் சோழ மகாராஜா. ஒவ்வொருவராகச் சென்று தம் புலமைப் பண்டத்தைச் சமர்ப்பித்து விட்டு, அவரவர் அறிவுக்கு ஏற்ற வாறு பொருட்பண்டத்தைப் பெற்றுச் சென்றனர். கவிஞன் முறை வந்தது. அவன் பாட்டில் ஏதோ அர்த்த புஷ்டியையும் கவிதா மலர்ச்சியையும் கண்டான் அரசன். இரண்டு நாழிகை நேரம் தன் பாடலை 'நிரந் தினிது சொல்லி' அரசரையும் அங்கிருந்த புலவர்களையும் பிரமிக்கச் செய்துவிட்டான். மேலும் அவன் பாடிய மணியான பாடலின் சித்திர உருவத்தை அரசன் முன் சமர்ப்பித்தான். கரிகாலன் அதைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே இருந்தான். புலவனுடைய பாடலின் ஜீவ ஒளி முழுவதும் அச்சித்திரத்தில் பிரகாசிப்பதைக் கண்டான். "கவிதைக்குச் சித்திரமா! சித்திரத்திற்குக் கவிதையா!"—அவனால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை.

"புலவரே, இச்சித்திரம் வரைந்தவர் யார்?" என்றான்.

"அரசே, இது என் நண்பன் வரைந்தது."

"அவன் ஏன் இங்கே வரவில்லை?"

"அவன் ஒரு கலைப்பித்தன், மகாராஜா; தான் உண்டு, தன் கலை உண்டு என்று இருப்பவன்."

"நன்று! நன்று! உம் கவிதை மணியை அவன் தன் சலாகையால் இழைத்து இரண்டிற்கும் மங்காத ஒளியைக் கொடுத்து விட்டான். உம் கவிதையைக் கேட்டு மகிழ்கிறோம். நீர் இதுமுதல் ஆஸ்தான கவிகளில் ஒருவராய் இருக்கலாம். மேலும், உம் நண்பனையும் எம் சித்திர மண்டபத்தை அலங்கரிக்க நீர்தாம் ஒப்புக்கொள்ளும்படிச் செய்ய வேண்டும்" என்றான் கலையின் பெருமை அறிந்த காரிகாலன்.

4

ரஞ்சன் இப்பொழுது அரண்மனைச் சித்திர மண்டபத்தை விட்டு நகர்வதே இல்லை. அவனுக் கென்றுதான் அச்சித்திர மண்டபத்தில் சில நடுநாயகமான இடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனவோ என்னவோ! அரசனது எண்ணம் என்னவோ அவ்விடங்களைக் கை தேர்ந்த சித்திரகாரர்களைக் கொண்டு சித்திரிக்க வேண்டும் என்பது. அது அவ்வாறே நிறைவேறும் காலமும் வந்தது.

தன் கலைத்திறம் முழுமையும் பிரயோகித்து அவ்விடங்களைச் சித்திரித்தான் ரஞ்சன். அச்சித்திரங்களைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போவான் காரிகாலன்.

முதல் முதல் வரைந்தது அன்னை உமாதேவியின் சித்திரம். அம்முதல் சித்திரத்தின் மூலமே மன்னனின் முழு மதிப்பையும் அடைந்தான் ரஞ்சன். ஆகா! அந்தப் பாடல்தான் எவ்வளவு இனிமையாய் இருக்கிறது! அன்னை லோகமாதா என்ன லாகவமாக ஊஞ்சல் ஆடுகிறாள்! அச்சித்திரத்தின் கீழ் வரைந்திருந்த,

"செல்லாரும் குழலதனிற் பின்னல் ஆடச்
சிறந்தமகி நுதல்மிசைப்பொன் சுட்டி ஆட
எல்லோனும் மதியுமா இயம்பு கின்ற
இருசுடர்போல் காதணிகள் இலங்கி ஆட
வில்லாரும் மணிவளைகள் ஆர்த்தே ஆட
மேகினியார் கண்களித்து மிகக்கொண் டாட
அல்லாரும் குழல்மடவார் தாம்தொட்டு ஆட்ட
அன்னைதவம் பெற்றவளே! ஆடி ரூசல்!"

என்ற பாடலின் அழகை அவன் சித்திரம் பன்மடங்கு பெருக்கிக் காட்டியது. அச்சித்திரம் காரிகாலனுக்கு மிகவும் பிடித்திருந்தது. சித்திர மண்டபத்துக்கு வரும்பொழுதெல்லாம் சில நிமிஷங்கள் நின்று அதையே பார்த்துக் கொண்டிருப்பான்.

"மாதர்கள் மெல்லிய இடையையும் மலர்ந்த முகத்தையும் வரையும்போது மாதர் குழாத்தில் கூடியிருந்தவன்போல் சித்திரிக்கிறாய். வீராவேசம் நிறைந்த சண்டைச் சித்திரங்களை எடுத்துக் கொண்டாலோ, ரணகளத்திற்கு நேரே சென்று அனுபவித்த

வனைப்போல் தீட்டுகிறாயே, ரஞ்சன்! நீ, 'கைவேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்' என்னும் குறளுக்கு வரைந்துள்ள சித்திரம் என் கண் முன்னாலேயே நிற்கிறது. அவன், தன் உடலில் பாய்ந்த வேலைப் பிடுங்கிக் கொண்டு பாய்வதைப் பார்த்தால் எந்தப் பேதைக்குத்தான் வீரம் உண்டாகாது? ரஞ்சன், நீ அரண்மனைச் சித்திரகாரனுகக் கிடைத்தது என் முன்னோர்களின் பாக்கியம்" என்று ரஞ்சனிடம் பலதரம் சொல்லி அவனைப் பாராட்டி உத்ஸாகப்படுத்துவான் கரிகாலன்.

அந்நிய நாட்டுத் தூதர்கள் எவர் வந்தாலும் அவர்களைச் சித்திர மண்டபத்திற்கு அழைத்துச் சென்று காட்டுவதை, அவர்களைப் பெருமிதத்துடன் உபசரிக்கும் வகைகளில் ஒன்றாகக் கருதினான், கரிகாலன். அச்சித்திர மண்டபத்தைக் கண்டு வியவாதவர் எவரும் இல்லை. அதன் புகழ் கரிகாலன் புகழோடு கடல் கடந்தும் சென்றது.

ஒரு முறை சாவகத் தீவிலிருந்து ராஜதூதன் வந்திருந்தான். வழக்கம்போல் அவனையும் சித்திர மண்டபத்திற்கு அழைத்துச் சென்றான் கரிகாலன். அத்தூதன் ஒரு கலாபிமானி. அவன் அங்கிருந்த சித்திரங்களைக் கலைக்கண்களால் நோக்கினான். ஒவ்வொன்றும் உயிர்பெற்ற ஓவியமாகத் தோன்றியது அவனுக்கு. சித்திரகாரனையும் சித்திரத்தையும் கரிகாலனையும், "இவ்வழியக் கூடிய கையிலிருந்தா, இவ்வழியாத கலைப் பொக்கிஷங்கள் தோன்றின?" என்று கேட்பதுபோல் மாறி மாறிப் பார்த்தான். கடைசியில் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு வெளியே வந்தான்.

அவன் கண்முன் அழுது வடியும் சித்திரங்கள் நிறைந்த தன் தாய் நாட்டின் மண்டபங்கள் தோன்றின. மறுகணம் மின்னல் போன்ற ஓர் யோசனை, மனத்தில் விவரிக்க முடியாத ஓர் ஆர்வம் கலந்த அமைதி – இவற்றுடன் அரசர் பின் சென்றான், அத்தூதன்.

அரசர் விருந்தினராக இருந்த ஒவ்வொரு நாளும் மாலையில் அவனை அறியாமல் அவன் கால்கள் சித்திர சாலையை நோக்கி இழுக்கும். இருட்டும் வரையில் தாமரை மலரில் தேனுண்டு மதிமயங்கி, மலர் குவிவதையும் மறந்திருக்கும் வண்டைப்போல, விளக்கொளியில் சித்திரங்கள் மங்கலாகத் தெரியும்வரையில் அச்சித்திர மண்டபத்திலேயே இருப்பான்.

தன் தாய்நாடு திரும்புவதற்கு முதல்நாள் அத்தூதன் அரசனுடன் வெகுநேரம் ஏதோ பேசிக் கொண்டிருந்தான். வெளிவருகையில் அவனுடைய முகத்தில் என்றும் இல்லாத ஒரு திருப்தியும், மகிழ்ச்சியும் தோன்றின. அவனுடைய கலாபிமானத்தை, கலைப்பித்தை, உணர்ந்து ரஞ்சனைச் சாவகத்திற்கு அனுப்ப அரசன் இசைந்தான். தமிழ் நாட்டின் பெருமை வெளிநாட்டிற்கும் எட்டட்டும் என்பது அவனுடைய அந்தரங்க எண்ணம் போலும்.

5

புகார்த் துறைமுகம் என்றும் இல்லாதபடி ஒரே கூட்டமாய் இருந்தது. வெகு சிங்காரமாய் அலங்கரிக்கப்பட்டுத் தமிழ் நாட்டுக் கலஞ்னைக் கடல் கடத்திச் செல்ல ஒரு மரக்கலம் தயாராய் இருந்தது. துறைமுகத்தின் ஒரு மூலையில் ரஞ்சன் தன் மனைவிக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தான். அவள் கண்களில் பெருகிய நீர்த்துளி ஒவ்வொன்றும் ரஞ்சனின் பிரதி பிம்பத்தைத் தோற்றுவித்துக் கீழேவிழுந்து கடற்கரை மணலில் கலந்துகொண் டிருந்தது.

"அழாதே செல்லம், போர்க்களத்திற்குச் செல்பவரையும் மலர்ந்த முகத்துடன் அனுப்பும் தமிழ் மகளிர் குலத்தில் பிறக்க வில்லையா நீ? தமிழர் கலைத்திறத்தை, தமிழர் பெருமையை, பிற நாட்டாருக்கு அறிவிக்கும் பணியை இட்டுள்ளார், அரசர். அதை விட எனக்கு இன்பம் அளிக்கக்கூடியது என்ன இருக்கிறது? மலர்ந்த முகத்துடன் விடைகொடு. அன்பின் வடிவாகிய உன் உருவம் என் கண்முன்னாலேயே இருக்கும். ஒரு வருஷந்தானே? கண்மூடித் திறப்பதற்குள் கழிந்துவிடும்" என்றான் ரஞ்சன்.

"சென்று வாருங்கள்.....! ஆனால்.....இவ்வளவு நாட்களுக் குப் பிறகு நான் முழுகாமல்.....இன்னும் ஆறு மாதம் இருந்து குழந்தையைப் பார்த்துவிட்டு" – அவளுக்கு ஏதோ உணர்ச்சி எழுந்தது: "சென்று வாருங்கள்! தமிழ் நாட்டின் அழியாப் புகழை நிலைநாட்டி வாருங்கள்!" என்று கூறினாள். கண்ணீரால் நனைந்திருந்த தன் கண் மையை விரலில் எடுத்து அவன் புருவத் தில் தடவினாள். மும்மூறை அவன் கால்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, மறுபடியும் கண்களால் விடை கொடுத்தாள்.

6

ரஞ்சன் கப்பலில் ஏறிக்கொண்டான். கடலைக் கிழித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தது கப்பல். கலங்கரை விளக்கம் மறைந்தது. கோபுரம் மறைந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் எங்கும் ஒரே தண்ணீர்; நீர், நீர்தான் தென்பட்டது.

பகற்பொழுது கழிந்தது. பகலில் துடுப்புப் போட்ட ஆட்கள் 'அப்பாடா' என்று எழுந்திருந்து மேல் தட்டில் படுத்துக் களைப் பாறிக் கொண்டிருந்தனர்.

"கடல் பிரயாணத்தை நினைத்தாலே பயமாயிருக்கிறது!" என்றாள் செல்லம், கண்ணீரும் கம்பலையுமாக.

"செல்லம், என்ன இவ்வளவு பேதையாய் இருக்கிறாயே. அந்த நாட்டிலிருந்து நம் நாட்டிற்குத் தூதன் வரவில்லையா? எத்தனை தமிழர்கள் வியாபார நிமித்தம் போய்ப் போய்த் திரும்பி வரு கின்றனர்? ஓர் அபாயமும் இல்லை. நீ கவலைப்படாதே. இன்று முதல் நீ அரண்மனை அந்தப்புரத்தில் இருக்க வசதி செய்யுமாறு

உத்தரவு இட்டிருக்கிறார், அரசர். உனக்கு ஒரு குறைவும் வராது. எனக்கும் கடவுளருளால் ஓர் அபாயமும் வராது. அதோ பார். அரசர் வந்துவிட்டார். நண்பன் காத்துக் கொண்டிருக்கிறான். விடைகொடு, செல்லம். திரும்பி வந்து உன்னையும் என் அருமை மகனையும் - ஆம்! மகனைத்தான்! - பார்க்கிறேன்" என்றான் ரஞ்சன்.

செல்லம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ரஞ்சன் காட்டிய பக்கம் நோக்கினாள். அவளுக்குப் பெருமையால் உடல் ஒரு பூரிப்புப் பூத்தது. ஆம்! அரசர் காத்துக் கொண்டிருக்கிறார்!

படகின் தனி இடத்தில் உட்கார்ந்துகொண்டு வானவெளியில் நெஞ்சு செலுத்தி,

> "நேரம் கழிவதிலும் நினைப்பின்றியே
> சாலப் பலபலநற் பகற்கனவில்
> தன்னை மறந்தலயம் தன்னில்"

இருந்தான் ரஞ்சன். அவன் தினம் இவ்வாறே உட்கார்ந்து கொண்டிருப்பான். ஒருநாள், பௌர்ணமை இரவுதான், கடலின் நடுவே சிந்தனைக் கடலில் திளைத்துக் கொண்டிருக்கும் பொழுது, "அதோ தெரிகிறதே மின்மினிப் பூச்சிகள்போல் சில விளக்குகள், அதுதான் சாவகக்கரை!" என்று யாரோ சொல்வது அவன் காதில் விழுந்தது.

7

இதோடு ரஞ்சன் சாவகத்திற்கு வந்து ஆறு பௌர்ணமிகளை எண்ணிவிட்டான். ஆறு சித்திரங்களையும் சிருஷ்டித்து விட்டான். ஒவ்வொரு சித்திரமும் முடிவுபெறும்பொழுது அதை ஒரு விழாவாகக் கொண்டாடினான் சாவக அரசன். முதல் சித்திரம் முடிந்ததும், 'இதைவிட அழகான சித்திரம் இனி எவராலும், ஏன், ரஞ்சனாலுங்கூட வரைய முடியாது' என்று எண்ணினான், அவ்வரசன். ஆனால் ஆறு சித்திரங்களும் அவனை அவ்வாறே எண்ணும்படி செய்துவிட்டன. அவ்வரசன் ரஞ்சனுக்கு அளிக்கிற சம்மானங்களும் மரியாதைகளும், "இவற்றிற்கு நாம் பாத்திரந்தானா?" என்று ரஞ்சனைப் பிரமிக்கச் செய்து விடும்.

ஒருநாள் அரசன் ரஞ்சனைத் தன் அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்திற்குக் கூப்பிட்டனுப்பினான். அரசனுடன் ரஞ்சனைச் சாவகத்திற்கு அழைத்துவந்த தூதனும் இருந்தான். "ரஞ்சனு, உன் கலை வன்மையை எம் அரசர் மிகவும் மெச்சுகிறார். அது, உனக்கு அவர் செய்யும் ராஜோபசாரங்களாலும் சம்மானங்களாலும் நீயே அறிந்திருப்பாய். உன்னிடமிருந்து எதிர்பார்த்ததற்கு மேலேயே எங்கள் தீவில், சுற்றுப்புறங்களில் உள்ள அரசர்கள் கண்டு திகைக்கும்படியான சித்திரங்களை வரைந்து தந்திருக்கிறாய். உனக்கும், உங்கள் மகா ராஜாதிராஜன் கரிகால

னுக்கும், உன் தாய் நாடாகிய தமிழ் நாட்டிற்கும் நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் எம் அரசர் உன்னிடமிருந்து இன்னும் மேலானதும் முக்கியமானதுமான ஒன்றை எதிர்பார்க்கிறார். அவருக்கு ஒரே ஒரு மகள் இருப்பது உனக்குத் தெரிந்திருக்கும். ராஜகுமாரி அவருடன் அடிக்கடி சித்திர மண்டபத்திற்கு வந்து செல்வதையும் பார்த்திருப்பாய். ராஜகுமாரிக்குச் சித்திரக் கலையில் அபாரப் பிரேமை. அவளுக்கு முறையுடன் சித்திரம் வரைய நீயே கற்றுக் கொடுக்கவேண்டும்" என்று கூறி நிறுத்தினன் தூதன். மேலும் தொடர்ந்து, "நீ இதைச் செய்வதனால் எங்கள் நாட்டில் நிரந்தரமாக ஒரு சித்திரசாலை ஏற்படுத்திய புகழ் உன்னைச் சாரும். என்ன சொல்கிறாய், ரஞ்சன?" என்றான் தூதன்.

ரஞ்சன் சற்று நேரம் மௌனமாய் இருந்தான். பிறகு, "அரசர் சித்தம் அவ்வாறானால் நான் என்ன சொல்லப் போகிறேன்? அவர் சித்தப்படியே செய்கிறேன்" என்று தன் மனத்தில் எழுந்த பல குழப்பங்களை அடக்கிக்கொண்டு கூறினன்.

8

அன்றுமுதல் அரசகுமாரிக்குச் சித்திரக்கலை பயிற்றுவிக்கத் தொடங்கி விட்டான் ரஞ்சன். வர்ணங்களைக் குழைத்துத் தீட்டுவதற்குத் தயாராய் வைத்தார்கள். இன்னும் சித்திரம் வரைவதற்குப் பூர்வாங்கமான ஏற்பாடுகள் யாவும் முடிந்தன. ஆனால் ரஞ்சன் மட்டும் சித்திர மண்டபத்தின் வாயிலுக்கு அடிக்கடி வருவதும், உள்ளே செல்வதுமாகவே இருந்தான். யார் வரவை எதிர்பார்க்கிறான்? ஆம், கஞ்சுகி வரவைத்தான்.

ராஜகுமாரி கஞ்சுகி அவனிடம் சித்திரக்கலை பயில்வதற்கு வந்து நான்கு தினங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் அவள் பக்கத்தில் இருந்தால்தான் ரஞ்சனின் சலாகை சுவரில் நடனமாட ஆரம்பிக்கும். "ஆகா! எவ்வளவு கூர்மையான அறிவு! கலையின்மீதுதான் என்ன ஆர்வம்! கைஜாடைதான். ஆனால் எவ்வளவு கவனமாக அக்குறிப்பை உணர்கிறாள்! அப்பப்பா! என்ன கண்கள்! 'கூற்றமோ கண்ணே பிணையோ! மடவரல் நோக்கம் இம் மூன்று முடைத்து!' என்று இந்நங்கையைப் போன்றவர்களைப் பார்த்துத்தான் வள்ளுவர் பாடினாரோ? ஒவ்வொரு தினமும் கூரிய வாள்மேல் நடப்பது போலல்லவா இருக்கிறது! என் நிலைமை எனக்கே பயமாயிருக்கிறதே! அம்பிகே, எனக்குத் திட சித்தத்தைக் கொடு. கலைமகளே, நீதான் என் மனத்தில் ஒரு விதமான களங்கமும் வராமல் பாதுகாக்க வேண்டும்" என்று முணுமுணுத்த வண்ணம் ரஞ்சன் தான் தீட்டிய - சித்திர மண்டபத்தின் வாயிற்படியின்மேல், மண்டபத்தின் உட்புறம் நோக்கியிருந்த - கலைமகளின் சித்திரத்தை நோக்கி வணங்கினன்.

அப்பொழுதுதான், 'கலீர், கலீர்' என்று தண்டை ஒலிக்கக் கார்காலத்து மின்னல்போல் உள் நுழைந்தாள் கஞ்சுகி. ரஞ்சன் நமஸ்காரம் செய்வதைப் பார்த்துவிட்டு, அவளும் நன்முகக் குனிந்து அவனை நமஸ்காரம் செய்துவிட்டு மோகனப் புன்னகை யுடன் உள்ளே நுழைந்தாள்.

பிறகு ரஞ்சனின் விரல்கள் தாமாக இயங்கின. அவளும் படிப்படியாக அவனைப் பின்பற்றி வரைந்தாள். நின்று நின்று அவளது சித்திரத்தைத் திருத்தம் செய்துகொண்டே மேலும் மேலும் வரைந்துகொண்டே சென்முன், ரஞ்சன். திருத்தங்கள் செய்ய அவள் அருகே செல்லும்போதெல்லாம் தேன் நிறைந்த பாத்திரத்தை நெருங்கும் வண்டைப்போல் இருந்தது அவன் நிலைமை.

9

இவ்வாறு ஆறு மாதங்கள் மறைந்தன. சித்திரக்கலையில் விற்பன்னையாகி விட்டாள், கஞ்சுகி. இந்த ஆறு மாதங்களுக்குள் பரஸ்பரம் ஒருவர் மனத்தில் இருப்பதை மற்றவருக்கு ஓவியின் மூலம் அறிவிக்கத் தொடங்கிவிட்டனர். அவர்கள் பேசியது என்ன என்ன பாஷைகள் கலந்ததோ ; ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்துகொண்டனர். அதுதான் அவர்கள் விரும்பியது.

இந்த ஆறு மாதங்கள் அவனுக்கு வெகு சீக்கிரம் கழிந்து விட்டது. பகலின் பெரும்பகுதி சித்திர மண்டபத்தில் கழியும். வளர்பிறை இரவுகளில் எல்லாம் அதற்கு அடுத்து இருந்த பூங்காவில் நெடுநேரம் தனியாக உட்கார்ந்து வானத்தை நோக்கிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பது அவன் வழக்கமாகி விட்டது. கஞ்சுகி உடன் இருக்கும்பொழுது தன்னையே மறந்திருப்பான். ஆனல் அவள் பிரிந்துவிட்டால் தன் மனைவி செல்லத்தின் ஞாபகம் பீறிக்கொண்டு வரும். "தனிமையாக எப்படி இருக் கிறளோ! பிரிவைச் சகியாமல் மனங் கசிந்து மெலிந் திருப்பாளோ! இவ்வளவு நாள் குழந்தை பிறந்திருக்கும்! சுகமாகப் பிரசவித்திருப்பாளா? ஒருகால் பிரசவக் கோளாறு ஏதாவது வந்திருக்குமோ?.....ஐயோ பராசக்தி! வேண்டாம். அவ்வளவு பெரிய சோதனை என்னிடம் வேண்டாம்" என்று முணு முணுத்துக்கொண்டு இரவு நீண்ட நேரம் வரையில் சிந்தனைச் சுழலில் சிக்கித் தவித்துக்கொண் டிருப்பான்.

10

இன்றோடு ரஞ்சன் தன் நாட்டை விட்டுக் கிளம்பிப் பத்துப் பௌர்ணமை ஆகிவிட்டன. இதற்குள் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. முன்பின் தெரியாத அன்னிய நாட்டில் வந்து அவர்கள் மனத்தைக் கவர்ந்து விட்டான் ; பெயரை நிலைநாட்டி விட்டான் ; தமிழ் நாட்டுக்கு அழியாப் புகழை உண்டாக்கி

விட்டான். அங்கே, தன் நாட்டில், என்னென்ன நடந்தனவோ அவனுக்குத் தெரியாது.

பௌர்ணமிக்கு நான்குநாள் முன்புவரை ரஞ்சன் தனிமையாகத்தான் அந்தப் பூங்காவில் இருந்தான். ஆனால் நான்கு தினங்களாகக் கஞ்சுகியும் வரத் தொடங்கிவிட்டாள். இருவரும் தனிமையில் ஏதேதோ பேசிக் கொண்டிருப்பர். அவர்களின் கலைக் கண்களுக்கு ஒவ்வொன்றும் கடவுளின் உன்னத சிருஷ்டியாகத் தோன்றும்.

அன்று பௌர்ணமி யாதலால், ரஞ்சன் பூங்காவிற்கு அஸ்தமிக்கும் பொழுதே வந்துவிட்டான். சந்திரன் வரவை நோக்கிக் கீழ்த்திசையையும், கஞ்சுகி வரவை நோக்கி மேல்திசையையும் அடிக்கடித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அவன் மனத்தில் இயற்கையாக இருக்கும் குதூகலம் காணப்படவில்லை. ஒருவிதமான பரபரப்பு, ஆர்வம், துக்கம் என்பவை கலந்து உண்டான குழப்பத்தை முகம் பிரதிபலித்தது. "இப் பூங்காவும் இந்நாட்டு வாசமும் இன்னும் ஒரு வாரந்தான். அப்புறம் தாய்நாடு! காவிரி நீர்! செல்லம்! செல்லத்தின் செல்லம்! அரண்மனைச் சித்திர மண்டபம்!" இவற்றை எல்லாம் நினைத்துக்கொண்டு அங்கிருந்த மேடையின்மேல் உட்கார்ந்திருந்தான். மெல்ல அடிமேல் அடி வைத்து நடந்துவந்தாள் கஞ்சுகி. அவள் எவ்வளவு மெதுவாக நடந்து வந்தபோதிலும் அவள் வரவை முன்னமேயே 'கலீர் கலீர்' என்று ஒலிக்கும் தண்டைகள், சற்று மந்தமாக ஒலித்தபோதிலும், அறிவித்துவிட்டன.

ரஞ்சன் திரும்பிப் பார்க்கவில்லை. அவன் மனம் எங்கோ இருந்தது. அவன் முன் வந்து நின்றாள் கஞ்சுகி. அவள் கையில் ஒரு பூமாலை இருந்தது. அதையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தாள், கஞ்சுகி. குறும்பும் வேட்கையும் கலந்திருந்தன அக் கண்களில்.

"இதென்ன? மாலையா, கஞ்சுகி? அப்பா! என்ன வாசனை! வரும்பொழுது சித்திர மண்டபத்தின் வழியாகத்தானே வந்தாய்? இம் மாலையை அக்கலைவாணியின் படத்திற்குப் போட்டு வந்திருக்கலாமே?" என்றான் ரஞ்சன்.

கஞ்சுகி ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டாள். "அந்தக் கலைவாணியைச் சிருஷ்டித்தவருக்குத்தான் இம் மாலை. நான் என் கன்னி மாட்டத்தில் என் கையால் நட்டு வளர்த்த புஷ்பச் செடி முதல் முதல் அரும்பெடுத்துப் பூத்த பூக்கள் இவை? நீங்களே எனக்குக் கலைவாணியின் பிம்பம். அதற்கு அடுத்ததுதான் நீங்கள் சொல்லும் கலைவாணி" என்று கூறிக்கொண்டே அவன் தலையருகே மாலையைக் கொண்டு சென்றாள் கஞ்சுகி. ரஞ்சன் சட்டென்று அவளைத் தடுத்து, "கஞ்சுகி, இதென்ன, பைத்தியக்காரச் செய்கை! என்னிடம் கூடவா விளையாட்டு?" என்றான் சற்றுப் பதற்றத்துடன்.

"ஆ! விலையாட்டா? நான் இன்னும் எவ்வாறுதான் என் இருதயத்தைத் திறந்து காட்டுவேன்! அந்த ஜோடிப் புருக்களைக் பாருங்கள். அவைகள் எங்ஙனம் காதல் புரிகின்றன!"

"கஞ்சுகி, ஒன்றும் உளறுதே ஓர் அற்பஞ்சிய சித்திரகார னிடமா ஒரு ராஜகுமாரி இவ்வாறு பேசுவது?"

"அப்படியானால் நீங்கள் என்மீது காதல்கொள்ளவில்லையா? உங்கள் அங்கங்களின் ஒவ்வோர் அசைவிலும் காதலின் சாயையைக் கண்டது பிரமைதானா?"

"கஞ்சுகி, ஆம்; கொண்டேன்; காதல் கொண்டேன். ஆனால் உன் மீது அல்ல. உன் கலை வடிவத்தின்மீது காதல் கொண்டேன். அது என் மனத்தை விட்டு என்றும் அகலாது. அந்தக் கலை வடிவத்தை மிகவும் கஷ்டப்பட்டு வரைந்து என் இரும்புப்பெட்டியில் வைத்திருக்கிறேன். என் உயிர் உள்ளவரையில் அது என்னை விட்டு அகலாது. கஞ்சுகி, உனக்கு ஏற்ற கணவனைப் பராசக்தி உனக்கு அளிப்பாள். அவளன்றி ஓர் அணுவும் அசையாது" என்று கூறிக்கொண்டே கஞ்சுகி இருந்த பக்கம் திரும்பினான் ரஞ்சன்.

அவளைக் காணவில்லை. அந்த மாலைதான் அவன் காலடியில் கிடந்தது. அவள் அதோ சென்று கொண்டிருக்கிறாள். திரும்பிப் பார்க்கிறாள். கண்களினின்று பொல பொல வென்று வடியும் கண்ணீர் கன்னத்தின் வழியே வழிந்தோடுகிறது.

தன் கண்களில் துளித்த நீரைத் துடைத்துக்கொண்டு வானத்தை நோக்கினான், ரஞ்சன். 'குபீல்' என்ற பிரகாசத்துடன் ஒரு நட்சத்திரம் வான வீதியினிடையே வீழ்ந்து மறைந்தது.

11

சாவகத்தின் துறைமுகம் ஒன்றில் பாய் விரிக்கப்பட்டு ஒரு மரக்கலம் தயாராய் இருந்தது. துறைமுகத்தில் ஏராளமான கூட்டம். அந்நாட்டு அரசரிடமும், தன்னை அழைத்துவந்த தூதனிடமும் விடை பெற்றுக் கொண்டான் ரஞ்சன். அவன் கண்கள் யாரையோ தேடித் தேடி அலைந்தன. கடைசியாக ஒரு பெரு மூச்சு விட்டுக்கொண்டு கப்பலின் மேல்தளத்தில் நின்று அங்கே கூடியிருந்த ஜனங்களிடம் விடை பெற்றுக்கொண்டான்.

சலாகையும் கையுமாகவந்த சித்திரகாரன் மரக்கலம் கொண்ட பரிசுகள் கொண்டு போகிறான். இதோடல்ல; அத் தீவு மக்களின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டு போகிறான். அத் தீவில் ஒரு விலையற்ற பொருளையும் விட்டுச் செல்கிறான், அக் கலைஞன். அது தான் புகழ்க்கொடி. அது தமிழ்நாட்டை நோக்கிக் கம்பீரமாகக் காற்றில் பறந்துகொண்டிருப்பதை அவன் மானசிகமாகக் காண்கிறான்.

கப்பலோ பொறுக்கி எடுத்தாற் போன்றது. விசேஷ சமயங்களில் அரசன் ஏறிச் செல்வது. 'தமிழ் நாட்டின் ஒப்பற்ற கலைஞனே ஏற்றிச் செல்கிறோம்' என்ற கர்வத்தாலோ என்னவோ அக் கலம் பெருமிதத்துடன், காற்றை ஊடுருவிச் செல்லும் அம்பைப்போலக் கடலைக் கிழித்துக்கொண்டு சென்றுகொண்டிருந்தது. அதற்கு ஏற்றபடியே கடலும் என்றும் இல்லாத அமைதியுடன் இருந்தது. இந்த அமைதி அதிகமாக ஆகக் கப்பலில் இருந்தோர் பலர் கலவரப்படத் தொடங்கினர். இவ் வமைதி ஏதோ வரப்போகும் புயலின் அறிகுறி என்று எண்ணினர்.

அதற் கேற்றபடி, அதுவரையில் நிர்மலமாயிருந்த ஆகாயத்தில் கன்னங் கரிய மேகங்கள் கவியத் தொடங்கின. லேசாக அடித்துக் கொண்டிருந்த காற்றும் கொஞ்சம் கொஞ்சமாக விசையாகி 'விர்ர் விர்ர்' என்று பயங்கரமான புயற்காற்றாக மாறியது.

கப்பலின் பாயை அகற்றிவிட்டு, அவரவர்கள் தங்கள் குலதெய்வங்களை வேண்டத் தொடங்கினர். கடலின் கொந்தளிப்பு ஒவ்வொரு விநாடியும் அதிகமாகத் தொடங்கியது. கப்பலைச் சுற்றி ரத்த வெறியுள்ள மீன்கள் கூட்டமாக வட்டமிட்டன. அந்தச் சூறாவளிக் காற்றிலும் கொந்தளிப்பிலும் கப்பல் முக்கால் பங்கு மூழ்குவதும், விசையுடன் மேலெழுவதும், மறுபடியும் அமிழ்வதுமாக இருந்தது. 'விர்ர்ர், விர்ர்ர்!' ஒரு பயங்கரமான சூறாவளிக் காற்று. அந்தோ! "ஐயோ! ஐயோ!" என்ற அலறல் களுக்கிடையே மரக்கலம் முழுகிவிட்டது.

12

சந்திரிகை தன் முழுச் சௌந்தரியத்துடன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஊர் அடங்கி நீண்ட நேரம் ஆகிவிட்டது. கன்னி மாடத்தின் உப்பரிகையின்மேல் வீணையும் கையுமாக உட்கார்ந்திருக்கிறாள், கஞ்சுகி. கருநீல வானில் பிரகாசிக்கும் முழு மதியைப் பழித்துக்கொண்டு அவள் தோள்மீது புரண்டு அலைந்து விளையாடிக்கொண்டிருக்கும் கரிய கூந்தலின் நடுவே, சோகத்தால் வெளுத்த முகம் தூரத்தே அலைத்துக் கொண்டிருந்த கடலை நோக்கியிருந்தது. அவள் இருதயத்தின் சோக சங்கீதம் விரல்களின் வழியே வீணை நரம்புகளின் மூலம் முகாரி ராகமாகக் காற்றில் கலந்து மிதந்து தவழ்ந்து வியாபித்துக் கொண்டிருந்தது.

சோழநாட்டு அரண்மனையின் அந்தப்புரத்தில், கட்டடத்தின் வெளியே நீட்டிக் கட்டப்பட்டிருந்த சாளரத்தில் செல்லம் உட்கார்ந்திருந்தாள். அவள் மடியில் குறு குறுவென்ற பார்வையுடன் அவள் மகன், சந்திரனுடன் மோன பாஷையில் பேசிக்கொண்டிருந்தான்.

புகார்த் துறையை நோக்குந்தோறும் அவளுக்கு ஆத்திரம் குமுறிப் பீரிடுகிறது. கடல்மடை திறந்ததுபோல் அவள் கண்களினின்று எழும் நீர்த்தாரை சந்திர ஒளியில் பிரகாசித்துவிட்டு, அவள் கன்னங்களின் வழியே சென்று அப்பால் மணம் மாறாத பச்சைக் குழந்தையின் கன்னக் கதுப்புகளில் விழுகின்றன.

அந்தோ! இவ்விரு பெண்களின் நெஞ்சை அவ் வெண்ணிலா ஏன் இப்படி வெதுப்புகிறது? அக் கிரணங்களின் தண்மைதான் எங்கே? இவ்வளவு குறும்புக்கும் காரணமான அந்தக் கடல்தான் என்ன அமைதியாகத் தோன்றுகிறது! அவ்வபலைப் பெண்களின் இருதயத்தில் தீராப் புண்ணை உண்டாக்கிவிட்டு, கொந்தளிப் புடன் குதித்தெழுந்து உருண்டு திரண்டு ஓயாது அலைத்துக் கொண்டிருக்கிற அக் கடலின் உள்ளந்தான் கல்லோ!

"ரஸிகன்"

பலாச்சுளை 43

தங்கம்மாள் தன் வீட்டின் முன்தாழ்வாரத்தில் பலாப்பழத்தில் சுளை எடுத்துக்கொண்டிருந்தாள். நல்ல தஞ்சாவூர்ப் பழம்; சுளை பெரிதாயும் தங்க நிறமாயும்இருந்தது; கூறுக்கு இருபது இருக்கும். வைத்தியநாதையர் தம் தகப்பனார் சிராத்தத்திற்கென்று, தஞ்சாவூருக்கு 'ஈரங்கி'க்குப் போயிருந்த இடத்தில் அதை வாங்கிக் கொண்டு வந்தார். ஒரு பாதி தேவைக்கு உபயோகப்பட்டது. மறுநாள் மத்தியான்னம் பாக்கியைச் சாவகாசமாய் ருசி பார்க்கும் நிமித்தம் வீட்டு எஜமானி தானே சுளை எடுத்துக் கொண்டிருந்தாள். அரிவாள்மணைக்கு ஒருபுறம் ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் எண்ணெய் இருந்தது. பிசின் கையில் ஒட்டாமல் இருப்பதற்காக அதில் அடிக்கடி விரலைத் தோய்த்துக்கொண்டு சுளைகளை எடுத்து, இன்னொரு புறம் போடப்பட்டிருந்த பெரிய நுனி இலையில் சுளைகளை ஓர் ஏட்டிலும், கொட்டைகளை ஓர் ஏட்டிலுமாகப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் அம்மாள் எடுக்கும் சுளைகளில் சராசரி இரண்டுக்கு ஒன்றுதான் இலைவரையில் எட்டும். மற்றது நடுவழியில் ஞாபக மறதியாய் அவள் வாய்க்குள் விழுந்துவிடும்.

இப்படி மும்முரமாய்க் கையும் வாயும் வேலை செய்யும் தருணத்தில் வாசலில் குழந்தைகள் சத்தம் கேட்டது. தங்கம்மாள் சட்டென்று அருகில் இருந்த அருக்கஞ்சட்டி ஒன்றைக் கவிழ்த்து இலையை மூடிக்கொண்டாள். இரண்டு குழந்தைகள் உள்ளே ஓடி வந்தார்கள். இரண்டு பேருக்கும் அநேகமாய் ஒரே வயசுதான் இருக்கும் – நாலு நடக்கிறதோ நிரம்பிவிட்டதோ, தெரியவில்லை. "அம்மா, பலாப்பழ வாசனை அடிக்கிறதே; எனக்கில்லையா?"

என்று கேட்டுக்கொண்டு வந்த முதல் குழந்தை நல்ல சிவப்பு; சிரித்த முகம். இடுப்பில் பட்டுக் கயிற்றில் தங்கச் சலங்கை கட்டியிருந்தது. காலில் வெள்ளிக் காப்பு, கழுத்தில் தங்கச் சங்கிலியில் கோத்த தாயத்து. பின்னல் வந்த குழந்தைக்கு இடுப்பில் ஒரு கறுப்புக் கயிறும், அதில் ஒரு தேய்ந்த நாய்க் கொடியும் தவிர வேறு ஆபரணம் ஒன்றும் இல்லை. அவன் தன் சிநேகிதனுடன் தாழ்வாரத்தில் ஏறுமல் இடைக்கட்டுக் கதவு நாதாங்கியைப் பிடித்துக்கொண்டே நின்றான்.

தங்கம்மாள் தன் குழந்தையிடம் இரண்டு பெரிய சுளைகளைக் கொடுத்து, "அவ்வளவுதான். ஓடம்புக்காகாதுடா, கண்ணே!" என்று சொல்ல, "நாராயணனுக்கு?" என்றான் அக்குழந்தை.

"ஆமாம், அவாத்திலே தினம் பழம் வாங்கினபடியே தானே இருக்கா!" என்று முணுமுணுத்துக்கொண்டு சூள் கொட்டி விட்டு, உள்ளதுக்குள் சிறியதாயிருக்கும் இரண்டு சுளைகளை அரைமனசாக எடுத்து, "இந்தாடா" என்று கூப்பிட்டு அக் குழந்தையிடம் கொடுத்து "ஓடு, இருட்டிப் போச்சு; இம்மே நாளைக்கு வெளையாடலாம்" என்று கொஞ்சம் அதட்டிச் சொன்னாள்.

அவன் அதை வாங்கிக்கொண்டு வெளியே செல்லும்போது, திண்ணையில் உட்கார்ந்து புஸ்தகம் பார்த்துக் கொண்டிருந்த வைத்தியநாதையர் அகமுடையாளைக் கூப்பிட்டு, "இன்னும் நாலு சுளை கொடுக்கப் படாதோ? நமக்குத்தானே வயிறு? நேத்திக்கு வேண்டியமட்டும் தின்னச்சு. அவனண்டே ஒரு கூறு கொடு" என்று சொன்னார். அதைக் கேட்டுத் திரும்ப ஆவலாய் உள்ளே சென்ற அந்தக் குழந்தையினிடம் முக்கால் வாசிச் சுளை எடுத்த ஒரு கூறை ஓர் இலைக்கிழிசலைப் போட்டு மூடி, "இந்தாடாப்பா, உத்தரவாயிட்டுது; என்னவோ கொட்டி வச்சிருக்காப்லெதான்!" என்று சலிப்புடன் கொடுத்து, ஐயர் அதைக் கையில் வாங்கிப் பார்க்காத வண்ணம் அவனை வாசற்படி வரையில் கொண்டுவந்து விட்டுவிட்டு உள்ளே சென்றாள்.

தேத்தாரம்பட்டி அக்கிரகாரத்தில் வைத்தியநாதையர்தாம் பணக்காரர். வெகு நாள் குழந்தை இல்லாமலிருந்து எவ்வளவோ கோயில் குளங்களுக்குச் சென்றும், விரதங்கள் இருந்தும் அருந்தவப் புதல்வன் பிறந்தான். எப்பொழுதும் குழந்தைகளிடம் அன்புள்ள அவருக்குத் தமக்கு ஒரு புத்திரன் உண்டானதிலிருந்து பிறர் குழந்தைகளிடம் இரட்டிப்பான பிரியம் ஏற்பட்டது. அவர் மனைவியோ, என்றைக்கும் குழந்தைகளைக் கண்டால் கரிப்பவள். வெகு நாள் கழித்துத் தான் ஒரு பிள்ளை பெற்றதில் ஏதோ ஓர் அசாதாரணமான காரியத்தைப் பண்ணிவிட்டவள் போல அகமகிழ்ந்தாள். தன் குழந்தை தெய்வப் பிறப்பென்றும் மற்றக் குழந்தைகள் மண்ணைப் பிசைந்து பண்ணப்பட்டனவென்றும் எண்ணினவள் போல், அவர்களோடு சேராமல் கிருஷ்ண மூர்த்தியைப் பொத்திப் பொத்தி வளர்த்தாள். எக்காலத்திலுமே

கல்லது பொல்லாதது ஒன்றுக்கும் பிறர் வீட்டை எட்டிப் பாராத அவள், தன் குழந்தை இரண்டு மூன்று பிராயம் ஆகி வீடு தாண்டி வெளியே போக ஆரம்பித்ததும், அவன் மற்ற வீடுகளுக்குச் செல்லாமலும் மற்றக் குழந்தைகளோடு சேராமலும் இருக்க எவ்வளவோ முயற்சி பண்ணினாள்.

வைத்தியநாதையருக்கு அவள் காரியம் கொஞ்சமும். பிடிக்கவில்லை. "ஒன்னைப்போல அவனையும் ஓரியாயடிக்கப் பார்க்கறயா?" என்று எரிந்து விழுவார். அவளோ, "இந்த ஊரிலே இருக்கற தரித்தரப் பொணங்களுக்கு அளிகையும் ஆங்காரமும் கணக்கில்லே. கொழந்தையைக் கண்ணுலே சுட்டுடும். ஐயோ! கொழந்தைகளாங் கொழந்தைகள்! மூக்கொழுகறதும், நாக்கொழுகறதும், கண்டா வாயிலெடுக்க வரது. தொட்டாலே அழுக்கு ஒட்டிக்கும் போலேருக்கு!" என்றெல்லாம் உதாசீனமாய்ப் பேசுவாள்.

ஆனால் கிருஷ்ணமூர்த்தி அவள் கட்டுப்பாட்டுக்கு முழுதும் அடங்கவில்லை. தெருக்கோடியிலுள்ள கூரைவீட்டு நாராயணனும் அவனும் இணைபிரியாத தோழரானார்கள். இது தங்கம் மாளுக்குச் சற்றுக்கூடப் பிடிக்காமல் போனாலும், அவள் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஏனெனில் நாராயணன் தகப்பனார் வைத்தியநாதையருக்கு ஒன்றுவிட்ட மருமகன். தவிர, அச்சிறு வயசிலேயே நாராயணன் வெகு சமர்த்தாகவும் கருத்தாகவும் இருந்தான். இந்தக் காரணங்களால் தன் குழந்தை அவனோடு பழகுவதில் ஐயருக்கு நிரம்பச் சந்தோஷம். நாராயணனோடு பழகுவதால் கிருஷ்ணமூர்த்தி வேறு தோழர்களைத் தேடாமல் இருப்பதிலிருந்து தங்கம்மாளும் தொலைந்து போகட்டுமென்று இருந்தாள்.

நாராயணன் தன் வீட்டை நோக்கிப் பழத்தைத் தூக்கிக் கொண்டு விரைந்து சென்றான். போகும்போது தனக்கு என்று கொடுத்த இரண்டு சிறு சுளைகளையும் ஒன்றன்பின் ஒன்றாய் வாயில் போட்டுக் கொண்டான். தேன்மாதிரி இருந்தது. அவனுக்கு அதுவரையில் பலாப்பழ ருசி தெரியாது.

அவன் பெற்றோர் பரம ஏழைகள். அதிலும் தகப்பன் ஆகா வழி. நேராய்ச் சம்பாதிப்பதற்குச் சக்தி மூன்பின் இருந்தாலும் உடம்பு வணங்குவதில்லை. ஊரூராய், கல்யாணம் எங்கே, கல்லெடுப்பு எங்கே என்று தண்டச்சோறு தின்பதும், பொய்ச் சாக்ஷி சொல்லிக் காபிச் செலவு செய்வதும், ரங்காட்டம் ஆடுவதுமாகக் காலம் கழித்துவந்தான். மாதத்திற்கு ஒரு நாள் அரைநாள் வீட்டுக்கு வருவது அபூர்வம். கால் அரை கொண்டு வந்து கொடுத்தால் கொடுத்தான்; இல்லாத போனால் அவன் சம்சாரம், பாவம், வாயைத் திறக்கக்கூடாது; திறந்தால் அறைதான். அந்த உத்தமி எப்பாடோ பட்டுத் தனக்கும் தன் குழந்தைக்கும் வயிறு வளர்ப்பதற்கு வேண்டியது தேடிக் காலந்தள்ளி வந்தாள்.

அவள் நல்ல புத்திசாலி. ஏழைவீட்டுப் பெண்ணையிருந்தும் பிறரை இரக்கும் தன்மை இல்லை. அவள் கை நாலு காரியமும் செய்யும். சற்று நேரங்கூட வெறுமனே இருக்கமாட்டாள். வம்பு வளர்க்க அவளுக்குப் பொழுதும் இல்லை, இஷ்டமும் இல்லை. இதனாலேயே அவளைக் கண்டால் தங்கம்மாளுக்கு ஆகாதில்லை.

தங்கம்மாள் ஊரிலுள்ள பெண்கள் அவ்வளவு பேரும் தனக்கும் தன் பணத்துக்கும் அடிமைகள் என்றும், தன் உத்தரவை எதிர்பார்த்த வண்ணம் இருக்க வேணுமென்றும் எண்ணங்கொண்டவள். "கூப்பிட்ட கொரலுக்கு ஏன்னு கேட்டாத்தானே ஏதாவது ரெண்டு கறியோ, காயோ, கையிலே ஆப்பட்டதைக் கொடுக்கத் தோணும்?" என்று கூறும் அவளுக்கு ஸதா சுசுரு ஷை செய்யப் பத்துப்பேர் காத்திருப்பார்கள். பகல் முழுவதும் அப்பளம் இடுவதோ, மூறுக்குச் சுற்றுவதோ, தோசைக்கு அரைப்பதோ, இன்னும் வேறு என்ன வேலை இடுவளோ அதைத் செய்துவிட்டு, அரைப்படி ஊளைமோர், நாலு அவிசல் கத்திரிக்காய், ஒரு வாழைப்பூ, இவ்விதமான சம்மானங்களைப் பெற்று மகிழும் அந்த ஏழைகளைத் தங்கம்மாள் சுக்கிரீவாக்கினை பண்ணுவாள்.

இதெல்லாம் ராதையிடம் பலிக்கவில்லை என்பதுதான் அவளுக்கு அந்தப் பெண்ணிடம் உள்ள வெறுப்புக்கு அடிப்படை. அவள் அநாவசியமாய்த் தங்கம்மாள் வீட்டுக்கு வருகிறதில்லை. தன் கணவனுக்கு உறவினர்கள் என்று அவர்களிடம் எவ்வித ஓத்தாசையும் எதிர்பார்ப்பதில்லை. அவள் படும் சிரமத்தைப் பார்த்து வைத்திநாதையர் ஏங்கலுக்கு ஏதாவது கொடுத்தால் அதையும் வேண்டாமென்பதில்லை. தங்கம்மாளுக்கு அதைக் கொடுக்காமல் தடுக்கத் தைரியம் இல்லை. ஆகிலும், ஐயர் காதில் விழாமல் தன் அடிமைகளிடம், "கிளப்புக்காரி பொண்ணுக்கு ராங்கியிலே கொறச்சலில்லே. தவுடு திங்கறதிலே ஒய்யாரம்!" என்று குரோத வார்த்தை சொல்லித் தன் வயிற் றெரிச்சலை ஆற்றிக்கொள்வாள்.

வீட்டுக்குள் நுழையும் போதே, "அம்மா, கிஷ்ணமூர்த்தி ஆத்திலே பலாப்பழம் கொடுத்தா; ரொம்ப நன்னருக்கு" என்று சொல்லிக்கொண்டு வந்த குழந்தை தாயைக் காணாமல் சமயலறைக்குள் சென்றான். அடுப்பில் பாணையில் சோறு கொதித்துக் கொண்டிருந்தது. மினுமினு என்று ஒரு தகர விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தாய் அசைவற்று எரியும் அடுப்பை நோக்கியிருந்ததைக் கண்டு அவள் கவனத்தைக் கலைக்கக்கூடாதென்று தானும் உட்கார்ந்து ஒரு தூணில் சாய்ந்துகொண்டான். பலாப் பழத்தைத் தாய்க்குக் கொடுக்க வேண்டுமென்றிருந்தாலும் தனக்குத் தெரியாமலே கை சுளையைத் தேடிற்று. இரண்டொரு சுளையே இருந்ததால் அவனுக்குச் சட்டென்று அகப்படவில்லை. அவனுக்கு இருந்த அவசரத்தில் மீண்டு தடித்திருந்த தாளைப் பிய்த்து வாயில் போட்டுக்கொண்டான். "சே, இது தித்திப்பே

இல்லியே! அந்த அம்மாமி கொடுத்தது கல்கண்டா இருந்ததே!" என்று ஏமாந்தவன்போல் சொல்ல, அதுவரையில் எதையோ நினைத்துக்கொண்டு மௌனமாயிருந்த அவன் தாய் திரும்பிப் பார்த்து, "அதை இங்கே கொண்டா, பார்ப்போம்" என்று சொல்லிப் பலாப்பழக் கூறைக் கையில் வாங்கி விளக்கு வெளிச் சத்தில் பார்த்தாள். அளிந்து, கையால் குழைசப்பட்ட இரண்டு மூன்று சின்னச் சுளைகள் தாளால் மூடப்பட்டு மறைந்து கிடந் தன. மற்றதெல்லாம் வெறும் தாளே.

தன் குழந்தை முகத்தைப் பார்த்தாள். பழத்தில் ஆவ லும், தன் தாய் நல்ல நல்ல சுளைகள் எடுத்துக் கையில் கொடுக்கப் போகிறாள் என்ற நம்பிக்கையும் அவன் கண்ணில் ஜொலிக்கக் கண்ட அவள் வயிற்றைத் துக்கம் அள்ளிப் பிடுங் கிற்று. "ஐயோ, இப்படிக் குழந்தையை ஏமாத்துவாளா ஒரு பாவி!" என்று சொல்லிப் பலாக்கூறைக் கீழே போட்டுவிட்டு, நாராயணனை வாரிக் கட்டிக்கொண்டாள். கண்களிலிருந்து ஜலம் தாரை தாரையாக வந்தது.

இதைக் கண்ட நாராயணன், 'விக்கிச்சாப்போல்' வாயைத் திறக்கவில்லை. அவன் சொற்ப வயசுக்குள்ளாகவே வறுமையின் கொடுமையை நன்கு அறிந்தவன். பட்டினி பசியை அவன் அதிக மாக லக்ஷியம் பண்ணுவதில்லை. ஆயினும், ஒருநாள் கிருஷ்ண மூர்த்தி முந்திரிப் பருப்பு உருண்டை ஒன்றில் ஒரு பாதி தனக்குக் கொடுக்க, அதை வாங்கித் தின்று அவன் அந்த ருசியில் ஈடுபட்டு வீடுவந்ததும் தாயை, "அம்மா, நம்பாத்திலே நீ ஏன் முந்திரிப் பருப்புருண்டை பண்ணல்லே? கிஷ்ணமூர்த்தி ஆத்திலே பண் ணுளே, ரொம்ப நன்னருக்கே" என்று கேட்டான். அதற்கு அவள், "அவா பணக்காரா; முந்திரி தோப்பாய்க் காய்க்கறது. நாம்ப எங்கே போறதுரா, அப்பா?" என்று அதி விசனமாய்ச் சொன்ன சொல் அவன் உள்ளத்தில் பதிந்தது. அதிலிருந்து தாயை இது வேணும், அது வேணுமென்று கேட்பதை நிறுத்திவிட்டான். இன்றைக்கும் பலாச்சுளை இல்லையென்று கண்ட அவன் வாய் திறக்கவில்லை. தாய் மடியில் படுத்தபடியே சற்று நேரத்திற் கெல்லாம் தூங்கிவிட்டான். ராதை அடுப்புக் கட்டையை இழுத்து வெளியே போட்டுவிட்டுக் குழந்தைக்கருகே படுத்துக் கொண்டாள். கண்ணீரும் கம்பலையுமாக வெகு நாழிகை தன் விதியை நினைந்து வருந்தி அவளும் கண் அயர்ந்தாள்.

எவ்வளவு நாழிகை தூங்கியிருப்பாளோ தெரியாது; திடீ ரென்று விழித்துக்கொண்டாள் யாரோ வாசற் கதவை அவசர மாய்த் தட்டும் சத்தம் கேட்டது. விளக்கை எடுத்துக்கொண்டு போய்க் கதவைத் திறக்க, அங்கே வைத்தியநாதையர் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள். எப்பொழுதும் தன்னுடன் பேசாத அவர், "குழந்தைக்கு உடம்பு சரிப்படவில்லை, அம்மா; வாயில் எடுக் கிறது, வயிற்றாலும் போகிறது. எனக்கு ஒண்ணும் புரியல்லை; சித்தே வாயேன்" என்றார். அர்த்த ராத்திரி. வீட்டிலோ

குழந்தை ஒன்றியாய்த் தூங்குகிறான். வைத்தியநாதையர் முகத்தை மறுபடி நோக்கினாள். அதில் கண்ட துக்கமும் பயமும் அவளுக்கு மனம் சகிக்கவில்லை. அடுத்த வீட்டுக் கிழவி தெருத் திண்ணையில் படுத்திருந்தாள். தூக்கம் இல்லாமல் லொக்கு லொக் கென்று இருமிக்கொண்டிருந்த அவளிடம் குழந்தையைப் பார்த் துக்கொள்ளச் சொல்லிவிட்டு, ஐயர் பின்னே அவர் வீட்டை நோக்கி வேகமாய்ச் சென்றாள்.

மார்கழி மாதம், பொசபொசவென்று தூறல் விழுந்துகொண் டிருந்தது. ஒவ்வொரு வீட்டுக்குள்ளிருந்தும் குசுகுசு என்று பேச்சுக்குரல் காதில் விழுந்தது. ஆனால் ஒருவரும் கதவு திறக்க வில்லை; வெளிச்சம் காட்டவும் இல்லை. அப்போதுதான் வைத்திய நாதையர் தன்னைத் தேடிவந்ததன் உண்மையை அவள் ஊகித் தாள். என்ன நடந்ததென்றால், காலராக் காலமானதாலும், கிருஷ்ணமூர்த்திக்கு வயிற்றுப்போக்கு, வாந்தி இரண்டும் இருப் பதைக் கவனித்த அடுத்த வீட்டு ஸ்திரீ பரதேசித் தபாலில் இந்தச் செய்தியை ஊர் முழுவதும் ஒரு நொடியில் பரப்பி அது காலரா தான் என்று ஊர்ஜிதப் படுத்திவிட்டபடியாலும், இரண்டு மூன்று வீட்டுக் கதவைத் தட்டித் தங்கம்மாள் கையாள்களை வைத்திய நாதையர் கூப்பிட்டுப் பார்த்தும் அவர்கள் அயர்ந்து தூங்குபவர் போல் பாசாங்கு செய்தார்கள். விஷயம் என்ன என்று தெரிந்த பிறகுதான் ராதையை அவர் வந்து கூப்பிட்டது.

வீட்டுக்குள் எல்லாம் ஒரே அலங்கோலமாயிருந்தது. தலையாட்டம் கண்ட சமையற்காரக்கிழவி வெங்நீரில் பிளானலைப் பிழிந்து பிழிந்து கிருஷ்ணமூர்த்தியின் வயிற்றிலும் முதுகிலும் ஒத்திக்கொண்டிருந்தாள். அவன், உடம்பு கிடைகொள்ளாமல், இங்குமங்கும் புரண்டும், முக்கிக்கொண்டும், மிரண்டு விழித்துக் கொண்டும், அடிக்கு ஒருதரம் "ஐயோ, வயத்துவலி தாங்க முடியல்லியே!" என்று அலறிக்கொண்டும் இருந்தான். தங்கம்மாள் தலைவிரிகோலமாய்த் தூணில் சாய்ந்துகொண்டு, "எந்த மகாபாவி கண் பட்டுதோ, யார் சாபம் பலிச்சுதோ, என்கொழுந்தையெ நான் எங்கெ இம்மேக் காணப்போறேன்! அட பகவானே! எனக்குச் சாவு வரப்படாதா? என் கொழுந்தை நன்னியிருக்கப் படாதா?" என்று வாயில் வந்தபடி யெல்லாம் புலம்பிக் கொண்டிருந்தாள். ராதையைக் கண்டதும், "அடி, அம்மா, ராதே, நீ நல்ல பொண், ஒனக்குக் கொழுந்தை வயித்திய மெல்லாம் நன்னத் தெரியுமுன்னு சொல்லியிருக்காளே; என் கொழுந்தை பொழைப்பனு, சொல்லேன்!" என்று வெகு தீன மாயும் வணக்கமாயும் அவளைக் காலைப் பிடிக்காத தோஷமாகக் கேட்டாள்.

இதைப் பார்த்ததும் தன் மனத்தில் ஒன்றுக்கிரண்டாய்க் கிளம் பின வெறுப்பை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "பகவான்பேரிலே பாரத்தைப் போட்டுப் பேசாமே இருங்கோ; ஒண்ணும் கெடுதல் நேரிடாது" என்று சொல்லி, ராதை குழந்தையின் ஸ்திதியைக்

கவனித்தாள். அவளுக்குக் கல்யாணமாவதற்குமுன், மருத்துவத் தொழில் புரிந்து காலக்ஷேபம் செய்துவந்த அவள் தாய் (இவளைத்தான் தங்கம்மாள் 'கிளப்புக்காரி' என்று அவதூறுரூய்ச் சொன்னது) இம்மாதிரி சந்தர்ப்பங்களில் செய்யும் சிகிச்சைகளை அவள் நன்கு கவனித்துத் தெரிந்தவள்; ஆதலால், யோசனை தடுமாற்றம் ஒன்றும் இல்லாமல், வேண்டிய காரியங்களைச் சமையற்காரக் கிழவியின் உதவியைக் கொண்டு செவ்வனே செய்தாள். அவள் ஊகித்தபடியே பலாச்சுளை ஜரிக்காததால் வந்த கோளாறு ஆனதால், வசம்பு முதலிய சில சரக்குகள் சேர்த்துச் சுட்டுக் கருக்குவைத்துக் கொடுத்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் குழந்தைக்குக் குணம் கண்டது. கண்ணயர்ந்தான். அவன் கத்தல் கனையல் கொஞ்சம் குறையவே, தங்கம்மாளும் குறட்டைவிட ஆரம்பித்தாள். ஐயர் ரேழியிலும், ராதை கூடத்திலும் கண் கொட்டவில்லை.

பொழுது விடிந்தது. உடம்பு தேவலை என்று தெரிந்த ஊரார் பலர் மும்முரமாக விசாரணை செய்ய வந்தார்கள். உள்ளூர் நாட்டு வைத்தியன் அவசரமாய் வந்து குழந்தை கையைப் பிடித்துப் பார்த்து விட்டு, "ஒண்ணும் இல்லெ, கொஞ்சம் மந்தமாயிருக்கு. ரெண்டு வேளை மருந்து கொடுத்தாப் போறது" என்ற அபிப்பிராயம் கொடுத்ததைக் கேட்டு, அவனே தன் குழந்தைக்குப் புத்துயிர் கொண்டுவந்ததாக எண்ணி, ஒரு ரூபாயும் படியரிசியும் அவனுக்கு அளந்து கொடுத்துவிட்டுத் தங்கம்மாள் வீட்டுக்குள் சென்றாள்.

அப்பொழுது ராதை இனித் தான் அங்கிருக்கத் தேவையில்லை யென்று வீட்டுக்குப் போகக் கிளம்பி எதிர்ப்பட்டாள். அவளைப் பார்த்ததும், "சித்தெ இரு" என்று சொல்லித் தாழ்வாரத்துள் ளுக்குள் பாய்ந்து பலாப்பழத்தில் பாக்கியுள்ள ஒரு கூறை எடுத்துக்கொண்டு வந்து, "இந்தா, நல்ல பழம்; ஒனக்குன்னு வச்சிருந்தேன்" என்று தாராளமும் அன்பும் ததும்பும் குரலில் சொல்லிக் கையை நீட்டினாள்.

"வாண்டாம், அம்மாமி, நீங்க நேத்திக்கிக் குழந்தைகிட்டக் குடுத்து அனுப்பிச்ச பழத்தைச் சாப்பிட்டு எனக்கு வயறு நெறஞ்சு போச்சு" என்று சொல்லி, ராதை ஒரு சிரிப்புச் சிரித்தாள்.

"அடி, அது ஒனக்குக் கொடுக்கல்லியே; கொழந்தைக் குன்னு....." என்று ஏதோ பசப்ப ஆரம்பித்த தங்கம்மாள் மேலே வாயெடுக்கவொட்டாமல், "அது கெடக்கு, நாழியாச்சு; ஆத்துக்குப் போறேன்" என்று சொல்லி ராதை விர்ரென்று வீட்டுக்குப் போய்விட்டாள்.

அடுத்த வாரம் வைத்தியநாதையர் வீட்டில் சுமங்கலிப் பிரார்த்தனை நடைபெற்றது. அதற்குத் தங்கம்மாள் கால்இறங்கின புடைவை வாங்கிப் பிரார்த்தனை செலுத்தி, யாருக்குக்

கொடுத்தாள் தெரியுமா? ஆமாம், ராதைக்குக் கொடுப்பதாகத் தான் கிருஷ்ணமூர்த்திக்கு உடம்பு சரிப்படாத தினம் அவள் வேண்டிக்கொண்டபோது தீர்மானித்திருந்தாள். ஆனால் புடை வையை வாங்கிக் கட்டிக்கொண்டவள் தங்கம்மாளுக்கு இடை விடாமல் 'லோட்டா'ப் போடும் தோசைக் குப்பன் பாரியை லோகாம்பாள். அதற்கு ஒரு காரணமும் தங்கம்மாள் தன் கோஷ்டி யில் பிரசாரம் பண்ணினதாகத் தெரியவந்தது. "நல்ல சாப்பாட் டுக்கு நாக்குச் செத்துக் கெடக்கேன்னு அசலான பலாப்பழம் ஒரு முழுக்கூறு குடுத்தேண்டி! இரவது சொளை இருக்கும். அது வாண்டான்னுட்டு, எறிஞ்சிட்டுப் போயிட்டாளே, அவ ராங்கியும் தெரிப்பும்! அவபுள்ளே கண்ணுன்னு என் கொழந்தைக்கி அப்படி உடம்புக்கு வந்தது. பெரியவா பண்ணின புண்ணியம் தலேக்கு வந்தது தலேப்பாவோடே போச்சு" என்றாளாம்.

வி. ராதாமணி

குழந்தையின் கவலை 44

"அப்பா!"

"ஏண்டா கண்ணு?"

"அப்பா! ராஜு, சீனு, அம்பி எல்லாருக்கும் அம்மா இருக் காளே; அந்த மாதிரி எனக்கு ஒரு சின்ன அம்மா இல்லேயாப்பா?"

"அம்மாதான் இருக்காளே, உள்ளே."

"போப்பா. நீ பொய் சொல்றே. உள்ளே பாட்டுன்னு இருக்கா."

"பாட்டிதான் அம்மா. அவளே அம்மான்னுதானே கூப்பிடு கிறே?"

"இத்தனே நாளா அப்படித்தான் நெனச்சுண்டிருந்தேன். அப்பா, இன்னிக்கி அடுத்தாத்துக்கு வெளேயாடப் போயிருந் தேன். அந்தப் பாட்டிதான் சொன்னு: நம்ப அம்மா ஒனக்கு அம்மா, எனக்குப் பாட்டுன்னு."

"கண்ணு, அவாத்துப் பாட்டி விளேயாட்டுக்குச் சொல்லி யிருப்பா."

"பொய் இல்லேப்பா; நெசந்தான்."

"இல்லேயடா கண்ணு. அவாள்ளாம் பொய் சொல்லு."

"அப்பா, ராஜுவோட அம்மா பாரு, பட்டுப் பொடவெ கட்டிண்டு பூ வெச்சுண்டு நெறைய நகையெல்லாம் போட்டுண்டு இருக்கா. அந்த மாதிரி எனக்கு ஒரு அம்மா வேணும்பா. நம்ம பாட்டி பாரு, நகையே போட்டுக்கலே. பட்டுப்பொடவெ கட்டிக்கலே. பூ வெச்சுக்கலே. அதனலே பாட்டி ஒனக்கே அம்மாவா இருக்கட்டும். எனக்கு வேறே அம்மா கொண்டு வாப்பா."

குழந்தை சந்துருவின் வார்த்தைகளைக் கேட்ட வேங்கட ராமனுக்குத் துக்கம் குமுறிக்கொண்டு வந்தது. குழந்தையை அணைத்துக்கொண்டு, "கண்ணே, உன் தாய் உன்னையும் என்னையும் தவிக்கவிட்டுப் போய் விட்டாளே! நீ இப்பொழுது அம்மாவைக் கொண்டுவா என்கிறாயே. எங்கே போய்க் கொண்டுவருவேன்!" என்று கதறினான்.

"ஏம்ப்பா, நான் அம்மாவைக் கொண்டு வான்னு நீ ஏன் அழறேப்பா? அழாதே. நான் பாட்டிகிட்டே போய் அம்மா எங்கே இருக்கான்னு கேட்டுப் போய் அழைச்சிண்டு வரேம்பா" என்று வாசலில் போனான் சந்துரு.

கண்களில் நீர் ததும்ப, அந்தச் சாய்வு நாற்காலியிலேயே சாய்ந்து கண்களை மூடிக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தான் வேங்கடராமன். கடந்த சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றுகக் காட்சிப் படம்போல மனத்திரையில் ஓடலாயின.

அப்போது வேங்கடராமன் காலேஜ் மாணவனாயிருந்தான்; அவனுடைய சரித்திரப் பேராசியர் மகள் ராஜத்தின்மீது காதல் கொண்டான். ராஜம் நல்ல அழகி. அவளும் வேங்கடராமனைக் காதலித்தாள். தன் தந்தை, தாய் எல்லோருடைய அனுமதியும் பெற்று வேங்கடராமனை மணந்து, இரண்டு வருஷங்கள் அவனுடன் இன்ப வாழ்க்கை நடத்தி, ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுப் பிரசவ அறையிலேயே போட்டுவிட்டு ஈசனின் பொன்னடி சேர்ந்தாள் அவள்.

அதுமுதல் வேங்கடராமன் கண்ணும் கருத்துமாக அந்த இளங் குழந்தையை வளர்ப்பதிலேயே கவனம் செலுத்தினான். குழந்தை தாயைப் போல் மிகவும் அழகாக இருந்தமையால் "சந்திரன்" என்று பெயர் வைத்தான். தாயற்ற அந்தக் குழந்தையை மாற்றாந்தாய் வந்தால் கொடுமைப் படுத்துவாளே என்றெண்ணி, மறுமணம் செய்து கொள்ளும்படி எவ்வளவோ பேர் சொல்லியும் தட்டிவிட்டு, விவாகம் செய்து கொள்ளாமல் குழந்தையே தெய்வம் என்று இருந்து வந்தான். அவனுடைய விதவைத் தாயும் பேரனைச் சீராட்டி வளர்த்துவந்தாள். அமைதியாகச் சென்று கொண்டிருந்த குடும்ப வாழ்க்கையைத் தன் கேள்வியால் ஒரு கலக்குக் கலக்கி விட்டான் குழந்தை சந்துரு.

* * * *

அன்றிரவு சாப்பாடெல்லாம் ஆனபிறகு வேங்கடராமன் ஏதோ படித்துக் கொண்டிருந்தான். பக்கத்திலே பார்வதியம்மாள் சந்துருவை மடியில் படுக்கவைத்துத் தூங்கப் பண்ணிக் கொண்டிருந்தாள்.

"வெங்கிட்டு."

படித்துக் கொண்டிருந்த வேங்கடராமன், "ஏன்ம்மா?" என்று அவள் பக்கம் திரும்பினான்.

"ஏண்டாப்பா, இன்னுங் கூட நான் சொல்றது உன் காதிலே ஏறலியா? நானே இப்பவோ பின்னேயோ என்று எமனேடே வாதாடறேன். வேலே செய்யவும் தள்ளல்லே. நாளேக்கு நான் கண்ணே மூடிவிட்டேன்னு இந்தக் குடும்பம் போற வழியென்ன? நீ ஆபீஸுக்குப் போவாயா? குழந்தையைப் பார்ப்பாயா? ரசஞ் சாதம் வடிச்சுப் போட ஆரு இருக்கா? ஆயிரந்தான் வேலேக்காரா வெச்சுச் செய்யறேன்னாலும் குடும்பத்தைப் பார்த்துக்க ஒத்தர் வேண்டாமா? வீட்டில் ஒரு சுமங்கிலிப் பெண் இருந்து விளக் கேத்தி வெச்சுண்டு இருந்தான்னு வீடு லக்ஷ்மீகரமாயிருக்கும். நான் சொல்றதைக் கேளு. நீ நன்னு யிருக்கணும்னுதானே இந்தப் பாடு படறேன்?"

"அது சரிதான் அம்மா. குழந்தைக்கு ஏதாவது அதனால் துன்பம் உண்டானால்?"

"அந்தப் பயம் ஒனக்கு வேண்டாம். நல்ல பொண்ணு, அடங்கிய சரக்காப் பாத்துப் பண்ணி வெக்கறேன்."

"இருந்தாலும் குழந்தையைப் படுத்த மாட்டாள் என்பது என்ன நிச்சயம்?"

"அதுக்கென்ன பிரமாதம்? நாம்ப முதலிலேயே, குழந்தை யைக் கவனித்துப் பாத்துக்கணும், படுத்தக்கூடாது, அப்படீன்னு சொல்லிப்பிட்டுக் கல்யாணம் பண்றது."

"அம்மா, சாயங்காலம் சந்துரு, தனக்கு அம்மா இல்லே யான்னுட்டுக் கேள்விமேல் கேள்வி போட்டுப் பிடுங்கி எடுத்தான்."

"குழந்தைக்கு நாலு வயசுதானே ஆச்சு? இப்பவே இவ தான் ஒங்கம்மான்னு சொன்னு ஓட்டுதலேயாய்ப் பழகிப் போயிடும். வயசாயிட்டா ஒட்டாது" என்று மறுபடியும் வற்புறுத்தினாள் பார்வதியம்மாள்.

குழந்தை சந்துரு தூக்கத்தில், "அப்பா, அப்பா, நேக்கு ஒரு அம்மா அழச்சிண்டு வா" என்று முனகிக் கொண்டு புரண்டு படுத்தான். தூக்கக் கலக்கத்திலும் குழந்தையின் முகத்தில் பிரதிபலித்த ஆவலேயும், ஏக்கத்தையும் பார்த்த வேங்கடராமன் ஒரு நிமிஷம் தயங்கி, "அம்மா, நான் பார்க்க வேண்டுமென்பது கூட இல்லே. நீயே ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்து நிச்சயம் செய்து விடு" என்று கூறித் தன் அறைக்குச் சென்றுவிட்டான்.

நாட்கள் உருண்டோடின. வேங்கடராமனுக்கும் லலிதா வுக்கும் ஆடம்பரம் ஒன்றும் இல்லாமல் திருநீர்மலேயில் விவாகம் நடந்தேறியது.

லலிதாவுக்குப் பதினெட்டு வயசிருக்கும், பொன்னிறம். கிராமத்துப் பெண்ணானதால் "தள தள" வென்று வாளிப் பாக இருந்தாள். அதிகமாகப் படித்த பெண்ணல்ல. தமிழ்

எழுதப் படிக்கத் தெரியும். குழந்தையை அவர்கள் மனம் நோவா மல் பார்த்துக்கொண்டு நல்ல பெயர் எடுக்க வேண்டுமே என்ற கவலையுடன் குடும்பப்பொறுப்பை ஏற்றுக்கொண்டாள்.

சந்துருவோ, லலிதாவை 'அம்மா' என்றே கூப்பிடுவான். அவனுக்கு லலிதாதான் தலையை வாரவேண்டும்; குளிப்பாட்டி விடவேண்டும்; உடை உடுத்த வேண்டும். "அம்மா, அம்மா" என்று லலிதாவையே சுற்றிக் கொண்டிருப்பான். அம்மாவின் மேலிருந்த ஆசையினால் ஒரு நிமிஷங்கூட லலிதாவை விட்டு இருக்கமாட்டான். அம்மா வந்துவிட்டாள் என்று ஆனந்தக் கடலில் மூழ்கிக் கிடந்தான்.

பார்வதியம்மாள் தன் நாட்டுப் பெண் குழந்தையிடம் அன்பா யிருப்பதையும் சந்துருவும் அவளிடம் உயிரா யிருப்பதையும் பார்த்துப் பூரித்துச் சந்தோஷத்தினால் ஒரு சுற்றுப் பெருத்து விட்டாள்.

ஆனால், வேங்கடராமன் லலிதாவைத் தன் குழந்தையைப் பார்த்துக்கொள்ளும் வேலைக்காரியைப் போல நினைத்து நடத்தி வந்தானே தவிர, மனைவி என்ற முறையில் அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. குழந்தை சந்துருவுக்கு ஓர் அம்மாவைத் தேடித் தந்ததாக நினைத்திருந்தானே யன்றி, தன் மனைவி அவள் என்ற சிந்தனையே அவன் மனத்தில் இல்லை. லலிதாவுடன் அதிகமாகப் பேசுவதில்லை. அப்படியே ஏதாவது பேசினாலும் அது சந்துரு வைப் பற்றித்தான் இருக்கும்.

லலிதா வேங்கடராமனைச் சந்தித்த முதல் தினத்திலிருந்தே அவன் ஒரு விதமா யிருப்பதைத் தெரிந்துகொண்டாள். ஆயினும் கவலை கொள்ளவில்லை. குழந்தை சந்துருவின் மூலமாக அவன் நெஞ்சில் இடம் பெறலாம், அன்பைக் கவரலாம், பெண்மை எப்படியும் வெற்றி பெறும் என்றெண்ணிக் குழந்தை, மாமியார், கணவன் மூவருக்கும் அவரவர்கள் மனம் குளிரும்படி நடந்து, பரபரவென்று பம்பரம்போல் சுழன்று குடும்பத்தை நிர்வகித்து வந்தாள்.

ஆனால், வேங்கடராமன் தன்னுடன் கலகலப்பாகப் பேசாதது பெருங்குறையாகத்தான் இருந்தது அவளுக்கு. சில சமயம் அவள் தன்னை அறியாமலே கண்ணீர் வடிப்பாள். பிறகு, "என்றுவது ஒருநாள் அவர் அன்பு கிட்டும்" என்று மனத்தைத் தேற்றிக் கொள்வாள். அவளுக்குத் தன் குறைகளை மறந்து குதூகலமா யிருக்கக் குழந்தை சந்துரு உதவி புரிந்தான் என்றே சொல்ல வேண்டும்.

இரண்டு மூன்று மாதங்கள் காற்றுப்போல் பறந்தோடின. ஒரு நாள் சாயங்காலம் வேங்கடராமன் ஆபீஸிலிருந்து வரும்போதே, "அம்மா, அம்மா" என்று குதூகலமாக அழைத்துக்கொண்டே வந்தான்.

கூடத்தில் உட்கார்ந்து ஜபம் செய்துகொண்டிருந்த பார்வதியம்மாள், "என்னடாப்பா, ஒருநாளும் இல்லாத திருநாளாய்க் குதித்துக்கொண்டே வருகிறாயே?" என்றாள்.

"அம்மா, என்னைக் கம்பெனி மானேஜராகப் போட்டிருக்கிறார்கள். சம்பளம் எண்ணூறு ரூபாய். கார் அலவன்ஸ் எல்லாம் உண்டு" என்று உத்ஸாகமாகக் கூறினான்.

"அப்படியா! பகவான் நம்மைக் கண் திறந்து பார்த்தான். லலிதா கால்வச்ச வேளை ஒனக்குப் பெரிய வேலையாச்சு. இன்னும் பெரிய வேலையாயி நீ ஆயுசோடே நன்னா யிருக்கணும்" என்று மனங் குளிர ஆசீர்வதித்தாள்.

அன்றிரவு அவன் சாப்பிடும்போது தற்செயலாக லலிதாவின் முகத்தைப் பார்த்தான். அவள் கண் கலங்கி யிருப்பது கண்டு, "லலிதா, என்ன உடம்பு உனக்கு? ஒரு மாதிரியாக இருக்கிறாயே" என்று அன்புடன் கேட்டான்.

லலிதா திடுக்கிட்டு, "ஒன்றும் இல்லையே! எப்பொழுதும் போலத்தானே இருக்கிறேன்?" என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள். அவள் மனம் சிறிது ஆறுதல் அடைந்தது.

சில தினங்களுக்கெல்லாம் வேங்கடராமன் பெரிய பங்களா ஒன்றில் தன் குடும்பத்துடன் குடி புகுந்தான். அந்தஸ்து, பதவி இவைகளுக்கு ஏற்ப, சமையற்காரன், தோட்டக்காரன் முதலியவர்கள் நியமிக்கப்பட்டனர். குதூகலமாகக் குடும்பம் நடைபெற்று வந்தது.

இப்படி இருக்கையில் சந்துருவுக்கு ஜுரம் கண்டது. இரண்டொரு நாட்கள் சாதாரண ஜுரமாக இருந்து 'டைபாயிட்' ஜுரமாக மாறிவிட்டது. லலிதா கண்கூடக் கொட்டாமல் குழந்தையின் அருகில் இருந்து சுச்ருஷை செய்து வந்தாள். ஜுரமும் படிப்படியாகக் குறைந்துகொண்டு வந்தது.

ஒருநாள் இரவு ஒன்பது மணி இருக்கும். சந்துரு மெள்ள, "அப்பா, அப்பா!" என்று முனகினான். அருகில் இருந்த லலிதா, "கண்ணே, அப்பாவா வேணும்? அழச்சிண்டு வரேம்மா" என்று வேங்கடராமன் இருந்த அறைக்குள் சென்று, "குழந்தை உங்களைக் கூப்பிடுகிறான்" என்றாள் குனிந்த தலை நிமிராமல்.

வேங்கடராமன் ஒன்றும் பேசாமல் அவளைத் தொடர்ந்தான். இருவரும் குழந்தையின் இரு பக்கங்களிலும் உட்கார்ந்தனர். லலிதா, "சந்துரு, இதோ அப்பா வந்திருக்கா, பாரும்மா" என்று அவன் நெற்றியைத் தடவினாள்.

குழந்தை கண்களை விழித்து ஒருமுறை தந்தையைப் பார்த்தான். "அப்பா, அப்பா! அம்மாவைப் பாரு. எப்போதும் அழுதுண்டிருக்கா. நீ அழாதேன்னு சொல்லுப்பா. இனிமே, அம்மா அழுதா எனக்கும் அழுகை வரும்" என்று கொஞ்சிப் பேசினான்.

லலிதா, "இல்லேடா கண்ணு; நான் அழவில்லே. நீ சமத்தாத் தூங்கம்மா" என்றாள்.

சந்துரு, "இல்லேம்மா. நீ பொய் சொல்றே; அன்னிக்குக்கூட அழுதயே. நீ ஏதுக்கு அழறேன்னு எனக்குத் தெரியுமே.....!"

"உனக்குத் தெரியுமா? சொல்லு" என்றான் வேங்கட ராமன்.

"சொல்லட்டுமா? நீ அம்மாவோடே பேசலேன்னுதான் அம்மா அழறு."

"நிஜமாவாடா?"

"நெஜம்மாத்தான்!"

லலிதா குழந்தையை முத்தமிட்டு, "என் கண்ணே! உன் சமர்த்தே சமர்த்து. என் மனசில் இருப்பதைத் தெரிஞ்சுண்டு அப்பாகிட்டச் சொன்னயா?" என்றாள். அடுத்த நிமிஷம் தன்னையே வேங்கடராமன் பார்ப்பதை உணர்ந்து வெட்கினவளாய்த் தலை குனிந்தாள்.

எஸ். எஸ். ராமசாமி, பி.எஸ்.ஸி., பி. எல்.

நாடக வாழ்க்கை 45

மூன்று மாதங்கள் சென்றபின் 'மதுர கான சபா' என்ற நாடகக் கம்பெனியின் சுற்றுப் பிரயாணம் முடிந்ததும் எங்களுடைய நண்பன் நாகராஜன் மறுபடியும் பம்பாய் வந்து சேர்ந்தான். அவன் இல்லாதபடியினால் அந்த மூன்று மாதங்களையும் மிகவும் சிரமத்துடன் போக்கிக் கொண்டிருந்தோம். தொலையாத சீட்டாட்டம் அல்லது வம்பளப்பு - இவைதாம் எங்கள் பொழுதுபோக்கு. நாகராஜன் இருந்துவிட்டால் கேட்கவேண்டியதில்லை. ஏக அமர்க்களந்தான். அவனுடைய ஹாஸ்யங்களைக் கேட்டு நாங்கள் வயிறு வெடிக்கச் சிரிப்போம். சில வேளைகளில் உருக்கமான கதைகளையும் ரஸமான சம்பவங்களையும் எடுத்துச் சொல்லி எங்களை வெவ்வேறு உலகங்களில் சஞ்சரிக்கச் செய்வான். எங்களுக்குப் பொழுது போவதே தெரியாது. ஆகவே நாங்கள் அவனை மிக்க ஆவலோடும் உத்ஸாகத்தோடும் வரவேற்றோம் என்று கூறுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

நாங்கள் எல்லோரும் அன்று மாலை நேரத்தை மலபார் குன்றில் அமைந்திருந்த பூந்தோட்டத்தில் தங்கிக் கழிக்க ஏகமனசாய்த் தீர்மானித்து விட்டோம். சிற்றுண்டி உண்டுவிட்டுச் சுமார் ஐந்தரை மணிக்குக் குன்றின்மீது ஏறித் தோட்டத்தை அடைந்தோம். அப்பொழுது மஞ்சள் வெயில் அடித்துக்கொண்டிருந்தது. மரம் செடி கொடிகளெல்லாம் முந்தின நாள் இரவு பெய்த மழையில் ஸ்நானம் செய்து புது வஸ்திரங்களைத் தரித்துப்

பொலிவுடன் விளங்கின. அன்றைக் காட்சி மிக மனோரம்மிய மாக இருந்தது. சிறு குழந்தைகள் பல வர்ணமுள்ள ஆடைகளை அணிந்துகொண்டு ஊஞ்சல் ஆடிக்கொண் டிருந்தார்கள். இளந் தம்பதிகள் காதற் சம்பாஷணையில் நேரம் போவதே தெரியாமல் உல்லாசமாய் அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருந்தார்கள். ஒரு பக்கத்தில் ஏகாந்த வாசமே தலையெழுத்தாக உடையவர்கள் பெஞ்சியில் உட்கார்ந்துகொண்டு, வருகிறவர்களையும் போகிறவர் களையும் பொறுமையோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். இக் காட்சிகளை நானும் என் நண்பர்களும் வெகுநேரம் கண்டு அனுப விக்துக்கொண்டிருந்தோம்.

மஞ்சள் வெயில் மங்கிவிட்டது. சூரியனும் அஸ்தமித்தான். கொஞ்சங் கொஞ்சமாக இருள் கவிந்துகொண்டே வந்தது. தோட் டத்திற்கு வந்திருந்தவர்கள் திரும்பிச் செல்ல ஆரம்பித்து விட்டார்கள். நாங்கள் மாத்திரம் வீடு செல்வதைப்பற்றி நினைக்க வில்லை. என் சிநேகிதனைப் பார்த்து, "அடே, நாகராஜா, இன்றைக்கு ஊமைமாதிரி உட்கார்ந்து விட்டாயே. ஏதாவது கதை சொல்லாமல் நாங்கள் இங்கிருந்து கிளம்பப் போவதில்லை" என்று நான் ஒரு போடு போட்டேன். மற்ற நண்பர்களும் என் னுடன் சேர்ந்து பல்லவி பாடத் தொடங்கிவிட்டார்கள். நாக ராஜன் இருமித் தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு சற்று நிமிர்ந்து உட்கார்ந்தான். ஒரு நிமிஷம் அவன் சிந்தனையில் ஆழ்ந் தான். மறுகணம் அவனுடைய முகத்தில் புன்சிரிப்பு ஓடி மறைந் தது. உணர்ச்சி ததும்பிய குரலில் எங்களுக்குப் பின்வரும் சம்ப வத்தை அவன் எடுத்துச் சொன்னான்.

* * * *

நான் சொல்லப்போகிற நாடக வாழ்க்கைச் சரிதத்தில் சம்பந் தப்பட்டவர்கள் என் நண்பன் குலசேகரனும், சண்பகவல்லி பங்கஜம் என்ற இரண்டு பெண்களுமே. நானும் எங்கள் சிறிய நாடகக் கம்பெனியின் தலைவி விமல குமாரியும் வெறும் துணைக் கருவிகளாகவே இருந்தோம்.

குலசேகரன் பிரதம நடிகன். நல்ல கட்டான தேகம் படைத் தவன். கண்களில் ஏற்பட்ட ஒருவிதமான காந்த சக்தி அவனுடைய முகவசீகரத்திற்குப் பெரிதும் துணைபுரிந்தது. பிறர் மனத்தில் எழும் எண்ணங்களை அறிந்துகொண்டு அவரவர்க ளுடைய தராதரத்திற்குத் தக்கவாறு மதித்து வந்தான். தவிரவும் அவன் பொறுமை வாய்ந்தவன்.

சண்பகவல்லி பிரதம நடிகை. பேரழகு வாய்ந்தவள். சந்திரன் போன்ற முகம், கருங் கூந்தல், வளைந்த புருவங்கள், பரந்த கண்கள் எல்லாம் பார்க்கும் ஆடவருடைய மனத்தைக் கவர்ந்தன. அழகு இருக்கும் இடத்திலெல்லாம் குணம் இருக்க வேண்டுமென்ற நியதி இல்லையல்லவா? குணத்தில் அவள் ஒரு படி தாழ்ந்தவள் என்றுதான் சொல்லவேண்டும். சற்றும் பொறுமை

இல்லாதவள். முன்கோபமும் பிடிவாதகுணமுமே அவளுடைய பிராபல்யத்திற்குப் பெருத்த இடைஞ்சலாக இருந்தன.

நடிப்பு விஷயத்தில் குலசேகரனும் சண்பகவல்லியும் நல்ல ஜோடி. அவர்கள் இருவருடைய நடிப்புத்திறமையினால்தான், 'சந்திரிகா', 'கிருஷ்ணலீலா', 'மாலதி மாதவம்' முதலிய நாடகங்களை நாங்கள் பல ஊர்களில் மிகவும் வெற்றிகரமாக நடத்தி வந்தோம்.

குலசேகரனும் சண்பகவல்லியும் நெருங்கிப் பழகவேண்டிய சந்தர்ப்பங்கள் பல ஏற்படுவது சகஜமல்லவா? முதலில் குலசேகரன் இருதயத்தில் சண்பகவல்லி ஓர் இடத்தைப் பெற்றிருந்தாள். வரவரத் தன்னுடைய அகங்காரத்தையும் மூர்க்க குணத்தையும் அவனிடம் செலுத்தவே அந்த ஸ்தானத்தைக் கூடிய சீக்கிரமே இழந்துவிட்டாள். இருந்தபோதிலும் குலசேகரன் அவளிடம் பரிவாகப் பேசுவான். ஆனால் அவளிடம் அவனுக்குப் பிரேமை ஏற்படவில்லை. சண்பகவல்லியோ தன் இருதயத்தை அவனிடம் பறிகொடுத்துவிட்டாள். தன் கருத்தை அவனிடம் பலதடவை மறைமுகமாக வெளியிட்டாள். குலசேகரனைப் பொறுத்தமட்டில் அவனிடம் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. அவன் பராமுகமாகவே இருந்து வந்தான். ஆரம்பத்தில் சண்பகவல்லி சிறிது வருத்தப்பட்டாலும் தன்னுடைய பிடிவாத குணத்தினால் நாளடைவில் அவனைத் தன் வலையில் சிக்கவைக்கலாமென்ற திடமான நம்பிக்கையுடன் இருந்தாள்.

இருவருக்கும் இவ்வித முரண்பாடான மனநிலை ஏற்பட்ட ஒரு மாதத்திற்கெல்லாம் நாடகக் கம்பெனியில் பங்கஜம் என்ற மற்றுமொரு நடிகை வந்து சேர்ந்தாள். அவள் பிரமாதமான அழகு வாய்ந்தவளென்று சொல்வதற்கில்லை. நல்ல மாநிறம். 'தான்' என்ற அகந்தை இல்லாமல் யாரிடமும் பணிந்து நயமாக நடந்துகொள்வதில் கெட்டிக்காரி. வெகு சீக்கிரத்திலேயே குலசேகரனின் திருஷ்டி அவள்மேல் விழுந்தது. இருவரிடையும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. கொஞ்ச நாட்களிலெல்லாம் அது காதலாகவும் கனிந்தது. தன்னுடைத்த குணங்கள் படைத்த காரணத்தினாலோ அல்லது வேறெந்தக் காந்தசக்தியினாலோ தெரியாது. இதெல்லாம் காதல் உலகுக்கு ஏற்பட்ட தனி ரகசியம். நாடக மேடை விட்டால் குலசேகரனும் பங்கஜமும் அநேகமாக இணைபிரியாமல் இருப்பதைப் பார்க்கலாம்.

பங்கஜம் வந்து சேர்ந்தவுடனேயே சண்பகவல்லியின் மனத்தில் விவரிக்க இயலாத குழப்பம் ஏற்பட்டது. தனக்கு எதிரியாக முளைத்த பங்கஜத்தினிடம் அவளுக்குத் துவேஷம் உண்டாயிற்று. அவள் தன்னிடம் வலிய வந்து பேசியபோதிலும் 'தான் ஓர் உயர்ந்த பிறவி' என்பதைப் பங்கஜம் தெரிந்து கொள்ளும்படி நடந்து வந்தாள். நாளடைவில் குலசேகரனிடமும் விரோத மனப்பான்மை அவளுக்கு வளர்ந்து வந்தது. இவ்விஷயங்களெல்லாம் நாடகக் கம்பெனியின் தலைவி விமலகுமாரிக்கும்

எனக்கும் தெரியவந்தன. இதுவரை நிம்மதி உலவிய எங்களுடைய கம்பெனியில் பெரும் புயல் அடிப்பது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. 'சண்பகவல்லி ஒழுங்காக நடித்து அதனால் தக்க வருவாய் கிடைக்க வேண்டும்' என்று விமலகுமாரிக்குக் கவலை. குலசேகரன் சங்கடத்தில் மாட்டிக்கொண்டானே என்று எனக்கும் வருத்தந்தான்.

இப்படியாக ஒரு மாதம் சென்றது. அன்று பௌர்ணமி தினம். எங்களுக்கெல்லாம் விடுமுறை. பால் போல நிலாப் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. இத்தருணத்திலா காதலர்கள் கூட்டில் அடைபட்ட கிளிபோல் வீட்டில் இருப்பார்கள்? குலசேகரனும் பங்கஜமும் நாங்கள் தங்கியிருந்த ஜாகையை அடுத்த பூந்தோட்டத்திற்குச் செல்வதை நான் மேல்மாடியில் இருந்தபடியே பார்த்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம் வெளியே சென்றிருந்த சண்பகவல்லி தன் அறைக்குள் சென்று விளக் கேற்றினாள். என்ன நினைத்துக் கொண்டாளோ, அதை அணைத்து விட்டு மேல்மாடிக்கு வந்து சேர்ந்தாள். என்னிடம், "நாளைச் 'சந்திரிகா' நாடகமல்லவா? குலசேகரரைப் பார்க்க வேண்டும். அவர் எங்கே?" என்ற கேள்வியைப் போட்டாள். நான் ஒரு நிமிஷம் ஸ்தம்பித்து நின்றேன். என் மனத்தில் ஏற்பட்ட குழப்பத்தில் என்னையும் அறியாமல், "என்ன விசேஷம்? தோட்டத்திற்குப் போயிருக்கிறான்" என்று கூறி விட்டேன்.

அவ்வளவுதான்! "ஓகோ, தம் காதலியுடன் கொஞ்சப் போய் விட்டாரா?" என்று பரிகாசமான குரலில் கூறிக்கொண்டே சண்பகவல்லி தடதடவென்று மாடிப் படிகளை விட்டு இறங்கித் தோட்டத்திற்குச் செல்ல ஆரம்பித்தாள். அவள் இடுப்பில் உடைவாள்போன்ற ஏதோ ஒரு வஸ்து பளிச்சென மின்னுவது போல் எனக்குத் தோன்றிற்று. என் அடிவயிற்றில் பகீரென்றது. காரணம் இல்லாமல் தேகம் நடுங்கிற்று. 'ஆஹா! குலசேகரன் பங்கஜத்துடனல்லவா சென்றிருக்கிறான்? தெரிந்திருந்தும் இவள் அங்கே ஏன் போகவேண்டும்? என்ன நீங்கு நேரிடுமோ!' என்று எண்ணமிட்டுக்கொண்டே நானும் சண்பகவல்லியைப் பின் தொடர்ந்தேன். பெரிய மல்லிகைச் செடியின் மறைவில் பதுங்கித் தோட்டத்தில் நடப்பதை உற்றுக் கவனித்தேன்.

தூரத்தில் முல்லைப் பந்தலின்கீழ் உள்ள ஆசனத்தில் குலசேகரனும் பங்கஜமும் உட்கார்ந்து உலகத்தை மறந்து இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தார்கள். சண்பகவல்லி அவர்களை அணுகாமலே சிறிது நேரம் அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்டுவிட்டுப் பற்களை நற நற வென்று கடித்தாள். கைகளைப் பிசைந்து கொண்டாள். ஏதோ வஞ்சனை வார்த்தைகளை (அவை என் காதில் விழவில்லை) முணு முணுத்த படியே தோட்டத்தை விட்டு வெளியேறி விட்டாள். "அப்பாடா, இவ்வளவுதானா! சனியன் தொலைந்தது" என்ற வார்த்தைகள்

என்னையும் அறியாமல் பெருமூச்சுடன் காற்றில் கலந்தன. மறுபடியும் தோட்டத்தில் நிச்சப்தம் நிலவியது.

மறுநாள் 'சந்திரிகா' என்ற சமூக சம்பந்தமான நாடகம் நடைபெற இருந்தது. அக்கதையில் லக்ஷாதிபதியான ஜமீன்தார் ஒருவர் தம்முடைய ஏக புத்திரனை லக்ஷ்மீகாந்தன் என்பவனை மேற்படிப்பிற்காகக் கல்கத்தாவிற்கு அனுப்பிவைக்கிறார். அங்கே அவன் ரஸாயன சாலை ஒன்றில் விஷப்புகை ஆராய்ச்சி நடத்தி வருகிறான். திடீரென்று ஏற்பட்ட எதிர்பாராத விபத்தினால் அவன் தன் கண் பார்வையை இழந்து விடுகிறான். இதற்காக ஜமீன்தார் அவனுக்குப் பெரிய ஆஸ்பத்திரி யொன்றில் பிரத்தியேக சிகிச்சைக்கு ஏற்பாடு செய்கிறார். சந்திரிகா என்ற 'நர்ஸ்' ஒருத்தி அவனைக் கவனித்துக்கொள்ள அமர்த்தப் படுகிறாள். தேக சிரமத்தைப் பாராமல், சலியாத முயற்சி யுடன் லக்ஷ்மீகாந்தனுக்கு அவள் சுச்ருஷை செய்து வருகிறாள். இவ்வாறு நாட்கள் செல்லுகின்றன.

ஒரு தினம் இருவரும் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக் கிறார்கள். லக்ஷ்மீகாந்தன் ஊன்றுகோலைத் தவறிப் போட்டுவிட்டு அதைத் தடவி எடுக்கும் சமயத்தில் ஆழமான பள்ளத்தில் காலை வைத்து விழுந்துவிடுவான்போல இருக்கிறது. சந்திரிகா அவனு டைய கைகளைப் பிடித்து விலக்கி விடுகிறாள். அவளுடைய ஸ்பரி சம் பட்டதும் அவனுக்கு மெய் சிலிர்க்கிறது. அவளுடைய மெல்லிய கைகளை அப்படியே இறுகப் பிடித்துக்கொண்டு, "சந்திரிகா, நான் வெகு நாட்களாக உன்னிடம் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேச எண்ணியிருந்தேன். இன்றுதான் சந்தர்ப்பம் வாய்த்தது. ஆனால்... ஆனால்..." என்று தயங்குகிறான். சந்திரிகா அன்பு ததும்பிய குரலில், "நான் உங்களை அடைய முடியுமோ என்று மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். முதலில் உங்கள் பிதா சம்மதிப்பாரா, கேவலம் ஒரு பணிப்பெண்ணை மணந்துகொள்ள?" என்று பதிலளிக்கிறாள். லக்ஷ்மீகாந்தன் புளகாங்கிதமடைந்து, "சந்திரிகா, இந்த ஜன்மத்தில் உன்னுடைய சௌந்தரியத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே! நீ ஒரு குருடனை மணந்து கொள்ளச் சம்மதிப்பாயா என்றுதான் நான் இவ்வளவு நாளும் என் ஆவலை அடக்கிக்கொண்டிருந்தேன்" என்கிறான். அதற்கு அவள், "தயைசெய்து இன்னும் ஒரு முறை அந்த வார்த்தைகளைச் சொல்லாதீர்கள். டாக்டர் இன்னும் இரண்டு தினங்களில் உங்களுக்குப் பார்வை வந்துவிடும் என்கிறார். எனக்கும் நம்பிக்கை இருக்கிறது" என்று தைரியம் கூறுகிறாள். ஜமீன்தார் சம்மதிக்காவிட்டால் இருவரும் கண்காணாத இடத்திற்குச் சென்று கல்யாணம் பண்ணிக்கொள்வதாகச் சங்கற்பம் செய்து கொள்கிறார்கள். கடைசியாக ஒரு நாள் டாக்டர் கொடுத்த மருந்தை லக்ஷ்மீகாந்தன் கண்களில் சந்திரிகா விடுகிறாள். மறுநாள் கண்கட்டை அவிழ்த்ததும் அவன் இழந்த கண்களைப் பெற்று விடுகிறான். - இவ்வாறு 'சந்திரிகா' நாடகம் முடிகிறது.

குலசேகரன் லக்ஷ்மீகாந்தனுகவும் சண்பகவல்லி சந்திரிகா வாகவும் நடிப்பது வழக்கம். அந்த ஊரில் அதுவே எங்களுடைய கடைசி நாடகம் இரவு 8-30 மணிக்கே ஜனத்திரள் வர ஆரம் பித்துவிட்டது. ஏகப்பட்ட நெருக்கடி. திரை விலகியதும் கொட்டகையில் சந்தடி அடங்கியது. குலசேகரன் வெகு திறமையாக நடித்தான். அன்று சண்பகவல்லி தாமதித்துத் தான் வந்து சேர்ந்தாள். அவள் முகம் வெளுத்துப்போய் இருந்தது. தலைவலி என்று ஏதோ காரணம் சொல்லிவிட்டு வேஷத்தைப் போட்டுக்கொண்டாள். நடிப்பும் வழக்கம்போல் இல்லை. குலசேகரனிடம் உருக்கமாகவும் இனிய குரலிலும் பேசவேண்டிய இடங்களில் கோபத்துடனும் ஆத்திரத்துடனும் பேசினுள். வரவரப் படபடப்புடன் நடிப்பதாகத் தெரிந்தது. எனக்கு ஒருவிதமான திகில் ஏற்பட்டது. நாடகம் முடிந்ததும் இதைப்பற்றி விமலகுமாரியிடம் பிரஸ்தாபிக்கலாமென்று இருந் தேன்.

கடைசி அங்கத்தில் கடைசிக் காட்சி ஆரம்பமாயிற்று. சபையில் எல்லோரும் சுவாரஸ்யமாக மூச்சு விடாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். லக்ஷ்மீகாந்தன் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். 'நர்ஸ்' ஆக நடித்த சண்பகவல்லி கடைசி முறையாகக் கண்கட்டுகளை அவிழ்த்து மருந்தை ஊற்றினுள். திடீரென்று ஒரு முனகல் சப்தம் எழுந்தது. "ஐயோ! கண் எரிகிறதே.....சந்திரிகா.....சந்திரிகா!" என்று குலசேகரன் கூச்சலிட ஆரம்பித்து விட்டான். எனக்கு ஒன்றும் விளங்க வில்லை. திரையைப் போடச் சமிக்ஞை செய்துவிட்டு நான் ஒரே ஓட்டமாகக் குலசேகரன் பக்கத்தில் சென்றேன். அதற்குள் விமல குமாரியும் பங்கஜமும் வந்து சேர்ந்தார்கள். நான் கண்ட காட்சியை என்னவென்று சொல்வது! உண்மையிலேயே குலசேகரன் குருடாகி விட்டான். ஆனல் சண்பகவல்லியைக் காணவில்லை. நாங்களெல்லோரும் அவளைத் தேட ஆரம்பித்தோம். அவள் அகப்படவே இல்லை. இன்னும் தேடிக்கொண்டு தான் இருக்கிறோம்.

* * * *

இவ்வாறு கூறி முடித்தான் நாகராஜன்.

இதுவரையில் 'கப் சிப்' என்று இருந்த நாங்கள், "நாகராஜா, சீசாவில் திராவகமாடா இருந்தது?" என்று கேட்டோம்.

"ஆம், பாவி சண்பகவல்லி எரி திராவகத்தைக் (Nitric acid) குலசேகரன் கண்களில் கொட்டிவிட்டாள். பரிதாபம்! என் நண்பன் தன் நேத்திரங்களை இழந்துவிட்டான். நாடக வாழ்க்கை யினல் இவ்வுலகமே அவனுக்கு இருள் மயமாகிவிட்டது" என்று நாகராஜன் தழுதழுத்த குரலில் கூறினன்.

"ஹ்ம், இப்படியா பாதகி பழி தீர்த்துக்கொள்ள வேண்டும்!" என்று குலசேகரனின் பரிதாப நிலைமைக்கு நாங்க ளெல்லோரும் இரங்கினோம்.

அன்பின் அழைப்பு 46

சீதாபாயும் ஊர்மிளையும் உடன்பிறந்த சகோதரிகள். ஆனால் கடந்த ஐந்தாறு வருஷங்களாக ஒருவரை ஒருவர் சந்தித்துப்பேசச் சந்தர்ப்பம் வாய்க்க வில்லை. சீதாபாய் தாய் வீடு வந்தபோது ஊர்மிளா வரமுடியாமல் இருக்கும்; ஊர்மிளா வரும்போது சீதா வரமுடியாமல் இருக்கும். இந்த நிலைமையில் அவர்கள் பரஸ்பரம், ஒன்று சீதாபாயின் வீட்டிலோ, அல்லது ஊர்மிளாவின் வீட்டிலோ சந்தித்திருக்கலாம். ஆனால் திவான்பகதூர் ராயரின் சுபாவம், வெகு அகம்பாவமும், கண்டிப்பும் பொருந்தித் தாம் போன போக்காக இருந்ததால் அத்தகைய சந்தர்ப்பம் ஏற்பட அனுகூலமாக இருக்கவில்லை. இருந்தாலும் தன் சகோதரியை வெகு நாட்களாகச் சந்திக்காத காரணத்தை முன்னிட்டு எப்படியாவது எந்த வகையிலாவது அவருடைய சம்மதத்தைப் பெறவேண்டும், ஊர்மிளையைக் குடும்ப சகிதம் தன் இல்லத்திற்கு வருவிக்க வேண்டும் என்று சீதாபாய் தன் மனத்தில் ஒரு திட்டம் போட்டிருந்தாள். என்னதான் ஒரு திவான்பகதூரின் மனைவியாக இருந்தாலும் இந்துப் பெண்ணுக்குச் சகோதரி பாசம் இராதா?

திவான்பகதூர் ராயர் பெரிய செல்வர். இருந்தாலும் சமீபத்தில்தான் அவர் பென்ஷன் வாங்க ஆரம்பித்திருந்ததால் அவருடைய சுபாவத்தில் எப்பொழுதையும்விடச் சிக்கன புத்தி வெகு தீவிரமாகத் தலையோங்கி நின்றது. எந்த விதமான அதிகச் செலவு என்றாலும் அவர் கண்ணில் சிவப்பேறி விடும். அதற்கு மேலாகத் தம் அந்தஸ்துக்கும் கௌரவத்துக்கும் சரிசமான மானவர்களாகவோ மேலானவர்களாகவோ இருந்தாலொழிய, உற்ற உறவினர்களில் எவரையும் அவர் ஏறெடுத்தும் பாரார். அப்படி இருக்க ஏழை உறவினர்கள் அவர் வீட்டில் வந்து சில நாட்கள் தங்குவது எப்படி? ஏழைகள் என்றால் மட்டும் என்ன? அவரவர்களுக்குச் சுய கௌரவம் இருக்கத்தான் இருக்கிறது. ஆகையினால்தான் வருஷக் கணக்காக ஊர்மிளையின் கணவர் சக்காராம ராவ், திவான் பகதூர் ராயரைச் சந்திக்கவேயில்லை. ராயரின் இறுமாப்பும் அகந்தையும் சக்காராம ராவுக்குக் கட்டோடு பிடிக்க வில்லை அவர் சற்று அடக்க ஒடுக்கமான சுபாவமுடையவர். ஏழை, நல்ல படிப்பாளி. இப்படிப்பட்ட குணமுள்ள சகலைகளிடையில் உறவும் அன்னியோன்னியமும் எப்படி நிலவும்?

சீதாபாய் தன் மனத்தில் இருந்த விஷயங்களைச் சொல்ல ஆவல் கொண்டாள்.

"போதுமே பரிகாசம்! ராணீ ஸாஹெப், ராணீஸாஹெப் என்று பேச்சிலேதான் கொஞ்சல். (சந்தோஷம் பீரிட்டால் அவர் மனோவியை இப்படித்தான் கூப்பிடுவது வழக்கம்.) காரியத்துலே ஒண்ணுமே இல்லே. இந்த வீட்டிலே நான் சொல்லி எந்தக் காரியம் என் இஷ்டப்படி நடக்கிறது?" என்று விஷயத்திற்குப் பீடிகை ஒன்றைப் போட்டுக் கையில் இருந்த வெற்றிலைத் தட்டத்தை மேஜைமீது வைத்தாள்.

"சரிதான், சும்மா ஆடுமா சோழியன் குடுமி? ஏதோ விசேஷம் இருக்கக் கொண்டுதான் அகமுடையானுக்கு இத்தனை ஆசார உபசாரமோ! கிடக்கட்டும், விஷயத்தைத்தான் சீக்கிரம் சொல்லேன், மூடுமந்திரம் இல்லாமல்."

சீதாபாயிக்குத் தன்னையும் மீறிச் சிரிப்பு வந்துவிட்டது. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

"ஒண்ணுமில்லே; ஊர்மிளையை..."

"வரச்சொல்லலாமே? பேஷா வரட்டுமே. இங்கே பிள்ளை இல்லாத சொத்து, வீணுகப் போறது. ஊரிலே இருக்கிறவங்க எல்லாரும் வந்து கொம்மாளம் அடிக்கட்டும்!"

"ஊரிலே இருக்கறவா எல்லாரும்னு, ஊர்மிளை தெருவில் கிடக்கிறவளா? அவள் என் தங்கை அல்லவா? எங்கம்மா செத்தப்பறம் நான்தானே வீட்டுக்குப் பெரியவள்? அம்மா உசிரோடே இருந்தமட்டும் என்னிக்காவது ஒங்களை நான் இந்த மாதிரிக் கேட்டதுண்டா? தயவு செய்து பெரிய மனசு பண்ணுங்கள். நம்ப வீட்டிலே வேலைக்காரன் சத்வாஜி, கூட்டறவள் ரர்மாயி, டிரைவர் ராமலிங்கம் இவர்கள் சாப்பிடாத சாதத்துக்குக் கூடவா உரிமை இல்லாமல் போச்சு, என் உடன் பொறப்புக்கு?" – சீதாபாயின் கண்கள் ஊற்றெடுத்துக் கண்ணீர் மள மள வென்று பொங்கியது, மத்தாப்புக் குச்சி எரியும்போது உருகிக் கீழே சிந்தும் தீப்பொறியைப்போல.

திவான்பகதூரின் கல்நெஞ்சமும் சற்றுக் கரைந்தது.

"அடி, அசடே! அதுக்குச் சொல்லல்லேடி. ஒன் நன்மைக் காகத்தான் சொன்னேன். நான் ஏதாவது இப்பச் சேத்து வெச்சாத் தானே நாளைக்கு நான் கிருஷ்ண ராமான்னு கண்ணை மூடிண்டால் உனக்கு உதவியாய் இருக்கும்? இருக்கிறதைக் கண்டபடி....."

"போருமே பேச்சு! இப்படி அச்சான்னியமா ஏதாவது....."

"அடே, நெருப்புன்னு வாய் வெந்துவிடுமோ? சரி ஒன் இஷ்டப்படியே ஊர்மிளை வரட்டும், சுத கீர்த்தி வரட்டும், மாண்டவி வரட்டும், வரட்டும்."

"ஆமாம், இருக்கறது ஒரு தங்கை; அதுக்கே இவ்வளவு சிரிப்பு!"

"சரி, சரி; என் கோபத்தைக் கிளப்பாதே. நான்தான் ஊர்மிளா வரட்டும் என்று சொல்லிவிட்டேனே; இன்னும் எதுக்குத் தொந்தரவு?"

"அப்படி இல்லே. ஊர்மிளா மட்டும் எப்படி வருவாள்? இப்போ பள்ளிக்கூட லீவு இருக்கிறதே. அவர்களுக்குச் சாப்பாடு?"

"அவள் குழந்தை குட்டிகளையும் அழைச்சுண்டு வரட்டுமே! நான் வேணும்....."

"இல்லே. அவள் புருஷர்..."

"சக்காராம ராயரா? அவர் வராவிட்டால் என்ன முழுகிப் போச்சாம்? ஊர்மிளாதானே உன் உடன்பிறப்பு?"

"நீங்கள் ரிடையர் ஆகி அவர்கள் ஊருக்கு இவ்வளவு சமீபத்தில் வசிக்கிறீர்கள். ஒருதரமாவது நீங்கள் இருவரும் சந்திச்சு..."

"ஹ! ஹ! ஹ! அவர் கேவலம் ஒரு ட ஆனு! நான் ஒரு திவான்பகதூர்! நாங்கள் இருவரும் சந்திக்கிறதாம், சந்திக்கிறது! என்ன பெருமை அதிலே எனக்கு? டிஸ்டிரிக்ட் ஜட்ஜா, டெபுடி கலெக்டரா, தாசில்தாரா? போகட்டும், ஒரு வக்கீலாகவாவது இருக்கக் கூடாதா?"

"நான் சொல்லறேன் என்று வருத்தப்படக்கூடாது. லீவு நாளில் அவர்களைப் பிரித்து வைக்கும் பாவம் நமக்கு எதுக்கு? அது மாத்திரம் இல்லே. அவளை மட்டும் வரச்சொன்னால் நன்னா இருக்குமா? அவள்தான் வருவாளா? நமக்காக இல்லாவிட்டாலும் ஊராருக்காகவாவது....."

"தொலையட்டும்; உன் இஷ்டப்படியே ஆகட்டும்; திருப்திதானே? எனக்குத் தூக்கம் வர்றது. சத்வாஜியைக் கூப்பிட்டுப் படுக்கை போடச் சொல்லு."

"அப்போ, நாளைக்கு நீங்கள் சக்காராம் ராவுக்குக் கடுதாசி எழுதறேளா?"

"அட எழவே! 'புளிய மரத்தைப் பிடிச்ச பிசாசு பிள்ளையாரையும் பிடிச்சுதாம்.' அதெல்லாம் என்னால் முடியாது. நீயே எழுதிக்கொள்."

"நான் அவருக்கு எப்படி எழுதறது? நான் கடுதாசி எழுதறேன்; நீங்கள் கையெழுத்தாவது அடியில் போடுங்கள்."

"அதெல்லாம் முடியாது."

"போகட்டும்; நான் ஊர்மிளாக்கு எழுதும்போது நீங்கள் அனுமதி தந்து எழுதியதாகவாவது சொல்லுகிறேன். அதற்கு ஆக்ஷேபணை இல்லையே?"

"ஏதுடா இது சனியன், உடும்பு மாதிரி. சரி அப்படியே எழுது போ."

சந்தோஷமும் சமாதானமும் வெளியிடும் பெருமூச்சு ஒன்றை எறிந்தபடி சீதாபாய் தன் அறைக்குத் திரும்பிச் சென்றாள். கையோடு கையாய்க் கடிதத்தை எழுதி முடித்து ஸ்டாம்பும் ஒட்டித் தெருக்கோடியில் உள்ள தபால் பெட்டியில் போட்டு வரும்படி சத்வாஜியிடம் கொடுத்தனுப்பிய பிறகுதான் சீதாபாயின் உள்ளத்தில் கவலை நீங்கிப் பாரம் சற்றுக் குறைந்தது.

* * *

சீதாபாய் உள்ளே நுழைந்து, "உங்கள் பேருக்குத் தந்தி வந்திருக்கு. என்ன சமாசாரமோ தெரியவில்லை. அந்த மாதா துளசாபவானிதான் காப்பாத்தணும். வேங்கடரமணா! உனக்குச் சனிக்கிழமை அன்று மாவிளக்கு வைக்கிறேன். ஒண்ணுமில்லாமே காப்பாத்துராப்பா" என்றாள்.

"அடி அசடே, ஒண்ணும் இருக்காது, பயப்பட. இப்பெல்லாந் தான் எழுந்தால் தந்தி; உக்கார்ந்தால் தந்தி. ரயிலுக்குப் புறப்படறச்சே தந்தி; ஊர் சேர்ந்ததும் ஒரு தந்தி. பாஸ்கூ பாஸ் ஆனால் தந்தி; ஆகாவிட்டாலும் தந்தி; சர்வம் தந்தி மயம் ஜகத்தாக இருக்கே!"

ராயர் உறையைக் கிழித்துத் தந்தியைப் படிக்கலானார். நெற்றியில் லேசாகக் கோடுகள் விழ ஆரம்பித்தன. மறுபடியும் மறுபடியும் உற்றுப் பார்த்தபடி படித்துக் கொண்டிருந்தார். சீதாபாயின் மனத்தில் சம்சயம் உண்டாயிற்று. கால்கைகள் வெலவெல என்று நடுங்க ஆரம்பித்தன. கண்ணில் நீர் நிறைந்தது.

"அந்த மூக்குக் கண்ணுடியைக் கொஞ்சம் கொடு இப்படி."

சீதாபாய் நடுங்கும் கைகளுடன் மூக்குக் கண்ணுடியை எடுத்துத் தந்தாள்.

"யாருக்கும் ஒன்றும் இல்லையே ஆபத்து?"

"பாண்டுரங்கா!" – அவருக்கும் தெரியாமலேயே பகவான் நாமம் வாயிலிருந்து தானாக வெளிவந்தது. ஒரு பெரு மூச்சு விட்டபடி சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்து சரியாக உட்கார்ந்து கொண்டு, "சக்கா ராமராயருக்கு நிமோனியா ஜுரம் கண்டிருக்காம். நிலைமை சற்றுப் பயமாகத்தான் இருக்காம். உன்னை வரச்சொல்லித் தந்தி அடிச்சிருக்கா, ஊர்மிளா" என்றார்.

"ஐயோ பகவானே! தலைமேலே இடி விழுந்துவிட்டதே. என்ன துர்ப்பாக்கியசாலியடி ஊர்மிளா!" – சீதாபாயின் கண்களில் நீர் பெருக்கெடுத்துக் கன்னங்களின் வழியாகத் தாரை தாரையாய் வழிய ஆரம்பித்தது.

"சீதா, ஏதுக்கு அழறே? அப்படி ஒண்ணும் ரொம்ப மோசமா இருக்காது. உன்னை அவசியம் வரவழைக்கறதுக்காக அப்படி அடிச்சிருப்பா."

"எப்படி வேணுன்னு இருக்கட்டும். சீக்கிரம் புறப்பட்டுப் போக வழியைப் பார்க்க வேண்டாமா? டிரைவரைக் கூப்பிட்டு..."

"டிரைவர் என்னத்துக்காம், டிரைவர்? பஸ்ஸில் புறப்பட்டுப் போய் வாயேன். இரண்டு மூணு ரூபாயிலே ஆயிடும்."

"என்ன, அப்படிப் பேசறேள்? நீங்க வரவேண்டாமோ?"

"என்னை வரச் சொல்லி யார் தந்தி அடிச்சிருக்கா?"

"இதோ பாருங்க: இந்தச் சமயத்திலா சண்டையையும், பூசலையும் வெச்சுக்கறது? என்னமோ பெரிய ஆபத்து மலைபோல வந்திருக்கு; இந்தச் சமயத்திலேதானு செலவைப்பத்திப் பாக்கறது. ஐயோ! என் வயித்திலே என்னமோ சங்கடம் பண்ணறதே! உடனே வண்டியை எடுத்துப் புறப்பட ஏற்பாடு செய்யுங்களேன்."

"புறப்படறதைப்பத்தி ஆக்ஷேபணை கிடையாது. ஆனால் ஓரே கண்டிஷன்! அங்கே போன அப்புறம் திரும்பும்போது அவசியம் நீ என்னோடே வந்துடணும்; பின்னால் தங்கி வருகிறேன் என்று சால்ஜாப் கில்ஜாப் சொல்லக்கூடாது. கிளம்பு என்றால் கிளம்பிவிட வேண்டியதுதான்; சரிதானே?"

"சரி, சீக்கிரம் கிளம்புவோமே."

திவான்பகதூர் ராயர் தம் குடும்ப சகிதம் சக்காராமராவ் வீட்டில் இறங்கியபொழுது வீட்டில் ஏகப்பட்ட கூட்டம். நிலைமை மிகவும் மோசமாக இருந்தது.

பாவம்! கண்ணீர் நிறைந்த கண்களுடன் ஊர்மிளா ஒத்தடம் தந்து கொண்டிருந்தாள், கணவனுக்கு. சக்காராம ராவுக்குப் பிரக்ஞை தப்பி மூன்று நாட்கள் ஆகியிருந்தனவாம்.

தன் தமக்கையைக் கண்டதும் ஊர்மிளா ஓடிவந்து, "ஹோ" என்று கதறி அழுதாள், கட்டி அணைத்துக்கொண்டு. பக்கத்தில் இருந்தவர்கள் சமாதானப்படுத்திச் சமையல் அறைக்கு அவ்விருவர்களையும் அழைத்துச் சென்றார்கள்.

சற்றுக் கழித்து வந்த டாக்டர் நாடியைப் பரீக்ஷித்து, "நம்பிக்கை யில்லை" என்று உதட்டைப் பிதுக்கிவிட்டார்.

மணி ஒன்பது அடித்ததும் ராயர் தம் மைத்துனன் ஹரி ராவைக் கூப்பிட்டு வேலூருக்குத் தாம் திரும்பிப் போகவேண்டும் என்று சொல்லி, அவனுடைய தங்கையைப் புறப்படத் துரிதப் படுத்தச் சொன்னார். ஹரிராவுக்குத் தம் காதுகளை நம்ப முடியவில்லை; ஆச்சரியம் உண்டாயிற்று. ஏதோ சொல்ல வாயெடுத்தார்; ஆனால் மைத்துனரின் கண்டிப்புக் குணத்தைப்பற்றி வெகு நன்றாக அறிந்தவராகையால், "அக்காமாத்திரம் இரண்டு நாள் தங்கி..." என்று சுருக்கமாக ஆரம்பித்தார்.

"அதெல்லாம் சரிப்படாது. நீங்கள் எல்லாம் இல்லையா துணைக்கு? அவள் என்ன புரட்டிவிடப் போறாள்? எமனுடன் சண்டை போட்டு, சாகிற மனிதனைக் காப்பாத்தவா போறாள்?"

சீதாபாயிக்குப் பூமி வெடித்துத் தன்னை அப்படியே கபளீகரித்துக் கொள்ளக்கூடாதா என்று தோன்றிற்று. கணவனிடம் தர்க்கம் செய்வது பிரயோசனம் இல்லை என்பதை அனுபவ பூர்வமாக அறிந்திருந்தாள். ஆகவே, ஒன்றும் பேசாமல் பரிதாபகரமாக ஊர்மிளையை மௌனமாகப் பார்த்தாள். அவ்விருவர் கண்களும் பேசின முடிவில் ஊர்மிளை பெரும் பொருமலின் இடையில் எப்படியோ சமாளித்துக்கொண்டு, "அக்கா, போய் வா. பரவா இல்லை. எனக்குச் சகலமுமான அவரே இதோ இன்னும் அரைக் கணத்தில் என்னைக் கதறவிட்டுப் பறக்கப் போகிறார். அப்படி இருக்க வேறு யார் எனக்கு இருக்கிறார்கள்? நீதான் என்ன? உன் இஷ்டப்படி செய்ய உனக்குச் சுதந்தரம் உண்டா? நாம் எல்லாம் என்ன, வெறும் பட்டி மாடுகள்தானே? பெண் ஜன்மம் எடுத்தோமே அம்மா!" என்று சொன்னாள்.

சற்றும் இஷ்டமில்லாமல் சீதாபாய் கணவனின் அருகில் காரில் உட்கார்ந்தாள். திவான் பகதூரின் நடத்தை யாருக்கும் பிடிக்கவில்லை. கார் புறப்படுக்கையில் யாரும் அவருடன் ஒன்றும் பேசவில்லை.

ஆகாயத்தில் சூல் கொண்ட கருமேகங்கள் திரண்டு இருட்டின் பயங்கரத்தை அதிகப்படுத்தி மிதந்தன. சுற்று முற்றும், மேலும் கீழும், கண்ணைட்டிய மட்டும் எங்கும் இருள் பரவித் தனி அரசு செலுத்திக் கொண்டிருந்தது. இத்தகைய இரவில் தன்னந் தனியாகப் பிரயாணம் செய்பவர்களின் நிலையைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. கூடுமான வரையில் அப்படிப் பிரயாணம் செய்ய யாரும் முன்வரமாட்டார்கள். அப்படியிருந்தும் திவான் பகதூர் பாலாஜி ராவ் ஸாஹேப் அவர்கள், குடும்ப சகிதம் தம்முடைய சொந்தக் காரில் ஒரே பிடிவாதமாகக் குடியாத்தத்திலிருந்து வேலூரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்.

ஊரை விட்டு ஐந்தாறு மைல் தூரம் வந்திருக்கலாம். பள்ளிக் கொண்டை கிராமத்தைக் கடந்து ஒரு மைல் ஆகியிருக்கும். இடையில் பாதை சற்றுச் சீர்கெட்டு மராமத்துச் செய்து கொண்டிருந்தார்கள். டிரைவர் புதியவனே ஆயினும், சமாளித்துக் கொண்டு வண்டிக்கு யாதோர் இன்னலும் நேராமல் ஓட்டிக் கொண்டிருந்தான். அந்த ரஸ்தாவின் ஒவ்வொரு பர்லாங்கும் அவனுக்கு வெகு நன்றாகத் தெரிந்திருந்தது. ஏற்கெனவே அவன் வேலூருக்கும் குடியாத்தத்திற்கும் இடையில் ஓடும் வாடகை பஸ் ஒன்றில் நான்கு வருஷகாலம் டிரைவராக வேலை செய்திருந்தான். திவான்பகதூர் ராயருக்குக் குஷி பிறந்தது. "சரி, இன்னும் முக்கால் மணி நேரத்தில் ஊர் போய்ச் சேர்ந்து விடலாம்" என்று தமக்குள்ளாகச் சொல்லிக் கொண்டார். இன்னும் இரண்டு பர்லாங்குகள் தூரம் கன வேகத்தில் சென்றது. இருந்தாற்போலிருந்து திடீரென்று நின்று விட்டது கார். இரு பக்கத்துத் தலைவிளக்குகளும், என்ஜின் நின்றதும் தாமாகவே அணைந்து விட்டன. கையில் ஹரிக்கேன் லாந்தரோ, மின்சார

டார்ச்சோ இருக்கவில்லை. இருந்தாலும் டிரைவர் கீழிறங்கித் தீக்குச்சியைக் கிழித்துத் தூரப் பிடித்தபடி தன் னுல் ஆன மட்டும் பழுதைச் சீர்திருத்தப் பார்த்தான். ஆனுல் எல்லாம் வீண் பிரயாசையாக முடிந்தது.

சீதாபாய் மனத்தில், சிறு வயசில் பாட்டிகளிடம் கேட்டிருந்த தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் வழிபறிக் கொள்ளைக்காரர்கள் சம்பந்தமான கதைகள் மறுபடி நினைவுக்கு வந்து மயிர்க் கூச்செறி யச் செய்தன. ஆறு வயசுச் சிறுமி பிரமீளா வேறு, "அம்மா பசிக்குதடி" என்று அழத் தொடங்கினுள். ஏதாவது தின்பதற் குத் தந்து அவளுடைய அழுகையை நிறுத்தலாம் என்றுல், வண்டி யில் தின்பண்டம் ஒன்றும் கையோடு கொண்டு வரவில்லை. சிறு குழந்தையை ஏதோ கொஞ்சம் தன்னுலான மட்டும் தட்டிக் கொடுத்து, கொஞ்சிக் குலவி வயிற்றோடு வயிறாக அன்புடன் அணைத்து ஒருவாறு சமாதானப்படுத்தினுள். என்ன இருந்தா லும் அன்னைக்குத் தெரியாதா தன் குழந்தையை எப்படிச் சமா தானப் படுத்துவது என்பது?

திவான் பகதூர் ராயரின் கண்டிப்பான சுபாவமும், கடுகடுப் பும் டிரைவருக்கு நன்றாகத் தெரியும். அதனுல் அவன் தன் வேலை யில் இரட்டிப்பு ஊக்கம் காட்டி முயன்று கொண்டிருந்தான். பாவம்! அவன் உடல் முழுவதும் வேர்வையினுல் தெப்பமாக நனைந்திருந்தது. ஆனுல் அந்த யுகாந்தர ஊழிக்காலத்துப் பேய் இருட்டில் அவன் உடலின் வேர்வை யாருக்கும் தெரிந்திருக்க முடியாது. அந்தப் பிரயாணம் எத்தகைய அசந்தர்ப்பங்களுக் கிடையில் தொடங்கிற்று என்பது சீதாபாயின் நினைவுக்கு மறுபடி மறுபடியும் வரத்தான் வந்தது.

முடிவில் அவளால் பொறுக்க முடியாமல் தன் உள்ளக் கிடக் கையை ஒளி மறைவில்லாமல் தெளிவாக வெளியிட்டுவிட்டாள். "ஊர்மிளையின் மனக்கஷ்டந்தான் இப்படி இருட்டாக வியா பித்து, நம்மை இம்சிக்கிறதா? இப்பக்கூட என்ன முழுகிவிட்டது? கூடுமானுல் திரும்பிப் போனுல் என்ன குடியாத்தத்துக்கே? எனக் கென்னமோ நாம் ஊர்மிளையை விட்டுப் புறப்பட்ட நேரம் சரி யானதாகத் தோணல்லே. அவள் என்னை என்னமோ 'அக்கா திரும்பிவா, அக்கா திரும்பிவா' என்று கையைப் பிடித்து இழுக்க ருப்போலே தொம்பப் பயமா இருக்கு."

சுமார் அரை மணி கழித்து வேலூரில் இருந்து குடியாத்தம் நோக்கி ஒரு காலிச் சாமான் லாரி வந்து கொண்டிருந்தது. அதைத் திவான் பகதூரின் டிரைவர் சமிக்ஞை காட்டி நிறுத்தினுன். இரண்டு டிரைவர்களுமாகச் சேர்ந்து, ராயரின் காரை எப்படி யாவது நகரச் செய்ய முடியுமா என்று பிரயத்தனம் செய்து பார்த்தார்கள். முடிவில் பிரயாசைதான் மிஞ்சியது. அன்றிரவு ராயர் வேலூருக்குப் போக முடியாமல் தத்தளித்தார்.

இடையில் ஒரு வழியில் இப்படித் திரிசங்கு சுவர்க்கமாக இரவெல்லாம் வேறு வழியின்றி ரஸ்தாவிலேயே இருக்க

வேண்டிய நிலைமையை எண்ணி ராயருக்கு உள்ளுக்குள் அழுகை வந்துவிட்டது. "ஆனைக்கும் அடி சறுக்கும்" என்ற பழமொழி அவருடைய நினைவிற்கு வந்தது.

லாரி காலியாய் இருந்ததைக் கண்டு சீதாபாயிக்கு ஒரு யோசனை தோன்றிற்று. எப்படியும் லாரி குடியாத்தத்துக்குப் போக வேண்டியது தானே? அவர்களை யெல்லாம் ஏற்றிக் கொண்டு போவதில் என்ன?

லாரி டிரைவர் தங்கமான மனுஷன். அவன் அவர்களைத் தன் லாரியில் ஏற்றிக்கொண்டு போகச் சம்மதித்ததுமன்றி, அவர்களு டைய காரையும் தன் லாரியுடன் பின்னால் பிணைத்துக் கட்டி இழுத்துச் செல்லத் தானாகவே தயாரானான். டிரைவர் ராமலிங் கத்தைத் தவிர்த்து அனைவரும் லாரியில் ஏறிக்கொண்டார்கள்.

லாரியும், காரும் குடியாத்தம் தாலூகா ஆபீஸ் காம்பௌண் டைத் தாண்டி, முனிசிபல் ஆபீஸ் கட்டிடத்தின் அருகில் வந்து, இரு குறுகிய வீதிகளைத் தாண்டிக்கொண்டு அவர்கள் வீதியில் நுழையும் போதே தூரத்தில் இருந்தே தெருவின் நடுவில் இருந்த சக்காராம ராயரின் வீட்டின் முன்னால் ஏகப்பட்ட ஜனக் கூட்டம் திரண்டிருந்ததைக் கண்டதும், சீதாபாயின் வயிற்றில் பகீரென் றது. "அடி அம்மா!" என்று அவளுக்கும் தெரியாமலேயே அழுகை பீறிக்கொண்டு வந்தது. மகா நெஞ்சழுத்தமுள்ள திவான்பகதூரின் கண்களில் கூட ஈரம் மின்னியது.

லாரி, வீட்டின் எதிரில் நின்று இரண்டு முறை, ஹார்ன் ஒலித்ததும் உள்ளிருந்து ஓடிவந்த ஹரிராவ் தன் தமக்கையின் புருஷன் திவான் பகதூர் பாலாஜிராவ் சாஹேப் அவர்களைக் குடும்ப சகிதம் கண்டதும் ஒரே நாளில் இரண்டாம் முறையாகப் பேராச்சரியம் அடைந்தார்.

உள்ளே பிரவேசித்ததும் ஊர்மிளா கோவென்று அழுது கொண்டே, "அடே அக்கா, என்னை ஆருமத்த பாவியா அலறவிட் டுட்டுப் போயிட்டாரேடே!" என்று பிரலாபித்து அவளடியில் வேரற்ற பிணமரம்போல் நெட்டுக் குத்தலாக விழுந்து மூர்ச்சித் தாள்.

துக்கத்தின் முதல் உத்வேகம் சற்றுத் தணிந்ததும் ஊர்மிளை தன்னைச் சுற்றிப் பார்த்தாள். திவான்பகதூரும் வந்திருந்ததைக் கண்டு ஆச்சரியம் அடைந்தாள்.

சக்கா ராமராவின்மீது முகம் நீங்கலாக வேறெதும் தெரியாதபடி போர்த்தி யிருந்தார்கள். பகதூர் கண் கொட்டாது தூங்காமல் தூங்கிச் சுகம் கண்டுகொண்டிருந்த அந்தப் பவித்திர தேகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர், என்ன தோன்றிற்றோ என்னமோ, மெதுவாக அதன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். புன்னகையுடன் இருந்த அந்த முகத்தைக் கண்டதும் சக்காராம ராவ் இறந்ததை அவரால் நம்ப முடியவில்லை போலும்!

சற்றுக் கழித்து ஊர்மிளா தன் தமக்கையை வினவினாள்: "அக்கா, நீங்கள் எல்லாரும் ஒரே பிடிவாதமாக வேலூருக்குப் போய்க் கொண்டிருந்தீர்களே; உங்களுக்கு வழியில் எப்படித் தகவல் கிடைத்தது?"

சீதாபாயிக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. அவளால் பேச முடியவில்லை.

பாலாஜிராவ் அதற்கு விடை அளித்தார்; "அம்மா, ஊர்மிளாபாய், நாங்களா வந்தோம்? இல்லையே! அக்காவும் தங்கையுமான உங்கள் இரண்டு பேருக்கும் நடுவில் உள்ள பாச மும் அன்புமல்லவா எங்களை மேலே செல்ல விடாமல் தடுத்து இழுத்துக் கொண்டு வந்தன? அந்தத் தூய அன்பின் தெய்விகப் பிணைப்புக்குமுன் என்னுடைய இறுமாப்பும் முரட்டுப் பிடிவாத குணமும் என்ன செய்ய முடியும்? இத்தனை நாள் அசட்டுக் கர்வமும், அகம்பாவமும் என் கண்களை மறைத்துக் கொண்டிருந்தன. இன்று உங்கள் அன்பின் வெற்றி என் கண்ணின் முன் இருந்த திரையை விலக்கிவிட்டது. நாங்கள் இருக்கும் வரையில் உனக்கு யாதொரு குறையும் வராமல் பார்த்துக் கொள்ளுகிறோம். இதற்குமேல் நான் வேறு என்ன சொல்வதற்கு இருக்கிறது?" என்றார் திவான்பகதூர்.

மறுநாள் புறப்பட்ட காரில் திவான்பகதூர் பாலாஜிராவ் சாஹேப் மட்டும் தனியாக வந்து கொண்டிருந்தார். சீதாபாயும் குழந்தை பிரமீளாவும் அநாதையாகப் போய்விட்ட ஊர்மிளா வுக்குத் துணையாக நின்று, சில தினங்களுக்குப் பின் அவளையும் கூட்டிவரத் தங்கிவிட்டார்கள்.

திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி, பி.ஏ., பி.எல்.

போனதுபோல் வந்தான் 47

சுந்தரேசனுக்குச் சுந்தரியை மணம் செய்துகொள்ள வேண்டும் என்று மிகுந்த விருப்பம். அவன் உயர்தரப் படிப்பை முடித்துக்கொண்டு நியாயவாதியாக மாயூரத்தில் தொழில் நடத்த ஆரம்பித்தான். சுந்தரியின் தந்தை ஈசுவரையர் பெரிய மிராசுதார். அதே ஊரில் அவர் வெகு விபவமாக வாழ்ந்து வந்தார். வெண்மையான அடைய வளைந்தான் வேஷ்டியும், மல் ஜிப்பாவும், சரிகைக் கரை மட்டும் வெளியில் தெரியும் அங்கவஸ்திரமும், வெள்ளிப் பிரம்பும், வயிரக் கடுக்கனும் அவர் 300 வேலி சொந் தக்காரரான பெரிய மிராசுதார் என்று விளம்பரம் செய்தன. அவருடைய இளமைப் பருவத்தில் இரண்டு வெண்மையான பெரிய மாடுகளின் சலங்கை ஜல் ஜல் என்று குலுங்கப் பெட்டி வண்டியில் ஏறி உட்கார்ந்து பவனி வருவதைப் பார்ப்பதே

ஊராருக்கு ஓர் உத்ஸாகம். அவருக்குச் சங்கீதத்தில் வெகு பிரியம். பிரியம் மட்டும் அல்ல, நல்ல ஞானம். ஞானம் மட்டும் அல்ல; அவரே நன்முகப் பாடும் திறமை வாய்ந்தவர். அவர் வீட்டிற்கு அடிக்கடி புகழ்பெற்ற சங்கீத வித்துவான்கள் வருவார்கள். அவரும் அவர்களை நன்கு ஆதரித்துத் திறமை அறிந்து மெச்சிக் கொள்ளும் சக்தி உள்ளவர். ஆகையால் அவர் வீட்டில் எப் பொழுதும் சங்கீத மயமாகவே இருக்கும்.

சுந்தரிக்கும் பிகவும் மெல்லிய இனிமையான சாரீரம். அவள் படிப்பில் தேர்ச்சி அடைந்ததுபோல் பாட்டிலும் ஒப்பற்ற தேர்ச்சி அடைந்தாள். அவளுடைய பாட்டைக் கேட்டுப் பெரிய சங்கீத வித்துவான்களே பிரமித்துப் போவார்கள். படிப்பு, பாட்டுமட்டும் அல்ல. நல்ல அழகும் களையுமுள்ள புன்முறுவல் பூத்த முகம்; மோகனமான சிவப்பு நிறம்; அழகு வாய்ந்த நெருங்கிய கூந்தல்; கருணையும் கவர்ச்சியும் விளங்கும் கண்கள்; பொருத்தமான உயரம். அவளைக் கண்டால் காதல் கொள்ளாத யுவன் இருக்க முடியாது.

ஆனல் சுந்தரேசன் தந்தை சுந்தரமையரோ வெகு ஏழை. இது தவிர அவருக்கும் ஈசுவரையருக்கும் வேலித் தகராறு ஏற் பட்டுத் தீராத விரோதம். பக்கத்துப் பக்கத்து வீடுகள்தாம். ஆனல் இருவரும் இருந்த உலகங்கள் வெவ்வேறு உலகங்கள் போலத்தான். சுந்தரேசனுடைய நல்ல புத்தி, நன்னெறி, சிறந்த பரந்த நோக்கம், உலகத்திற்குத் தொண்டாற்றவேண்டும் என்ற ஆர்வம், தன்னிடத்தில் அவன் வைத்திருந்த உண்மையான அளவு கடந்த காதல் இவை சுந்தரிக்குத் தெரியும். அவளுக்கும் அவனிடத் தில் உண்மையான அன்புதான். ஆனல் உலகத்தில் ஆசைப்பூர்த்தி அதிகமா? ஆசாபங்கம் அதிகமா?

சுந்தரேசனுக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏறிக்கொண்டே வந்தது. ஒருநாள் ஏகாந்தமாகக் கோயில் பிராகாரத்தில் அவளைச் சந்தித்தான். ஆசை வெட்கமறியாது என்றபடி சம்பிரதாயத்தை மீறி அவளே ஒரு வார்த்தை கேட்கவும் கேட்டான்.

"என் மனசின் நிலையைச் சொல்ல வெட்கமாயிருக்கிறது ஆனலும் துயரத்தை அடக்க முடியவில்லை. உன்னை மணம் செய்துகொள்ள வேண்டும் என்ற என் பேராசை பலிக்குமா?" என்றான்.

அவளும் மருண்ட விழியுடன் அன்பும் கனிவும் உள்ள பார்வையுடன், "ஈசுவரிக்குத்தான் தெரியும். என் இஷ்டம் என்ன பிரயோஜனம்?" என்றாள். இந்தப் பேச்சுடன் அவர்கள் பிரிந்தார்கள்.

சுந்தரேசன் மனம் இடிந்தவன் ஆனன். இதன் நடுவில் பொதுஜனத் தொண்டு செய்ததன் மூலமாக அதிகாரிகளுடைய விரோதமும் ஏற்பட்டது. சில காலம் சிறையிலிருந்து பிறகு

வெளியில் வந்தான். தொழிலில் இருந்த ஊக்கமும் குறைந்தது. வருவாயும் இறங்கிக்கொண்டே வந்தது. அவன் தாய்தந்தையரும் காலகதியானார்கள். பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும் என்றபடி உலகத்தில் இன்பமேயின்றித் துன்பம் நிறைந்தவனான சுந்தரேசன். இல்லறமே வேண்டாம், துறவறம் பூண்டு சந்நியாசியாகப் போய்விடுவோமென்று நிச்சயம் பண்ணி ஓர் இரவு ஒருவருக்கும் சொல்லாமல் புறப்பட்டான். அந்தத் தெருவில் ஒரு சிறுமி, "போனதுபோல் வந்தானும் புது மாப்பிள்ளை" என்று வேடிக்கையாகப் பாடிக்கொண்டிருந்தாள். சுந்தரேசன் அதைக் கேட்டுத் தன்னையும் அறியாமல் சிரித்தான். வெறுப்பு ஒரு பக்கம், சிரிப்பு ஒருபக்கம். இப்படி இருட்டோடு இருட்டாக ஊரை விட்டுச் சுந்தரேசன் போய்விட்டான்.

நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கின்றது. கடவுளுடைய எண்ணமோ வழியோ சிற்றறிவுள்ள நமக்கு என்ன தெரியும்? நடையாகவே சென்று அநேக தீர்த்தங்களில் நீராடி அநேக க்ஷேத்திரங்களைத் தரிசனம் செய்த பிறகு, காசிக்குப் போய் அவ்விடத்தில் ஓர் உத்தம சந்நியாசி இடத்தில் சந்நியாசம் பெற்றுத் தவத்திலும் தியானத்திலும் காலத்தைக் கழித்துவிட நினைத்தவன், தெய்வச் செயலாகப் பம்பாய் போய்ச் சேர்ந்தான். அவ்விடத்தில் அவனுடைய நண்பன் ஒருவனை மாதுங்காவில் சந்தித்து அவனுடன் சில காலம் தங்கினான். அந்த நண்பன் பெயர் நாராயணன். அவன் ஒரு கம்பெனியில் குமாஸ்தாவாக இருந்தான். நாராயணனும் அவன் மனைவி லக்ஷ்மியும் அவர்கள் சிறு குழந்தை மீனாட்சியும் வெகு இன்பமாக இல்லறம் நடத்தி வந்தார்கள். சுந்தரேசனைத் தம்பிமாதிரியே நாராயணன் நடத்தினான். சுந்தரேசனுடைய நிலையைக் கண்ட நாராயணன் பரிதபித்து அவன் மனத்திற்கு ஆறுதல் உண்டாகும் முறையாக நடந்து கொண்டான். தன்னுடைய வாழ்க்கை இன்பம் முறிந்து போய்விட்டாலும் உலகத்தினிடத்தில் இருந்த வெறுப்புக் கொஞ்சம் குறைந்தது. அந்தச் சமயத்தில் அந்தப் பெரிய ஊரில் பஞ்சத்தின் கொடுமையால் அடுத்த வீட்டில் ஒரு பிராமண ஸ்திரீயின் கணவன் ஊரை விட்டு ஓடிப் போய்விட்டான். அவளோ அரிசி பங்கீட்டுத் தாள் (Ration card) இருந்தும் பணம் இல்லாத கொடுமையால் பட்டினியாய் இறந்தாள். அவளுடைய இரண்டு குழந்தைகளும் அநாதைகளாகத் தவித்தன. சுந்தரேசன் மனமிரங்கி அவைகளை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற உறுதி கொண்டான். அந்த எண்ணத்தை நாராயணனிடம் அறிவித்தான்.

"நாராயணு, உன் மாதிரி சுகமான இல்லற வாழ்வு எனக்கு ஜாதகத்தில் இல்லை. ஆனால் இந்தத் துன்பம் நிறைந்த உலகத்தை வெறுப்புடன் தள்ளி விட்டு ஒழிந்த மனத்துடன் கடவுளையே நாடித் தவம் செய்ய உறுதி கொண்டுவந்த எனக்குப் பள்ளத்தில் போகும் நீரைப்போல் இந்தத் திக்கற்ற குழந்தைகளை எப்படி

யாவது பாதுகாக்க வேண்டும் என்று பிடிவாதமாகத் தோன்று கிறதே. இது என்ன விபரீதம்!" என்றான்.

நாராயணன், "இதுவும் கடவுள் லீலைதானே? அன்புதானே கடவுள்? உன் மனசின் நாட்டம் நன்மை என்றே நான் நினைக் கிறேன்" என்றான்.

கொஞ்சநாள் அந்த ஊரிலேயே இருந்து அந்த ஊரில் ஒரு தினசரிப் பத்திரிகைக்கு நிருபராக அமர்ந்து, வரும் வருவாயைச் கொண்டு அந்தத் திக்கற்ற குழந்தைகளைக் காப்பாற்றி வந்தான். அவன் உயர்ந்த புத்திசாலி. ஆனபடியால் அந்தப் பத்திரிகைத் தொழிலிலேயே முன்னுக்கு வரும்படி செய்யக் கல்கத்தாவில் பெரிய தினசரிப் பத்திரிகை அதிபரான தம் நண்பருக்கு ஆசிரியர் அறிமுகப்படுத்தி, அங்கே அந்தப் பத்திரிகையின் துணையாசிரியர் வேலை கொடுக்கும்படி செய்தார். சுந்தரேசன் இரண்டு அநாதைக் குழந்தைகளுடன் அங்கே போய்ச் சேர்ந்தான். இல்லற வாழ்வே அற்றுப்போனதாகக் கருதின அவனுக்கு இரண்டு குழந்தை களுடைய சம்ரக்ஷணம் ஏற்பட்டது.

அப்பொழுது கல்கத்தா பஞ்சக் கொடுமையில் அகப்பட்டு அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டிருந்த சமயம். கிராமங் களில் அரிசிப்பஞ்சம் ஏற்பட்டு ஜனங்கள், "கெட்டும் பட்டணம் சேர்" என்ற பழமொழிப்படி கல்கத்தாவிற்குத் திரள் திரளாக வந்து குவிந்துகொண்டிருந்தார்கள். "ஒப்பற்ற அரண்மனைகள் நிறைந்த நகரம்" என்று புகழ்பெற்று லக்ஷ்மி தாண்டவமாடிக் கொண்டிருந்த அந்தப் பட்டணம் சுடுகாடாக மாறிவிட்டது. சில குழந்தைகள் தாய் தந்தைகளை இழந்து வருந்துவதைக் கண்ட சுந்தரேசன் அவைகளையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டான். இப்படி, அவன் குடும்பம் பெருகிக் கொண்டே வந்தது. அந்தக் குழந்தைகளைக் கவனித்துக் காப்பாற்றுவது பெரிய பார மாக ஏற்பட்டது. ஆனால் அவனுடைய கருணையானது அந்தச் சுமையைப் பெரிதாகப் பாராட்ட அவன் மனத்திற்கு இடங் கொடுக்கவில்லை.

கல்கத்தாவின் நிலை மிகவும் கேடாக இருந்ததால் சென்னை செல்ல அவன் நிச்சயம் செய்தான். சென்னை "ஹிந்து" பத்திரி கையில் அவன் மனுவின்மேல் ஒரு வேலையும் கிடைத்தது. அவன் மனுப் போட்டதற்கு முக்கிய காரணம் "ஹிந்து" பத்திரிகை விளம்பரங்களில் "அபயாம்பாள் ஹிந்து அநாதாலயம். திக்கற்ற குழந்தைகளுக்கு வசதியும் அன்னவஸ்திரங்களும் அளிக்கப்படும். பூவிருந்தவல்லி ஹைரோட், 64 நம்பர் வீடு, காரியதரிசி, சுந்தரி" என்ற விளம்பரந்தான். ஏதோ தன்னுடைய நோக்கத்துடன்கூடின கருணைமூர்த்தியான பெண்மணி இருப்பதைக் கண்ட உடனே பட்டணம் போய்ச்சேரவேண்டும் என்ற ஆத்திரம் உண்டாயிற்று. வெகு நாளாகத் தன் நாட்டை விட்டுத் தன் மொழியை விட்டுத் தன் சுற்றத்தார்கள் நண்பர்களை விட்டுத் தூர தேசம் போனால்

தான் தன் நாடு தன் மொழி தன் சுற்றத்தார் நண்பர்களுடைய அருமை அறிய முடியும். கன்றைவிட்டுப் பிரிந்த பசுவைப்போல் ஓடோடிச் சுந்தரேசன் தன் அநாதைக் குழந்தைகளுடன் சென்னை வந்துசேர்ந்தான்.

இதன் நடுவில் சுந்தரியின் நிலை எப்படி ஆயிற்று? சுந்தரியை ஆயிரம் வேலி பிராசுதார் ஒருவர் பிள்ளைக்கு மணஞ் செய்ய அவள் தந்தை முயற்சி செய்துகொண்டிருந்தார். ஆனால் திடீரென்று மாரடைப்பால் இறந்தார். பிறகு சுந்தரி காலேஜில் படிக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடித்ததால் அவள் தாய் அவளைப் பட்டணத்திற்கு அழைத்துச் சென்றாள். காலேஜ் படிப்பு முடிந்து பரீக்ஷையில் விசேஷக் கௌரவத்துடன் தேர்ச்சி பெற்றாள். ஆனாலும் சந்தரேசனிடத்தில் இருந்த அன்பு வளர்ந்து கொண்டே இருந்தது. சுற்றத்தார் அவளை மணம் செய்துகொள்ள வற்புறுத்தியும் அவள் இசையவில்லை. "அபயாம்பாள் ஹிந்து அநாதாலயம்" என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அவள் தாயும் அவளும் அதை நடத்திவந்தார்கள்.

சுந்தரேசன் பட்டணம் வந்து பத்திரிகை ஆலயத்தில் வேலையை ஒப்புக்கொண்டு தன்னுடன் இருந்த குழந்தைகளை அநாதாலயத்தில் சேர்த்துவிடலாமா என்று யோசித்தான். சுந்தரி யாராக இருக்கக்கூடும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. தன் காதலி சுந்தரிக்கு வெகு வருஷங்கள் மூன் மணமாயிருக்கும் என்பது அவன் எண்ணம். திக்கற்ற சில குழந்தைகளை அநாதாலயத்தில் சேர்க்க விரும்புவதாகவும் அதற்காக அடுத்த ஞாயிற்றுக் கிழமை வருவதாகவும் கடிதம் எழுதிவிட்டு அன்று அங்கே குழந்தைகளுடன் சென்றான். சுந்தரியைப் பார்த்தவுடன் பிரமித்துப் போனான். பழைய நினைவுகள், வெட்கம், அன்பு, ஆச்சரியம் எல்லாம் அவன் மனத்தில் ஒன்றை ஒன்று தாக்கிப் போராடிக் கொண்டிருந்தன. சுந்தரிதான் அவன் மனக்குழப்பத்தை மாற்ற முதல் முதலாகப் பேசவேண்டி ஏற்பட்டது.

"என்ன அடையாளம் தெரியவில்லையா? இப்படிக் காட்டில் புலியைக் கண்டதுபோல் மருண்ட பார்வை ஏன்?" என்று சிரித்த முகத்துடன் கேட்டாள். அவன் கலீரென்று சிரித்தான். பழக்க மில்லாமல் தூர விலகி இருப்பவர்களைச் சேர்ப்பதில் சிரிப்புக்கு இணை ஒன்றும் இல்லை.

"புலி என்ற உவமை பொருத்தமா? மனிதர்கள் நடுவில் எதிர்பாராதபடி தேவியைக் கண்டால் மருண்ட பார்வை ஏன் இருக்காது?" என்று உரைத்தான்.

"அதிருக்கட்டும். இக்குழந்தைகள் யார்? ஏது, குடும்பம் பெரிதாயிருக்கின்றதே!" என்றாள்.

"என் குடும்பத்தைவிடப் பெரிய குடும்பம் இங்கே இருப்பதாகத் தோன்றுகிறதே!" என்று அவன் பதில் கூறினான்.

இப்படிப் பேசி வெட்கம் கூச்சம் குறைந்து பழக்கம் ஏற்படவே, இருவரும் தங்கள் இருவருக்கும் ஏற்பட்ட அநுபவங்களை அறிந்துகொண்டார்கள். தொழில் நடத்துவதும் பணஞ் சேர்ப்பதும் உண்பதும் உறங்குவதும் சண்டை செய்வதும் சமாதானமாவதும் நோய்வாய்ப் பட்டு இறப்பதும் ஆகிய சாதாரண சம்பவங்கள் நிறைந்த வாழ்நாளில் அன்போ அற்புதமோ ஆனந்தமோ இல்லாமல் பிறப்பை வீணுகச் செய்வதுதானே நாம் உலகில் பார்க்கிறோம்? ஆனல் இந்த இரு காதலர்கள் இளமையிலேயே விசேஷமான சம்பவங்களை அனுபவிக்க நேரிட்டது.

சுந்தரியின் தாயும் சுந்தரேசன் மாமனும் சுந்தரேசன் - சுந்தரி மணம் விஷயமாகப் பேசி முடித்தனர். மணம் சுந்தரியின் வீட்டிலேயே நடந்தது. சுந்தரேசன் முன்போல் மாயூரத்திலேயே நியாயவாதி வேலையில் இருக்க நிச்சயித்தான். அவனும் சுந்தரியும் 'அபயாம்பாள் அநாதாலய'த்தை மாயூரத்திலேயே ஸ்தாபித்தார்கள். சுந்தரேசனுடன் வந்த குழந்தைகள் அந்த ஸ்தாபனத்தில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தன.

மணம் நடந்த சில தினங்களுக்குப்பின் தம்பதிகள் உல்லாசமாக மாடியில் இருந்தபொழுது, "போனதுபோல் வந்தாளும் புதுமாப்பிள்ளை" என்று முன் பாடின சிறுமி குறும்பாகப் பாடிக் கொண்டிருந்தாள். சுந்தரேசன் அந்தப் பாட்டைக் கேட்டவுடன் நகைத்தான். சுந்தரி அதற்குக் காரணம் கேட்கவே, தான் ஊரை விட்டுச் சந்நியாசியாகப் போக நள்ளிருட்டில் போய்க்கொண்டிருந்த தருணத்தில் அந்தப் பாட்டு தன் காதில் விழுந்து தன்னைத் திடுக்கிடச் செய்த விஷயத்தைச் சொன்னன். சுந்தரி ஆச்சரியமும் ஆனந்தமும் வீசும் கண்களுடன் அவனைப் பார்த்துத் தன் பார்வை மலர்களாலேயே அவனுக்கு மண மாலை மறுபடியும் சூட்டினுள்.

எஸ். ஏ. ராமநாதன்

என் கிளி 48

அன்று மீனுக்ஷியம்மன் கோவிலில் திருக்கல்யாண உத்ஸவம் நடந்து கொண்டிருந்தது. அந்நகர மக்களும், அந்நகரைச் சுற்றிலுமுள்ள கிராமத்து மக்களும் அக்கோவிலில் குழுமியிருந்தனர். கல்யாண மண்டபத்தில் ஏகக் கூட்டமாயிருந்தது. அம்மண்டபத்தில் பற்பலவித லஸ்தர் விளக்குகள் தொங்கிக் கொண்டிருந்தன. சுமார் பத்து அடி உயரமுள்ள நான்கு நிலைக் கண்ணுடிகள் அம்மண்டபத்தில் நிறுவப்பட்டிருந்தன. சூட தீபாராதனைப் புகை அம்மண்டபம் முழுதும் பரவி, மண்டபத்தின் உள்ளும் புறமும் ஒருங்கே மூடியிருந்தது. எங்கே பார்த்தாலும் ஒரே இரைச்சல். "மீனுக்ஷியம்மே! நீதான் என்னைக் காப்பாத்தணும்"

என்று கதறினாள் ஏழை ஏந்திழையாள் ஒருத்தி. "எனக்கு நல்ல படிப்பு வேணும்" என்று வேண்டினான் பள்ளிப் பையன் பாலு. நானும் என் நண்பர்களும் இவற்றை யெல்லாம் கண்டு களித்துக் கொண்டிருந்தோம்.

ஜனத்திரள் எங்களை ஒரே பக்கமாக ஒதுக்கி நெருக்கியது. அச்சமயம் ஒரு கிளி அத் திருமண்டபத்திற்குள் நுழைந்தது. அக்கிளி என் தலைக்கு நேராக மேலேயே வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்தது. நுழைந்த வழியாக வெளியே போவதற்குத் தெரியவில்லை, அக்கிளிக்கு. அதன் அழகிய பச்சைநிறச் சிறகுகள் என் கண்களைக் கவர்ந்தன. அதையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தேன் நான். அப்பொழுது என் நண்ப னொருவன், "என்ன, எங்கேயோ பார்த்துக் கொண்டிருக் கிறாய்?...அதோ பார்....தீபாராதனை நடக்கிறது" என்றான். அப்பொழுது குருக்கள் தீபாராதனை செய்துகொண்டிருந்தார். கோவில்மணி "டாண், டாண்." என்று வெகு துரிதமாக ஒலித்தது. குருக்கள் கையில் இருந்த மணியும் சேர்ந்து ஒலித்தது. அங்கே கூடியிருந்த ஜனங்கள், "ஹர ஹர, மஹாதேவா" என்று ஒரே கூக்குரலிட்டுக் கன்னத்தில் அடித்துக் கொண்டனர். அக் கூட்டத்திலிருந்த ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் குறைகளை வாய்விட்டுக் கூறி, அக்குறைகளைத் தீர்க்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். நானோ, "மேலே பறக்கும் கிளி என் கிளியாகவேண்டும்" என்றுதான் வேண்டிக்கொண்டேன். அதே சமயம் கோவில் மணி இன்னும் பலமாக ஒலித்தது. மீனாக்ஷியம்ம னும் நான் வேண்டினதை அருள்செய்து கடாக்ஷித்தாள். மேலே வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்த அக்கிளி, அவ்விதம் சுற்றிப் பறந்ததால் உண்டான அயர்ச்சியினாலும், அக்கூட்டத்தின் இரைச்சலைக் கேட்டு மிகப் பயந்ததாலும் தலைசுற்றி என்மேல் விழுந்தது. அதை என் பெரிய கைகளினால் என் மார்புடன் சேர்த்து அணைத்துக் கொண்டேன். அதன் மார்பு 'படக், படக்' என்று அடித்துக்கொண்டது. என் மனங்கூட அப்பொழுது அவ்விதந்தான் அடித்துக்கொண்டது. கிளி எங்கே இறந்து விடுமோ என்ற கவலைதான் அதற்குக் காரணம். என் நண்பர்கள் அக்கிளியைக் கண்டதும், "எங்கே,...அதைக் கொடு பார்க்கலாம்", "அதன் காலைப் பிடித்திழு; அது கத்தும்", "சே, அதை விட்டுவிடு பாபம், "பறந்து செல்லட்டும்" என்று மாறி மாறி இரைந்தனர். அவர்கள் சொல்வதைக் கேளாது, "நான் வீட்டுக்கு இப்பொழுது போகவேண்டி யிருக்கிறது உங்களைச் சாயந்தரம் சந்திக்கிறேன்" என்று அவர்களிடம் கூறி, அக்கூட்டத்தினின்றும் நழுவினேன்.

எனது வீட்டருகில் வந்ததும் எனக்கு ஒருவிதமான பயம் ஏற் பட்டது. ஏனெனில், கிளி தன் தலையைத் தொங்கவிட்டுக் கண் ணையும் மூடிக்கொண்டிருந்தது. வீட்டிற்குள் சென்று என் அறையை அடைந்தேன். ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் தண்

ணீரை ஊற்றிக் கிளிக்கு அதை வைத்தேன். மிக ஆவலுடன் அத்தண்ணீர் முழுவதையும் அருந்தியது அக்கிளி. அதற்கு ஓர் அழகிய கூண்டு என் கையினாலேயே செய்து, அதற்குள் அதை அடைத்து வைத்தேன். எனக்கு அக்கிளிமேல் அபரிமிதமான அளாதி அன்பு உண்டாயிற்று. வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்கு மறுபடியும் திரும்பி வரும்பொழுதெல்லாம் அக்கிளி மழலைக் குரலில் "கீச்சு, கீச்சு" என்று கத்தி என்னை வரவேற்கும். அது எனக்கு அளவற்ற ஆனந்தத்தை அளித்தது. கூண்டிலிருந்து அக்கிளியை நான் வெளியில் எடுப்பதே இல்லை. "பறந்தோடி விட்டால் என்ன செய்வது?" என்ற பயந்தான் அதற்குக் காரணம். ஆனால் என் கிளி எவ்விதம் அதைப்பற்றி யோசனை செய்துகொண்டிருந்ததோ யாருக்குத் தெரியும்?

* * * *

ஒருநாள் சாயந்தரம் நான் வைகையாற்று மணலில் உட்கார்ந்து முனிசிபல் ரேடியோ சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அப்பொழுது 'கடக், கடக்' என்ற சப்தத்துடன் ஒரு கட்டை வண்டி வைகையாற்றின் கல் பாலத்தில் சென்றுகொண்டிருந்தது. அதற்கடுத்துக் கட்டப்பட்டிருக்கும் பெரிய பாலத்தில் பல குதிரை வண்டிகள் சென்றுகொண்டிருந்தன. "ஐயோ" என்ற கூக்குரல் என் பின்புறமிருந்து கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். யாரோ ஆற்றங்கரைப் படியிலிருந்து வழுக்கிக் கீழே விழுவதைக் கண்டேன்.

அங்கு மிகவும் வேகமாக ஓடினேன். ஒரு சிறு பெண் கீழே விழுந்து கிடந்தாள். ஓர் ஓடுகாலிலிருந்து கைநிறைய ஜலம் எடுத்துவந்து அவள் முகத்தில் தெளித்தேன். 'ஹா' வென்று பெருமூச்செறிந்துகொண்டே கண்ணைத் திறந்தாள் அவள். தண்ணீர் வேண்டுமென்று சைகை செய்தாள். மறுபடியும் கைநிறைய ஜலம் கொண்டுவந்து அவளது வாயில் வார்த்தேன். அவள் மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்தாள். நான், "நீ யார்? உன் வீடு எங்கே இருக்கிறது? சொன்னால் உன்னை அவ் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கிறேன்" என்றேன். அதற்கு அவள், "நான் அநாதை. ஊரில் இருக்கும் வீடுகள் யாவும் என் வீடுகளே" என்றாள்.

நான், "அப்படியென்றால் நீ பிச்சைக்காரியா?" என்றேன்.

"அதுவும் சொல்வதற்கில்லை."

"சரி, நான் போய்வருகிறேன்."

அவள், "சரி, நானும் கூட வருகிறேன்" என்று சிரித்தாள். நான் திடுக்கிட்டு, "என்னுடனா?" என்றேன்.

"ஆம், தங்களுடன்தான்."

"எதற்கு?"

"சாப்பிட."

நான் ஒரு முட்டாள். அவள் மூர்ச்சித்துக் கீழே விழுந்தது பசியின் கொடுமையால்தான் என்பதை ஊகிக்காமல் போய் விட்டேன். "சரி, என் கூட வா" என்றேன். அவளும் என்னைப் பின்தொடர்ந்தாள். இருவரும் இரண்டு மூன்று வீதிகளைக் கடந்து சென்றோம். நான், "ராமா" என்று ஒரு வீட்டின் அருகில் வந்ததும் கத்தினேன். "இதுதான் உங்கள் வீடா?" என்று அவள் கேட்டாள். "ஆம்" என்றேன். வேலைக்கார ராமன் அவ்வீட்டின் கதவைத் திறந்தான். வீட்டிற்குள் அவள் நுழைந்ததும், "என்ன, வீட்டில் ஒருவரையும் காணோமே" என்றாள். "எனக்கு இரண்டு வீடுகள்" என்றேன் நான். அதற்கு அவள் ஒன்றும் சொல்லவில்லை. ஏதோ பாடிக்கொண்டே, அவ்வீட்டில் சதா வசித்துப் பழக்கப்பட்டவள்போல உள்ளே சென்றாள். வேலைக்கார ராமனிடம் அவளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்கும்படி சொல்லிவிட்டு, என் வீடு நோக்கி நடந்தேன். வழியில் பல நினைவுகள் என் மனத்தில் தோன்றி மறைந்தன.

மறுநாட் காலை, அச்சிறுமியைப் பார்க்கச் சென்றேன். அவள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் உள்ளே ஓடிவிட்டாள் அவள். நானும் சிரித்துக்கொண்டே வீட்டினுள் நுழைந்தேன்.

"வாருங்கள். தாங்கள் செய்த உதவிக்கு....."

"அதிருக்கட்டும், நீ அநாதை என்று கூறுகிறாயே. உன் பிறப்பு வளர்ப்பைப்பற்றி உனக்குச் சிறிதாகிலும் நினைவு இல்லையா?" என்று கேட்டேன்.

அக்கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை. ஜன்னல் வழியாக ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். திடீரென்று, "அதோ பாருங்கள்" என்று எதையோ சுட்டிக் காட்டினாள். ஒரு சிட்டுக்குருவி நீலவானில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது.

"சிட்டுக்குருவி யல்லவா பறந்துபோகிறது? அதில் என்ன அதிசயம்?" என்று கேட்டேன்.

அவள் "சுதந்தரம்" என்று ஒரே வார்த்தையைச் சொல்லிவிட்டு, என்னை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கண்கள், அவளது மனத்தில் இருப்பதை வெளிப்படுத்தின.

"என்ன, நீயும்...?" என்றேன்.

"ஆம், எனக்கும் ஒரே இடத்தில் இருக்கப் பிடிக்கவில்லை."

"அது முடியாதே?" என்றேன்.

"ஏன் முடியாது" என்று கேட்டாள்.

"நாகரிகம் உச்சநிலை அடைந்திருக்கும் இக் காலத்தில், உன்போன்ற யௌவனப் பருவமடைந்த மாது வெளியில் செல்வது தகாது."

"ஒருவர் சொல்வதைக் கேட்டு என்னால் நடக்க முடியாதே!"

"சரி, உன் இஷ்டம். நான் மாலை வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே, வீட்டு வாசற்படியை அடைந்தேன். "நானும் வருகிறேன்" என்று என் பின்னாலேயே வந்தாள் அவள். "என்கூடவா?" என்று கேட்டேன். "இல்லை.....தனியாக..... உம்.....மூடிந்தால் எப்பொழுதாவது தங்களை மறுபடியும் சந்திக்கிறேன்" என்றாள் அவள். என் மனம் திடுக்கிட்டது. யாரோ என்னை ஆகாயத்தில் தூக்கிச் சென்று திடீரென்று கீழே போட்டு விட்டதுபோல் இருந்தது எனக்கு.

"இவ்வளவு சீக்கிரமாகவா?" என்றேன் நான். அதற்கு மேல் கேட்க என் நா மறுத்தது.

"ஆம், சுதந்தரம். என்னை மன்னியுங்கள்" என்று சொல்லி, என்னை நமஸ்கரித்துவிட்டுச் சென்றுவிட்டாள் அவள்.

அவள் செல்லும் திக்கையே நோக்கிக் கொண்டிருந்தேன் நான். ஒரு முரடன் அவளை வேண்டுமென்றே உராய்ந்துகொண்டு சென்றான். அவள் அதைக் கவனிக்காமலேயே சென்று அடுத்த வீதிக்குள் நுழைந்து மறைந்தாள்.

* * * * *

மேற்கூறிய சம்பவம் என் சமூக வாழ்க்கையைப் பாழ்படுத்தியது. என் மூளை கொதிப்படைந்து, பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. அவ்வூரில் இருக்க எனக்குப் பிடிக்கவேயில்லை. இச்சம்பவத்தை மறக்கக் குற்றாலத்திற்குச் சென்றேன். அங்கு ஒரு வருஷம் தங்கி, என் கொதிப்படைந்த மூளையையும் கலங்கிய இருதயத்தையும் ஒருவாறு சொஸ்தப்படுத்திக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் என் தாயிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், "உன் கிளி ஏதோ வியாதியால் கஷ்டப்படுகிறது" என்று எழுதியிருந்தாள் அவள். அதைப் படித்ததும் கிளியின் ஞாபகம் வந்துவிட்டது. அதைக் காணவிட்டால் மறுபடியும் என் மூளை கலக்கம் அடைந்து உண்மையாகவே பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. உடனே ஊருக்குப் புறப்பட ஆயத்தம் செய்தேன்.

என் ஊரை அடைந்து என் வீட்டை நோக்கி வெகு வேகமாக ஓடினேன். கூண்டிற்குள் கிளி தன் தலையை ஒருவாறு தொங்க விட்டுக் கொண்டிருந்தது. "ரங்கா!" என்றேன். தூக்கத்தினின்று திடுக்கிட்டெழுவதுபோல் தலையை நிமிர்த்தியது. கொஞ்ச நேரம் என்னை ஒரே பார்வையாகப் பார்த்தது.

எனக்கு அன்று அவள் பார்த்த பார்வையும், அவள் கூறிய, "சுதந்தரம்" என்ற சொல்லும் நினைவுக்கு வந்தன. "நீயும்....." என்று என்னை அறியாமலேயே வாய்விட்டுக் கூறினேன். அக் கிளி, "ஆம்" என்பதுபோல் தன் அழகிய சிறகுகளை அடித்தது. நடுங்கிய கைகளுடன் அக்கூண்டைத் திறந்து அக் கிளியை

யெடுத்து, "நீயும் போ" என்று ஜன்னல் வழியாக வெளியே எறிந்தேன்.

அது கொஞ்ச தூரம் பறந்து சென்றிருக்கும். அதற்குள் எங்கிருந்தோ ஒரு கொடிய வல்லூறு திடீரென்று அங்கே தோன்றி அக்கிளியைப் பாய்ந்து அடித்தது. அலறிக்கொண்டே அக்கிளி ஒரு வீட்டு மாடியின்மேல் போய் விழுந்தது. அந்த மாடியில் உலாவிக்கொண்டிருந்த ஒரு பெண் அதைத் தன் கையில் எடுத்தாள். என் கை கால்களெல்லாம் ஒரே ஆட்டமெடுத்தன. மார்பு 'படக், படக்' என்று அடித்துக்கொண்டது. உடனே அவ்வீட்டை நோக்கி ஓடினேன், தலை தெறிக்க. 'அவ்வீடு யாருக்குச் சொந்தம்? அங்கே யார் இருக்கிறார்கள்?' என்று ஒருவரையும் விசாரிக்காமல் திடும்பிரவேசமாக அவ்வீட்டினுள் நுழைந்தேன். ஒரே மூச்சில் மாடிப் படிகளைக் கடந்து, மேல் மாடியை யடைந்தேன்.

"என் கிளி....." என்றேன் நான்.

"இறந்துவிட்டது" என்ற பதில் கிடைத்தது.

அக்குரலை முன்பு எங்கேயோ நான் கேட்டதுபோல் இருந்தது. நிமிர்ந்து அப்பெண்ணைப் பார்த்தேன். "நீயா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"ஆம், நான்தான்". என்று கூறித் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள் அவள். அவள் குரலில் துக்கம் கலந்திருந்தது.

"ஏன், உன் கண்கள் கலங்குகின்றன?" என்றேன் அவளைப் பார்த்து.

"அன்று உங்களை விட்டுப் பிரிந்த பிறகு ...ம்... எனக்குச் சொல்ல நாக் கூசுகிறது...இதோ இக்கிளிக்கு ஏற்பட்ட ஆபத்து, எனக்கும் நேர்ந்தது...ஆனால் கிளி, அதற்கேற்பட்ட ஆபத்தின் பலனால் மோக்ஷமடைந்துவிட்டது.....ஆனால் நானே கணிகை யாகிவிட்டேன்" என்று கூறித் தேம்பி அழுதாள் அவள்.

எஸ். ராமாநுஜன்

வாழ்க்கையில் குறை 49

'கணவனும் மனைவியும்' என்ற விஷயம்பற்றி ஓர் எழுத்துப் போட்டி வைத்தபோது வந்திருந்த கட்டுரைகளில் இரண்டு பிரசுரிக்கப் படாமல் இருந்தன. பத்திரிகைக்கு விஷயம் கிடைக்காதபோது தானே ஆசிரியர் அவற்றையெல்லாம் வாசித்துப் பார்க்கிறார்? முதலில் ஒரு மனைவியின் கட்டுரை அவர் கையில் கிடைத்தது. அதாவது:—

மனைவியின் கட்டுரை

அவர்மேல் எனக்குக் கொள்ளைப் பிரியந்தான். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அவருக்கு மட்டும்? அதைவிட ரொம்ப ரொம்பப் பிரியந்தான். ஒரு நிமிஷம் நான் பிரிந்திருக்கச் சகிக்க மாட்டார். சற்று நேரம் எதிர்த்த வீட்டுக் கமலாவைப் பார்க்கப் போனால் அதற்குள் வீட்டிலிருந்து அழைப்பு வந்துவிடும். "என்ன அவசரம் இப்போ!" என்பேன் சிரித்துக்கொண்டே. "எங்கே போயிருந்தாய் இவ்வளவு நாழிகை" என்பார். "இங்கே வாயேன் என்னவென்று சொல்கிறேன்" என்று வம்புக்கு இழுப்பார். இப்படிப்பட்டவரிடம் என்ன செய்வது? எனக்கு ஒரு பக்கம் யாராவது கேலி செய்வார்களோ என்று அவமானமா யிருக்கும். இன்னொரு பக்கம் அவர் செய்யும் காரியங்கள் இன்பமாகவும் இருக்கும்.

ஆனால் கோபு பிறப்பதற்கு முந்தித்தான் இப்படி இருந்தது. அதற்கு அப்புறம் பிரியமில்லாமல் இல்லை. என்னை அடிக்கடி அவர் சீண்டுவதுதான் தரும சங்கடமாய்ப் போக ஆரம்பித்து விட்டது.

குழந்தை 'வீல், வீல்' என்று அழுவான். அவனைச் சமாதானப்படுத்தப் போவேன். அப்பொழுதுதான் அவர் அவசரமாகக் கூப்பிடுவார். விஷயம் வேறொன்றுக்கும் இராது. அவருடைய பேனா எந்தக் கோட்டுக்குள்ளாவது போய் ஒளிந்து கொண்டிருக்கும். "இதையெல்லாம் கொஞ்சம் கவனிக்கிறதற்கு என்ன? எப்பொழுது பார்த்தாலும் குழந்தை குழந்தை என்று என்ன வேண்டிக் கிடக்கிறது?" என்பார். எனக்கு வர வர எரிச்சலாய்க் கூட இருக்கும்.

குழந்தை மேல் அவருக்கு ஆசையில்லையோ என்று நினைத்து விடக்கூடாது. நான் வெறுமனே குழந்தையை அதட்டக்கூடச் சகிக்கமாட்டார். ஆனால், "குழந்தையைக் கண்டு கரிக்கிறீர்களே?" என்றால் "பெண்டாட்டி செயலற்றுப் போனால்தான் குழந்தையைக் கரிக்காமல் இருக்க முடியும்" என்கிறார். அப்பா! எதையெடுத்தாலும் முரட்டுத்தனமாய்ச் சாதித்துவிடுவார்.

பெண்களுக்குப் புருஷர்கள் என்னதான் ராமராகவே இருந்தாலும், அவர்கள் சற்றுத் தனியாக இருக்கவேண்டிய சந்தர்ப்பம் உண்டு என்பதை அவர் ஒப்புக்கொள்வதே இல்லை. "புருஷனைக் கவனிப்பதைவிடப் பெண்களுக்கு வேறென்னதான் வேலை இருக்க முடியும்?" என்பதே அவருடைய கேள்வி. இருக்கட்டும். அவர் சொல்வதையே ஏற்றுக்கொள்வோ மென்றால் எப்பொழுது பார்த்தாலும் குலாவிக்கொண்டே இருக்கப் பிடிக்கிறதா ஒருத்திக்கு? இதென்ன, குடித்தனம் செய்யும் வீடா? அல்லது.....

இதை ஜாடையாகக்கூட அவரிடம் சொல்லி மீண்டுவர முடியாது. "கணவனும் மனைவியும் வேடிக்கையாய்ப் பேசி

மகிழ்வது ஏதாவது கேவலமா? இல்லே யென்றால் சண்டை போட்டுக்கொண்டு சதா உம்மணு மூஞ்சிமாதிரி ஒருவரைப் பார்த்து ஒருவர் உருமிக் கொண்டிருப்பதுதான் குடித்தனமா?" என்றெல்லாம் பிடித்துக்கொண்டு விடுவார், மேடைப் பிரசங்கத்துக்கு.

புருஷர் என்னைக் கேலி செய்வதோ, என்மேல் பிரியமாயிருப்பதோ அல்லது என்னைக் கிண்டிக் கிண்டிச் சீண்டுவதோ எனக்கு வேண்டித்தான் இருக்கிறது. அது வேண்டியதுதான். ஆனால் என்னால்தான் ருசியுடன் அதை அநுபவிக்க முடியவில்லே. மனசில் இருக்கும் எண்ணங்களைச் சிநேகிதிகளிடம் கொட்டிப் பரிமாறினால்தானே என் அநுபவங்களுக் கெல்லாம் ஒரு தனிச் சுவையும் உருவும் ஏற்படும்? "நீங்கள் இப்படிப் பேசுகிறீர்களே; எனக்கு ரொம்பவும் இன்பமா யிருக்கிறது" என்று அவரிடமே சொல்லிப் புகழ்ந்துகொள்ள முடியுமா, என்ன? இதெல்லாம் அவருக்குத் தெரியாது. தெரிந்தாலும், "போடி பைத்தியம்! நான் உன்னிடம் பேசுவதை யெல்லாம் வெளியில் சொல்லி என்னை வெளியில் தலைகாட்ட முடியாமல் செய்வதற்கா? நீ அவர்களிடம் சொல்ல, அவர்கள் தம் புருஷர்களிடம் அதைக் கொஞ்சம் கூட்டிக் குறைத்து சொல்லி வைக்க, அப்புறம் அவர்கள் என்னை வந்து தொணதொணக்க, போதும்! வேறே வினை வேண்டாம்" என்று ஆரம்பித்துவிடுவார்.

அவரோடு சதா பல்லைப் பல்லைக் காட்டிக்கொண்டும் பேசிக் கொண்டும் இருப்பதாவது தேவலே. அவர் பிணங்க ஆரம்பித்து விட்டாலோ அப்புறம் கேட்க வேண்டியதில்லே. என்னை அழ அழ வைத்துவிடுவார். அல்லது கெஞ்சக் கெஞ்ச அடித்து விடுவார். நானகச் செய்யக் கூடாததெல்லாம் செய்து அவரைத் திருப்திப் படுத்தவேண்டி வந்துவிடும். இல்லாவிட்டால், "காபி சாப்பிட மாட்டேன்" என்பார். சாப்பாடு வேண்டியதில்லே என்று சத்தியாக்கிரகப் போருக்குத் தயாராகிவிடுவார். நானாவது அப்பொழுது கோபித்துக்கொண்டு அதட்ட முடியுமென்றாலோ நடக்கவே நடக்காது! ஏனென்றால் எனக்கு அப்பொழுது கோபமே வராது. உங்களுக்குச் சிரிப்பாய்த்தான் இருக்கும் நான் சொல்வது?

எனக்குக் கோபம் வரும் சமயமும் ஒன்றுண்டு. அது எப்பொழுது என்றால் நான் சொல்வதை அவர் உடனேயே செய்து விட்டு மறுகாரியம் பார்க்கிறாரே, அப்பொழுதுதான். "கொஞ்சமாவது சம்சார ருசியே தெரியாத அப்பாவியாய் இருக்கிறாரே!" என்று நினைக்கும்போது எனக்கு அழுகை கூட வந்து விடும். ஊடலும், கூடலும் அவ்வளவு எதிர்பார்த்து ஏங்கும் விஷயங்கள் அல்லவா?

என் மனசில் நான் எண்ணுவதெல்லாம் என் கணவர் செய்து முடிக்க வேண்டும் என்ற ஆசைக்கு ஒரு குறைவும் இல்லே. ஆனால் அப்படி அவர் செய்து முடிக்கும் அருமையை நான் நாலு

பேர்களிடம் சொல்லிப் பெருமை அடித்துக்கொள்ள ஒரு மனிதர் சந்தர்ப்பம் கொடுக்க வேணுமா, வேண்டாமா? அதுதான் அவரிடம் கிடையவே கிடையாது.

"பேசுவதற்கு நான் இல்லேயா? என்னிடம் சொல்லேன்" என்கிறார்.

நானும் ஒவ்வொரு சமயம் இப்படிக் கேட்பதுண்டு. 'ஆனால் அவர் கேட்டால் மட்டும் நான் என்னத்தை அவரிடம் சொல்லிக் குட்டிச்சுவராய்ப் போகிறது?' என்றுதான் தோன்றும் எனக்கு.

கமலாவின் புடைவையைப் பற்றிச் சொல்லலாம். லக்ஷ்மி வீட்டுச் சண்டையைப்பற்றிச் சொல்லலாம். வீட்டில் ஏதாவது வேண்டியிருந்தால் அதைச் சொல்லலாம். தெருவில் நடந்த விசேஷத்தை ஒன்று கூடவிடாமல் சொல்லிவிடலாம். "கொஞ்ச நாழிகை நீங்கள் வெளியில் போய் வாருங்கள். நான் உங்கள் காரியத்தை என் தோழிகளிடம் சொல்லிவிட்டுப் பெருமை காட்டிக்கொண்டு வருகிறேன்" என்று என்ன விதமாய்ச் சொல்வது அவரிடம்?

என்னுடைய மன்னி எழுதின கடிதத்தில், "உனக்கு ஒரு குறைவும் இருக்காது; சந்தோஷமாகவே இருப்பாய் என்று நினைக்கிறேன். அந்த மோக்ளாவில் எனக்குப் பதில் எழுதக் கூட மறந்துபோகாதே" என்று எழுதியிருக்கிறாள். என் குறையை அவள் எப்படிக் கண்டாள்? இந்தக் குறையை யாரிடந்தான் போய் எழுதித்தொலைப்பது?

* * *

ஆசிரியர் அடுத்த கட்டுரையை எடுக்கிறார்.

கணவன் கட்டுரை

இவள் (என் சஹதர்மிணியைத் தான் சொல்கிறேன்) இருக்கிறாளே, அப்படி ஒன்றும் விஷயம் தெரியாதவளல்ல; நல்லவள்தான்; கெட்டிக்காரியே. இருந்தும் இன்னும் கொஞ்சம் அடிபடவேணும். உல்லாசமாயிருக்கும் தம்பதிகளைப் பார்க்க வேணும். சாவித்திரியும் இளம் பேடைகளின் ஜோடியைப் பார்த்திருந்தால் அவளுக்கு இங்கிதம் பாடமாகிவிடும். அழகிலும், அன்பான சுவை நிறைந்த சல்லாபப் பேச்சிலும் தன்னை ஐக்கியப் படுத்திக்கொள்ள அவள் கொஞ்சம் கற்றுக்கொள்ளவேண்டும்.

அவளிடம் அடிக்கடி தோன்றும் லஜ்ஜைக்குக் காரணம் எனக்குத் தெரியவேயில்லை. என்னை விட்டுத் தனியே அவள் அடிக்கடி போக விரும்புவது ஏன் என்பதும் புரியவில்லை. அவளது ஊடல் அர்த்தமற்றது போல் இருக்கிறது. விருப்பம் இருப்பதை எளிதில் நிறைவேற்றிக்கொள்ள ஏனோ தயங்குகிறாள்? புஷ்பத்தை எட்டிப் பறிப்பதுபோல எழும்ப வைக்கிறாள்.

நான் எங்காவது வெளியில் போய் வந்தால் அப்படி வருவதற்குக் கொஞ்சம் நேரமாகிவிட்டால், "ஏன் இவ்வளவு நாழிகை? எங்கே போயிருந்தீர்கள்? வீட்டு ஞாபகமே இருந்தால்தானே?" என்றெல்லாம் அடுக்குகிறாள். நான் வீட்டிலிருந்தாலோ, "எதிர்த்த வீட்டுக்குப் போய்விட்டு வருகிறேன். நீங்கள் வீட்டில் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருங்கள்" என்று கிளம்ப ஆரம்பித்து விடுகிறாள். போய் வரட்டும்; வேண்டாமென்று சொல்லவில்லை. அங்கே போய்ச் சும்மாயிருப்பாளா? கிடையாது. என்னைப் பற்றிப் பெருமையெல்லாம் அடித்துப் பீற்றிக் கொண்டிருப்பாள். நான் என்ன வெளியில் தலைகாட்டுவதா, இல்லையா?

போகட்டும்; வீட்டில் இருந்தாலோ குழந்தை ஒன்று இருக்கிறது. கோபமாய், "குழந்தை, குழந்தை என்றால் குழந்தையின் தகப்பனின் கதி என்னவது?" என்று கேட்டாலொழிய அசையாமல் அழுத்தம் செய்கிறாள். குழந்தையென்று எனக்குமட்டும் ஆசையில்லையா, என்ன? காரணம் வேறு. தான் கொஞ்சம் விலகினாற்போல் இருப்பதற்குக் குழந்தையை அவள் சாக்கிடுகிறாள். அலுத்துப்போய் வீட்டுக்கு வந்த மனிதனுக்கு மழலைச் சிரிப்புக் காட்டும் குழந்தை ஒன்று இருந்தாலே போதும் ஆறுதலளிக்க என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதற்கு — அந்தக் குழந்தைக்கு - எங்காவது ஒரு பிரியமுள்ள மனைவியின் பக்குவம் வருமா? தெரியுமா? ஏனோ இது அவளுக்குப் புரிவதேயில்லை!

எங்கேயாவது போகவேண்டும் என்று சொல்லட்டும்; என்ன புடைவை அல்லது சாமான் வேண்டும் என்றாவது கேட்டு வாங்கிக் கொள்ளட்டும்; அல்லது விருப்பமானபடி பேசிக் கொண்டிருக்கட்டும். இதெல்லாம் இல்லாமல், மோபித்தனமாக, புருஷனுடன் வாழ்வதைக்கூட ஓர் அளவுக்குள் அடக்கிவிட நினைப்பது சரியென்று தோன்றுகிறதா?

புருஷன் மனைவியென்றால் ஏற்றத்தாழ்வு அநேகம் இருக்கும். நான் கெஞ்சும்படி இருந்தாலும் இருக்கும்; அவள் கெஞ்சும்படி இருந்தாலும் இருக்கும். திரைமறைவில் நடக்கும் இந்த விஷயங்களை நாமே போய் வெளியில் சொல்லிவிட்டு வரவேண்டுமென்றால்—?

புருஷன் பிற பெண்களைக் காணும்போதுதான் குறிப்பாகக் கௌரவமாய் நிமிர்ந்து நடப்பான். விறைப்பு சிறப்பாக இருக்கப் பிரியப்படுவான். அதுவும் அந்தப் பெண்களிடமே போய் என் சரணகதிப் படலத்தையோ, அவள் அபயம் கொடுக்கும் படலத்தையோ போய்ப் பாடிவிட்டு வரப் பிரியப்படுவதென்றால் அதை எப்படித்தான் தீர்க்கமுடியும்?

"உனக்கென்னப்பா! பாக்கியசாலி, பணம் கிடக்கிறது. அதிருஷ்டம் இருக்கிறது. அருமையான பங்களா. அன்புள்ள மனைவி. காலத்தில் குழந்தை..." — இப்படியே அடுக்கிக்கொண்டு போகிறார்கள் நண்பர்கள்.

சொல்லட்டும்; பெருமையாய்த்தான் இருக்கிறது. ஆனால் என் குறையை இவர்கள் எங்கே கண்டார்கள்?

* * * *

இவ்வளவுதான் ஆசிரியர் படித்தார். மளமளவென்று நீலப் பென்சிலினால் ஆசிரியரின் பார்வைக்காக அடியில் ஒரு குறிப்பு எழுதினார்.

'கணவனும், மனைவியும்' என்ற போட்டியில் அநேக கணவர்களும் வேறு அநேக மனைவிகளும் அல்லது தம்பதியாகவே இல்லாதவர்களும் எழுதியிருப்பார்கள். ஆனால் ஒரே கணவனும் அவனுடைய மனைவியுமே எழுதியிருப்பது அரிதாய்த்தான் இருக்கும். எல்லோரும் தரித்திரத்தினாலோ, வேற்றுமையினாலோ, தம்பதிகளுக்குள் மனஸ்தாபம் ஏற்படுவதையும், வேறு வகையில் மணவாழ்க்கையில் வெறுக்கத்தக்க குறையிருப்பதையும் மனமுருக எழுதியிருப்பார்கள்.

முன்னால் ஒருவார்த்தை. இந்தத் தம்பதிகளின் குறை இவர்கள் நினைப்பதுபோல் இல்லை. இவர்களில் மனைவி, கணவனுடைய நட்பை வெகு காலம் அநுபவித்துச் சகிக்க எண்ணுகிறாள். கணவனோ 'அவள் கிழவியான பிறகு என்ன அவளிடம் குலாவமுடியும்? அதைப் பூராவும் இந்த இளமையிலேயே நடத்திக்கொள்ளலாமே' என்று நினைக்கிறான். மனைவி விலகிக் கொள்வது போல் பாசாங்கு செய்வதை இவன் குறையாக எண்ணுகிறான். அவள் தன் எண்ணம் நிறைவேறுமல் போவதுபோல் எண்ணிக்கொண்டு அதைக் குறை யென்று நினைத்துக் கொள்கிறாள்.

ஆகவே, வெளியில் தெரியக்கூடிய குறையே இல்லாத இத் தம்பதிகளின் இந்தக் குறை நமக்குத் தெரியாமல் இருப்பது ஒரு குறைதான்! அவர்களுக்கு, இந்தப் போட்டியில் பரிசு கிடைக்காமல் போனதும் ஒரு குறைதான்! அவர்கள் இருவரும் 'பணம் இருக்கட்டும்; எல்லா வசதிகளும் இருக்கட்டும். ஆயினும் சம்சாரம் குறையுள்ளதுதான்! குறையில்லாத வாழ்க்கையேயில்லை' என்று நிரூபிப்பது போல எழுதியதை நம்முடைய போட்டிப் பந்தயத்துக்கு அனுப்பியது மகா வருந்தத்தக்க குறையேதான்!

எஸ். என். ராமு

ரகுபதியின் சகோதரன் 50

1

அன்றுதான் பாகீரதி அம்மாமிக்கு முதல் முதலாகக் கோபம் வந்ததைப் பார்த்தேன். கோபம் என்றால் சாமான்யமான கோபமா? அப்பப்பா! அதை நினைத்தால் இப்போதுகூடப் பயமாய்த்தான் இருக்கிறது!

"இந்த நிமிஷமே வீட்டை விட்டு வெளியே போ!" என்று இரைந்தாள்.

சீதாபதி மௌனமாகத் தலை குனிந்துகொண்டு நின்றான். அவனுடைய முகபாவமே மாறுதலை அடைந்திருந்தது. ஒரு கணம் வெளியே போய் விடுகிறவன் போலவும், மறு கணம் அவ்வாறு செய்ய இஷ்டப்படாதவன் போலவும் தோன்றினான். அவள் மனத்தில் அசாத்தியமான கோபம் உண்டாயிருந்ததென்பது நன்கு தெரிந்தது. அவன் பற்களை 'நற நற' வென்று கடித்த சப்தம் என் செவிகளில் விழுந்து என்னை நடுங்கச் செய்தது. சீதாபதி முன்கோபி; முரடனுங் கூட. 'இப்பொழுது என்ன விபரீத சம்பவம் நேரிடப் போகிறதோ?' என்று உள்ளுக்குள்ளேயே பயந்தேன்.

ஆனால் அவனுடைய கோபத்தையாவது, பற்களை நறநற வென்று கடித்ததையாவது அம்மாமி சிறிதேனும் லக்ஷ்யம் செய்த தாகத் தெரியவில்லை. அவளுக்கு மேலும் மேலும் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. வார்த்தைகள் தடுமாறின. அவளுடைய தேகமே உதறிற்று. ருத்திர மூர்த்தி என்று பெரிசாய்ச் சொல்கிறார்களே, அந்த ருத்திரமூர்த்திகூட அம்மாமியைப் பார்த்திருந்தாரானால் நடுநடுங்கிப் போயிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

"மரியாதையுடன் நீயாகவே வெளியே போகப்போகிறாயா? அல்லது கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்ல வேணுமா?" என்று மறுபடியும் அவள் இரைந்தபோது வீடே அதிர்ந்தது. நான் நடுநடுங்கிப் போனேன்.

சீதாபதி ஒரு தரம் இருமித் தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டான். அவன் கண்களில் கோபாக்கினி ஜ்வாலித்தது.

"சரி அம்மா; நான் வீட்டை விட்டுப் போகவேணுமென்று நீ பிடிவாதமாயிருக்கிறபடியால் இதோ போகிறேன். ஆனால், ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள். இப்போது புறப் பட்டுப்போகிற இந்தக் கட்டை இனிமேல் திரும்பி இந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்காது..." – அதற்கு மேல் அவனுக்குச் சொல்ல ஓடவில்லை. அவன் கண்களில் நீர் துளித்தது. அவனைப் பார்க்கும்போது எனக்குப் பரிதாபமா யிருந்தது. நான் திரும்பி அவன் தம்பி ரகுபதியை உற்று நோக்கினேன். அவன் தன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். எனக்கு அம்மாமியின் பேரில் கோபம் கோபமாய் வந்தது. அவளுக்குத்தான் என்ன கல் நெஞ்சு!

சீதாபதி மௌனமாகத் தன் தாயை நமஸ்கரித்தான். பிறகு எங்கள் இருவர் பக்கமும் திரும்பி, "போய் வருகிறேன்" என்று சொல்வதுபோல் பார்த்துவிட்டுப் புறப்பட்டான்.

திடீரென்று, "கொஞ்சம் இரு, அண்ணா" என்றான் ரகுபதி. சீதாபதி திரும்பித் தயங்கி நின்றான். 'என்ன சொல்லப் போகிறானோ?' என்று நான் வியப்புடன் அவனைப் பார்த்தேன்.

ரகுபதி, அம்மாமியின் முன்பு முழங்காலிட்டுப் பணிந்தான். நீர் நிறைந்த கண்களுடன், "அம்மா, நான் கேட்கிறேனென்று கோபித்துக் கொள்ளக் கூடாது. நீ இப்போது என்ன குற்றத்திற்காக அண்ணுவை வீட்டை விட்டுப் போகச் சொல்கிறாய்?" என்று கேட்டான்.

அம்மாமி சிறிது நேரம் பல்லைக் கடித்துக்கொண்டு மௌனமாக நின்றாள். பிறகு, "இவனையே கேட்டுத் தெரிந்து கொள்" என்று சொல்லிவிட்டு வாயை மூடிக்கொண்டாள்.

ரகு தன் சகோதரனின் முகத்தைப் பார்த்தான்; "காரணத்தைச் சொல்லமாட்டாயா, அண்ணு?" என்று கெஞ்சுவதுபோல் இருந்தது அவன் பார்வை. நாகம்மா, நான், அம்மாமி ஆகிய மூவரும் ஏக காலத்தில் சீதாபதியின் முகத்தைப் பார்த்தோம்.

சீதாபதி அமைதியாக, "போலீஸ் இலாகாவிலிருந்து 'ட்யூடி ஜாயின்' பண்ணும்படி 'ஆர்டர்' வந்திருக்கிறது. நான் போலீஸ் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறேன்" என்றான்.

அம்மாமி ஒரு துள்ளுத் துள்ளினாள். "கேள்: இவனே யார் அந்த வேலையை ஒப்புக்கொள்ளச் சொன்னது?" என்று கூச்சலிட்டாள்.

"எனக்கு ஒருவரும் சொல்லித்தர வேண்டியதில்லை. எதைத செய்ய வேணுமென்று எனக்குத் தெரியும். நானுகவேதான் இந்த வேலையை ஒப்புக்கொண்டேன்" என்றான் சீதாபதி.

"தேசத் துரோகி! உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யும் பாவி! இந்த வீட்டில் இருக்கவேண்டியதில்லை. நீ என் பிள்ளை என்பதையே மறந்துவிடுகிறேன். நீ போய் வரலாம்" என்றாள் அம்மாமி.

அம்மாமியை இரண்டாம் முறை தடுக்க ஒருவரும் துணியவில்லை. சீதாபதி கம்பீரமாக நடந்து வீட்டை வீட்டுச் சென்றான். அவன் போகும்வரையில் அவனையே பார்த்துக்கொண்டிருந்த அம்மாமி அவன் மறைந்ததும் எங்கள் பக்கம் திரும்பினாள்.

"போகட்டும்! சொந்தப் பிள்ளைதான். ஆனாலும் அவன் இந்த வீட்டை விட்டுப் போகவேண்டியவன். தேசத்துரோகிகளுக்கு இங்கே இடமில்லை" என்று அம்மாமி தனக்குத் தானே சொல்லிக்கொள்பவளைப்போல முனகினாள்.

அம்மாமிக்குத் தேசம் என்றாலே உயிர். இவ்விஷயத்தில் ரகுவும் அவன் தங்கை நாகம்மாவும் அம்மாமியைப் பின்பற்றியவர்கள்; தேசத்திற்காக உயிரை விடவேண்டும் என்ற கொள்கையுடையவர்கள். சீதாபதி மட்டும் இதற்கு விலக்கு. தன் தம்பியைப் பார்த்து, "என்னடா தேசம் வேண்டிக் கிடக்கிறது! தேசம், தேச சேவை என்று சதா முட்டிக் கொள்கிறீர்களே

இதைக் காட்டிலும் பிழைக்க வழி ஒன்றைத் தேடலாமே!" என்று சொல்லிவிட்டு, "பைத்தியங்கள்" என்று தலையில் அடித்துக் கொள்ளுவான். ஒவ்வொரு சமயம் சத்தியாக்கிரக இயக்கத்தைப் பற்றிப் பேச்சுக் கிளம்பினால், "ஆமாம்; இவர்கள்தாம் போய்ச் சுயராஜ்யத்தை மூட்டை கட்டிக் கொண்டுவந்துவிடப் போகிறார்களாக்கும்! ஏதாவது வேணுமே வேலை!" என்று முனகுவான். ஒவ்வொரு வேளை இருந்தாற்போலிருந்து அவனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு கிளம்பும். "நான் மட்டும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டராக வரவேணும். அப்புறம் இந்தச் சத்தியாக்கிரகிகளை யெல்லாம் பார்ப்பேன் ஒரு கை. நாலு பேர் முழங்கால் சில்லுகளைப் பெயர்த்து விட்டால் அப்புறம் சத்தியாக்கிரகமாவது மண்ணாங்கட்டியாவது! தேசம் என்று ஒன்று இருப்பதையே மறந்து விடுவார்கள்" என்று மனம் போனபடி திட்டுவான்.

எனவே, சீதாபதிக்கும் அம்மாமிக்கும் இடையே கடக்க முடியாத பாதாளம் ஒன்று ஏற்பட்டதில் ஆச்சரியம் இல்லையல்லவா?

சீதாபதி புறப்பட்டுப் போனதும், "இந்தமாதிரிப் பிள்ளை ஒன்று எனக்கு வந்து பிறந்ததே!" என்று அம்மாமி வருத்தப் பட்டாள்.

"அது இருக்கட்டும், அம்மாமி! நாகுவின் கல்யாணத்தைப் பற்றி அப்புறம் என்ன யோசனை?" என்று நான் பேச்சை மாற்றினேன்.

"என் செயலில் என்ன இருக்கிறது? எல்லாம் 'அவன்' பார்த்துச் செய்யவேண்டியவன் அல்லவா? இந்த உலகில் நடக்கும் காரியங்கள் எல்லாம் எப்படி அவனுல் நடந்தேறுகிறதோ அதே மாதிரி நாகம்மாவின் கல்யாணமும் சரியான காலத்தில் நடந்தேறும்" என்றாள் அம்மாமி.

நான் நாகம்மாவைத் திரும்பிப் பார்த்தேன். அவள் வெட்கித் தலை குனிந்துகொண்டாள்.

"என்னதான் பகவான் உதவிசெய்ய வேணுமென்றாலும் நம் பிரயத்தனமும் வேண்டியிருக்கிறதல்லவா?" என்றேன்.

"மூடுமந்திரம் எதற்கு? நான் உன்னைத்தான் நம்பியிருக்கிறேன். நாகம்மாவுக்கு உன்னைப் பண்ணிக்கொள்ள இஷ்டந்தான். உனக்கும் விருப்பந்தான் என்பதையும் நான் கண்டு கொண்டேன். சீக்கிரம் முகூர்த்தம் வைத்து விடுகிறேன். என்ன?" என்றாள் அம்மாமி.

"தடை செய்ய அடியேன் அசக்தன்" என்று விண்ணப்பித்துக் கொண்டேன்.

"என்ன நாகு, உனக்குச் சம்மதந்தானே?" என்று அவள் பக்கம் திரும்பினேன். கன்னங்கள் சிவக்க அவள் உள்ளே ஓடி விட்டாள்.

2

எனக்கும் நாகம்மாவிற்கும் விவாகம் இனிது நடந்தேறி இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன. ஒரு நாள் நான், ராகு, அம்மாமி மூவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம்.

"ரகு எங்கே?" என்று கேட்டேன்.

"ரகுவா? தபாலாபிஸிற்குப் போயிருக்கிறான்" என்று நாகம்மா நாணிக் கோணிக்கொண்டு பதில் சொன்னாள்.

அவள் சொல்லி முடிக்கக்கூட இல்லை, "அம்மா!" என்று கூப்பிட்டுக்கொண்டே ரகு அவசரமாய் உள்ளே நுழைந்தான்.

"என்னடா, என்ன சமாசாரம்!" என்று அம்மாமி கேட்டாள்.

"எல்லாம் நல்ல சமாசாரந்தான், அம்மா!" என்று சொல்லிக் கொண்டே ரகு உட்கார்ந்தான். நானும் ராகுவும் அவன் முகத்தை ஆவலுடன் உற்று நோக்கினோம். அவன் என்ன சமாசாரம் கொண்டுவந்திருக்கலாம்?

"என்னடா சமாசாரம், சொல்லேன்" என்றாள் அம்மாமி.

ரகு புன்சிரிப்புடன் ஒரு கடிதத்தை என்னிடம் நீட்டினான். என் நெஞ்சு 'பட பட'வென்று அடித்துக் கொண்டது. அது என்ன கடிதம்? எங்கிருந்து வந்திருக்கக் கூடும்?

நான் அவசரமாய்க் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன்; ரகு சொன்னது போல் நல்ல சமாசாரந்தான்: ரகுவைப் பெருங் குளத்தில் ஹிந்தி உபாத்தியாயராக நியமித்திருப்பதாகவும், உடனே புறப்பட்டுச் சென்று வேலையை ஒப்புக்கொள்ள வேண்டு மென்றும் அதில் கண்டிருந்தது.

"பார்த்தாயா? ஹிந்தி கற்றுக்கொண்டது எவ்வளவு நல்ல தாய்ப் போயிற்று?" என்றாள் நாகம்மா.

"எல்லாம் 'அவன்' கிருபையால் நடக்கிறது. மனித யத்தனத்தில் என்ன இருக்கிறது? எல்லாம் அவன் அருள்" என்றாள் அம்மாமி.

ரகுவைப் பார்த்து, "எப்போது புறப்படப் போகிறாய்?" என்று கேட்டேன்.

"அநாவசியமாகத் தாமதம் எதற்கு? நான் நாளைக் காலையிலேயே புறப்பட்டுச் செல்கிறேன்" என்றான் ரகு.

"கூடவே நானும் வருகிறேன்" என்றாள் அம்மாமி.

"அது சரியல்ல; ரகு இப்போதுதான் முதல் தடவையாகப் பெருங்குளத்திற்குப் புறப்பட்டுப் போகிறான். அவன் அங்கே போய் வேலையில் அமர்ந்து கொள்ளட்டும். சௌகரியமான வீடு ஒன்றைப் பார்த்துக்கொண்டு கடிதம் போடட்டும். பிறகு நீங்கள் புறப்பட்டுப் போகலாம்" என்றேன் நான்.

"நியாயம்" என்று அம்மாமி ஒப்புக்கொண்டாள்.

தினந்தோறும் அம்மாமி பெருங்குளத்திலிருந்து கடிதம் வருகிறதா என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ரகு புறப்பட்டுப் போன இரண்டு மாதங்கள் வரையில் ஒரு கடிதத்தையும் காணோம். அவன் எங்களை மறந்து விட்டானோ என்றுகூட நினைக்கும்படி இருந்தது.

கடைசியில் ஒருநாள் அவனிடமிருந்து கடிதம் வந்தது. வேலையை ஒப்புக்கொண்டதாகவும், சௌக்கியமாயிருப்பதாகவும், வாடகை வீடு ஒன்றைப் பார்த்திருப்பதாகவும் எழுதியிருந்தான். இதுவரை கடிதம் எழுதச் சௌகரியப்படவில்லை யென்றும், கடிதம் எழுதாததற்கு மன்னிக்க வேணுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தான். நாகம்மாவையும் என்னையும் பற்றி விசாரித்து விட்டு அம்மாவுக்குத் தன் நமஸ்காரங்களைத் தெரிவித்துக் கொண்டு கடிதத்தை முடித்திருந்தான்.

அக்கடிதத்தைக் கண்டதும் அம்மாமி ஒரு பெரிய புதையலைக் கண்டெடுத்தவள் மாதிரிச் சந்தோஷப்பட்டாள். கடிதத்தை இரண்டு மூன்று தரம் திருப்பித் திருப்பி வாசிக்கச் சொல்லிக் கேட்டாள்.

அம்மாமி ஊருக்குப் புறப்பட்டபோது நாகம்மா, "நானும் போய் வருகிறேனே!" என்றாள். 'அவளது சந்தோஷத்தைத் தான் கெடுப்பானேன்?' என்றெண்ணி, "பேஷாகப் போய் வா" என்றேன். அம்மாமியும் நாகம்மாவும் புறப்பட்டுச் சென்றார்கள்.

இருவரும் புறப்பட்டுச் சென்று பதினைந்து தினங்களுக்கெல்லாம் நாகம்மாவிடமிருந்து ஒரு தந்தி வந்தது. அதைப் படித்தவுடன் எனக்கு என்னை அறியாமலேயே நடுக்கம் உண்டாகி விட்டது. "நானும் அம்மாவும் புறப்பட்டு விட்டோம். மற்றச் சங்கதிகள் நேரில் – நாகு". திடீரென்று நாகம்மா எனக்குத் தந்தி கொடுக்கக் காரணம் என்ன? ஏதேனும் எதிர்பாராத விபத்து நேர்ந்துவிட்டதா? என் மனம் படாத பாடு பட்டது.

அன்று முழுவதும் எனக்கு ஒரு வேலையுமே ஓடவில்லை. ஆபீஸிற்கு ஒரு பைத்தியக்காரன் செல்வதுபோலச் சென்றேன். எப்போது மறுநாள் வரப்போகிறது என்று காத்திருந்தேன்.

நீண்ட இரவிற்குப் பிறகு மறுநாள் பொழுது விடிந்தது. வாசலில் குதிரை வண்டிச் சத்தம் கேட்டு, படுக்கையைச் சுற்றுமல் அப்படியே அரைகுறையாய் விட்டுவிட்டு வாசலுக்கு ஓடினேன்.

வெளியே நின்றிருந்த வண்டியிலிருந்து நாகம்மா இறங்கினாள். அவள் பின்னாலேயே அம்மாமியும் இறங்கினாள். வண்டிக் காரனுக்குக் கூலியைக் கொடுத்து விட்டு நாகுவின் பக்கம் திரும்பினேன்.

"உன் தந்தி கிடைத்தது. என்னவோ ஏதோ என்று பதறிப் போய்விட்டது மனசு" என்றேன்.

"அம்மா கூடச் சொன்னுள், 'தந்தி எதற்கு? கடிதம் போட்டால் போதுமே' என்று. இருந்தாலும் என் மனசு கேட்க வில்லை. தந்தி அனுப்பினேன்" என்றுள் நாகு.

அம்மாமியின் பக்கம் திரும்பி, "ரகு வரவில்லையா?" என்று கேட்டேன்.

"முதலில் உள்ளே போய் உட்காருவோம்" என்றுள் அவள்.

"போய் உட்காருவோம். ரகு வரவில்லையா?" என்றேன் மறுபடியும்.

"ரகுவா?" என்றுள் அம்மாமி; "அவனுல் இங்கே எப்படி வரமுடியும்? அவன்தான் சர்க்கார் விருந்தாளியாயிருக்கிறுனே!"

"என்ன! என்ன!" எனக்குக் 'குபீர்' ஏன்றது.

"ஏன் பதறிப் போட்டுக் கொள்கிறுய்? புனிதமான சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றிருக்கிறுன். இன்னும் ஆறு மாதங்களுக்குப் பின்பு அவனைப் பார்க்க முடியும்" என்றுள் அம்மாமி.

நான் நாகம்மாவை வெறித்து நோக்கினேன்.

"வாருங்கள், உள்ளே போய் உட்காருவோம். பிறகு அந்தக் கதையைச் சொல்கிறேன் கேட்கலாம்" என்றுள் நாகம்மா.

எல்லோரும் உள்ளே போனேம்.

"அவன் சிறைக்குப் போன கதையைச் சொல்வதில் எனக்கு ஒரு தனிச் சந்தோஷம் உண்டாகிறது" என்று ஆரம்பித்து நாகம்மா சொல்லலானுள்:

* * * *

நாங்கள் இருவரும் இங்கிருந்து புறப்பட்டுப் பெருங் குளத்திற்குப் போனபோது எங்களுக்கு இருந்த சந்தோஷம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. எங்களை அழைத்துப் போக ஸ்டேஷனுக்கு ரகு வந்திருந்தான். அவனைப் பார்த்ததும் எனக்குச் சந்தோஷத்துடன் பெருமையும் கலந்து உண்டாயின. தூய கதருடை உடுத்தி, நிர்மலமான மனசுடன் பிரகாசித்துக் கொண்டிருந்த அவனைப் பார்த்தால் எனக்குப் பெருமை இராதா?

"என்ன நாகு, அத்திம்பேர் வரவில்லையா?" என்று கேட்டான். அவனுடைய குரலிலிருந்து அவன் உங்களை எதிர் பார்த்துக் கொண்டிருந்து ஏமாற்றமடைந்தான் என்பது நன்கு தெரிந்தது.

"இல்லை, ரகு. அவருக்கு 'லீவ்' கிடைக்கவில்லை. கூடிய சீக்கிரம் இங்கு வருவார்" என்று அம்மா சொன்னுள்.

நாங்கள் மூவரும் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றோம். வீடு பெரிய வீடு. மேலும், எங்களுக்கே! அதில் ஏகபோக உரிமை இருந்தது; கூட ஒருவரும் குடியிருந்து எங்களுக்குச் சிரமத்தைக்

கொடுக்கவில்லை, ஊர் பெரிய ஊர் என்பதோடு கூட, நிறையச் சௌகரியங்கள் உள்ளது. எனவே, எங்களுக்காகச் சகல சந்தோஷங்களும் காத்திருந்தன.

ஆனால் எனக்கு இந்தச் சந்தோஷம் வெகு நாட்கள் நீடித்திருக்கவில்லை. என் தம்பி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை செல்ல விரும்பியதுதான் இதற்குக் காரணம். "ரகு ஒரு புனிதமான காரியத்தை மேற்கொள்ளுகிறான். ஜன்ம பூமியின் விடுதலைக்காகச் சத்தியப் போர் தொடுக்கப் போகிறான். இச்சமயத்தில் நாம் அவனைச் சந்தோஷமாக அனுப்புவது போக, இப்படி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது" என்று என்னை எவ்வளவோ தேற்றிக் கொண்டேன். இருந்தும் என் மனசிலே வருத்தம் உண்டாகத்தான் செய்தது.

"என்ன சொல்கிறாய், அம்மா?" என்று ரகு கேட்டான்.

"இது என்ன அசட்டுத்தனமான கேள்வி?" என்றாள் அம்மா; "தேச விடுதலைக்காக நடக்கும் அஹிம்சைப் போரில் பங்கெடுத்துக் கொள்ளுவதற்கு அம்மாவைக் கேட்கவேணுமா?"

"இருந்தாலும் உன் ஆசி வேண்டாமா?"

"என் ஆசி உனக்குப் பரிபூர்ணமாக உண்டு. நீ நிம்மதியாகப் போரில் ஈடுபடலாம்" என்றாள் அம்மா.

"நீ எப்போது சத்தியாக்கிரகம் செய்யப் போகிறாய்?" என்று கேட்டேன்.

"இம்மாதம் பதின்மூன்றும் தேதி" என்று பதில் வந்தது; அதாவது, அவன் சிறை புகுவதற்கு இன்னும் ஐந்தே ஐந்து தினங்கள் இருக்கின்றன.

அந்த ஐந்து நாட்களையும் பல்லைக் கடித்துக் கொண்டு கழித்தேன். 'இன்றே ரகு மறியல் செய்ய மாட்டானா?' என்று ஒருபுறம் தோன்றியது. மறுபுறம், 'எப்படியாகிலும் ரகு சிறை செல்லாதிருந்தால் சரி' என்ற எண்ணம் தோன்றியது.

அப்படியும் இப்படியுமாகப் பதின்மூன்றும் தேதி கடைசியில் வந்தேவிட்டது. ரகு முன்னதாகவே தன் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டான். ரகு புறப்பட்டபோது நாங்களும் உடன் சென்றோம்.

[இவ்வாறு சொல்லி நாகம்மா 'சட்'டென்று நிறுத்தினாள். "சொல், நாகு! மேலே சொல். ஏன் நிறுத்திவிட்டாய்?" என்றேன். நாகம்மா அம்மாமியின் பக்கம் கையைக் காண்பித்தாள். அங்கே அம்மாமி விசித்து விசித்து அழுதுகொண்டிருந்தாள். 'என்ன இருந்தாலும் புத்திர்வாஞ்சை இல்லாதிருக்குமா?' என்று எண்ணினேன். சிறிது நேரம் கழித்து நாகம்மா சொல்லலானாள்:]

நாங்கள் மூவரும் போனபோது மாலை சுமார் ஐந்து அல்லது ஐந்தரை இருக்கும். வானம் மப்பும் மந்தாரமுமாயிருந்தது. ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் ஆவேசம் வந்துவிட்டதோ என்று நினைக்கும்படி இருந்தது.

'வந்தே மாதரம்!' என்று அனைவரும் ஏக காலத்தில் கூச்சலிட்டார்கள். ரகு எங்களிடமிருந்து பிரிந்து மேடைமீது ஏறினான். மாலைகள் 'குபு குபு' வென்று அவன் கழுத்தில் ஏறி அவன் உருவத்தையே மறைத்தன. மறுபடியும் வந்தே மாதர கோஷம் வானைப் பிளந்தது.

அப்போது இருந்தாற்போலிருந்து 'போலீஸ்' 'போலீஸ்' என்று கூக்குரல் உண்டாயிற்று. நான் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தேன். நிஜமாகவே போலீஸ் சேவகர்கள் பத்துப் பதினைந்து பேர் ஓர் இன்ஸ்பெக்டரின் தலைமையின்கீழ்க் கையில் குண்டாந் தடியுடன் வந்து கொண்டிருந்தார்கள். அடுத்த கணம் கூடியிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்களில் முக்கால் வாசிப் பேர் சிட்டாய்ப் பறந்துவிட்டார்கள். நாங்கள் தூரத்தில் நின்று கொண்டிருந்தோம். 'என்ன நடக்கப் போகிறதோ?' என்ற திகிலுடன் நான் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தேன். போலீஸ் இன்ஸ்பெக்டர் 'விர்'ரென்று மேடைமீது ஏறினார். சிறிது நேரம் ரகுவிற்கும் அவருக்கும் பேச்சு நடந்தது. ரகு தலையசைப்பது தெரிந்தது. பிறகு இன்ஸ்பெக்டர் ஒதுங்கி ஒரு புறமாக நின்றுகொண்டு விட்டார். கீழே குழுமியிருந்த ஜனங்களை நோக்கி ரகு ஏதோ சொல்ல எத்தனித்தான். உடனே ஒரு போலீஸ் ஜவான் மேடைமீது ஏறி ரகுவிடம் ஏதோ சொல்வது தெரிந்தது. ரகு மறுபடியும் தலையசைத்தான். இன்ஸ்பெக்டர் ஒதுங்கி நின்றதுபோல் இந்தப் போலீஸ் சேவகன் ஒதுங்கி நிற்கவில்லை. அதற்குப் பதிலாக அவன் மறுபடியும் அதிகார தோரணையில் ஏதோ உத்தரவிட்டான். ரகு அதை மறுத்துப் பேசுவது போல் தோன்றிற்று. அடுத்த கணம் அந்தப் போலீஸ்காரன் தன் தடியைக் கையில் தூக்கினான். நான் நடுநடுங்கிப் போனேன்.

மூன்றும் தடவையாகத் தடியைக் காண்பித்துக்கொண்டு போலீஸ் சேவகன் அதட்டினான். இந்தத் தடவை ரகு அதை மறுத்துக் கூறவில்லை. அதற்குப் பதிலாகக் கைகளைக் குவித்துக் கொண்டு, "வந்தே மாதரம்!" என்று கோஷித்தான். மிஞ்சி நின்ற ஜனக்கூட்டத்திலிருந்து அந்த வானைப் பிளக்கும் கோஷம் தொடர்ந்தது.

அடுத்த கணம் அந்தப் போலீஸ்காரன் தன் தடியைச் சுழற்றிக்கொண்டு ஓங்கினான். அவ்வளவுதான் என் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டன. கால்கள் தடுமாறின. 'ஐயோ!' என்று அலறி அம்மாவைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். அந்தத் தடி இறங்கினால் ரகுவை நாங்கள் மறுபடி உயிருடன் பார்க்க மாட்டோம் என்றே தோன்றிற்று. இன்னும் தடி கீழே இறங்க அரை விநாடி இருக்கிறது என்னும்போது 'குபீர்' என்று அந்தத் தடிக்கும் ரகுவிற்கும் இடையே யாரோ தலையை நீட்டினார்கள். உடனே கண் மூடிக் கண் திறப்பதற்குள் அந்தத் தடி கீழே இறங்கிற்று; அடுத்த கணம் 'ஐயோ!' என்ற பரிதாபமான கூக்குரல் ஆகாயத்தைப் பிளந்துகொண்டு ஒலித்தது. 'திடு திடு'

வென்று எல்லாரும் மேடைமீது ஏறினர்கள். மேடையைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டது. நாங்களும் ஓடிச் சென்றோம். மேடையில் ஒரே ரத்தப் பிரவாகமாய் இருந்தது. ஒரே அடி அவனுடைய உயிரைத் தீர்த்து விட்டதென்பதை அறிந்தேன். ரகுவை அங்கே காணவில்லை. நாங்கள் அங்கே போவதற்கு முன்பே அவனுக்கு விலங்கு மாட்டி அழைத்துக்கொண்டு போய் விட்டார்கள். மறுநாளே அவனை விசாரித்துத் தீர்ப்புக் கூறினர்கள். ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை அவனுக்குக் கிடைத்தது.

* * * *

இவ்வாறு சொல்லி நாகம்மா தன் கதையை முடித்தாள்.

"அது சரி, நாகம்மா! எனக்குத்தான் மூளையென்பது லவலேசமும் கிடையாதென்று உனக்குத் தெரியுமே! எனக்குப் புதிர் போடாமல் விஷயத்தைச் சொல். ரகுவிற்கும் போலீஸின் தடிக்கும் இடையே தலையை நீட்டியவர் யார்?" என்று நடுங்கும் குரலில் கேட்டேன்.

"இன்ஸ்பெக்டர் சீதாபதி" என்றாள் நாகம்மா.

"ஆகா!" என்று என்னை அறியாமலேயே ஒரு கூச்சல் போட்டேன். என் இருதயம் திடீரென்று ஸ்தம்பித்துப்போயிற்று. என் தேகத்தில் இருந்த ரோமங்கள் அனைத்தும் குத்திட்டு நின்றன.

"ராஜ்யஶ்ரீ"

இருண்ட பாதை 51

இரவு மணி ஒன்பது இருக்கும். கிருஷ்ணபக்ஷமாகையால் எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. தெருக்களில் ஜன நடமாட்டமே இல்லை. நான் ஆற்றின் பாலத்தின்மேல் நின்று பரந்த ஆகாய வெளியைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

சுமார் பதினைந்து நிமிஷ நேரம் அப்படி நின்றுகொண்டிருந்திருப்பேன். யாரோ முதுகில் தட்டினாற்போல் இருந்தது. திடுக்கிட்டுத் திரும்பினேன். அங்கே ஓர் உருவம் நின்றுகொண்டிருந்தது. எங்கும் இருட்டாக இருக்க அவ்வுருவத்தைச் சுற்றி மாத்திரம் பிரகாசமான வெளிச்சம் காணப்பட்டது. நான் பயமேலீட்டினால் வாயடைத்து நின்றேன். அவ்வுருவம், "என்னுடன் வா" என்று அழைத்தது. அதன் குரல் அவ்வளவு கடுமையானதாக இல்லாவிட்டாலும் அதன் சொற்படி நடக்காவிட்டால் என்ன ஆகுமோ என்று என் மனத்தில் ஒரு பயம் ஏற்படவே, நான் பேசாமல் அவ்வுருவத்துடன் சென்றேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் நாங்கள் நீண்டதொரு சாலையின் வழியாக நடக்க ஆரம்பித்தோம். சாலை முழுவதும் கல்லும் முள்ளுமாக இருந்தது. நடக்கவே முடியவில்லை. "இது என்ன பாதை? இப்படிக் கல்லும் முள்ளுமாக இருக்கிறதே! ஊஹூம்! என்னால் இதில் நடக்க முடியாது. நான் திரும்பிப் போகிறேன்" என்றேன் நான்.

அவ்வுருவம் என்னைத் திரும்பிப் போக வொட்டாமல் தடுத்து, "இதுதான் வாழ்க்கை என்னும் பாதை. இதில் எல்லோரும் நடந்துதான் ஆகவேண்டும். ஆனால் என்னுடன் வந்தால் கல் முள் இல்லாத வழியாக உன்னைக் கூட்டிக்கொண்டு போகிறேன்" என்றது.

அதனுடன் செல்வதைத் தவிர வேறு வழியிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அதனுடன் வரமாட்டேன் என்று சொன்னால் அது என்னை என்ன செய்யுமோ என்ற பயம் வேறு. ஆகையால், "சரி, வருகிறேன்" என்று கூறினேன்.

அவ்வுருவத்தினின்றும் வெளிப்பட்ட வெளிச்சத்தின் உதவியால் அதன் பின்னாலேயே நடந்து சென்றேன்.

"இவ்வளவு இருட்டான பாதையில் நடந்து எனக்குப் பழக்கம் இல்லையே; இருட்டைக் கண்டாலே பயமாக இருக்கிறதே!" என்றேன் நான்.

"இது அஞ்ஞானம் என்னும் இருள். என் பின்னாலேயே வந்தால் உன்னைக் கூடிய சீக்கிரத்தில் இருட்டில்லாத நல்ல வெளிச்சமான இடத்தில் கொண்டு போய் விடுகிறேன்" என்று கூறியது அவ்வுருவம்.

நடந்துகொண்டே நான், "எங்கள் ஊர்த் தெருக்களில் மருந்துக்குக்கூட ஒரு முள் அகப்படாதே. ஏன் இந்தப் பாதை இவ்வளவு கல்லும் முள்ளும் நிறைந்ததாக இருக்கிறது?" என்று கேட்டேன்.

"இந்தப் பாதை முழுவதும் இப்படியே கல்லும் முள்ளுமாக இருக்குமென்று நீ நினைப்பது தவறு. இந்தப் பாதை ஆரம்பமாகும் இடத்தில் கல் முள்ளே இல்லை. அதோ திரும்பிப் பார்" என்றது அவ்வுருவம்.

நான் திரும்பிப் பார்த்தேன். பாதையின் ஆரம்பத்திலெல்லாம் முள், கல் ஒன்றுமே இல்லை. வழவழ வென்று கண்ணாடி போல் இருந்தது சாலை.

"ஏன் இங்கே மாத்திரம் இப்படிக் கல்லும் முள்ளும் இருக்கின்றன?" என்று கேட்டேன் நான்.

"அதோ அங்கே தெரிகிறதே; என்ன தெரியுமா அது?" என்று என்னைத் திருப்பிக் கேட்டது அவ்வுருவம்.

"அது ஒரு குட்டைபோல் காணப்படுகிறது" என்றேன் நான். பாதையின் ஆரம்பத்தில் ஒரு குட்டை இருப்பது அவ்விடத்திலிருந்து நன்றாகத் தெரிந்தது.

"ஆமாம். அது ஒரு குட்டைதான். அதன் நடுவில் நீர் ஊற்று ஒன்று தெரிகிறதே; அதிலிருந்து அண்டு ஏன்னும் பால் சுரக்கிறது. அதில் சிறிய உருவங்கள் பல நீந்திக்கொண்டிருப்பது தெரிகிறதல்லவா? அவைதாம் வெள்ளை மனத்தையுடைய குழந்தைகள்" என்றது அவ்வுருவம்.

அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது, ஏன் அந்தப் பாதையின் ஆரம்பத்தில் கல் முள் ஒன்றுமே இல்லை யென்று. பிறகு சிறிது நேரம்வரை நாங்கள் இருவரும் பேசாமலே மேலே நடந்தோம்.

திடீரென்று நான், "ஆமாம். எனை எங்கே கூட்டிக் கொண்டு போகிறீர்கள்? நான் உங்களுடன் வந்துகொண்டிருந்தால் வீட்டில் எல்லோரும் என்னைத் தேடுவார்களே" என்றேன்.

வெகு தூரத்தில், அந்தப் பாதையின் முடிவில், இருந்த ஒருமலையின் உச்சியை அவ்வுருவம் எனக்குக் காண்பித்தது. அம்மலையின் உச்சியில் ஒரு விளக்கு பிரகாசமாக எரிவது தெரிந்தது.

"அதோ அந்த மலையின் உச்சிக்குத்தான் இப்பொழுது போகிறோம்" என்றது அவ்வுருவம்.

அதைக் கேட்ட நான், "வேண்டாம், வேண்டாம். நான் திரும்பிப் போகிறேன். என்னால் அவ்வளவு தூரம் நடக்க முடியாது. அத்துடன் என் வீட்டிலுள்ளவர்களின் அநுமதியில்லாமல் அவ்வளவு தூரம் வரமாட்டேன்" என்றேன்.

அவ்வுருவம் முதலில் சிரித்தது. பிறகு, "அம்மலைக்குத்தான் சந்தோஷம் என்று பெயர். வாழ்க்கைப் பாதையில் நடக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அம்மலையின் உச்சியை அடையவேண்டுமென்பதுதான் நோக்கம். உனக்குச் சந்தோஷத்தின் சிகரத்தை அடைய வேண்டுமென்ற விருப்பம் இல்லையா?" என்று கேட்டது.

சந்தோஷத்தின் சிகரம்! யார் வேண்டாமென்பார்கள்? "கட்டாயம் நான் தங்களுடன் வருகிறேன். அதற்காக வழியில் எவ்வளவு கஷ்டப்பட வேண்டுமென்றாலும் தயார்" என்று சிறிது ஊக்கத்துடனேயே கூறினேன்.

"அப்படி வா. அதுதான் மனிதனுக்கு அழகு" என்றது அவ்வுருவம்.

ஒரு மைல் தூரம் நடந்திருப்போம். அங்கே சாலையின் ஓரத்தில் ஒரு கல் நடப்பட்டிருந்தது. அதன் மேல் 25 என்று எழுதப்பட்டிருந்தது. "இது என்ன? நாம் அதற்குள்ளாக 25 மைல் தூரம் நடந்துவிட்டோமா?" என்று கேட்டேன் நான்.

"ஆமாம். வாழ்க்கைப் பாதையில் நீ நடக்க ஆரம்பித்து 25 வருஷங்களாகி விட்டன. இந்தக் கல்லிற்கு வருஷக் கல் என்று பெயர்" என்றது அவ்வுருவம்.

எனக்கு எல்லாம் அதிசயமாக இருந்தது. "இப்படியும் இருக்குமா?" என்று ஆச்சரியப்பட்டவாறே அவ்வுருவத்தின் பின்னல் நடந்து சென்றேன்.

நாங்கள் போகப் போக இருட்டு அதிகமாகிக் கொண்டே வந்தது. "ஏன், இப்படி இருட்டு அதிகமாகிக் கொண்டே வருகிறது? எனக்குப் பயமாக இருக்கிறதே!" என்றேன் நான்.

"ஆமாம், இன்னும் போகப் போக இருட்டாகத்தான் இருக்கும். ஆனால் என்னுடன் வந்தால் உனக்குப் பயமே இல்லை. வா" என்றது அவ்வுருவம்.

அது என்னவோ உண்மை. அதனருகில் மாத்திரம் நல்ல வெளிச்சம் இருந்தது. அதன் உதவி கொண்டு நான் நடப்பதற்குச் சௌகரியமாக இருந்தது. அவ்வுருவம் என் அருகிலேயே இருந்ததால் எனக்கு அவ்வளவாகப் பயமும் இல்லை.

திடீரென்று நாங்கள் கடந்து கொண்டிருந்த பாதையின் இரு புறத்திலும் பெரிய பள்ளத்தாக்குகள் காணப்பட்டன. மேலேயிருந்து பார்ப்பதற்குப் பயமாக இருந்தது. "ஜாக்கிரதை! என் பின்னாலேயே வா. தவறிப்போய்ப் பக்கத்தில் காலை வைத்தாயோ, ஒழிந்தாய். பிறகு உன் எலும்பு நொறுங்கிவிடும்" என்றது அவ்வுருவம்.

எனக்கு மயிர்க்கூச்சல் எடுத்தது. ஒவ்வோர் அடியையும் கவனித்து வைத்து நடக்கலானேன்.

"இவைதாம் துக்கம் என்னும் பள்ளத்தாக்குகள். வாழ்க்கைப் பாதையில் நேர்மையாக நடக்காதவர்கள் இவற்றில் விழவேண்டியதுதான்" என்று கூறிற்று அவ்வுருவம்.

மேலும் ஜாக்கிரதையாக நடந்து சென்றேன். கண்ணுக்குப் பசுமையான பிரதேசங்கள் சில காணப்பட்டன. வெகு தூரம் நடந்துவிட்டபடியால் கொஞ்சம் அப்புகும் பிரதேசத்தில் இளைப்பாறிச் செல்ல என் மனம் விழைந்தது.

என் விருப்பத்தைக் கேட்ட அவ்வுருவம், "கூடாது, கூடாது. அது பார்ப்பதற்குப் பசுமையாக இருக்கிறதே தவிர, அதில் காலை வைத்தாயோ அப்படியே உள்ளே உள்ளே இழுத்துவிடும். அவ்வளவும் வெளிப் பூச்சு. உன் நன்மையைக் கருதிச் சொல்லுகிறேன். அங்கே போகாதே" என்றது.

சரியென்று மேலே நடந்தேன். அதன் சொற்படி நடந்தால் பயமே இல்லை யென்று எனக்குத் தீவிரமான எண்ணம் இதற்குள் ளாகவே ஏற்பட்டுவிட்டது.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஓர் அடர்ந்த காட்டிற்குள் நாங்கள் சென்று கொண்டிருந்தோம். காட்டு மிருகங்களின் உருமல் வயிற்றைக் கலக்கியது. "ஐயோ! என்னை எங்கே யெல்லாமோ இழுத்தடிக்கிறீர்களே. இந்தக் காட்டிற்குள் நுழை

வதற்கே எனக்குப் பயமாக இருக்கிறதே" என்று அழாக் குறையாகச் சொன்னேன் நான்.

அவ்வருவம் முதலில் சிரித்தது. பிறகு, "இந்தக் காட்டிற்குள் நுழையாமல் யாராலும் இருக்கமுடியாது. ஆனால் இந்தக் காட்டைத் தாண்டி வெளியே வருபவர்கள் மிகவும் குறைவு. இக் காட்டில் பொருமை, அசூயை முதலிய காட்டு மிருகங்கள்தாம் வசிக்கின்றன. நீ கேட்டது அவைகளின் உருமல்தான்" என்றது.

'தலைவிதியே' என்று மேலும் நடந்தேன். சிறிது நேரத்தில் காட்டைத் தாண்டிவிட்டோம். 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டேன்.

மேலும் நடந்து சென்றோம். கொஞ்சம் கொஞ்சமாகப் பாதையில் வெளிச்சம் வர ஆரம்பித்தது. முள்ளும் கல்லும் குறைந்துகொண்டே வந்தன. ஆகையால் நடப்பது அவ்வளவு கஷ்டமாக இல்லை.

கடைசியில் ஒருவாருக மலையின் அடிவாரத்தை அடைந்தோம். "போதும், போதும். மலையடிவாரத்திலேயே தங்கி விடலாம். மிகவும் களைப்பாக இருக்கிறது" என்றேன் நான், வழி நடந்த சிரமத்தால்.

அவ்வருவம் முதலில் சிரித்துவிட்டுப் பிறகு, "சுத்தப் பைத்தியக்காரனாக இருக்கிறாயே! இருண்ட வாழ்க்கைப் பாதையில் இவ்வளவு கஷ்ட நிஷ்டூரங்களையும் ஒருவாருகச் சமாளித்துக் கொண்டு வந்துவிட்டுச் சந்தோஷமலையின் அடிவாரத்திலேயே தங்கிவிடலாம் என்கிறாயே! அம்மலையின் உச்சியை அடைய வேண்டுமென்று உனக்கு ஆசையில்லையா?" என்று கேட்டது.

'அதுவும் சரிதான்' என்று எனக்குப் பட்டது; "சரி, மேலே ஏறுவோம்" என்றேன்.

சிறிது நேரத்தில் மலையின் உச்சியை அடைந்து விட்டோம். அங்கே ஒரே வெளிச்சமாக இருந்தது. நல்ல ஆசனங்கள் பல இடப்பட்டிருந்தன. இருவரும் உட்கார்ந்தோம். "பார் இப்பொழுது! எவ்வளவு சொகுசாக இருக்கிறது! இவ்வளவு நாழிகையாக வழிநடந்த சிரமம் எல்லாம் ஒரு நொடியில் பறந்து விடும். என்ன அழகாகக் காற்று அடிக்கிறது! இந்தக் காற்றிற்குத் தான் இன்பம் என்று பெயர். களைப்புத் தீரத் தேவாமிர்தமாகிய இந்த இளநீரைச் சாப்பிடு" என்று கூறி இளநீரைக் கொடுத்தது.

நான் அதைப் பருகினேன். சந்தோஷத்தின் உச்சியை அப்பொழுது அடைந்திருந்தேன்.

"இவ்வளவு தூரம் என்மேல் பிரியம் வைத்து எனக்கு வழி காட்டி வந்த பெரியாரின் பெயரை இதுவரை கேட்டறிந்து கொள்ளாதது அபசாரம்; மன்னிக்க வேண்டுகின்றேன்" என்று தாழ்மையுடன் கூறினேன் நான் அவ்வருவத்தைப் பார்த்து.

"என் பெயர் **விவேகம்**" என்று சொல்லி அவ்வுருவம் மறைந்தது.

நான் திடுக்கிட்டுத் திரும்பினேன். எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. நான் இன்னும் பாலத்தின்மேல் நின்றுகொண்டு ஆகாய வெளியைப் பார்த்த வண்ணமாய்த்தான் இருந்தேன்.

ஆர். எஸ். ருக்மிணி, பி. ஏ.

பெண் ஜன்மம் 52

ஒரு காலத்திலே ஆண்களிடத்திலே எனக்கிருந்த கோபம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிமுடியாது. அவர்களையெல்லாம் சுட்டுத் தள்ளி விடலாமா என்றுகூட எத்தனையோ தடவைகளில் நினைத் திருக்கிறேன். அப்படிப்பட்ட மனப்போக்கிலிருந்து என்னை விடுதலை செய்து காப்பாற்றி வருகிறது என் தத்துவஞானந்தான். சில நாட்களாக, ஆண்களுடைய அறிவீனத்தையும் பலவீனத்தை யும் பார்க்கிறபோது, உள்ளுக்குள்ளே பரிகாசமாகச் சிரித்துக் கொள்ளுகிறேன்.

ஐந்தாவது பாரத்திலே படித்துக்கொண்டிருந்தபோது நான் அறிவுடையவளானேன். அதற்குச் சில மாதங்களுக்கு முந்தியே, என் தம்பியும் தங்கையும் எனக்கு மெய்காப்பாளர்களாக ஏற்பட் டார்கள். நான் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போதும் வீட்டுக்குத் திரும்பி வரும்போதும் கூடவே வரத்தொடங்கினார்கள். என் தம்பி மூன்றாவது பாரத்திலே படித்துக்கொண்டிருந்தான். தங்கை ஐந்தாவது வகுப்பிலே படித்துக்கொண்டிருந்தாள். இருவரும் நான் படித்த அதே பள்ளிக்கூடத்திலேதான் படித்தார்கள். அந்தக் காலத்திலே என் அப்பா வேலை பார்த்த ஊரில் பெண் களுக்கென்று தனிப்பள்ளிக்கூடம் இல்லை. அதனாலே - என் தலை விதி - நான் ஆண்கள் படிக்கும் பள்ளிக்கூடத்திலேதான் படிக்கும் படி நேர்ந்தது.

வயசு வருமட்டும் ஆண்களோடு ஒரே பள்ளிக்கூடத்தில் படிப்பது அவ்வளவு கஷ்டமாகத் தோன்றவில்லை. அதன் சிரமங் கள் வயசு வந்தபிறகுதான் நன்றாகத் தெரிந்தன. அதோடு, பெண் உலகத்திற்கும் ஆண் உலகத்திற்கும் உள்ள வித்தியாசங்களும் கொஞ்சம் கொஞ்சமாகப் புலப்பட்டனவாயின.

நான் பத்து வயசுப் பெண்ணாய் இருந்தபோது நிகழ்ந்த சம்பவம் ஒன்று என்றுமே என்னால் மறக்கமுடியாதது. ஒரு நாள் நான் என் பெரியப்பாவின் மடியில் உட்கார்ந்து விளையாடினதற் காக என் உடம்பெல்லாம் புண்ணாகும்படி அடித்துவிட்டு, "உலக் கைக் கொழுத்தாட்டமா வயசாச்சு. யார் மடியிலே உக்காரணும், உக்காரப்படாது என்று தெரியல்லை கழுதைக்கு" என்று கத்தி

ளுள் என் தாய். இதற்கப்புறம், என் வீட்டிலே மாமா சிற்றப்பா பெரியப்பா யார் வந்தாலும், மேலே விழுந்து விளையாடுவதும், நெருங்கி நின்று பேசுவதும் வரவர மறைந்துவிட்டன. ஆண்களுக்கு எதைக் கொடுத்தாலும் கைபடாமல் கொடுக்கும் வித்தையைக் கற்றேன். கொடுக்க வேண்டியதை மேஜையிலோ, மூக்காலியிலோ, நாற்காலியிலோ, தரையிலோ ஜாலக்காக வைத்து விடவும் பழகினேன். என் தாயும் பாட்டியும் இந்தப் பாடங்களையெல்லாம் சலிக்காமல் கற்றுக்கொடுத்து வந்தார்கள். கற்றுக் கொடுத்ததோடு நின்றுவிடாமல், சரியானபடி அனுஷ்டானத்திலே கொண்டுவருகிறேனு இல்லையா என்றும் கவனித்தார்கள்.

* * * * *

படத்திலே எழுதிப் பார்க்கத் தகுந்த அழகு எனக்கு இல்லை. ஏதோ புது நிறமாக இருப்பேன். உற்றுப் பார்க்கிறவர்களுக்குத் தான் இரட்டை நாடி என்று தெரியும். நல்ல வளர்த்தி என்று சொல்லும்படி இருந்தது என் உயரம். கூந்தல் தரையைப் பெருக்காவிட்டாலும் சுருண்டு தாழ்ந்து இருந்தது. அன்ன நடை நடக்கத் தெரியாது; என்றாலும் என் நடை எனக்கு அழகாகத்தான் இருந்தது. என்னோடு படித்த என் தோழிகள் அடிக்கடி என் அழகை மெச்சிப் பேசுவார்கள். அப்படிப் பேசும்படி என்னிடத்திலே என்ன அழகைக் கண்டார்களோ? அதுவும் எனக்குத் தெரியாது.

அழகோ அழகில்லையோ, நான் பள்ளிக்கூடத்துக்குப் போகும் போதும் திரும்பி வரும்போதும் குனிந்த தலை நிமிர முடியாது. கால் கட்டை விரலைப் பார்த்துக் கொண்டே நடந்தாலும் பள்ளிக் கூடத்துப் பையன்கள் சும்மா இருப்பார்களா? என் பின்னாலேயே இருந்துகொண்டு, 'இவள் காதிலே விழட்டும்,' 'இவள் சிரிக்கட்டும்' என்று ஏதாவது விகடம் பேசித் தமாஷ் பண்ணுமலே இருக்கமாட்டார்கள். பையன் ஒருவனும் இல்லையே என்று குனிந்த தலை நிமிர்ந்தாலோ, தெருவிலே அங்கங்கே திண்ணைகளில் இருக்கும் ஆண்கள், பாராத அதிசயத்தைப் பார்க்கிறவர்கள் போலத் "துறு துறு" என்று என்னைப் பார்க்கத் தொடங்கி விடுவார்கள். அந்த ஆண்களுக்குத்தான் வெட்கம் இல்லை. நாணம் பெண்மைக்கு அழகல்லவா? அதனாலே திரும்பவும் குனிந்தபடி நடக்க வேண்டியதுதான்.

வழியிலே எந்தக் காரணத்தினாலாவது சிரித்துவிட்டால், அதை என் அம்மாவிடம் சொல்லி அடிவாங்கித் தர ஒற்றர்கள் காத்துக்கொண்டிருப்பார்கள். வகுப்பிலே உபாத்தியாயர்கள் ஏதாவது விகடமாகப் பேசினாலும் நான் மட்டும் சிரிக்கலாகாது. சிரித்தால் அன்றைக்குச் சாயந்தரமே என் அம்மாவின் காதிலே விழுந்துவிடும். என்னைப் பற்றி யார் என்ன சொன்னாலும் என் பெற்றோருக்கு வேதவாக்குத்தான். அவர்கள் என்னை அடிக்கிற அடிகளுக்கும் வைகிற வசவுக்கும் கணக்கே இல்லை. எனக்கும்,

"ஓ! என்ன ஜன்மம் பெண் ஜன்மம்!" என்று சலிப்பு வந்து விடும்.

எனக்கு ஒரு விஷயம் இன்றுவரையிலும் விளங்காத மர்ம மாகவே இருக்கிறது. என் வகுப்பிலே படித்த சில பையன் களைப் பார்க்கவும், அவர்களோடு பேசவும் விளையாடவும் என்னை அறியாமலே என் மனம் முற்படுவதை நான் எத்தனையோ தரம் கவனித்திருக்கிறேன். அப்படிப்பட்ட பையன்களில் ஒருவன் மணியன். அவன் ஸ்மார்த்தன். நான் வைஷ்ணவப் பெண். அவன் நெட்டை. மற்றப் பையன்களைவிட அழகாக இருப்பான். என்னைத் தெரியாமலே என் மனம் அவனிடம் ஓடிவிடும். அவன் என் தம்பியோடு சிநேகம் பண்ணிக்கொண்டு எங்கள் வீட்டிற்கு விளையாட வருவான். மணியன் ஆறுவது பாரத்தில் படிப்பவன்; அவனுக்கு வயசு பதினாறுகிவிட்டது. என் தம்பிக்கோ வயசு பதினைன்றே. மூன்றுவது பாரந்தான் அவன் வகுப்பு. வகுப்பிலும் வயசிலும் இவ்வளவு வித்தியாசமுள்ளவர் எப்படிச் சரிசமான மாக விளையாட முடியும்? மணியன் என்னோடு விளையாடுகிற தற்காகத்தான் வருகிறான் என்று எனக்குத் தெரியும்.

முதலிலே என் பெற்றோர் இதைக் கவனிக்கவில்லை. சில தினங்களுக்குள்ளாக, இந்த விஷயத்தில் கட்டுப்பாடு பலத்து விட்டது. ஆனல் அந்த மணியன் என் தம்பி கண்ணிலே என்ன சொக்குப்பொடி தூவுவானே? நான் அறியேன். என்ன கட்டுப்பாடு செய்தாலும் என் தம்பி அவனை விடமாட்டான். அந்தப் பாவி மணியனலே நான் வீணே பட்ட அடிகளுக்குக் கணக்கே இல்லை.

எனக்கு இஷ்டமான பையன்கள் என்னைப் புகழ்ந்தால் உள்ளம் பூரித்துப் போகும். பெண்களுக்குப் புகழ்ச்சி இயல் பாகவே மிகவும் இஷ்டம். எனக்கோ பாலும் தேனுந்தான். பள்ளிக்கூடத்திலே எந்த உபாத்தியாயராவது என் முதுகைத் தட்டிப் புகழ்ந்தால் உடனே, "என்னைத் தொட வேண்டாம் ஸார்!" என்று சொல்லி வெடுக்கென்று உடல் நெளித்து முகங் கோணுவேன். ஆனலும், ஓர் உபாத்தியாயர் என் முதுகைத் தொட்டால், "தொட்டுமே" என்றிருக்கும் என் உள்ளம். என் பெண்மை உலகத்திலே இப்படி ஆளுக்கு ஆள் வேற்றுமை பாராட்டும் குணங்கள் எப்படித்தான் புகுந்தனவோ?

என் மனம் ஒப்புக்கொள்ளுகிற ஆண்களின் ஸ்பரிசத்திலே ஏதோ ஒரு வகையான இன்ப உணர்ச்சி என் உடம்பெங்கும் மின் சார அதிர்ச்சிபோலப் பரவும். ஆனல், ஐரோப்பியப் பெண்கள் ஆண்களோடு கைலாகு கொடுத்து அவர்களுடைய உடம்பைத் தொட்டு விளையாடுகிறார்களே; அவர்களுக்கு மட்டும் இப்படிப் பட்ட உணர்ச்சி ஏற்படுவதாகத் தெரியவில்லையே! ஆண் வாடையே படாதபடி என் பெற்றோர்கள் என்னைக் காத்து வந்தார்களே; அதனலேதான் எனக்கு அப்படிப்பட்ட உணர்ச்சி

ஏற்பட்டதோ? பால் வேற்றுமைகளைப் பற்றிய சிந்தனைகள் எழாமலே, ஆண்களோடு உறவாட முடியாதா? வெகு காலமாக அப்படி இருப்பது முடியாத காரியம் என்றுதான் எனக்குத் தோன்றியது.

மணியனுக்கும் எனக்கும் உத்தமமான சிநேகந்தான். நண்பன் என்பதைத் தவிர வேறு விதமாக என் உள்ளம் அவனைப்பற்றி எண்ணவில்லை. நான் ஆறாவது பாரத்தில் 'ஸெலக்ஷன்' பரீக்ஷை எழுதிக் கொண்டிருந்தபோது, பரீக்ஷைக் கூடத்திலே ஒரு பக்கத்தில் இருந்த ஒரு பையனுடைய திருட்டுத்தனத்தைப் பற்றி நானும் மணியனும் நயன பாஷையிலே பேசிக் கொண்டோம். இதை உபாத்தியாயர் ஒருவர் பார்த்துவிட்டார். சாயங்காலம் எனக்கு முந்தியே இந்த நயனபாஷை விகழ்ச்சி என் அம்மாவுக்கு எட்டிவிட்டது. அன்றைக்குத் தைத்த அடிகளை நான் எண்ண மறந்துவிட்டேன்.

ஆறாவது பாரத்து வருஷப் பரீக்ஷை முடிந்தது. என் பெரியப்பா எனக்கு ஒரு வரன் தேடிக்கொண்டு வந்தார். நாள்தோறும் கல்யாணப் பேச்சாகிவிட்டது எங்கள் வீட்டிலே. என்னைக் கேட்க வந்தவர் ஏறக்குறைய என் நண்பன் மணியனைப் போலவே இருந்தார், முக ஜாடை, உயரம் முதலானவைகளிலே. அந்த வரனைப்பற்றி வானளவும் புகழ்ந்தார் என் பெரியப்பா. பள்ளிக்கூட ரீதியாக என்னளவு படிப்பில்லையே என்ற பேச்சு எழுந்தபோது, "சுயமாகப் படித்தவர்; அவருடைய நூலறிவும் பொது அறிவும் பி. ஏ., பட்டம் பெற்றவர்களுக்குக்கூட இல்லை" என்றார் என் பெரியப்பா. அவர் சொன்னது உண்மைதான். என்னைக் கேட்க வந்தவர் சமத்காரமாகப் பேசி யாவரையும் மகிழச் செய்பவர். எந்தக் காரியத்தையும் தீர யோசித்து ஜயகரமாகச் செய்து முடிப்பவர். அவர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வர ஆரம்பித்தார்.

என் பெற்றோர்கள் அன்பு பாராட்டி அவரை உபசரித்தார்கள். அவரோடு நெருங்கிப் பழகவே, என் தகப்பனுருக்குத் தலைகால் தெரியாத சந்தோஷம். ஆனால், என் அம்மா எதையும் நிதானமாகத்தான் தீர்மானம் செய்வாள். என்னை மணக்கப் போகிறவர் என்பதையும் மறந்து, நானும் அவரோடு நெருங்கிப் பழகத் தொடங்கினேன். நாளடைவில் அவர் என்னைத் தனிமையாகச் சந்திப்பதும், என்னோடு வெகு நேரம் பேசிக்கொண்டிருப்பதும் சாதாரணமாகிவிட்டன. நான் என் முழு உள்ளத்தையும் அவரிடமே செலுத்திவிட்டேன்.

நான் செய்தது பெரிய தவறு என்று வெகு சீக்கிரம் எனக்குத் தெரிந்துவிட்டது. 'ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வில்லை' என்பது எல்லா ஆண்களுக்கும் உள்ள லக்ஷணமா? அல்லது என்னை மணக்கும் பேர்வழிக்கு மட்டுந்தான் லக்ஷணமா? அவருக்கு விவாகம் என்பது விளையாட்டாக இருந்ததோ? அல்லது

எல்லா ஆண்களுக்கும் அப்படித்தானே இருக்கிறதோ? காதல் என்ற மதுவெறியிலே இருந்த என்னிடம் அவர் ஒரு நாள் தமது ஆறப்பொறுத்த குணங்களை வெளியிடலானார். இதைப் பார்த்த வுடனே என் நெஞ்சு திடுக்கிடத்தது. அதற்குமுன் ஒருபோதும் தோன்றாத அச்சம் எனத்துள்ளே குடிகொண்டதும் இருதயத்தின் துடிப்புப் பறையோசைபோல் கேட்டது. அவருடைய ஆத்திரத்திற்கு உடன்படலாகாது என்று நெடுப்பொழுதிலே என் உள்ளத்திலே உறுதி செய்துவிட்டேன். அவருடைய கைகளிருந்து நிமிர்ந்து விடுதலே அடைந்தேன். "அம்மா கூப்படறு!" என்று சொல்லிக்கொண்டே மாடியின் படிக்கட்டு வழியாக ஓரே பாய்ச்சலாக என் அறைக்கு வந்தேன். கட்டிலிலே குப்புற விழுந்து தேம்பித் தேம்பி அழுதானேன். ஏனக்கே விளங்கவில்லை என் அழுகைக்குக் காரணம்.

ஆத்திரக் குணத்தினாலே அவர் என் மதிப்பிலிருந்து ஒரு படி தாழ்ந்துவிட்டார். இவர் ஒருபொழுதும் அவரைத் தனிமையிலே சந்திக்கலாகாது என்று நிர்மானமும் செய்துவிட்டேன். என்றும் அவரிடத்திலே கொண்டிருந்த அன்பு சற்றும் தணியவில்லை.

இந்தச் சம்பவம் நடந்த மறு தினமே என் அப்பா விவாகத்துக்குச் சுபமுகூர்த்தம் குறித்துவிட்டார்.

வயசு வந்த பிறகு, தகுந்த வயசிலே விவாகம் செய்து கொடுக்கும் புது வழக்கம் நல்லதுதான். ஆனால், 'காதல் புனிதமானது, விவாகம் தெய்வீகமானது' என்று கருதும் மனப்பான்மையும், தங்களை அடக்கி ஆளும் ஆற்றலும் போதுமான அளவில் இல்லையே, நமது சமூகத்திலே உள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும்! இப்படிப்பட்ட நிலைமையிலே இருக்கிறவர்கள் காதலியைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளத் தகுந்தவர்கள் அல்லர்; கல்யாணம் பண்ணிக் கொண்டவளைத்தான் காதலிக்க வேண்டும். புருஷர்களிடத்திலும் பெண்களிடத்திலும், காதல் துறைக்குத் தேவையான குணங்கள் அமைகிறமட்டும், பெற்றோர்களே பெண்களுக்கு வரன் தேடிக் கல்யாணம் பண்ணி வைப்பதுதான் உசிதம் என்று தோன்றுகிறது. என்னை மணக்க வந்தவரைப் போலவே மற்ற ஆண்களும் எந்தக் காரியத்திலும், விசேஷமாக விவாக விஷயத்திலே, ஆத்திரம் உள்ளவர்களாக இருப்பார்களானால், எந்தப் பெண்தான் ஒரு புருஷனைத் தனிமையாகக் காதலுக்கென்று சந்திக்கத் துணிவாள்?

மூன்றாம் நாள் அவரிடமிருந்து நான் ஓடி வந்ததும், அதன் பிறகு நான் அவரைத் தனிமையாகச் சந்திக்க இடங்கொடாமல் இருப்பதும் அவருக்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை என்று எனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. என் புது ஒழுக்கத்தை அவரால் சகிக்க முடியவில்லை. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது. திடீரென்று வரதக்ஷிணைப் பேச்சுகள் கிளம்பிவிட்டன.

என் பெரியம்மா மணக்க வந்தவர் சார்பாகவே பேசினர். வரதக்ஷிணைப் பேச்சுக் கிளம்பவே, என் தகப்பனார் ஒன்றுமே கொடுக்க முடியாதென்றும், பெண்ணைத்தான் கொடுக்க முடியும் என்றும் பிடிவாதமாக இருந்தார். இதன் பிறகு எத்தனையோ மனஸ்தாபங்கள் எழும்பின.

என்னை மணக்க வந்தவருக்கு என்னிடத்திலே உண்மையான காதல் உண்டு என்பது எனக்கு நன்றாகத் தெரியும். என்னைப் பற்றியும் அவருக்கு அதே அபிப்பிராயந்தான். முதலிலே ஒப்புக் கொண்டு வரதக்ஷிணையையும் கொடுக்க முடியாதென்று என் அப்பா முரண்டவே, அவர் எப்படியாவது தாம் கேட்டதை அடையவேண்டும் என்று நினைத்தார். ஒரு நாள் நான் எக்கல் சிக்கலாக வீட்டில் ஒருவரும் இல்லாதபோது அவரிடம் அகப் பட்டுக் கொண்டேன். அப்பொழுது அவர் இல்லற வாழ்க்கையை வசதியாக ஆரம்பிக்கிறதற்குத் தாம் கேட்ட வரதக்ஷிணை உதவியாக இருக்கும் என்றும், கிடைப்பதெல்லாம் என் பேரிலேயே இருக்கும் என்றும் பலவிதமாகச் சொல்லி அவருடைய செய்கையை விளக்கினர். பின்பு, அவருடைய மனோபீஷ்டப்படி வரதக்ஷிணை கிடைக்க வேண்டுமானால், நான் அதற்கு உதவி செய்ய வேண்டு மென்றார். என்னாலே ஆக வேண்டியது என்ன என்று தெளிவாகச் சொல்லும்படி கேட்டபோது, "அன்றைக்கு நான் எதை விரும்பி னேனோ அதற்கு உடன்பட்டால் போதும். அதற்குப் பிறகு உன் தகப்பனார் நான் கேட்டதைத் தரத்தானே வேண்டும்?" என்றார்.

எனக்குக் கோபம் வந்துவிட்டது. உடல் கிடுகிடுவென்று நடுங்க, "கல்யாணம்! இதுதானா கல்யாணம்? கன்னிகாதானம், ருதுசாந்தி முதலியவை மந்திரகோஷத்தோடு தெய்வ சந்நிதா னத்திலே நிகழவேண்டிய புனிதமான காரியங்களல்லவா? போங்கள், உங்களுக்கு வேலையில்லாவிட்டால்!" என்று சீறிக் கொண்டே வீட்டு வாசல் கதவைத் திறந்துகொண்டு வெளியேறிப் பக்கத்து வீட்டிலே போய் இருந்தேன், என் பெற்றோர் வருந்தினையும்.

அன்றுமுதல் அவர் எனக்கு நஞ்சாகவே இருந்தார். அவருடைய கீழான மனநிலை என் முன்னே தலைவிரித்து ஆடியது. இப்படிப்பட்ட மனநிலை உள்ளவரோடு வாழ்க்கை முழுவதும் எப்படி இல்லறம் நடத்துவது என்ற கேள்வி ஓயாமல் எனக் குள்ளே எழுந்துகொண்டே இருந்தது. அதே சமயத்தில், 'என்னைத் தொட இந்தப் பாவிக்கு இடம் கொடுத்தேனே!' என்ற எண்ணம், தற்கொலை செய்துகொள்ளும் உபாயங்களைச் சிந்திக்கவும் தூண்டியது. ஆத்மஹத்தி பாவம் என்று எண்ணும் நேரமும் நெருப்பிலே விழுந்த புழுப்போலத் துடிக்கலானேன்.

எப்படியோ கல்யாணம் தடைப்பட்டு விட்டது. எங்களுக்கும் பெரியப்பா வீட்டாருக்கும் முகாலோபனங்கூட இல்லாதபடி

பகை மூண்டது. இருதரப்பிலேயும் வீண் பெருமை, வைராக்கியம், அடம் முதலான குணங்கள் கண் தூல் தெரியாமல் ஆடிக் கொண்டிருந்தன. அடம் சாதிக்கும் என் தகப்பனார் பள்ளிக் கூடம் திறந்தவுடனே என்னைக் கலாசாலையிலே சேர்த்துவிட்டார்.

இனிமேல் என்னை யார் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறார்கள்? அப்படியே யாராவது வந்தாலும், ஒரு முறை ஒருவருக்கு விற்ற உள்ளத்தை எப்படி மற்றொருவருக்குக் கொடுக்கமுடியும்? மேலும், உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாதே! எங்கள் வீட்டிலே நடந்த சமாசாரம் உலகமெங்கும் பரவியிருக்குமே. நானும் அந்த மனுஷனும் தனிமையாக உலாவப்போவதை எத்தனையோ பேர் பார்த்திருப்பார்களே? எப்படி நான் வெளியிலே தலைகாட்ட முடியும்? பெண்ணைப் பிறந்ததன் பலன் என்ன? எதற்காகப் பெண்ஜன்மம் எடுத்தேன்? பகவான் எனக்கு மட்டும் இப்படிப்பட்ட ஒரு நிலைமையை ஏன் தரவேணும்? இதற்கெல்லாம் காரணமாக முன் ஜன்மத்திலே என்ன பாவத்தைப் பண்ணினேனோ! என் பெற்றோர்களுடைய செருக்கினாலேதான் இப்படி நேர்ந்ததா? — இப்படிப்பட்ட சிந்தனைகளினால் கண்ணீர் ஆறுகப் பெருக, படிக்கும் நேரங்களிலே எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணும் என் பாழான நெஞ்சம், எண்ணி எண்ணிப் புண்ணாய்த் துடிக்கும்.

இப்படி இரண்டு வருஷங்கள் சென்றன. இந்த இரண்டு வருஷ காலமாக அவரும் வேறு விவாகத்தைப் பற்றிய சிந்தை இல்லாமலே இருந்தார். முடிவிலே வரதக்ஷிணை ஒன்றும் வேண்டாமென்றும், தமக்குப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொடுத்தால் போதுமென்றும், பொறுப்பான மனிதர்கள் மூலமாக என் தகப்பனாரிடம் தெரிவித்தார். என் தகப்பனார் முன்னே கொண்ட முரண்பாட்டை விடவில்லை. ஒரே பிடிவாதமாக முடியாதென்று சொல்லிவிட்டார்.

அவர் அப்படிச் சொன்னது எனக்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை. ஆனாலும் என்ன செய்கிறது? கோபமாக இருந்த பெற்றோருடன் ஒப்புக்கு மத்தளம் கொட்டினேன். என் மனச்சாட்சி என்னைக் குத்திக்கொண்டே இருந்தது.

பலவாறுக நெஞ்சம் தத்தளித்துக்கொண்டிருந்தபோதிலும், பரீக்ஷை ஒன்றிலாயினும் தோல்வி ஏற்படவில்லை. நான் முதல் வகுப்பிலே முதலாவதாக இண்டர்மீடியட்டிலே தேர்ச்சி பெற்றேன்.

பி. ஏ., வகுப்பிலே படித்துக்கொண்டிருந்தபோது மணியனைத் திரும்பவும் சந்தித்தேன். அவனுக்குக் கல்யாணம் ஆகவில்லை. நாங்கள் இருவரும் ஒரே பள்ளிக்கூடத்திலும் படிக்கவில்லை; எங்களுக்குப் பாட விஷயங்களும் ஒரே மாதிரியாக இருக்கவில்லை. அவன் விஞ்ஞானம் படித்துவந்தான். நான் தத்துவம் படித்துவந்தேன். அதனாலே எங்களுக்குப் பாடவிஷயமாகப் பேசுவதற்கு

ஒன்றும் இராது. நாங்கள் சந்தித்த பல தருணங்களில், மணியன் என்னிடம் காட்டிய இரக்கம் இவ்வளவு அவ்வளவு என்றில்லை. ஏன் என்றால், என் பரிதாபமான கதை முழுவதும் அவனுக்குத் தெரியும். ஜாதிக்கட்டை மீறிக்கொண்டு என்னை மணம்புரிந்து விட்டால், என் துக்கமெல்லாம் தீர்ந்துவிடும் என்று அவன் எண்ணியிருக்கலாம் என்பதை அவனுடைய சம்பாஷணைப் போக்கிலேயிருந்து நான் ஊகித்தேன். அவன் இதைப்பற்றி என்னிடம் வெளிப்படையாகக் கேட்டிருந்தால், நானும் தெளிவாக முடியாதென்றே சொல்லியிருப்பேன். அவன் என்னிடத்திலே ஒன்றையும் வெளிப்படையாகப் பேசாமல் ஒரு சமயம் என் தாயிடத்திலே உடைத்துவிட்டான். அதற்கு என் அம்மா, "போடா முட்டாள், உன் அப்பா அம்மா கேட்டால் உன்னைச் சும்மா விடமாட்டார்கள். இது அவர்களுடைய அந்தஸ்திற்கு மிகவும் மானக்கேடான விஷயம். நாங்களும் இதற்கு ஒருபோதும் சம்மதிக்கமாட்டோம். இன்னொரு முறை இதைப் பற்றிப் பேசாதே" என்று கண்டிப்பாகச் சொல்லி அதட்டி அனுப்பி விட்டாள்.

'முட்டாள் மணியன், அநுதாபப் படுகிறானே' என்று ஒருவனை விவேகமுள்ள ஒரு பெண் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியுமா? காதலே கல்யாணத்திற்கப்புறம் மாயமாக மறைந்து போகிறது. அநுதாபமா கடைசிமட்டும் கொண்டு செல்லப் போகிறது? இதைப்பற்றி என்னிடம் யோசியாமல் பதற்றமாக என் அம்மாவிடம் கேட்டுவைத்தான். இதனாலே, எனக்கிருந்த கொஞ்சம் சுதந்தரமும் போய்விட்டது. அதுமுதல், "மணியனைப் பார்க்கலாகாது; மணியனோடு பேசலாகாது; மணியன் வீட்டுக்குப் போகலாகாது; எங்கே போனாலும் சொல்லிக் கொண்டுதான் போகவேண்டும். எப்பொழுதும் யாரையாவது துணைக்கு அழைத்துக்கொண்டுதான் போக வேணும்" என்றெல்லாம் சட்டங்கள் போட்டுவிட்டார்கள். எனக்காக அநுதாபப்பட மணியன் ஒருவன்தான் இருந்தான். இப்பொழுது அவனையும் பார்க்கமுடியவில்லை.

என் பெற்றோர் அதோடு நின்றுவிடவில்லை. மணியனுடைய ஆசையை அவனுடைய பெற்றோருக்கும் தெரிவித்துவிட்டார்கள். உடனே அவர்கள் தங்கள் உறவிலேயே ஒரு பெண்ணைப் பேசி, அவன் பி. ஏ., பரீக்ஷை எழுதி முடிந்ததும், கல்யாணத்தையும் முடித்துவிட்டார்கள். அவனுக்கு அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள இஷ்டம் இல்லாவிட்டாலும் பெற்றோருக் காகக் கல்யாணம் பண்ணிக் கொண்டான். என்ன செய்வான் பாவம்!

கல்யாணமான பிறகு மணியன் எங்கள் வீட்டுக்கு வருவதி லும் போவதிலும் என் பெற்றோருக்குத் தடையிருக்கவில்லை. நான் சந்தோஷமாக இருப்பதற்காக மணியன் என்ன என்னவோ வாங்கிக்கொண்டு வருவான். எனக்காக என் வீட்டில் உள்ளவர்

களை எல்லாம் சினிமாவுக்கு அழைத்துக்கொண்டு போவான். இதெல்லாம் என் தகப்பனுருக்குப் பிடிக்காது. திடீர் திடீர் என்று மணியன் வீட்டுக்கு வரக்கூடாதென்று சட்டம் பிறக்கும். திரும்பவும் மணியனுடைய பொறுமை அந்தச் சட்டங்களை ரத்து செய்யவும் தூண்டிவிடும்.

நான் பி. ஏ., வகுப்பில் முதலாவது வகுப்பிலே முதன்மையாகத் தேறினேன். நாங்கள் இருந்த ஊரிலிருந்து இருநூறு மைலுக்கப்பால் ஓர் ஊரிலே ஒரு பெண் பாடசாலையில் உபாத்தியாயினி வேலை கிடைத்தது. வேலையை ஒப்புக்கொண்டு அந்த ஊருக்குப் போனேன். பள்ளிக்கூடத்தில் என்னிடம் படித்த குழந்தைகளை என் சொந்தக் குழந்தைகளாக நேசிக்கத் தொடங்கினேன். எனக்குள்ளே குமுறிக் கொண்டிருந்த தாய்மைச்சக்தி என்னிடம் படித்த குழந்தைகளை நேசிப்பதனாலே ஒருவாறு அடங்கத் தொடங்கிவிட்டது. என் ஆறுத் துயரத்திலே இருந்து விடுதலை அடையப் பள்ளிக்கூட வேலை சிறந்த உபகரணமாக இருந்தது.

என்னை மணம் புரிய வந்த மாப்பிள்ளை நான்கு வருஷங்களாகக் காத்திருந்தார். எனக்குச் சுதந்தரம் கிடைத்தவுடனே நானே துணிந்து அவரை வரிப்பேன் என்று அவர் எண்ணி யிருந்தார். எனக்கும் அப்படிச் செய்ய ஆசையாகத்தான் இருந்தது. மூடிவில் அவர் இது விஷயமாக ஒருவரை நான் வேலை பார்த்த ஊருக்கே அனுப்பியிருந்தார். அந்த ஆள் என்னைப் பார்க்க முடியாதபடி நான் பள்ளிக்கூடப் பாதுகாப்பிலேயே இருந்தேன். அந்த மனுஷர் திரும்பிப் போய், நான் பார்க்க மறுத்துவிட்டதாகக் கதைகட்டிச் சொல்லிவிட்டார்.

நான் பள்ளிக்கூட வேலை ஏற்றுக்கொண்ட மூன்றுவது மாதத்திலே இடிவிழுந்தது போல ஒரு செய்தி வந்தது; என்னை மணக்க உத்தேசித்திருந்தவர் வேறொரு பெண்ணை மணந்து கொண்டார் என்ற செய்தி வந்தது. அதைக் கேட்டவுடனே என்னைச் சூழ இருள் குவிந்துவிட்டது. கடைப்பிணமாக நான் இருந்த ஜாகைக்கு வந்தேன். அது முதல் மனவேதனையினால் வியாதிக்கு ஆளானேன்.

வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு ஊருக்குத் திரும்பினேன். என்னைப் பற்றி என் பெற்றோருக்குச் சொல்லமுடியாத கவலை. நான்தான் மூத்த குழந்தை. வைத்தியத்திற்காக எவ்வளவோ பணச் செலவு ஆயிற்று. எனக்கு எவ்வளவோ ஆறுதலான வார்த்தைகள் சொன்னார்கள். நான் திரும்பவும் கலாசாலையில் சேர்ந்து எம். ஏ., பரீக்ஷைக்குப் படிக்கவேண்டும் என்று பெற்றோர்கள் தீர்மானம் செய்தார்கள். உடம்பு சற்றே சுகமானதும் திரும்பவும் கலாசாலையில் சேர்ந்து படிக்கத் தொடங்கினேன்.

எத்தனையோ தத்துவஞான நூல்களைப் படித்தேன். இன்னும் படித்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஏன்தான் என் மனத்

திற்கு ஆறுதல் வருகிறதில்லையோ, தெரியவில்லை. பகவான் என்னைப் படைத்த உத்தேசம் இன்னதென்று இன்னும் புலப்படவில்லை. தேச சேவை செய்யவேண்டும் என்று ஒரு சமயம் மனத்தில் சங்கற்பம் செய்வேன். மற்றொரு தருணம் சந்நியாசினியாகச் தேச சஞ்சாரம் செய்யவேணும் என்று நினைப்பேன். அறிவு புகட்டும் பல நூல்கள் எழுதிப் புகழ்பெற்ற எழுத்தாளருள் ஒருத்தியாக விளங்கவேண்டும் என்று தீர்மானிப்பேன். இப்படி எத்தனையோ எண்ணங்கள் வந்து முன்னே கூத்தாடித் திரிந்து மறையும். ஆனாலும் இவற்றில் ஒன்றுவது என் பெண்மை அமைப்பிலே ஊடு பாவு நூல்களாகப் பின்னிக்கிடந்த தாய் உணர்ச்சியைத் திருப்தி செய்வதாக இருக்கவில்லை. வரவர ஓர் ஆசை மகா வல்லமையோடு வருவதை உணர்ந்தேன். உலகத்தில் குழந்தைகளை எல்லாம் என் குழந்தைகளாகக் கருத முடியாதா? குழந்தைகளுக்காக ஓர் அநாதை ஆசிரமம் திறந்தால் என்ன? என்னையே அந்த ஆசிரமத்திற்காக அர்ப்பணம் செய்துவிட்டால் என்ன? இது அசாத்தியமான ஆசையாகவே முதலிலே தோன்றியது.

நான் படித்த கலாசாலையிலே விளையாட்டுக்களில் கெட்டிக்காரனும் பெரிய தனவானுடைய ஒரே பிள்ளையுமான ஓர் இளைஞன் என் மேல் ஆசைகொண்டு, ஒரு நாள் என்னிடம் பகிரங்கமாகவே தன் விருப்பத்தை என்னிடம் சொல்லிவிட்டான். ஒரு நாளும் அவன் நினைவு மறைவேறாது என்றேன். அவன் வற்புறுத்திக் காரணம் கேட்டான். "எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது; நான் விதவை" என்றேன். அவன் என்னை விடுவதாய் இல்லை. "சீர்திருத்த முறைப்படி விதவா விவாகச் சட்டம் இருக்கிறதே" என்றான். நான் மிக்க கோபத்தோடு அவனை ஒரு முறை பார்த்து விட்டு என் வீட்டுக்கு வந்துவிட்டேன். என் நெஞ்சம், "ஏன் வேண்டாம் என்றாய் அவனை?" என்றது. எனக்கே அதற்குச் சரியான பதில் சொல்ல முடியவில்லை.

எம். ஏ., பரீக்ஷை எழுதினேன். ஆனாலும் சந்தோஷம் இல்லை. அவனை வேண்டாம் என்றதற்காக என் மனம் என்னை அதிகமாகக் கசந்துகொள்கிறது. நான் எப்படி என் மனத்தை நம்ப முடியும்? என்னை எத்தனை தடவை அது மோசம் பண்ணியிருக்கிறது?

சில தினங்களுக்குப்பின் அந்த இளைஞனுக்குக் கல்யாணமாகிவிட்டது என்று கேள்விப்பட்டேன். என்ன ஆறுதலான செய்தி அது! ஒரு கோபமான பார்வை போதுமானதாக இருந்தது, அவன் மனம் என்னை விட்டுத் திரும்புவதற்கு. நான் அதைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பதற்குக் கூடப் போதுமான காலம் கொடுக்க அவனுல் முடியவில்லை.

இனி நான் என்ன செய்யவேண்டும்? வித்தியாபீடத்திலே இருந்து ஆராய்ச்சிக்காக உதவிச் சம்பளம் கிடைத்தது. இரண்டு வருஷகாலமாக வேதாந்த ஆராய்ச்சிகள் செய்தேன். டாக்டர் பட்டத்துக்காக வியாசமும் எழுதி அனுப்பியிருக்கிறேன்.

பட்டம் வந்தபின் என்ன செய்கிறது? படிப்பு ஏறுகிறது. வயசும் ஆகிறது. ஆனாலும் தெரியவில்லை, ஏன் பெண்ணுய்ப் பிறந்தேனென்று. அனாதைக் குழந்தைகளின் ஆசிரமகைங்கரியங்களிலே என் இறந்த காலத்தை மறக்க முடியுமானால் எவ்வளவு நல்லது! அப்படியாவது என் தாய் உணர்ச்சிக்குச் சாந்தி ஏற்படாதா?

பி. என். லக்ஷ்மி, பி. ஏ.

அன்பா? இரக்கமா? 53

ராஜாராமையர் ஒரு பெரிய மிராசு பரம்பரையைச் சேர்ந்தவர். அவர் செல்வத்திலேயே மூழ்கிக்கொண்டிருந்தார் என்று சொன்னாலும் தகும். அவர் வீட்டில் தங்கப் பாத்திரங்களும் வெள்ளித் தட்டு முட்டு சாமான்களும் சாதாரணமாக ஆளப்படும். "அவருக்கு என்ன? தங்க வில்வண்டி வைத்துக்கொள்ளலாம்" என்று அவருடைய கிராமத்திலுள்ள கிழவிகளும் கிழவர்களும் பேசிக் கொள்வார்கள். ஆனால் அம்மாதிரியான வண்டிகள் உறுதிக் குறைவாயிருக்கும் என்று நினைத்தோ என்னவோ, இரண்டு மாடுகள் பூட்டின இருப்பு வில்வண்டி ஒன்று வைத்துக்கொண்டிருந்தார். அந்த வண்டியில் ஏறி உட்கார வேண்டியதுதான், உடனே வாயுவேக மனோவேகமாய் மாடுகள் நாற்கால் பாய்ச்சலில் கிளம்பிவிடும். வண்டியில் உட்கார்ந்தவர்கள் உடல் துளியாவது குலுங்காது. சிறுவர்களுக்கெல்லாம் அந்த வண்டியுடன் போட்டி போட்டுக்கொண்டு பந்தயம் ஓடுவதில் வெகு பிரியம். இதைத் தவிர ஒரு காரும் வைத்திருந்தார்.

அவருக்குச் செல்வத்திற்கு ஏற்றபடியே குணமும் வாய்ந்திருந்தது. ஏழை எளியவர்களிடம் ஓர் அலாதியான பிரீதி அவருக்கு உண்டு. சங்கீதம், ஓவியம் முதலிய கலைகளிலும் அவர் ஆர்வம் கொண்டவர். இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அவருக்கு ஸரஸ்வதி என்று ஒரு பெண் இருந்தாள். அவள் பெயரில் மட்டும் ஸரஸ்வதியாய் இல்லாமல் பாட்டு, படிப்பு முதலியவற்றிலும் ஸரஸ்வதியாகவே விளங்கினாள். நல்ல அழகும், அழகுக்கேற்ற படிப்பும், படிப்புக்கேற்ற குணமும் பெற்றிருந்தாள்.

"இந்த வருஷம் நம்முடைய ஸரஸ்வதி 'ஸ்கூல் பைனல்' பரீக்ஷைக்குப் போகிறாள். பரீக்ஷை முடிந்ததும் அவளுக்குக் கலியாணம் பண்ணிவிட வேண்டும்" என்று ராஜாராமையர் தீர்மானம் செய்தார். பையன் ஏழையாயிருந்தாலும் பரவாயில்லை, நல்ல புத்திசாலியாயும் குணவானுயும் இருந்தால் போதும் என்று, அப்போர்ப்பட்ட வரனைத் தேடிக்கொண்டிருந்தார்.

ஒரு நாள், ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்துமணி இருக்கும். வீட்டில் கொஞ்சம் பரபரப்புக் காணப்பட்டது. பக்கத்துக் கிராமத்திலிருக்கும் சிவராமையரும், அவர் ஸம்ஸாரமும், அவர்களுடைய புத்திரன் வேங்கடராமனும், அவன் தோழன் நடராஜனும் ஆகிய நால்வருமாகப் பெண் பார்க்க வருவதாக ஏற்பாடாயிருந்தது. வாசலில் ஒரு ஜட்கா வந்து நின்றது. உடனே வீட்டிலுள்ள பரபரப்பு இன்னும் அதிகமாயிற்று. ராஜாராமையர் வாசலுக்கு ஓடி, 'வரணும், வரணும்' என்று சொல்லி, வந்தவர்களை உள்ளே அழைத்து வந்தார். கூடத்தில் ஓரத்தில் ஸ்திரீகளும், மற்றொரு பக்கமாகப் புருஷர்களும் உட்கார்ந்தார்கள். 'டிபன், காபி' வழங்கப்பட்டன. அவற்றைச் சாப்பிட்டானதும் ராஜாராமையர் ஸரஸ்வதியை அழைத்து, "இவர்களுக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு, ஒரு பாட்டுப் பாடு" என்றார். அந்தப்படி நடந்தது. இடையிடையே பேச்சும் நடந்து கொண்டிருந்தது. பிறகு கொஞ்சநேரத்தில் வந்தவர்கள் விடை பெற்றுச் சென்றார்கள்.

வேங்கடராமனின் பேச்சுச் சாதுரியமும், அடக்க ஒடுக்கமான நடத்தையும் ராஜாராமையரின் மனத்தைக் கவர்ந்தன. "அவன் பணக்காரனுயிராவிட்டால் என்ன? ஏதோ வயிறுரச் சாப்பிடுவதற்குப் போதுமானது இருக்கிறது. நல்ல படிப்பும், பெருந்தன்மையும் வாய்ந்திருக்கின்றன. அவர்களைத் தெரிந்தவர்கள் எல்லோரும் அவனையும் அவன் வீட்டோரையும் நல்லவர்கள் என்று கொண்டாடுகிறார்கள். சகுனமும் நன்றாயிருக்கிறது. ஜாதகமும் பொருந்தியிருக்கிறது" என்று சொல்லி, அவனையே மாப்பிள்ளையாகக் கொள்ளத் தீர்மானித்தார்.

பெரிய இடத்துக்காரர் எதிர்பார்க்காமலே வலிய வந்து பெண்ணைக் கொடுக்கிறேன் என்றால் கேட்பானேன்? வேங்கடராமன் பெற்றோரும் உடனே சம்மதித்தார்கள். கல்யாண வைபவங்களைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. பெரிய வீட்டுக் கல்யாணமல்லவா? பாட்டுக்கச்சேரிகள், விருந்து, ஏழைகளுக்குத் தானம் முதலியவைகளுடன் வெகு விமரிசையாய் நடந்தது.

கொஞ்சநாள் கழிந்தபின் ஸரஸ்வதி புக்ககம் போனாள். அங்கே அவளை எல்லாரும் மிகவும் ஆதரவாக நடத்தினார்கள். அவளை எந்த வேலையையும் செய்ய அவள் மாமியார் சம்மதியாள். வீட்டிற்கு வருகிறவர்கள் எல்லோருக்கும் அவள் ஒரு கொலுப் பொம்மையாகக் காட்சியளித்தாள். இந்தத் தாங்குதல்கள் எல்லாம் சுமார் இரண்டு மூன்று மாதம் நடந்திருக்கும். அவ்வளவுதான். அதன் பின் பிடித்தது சனீசுவரன். பழகப் பழகப் பாலும் புளிப்பதுபோல் – 'அவள் பணக்கார வீட்டுப் பெண்ணுகையால் தங்களை மதிக்க வில்லை' என்று ஏதோ காரணத்தால் அவள் மீது ஒரு மனக்கசப்பு ஏற்பட்டது

அவ்வீட்டில் உள்ளோருக்கு. அவள் என்ன செய்தாலும் தப்பாகப் பட்டத் தொடங்கிவிட்டது. அவள் கலகல வென்று பேசினால், "பெரியவர்களை லக்ஷ்யம் செய்யாமல் பேசுகிறாள்" என்பார்கள். அவள் பேசாமல் இருந்தால், "கர்வத்தைப் பார்! என்ன பவிஷு கொண்டாடுகிறாள்" என்பார்கள். நல்ல புடைவை அணிந்து கொண்டால், "ராங்கிக்காரி" என்பார்கள். பழைய புடைவை கட்டிக்கொண்டால், "வேஷம் போடுவதைப் பார்" என்பார்கள். இப்படி யாராவது ஒருவர் ஏதாவது குற்றங்குறை சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

அதற்குப் பின்பு அவளோடு உதவிக்கு வந்திருந்த சமையல் ஆளையும் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி நிறுத்திவிட்டார்கள். எல்லா வேலைகளையும் அவளுடைய மாமியாரே பார்த்து வந்தாள். ஸரஸ்வதி ஏதாவது 'கூடமாட' ஒத்தாசை பண்ணப் போனால், "நீ இதெல்லாம் செய்து வழக்கமில்லையம்மா; ஏதாவது உடம்புக்குக் கிடம்புக்கு இழுத்துவிட்டுக்கப் போகிறாய்" என்று பரிவுடன் பேசுவதுபோல் அவள் மாமியார் பேசுவாள். அதிலும் அன்னியப் பேர் யாராவது இருந்துவிட்டாலோ இந்த மாதிரியான பேச்சு இன்னும் அதிகமாகிவிடும் முரணிக் கொண்டு வேலையைச் செய்தால், "எங்களுக்குக் கெட்ட பெயர் வாங்கி வைக்கிறதற்காக எப்பொழுதும் வேலை செய்வதுபோல் பாசாங்கு பண்ணுகிறாள்" என்பாள் மாமியார். "அப்படியானால், சும்மா இருப்பானேன்" என்று நினைத்து ஏதாவதொரு புஸ்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்தாலோ, மாமியாரின் கூத்துச சொல்ல முடியாது. "ராங்கியைப் பார், ராங்கியை. பெரியாத்துப் பெண்ணே இல்லையோ! ஏதோ ரெண்டு எழுத்துவாசனை வந்து விட்டதாம்: தலைக் கர்வம் மண்டையைக் கொண்டுபோகிறது! வீட்டைப் பற்றித் துளியாவது பொறுப்பு இருக்கிறதா? எப்பொழுது பார்த்தாலும் புஸ்தகம் ஹஸ்தபூஷணம் என்று உட்கார்ந்திருக்கிறாள். இப்படியிருந்தால் குடித்தனம் உருப்பட்டாற்போல்தான்" என்று கடுமையாகப் பேசுவாள். பாட உட்கார்ந்தாலோ கேட்கவேண்டாம்; "தேவடியாள் சிறுக்கி மாதிரி எப்பொழுதும் பாட்டும் கூத்தும் வீடு அமளிப்படுகிறதே!" என்று குத்தலாகப் பேசுவாள்.

ஒரு நாள், வெள்ளிக்கிழமை சாயந்தரம் ஸரஸ்வதி குளித்து விட்டுக் கோவிலுக்குப் போவதற்காக ஒரு நல்ல புடைவையை எடுத்துக் கட்டிக்கொண்டதுதான் தாமதம், மாமியாருக்கு வந்து விட்டது ஆவேசம். "உன் அப்பா பணக்காரர் என்றால் உனக்கும் எனக்கும் என்ன? நீ எப்பொழுது இந்தக் குடிசையில் வந்து புகுந்தாயோ, அதிலிருந்து நீயும் ஏழைதான். இப்படி நிமிஷத்திற்கு ஒரு அலங்காரம் பண்ணிக்கொண்டு நின்றால், உனக்குப் புடைவை வாங்கிக் கொடுக்க நாங்கள் பணத்திற்கு எங்கே போவோம்" என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

இதிலிருந்து, அவர்களுக்கு ஸரஸ்வதியின் பெற்றோர்களிடமும் ஓர் அவமதிப்பு ஏற்பட்டது. ஏதாவது 'நாள் கிழமை' என்று அவர்கள் நல்ல சாமான்கள், புடைவை, வேஷ்டி முதலியவற்றை அனுப்பிவைத்தால், 'எங்களுக்கு அவைகளை வாங்கச் சக்தி இல்லை என்று எடுத்துக் காட்டுவதற்காக அனுப்பிவைத்தார்கள்' என்று நினைப்பார்கள். ஏதாவது அசந்தர்ப்பத்தினால் அனுப்பாமல் இருந்தால், "லோபிகள்! பணம் பணம் என்று பணத்தைக் கட்டிக்கொண்டு அழுகிறார்கள். ஒரே பெண். அவளுக்குக் கூட வேண்டியதைச் செய்ய அவர்களுக்கு மனம் வரவில்லையே! இன்னும் ஏழெட்டுப் பெண்களும் இருந்து, புக்ககங்களும் பிடுங்கல்களாக இருந்தால் என்ன செய்வார்களோ!" என்று பேசுவார்கள்.

செல்வத்திலேயே பிறந்து, செல்வத்திலேயே வளர்ந்து, பெற்றோரால் மிகவும் அருமையாக வளர்க்கப்பட்ட ஸரஸ்வதிக்கு இம்மாதிரியான பேச்சும் நடத்தையும் புதுமையாக இருந்தன. தானும் கூடியவரையில் அவர்கள் விருப்பப்படி நடப்பதற்கு எவ்வளவோ முயன்று பார்த்தும், அவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லையே என்று தனிமையில் உட்கார்ந்து வருந்துவாள். அவளை அந்த வீட்டில் தேற்றுவார் ஒருவரும் இல்லை.

வேங்கடராமன் ஸ்வபாவத்தில் நல்ல பிள்ளைதான்; ஆனால் ஒரு பெரிய கட்டுப்பெட்டி. தனக்காக எது சரி, எது தப்பு என்று தெரியாமல் யார் எப்படிச் சொன்னாலும் அதன்படி நடந்து கொண்டு தனக்கும் சுகமில்லாமல், பிறருக்கும் சுகமில்லாமல் பண்ணிக்கொள்வான். பெண்டாட்டி வந்த பிறகும் இதே கதைதான். வெளியிலிருந்து அவன் வீடு வந்ததும், அவனுடைய தாய் ஸரஸ்வதியைப் பற்றிச் சொல்லும் குறைகளை எல்லாம் கேட்டு நம்பித் தானும் ஸரஸ்வதியைப் புறக்கணித்து வந்தான். பண இறுமாப்பில் அவள் தன்னையும் மதிக்கவில்லை என்றே எண்ணினான்.

இப்படியாகச் சில மாதங்கள் கடந்தன. ஊரார் மூலமாக ராஜாராமையருக்குச் சமாசாரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக எட்டின. 'ஸரஸ்வதி, கொடுமை தாங்காமல் நாளுக்கு நாள் இளைத்துத் துரும்பாகப் போகிறாள்; அவர்கள் வீட்டில் அநாதை போல் ஆதரவற்று வாழ்கிறாள்' என்று கேள்விப்பட்டு, அவளைத் தம் வீட்டிற்கு அழைத்து வந்தார். அவளைத் திரும்ப மாமியார் வீடு அனுப்ப அவர் மனம் ஒப்பவில்லை. அவளுடைய மாமியார் வீட்டிலிருந்து ஒருவரும் அவளை அழைக்கவும் இல்லை. "எனக்குச் சோற்றுக்கு வழியில்லாமலா ஸரஸ்வதியை அவர்கள் கையில் தள்ளினேன்? ஏதோ குழந்தை சந்தோஷமாக இருக்கட்டும் என்று எண்ணி எவ்வளவோ வரன்களைப் புறக்கணித்துவிட்டு, கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுப்பதுபோல் இவர்களிடம் ஒப்பித்தேன். என் புத்தியை என்ன சொல்லுகிறது?" என்று

தம் மனைவியிடம் வருத்தப்பட்டுக் கொள்ளுவார். ஏற்கெனவே 'ஸ்கூல் பைனல்' தேறியிருந்த ஸரஸ்வதியை மேல் படிப்புப் படிக்க வைத்து ஓர் உத்தியோகத்தில் அமர்த்துவது என்று தீர்மானித்தார்; "ஸரஸ்வதியை நான் ஆண் குழந்தையாகவே பாவித்து விட்டேன்" என்று அடிக்கடி சொல்லுவார்.

* * * *

ஒரு திங்கட்கிழமை காலை பத்துமணி இருக்கும். மயிலாப்பூரிலுள்ள 'கற்பகா பெண் பாடசாலை'யில் தினத்தைக் காட்டிலும் அதிகமான சுறுசுறுப்புக் காணப்பட்டது. அன்றைக்கு 'இன்ஸ்பெக்ஷன்' நாள். இன்னும் அரைமணி நேரத்தில் 'இன்ஸ்பெக்ட்ரெஸ் அம்மா' வரப்போகிறாள் என்று குறுக்கும் நெடுக்குமாக மாணவிகளும், உபாத்தியாயினிகளும் ஓடிக்கொண்டு மிக மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

மணியடித்ததும் அவர்கள் அவரவர்களுடைய வகுப்புக்குப் போனார்கள். இன்ஸ்பெக்ட்ரெஸ் அம்மாளும் வந்துசேர்ந்தாள். தலைமை உபாத்தியாயினி இன்ஸ்பெக்ட்ரெஸை ஒவ்வொரு வகுப்பாக அழைத்துச் சென்றாள். கடைசியாக 'ஸ்கூல் பைனல்' வகுப்புக்கு வந்தார்கள்.

அந்த வகுப்பிலுள்ள மாணவிகளுள் ரமாவும், கலாவும் இன்ஸ்பெக்ட்ரெஸின் கவனத்தைக் கவர்ந்தார்கள். தன்னையும் அறியாமல் அவர்களிடம் ஒரு பாசம் அவளுக்கு ஏற்பட்டது. "என்ன கூர! என்ன சுட்டிகை, சுறுசுறுப்பு!" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள். அடிக்கடி அவர்களைப் பரீக்ஷிப்பதற்காகவே மேலும் மேலும் விதம் விதமாகக் கேள்விகள் கேட்டு அவர்கள் விடையளிக்கும் முறையை மெச்சினாள். பிறகு அவர்களைப்பற்றித் தலைமை உபாத்தியாயினியிடம் விசாரித்ததில், அநாதைகளான அவர்கள் இருவரும் சகோதரிகள் என்றும், 'பார்வதி அம்மாள் அநாதை ஆசிரம'த்திலிருந்துகொண்டு சம்பளம் இல்லாமல் படித்து வருகிறார்கள் என்றும் தெரியவந்தது. "அவர்களை ஞாயிற்றுக்கிழமை மத்தியான்னம் என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கள்" என்று தலைமை உபாத்தியாயினியிடம் சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றாள்.

ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்ட நேரத்தில் ராயப்பேட்டை ஹைரோடில் உள்ள 'லாவண்யா' என்னும் பங்களாவில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு மாதும், இரண்டு பெண்களும் இறங்கினார்கள். "வாங்கோ பார்வதியம்மா, வாங்கோ ரமா, கலா" என்று சொல்லிக்கொண்டே இன்ஸ்பெக்ட்ரெஸ் அம்மாள், அவர்களை வரவேற்று, உள்ளே அழைத்துச் சென்றாள். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு, "என்னை மிகவும் அன்பாக வளர்த்த என் தகப்பனாரின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு வருஷமும் இரண்டு மாணவிகளுக்குக் காலேஜ் படிப்புக்காகப் பண உதவி செய்துவருகிறேன். இந்த வருஷம் இவர்கள்

இருவருக்கும் அந்த உதவி செய்யலாமென் றிருக்கிறேன்" என்று பார்வதியம்மாளிடம் சொன்னாள்.

பார்வதியம்மாள் தன்னுடைய சந்தோஷத்தைத் தெரிவித்து, அவர்களிருவர் விருத்தாந்தத்தையும் சொல்ல ஆரம்பித்தாள் :—

"இவர்கள் என் சிநேகிதி ஒருத்தியால் ரங்கூனிலிருந்து அழைத்து வரப்பட்டு, என் ஆசிரமத்தில் விடப்பட்டார்கள். இவர்கள் தகப்பனாரான எஸ். வி. ராமன் ரங்கூனில் ஓர் உத்தியோகஸ்தர். இவர்களுக்குத் தாய் சிறு வயசிலேயே இறந்து விட்டாள். தகப்பனாருக்கு நாளுக்கு நாள் உடம்பு இளைத்துக் கொண்டே வந்து திடீரென்று படுத்த படுக்கையாய்விட்டார். அவர் சம்பாதித்து வைத்திருந்த சொற்பப் பணமெல்லாம் கரைந்தும் வியாதி குணப்படும் வழியாயில்லை. சாகும் தறுவாயில் அவர் தம் குழந்தைகள் இருவரையும் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு சொன்னார் :

'உங்கள் அம்மாவை இழந்த வருத்தத்தைத் தவிர மற்றொரு வருத்தமும் அதைக்காட்டிலும் அதிகமாக என்னைப் பாதித்துக் கொண்டே இருக்கிறது. உங்களைத் தவிர எனக்கு வேறோர் ஆதரவும் இல்லை. உங்களிடம் என் துக்கத்தை வெளியிட்டால் என் மனத்துக்குச் சற்றே ஆறுதலாயிருக்கும். உங்கள் தாயைக் கல்யாணம் செய்வதற்கு முன் எனக்கு விவாகம் ஆகியிருந்தது. நான் பரீக்ஷை தேறிய உடன் எங்கள் பக்கத்து ஊரில் உள்ள பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டேன். எங்கள் பதவியைவிட அவர்கள் அந்தஸ்து மிகவும் உயர்ந்தது. அவர்கள் எங்களை எவ்வளவோ மேன்மையாகவே நடத்தி வந்தார்கள். ஆனாலும் உள்ளூற நாங்கள் அவர்களைக் காட்டிலும் பதவியில் குறைந்தவர்கள் என்ற எண்ணம் எங்கள் மனத்தில் கிடந்து உறுத்திக்கொண்டே இருந்தது. ஆதலால், அவர்கள் சாதாரணமாய் நடக்கும் போதெல்லாம் நாங்கள் சந்தேகப்பட்டுக் கொண்டே வந்தோம். அவர்கள் மரியாதையாக நடந்து கொண்டால் வேஷம் போடுகிறார்கள் என்போம். அவர்கள் சகஜமாக நடந்து கொண்டால் நம்மை மதிக்கவில்லை என்போம். இப்பொழுது நினைத்துப் பார்க்கப் பார்க்க நாங்கள் செய்தது எவ்வளவு தவறு என்பது தெரிகிறது. அப்பொழுது எங்களுடைய மாறுபட்ட மன நிலையில் அவர்கள் மேலேதான் தவறெல்லாம் என்று நாங்கள் எண்ணினோம். என் மனைவி கள்ளம் கபடு அற்றவள். அச் சிறுமியைப் பிறர் வார்த்தையைக் கேட்டு அவமதித்தேன். அவள் அன்பை உதறித் தள்ளினேன். அவள் வாழ்க்கையைப் பாழாக்கினேன். அப்போது அவள்மீது எனக்கு இரக்கமே இல்லை. கோபந்தான் இருந்தது. அதன் பிறகு வேறு கல்யாணமும் செய்து கொண்டு, ரங்கூனுக்கு வந்து இருபது வருஷங்கள் ஆகின்றன. இங்கு வந்த பிறகு அவளைப்பற்றியாவது, அவளைச் சேர்ந்தவர்களைப்பற்றியாவது ஒரு தகவலும் கிடைக்கவில்லை. நீங்கள்

அவளை எப்பொழுதாவது சந்திக்க நேர்ந்தால், என் சார்பாக அவளிடமிருந்து மன்னிப்பைக் கோரி, அவளிடம் சரணாகதி அடையுங்கள். நான் செய்த பிழைக்காக ஆயுள் முழுவதும் வருந்தினேன் என்று சொல்லுங்கள்..." என்று பார்வதியம்மாள் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, இன்ஸ்பெக்ட்ரெஸ் ஸரஸ்வதி அம்மாளுக்குத் தலை சுழன்றது. மளமளவென்று கண்ணிலிருந்து நீர் வடிந்தது. அதைக் கண்டு பார்வதி அம்மாள் பேச்சை நிறுத்தினாள்.

சிறிது நேரம் எல்லாரும் மௌனமாயிருந்தார்கள். பிறகு ஸரஸ்வதி அம்மாள் தன் மனத்தைத் தேற்றிக்கொண்டு, "இனி மேல் இக்குழந்தைகளைக் காப்பாற்றுவது என் பொறுப்பு. இவர்கள் இருவரும் என்னிடமே இருக்கச் சம்மதிப்பார்களா? குழந்தைகளே, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்றாள்.

ஏ. எஸ். லக்ஷ்மி

மன்னிப்பு 54

போர்ட்டர் மணியை அடித்துவிட்டான். கார்டும் விசில் ஊதிப் பச்சைக் கொடியைக் காட்டினார். பிளாட்பாரத்தில் மூன்றாவது வகுப்பு வண்டியின் ஜன்னல் அருகில் நின்றுகொண்டிருந்த சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞன் வண்டிக்குள் எழிலே உருவெடுத்ததுபோல் உட்கார்ந்திருந்த பதினெட்டு வயது யுவதியைப் பார்த்து, "பிரேமா, சரி, உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். குழந்தை கண்ணனுக்குக் கண்டதை யெல்லாம் கொடுத்து உடம்பைக் கெடுத்துவிடாதே" என்றான்.

"ஆகட்டும், நீங்களும் வாரம் வாரம் உங்கள் க்ஷேமத்தைத் தெரிவித்துக் கடுதாசு போடுங்கள்" என்று புன்னகை தவழக் கூறினாள் அந்த யுவதி.

வண்டி நகர்ந்தது. வாலிபன், பிரேமாவின் அருகே அமர்ந் திருந்த முதியவரைப் பார்த்து, "பத்திரமாய் ஊர் போய்ச் சேர்ந் ததும் கடிதம் போடுங்கள்" என்றார். பெரியவர், சரி என்று தலையை ஆட்டினார். வண்டி மெதுவாய்ச் சென்றுகொண்டிருந்தது. பிரேமா ஜன்னல் வழியாகத் தலையை நீட்டி, ராமசந்திரன், பிளாட்பாரம், ஸ்டேஷன் எல்லாம் மறையும் மட்டும் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறந்தகம் செல்வதால் உண்டான ஆனந் தமும், சிறிது நாட்கள் கணவனைப் பிரிந்திருக்க நேர்ந்ததனால் உண்டான துக்கமும் மாறி மாறி அவள் முகத்தில் தோன்றி மறைந்தன.

வண்டி வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. இருபுறமும் பச்சைப் பசேலென்ற வயல்களும், உருக்கிவிட்ட வெள்ளியே போன்று ஓடும் சல சலவென்ற ஓடைகளும் சலனப் படத்தில் தோன்றுவதே போல் காட்சியளித்தன. தொலைவில் வானுற வோங்கி நிற்கும் மலைகளும், மறுபுறம் மறையும் சூரியனும் இயற்கையின் வனப்பை விளக்கின. பிரேமாவின் மனமும் கண்களும் இக்காட்சிகளில் ஈடுபட்டிருந்தன. அவர் தந்தையான முதியவர் சாமான்களை ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டுப் பத்திரிகை படிப்பதில் முனைந்துவிட்டார்.

* * * *

இரவு எட்டு மணி இருக்கும். காரிருளைப் பிளந்துகொண்டு ஓடும் வண்டியானது ஒரு பெரிய ஜங்ஷனில் வந்து நின்றது. பிரேமாவும் முதியவரும் இருந்த வண்டியில் நான்கு ஐந்து விதவைக் கிழவிகளும், ஓர் இளம் மங்கையும் மூட்டை முடிச்சுகளுடன் வந்து ஏறிக்கொண்டனர்.

வண்டி மறுபடியும் நகர ஆரம்பித்தது. கிழவிகள் தலைக்கு ஆறு வாழைப் பழங்களை உரித்து விழுங்கிவிட்டு மூட்டையின் மீது தலையை வைத்துக்கொண்டு சாய்ந்துகொண்டனர். இரண்டொரு நிமிஷங்களில் நித்திராதேவி அவர்களை ஆட்கொண்டனள்.

அந்த இளம் மங்கை மட்டும் படுத்துக்கொள்ளவில்லை. பிரேமாவிற்கு எதிரில் உள்ள பெஞ்சியில் அமர்ந்திருந்த அவள் பிரேமாவின் மடியில் இருந்த குழந்தையையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். குழந்தையின் முகம் அவளுக்கு யாரையோ நினைப்பூட்டியது. தொடர்ந்து பல பழைய சம்பவங்கள் நினைவுக்கு வரவே, அவள் மனம் குமுறியது. கண்களில் நீர் மல்கியது.

அந்தப் பெண்ணுக்கும் ஏறக்குறைய வயசு இருபது இருக்கும். ஆனால் அவள் உடல் வாடி இளைத்திருந்தது. கன்னங்கள் ஒட்டி யிருந்தன. களை இழந்த அவள் முகத்தில் நெடுநாளாக அவள் அனுபவித்து வந்த ஆறாத் துயரின் சாயை குடிகொண்டிருந்தது. பிரேமா தன் எதிரில் உட்கார்ந்திருந்த அணங்கு அடிக்கடி தன் குழந்தையைக் கவனிப்பதையும், ஏதோ துக்கத்தால் மனம் கலங்குவதையும் உற்றுக் கவனித்தாள். அவள் உள்ளம் அவளையும் அறியாமல் இரக்கம் கொண்டது. மெதுவாக, "எந்த ஊருக்குப் போகிறீர்கள்?" என்று கேட்டு வைத்தாள்.

அம்மங்கை பிரேமாவின் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டாள். கனவு கலைந்து சுய உணர்வு பெற்றவளாய்த் தன் மனத்தில் தோன்றிய எண்ணங்களை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "அம்மா, இவர்களெல்லாம் ராமேசுவரம் போகிறார்கள். நானும் இவர்களுடன் போய் சேது ஸ்நானம் பண்ணிவிட்டுச் சுவாமி தரிசனம் செய்யலாமென்று புறப்பட்டேன். முன் ஜன்மத்தில் என்ன பாபம்

செய்தேனே, எவர் குடியைக் கெடுத்தேனே தெரியவில்லை, இப்போது அதன் பலனை அனுபவிக்கிறேன்!" என்றாள்.

"உங்கள் துக்கத்திற்கு என்ன காரணம்?"

"பதியைப் பிரிந்து வாழ்வதைவிடப் பெண்களுக்குப் பெரிய துக்கம் வேறு என்ன உண்டு?" என்று சொல்லி அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"மகாலக்ஷ்மிபோல் விளங்கும் தங்களை, பாவி ஏன் தள்ளி வைத்துவிட்டார்?" என்றாள் பிரேமா.

"அவரைப் பழியாதீர்கள். அவர்மீது என்ன குற்றம்? என் தலைவிதி. தவறு என்னுடையதே. அதன் பலனையே இப்போது அனுபவிக்கிறேன்" என்று யுவதி தன் கதையை ஆரம்பித்தாள்.

* * * *

என் பெயர் காமு. துர்ப்பாக்கியவதியாகிய நான் சிறு வயசிலேயே தந்தையை இழந்துவிட்டேன். என் தாய்க்கும் என்னைத் தவிர வேறு சந்ததி இல்லை. ஆதலால்தான் ஒரே பெண்ணாகிய என்னை மிகச் செல்வமாக வளர்த்து வந்தாள். என்மீது தாய்க் குள்ள அளவுகடந்த பிரியத்தினால் என்னை அவள் சரிவரப் பழக்க வில்லை. என் மனம்போன போக்குப்படியே நடக்க அநுமதித்து வந்தாள். புக்ககம் சென்று வாழவேண்டிய பெண் குழந்தைகளைச் சிறு வயசு முதலே சரிவரத் திருத்திப் பெண்மைக்குரிய குணங் களையும் ஒழுக்கங்களையும் சிறுகச் சிறுகப் போதித்தும் குடும்ப வேலைகளைப் பழக்கியும் வருவது தாயின் கடமை என்பதை அவள் சிறிதும் உணரவில்லை. அந்தோ! அதுவும் என் தலைவிதிப் பயன் தான் போலும்!

எனக்கு வயசு பன்னிரண்டு ஆகியது. அப்போதும் என் தாய் என்மீது வைத்திருந்த அன்பின் பெருக்குச் சற்றும் குன்றவில்லை. என் வேலைகளையும் அவளே செய்து விடுவாள். அந்த வயசில் பெண்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய வேலை ஒன்றுமே எனக்குச் செய்யத் தெரியாது. அதிகம் ஏன்? அடுப்புப் பற்ற வைக்கக்கூட நான் திறமையற்றிருந்தேன். தாய் கொடுத்த செல்லத்தால் என் சோம்பேறித்தனந்தான் வளர்ந்தது.

காலையில் எட்டு மணிக்குத்தான் படுக்கையை விட்டு எழுந் திருப்பேன். உடனே பல் துலக்கி விட்டு, அம்மா தயாராய் வைத்திருக்கும் காபி பலகாரங்களை உண்டுவிட்டு வீட்டுக்கு வீடு சென்று அரட்டை அடிப்பேன். தாயம், பல்லாங்குழி மூதலியன ஆடுவதிலேயே பொழுதைப் போக்குவேன். மத்தியான்னம் உண்ட பின் உறங்குவேன். மாலையிலும் காலையைப்போலவே, எனக்கு ஏற்ற சோம்பேறித் தோழிகளைத் தேடிச் செல்வேன்.

இப்படியே என் தாய் அன்பு காரணமாக வளர்த்துவிட்டாள். அன்பு செலுத்தவும் ஒரு வரம்பு வேண்டாமா? "நான் உயிருடன்

இருக்கும் வரையில் என் செல்லம் ஏன் கஷ்டப்படவேண்டும்?" என்று அடிக்கடி கூறிவந்தாள்; பிறகு இன்னும் என்ன வேண்டும் எனக்கு?

பதின்மூன்றும் வயசில் எனக்கு மணம் முடிந்தது. என் அத்தானுக்கேதான் நான் வாழ்க்கைப்பட்டேன். எங்கள் வாழ்க்கை எவ்வளவோ இன்பமுள்ளதாக இருக்குமென்று அவர் ஆனந்தக் கனவுகள் கண்டிருப்பார்; பாவம்! ஆனால் இவ்வளவு சீக்கிரத்திலேயே தம் மனக்கோட்டைகள் யாவும் குலைந்து விடுமென்று அவர்தாம் எப்படி அறிந்திருப்பார்?

விவாகத்திற்குப் பிறகும் என்னைப் பிடித்த சனி விடவில்லை. என் தாய், "பெண் சிறிசு" என்று காரணம் சொல்லிக்கொண்டு என்னுடன் என் புக்ககத்திற்கும் வந்து விட்டாள். வீட்டு வேலைகளை யெல்லாம் தானே செய்து விடுவாள். என் கணவர் 'ஆபீஸ்' புறப்படும்போதும் அவளே இலை போட்டுப் பரிமாறுவாள். நான் ஒரு பதுமையைப் போல் எங்கேயாவது உட்கார்ந்திருப்பேன்.

ஒரு வாரம் இப்படிச் சென்றது. என் கணவர் என்னைத் தனியாகக் கூப்பிட்டு, "இந்தா, நீ ஏன் ஒரு வேலையும் செய்வதில்லை? எல்லாவற்றிற்கும் உன் அம்மாவையே சிரமப்படுத்துகிறாயே? எனக்குச் சாதம் போடுவதற்குக்கூட நீ வரமாட்டேன் என்கிறாயே!" என்று வினவினர். ஆனால் பேதையாகிய நான் அவருடைய கருத்தை அறிந்து கொள்ளவில்லை. என் தாயை ஊருக்குப் போய்விடும்படியும், தனியாக இருந்தால்தான் நான் திருந்துவேனென்றும் அவர் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பலமுறை சொல்லிப் பார்த்தார். நாங்கள் அவ்வார்த்தைகளைச் சிறிதும் லக்ஷ்யம் செய்யவில்லை. வரவர வீட்டுக்குத் தானே எஜமானி என்னும் பாவனையில் என் தாய் நடக்க ஆரம்பித்தாள். ஒவ்வொரு சமயம் தன் மாப்பிள்ளையைக் கூட அதிகாரம் செய்யத் தொடங்கினாள். சிறியவளான நான் இவற்றின் விபரீதத்தை அப்போது சரியாக உணரவில்லை.

நாட்கள் சென்று கொண்டே இருந்தன. என் அசட்டுத் தனத்தையும், என் தாயின் அட்டகாசத்தையும் காணக் காண அவருக்கு எங்கள் மீது வரவர வெறுப்பு அதிகமாகத் தொடங்கியது. வீட்டில் தங்கும் நேரத்தைச் சிறுகச் சிறுகக் குறைத்துக் கொண்டே வந்தார். பகல் முழுதும் ஆபீஸிலேயே கழித்து வந்தார். இரவிலும் வெகு நேரம் கழித்தே வீட்டுக்கு வருவார். விடுமுறை நாட்களிலுங்கூட எங்காவது சென்றுவிடுவார்.

இதுவே பெரிய விபரீதத்திற்குக் காரணமாயிற்று. வீண் தப்பெண்ணங்கள் ஏற்பட்டன. 'கடவுள், மெல்லியல்பு, நற்குணம், தயை, அன்பு ஆகியவற்றைக்கொண்டு பெண்மையைப் படைத்தார்' எனக் கவிஞர்கள் கூறுவது வழக்கம். ஆனால் உண்மையில் இன்னும் சில தீக்குணங்களையும் சேர்த்துத்தான்

பெண்மை படைக்கப்பட்டது போலும்! ஆம், என் கணவர் எவருடைய உபதேசத்தையோ கேட்டு, என்னை வெறுப்பதாய்ச் சந்தேகம் கொள்ளலானாள் என் தாய். "இப்படித்தாண்டி சிறு பிள்ளைகள் எவனையாவது கட்டிண்டு அலையும்" என்பாள். அந்தச் சந்தேகப் பேய் அவளையே பேயாக்கி விட்டது. உடனே அவள் என் கணவரை என் வசப்படுத்தும் பொருட்டு, ஏதோ ஒரு மூலிகையைக் கொணர்ந்து அதை அவருக்கு அரைத்துப் பாலுடன் கலந்து கொடுத்துவிடும்படி சொன்னாள். அறிவிலியாகிய நானும் அவ்வாறே செய்துவிட்டேன். மதியினம்! பதியை வசிகரிக்க அன்பைவிடச் சிறந்த மருந்து வேறொன்றும் இல்லை யென்று என் பேதைப் புத்திக்குப் புலப்படவில்லையே!

சில நாட்களில் மருந்தின் வேலை ஆரம்பமாகியது. அவருக்கு அடிக்கடி நோய் காண ஆரம்பித்தது. உடம்பு இளைத்துக் கொண்டே வந்தது. வைத்தியர் வந்ததும் குட்டு வெளிப்பட்டது. உண்மையை அறிந்து அவர் திடுக்கிட்டார். இனி எங்களை வைத்துக்கொள்வது தம் உயிருக்கே ஆபத்து என எண்ணினார். மறு கணமே எங்களை ஊருக்கு அனுப்பிவிட்டார். அதன்பிறகு அவர் எங்களைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஆனல் மாதந் தோறும் செலவுக்கு வேண்டிய பணத்தை மட்டும் அனுப்பி வந்தார்.

கணவன் என்னைத் தள்ளிவைத்து விட்டது என் தாயின் உள்ளத்தில் இடி விழுந்தது போலாகியது. மனம் உடைந்த அவள் அதே ஏக்கத்தால் அடுத்த வருஷத்துக்குள் உயிர் நீத்தாள். அதற்குப் பின்தான் என் உள்ளத்திலும் அறிவு என்னும் சூரியன் உதயமாகியது. மடமையிருளும் சிறிது சிறிதாக விலக ஆரம்பித்தது. என் உண்மை நிலையை உணர்ந்தேன். என் அறியாமைக்கு வருந்தினேன். அவரிடம் நான் மன்னிக்குரிய கடமையைச் செலுத்தாமல் இருந்ததற்கு வருந்தினேன். பலன் என்ன? கண் கெட்டபின் சூரிய நமஸ்காரமா? என் கணவர் என்னைச் சிறிதும் நம்பமுடியாதபடியல்லவோ நடந்துவிட்டேன்? அவர் இனி என்னை ஏற்பாரா?

என்னை உயிருக்கு உயிராக நேசித்த அவர் தமது இருதய அரியணையில் வீற்றிருக்க நான் தகுதியற்றவளெனக் கண்டபின், அவ்விடத்தை வேறொருத்திக்கு அளித்துவிட்டார்; ஆம், மறு மணம் செய்துகொண்டு மூன்றுண்டுகள் ஆகின்றன.

* * * *

இவ்வாறு சொல்லி முடித்தாள் அம்மங்கை. அவள் கண்களிலிருந்து உதிர்ந்த நீர் முத்துக்கள் மின்சார விளக்கொளியில் பளபளவென மின்னின.

அப்பொழுது சிறிதே நித்திரை கலைந்த கிழவிகளில் ஒருத்தி, "காழு, உன் வாழ்வை அபகரித்த அவள் மட்டும் வாழப்

போகிறாளா?" என்றாள். காமு காதுகளை மூடிக்கொண்டு, "பெரியம்மா, அந்தப் பெண்ணை ஏன் வீணில் பழிக்கிறீர்கள்? எய்தவன் இருக்க அம்பை நொந்து ஆவதென்ன? பெற்றோர் மணம் முடித்துக் கொடுத்த கணவனுடன் அன்புடன் வாழ்வது பெண்கள் கடமை யன்றோ?" என்று கூறி ஒரு பெருமூச்சு விட்டாள்.

காமுவினிடம் இரக்கம் கொண்ட பிரேமாவின் கண்களிலும் நீர் நிரம்பியது. அவள் மூளை தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. கிழவியின் சாபம் அவள் உள்ளத்தில் சுரீர் என்று தைத்தது. ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் அவள் திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவள்போல், "காமு, காமு, உன் புக்ககம் எந்த ஊர்? உன் கணவன் பெயர் என்ன?" என்று பரபரப்புடன் கேட்டாள். அவள் முகம் பரிதாபம் நிறைந்து காணப்பட்டது.

காமு திடுக்கிட்டாள். ஒரு கணம் பிரேமாவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள். பிறகு நிதானமாக, "அம்மா, என் புக்ககம் புள்ளம்பாடி. என் கணவர் பெயர், அந்த அயோத்தியா மூர்த்தியின் திருநாமந்தான்" என்றாள். பிரேமாவின் தலை கிர் என்று சுழன்றது.

* * * *

ராமசந்திரன் கவலை தோய்ந்த முகத்துடன் கட்டிலைச் சுற்றி உலாவிக் கொண்டிருந்தான். ஓட்டிய உடலும் உலர்ந்த முகமும் குழிவிழுந்த கண்களுமாய்க் கட்டிலில் படுத்திருந்த பிரேமா ஏதோ முணுமுணுப்பது போல் தோன்றியது. உற்றுக் கவனித்தான் ராமசந்திரன். "காமு, கடைசியில் உன் வாழ்வையா நான் அபகரித்துக் கொண்டு விட்டேன்? நான் இல்லாவிட்டால் இந்த ஸ்தானம் உனக்கே தானல்லவா?" என்று கூறியதைக் கேட்டதும் அவன் திடுக்கிட்டான்.

"பிரேமா, என்ன பிதற்றுகிறாய்? யார் அது, காமு என்பது?" என்றான் பதற்றத்துடன்.

பிரேமா அவனைக் கூர்ந்து நோக்கினாள். "ஒன்றும் இல்லை" என்று கண்களை மூடிக்கொண்டாள். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் கணவனைப் பார்த்து, "உடனே தந்தி அடித்துக் காமுவை வரவழையுங்கள்" என்று கெஞ்சினாள்.

"ஐயோ! பிரேமாவுக்கு ஜன்னி கண்டுவிட்டது. ஏதேதோ பிதற்றுகிறாள்" என்று அலறிக்கொண்டு ராமசந்திரன் வைத்தியரைக் கூப்பிடவென்று ஓடலானான். ஆனால் பிரேமா அவனைக் கூப்பிட்டுக் கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்துகொண்டு ஈனஸ்வரத்தில் கூறலானாள். "இனிமேல் மறைப்பதில் பயன் இல்லை. உண்மையைச் சொல்லிவிடுகிறேன். வைத்தியரால் என் நோய்க்கு ஒன்றும் செய்ய முடியாது. மனநோய்க்கு மருந்தும்

உண்டோ? பெண்களின் உள்ளத்தை நீங்கள் அறியமாட்டீர்கள். தன் வாழ்வை இன்னொருவருக்குக் கொடுக்கவும் அவர்கள் உள்ளம் பொறுக்காது. மற்றவர் வாழ்வை அபகரித்து அனுபவிக்கவும் அவர்கள் உள்ளத்திலே அமைதி இராது. இனி நான் உயிரோடிருப்பது அதிக நேரமில்லை. உடனே காமுவை வரவழையுங்கள். அவளைப் பார்க்குமுன் இறந்தால் என் ஆன்மா சாந்தியடையாது" என்றாள். களைப்பால் அவள் சோர்ந்துவிட்டாள். ராமசந்திரன் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்து சென்றான்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. பிரேமாவின் பக்கத்தில் ராமசந்திரனும், குழந்தை கண்ணனைக் கையில் ஏந்திக்கொண்டு காமுவும் நின்றுகொண்டு இருந்தனர். பிரேமா தன் கண்களை மலர விழித்து எல்லோரையும் ஒருமுறை பார்த்தாள். அவள் முகத்தில் தோன்றிய அசாதாரணமான சாந்தியைக் கண்டு சிறிது சமாதானம் அடைந்தான் ராமசந்திரன். பாவம்! அணையும் விளக்கு ஒரு கணம் ஒளியுடன் விளங்குகிறது என்பதை அவன் அறியவில்லை

பிரேமா அவன் முகத்தைப் பார்த்ததும் அவன், "என்ன வேண்டும் பிரேமா? இப்போது எப்படி இருக்கிறது?" என்று அன்பொழுக வினவினான், தன் விரல்களால் அவள் நெற்றியை வருடிக்கொண்டே.

பிரேமாவின் வெளிறிய இதழ்களில் ஒரு புன்னகை தோன்றியது. "ஆமாம், உலகில் எல்லாப் பாபங்களுக்கும் மன்னிப்பு உண்டு. அதிலும் அறியாமற் செய்த குற்றத்திற்கு மன்னிப்பு அவசியம் உண்டல்லவா?" என்றாள். பிறகு காமுவையும் பார்த்து, "அக்கா, போனதை யெல்லாம் மறந்து விடுங்கள். இதுவரையில் நான் உங்கள் வாழ்விற்குக் குறுக்கே நின்றதையும் மன்னித்துவிடுங்கள்" என்றாள்.

"ஐயோ பிரேமா! என்ன வார்த்தை சொன்னாய்! நீ எப்படியாவது பிழைத்து எழுந்தால் போதும்" என்று அரற்றினாள் காமு, கண்ணீர் அருவிபோலச் சோர.

ஐந்து நிமிஷங்கள் கழிந்தன. காமுவைப் பார்த்துப் பிரேமா, "அக்கா, இனிமேல் கண்ணனுக்கு நீங்களே தாயார். குழந்தையையும் அவரையும்....." என்று முடிக்காமலேயே கண்களை மூடிக்கொண்டாள்.

"பிரேமா!" என்றான் ராமசந்திரன். அக்குரல் அவனது இருதயத்தின் ஆழத்திலிருந்து எழுந்த பிரேமையுடன் கலந்து ஒலித்தது.

வி. லோகநாதன்

நழுவி விழுவானேன்? 55

1

இரவு மணி பத்து இருக்கும். வானம் வெள்ளித் தீவாக விளங்கியது. ஆகாயத்து மோகினியாகிய சந்திரிகையின் பிரகாசம். அன்று பௌர்ணமி யாதலால் மதியப் பெண் சல்லாபமுடன் வான வீதி யிலே பிரயாணம் செய்துகொண்டிருக்கிறாள்.

அந்தத்தெருவில் அது கோடி வீடு. அந்த வீட்டின் மேல் மெத்தையில் உள்ள அறையின் சாளரம் திறந்திருக்கிறது. அந்த அறையில் ஒரு விதமான தெய்வீக எழில் இடம் பெற்றிருக்கிறது. "சித்திரம் உள்ள அறை சிந்தனை நிறைந்த அறை" என்பார்கள். நான்கு பக்கங்களிலும் மாட்டப்பட்டிருந்த படங்கள் அங்கு வசிப்பவரின் மனோபாவத்தை எடுத்துக்காட்டுவனவாய் இருந்தன.

ஒரு பக்கம் வீர வேதாந்தியாகிய ஸ்வாமி விவேகானந்தர் கம்பீரமுடன் கைகளைக் கட்டிக்கொண்டு தலைப்பாகையுடன் விளங்கும் காட்சி. மற்றொரு பக்கம் அவதார புருஷராகிய ராம கிருஷ்ணரின் உருவம். அதற்கு எதிராகத் தம் பொக்கை வாய்ச் சிரிப்பினுல் பூவுலகையே மயக்கிக் கொண்டிருக்கும் சாந்த சொரூபி மகாத்மாஜியின் படம். இன்னும் ஒரு பக்கத்தில் லோக ரக்ஷகர் ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட காட்சி. மார்பு வரையில் தீட்டப்பட்டுள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணனுடைய படமும் முக்கியமான இடத்தில் மாட்டப்பட்டிருக்கிறது.

கிழக்கே முகம் பார்த்துப் போடப்பட்டிருக்கும் அந்த மேஜை யின்மீது பரிபூரண கலா அம்சம் விளங்க வார்க்கப்பட்ட கௌதம புத்தரின் வெண்கல விக்கிரகம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மேஜைக்கு வலது புறமாக ஓர் அலமாரி. அதில் உள்ள நூல்கள் எல்லாம் தத்துவ சம்பந்தமானவைகளே.

நெருப்புக் குச்சியைக் கிழிக்கும் சப்தம். கையில் இருந்த ஊது வத்திகளை அந்த வாலிபன் நெருப்புக் குச்சியின் மூலமாகப் பற்ற வைத்தான். அவைகளைக் கௌதம புத்தர் விக்கிரகத்தின் பக்கத் தில் உள்ள, கைப்பிடி போல் செய்யப்பட்டிருக்கும் சிறிய பீட மொன்றில் செருகினன்.

கொளுத்தி வைக்கப்பட்ட ஊதுவத்திகளி லிருந்து நறுமணம் நிறைந்த புகைப் படலங்கள் எழுந்தன. அந்தச் சுகமான மணத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த ஊதுவத்திகளின் 'தேகம்' எரிந்து சாம்பலாய்க்கொண்டே வந்தது.

பிறருக்குச் சுகந்த மணத்தை அளிக்கும் பொருட்டுத் தன் தேகத்தையே அர்ப்பணம் செய்த அந்த ஊதுவத்திகளின் தியாக

புத்தியை எண்ணிக் கொண்டே அந்த இளைஞன் படுக்கச் சென்றான்.

ஆனால் நித்திரை என்னவோ வரவில்லை. மனம் 'இடக்கு'ச் செய்தது. "மனக் குரங்கு என்று தெரியாமலா பெரியோர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்?" என்று சொல்லிக் கொண்டே சட்டென்று எழுந்தான். கொஞ்ச நேரம் அங்கும் இங்குமாக உலாவினான்.

"தாமரை இலையில் உள்ள தண்ணீர்போல இருக்கவேண்டும் என்கிறார்கள் வேதாந்திகள். என் மனம் தாமரை இலைத் தண்ணீரைப்போல் பற்றற்று இருப்பதற்குப் பதிலாகத் தத்தளிக்கிறது. சே! என் உறுதி எல்லாம் ஏன் இப்படித் தளர்கிறது?" என்று தன்னைத் தானே நொந்துகொண்டான்.

அப்பொழுது சாளரத்தின் வழியாகக் குளிர்ந்த வெண்ணிலவு அறையின் உள்பக்கமாக எட்டிப் பார்த்தது. "இருட்டின் நடுவில் ஒளி உயிர் கொண்டு எழுகிறது" என்று அதைப் பார்த்ததும் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு வான மண்டலத்தை நோக்கினான். சந்திரிகை அவனது கட்டுப்பாட்டின் கடிவாளத்தை அறுத்துவிட்டு மனக் குதிரையை யதேச்சையாக விடுதலை செய்து விட்டது.

பெரு மூச்சுகள் பல தோன்றி அவனது தேகத்தில் ஓர் அதிர்ச்சியை உண்டாக்கின. "பொங்கி வரும் நிலவுபோல அவள் ஒளிமுகம்" என்று எப்பொழுதோ படித்த ஞாபகம் அவனுக்கு வந்தது. ஞாபகம் பழைய சம்பவத்தின் பல்லவிதானே? அதற்குப் பின் அநுபல்லவி, சரணம் எல்லாம் தொடர்ந்தன! நடந்து போன நிகழ்ச்சிகள் அவன் அகக் கண்முன் மறுபடியும் நடை பெற்றன.

"ஈதென்ன மூரட்டு வேதாந்தம்?" என்று அந்த விண்ணின் மோகினி அவனைப் பார்த்துக் கேட்பதுபோல ஒரு தோற்றம். "ஆம்; மூரட்டு வேதாந்தந்தான்." இப்படி அந்த வாலிபன் தன்னை நோக்கியே சொல்லிக்கொண்டான்.

"நீ இன்னும் பக்குவப் படவில்லை. புஸ்தகப் படிப்பு மூளையைத் தான் குழப்பும். இது என்ன சந்நியாசிப் பித்து! மனத்திற்கு உகந்த அவளைக் கலியாணம் செய்துகொண்டு சுகமாக வாழ்க்கை நடத்துவதை விட்டுவிட்டு, இப்படி யாராவது மூரட்டு வேதாந்தத்தில் இறங்கித் தலையைப் போட்டு உடைத்துக் கொள்ளுவார்களா?"

இப்படி யாரோ மிகவும் கம்பீரத்துடன் மனத்திற்குள் மறைந்து அவனைக் கேட்டுவிட்டுக் கல கலவென்று சிரிப்பதாக அவனுக்குத் தோன்றியது. "ஐயோ! என்னை மறக்க உங்களுக்கு மனசும் வந்ததா? என் ஆத்மா உங்களுக்காக எவ்வளவு

தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறது? தெய்விகத்தைப் பற்றிப் பேசும் தாங்களா இப்படிக் கல்லாய் விடுகிறீர்கள்? கல்லாய் மாறுவதுதான் தெய்விகமா? இருதயத்தை வலியச் சித்திரவதை செய்வதுடன் அதை அணைய விரும்புவோரையும் வதைப்பதா தத்துவத்தின் தாத்பரியம்? கோவில் தெய்வந்தான் கல் என்றால், உங்கள் இருதயத் தெய்வமும் கல்லாய் மாறி விட்டதா?" என்று அந்த மின்னுள் நேரிலேயே வந்து கேள்வி களைக் கேட்கிறாள் என அவன் எண்ணித் திடுக்கிட்டான்.

தன் சிரசை அழுத்தமாகப் பிடித்துக்கொண்டு அப்படியே படுக்கையில் படுத்தான். கண்களைக் கெட்டியாக மூடிக்கொண் டான். சரீரம் அதிர்ந்தது. அவன் என்ன முயன்று என்ன பயன்? அவன் எண்ணத்தில் அந்தச் சௌந்தரிய தேவியின் உருவமே ஓடியது. செக்கச் செவேலென்ற முகம் கன்னங் கறேலென்ற கேச ஜாலத்தால் கவரப்பட்டிருக்கிறது. பத்ம நேத்திரங்கள் புன்னகையின் ஒளியுடன் மிளிருகின்றன. பட்டுப் பூச்சி போன்ற சிவந்த அதர தளங்கள் அசையுந்தோறும், மயில் இறகின் அடிக்குருத்தைப் போன்ற பல்லின் ஒளி தலை காட்டியது. அவளுடைய நயனாரவிந்தம் காதலின் மிருதுத் தன்மையைப் பேசாமல் பேசுகின்றது. இரத்தம் போன்ற அந்த இதழ்களின் கோடியிலே அடிக்கடி புன்முறுவல் திருட்டுத்தனமாய்த் தலையை நீட்டுகிறது.

"அந்தோ! இந்தக் கண்ணை விட்டு இவள் போகமாட் டாளா?" என்று துடிப்புடன் புகன்றான் அவன். "நான்தான் அங்கு அடைக்கலம் புகுந்துவிட்டேனே" என்று அந்தச் சுந்தரி பதில் கூறுவதாக ஒரு தோற்றம். அவ்வளவுதான். அவன் மனம் 'நாறு குதிரை' வேகத்தில் ஓட ஆரம்பித்தது. "ஓம், சாந்தி, ஓம், சாந்தி!" என்று அவன் சொல்லிக் கொண்டான். எண்ணத்தின் சுமை அவன் நயன இதழ்களைக் கனமாக்கியது.

2

அன்று ஞாயிற்றுக்கிழமை; பள்ளிக்கூடம் இல்லை; விடுமுறை நாள்.

காலை ஏழு மணி: அந்த அழகான மெத்தை வீட்டிலிருந்து அவள் புறப்பட்டாள். இன்றைக்கெல்லாம் இருந்தால் அவளுக்கு வயசு பன்னிரண்டுக் குள்ளாகத்தான் இருக்கும். யாரிடமும் வெட்கப்படாமல் கல கலவென்று பேசும் சுபாவம் உடையவள். புத்திசாலித்தனமாகப் பேசுவாள். சிறு குழந்தையாக இருக்கும் போதே இத்தகைய அறிவுத் திறமை அவளிடம் காணப்பட்டது. எல்லோரும், "அடேயப்பா, முளைக்கிறதற்குள்ளேயே இது என்ன பேச்சுப் பேசுகிறது!" என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள்.

அவள் பெயர் அலமு. கண்கள் மந்திர பாணங்கள். கண் வீச்சில் குறும்புத்தனம் கலந்திருக்கிறது. கண்ணுடி போன்ற

கன்னங்கள் நல்ல புஷ்டியுடன் விளங்குகின்றன. வலுத்த புருவக் கட்டு அவளுடைய முகாரவிந்தத்திற்கு வெற்றிக் குடை பிடிப்பது போல் காட்சி அளிக்கிறது. அனகபாரம் நன்கு வாரப்படவில்லை. முதல் நாள் பின்னிய பின்னல் அப்படியே காணப்படுகிறது. ரோஜாவர்ணப் பாவாடை ஒன்றை அவள் கட்டியிருந்தாள். மேலே நீலவர்ணத் தாவணி, கொம்பைச் சுற்றிய கொடிபோலத் தவழ்கிறது. கைகளில் மெல்லிய தங்க வளையல்கள். காலில் 'ஜிலேபி'க் கொலுசு.

'உல்லன்' நூல்களால் பின்னுவதற்கென்றே சின்னச் சின்ன வட்டமான துவாரங்களுடன் கூடிய அட்டை ஒன்றைக் கரத்தில் வைத்தபடியே அலமு அந்த வீட்டிற்குள் நுழைந்தாள். அவளுடைய நெருங்கிய உறவினரின் வீடுதான் அது.

மிராசுதார் ராமசாமி நாயுடு என்றால் அந்த ஊரில் உள்ள எல்லோருக்கும் தெரியும். நிலபுலன்கள் நிறைய உடையவர். சொக்கமாகப் பாங்கியிலும் பணம் இருந்தது. ஆகவே சுகமாகக் காலத்தைக் கழித்து வருபவர். அவருடைய ஏக புத்திரன்தான் நாம் மேலே கூறின இளைஞன் வரதன்.

மிராசுதரர் வீட்டிற்குள்ளே தங்கு தடையின்றிச் சென்றாள் அலமு; "அம்மா, அம்மா!" என்று கூப்பிட்டாள்.

ராமசாமி நாயுடுவின் மனைவி தாயாரம்மாள், "அலமு, எங்கடி காத்தாலேயே புறப்பட்டு விட்டாய்? காபி சாப்பிட்டாயா? வா, வா. காபி சாப்பிடலாம்" என்று அழைத்தாள்.

"நான் காபி சாப்பிட்டாச்சு. அது கிடக்கட்டும், வரதன் எங்கே? இதோ பார், இதில் ரோஜாப்பூ மாதிரி படம் போட்டு நூலினுல் பின்ன வேண்டும். வரதனுக்கு 'டிராயிங்' போட நல்லாத் தெரியும். அவனிடம் சொல்லி எனக்கு ரோஜாப் பூ மாதிரி 'டிராயிங்' போட்டுத் தரும்படி சொல்றயா? அதுக்குத் தான் காலையிலே இங்கே ஓடிவந்தேன்."

"அவன் மாடியிலே படிச்சுக்கிட்டு இருக்கான். இன்னம் காபி சாப்பிடக் கூட வல்லே. நீதான் போய்க் கேளேன். போட்டுத் தாரான்."

அலமு வெகு வேகமாகப் படிகளில் ஏறினுள். அடுத்த நொடியில் எதையோ நினைத்துக் கொண்டவளாய் மிகவும் மெதுவாக அடிமேல் அடி வைத்து நடந்தாள். பூனை மாதிரிப் பதுங்கிப் பதுங்கி அங்கிருந்த அறையை அண்டினுள். வரதன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதை ரகசியமாகப் பார்க்க வேண்டும் என்பதே அவள் நோக்கம்.

அறையின் கதவு சார்த்தப்பட்டிருந்தது; ஜன்னலின் கதவும் மூடப்பட்டிருந்தது. அலமு சப்தம் போடாமல் ஜன்னலின் இடுக்கு வழியாக உள்ளே பார்த்தாள். பார்த்ததும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்ட மாதிரி இருந்தது. "ஐயோ! வரதனுக்குப்

பைத்தியம் பிடிச்சுவிட்டதா? அடடா! தலை கீழாக நிற்கிறானே!" என்று நினைத்தாள்.

வேடிக்கை செய்து பார்ப்பதில் பிரியமுள்ளவ ளாதலால் அவள் மனத்தில் திடீரென்று ஒரு யோசனை உதித்தது. மௌன மாகத் திரும்பிக் கீழே இறங்கிப் போனாள். தாயாரம்மாளின் கையைப் பிடித்திழுத்தாள். "சப்தம் போடாமே வா. உன் பிள்ளை தலை கீழாய் நிற்கிற விநோதத்தைப் பார்க்கலாம்" என்றாள்.

"என்னடி, உனக்குப் பைத்தியமா? தலையாவது கீழாவது — போடி போ" என்றாள் தாயாரம்மாள்.

"ஐயோ, வாயேன்! நேரே காட்டுகிறேன்" என்றாள் அலமு.

அலமுவும் தாயாரம்மாளும் மேலே மெதுவாகச் சென்றனர். அலமு சொற்படி ஜன்னலின் இடுக்கு வழியாகத் தாயாரம்மாள் பார்த்தாள். அப்பொழுதுதான் வரதன் சிரசாஸனம் செய்ய முயற்சி செய்துகொண்டிருந்தான்.

இதைக் கண்டதும் தயாரம்மாளுக்குத் திகில் பிடித்து விட்டது. அறையின் கதவை ஓங்கித் தட்டினாள். தாழிடப் படாமல் இருந்ததால் அது திறந்துகொண்டது.

"அம்மா, கிட்டே போய்விடாதே! வரதனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது" என்று சிரித்துக்கொண்டே கத்தினாள் அலமு.

"இதென்னடா வேலை? குடல் கிடல் ஏறிச் சாவதற்கா இப்படிச் செய்கிறாய்? நல்ல வேளை, அலமு வந்து சொன்னாள்" என்றாள் தாயாரம்மாள்.

எதிர்பாராத இச் சம்பவம் வரதனைத் திடுக்கிட வைத்தது. "அதெல்லாம் ஒண்ணும் இல்லை, அம்மா. குடல் கிடல் ஒண்ணும் ஏறாது, பயப்படாதே" என்று சொல்லிக்கொண்டே அலமுவைப் பார்த்துப் பற்களைக் கடித்தான். அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். தாயாரம்மாளுக்கும் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

"சரி, சரி, வா! நேரமாச்சு, காபி போட்டு வெச்சிருக்கேன். குடிச்சுவிட்டு, அலமு என்னமோ 'டிராயிங்' போடணும்னு சொல்றா, அதைப் போட்டுக் கொடு."

"யாருக்கு? அலமுவுக்கா? 'டிராயிங்' வேறயா?" இப்படி வரதன் சொல்லிக்கொண்டே அலமுவைப் பார்த்துக் கோணங்கி காட்டினான்.

இதற்கிடையில் அலமு அங்கு மேஜையின் மீது விரித்த படியே இருந்த ஒரு புஸ்தகத்தை எடுத்தாள். அது யோகாப்பி யாசங்களைப் பற்றிப் படங்களுடன் விவரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகம்.

"அம்மா, அம்மா, பாத்தியா, இதை? இதில் தலை கீழாக யாரோ நிற்கிற மாதிரி படம் போட்டிருக்கு. இதைப் பார்த்துத் தான் வரதனும் செய்திருக்கான்" என்றாள் அலமு.

வரதன் கோபத்துடன் அவளிமிருந்து அந்தப் புஸ்தகத்தைப் பிடுங்கினான். அலமு குறும்புத்தனமாகப் புன்னகை செய்தாள். வந்துவிட்டது மகா கோபம் வரதனுக்கு; அந்தப் புஸ்தகத்தினாலேயே அவளை அடித்துவிட்டான்.

தாயாரம்மாள் குறுக்கிட்டுத் தடுத்தாள். அதற்குள் மாடியில் நடந்த 'கலாட்டா'வின் சப்தத்தைக் கேட்டு பிராசுதாரர் அங்கு வந்தார். தாயாரம்மாள் அவரிடம் நடந்த விஷயங்களைக் கூறினாள்.

"அட ராமா, என் அறையிலிருந்து இவனை யார் இந்தப் புஸ்தகத்தை எடுக்கச் சொன்னது? அதற்குள் யோகாப்பியாசமா?" என்று அதட்டிவிட்டுப் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டு திரும்பினார். தாயாரம்மாளும் அவரைப் பின் தொடர்ந்தாள்.

"வரதா, என் மேல் கோபமா? அடே! 'டே' விட்டுடாதே. எனக்கு 'டிராயிங்' போட்டுத் தாடா!"

"சனியன் மாதிரி காலையிலே எங்கே வந்து சேர்ந்தே?"

"என்னை அடிச்சியே, நான் கோவிச்சுக்கிட்டேனே? நீ என்னமோ பிரமாதப்படுத்துறயே!" என்றாள் அலமு.

வரதனுக்கு அலமுவிடம் அளவற்ற பிரியம் உண்டு. அவன் கோபங்கொண்டாலும், அவள் சிரித்த அதே நிமிஷம் அவனும் நகைத்து விடுவான். அவளுக்கும் அவனிடம் அப்படித்தான். அவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே சிநேகிதமானவர்கள். இரண்டு பேரும் எத்தனையோ முறைகள் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் அடுத்த நிமிஷம் சமாதானமாகி விடுவார்கள். ஒரு நாளாவது வரதனைப் பார்க்காமல் அலமு இருக்கமாட்டாள்; வரதனுக்கும் தினசரி அவளைப் பார்த்தால்தான் சமாதானம் ஏற்படும்.

3

நவ ராத்திரி: ஒவ்வொரு வீட்டிலும் அப்போது படிகளை அமைத்துப் பழைய, புதிய பொம்மைகளை அடுக்கி, கொலு வைப்பது வழக்கமல்லவா? அலமு வீட்டிலும் கொலு வைப்பதற்காக முன் ஏற்பாடுகள் நடந்தன. அலமு, அவள் சகோதரன் ராமானுஜம், வரதன் ஆகிய மூவரும் பழைய பொம்மைகளையெல்லாம் எடுத்துத் துணியால் துடைத்துப் படிகளில் அடுக்கினர்.

கடைசியில் வரதன் தன் கைகளைக் கழுவுவதற்காக வாசல் பக்கம் சென்றான். 'சோப்'பினால் தேய்த்துவிட்டுத் தன் இரு கரங்களையும் நீட்டினான். அலமு ஒரு சிறிய பாத்திரத்தின் மூலம்

அக் கரங்களின் மீது தன்னீர் ஊற்றினாள். அப்பொழுது அலமுவின் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன.

"அடே! எப்போ நீ கையில் பச்சை குத்திக்கொண்டாய்? நான் இதுவரை பார்க்கவே இல்லையே! உன் பேரை அல்லவோ எழுதியிருக்கு?"

"அதை ஏன் கேட்கிறாய்? ஒரு நாள் என் சிநேகிதர்களில் சிலர் பச்சை குத்திக் கொண்டார்கள். நான் வேண்டாமென்று தான் சொன்னேன். ஆனால், அவர்கள் பிடிவாதமாய் என் கையிலும் குத்தும்படி செய்துவிட்டார்கள்."

"உன் கைக்கு இந்தப் பச்சை நிறம் நல்லாத்தான் இருக்கு" என்று சொல்லி அலமு புன்னகை செய்தாள்.

"அண்ணு, அண்ணு! வரதன் கையைப் பார்த்தியா? பச்சை குத்திக்கொண்டு இருக்கானே; உனக்குத் தெரியுமா?"

"எங்கே? எனக்குத் தெரியாதே!" என்று அவசரமாக வரதன் சமீபம் ஓடிவந்தான் ராமானுஜம்.

"இதோ பார், வரதன் சிகப்பான கைக்குப் பச்சை நல்லாத்தானே இருக்கு? யாராவது வரதன் அல்ல என்று சொல்லிட்டா என்ன செய்கிறதுன்னு நினைச்சுத்தான் அவன் பெயரையே அச்சு அடிச்ச மாதிரி குத்திக் கொண்டிருக்கான்!"

வரதன் அவள் பேச்சை ரஸித்தான்.

"அதைச் சொல்லத்தான் நான் வாயெடுத்தேன். நீயே சொல்லிவிட்டாய்" என்றான் ராமானுஜம்.

"கோட்டா பண்ணுதீர்கள்" என்று புன்முறுவலுடன் அலமுவைப் பார்த்துக்கொண்டே கூறினான் வரதன்.

4

"நீ எதற்காக இங்கே வந்தாய்?"

"பின் நான் எங்கே போவது?"

"எங்கேயாவது போ. என்னை வந்து தொந்தரவு செய்யாதே."

"அப்படியென்றால் பால்யம் முதற்கொண்டு வளர்த்து வந்த நம் காதலின் கதி என்ன?"

"காதலாவது, மண்ணாங் கட்டியாவது! என் வாழ்க்கையின் லக்ஷ்யத்தை மாற்றிக்கொண்டு விட்டேன். இது உனக்குத் தெரியாதா? இப்பொழுது சொல்லுகிறேன், கேட்டுக்கொள். என்னை இனி நம்பவேண்டாம். இந்த மாயையில் நான் விழ மாட்டேன். என் புத்தி ஆத்ம விசாரணையில் இறங்கிவிட்டது. நீயல்ல, வேறு எத்தகைய ரூபவதியாலும் என்னை ஏமாற்ற முடியாது. இதை நிச்சயமாக நம்பலாம். ஆத்ம விடுதலைக்கு இந்தப் பெண்கள் பெரிய தடை என்று நினைக்கிறேன்."

"பக்குவப்படாத கொள்கை! சிருஷ்டியில் பெண்கள் பாபகரமானவர்களா? அவர்கள் குறுக்கே நிற்பதாக நீங்கள் ஏன் கருதுகிறீர்கள்? இது சரியல்ல. விஷ்ணு லக்ஷ்மியுடன் இருக்கிறார்; சிவபிரான் உடலில் பாதியாகப் பார்வதி விளங்குகிறாள்; பிரமன் சரஸ்வதியுடன் வாழ்கிறார். இவ்விதம் நீங்கள் வணங்கும் கடவுள்கள் எல்லாரும் தாம்பத்திய வாழ்க்கையுடன் கூடியவர்கள் என்றே புராணங்கள் கூறுகின்றன. அவைகளை எல்லாம் மறந்துவிட்டீர்களா?"

"இந்த உபதேசத்தை உன்னிடமிருந்து நான் கேட்க விரும்பவில்லை. நீ போகலாம்."

"எங்கே?"

"இஷ்டமான இடத்திற்கு."

"இது தர்மமா? இதுதான் வேதாந்தம் படித்ததன் விளைவா? வேதாந்திகளும் மனிதர்கள்தானே? அவர்களுக்கு இருதயம் கிடையாதா? நான் எங்கே செல்வேன்! நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் மறந்துவிட்டீர்களா? என்னை இப்படி நடுச் சந்தியில் கைவிடலாமா? இது நியாயம் அல்ல. சத்தியமாகச் சொல்லுகிறேன்: தாங்கள் கைவிட்டால் நான் உயிர் விடுவது நிச்சயம். பெண் பாவம் பொல்லாது. பாவம், புண்ணியம் உங்கள் கையில்."

"வம்பு அளக்கவா இங்கே வந்திருக்கிறாய்? மரியாதையாகப் போய்விடு. நீ இருந்தாலும் இறந்தாலும் எனக்கு ஒன்றுதான். போ, போ!"

"முடியாது, முடியாது. என் கதி என்ன?"

"யாரைக் கேட்கிறாய்?"

"உங்களைத்தான். 'கட்டாயம் கல்யாணம் செய்து கொள்ளுகிறேன்' என்று வாக்குறுதி செய்து கொடுத்த உங்களைத்தான் கதி என்றிருக்கிறேன்."

"நீ போகாவிட்டால் உன்னைப் பலாத்காரமாகப் பிடித்து வெளியே தள்ளுவேன். என் மனசைக் கெடுக்க வந்த மாயையின் சொரூபம் நீ" என்று அவன் அவளைப் பிடித்துத் தள்ளினான்.

"ஐயோ! நான் எங்கே போவேன், தெய்வமே!" என்று சொல்லியவண்ணம் அவள் மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள்.

இந்தக் கட்டத்தில்தான் வரதன் கனவு கலைந்தது. படுக்கையிலிருந்து திடீரென்று எழுந்தான். தன் கண்களைக் கசக்கிக் கொண்டான். நான்கு பக்கங்களிலும் பார்த்தான்.

"ஈசுவரா, இதுவும் உன் சோதனையா? அலமுவை மறக்கும் சக்தியை எனக்கு அளிக்கமாட்டாயா? இந்தப் போராட்டத்துடன் எத்தனை நாட்களைக் கழிக்க முடியும்? பால்ய முதற் கொண்டே எனக்கு இந்த வேதாந்த விஷயங்களில் பற்றை உண்டாக்கிய நீ, இந்தப் பிரேமை என்கிற மயக்கத்தையும் ஏன்

உண்டாக்கினாய்? அலமு, நீதான் தயவு செய்து என்னை மறந்து விடேன்" என்றான்.

வரதன் சென்னையில் தனித்த மாடியில் ஓர் அறையை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வசித்து வருகிறான். பி. ஏ., பரீட்சைக்குப் படிக்கிறான். அவன் தகப்பனார் மாதந்தோறும் செலவுக்குப் பணம் அனுப்பி வருகிறார்.

வரதன் தங்கமானவன். சிறு குழந்தை முதற்கொண்டே ஈசுவர பக்தியுடையவன். நல்ல புத்திசாலி. நன்றாக அறிவு வளர வளர வேதாந்த நூல்கள் அவன் மனத்தை ஆகர்ஷித்தன. பெண்ணாசையை ஒழிக்கவேண்டும் என்பதை அறிவிக்கும் பல புஸ்தகங்கள் அவன் மூளையைக் குழப்பிவிட்டன.

வனிதாமணிகளிடம் ஒரு வகை வெறுப்புக் கொள்ளத் தொடங்கினான். ஸ்வாமி விவேகானந்தரின் வாழ்வு அவன் மனத்திற்கு மிகவும் பிடித்திருந்தது. "ஞான மார்க்கத்தில் இறங்கவேண்டும். இமய மலையை அடைந்து தியானத்தில் அமர்ந்து ஈசுவரனுடன் கலக்கவேண்டும்" என்ற அபேக்ஷை அவன் உள்ளத்தைக் கவர்ந்திருந்தது.

இதன் விளைவாக அவன் ஆத்ம விசாரணையில் மனத்தை ஈடுபடுத்த முயன்று வந்தான். இளமை முதற்கொண்டே உருவாகி வளர்ந்து வந்த அலமுவின் காதலையும் திரஸ்கரிக்க முடிவு கட்டி விட்டான். ஆனால் மனம் கட்டுப்படாமலேயே இருந்தது.

5

அலமுவின் தமையன் ராமானுஜத்திற்குக் கல்யாணம். மதுரை நகரின் ஒரு முக்கியமான தெருவில் உள்ள ஒரு பெரிய வீட்டில் அந்தக் கல்யாணம் நடந்தது. கல்யாண வைபவத்தில் கலந்து கொள்ளுவதற்காக வரதன் ரஜாப் பெற்றுக்கொண்டு ஒரு நாள் முன்பாகவே சென்னையிலிருந்து மதுரைக்கு வந்துவிட்டான். கல்யாண ஏற்பாடுகளில் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டான்.

வரதன் அலமுவுடன் பேசக் கூடாதென்றே சங்கல்பம் செய்துகொண்டான். அவளுடன் பேசாமல் இருக்கத் தந்திரமாகச் சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி நடந்தான்.

அலமு புத்திசாலி அல்லவா? வரதனுடைய நோக்கத்தை விரைவில் ஊகித்து அறிந்துகொண்டாள். அவன் பராமுகமாயிருப்பது அவளது இருதயத்தை நைய வைத்தது. தனியாகச் சந்தித்து அவனுடன் சம்பாஷிக்கவே அவள் துடித்தாள். ஆனால் அதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. வெகு சுலபமாக அவளும் வரதனும் சந்தித்துப் பேசிக் கொள்ளலாம். வரதன் அதற்கு இடம் கொடுக்காமலே நடந்துகொண்டான்.

ஊர்வல தினம் வந்தது. பிரபல நாகசுரக்காரனின் கச்சேரியுடன் புறப்பட்ட அந்த ஊர்வலம், இப்பொழுது கல்யாண வீட்டை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருக்கிறது. அழகான கண்ணாடி முத்துக்களால் சித்திர வேலைப்பாடுகளுடன் படகைப்

போல ஜோடிக்கப்பட்ட மோட்டார் வாகனத்தில் பெண்ணும் மாப்பிள்ளையும் அமர்ந்திருக்கிறார்கள். அந்த மோட்டார் வண்டியின் ஓரமாக மாப்பிள்ளையுடன் பேசிக் கொண்டே வரதன் வருகிறான்.

ஊர்வலம் தெருக் கோடியில் நின்றது. நாகசுர வித்துவான், சில்லறை உருப்படிகள் வாசிக்கத் தொடங்கினான். தவுல் காரனும் பக்க வாத்தியமென்ற முறையில் 'இதுவாக' வாசிக்க ஆரம்பித்தான். ஆனால் இடை இடையே சில சந்தர்ப்பங்களில் தாளக்காரன் நாகசுரக்காரனின் கோபப் பார்வைக்கு ஆளானான். இந்தக் காட்சியை மிகவும் பிரசித்தி பெற்ற மேளக் கச்சேரியில் கூடச் சர்வ சகஜமாகப் பார்க்கலாம். சில வேளைகளில் நாகசுரக் காரனே தாளத்தைத் தவறவிட்டுக் கால நிர்ணயமில்லாமல் வாசித்துவிடுவான். அதைச் சமாளிக்கவும், பிறர் அதை அறியாமல் இருக்கவும் அவன் தாளக்காரன் தப்பாகத் தாளம் போட்டு விட்டான் என்று அவன்மீது பாய்வதும் உண்டு.

மாப்பிள்ளையின் தகப்பனுடைய வேண்டுகோளின்படி வரதன் சில ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக ஊர்வலத்தை விட்டுக் கல்யாண வீட்டை நோக்கிப் புறப்பட்டான். குறிப்பிட்ட ஒரு வெள்ளித் தட்டை எடுப்பதற்காகக் கல்யாண வீட்டிற்குப் பக்கத்தில் அவன் தங்கியிருந்த வீடுதிக்குச் சென்றான். சென்றதும் ஆச்சரியமும் ஒரு வகையான அதிர்ச்சியும் அவன் கால்களைப் பின்னுக்குத் தள்ளின.

துக்கமே உருவெடுத்த பதுமைபோல அலமு அங்கே உட்கார்ந் திருந்தாள். விழிக் கடைகளிடையே நீர் ததும்பி நின்றது. காலடிச் சப்தம் கேட்டதும் 'குப்' என்று எழுந்தாள்; கண்களைத் துடைத்த வண்ணம் தன்னைச் சமாளித்துக் கொண்டாள். பேச வேண்டும் என்று அவள் கனிவாய் துடித்தது. 'அப்படியே அவனைப் பிடித்துக்கொள்' என்றது ஆசை. வெட்கமும், கட்டுப் பாடும், ஒழுக்கத்தின் பழக்கமும் அவளைத் தடுத்தன.

ஒன்றும் சொல்லாமல் வரதன் வெளியே போக எண்ணித் திரும்பினான். அவளால் இதைப் பொறுக்க முடியவில்லை. வெட்கம் விடைபெற்றது. ஒழுக்கமாகிய 'உடையில் மறைந்து வரும் கட்டுப்பாடு தகர்ந்தது. ஆசையும் ஆவலும், அன்பும் பிரியமும் இறக்கைகள் கட்டிக்கொண்டு போட்டி போட்டுப் பறந்தன. முடிவு என்ன? ஓடிப்போய் அவன் கையைப் பற்றிக் கொண்டாள். "நான் என்ன பாவம் செய்தேன்! உங்களுக்கு என் முகத்தைக்கூடப் பார்க்கப் பிடிக்கவில்லையா?" என்று பரிதாபமுடன் கேட்டாள்; விம்மினாள். அவளது அழுதக் குரலில் காதலும் ஆசையும் கலந்திருந்தன.

வரதன் மௌனம் சாதித்தான். அவள் கரத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றான். அவள் விடவில்லை. அவன்

செய்கை அவள் நெஞ்சத்தில் முள்ளைக்கொண்டு குத்துவது போல இருந்தது.

"அலமு, நீ இன்னும் சின்னக் குழந்தைதானே? யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?"

"அந்த நினைப்பே எனக்கில்லை."

"சரி, சரி. ஊர்வலம் சமீபத்தில் வந்துவிட்டதென்று நினைக்கிறேன். நான் போகவேண்டும்."

"முடியாது. இன்னும் ஊர்வலம் நெருங்கவில்லை."

"அலமு இதுவா பரிகாசம் செய்யும் நேரம்? நீ எதற்காக இங்கே வந்தாய்? நீ ரொம்ப குணவதி என்றல்லவோ நினைத்திருந்தேன்?"

"என்னை ஏன் இப்படி வார்த்தைகளால் கொல்ல வேண்டும்? வேண்டாம். நான் ஏன் இங்கே வந்தேன் என்பதை உங்கள் நெஞ்சில் கை வைத்துக் கேட்டுப் பாருங்கள். அந்த நெஞ்சு பதில் சொல்லும்."

வரதன் பதில் பேசாமல் வெள்ளித் தட்டை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அலமு சிறு குழந்தையைப் போலத் தேம்பித் தேம்பி அழுதாள்.

இதைப் பார்த்து வரதன், "அலமு, நீ உலகம் அறியாதவளாய் இருக்கிறாயே! இதுதான் புத்திசாலிக்கு அழகா?" என்று கேட்டான்.

"ஒரு சங்கதி....." என்றாள் அலமு.

"சீக்கிரம் சொல்."

"கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள்."

"ரொம்ப சந்தோஷம். உன் அண்ணன் கல்யாணத்தில் உழைப்பதைவிடப் பன்மடங்கு அதிகமாக உன் கல்யாணத்திலும் உழைக்கிறேன்."

அவளுடைய உள்ளத்தில் ஓர் அக்கினிப் பிரளயத்தை உண்டாக்கின அந்த வார்த்தைகள். இருதய மண்டலம் எரிமலையின் அதிர்ச்சியால் வெடிப்புக் கொண்டதுபோல மாறிவிட்டது.

இந்தச் சமயம் ஊர்வலம் வந்துவிட்டது. கீழே யாரோ, "வரதா! வரதா!" என்று கூப்பிடும் சப்தம் கேட்டது.

"அலமு, மன்னித்துக்கொள். பிறகு எல்லாம் பேசிக் கொள்ளுவோம். நான் போகிறேன்" என்று கூறிவிட்டு வரதன் அங்கிருந்து போய்விட்டான்.

அலமுவின் மூளை சுழன்றது. உயிர் துடித்தது. வரதனுடைய வார்த்தைகளினூடே அமைந்த தாத்பரியம் அவளது சந்தேகத்தை அதிகமாக்கியது. எத்தகைய முடிவுக்கும் அவளால் வர முடியவில்லை. வருங் காலம் மகா பயங்கரமாகத் தோன்றியது. உயிர் இருந்தும் அற்றவளைப்போல் ஸ்தம்பித்து அப்படியே நின்றாள்.

ஊர்வலம் அதற்குள் கல்யாண வீட்டின் முன்னல் வந்து நின்றது. பெண்ணும் மாப்பிள்ளையும் இறங்கினார்கள். நாகசுரக் காரர்கள் 'கெட்டி மேளம்' வாசித்தார்கள். 'கெஜ கெஜ' என்ற இசையின் ஓசை. தாளத்தின் தொனி தூரித காலத்தில் கேட்டது. இந்தச் சப்தம் அலமுவின் மேனியைப் போட்டுக் குலுக்கி எடுத்தது.

6

இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் கடந்திருக்கலாம். அதற்குள் எவ்வளவோ மாறுதல்கள்; ஒவ்வொருவரின் ஜீவியத்திலும் வெவ்வேறு விதமான மாறுபாடுகள். வேங்கட ராஜுலு நாயுடுவின் ஜீவியத்திலும் ஒரு பெரிய மாற்றம். அவர் சென்ற இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு முன்பு வரையில் கல்யாணமே செய்துகொள்ளுவதில்லை என்றுதான் உறுதியுடன் இருந்தார். ஆனல் இன்றே குடும்பஸ்த ராகிவிட்டார். சௌந்தரியமும், உத்தமமான குணமும் பொருந்திய ஒரு பெண்மணியை மனைவியாகப் பெற்றிருக்கிறார்.

அவர் சாத்விகமானவர். நற்குணம் உடையவர். வேதாந்த விஷயங்களில் பெரிதும் பற்றுடையவர். பக்தி மார்க்கத்தில் அவருக்கு எல்லையற்ற நம்பிக்கை உண்டு. சென்னையில் உள்ள ஒரு பிரபல கலாசாலையில் தலைமைத் தமிழாசிரியராக வேலை பார்த்து வருகிறார்.

அவருடைய மனைவி மிகவும் பயபக்தியுடன் நடந்து வருகிறாள். அவருக்கு அவள்மீது உயிர். சில சமயங்களில் அவள் வதனத்தில் திடீரென்று துக்கத்தின் சாயை படர்வதுண்டு. அவர் காட்டிய அன்பும் மாசற்ற பிரியமும் அத்துன்பச் சாயலைப் பறக்கடித்துவிடும்.

ஒரு நாள் காலை நேரம். "நாம் பாக்கியம் செய்தவர்களே. சுவாமி கருணாகரர் என் வேண்டுகோளுக்கு இணங்கி இங்கே விருந்துக்கு வர ஒப்புக்கொண்டு விட்டார்" என்றார் நாயுடு.

"நேற்று உங்கள் கலாசாலையில் பிரசங்கம் செய்தார் என்று சொன்னீர்களே, அந்த ஸ்வாமிகளா?"

"ஆம், அவர்தாம்! பெரிய ஞானி. தெளிவான அறிவுடையவர். அவருடைய புகழ் இந்தியா எங்கும் பரவி வருகிறது. கூடிய சீக்கிரம் அமெரிக்கா முதலிய தேசங்களுக்கும் இந்து மதத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்யப் போகப் போகிறாராம்."

"அவர் வட இந்தியாவைச் சேர்ந்தவரா?"

"எனக்கு அவர் பூர்விகம் விவரமாகத் தெரியாது. அவர் நம் பக்கத்தைச் சேர்ந்தவராம். கொஞ்ச காலத்திற்கு முன்புதான் ஒரு வட இந்தியச் சாதுவுடன் ஹிமயமலைக்குச் சென்று தியானம், யோகங்களில் ஈடுபட்டுச் சித்தி அடைந்தவராம். ஆரம்பத்தில்

அவர் பெற்றோர்கள் அவர் இஷ்டத்திற்கு எதிரா யிருந்தார்கள் என்றும், குடும்பத்தார்களுக்குத் தெரியாமலேயே ஹிமயமலைக்குச் சென்றார் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர் நன்றாகப் பிரசங்கம் செய்கிறார். அவருடன் தனியாகப் பேசும்போது ஏதோ தெய்வமே பிரசன்னமாகிப் பேசுவதுபோலத் தோன்றுகிறது."

"அப்படிப்பட்ட மகானின் தரிசனம் கிடைப்பது அருமை தான்."

"வாரத்தில் ஒரு கிழமைதான் அவர் கையன்னம் உட்கொள்ளுவது வழக்கமாம். மற்ற நாட்களில் பழங்களும் பாலுமே ஆகாரம். அதிருஷ்டவசமாக அவர் அன்னம் புசிக்கும் கிழமை நாளை வருகிறது."

இவ்விதம் வேங்கடராஜுலு நாயுடுவும் அவர் மனைவியும் பேசிக் கொண்டார்கள்.

அவள் மனத்தில் மாத்திரம் என்றைக்கும் இல்லாத அதிர்ச்சி உண்டாயிற்று. ஆத்மாவின் ஆழத்தில் அமுங்கி நசுக்கப்பட்டிருந்த ஏதோ ஒன்று மீண்டும் தலை காட்டுவதாக அவளுக்குத் தோன்றியது. "ஹே பகவானே! பிரேமை பாபகரமாகக் கருதப் படுமானால் அந்தப் பாபத்தை நீதான் மன்னிக்கவேண்டும்" என்று சொல்லிக் கொண்டாள். "நாளைத் தினம் இங்கு வரும் மகானின் ஆசீர்வாதத்தினாலும் தரிசனத்தினாலும், அந்தப் பாபமும் நீங்கிப் பரிசுத்தமாகி விடுவேன்" என்று எண்ணினாள்.

7

மறு நாள், நடுப்பகல் இன்னும் நெருங்கவில்லை. வேங்கடராஜுலு நாயுடுவின் வீட்டிற்கு ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து சுவாமி கருணாகரர் இறங்கினார். அவருடன் ஒரு நண்பரும் வந்திருந்தார்.

அமைதியில் பூத்த புன்னகையுடன் சுவாமி கருணாகரர் ஒரு சாய்வான நாற்காலியில் அமர்ந்தார். சுவாமிகளிடம் வணக்கமாக ஏதோ தெரிவித்துவிட்டு நாயுடு உள்ளே போனார்.

"எல்லாம் தயாராகி விட்டதா?" என்று தம் மனைவியைப் பார்த்துக் கேட்டார் நாயுடு.

"சகலமும் தயார். சுவாமிகளைக் கூப்பிட்டு வரலாம்."

"சரி, முதலில் நீ சுவாமிக்கு நமஸ்காரம் செய்து விட்டுப் போ."

அவள் தலை அசைத்தாள். அவள் மனத்திற்குள் ஏதோ போராட்டம். "மகானின் தரிசனத்தால் என் மனசைப் பரிசுத்தப் படுத்திக் கொள்ளுகிறேன்" என்று உறுதி செய்துகொண்டாள்.

வெளிக் கூடத்தை நோக்கி நாயுடுவைப் பின்பற்றி அவள் வந்தாள். சுவாமிகளின் திவ்ய தேஜஸ் மிகுந்த வதனத்தை அவள்

நேத்திரங்கள் பக்தியுடன் பார்த்தன. அவளுடைய ஆத்மா ஈசுவரன் பாதத்தை நோக்கிச் சரணம் அடைவதுபோல அம் மகானின் அடிகளை நோக்கியது.

அவள் அவர் பாதத் தடியில் நமஸ்கரித்து எழுந்தாள். வாலிப சந்நியாசி அப்பெண்ணின் முகத்தைச் சரியாகப் பார்க்கவில்லை. அவர் தம் இரு கரங்களையும் தூக்கி ஆசீர்வதித்து விட்டு அங்கிருந்த மற்றொருவருடன் பேசுவதில் கவனம் செலுத்தினர். நாயுடுவின் மனைவி மறுபடியும் உள்ளே போய்விட்டாள். உடனே, "எல்லாம் தயாராக இருக்கிறது. எழுந்தருளும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்றார் நாயுடு.

சுவாமி கருணாகரரும் மற்றவரும் ஆசனத்திலிருந்து எழுந் திருந்து நாயுடுவைப் பின்பற்றி உள் கூடத்திற்குச் சென்றார்கள். உடனே நாயுடு, "அலமு, அலமு, சீக்கிரம் ஓர் பாத்திரத்தில் ஜலம் கொண்டு வா" என்றார்.

அலமு ஜலம் நிறைந்த வெள்ளிக் கூஜா ஒன்றையும் பெரிய வெள்ளித் தம்ளரையும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

அலமு என்ற சொல் சுவாமிகளைத் தூக்கி வாரிப் போட்டது. என்றும் அனுபவித்து அறியாத ஒரு வகையான சலனம் அவர் சரீரத்தில் ஊடுருவியது. பயங்கரமான அந்தகாரம் தம்மை வந்து மூடுவதாக எண்ணிக்கொண்டே எதிரே தண்ணீர்ப் பாத்திரத் துடன் வந்த அலமுவைக் கூர்ந்து நோக்கினார். கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகமும் நிவர்த்தியாகி விட்டது. இயக்கப்பட்ட இயந்திரத்தைப் போல அவருடைய கரங்கள் அவளிடமிருந்து தண்ணீர்ப் பாத்திரத்தை வாங்க முன் நோக்கின.

மனைவியின் கையிலிருந்து பாத்திரத்தைத் தாம் வாங்கிக் கொடுக்க எண்ணியிருந்தார் நாயுடு. அதற்குள் சுவாமிகளே கைகளை நீட்டிவிட்டதால் அலமு பயபக்தியுடன் தண்ணீருடன் இருந்த வெள்ளித் தம்ளரை அவரிடம் கொடுத்தாள். அதை அவர் வாங்கியபோது அவள் கமலக் கண்கள் அந்தச் சந்நியாசி யின் கரத்தின்மேல் பச்சை குத்தப்பட்டிருந்ததைக் கவனித்து விட்டன. "**வ-ர-த-ன்**" என்று அங்கே பச்சையால் வரையப் பட்டிருந்ததை அவள் படித்தாள். அவ்வளவுதான்! 'குபீர்' என்று அவள் தேக முழுவதும் வியர்வை. சரீரம் ஆட்டம் கண்டது. "ஹா!" என்ற சிறு சப்தத்துடன் சந்நியாசியை நோக் கினாள். அந்தோ! கையிலிருந்த கூஜா தானாக நழுவிக் கீழே 'பொத்' என்று விழுந்து விட்டது!

அதே சமயத்தில், தம்ளரில் உள்ள ஜலத்தால் கரத்தைக் கழுவப் பிரயத்தனப்பட்ட பொழுது கருணாகர சுவாமிகள் வச மிருந்த தம்ளரும், பிரக்ஞையற்ற ஒருவர் கையிலிருந்து நழுவி விழுவதுபோல விழுந்து விட்டது! ஓவியக்காரனால் உயிர் பெய்து எழுதப்பட்ட சோகம் ததும்பும் இரு சித்திர உருவங்களைப்

போல அவர்கள் இருவரும் காணப்பட்டனர். அவர்களின் மனத்தில் என்ன தோன்றிற்றோ? அவர்கள் கைகளிலிருந்து பாத்திரங்கள் நழுவி விழுவானேன்?

வேங்கடராஜுலு நாயுடுவால் அவர்களின் ஆத்மாவுக்குள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் ரகசிய வஸ்துவைப்பற்றி எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? கவனக் குறைவாக நடந்து கொண்ட தம் மனைவியைச் சிறிது கோபத்துடன் பார்த்தார்.

அவள் முகத்தில் திகிலும் அச்சமும் கலந்து பிரதிபலித்தன. தன் கணவரது கோபக் குறியை உணர்ந்தாள். "பாபத்தைப் போக்கப் புண்ணியத்தை நாடினேன். புண்ணியம் பாபமாய் விட்டது!" இப்படி நினைத்த அவள் இருதயம் பாரத்தால் குடை சாய்ந்தது. சட்டென்று கீழே விழுந்த கூஜாவை எடுத்துக் கொண்டு உள்ளே போகத் திரும்பினாள். அவள் நயனங்களில் ஜலம் பெருகியது.

நாயுடுவின் கோபக்குறியைச் சுவாமிகள் அறிந்தார். தம் மன நிலையைச் சரிப்படுத்திக் கொண்டு, "நாயுடுகாரு" என்று அமைதியுடன் கூப்பிட்டு விட்டுக் கீழே விழுந்த தம்ளரைத் தாமே எடுத்தார்.

"சுவாமி, அபசாரம் நேர்ந்து விட்டது. மன்னிக்கவேண்டும்" என்றார் நாயுடு.

"நாயுடுகாரு, அபசாரம் ஒன்றும் ஏற்படவில்லை. நீர் ஏன் கோபம் காட்ட வேண்டும்? தவறுதல் ஏற்படுவது சகஜந்தானே? கையிலிருந்து பொருள் நழுவி விழுவது போலத்தான் மனிதனும் சில சமயங்களில் வாழ்க்கையின் உச்சமாகிய உன்னத ஸ்தானத்திலிருந்து வழுக்கி விழுந்து விடுகிறான்" என்றார் சுவாமிகள்.

"உண்மைதான்" என்றார் அங்கிருந்த மற்றொருவர்.

இருந்தாற் போலிருந்து ஆகாயம் இருண்டு விட்டது. சூரியன் இருக்கும் இடம்தெரியவில்லை. கார் முகில்கள் கூடின. மின்னல்கள் 'பளிச், பளிச்' என்று பாய்ந்தன. பலமான காற்று 'வீர்' என்று அடிக்கத் தொடங்கியது. இடையே இடிகளின் சப்தம். மழையும் பலமாகப் பெய்ய ஆரம்பித்தது.

சுவாமிகளின் மனமும் அலமுவின் நெஞ்சமும் மின்னல் இடிகளுடன் கூடிய இருண்ட வானமாய் மாறிவிட்டன!

மழைக்குப் பயந்து அந்த வீட்டின் திண்ணையின் பக்கம் ஏறி நின்ற ஒரு பரதேசி பின் கண்ட பாட்டைப் பாடத்தொடங்கினான். எல்லோருடைய கவனத்தையும் அந்தப் பாட்டு, பிடித்து இழுத்தது:—

"நந்த வனத்தில்லோர் ஆண்டி அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந் தான்ஒரு தோண்டி அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!"

தூங்கா விளக்கு 56

1

இது ஓர் அதிசயமான கதைதான்; நம்ப முடியாத கதைதான். ஆனால், இந்த மாய உலகத்தில் எதை நம்புவது, எதை நம்பாமல் இருப்பது? நேரே, நம் கண்ணுக்கு எதிரே காணும் சில சம்பவங்களையே நாம் நம்ப முடிவதில்லையே! பல சமயம் நம் கண்களே நம்மை வஞ்சித்து விடுகின்றன. என் சிநேகிதர் கீழ்க்கண்ட சம்பவத்தைக் கூறிக்கொண்டே வந்தபோது சிற்சில இடங்களில், 'இப்படியும் நடக்குமா?' என்றுதான் எனக்கும் தோன்றிற்று. ஆனால் அவர், "ஸார்! இது நான் என் கண்ணாலே பார்த்தது; இந்தக் காதாலே கேட்டது. அதெல்லாம் பொய்யாக இருக்கும் பக்ஷத்தில் இப்பொழுது நான் உங்களுடன் பேசிக்கொண்டு இருப்பதுகூடப் பொய்யாகத்தான் இருக்கவேண்டும். நீங்கள் இப்பொழுது உயிரோடு இருப்பதுகூடப் பொய்யாகத்தான் இருக்கவேண்டும்!" என்று சபித்தார்.

நான் உயிரோடு இருப்பது வாஸ்தவந்தான் என்பதை நிரூபிப்பதற்காகவாவது அவர் கூறிய அதிசய சம்பவத்தை இங்கே எழுதுவது அவசியமாகிவிட்டது!

அவர் கூறிய கதை இதுதான்.

2

தஞ்சை ஜில்லாவிலுள்ள தம்பிக் கோட்டை என்ற ஊரைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். தம்பிக் கோட்டையில் கோட்டையோ கொத்தளமோ ஒன்றும் இல்லை. தென்னந் தோப்புகள் சூழ்ந்த சிறு கிராமந்தான் அது. மூன்று வருஷத்துக்கு முன்னால் அவ்வூரில் நான் டாக்டராக இருந்தேன். டிஸம்பர் மாதம் பத்துப் பதினைந்து தேதிகள் இருக்கும்: எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

அன்று சாயங்காலம் வீட்டு வாசலில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருந்தேன். தென்னை மரங்களின் வழியாகச் சூரியன் மேகக் குவியலுக்குள் மறைந்துகொண்டிருந்தான். லேசான பனிப்புகை எங்கும் பரவத் தொடங்கிற்று. அப் பனிப்புகையுடன் அந்தகாரமும் வந்து உலகை விழுங்கப் பார்த்துக் கொண்டிருந்தது.

உள்ளே போகலாம் என்று எழுந்தேன். "ஸார், டாக்டர் ஸார்" என்ற படபடத்த குரலைக் கேட்டுச் சட்டென்று

திரும்பிப் பார்த்தேன். உள்ளூர்க் கிராம முன்சீப் நின்றுகொண்டிருந்தார்.

"டாக்டர், அவசரமான கேஸ்! தாங்கள் உடனே கவனிக்க வேண்டும்" என்று என்னைக் கேட்டுக் கொண்டார்.

"யாருக்கு என்ன உடம்பு?" என்றேன்.

"அதோ அரைப் பர்லாங்கு தூரத்திலே ஒரு தென்னந் தோப்பில் ஒரு பெண்ணுக்கு ஜ்வரமாம். இப்பொழுதுதான் எனக்கு விஷயம் தெரிந்தது. அவள் புருஷன் பட்டாளத்தில் இருக்கிறான். பாவம்! அவளைக் கவனிக்க வேறு யாரும் இல்லை" என்றார்.

நான் உள்ளே போய் மருந்துப் பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு நோயாளியின் வீட்டுக்குக் கிளம்பினேன். என்னை ஒரு சிறு குடிசை வாசலுக்கு அழைத்துச் சென்று, "இந்த வீடுதான்; உள்ளே போங்கள்" என்றார் முன்சீப்.

அவர் போகாமல் என்னை மட்டும் உள்ளே போகச்சொன்ன மர்மம் உடனே தெரிந்தது. அந்தக் குறுகலான வாசற்படியில் நுழைந்து உள்ளே போவது எனக்கே சிரமமாய் இருந்தபோது, அவருக்குக் கேட்பானேன்?

குடிசைக்குள் கீழே அந்தப் பெண் படுத்திருந்தாள். அவள் அருகில் ஒரு கிழவி உட்கார்ந்து கொண்டிருந்தாள். மூலையில் மினுக்கு மினுக்கென்று ஓர் அகல் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

நான் நோயாளியைப் பரீட்சை செய்து பார்த்தேன். ஜ்வரம் அடித்துக் கொண்டிருந்தது. நாடி பலவீனமாகத்தான் இருந்தது.

"தங்கச்சிக்கு ஒரு வாரமாகக் காய்ச்சல். இன்றைக்குத்தான் கண்ணே விழித்துப் பார்த்தாள்" என்றாள் கிழவி.

அந்தப் பெண்ணுக்கு வயசு இருபதுதான் இருக்கும். கண்களில் களை இல்லாவிட்டாலும் முகத்தில் சாந்தம் குடிகொண்டிருந்தது. உடல் மெலிந்து விட்ட போதிலும், அவளது இயற்கை அழகின் சின்னங்கள் மறைந்து விடவில்லை.

"இவளுக்கு யாரும் மனுஷர் இல்லை; கடைசியில் நான்தான் முன்சீப் ஐயாவிடம் சொல்லி அனுப்பினேன்" என்றாள் கிழவி.

"ரொம்ப நன்றாயிருக்கிறது. சொல்லி அனுப்புகிறதைக் காய்ச்சல் கண்டதுமே சொல்லி அனுப்பக் கூடாதா?"

"கர்ய்ச்சல் கண்டதே எனக்கு இரண்டு நாள் கழித்துத்தான் தெரியும். தங்கச்சி நடமாட்டத்தையே காணோமே என்றுதான் வந்து பார்த்தேன். காய்ச்சல் பொரிந்து கொண்டிருந்தது. அப்பொழுதே பிடித்து நான் இங்கேதான் இருக்கிறேன்."

"ஆமாம்; ஏதாவது கஞ்சி சாப்பிடுகிறாளா?"

"இவ்வளவு நாளாகக் கொஞ்சங் கொஞ்சம் கஞ்சி சாப்பிட்டாள். காலையிலிருந்து அதுவும் இல்லை."

"கவலைப்பட வேண்டாம். நான் ஊசி போடுகிறேன். வியாதி குணம் ஆகி விடும். ஆமாம்; இந்தப் பெண்ணின் புருஷன் பட்டாளத்தில் சேர்ந்து எத்தனை நாளாயிற்று?" என்று கேட்டேன்.

"மூணு வருஷம் இருக்கும்."

"இந்தப் பெண்ணைக் கவனித்துக்கொள்ளச் சொந்தக் காரர் வேறு யாரும் இல்லையா? தகப்பன், அண்ணன், தம்பி யாரும் இல்லையா?"

"எல்லோரும் இருந்தார்கள். ஆனால் கூண்டோடு கைலாச மாக ஒரு நாள் செத்துப் போனார்கள்."

"இது என்ன வேடிக்கையாய் இருக்கிறதே! ஒரு நாளிலே எப்படி இறந்தார்கள்?"

"அதை ஏன் கேட்கிறீர்கள்? அவர்கள் எல்லாம் அடுத்த ஊரில்தான் இருந்தார்கள். பெரிய குடும்பம். இந்தப் பெண் ணுக்கு மாணிக்கம் என்று பெயர். தாயில்லாப் பெண்ணை அவள் தகப்பனார் எவ்வளவோ செல்லமாக வளர்த்து வந்தார் ..."

இப்படிக் கிழவி சொல்லிக் கொண்டிருக்கும்போது, "பாட்டி! அதைப் பாரு!" என்று மாணிக்கம் கத்தினாள். நான் திடுக்கிட் டுத் திரும்பிப் பார்த்தேன். அவள் சுட்டிக் காண்பித்தது மூலையில் இருந்த அந்த விளக்கைத்தான்.

"பாட்டி, விளக்கிலே எண்ணெய் இருக்கா?" என்றாள் மாணிக்கம்.

"நிறைய இருக்கே; கவலைப்படாதே!" என்று சொல்லி விட்டு மேலே சொல்லத் தொடங்கினாள் கிழவி.

"கேட்டீர்களா: மாணிக்கத்துக்குப் பதினைந்து வயசு இருக்கும். முத்துப்பேட்டை ஜம்புலிங்கத் தேவர் பெயரைக் கேள்விப்படாதவர் யார்? அவர் பேரைச் சொன்னாலே அழுத பிள்ளை வாயை மூடும். மாணிக்கத்தைத் தமக்குக் கட்டித் தரும்படி சற்குணத் தேவரைக் கேட்டாராம். சற்குணத் தேவர் தயங்கவே இல்லை. அந்தக் குடிகாரனுக்கு யார்தான் பெண்ணைக் கொடுப்பார்கள்? 'உமக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது, என் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்படி கேட்க?' என்று பளிச்சென்று சொல்லிவிட்டார் சற்குணத் தேவர். அடுத்த கிராமத்தில் ஆறுமுகத்தேவர் என்று ஒரு மிராசுதார் இருந்தார். ரொம்ப நல்ல மனுஷர்; அவருக்கு மாணிக்கத்தைக் கொடுக்க வேண்டு மென்று சற்குணத் தேவருக்கு வெகு நாளாக எண்ணம். ஆகவே அவருக்கு மாணிக்கத்தைக் கொடுக்கிறதாக நிச்சயமாகி, கல்யாணத்துக்கு நாளும் பார்த்தாகி விட்டது.

"ஆனால் குழந்தைக்கு இரண்டிலேயும் இஷ்டம் இல்லை. செல்லமுத்து என்று ஒரு பிள்ளையாண்டான் பக்கத்துத்

தெருவிலே இருந்தான். அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறது, இல்லையானால் உயிரை விட்டு விடுகிறது என்று மாணிக்கம் பிடிவாதமாக இருந்தாள்.

"கல்யாண நாள் நெருங்கிக்கொண்டே வந்தது. ஜம்புலிங்கத் தேவருக்கு ரொம்ப ரொம்ப ஆத்திரம். கல்யாணத்துக்கு முதல் நாள் அவர் ஆளை விட்டு, சற்குணத் தேவரின் தலையை வெட்டித் தென்னந் தோப்பிலே புதைத்துவிடச் சொல்லி விட்டார். இது ஆறுமுகத் தேவருக்குத் தெரியவே, அவர் ஆளை விட்டு ஜம்புலிங்கத் தேவர்மேலே பழிக்குப் பழி வாங்கிவிட்டார். இதற்குப் பிறகு, அதை ஏன் கேட்கிறீர்கள்? ஜம்புலிங்கத் தேவர் தம்பி ஆறுமுகத் தேவரைப் பைசல் பண்ணி விட்டான். இந்தச் சந்தடியில், பிள்ளையாண்டான் செல்லமுத்து மாணிக்கத்தைக் கூட்டிக் கொண்டு எங்கேயோ சிட்டாய்ப் பறந்து விட்டான். இரண்டு வருஷம் கழித்து ஊரில் அமளி எல்லாம் அடங்கின பிறகு இரண்டு பேரும் திரும்பி வந்தார்கள். வரும்போது இரண்டு பேரும் புருஷனும் பெண்சாதியுமாக வந்தார்கள்!''

"பாட்டி! விளக்கு! விளக்கு!" என்று இந்த இடத்தில் மறுபடியும் கத்தினாள் மாணிக்கம்.

"விளக்கு என்ன அம்மா? நல்லாத்தான் எரிகிறதே!" என்றாள் கிழவி.

இந்தச் சமயத்தில் எனக்கு ஒரு சந்தேகம் தட்டிற்று. காற்றும் அடிக்க வில்லை; விளக்கும் நன்றாக எரிகிறது; எதற்காக இப்படி 'விளக்கு, விளக்கு' என்று அந்தப் பெண் அடித்துக் கொள்கிறாள் என்று எனக்குத் தெரியவில்லை.

"ஐயா, மாணிக்கத்தையும் அவள் புருஷனையும் ஊரார் ஒதுக்கி வைத்து விட்டார்கள். அவளால்தான் ஊரில் கொலைகள் நடந்ததென்று அவளைப் பார்க்கக் கூடச் சில பெண்பிள்ளைகள் பயப்பட்டார்கள். அவள் புருஷன் செல்லமுத்து தென்னந் தோப்புக் குத்தகை எடுத்துக் காலம் தள்ளி வந்தான். ஊரார் என்ன சொன்னால் என்ன? இரண்டு பேரும் ராஜாவும் ராஜாத்தியும் மாதிரிக் குடித்தனம் செய்து கொண்டு வந்தார்கள். இவர்கள் ஒற்றுமையாக நன்றாக இருந்ததைக் கண்டு அந்தப் பக்கத்திலே எல்லாருக்கும் பொறாமையாய் இருந்தது.

"புருஷனைக் காணவிட்டால் தங்கச்சிக்கு ஒரு நாழிகை கூட இருக்க முடியாது. சும்மா சும்மா தென்னந் தோப்புக்கு ஓடி விடுவாள். செல்லமுத்து இளநீர் வெட்டிக் கொண்டிருப்பான். கீற்று முடைந்து கொண்டு அவனோடு பேசிக்கொண்டு இருப்பாள் தங்கச்சி. செல்லமுத்துவுக்கு மாத்திரம் என்ன? மாணிக்கம் வீட்டில் சமைத்துக் கொண்டு இருப்பாள். செல்லமுத்துவுக்குத் தென்னந் தோப்பில் இருப்புக் கொள்ளாது. ஓடி வந்து விடுவான், அரிசி களைந்து கொடுக்க. ஐயோ! இப்படியே அவர்கள் சந்தோஷ

மாக இருந்திருக்கக் கூடாதா? அட கடவுளே! கடைசியில் இப்படியா குழந்தை தலையில் எழுத வேணும்?

"ஐயா! கண் திருஷ்டி என்று எல்லாம் சொல்கிறீர்களே, அது பொய் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? பாருங்கள், புருஷனும் பெண்சாதியும் ரொம்ப நாள் சந்தோஷமாக இருக்க முடியவில்லை. செல்லமுத்துவுக்குக் குத்தகையிலே ஒன்றும் லாபம் வரவில்லை; சாமான் விலை வாசி எல்லாம் ஒரே அடியாய் ஏறிப்போனதில் குடும்பம் நடத்துகிறதே அவர்களுக்குக் கஷ்டமாய்ப் போச்சு. பட்டாளத்திலே ஆள் சேர்க்கும் அதிகாரி இந்த ஊருக்கு வந்தார். செல்லமுத்து ஆள் மஜமாதிரி இருந்ததைப் பார்த்தார். மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம் தருகிறதாகச் சொல்லி ஆசை அழைத்துக் கொண்டு போய்விட்டார்."

"எப்படி அவன் மாணிக்கத்தை விட்டு விட்டுப் போனான்?" என்று கிழவியைக் கேட்டேன் நான்.

"இந்தப் பாழும் வயிறு ஒன்று இருக்கிறதல்லவா? அதோடு, கண்ணுக்குக் கண்ணான மாணிக்கம் கஷ்டப்படுகிறதைக் காண அவனால் சகிக்க முடியவில்லை" என்றாள் கிழவி.

"மாதம் மாதம் பணம் வருகிறதா? செல்லமுத்து கடிதம் போடுகிறானா?" என்று நான் கேட்டேன்.

"பத்து ரூபாய் வந்து கொண்டுதான் இருக்கிறது; கடிதமும் எப்பொழுதாகிலும் வருகிறது."

இந்தச் சமயத்தில் படுக்கையில் மாணிக்கம் புரண்டு படுத்தாள். ஏதோ நினைவால் அவள் கஷ்டப்படுவது போல் தோன்றியது.

"எப்பொழுதும் தங்கச்சிக்குப் புருஷன் ஞாபகந்தான். எப்பொழுதாவது ஒரு நாள் புருஷன் வந்துவிடுவான் என்றுதான் இப்பொழுதும் இவள் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறாள். ஒரு வாரமாகத்தான் இந்தக் காய்ச்சல் இவளை ஆட்டி வைக்கிறது."

"பாட்டி, காற்று அடிக்கிறது. கதவை ஒருக்களித்து வை! விளக்கு பத்திரம்" என்றாள் மாணிக்கம் மறுபடியும்.

எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "ஐந்து நிமிஷத்துக்குள் நாலு தடவை 'விளக்கு, விளக்கு' என்று இந்தப் பெண் ஏன் உயிரை விடுகிறாள்? விளக்குத்தான் சரியாய் இருக்கிறதே!" என்று நான் கிழவியைக் கேட்டு விட்டேன்.

கிழவி ஒரு பெருமூச்சு விட்டாள். அவள் சொன்ன சமாசாரம் என்னைத் தூக்கி வாரிப் போட்டது.

"ஐயா, கோவலன் கதை கேட்டிருப்பீர்களே? சிலம்பை வாங்கிக் கொண்டு அவன் வீட்டை விட்டுப் போகிறபோது, கண்ணகியிடம் விளக்கைக் காண்பித்து, 'என் உயிருக்கு ஆபத்து

வந்தால் விளக்கு அணைந்து போகும்' என்று சொல்லி விட்டுப் போனனல்லவா? அதே மாதிரிதான் செல்லமுத்துவும் சொல்லி விட்டுப் போனனும். மாணிக்கமும் அப்படியேதான் நம்பி இருக்கிறுள். செல்லமுத்துவுக்கு ஆபத்து வந்தால் இந்த விளக்கு அணையுமென்று நம்பி இருக்கிறுள். ஆகையால்தான் அவள் சதா இந்த விளக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறுள்!"

எனக்குத் 'திக்'கென்றது. 'என்ன மூட நம்பிக்கைகள்! பகவானே! நிஜமாகவே இந்தத் தேசத்துக்கு விமோசனம் இல்லையா?' என்று எண்ணினேன். 'இந்தப் பெண் உயிர் இத்தீப ஒளியில் அல்லவா இப்பொழுது ஊசலாடிக் கொண்டிருக் கிறது?' என்பதை நினைக்க எனக்குச் சிரிப்பாக வந்தது; மற்றொரு பக்கம் அச்சமும் வேதனையும் உண்டாயின. இது என்ன பைத்தியக்காரத்தனம்! ஒரு மூட்டாள் இப்படிச் சொல்லவாவது, இந்த அபலைப் பெண் நம்பவாவது! தப்பித் தவறி விளக்கு அணைந்து போனுல்?

மெதுவாக மாணிக்கத்தின் அருகில் சென்றேன். அவள் மிகவும் களைப்படைந்திருந்தாள். பலம் வருவதற்காக ஒரு இஞ்ஜெக்ஷன் செய்தேன். "இனிமேல் அவள் தூங்கி விடுவாள்; கவலே வேண்டாம்!" என்று சொல்லிவிட்டு வந்தேன்.

அப்பொழுதுதான் அந்த அதியாச்சரிய சம்பவம் நடந்தது. நான் திரும்பினேனே இல்லையோ, 'விர்' என்று ஒரு காற்று வீசியது; சார்த்தி யிருந்த கதவு படாரென்று திறந்தது. உடனே விளக்கு அணைந்து போய், 'கும்'மென்று அந்தகாரம் எங்கும் சூழ்ந்தது.

"பாட்டி! விளக்கு!" என்றேன் நான்.

"ஐயோ! தங்கச்சி! தங்கச்சி!" என்று கத்தினுள் கிழவி.

நான் நெருப்புப் பெட்டியை எடுத்து விளக்கைக் கொளுத் தினேன். விளக்கை எடுத்துக் கொண்டு அவளருகில் சென்று பார்த்தேன்.

3

இதுவரையில் பொறுமையாக என் நண்பரின் கதையைக் கேட்டு வந்த நான், "அப்புறம் என்ன ஆயிற்று? மாணிக்கம் என்னவானுன்?" என்றேன்.

"ஆகிறது என்ன? அவள் மூச்சு அப்பொழுதுதான் நின்றது."

"ஐயோ! அவள் இறந்து விட்டாளா?" என்றேன் நான்.

"ஆம், விளக்கு அணைந்ததைப் பார்த்ததும், அவள் அதிர்ச்சி யால் இறந்து விட்டாள்."

"ஒரு வேளை, உயிர் போன பிறகு விளக்கு அணைந் திருக்கலாம்; அல்லது உயிர் விட்டதும் விளக்கு அணைந்ததும் ஒரே சமயத்தில் நடந்திருக்கக் கூடாதா?" என்றேன் நான்.

"நீங்கள் எப்படி நினைத்தாலும் சரி; விளக்கு அணைந்தது; அவள் உடலில் உயிரும் இல்லை. அவ்வளவுதான். கேளுங்கள்: அதற்குமேல்தான் கதையின் முக்கிய சம்பவம் நடந்தது; பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு எதிர்பாராதது நடந்தது."

"தெரியும்; செல்லமுத்து லீவில் ஊருக்கு வந்தான். மனைவி இறந்ததைக் கேட்டு, 'லபோ' 'லபோ' என்று அடித்துக் கொண்டான். 'ஐயோ! முட்டாள் தனமாக விளக்கைப் பார்க்கச் சொன்னேனே ...'"

இப்படி நான் சொல்லும்போது நண்பர் இடைமறித்து, "அதுதான் இல்லை. செல்லமுத்து போர் முனையில் இறந்து விட்டான் என்ற செய்தி வந்தது. விளக்கு அணைந்த சமயமும் அவன் உயிர் போன சமயமும் ஒன்றுபோலிருக்க வேண்டும் என்று எல்லோரும் ஊகித்தார்கள். இதுதான் மாணிக்கத்தின் கதை. இதற்குப் பிறகு வாழ்க்கையில் எவ்வளவோ சம்பவங்கள் நடந்து விட்டன. ஆனால் இந்தச் சம்பவத்தை மட்டும் என்னால் மறக்க முடியவில்லை. இப்பொழுதாவது நீங்கள் நம்புகிறீர்களா, இல்லையா?" என்று கூறி முடித்தார்.

"எப்படி நம்புகிறது? விளக்கு அணைந்ததும் செல்லமுத்து இறந்ததும், காக்கை உட்கார்ந்ததும் பனம் பழம் விழுந்ததுமாக இருக்கமுடியாதே?" என்றேன்.

இந்தச் சம்பவத்தை நினைக்கும்போதெல்லாம் இதே கேள்வியைத்தான் அடிக்கடி கேட்டுக்கொண்டும் இருக்கிறேன்.

எஸ். விசாலாக்ஷி

வருஷப் பிறப்பு 57

1

உமா தூங்கிக் கொண்டிருந்தவள் திடீரென்று விழித்துக் கொண்டாள். யாரோ கதவைத் 'தட தட' வென்று தட்டிக் கொண்டிருந்தனர். "என்ன, தூங்குகிறீர்களே? எழுந்திருங்கள்" என்று தன் கணவனை எழுப்பினாள். ராமன் கும்பகர்ணைக் கூட்டத்தைச் சேர்ந்தவன். அவனைத் தூக்கத்திலிருந்து எழுப்ப அரை மணி நேரம் புரட்டியாக வேண்டும். "நெருப்பு, நெருப்பு! எல்லோரையும் வெளியில் கொண்டு வாருங்கள்" என்று வெளியில் யாரோ கூவிய சப்தம் அவள் நெஞ்சைப் பிளந்தது. வீல் என்றுக் கத்திக்கொண்டு உமா தன் கணவனைக் கட்டிக் கொண்டாள். அபாய காலங்களில் எல்லா ஜீவராசிகளுக்கும் சுபாவமாயிருக்கும் ஓர் உணர்வு ராமனை எழுப்பிவிட்டது.

"என்னைத் தொந்தரவு —" என்று ஆரம்பித்தான். பகல் முழுவதும் அலைந்த அலுப்பு அவனுக்குத் தெரியும்.

"ஐயோ நெருப்பு!" என்று உமா கதறினாள். அப்பொழுது ஜன்னல் மூலமாக ரீண்ட ஒரு ஜ்வாலை உள்ளே வீசிற்று.

கண் இமைப்பதற்குள் ராமன் துள்ளி எழுந்தான்; "உமா, சீக்கிரம் —" என்றான். உடனே அவள் இருந்த ஸ்திதியை உணர்ந்துகொண்டான். பயத்தால் அவள் உணர்வற்றிருந்தாள். அவளைத் தூக்கி நடத்திப் பார்த்தான். அவள் கால்கள் தடுமாறின. குழந்தையைப் போல் அவளைத் தூக்கிக்கொண்டு கதவை நோக்கிப் பாய்ந்தான்.

அவளைத் தூக்கிக்கொண்டே ஒரு கையால் தாழ்ப்பாளை நீக்கிக் கதவைத் திறந்தான். அக்கினி ஜ்வாலைகள் நாற்புறமும் வீசின. படிக்கட்டுப் பக்கம் முறிந்து விழுந்தது. மேல் மெத்தைத் தாழ்வாரத்தை எப்படியோ அடைந்தான். அப்பொழுதுதான் நெருப்பணைக்கும் யந்திரங்கள் இரண்டு வந்தன. அரைக் கணத்தில் ஏணிகள் மூலம் உமாவும் ராமனும் எதிரே உள்ள ராமசேஷையர் வீட்டுக் கூடத்தில் சேர்க்கப்பட்டனர்.

ராமன் கண்களைக் கசக்கிக் கொண்டான். தான் காண்பது நனவா அல்லது கோரமான கனவா என்று அவனுக்குப் புலப்படவில்லை. உமா, எட்டு மாதக் கர்ப்பிணி, தலைவிரிகோலமாய் உட்கார்ந்திருந்தாள். ராமசேஷையர் மனைவி அவளைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தாள்.

திடீரென்று உமா, "ஐயோ, மறந்துவிட்டீர்களே!" என்று அலறினாள். ராமனுக்கு அவள் எதைக் குறித்து அலறினாள் என்று தெரியும். அன்று சாயங்காலந்தான் அவன் நெருப்பு இன்ஷூரன்ஸ் கம்பெனி ரசீதை அவளிடம் காட்டி மறுநாளாவது அதற்குப் பணம் கட்டிவிட வேண்டுமென்று சொல்லியிருந்தான். அன்றே கட்டியிருக்கலாம், ஆனால் ஞாபக மறதி. அதோடு விதி.

ராமசேஷையர் மனைவி சரஸ்வதியம்மாள் மிகவும் நல்லவள். உமாவுக்குச் சுடச்சுடக் காபி போட்டுக் கொடுத்துவிட்டு அவளருகிலேயே உட்கார்ந்திருந்தாள்.

தீயணைக்கும் யந்திரங்கள் தங்கள் வேலையை முடிப்பதற்குள் பொழுது விடிந்துவிட்டது. தீயணைக்கும் உடை அணிந்திருந்தவன் ஒருவன் ஓடிவந்து, "எங்களுக்கும் செய்தி அவ்வளவு சீக்கிரம் கிடைத்தது அதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் நஷ்டம் இன்னும் அதிகமாகவே இருக்கும். மாடிமேல் அவ்வளவு அதிகச் சேதம் இல்லை" என்று சொன்னான். உமா பதைக்கும் நெஞ்சைச் சமாதானம் செய்துகொண்டு, "டைப் மெஷின்கள் வைத்திருக்கும் முன் அறை?" என்று பட படப்புடன் கேட்டாள்.

"சுவர்களை ஒருவாறு காப்பாற்றிவிட்டோம். ஆனால் அந்த யந்திரங்கள் இனி உபயோகப்பட மாட்டாவென நினைக்கிறேன். வீட்டுக்காரன் வீட்டைத் திரும்பவும் கட்டும்போது நீங்கள் அவசியம் மின்சார விளக்குகள் போடவேண்டும் என்று சொல்லுங்கள். அந்த அறையில் ஞாபக மறதியாய் அணைக்கப் படாமல் இருந்த ஓர் எண்ணெய் விளக்குத்தான் இந்த விபத்திற்குக் காரணம் என்று நினைக்கிறேன். இந்த எண்ணெய் விளக்குகளே இப்படித்தான். ஒரு காற்று வீசினால் கீழே விழுந்து —"

சகிக்க முடியாத மன வேதனையினால் உமா மூர்ச்சையானாள். ராமன் அவசரமாக அந்தத் தியாகத்தை உத்தியோகஸ்தனுக்கு நன்றி கூறி அனுப்பிவிட்டு, உமாவைச் சரஸ்வதியம்மாளிடம் ஒப்பித்துவிட்டு, வீட்டைப் பார்க்கப் போனான். அவனுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது. அழுதிருப்பான். ஆனால் அழுகை வரவில்லை. உன்மத்தம் பிடித்தவனைப் போல், எரிந்து பாதிக் கரிக்கட்டையாகப் போன வாசல் படியில் நின்று கொண்டிருந்தான். அவன் மனக்கோட்டை இடிந்திருக்கக் கண்டான். தன் முழு ஆஸ்தியும் அழிந்து போனதைக் குறித்து அவன் வருந்தவில்லை. பாவம்! உமா அவனை வேலையில்லாக் கொடுமையினின்றும் காப்பாற்றத் தன்மேல் இருந்த நகைகளை எல்லாம் விற்று வாங்கிய அந்த டைப் யந்திரங்கள் அப்படியே உருகி ஓடியிருந்தன. எல்லாம் கடவுளின் சோதனை!

எம். ஏ., பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றும் மூன்று வருஷங்களாக வேலைக்காக அலைந்து திரிந்த கஷ்டத்தை அவன் அப்போது நினைக்கவில்லை. "கஷ்டம் நீங்கிற்று" என்று நினைத்த சிறிது காலத்திற்குள் இவ்வளவு கோரமான சம்பவம் ஏற்பட்டிருக்க வேண்டாம். சுருக்கெழுத்திலும் டைப் அடிப்பதிலும் சதிபதிகள் இருவரும் உன்னதமான தேர்ச்சியை அடைந்ததால் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தினார்கள். அதற்காக உமாவின் நகைகளை விற்று 500 ரூபாய் சேர்த்துரெமிங்டன் கம்பெனியாரிடமிருந்து ஐந்து டைப் யந்திரங்களை வாங்கினார்கள். கம்பெனிக்கு இன்னும் 700 ரூபாய் பாக்கி இருந்தது. அதை மாதம் ஐம்பது ரூபாயாகக் கொடுத்துவிடலாமென்று ஏற்பாடு செய்திருந்தார்கள். இப்பொழுது?

எண்ணை எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி அவன் நெஞ்சம் புண்ணாகியது. வாசலில் சுமார் ஐம்பது பேர் கும்பல் கூடியிருந்தனர். அவர்களில் ஒருவராவது இன்னாரென்று புலப்படவில்லை. ஐம்புலன்களும் சோர்ந்து அயர்வுற்றிருந்தன. தன் உடை தாறுமாறாக இருந்ததை அவன் பொருட்படுத்தவில்லை. தலைமயிர் அலங்கோலமாயிருந்ததும், அவன் தாடையில் நீளமான கரிக்கோடு ஏற்பட்டிருந்ததும் அவனுக்குத் தெரியா. குளிர்ந்த மிருதுவான ஒரு கரத்தின் ஸ்பரிசம் அவனை எழுப்பிவிட்டது. உமா அவன் பக்கத்தில் நின்றிருந்தாள். அவள் முகம் வெளுத்திருந்தாலும்

அதில் அமைதி குடிகொண்டிருந்தது. அவள் அப்பொழுது தேவாங்கனை போல் விளங்கினாள். அவனை அறியாமல் அவன் கரங்கள் அவளை அருகிலே இழுத்தன. இந்த அகன்ற பிரபஞ்சத்தில் இரண்டு பட்சிகள் - ஒன்றுக் கொன்றுதான் துணை - கூடிழந்து தவிக்கும் காட்சி; பெண் ஆணைத் தேற்றுகிறது.

"வாருங்கள், மேலே போய்ப் பார்க்கலாம்" என்று உமா அழைத்தாள். அவள் குரலில் சோகம் தொனித்த போதிலும் அது ராமனுக்கு அமுததாரைபோல் இருந்தது. சிறு குழந்தையைப் போல் அவளைப் பின்பற்றினான். இடிந்திருந்த படிகளின்மேல் அதிக ஜாக்கிரதையாக ஏறினார்கள். அவர்களுடைய படுக்கை அறையில் சேதமே இல்லை. அதுவரையில் க்ஷேமம். உடுக்கத் துணி இல்லாமலும், படுக்கப் படுக்கை இல்லாமலும் அவதிப்பட வேண்டாம். அலமாரியைத் திறந்து பணம் எவ்வளவு இருக்கிறதென்று பார்த்தார்கள்: 3 ரூ, 2 அணை, ஒரு செல்லாத 1762-ஆம் வருஷத்து அரையணை!

*

கீழே இறங்கிச் சமையலறைக்குச் சென்றனர். எல்லாம் எரிந்து சாம்பலாய்க் கிடந்தன. "காமு அனுப்பிய ஆவக்காய் ஊறுகாய், ஐயோ!" என்று உமா அங்கலாய்த்தாள். ராமனுக்குச் சிரிப்பு வந்தது. "கோடி போனாலும் ஐயோ! கோவணம் போனாலும், ஐயோ!" என்று அவன் தாய் சொல்லும் பழமொழி அவன் நினைவுக்கு வந்தது.

"சாப்பிடுவதற்கு....." என்று இரண்டு பேரும் ஏக காலத்தில் ஆரம்பித்தார்கள். அவர்கள் பேச்சை முடிக்கும்முன் சரஸ்வதியம்மாள் பெண் அந்தக் களேபரத்தையெல்லாம் மௌனமாகத் தாண்டிக்கொண்டு வந்து, "மாமா, உங்களை அம்மா காபி சாப்பிடக் கூப்பிடறா" என்றாள்.

"கடவுளே சரஸ்வதியம்மாளை நமக்கு அனுப்பி இருக்கிறார்" என்று உமா சொன்னாள். அவர்கள் வீட்டை விட்டு வெளியே வரும்போது வேடிக்கை பார்ப்பதற்காக வந்திருந்தவர்கள் எல்லாரும் போய்விட்டார்கள். வாசற்படியண்டை வந்ததும் இருவரும் இருதயம் வெடிப்பதுபோல் பெருமூச்சு விட்டனர்.

"வீட்டுக்காரச் சாயபுவுக்குச் சொல்லி அனுப்ப வேண்டுமே" என்று சொன்னாள் உமா. சாயபுவே எதிரே நின்றான். "என்ன ஐயர்! இப்படி நீங்தோரப் பண்ணிப்பூட்டான்" என்றார் சாயபு. ராமன் பதில் சொல்லவில்லை. "பகல் மேலே நம்ப இன்ஷூர் கம்பெனிக்காரன் வர்றான். உங்க இன்ஷூர்காரன்கூட வரட்டும்" என்று தாடியை நீவிக்கொண்டே டஹர் அலி சாயபு சொன்னார். "என்னுடைய இன்ஷூருக்குப் பணம் கட்டவில்லை" என்றான் ராமன். இதற்குச் சாயபு விடுத்த பதிலை அச்சிட முடியாது.

எட்டு மணிக்கு டைப் அடிக்கக் கற்றுக்கொள்ளும் மாணவி ஒருத்தி வந்தாள். உமா சில காலம் வரையில் பாடங்களை ஒத்தி வைக்க நேரிடும் என்று விவரித்தாள்.

"நானே உங்களை ஒரு மாதம் லீவு கேட்கலாமென இருந்தேன். என் தமக்கையின் கல்யாணத்திற்காக நாங்கள் எல்லோரும் ஒரு மாதம் பெங்களூருக்குப் போகிறோம். இந்தாருங்கள் : எங்கள் தகப்பனார் உங்களுக்கு இந்தச் செக்கைக் கொடுக்கச் சொன்னார்" என்று மிஸ் நிகலஸ் ஒரு செக்கை நீட்டினாள். மிஸ்டர் நிகலஸ் அந்த மாதத்திய சம்பளமாகிய பத்து ரூபாய்க்குச் செக் அனுப்பியிருந்தார்.

பத்து நிமிஷத்திற்குள் இன்னும் ஐந்து வித்தியார்த்திகள் வந்தனர். அப்பொழுது ராமனும் உமாவும் நெருப்பு இன்ஷூரன்ஸ் கம்பெனியிலிருந்து வந்த ஒரு வாலிபனிடம் வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். வித்தியார்த்திகளில் ஒருவர், "இன்னும் எத்தனை நாட்களில் பாடங்கள் திரும்பவும் ஆரம்பிக்கப்படும்?' என்று கேட்டார்.

உமாவின் சௌந்தரியத்தையும், பொறுமையையும், பெருந்தன்மையையும் கண்டு வியந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி உத்தியோகஸ்தன் அவர்களுக்குத் தானே பதில் சொன்னான்; "இன்னும் இரண்டு வாரங்களில் இந்தக் கட்டிடம் முடிந்து விடும். அப்படி ஒருகால் காலதாமதம் ஆகும்போல் தோன்றினால் வேறே இடம் ஏற்பாடு செய்வதற்கு நானே பிரயத்தனம் செய்வேன்" என்றான்.

இன்ஷூரன்ஸ் உத்தியோகஸ்தன் சென்றதும் ராமன், "உமா, வீடு கட்டி முடிந்தால் மாத்திரம் போதுமா? நம்மிடம் ஒரு டைப் யந்திரம் வாங்கக்கூடப் பணம் இல்லையே!" என்று தவித்தான்.

"நன்றாய் இருக்கிறது நீங்கள் கவலைப்படுவது! ரெமிங்டன் கம்பெனியிலே மாதத் தவணைக்கு இன்னொரு மெஷின் வாங்கினால் போகிறது. இதற்காகக் கவலை எதற்கு?" என்று தேற்றினாள் அவள்.

அன்று பகல் சரஸ்வதியம்மாள் வீட்டில் சாப்பிட்டுவிட்டு இருவரும் ரெமிங்டன் கம்பெனிக்குச் சென்றார்கள். கம்பெனி மானேஜர் அவர்கள் துயரத்திற்கு அநுதாபப் பட்டபோதிலும் வேறொரு யந்திரம் மாதத்தவணையில் தரவேண்டுமானால் அதற்காக முன்பணமாக நூறு ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்றார்.

"நூறு ரூபாய்க்கு எங்கே போவது? நூறு அணைக்கள் கூட இல்லையே!" என்று ராமன் ஏங்கினான். ஆனால், இதுவரையில் தெளிவாயிருந்த உமாவின் முகத்தில் சோர்வு தென்படுவதைக் கண்ட அவன் அவளை உத்ஸாகப்படுத்த முயன்றான்.

சாயங்காலம் வக்கீல் ராமசேஷையர் கோர்ட்டிலிருந்து வந்தவர் அவர்களைப் பார்க்க வந்தார். ராமன் அவரும் அவர் மனைவியும் செய்த உதவிக்கு நன்றி பாராட்டி அவரிடம் தன் சங்கடத்தை மனம் விட்டுக் கூறினான். எப்படியாவது நூறு ரூபாய் கடன் கிடைத்தால் போதுமென்று கூறினான்.

"உண்மையில் உமக்கு அந்தத் தொகையை நானே உதவி செய்வேன். உங்களைப்போன்ற ஒரு தம்பதிக்கு என்ன வேண்டு மானாலும் செய்யலாம். ஆனால், பாருங்கள்: சென்ற தை மாதந்தான் கையிலிருந்த காலணாவைக்கூடப் பெண்ணின் கல்யா ணத்திற்குச் செலவு செய்துவிட்டேன்" என்றார்.

இப்படியேதான் அன்றும் மறுநாளும் அநுதாபம் தெரிவிக்க வந்த ஒவ்வொரு நண்பரும் சொன்னார்.

உமா எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தாள். கடைசியில் வேறொரு வழியும் தோன்றுததால் மானத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டுத் தன் வளர்ப்புத் தந்தையாகிய சிற்றப்பா மேஜர் முத்துசாமியைக் கேட்பது என்று முடிவு செய்தாள். முத்துசாமி மூப்பது வயசிலேயே தாரம் இழந்தவர். தாய் தந்தையரைப் பத்தாவது வயசிலேயே இழந்த உமாவை வளர்த்து பி.ஏ., வரையில் படிக்க வைத்தவர். ஆனால் மிகவும் மூர்க்க குணம் வாய்ந்தவர்.

உமா வேலையில்லாமல் திண்டாடும் ராமனை இச்சித்தது அவருக்கு இஷ்டம் இல்லை. ராமன் அவரிடம் தன் இஷ்டத்தை வெளியிட்டு உமாவைத் தனக்கு மணம் புரிவிக்கும்படி வேண்டிய போது ஒரே வார்த்தையில், "முடியாது" என்று சொல்லி விட்டவர், தம் இஷ்டத்துக்கு விரோதமாய் உமா ராமனைக் கல்யாணம் செய்துகொண்டபோது அவர் சொல்லிய வார்த்தை களையே இப்பொழுதும் சொல்லக் கூடும். ஆனால் அவருக்கு உமாவின்மேல் அதிக அன்பு உண்டு. அதுவும் இந்தச் சமயத்தில் – உமா எட்டு மாதக்கர்ப்பிணியாய் இருக்கும்பொழுது – அவர் மனம் இரங்கலாம். அவர் அதிகக் கடினமாகப் பேசியிருந்தபோதிலும் அவர் மனம் இரும்பன்று. - இவ்வாறு மறுநாட் காலை முழுதும் யோசனை செய்தாள். கடைசியில் தைரியமாய் டெலிபோனில் அவரைக் கூப்பிட்டாள். அவர் பதில் சொல்வதற்குள் அவள் இருதயம் படபடத்தது.

"நான் தங்களை இன்று சாயங்காலம் பார்க்கலாமா?"

"முடியாது."

"பிறகு எப்பொழுது முடியும்?"

உமா விடுபவளாயில்லை.

"எனக்கு அதிக வேலை இருக்கிறது. சனிக்கிழமை சாயங் காலம் நான்கு மணிக்கு வந்தால் சில நிமிஷங்கள் பேசக் கூடும்."

'கிளிக்!' டெலிபோனை மேஜர் முத்துசாமி கீழே வைத்து விட்டார்.

திங்கட்கிழமையன்று வருஷப் பிறப்பு. ராமனும் உமாவும் விவாகம் செய்துகொண்ட பிறகு இதுதான் முதல் வருஷப் பிறப்பு. "இன்று செவ்வாய்க்கிழமை. இன்றைக்கு ஏழாம் நாள் வருஷப் பிறப்பு" என்று உமா தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள். ஐந்து நாட்களும் ஐந்து விநாடிகள்போல் சென்றன. எரிந்த விட்டை அதிசிக்கிரத்திலேயே செப்பனிட்டு முடித்து விட்டார்கள். செவ்வாய்க்கிழமை வருஷப் பிறப்பு, தங்கள் வீட்டிலேயே செய்யலாம். அன்று அவர்கள் சந்தோஷமாய் இருப்பதோ, துக்கப்படுவதோ மேஜர் முத்துசாமி ஐயர் தயவைப் பொறுத்திருந்தது.

2

சனிக்கிழமை காலை ராமன் எழுந்திருந்தான். "உமா, எனக்கு எங்கேயாவது போய் வரவேண்டும்போல் இருக்கிறது. நான் இண்டியில் உள்ள சிநேகிதரைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்றான்.

"அப்படியே செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டு எட்டு மணிக்குள் சமையல் செய்து சாப்பிட்டார்கள். ராமன் உடுத்துக் கொண்டு போய்விட்டான். அவன் தலை மறையும் வரையில் பார்த்துக்கொண்டிருந்த உமாவின் உள்ளம் தவித்தது. சிற்றப்பா முடியாதென்று சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று ஏங்கினாள். வேலைக்காரி சின்னம்மாள் உள்ளே வந்து எஜமானியைக் கண்டாள். உமாவின் கண்களில் நீர் தேங்கிற்று. "அம்மா, வருஷப் பிறப்பிற்கு எனக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமே என்று ஏங்க வேண்டாம். நான் எப்படியாவது சமாளித்துக் கொள்கிறேன்" என்றாள் அவள்.

உமாவிற்குத் தன்னைத் தவிர வேறு ஒருவரும் கஷ்டப்படக் கூடாதென்று தோன்றியது. தன் பையைத் திறந்து ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை அவளிடம் கொடுத்தாள். அவளிடம் பாக்கி பத்து ரூபாய்தான் இருந்தது. ஆனால் பல வித்தியார்த்திகளிடமிருந்து இன்னும் 35 ரூபாய் வரும். அதற்கு அப்புறம்?

மணி பன்னிரண்டாயிற்று. மேஜர் முத்துசாமி ஐயரிடம் பழகிய உமாவிற்கு அவர் குணம் கன்றுய்த் தெரியும். நான்கு மணி என்றால் நான்கு மணிதான். ஒரு விநாடி கழித்துப் போனால் ருத்ர ஸ்வரூபந்தான். ஆகையால் உடுத்துக்கொள்ளத் தொடங்கினாள். மேஜர் முத்துசாமி ஐயர் வாங்கிக் கொடுத்திருந்த புடைவைகளில் மிகவும் அழகான ஒன்றை எடுத்துக் கட்டிக் கொண்டாள். காலில் அழகிய 'ஸ்லிப்பர்களை' அணிந்தாள். அவள் கைப் பை, அழகிய கைப் பை, பங்களூரில் 65 ரூபாய்க்கு வாங்கியது, எரிந்துபோய் விட்டது. இப்பொழுது பழைய பைதான் இருந்தது. காலேஜிலிருந்து அவள் கையில் ஒரு பை (Vanity case) வைத்திருப்பது வழக்கம். அது இல்லாவிட்டால் ஏதோ ஓர் அங்கம் குறைவுபட்டதாகவே தோன்றும். அந்தப் பழைய பையிலேயே ஒரு கைக்குட்டையையும் கையில் இருந்த இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுகளையும் வைத்துக்கொண்டாள்.

மணி இரண்டாயிற்று. மெதுவாகப் பஸ் வரையிலும் நடந்து போவதென்று புறப்பட்டாள். பஸ் அடியில் சிறிது நேரம் காத்திருக்க நேர்ந்தது. அப்பொழுது எதிரிலிருந்த 'பாரிஸ் ஸ்டோர்ஸ்' என்னும் கடை அவள் கண்ணில் பட்டது. அங்கே போய் அந்தப் பழைய பைக்குப் பதிலாகக் குறைந்த விலையில் ஒரு புதுப்பை வாங்கலாமென நினைத்தாள். மறு நிமிஷம் கடையில் உள்ள பல நவீனமான பைகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவைகளில் ஒன்றைப் பொறுக்கி எடுத்து அதன் விலையாகிய $5\frac{1}{2}$ ரூபாயைக் கொடுத்து விட்டுத் திரும்பவும் பஸ்ஸுக்காகத் திரும்பினாள். மணி மூன்றுதான். ராயப்பேட்டையிலுள்ள சிற்றப்பா வீட்டிற்குப் பஸ் இருபது நிமிஷங்களில் போய் விடும். அவ்வளவு சீக்கிரமாகப் போவது உசிதமாக அவளுக்குத் தோன்றவில்லை.

'பாரிஸ் ஸ்டோர்ஸு'க்கு அடுத்தாற்போல் 'லண்டன் ஹால்' இருந்தது. 'இந்தக் கடைக்குள் சென்று பார்ப்போம்' என்று சென்றாள். முன்னணியில் அவள் வாங்கியது போலவே பல பைகள் இருந்தன. அருகில் சென்று அவற்றுள் ஒன்றை எடுத்து அதில் கட்டித் தொங்கின அட்டையில் எழுதியிருந்த விலையைப் பார்த்தாள். $9\frac{1}{2}$ ரூபாய் என்று எழுதியிருந்தது. 'அடேயப்பா! பக்கத்துக் கடையிலேயே எவ்வளவு வித்தியாசம்!' என்று நினைத்துக் கொண்டு தன் பையைக் கீழே வைத்துவிட்டு அதைத் திறந்தாள். எல்லாம் அவள் வாங்கியது போலவே இருந்தது: ஒரு சிறிய கண்ணாடி, மூன்று அறைகள், ஒரு சிறிய சீப்பு, ஒரு பவுடர் ஒத்திகொள்ளும் பஞ்சு; "என்ன மோசடி" என்று சொல்லிக்கொண்டு தான் வாங்கின பையை எடுத்துக்கொண்டு வாசற்படியண்டை வந்தாள்.

"அம்மா, தயவு செய்து பையை வைத்துவிட்டுச் செல்லுங்கள்" என்னும் குரல் பின்னாலிருந்து கேட்டது. அவள் திரும்பிப் பார்த்தாள். ஒரு வேலைக்காரன் முன்பு வந்து, "பையை வைத்து விட்டுப் போங்கள்" என்றான். உமாவிற்கு ஒன்றும் தோன்றவில்லை. சில கணங்கள் அவளுக்குப் பல யுகங்கள்போல் தோன்றின.

"இது என் பை" என்றாள். அவள் முகம் பயத்தால் பால் போல் வெளுத்திருந்தது.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்கள் அந்தப் பையை எடுக்கையில் நானே என் கண்ணால் பார்த்தேன்; வாருங்கள்" என்றான். தன்னை அறியாமல் அவன்பின்னே தான் கடையின் பின்புறம் செல்வதை அவள் அறிந்து கொண்டாள். அங்கே ஓர் அறையில் கடை முதலாளி உட்கார்ந்திருந்தார்; "ஐயா, இந்த அம்மாள் என் எதிரில் இந்தப் பையைத் திருடிவிட்டுத் தன்னுடையது என்று சாதிக்கிறாள்" என்று அந்த வேலைக்காரன் சொன்னான்.

"ஐயா, நான் மறுபடியும் சொல்லுகிறேன். நான் இந்தப் பையைத் திருடவில்லை; இது என்னுடையது" என்றாள் உமா.

"பேஷ்! இந்த மாதிரி நாகரிக உடை தரித்து வரும் திருடர்களால்தான் எங்களுக்கு அதிகக் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுகின்றன. புறப்படுங்கள், போலீஸ் ஸ்டேஷனுக்கு" என்று எழுந்தார் முதலாளி.

உமாவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. 'இதுவும் நமது கஷ்ட காலம்' என்று எண்ணிக்கொண்டாள்.

மூவரும் மோட்டாரில் ஏறிப் போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்தார்கள். அங்கே ஸப் இன்ஸ்பெக்டர் முன் உமா நிறுத்தப் பட்டாள். பூமி வெடித்துத் தன்னை உட்கொள்ளாதா என்று எண்ணினாள் அவள். அவமானம் அவளைச் சுட்டது.

"இந்த ஸ்திரீ, உமது கடையில் திருடியதாகக் குற்றம் சாட்டுகிறீரா?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

'லண்டன் ஹால்' வேலைக்காரன் விவரங்களைக் கூறினான். இன்ஸ்பெக்டர் பையைத் திறந்து அதிலிருந்து, "உமாராமன் பி. ஏ. பி. காம்" என்று அச்சடித்திருந்த கடிதத்தை எடுத்தார்.

"இது உங்களுடையதா?" என்று உமாவைக் கேட்டார். அவள், அது தன்னுடையதுதானென்றும், அவர்கள் சொல்வ தெல்லாம் பொய்யென்றும், தான் அந்தப் பையை, 'பாரிஸ் ஸ்டோர்'ஸில் 5½ ரூபாய்க்கு வாங்கியதாகவும் சொன்னாள்.

இன்ஸ்பெக்டர், "பை வாங்கியதற்கு ரசீது இருக்கிறதா?" என்று கேட்டார்.

"ரசீது நான் பெற்றுக்கொள்ளவில்லை" என்று உமா பதில் அளித்தாள்.

இதற்குள் இன்ஸ்பெக்டர் பையில் இருந்ததை யெல்லாம் மேஜைமேல் கொட்டிவிட்டார். பிறகு ஒவ்வோர் அறையாய்த் திறந்து, கூர்ந்து உள்ளே நோக்கினார். கடைசியில் பையில் இருந்த ஓர் அறையிலிருந்து சிறியதோர் பச்சை அட்டைத் துண்டை வெளியில் எடுத்தார். அதில் 'பாரிஸ் ஸ்டோர்ஸ். ரூ. 5-8' என்று எழுதியிருந்தது. அந்தச் சீட்டை அவர் 'லண்டன் ஹால்' முதலாளியின் முகத்தண்டை நீட்டினார். அப்பொழுது முதலாளியின் முகத்தைப் பார்த்திருக்கவேண்டும்! அதைச் சித்திரிக்க வார்த்தைகளால் முடியாது. உமாவின் சந்தோஷம் அளவிட முடியாது.

"வழக்கைத் தொடர விரும்புகிறீர்களா?" என்று இன்ஸ் பெக்டர் முதலாளியை வினவினார்.

நெற்றியில் அரும்பிய வேர்வைத் துளிகளைக் கட்டை விரலால் வழித்துக்கொண்டே முதலாளி, "இல்லை, இல்லை" என்று சொல்லி உமாவிடம் மன்னிப்புக் கேட்கத் திரும்பினார்.

கடிகாரம் ஐந்து மணி அடித்தது. இதுவரையில் தனக்கு அகஸ்மாத்தாக ஏற்பட்ட விபத்தை மாத்திரம் நினைத்துக்கொண்டிருந்த உமாவிற்கு, தான் புறப்பட்ட காரியம் ஞாபகத்திற்கு வந்தது.

"ஐயையோ! அவர் என்னைத் திரும்பியும் பார்க்கமாட்டாரே!" என்று சொல்லிக்கொண்டே பதைக்கும் நெஞ்சத்துடன் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தாள்.

அதிருஷ்ட வசமாக ஸ்டேஷன் வாயிலில் ஒரு 'டாக்ஸி' நின்றுகொண்டிருந்தது. உமா அதை நோக்கி ஓடினாள். தொந்திகுலுங்க, வேர்க்க விறுவிறுக்க, அவளைத் துரத்திக்கொண்டு மூதலாளி ஓடினார். திறந்திருந்த கதவு மூலம் உமா நுழைந்து வண்டியில் உட்கார்ந்துகொண்டாள். அவள் உடலெல்லாம் வேர்த்தது. இருதயம் 'படபட' வென்று அடித்துக்கொண்டது. கண்களில் கோபமும் துக்கமும் கலந்து ஒளி வீசின.

'லண்டன் ஹால்' முதலாளி அவளை விடுபவராயில்லை. 'டாக்ஸி' ஓட்டுபவரிடம், உமா தன் சிற்றப்பா வீட்டு விலாசத்தைச் சொல்லிக் கொண்டிருக்கையில், அவர் ஜன்னலண்டை நின்றுகொண்டு, "அம்மா, என்னைத் தாங்கள் க்ஷமிக்கவேண்டும். தங்களை இப்படிக் கஷ்டத்திற்கு உள்ளாக்கிய வேலைக்காரனைத் தொலைத்துவிட்டேன். தாங்கள் என்ன சொன்னாலும் செய்யத் தயாராயிருக்கிறேன். இந்தச் சம்பவத்திற்காக என் வருத்தத்தை நான் மிகவும் வணக்கமாய்த் தெரிவிக்கிறேன்" என்று இரைக்க இரைக்கச் சொன்னார். உமாவின் கண்களில் கோபத்தழல் வீசியது. அப்படியே அவரை எரித்துவிடுவாள் போல் தோன்றிற்று.

"உங்களை மன்னிப்பதா? என் உயிருள்ள மட்டும் மாட்டேன். உங்களிடமிருந்து எனக்கு ஒன்றும் வேண்டாம். உங்கள் கடையின் மோசத்தை நான் உலகறிய விளம்பரம் செய்வேன். 5½ ரூபாய்ப் பையை 9½ ரூபாய்க்கு விற்கும் அயோக்கியத்தனத்தை நான் எல்லோரிடமும் சொல்லுவேன். மற்றும் நீங்கள் என்னை நடத்திய விதமும்—, ஆமாம், ஒவ்வொருவரிடமும்—" அவளுடலெல்லாம் கோபத்தால் துடித்தது. "டிரைவர், போ!" என்றாள்.

இருபது நிமிஷங்களில் அவள் மேஜர் முத்துசாமி ஐயர் வீட்டை அடைந்தாள். அவள் மாத்திரம் பின்னால் பார்த்திருந்தால் 'லண்டன் ஹால்' முதலாளியின் மோட்டார் வண்டியைக் கண்டிருப்பாள். ஆனால், அப்பொழுது அவளுக்கு ஒரு நினைவும் இல்லை. கோபமும் தாபமும் மாறி மாறி அவள் நெஞ்சத்தைப் பிளந்தன. வண்டியை விட்டு இறங்கி அவள் நேரே தன் வளர்ப்புத் தந்தையின் அறையை நோக்கிச் சென்றாள்.

எதிரே வேலைக்காரன் வந்தான். "அம்மா, எஜமான் வெளியே போய்விட்டார். இரவு 10 மணிக்குத்தான் வருவார்" என்றான்.

அவள் தலை சுற்றிற்று. மெதுவாய்ச் சமாளித்துக்கொண்டு, வண்டியில் ஏறித் தன் வீட்டிற்கு ஓட்டச் சொன்னாள்.

3

ராமன் அவளை எதிர்பார்த்து வாசலில் நின்றிருந்தான். அவளைக் கண்டதும் அவள் இருந்த நிலையிலிருந்து மிகவும் கனைத் திருக்கிறாளென்று ஊகித்துக்கொண்டான். அவன் அவளைப் பேசவிடவில்லை. நேரே மேலே கூட்டிக்கொண்டு போய்த் தூங்க வைத்தான்.

மறுநாள் காலை ஏழு மணி வரையில் அவள் தூங்கினாள். காபி அருந்திக்கொண்டே தன் கதை முழுதும் சொன்னாள். ராமனுக்கு வந்த கோபத்தில், அந்த முதலாளி எதிரில் இருந்தால் அவன் குரல்வளையைப் பிடித்திருப்பான்.

பிறகு என்ன செய்வதென்று யோசித்தார்கள். எல்லா வற்றையும் விவரித்து, சிற்றப்பா மேஜர் முத்துசாமி ஐயருக்குக் கடிதம் எழுதுவதாகத் தீர்மானித்தனர். இருவரும் சேர்ந்து கடிதம் எழுதத் தொடங்கினர். சிற்றப்பா மானி. இந்த அவமானத்தை எப்படி எடுத்துக் கொள்ளுவாரோ என்று உமா அஞ்சினாள்.

இப்படி உமாவும் ராமனும் மண்டையை உடைத்துக் கொண்டிருக்கையில், வக்கில் ராமசேஷையர் விசாரித்துப் போகலாமென்று வந்தார். அவரிடம் இருவரும் நடந்த விவரங்களை எல்லாம் சாங்கோபாங்கமாகச் சொன்னார்கள். பாதி எழுதி முடிந்திருந்த கடிதத்தையும் அவரிடம் காட்டினார்கள்.

வக்கீல் சிரித்தே விட்டார். "உங்களைப் போன்ற இரண்டு வடிகட்டிய அசட்டுக் குழந்தைகளை நான் கண்டதே இல்லை. நீங்கள் இந்த விஷயத்தை என்னிடம் விட்டு விடுங்கள். கடவுள் உங்கள் கஷ்டத்தை நீக்க நல்ல சந்தர்ப்பத்தை அளித்திருக்கிறார்" என்றார்.

அப்பொழுது வேலைக்காரச் சின்னம்மாள் உள்ளே நுழைந்து, "அம்மா, உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள்" என்று சொன்னாள். அவள் பின்னாலேயே வந்த 'லண்டன் ஹால்' முதலாளி, "அம்மா, என்னை மன்னிக்க வேண்டும். நான் தங்களிடம் சில விஷயங்கள் பேசவேண்டும்" என்றார்.

ராமசேஷையர் முன்னால் வந்து, "ஐயா, நான் அவர்களுடைய வக்கீல். நீங்கள் சொல்ல வேண்டியதை என்னிடம் சொல்லலாம்" என்றார்.

பேரம் ஆரம்பித்தது. ராமசேஷையர் 20,000 ரூபாய்க்குப் பைசாக் குறைந்தால் கோர்ட்டு மூலமாய்ப் பார்த்துக்கொள்வதாகச் சொன்னார். கடைசியில் 15,000 ரூபாய்க்கு முடிவு செய்து, அங்கேயே ஒரு செக் எழுதிக் கொடுத்துவிட்டார் முதலாளி.

வருஷப்பிறப்புக் கொண்டாட்டம் அவர்கள் கல்யாணத்தை விட விமரிசையாய் நடந்தது. பல நண்பர்கள் அன்று சாயங்காலம் தேநீர் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இரவு பன்னிரண்டு மணி வரையில் அதிக சந்தோஷமாய்க் காலம் கழிந்தது.

"உமா, எல்லாம் நன்மைக்குத்தான்" என்றான் மணி.

இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு சரஸ்வதியம்மாள், "தலைவலி மண்டையைப் பிளக்கிறது" என்று தன் கணவரிடம் சொன்னாள். ராமசேஷையர் சிரித்துக்கொண்டே, "நீ உமாவுக்குச் செய்த சுச்ருஷையின் பலன் இது" என்றார்.

எதிர் வீட்டில் பல 'டைப்' யந்திரங்கள் "டக், டக்" என்று அடித்துக் கொண்டிருந்தால், யாருக்குத்தான் தலைவலி வராது?

ல. ரா. விசுவநாத சர்மா

மின்னல்கொடி 58

அதிபால்யத்திலேயே பெற்றோரை இழந்த ஏழைச் சிறுவன் மனோகரன் தன் மாமன் ஆதரவில் பி. ஏ. வரையில் படித்தான். குழந்தைப் பருவத்திலிருந்தே அவனுக்குச் சித்திரம் வரைவதில் அதிக ஆர்வம் உண்டு. நாளடைவில் அவன் மனம் அக் கலையை அளவு கடந்து காதலித்தது. பள்ளிக்கூடத்திலும் கலாசாலையிலும் அவன் கரங்கள் பல பரிசுகளைப் பெற்றிருக்கின்றன. அவனுக்கு உலகத்தில் ஒன்றுமே இல்லை. அனைத்தும் சித்திரத்துள் அடக்கம்.

"தலைக்குத் தகுந்த குல்லாவா? குல்லாவுக்குதந்த தலையா?" என்பது ஒரு பழமொழி. மனோகரன் விஷயம் இதற்கு நேர் மாறுதான். அவன் ஓவியக்காரன் மட்டுமல்ல; கதை, கட்டுரை, கவிதைகள் இயற்றும் ஆற்றலும் படைத்தவன். எல்லோரும் கதையை எழுதி அதற்கேற்பச் சித்திரங்களைத் தயாரித்தால் மனோகரன் பல சித்திரங்களைத் தீட்டி அவைகளின் பாவங்களிலிருந்து உன்னதமான கதையைப் பிறப்பிப்பான். அவன் வரைந்தவைகளுள் வனப்புமிகும் வனிதைகளின் படங்களே பெரும்பாலானவை. கண்டோர் மனத்தைக் கவரும் அவற்றை மனோகரன் மனம் அவ்வளவாகப் போற்றாது. அதற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு.

மனோகரனின் பதினாறாவது வயசில் கார்த்திகை மாதத்தில் ஒரு நாள் இரவு பத்து மணி; அவன் தாழ்வாரத்தில் படுத்து முற்றத்தின் வழியே வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது கடுமழையின் நடுவே தோன்றிய ஒரு மின்னலைக் கண்டான். 'மின்னல்! ஆ! அதற்குத்தான் எத்தனை மனோகர சக்தி! கவிகள் அன்னநடை மாதரசிகளை மின்னலுக்கு ஒப்பிடுவது

முற்றும் பொருத்தமே. இந்த மின்னல் கொடிக்கு ஒப்பான ஒரு காரிகையின் காதல்! (பெருமூச்சு)...ம்! நாமோ பரம ஏழை. மின்னிடை மாதரசிகளை நினைந்து ஏங்குவதில் பயன் என்ன?' இப்படியெல்லாம் எண்ணமிட்டான் மனோகரன். மேலும் மேலும் மின்னல்கள் தோன்றி அவன் எண்ணத்தைப் பலப்படுத்தின. 'மின்னல்கொடி போன்ற ஒரு பாவையைப் படத்தில் வரைந்தாவது திருப்தி அடைவோம்' என்று எண்ணி அன்றுமுதல் அதே வேலையாகப் பல சித்திரங்களை வரைந்தும், ஒன்றும் அவன் மனத்தைத் திருப்தி செய்யவில்லை. சுமார் நான்கு வருஷ காலம் இந்தக் கிளர்ச்சி வெள்ளத்தில் கிடந்து தத்தளித்த மனோகரன் இருபதாவது வயசில் வெற்றி பெற்றான். அழகாக ஒரு சித்திரம் அமைந்தது. அதை எழுதி முடித்ததும் அவன் ஆனந்தக் கூத்தாடினான்.

'ஆ! அன்று நான் கண்ட மின்னல் இதுதான்! இதுவன்றோ எல்லா லக்ஷணங்களும் பொருந்திய ஒரு நங்கையின் உருவம்? இதற்கு உயிரை மட்டும் என்னால் கொடுக்க முடியவில்லை. ஆனால் என்னிடம் பேசுகிறது, கொஞ்சுகிறது. இதற்கு 'மின்னல் கொடி' என்ற பெயர்தான் தகும். ஆ! இந்த மாதிரி ஒரு மங்கை எவனுக்குக் கிடைக்கிறாளோ அவனே பாக்கியவான். ஆனால், நம் விஷயம்?' இப்படி யெல்லாம் எண்ணி எண்ணிப் பெருமூச்சு விட்டான் மனோகரன்.

மனோகரனின் மாமனுக்குச் சகுந்தலா ஒரே பெண். அவலக்ஷணமானவள்தான். ஆனால் உயர்ந்த குணமுள்ளவள். பார்த்த மாத்திரத்திலேயே சாதாரண மனிதரும் வெறுக்கத்தக்க ரூபத்தையுடைய சகுந்தலாவை ஓர் உயர்ந்த சித்திரகாரன் எப்படி விரும்ப முடியும்? ஆனால் மாமன் என்கிற தாக்ஷிண்யம், ஊண் உடை கல்வி செல்வம் முதலியவற்றை அளித்தவர்களிடம் இருக்கவேண்டிய நன்றி, எல்லாம் சேர்ந்து மனோகரனைக் கட்டுப் படுத்தின. சத்தியசந்தனாகிய அவனால் அவர் வார்த்தையை மீற முடியவில்லை. எங்கேனும் ஓடிப் போய்விடலாம். அப்படிச் செய்வது பகுத்தறிவுள்ள ஆண் பிள்ளைக்கு அழகல்ல என்று கூறியது அவன் இருதயம். தர்மசங்கடத்தில் அகப்பட்டுக் கொண்ட மனோகரன் எல்லாம் தலைவிதி என்று மனத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டான். சகுந்தலைக்கும் மனோகரனுக்கும் கல்யாணம் நடந்தது. அவன் இருதயம் இருளடைந்தது. முகம் பொலிவிழந்தது. அவன் ஒரு நடைப்பிணம் ஆனான்.

மனோகரனுக்கு ஒரு கம்பெனியில் வேலை செய்து வைத்துச் சகுந்தலாவையும் அவனையும் தனியாக ஜாகை வைத்துக்கொடுத்து வேண்டிய சௌகரியங்களைச் செய்து தந்தார் மாமனார். புது வாழ்க்கை ஆரம்பமாயிற்று. போதிய வருமானமும் கிடைத்தது. சகுந்தலாவும் தன் கணவன் குறிப்பறிந்து கொண்டாள். ஆனால் அவளுடைய குண விசேஷங்கள் மனோகரனின் மனத்தில்

பதியவே இல்லை. அவன் வாழ்க்கையில் ஏமாற்றம் அடைந்தான்.

மின்னல்! அதன் மூலம் கண்ட கற்பனைச் சித்திரம்! அதற்கும் சகுந்தலாவுக்கும் எவ்வளவு தூரம்? எவ்வளவோ அன்பு மொழிகள், பணிவிடைகள்; அத்தனையும் மனோகரன் மனத்தில் ஒரு பொருட்டாகப் படுவதே இல்லை. எப்பொழுதும் மனவாட்டந்தான், மனச்சோர்வுதான், ஆயாசந்தான். அவ்விரு வரது வாழ்க்கையும் ரஸிக்கவே இல்லை. மனோகரனின் மனப் போக்கை, அதன் மூல காரணத்தை, அறிய முடியாமல் தவித்தாள் அபலை சகுந்தலா. மனோகரன் எந்நேரமும் ஒரு படத்தைக் கையில் தாங்கிப் பெருமூச்சு விடுவதைக் கண்டு தன் ரூபத்தை நொந்துகொள்வதைத் தவிர அவள் செய்யக்கூடியது என்ன?

கார்த்திகை மாதம் வந்தது. முன்போல் ஓர் இரவு. கனத்த மழை, ஒரு மின்னல். அதன்பால் மிகுந்த சீற்றத்தைக் கொண்டான் மனோகரன். இன்னொரு மின்னல். அதன் ஒளியில் தன் படுக்கையில் ஒரு புறத்தில் உள்ள புன்னகை தவழும் வதனத் தோடு கூடிய 'மின்னல் கொடிப்' படத்தையும், மற்றொரு புறத்தில் அயர்ந்த நித்திரையில் இருந்த சகுந்தலாவின் கோரமான முகத்தை யும் ஏககாலத்தில் கண்டான். அவனுல் இந்த மாறுதலைச் சகிக்க முடியவில்லை. "ஹா!" என்று அலறினன் அவன். திடுக்கிட்டுக் கண் விழித்த சகுந்தலை, "ஏன்? என்ன இது? ஏதாவது கெட்ட கனவுக் கண்டீர்களா?" என்று விநயமாக வினவினுள். தீராத வியாகுலம் கொண்ட மனோகரன் தூங்கவே இல்லை என்பது அவளுக்குத் தெரியாது. சகுந்தலா விளக்கை ஏற்றினுள். மனோகரன் சரீரம் பதறிக்கொண்டிருந்தது. உதடுகள் துடித்தன. கண்களில் வெறி ஏறி விறைத்து நின்றன. கரங்கள் தாமாகவே சித்திரத்தை நாடின. அதை எடுத்து மார்புறத் தழுவிக் கொண்டான். அப்படியே எழுந்தான். வாசற் கதவைத் திறந்து கொண்டு தெருவில் இறங்கி மேற்கே சென்று இருளில் மறைந்தான்.

வருஷங்கள் சில ஓடி மறைந்தன. வட இந்தியாவில் பர்மக்பூர் ஒரு பெரிய பட்டணம். அங்கே ஒவ்வொரு வருஷமும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் வெகு விமரிசையாக நடைபெறும். பல கண் காட்சிச் சாலைகளும், சங்கீதம், நாட்டியம், நாடகம், ஜால வித்தைகள் முதலியவை நடந்தேறும் ஸ்தலங்களும் ஜனத்திரளால் நிறைந்து, நகரமே இந்திர லோகம்போல் விளங்கும். இயற்கையில் இவ்வளவு பெருமைகளைக் கொண்ட பர்மக்பூருக்கு இரண்டு வருஷமாகப் புது யோகம் ஏற்பட்டிருந்தது. அதற்கு முக்கிய காரணம் அவ்வூர்க் கலாசாலையில் புதிதாக வேலைக்கு வந்திருக்கும் தலைமைச் சித்திராசிரியரின் கைத்திறன்தான். எத்தனை உயர்தரச் சித்திரங்கள்! ஆஹா! எல்லாம் உயிருள்ளவை போலவே விளங் கின. மாந்தர்கள் காட்சிச் சாலையிலும் வீடு திரும்புகையிலும் வீட்டிலும் எங்கும் எப்பொழுதும் அந்தச் சித்திரங்களையும் அவை

களின் மனேகர சக்தியையும் புகழ்ந்தனர். அந்தப் பக்கங்களில் அதைத் தவிர வேறு பேச்சே இல்லை.

காட்சிச்சாலை அதிகாரியின் அறையில் அதிகாரி, வேறு ஒரு கனவான், ஒரு மங்கை மூவரும் அமர்ந்திருந்தனர்.

"ஐயா, மின்னல்கொடி என்ற படத்தை விலைக்குக் கொடுக்க முடியுமா?" என்றார் கனவான்.

"இங்கேதான் எந்தப் பொருளையும் விலைக்கு விற்பதில்லை என்பது தாங்கள் அறியாததல்லவே."

"அறிவேன். ஆனால் அந்த 'மின்னல் கொடியை' நான் எப்படியாவது அடைய வேண்டியிருக்கிறது. இதோ இவள் என் சகோதரியின் பெண். தன்னைப்போல் இருக்கும் அப்படத் திற்காக இவள் இரவு பகலாகத் தவங் கிடக்கிறாள்."

இந்த வார்த்தையைக் கேட்டதும் காட்சிச் சாலை அதிகாரி கங்கையைப் பார்த்து ஆச்சரியம் கொண்டவராய்த் தலையை அசைத்த வண்ணம், "ஆ! என்ன ஒற்றுமை! மின்னல்கொடிப் படத்திற்கும் இப்பெண்ணிற்கும் மயிரிழைகூட வித்தியாச மில்லையே! அப் படத்தின்பால் நீங்கள் மோகம் கொள்வது நியாயமே. ஒன்று செய்யுங்கள். அப்படத்தைச் சிருஷ்டித்தவர் இவ்வூர்க் கலாசாலையில் சித்திர ஆசிரியராக இருக்கிறார். அவர் பெயர் ஸ்ரீ மனேகர். நீங்கள் அவரிடம் சென்றால் இதைப் போன்ற வேறொரு பிரதி உங்களுக்குக் கிடைக்கலாம்" என்றார். கங்கையும் கனவானும் அதிகாரியிடம் உத்தரவு பெற்று வெளி யேறினர்.

பர்மக்பூரை அடுத்த மால்கஞ்சில் வசித்துவந்த ஒரு தனவந் தரின் அருமை மகள் மனேகரி. தனவந்தர் இறந்து சில வருஷங்கள் ஆயின. எட்டு வயசுத் தம்பியுடனும் தாயுடனும் வசித்துவந்த மனேகரிதான் குடும்பத்தின் தற்கால அதிகாரி. அவளுக்கு வயசு பதினேழு. இன்னும் விவாகம் ஆகவில்லை. படிப்பை நிறுத்திச் சில மாதங்கள் ஆகிறபடியால் கல்யாணம் இல்லறம் முதலியவைகளில் இதுவரையில் அவள் சித்தம் செல்ல வில்லை. மாமனுடன் கிறிஸ்துமஸ் பண்டிகைக்குப் பர்மக்பூர் வந்தவிடத்தில் அவளைப் பைத்தியம் பிடித்தவளாக ஆக்கிவிட்டது மனேகரனின் சித்திரம். தன்னை முன்பின் அறியாத ஒருவனுல் தன்னைப்போலவே ஒரு படம் எழுதப்பட்டிருப்பதைக் கண்டால், சாதாரணமாக ஆடவர்களுக்குக்கூட அப்படத்தின்பாலும் அதை எழுதியவன்பாலும் அளவு கடந்த அன்பு ஏற்படுதல் இயல்பு. மனேகரி ஒரு பருவகால மடக்கொடி. கலை ஆர்வம் கொண்டவள். அவள் மனம் மனேகரனை நாடியதில் வியப்பென்ன? கண் காட்சிச் சாலையிலிருந்து வீடுசென்ற மனேகரி இரவு தூக்கத்தில் பல தடவைகள் 'மனேகரன், மனேகரன்' என்று ஜபித்தாள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த அவள் மாமனும் தாயும் ஒரு கல்ல முடிவுக்கு வந்தனர்.

மறுநாட் காலையில் மனோகரனை அவன் இருப்பிடத்தில் போய்ப் பார்த்துப் பேசினார் மனோகரியின் மாமா. அங்கே சுவரில் மாட்டியிருந்த மின்னல்கொடிப் படத்தின் மூலப் பிரதியைக் கண்டு வியப்படைந்து அதைப்பற்றி வினவலானார்.

"மனோகர், நீங்கள் எதை வைத்துக்கொண்டு இதைச் சிருஷ்டித்தீர்கள்?"

"என் மனத்தில் எழுந்த கற்பனையைக் கொண்டு சிருஷ்டித்தேன்."

"இதே அமைப்பில் உள்ள பெண்மணி யாரையேனும் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?"

"இல்லை; தாங்கள் எங்கேனும் பார்த்திருக்கிறீர்களா?"

"இப்படி ஒரு நங்கையை நேரில் கண்டால் உங்கள் மனம் எப்படி இருக்கும்?"

மௌனமாகப் பெருமூச்செறிந்தான் மனோகரன்.

"இதேபோல் ஒரு நங்கை இருக்கிறாள். அவளை நீங்கள் மணக்க விரும்புகிறீர்களா?"

"தயை செய்து புண்பட்ட என் நெஞ்சைக் கிளரிவிட வேண்டாம்."

"பரிகாசம் அல்ல. இது சத்திய மொழி. அவள் உங்களை விரும்புகிறாள்!"

ஆச்சரியத்துடன் அவர் முகத்தை நோக்கினான் மனோகரன்.

"என்ன?" என்று வியப்புடன் வினவினான்.

"ஆம்; உங்கள் கைத்திறனை, அதன்மூலம் உங்களை விரும்புகிறாள். இது உறுதி."

இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். அடுத்த மாதத்தில் மால்கஞ்சில் மனோகரிக்கும் மனோகரனுக்கும் விவாகம் மிக விமரிசையாக நடந்தது. ஆஹா! மனோகரனைப் போன்ற அதிருஷ்டசாலி யார் இருப்பார்கள்? மின்னல்! அதன் மூலம் ஏற்பட்ட ஓவிச் சித்திரம்! அதற்கும் மனோகரிக்குந்தான் எத்தனை பொருத்தம்?

கல்யாணத்திற்கு மறுநாள் மனோகரன் கலாசாலையில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம். ஆதலால் உடனே மால்கஞ்சை விட்டுப் பிரயாணப்பட்டான். ரெயிலில் அவன் கண்களுக்கெதிரே புன்னகையுடன் நின்றிருந்தாள் மனோகரி. பிரயாணம் செய்வோரெல்லாம் மனோகரியே. உலகமே மனோகரி மயம்.

அடுத்த மாதத்தில் மனோகரி பர்மக்பூருக்கு மனோகரனுடன் வாழ்க்கை நடத்த வருவதாக ஏற்பாடு ஆயிற்று. மனோகரன் முன்போலெல்லாம் இல்லை. அவன் ஒரு நூதன சக்தி பெற்றிருந்தான். மிக மிக உத்ஸாகத்துடன் நாளைக் கடத்திக்கொண்டு மனோகரியின் வரவை எதிர்பார்த்திருந்தான். மாதம் ஒன்று கடந்தது.

ஒரு நாள் இரவு நல்ல மழை பெய்தது. அப்போது தன் அறையில் படுத்து ஜன்னலின் வழியே வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் மனோகரன். இறந்த காலம், நிகழ்காலம் இரண்டையும் தாண்டி எதிர்கால வைபவங்களை எண்ணமிட்டுக் கொண்டிருந்தது அவன் மனம். ஒரு மின்னல் மின்னியது. புன்னகை பூத்தான் மனோகரன்.

'ஏ மகிமை மிகுந்த மின்னலே, உன்னை ஒரு நாள் கண்டேன். அதிலிருந்து 'மின்னல்கொடி' என்ற ஒரு பாவையைச் சித்திரத்தில் சிருஷ்டித்து ஆனந்தம் கொண்டேன். மற்றொரு நாள் உன்னைக் காணும்போது உனக்கும் உன் மூலம் ஏற்பட்ட ஓவிச் சித்திரத்திற்கும் நேர்மாறான பெண்ணொடு இல்லறத்திலிருந்து மனம் நொந்தேன். ஆனால் இன்றோ? அதே மின்னலைக் காணும் போது, எண்ணியபடியே எல்லாம் கைகூடியதை எண்ணி எண்ணிப் பூரிக்கின்றேன். ஆ! நான் பாக்கியசாலி என்பதில் தடையென்ன? கூடிய சிக்கிரம் வருவாள்; ஆனந்தம் தருவாள்.'

இவ்வாறெல்லாம் எண்ணிக் குதூகலம் அடைந்துகொண் டிருந்தான் மனோகரன்.

'கடபுட! சடபுட! சுடர்! படர்!' பேரிடிகள்! மின்னல்!

"ஹா! ஹா! ஐயோ!" என்று துள்ளி விழுந்தான் மனோகரன்.

என்ன சம்பவித்தது?

மின்னல் வெட்டு! அந்தப் பாவி மின்னல் அவன் கண்களைக் கொண்டு போயிற்று. அந்தோ! கோரம், கோரம்! மனோகரன் குருடனானான்.

மறு நாட் காலை ஏழு மணி: தன் அறையில் அழுது புலம்பிய வண்ணம் படுத்துப் புரண்டுகொண்டு கிடந்தான் மனோகரன். வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. அறைக் கதவு தட்டப் பட்டது. தட்டித் தடுமாறிக்கொண்டு எழுந்து வந்து கதவைத் திறந்தான் மனோகரன். எதிரில் நின்றாள் மனோகரி. அவனைக் கண்டு புன்னகை செய்தாள். அவள் இருதயத்தில் தேங்கி நிற்கும் காதல் வெள்ளத்தின் ஒரு துளி அந்தப் புன்னகை. கண்களை உருட்டி, உருட்டி விழித்த வண்ணம் வெறுமனே நின்றான் மனோகரன். அவளது புன்னகைக்குப் பதிலாக அவனிட மிருந்து ஒன்றும் கிடைக்கவில்லை.

"யார் அது?" என்று தீனமான குரலில் கேட்டான் மனோகரன்.

என்ன ஆச்சரியம்! 'சடக்'கென்று அவளது புன்னகை மாறிற்று. ஏமாற்றமும், சோகமும், ஆத்திரமும், வெறுப்பும், ஆயாசமும் கலந்த உள்ளத்தோடு, "என்னைத் தெரியவில்லையா?" என்று வினவினாள் மனோகரி.

மனோகரனின் மனக்கலக்கத்தில் அவளது குரலைக்கூட உணர முடியவில்லை. மேலும், ஒரு நாள் பழக்கந்தானே? அழுது

கொண்டே சொன்னன். "ஐயோ! யாரென்று தெரியவில்லையே! யாராயிருந்தாலும் வாருங்கள்; உட்காருங்கள். நான் ஒரு குருடன். நேற்றிரவு அந்தப் பாழும் மின்னல் என் கண்மணி களைக் கொண்டுபோயிற்று."

சர்ப்பத்தை மிதித்தவள் போல் பதைத்தாள் மனேகரி. கால்கள் தாமாகவே பின் அடைந்தன. வலது கையால் ஓங்கித் தலையில் அறைந்துகொண்டாள்.

"ஹா! குருடன்! குருடன்! மனேகர் ஒரு குருடன்! மனேகரியின் காதலன் ஒரு குருடன்! மி...ன்...ன...ல் க...ண்... ம...ணி...க...ளை...க் கொ...ண்...டு போ...யி...ற்...று! ம...னே ...க...ரி? இ...ந்...த ம...ணி...யி...ன் வா...ழ்...க்...கை?"

அவள் தெருவை அடைந்தாள். வந்த வண்டி இன்னமும் தெருவிலேயே நின்றுகொண்டிருந்தது. அவள் அதில் ஏறிக் கொண்டாள். வண்டி புறப்பட்டது.

"மனேகரனின் ஜன்மம் வீண்! மனேகரியின் வாழ்க்கை பாழ்! பாழ்! பாழ்! அனேத்தும் பாழ்!"

மெல்லிய குரலில் மனேகரியின் வாயிலிருந்து புறப்பட்ட இந்த வார்த்தைகள் வண்டிச் சக்கரங்களின் ஓசையையும் ஊடுரு விக்கொண்டு மனேகரனின் செவிகளில் வந்து வீழ்ந்தன. அப்பொழுதுதான், வந்து செல்பவள் மனேகரி என்பதை உணர்ந்த மனேகரன், "ஹா! மனேகரி! மனேகரி!" என்று கூவிய வண்ணம் தன்னை மறந்து ஓடிவந்து சுவரில் மோதிக்கொண்டு கீழே விழுந்து மூர்ச்சையானன்.

"விந்தன்"

கண்ணம்மா 59

1

ஐப்பசி மாதம், அழுகைத் தூறல் தூறிக் கொண்டிருந்தது. சின்னத் தம்பிக் கவுண்டன் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு, தெருத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். அப்பொழுது அவன் மனைவி சிங்காரம், இரண்டு கேழ்வரகு அடையை அவனுக்கு முன்னல் கொண்டு வந்து வைத்துவிட்டுச் சென்றாள். அந்தச் சமயத்தில், "என்னு, அண்ணே!" என்று தன் வருகையைத் தெரிவித்துக்கொண்டே வந்தான் பெரியசாமி.

சின்னத்தம்பி ஒரு நிமிஷம் அவனை உற்றுப் பார்த்துவிட்டு, "யார் அது? பெரியசாமியா? வாடா அப்பா, வா" என்று வரவேற்றான்.

பெரியசாமி தனக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்ததும், "அடியே சிங்காரம்!" என்று தன் மனைவியைக் கூப்பிட்டான் சின்னத்தம்பி.

சிங்காரம் வெளியே வந்தாள். அவளைப் பார்த்ததும், "பெரிய சாமி வந்திருக்கான், பாரு" என்றான் சின்னத்தம்பி.

உடனே சின்னத்தம்பியின் குறிப்பை அறிந்துகொண்டவள் போல் சிங்காரம் உள்ளே சென்று இரண்டு கேழ்வரகு அடையைக் கொண்டுவந்து பெரியசாமியின் எதிரே வைத்தாள்.

இருவரும் அவற்றைத் தீர்த்துக் கட்டிய பிறகு, "என்ன அண்ணே, பையன் பழனியப்பன் தலைக்கு மேலே ஆயிட்டான். இன்னும் பேசாமெ இருக்கயே! உன்னுடைய மூச்சு இருக்கும் போதே அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிட்டா, கவலை விட்டது" என்றான் பெரியசாமி.

"அதுதான் நானும் யோசிச்சுக்கிட்டு இருக்கேன். இந்தத் தை மாசத்திலே அவனுக்கு எப்படியாவது ஒரு முடி போட்டு விட்டுடணும்."

"ஆமாம், பொண்ணு எங்கே?"

"அதுதான் இன்னும் தெரியலே. இனிமேத்தான் எங்கே யாச்சும் பாத்துப் பிடிக்கணும்."

"அதைப் பத்தி உனக்கு ஒண்ணும் கவலை வேணும், அண்ணே. நம்ம கண்ணமங்கலத்திலே கறுப்பண்ணக் கவுண்டன்னு ஒருத்தன் இருக்கான். சாதியைப் பத்தி ஒண்ணும் குறை சொல்லிக்கிறதுக்கு இல்லே. அவனுக்கு ஒரு பொண் ராசாத்தி யாட்டமா இருக்கா. பேரு கண்ணம்மா. நாம் போய்க் கேட்டா, இல்லேன்னு சொல்ல மாட்டான். பத்து ரூவாயிலே ஒரு பட்டுப் புடவையும், ஒரு சவரனிலே ரெண்டு கட்டைக் காப்பும் செய்து பரியமா வச்சிட்டா, அந்தப் பெண்ணைத் தட்டிக்கிட்டு வந்திடலாம்."

"நல்ல யோசனைதான். இன்னும் நாலு நாள் போகட்டும். அதுக்குள்ளே இந்த மழையும் விட்டுவிடும். நல்ல நாளாய்ப் பாத்து நாம் போய்ப் பாத்துக்கிட்டு வரலாம்" என்றான் சின்னத்தம்பி.

"சரி, நான் போயிட்டு வரேன், அண்ணே" என்று திண்ணையை விட்டு எழுந்து நடந்தான் பெரியசாமி.

* * * *

காவடிப் பேட்டையின் பிரசித்தி பெற்ற 'பிரபு'க்களில் சின்னத்தம்பியும் ஒருவன். ஆகவே, அவனுக்குக் கண்ணமங்கலத்திலும் கொஞ்சம் நிலம் இருந்தது. அதன் காரணமாகப் பழனியப்பன் அங்கு அடிக்கடி சென்று வருவான். அப்படிப் போகும் போதெல்லாம் அவன் கண்ணம்மாவைப் பார்க்காமல் காவடிப்

பேட்டைக்குத் திரும்புவது இல்லை. அவளுடைய கள்ளங் கபடமற்ற காந்தச் சிரிப்பிலே அவன் அவ்வளவு தூரம் சொக்கிப் போயிருந்தான்.

இதைப் பற்றித் தானே தன் தந்தையிடம் நேரில் சொல் வதைவிட, பெரியசாமியின் மூலமாகச் சொன்னால் நன்றாயிருக்கு மென்று அவன் நினைத்தான். இதன் பயனாகத்தான் பெரியசாமி சின்னத்தம்பியிடம் தூது வந்தான்.

2

நாலு நாட்களுக்குப் பிறகு, ஒரு நாள் நல்ல நாளா யிருந்தது. அன்று சின்னத்தம்பியும் சிங்காரமும் பெண்ணைப் பார்த்துவிட்டு வருவதற்காகக் கண்ணமங்கலத்திற்குக் கிளம்புவதென்று முடிவு செய்தனர். பெரியசாமியின் வீட்டுக்கு ஆள் போயிற்று. அவன் பெண்ணைப் பார்ப்பதற்கென்றே பெரிய தலைப்பாகையாகக் கட்டிப் போட்டுக்கொண்டு ஓடோடியும் வந்தான். அவனைப் பார்த்து விட்டுச் சின்னத்தம்பியும் ஒரு வெள்ளைக் கதையை எடுத்துப் பெரிய தலைப்பாகையாகக் கட்டிப் போட்டுக் கொண்டான். வெற்றிலைப் பையில் கட்டியிருந்த சலங்கைகள் சரியாகச் சத்தமிடு கின்றனவா என்று ஒரு முறை ஆட்டிப் பார்த்துவிட்டு, அவை வெளியே தெரியும்படி இடுப்பில் செருகிக் கொண்டான்.

சிங்காரமும் இடி மயிரை உள்ளே வைத்துப் பெரிய கொண்டையாகப் போட்டுக் கொண்டாள். அதற்குமேல் தோட் டத்தில்இருந்த மருக்கொழுந்தில் சிறிது கிள்ளி, தெரிந்ததும் தெரியாததுமாகத் தலையில் வைத்துக்கொண்டாள். ஒரே மஞ்சள் மயமா யிருந்த முகத்தில் ஒரு காலணை அளவு குங்குமப்பொட்டை வைத்துக் கொண்டு, "நன்றாயிருக்கிறதா?" என்று பக்கத்து வீட்டுக்காரியைக் கேட்டுத் தெரிந்துகொண்டாள்.

பழனியப்பன் பெண்ணைப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று சின்னத்தம்பி நினைத்தான். ஆகவே, அவனை யாரும் கண்ண மங்கலத்திற்குக் கூப்பிடவில்லை. அதைப் பற்றி அவனும் கவலைப் படவில்லை. ஏனெனில், அவன் எத்தனையோ முறை பார்த்தவள் தானே அந்தக் கண்ணம்மா?

எல்லோரும் சென்று வண்டியில் ஏறிக் கொண்டார்கள். மணிக்கு ஒரு மைல் வேகத்தில் அந்த மாட்டு வண்டி காற்றுப் பறந்தது. அன்று நடுப் பகலில் எல்லோரும் கறுப்பண்ணன் வீட்டை அடைந்தனர்.

சின்னத்தம்பி வண்டியை விட்டு இறங்கிய சமயம் கண் ணம்மா வாசலில் நின்றுகொண்டு, பின்னே கட்டி அடித்து வைத் திருந்த கேழ்வரகைக் கூளம் போகத் தூற்றிக் கொண்டிருந்தாள். அப்பொழுது வீசிய காற்று, சின்னத்தம்பியின் பக்கமாக வீசவே, அந்தக் கூளமெல்லாம் அவனுடைய கண்களில் படிந்தது. ஆகவே,

அவன், "அது யாரு பிள்ளே! பாத்துத் தூத்தக் கூடாதா?" என்றான்.

"எல்லாம் பாத்துத்தான் தூத்தறேன். காத்து அந்தப் பக்கமா அடிக்குது. அதுக்குக்கூட நான் என்னை பண்றது?" என்றாள் கண்ணம்மா.

"அது யாருக்கு அத்தனை வாய்?" என்று கேட்டுக்கொண்டே வண்டியை விட்டுக் கீழே இறங்கினாள் சிங்காரம்.

இந்தச் சமயத்தில், "அந்தப் பிள்ளைதான் கண்ணம்மா!" என்று அறிமுகப்படுத்தி வைத்தான் பெரியசாமி.

"இந்தப் பிள்ளைதானே அந்தக் கண்ணம்மா? சரி, பெரிய சாமி! நான் போயிட்டு வாரேன். பெண்ணைப் பாத்தாச்சு!" என்று சொல்லிவிட்டு, உடனே வண்டியில் ஏறிக்கொண்டான் சின்னத்தம்பி.

"நல்ல பெண்ணைப் பார்க்க வந்தோம்!" என்று சொல்லிக் கொண்டே சிங்காரமும் அவனுடன் வண்டியில் ஏறிக் கொண்டான்.

வண்டி நகர்ந்தது. பெரியசாமி மட்டும் அவர்களுடன் வண்டி யில் ஏறிக்கொள்ளவில்லை. அவனும் கறுப்பண்ணக் கவுண்டனும் அந்த வண்டியை விழித்துப் பார்த்துக்கொண்டே தங்களை மறந்து நின்றனர்.

கண்ணம்மா ஒன்றும் புரியாதவளாய்த் திருதிருவென்று விழித் தாள். ஏனெனில், அதுவரையில் அவளுக்குத் தன்னைப் பார்க்க வருபவர்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. தனக்குக் கல்யா ணம் செய்துவைக்கக் கறுப்பண்ணன் இருக்கும்போது, அதைப் பற்றி அவளுக்கு என்ன தெரியவேண்டி யிருக்கிறது?

3

இந்தச் சம்பவம் நடந்து இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. அதுவரையில் சின்னத்தம்பிக்கும் சிங்காரத்திற்கும் எந்தப் பெண் ணும் பிடிபடவில்லை. பெண்களைப் பார்த்துப் பார்த்தோ என் னவோ, கொஞ்சநஞ்சம் தெரிந்துகொண்டிருந்த அவர்களுடைய கண்கள் கொஞ்சங்கூடத் தெரியாமல் மங்கிப்போய்விட்டன.

ஆனால் பழனியப்பன் மட்டும் ஊரில் தனக்கென்று ஒரு பெண் ணும் கிடைக்காமல் போகட்டும் என்று பகவானைப் பிரார்த் தனை செய்துகொண்டிருந்தான். அவனுடைய கவனமெல்லாம் கண்ணம்மாவின் மேல்தான் இருந்தது.

ஒரு நாள் சின்னத்தம்பியும் சிங்காரமும் குளிருக்காக இளம் வெயிலில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது, "இந்த வெயில் குளிருக்கு எதவாய்த்தான் இருக்கும். சாயங்கால மானால் காய்ச்சல் வந்துவிடும்" என்று எச்சரித்துக் கொண்டே பெரியசாமி அங்கே வந்தான்.

"யாருடாப்பா அது? பெரியசாமிபோல் இருக்குது!" என்றான் சின்னத்தம்பி.

"எனக்கும் அப்படித்தான் தோணுது" என்றாள் சிங்காரம்.

"பெரியசாமிதான்; அண்ணே, பையன் எங்கே போயிருக்கிறான்?"

"உள்ளேதான் இருக்கிறான். அவன்தான் இப்போ எங்களுக்குக் கஞ்சி காச்சி ஊத்தறது."

"அவனுக்கு அப்பவே அந்தக் கண்ணம்மாவைப் புடிச்சுக் கட்டியிருந்தா, இந்தத் தள்ளாத காலத்திலே உங்களுக்கு எவ்வளவு சௌகியமா யிருக்கும்? என்னமோ, அந்தப் பொண்ணு விளையாட்டுக்காகச் சொன்னதுக்கு, நீங்க கோவிச்சுக்கிட்டு வந்துட்டீங்க."

"அந்த வாயாடிப் பொண் போனாப் போகட்டும். இப்போ வேறே எங்கேயாச்சும் பொண் இருந்தால் சொல்லேன். இந்த மாசத்திலேயே கல்யாணத்தை முடிச்சிடுவோம்."

"ஊரிலே பொண்ணு இல்லே? ஆடிக்குப்பத்திலே அழகான பொண் இருக்குது. அந்தப் பொண்ணின் பெயரும் கண்ணம்மா தான். செக்கச் செவேல்னு ராசாத்தியாட்டமாத்தான் இருக்குது. ஆனால், ஆத்தா அப்பன் இல்லே. அத்தையின் வீட்டிலே வளர்ந்தது. கட்டிப்போட்டா நம்ம கால் மாட்டிலேயே விழுந்து கெடக்கும்."

"சரி, அதைப் பாத்து முடிச்சுடேன்."

"நான் பாத்தாச்சு. நீங்கதான் வந்து பாக்கணும்."

"நாங்க என்னத்தை இனிமே பாக்கப்போறோம்? கண்ணும் தெரியலே, ஒண்ணும் தெரியலே. பையனே வேணும்னுக் கூட்டிக்கிட்டுப் போய்க் காட்டு. அவன்தானே அவளைக் காலம் முழுதும் கட்டிக்கிட்டு அழப்போறவன்? எங்களுக்கு என்ன? காடு வாவான்னுது; வீடு போபோன்னுது!"

தம்பதிகளின் இந்த எதிர்பாராத மாறுதலைப் பார்க்கப் பெரியசாமிக்கு ஆச்சரியமா யிருந்தது. ஆனாலும் அவன் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லே.

"ஆமாம், இனிமேல் எல்லாம் அவன்தானே? இருந்தாலும் நீங்களுந்தான் பொண்ணைப் பார்க்க வரவேணும். தலை இருக்க வால் ஆடலாமா?" என்று பெருந்தன்மையோடு சொல்லி வைத்தான் பெரியசாமி.

"அதுவும் நியாயந்தான். அப்படியே எல்லோரும் போய் வந்தால் போச்சு" என்றான் சின்னத்தம்பி.

4

நல்ல நாளைப் பார்த்துப் பழனியப்பனையும், அவனுடைய பெற்றோரையும் கூட்டிக்கொண்டு ஆடிக்குப்பத்திற்குச்

சென்றான் பெரியசாமி. பெண் வீட்டார் வந்தவர்களைத் தக்க உபசாரத்துடன் வரவேற்றார்கள். சின்னத்தம்பியையும் சிங்காரத்தையும் ஒரு பெரிய பாயைப் போட்டு உட்கார வைத்தார்கள். கல்யாணப் பெண் வந்து காலைத் தொட்டு நமஸ்கரித்ததும் அவர்களுடைய உச்சி குளிர்ந்துவிட்டது.

"அப்பா, பழனியப்பா, பெண்ணைப் புடிக்கிறதா?" என்றான் சின்னத்தம்பி, தன் மகனைக் கூப்பிட்டு.

"உனக்குப் பிடித்தால் எனக்குப் பிடித்த மாதிரிதான், அப்பா" என்று சமர்த்தாகப் பதில் சொன்னான் பழனியப்பன்.

"ஊம், எனக்கு என்ன தெரியுது? ஆனால் பொண் ரொம்ப மரியாதை உள்ளவளா இருக்கா."

"அதுதானே வேணும் நமக்கு?" என்றாள் சிங்காரம்.

"அப்படியானால், கையோடு கையா இப்பவே ஐயரைக் கூப்பிட்டு வந்து கல்யாணத்துக்கு நாளைக் குறிச்சுடலாமா?" என்றான் பெரியசாமி.

"செய்யப்பா, செய்!" என்றான் சின்னத்தம்பி.

உடனே அக்கிரகாரத்துக்கு ஆள் ஓடிற்று. ஐயர் வந்தார். நாளைக் குறித்தார். பரியம் பேசி முடித்தனர். பாக்கு வெற்றிலையும் வழங்கினர்.

* * * *

கல்யாணம் காவடிப்பேட்டையில்தான் நடந்தது. முதல் நாள் சந்திப்பின்போது, "உனக்கு என்னைக் கல்யாணம் பண்ணி வைப்பதற்காக எனக்குத் தாய் தவப்பனே இல்லேன்னு அந்தப் பெரியசாமி பொய் சொல்றதா?" என்றாள் கண்ணம்மா.

"ஒரே ஒரு பொய்தானே சொன்னான்? ஆயிரம் பொய் சொல்லவில்லையே!"

"ஆமாம், நான் கண்ணமங்கலத்துக் கண்ணம்மாதான்னு தெரிஞ்சா, உங்க அப்பாவும் அம்மாவும் என்ன பண்ணுவாங்க?" என்று கேட்டாள் கண்ணம்மா.

"இனிமே நம்மை ஆருதான் என்ன பண்றது, ராசாத்தி?" என்றான் பழனியப்பன்.

அப்பொழுது கண்ணம்மாவின் முகத்தில் தோன்றிய சுந்தரப் புன்னகையிலே, சுவர்க்கத்தின் சுகத்தைக் கண்டான் பழனியப்பன்.

இருவேறுலகம் 60

ஸ்ரீமான் சங்கரையர் பிரபல விஞ்ஞானி; பல ஆராய்ச்சிகள் செய்து புதுப்புது உண்மைகளை உலகுக்குக் காட்டியவர். மேல் நாட்டவர்கள் அவருடைய ஆராய்ச்சியைப் பிரமாதமாகப் பாராட்டி, பல பரிசுகள் வழங்கி யிருக்கிறார்கள். அமெரிக்கா வுக்குப் பல தடவை சென்று தம் ஆராய்ச்சிகளை அங்குள்ளவர் களுக்கு விளக்கியிருக்கிறார். அங்கேயே சில வருஷம் தங்கி ஆராய்ச்சி நடத்திப் புது முடிவுகளைக் கண்டிருக்கிறார்.

சொந்த நாட்டிலும் அவர் உதவியை நாடி ஆராய்ச்சிகள் நடத்திய மாணவர் பலர். அவர்களுக்கெல்லாம் உத்ஸாக மூட்டிச் சரியான வழியையும் காட்டி அவர்கள் நன்மதிப்பையும் பெற்றிருக்கிறார். அந்த மாணவர்களைப் போய்க் கேட்டாலே போதும். "சங்கரையரைப்போல உலகில் உண்டா ஒருத்தர்" என் பார்கள். அவரிடத்தில் அவ்வளவு நன்றியும் விசுவாசமும் உண்டு. அவர் உண்மையை நாடிச் செல்லுகிறார்; தம்முடன் உண்மையை நாட வருகிறவர்களுக்குத் தாம் கண்டதைச் சொல்லுகிறார்.

சங்கரையரிடம் பல மாணவர்கள் படித்துப் போயிருக் கிறார்கள். அவருடைய அனுபவத்தில், பட்டம் பெற்றவுடன் ஆராய்ச்சி செய்தது போதும் என்று நிறுத்திக் கொண்டவர்களும், பட்டந்தான் லக்ஷ்யமென்று ஆராய்ச்சி செய்யவந்து நிறுத்திக் கொண்டவர்களுமே அதிகம். இன்னும் சிலர், அவருடன் இருந்தால் எங்கேயாவது ஒரு காலேஜில் ஆசிரியர் வேலை ஒன்று கிடைத்துவிடாதா என்றே ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஆனால், இப்போது ஒரு புதுமை கண்டார். மாணவர் ஒருவர் அவரிடம் வந்தார். ஆனர்ஸ் படித்தவர் என்றாலும், பரீட்சை களைப் பொருட்படுத்தாமலே படித்திருக்கிறார். விஞ்ஞானத்தில் ஒரு பகுதியைப் பிரமாதமாக ஆராய்ந்திருக்கிறார். உலகத்தில் இன்று வரையில் அதைப்பற்றி யார் யார் என்ன என்ன சொல்லி யிருக்கிறார்களோ அவ்வளவும் அவருக்குத் தெரியும். அவற்றுடன் தம் சொந்த ஆராய்ச்சியால் சில முடிவுகளைக் கண்டு வைத்திருந் தார். சங்கரையர் வந்தவுடன் பிரமாதமாக ஆராய ஆரம்பித்து விட்டார். சங்கரையருக்கே திகைப்பாயிருந்தது. சாதாரணமாய் இரண்டு வருஷம் ஆராய்ச்சித் துறையில் இருந்தாலே மாணவர் களுக்குச் சலிப்புத் தட்டிவிடும். ஆனால் அவருடைய உத்ஸாகத் தைப் பார்த்தபோது, சலிப்பு என்றால் இன்னது என்று இவருக்கே தெரியாதோ என்று எண்ணும்படி இருந்தது. அவர் ஆராய்ச்சிகளை வெளியிட வெளியிடப் பட்டங்களெல்லாம்

வந்தன. ஆனால் அவர் பட்டம் பதவிகளைப் பொருட்படுத்தியவ ராகத் தோன்றவில்லை. சங்கரையரிடம் வந்தால் ஆராய்ச்சிகளைப் பற்றித்தான் பேச்சு. உலகத்திலே விஞ்ஞான உலகம் ஒன்றுதான் உண்டு என்று எண்ணி வந்தாரோ இவர் என்று ஆச்சரியப் படும்படி இருந்தது.

அவரைப் பார்த்ததில் சங்கரையருக்குத் தம் ஆராய்ச்சி உலகம், விஞ்ஞான உலகம் எல்லாம் மறந்து போய்விட்டன. 'இப்படியும் ஒரு பிரகிருதி உண்டா? விஞ்ஞானம் என்றால் இப்படியும் ஒரு மனிதனைக் கவரவா செய்யும்? கடவுளின் மனித சிருஷ்டிதான் என்ன அற்புதம்!' என்று ஒரே அதிசயத்தில் மூழ்கிவிட்டார். மாணவரின் ஆர்வத்தில் தமக்குக் கால்பங்குகூட இருக்கவில்லையே என்றுகூட எண்ணலானார்.

சங்கரையருக்கு விஞ்ஞானத்தில் வெறி என்றால், அவர் மனைவிக்குக் கலையில் மோகம். எப்போது பார்த்தாலும் அவர்கள் வீட்டு மேல்மாடியிலிருந்து கர்நாடக ராகங்களில் ஒன்று இல்லா விடில் ஒன்று வந்துகொண்டே இருக்கும். ஆம், மெல்லிய தம்புரா சுருதியுடன் கலந்து ஸஹானா வரும்போது யாருக்குமே ஒரு விநாடி வாசலில் நின்று அந்த இசையமுதத்தைப் பருகிவிட்டுப் போகத்தான் தோன்றும். இன்னொரு நாள் அந்தத் தெருப்பக்கம் போனால் கதம்ப வாசனையுடன் சதங்கைச் சத்தமும் 'கல் கல்' என்று கேட்கும்; கொஞ்சம் நின்று கேட்டால், நட்டுவனார் காம்போதி ராகத்தில் இரண்டுகளைச் சவுக்கத்தில் பாடும் 'இவர் ஆரோ' என்ற பாட்டுக் காதில் விழும். பாட்டின் பாவமும் சங்கீதமும் கம்மூன் ஒரு பெண் அபிநயம் செய்வதுபோலவே தோன்றும். கலை அப்படி அங்கு வளர்ந்து கொண்டிருக்கும்.

சங்கீத சபைகள், கலை அபிவிருத்திக் கழகங்கள், எல்லா வற்றிலும் ஸ்ரீமதி ஜானகிசங்கரையர் பெயர் இல்லாமல் இராது. அந்த அம்மாள் இப்படி மூண்டால் மற்ற வீட்டுப் பெண்களைப் பற்றிக் கேட்கவேண்டுமா? அவர்களும் சங்கீதம் பயில ஆரம்பித் தார்கள். தங்கள் பெண்களுக்கு நாட்டியம் கற்றுக் கொடுத் தார்கள். சங்கீதக் கச்சேரிகளுக்கும் சபைகளுக்கும் போகத் தொடங்கினார்கள். பிரசங்கம் செய்யத் துணிவும் ஏற்பட்டது. இப்படிப் பல துறைகளில் ஸ்ரீமதி சங்கரையர் காரணமாகப் பெண்கள் முன்னேற்றம் அடைந்தார்கள்.

இவையெல்லாவற்றையும்விட அந்த அம்மாளுக்குப் பெயரும் புகழும் ஏற்பட்டது, ஒரு விஷயத்தைக் கருதித்தான். எத்தனையோ சங்கீத வித்துவான்களை, முன்னுக்கு வரமுடியாமல் போயிருக்க வேண்டியவர்களை, உத்ஸாகப்படுத்திப் பொருளுதவி யும் செய்து பொது மக்களுக்கு அவர்களுடைய திறமையை வெளிப்படுத்தினாள். அதனால் வித்துவான்களும் கலைஞர்களும் அந்த அம்மாளிடம் பக்தி கொண்டிருந்தார்கள்.

அந்த மாணவர் எப்போதும்போல் தம் ஆராய்ச்சிக் கட்டுக் களுடன் சர்வகலாசாலைக்கு வந்தார். வந்து சங்கரையரைக்கூடப் பார்க்கவில்லை. அவர்பாட்டுக்குத் தம் ஆராய்ச்சியில் மூழ்ந்து விட்டார். ஆனால் ஐயருக்கோ எண்ணமெல்லாம் வேறு விதமாக இருந்தது.

'நாமும் விஞ்ஞானத்தில் பெயரும் புகழும் பெற்று விட்டதாகச் சொல்லிக் கொள்ளுகிறோமே. இவருக்கு இருக்கும் ஆத்திரத்தில் கால் பங்காவது நமக்கு இருந்ததா? அப்படியானால் இவர் நம்மைவிட எவ்வளவு பெயரும் புகழும் பெற வேண்டும்?' என்று எண்ணியபோது ஏதோ ஓர் எண்ணம் குறுக்கிட்டது. "டே முனியா...பியூன்" என்று கூப்பிட்டார். முனியன் வந்தான். "டேய், அவர் இருக்கிறாரே, அவர் பெயர் என்ன? மறந்து போச்சு" என்று கேட்டார்.

ஆம். விஞ்ஞானத் துறையில் இருப்பவர்களுக்குத் தாம் சாப்பிட்டோமா நிற்கிறோமா இருக்கிறோமா என்பது ஒன்றுமே ஞாபகம் இராதே! அரையில் துணியில்லாமலே ஆர்க்கிமிடிஸ் தெருத் தெருவாய் ஓடினவரல்லவா? சங்கரையர் அந்த மாணவர் பெயரை மறந்ததில் ஒன்றும் அதிசயமில்லை அல்லவா?

"அவர் பெயர் ஸ்ரீமான் கறுப்பன் ஸார்" என்றான் முனியன்.

"கறுப்பனா? அப்படியா? என்ன சாதிக்காரர்?"

"ஏன் ஸார். அவர் ஹரிஜன்தான். அதில் என்ன சந்தேகம்?" என்று முனியன் சொன்னான்.

சங்கரையருக்கு அதிசயம் இவ்வளவு அவ்வளவு என்றில்லை. "ஹரிஜனா? என்னமா இருக்கு? கட்டாயம் இவரை அமெரிக்கா வுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும். இவர் ஹரிஜன்; அதனால் நம் அரசாங்கமே உதவி புரியும். அதில் கஷ்டமொன்றும் இராது. இவர் மேல் நாட்டுக்குப் போனால், என்ன பெயர்! என்ன புகழ்! சே சே, பெயரும் புகழும் கிடக்கட்டும். ஆராய்ச்சிக்குத்தான் எவ்வளவு வசதிகள்! உலகமே பிரமிக்கும் படியான உண்மைகளை எடுத்துச் சொல்லக்கூடும். கட்டாயம் இவர் மேல்நாட்டுக்குப் போக ஏற்பாடு செய்யவேண்டும்" என்று அபார உத்ஸாகம் அடைந்தார். அந்த உத்ஸாகத்தில், நேரே அங்கு ஆராய்ச்சிச் சாலையில் இருந்த கறுப்பனிடம் போனார்.

அவரோ தம்மையும் உலகையும் மறந்து ஆராய்ச்சியில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். அவருக்கு அதைத் தவிர ஒன்றுமே தெரியாது. அந்த நிலையில் "ஸார்" என்று சங்கரையர் அழைத்ததும் திடுக்கிட்டார்.

"என்ன?" என்று கேட்டார் கறுப்பன்.

"ஒன்றும் இல்லை. இன்றைக்குத்தான் நீங்கள் 'ஹரிஜன்' என்பது தெரிந்துகொண்டேன்" என்று அர்த்தம் இல்லாமல் சிரித்துக்கொண்டே சொன்னார். அதற்குமேல் ஒரு வார்த்தையும்

சொல்லவில்லை. தம் எண்ணத்தை யெல்லாம் ஒன்றும் சொல்லவே இல்லை. முன்னும் பின்னும் பாராமல் தாம் சொன்னது கறுப்பனை என்ன பாடு படுத்தும் என்பது அப்பாவி சங்கரையருக்குத் தெரியாது.

அடுத்த நாள் எப்போதும்போல் சங்கரையர் கலாசாலைக்கு வந்தார். மாணவர்களும் வந்திருந்தார்கள். ஆனால் கறுப்பனைக் காணவில்லை. ஒருகால் அவருக்கு உடல் நலமில்லையோ என்று நினைத்துக்கொண்டார் சங்கரையர். அடுத்த நாளும் அவர் வரவில்லை. மூன்றாவது நாளும் வரவில்லை. சங்கரையருக்குக் கவலை சொல்லி முடியாது.

* * * *

பதின்மூன்று பதினான்கு வயசு இருக்கும், அந்தப் பையனுக்கு. வெண்ணிறக் கதராடை உடுத்திருந்தான். நன்றாய்ச் சிவி விடப்பட்ட கிராப்புத் தலை. முகத்தில் நல்ல களை. நெற்றியில் சாந்துப்பொட்டு. பார்க்க அழகாயிருந்தான்.

பார்க்கில் இரண்டு நண்பர்கள் சூழ உட்கார்ந்திருந்தான்; இல்லை, பாடிக்கொண்டிருந்தான். அவன் பாட்டைக் கேட்டுச் சொக்கிப்போய் உட்கார்ந்திருந்தார்கள் அவர்கள். நல்ல சாரீரம். அந்தச் சாரீரத்தில்,

"உயரும் சிகரம் கும்பந் தெரியுதாம் - அதைக் கண்ட பேர்க்கு"

என்று சவுக்க காலத்தில் பாடிக்கொண்டிருந்தான். அந்த வழியே சென்று கொண்டிருந்த ஸ்ரீமதி சங்கரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "ஏது, இவ்வளவு சுகமான சாரீரம்? அதிலும் வார்த்தைகளை அழுத்தமாகச் சொல்லிப் பாடுகிறான். மயிர்க்கூச்சல் எடுக்கிறதே!" என்று வியந்து நின்றுவிட்டாள். பையன்,

"உயரும் சிகரம் கும்பந் தெரியுதாம் - அதைக் கண்ட பேர்க்கு"

என்று இரண்டு தடவை, மூன்று தடவை சொல்லிப் பார்த்தான். கேட்பவருக்குத் திருப்பித் திருப்பிக் கேட்க இனிமையாகத்தான் இருந்தது. ஆனால் அவன் சங்கடம் அறிவார் இல்லை. நான்காவது தடவையாக அவன் பாட ஆரம்பித்தபோது ஸ்ரீமதி சங்கரனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அதாவது, பையனுக்கு அடுத்த வரி மறந்துவிட்டது என்பது. பையன் மறுபடியும்,

"அதைக் கண்ட பேர்க்கு"

என்று நிறுத்தியதும்,

"உள்ளங் குளிரக் கருணை புரியுதாம்"

என்று எடுத்துக் கொடுத்தாள்.

பையனுக்கு ஏற்பட்ட அதிசயமும் ஆனந்தமும் சொல்லி முடியவில்லை. அவனை அறியாமலே ஸ்ரீமதி சங்கரனுக்குக்

கரங்குவித்து நமஸ்காரம் செய்தான். கடவுளே வந்து கருணை புரிந்தாற்போல் பட்டது அவனுக்கு.

"ஏண்டாப்பா, நீ நன்றுகப் பாடுகிறுயே. சாரீரம் ரொம்ப சுகமாக இருக்கிறதே. அதுவும் கம்பீரமாய்ச் சவுக்க காலத்தில்! ரொம்பப் பூர்வமான பாணி. இப்போது இப்படிப் பாடுபவர்கள் அபூர்வமாயிற்றே! உனக்குச் சங்கீதம் யார் சொல்விக் கொடுக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"பாட்டாவது ஒண்ணுவது அம்மா! யாராவது பாடக் கேட்டு வந்ததேயொழிய நான் எங்கே சங்கீதம் கற்றுக்கொண்டேன்?" என்றுன் அந்தப் பையன்.

"பின்னே, உனக்கு எப்படித் தெரிந்தது இந்தப் பாட்டு?" என்று கேட்டாள் ஸ்ரீமதி.

"இல்லே அம்மா, அங்கே ராமாயண சாஸ்திரிகள் ஒருவர் நந்தனுர் கதை பண்ணினுர். அதிலே நந்தனுர் சிதம்பரத்தையும் கோயிலையும் கோபுரத்தையும் நினைத்து நினைத்துப் பக்தியினுல் உருகி ஏங்குகிறுர். அந்த ஏக்கத்தில் 'தில்லையம்பல ஸ்தலம்' என்று மனங் கனிந்து பாடுகிறுர். இந்தப் பாட்டைப் பாடும்போது' பாகவதர் சிலேஷை வேறு பண்ணினுர்! உயரும் சிகரம் கும்பம் என்கிறதுக்குப் பனைமரத்திலே இருக்கிற கள்ளுப்பானையாம், அதைக் கண்டபேர்க்கு உள்ளங் குளிருமாம் என்று அர்த்தம் பண்ணினுர். நந்தனுர் எவ்வளவு பெரிய பக்திமான்! உள்ளம் உருகிப் பாடுகிற பாட்டை இப்படி எல்லாம் கொலை பண்ணலாமா? ஐயமாருக்கு என்னம்மா தெரியும், பறையன் நந்தனுடைய பக்தி? இதை என் சிநேகிதர்களிடம் சொல்லி, எவ்வளவு அழகாய்ப் பாடுகிறுர் நந்தனுர் என்று பாடிக் காண்பித்தேன். ஆனுல் மூதல் வரி ஞாபகம் இருந்தது; இரண்டாவது வரி மறந்துபோயிற்று. இப்போது நீங்கள் எடுத்துக் கொடுத்தீர்கள்" என்றுன் பையன்.

ஸ்ரீமதி சங்கரையர் மனத்தில் அவனுடைய உணர்ச்சி அப்படியே பதிந்தது. 'பையன் நந்தன் பக்தியில் எவ்வளவு ஈடுபடுகிறுன்! என்ன ரஸிகத்தன்மை! அபாரமாக அல்லவா இருக்கிறது? பாட்டு என்றுல், சாரீரமும் சங்கீதமும் பிணைந்து செய்கிற காரியம் பிரமிக்கும்படியாக இருக்கிறதே! அதற்குமேல் இருக்கிறது விமரிசனம்' என்று நினைத்தாள்.

"அப்பா, நீ எங்கே இருக்கிறுய்?"

"புரசவாக்கத்தில் இருக்கிறேன்."

"உன் அப்பா என்ன பண்ணுகிறுர்?"

"அப்பா இல்லேயம்மா எனக்கு அண்ணு இருக்கிறுர்."

"அண்ணு என்ன பண்ணுகிறுர்?"

"அண்ணு, சர்வகலாசாலேயில் சயன்ஸ் ஆராய்ச்சி பண்ணுகிறுர்."

"சயன்ஸா? அவர் பெயர்?"

"டாக்டர் கறுப்பன்."

ஸ்ரீமதி சங்கரனுடைய உள்ளத்தில் எத்தனையோ எண்ணங்கள்: 'டாக்டர் கறுப்பனு? அவர் சொல்லி நான் கேட்ட திலீலையே இதுவரை? அவரையே போய் விசாரிப்போம்' என்று எண்ணினாள்.

"என்னோடு வா வீட்டுக்கு" என்று கூப்பிட்டாள்.

"வருகிறேன்."

சங்கரையர் கவலையோடு வாசல் தாழ்வாரத்தில் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அரையில் நாலு முழ வேஷ்டி; மேலே துண்டு. மிக்க சோர்வுடன் யோசித்துக் கொண்டிருந்தார்.

'நாள் பத்தாகிறதே. இன்னும் அவர் வரவில்லையே! என்ன காரணம்? என்றும் இப்படி இருந்தது கிடையாதே. நாம் ஒன்று நினைக்கக் கடவுள் ஒன்று நினைக்கிறார்போல் இருக்கிறதே! அவரை அமெரிக்காவுக்கெல்லாம் அனுப்ப வேண்டும் என்று நினைத்தோம். நினைத்த மறு நாளிலிருந்தே வரவில்லையே!' – இந்த மாதிரி எண்ணங்கள்; சொல்லமுடியாத மன வேதனை.

ஆனால் டாக்டர் கறுப்பன் ஹரிஜன் என்பதை அறிந்த உத்ஸாகத்தில், அவரை மொட்டையாகத் தாம் போய்க் கேட்டதை அறவே மறந்துவிட்டார். இல்லாவிட்டால் அவருக்கு ஏன் கவலை இப்பொழுது? விஞ்ஞானி, உலகத்தை, மனித உணர்ச்சிகளைத் தெரிந்துவைத்திருக்கிற அழகு இது!

அந்த நேரம் கார் வந்து நின்றது. ஸ்ரீமதி ஓடிவந்து, "உங்கள் இலாகாவில் யாராவது டாக்டர் கறுப்பன் என்று இருக்கிறாரோ?" என்று கேட்டாள்.

என்றும் இல்லாதபடி தம் மனைவி தம் இலாகா சம்பந்தமாய்ப் பேச்சு எடுத்ததே அவருக்கு முதல் அதிசயம். அதிலும் யாரைப் பற்றி அவர் நினைத்துக்கொண்டிருந்தாரோ, அவரைப்பற்றியே பேச ஆரம்பித்தது அதிசயத்திலும் அதிசயம். "என்ன அவருக்கு? அவரைப்பற்றி ஏதாகிலும் தெரியுமா உனக்கு? ஏன் வரவில்லையாம் இத்தனை நாள்? ஏதாவது சொன்னாரோ?" என்று அடுக்கி விட்டார் கேள்விகளை.

"நான் உங்களைக் கேட்கவந்தால் நீங்கள் என்னைக் கேட்டுத் தீர்த்துவிடுகிறீர்களே! அவர் இருக்கிறாரா, இல்லையா? அதைச் சொல்லுங்கள்" என்றாள் ஸ்ரீமதி.

"இருக்கிறார்...இல்லை" என்றார் சங்கரையர்.

"அப்படி என்றால்?"

"டாக்டர் கறுப்பன் என் டிபார்ட்மெண்டில் இருக்கத்தான் செய்தார். ஆனால் பத்து நாளாய் அவரைக் காணவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை... அந்தப் பையன் யார்? அங்கேயே நிற்கிறானே?" என்றார்.

ஸ்ரீமதி, "வா தம்பி. இவனைப் பற்றித்தானே சொல்ல வந்தேன்? வா தம்பி, கிட்ட வா" என்றாள்.

பையன் தயங்கி, "நான் தீண்டக்கூடாதவன் ஆச்சே!" என்றான். அவன் சொன்னதிலேயே ஏக்கம் தொனித்தது. அதைக் கேட்டாரோ இல்லையோ, துஷ்யந்தனுக்கு மோதிரத்தைக் கண்ட வுடன் சகுந்தலையின் ஞாபகம் வந்ததுபோல், டாக்டர் கறுப்ப னிடம் பேசியதெல்லாம் உடனே ஞாபகம் வந்தது சங்கரையருக்கு. 'அடாடா, இதற்காகவா இத்தனை நாள் அவர் வரவில்லை!' என்று எண்ணிக்கொண்டார்.

"வா தம்பி, உன்னைத் தீண்டக்கூடாதவன் என்று யாராவது சொல்லுவார்களோ? உன் சங்கீதமும் ஞானமும் வீணுய்ப் போகவோ! இனிமேல் நீ தினம் இங்கே வரவேணும். வேண்டிய சங்கீதம் படித்துக் கொள்ளலாம். இனி, தினம் இங்கே வர வேணும்" என்றாள். அவன் உள்ளத்தே ஆனந்தம் பொங்கியது.

"இந்தப் பையன் அவருக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"அவருடைய தம்பி."

"தம்பியா? உன் அண்ணு வீட்டில்தான் இருக்கிறாரா? அவருக்கு உடம்பு ஒன்றும் இல்லையே?" என்று பையனைக் கேட்டார்.

"உடம்பு ஒன்றும் இல்லை. ஆனல் இந்தப் பத்து நாட்களில் அவர் ஒரே அடியாக மாறிவிட்டார். தலையைத் தலையைப் பிய்த்துக் கொள்கிறார். இருக்கிறவர்களை எல்லாம் வைகிறார். புஸ்தகங்களை விட்டெறிகிறார். என்ன, ஏது, என்று கேட்டால் சள்ளுபுள்ளு என்று விழுகிறார். ஒன்றும் புரியவில்லை" என்றான் பையன்.

அப்போது சங்கரையருக்கு அடியுள்ளத்திலிருந்து, "இதற்கு நானு காரணம்?" என்ற ஒரு கேள்வி பிறந்தது.

* * * *

"மிஸ்டர் கறுப்பன், சென்ற பத்துநாளாக நீங்கள் டிபார்ட் மெண்டுக்கு வராதது எனக்கு எவ்வளவோ கவலையாயிருக்கிறது. நீங்கள் வராததிலிருந்து என் கை கால் ஓடவில்லை. நானையிலிருந்து வரவேண்டும்" என்றார்.

"மன்னிக்க வேண்டும். ஆராய்ச்சி புரியும் மனம் இனி எனக்கு இல்லை. அது அன்றே போய்விட்டது. தயவு செய்து மன்னிக்க வேண்டும்" என்றார் கறுப்பன்.

"என்ன! பத்து நாளுக்குள் உங்கள் ஆற்றல் எல்லாம் போய் விட்டதா? ஏதோ தாழ்ந்த வகுப்பு என்று சொல்லப்படும் இனத்திலிருந்து வந்தும் அபாரமான ஆராய்ச்சிகளெல்லாம் செய்கிறீர்களே என்று உங்களைப் பாராட்ட எண்ணியதற்கு, இந்தக் கொடிய தண்டனையா? உலகம் புகழும்படித்

தங்களை அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு அனுப்பவேண்டும் என்று நான் ஆசைப்பட்டதற்கு இந்தத் தண்டனையா? தங்கள் இனத்துக்குத் தங்களால் அபார கௌரவம் ஏற்படுத்தவேண்டும் என்று எண்ணியதன் பலனு இது? நான் ஒன்று நினைத்தால் கட்டாயம் வேறு ஒன்றுதான் முடிய வேண்டுமா?" என்று சொல்ல முடியாத வெறுப்போடு கடவுளையே நிந்திக்கத் தொடங்கி விட்டார் சங்கரையர்.

"கடவுளை ஏன் நிந்திக்கிறீர்கள்? என்னையே சொல்லுங்கள். தங்கள் மனப்பான்மையைச் சற்றும் நான் உணரவில்லையே! என்னைச் சொல்லுங்கள்" என்று மனக் கிலேசத்துடன் சொன்னுர் கறுப்பன்.

"சரி, இனிமேல் உங்கள் தம்பியாவது எங்கள் வீட்டில் வளரட்டும். நான் செய்த பாவத்திற்கு..." என்று சொல்ல வாயெடுத்தார். அதற்குள் தொண்டை அடைத்துக்கொண்டது.

* * * *

"வெண்ணெய் திரண்டு வந்தபோது தாழி உடைந்தது என்பார்களே, அதைப்போல் முடிந்தது எங்கள் காரியம்" என்ருர் சங்கரையர் மனைவியிடம்.

"என்ன?"

"அவர் வர மறுத்துவிட்டார். அவர் புத்தியே மங்கிப்போய் விட்டதாம்."

"விஞ்ஞான உலகம் உணர்ச்சியற்ற உலகம். ஒருவரை ஒருவர் உணர்வதே இல்லை. உணரவும் சந்தர்ப்பங்கள் வாய்ப்ப தில்லை."

"ஆமாம், நீ சொல்வது வாஸ்தவம்" என்ருர் சங்கரையர்.

டாக்டர் கறுப்பன் தம்பி, சங்கீதத்தில் அபாரமாக முன் னேறி வருகிருன். அவனுடைய கலைத் திறமையையும், ஞானத்தையும் பிறர் பார்த்து வியக்கும்போதெல்லாம், "நீ ஜயித்து விட்டாய் ஜானகி; நீ ஜயித்து விட்டாய்" என்கிருர் சங்கரையர்.

"நான் என்ன ஜயிக்க இருக்கிறது? கலை அப்படி" என்கிருள் ஸ்ரீமதி ஜானகி சங்கரன்.

எம். வி. வேங்கடராமன், பி. ஏ.

இந்திராணி 61

இந்திரன் மிகவும் துயரத்தில் ஆழ்ந்திருந்தான்.

ஆனல் உண்மையாகப் பார்த்தால் அவன் இப்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். காரணம்: பிரம்மஹத்தி தோஷம்

நேர்ந்துவிட்டதால், அவன் இந்திர பதவியை இழந்துவிட்டான்; தேவர்களும் முனிவர்களும் வேண்டிக்கொண்டதன்மேல் மனிதர்களில் சிறந்த நகுஷ சக்கரவர்த்தி இந்திரலோகத்தை நிர்வகித்து வந்தான். ஆனால் இந்தப் புதுப்பதவியும் வலிமையும் அவனை மோகவெறியில் ஆழ்த்திவிட்டன. அமர லோகத்தில் அவன் சகிக்கமுடியாத அட்டூழியங்களைச் செய்துவந்தான். இந்திரனுடைய தோஷம் நிவர்த்தியாகியும் அவனால் நகுஷனிடமிருந்து பதவியை மீட்கமுடியவில்லை. பலமுறை அவனுடன் போரிட்டுத் தோல்விதான் கண்டான். நகுஷனுக்குப் பயந்து பூலோகத்தின் ஏதோ ஒரு மூலையில் இருந்த ஒரு தடாகத்தின் தாமரைத் தண்டு ஒன்றில் சூக்ஷ்மரூபியாக ஒளிந்திருந்தான். இறுதியில் நகுஷனுடைய ஆட்சியில் வெறுப்புக்கொண்ட முனிவர்கள் அவனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர். அகஸ்திய முனிவரை அவன் அவமதித்ததால் சினமூற்றுப் பாம்பாகிப் பூலோகத்தில் விழும்படி அவர் சபித்துவிட்டார். இந்திரனுக்குத் திரும்பவும் தன் ஸ்தானம் கிடைத்துவிட்டது. ஆனாலும், அவனுக்கு மனத்தில் சந்துஷ்டி ஏற்படவே இல்லை.

அவனை வாட்டிய துயரம் வேறு. அவன் தேவர்களுக்கு எல்லாம் அதிபன். மிகுந்த வலிமை படைத்தவன். ஆயினும் அவனால் நகுஷனை வெல்ல முடியவில்லை. அவன் தேவ ஸாம்ராஜ்யத்தை மீண்டும் அடைவதற்கு, ஒரு முனிவரின் உதவியால்தான் முடிந்தது. அகஸ்தியர் இல்லாதிருந்தால் அவன் கதி என்ன ஆகியிருக்கும்? அவன் தகுமறைவாக இருந்த அந்தத் தாமரைத் தண்டிலேயே அழுகிப் போயிருப்பான்.

இம்மாதிரியான கவலைகள் உண்டாகும் போதெல்லாம் அவற்றை மறப்பதற்காக அவன் மேற்கொள்ளும் செயல் ஒன்றே ஒன்றுதான். ரம்பை, திலோத்தமை, மேனகை, ஊர்வசி ஆகிய நான்கு அப்ஸரஸ்களுடன் கூடிக் குலாவுவதுதான் அந்தச் செயல். அவன் முறையாக ஒவ்வோர் அணங்காக முதல் மூவரிடமும் சென்றான்; ஆனாலும் அவனுக்குச் சாந்தி கிடைக்கவில்லை. கடைசியாக அவன் ஊர்வசியை நாடினான். அவள் அவனுடைய மன நோயை நிச்சயமாக மாற்றிவிடுவாள். இன்பக்கலையின் நுட்பங்களை மிகவும் தெளிவாக அறிந்தவள் அவள்.

ஊர்வசி பாடினாள்; பாட்டுக்கு ஏற்ற அபிநயம் பிடித்து ஆடினாள்; இந்திரனை அணைந்து சுகம் அளித்தாள். அவனும் கொஞ்சம் கொஞ்சமாகப் போகத்தில் திளைத்து, தோல்விக் கவலையை மறந்துகொண்டிருந்தான்.

திடீரென்று, பாதசரங்கள் குலுங்கும் சப்தமும் கீதமும் நின்றன. மதோன்மத்தனாக இருந்த இந்திரன், "ஏன்?" என்றான். பார்வையிலேயே அவள் மறுமொழி கூறவில்லை. மெதுவாக, அழகாக நடந்துவந்து அவன் பக்கத்தில் ஒன்றி உட்கார்ந்தாள்; அவளும் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பதை அறிந்தான் இந்திரன்.

"ஊர்வசி, ஏன் ஆடலைத் திடீரென்று நிறுத்திவிட்டாய்? என்ன யோசிக்கிறாய்?"

சிறிது கழித்துத்தான் அவள் பேசினாள்: "ஒன்றும் இல்லை... அந்த நகுஷனின் ஞாபகம் வந்துவிட்டது. அப்பா! அவன் எவ்வளவு பயங்கரமானவன்! தேவலோகத்தையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டான். அவனை நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறது!"

அவன் துணுக்குற்றான். அமரசுந்தரிகளும் அஞ்சும்படி இருந்த அந்த நகுஷனை அவன் வெல்லமுடியவில்லை என்பது வெட்கத்திற்குரிய விஷயம் அல்லவா?

ஊர்வசி கூறினாள்: "நல்ல வேளையாக அகஸ்தியர் சாபமிட்டுவிட்டார். இல்லாவிட்டால் சசிதேவிக்கு ஆபத்து நேர்ந்திருக்கும்."

எந்தக் கவலையை மறந்துவிடவேண்டும் என்று அவன் அங்கே வந்தானோ, அதையே கிளரிக்கொண்டிருந்தாள் அவள். அப்படிச் செய்யவேண்டும் என்பதுதான் அவளுடைய நோக்கமும். மகா வீரனை நகுஷன்மீது அவள் மையல்கொண்டிருந்தாள். அவனும் முதலில் அவளிடம் பிரியமாகவே இருந்தான். ஆனால் சசிதேவியைக் கண்டதும் அவளிடம் அவனுடைய நாட்டம் திரும்பிவிட்டது. அவளை அடைவதற்காகப் பெருமுயற்சி செய்தான்; ஊர்வசியைக்கூட ஒருபுறம் ஒதுக்கிவிட்டான். அதனால் அவளுக்குச் சசிமீது பொறுமையும், நகுஷனிடம் குரோதமும் உண்டாயின. அவன் வீழ்ந்துவிட்டான், அரவாகி. சசியையும் பங்கம் செய்ய விரும்பினாள் ஊர்வசி; இந்திரனுக்கும் சசிக்கும் இடையில் கலக நெருப்பு மூட்டி வேடிக்கை பார்க்க எண்ணினாள் அவள். இந்திரன் தன்னை நாடி வந்த இந்தத் தருணத்தைப் பூர்ணமாகப் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தாள். மாதுர்யம் மணக்கும் குரலில், "எப்படி இருந்தாலும் இந்திராணி நகுஷனைத் தனியாகச் சந்தித்துப் பேசியது பெரிய பிசகு" என்றாள்.

இந்திரனின் உள்ளம் தொய்ந்துவிட்டது; "ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

"பெண் சஞ்சல புத்தி உடையவள் அல்லவா?"

"ஆனால் சசி மகா உத்தமி..."

"அவள் உத்தமி அல்ல என்று நான் சொல்லவில்லையே! ஆயினும் நகுஷன் மிகுந்த பராக்கிரமசாலி; மங்கையரை வசீகரிக்கும் உருவமுடையவன். அவனுடன் ஒரு பெண் ஏகாந்தமாகப் பேசுவது என்றால்? அவள் உத்தமியாக இருக்கலாம்; ஆனால் அவன் உத்தமன் அல்லவே!"

இந்திரனால் பொறுக்க முடியவில்லை; அவளுடைய அணைப்பை உதறிவிட்டு எழுந்து நின்றான். "ஊர்வசி, நீ நாத்தகி; அவள் என் நாயகி என்பது ஞாபகம் இருக்கட்டும்."

"நான் நர்த்தகிதான். ஆனல் நான் சசியின் நிலையில் இருந்திருந்தால் அடைக்கலம் புகுந்த பிருகஸ்பதியின் வீட்டிலேயே உயிர்விட்டிருப்பேன்."

நகுஷன் செய்த தொந்தரவுக்கு அஞ்சி, சசி பிருகஸ்பதியிடம் சரண் புகுந்தாள்; தேவர்கள் அவளை நகுஷனிடம் ஒப்படைக்கும்படி கூறியும் அவர் அவளைப் பாதுகாத்தார். அந்தச் சம்பவத்தைத்தான் ஊர்வசி குறிப்பிட்டாள்.

குற்றச்சாட்டைக் கேட்ட இந்திரன், சினம் காரணமாக மெய்ம்மறந்தான். "இந்திராணி மீதா பழி சுமத்துகிறாய்?" என்று கூக்குரல் இடும்போதே, பல வீரர்களை ஹதம் செய்த அந்த மகா வீரனின் வலது கரம் அவளுடைய பிருதுவான கன்னத்தின்மீது பாய்ந்தது.

"ஐயோ!" என அலறியவண்ணம் கீழே விழுந்த அவளை லக்ஷ்யம் செய்யாமல் அவன் வெளியே போய்விட்டான்.

அவன் மறைந்ததும் அந்த அழகான அப்ஸரஸ் அசுரத் தன்மை நிறைந்த ஒரு சிரிப்புச் சிரித்தாள். அவளுடைய கன்னத்தில் விழுந்த ஓர் அடி சசியின் கௌரவத்திற்கே விழப்போகும் பல அடிகளுக்குப் பூர்வாங்கம் என்பதில் அவளுக்குச் சந்தேகமே இல்லை.

* * * *

ஊர்வசியை வீட்டு வந்த இந்திரன் சசியின் பவனம் நோக்கி நடந்தான். இன்பம் நிலவும் உலகுக்கு அரசனாக இருந்தும் அவன் மனத்தில் சந்தேகம் முள்ளம்பன்றி போன்று புரண்டு துன்புறுத்தியது.

தன்னல் நகுஷனை அடக்க இயலவில்லை என்னும் வருத்தம் முன்னலேயே இருந்தது; அதோடு நகுஷன் அவன் மனைவியையே பலாத்காரம் செய்தான் என்றால்...?

அவன் இந்திராணியை நம்பினன். தேவர்களும் முனிவர்களும் நகுஷனுக்குப் பயந்து அவனைக் கைவிட்ட சமயத்தில், அவள் சூழ்ச்சிசெய்து நகுஷனைத் தொலைக்கவேண்டும் என்பதற்காக, அவள் அவனைச் சந்தித்துப் பேச ஒப்புக்கொண்டாள். அப்போது இந்திரன்கூட வேறு வழி இல்லாததால் அதற்கு ஒப்புக்கொண்டான். அவள் நகுஷனைச் சந்தித்து, அவன் ரிஷிகளை வாகனமாக்கிக் கொண்டுவந்து தன்னைக் காணவேண்டும் என்ற நிபந்தனை விதித்தாள். அவளுடைய மோகத்தில் பித்துக்கொண்டிருந்த அவனும் அவ்வாறே செய்தான். முடிவு, அகஸ்தியர் சாபம்! ஆனல் ஊர்வசி சொன்னாளே, அதில் உண்மை இருக்க முடியுமா?

அவன் கணவன்; அவனல் அதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அவள் கூறியதும் ஒருவிதத்தில் உண்மைதான். சசி நகுஷனைக் கண்டு உரையாடியது வஞ்சனைக்காகத்தான்.

ஆயினும் நடிப்புக்காக வேண்டியாவது, அவள் அவன்மீது ஒரு துளிக் கண் நோக்கம் செலுத்தி யிருக்கலாம்; முறுவல் பூத்து மோகம் உள்ளவள்போல் காட்டிக்கொண்டிருக்கலாம். சூழ்ச்சிக் காகத்தான்; என்றாலும், ஊர்வசி மொழிந்ததுபோல், பர புருஷனைப் பார்த்துப் பேச ஒப்புக்கொள்வதைவிட, இருக்கும் இடத்திலேயே உயிரை விடுவது உத்தம பத்தினிக்கு லக்ஷணம் அல்லவா? சசி ஏன் அவ்வாறு செய்யவில்லை?

அதிருப்தியும் ஆத்திரமும் ஆக்கிரமித்துக்கொண்ட உள்ளத்துடன் சசியின் மாளிகையில் புகுந்தான் இந்திரன். ஆனால் அவள் இருந்த கோலம் கண்டதும் அந்தப் பெண்பித்தனின் ஆத்திரம் ஓடி ஒளிந்தது. அவன் பிரமித்துவிட்டான்.

பதவியைத் திரும்பவும் அடைந்த இந்திராணி, தலை விரி கோலமாகக் கண்ணீர்விட்ட வண்ணம் வானை நோக்கிக்கொண்டு படுத்திருந்தாள். அவன் வந்ததைக்கூட அவள் கவனிக்கவில்லை.

இந்த அலங்கோலத்தின் காரணம் அறியாது அவன் மெதுவாகக் கூப்பிட்டான்: "இந்திராணி!"

பலமுறை கூப்பிட்ட பிறகு அவள் படுத்தவாறே விசிப்புடன், "இங்கே இந்திராணி இல்லை" என்று உத்தரம் அளித்தாள்.

"இந்திராணி இல்லையா? நீ யார், அப்படியானால்?" என்றான் அவன் வியப்புக்கொண்டு.

"நான் சசி; நாதன் அற்ற அபலை!"

"ஓஹோ! நகுஷன் ஞாபகத்தில் பேசுகிறாயா?"

அவனையும் அறியாமல் அவன் சந்தேகம் கீழே சிந்திவிட்டது.

"ஸ்திரீயின் மானத்தைக் காப்பாற்றச் சாமர்த்தியம் இல்லாத புருஷருடைய வாய்க்கு அலங்காரமான வார்த்தைகள்தாம்!"

சிலையாகச் சமைக்கும் முனிவரின் சாபம், சசியின் மொழிகளைவிட மேலானது என அவனுக்குத் தோன்றியது. சொல் இழந்து வாய் திறந்தான் அவன். ஆயினும் அவனுடைய ஆத்ம கௌரவம் மெதுவாகத் தலை தூக்கியது.

"சசி, நீ நினைப்பது பிசகு. நான் பலஹீனன் அல்ல. தேவர்களின் அரசன்; விதிவசத்தினால்..."

"விதிவசத்தினால் மனைவியின் மானத்தைத் தள்ளாட வைத்துவிட்டீர்கள். தேவர்களுக்கு அரசர்! தங்கள் அரசியின் கற்புக்கு அபாயம் விளைந்துள்ளது என்று அறிந்து வாய் மூடி இருந்தார்களே, அந்தத் தேவர்களுக்குத்தானே நீங்கள் மன்னர்? உங்களிடமிருந்து வேறு என்னதான் எதிர்பார்க்கமுடியும்?"

"தேவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள்..."

"தேவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களுக்குத் தங்களுடைய சுகந்தான் பெரிது; ஸ்திரீயின் மானத்தை விற்றும் அவர்கள் இன்பம் தேடுவார்கள்! இந்த மூப்பத்து மூக்கோடி

தேவர்களும் ஒன்றுகச் சேர்ந்து எதிர்த்திருந்தால் ஆகாத காரியம் இருக்கிறதா? 'நகுஷன் உன்மீது ஆசை வைத்திருக்கிறான். அவனை வெல்ல எங்களால் முடியவில்லை. நீ போய் அவனுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்' என்று என்னிடமே சொன்னார்களே, கோழைகள்! கோழைகளின் அதிபர், தாமரைத் தண்டில் ஒளிந்து கொண்டு, தம் மனைவியை எதிரியிடம் சென்று பேசும்படி அனுப்புவதில் என்ன ஆச்சரியம்!"

இந்திரன் தடுமாறிவிட்டான்; சசியிடமிருந்து அவன் இத்தகைய சொற்களை எதிர்பார்க்கவில்லை. அவள்மீது கோபமாக வந்த அவன், அவளுடைய கோபத்துக்கும் குற்றச்சாட்டுக்கும் இலக்காகி விட்டான். ஹீனஸ்வரத்தில் மொழியலானான்: "சசி, அப்போது நான் என் வீரியம் இழந்திருந்தேன். நகுஷனுக்குத் தேவர்களும் முனிவர்களும் அசாத்தியமான வலிமை கொடுத்து விட்டார்கள். அவனை எதிர்த்தால் தோல்வி நிச்சயம் என்று தெரிந்தும் போர் புரிவதால் என்ன லாபம்? யுத்த தர்மமே அதல்ல."

"அதற்காக ஸஹதர்மிணியை, 'நீ சத்துருவிடம் போ, சிரீ, மயக்கு' என்று அனுப்புவதா ஆண்மை? தேவ புருஷர் எனக் கூறிக் கொள்கிறவரின் தன்மையா இது? யுத்த தர்மத்திற்காக ஸ்திரீ தர்மத்தைப் பணயம் வைக்கும்படி எந்த நீதி கூறுகிறது? பரபுருஷனைத் தலைதூக்கிப் பார்ப்பதே ஸ்திரீக்குக் குற்றம் என்னும் விதி, இஷ்டப்பட்டபோது தளரும்போல் இருக்கிறது! புருஷனிடம் அடங்கியுள்ள பெண்ணுக்காகப் பொருது உயிர் கொடுப்பது அல்லவா புருஷ லக்ஷணம்? தேவ புருஷருக்கு இம்மாதிரியான செயல் மகா அவலக்ஷணம் ஆயிற்றே!"

இந்திரன் தலை குனிந்தான். சசி நிறுத்தவில்லை. "ஆமாம், பரஸ்திரீ என்றும் பாராது, அகல்யையைக் கள்ளத்தனமாகப் புணர்ந்த தேவசிரேஷ்டருக்கு, தம் ஸ்திரீயின் மானமா பெரிதாகத் தோன்றப் போகிறது?"

அவன் அங்கிருந்து நகர்ந்தான். குனிந்த தலை மாத்திரம் சரிந்து சரிந்து கீழே, பூவுலகத்தை விட்டுக் கீழே, பாதாள லோகத்தைவிட்டும் கீழே விழுவதுபோல் பட்டது அவனுக்கு.

அபலை அழுதுகொண்டுதான் இருந்தாள்.

ஏ. ஜி. வேங்கடாசாரி, பி. ஏ.

ரங்கூன் கமலம் 62

"அப்பா புண்ணியகோடி, இன்று இரவோடு இரவாய் இந்த மலையூர் கிராமத்தை விட்டுக் கிளம்பி நீ பட்டணம் போய்விடு. நடப்பது நடக்கட்டும். நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று

சபாபதி கவுண்டர் தலையைச் சொறிந்துகொண்டே புண்ணிய கோடியின் காதைக் கடித்தார்.

"எங்கேயாவது உண்டா? உங்களை இந்த அக்கிரமக்காரர் களிடம் விட்டுவிட்டு நான் மட்டும் தப்பித்துக் கொள்ளுவதா? அது சரியல்ல. நடந்தது நடந்துவிட்டது. கடைசி வரையில் ஒரு கை பார்த்தே தீருவோம்" என்று கண்டிப்பான குரலில் பதில் அளித்தான் இளைஞன்.

அதற்குள் சிற்றன்னை அங்கு வந்துவிட்டாள்.

"குழந்தை புண்ணியம், வாங்க சாப்பிட. என்ன யோசனை யிலே ரெண்டு பேரும் எறங்கிட்டீங்க? ஏதோ குசுகுசுன்னு ஊருலே பேசிக்கிறுங்களாமே, அதைப் பத்தித்தான் பேசறீங்க; இல்லே?" என்று அன்பு ததும்பும் குரலில் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே வினவினாள் அவள். ஒரு நிமிஷ நேரம் அங்கே நிச்சப்தம் குடிகொண்டது.

"அந்த நாயந்தானே? அது கெட்டுது களுதே! சோறு ஆறிப் போகுது. தின்னுப்புட்டு நல்லா யோசனை பண்ணுங்க. என்ன, தலையா வாங்கிடுவாங்க?" என்று ஒரு போடு போட்டாள் ராமாயி. இருவரும் எழுந்து வெளிக் கதவைத் தாழிட்டு உள்ளே சென்றனர். கலமிட்டு அன்னம் படைத்தாகிவிட்டது. புழைக் கடைக் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது.

"யாரது இந்நேரத்தில் கதவை இடிக்கிறது?" என்றாள் ராமாயி.

"நான்தான் மங்கா" என்று பதில்அளித்தது ஒரு பெண் குரல். கதவைத் திறந்ததும், "பட்டணத்து எசமானுக்கு இதைக் குடுக்கச் சொன்னுங்க" என்று சொல்லிக்கொண்டே ஒரு கடிதத்தை உள்ளே விட்டெறிந்துவிட்டு அந்தப் பெண் ஓடி விட்டாள்.

கடிதம் தயிர்ச்சட்டி மேல் விழுந்தது. அதை எடுத்துப் புண்ணியகோடியிடம் கொடுத்த ராமாயி, "ரங்கூன் கமலந் தானே?" என்று கேட்டாள். பதிலும் சொல்லாமல், பிரித்தும் பார்க்காமல் கடிதத்தை மடியில் செருகிக்கொண்டான் புண்ணிய கோடி.

சாப்பிட்டு முடிந்ததும் லாந்தர் வெளிச்சத்தில் அதைப் பார்த்துவிட்டுத் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்து விட்டான். மறுபடியும் இரண்டு ஆடவர்களும் தாழ்வாரத்தில் தனிமையில் உட்கார்ந்து பேசலாயினர்.

"நான் இன்றிரவு ஓடமுடியாமல் போதிய காபந்து செய் திருக்கிறார்களாம். அதையும் மீறிப் போய்விட்டால் உங்களை விடப்போவதில்லையாம். வெறும் தப்புடன் நிற்காமல் அன்ன வஸ்திரத்துக்கு ஆலாய்ப் பறக்கும்படியான நிலைமைக்குக் கொண்டு

வந்துவிடப் போகிறார்களாம். குட்டி குரைத்துத் தாயின்மேல் வைத்தது என்பது போல் அல்லவா இருக்கிறது இது? ஒரு மாமாங்கம் கழித்துக்கூடச் சொந்த ஊரில் நான் தலைகாட்டுவது இங்குள்ள இந்தப் பங்காளிப் பெருச்சாளிகளுக்குப் பிடிக்க வில்லை. இவர்களுடைய சங்காத்தமே வேண்டாம். இங்குள்ள நமது சொத்து சுதந்தரம் எல்லாவற்றையும் இவர்களே கட்டி யாண்டு அனுபவிக்கட்டும். விரிவான இவ்வுலகில் நமக்கா பிழைப்பில்லை? இன்னும் ஒரு வருஷத்தில் என்னுடைய வைத்தியப் படிப்பு முடிந்துவிடும். அதற்கப்புறம் உங்களைக் காப்பாற்றுவது எம்மாத்திரம்? வாருங்கள் ஓடிவிடலாம்" என்று கனிந்துருகினான் புண்ணியகோடி.

சிறிய தகப்பனாரின் கனிவுற்ற கண்களிலிருந்து இரண்டு நீர்த் துளிகள் வெளிப்பட்டு, கீழே இருந்த தோல் சுருக்கத்தில் சிக்கிக் குறுக்கே படர்ந்தன. அதே மாதிரி சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது அவருடைய உள்ளமும்.

"நீ சொல்வதெல்லாம் சரி. முன்கை நீண்டால்தானே அப்பா முழங்கை நீளும்? உன் தகப்பன் உயிருடன் இருந்து ஊரூராய்ச் சுற்றிக் கொண்டிருந்தபோது அவன் பங்கையும் சேர்த்துத் தின்று கொண்டிருந்தேன். இருவரும் எலி பூனைகளாய் இருந்தோம். உன்னை நிராதரவாய் விட்டு அவன் செத்தபோதுதான், மலைமலை யாய் மூன்று பிள்ளைகளைப் பறிகொடுத்த எனக்குப் புத்தி வந்தது. உன் படிப்பையாவது பூர்த்தி செய்ய உதவிபுரிய வேண்டும் என்று நினைத்தேன். அடித்த கும்மாளத்தில் போனது போக இன்னும் இரண்டு காணி நிலம் இருக்கிறது. இங்கே குடிப் பிரியமில்லை. குத்தகைக்கு அடைக்க முடியாது. இங்கேயே இருந்துகொண்டு ஏதோ ஒன்றிரண்டு ஏர் வைத்துக்கொண்டு பாடுபட்டால்தான் இன்னும் ஒரு வருஷம் உன் படிப்பை நடத்த முடியும்."

"ஏன், வந்த விலைக்கு இதை விற்றுத் தொலைத்துவிட்டு இந்த ஊருக்கே ஒரு முழுக்குப் போட்டுவிட்டுப் போய்விட்டால் படிக்கப் பணமுமாச்சு; இந்த அயோக்கியர்களின் சகவாசமும் தீர்ந்துவிடும்" என்றான் புண்ணியகோடி. இதைக் கேட்டதும் அவன் சிறிய தந்தை கண்களை மூடிக்கொண்டார். சூடான கண்ணீர் அவருடைய கன்னங்களில் வழிந்தோடி இரண்டு மூன்று சொட்டுகள், விளக்கண்டை பறந்து வந்த ஒரு தேனீயை ஓட்டு வதற்காகப் புண்ணியகோடி நீட்டிய கைமீது விழுந்தன. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. கேட்கவும் நா எழவில்லை. நன்றாக ஒரு குரல் தானே வாய்விட்டு அழுதால் தேவலையென்று நினைத்தான்.

கடைசியில் மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு, "சிற்றப்பா, அழாதீர்கள். நான் என்ன சொல்லிவிட்டேன்?" என்று அங்கலாய்த்தான்.

"அப்பா, பத்துத் தலைமுறையாய் நாம் பிழைத்த இவ்வூரில், மிச்சமுள்ள இரண்டு காணியையும் விற்கலாமென்று நீ சொன்ன

வுடன் என் மனசு தாளவில்லை. நீ ஆயிரங்காலப் பயிர். நாங்கள் பழுத்து உதிர்ந்துவிட்ட சருகுகள். அடித்துப் போகக் காற்று எப்பொழுது வரும் என்று காத்திருக்கிறோம். ஆனாலும், உங்கள் பெரிய பாட்டன் பரமசிவக் கவுண்டன் பெயரை நீ எடுத்து, இந்த ஊரிலே மூன்றே முக்கால் நாழிகையாகத் தலைவிரித்தாடும் பெரிய வீட்டார் கொட்டத்தை அடக்க வேண்டுமப்பா! அதற்கு இங்கே காணி நிலம் வேண்டுமப்பா" என்று கிழவன் இளைஞன் மூதகில் தட்டிக்கொடுத்த வண்ணம் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, ராமாயி தன் வேலைகளை முடித்துவிட்டு அங்கே வந்து உட்கார்ந்துகொண்டு, வெற்றிலை பாக்கு இடிக்க ஆரம்பித்து விட்டாள்.

கிழவன் மேலும் கூறினான்: "கேளப்பா, உங்கள் சின்னையை. இந்த இரண்டு காணியும் முழுகிப் போயிருக்கும். தாலி தவிர மிச்சம் எல்லா நகைகளையும் பளிச்சென விற்றுப் பணம் கொடுத்தாள். அதை மீட்டோம். லக்ஷ ரூபாய் வந்தாலும் அதை விற்கலாமா?" என்று புலம்பினான் சபாபதி.

இதைக் கேட்டுச் சிறுவன் செயலற்றுப் பேச முடியாமல் மனத்திற்குள் அழுதான்.

"போனது போச்சு. அந்தக் குட்டி என்ன எளுதினு? அவ தளுக்கும், அவ மினுக்கும்; போரும் போரும்! உன்னைப் படுத்தி வச்சது போராதோ? களுத்துக்கே சுருக்குக் கொணுந்துட்டா. என்னத்துக்கப்பா பெரிய இடத்துப் பொல்லாப்பு? யார் பொளப்பு சந்தி சிரிக்குது? தடிச்சிறுக்கி! ஊர் வாயிலே உளுந்தா நல்லா வாளலாம்" என்று அடுக்கிக்கொண்டே போனாள் ராமாயி.

"அவள் பேரில் ஒரு தப்பும் இல்லை. எல்லாம் என் சொந்தச் சம்பாத்தியந்தான்" என்று பளிச்சென்று பதில் அளித்தான் புண்ணியகோடி.

"ஆமாப்பா, ஆமாம். அதோடு பாரு, அந்த விட்டில் பூச்சி வெளக்கிலே விளுந்து உயிரை உடறதே; அப்படித்தான் நீயும். வெவரம் தெரியாத சிறுசு. அந்த ரங்கூன் கமலத்தோடே பளபளப்பெக் கண்டு மயங்கிப் போயிட்டே" என்று பரிகாசம் பண்ணினாள் ராமாயி. கிழவன் கோபத்துடன் குறுக்கிட்டான்; "நீக்குப் போக்குத் தெரியாத ஜன்மம்! நாலுபேர் சொல்றதைக் கேட்டு நல்லவளைத் திட்டறது. நல்லாயிருக்கு!" என்று அவன் அதட்டியவுடன் அடங்கி விட்டாள் ராமாயி. பாயில் படுத்துக் கொண்டாள்; ஆனால் தூக்கம் எப்படி வரும்? என்ன பேச்சு நடக்கிறதென்று காதுகொடுத்துக் கேட்ட வண்ணம் இருந்தாள்.

* * *

விடிந்து ஒரு பகைப் பொழுதில் நியாயம் பேச ஆரம்பித்து விடுவார்கள். கணக்குப் பிள்ளை, பெரிய வீட்டு மணியம்

குப்பாக் கவுண்டர் இருவர் தவிர அந்த ஊரில் எழுத்து வாசனை யுள்ள மற்றோர் ஆசாமி வாத்தியார் வரதக் கவுண்டர். நல்லதோ, கெட்டதோ, கொலையோ திருட்டோ, எந்த விவகாரமும் ஊர் எல்லையை விட்டு வெளியே போகக் கூடாது என்ற கட்டுப்பாடு நெடுங்காலமாக, வேறு பல தமிழ்நாட்டுக் கிராமங்களைப்போலவே, மலையூரிலும் உண்டு. ஐவேஜிக்காரர்கள் கோர்ட்டேறிச் சிவில், கிரிமினல் வியாஜ்யங்களில் இறங்குவதுண்டு. அதைப் பார்த்துக் கொண்டு ஊரார் இலை மறைவு, காய் மறைவாயிருப்பது சகஜமாய் விட்டது.

ஆனல் கூலி வேலைக்காரர்களையும் மற்ற ஏழைக் குடித்தனக்காரர்களையும் மட்டும் அவர்கள் சும்மா விடுவதில்லை. ஏழைமீது புகார் வந்தால் போதும், உடனே நியாயம் பேச நான் நிச்சயித்து விடுவார்கள். சபை கூடியதாகத் தெரிந்தவுடன் மணியம் குப்பாக் கவுண்டன், நாட்டுச் சுப்பராய செட்டி, ஊர் நாயக்கன் கோபாலன், மாந்தோட்டம் கபூர் சாகிப், கணக்குக் குப்பையன் ஆகியவர்கள் முண்டாசும் முடிச்சுமாக வந்து உட்காருவார்கள். குற்றம் சாட்டப்பட்டவன், நடவடிக்கையில் சலபமுன் கை கட்டி நிற்கவேண்டும். கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும். பெரிய தனக்காரர்கள் மட்டுமன்றி மற்றவர்களும் கேள்வி போடலாம். சாட்சி, விசாரணை, குறுக்கு விசாரணை முதலியவை இல்லை. கடைசியில் ஆளின் "யோக்கியதையை" (பொருளாதார நிலைமையை) அனுசரித்துத் தப்பு (அபராதம்) வைப்பார்கள்.

தர்ம நியாயத்துக்குக் கட்டுப்பட்டு விவகாரங்கள் நடந்துகொண்டிருந்த வரையில் இந்த ஏற்பாடு சிறப்பாகவே இருந்தது. ஆனல் சுயநலமும் பித்தலாட்டமும் மேலோங்கிய பிறகு, ஏழைகளை வதைப்பதற்குப் பணக்காரர்களுக்கும், ஊரை அடித்து உலையில் போடும் மற்றப் பரிசிரம ஜீவிகளுக்கும் 'நியாயம்' பேசுவது லாபகரமான சாதனமாகிவிட்டது.

இத்தகைய திருச்சபை முன், நவநாகரிக மாணவன் புண்ணிய கோடி மறுநாள் காலை ஆஜராகவேண்டி நேரிட்டது. 'படிச்ச புள்ளாண்டான்' எதிரியாகையால் கூட்டம் ஏராளமாய் வந்து விட்டது. மாரியம்மன் கோயிலில் இடம் போதாதாதால், வெளியில் எல்லோரும் வந்து உட்கார்ந்தனர். கைகட்டி நின்ற புண்ணியகோடியை நோக்கி, மணியம் குப்பாக் கவுண்டர் சொன்னர்:

"அப்பேன்! நீ என் காணியாளன். நீ கை கட்டி நின்னு ஜவாப் சொல்ற நெலமை நல்லா இல்லே. நீ படிச்சவன். நானும் அறிஞ்சவன். பட்டணத்தைச் சப்பான்காரன் பிடிச்சுக்கப் போருன்னு பயந்து காலி செஞ்சுட்டு, லீவுன்னு சொல்லிக்கிட்டு வந்துருக்கே. வந்த எடத்திலே நல்ல பேர் எடுக்கவாணுமா? ஊரெல்லாம் ஒன்னைத் திட்டுது. நீ பண்ணின தப்பு மூணு,

ஒண்ணு, ஊரிலேருந்த பள்ளிக்கூடத்தை, வந்த அதிகாரியோடே இங்கிலீசிலே பேசி ஒளிச்சிட்டே. அதுதான் போகட்டுன்னு, இந்தப் பறப்பசங்களுக்குப் பாடம் சொல்லித்தரயாம். அவங்க இனிமே மதிச்சுப் பேசுவாங்களா? வேலையைத்தான் செய்வாங்களா? 'வயறு ரொம்பச் சாப்பாடு வேணுன்னு மூறையிடுங்குடா'ன்னு போன சந்தையன்னிக்குப் பல ஊர்ப் பறையங்க சேந்த இடத்திலே கத்தினேயாம். நல்லா இருக்குது பொளப்பு! இனி எல்லாம் சீரா நடந்தாப்பலேதான்! உங்க சித்தப்பன் சபாபதி, இந்த வருசம் ஒரு மணி நெல்லைக் கண்ணுலே பாக்கப்போறதில்லே. வந்த ஒரு மாசத்துலே ஊரையே குட்டிச் சுவராக்கிட்டே. அதுதான் ஒளியட்டுன்னு, கமலத்தோடே ஒனக்கு என்னடா பேச்சு? அவ அண்ணன் ஊட்டுக்காரன் எங்க மச்சான்; சம்சாரத்துக்குத் தம்பி; ரங்கூனிலியே பின்தங்கிட்டான். ஏதோ பளய காணி இருக்குன்னு இங்கே வந்துட்டான். கயிட்டப்பட்டுச் சர்க்கார் பிஞ்சினே மாச மாசம் வாங்கித் தாரேன். அவளே அடிச்சிட்டுப் போறத்துக்கு ஏற்பாடு செய்தயாமே? என்னடா துணிச்சல்? பெரிய வீட்டை நத்திக்கிட்டிருக்கிற ஒரு பொம்பளேயை நீ யாருடா அடிச்சிட்டுப் போறது?"

இவ்வாறுக மூச்சு விடாமல் தம் குற்றச் சாட்டுகளே அள்ளி வீசினார் பெரிய வீட்டுக்காரர்.

"அவன் மொகரையைப் பாரு! இஞ்சி தின்ன கொரங்கு. மாதிரி முளிக்கிறான். அவனேயும் அவன் சித்தப்பனேயும் சேத்து வெரட்டுங்கடா" என்று ஒரு குரல் கிளம்பியது.

"அதுதான் சரி" என்றது ஜனத்திரளின் இடி முழக்கம்.

"எல்லாம் பொய்" என்று உரக்கக் கூவினான், புண்ணிய கோடி. குடிகார அர்ஜுனன் அருகே வந்து, "யார்...ரா பொய்?" என்று உளறிக்கொண்டே அவனைக் கன்னத்தில் அறைந்தான். கொஞ்ச நேரம் அமளி துமளியாயிருந்தது. சந்தடி அடங்கியதும் மேலும் புண்ணியகோடி, பல இடை மறிப்புக்களிடையே சொல்லலானான்:

"பள்ளிக்கூடம் மூடியதற்கு நான் ஜவாப்தாரி அல்ல பஞ்சாயத் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அகஸ்மாத்தாக வந்தார். இந்த ஊரில் இங்கிலீஷ் பேச யாருக்காவது தெரியுமா என்று யாரையோ கேட்டாராம். என்னை அழைத்துக்கொண்டு போனார்கள். பள்ளிக்கூடத்தை என் எதிரில் அவர் பார்வையிட்டார். ஆஜர் பதிவு குறிப்பு பதிவாகி ஆறு மாசகாலமாயிற்று. வாத்தியார் வரதக் கவுண்டருக்குக் கண்ணே அநேகமாய்த் தெரியவில்லை. அவருக்கு ஸர்ட்டிபிகேட்டும் இல்லை. ஏழெட்டுப் பிள்ளைகளே இருந்தனர். மற்றவர்கள் வேலைக் காலமானதால் வரவில்லை என்று அவர் சொன்னதை துரை நம்பவில்லை. கரும்பலகை தூசி படிந்து தூங்கிக் கொண்டிருந்தது. பள்ளிக்கூடக் கடிகாரம், மேஜை, நாற்காலி பெரிய வீட்டில் இருப்பதாக வாத்தியார் சொன்னார். இந்த லக்ஷணத்தில் இருக்கும் பள்ளிக்கூடத்தை எடுப்பதென்று

துரை முடிவு செய்ததில் தவறில்லை. வரதக் கவுண்டர் பெரிய வீட்டு மைத்துனன் என்று தெரிந்ததும், 'சரிதான். இப்பொழுது புரிந்தது' என்று முடிவு செய்துவிட்டார் துரை.

"இரண்டாவதாகச் சேரியைப் பற்றிச் சொன்னீர்கள். அங்குள்ள ஜனங்களுக்குத்தான் நல்லது சொல்வது அவசியம். அவர்களுக்காக நான் பட்டணத்தில் கூட உழைப்பதுண்டு."

"இது பட்டிக்காடு அப்பேன்!" என்று இடையே கூவியது ஒரு குரல்.

புண்ணியகோடி :—போதிய சாப்பாடு கிடைக்காததால் அடிக்கடி வாந்தி பேதி, குளிர் ஜ்வரம் அவர்களை வாட்டுகின்றன. ஆகையால், நெல் விலை தூக்கி விற்கும் இந்தச் சமயத்தில் வயிறுரச் சாப்பாடு போடும்படி ஆண்டைகளிடம் சேர்ந்து முறையிடும்படி சொன்னேன். இதில் என்ன தவறு? அவர்களும் நம்மைப்போல் மனிதர்கள்தானே?

சாகிப் :—போரும், போரும் உன் ஊத்தை வாயை மூடு.

புண்ணியகோடி :—ரங்கூன் கமலம் பர்மாவிலிருந்து இங்கு வந்துள்ள அகதி என்று அறிந்தேன். அவள் சாதாரணமான படிப்புக்காரி. நான் வந்தபிறகு ஒன்றிரண்டு சமயங்களில் என் வீட்டிற்கு வந்து புஸ்தகங்களை வாங்கிச் சென்றதுண்டு. நாங்கள் தனிமையில் இதுவரையில் சந்தித்துப் பேசியது இல்லை. அவளை அடித்துக் கொண்டு போகும் பேச்சே இல்லை. இது வெறும் புளுகு. என்னைப் போலீஸில் மாட்டிவிட்டு, சொத்தையெல்லாம் அபகரித்துக் கொள்ளப் பெரிய வீட்டார் செய்யும் சூழ்ச்சி இது.

குப்பாக்கவுண்டர் :—அட பயலே! நாக்கை அடக்கிப் பேசு. அந்த ரங்கூன் கமலமே நேத்துக் காலமே வந்து எங்கிட்டே சொல்லி, காப்பாத்தணும் இன்னு கெஞ்சிக் கேட்டா. மூழுப் பூசனிக்காயையா சோத்தில் மறைக்கப் பாக்கறாய்? நீ என்னடா செய்வே? பரமசிவன் கொள்ளுப்பேரன் இல்லே நீ? இரு, இரு.

"நான் ஒரு பாவத்தையும் அறியேன்!" என்று புண்ணிய கோடி கூறியது யார் காதிலும் விழவில்லை.

என்ன தப்புச் சொல்கிறது என்று டெரிய ஆசாமிகளெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் கணக்குக் குப்பையன் தீர்ப்புக் கூறினன்.

"புண்ணியகோடியும் அவனுடைய சிற்றப்பனும் ரொக்கமாக ரூ.100 அபராதம் செலுத்தவேணும். மாடு கன்றை விற்று அதைக் கொடுக்கலாம். ரூ. 1000-க்குப் பிணமி அடைமானக் கடன் பத்திரம் எழுதிக் கொடுத்து 2 காணியையும் பெரிய வீட்டாரிடம் சுவாதீன போக்கியம் வைக்கவேணும். மகசூல் விற்றுமுதலில் வரும் பணம் வட்டி, அசலுக்குச் செல்லுபடியான பிறகு நிலம் விடுவிக்கப்படும். புண்ணியகோடியும் சபாபதியும் ஊரை விட்டுத் தொலைதூரம் போய்விடவேணும்.

இந்தக் கடுமையான தண்டனையைக் கேட்டு எல்லோரும் திடுக்கிட்டனர். அப்பொழுது திடீரென்று கூட்டத்தின் நடுவில் ஓர் உருவம் எழுந்து நின்றது. தலைப்பாகையைக் கழற்றி வீசிய அந்த நபர், ஆண் வேஷத்தில் இருந்த ரங்கூன் கமலந்தான்.

"யார் இங்கே பொம்பளையை விட்டது?" என்று கர்ஜித்தார் கலவரம் அடைந்த பெரிய வீட்டுக்காரர்.

"அவ என்னதான் சொல்லு, கேக்கலாமா?" என்றான் ஒரு குடியன்.

அவளுடைய அழகைப்பற்றிய கிராம்ய வர்ணனைகள் பல திசைகளிலிருந்து கிளம்பின. அவள் பேசக் கூடாதென்றார் பெரிய வீட்டுக்காரர். "பேசட்டும்" என்றனர் கூட்டத்தில் உள்ள இளவயதினர்.

கடைசியில் அவள் சொல்லலானாள்:—

"புண்ணியகோடி சொன்னதுதான் உண்மை. ஆனால் நான் அந்த மாதிரி பெரியதனக்காரரிடம் சொல்லாவிட்டால் எனக்கு விமோசனம் இல்லையென்று தோன்றியது. மணியக்காரருடைய யோசனையெல்லாம் என்னைக் கெடுப்பதுதான். அதற்கு நான் இணங்கவில்லை. என் அலவன்ஸ் வாயில மண்ணைப் போடுவதாகச் சொல்லி மிரட்டிப் பார்த்தார். கடைசியில் புண்ணியகோடி விஷயமாக என்னைப்பற்றிச் சந்தேகித்துச் சில வார்த்தைகள் சொன்னார். அதைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டு அவருடைய கெட்ட எண்ணத்தை நாலுபேர் அறிய எப்படிச் சொல்வது என்று நினைத்து ஒரு பொய் சொன்னேன். ஆனால் இங்கே நடந்ததை யெல்லாம் பார்த்தபின், புண்ணியகோடியுடன் ஓடிவிடுவதே நல்லது என்றுதான் தோன்றுகிறது" என்று சொல்லிக்கொண்டே வேகமாய் ஓடி அவனருகில் நின்றாள்.

"உதைடா பெரிய வீட்டுக்காரரை" என்றான் ஓர் ஆசாமி.

"தட்டுடா அவன் பல்லை" என்றான் மற்றோர் இளைஞன். ஒரு விநாடியில் அவ்விடம் அமர்க்களமாகிவிட்டது. ஒருவர் கழுத்தை ஒருவர் நெரித்துக்கொண்டனர்.

இதற்குள் கூட்டத்தைச் சுற்றிலும் நின்றுகொண்டிருந்த சேரிவாசிகள், புண்ணியகோடியையும் ரங்கூன் கமலத்தையும் சபாபதிக் கவுண்டரையும் கவர்ந்துகொண்டு போய்விட்டார்கள். பெரிய வீட்டார் ராமாபியைக் கொன்றுபோட்டு வஞ்சம் தீர்த்துக்கொண்ட செய்தி கேட்டு அவர்கள் மனம் கலங்கினர். பிறகு சேரியைத் தங்கள் கோட்டையாக்கிக்கொண்டு சுரண்டலை ஒழிக்கும் வேலையில் அவர்கள் இறங்கினர்.

பிறகு எண்ணற்ற போராட்டங்கள் பல நாட்கள்வரையில் நடைபெற்றன. சேரி மக்களுக்குத்தான் நஷ்டம் அதிகம். ஆனால் அவர்கள் தங்களை வாழ்விக்க வந்த ரங்கூன் கமலத்தையும் அவளுடைய கணவனையும் சபாபதியையும் கண்ணிமைபோல் காத்து நின்று, தாங்கள் மேன்மையுற்று, மற்ற இடங்களிலுள்ள தங்கள் சகோதரர்களின் விடுதலைக்கும் அடிகோலினர்.

கி. ஸ்ரீ. வேங்கடேசன்

வாழ்க்கை ஒரு கனவா? 63

ஆறு வருஷங்கள்! ஆம், ஆறு வருஷங்கள் கழித்து அவளை நான் மறுபடியும் நேற்றுத்தான் சந்தித்தேன். ஆறு வருஷங்கள் ஒரு மனிதனின் வாழ்க்கையிலே நீண்ட காலம் அல்ல. ஆனாலும் இந்தக் காலத்துக்குள்ளும் அவன் எத்தனை விதமான மாறுபாடுகளை அடைந்து விடுகிறான்! அவனது மனோபாவமும், லக்ஷ்யங்களும் எத்தனை விதமாக மாறுபடுகின்றன! நேற்றுப் போட்ட வேஷத்தை இன்று போடுகிறதில்லை; நேற்று இருந்த சந்தோஷம் இன்று எங்கோ மாயமாய் மறைந்துவிடுகிறது. நேற்று இருந்ததை விட இன்று நாம் இன்னம் ஒரு படி குன்றி யிருக்கிறோம். வாழ்க்கைச் சுழலில் அகப்பட்ட நமக்கு மாறுதலைத் தவிர்த்து வேறு எதுதான் இந்த உலகத்தில் நித்தியமானது? - நேற்று அவளைக் கண்டதும் என் மனத்தில் தோன்றிய சிந்தனையலைகள் இவ்வாறு ஓடின.

லீலாவின் கல்யாணத்துக்கு ராமு என்னை அழைத்திருந்தான். அழைத்தான் என்று சொல்லுவானேன்? நாங்கள் இருவரும் பாலிய நண்பர்கள்; அவனுடைய தங்கைக்குக் கல்யாணம்; ஆகவே கல்யாண காரியத்தில் பெரும்பங்கு என்மீது சுமந்தது. கல்யாணத்தன்று சாயங்காலம் கச்சேரிக்கு ஏற்பாடு செய்வதற்காகக் காஞ்சீபுரம் போய்விட்டு நேற்றுத்தான் திரும்பினேன். கல்யாண வீட்டண்டை வண்டி நின்று நான் இறங்கினவுடன் எனக்கு எதிர்ப்பட்ட முதல் முகம் அவளுடையதுதான்.

அந்த முகம் என்னைத் திடுக்கிடச் செய்தது. எங்களைச் சுற்றி இருந்த பொருள் எதுவும் என் கண்களில் படவில்லை. அவளுடைய மற்ற அங்கங்களும் எனக்குத் தோன்றவில்லை. என் கண்களுக்கு முதல்முதலில் தென்பட்டது அவள் முகந்தான். அதன்மீதே அவை நிலைத்துவிட்டன. சுற்றியிருந்த உலகம் இருண்டுவிட்டது. இருண்ட அந்தகாரத்திடையே மினுக்கு மினுக்கென்று எரியும் விளக்கைப்போல் விளங்கியது அந்த முகம். அந்த விளக்கும் சுடர் விட்டுப் பிரகாசிக்கவில்லை; மங்கலான ஒளியையே அது வீசியது.

அந்தத் தோற்றத்தைக் கண்டதுமே என் மனம் கலங்கியது. அந்த முகத்தில் ஏற்பட்டிருந்த மாறுதல் அவ்வளவு அகாதமாயிருந்தது. கழிந்து போன நாட்களில் எனது மனத்தை, எனது உயிரையே கவர்ந்து, அதற்கு ஜீவநாடியாக விளங்கிய, என்னை முழுதும் அடிமைகொண்டிருந்த அந்த மோகன முகத்தில்தான் இன்று எத்தனை மாறுதல்! முன்பெல்லாம் புன்னகை ததும்ப, கார் காலத்து மின்வெட்டுப்போல மின்னி, கயல்மீன்களைப்போல் சதா சஞ்சலித்துக்கொண்டிருந்த அந்தக் கண்களில்தான் இன்று

எத்தகைய ஏக்கம்! அவ்விழிகள் ஒளியிழந்து, மாசு படிந்து, ஏதோ காணத் தகாத பயங்கரத்தைக் கண்டு விட்டவைபோலத் தத்தளித்தன. அந்த விழிகள், பலிபீடத்திற்கு இழுத்துச் செல்லப்படும் வாயில்லாப் பிராணியின் விழிகளையே நேற்று எனக்கு ஞாபகமூட்டின. ஆம், மரணத்தை எதிர்நோக்கி, நடு நடுங்கி ஒவ்வொரு கணமும் பதறிக்கொண்டிருந்த உள்ளத்தையே பிரதிபலித்தன அவள் விழிகள்.

அவள் கண்களில் தேங்கிய ஏக்கம் அவளது மனத்தில் குடி கொண்டது என்றிலிருந்தோ? அவள் கண்கள் கண்ட பயங்கர நிகழ்ச்சி எது? வாழ்வின் ஆரம்ப தசையில் இருந்த அவளுக்கு மரணத்தின் பரிசயம் ஏற்பட்டது எப்போது? ஆறு வருஷத்துக்கு முன்பு எனக்குப் பழக்கமான அந்தக் களங்கமற்ற புன்னகை இன்று எங்கே? அந்த விழிகளில் அப்போதெல்லாம் வீசிக்கொண்டிருந்த மின்வெட்டு எங்கே? கயல்மீனின் களித் துள்ளல் எங்கே? எனக்கு விஷயம் ஒன்றும் புரியவில்லை. ஆச்சரியத்தினுல் செயலற்றுப் போய் வெறுமனே ஒரு கணம் நின்றேன்.

ஆறு வருஷத்துக்குமுன்பு நான் அவளை விட்டுப் பிரியும்போது அவள் சந்தோஷமாகத்தான் இருந்தாள். கவலை இன்னதென்பதை அவள் அறிந்திருக்கவில்லை. தவிர, எங்கள் இருவரிடையேயும் ஒரு பாசம் குடிகொண்டிருந்தது. இளவயசென்னும் இளவெயில் வீசிய சுற்றுச் சார்பிலே நாங்கள் தவழ்ந்துகொண்டிருந்த இன்பநேரம் அது. நாங்கள் இரண்டு பேரும் தனிமையான ஒரு கனவுலகத்திலேயே நடமாடிக்கொண்டிருந்தோம் என்றே சொல்லவேண்டும். பள்ளிக்குச் செல்வது, வீடு திரும்புவது, சாப்பிடும் நேரந்தவிர மற்ற வேளைகளிலெல்லாம் ஒன்றுகவே இருப்பது-இதுதான் எங்களுடைய அந்தக் காலத்திய தினசரி அட்டவணை.

எங்களிடையே மறைத்துவைக்கப்பட்ட ரகசியமோ இல்லை; ஜிலேபி மிட்டாயோ கிடையவே கிடையாது. எனக்குப் பிடித்த பொருளே அவளுக்குக் கரும்பு. பிடிக்காத விஷயமோ, கேட்பானேன், வேம்புதான். எங்களிடையே நிலவியிருந்த இந்த அன்னியோன்னியத்தைப் பார்த்து வீட்டுப்பெரியவர்கள் சதா பரிகாசம் செய்வார்கள். ஆனல் அந்த விளையாட்டுப் பேச்சையெல்லாம் காதில் வாங்க எங்களுக்கு நேரம் ஏது? "போ, அம்மா! எப்பப் பார்த்தாலும் நீ இப்படித்தான்...அப்புறம் நான் அழுதுடுவேன்!..." சிணுங்கலும், நமுட்டுச் சிரிப்புமாய்க் குறும்புசெய்த பெரியவர்களைப் பயமுறுத்திக்கொண்டே விளையாட ஓடிவிடுவோம். கவலை என்ற கருங்கல் பாரம் தலைமீது ஏறத் தொடங்காத இன்ப நேரம் அது.

ஆனல், இந்த வாழ்வில் இன்பம் என்றும் நிலைத்து இருக்கிறதா என்ன? இன்பமும் துன்பமும் சகடக்கால்போல் மாறி மாறி வருபவைதானே? காலதேவனின் விளையாட்டுக் கருவிகள் நாம்.

அவன் ஆட்டினவத்தபடி யெல்லாம் நாம் ஆடவேண்டி இருக்கிறது. நமது இஷ்டப்படி எதுதான் நடக்கிறது? அவன் இழுத்த வழியே நாமும் செல்லவேண்டி இருக்கிறது; இந்த விதிக்கு யார் தான் விலக்கு? ஆக, நாங்களும் வாழ்க்கைப் பாதையில் சிறிது தூரம் கடந்து சென்றோம். இளமைப் பருவம் என்ற இளவெயில் நேரம் கழிந்து வாலிப தசையாகிய நடுப்பகல் எங்களைச் சூழ்ந்தது. எங்கள் விளையாட்டுக்களெல்லாம் எங்கோ மறைந்துவிட்டன. மரியாதை குறுக்கிட்டது. சங்கோசம் எங்களிடையே திரை போட்டது. அவளிடம் நாணம் குடிகொண்டது. என்னிடம், "அவளுடன் பேசினால், பார்க்கிறவர்கள் என்ன சொல்லுவார்கள்? ஐய!" என்ற அதைரியம் வேர்விட்டது.

இவ்வளவு தடங்கல் ஏற்பட்ட காலத்திலும், இளமையில் அவளுக்கு என்னிடத்தில் உதித்திருந்த அன்பும் ஆதரவும் பணிவும் ஸௌஜன்யமும் மறையவில்லை. "அண்ணு, அண்ணு!" என்றுதான் சர்வதா ஸ்மரணை. எதற்கும் 'அண்ணு'தான் யோசனை சொல்லவேண்டும். 'அண்ணு' சொல்கிற எந்தக் காரியத்தைச் செய்யவும் அவளுக்கு ஆக்ஷேபம் இல்லை. புத்தகப் புழுவாகக் கலாசாலைப் படிப்பில் முழுகியிருந்த நான் அவளது உள்ளத்தை அறியவில்லை; அறிய முயற்சி செய்யவேணுமென்ற நினைவும் ஏற்படவில்லை. அவ்வளவு நாட்களாக அவளுடன் பழகியும் அவளது உள்ளத்தை அறியாமல் போனேன். அது என் குற்றமா? அவளுந்தான் என்ன, அந்தச் சந்தேகத்திற்கு எள்ளளவாவது இடம் வைத்துக்கொள்ளவில்லை. எல்லோரையும் போலவே அவளது நடத்தையைச் சகஜபாவத்திலேயே நான் ஏற்றுக்கொண்டேன். அதற்கு உள்ளர்த்தம் ஒன்று இருக்கக் கூடும் என்கிற சம்சயமே எனது நினைவில் உதிக்கவில்லை.

அக்காலத்தில் நான் இன்னம் வாழ்க்கைப் பாதையில் தனியனாகவில்லை. என்னைவிடப் பெரியவர்கள் சுட்டிக்காட்டிய வழியிலேயே நான் நடந்தேன். வாழ்க்கைக்கடலில் மறைந்து சிதறிக் கிடக்கும் கற்பாறைகளின்மீது எனது மரக்கலம் இன்னம் மோதவில்லை. சின்னஞ்சிறு வயசு; உலகானுபவம் போதாது. ஆகவே வீட்டில் இருந்தவர்கள் என்னை மேல்படிப்புக்குச் சென்னை போகும்படி யோசனை கூறியபோது உடனே சம்மதித்தேன். சென்னை மெடிக்கல் காலேஜில் சேர்ந்து டாக்டராவதற்கு ஏற்பாடு செய்தார்கள். நான் ஊரை விட்டுப் புறப்படத் தயாரானேன்.

புறப்படும்போது அவளிடம் சொல்லிக் கொள்ளப் போனேன். களிதுளும்பிய நகையுடனே, கலகலென்ற மொழிகளிலேதான் அவள் பேச்சில் குறும்பும் கேலியும் குமிழியிட்டன. "அண்ணு, பட்டணம் போனதும் எங்களையெல்லாம் மறந்துவிடப் போகிறீர். அங்கு யாராவது ஆஸ்பத்திரி நர்ஸிடம் மயங்கிக் கிடந்துவிடாதே; ஜாக்கிரதை! அப்படி ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் என்னை நினைத்துக் கொண்டு திடமாயிரு" என்று கேலி செய்தாள்.

அவள் என்னுடன் அப்போது கடைசியாகப் பேசின மொழிகள் இவையே.

சென்னை வந்து சேர்ந்து வருஷங்கள் நான்கு கனவுபோல் கழிந்துவிட்டன. மறுபடியும் ஊர்ப்பக்கமே போகச் சாத்தியப் படவில்லை. இடையிடையே கிடைத்த லீவு நாட்களில் பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்கு நண்பர்களுடன் சுற்றிவரத் தோதுப்பட்டதே தவிர ஊருக்குப் போய்வர வழி ஏற்படவில்லை. வழி ஏற்படாதது மட்டுமல்ல, மனமும் இருக்கவில்லை. காரணம்? தாயும், பிறகு தந்தையும் இறந்துபோனது ஒன்று. தந்தை பிரிந்ததும் அங்கிருந்த நிலபுலன்களையெல்லாம் என் தமையனே சரிக்கட்டிக் குடும்பத்தில் ஏற்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல் களைச் சீர் செய்ததும் மிகுதியாக நின்றது ஒன்றுமே இல்லை என்று எழுதிவிட்டான். இதைவிட முக்கியமானது மற்றொன்று; அது தான் அவளது விவாகச் செய்தி.

நான் சென்னைக்கு வந்து மூன்று வருஷங்கள் வரையிலும் எனக்கு அவளைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. திடீரென்று ஒரு நாள் ஒரு கல்யாணப் பத்திரிகை வந்தது. பிரித்துப் பார்த்தேன். அவளது விவாகத்தைப் பற்றியது. அவளை அடையப் போகும் அதிருஷ்டசாலி யார் என்று ஆவலுடன் படித்தேன். அதில் கண்ட பெயர், "திருமயம் பெரிய ஜமீன் ராமஸ்வாமி ஐயர்" என்றிருந்தது. எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. மனம் என்னவோ வேதனைப்பட்டு வாடியது.

பெரிய ஜமீன் ராமஸ்வாமி, பேருக்குத்தான் பெரிய ஜமீன்தார். அவன் பெரிய ஜமீனுக்கு ஏகவாரிசு என்பது மட்டுமல்ல; இந்த உலகத்திலுள்ள எல்லா வியாதிகளுக்கும், வீண் டம்பங்களுக்கும் ஏக வாரிசாயிருந்தான். அப்பாவுக்கு ஒரே பிள்ளை; பிச்சுப்பிடுங்கல் யாரும் இல்லை. அதோடு பிறவிக்கூனன். உடல் அமைப்புக்கு ஏற்ற குண சௌந்தரியம். அவனுக்கும் என் வயசுதான். ஓடி விளையாடிய அந்த நாளிலே நாங்கள் அவனை எங்களுடன் சேர்த்துக் கொள்ளாமல் எவ்வளவோ விதத்தில் கேலி செய்த துண்டு. அவளும் அவனை எத்தனையோ தடவை அழகு காட்டி அவனது வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறாள்.

அப்படிச் சிறு வயசில் படுத்திவைத்த அவனையே அவள் இன்று மணக்க நேரிட்டது; இது என்ன சோதனை? விதியின் கேலிக்கூத்து இதுதானே? இந்தக் கோர நாடகத்தின் விளைவுக்கு மூல காரணம் என்ன? கேட்க வேண்டுமா? பணம்! பணந்தான்! அதைவிடச் சர்வ வல்லமையுள்ளது என்ன இருக்கிறது, இந்த உலகத்தில்? பணத்தின் எதிரில் பத்தும் பஞ்சாய்ப் பறந்துவிடு மல்லவா? வாழ்க்கையின் மாயாஜால நாடகத்தில் பணம் என்ற தாற்றுக்கோலால் குத்துண்டு, மதுவுண்டவனைப்போலத் தாறு மாறுக நடந்து கொள்வதைத்தவிர ஏழை மனிதன் வேறு என்ன செய்ய முடியும்? அப்படியிருக்க ஓர் ஏழை அபலைப் பெண்

என்ன செய்யக்கிடக்கிறது? அதிலும் அவள் தன் பெற்றோர்க ளுக்கு அடங்கி நடக்க வேண்டியவள்; அவர்களுடைய சுக சௌகரியங்களையே முதலில் கவனிக்க வேண்டியவள்; தனக்காக ஒன்றையும் விரும்பக் கூடாதவள். பல தலை முறைகளாக இந்து சமூகம் சாஸ்திரத்தின் பெயரால் பெண்மைக்கு இட்ட இரும்புத் தளை இது. இதைக் கடக்க அவளுக்குத் தைரியம் இல்லை; தைரியம் இருந்தாலும் வழியில்லை. கடக்க முயன்ற பெண்தெய்வங்களைத் தவிடுபொடியாக்கி விடும் சமூகம்!

இந்த விவாகச் செய்திக்குப் பிறகு எனக்கு அவளைப்பற்றி ஒன்றும் தெரியவரவில்லை. நான் மனத்தில் ஏற்பட்ட கசப்பால் அவளது விவாகத்துக்குப் போகவும் இல்லை. பிறகு என் படிப்பு முடிந்து டாக்டர் என்ற பட்டம் கிடைத்ததும் பம்பாய் ஆஸ் பத்திரி ஒன்றில் வேலை காலி இருப்பதறிந்து அங்கே போய்ச் சேர்ந்தேன். அங்கே எனது மனத்தைப் பழைய நினைவுகளிலிருந்து திருப்ப நினைத்து நோயாளிகளின் சேவையிலும், சமூக உத்தா ரணத்திலும் ஈடுபட்டேன். எனது முயற்சியும் சிறிது பயன் அளித்தது. நாளாக நாளாக, பழைய நினைவுகள் மறையத் தொடங்கின. மனமும் ஒரு சம நிலைமைக்கு வந்தது. வாழ்க்கையில் கண்ட கசப்பும் சற்றே மறைந்தது.

ராமுவைப் பம்பாயில்தான் சந்தித்தேன். அவன் அங்கு ஓர் இங்கிலீஷ் கம்பெனியில் குமாஸ்தாவாயிருந்து வந்தான். அவ னுடைய தங்கை லீலாவும், பெற்றோர்களும் ஊரில் இருப்பதாகத் தெரிவித்தான். இரண்டுவருஷங்களாக லீலாவுக்கு விவாகம் செய்ய வேண்டுமென்று சகல முயற்சிகளும் செய்து, கடைசியாக இந்த வருஷம் தை மாதத்தில் நடத்தப்போவதாகச் சொன்னான். என்னையும் கூடவரும்படி வற்புறுத்தினான். எவ்வளவு மறுத்தும் கேட்கவில்லை. கடைசியில், அவனுடன் கல்யாணத்துக்குப் பத்து நாட்களுக்கு முன்பே ஊருக்குப் புறப்பட்டேன்.

ஆறு வருஷத்துக்கு முன் வெளியேறியவன் மறுபடி முதல் தடவையாக இப்பொழுதுதான் ஊருக்கு வந்தேன். நேற்றுவரை யில் அவளைக் காணவில்லை. அதில் என் மனத்திற்கு ஓர் ஆறுதல். மனம் நிலைகெடவில்லை. கல்யாண காரியங்களில் முழுமனத்துடன் ஈடுபட்டேன். ஆனால், ஈசா என்ன சோதனை? நேற்று மாலை காஞ்சீபுரத்திலிருந்து திரும்பியதும் அவள் முகதரிசனம், அதைத் தொடர்ந்து இந்தக் களேபரம், அலை அலையாகி என் மனத்தை வாட்டிய கேள்விக் குவியல்கள்!

என்னைக் கண்டதும் அவள் ஒரு க்ஷணம் தயங்கி நின்றாள். ஆறு வருஷத்துப் பிரிவு ஒருவேளை அவளது நினைவைச் சற்றுத் தடுமாற வைத்திருக்கலாம். ஆனால் அவள் அதைச் சமாளித்துக் கொண்டு விட்டாள். என்னை அடையாளம் புரிந்துகொண்டாள்.

"அண்ணு, எப்பொழுது வந்தாய்? அவ்வளவு தூரம் சொல்லியும் கடைசியில் எங்களையெல்லாம் மறந்தே விட்டாயே!"

என்றான். இந்த வார்த்தைகளைத் தொடர்ந்து அவள் உதட்டின் கோணத்தில் ஒரு புன்னகை அரும்பு விட்டோடியது. வெறும் சாயல்தான். அந்தக் கணத்தில் அவளது முகம் இருந்த நிலைமை, கிரகணம் பிடித்த சந்திரனை நினைப்பூட்டியது. அந்த முறு வலிப்பு முகத்திற்கு அழகு செய்வதற்குப் பதிலாக அதை இன்னும் கோரமாக்கியது. எனது மனத்தில் வேதனையும் ஆச்சரிய மும் அதிகரித்தன ; ஒரு சந்தேகமும் தலைதூக்க ஆரம்பித்தது.

"நானுவது, உங்களையெல்லாம் மறப்பதாவது! மறந்து போயிருந்தால் இங்கு நான் வந்திருப்பேனா?" என்று பதிலிறுத்துக் கொண்டே உள்ளே போனேன். எதிரில் வந்த ராமு என்னைப் பார்த்ததும் சற்று நின்றான். என் முகத்தில் படர்ந்திருந்த குழப்பம் அவனுக்குத் தென்பட்டிருக்க வேணும். "என்னடா, என்னத்தைக் கண்டாய்?" என்றான். நான் அவள் நின்ற திக்கைத் திரும்பி நோக்கினேன்.

"ஓ! அவள் இன்று காலையிலே வந்தாள்" என்றான்.

"ஜமீன்தார்?" என்று என் வாய் தானுகவே கேள்வியை உச்சரித்தது.

"டபேதார்தான்! போகச் சொல் கையாலாகாதவனை! பச்சைக் கிளிபோன்ற இவனைப் படாத பாடெல்லாம் படுத்தி விட்டு, இப்போது ஒரு கருங்குரங்கைக் கட்டிக்கொண்டு அழுகிறான்" என்றான்.

எனக்கு எல்லாம் விளங்கிவிட்டதாக நினைத்தேன். 'கணவனின் கொடூர நடத்தைக்குப் பலியானவள் இவள்; அதனால்தான் இந்த ஏக்கம்' என்று நினைத்துக்கொண்டேன். ஆனால் என்ன பேதைமை! எனக்கு இன்னும் ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. அதை நான் அறியவில்லை.

டாக்டர் என்ற பட்டம் பெற்று ஆயிரக்கணக்கானவர் களுக்கு வைத்தியம் செய்தும் என்னால் அவளது நிலைமையை அந்த ஒரு நிமிஷத்தில் அறிய முடியவில்லை. நேற்றிர வெல்லாம் எனக்குத் தூக்கம் வரவில்லை. அவளது ஏக்கம் நிறைந்த முகமும், எதையோ கண்டு பயந்து நடுநடுங்கிக்கொண்டு சொல்ல முடியாத எந்த நிகழ்ச்சியையோ எதிர்பார்த்துத் தத்தளித்துக் கொண்டிருந்த அவளது கண்களிரண்டுமே எனது நினைவுச்சுழலில் வட்டமிட்டன. எவ்வளவு முயன்றும் அந்தச் சித்திரங்களை ஒதுக்க முடியவில்லை.

என்ன என்னவோ யோசனை யெல்லாம் செய்தது என் மனம். ஆனாலும் அந்த ஏக்கத்துக்கு, அந்தப் பயத்திற்கு, நடுக்கத்திற்குக் காரணம் இன்னதென்று மட்டும் என்னால் அறிய முடியவில்லை. இந்தப் புதிருக்கு விடை கண்டுபிடிப்பது அசாத்தியம் என்றுகூடப் பட்டது. அவளையே கேட்டுவிட்டால்?.....ஆனால் கல்யாணச் சந்தடியில் அவளுடன் தனித்து நின்று சாவகாசமாகப் பேசச்

சந்தர்ப்பப்படவில்லை. ஆறு வருஷங்களாகப் பிரிந்திருந்தவர்கள் கூடினால் சில நிமிஷத்துக்குள்ளாகப் பேசி முடித்துவிட முடியுமா, என்ன? ஆனால் எனக்கு அந்தக் கஷ்டங்கூட ஏற்படவில்லை. என் கேள்விகளுக்கெல்லாம் இன்று விடை கிடைத்துவிட்டது.

இன்று காலைப் பொழுதெல்லாம் கல்யாணச் சந்தடியில் கழிந்துவிட்டது. மாலையில் கல்யாணப் பெண்ணையும் பிள்ளையையும் மணையில் உட்கார வைத்துப் பாடினார்கள். "யாராவது பாடுங்களேன்" என்று வாத்தியார் இளப்பிய குரலுக்கு எதிராக முணுமுணுப்பும், குசுகுசுவென்ற பேச்சுக்களுமே பதிலளித்தன. கல்யாணப் பந்தலில் நடக்கும் வழக்கமான சம்பிரதாயமான சால்ஜாப்புக்களும், பிகுவு, மரியாதை வியாபாரங்களும் நடந்தேறின். முடிவாக அவள்தான் பாட முன்வந்தாள்.

தொண்டையைக் கனைத்துக்கொண்டு, "எவரி மாட" என்ற கீர்த்தனையை ஆரம்பித்தாள். அவளது குரலைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. முன்பெல்லாம் அவளது குரலில் ததும்பிய ஜீவகளையை நான் அப்போது காணவில்லை. திறந்த வெளியிலே கவலையற்று இனிமை ததும்பப் பாடித்திரியும் குயிலின் தீங்குரலை ஒத்திருந்த அவளது குரல் இன்று இனிமை இழந்து ஜீவன் இழந்து மிக மிக மெல்லிதாய் வெளிவந்தது. தீவிரமான சாதகஞ் செய்து ஸ்வரசஞ்சாரஞ் செய்வதில் அபாரமான திறமை பெற்றிருந்த அவளது குரலில் நான் ஒரு காலத்தில் கண்டிருந்த ஜிலுஜிலுப்பும் இனிமையும் இன்று மறைந்துவிட்டிருந்தன. முன்பு மேல் ஸ்தாயியில் பஞ்சமத்தையும் அதிசுலபமாக எட்டிப் பிடித்துச் சஞ்சரித்த அவளது குரல் இன்று மந்தர ஸ்தாயியில் பாடுகையிலும் மிகவும் கஷ்டப்பட்டதென்பது தெளிவாக விளங்கியது.

இந்த அஜகஜாந்தரமான மாறுதலைக் கண்டு நான் அவள் இருந்த பக்கம் கூர்ந்து நோக்கினேன். பெண்களின் கூட்டத்தின் நடுவில் உட்கார்ந்திருந்த அவளது தோற்றம் எனக்கு அசோக வனத்துச் சீதையை ஞாபக மூட்டியது. அதே மாதிரியான பரிசுத்தம்; ஓயாத கவலையால் தூசுபடிந்த, ஒளி மழுங்கிய தோற்றம். என்னை அந்தக் காட்சி புல்லரித்தது. மனத்தின் வேதனை அதிகரித்தது. கூடவே மற்றொரு விசேஷத்தையும் கவனித்தேன். பாடுவதற்கு அவளது குரல் கஷ்டப்பட்டது என்பது மட்டுமல்ல, அவளது முகத்திலும் முத்து முத்தாக வேர்வை வழிந்தோடியது. முகம் சிவப்பேறி யிருந்தது. சுவாசங்கூட வாங்குகிறதோ என்ற சந்தேகம் எனக்கு உண்டாயிற்று. முன்பு தலைதூக்க ஆரம்பித்த சந்தேகம் இப்பொழுது உறுதிப்படலாயிற்று. கச்சேரி முடிந்ததும் அவளைத் தனியாக அழைத்து உடனே கவனிக்க வேணும், என்னுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொண்டு விடவேணுமென்று நிச்சயித்துக் கொண்டேன்.

இதற்குள், அந்தப் பாட்டு முடிந்து அவள் வேறொரு பாட்டிற்குப் போய்விட்டாள். கல்யாணி ராகத்தில் "நீது சரண பங்கஜ" என்ற பாட்டு. அந்தப் பாட்டைப் பாட ஆரம்பித்த சில நிமிஷத்துக் கெல்லாம் ஓர் அதிசய மாறுதலைக் கண்டேன். எனக்கு மீண்டும் ஆச்சரியம்! சற்று முன்புதான் நான் எங்கோ மறைந்து போய்விட்டதாக எண்ணிக் கவலைப்பட்ட நாதமெல்லாம் மறுபடியும் பழைய ஜீவ களையுடன் அவளது குரலில் பிரகாசிக்கக் கண்டேன். முன்னையும் விட அதிகக் காந்தியுடன் சோபித்தது அவளது குரல். என்ன தெய்விகமான நாதம் இது! இந்த இனிமை இது வரை எங்கு மறைந்திருந்தது? இந்தப் பாட்டை அவள் தான் பாடுகிறாளா? அன்றி அவளிடத்தில் ஏதாவது தெய்வ சக்தி ஒன்று குடிகொண்டு இவ்விதம் பாடச் செய்விக்கிறதா? ஆச்சரியக் கடலில் முழுகினேன்.

"நீது சரண்" என்ற பாட்டை அவள் அந்த நாட்களில் மிகவும் விரும்பியதுண்டு. அதன்மேல் பிராணனையே வைத்திருந்தாள் என்று சொல்வேன். அதை அவள் பாடிப் பல முறை கேட்டிருக்கிறேன். ஆனால் இன்று அவள் பாடியதைப்போல் என்றும் பாடியதும் இல்லை; அவள் இவ்விதம் பாடமுடியும் என்று நான் எதிர்பார்த்ததும் இல்லை. உயிர் நாடியையே கிழித்துக் கொண்டு கிளம்பியதுபோல் இருந்தது அந்த நாதம். இத்தகைய நாதம் எந்தத் தீம்புக்கு அறிகுறியோ என்ற ஒரு பயங்கர எண்ணம் திடீரென்று எனக்கு உண்டாயிற்று. 'சட்' என்று அதை ஒதுக்கினேன்.

"ஓ ஜகத் ஜனனீ, மனோன்மணி, ஓங்கார ரூபிணி, கல்யாணி" என்ற அடிகள் என் செவியில் விழுந்தன. அப்பதங்கள் ஆகாசத்தை அளாவி, நட்சத்திரங்களைத் தாக்கி, ஆதி பராசக்தியையே அடைவதுபோல மேற்கிளம்பி, உடம்பைப் பனிப்புறச் செய்தன. அந்த வரிகளையே திரும்பவும் பாடி நிரவல் செய்தாள். "ஓங்கார ரூபிணி கல்யாணி" என்று குரல் படிப்படியாக ஏறிப் பஞ்சமத்தை எட்டிப் பிடித்துவிட்டது. அங்கேயே சிறிது சஞ்சரித்தது. அதைப்போல அவள் இதுவரை பாடியதே யில்லை. இன்றுதான் நாம் தெய்விக கானம் கேட்டோம் என்ற உணர்ச்சி என் மனத்தில் ததும்புகையில் திடீரென்று அவளது குரலை யாரோ நடுவில் அமுக்கிவிட்டதுபோலக் கானம் நின்றுவிட்டது.

கிரீச் என்ற சப்தம் கேட்டது. கூடவே, "ஐயோ!" என்ற அலறல் எனக்கு நினைவு வந்தது. இந்த உலகிற்கு மறுபடி வந்தேன். பெண்கள் உட்கார்ந்திருந்த பக்கம் ஒரே களேபரம்! நான் எழுந்து அங்கு ஓடினேன். கூடியிருந்தவர்களை ஒதுக்கிக் கொண்டு நோக்கினேன். அவள் கீழே சாய்ந்துவிட்டிருந்தாள். வாயிலிருந்து ரத்தம் நுரை நுரையாக வழிந்துகொண்டிருந்தது. முகத்திலும் உடம்பிலும் வேர்வை வெள்ளம். புடைவையெல்லாம் ஒரே தெப்பமாக நனைந்துபோயிருந்தது. சுற்றியிருந்தவர்களைக் கொஞ்சம் ஜலம் கொண்டுவரச் சொல்லிவிட்டு ஆசுவாசப்படுத்த முயன்றேன்.

ஆனல் பெருத்த ஏமாற்றம்! அவளது உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. இனி அவளுக்குப் பிழைப்பதில் நம்பிக்கை இல்லை; பிழைக்கவும் மாட்டாள். உண்மையாகவே அவள் தன் பிராணனைக் கொடுத்தே அந்தக் கல்யாணி ராகக் கீர்த்தனையைப் பாடியிருக்கிருள். அந்தக் கல்யாணி ராகமே அவளது உயிருக்கு எமனுக வந்து வாய்த்தது. கல்யாணியின் சோகமே அவளது வாழ்க்கையின் நாதமாக முடிந்தது.

கீழே விழுந்திருந்தவளைக் கையில் தாங்கி வாயைத்துடைத்துச் சிறிது சூடான காபி செலுத்த முயன்றேன். அவள் சிறிது மூர்ச்சை தெளிந்தாள். கண்கள் அகல விரிந்தன. என்னைக் கண்டதும் அந்தக் கண்களில் பழைய காந்தி நிலவியது. லேசாக ஒரு முறுவல் படர்ந்த முகத்தில் ஏதோ பேச முயலுபவளைப் போல் வாயசைத்தாள். நன்ருகக் கேட்பதற்காக அவளது முகத்தருகில் குனிந்தேன். எனது மனத்தை வாட்டிய சந்தேகமெல்லாம் அவளுக்கு எப்படித் தெரிந்தது? அதுதான் ஆச்சரியம்!

"சுந்தர்!...க்ஷயம்!...ஆறுமாசம் கர்ப்பம்...நான் போகிறேன் திருப்தியோடு...என் கஷ்டம் தீர்ந்துவிட்டது...ஆசைப்பட்டது கிடைத்துவிட்டது...எல்லாம் கனவு!...ஆமாம்!... வாழ்வே ஒரு கனவுதான்! ஆனல்..."

பட படவென்று பேசினுள். திடுக்கென்று முடிந்துவிட்டது. அவள் போய்விட்டாள். அவளை இனி எங்கென்று தேடுவது? கரியாய், ஒரு பிடி சாம்பலாய், புகையாகிக் காற்றுகிக் காற்றோடு காற்ருய்ப் போய்விட்டாள்! நான் அவளை எந்த ரூபத்தில் எங்கே என்று தேடுவது?

ஆமாம், எனக்குள்ளாகவே யோசிக்கிறேன்: அவள் சொன்னது வாஸ்தவந்தான். வாழ்க்கை ஒரு கனவுதான். இதற்கு அவளே, அவளது வாழ்வே அத்தாட்சியாக இருக்கிறது. கனவிலும் எத்தகைய கனவு? பார்த்துக் கொண்டிருக்கையிலேயே நம் கண்ணெதிரிலேயே மாயமாய் மறைந்து விடும் கனவு இந்த வாழ்க்கை!

வே. வேணுகோபாலன்

சிற்பியின் தியாகம் 64

1

மங்கலான விளக்கொளியில் குனிந்தபடியே ஏதோ எழுதிக்கொண்டிருந்தேன்; என் நினைவு முழுவதும் எழுதுவதில் ஆழ்ந்திருந்தது. அந்த அறையில் நான் ஒருவன் மட்டுமே இருந்தேன். வாசற் கதவு சிறிதே சார்த்தியிருந்தது.

"ஸ்வாமி!"

அமைதி குடிகொண்ட அந்த அறையில், 'ஸ்வாமி'* என்ற மெலிந்த குரலைக் கேட்டவுடன் திடுக்கிட்டேன். தலை நிமிர்வதற்குள் கையில் இருந்த பேனா நழுவிக் கீழே விழுந்தது; இருதயத்தில் அதிர்ச்சி உண்டாயிற்று. பெருமூச்சு விட்டுத் திரும்பிப் பார்த்தேன்; நான் கண்ட உருவம் பயத்தை நீக்கியது. ஆம்! என் எழுத்தைத் தடைப்படுத்த விரும்பாமல் மெள்ளக் கதவைத் திறந்து என் பின்னே வந்து நின்றவன் என் நண்பன் முனிசாமிதான். அவனைப் பார்த்தபின்புதான் என் மனம் தெளிவடைந்தது. என் நடுக்கம் எனக்கே வெட்கத்தை அளித்தது.

புன்னகையோடு அவன் பக்கமாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டேன். அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கையில் ஏதோ மாறுதல் தெரிந்தது. எப்போதும்போல் வந்தவுடன் உட்காரு பவன் நின்றுகொண்டே என்னை வெறித்துப் பார்த்தான்.

"யாரோ என்று திடுக்கிட்டு விட்டேன்; உட்காருங்கள்" என்றேன் சந்தேகத்தோடு. அதற்கு மேலும் அவன் உட்கார வில்லை. எனக்கு வியப்பு மேலிட்டது.

மங்கிய விளக்கொளியில் முனிசாமியின் முகம் நன்றாகத் தெரியவில்லை. விளக்கைத் தூண்டிவிட்டு, "என்ன, நிற்கிறீர்கள்? என்ன விசேஷம்?" என்றேன். என் சந்தேக உள்ளத்தில் பலவித நினைவுகள் உருக்கொண்டன.

"எல்லாம், வியர்த்தம்! என் வாழ்க்கையே வியர்த்தம்" என்று சொல்லிக்கொண்டே, மதுவுண்டவன்போல் மயங்கித் தள்ளாடித் தொப்பென்று என் அருகில் அமர்ந்தான். எனக்குத் திகிலும் கவலையும் உண்டாயின.

"என்ன விசேஷம்? ஏன் இப்படி..." — என் கேள்விகளைக் காதுகொடுத்துக் கேட்கவில்லை முனிசாமி. முகத்தை உற்றுப் பார்த்தேன். அவன் கண்களிலிருந்து நீர்த்துளிகள் சிதறி விழுந்தன. இருதயம் விம்மும் ஒலி கேட்டது. 'அஞ்சா நெஞ்சமும், அழகுணர்ச்சியும் கொண்ட முனிசாமியா இப்படி அழுகிறான்?' என்று எனக்குள் நான் கேட்டுக் கொண்டேன். அவனிடமிருந்து மேற்கொண்டு எவ்வித வார்த்தைகள் வெளி வரும் என்பதை ஆவலோடு எதிர்பார்த்தேன்.

குனிந்த தலையை நிமிர்த்திக்கொண்டு மிகுந்த இரக்கத்தோடு என்னைப் பார்த்தான்:

"ஸ்வாமி, என்னவென்று சொல்வேன்! இராப்பகலாகப் பதினைந்து நாட்கள் உழைத்துப் பாடுபட்டு உருவாக்கியதை இன்று சாயந்தரம் உருக்குலைத்து விட்டேன்!" என்று விம்மி விம்மி அழுதான். அழுவதற்கு அவன் சிறு பிள்ளையா என்ன? முப்பது வயசு கொண்ட ஆண்மகன் அவன்!

"ஆ! துர்க்காதேவியின் சிலையா?" என்று கேட்டேன்.

"துர்க்கை என்னை அணுக விடவில்லை."

"வேறு யாரேனும் உடைத்து விட்டார்களா? நீங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே!"

"ஸ்வாமி, இந்தப் பாவியின் கை பட்டுத்தான் தேவியின் சிலை தெறித்துவிட்டது."

"த்ஸொ.....ஏன் அப்படி? சிற்பியாரே,.....என் மனமே இப்படிப் பதறுகிறதே; உங்கள் மனம் படும் பாட்டை..."

"ஸ்வாமி, என் இருதயம் தூய்மை யற்றது. மகா மூடன் நான். பஞ்சமாபாதகமும் புரிந்தவன். துரோகி நான்! பூர்வ ஜன்மத்தில் என்ன பாதகம் செய்தேனோ அனுபவிக்கிறேன். சிற்பத் தொழிலில் நான் அடைந்த மகோன்னதமான புகழை இழந்து விட்டேன்; இனி அதலபாதாளத்தில் மூழ்கவேண்டியதுதான்; இனி இந்தக் கலையையே மறந்துவிட்டேன்."

"இதோடு மூன்றுவது சிலையல்லவா இது? எப்படி உடைந்தது? இப்படி உடைவதற்குக் காரணம்?"

"காரணம் என்ன? எல்லாம் பூர்வஜன்ம பாவம்! தேவியின் திருவுருவம் முழுவதும் பூர்ண எழிலுடன் மிக அற்புதமாக அமைந்து விட்டது. குறையே இல்லை. கண்களையும் திறந்து விட்டேன். கடைசியாக உற்றுப் பார்த்தேன்; முகம், மார்பு, ஹஸ்தம், பாதம் எல்லாம் தேவியின் திருப்பொலிவை எடுத்துக் காட்டின. முதல் இரண்டையும்போல் மானிடச் சாயலே இல்லை. தெய்விக ஒளி நிகழ்ந்தது தேவியின் திருமேனியில். பாதங்களில் கைகளையும் தலையையும் வைத்து வணங்கினேன்; ஆனந்தக் கண்ணீர் சொரிந்தேன். சற்று அகல நின்று பார்த்தேன். பீடத்தில் சிறிதே மெருகு கொடுத்தால், இழைப்பூட்டினால் அழகு தரும் என்று எண்ணினேன். உடனே உளியை வைத்து ஓட்டினேன். பூர்த்தியாகி விட்டது என்று பொம்மல் கொண்டது என் மனம். 'அம்மா, தாயே!' என்று பெருமூச்சு விட்டபடி எழுந்து நின்று உள்ளம் குளிரப் பார்த்தேன். என் கண்களில் சஞ்சரித்து மாயை செய்த உருவம் மாய்ந்து விட்டதாக எண்ணினேன். இனி எந்தப் பெண் பிரதிமையையும் கண் கண்டபடி செய்யலாம், உள்ளம் கண்டபடி உருவாக்கலாம் என்ற உறுதி உண்டாயிற்று; ஐயோ!"

எனக்கு இருதயம் துடித்தது, முனிசாமியின் ஏக்கக் குரலால். என்னை அறியாமல் கண்களில் நீர் ததும்பியது.

"ஏன்? என்ன ஆயிற்று?" என்றேன் அவசரமாக.

"இந்தப் பாழும் கண்களுக்கு, தேவியின் இடைப்பாகத்தில் குறை இருப்பதாகத் தெரிந்தது. அவள் வாகனமான சிம்மத்தின் பிடரியை ஓட்டிச் சிறிது உளியைப் புரட்டித் தட்டினேன்; இழைத்தேன். மிக நுட்பமான இடைப்பாகத்தில், என் கொடுங் கையை அழுத்தியதும் 'டக்' என்ற சத்தம்! அவ்வளவுதான்

இடைப்பாகத்தோடு தேவியின் மேல்புறம் துண்டமாக விழுந்தது. என் உடல் பதறியது; உள்ளம் சிதைந்தது. என்ன செய்வேன்! இனி நான் சிற்பியல்ல! சிற்பக்கலையைக் குலைக்க வந்தவன் என்று கருதுகிறேன். தான் பெற்றெடுத்த மகவை வெட்டித் தள்ளும் தாயைப்போன்றவன் நான். ஸ்வாமீ! என் துயரத்தை வெளிக் காட்டிக்கொள்ள வகையில்லை. இப்போதே என் உயிர் போய் விட்டால்கூடப் பாதகம் இல்லை. இனி, சிற்பி என்ற பெயரோடு வாழ முடியாது. உங்களிடம் ஆறுதல் கிடைக்குமென்று ஓடிவந்தேன். என் கண்கள் சுழல்கின்றன. காது அடைபட்டு விட்டது. சோர்வு அதிகமாயிருக்கிறது; இப்படியே கிடக்கிறேன்; என்னை எழுப்ப வேண்டாம். ஸ்வாமி, விதியின் கொடுமை என் கைத்திறமையைக் குலைத்துவிட்டதே!"

முனிசாமி அப்படியே நிலத்தில் படுத்துவிட்டான். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன் கதியை நினைத்து என் மனம் இளகிவிட்டது. என் எழுத்து வேலையை மறந்தேன். மௌனமாக அப்படியே உட்கார்ந்திருந்தேன். இரவு மணி பதினொன்று அடித்தது. கவலை அதிகமாகிவிட்டது எனக்கு.

2

முனிசாமியின் கதி இப்படியா ஆகவேண்டும்? உலகில் உண்மையான கலைத்திறமை கொண்ட எவனுக்கும் இவ்விதச் சோதனை அவனுடைய வாழ்க்கையில் ஏற்படத்தான் செய்கிறது. விதியின் விளையாட்டுப்போலும் இது!

ஆதிரங்கம் என்ற ஊரில் பிறந்தவன் முனிசாமி; சிறந்த சிற்பி அவன். அவனுக்கு அது பரம்பரைத் தொழில். எங்களூரில் மிக்க தனவந்தரான பிரபு ஒருவர் கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்காக விக்கிரகங்கள் செய்ய அவனை வருவித்தார். சிற்பக் கலையில் திறமை வாய்ந்தவன் என்ற காரணத்தாலேயே அவன் வருவிக்கப்பட்டான்.

நவக்கிரக தெய்வங்கள், தக்ஷிணாமூர்த்தி, தண்டாயுதபாணி, துர்க்காதேவி இப்படியாகப் பன்னிரண்டு சிலைகள் பிரதிஷ்டைக் குரிய நாளில் செய்துகொடுப்பதாக வாக்களித்தான். சிலை ஒன்றுக்கு இருநூறு ரூபாய்கள் சம்மானம் அளிப்பதாக முடிவு செய்து, முன்பணமாக எண்ணூறு ரூபாயும் பெற்றுக்கொண்டான்.

எங்கள் கிராமத்தின் எல்லையில் குளக்கரையில் உள்ள பெரிய தென்னந்தோப்பில் பல பச்சைவெட்டுக்கற்கள் போடப்பட்டிருந்தன. அந்தத் தோப்பிலேயே எல்லா வசதிகளும் முனிசாமிக்கு அமைக்கப்பட்டிருந்தன. தோப்பின் முகப்பில் இருந்த அறையையே நான் படிப்பதற்கும் எழுதுவதற்கும் உபயோகித்து வந்தேன். அதனால் எங்கள் இருவருக்கும் நட்பு உண்டாயிற்று. அது தொடங்கி நாள்தோறும் என்னைக் காணாமல் இரான். அவனைக் காணாமல் அமைதியுறாது என் மனம்.

வேலை முடிந்தபின் முனிசாமி என் அறைக்கு வந்துவிடுவான்; அவனிடம் கலை பயின்றவர்கள் பலர் உடன் இருந்தார்கள். முதலில் அவர்களைக்கொண்டே சிலைகளைச் செதுக்கச் செய்வான். கடைசியாக அவன் கை வைப்பான். அவ்வளவுதான்; சிலை உருவம் பெற்றுவிடும்; உயிர் பெற்றதுபோல் ஜீவ களை துள்ளும். இவ்விதம் அற்புதமாக நவக்கிரகங்களையும் அமைத்து விட்டான். ஒவ்வொரு சிலையையும் தட்டிப் பார்த்தால் நாதம் கணீர் என்று எழும். "நாதம் இல்லாத கல்லில் சிலை செதுக்க மாட்டேன்" என்பான். "ஸ்வாமி, என் கை செய்த சிலைகளுக்குக் கணக்கில்லை" என்று பெருமிதம் கொள்வான்; "என்னவோ ஸ்வாமி, உங்கள் போன்றோருடைய வாழ்த்துக் கிடைத்தால் போதும்" என்பான். "சிற்பசாஸ்திரம் கரையில்லாக் கடல். அதில் துளியளவு எனக்குத் தெரிந்தது" என்று பேசுவான். அவன் பேச்சில் இறுமாப்பில்லை; கடுமை கிடையாது. சினந்து பேசியே கண்டதில்லை. இனிமையான பேச்சும், அன்புகனிந்த பார்வையும், நுண்ணிய கலைத்திறனும் அவனுக்கு உரிமையானவை.

வேலை செய்தபின் ஓய்வு நேரங்களில் தவறாமல் என்னிடம் வந்துவிடுவான் முனிசாமி. அவன் சிற்ப சம்பந்தமாகப் பல விஷயங்களைப் பேசுவான். அஜந்தா, எல்லோரா, மாமல்லபுரம், சிற்றன்னவாசல், தாராசுரம் முதலிய சிற்ப நிலைக்களங்களைக் கண்டு தெரிந்துகொண்ட புதுச் செய்திகளை எடுத்துச் சொல்லுவான். "ஸ்வாமி, நான் பன்னிரண்டு வயசிலேயே யாத்திரைக்குப் புறப்பட்டவன்; சிற்பக் கலையைத் தெளிவுற அறிந்து கொள்ள எண்ணிப் புறப்பட்டேன்; அற்புத விஷயங்களை அறிந்தேன். கணக்கற்ற அரிய சிற்பங்களைக் கண்டேன். சிற்பக் கலையில் திறமை பெறுவதற்கு அதுவே உதவி செய்தது எனக்கு. இருபத்தைந்தாம் வயசில் வீடு திரும்பினேன்; மறுபடியும் தொழிலை ஆரம்பித்தேன். என் திறமை எல்லோரையும் வசீகரித்தது. என்னிடம் கலை பயில வந்தவர் கணக்கில்லை. எங்கள் இனத்தார்கள் சேர்ந்து எனக்குச் 'சிற்பசாஸ்திரி' என்ற பெருமையை அளித்தார்கள். பன்னிரண்டு வருஷ யாத்திரையால் எனக்குப் பெரும் பயன் உண்டாயிற்று. அதே வருஷம் எனக்குக் கல்யாணம் ஆயிற்று. இருபத்தைந்தாம் வயசில் கல்யாணமான நான், இருபத்தெட்டாம் வயசில் மனைவியை இழந்தேன். ஸ்வாமி, என் வாழ்க்கையில் இருட்படலம் போர்த்துக்கொண்டது; மறுதாரம் செய்விக்க முயன்ற பலரும் 'ஏமாற்றமடைந்தார்கள்" என்று தன் மனத்துயரத்தைக்கூட ஒரு முறை என்னிடம் பிரலாபித்தது உண்டு. ஆகவே, அவன் வாழ்க்கையில் மனைவியின் மரணம் தீராத ஏக்கத்தை அவனுக்கு அளித்து விட்டதாகக் கருதினேன். மறுதாரம் மணந்துகொள்வதுபற்றி நான் கூறிய புத்திமதியைக்கூட அவன் ஏற்கவில்லை. அடிக்கடி தன் மனைவியைப்பற்றி மட்டில் அவன் கூறுவான். பாவம்! கலைஞனும் கலாரஸிகனுமான முனிசாமியைக் கடவுள் இப்படிக் கலங்கவைத்து விட்டாரே! என் செய்வது?

முனிசாமி செய்த சிலா விக்கிரகங்களை நான் கண்டு பிரமிப் படைந்தேன். சூரியன் சந்திரன் முதலிய நவக்கிரகங்கள், தக்ஷிணாமூர்த்தி, தண்டாயுதபாணி முதலியவற்றை அதியற்புத மாகச் சிருஷ்டித்திருந்தான். உன்னதக் கலைத்திறமையின் ஒளி துள்ளலாடியது அவற்றின் சோபையில். கடைசியாக அவன் செய்யவேண்டியது ஒன்றுதான் பாக்கி. துர்க்காதேவி! அதுவும் இருமுறை செய்து பின்னப்பட்டு விட்டது.

"சிற்பியாரே, ஏன் இப்படித் துர்க்கையின் சிலை இருமுறை தவறிவிட்டது ; பழுதுபட்ட சிலையை நான் பார்க்கிறேன், காட்டுங் கள்" என்று கேட்டேன். அந்தச் சிலைகளை மட்டும் காணவில்லை. முனிசாமியிடமிருந்து வந்த பதில் இதுதான் : "அவற்றைப் புதைத்துவிட்டேன் ; நன்றாகப் பின்னப்படுத்தி விட்டேன்" என்றான். 'ஏதோ மர்மம் இருக்கிறது' என்பதை உணர்ந்தேன்.

"ஏன் அப்படிச் செய்தீர்கள்? பின்னப்பட்டால் அதைப் புதைத்துவிட வேண்டுமென்பது நியதியா?"

"அப்படியல்ல? பின்னப்பட்டதைப் பலர் காண வைக்க இடம் தரவில்லை என் மனம்."

அப்புறம் நான் ஒன்றும் பேசவில்லை. அன்று அவ்வளவோடு என் அறைக்குத் திரும்பி விட்டேன். அதற்குப்பின் மறுபடியும் தேவியின் சிலையை நிர்மாணிக்க முயன்றான் முனிசாமி. விக்கிரகப் பிரதிஷ்டை நாள் சமீபித்துவிடவே பிரபு அங்கே விஜயம் செய் தார் ஒருநாள். நவக்கிரகங்கள் முதலியன உருவாகி விட்ட தையும் துர்க்கை மட்டும் உருவாகாததையும் கண்டு துரிதப் படுத்தினார்.

"பிரபு, இருமுறை அந்த விக்கிரகம் பின்னப்பட்டு விட்டது. இது மூன்றாவது விக்கிரகம். விரைவில் பூர்த்தி செய்துவிடு கிறேன்."

"அதெல்லாம் நமக்குத் தெரியாது சிற்பியாரே ; தேவியின் சிலை பிரதிஷ்டைக்கு வந்து சேரவேண்டும்."

"நான் சும்மா இருக்கவில்லை, பிரபு ; பூர்ணமாகி விட்ட சிலைகள், கடைசியில் பின்னப்பட்டுவிட்டன ; மிகுந்த ஜாக்கிர தையும் அமைப்பும் வேண்டுமென்பது தாங்கள் அறியாததா?"

"ஆம் ஐயா, நீர் என்ன செய்தாலும் நமக்கு வேண்டியது சிலை தான். எத்தனைமுறை சிலை தயாரித்துப் பின்னப்பட்டாலும் அக் கறையில்லை ; அது உம் பொறுப்பு. ஜாக்கிரதை ! பிரதிஷ்டைக்குத் தடை ஏற்பட்டால் அனர்த்தம் !"

"பிரபு, கருணை கூர்ந்து நான் வேலைசெய்கையில் தங்களுக்கு நம்பிக்கையான ஆளை இங்கிருக்கச் செய்தால்..."

"ஓய், நீர் தொழில் தெரிந்தவரா? என்னவோ சிற்பத்தில் பிரமாத வேலைக்காரர் என்று எல்லாரும் சொல்லிவிட்டார்களே

என்னவோ, கதை பேசுகிறீரே; இப்படிப் பேசிக்கொண்டே இருந்தால் வேலை எப்படி ஐயா நடக்கும்? இந்த அழகில் உமக்குக் காவலாக ஆள் வேறு? நன்றாயிருக்கிறது! தொகை எண்ணூறு காவலாக இருக்கிறது. காரியத்தைப் பாரும்" என்று கடுகடுத்த முகத்துடன் பார்த்தார் பிரபு.

சிற்பி முனிசாமி, தன் பற்களை வெளியே காட்டிக்கொண்டு ஏங்கியபார்வையோடு கையில் உளியும்சுத்தியும் வைத்துக்கொண்டு சிலைக்குமுன் உட்கார்ந்திருந்தான். பிரபுவின் நிர்த்தாக்ஷிண்யமான பேச்சைக் கேட்டு அவன் திடுக்கிட்டான். "தொகை எண்ணூறு காவலாக இருக்கும்" என்று கூறிய பிரபுவின் வார்த்தைகள் அவனைத் தலைசுற்ற வைத்தன. கண்களில் நீர் சுரந்துவிட்டது; வேகம் எழுந்தது அவன் மனத்தில்.

"பிரபு, தங்கள் வார்த்தைக்குப் பயந்து சிலை பூர்த்தியாகி விடுமா? சிலை பூர்த்தியாவது தெய்வத்தின் கையில் இருக்கிறது. நான் வேலை செய்யாமல் இல்லை என்பதைத் தாங்கள் அறிந்துகொள்ளவேதான் ஆளைக் குறிப்பிட்டேன். தூணைக் கொத்தி அமைப்பதுபோல இதைச் செய்ய முடியாது."

"சிற்பியாரே, நீர் பேசுவதைப் பார்த்தால் தேவியின் சிலை பூர்த்தியாகாததுபோல் தோன்றுகிறதே; பாக்கித் தொகையை எப்படிப் பெறப் போகிறீர்?"

"தாங்கள் அப்படி நினைப்பது சரியல்ல, பிரபு. நான் தயாரிக்கும் சிலைகளுக்குத் தங்களால் விலை கொடுக்க முடியாது."

"சிலை ஒன்றுக்கு இருநூறு ரூபாய் கேட்டிருக்கிறீர்; முன் பணம் வேறு எண்ணூறு பெற்றிருக்கிறீர்; எழுதி வாங்கிய பத்திரம் பேசும்; ஏது, பெரிய புரட்டராக இருப்பீரோ?"

"பிரபு, ஏன் அவ்வளவு கோபம்? பணத்தைப் பெரிதாக மதிக்காதீர்கள் என்றுதான் சொன்னேன்; வேறில்லை. உண்மையுங்கூட. சிலை ஒன்றுக்கு விலை பேசினால் ஆயிரம் ஆயிரமாகக் கேட்பேன். ஆனால் செய்வது வியாபாரம் அல்ல. கலையை உங்களிடம் கிரயம் செய்யவில்லை. அதனால், இருநூறையும் சம்மானமாக, நன்றிக்கு அறிகுறியாகப் பெறுகிறேன்."

"போதும், உம்முடைய பேச்சு. பெரும் வாயாடியாக இருக்கிறீரே! இதென்ன பண்டைக்காலத்து மூட சமூகம் என்று எண்ணிவிட்டீரோ? உம்மை விடச் சமர்த்தர்கள் ஆயிரம் பேர் உண்டு. இவ்வளவு சிலைகளையும் இருநூறு ரூபாயில் செய்து கொடுப்பார்கள். இந்தத் தர்க்கத்தை முடித்துவிட்டு உம் பயணத்தைக் கட்டும். நான் போய் வருகிறேன். ஜாக்கிரதை, பிரதிஷ்டை நாள்!" இவ்விதம் சொல்லிக்கொண்டே போய் விட்டார் பிரபு.

உளியையும் சுத்தியையும் கையில் வைத்துக்கொண்டு அப்படியே பிரமித்து உட்கார்ந்துவிட்டான் முனிசாமி. 'என்ன திமிர்! அருமை தெரியாத மூடர்களிடம் பணம் அகப்பட்டுத் தவிக்கிறது. சிற்பக் கலையை இவ்வளவு அற்பமாக மதிக்கும் மூட்டாளிடம் அகப்பட்டுக் கொண்டோமே! இதென்ன மந்திர வாதியின் காரியமா? ஐயோ! என் கலைத்திறமையின் புகழை இவன் மங்கவைத்துவிடுவானே? இவன் பேச்சு –' என்று இடிந்து போய் உட்கார்ந்திருந்தான். இவ்வளவையும் பார்த்துப் பிரமை யோடு, சிற்பியிடம் இரக்கத்தோடு அருகில் கிடந்த தென்னை மரத் துண்டின்மீது நான் உட்கார்ந்திருந்தேன்.

"ஸ்வாமி, சிற்பக்கலை எவ்வளவு கீழ்த்தரமாக மதிக்கப்படு கிறது நம் சமூகத்தில்? பணம் எல்லாவற்றிற்கும் அளவுகோல்! இன்னும் சிறிது காலத்தில் இவ்வித மூட்டாள்கள் கலையையே நிர்மூலமாக்கி விடுவார்கள்."

"சிற்பியாரே, எல்லாக் கதையும் இப்படித்தான் இருக்கிறது. சமூகம் இப்போது கண் கண்டபடி போய்க்கொண்டிருக்கிறது; பகுத்தறியும் அறிவே இல்லை. நீரும் நானும் பேசி என்ன பயன்? – அதிருக்கட்டும்; இன்னும் எவ்வளவு நாள் ஆகும், இது முடிய?"

"ஸ்வாமி, எப்படிச் சொல்லமுடியும்? நாளைக்கே முடிந்து விடலாம்; பதினைந்து நாள் இன்னோடு முடிகின்றன. இராப்பகல் தூக்கமில்லாமல் செய்கிறேன். என்னவோ, விதியின் விளை யாட்டு! எனக்குத் தோன்றுகிறது. இந்தத் துர்க்கையோடு என் தொழில் நின்றுபோய்விடும் என்று."

"ஏன்?" எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. முனிசாமி மறுமொழி சொல்லவில்லை. 'டங், டங்' என்று துர்க்கை விக்கிரகத்தின் வயிற்றுப்பக்கத்தில் உளியை ஓட்டினான்.

அன்று சிறிது நாழிகை பேசியிருந்துவிட்டு என் அறைக்குத் திரும்பி விட்டேன். அன்று கடந்த மறுநாள்தான் மூன்றுவது சிலையும் உடைந்துவிட்ட சம்பவம் நடந்தது.

3

"நாளைக்கே முடிந்து விடலாம்" என்று அவன் சொன்னபடி அது முடிந்துவிட்டது. இனி என்ன சொல்வது?

சிலைமுறிவால் மனம் முறிந்த முனிசாமி என் அறையில், அன்று இரவு பேச்சு மூச்சின்றிக் கிடந்தான். எனக்கு அன்று இரவு முழுவதும் தூக்கமே இல்லை. என்ன செய்வது? மறுநாள் உதயத்தில் என் முயற்சியால் முனிசாமி மறுபடியும் சிற்ப சாலைக்குச் சென்றான். நானும் கூட இருந்தேன். பின்னமான சிலையைப் பார்த்தேன். 'பேசி என்ன பயன்?' என்று மௌனமாக இருந்துவிட்டேன்.

அவனிடம் தொழில் பயிலும் கோதண்டன் என்னையும் முனிசாமியையும் மாறி மாறிப் பார்த்தான். அவன் பார்வையில் ஏதோ அர்த்தம் துளும்புவதைக் கண்டு அவனை நோக்கி, "என்ன, ஏதாவது விசேஷம் உண்டா?" என்றேன்.

அவன் தயக்கத்தோடு என் அருகில் வந்தான். என் காதோடு ஒரு வார்த்தை சொன்னான்:

"ஸ்வாமி, இனி மறுபடியும் சிலை செய்யமுடியாது. பிரதிஷ்டை நாள் நாளைக்குத்தான். இந்தச் சிலையை ஒன்றுக்கு விடலாம்" என்றான். எப்படியோ அந்த ரகசிய வாசகம் முனிசாமியின் காதில் விழுந்துவிட்டது. பாம்புபோல் சீறி எழுந்தான் முனிசாமி.

"அடே, என்னிடம் தொழில் பயின்ற நீ, இந்த மகா பாதகமான ஒட்டு வேலையை யாரிடம் கற்றாய்? சீ! உனக்குள்ள திறமை இதுதானா? பின்னப்பட்ட சிலையை ஒட்டிவிட்டால் தெய்வ சாந்நித்தியம் எப்படியடா உண்டாகும்? அறிவில்லாதவனே! என் தொழிலுக்கே பெரிய அபக்கியாதி உண்டாக்கிவிடுவாயே! சிற்பக் கலையின் உயர்ந்த லக்ஷ்யம் என்னவென்றே அறியாத உன்னை என்ன செய்வது? மகா பாவமான காரியத்திற்கு மனம் துணிந்து விட்டாயே! இன்றுமுதல் நீ என்னிடம் தொழில் பழக முடியாது. போய்வா! இனி இவ்வித வார்த்தைகளைச் சொன்னால் பாவத்தைத் தேடிக் கொண்டவனாவாய்" என்று கூறிவிட்டு எழுந்து நின்று எங்கோ பார்த்தான்.

துர்க்கையின் சிலை பின்னப்பட்டதைப் பார்த்துக்கொண்டே பதற்றத்தோடு உட்கார்ந்திருந்தேன் நான். அப்போதே முனிசாமி இடுகிய கண்களுடன் பெருமூச்சு விட்டு ஒரு குழியிலிருந்து இரு சிலைகளைப் பெயர்த்து எடுத்தான். திடுக்கிட்டுப் பார்த்தேன். அழகிய இரு பெண் பிரதிமைகள் அவை. உற்றுப் பார்த்தேன். இரு சிலைகளும் பின்னப்பட்வில்லை. முழு உருவத்துடன் விளங்கின. ஆனால், துர்க்கையின் சாயல் அந்த இரு சிலைகளிலும் சிறிதும் இல்லை. ஒரே சாயலும் அழகும் கொண்ட இரண்டு பிரதிமைகள் அவை. யார் வடிவத்தையோ பார்த்து அமைத்தது போலத் தோற்றியது. சிற்பி முனிசாமியின் முகத்தைப் பார்த்தேன்.

"என்ன பார்க்கிறீர்கள்? இவை துர்க்கையின் சிலைகள் என்று தெரியவில்லையா?" என்றான்.

"இல்லை, சிம்மவாகனத்தைக் கொண்டுதான் இவற்றைத் துர்க்கையின் சிலைகள் என்று சொல்லவேண்டும். முகத்தில் யாரோ மானிடப் பெண்ணின் சாயல்தான் தெரிகிறது; யாரையோ பார்த்து..." என்று பேச்சை நிறுத்தினேன்.

முனிசாமியின் கண்களில் நீர் சுரந்தது.

"ஸ்வாமி, உண்மையைச் சொல்கிறேன்: இந்த இருசிலைகளின் சாயலும் என் மனைவியினுடையது!"

"உன்னுடைய இறந்த மனைவியின் சாயலா?"

"ஆம், ஸ்வாமி, என் மனைவி மரித்ததுமுதல் எனக்குப் பெண் பிரதிமை செய்வதென்றால் முடிவதில்லை; முடியும். ஆனால், என் மனைவியின் முகச் சாயல், நான் அடிக்கும் சிலைக்கு அமைந்து விடுகிறது. என்னதான் முயன்றும், அவளை மறக்க முடியவில்லை. அவள் முகம் என் அகக்கண்ணை விட்டு மறையவில்லை. நான் அமைக்கும் எந்தப் பெண் பிரதிமைக்கும் என் மனைவியின் முகச்சாயல் அமைந்துவிடுகிறது. மாறவில்லை; அமைந்த சாயலை மாற்ற என் மனம் விரும்பவில்லை. துர்க்கையின் சிலையிலும் அப்படியே ஆகிவிட்டது. பாருங்கள்: இந்த இரண்டு சிலைகளிலும் ஒரே சாயல்" என்று அந்த இரு சிலைகளையும் தொட்டபடியே கண்ணீர் வடித்தான். எனக்கு உண்மை புலப்பட்டது.

கலைத்திறமை நிறைந்த முனிசாமிக்கு நேர்ந்த கதியைக் கண்டு கலங்கினேன்.

"ஆனால், பின்னமாய்ப் போன இந்தத் துர்க்கையின் முகம் மட்டில் மாறியிருக்கிறதே?"

"இராப்பகலாகப் பதினைந்து நாட்கள் முயன்று பாடுபட்டு முகபாவத்தை மாற்றினேன். மாற்றியதற்குப் பலன், பின்னப்பட்டுவிட்டது. இனி நான் தொழிலையே விட்டுவிட்டேன். நான் இனி என்னதான் செய்வது?" என்று தழுதழுத்த குரலோடு பேசிவிட்டு அங்கே வரும் இருவரைப் பார்த்தான்.

முதல் நாள் நிர்த்தாக்ஷிண்யமாகப் பேசிச் சென்ற பிரபு வந்து கொண்டிருந்தார். கைத்தடியைச் சுழற்றிக்கொண்டு மிக வேகத்துடன் வந்தார். அவரைக் கண்டதும் எனக்குத் திகில் மேலிட்டது. என்ன சொல்வாரோ என்று கவலைப்பட்டேன். பிரபு அருகில் வந்துவிட்டார். முனிசாமி எழுந்து நின்றான். நான் ஒருபுறமாகத் தென்னைமரத்தில் சாய்ந்துகொண்டிருந்தேன்.

"என்ன முனிசாமி? இந்த விக்கிரகங்களெல்லாம் என்ன? அட பாவமே! இது என்ன துண்டாகிக் கிடக்கிறது, துர்க்கை!" என்று கேட்டுக்கொண்டே பிரபு முனிசாமியைப் பார்த்தார். பின்னப்பட்டுக் கிடக்கும் சிலையையும் அடுத்தாற்போல் நிற்கும் இரு பிரதிமைகளையும் கண்டார். கோபத்தோடு சிற்பியைப் பார்த்தார்.

"ஐயோ! இந்தச் சிலைகள் இரண்டும் துர்க்கையல்ல; பிரதிஷ்டைக்கு ஏற்றதல்ல; பதினைந்து நாட்களாகப் பாடுபட்டு உருவாக்கிய சிலை இதோ பின்னமாகிவிட்டது. இதுவும் பிரதிஷ்டைக்கு ஏற்றவை அல்ல. இனி என்னால் உளி எடுத்துச் சிலைசெய்ய முடியாது. எனக்கு ஆண்டவன் விடுதலை அளித்துவிட்டார்"

என்று கூறிக்கொண்டே வெறிபிடித்தவன்போல் பார்த்தான். அவன் கண் வெறிச்சென்றிருந்தது.

'ஏன் இவன் இப்படிப் பேசுகிறான்?' என்று திடுக்கிட்டேன்.

மறுகணமே முனிசாமி நிலத்தில் குனிந்து சுத்தியை எடுத்தான். மிக வேகமாக அந்தச் சுத்தியால் இரு பிரதிமைகளின் தலையிலும் 'டங், டங்' என்று அடித்தான். பிரதிமைகளின் தலை சிதறியது. அவற்றின் சாயல் மறைந்தது. என் உடல் பதறியது.

மறுகணமே, அவன் கைச்சுத்தி அவன் தலையில் மோதியது. 'ஆ!' என்ற கூக்குரலோடு நிலத்தில் பொத்தென்று விழுந்தான். அவன் ஆன்மா விடுதலை பெற்றது.

என் தலை சுற்றியது. கண்களில் நீர் சுரக்க, மனம் பதற நின்றேன். ஆனால் அந்தப் பிரபு நடுங்கிக்கொண்டே பின்னே நடந்தார்; ஓடியே போய்விட்டார் தோப்பை விட்டு.

மனைவியின் சாயலிலே ஒன்றாகிவிட்டான் சிற்பி முனிசாமி. அவள் காரணமாக அந்தச் சிற்பி, தன் உயிரையே தியாகம் செய்தான். ஆம்! அவன் முடிவு தியாகமேதான்; அதற்குக் காரணமும் அவன் மனைவியேதான்.

* * * *

மறுநாள் பிரேத விசாரணை நடக்கப் போவதை அறிந்தேன். உடனே தோப்பில் இருந்த என் அறையைக் காலி செய்துவிட்டு அன்று இரவே வேறு இடம் போய்விட்டேன். ஆனால் அந்தச் சிற்பி உயிரைத் தியாகம் செய்த கோரக் காட்சி இப்போதும் என் மனத்தை விட்டு அகலவில்லை. சிற்பியின் தியாகத்தை நினைப்பூட்ட, இன்றும் அந்தத் தோப்பில் பின்னம் அடைந்த சிலைகள் மண்ணில் புதைந்து கிடக்கின்றன.

கே. வைத்தியநாதன்

சோப்புக்காரி 65

1

ராமசந்திரன் ஆபீஸிலிருந்து அன்று சீக்கிரமாகவே வீடு திரும்பினான். தலைமைக் குமாஸ்தா லீவானதால் அவ்வாறு ஐந்து மணிக்கெல்லாம் அவன் வீடு திரும்ப முடிந்தது. இன்றுவது ஹோட்டல் கணக்கில் பற்றுவழி இல்லாதிருக்கட்டும் என்ற எண்ணத்தோடு அந்தப் பக்கம் பார்வையைக்கூடச் செலுத்தாமல் நடந்தான். வீட்டில் ராதையின் இரண்டாம் வேளைக் காபியில் எப்படியும் ஒரு பங்கு கிடைக்கும் என்ற ஆசையின் வேகம் அவனைத் தள்ளிக்கொண்டு வந்தது.

வீட்டுத் திண்ணையில் ராதை குனிந்தபடியே சில சோப்புத் துணுக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அருகில் பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டு ஒரு மடந்தை குந்தியிருந்தாள். அவள் தலையின்மீது கோலியிருந்த சும்மாடு அப்படியே இருந்தது.

"இந்தச் சோப்பு என்ன விலை?" என்று ஒரு கட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு கேட்டாள் ராதை. "அது உன் தலை விலை!" என்று அவள் திடுக்கிடும் வண்ணம் யாரோ பதில் அளித்தது கேட்டுத் தலைநிமிர்ந்தாள்.

குடையுடன் 'விர்'ரென்று உள்ளே நுழைந்தான் ராமு. சோப்புக்காரி சட்டென்று எழுந்து மரியாதையாக ஒருபுறத்தில் ஒதுங்கி நின்றாள்.

"ஆ! நீங்க வந்துட்டீங்களா? இன்னிக்குச் சுருக்க வந்துடுவிங்கன்னு அப்பவே எனக்குத் தெரியும்.....!" என்று சோப்பை எடுத்துக்கொண்டு ராமு பின்னால் உள்ளே நுழைந்தாள்.

"என்னமாத் தெரியும்?"

"நான் ஒரு நாளும் இல்லாது இன்னிக்கி வியாபாரம் செய்யப் போனேனே இல்லியோ!"

"போதும். உன் வாயை மூடு!"

ராதை உடனே வெளியில் வந்து, "இந்தாடி அம்மா, உன் சோப்பு!" என்று கொடுத்துவிட்டுத் திரும்பினாள். அப்போது அந்தச் சோப்புக்காரி என்னவோ சொல்ல வாயெடுத்தாள். ஆனால் ராதை தன் ஆத்திரத்தில் எதையும் கவனிக்கவில்லை.

உள்ளே சென்றவள் காபியுடன் திரும்பினாள். ராமுவுக்கு எதிரே இருந்த மேஜைமீது வைத்துவிட்டு ஒருபுறமாக ஒதுங்கி நின்றாள். அவள் உள்ளத்தில் துயரம், கோபம் எல்லாம் ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொண்டிருந்தன. முகத்திலே அந்தப் போராட்டத்தின் எதிரொலி தோன்றுமல் இல்லை. எனினும் வாய் திறவாது மௌனமாய் நின்றாள்.

ராமு காபியைக் கவனித்தான். என்றும் இல்லாத வாசனை பரிமளித்தது. பருகியபோது ருசி ஹோட்டல் காபியைவிட எவ்வளவோ அதிகமாக இருந்தது. அவன் கோபமெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மலையேறிக் கொண்டிருந்தது.

"உம்! அந்தச் சோப்பு வேணுமென்று என்னிடம் சொல்லியிருந்தால் நான் வாங்கி வந்திருக்க மாட்டேனா?" என்றான், சமாதானத்தைக் கோருபவன்போல.

"போரும்! என்னவோ சுதந்தரம், இதந்தரம் என்றெல்லாம் பிரமாதமாப் பேச மாத்திரம் தெரியும். எனக்குச் சுயமாக ஒரு சோப்பு வாங்கக்கூட அதிகாரம் கிடையாது!" என்றாள் ராதை, கண்ணீர் சிந்திய வண்ணம்.

அவன் மனம் இளகிவிட்டது. "அடி அசடே! உனக்கு இதெல்லாம் வாங்கத் தெரியுமா? கடையிலேன்ன பல ரகங்கள்

இருக்கும். உயர்ந்த ரகமாப் பாத்து விலையும் மலிவா வாங்கலாமே. இப்படி வீதியிலே வர்ரதெல்லாம் மட்ட சோப்பு களாகத் தானே இருக்கும்? விலையும் ஒண்ணுக்கு நாலு சொல்லுவாள்; இல்லியா?"

அவள் பதில் கூறவில்லை. கோபமெல்லாம் போய்ச் சோகம் மட்டும் அவள் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

மீண்டும் அவன், "உனக்கு என்ன மாதிரி சோப்பு வேணு மென்று சொல்லு. இதோ கடைத் தெருப்பக்கம் போகிறேன். அப்படியே வாங்கி வருகிறேன்."

அதற்கும் பதில் இல்லை. தலைகுனிந்தபடியே அவள் நின்றிருந் தாள். இரண்டொரு நீர்த்துளிகள் விழிகளில் ஊசலாடிக் கொண் டிருந்தன.

ராமு எழுந்து அவளருகே வந்தான். "ராதே, அது என்ன சோப்பென்று சொல்ல மாட்டாயா?" என்றுன் அன்பும் கனிவும் தோன்ற.

"எனக்கு ஒரு சோப்பும் வேண்டாம்!" என்ற இனிமையற்ற பதில் வந்தது. அது அவன் உள்ளத்திற்கு வேதனையைத் தந்தது.

அச்சமயம் தெருவாயிற்படியில் யாரோ நிற்பதுபோல் தோன்றியது. "யார் அது?" என்று கேட்டபடி வெளியில் வந்தான். அந்தச் சோப்புக்காரி அப்படியே நின்றிருந்தாள்.

"எங்கே, இந்த வீட்டம்மா பார்த்த சோப்பை எடு" என்றுன்.

அவள் பெட்டியைத் திறந்து அதை வெளியில் எடுத்து வைத்தாள். அப்போது, "ஏண்டி! நீ இன்னும் போகாமெ நிக்கிறே?" என்று கடிந்துகொண்டே ராதை வெளியில் வந்தாள்.

"அவள் கெடக்கிறுள். இது என்ன விலை? சொல்லு....." என்றுன் ராமு.

"சாமீ! நான் வெளியிலே அஞ்சு அணுன்னுதான் விக்கிறே னுங்க. நீங்க கொடுத்ததை வாங்கிக்கிறேன்."

"ஏன், எனக்கு மாத்திரம் இந்தச் சலுகை?" என்றுன் ராமு.

அவள் ஏதோ பதில் கூற வந்தாள். ஆனுல் அதற்குள் அவள் தொண்டை கம்மியது. அது கண்ட அவன் அவள் முகத்தை நோக்கினுன். அவள் விழிகளில் நீர் சுரந்து பெருகிற்று. அவன் கவனிப்பதைக் கண்ட அவள் சட்டென்று தன் முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டாள்.

அவன் திகைத்து நின்றுன். அவள் உணர்ச்சியின் போக்கையோ, காரணத்தையோ அவனுல் அறிந்து கொள்ள முடியவில்லை.

"சாமீ! ஏதோ நீங்க கொடுத்தது பாக்கியம்" என்றுள், மீண்டும் தன்னே ஒருவாறு சமாளித்துக்கொண்டு.

அவள் பேச்சும் தோற்றமும் அவனுக்கு இரக்கத்தை உண்டாக்கின. ஆனால் அதன் காரணத்தை அறிய அவன் முயல வில்லை. அவள் ஒரு சோப்புக்காரி, நாடோடி! தான் ஓர் உத்தியோகஸ்தன், சர்க்கார் வேலையில் உள்ளவன்: இந்த எண்ணம் அவனை மேற்கொண்ட பேச்சுக்கு இடமில்லாமற் செய்துவிட்டது.

விலையை அதிகம் குறைக்க அவனுக்கு இஷ்டம் இல்லை. தன் மணிபர்ஸைத் திறந்து நாலு அணா எடுத்துக் கொடுத்துவிட்டுச் சோப்புடன் உள்ளே நுழைந்தான்.

"ஆகா! சமத்துத்தான்! மூணு அணாவுக்கு விலை தீத்ததை நாலு அணாவுக்கு வாங்கியாச்சோ இல்லையோ!" என்றாள் ராதை.

"போடீ! அவளை ஒரேயடியா நஷ்டப்படுத்தறதா என்ன? அதோடு பாவம்! அவள் ஏதோ எண்ணிண்டு வந்திருக்கப்படாது."

"அப்படியெல்லாம் வேஷம் போட்டாத்தானே உங்களண்டே பிழைக்கலாம்? அந்தமாதிரி அவள் பாசாங்கு பண்ணட்டா நீங்க ஒரு அணாக் கூடக் கொடுப்பியளோ!"

"என்னவோ, போ; கொடுத்தாச்சு, வாங்கியாச்சு. கடையிலே வாங்கலாமென்றால் நீ கேட்டையோ? கொஞ்சம் முன்னே, அடி அம்மா! நீ பேசாமடந்தையாண்ணு போயிட்டே!"

ராதை சமையல் அலுவல்களைக் கவனிக்க உள்ளே சென்றாள். ராமு கடைவீதிப் பக்கம் வேடிக்கையாகப் போய்வரப் புறப் பட்டான்.

2

இரவு எட்டு மணிக்கு ராமு வீட்டை அணுகியபோது அந்தச் சோப்புக்காரி திண்ணையின் ஒரு கோடியில் தன் பெட்டியுடன் உட்கார்ந்திருந்தாள். வாயிற்படி ஓரமாக அமர்ந்தவண்ணம் ராதை அவளுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

கணவனைக் கண்டதும் அவள் எழுந்து உள்ளே சென்றாள். கோட் ஸ்டாண்டில் ஷர்ட்டைக் கழற்றி மாட்டிவிட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம், "ஏது, அந்தச் சோப்புக்காரி நம் வீட்டை விட்டுப் போகமாட்டாள் போலிருக்கிறதே" என்றான்.

"அவள் ரொம்ப நல்லவள். பாருங்க! நீங்க ஆபீஸிலிருந்து வந்தபோது நான் ஒரு சோப்பை விலை தீர்த்து எட்டணாப் பணம் கொடுத்துப் பாக்கிச் சில்லறை வாங்கப் போனவள், வாசனை அவ்வளவு நல்லதாயில்லாததால் வேறொரு சோப்பை எடுத்து விலை தீர்த்தேன். நீங்க கோவிச்சுண்டதே நான் சோப்பைக் கொடுத்துட்டு, பணத்தை வாங்க மறந்து போய் உள்ளே வந்துட்டேன். நான் சோப்பைக் கொடுத்தபோது பணத்தை வாங்கிண்டு போங்க என்று அவள் சொல்ல வந்ததைக்கூட நான் கவனிக்கவில்லை. அதுக்காகவே அவள் வெகு நேரம் நின்றிருக்

கிறுள். பிறகு நீங்க சோப்பு வாங்கினபோது அதைத் தெரிவிச்சால் என்னைக் கோபிப்பீர்கள் என்று அவள் பேசாமல் இருந்து விட்டாள். நீங்க வெளியிலே போனப்புறம் அவள் மறுபடியும் வந்து அந்த அரை ரூபாயையும் கொடுத்துட்டு, ராத்திரிப் போதுக்குத் திண்ணையிலே படுத்துக் கொள்ளணும் என்றுள். நான் சோப்புக்கு ஒரு அணைக் கூட வாங்கிண்டு போயிட்டியே என்றேன். உடனே அதையும் கொடுத்து விட்டாள்."

"நிஜந்தானு?"

"ஆமாம். பாவம்! ரொம்ப நல்லவள். இப்போதான் அவள் குடும்பக் கதையைக் கொஞ்சம் ஆரம்பிச்சாள். அதுக்குள்ளே நீங்க வந்துட்டேள். அவள் சொந்த ஊரிலே யிருந்து கடுதாசி வந்திருக்காம். அதை என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னுள். அது ஒரே கிறுக்கெழுத்தா யிருந்தது. எனக்குச் சரியாப் புரியல்லை. நீங்க அதைக் கொஞ்சம் வாசிச்சுக் காட்டுங்கோ" என்றுள்.

"உனக்கு என்ன வேலை? வழியோடே போகிற சோப்புக் காரியை யெல்லாம் இழுத்து வச்சுண்டு வம்பு பண்ணறே."

"ஐயோ! அப்படிச் சொல்லாதீங்கோ! அவள் கதையைக் கேட்டால் கல்லும் கரையுமே."

ராமு வெளியில் காற்றுக்காகச் சாய்வு நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். மிருதுவான தென்றற் காற்று வீசிக்கொண்டிருந்தது. பிறைச்சந்திரன் ஒளியில் போது மான ஜிலுஜிலுப்புப் படிந்திருந்தது.

ராதை, "இந்தா அம்மா, அந்தக் கடிதத்தை இப்படிக் கொடு. அவுங்க வாசித்துக் காட்டுவாங்க" என்றுள்.

அந்தச் சோப்புக்காரி தன் பெட்டியைத் திறந்து கடிதத்தை எடுத்து வந்து மிகப் பணிவோடு ராமுவிடம் நீட்டினுள். ராதை விளக்கைத் திண்ணையோரத்தில் வைத்துப் போதுமான வெளிச்சம் உண்டாக்கினுள். ராமு படிக்கலானுன்:

'மீனுட்சியம்மாளுக்கு பனங்காடு வையாபுரி முதலியார் எழுதி யது. உபய க்ஷேமம். நீ அனுப்பிய மணி ஆர்டர் 10 ரூபாயும் வந்து சேர்ந்தது. அதில் நீ எழுதியிருந்தபடி கடைக்கு ரூ. 3ம் வீட்டு வாடகை ரூ. 1-8-0ம் கொடுத்துவிட்டுப் பாக்கியை உன் மகளிடம் கொடுத்திருக்கிறேன். சுலோசனுவுக்கு என்னுல் முடிந்தவரையில் ஆறுதல் சொல்லி வருகிறேன். இருந்தாலும் அவள் துன்பம் என்ன சாமான்ய மானதா? இரவெல்லாம் அழுது புலம்பி முகமெல்லாம் வீங்கிப்போகிறது. இராக்காலத்தில் துணைக்குச் சீதம்மாளை அனுப்பி வருகிறேன். தம்பி பள்ளிக்கூடம் போய் வருகிறுன். நீ எதற்கும் கவலைப்படவேண்டாம். சுலோசனுவுக்கு நானும் சீதம்மாளும் தேறுதல் கூறிவருகிறோம். காளடைவில் அவள் மனம் சாந்தமடையும். வேறு விசேஷம் இல்லை.'

"உன் மகள் பேர் சுலோசனாவா?" என்றான் ராமு.

"ஆமாம் சாமி, அவள் என் பொண்ணுதானுங்க. என்னமோ அவள் தலையெழுத்து இப்படி ஆச்சுங்க; ராஜாவாட்டமா அவர் இருந்துட்டா நான் ஏன் இப்படி பொட்டி தூக்கி அலையணுங்க! ஐயா! அவரைப் பாத்தா ஒங்களாட்டமே இருக்குமுங்க. ஒங்களைப் பாத்ததும் அதான் சாமி என் கண் கலங்கிச்சு."

"அந்தப் பையனுக்கு என்ன சிக்கு?"

"ஐயோ, சாமி! ஏதாவது ஒரு நோவு நொடின்னு சொத்தா லும் மனசு கொஞ்சம் ஆறுங்களே! அவரு சாவு அப்படியே மழுவைக் காச்சில்ல எங்க ரெண்டுபேரு நெஞ்சிலியும் வச்சுப்பிடுச் சுங்க. கல்யாணம் ஆகி முழுசா மூணுமாசங்கூட ஆவலீங்க. நான் போய் நல்ல நாள் பாத்து மவளை அழைச்சுக்கிட்டு ஊருக்கு வந்தேன். அவரையும் அப்பவே கூப்பிட்டேன். வேலை கொஞ்சம் இருக்கு, பாத்துக்கிட்டுப் பத்துநாள் கழிச்சு வரேன்னு சொன்னாரு. நாங்க ஊருக்கு வந்த மறுநாளே அவரு திடுதிப் புன்னு வந்தாரு. எனக்கு ஆச்சரியமா இருந்துச்சு. ஏதோ முக்கியமான வேலை இருக்குன்னீங்களே என்று என் மவள் கேட்டாள்.

'ஆமாம். ஆனாலும் உன்னைப் பாத்துட்டுப் போவோ முன்னு வந்தேன்' என்றார். அவருக்கு என் மகள் மேலே அத்தனை உசிரு. என் மகளும் லக்ஷ்மணமா, ஒணசலா, சேப்பா, நல்லா யிருப்பா. அன்னிக்கிச் சாயந்தரமே ஊருக்குப் புறப்பட்டாரு. நான் பாவிச் சிறுக்கி, போக வேண்டாமுன்னு நல்லாச் சொல் லலே! என்னமோ காரியம் இருக்குண்ணாரே, அது நம்மாலே கெட்டுப் பொயிட்டுதுன்னு என்ன பண்றதுன்னுட்டுப் பேசாமெ இருந்துட்டேன்.

"சாமி, என்ன அநியாயத்தைச் சொல்லுவேன்! அவரு ஊருக் குப் போய் ராத்திரி சாப்பிட்டுப் படுத்தவருதான்; பொழுது வீடிஞ்சு பாத்தாப் பொணமாக் கெடக்கிறாருங்க! அடுத்த வீட்டுக் காரப்பயலோடே ஏதோ மனஸ்தாபம் உண்டு. ஒரு தென்னை மரத் தகராறுதானுங்க. அந்தப்பயல், விடிய ஜாமம் இருக்கும், அவர் தெருவுக்கு வந்த சமயம் பாத்து ஓரே குத்தாக் குத்திப் போட்டுட்டானுங்க.

"அப்பறம் சேதி வந்தால் நாங்க ரெண்டுபேரும் பட்ட பாடு! அந்தப் பகவானுக்குக் கண் இல்லீங்களே!"

கண்ணீர் சிந்தினாள். பிறகு மீண்டும் தொடங்கினாள்.

"அப்புறம் போலீசு வந்துச்சுங்க. அவனைத் தேடிப் புடிச்சுக் கேஸ் நடந்துச்சுங்க. அவனைச் சேர்ந்தவுங்களெல்லாம் வந்து என் பொண் பேருக்கு ரெண்டு காணி நெலம் எழுதி வச்சுப்பிடுற தாகவும், கேசை நடத்த வீடாமெ ராசியாப் போறதுன்னும் பேச வந்தாங்க. நானும் என் மவளும் ஒரேயடியா அந்தக் கொலை

காரப்பய சொத்து என்னத்துக்குன்னு சொல்லிப்பிட்டேனுங்க. கடைசியிலே கேசு சரியா ருசுவாவுலேன்னு அவனே ரெண்டு வருசம் தண்டிச்சுட்டாங்களாம்."

"இப்போ அந்தப் பொண்ணு தனியேதான் இருக்காளோ? வேறு துணை ஒருத்தரும் இல்லியோ?" என்ருன் ராமு, அனுதாபத்தோடு.

"எங்களுக்குத் துணை ஏது சாமி? அந்த மதுரை மீனாட்சி தான் துணைங்க. அவளே நம்பித்தான் என் மவளையும், ஒரு பையன் ஏழு வயசாவுது, அவனையும் விட்டுட்டு, இப்படி நான் புறப்பட்டுட்டேன்."

"உனக்கு வேறு ஜீவனம் பண்ண நிலபுலம்..."

"அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க. அந்தப் புள்ளைக்கு மாசம் ரூ. 25 சம்பளம் வந்துக்கிட்டு இருந்துச்சுங்க. அது போராதான்னுட்டுத்தான் பொண்ணைக் கொடுத்தேனுங்க. இப்போ என்னெடு அதுபாடும் அவஸ்தையாப் போயிட்டுதுங்க. ஊர்லே சும்மா யிருந்தா வயத்துப்பாடு ஒண்ணு இருக்குங்களே; அதனுலே இப்படினுலும் பொழைக்கலாமுன்னு பொறப்பட்டேனுங்க. இப்படிப் பல ஊரும் சுத்தினு அந்தப் பேரிடியைக் கொஞ்சம் மறந்திருக்கலாங்கள்ள!"

அவள் கதை உருக்கமா யிருந்தது. அவன் மனம் பெரிதும் நெகிழ்ந்துவிட்டது. தன்னுல் அவளுக்கு ஏதேனும் உதவி செய்யக் கூடுமோ என்று எண்ணலானுன். உள்ளே வந்தான். கதவு மறைவில் இதுவரை நின்றிருந்த ராதை அவனைப் பின்தொடர்ந்தாள்.

"ராதே, அவள் சொன்ன கதையை நீயும் கேட்டாயா?" என்ருன்.

"ஆமாம். எவ்வளவு பரிதாபமாயிருக்கு!" என்ருள் ராதை.

"ஒரு வேளை உணவாவது நாம் அவளுக்குப் போடலாம் அல்லவா?"

"சரிதான், அவளுக்குப் படுக்க இடங் கொடுத்திருப்பது போராதா? சாப்பாடு வேறு போடச் சொல்றீங்க!" என்ருள்.

"பாவம்! அவளுக்கு உணவளித்தால் தெய்வம் நமக்குத் துணை செய்யும்."

"எப்படியாவது போங்கள்; அவளை இங்கே தங்கவிட்டதே தப்பு!"

இப்படி அவள் தர்க்கம் பேசினுலும் முடிவில் உணவளிக்க அவள் தயங்கவில்லை. ஆனுல் அந்தச் சோப்புக்காரி ஒரே பிடிவாதமாக உண்ண மறுத்துவிட்டாள்.

"சாமி, என் உடம்பில் தெம்பிருக்கிறமட்டும் நான் உழைச்சுச் சாப்பிடுவேனே தவிர, ஒருத்தர் உபசாரத்துக்காக நான் சாப்பிடுகிறதில்லீங்க. அதுவுமில்லாமே, இந்த ஊருக்கு வர்ர வழியிலே

ஆத்தங்கரையிலேதானுங்க சாப்பிட்டு வந்தேன். அதனுலே எனக்கு இப்போ பசியே இல்லீங்க. ஒரு நாளைக்கு ஒரு வேளைதானுங்க சாப்பிடுவேன். எப்படியோ என் காலத்தைப் போக்கிட்டு வர்ரேனுங்க."

அதற்கு மேல் ராதைக்கு வற்புறுத்த மனம் இல்லை. "சோப்பு விக்கிறவளுக்கு ராங்கியைப் பாரு!" என்று முனகிக்கொண்டே உள்ளே போனுள்.

ராமசந்திரனே "வறுமையிலும் செம்மை!" என்று வியந்தான்.

ராமு உண்டு வெளியே வந்தபோது அந்தச் சோப்புக்காரி படுத்திருந்தாள். பெட்டி தலைக்கு உயரமாயிருந்தது.

அவன் குமாரியின் இடிந்த வாழ்க்கை வரலாறு அவன் உள்ளத்தில் அப்படியே பதிந்து போயிருந்தது. "பாவம்! இளம் பெண்களுக்கு (விதவைகளுக்கு) விமோசனம் இல்லாத நாடு!" என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

3

பக்கத்தில் உள்ள பொன்னேரியில் பெரிய திருவிழா. ராமு மட்டும் போயிருந்தான். ஏதோ அசந்தர்ப்பத்தினுல் அவன் மனைவி போகவில்லை.

திருவிழாவுக்குக் கூட்டம் அதிகம். சில்லறைக் கடைகள் ஏராளமாக வந்திருந்தன. எல்லாம் கோவிலை ஒட்டிய மைதானத்திலே பத்தி பத்தியாக அமைக்கப்பட்டிருந்தன.

ராமு அந்தப் பக்கம் வந்தபோது, திடீரென்று அவன் பார்வை ஒரு மணிக்கடை மீது விழுந்தது. அங்கே கூட்டமும் அவ்வளவாக இல்லாததால் அதன் எதிரே நின்ருன். அந்தக் கடைக்காரியும் அவனைக் கவனித்தாள்.

"ஐயா! வாங்க வாங்க! இப்படி உள்ளே வந்து பலகைமீது குந்துங்க!" என்று உபசரித்தாள். ராமு, "பரவாயில்லை" என்று புன்முறுவலோடு கூறிவிட்டு அவள் க்ஷேமலாபங்களை விசாரிக்க லானுன். அப்போது அங்கே வந்த இளமங்கையொருத்தி, "அம்மா, இதோ தண்ணி கொண்டுவந்து விட்டேன். சாப்பிட எழுந்திரு" என்று சொல்லியவாறே ராமசந்திரனைப் பார்த்துவிட்டு ஒரு புறமாய் மறைந்து நின்ருள்.

பேச்சின் இடையிடையே ராமு அவள் பக்கம் நோக்கினுன். இரண்டொரு தடவை அவள் முகம் வெளியில் தெரிந்தது. வெயிலிற் போடப்பட்ட பூங்கொடிபோல் அவள் வாடிப்போயிருந்தாள். முகம் பகலிற் காணும் சந்திரபிம்பம்போல் இருந்தது. அவள் கண்களில் அன்பும், தூய்மையும் நிறைந்திருந்தன. குரலில் இன்னிசை தவழ்ந்தது.

மீனுட்சி சொன்னுள்: "ஐயா! இதுதானுங்க; இந்தப் பாவி வயித்தில் பொறந்த பொண்ணு! என்னோட அழச்சுக்கிட்டே வந்துட்டேனுங்க."

அவன் நெஞ்சின் ஆழத்திலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிவந்தது.

"நேரமாச்சு. நீ சாப்பிடப்போ அம்மா. நான் ஊருக்குப் போயிட்டு வரேன்" என்றான் ராமு.

"சாமி, இருங்க போகலாம். அம்மா நல்லாயிருக்காங்களா? திருநாள் பார்க்க அழக்சுக்கிட்டு வல்லீங்களா? அம்மாவுக்கு ஏதாவது கொடுங்களேன். சோப்புத் தரட்டுங்களா? ரிப்பன் தரட்டுங்களா?" என்று வினவியபடி அவற்றை எடுக்க எழுந்தாள். அப்போது அம்மெல்லியலாள் ஒரு பஞ்சவர்ண மணிச்சரத்தை எடுத்துத் தன் தாயிடம் கொடுத்து, "அம்மா! இதைக் குடு" என்றாள்.

அந்த மணிச்சரம் உண்மையிலேயே அழகாயிருந்தது. உயர்ந்த குடும்பப் பெண்கள் பலர் அதுபோன்ற மணிமாலைகள் அணிந்திருப்பதை ராமு பார்த்துள்ளான். ஆதலால் அதை வாங்க அவன் தயங்கவில்லை.

"என்ன விலையாறது?" என்று அதைக் கையில் வாங்கினான்.

"விலையா! கொண்டுபோய்க் கொடுங்கள்" என்றாள் சோப்புக்காரி.

"இப்படி நீ வியாபாரம் பண்ணினால், உன் கதி என்னாறது?" என்றான் வியப்போடு.

"சாமி, இதனால் என் குடும்பமா முழுகிப்போயிடப்போறது? என்னமோ ஒருத்தருக்கொருத்தர் அன்புதான் பெரிசு; போங்க" என்றாள் உருக்கமான குரலில்.

அந்தச் சொற்களுக்குப் பதில் அவனால் கூற முடியவில்லை. அதே சமயம் அந்தக் கடைக்குச் சிலர் வியாபாரம் செய்ய வந்தனர். ஆதலால் அவன் விடைபெற்றுக்கொண்டு திரும்பினான். அந்த ரூபவதி அவன்பின்னே சிறிது தூரம் தன் கூரிய விழிகளைச் செலுத்தினாள். அப்போது அவள் தாய், "அம்மா, அந்த டப்பியை எடு. வியாபாரத்தைப் பார்" என்றாள்.

4

இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தன.

ஒரு நாள் இரவு எட்டு மணி இருக்கும். ராமு ஆபீஸிலிருந்து வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தான். வழியில் ஒரு மாது பெட்டியொன்றைத் தலையிற் சுமந்துகொண்டு நிற்பதைக் கண்டு, "யார் அது?" என்றான்.

"ஏன் சாமி, சோப்புக்காரியல்ல?" என்று பதில் வந்தது.

"நீயா? எங்கே இருந்து வர்றே? உன் மகள் எங்கே காணோம்?"

"அது போயிட்டுதுங்க. இன்னியோடே சரியா ரெண்டு மாசம் ஆவுதுங்க" என்றாள் கண்ணீர் பெருக.

"போயிட்டுதா, என்ன? எனக்கு ஒண்ணும் விளங்கல்லியே!"

இதற்குள் இருவரும் வீட்டை அணுகினர். அவள் வீட்டுத் திண்ணையில் பெட்டியை இறக்கி வைத்துவிட்டு, "சாமி, அந்தக் கன்றாவியை என்னன்னு சொல்லட்டுங்க? நீங்க முன்னே ஒரு திரு நாளுக்கு வந்திங்களல்ல? அது முதக்கொண்டே அவளுக்கு உடம்பிலே நல்ல இருப்பே இல்லீங்க. அடிக்கடி நெனைச்சு நெனைச்சுத் துக்கப்பட்டுக்கிட்டே இருந்துச்சுங்க. நாளுக்கு நாள் ஆகாரம் செல்லாமே ஒடுங்கிக்கிட்டே வந்துச்சுங்க. நானும் எவ்வளவோ சொல்லிப் பாத்தேன். அங்கங்கே பழகினவங்களை யெல்லாம் விட்டு அவளுக்கு ஆறுதல் சொல்லச் செய்தேன். ஒண்ணிலும் அது குணப்படலீங்க. கடைசியா நாங்க புதுக்குடிக்குப் போன போது அது படுக்கையிலே விழுந்துடுச்சு. ஒரு சத்திரத்திலே தங்கியிருந்தோம். அது படுக்கையிலே போட்டப்பறம் நான் விக்கப்போறத்தை நிறுத்திவிட்டேனுங்க. ஒரு நாள் விளக்கேத்தும் நேரம் இருக்கும். அது என்னை அருகில் அழைத்து 'அம்மா! இவ்வளவுதான். என் வாழ்க்கை முடியப்போவுது! ....."

சோப்புக்காரி மேலே பேச முடியாமல் கதறினாள். பிறகு மீண்டும், 'என் கண்ணு சொன்னுள்: அம்மா, இதோ இந்தக் கைக்குட்டை யாருடையது தெரியுமா? ஒரு நாள் மணிச்சரம் கொடுத்தனுப்பினேமே, அந்தப் புண்ணியவானுடையது. அவுங்களைக் கண்டால் ஒரு வேளை என் மனசு ஆறும். அது எங்கே நடக்கப் போவுது? இந்தக் கைக்குட்டை இதுவரை அவுங்க முகத்தை எனக்குக் காட்டி வந்துச்சு. இனிமேல் எனக்கு எதுக்கு? இதை அவுங்களிடம் கொண்டுபோய்க் கொடுத்துடு' என்று சொல்லிக் கண்ணை மூடினுள்" என்று கூறியவாறே பெட்டியைத் திறந்து அந்தக் கைக்குட்டையை வெளியில் எடுத்தாள்.

அதை அவன் கையில் வாங்கியபோது அவனையும் அறியாமல் அவன் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன.

அப்போது மீனுட்சி, "சாமி, அம்மா இல்லீங்களா?" என்று கேட்டாள்.

"ஊருக்குப் போயிருக்காள்" என்று அவன் சொல்லியபோது தொண்டை கம்மியது. இப்படி அவன் மனம் பதைத்ததற்குக் காரணம் அவனுலேயே அறியக்கூடவில்லை.

பாணிக்கிரகணம் 66

பாப்பாவும் மணியும் மலைமேலிருந்து ஒற்றையடிப் பாதை வழியாய்த் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். பாதையில் வெளிச்சம் அதிகம் இல்லை. இரவு எட்டரை மணி இருக்கும். உமா என்னும் வங்காள சிநேகிதியின் வீட்டிலிருந்து பாப்பாவும் மணியும் வீட்டிற்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தனர். பாப்பா முன்னால் சென்று கொண்டிருந்தாள். மணியுடன் அவள் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

"பார்த்து மெள்ளப் போ, பாப்பா. வழியில் கல் நிறைய இருக்கு. தடுக்கப் போகிறது" என்றான் மணி.

பாப்பா பதில் சொல்லவில்லை. சற்று வேகமாகச் சென்றாள். மணி அவளைப் பின்தொடர்ந்து, "பாப்பா, என்மேல் கோபமா?" என்று கேட்டான்.

"எனக்கு எதற்குக் கோபம்?" என்று நடந்துகொண்டே பாப்பா பதில் அளித்தாள்.

"பின், ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?"

"இப்போ என்ன பேச்சு வேண்டியிருக்கு? எனக்குச் சீக்கிரம் வீட்டுக்குப் போகவேணும். குழந்தைகள் காத்துக் கொண்டிருப்பார்கள்."

"அப்போ, என்மேல் கோபம்இல்லை என்று சொல்; பார்ப்போம்."

"ஏன்னை எதற்காகச் சொல்லச் சொல்லுகிறீர்கள்? உங்களைக்கோபிப்பதற்கு நான் யார்? பத்து வருஷங்களுக்கு முன், நீங்கள் யாரோ, நான் யாரோ!" என்று சொல்லிக்கொண்டே பாப்பா விரைவாக நடந்தாள்.

மணியின் மனத்தில் ஒரு சிறு கிளர்ச்சி ஏற்பட்டது. அதைப் பொருட்படுத்தக் கூடாது என்று தீர்மானித்து, "என்ன தத்துவம்! பாப்பா, இதோ சற்று என்னைப் பார்த்து அந்தப் பதிலை இன்னும் ஒருதரம் சொல்லு, பார்க்கலாம்" என்றான்.

"ஏன்? உங்களிடம் எனக்குப் பயமென்று எண்ணுகிறீர்களோ?" என்று சொல்லிவிட்டு, திரும்பி மணியை முழுப் பார்வையுடன் பார்த்தாள்.

அதற்குள் ஒற்றையடிப் பாதையைக் கடந்து, சற்று விரிந்து செல்லும் முனிஸிபல் ரோடுக்கு வந்தனர். வானத்தில் இதுகாறும் சந்திரனைச் சூழ்ந்து கொண்டிருந்த கார்மேகங்கள் கடந்து சென்றன. மலைச்சாரலில் ஓங்கி உன்னதமாய் வளர்ந்த தேவதாரு

மரங்கள் ஓர் அரசனின் காவலாட்கள்போல் கம்பீரமாக நின்று கொண்டிருந்தன. ரஸ்தாவில் வேறு ஒருவரும் இல்லை.

மணியும் பாப்பாவைக் கண்ணுரப் பார்த்தான். நிலவு அத்தனையும் அவள்மேல் பரவி அவளைப் பிரகாசப்படுத்திற்று. அவள் பசுஞ் சோளத்தின் நிறமுடையவள். அவள் உடுத்திய பட்டாடை ஆரஞ்சு நிறம். அதனுடைய பச்சைக் கரை பாப்பாவின் மேனி யழகிற்கு ஓர் எல்லை கிழித்ததுபோல் இருந்தது.

"முகத்தைப் பார்த்தால் கோபம் என்று தெரிகிறதே!" என்ருன் மணி.

அழகு வாய்ந்த முகம். காதுகளில் பளிச்சென்ற கமலங்கள். மூக்கில் வலது புறம் வைர 'க்ளாவர்'. இடது புறம் சௌந்தரி யத்தைத் திரட்டி வைத்தாற்போல் மூக்குக் குத்தின வடு. கண்ணுடி அணிந்த கண்கள். நெற்றியில் செக்கச் செவேலென்ற திலகம்.

பாப்பாவின் முகச் சாயையில் கோபமா தென்பட்டது? இல்லை. அவளுடைய வாயைக் கிண்டுவதற்கு, "உனக்கு என்மீது கோபமா?" என்ற பீடிகையுடன்தான் மணி சமாதானப் பேச்சை ஆரம்பிப்பது வழக்கம். கோபச் சின்னம் பாப்பாவின் முகத்தில் இல்லை; ஆனல் சாந்தமும் இல்லை. இருளும்இல்லை; ஒளியும்இல்லை. வாழ்க்கையில் ஒருவிதமான சலிப்பும் ஆயாசமும் அடைந்த தோற்றம் உடையவளாகத் தென்பட்டாள்.

"மறுபடியும் சொல்லுகிறேன்: எனக்குக் கோபம் இல்லை. உங்களுக்குத் தான் கிருஷ்ணவதாரம் என்ற எண்ணம் போலிருக்கு" என்று போய்க்கொண்டே பதில் அளித்தாள்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? நான் இன்று என்ன தவறு செய்தேன்?" என்று பாப்பாவை நெருங்கிக் கேட்டான்.

"யோசித்துப் பாருங்கள், தெரியும். 'டால் ஸேம்' (ஹிந்துஸ்தானி பகூணம்) கொடுக்கும்போது உமா எதற்காக உங்கள் கையைப் பிடித்துக்கொண்டு கொடுக்கவேணும்? அயலார் வீட்டுப் பெண்ணினிடம் அவ்வளவு பழக்கம் வைத்துக்கொள்ள லாமா?"

"இதுதானு பிரமாதம்! கொடுக்கும்போது கை பட்டு விட்டது என்று எண்ணிக்கொள்ளேன். இதெல்லாம் குற்ற மாகுமா?"

"ஏன் ஆகாது? எனக்குக் கொடுத்தாளே; கையைப் பிடித்துக்கொண்டா கொடுத்தாள்?"

"இதோ பார், பாப்பா. வீணுக மனசைப் புண்படுத்திக் கொள்ளாதே. உமாவைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது."

"தெரியவேண்டாம். உங்கள் ஒருவருக்குத் தெரிந்திருப்பதே போதும்."

"அவள் வெகுளி. கூடப் பிறந்தவர்கள் இல்லை. செல்வமாக வளர்ந்தவள். தமையன் என்று என்னைப் பாவிக்கிறாள்."

"அதனால்தான் உங்களைக் 'கண்மணி' என்று அழைத்தாளாக்கும்!"

"பாப்பா, இவ்வளவு அழகும் சமர்த்தும் கொடுத்த ஈசுவரன் உனக்கு ஏன் ஹாஸ்ய ரஸம் அளிக்கவில்லை? கண்மணி என்று ஏன் என்னை அழைத்தாள் தெரியுமா? முதலில் என்னை அறிந்தவுடன் என் பெயரைக் கேட்டாள். 'மணி' என்றேன். 'இவ்வளவு தானா? மதராஸிகளின் பெயர் நாலு முழம் இருக்குமே. உன்னுடைய பெயர் மாத்திரம் ஏன் இவ்வளவு சிறியதாயிருக்கு? உன் முழுப்பெயர் என்ன?' என்று கேட்டாள். 'என் முழுப்பெயர் கண்மணி' என்றேன். இதை ஒரு தோஷமாக எண்ணுகிறாயே!"

"அது என்னவோ; நீங்கள் இனிமேல் என்னுடன் பேச வேண்டாம்" என்று கடுமையாக மணியின் பிரசங்கத்தைக் கத்தரித்துவிட்டுப் பாப்பா இன்னும் வேகமாகச் சென்றாள்.

மணியின் நிதானம் கலைந்தது. 'கட்டுப் பெட்டி' என்று பாப்பாவை மனசுக்குள் நிந்தித்தான். அவள் வேகமாகச் செல்வதைப் பார்த்துக்கொண்டே யோசனையில் ஆழ்ந்தான்.

'குறைகளுக்கெல்லாம் இருப்பிடம் நான்தானே? இவள் மாத்திரம் என்ன ஆகாயத்திலிருந்து குதித்த அபூர்வ சிருஷ்டியோ? என்னைப் புறக்கணித்து விட்டுப் போகிறாள், பார். புடைவையைச் சற்றுத் தழைத்துக் கட்டிக் கொள்ளக்கூடாது? தலைப்பை இவ்வளவு கர்நாடகமாக இழுத்துப் போத்திக் கொள்ளவேண்டுமா? முகத்தை ஏன் எப்போது பார்த்தாலும் குறையுள்ளதாக வைத்துக்கொள்ளவேணும்? துருதுருவென்று இருக்கக்கூடாது? உமாவுடன் சிநேகமாயிருப்பதனால் தாம்பத்திய வாழ்க்கைக்கு என்ன களங்கம் ஏற்படும்? உண்மையை அறியாமல், குறுகிய நோக்கத்துடன், எப்போதும் சந்தேகத்துக்கு இடம் கொடுத்துக்கொண்டு என்மேல் கோபம் கொண்டால்? இருக்கட்டும். நான் இப்போது சமாதானப்படுத்தப் போவதில்லை' என்று தீர்மானித்துக்கொண்டு மணி பாப்பாவைப் பின்தொடர்ந்து அவளருகே வர முயலவில்லை.

மொத்தத்தில் மணி நேர்மையான நடத்தை உள்ளவன். முப்பத்திரண்டு வயசான போதிலும் பார்ப்பதற்குச் சிறு பையனைப் போலவே தோன்றுவான். தட்டுச் சுற்றுக வேஷ்டியைக் கட்டிக்கொண்டு கழுத்தின் அழகை வெளிப்படுத்தும்படி திறந்த 'கால'ருடைய 'ஷர்ட்டை'ப் போட்டுக் கொண்டிருந்தான். மணியை லக்ஷணம் பொருந்திய ஒரு மன்மதக் குஞ்சு என்று சொல்லலாம். சம்சாரத் தொல்லையில் ஈடுபட்ட அம்மாமிகளுக்கும் மணியைக் கண்டால் சற்று முகம் மலரும். யௌவனம் நிறைந்தவன். அவனுடைய நிறமும் பாப்பாவைப் போலவே

பசுஞ் சோளத்தை ஒத்திருந்தது. கலை மேதையினுலோ, சுமுக பாவத்தினுலோ, சௌஜன்ய குணத்தினுலோ, இயற்கை மலர்ச்சி யினுலோ, மணி எல்லோருக்கும் வேண்டியவனுய் இருந்தான். உமா என்ற வங்காள யுவதி, மணியைத் தன் தமையனுகக் கருதவேண்டு மென்று ஆர்வமடைந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லே.

ஆனல் அது பாப்பாவுக்குப் பொறுக்கவில்லே. எவ்வளவோ நல்ல குணங்களே வைத்துக்கொண்டும், பெண்ணென்ற மாயையை மணி எதற்காக அணுகவேண்டும் என்று மனம் நொந்தாள். மனைவி, குழந்தைகள், இல்லறப் பொறுப்பு இவைகள் இருக்கும் போது முன்பின் அறியாத வங்காளப்பெண்ணுடன் மணிக்கு என்ன சிநேகம் வேண்டியிருக்கிறது?

* * * *

இருவரும் வீடு வந்து சேர்ந்தனர். ஆனல் பாப்பா முகம் கொடுத்து மணியுடன் பேசவில்லே. குழந்தைகளேச் சற்று வழக்கத் துக்கு அதிகமாகப் பாராட்டிச் சாப்பாடு போட்டுத் தூங்கப் பண்ணி, வீட்டு வேலைகளே முடித்துக்கொண்டு, முன்னறைக்குப் புத்தகமும் கையுமாக வந்தாள்.

மணிக்கு மௌனம் சகிக்கவில்லே. எப்படிப் பாப்பாவுடன் திரும்பவும் பேச்சு ஆரம்பிப்பதென்றும் தோன்றவில்லே. அவள் முகத்தைப் பார்க்கவும் தைரியம் இல்லே. ஏனெனில், பாப்பாவின் முகத்தில் மணி கண்ட ஒரு விசேஷ குணம் உண்டு. தவறு ஒன்றும் செய்யாதிருக்கும்போதுகூட அவளுடைய முகத்தைப் பார்த்தால் தான் தவறு செய்தவன் மாதிரி அவனுக்குத் தோன்றும். அவ்வளவு தெளிவான முகம்; நிர்த்தோஷமானது; ஆழ்ந்த சக்தியுடையது.

'இந்தத் தடவை அவளாகத்தான் பேசட்டுமே' என்று எண்ணி மணி கொஞ்ச நேரம் காத்துப் பார்த்தான். பயன் இல்லே. பாப்பா சற்றேனும் தலேயைத் தூக்காமல் ஊக்கமுடன் புத்த கத்தைப் படித்துக்கொண்டிருந்தாள்.

மணி பொறுமை இழந்து கடிகாரத்தைப் பார்த்தவண்ணம், "ராஜம் வருகிற நாழியாச்சு. என்ன பாட்டுப் பாடுவதாக உத்தேசம்?" என்று கேட்டான்.

பாப்பாவிடமிருந்து பதில் வரவில்லே.

"இதோ பார்: சண்டை உனக்கும் எனக்கும் இருக்கட்டும். வேணுமானல் பிறகு தொடங்கலாம். மூன்ரும் மனுஷனுக்கு எதிரில் என்னே அவமானப் படுத்தாதே" என்று சொல்லி முடித் தான். அதே சமயம் ராஜமும் வந்து சேர்ந்தான். பக்கத்தி லிருந்த மற்ருேர் அறைக்குள் பாப்பா மறைந்தாள்.

ராஜம் ஒரு கதம்பக் காட்சியைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தான்; மணியின் நண்பன். பாப்பாவின்

சங்கீதச் சிறப்பைப் பற்றிக் கேள்வியுற்று அதைக் கதம்பத்தின் ஒரு நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப் போவதாகச் சொல்லியிருந்தான். நேரில் பாப்பாவின் பாட்டைக் கேட்டு நியமிப்பதற்காகவே மணியிடம் அன்று வந்தான்.

மணிக்கு என்ன செய்வதென்று புலப்படவில்லை. மனைவியுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் இன்னும் நீங்கினபாடில்லை. ராஜத்தையோ வரவழைத்தாயிற்று. பாப்பாவை நேரில் போய்க் கேட்டுச் சுருக்கென்று ஏதாவது அவள் சொல்லிவிட்டால் என்ன செய்கிறது என்று தயங்கினான். "அவளுக்கு உடம்பு சரியில்லை. மற்றொரு நாள் பாடச் சொல்கிறேன்" என்று ராஜத்திடம் சொல்லி அனுப்பிவிடலாமா என்ற யோசனை உதித்தது. உடனே அதைத் தள்ளினான். 'பாப்பாவின் கர்நாடகப் போக்கை எப்போதுதான் மாற்றுவது? வாய்த்த சமயத்தை ஏன் கைவிட வேண்டும்?'

மணி தைரியமான தொனியில், "பாப்பா, ராஜம் வந்திருக்கிறான். கதம்பக் காட்சியில் பாடப் போகும் பாட்டைப் பாடு, பார்ப்போம்" என்று சொல்லி, அசட்டுச் சிரிப்புடன் ராஜத்தைப் பார்த்துப் பாப்பாவின் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

மணி ஏமாற்றம் அடையவில்லை. அடுத்த அறையில் மின்சார 'ஸ்விச்'சின் 'டிக்' ஓசை கேட்டதும், உள் பிரகாசம் அடைந்தது. உடனே அங்கிருந்து ஒரு நாரீமணியின் இன்னிசை கிளம்பிற்று. "சிதம்பரம் என மனங் கனிந்திட" என்னும் பாட்டைப் பாப்பா பாடினாள். அருமையாய், அற்புதமாய் மனத்தை உருக்கிற்று. பாட்டின் விசேஷ அர்த்தமோ அல்லது பாவையின் பாவ அனுபவமோ தெரியவில்லை. மணியும் ராஜமும் மெய்ம்மறந்து மகிழ்வடைந்தனர். பாப்பா கூட்டி அமைத்த கல்யாணி ராகத்திலே ஒரு யௌவன மங்கையின் சோபையும், ஒரு பேதையின் நிலையற்ற மனப்பான்மையும், ஒரு தாயின் சாந்த குணமும் முறையே உருவடைந்து ஒலிபெற்று விளங்கின.

"மோகாந்த காரமதில்
மூழ்கியே எந்த நாளும் –
மோசம் போகாதே
என்றன் மூட நெஞ்சமே"

என்ற பகுதி மணிக்குத் தன்னைச் சுட்டிக் காட்டிப் புத்தி உரைத்தாற்போல் இருந்தது.

'சரி, ஒரு நிகழ்ச்சி நேர்த்தியாக அமைந்தது' என்ற திருப்தியுடன் ராஜம் மணியிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியேகினான்.

மௌனமும் மனஸ்தாபமும் மறுபடியும் குறுக்கிடுமோ என்று பயந்து மணி விரைவாகப் பாப்பாவிடம் சென்றான். சங்கீத பாவத்திலிருந்து சம்சார பாவத்திற்கு மாறுமுன், பாப்பா

வின் கரத்தைப் பற்றி, நிமிர்ந்து அவளை உற்று நோக்கினான். பத்து வருஷங்களுக்கு முன் சின்னஞ் சிறுசாய், மரப்பாச்சிக்குப் புடைவை கட்டினாற்போல் பக்கத்தில் வந்து நின்று மருதாணியிட்டுக்கொண்ட விரல்களுடன் தன்னுடன் கைகோத்துக் கொண்டு நின்ற பாப்பாவின் இளம் பெண்ணுருவம் அவனுடைய கண்முன் தோன்றிற்று. "பாப்பா!" என்று அழைத்தான்.

பசுஞ் சோளை நிறமுடையாள் குறுநகை அணிந்தாள்.

டி. எம். ஜம்புநாதன்

"சாந்தி" 67

தேவி யசோதரையின் கவனம் எல்லாம் ஒவ்வொரு காலடியின் சப்தத்திலும் இருந்தது. அந்தப் பக்கமாகப் போகும் தோழியின் நடை கூட அவளை நோக்கி வருவதென்பது அவள் நினைப்பு; அந்த ஏமாற்றம் அவளுக்குப் புரிவதற்கு வெகு நேரம் ஆயிற்று. அந்தச் சேடி போவதற்கு அவ்வளவு நாழிகை பிடித்தது. அது தெரிந்தவுடன் மௌனமாகக் கவனிக்கும் நிலை, மறுபடியும்.

அந்த மௌன நிலையிலிருந்து அவளைக் குலைத்தன, நிதானமான பாதரக்ஷையின் அடிகள். சப்தம் வர வர நெருங்கி வந்து கொண்டு இருந்தது, சதவுப் பக்கமாக. கீழே விழுந்துவிடக்கூடிய நிலைமையில் அவள் கைகால்கள் ஆடுவது நன்றாக யாருக்கும் தெரிந்து இருக்கும். அவள் செய்கை ஒவ்வொன்றிலும் அர்த்தம் இல்லாமல் இருந்தது. காலடிச் சப்தம் நின்றுவிட்டது; ஆனால் அது அவளை அழைத்தது. நிச்சயமாக அவளுக்குத் தெரியும், எங்கு அது நிற்கும் என்று. கதவைத் திறப்பதுகூட அவளுக்கு மறந்து போய்விட்டது. தன்னையே மறந்து இருப்பவளுக்கு அது எப்படி ஞாபகத்திற்கு வரப்போகிறது?

"சாந்தி! சாந்தி!"

அவள் ஏழு வருஷங்களுக்குமுன் கேட்டதைவிட இன்னும் கம்பீரமாக இருந்தது அவருடைய குரல். இரண்டு வார்த்தைகளும் சாந்தியைக் கொண்டு வந்தன அவளுக்கு. தன் நிலையைத் தெரிந்துகொண்டாள்.

"சாந்தி! சாந்தி!"

மறுபடியும் பகவானின் குரல் மிதந்து வந்தது. அதற்குப் பிறகும் தன் மனத்தை அவளால் கட்டுப் படுத்த முடியவில்லை. கதவை நோக்கிப் பார்க்கும் கண்களில் நீர் தளும்பி நின்றது. கதவைத் திறந்தாள். கால்கள் மண்டி இடவேண்டும் என்று வலுத்தன. சாந்தி யென்னும் குரல், கொந்தளிக்கும் அவளுடைய சலனத்தைத் தழுவி நின்றது.

மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்த்தாள். கண்ணீரிலே மிதக்கும் இரண்டு கண்களும் அன்பிலே மிதக்கும் இரு கண்களும் பார்வையிலே இணைந்தன. அவரை அப்பொழுது பார்க்கும் பொழுது பல கௌதமர்கள் சேர்ந்து அவளுக்குத் தரிசனம் கொடுத்ததுபோல் இருந்தது; அவ்வளவு தேஜஸ் அவர் முகத்தில்! கண்கள் தாமே மூடிக்கொண்டன. ஒரு வகையில் அவளும் தன்னைப் போலவே மாறிவிட்டாள் என்பதைப் பகவான் தெரிந்துகொள்ளாமல் இல்லை. இன்னும் முழுமையும் மாறவேண்டும் என்பதுதான் அவருடைய எண்ணம். மாற்றமுடியும் என்கிற ஒரு திடமான நம்பிக்கையுங் கூட இருந்தது.

அவளால் வாய் திறக்க முடியவில்லை. பேசுவதற்கு ஒன்றுமே இல்லையே! முன்பு இருந்த கௌதமராகவா வந்தார், அப்படி எல்லாம் பேசுவதற்கு? ஏழு வருஷப் பிரிவிலே அன்பு எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துத் தம்மிடம் அடக்கிக்கொண்டிருந்தார்.

சிலு நகர்ந்து வருவதுபோல் பகவானிடம் வைத்த கண் வைத்த படி. யசோதரை வந்தாள். தன் பார்வையை அவளால் திருப்ப முடியவில்லை. பகவான் அவளை ஒருதரம் கவனித்தார். அவளைப் பார்க்கும்பொழுது அவருடைய கண்களில் இரக்கம் தோன்றியது. எல்லா உயிர்களிடத்தும் உண்டாகும் இரக்கத்தைவிட அப்பொழுது உண்டானது ஒரு தனி விசேஷத்தைக் காட்டியது. அவரால் வேண்டாம் என்று தள்ளப்பட்டவள்தானே? அதனால் அவளுக்கு எவ்வளவோ கஷ்டங்கள். அந்தக் கஷ்டங்கள் அவர் காரணமாக நிகழ்ந்தவை. எந்த உயிருக்கும் தீங்கு நினையாத பகவானுக்கு யசோதரையின் கஷ்டங்கள் போதும்.

பகவான் உள்ளத்தில் அவை பலமாகத் தோன்றின. அவர் கண்களை மூடிக்கொண்டார். முன்போல ராணிக்குரிய ஆடம்பரத்துடன் யசோதரை இல்லை. அவள் ஆடையலங்காரம் முதலியவற்றை விட்டு ஏழு வருஷங்கள் ஆகிவிட்டன. இப் பொழுது அவள் சாதாரண உடைகளையே அணிந்திருந்தாள். அவளுக்கு என்று ஏற்பட்ட ஒவ்வொரு சுகத்திற்கும் மூட்டுக் கட்டை அவர்தாம். ஏன்? அவளுடைய இன்ப வாழ்க்கைக்கு ஒரு முடிவு ஏற்படுத்தியதற்கு அவரே காரணம். அதுவும் அவரால் உண்டான கட்டாய முடிவுதான்.

அவர் மனத்திலே படிந்து கிடந்த இந்த எண்ணங்கள் எல்லாம் தலைதூக்க ஆரம்பித்தன. ஒவ்வோர் எண்ணம் தோன்றும்பொழுதும் பகவானுல், "சாந்தி! சாந்தி!" என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. அவளைப் பார்க்க மறுப்பதுபோலப் பெரிய இமைகள் கண்களை மூடிக்கொண்டன. கண்கள் மூடினாலும் துவண்டு நிற்கும் யசோதரையின் உருவம் பகவான் மனத்தில் முத்திரை இட்டதுபோல் இருந்தது. ஏழு வருஷமாக எதிலும் இச்சை கொள்ளாத பெரும் பயிற்சி இருக்கிறது. அந்தப் பயிற்சி வீணாகவா போய்விடும்?

அவர் தம் மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள வெகு நேரம் ஆகவில்லை. அவ்வளவு குறுகிய நேரத்திற்குள் பகவான் எல்லாவற்றையும் விட்டு விலகி முன்போலவே தனியாகி விட்டார். பகவான்தான் முதலில் பேச ஆரம்பித்தார். எல்லோரிடத்திலும் பேசுவது எப்படியோ அப்படியே இருந்தது அப்பெருமான் பேச்சு. அதில் தனி விசேஷம் ஒன்றும் இல்லை அந்தப் பார்வையிலும், பேச்சிலும் எந்த வித்தியாசமும் தெரியவில்லை. மகுடியில் மயங்கிய நாகம்போல் இருந்தாள் யசோதரை.

யசோதரைக்கும் பலகோடி ஜீவன்கள் கேட்ட அதே உபதேசந்தான் மலர்ந்தது. பகவானிடம் இருந்துவரும் ஒவ்வொரு வார்த்தையும் யசோதரையைப் புனிதமாக்கிக்கொண்டிருந்தது. அவர் பேச்சை நிறுத்தினதுகூட அவளுக்குத் தெரியாது. அவருடைய ஒவ்வோர் உபதேசத்தையும் ஆராய்ந்துகொண்டு இருந்தாள் யசோதரை. பெருமானுடைய இருப்பைக்கூட நினைக்க வில்லை அவள். அவர் மௌனமாக நகர்ந்தார். "சாந்தி! சாந்தி!" என்று வெளியிலிருந்து அவ்வொலி தனியே விடப்பட்ட யசோதரைக்குக் கேட்டது. அவள் மனம் சற்று அதன் நிலையை அடைய ஆரம்பித்தது.

ஒவ்வொரு சமயம் ராகுலனை நினைக்கும்போது அவனுக்காக வாவது முன்போல் தான் இருக்கவேண்டும் என்று, சற்று உறுதியற்றுத் தடுமாறியது அவள் திடமான மனம். மற்றவர்களைப் பார்க்கும்பொழுது, தானும் அப்படி இருக்கக் கொடுத்துவைக்க வில்லையே என்று அவள் ஏங்கினாள். எந்தனையோ தடவை கேவலம் மனித இச்சைகளுடன் போராடிக்கொண்டிருந்தது அவள் பெண்மனம். பகவானது அழகையும் அவர் பேச்சையும் அவர் திருமேனியையுமே அவள் நினைத்துக்கொண்டிருந்தாள். ஏன்? அவை என்றுமே அவள் மனத்தில் அழிக்கமுடியாமல் பதிந்துபோய்விட்டன.

கண் எதிரிலேயே எல்லா ராணிகளும் வாழ்வது யசோதரைக்குப் பழைய, மூன்றினை வாழ்க்கையை ஞாபக மூட்டியது. 'மற்றவர்களைப்போல் நானும் இல்லையே' என்ற ஏக்கந்தான் பிரதான ஸ்தானத்தை வகித்தது. ஆனால் இன்று அவளுக்குத் தனிப் பெருமை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, அந்த இச்சைகளுக்கு அவள் மனத்திலே இடம் இல்லை. பகவானுடைய உபதேசங்கள் அந்த இச்சைகளை ஆக்கிரமித்துக்கொண்டன. இருக்கும், வரப்போகும், மக்களுக்காகத் தன் சுகங்களைத் தியாகம் செய்வதில் அவளுக்கு எவ்வளவோ பெருமை தோன்றியது.

பகவான் கபிலவாஸ்துவை விட்டுப் போகிறார் என்பது யசோதரைக்கு ஞாபகம் வந்தது. அந்த ஞாபகமே அவளுக்குத் துன்பந்தான். அந்த ஏழு வருஷங்களிலும் அவரை விட்டுப் பிரிந்த அவளுக்கு அப்போது ஒவ்வொரு விநாடியும் சிரமமாக இருந்தது. சுகவாழ்வு பசை அற்று இருந்தது. அதை நினைத்தால் ஒருகால்

அவளுக்குப் பயங்கரமாகக்கூட இருக்கலாம். அந்தப் பயங்கரச் சூழலிலே இனி அகப்பட்டுக்கொள்ள அவளுக்கு இஷ்டம் இல்லை. பகவானுக்கு அருகில் இருந்தால் போதும் என்று அவள் திருப்தி அடைந்தாள். அப்படியே மனத்திற்கும் சாந்தியைத் தேடிக் கொள்ளலாம். அந்த மகத்தான அன்பு அணைப்பிற்கு அவள் இணங்கினாள்.

தன்னைப்பற்றி முடிவுக்கு வந்த சமயத்தில்தான் எங்கிருந்தோ ராகுலன் ஓடிவந்தான். யசோதரை அவனை ஏற இறங்க ஒருமுறை பார்த்தாள். அப்பொழுதுதான் அவனைப் புதிதாகப் பார்ப்பதுபோல் இருந்தது அவளுக்கு. ராகுலனுக்குக்கூட ஆச்சரியமாய் இருந்தது. யசோதரை அப்படிப் பார்த்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பகவானைப்போன்ற சாயலே அவனுக்கும். அதை இப்பொழுதுதான் ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றியது. அவனும் பகவானைப்போல் ஆகவேண்டும். அவனையும் பயன்படுத்திக் கொள்ளும்படியாகப் பகவானைக் கேட்க அவளுக்கு எங்கிருந்தோ தைரியம் வந்தது. அவன் தனியாகக் கபிலவாஸ்துவில் விடப்பட்டால் மனித சமூகத்திற்கு ஒரு வகையிலும் பிரயோசனம் இல்லாமல் வீணைப் போய்விடுவான் என்று அவளுக்குத் தெரியும். சங்கத்திலே சேர்ந்துவிட்டால் அவன் என்ன என்ன புனிதமான செய்கைகள் செய்யப் போகிறானோ? அவனை விட்டுப் பிரிய வேண்டிய அவசியம் இல்லை யசோதரைக்கு.

யசோதரை பகவானைப் பின்தொடர்ந்தாள். ராகுலனும் அவள் கையைப் பிடித்துக்கொண்டே வந்தான். பகவான் பக்கமாக அவள் கண்கள் தாமாகத் திரும்பின. அவரைப் பார்க்கும் ஒவ்வொரு விநாடியும் தான் சங்கத்தில் சேரவேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. ராகுலனை அவரிடம் எப்படி அனுப்புவது என்று யோசித்தாள். கடந்துபோகும் ஒவ்வொரு விநாடியும், தான் இருக்கும் சொற்ப நேரத்திலே அவர்களைச் சங்கத்தில் சேர்த்துவிட வேண்டும் என்று தயங்குவதுபோல் இருந்தது. பரபரப்பான சமயத்தில் யசோதரைக்கு ஒரு யோசனை தோன்றியது. மெதுவாக, கையை ராகுலனிடம் இருந்து விடுவித்துக் கொண்டாள். அவள் சற்றுக் குனிந்து, "அப்பா, உன் பிதுரார்ஜித சொத்தை உன் தகப்பனிடம் போய்க் கேள்" என்றாள்.

ராகுலன் தயங்கித் தயங்கி அடிக்கடி தாயைப் பார்த்துக் கொண்டே அவரிடம் போனான். அதே வார்த்தைகளை வெகு சுலபமாகக் கேட்டுவிட்டான். பகவானுடைய கருணை ததும்பிய பார்வை ராகுலனிடம் இருந்து விலகிப் போய் யசோதரையை அடைந்தது. அவள் கண்களிலே ஓர் ஊர்ஜிதத்தைப் பகவான் கண்டார். யசோதரை தலையை வணங்கினாள்.

"சுவாமி, கொடுக்கலாமா?" என்று கேட்டான் பிக்ஷு. "கொடு" என்று பகவானிடமிருந்து பதில் வந்தது. மஞ்சள் சாயம் ஏறிய துண்டு ஒன்று ராகுலனுக்குக் கொடுக்கப்பட்டது. அந்தப்

பாலகனுக்கு ஒன்றும் புரியவில்லை. கூட்டத்தைத் தாண்டி எட்டி நிற்கும் யசோதரையை, "இதெல்லாம் என்ன?" என்று ராகுலனுடைய கண்கள் கேட்டன. யசோதரைக்குப் பரம சந்தோஷம். அவனைக் குறிப்பாகப் பார்க்கும் பகவானுக்கு உண்மை தெரிந்தது.

யசோதரையும் புறப்படத் தயாராய் இருப்பதைச் சிஷ்யன் கவனித்தான்.

"சுவாமி, நமது சங்கத்தில் பெண்கள் சேரலாமா?" என்று கேட்டான். பகவானுக்குத் தெரியும் யாரைக் குறித்து இந்தக் கேள்வி பிறந்தது என்று. பகவான் மெதுவாக யசோதரையின் பக்கம் திரும்பினார். அவளும் பக்கத்தில் வந்துவிட்டாள். மற்றச் சிஷ்யர்கள் எல்லோருக்கும் ஆச்சரியமாய் இருந்தது. பகவான் திருவடிகளில் தன் தலையை வைத்து நமஸ்கரித்தாள் யசோதரை. எவ்வளவோ கண்கள் அவளைக் கவனிப்பது அவளுக்குத் தெரியாது. உலகத்தையே காக்க வந்த கை வாழ்த்தியது. 'தழைத்து வரும் மரக்கிளையை வளைத்து விடலாம். யசோதரையை மூற்றும் புனிதமாக்கி விடலாம்' என்பதைப் பகவான் அவள் கண்களிலே கண்டுகொண்டார்.

"கொடு" என்று பதில் வந்தது.

மஞ்சள் உடையை வாங்கிக்கொண்டபோது யசோதரைக்கு உடல் சிலிர்த்தது. பரமானந்தத்தில் லயித்துக் கண்களை மூடிக் கொண்டாள். "சாந்தி! சாந்தி" என்ற வார்த்தைகள் அவளுடைய மனத்திலிருந்து மலர்ந்து எழுந்தன.

கே. எஸ். ஜம்புநாதன்

நப்பாசை 68

"எல்லாம் சாயந்தரம் பாத்துக்கலாம். ஆபீஸுக்குப் புறப்படரச்சே தான் ஒண்ணு ஒண்ணைச் சொல்லுவேள்" என்று சொல்லிக் கொண்டே மணி ஐயர் வாசற்புறம் வந்தார். வேதாப்பாட்டி வாசல் திண்ணையிலே ஜபமாலையும் கையுமாக ஒதுங்கி உட்கார்ந் திருந்தாள். உள்ளேயிருந்து வேகமாக வந்த மணி ஐயர், சகுனம் சரியாக இருக்கிறதா என்று தெருப் பக்கமாகப் பார்த்தார். அப்போது வேதாப்பாட்டி, "ஏண்டா மணி, இன்னுமா ஆபீஸுக்குப் போகல்லே?" என்று கேட்டாள்.

"ஆமாம் அம்மா; நாழியாச்சு; வரட்டுமா?" என்று மறுபடியும் தெருவைப் பார்த்தார். ரேஷன் கார்டைக் கையிலும், ஒரு கட்டு விறகைத் தலையிலும் வைத்துக்கொண்டு ஒருவன் வந்தான். "சட், எப்பப் புறப்பட்டாலும் ஒரு மண்டகப்படி வாசலிலே போடவேண்டி யிருக்கே!" என்று அலுத்துக் கொண்டே சொன்னார் மணி ஐயர்.

அதைக் காதிலே வாங்கிக் கொள்ளாதவள்போல வேதாப் பாட்டி., "ஏண்டாப்பா, எனக்கு ஒரு இரண்டணை இருந்தாக் குடேன்" என்று கேட்டாள். காசே கேட்காத தம் தாய் இன்று அம்மாதிரி கேட்டது மணி ஐயருக்கு ஆச்சரியமாக இருந்தது. "அவளுக்கு எதற்குக் காசு?" என்று தமக்குள் ளேயே கேட்டுக்கொண்டார். பாட்டி சிரித்துக்கொண்டே அவர் முகத்தைப் பார்த்தாள்.

"உனக்கு என்ன வேணும் அம்மா? சொல்லேன்; வாங்கிண்டு வரேன்."

"எனக்குக் காசுதான் வேணும்."

"காசை வச்சிண்டு என்ன பண்ணப்போறே அம்மா நீ? கடைக்குப் போகப் போறயா? உனக்கு என்ன வேணும்னு சொன்னா வாங்கிண்டு வரேன்."

என்ன வாங்க வேண்டும்? அவளுக்கு ஒன்றுமே தோன்ற வில்லை. ஏதோ பிள்ளையுடன் பேசவேண்டுமென்று தோன்றிற்று. குழந்தைமாதிரி காசு வேண்டும் என்று கேட்டுவிட்டாள். காசு ஞாபகம் வந்ததும் ஏதாவது வாங்க வேண்டுமென்ற ஆசையும் கூடவே எழுந்தது. எவ்வளவோ நாளாச்சு, அவள் காசைக் கையால் தொட்டு. வீட்டு விசாரம் இல்லாது எல்லா வேலைகளையும் மருமகள் கவனித்துக் கொள்கிறாள். அவளுக்கு வேண்டியவை களையும் வாங்கிக் கொடுத்துவிடுகிறார் மணி ஐயர். ஆகவே, காசை வாங்கித் தானே செலவிடும் சந்தர்ப்பமே இல்லாமல் எத்தனையோ வருஷங்கள் ஆயின. இன்று மணி ஐயர் வாசலில் நின்றதும், காசு வேணும் என்று கேட்டுவிட்டாள். காசை வைத்துக்கொண்டு என்ன செய்வது? வர வரத் தள்ளாமையினால் கோவில் குளம் என்றும் போவதில்லை.

மணி ஐயரின் கேள்வி அவளை ஒரு நிமிஷம் திணற அடித்து விட்டது. அப்போது, "வேர்க்கடலை! வேர்க்கடலை!" என்று ஒருவன் தெருவோடு கத்திக்கொண்டே போனான். வேதாப்பாட்டி சமாளித்துக்கொண்டு அசட்டுச் சிரிப்புடன், "என்ன வாங்க ணும்? இந்த வேர்க்கடலைதான் வாங்கப் போறேன்னு வச்சுக் கோயேன்!" என்றாள்.

மணி ஐயர் 'பக்' கென்று சிரித்துவிட்டார். "வேர்க்கடலை வாங்கப் போறயா அம்மா? இந்தா, அப்படீன்னு நாலணா வச்சுக்கோ" என்று ஒரு வெள்ளிக் கால்ரூபாயைக் கொடுத்தார்.

"ஏதுக்கடா கால் ரூபாய்? ரெண்டணாவா இருந்தாக் குடேன். என்னவோ வாங்கணும் போலத் தோணித்து; காசு கேட்டேன்" என்று மன்னிப்புக் கோரும் தொனியிலே சொன்னாள் பாட்டி.

"வாங்கேன், அம்மா. என்ன வேணும்னாலும் வாங்கிக்கோ; உன் செலவுக்குன்னுதானே கேக்கறே?" என்று சிரித்துக் கொண்டே, படியில் இறங்கித் தெருவில் நடந்தார் அவர்.

காசை எடுத்துத் தலைப்பு நுனியில் முடிந்துகொண்டே யோசனை செய்தாள் பாட்டி. திருவிழாவுக்குக் குழந்தைகள் காசு கிடைத்தால் கண்ணில் கண்டதை யெல்லாம் வாங்க வேண்டு மென்று ஆசைப் படுவதுபோல அவள் மனத்திலே ஆசை அலைமோதிக்கொண்டு எழும்பியது.

எத்தனை மாதங்களாயின, குழந்தைகளுக்குத் தன் கையாலே ஏதாவது கொடுத்து! இன்று அவர்களுக்குத் தானே இந்தக் காசுக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்கவேணும் என்று ஓர் ஆசை எழுந்தது. ஆனால் கால் ரூபாய்தானே? என்ன வாங்குவது? 'வீட்டு விசாரம் நம்மிடம் இருக்கும்போது சரஸுவுக்கு வளை போட அரை, கால் என்று எவ்வளவு ரூபாய் செலவு? இந்த ரூபாய்க்கு அவளுக்கு வளை போடலாமென்றால், கால் ரூபாய் போராதே.

'ஆமாம், அவள் மட்டும் என்ன? ராமு தினம் பலபம் ரப்பர்னு சொல்லிக் காசுக்கு நச்சரிப்பானே? அவனுக்கு ஒரணாக் குடுத்துட்டா? ஊம். இவா ரெண்டு பேரும் என்ன ஒசத்தி? கொழந்தை சுந்தாச்சுவுக்கு என்ன செய்யறது? நாளைக்கு மணியிட்டேயிருந்து இன்னும் ஒரு கால் ரூபா வாங்கிட்டா, அப்புறம் எல்லாக் கொழந்தைகளுக்கும்...

'நாளைவரை ஆர் காத்துண்டு இருக்கிறது? இதைத்தான் செலவழிச்சுக் கொழந்தைகளுக்கு ஏதாவது வாங்கிக் கொடுத்தாப் போச்சு. இதுக்காக நாளை ஒருதடவை போய் அவனண்டை பல்லைக் காட்டிக்கிண்டு இருக்கணுமாக்கும்! இந்தக் காசு கொடுக்கறத்துக்கே என்ன கேலி! என்ன நையாண்டி.....'

அவள் எண்ணம் ஓடிக்கொண்டே இருந்தது. அதைக் கலைப்பதுபோல வாசலிலேயே வேர்க்கடலைக்காரன் வந்து விட்டான். 'வேர்க்கடலை' என்ற குரல் கேட்டதும் பாட்டி திடுக்கிட்டாள். கையில் இருக்கிற காசை உடனே செலவிட்டுவிட வேண்டுமென்ற ஆசை மேலோங்கி வந்தது. 'இந்தக் கடலைதான் வாங்குவோமே' என்று ஒரு நினைப்பு. உடனே, 'கால் ரூபாய்க்கு எதுக்கு?' என்று ஒரு கேள்வி? 'வேறு ஏதாவது வாங்கவேணுமென்றால் கடைக்குப் போகவேணும். இந்தக் கொளுத்தும் வெயிலில் எப்படி.....சரி கடலையைத்தான் வாங்குவோமே.'

"வேர்க்கடலை, இந்தாப்பா, ஒரணாவுக்குக் குடு."

"என்னம்மா, ஒரணாவுக்கா? ஆழாக்கும் பாதியுந்தான்; போருமா?"

"அவ்வளவுதானா? இன்னும் ஒரணாவுக்குக் குடு."

கால்ரூபாய் மாறிக் கடலையாகவும், இரண்டு அணா நாணயங்களாகவும் திண்ணையில் கிடந்தது. அதைக் கண்டு பாட்டியின் மனம் பூரித்துவிட்டது. தன் கையினாலேயே எவ்வளவோ நாட்களுக்குப் பின்பு காசு செலவிட்டதில் அவளுக்கு ஒரு திருப்தி.

மீதிக் காசை எடுத்து முன்ரூனியில் முடிந்துகொண்டாள். 'கடலையை எப்படி எடுப்பது? அவன் யாரோ என்னவோ? எந்தச் சட்டியில் வறுத்தானே? அதை எப்படித் தொடுவது?' என்று ஓர் எண்ணம். 'ஆமாம், ஜலம் பட்டதா என்ன? நெருப்பில் வறுபட்டதுதானே? இதுக்கெல்லாம் யோசனை செய்தால்.....'

இதற்குள் மருமகள் வாசற்புறம் வந்தாள், "ஆரு வந்தா இங்கே?" என்று கேட்டுக்கொண்டே.

பாட்டியின் முகத்திலே திருப்தி கலந்த சிரிப்பு. "ஆரும் வரல்லே; இது வாங்கினேன்" என்று சிரித்துக்கொண்டே தின்னையில் இருந்த கடலையைக் காட்டினாள்.

"அடே! வியாபாரம் பண்ணினேளா? புள்ளெ காசு கொடுத்தாராக்கும்! கோவில் குளம்னு செலவழிக்காமே, இந்தச் சனியனை எதுக்கு வாங்கினேள்?" என்று சொல்லிக்கொண்டே ஒரு கடலையை எடுத்து வாயில் போட்டுக்கொண்டாள்.

"என்னமோ தோணித்து; வாங்கினேன்."

"அதுக்குச் சொல்லல்லே; வாங்கினேளே இதை; நீங்க திங்கப் போறேளான்னு சொன்னேன். உங்களுக்கு வேணுங்கறதா எதாவது வாங்கிக்கப் படாதோ? இல்லாட்டா, வேறே செலவு செய்யப்படாதோன்னு கேட்டேன்" என்று சொல்லிக்கொண்டே மீண்டும் இரண்டு கடலையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

"நான் சாப்பிட்டாத்தானுடி? காசு செலவழிக்கணும்னு எண்ணம். வாசல்லே கடலை வந்துது. சாயந்தரம் இந்தப் பசங்க உன்னண்டைதானே வந்து ஓட்டி அடிக்கறதுகள்? அப்போ குடுக்கலாம்னு வாங்கினேன்."

"நன்னுக் குடுங்கோ; நீங்களே குடுங்கோ; பாட்டி குடுத்தான்னு அதுகளும் கொம்மாளம் போடும். கடலை நன்னியிருக்கு. இன்னும் கொஞ்சங்கூட வாங்கியிருக்கலாம். அதுக்குள்ளே அவன் போயிட்டானே" என்று சொல்லிக் கொண்டே கடலையை வாயில் போட்டுக்கொண்டு மடியில் எடுத்துக் கட்டிக்கொண்டாள்.

"நன்னியிருக்கு, கடலை" என்று அவள் சொன்னது பாட்டியின் மனத்தைக் கிளரிவிட்டது. தானும் கடலை தின்ன வேண்டுமென்ற புது ஆசை தோன்றியது அவள் மனத்திலே. ஆனல் எப்படித் தின்பது? யார் வறுத்த கடலையோ என்னவோ! இருந்தாலும் அவள் எடுத்துக்கொண்டு போய்விட்டாளே. மருமகளிடம் கேட்டு வாங்கியா தின்பது? அவள் கேலி பண்ண மாட்டாளோ? 'சை! வேண்டாம்' என்று ஓர் எண்ணம். 'சாயந்தரம் குழந்தைகளுக்குக் குடுக்கும்போது நாலு எடுத்துக் கொண்டால் போச்சு' என்று ஒரு சமாதானம். 'சை. ஆனலும், இப்படிக் காசுப் பைத்தியமும் கடலைப் பைத்தியமும் என்னைப் பிடிச்சு ஆட்டவேண்டாம். ராம! ராம! இந்த வயசிலே எனக்கு

ஏன் இந்த எண்ணம்?' என்று தனக்குள் தானே கூறிக் கொண்டாள் பாட்டி.

"இந்தாங்கோ: இதுகளுக்கு நீங்களே விநியோகம் பண்ணுங்கோ. மேலே பட்டுடப் போறதுகள். – டே! எட்டி நின்னு வாங்கிக்குங்கோ; பாட்டிமேலே படப்படாது" என்று சொல்லிக் கொண்டே கடலைப் பாத்திரத்தைக் கொண்டுவந்து வைத்தாள் மருமகள்.

"எனக்கு முதல்லே; எனக்குத்தான் முதல்லே" என்று குழந்தைகள் பாட்டியை நெருங்கின. "நீங்கவாண்ணு ரெண்டு எடுத்துக்குங்கோளேன். நான் அப்புறம் இதுகளுக்குக் கொடுக்கறேன்" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்டாள் மருமகள். அவள் தின்னமாட்டாள் என்று தெரியாதா? இருந்தாலும் கடலைக்குத் தோஷமில்லை என்று சமாதானம் சொல்லிக்கொண்டாள்.

"எனக்கு ஏதுக்கடியம்மா, இந்தக் கிரஹசாரம்?" என்று சொல்லிக்கொண்டே குழந்தைகளுக்கு விநியோகித்தாள் பாட்டி. எல்லாருக்கும் கொடுத்த பின்பு பாத்திரத்திலே கடலை மிகுந்திருந்தது. "பாட்டி, எனக்குப் பாட்டி" என்று ராமு கிட்டே வந்தான்.

"போடா, போ; உனக்குத்தான் குடுத்தாச்சே."

"குடுத்தே பாட்டி. கொசுறு?" என்று கெஞ்சிக்கொண்டே கையை நீட்டினான்.

"எனக்குக்கூடப் பாட்டி" என்று சுந்தாச்சுவும் வந்து நின்றான்.

"போங்கடா; அது எனக்கு" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் பாட்டி.

"ஏம் பாட்டி, நீ திம்பயா? அப்படீன்னு உனக்குப் போராதே! நாங்கூடத் தரேன்" என்று ஒரு கடலையைத் தூக்கிப் போட்டான் சுந்தாச்சு, பாட்டியின் மடிமீது.

"எம்மேலே படாதேயுங்கோடா; போங்கோ விளையாட' என்று ஒவ்வொரு கடலையைக் கொடுத்து அனுப்பினாள் பாட்டி. பாத்திரத்தில் கடலை மிச்சம் இருந்தது. குழந்தைகள் விளையாட ஓடின.

மணி டாண், டாண் என்று ஆறு அடித்து நின்றது. ஜபமாலையை உருட்டிக்கொண்டே பாட்டி ராம ஸ்மரணை பண்ணிக்கொண்டிருந்தாள். தெருவிலே குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. டக், டக்கென்று செருப்பு ஓசை கேட்டது. மணி ஐயர் ஆபீஸிலிருந்து திரும்பிப் படியேறினார். அவரைப் பார்த்ததும் பாட்டியின் ஜபம் கலைந்தது. காசு, கடலை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வந்து அவளுடைய ஜபத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தன. மூலையில் அவள் வைத்தபடியே கடலைப் பாத்திரம் இருந்தது. 'ஊம்! காசு வைத்துக்கொண்டிருந்தும்,

இந்தக் கடலே தின்ன முடியவில்லையே!' என்ற ஏக்கம் எழுந்தது அவள் மனத்தில். 'இதைத்தான் ஒண்ணு எடுத்துப் போட்டுக் கொண்டால் என்ன?' என்று ஒரு யோசனை.

'சே வேண்டாம். நானேக்கு மணியை வாங்கிக்கொண்டு வரச் சொன்னுப் போச்சு. ஆத்திலேயே வறுத்துக்கலாமே.....ஆமா, இதுக்காக அவனிட்டே சொல்லணும்.....ஒண்ணு தின்னு என்னவாம்? யாராவது பாத்தாத்தானே?.....ஆமா, கடலே தின்னுக் கேலி எதுக்கு?.....'—ஒருபுறம் ஆசை, மற்றொருபுறம் ஆசாரம். மாறி மாறி அவள் மனத்திலே எண்ணங்கள் எழுந்து தணிந்தன.

கடைசியில் ஒரு கடலையை எடுத்து வாயில் போட்டுக்கொண் டாள். நாவின் அணைப்பிலே கடலை உருண்டது. 'ருசியா யிருக்கே!' என்று மனமும் எண்ணிற்று. ஆனல் அதன் ருசியைப் பூரணமாக அனுபவிக்குமுன் மனத்திலே 'திக்'கென்றது. ஒரு புதிய எண்ணம் ஒளி வீசி மறைந்தது. 'வாசலில் வாங்கின கடலையை, தான் தின்றதை, யாராவது பார்த்திருந்தால்? சை! இத்தனே நாளாகத் தன்னே ஆசார சீலி என்று எண்ணியவர்கள் என்ன நினைப்பார்கள்?'

எதிர்த் திண்ணையிலிருந்து குழந்தைகள் ரோடில் குதித்து ஓடின. ராமு, அடுத்த வீட்டுப் பையனேத் தொட்டுவிட்டு, "நான் பிடிச்சுட்டேனே!" என்று கத்தினன். "பிடித்துவிட்டானு? நான் தின்றதைப் பார்த்துவிட்டானு" என்று ஏங்கியது பாட்டி யின் மனம். குழந்தைகள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. அவர்களேக் கவனிக்காமலே பாட்டி ராமுவின் போக்கையே கவ னித்துக் கொண்டிருந்தாள். 'ஆனலும், இத்தனே நாள் கழித்து எனக்கு இந்த ஆசை வேண்டாம்' என்று எண்ணியது மனம். 'பெரியவர்கள் பார்த்தாலும் பேசாதிருப்பார்கள். குழந்தைகள் பார்த்திருந்தால் தன்னே அம்பலத்துக்குக் கொண்டுவந்து விடுவார் களே! அப்புறம் தான் கேட்கும் ஏச்சு?'—அவள் உடம்பு நடுங்கிற்று.

* * * *

எத்தனேயோ வருஷங்களுக்கு முன்பு, பாட்டி பாவாடை கட்டிய சிறுமி. மிகவும் துடுக்குக்காரி; வாய்ப்பட்டி அவள். ஒரு நாள் கோடி அகத்திலிருந்து அவள் ஊறுகாய் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தாள். எதிர் வீட்டிலே காமுப் பாட்டி லொக்கு, லொக்கு என்று இருமிக்கொண்டிருந்தாள். சிறுமி கையில் ஏதோ மூடிக்கொண்டிருந்ததைக் கண்டதும் அவள் நாக்கில் ஜலம் ஊறிற்று.

"அடி குழந்தை, என்னடி அது?" என்று கேட்டாள்.

"ஊறுகாய் பாட்டி; பழையதுக்குத் தொட்டுக்க ஒண்ணும் இல்லே; அம்மா வாங்கிண்டு வரச்சொன்னு. கோடியாத்தி லேருந்து வரேன்" என்றுள் சிறுமி.

"என்ன ஊறுகாயடீம்மா?"

"நாரத்தங்காய்."

"இந்தா: இங்கே வாயேன். ஒண்ணே ஒண்ணு எடுக்துக்க றேன்." அவள் முகத்திலே அதைத் தின்னவேண்டுமென்ற ஆவல் தாண்டவமாடிக்கொண்டிருந்தது.

சிறுமி சிரித்துக்கொண்டே, "இது விழுப்பு ஊறுகாய், பாட்டி; அம்மாட்டேச் சொல்லி வேறே தரச் சொல்லட்டுமா?" என்று பரிவுடன் கேட்டாள்.

"வேண்டாமடி; அம்மாட்டே யெல்லாம் சொல்லாதே. இதி லேயே ஒரே ஒரு துண்டம் எடுத்துக்கறேன்" என்று எடுத்துக் கொண்டாள்.

ஊறுகாய்த் தானத்தைவிடப் பாட்டி சொன்ன, "அம்மா விடம் சொல்லாதே" என்ற வார்த்தைகள் சிறுமியின் மனத்தில் வேலை செய்ய ஆரம்பித்தது. வீட்டுக்குள் நுழைந்ததும், மெள்ளச் சமாசாரத்தைச் சொல்லிவிட்டு, "ஒன்னிட்டே சொல்ல வேண் டாம், அப்படீன்னு அம்மா" என்றும் சொல்லிவிட்டாள்.

ரகசியமாக ஒவ்வொருவர் காதிலும் விழுந்த செய்தி அம்பல மாகிப் பாட்டிக்கு 'நாரத்தங்காய்ப் பாட்டி' என்ற பெயரும் சூட்டுவதற்குக் காரணமாயிற்று.

* * * *

இந்தச் சம்பவம் வேதாப்பாட்டியின் நினைவுக்கு வந்ததும் மீண்டும் ஒருமுறை நடுங்கிற்று உடம்பு. தான் சிறு வயசில் நடந்துகொண்ட மாதிரிதானே, அந்தக் குழந்தைகளும் நடந்து கொள்ளும் என்று எண்ணும்போது அவமானத்தால் அவள் உடம்பு குன்றிப்போயிற்று.

ஒரே நிமிஷம், இவ்வளவு எண்ணங்களும் பளிச்சென்று தோன்றி மறைந்தன. அப்போதுதான் வாயில் இருக்கும் கடலையை விழுங்காமலே யோசிக்கிறோம் என்ற நினைப்பு வந்தது அவளுக்கு. நாற்புறமும் சுற்றிப் பார்த்துக்கொண்டே வாயை அசைக்க ஆரம்பித்தாள். மறுபடியும் கடலை ஆசை அவளைப் பிடித்துக் கொண்டது. அதன் ருசியிலே தன்னை மறந்து லயித்துவிட்டாள்.

"ருசியாயிருக்கே. சே! இன்னும் ஓர் அணுவுக்குக்கூட வாங்கி யிருக்கலாம்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டே இன்னும் ஒரு கடலையை எடுத்து வாயில் போட்டுக்கொண்டாள்.

வாயை அசைத்துக் கொண்டிருக்கும்போதே திடீரென்று சுந்தாச்சு, "என்ன பாட்டி திங்கறே?" என்று தொப்பென அவள் மடியில் வந்து விழுந்தான். பாட்டி திடுக்கிட்டுவிட்டாள். வாயை அசைக்கவும் முடியாமல் திறக்கவும் முடியாமல் தலையில் அடித்துக் கொண்டாள்.

"ஏம் பாட்டி, ஒன்மேலே பட்டுட்டேன்னு தலையிலே போட் டுக்கறயா?" என்றான் சுந்தாச்சு. அதற்குள் கடலையை முழுங்கி

விட்டாள் பாட்டி. "சனியனே, மேலே பட்டுட்டயே. இந்தக் குளிரிலே என்னடா பண்ணுவேன்!" என்று சோகக் குரலிலே சொன்னாள். கடலையை ருசித்துத் தின்ன முடியவில்லையே என்ற ஏக்கமும் அதில் கலந்து தொனித்தது.

அதைக் காதிலே போட்டுக்கொள்ளாதவன்போல அவன் மீண்டும், "என்ன பாட்டி தின்னே?" என்று கெஞ்சினான்.

"ஆமடா தின்னேன். குளிரு பல்லடிச்சுக்கிறது. மேலேயும் பட்டுட்டு....." அவள் வார்த்தையை முடிக்கவில்லை. அதற்குள் மணி ஐயர் வாசற்புறமாக வந்தார். சுந்தாச்சு பாட்டியின் மடியில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும், "ஏம்மா, பலகாரம் பண்ணியாச்சா? பேரனுடே கொஞ்சறயே" என்று பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்.

"இல்லே. அதுக்குள்ளே இது வந்து விழுந்துடுத்து" என்று அலுப்புடன் கூறினாள் பாட்டி.

மணி ஐயருக்குக் கோபம் வந்துவிட்டது. "ஏண்டா மேலே பட்டே?" என்று கையை ஓங்கிக்கொண்டே நெருங்கினார். சுந்தாச்சு அழுகைக்கு ஆயத்தம் செய்தான்.

அதற்குள் பாட்டி, "என்னவோ கொழந்தை; ரெண்டுங் கெட்டான். இதுக்குக் கோவிச்சுக்காதே போ" என்று சமாதானம் செய்துகொண்டே பேரனை அணைத்துக்கொண்டாள்.

பாட்டியின் மடியில் இருந்தவாறே சுந்தாச்சு மூலையில் இருந்த கடலைப் பாத்திரத்தைப் பார்த்துவிட்டு, "பாட்டீ, கடலை" என்றான்.

"ஏதுடா? அதான் கொடுத்தேனே?" என்றாள் பாட்டி.

"அதிலே வெச்சிருந்தயே" என்று கொஞ்சினான் சுந்தாச்சு.

"ஆமா. வெச்சிருந்தா, அவ தின்னுட்டா; போடா, விளக்கேத்தியாச்சு; வாசிக்கப் போ" என்று அதட்டினார் மணி ஐயர். அவரது முதல் தாக்குதல் பலனற்றுப் போகவே இந்த இரண்டாவது வெடியைப் போட்டார். குழந்தை அவரைப் பார்த்துக் கொண்டே பாட்டியின் மடியிலிருந்து நழுவினான்.

ஆனால், அவருடைய வார்த்தைகள் பாட்டியை ஒரு கலக்குக் கலக்கிவிட்டன. தான் கடலை தின்றதை அவர் பார்த்திருப்பாரோ என்ற ஐயம் அவள் மனத்தில் எழும்பவே, தீயை மிதித்தவள்போலத் தவித்தாள். அவர் சகஜமாகப் பையனை அதட்டும் பாவனையில்தான் சொன்னார் என்பதை அவள் மனம் லேசில் ஏற்றுக்கொள்ளவில்லை. 'ஒருவேளை அவனுக்குத் தெரியுமோ என்னவோ! சே, நமது ஆசாரத்திற்குப் பங்கம் வந்ததுடன், பிறர் நையாண்டி பண்ணும்படியும் ஒரு காரியம் செய்துவிட்டோமே!' என்று எண்ணும்போது அவள் மனம் தவியாய்த் தவித்தது. 'இத்தனைநாள் கழித்து, இன்று காசு செலவிட வேண்டுமென்னும் ஆசை ஏன் வந்தது? காசு செலவிட வேண்டு

மென்ருல் இதைத்தானு வாங்கவேண்டும்? வாங்கினலும் ஒன்று எடுத்து வாயிலா போட்டுக்கொள்ள வேண்டும்? சே, பிறர் பழிக்கு ஆளாகிவிட்டோமே!'

பாட்டியின் மனத்திலே தாம் ஓர் எரிமலையைக் கிளப்பி விட்டுச் செல்கிறுமே என்று எண்ணுமலே மணி ஐயர் உள்ளே சென்ருர். அவரைப் பார்த்துக்கொண்டே பாட்டியும் ஐபமாலையைக் கையில் எடுத்தாள்.

மறுநாள் காலை ஆபீஸிற்குப் போகும்போது வாசலில் வந்து நின்ற மணி ஐயர், "அம்மா, இன்னிக்கும் காசு வேணுமா?" என்று அன்புடன் கேட்டார். பின்னல் நின்று கொண்டிருந்த சகதர்மணி, "கடலைக் கொட்டை வாங்கவேண்டாம்னு சொல்லுங்கோ" என்று சிரித்துக்கொண்டே சொன்னுள்.

"ஆமாம். என் பொழைப்பு, கேலியாத்தான் போச்சு!" என்று அலுத்துக்கொண்டாள் பாட்டி. இருவரும் திகைத்து விட்டனர். அவர்கள் இருவரும் தன்னை நையாண்டி செய்வது போலவே கிழவி மனத்தில் பட்டது.

ஆனல் பாவம்! விகல்பமற்று அவர்கள் கேட்கிறுர்கள் என்று எப்படித் தெரியும் அவளுக்கு?

ஆ. வே. ஐயராமன்

பெரிய இடத்துச் சமாசாரம் 69

முத்துவையர் டிராமிலிருந்து இறங்கித் தம்பு செட்டித் தெரு வழியே 67-ஆம் எண்ணுள்ள வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். அவர் மனம் துடித்துக்கொண்டிருந்தது. சுமார் ஐந்து வருஷங்களுக்குப் பிறகு அவர் அவனைச் சந்திக்கப் போகிறுர்.

ஐந்து வருஷங்களுக்கு முன்பு அதே தெருவில் அதே வீட்டில் அவரும் சந்திரசேகரனும் குடியிருந்தனர். சந்திரசேகரன் அச் சமயம் சட்டகலாசாலையில் வாசித்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு குஷிப் பேர்வழி. அவனிடத்தில் பணம் தண்ணீர் பட்ட பாடு தான். முத்துவையர் அவனுக்குச் சமைத்துப் போட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம். தங்கமான மனுஷர். சந்திரசேகரன் குடும்பத்திலேயே வெகு நாட்கள் பழகி வந்தவர். அதனல் அக்குடும்பத்தில் எல்லோரும் அவரிடத்தில் ஒரு தனி அபிமானம் வைத்திருந்தார்கள். சந்திர சேகரனும் அவரை வெறும் சமையல் செய்யும் ஆசாமி என்று நினைக்காமல் மரியாதையாகவே நடந்துவந்தான்.

ஆனல் இப்பொழுது இருக்கும் முத்துவையர் பழைய முத்துவையர் அல்ல. அவர் தேகம் கட்டுத் தளர்ந்துவிட்டது.

அவர் இப்பொழுது தம் சகோதரனின் தர்மத்தில் வயிற்றைக் கழுவுகிறார். அப்பொழுது இருந்த மன அமைதி இப்பொழுது அவரிடம் இல்லை. "நான் இல்லாவிட்டால் நீ சென்ற இடம் புல் முளைத்திருக்கும்" என்று சில சமயம் தம்பி மறைமுகமாகக் கூறும்பொழுதெல்லாம் அவர் தேகம் காலாக ஒடுங்கும். தம்பி வேண்டாமென்று போட்ட கிழிந்த வஸ்திரந்தான் அவருக்குப் புது வஸ்திரம். இதற்கு ஒன்றும் முத்துவையர் முணுமுணுப்பது இல்லை. பிறர் கேட்டாலும், "அவன் பெரிய சம்சாரி ஐயா. அவன் குழந்தை குட்டிகள் குறைவு ஒன்றும் இல்லாமல் இருக்கட்டும்" என்றுதான் கூறுவார்.

67-ஆம் எண்ணுள்ள வீட்டில், "சந்திரசேகரன், பி.ஏ. பி.எல்., அட்வொகேட்" என்று ஒரு பலகை தொங்கவிடப்பட்டிருந்தது. முத்துவையர் வாசற்படி ஏறியதும் அங்கே நின்றிருந்த குழந்தையைப் பார்த்து, "சந்திரசேகரையர் இருக்கிறாரா?" என்று கேட்டார். "அப்பா மாடியில் இருக்கிறார்" என்று சொல்லி அக்குழந்தை மாடிப்படியைக் காட்டிற்று. முத்துவையர் மாடிப் படியேறிச் செல்வதற்குள் சந்திரசேகரன் நடுவழியிலேயே அவரைச் சந்தித்து, "வாங்கோ, வாங்கோ; உங்களைப்பற்றி இப்பொழுது கூட நினைத்துக்கொண்டிருந்தேன். இன்று ஒரு கடிதம் எழுதலாம் என்று எண்ணினேன்" என்று கூறிக் கொண்டே மேலே அழைத்துச் சென்றான்.

இருவரும் நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டனர். முத்துவையர் லோகபிராமமாகப் பேசிவிட்டு, "எப்பொழுது ஜாகை வைத்தாய்?" என்று கேட்டார்.

"ஜாகை வைத்து ஒரு வருஷத்துக்கு மேல் ஆகிறதே. அப்பொழுது நான் எவ்வளவு குஷியாக இருந்தேனோ, அவ்வளவு கஷ்டப்படுகிறேன் இப்பொழுது. உத்தியோகத்திலோ கோர்ட்டுக்குப் போவதுதான் மிச்சமாக இருக்கிறது" என்று தன் கஷ்டங்களை எல்லாம் கூற ஆரம்பித்தான் சந்திரசேகரன்.

"வரும்படி இல்லாமல் பட்டணத்தில் வாசம் பண்ணுவது கஷ்டந்தான். ஆனால், அப்பா ஒன்றும் பணம் அனுப்புகிறது இல்லையோ? கேட்கிறதுதானே? அவர் தங்கமான மனுஷராச்சே" என்றார் முத்துவையர்.

"தங்கமோ, வெள்ளியோ! அவர் பேச்சைத் தட்டி நான் வக்கீலுக்கு வாசித்தேனும். அதற்காகவும் அவர் என் மீது கோபிக்கவில்லை."

"கோபமா? உன் மீது எதற்காக அவர் கோபித்துக் கொண்டிருக்கிறார்?"

"நான் என் மனசுக்கு இஷ்டப்பட்ட பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டதுதான் காரணம். அதனால் உதவி ஒன்றும் செய்யமாட்டேனென்று சொல்லி விட்டார்."

"சே சே! அப்படி அவர் மனசாரச் சொல்லி இருக்க மாட்டார். இந்த வயசு காலத்தில் அவருக்குக் கோபம் இருக்கத் தான் இருக்கும்."

இருவரும் சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தனர்.

"நீங்கள் ஒரு காரியம் செய்யவேணும்" என்று மறுபடியும் ஆரம்பித்தான் சந்திரசேகரன்.

"என்ன காரியம்? எந்தக் காரியமும் நான் செய்யத் தயாராகக் காத்துக்கொண்டு இருக்கிறேன்" என்றார் முத்துவையர்.

"எங்கள் அப்பா இங்கே வந்திருக்கிறாரும். திருவல்லிக்கேணியில் ஒரு ஹோட்டலில் தங்கியிருக்கிறாரும். என்மேல் கோபித்துக் கொண்டு இங்கேகூட வரவில்லை. நீங்கள் தயவுசெய்து அவரிடம் சென்று என்னுடைய பரிதாபகரமான நிலைமையைக் கூறி உங்களுடைய சாமர்த்தியத்தினால் அவரை இங்கே அழைத்து வர வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான் சந்திரசேகரன்.

இதைக் கேட்டதும் முத்துவையருக்குச் சர்வநாடியும் ஒடுங்கி விட்டது. சந்திரசேகரன் தகப்பனார் பெரிய கறார் பேர்வழி யென்று அவருக்குத் தெரியும். அப்படியிருக்க அவரிடம் சென்று சந்திரசேகரனுக்காகப் பரிந்துபேசுவதா? அதுவும் ஓர் சமையற் காரன் சென்றால் காரியம் நடக்குமா? போகாமலும் இருக்க முடியாது. கடைசியில், "போய்ப் பார்க்கிறேன்" என்று கூறினார்.

"ஒரு டாக்ஸியிலேயே போங்கள். ஒரு வேளை அவரையே அழைத்து வரும்படி இருக்கும்" என்றான்.

"சரி" என்று கூறிவிட்டுக் கீழே இறங்கினார் முத்துவையர். சந்திரசேகரன் அவரை வாசல் வரையில் கொண்டுவந்து விட்டுச் சென்றான்.

முத்துவையர் இடுப்பில் செருகி வைத்திருந்த பணத்தை எடுத்தார். மூன்று ரூபாய் இருந்தது. கடைச் சாமான் வாங்கிப் போட முதல் நாள் அவரிடம் தம்பி கொடுத்த பணம். 'சரி, பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்துக்கொண்டு, ஒரு டாக்ஸியைப் பிடித்துத் திருவல்லிக்கேணிக்குப் போக வர வாடகை பேசிக் கொண்டார்.

பெரிய தெருவில் ஒரு ஹோட்டல் வாசலில் டாக்ஸி வந்து நின்றது. முத்துவையர் டாக்ஸியை விட்டு இறங்கி உள்ளே சென்றார். உள்ளே விசாரித்ததில் சந்திரசேகரன் தகப்பனார் ராமையர் மாடியில் ஓர் அறையில் தங்கியிருப்பதாய்த் தெரிந்தது.

அறையில் படுத்துக்கொண்டிருந்த ராமையர் அவரைக் கண்டதும், "வாடா, முத்து" என்று வரவேற்றார். முத்துவையரும் அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்தார். ராமையர் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, "நம்ப பையனைக் கண்டயா?" என்று கேட்டார்.

எவ்விதம் பேச்சை ஆரம்பிப்பது என்று யோசித்துக் கொண்டு வந்தவர் இதைக் கேட்டதும் சிறிது தைரியம் கொண்டார்.

"பார்க்காமல் என்ன? அடிக்கடி பார்க்கிறேன்" என்று பதில் கூறினர்.

"அப்படியா? வக்கீல் தொழில் நன்முக நடக்கிறதோன்னே?"

"ஏதோ நடக்கிறது. பிள்ளையாண்டான் கொஞ்சம் சிரமப் படுகிறான் போலே இருக்கு."

"இல்லே; நான் தீபாவளிக்கு அனுப்பிய பத்து ரூபாயையும் திருப்பு அனுப்பிவிட்டானே!"

"ஒரு வேளை அவசியம் இருந்திருக்காது."

"அவசியம் எல்லாருக்குந்தான் ஏற்படுகிறது. ஐம்பது ரூபாய் கேட்டான். அதற்கு நான் பத்து ரூபாய் அனுப்பியிருந்தேன்."

"அதற்காகக் கோபித்துக் கொண்டிருக்கலாம்."

"கோபித்துக் கொண்டால் என்ன ஆகும்? எனக்கேதான் மனசு கேட்கவில்லே. முப்பது கூட அனுப்பாமல் இருந்து விட்டேனே என்று பிறகு வருத்தப்பட்டேன். முத்து, எனக் கென்ன? எனக்கு வயசாய்விட்டது. இந்தக் காலத்தில் எவ்விதக் கவலையும் இன்றிச் சுகமாய் இருக்கவேண்டியவன். இது என் தலைவிதி!" என்று கூறிக்கொண்டே தலையைக் கவிழ்ந்து கொண்டார் ராமையர்.

இந்தச் சமயத்தில் என்ன சொல்வது என்று முத்துவையர் சிறிது தயங்கினர். கடைசியில் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, "இப்பொழுது கூட ஒன்றும் கெட்டுவிட வில்லே" என்று ஆரம்பித்தார்.

"முத்து, இனிமேல் எனக்கு என்னடா? அவன்தான் சுகமாய் இருக்கவேண்டும். இருக்கிற வரையிலும் என்னவோ, நானும் அவளும் வயிற்றைக்கட்டி வாயைக் கட்டிச் சம்பாதித்துச் சேர்த்து விட்டோம். அவள் போய்விட்டாள். நானும் போகவேண்டிய வன்தான்" என்றார் ராமையர்.

அவரது தொனியில் சிறிது கரகரப்புத் தோன்றியது.

"என்ன அண்ணு, அப்படிச் சொல்கிறீர்கள்? இன்னும் எவ்வளவோ காலம் நீங்கள் இருக்கவேணும். அவன் இனிமேல் உங்களைத் திண்டாட விடமாட்டான் என்பது என் நம்பிக்கை" என்றார் முத்துவையர், சமாதானமாக.

"அவனுவது கவனிக்கவாவது! லாவும் வேண்டாம், அல்லாவும் வேண்டாம் என்று முட்டிக் கொண்டேன்; கேட்டானு? அதுதான் போனால் போகிறது என்றால், நம் குடும்பத்திலேயே இதுவரையிலும் வழக்கம் இல்லாதபடி ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கொண்டிருக்கிறான். நான் எவ்வளவோ மன்றாடினேன்; கேட்டானு? இப்பொழுது லாட்டரி அடிக் கிறான்; அடிக்கட்டும்!"

"அப்படி யெல்லாம் சொல்லக் கூடாது. இப்பொழுது பிள்ளையாண்டான் நேரே வந்து உங்களைப் பார்ப்பதற்குக் கூச்சப் படுகிறான். அதனால்தான் என்னை அனுப்பினான்."

"என்னத்துக்கோ?"

"உங்களை அழைத்துக்கொண்டு போகத்தான்."

"என்ன! என்ன!"

"நான் சொல்லுவது உங்களுக்கு நிஜமென்று படாது. நீங்கள் பட்டணம் வந்து விட்டுக்கு வரவில்லை யென்று அவன் மனசு மிகவும் கஷ்டப்படுகிறது. உடனே என்னைக் கூப்பிட்டு, உங்களிடம் தன்னை மன்னிக்கும்படி சொல்லி அழைத்துவரச் சொன்னான். நீங்கள் வராவிட்டால் அவன் என்ன செய்வானென்று தெரியாது. பைத்தியம் பிடித்து எங்கேயாவது ஓடிப்போனாலும் போய்விடுவான்."

முத்துவையரின் சொற்களெல்லாம் ராமையரின் இருதயத்தின் ஆழத்தில் சென்று பாய்ந்தன. அவரும் உணர்ச்சியுடைய மனிதர் தானே? முத்துவையர் கைகளைப் பிடித்துக்கொண்டு பரிதாபக் குரலில், "முத்து, என்னை ராக்ஷஸன் என்று எண்ணிவிடாதே. என் இருதயத்தில் ஈரம் இல்லை யென்று நினைத்து விடாதே. என்னை இது வரையில் புத்திர பாசம் அறுத்துக்கொண்டே வந்தது. இன்றுதான் அதற்கு விமோசனம். எல்லாம் கடவுள் செயல்" என்று கூறிவிட்டுக் கிளம்பச் சித்தமானார்.

வண்டி தம்புசெட்டி, 67-ல் வந்து நின்றது. சந்திரசேகரன் வாசலிலே நின்றுகொண்டு இருந்தான். இருவரும் மூன்று வருஷ மனஸ்தாபத்திற்குப் பிறகு சந்தித்தது இதுதான் முதல் தடவை. அவர்கள் இருவர் கண்களிலும் நீர் தேங்கி நின்றது. இருவரும் பேசாமல் ஸ்தம்பித்து நின்றனர்.

சந்திரசேகரனுடைய குழந்தை, ஒன்றும் புரியாமல் ராமையரையே பார்த்துக்கொண்டு நின்றது. ராமையர் அதை வாரி எடுத்துக் கன்னத்தோடு கன்னமாய் ஒத்திக்கொண்டார்.

இந்தக் கலாட்டாவில் டாக்ஸிக்காரன் அவசரப்படுத்தினான்.

சந்திர சேகரன் முத்துவையரைக் கண்டதும், "மாமா, நீங்கள் செய்த பெரிய உபகாரத்தை நான் எப்பொழுதும் மறக்க மாட்டேன்" என்றான்.

"என்ன சந்துரு, இப்படிப் பேசுகிறாய்? எல்லாம் பகவான் செயல். டாக்ஸிக்காரனுக்கு....." என்று இழுத்தார்.

"இன்னும் எதற்கு நிற்கிறான்? போகச் சொல்லுங்கள்" என்றான் சந்திரசேகரன்.

அவரால் அதற்குமேல் ஒன்றும் பேச முடியவில்லை. டாக்ஸிக் காரனிடம் சென்று தம்முடைய பணத்தில் வாடகையைக் கொடுத்தார்.

"சந்துரு, நான் போய்விட்டு வருகிறேன்" என்றார். அவர் வார்த்தைகளில் சுரம் இறங்கியிருந்தது.

"எங்கே அகத்துக்கா? சாப்பிட்டுவிட்டுப் போகலாம். ஜோலி ஜாஸ்தியா இருக்கும். சரி, ஆனால் போய்விட்டு வருகிறீர்களா?" என்று கூறிக்கொண்டே உள்ளே சென்றான்.

எதை நாடி வந்தாரோ அதையே இழந்தவராய் வெளியே வந்தார் முத்துவையர்.

"பகவானே! என்னை ஏன் இந்தப் பெரிய மனுஷ்யர்கள் மத்தியில் சிருஷ்டித்தாய்?" என்று நொந்துகொண்டு டிராமை நோக்கி நடந்து சென்றார்.

தி. ஜானகிராமன்

கமலியின் குழந்தை 70

கமலிக்கு ஒன்பதாவது மாதம். உட்கார ஒரு நாழிகை, எழுந்திருக்க ஒரு நாழிகை; நடந்தால் சிரமம், திரும்பினால் திணறல். இந்த ஸ்திதியில், மேல் மூச்சு வாங்கக் கிணற்றிலிருந்து மூன்று வாளி தண்ணீர் இழுத்துத் தோண்டியில் கொட்டி விட்டாள். தோண்டியை எடுத்து இடுப்பில் தூக்கி வைத்த அவள் ஒரு க்ஷணம் ஆடிவிட்டாள்.

தாழ்வாரத்தில் தன் குழந்தைக்கு விசிறிக்கொண்டிருந்த மன்னி, கமலிக்குப் பெரிய மைத்துனன் மனைவி, இந்தச் சிரமத்தை உட்கார்ந்தபடியே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

"இடுப்பிலே தூக்கிக் கொள்ள முடியாவிட்டால், கையைத் தொங்கவிட்டு எடுத்துக்கொண்டு போயேன்" என்று மன்னி சொல்லிக் கொடுத்தாள்.

கர்ப்பிணி இந்த யோசனையை ஏற்றுக்கொண்டு இடுப்பில் இருந்த குடத்தைக் கைக்கு மாற்றிக்கொண்டு உள்ளே போனாள். வெட்கத்தினால் முகத்தில் லேசாகப் புன்சிரிப்புத் தவழ்ந்தது.

அந்தப் புன்னகைதான் விஷமாக இருந்தது மன்னிக்கு. வாயைத் திறந்து ஏதேனும் 'சிரமமாயிருக்கு' என்று சொன்னால் அவளை அழவிடலாம், புண்ணில் கோலை விட்டு வேடிக்கை பார்க்கலாம் என்று அவள் நினைத்தாள். கமலிக்கு அதுகூடச் சொல்லத் தெரியாது.

கூடத்திலிருந்து குரல் கேட்டது. "திணறித் திணறி எதுக்காகத் தூக்கிக் கொண்டு வரணும்! சிரமமாயிருக்கு என்று சொன்னால் தலையா போய் விடும்? மக்கு!" என்று கமலியின் கணவன் மெதுவாக மூன்றும் பேர் காதில் விழாதபடி கலந்து கொண்டான். சொல்லிவிட்டு ஆபீஸிற்குப் போய் விட்டான். அவன் மெதுவாகப் பேசிவிட்டுப் போனது எப்படியோ மன்னியின் காதில் விழுந்து அவள் எரிச்சலைக் கிளப்பிவிட்டது.

"என்ன கரிசனண்டாப்பா பெண்டாட்டியிடம்! ஏன், ஒரு குடம் தானே இழுத்துக் கொட்டிவிட்டுப் போகிறதுதானே?" என்று மனத்திற்குள்ளேயே மைத்துனனுக்கு ஒரு சவுக்குக் கொடுத்தாள். இந்த ஆத்திரத்தில் விசிறிக் கொண்டிருந்த கை நின்றுவிட்டது. சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்த இரண்டு மூன்று ஈக்கள் குழந்தையின்மீது உட்காரவே குழந்தை புரண்டு கொடுத்தது. மன்னி சட்டென்று விழித்துக் கொண்டு ஈக்களை ஓட்டினாள்.

மன்னிக்குக் கல்யாணமாகிப் பத்து வருஷகாலமாய் விட்டது. புருஷன் தாலூகாக் கச்சேரி சமுத்திரத்தில் ஓர் இருட்டு மூலையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். நாற்பது ரூபாய் சம்பளத்திற்கு நாற்பது நாழிகை ஆபீஸில் வேலை. ஆபீஸ் கட்டுக்களை வீட்டுக்குச் சுமந்துவந்து முடிக்க மீதி இருபது நாழிகை. புருஷன் கை நிறையச் சம்பாதிக்கவில்லை யென்றால், வீட்டிலும் அதிகப் பெருமைக்கு இடம் இல்லை. அடுத்தடுத்து ஐந்து குழந்தைகள் பிறந்தன. எத்தனை குழந்தைகள் பிறந்தால் என்ன, யாராவது வேண்டா மென்று சொல்லப் போகிறார்களா? ஆனால் எல்லாம் பெண்ணுகப் பிறந்ததுதான் மன்னிக்கும் உலகத்திற்கும் பிடிக்க வில்லை.

"இப்படித்தான் அஞ்சும் பொண்ணுப் பொறக்கணுமோ, அடுத்ததானும் புள்ளையாப் பொறக்கணும்" என்று வீட்டுக்கு வருபவர்கள் அங்கலாய்த்தார்கள். "புள்ளைக் குழந்தையாப் பெத்துண்டு, ஆயுசும் அதிர்ஷ்டமுமா இருக்கணுண்டூம்மா" என்று அவள் நமஸ்காரம் பண்ணுகிறவர்களிடத்திலிருந்து ஆசீர் வாதம் வந்தது.

மாமனுர் பழைய பரம்பரை. "தலையணைக்குப் பஞ்சடைக்கிற மாதிரி தினையைத் திணிச்சுண்டே இருந்தா, புள்ளை என்னமாப் பொறக்கும்? பொம்மனாட்டிகளுக்குக் காயக்கிலேசம், விரதம் எல்லாம் விதிச்ச சாஸ்திரம் பொய்யா சொல்றது?" என்று பாதி காதில் விழுந்ததும் விழாததுமாக அவர் இரைந்தது அவளைக் குத்திற்று. அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. மாமனுரை வைகிறதா, புருஷனை வைகிறதா, தன்னையே நொந்து கொள்ளுகிறதா என்று அவளுக்குப் புரிய வில்லை. புக்ககத்துக்கு வந்து பத்து வருஷங்களாகி விட்டன. ஐந்து பெண் குழந்தைகள், ஓட்டின கன்னம், கட்டுவிட்டுப் போன உடல், இவைகளைத் தவிர வேறு சுகத்தைக் கண்டதாக அவளுக்குத் தெரியவில்லை.

மைத்துனனுக்குப் போன சித்திரையில் கல்யாணமாகி ஓர்ப்படி வீட்டுக்கு வந்தாள். பதினறு வயசிருக்கும். குடும்பத்திற்குப் போதுமான அழகு இருந்தது. நல்ல அடக்கம். கோபம் பிறந்த ஊரிலேயே கமலி பிறக்கவில்லை. புன்சிரிப்பாலேயே எதையும் சமாளித்துக்கொண்டு போய்விடுவாள்.

மன்னிக்கு இப்பொழுதுதான் ஓய்வு கிடைத்தது. சமையல், காரியம், வீடு மெழுகுவது, எல்லாவற்றையும் கமலி ஏற்றுக்

கொண்டாள். உப்பு எவ்வளவு போடவேண்டும், புளி இவ்வளவு கரைக்கலாமா என்று கமலி கேட்ட சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டிருந்தாள், மன்னி. மன்னியின் சாமர்த்தியங்களெல்லாம் வெளிக்காட்டச் சந்தர்ப்பம் கிடைத்தது. சிரித்துக்கொண்டே, அதிகார மென்று காட்டிக் கொள்ளாமலே தட்டிக் கொடுத்துக் கமலியை வேலை வாங்க ஆரம்பித்தாள், பழைய குமாஸ்தா புதுக் குமாஸ்தாவை வேலை வாங்குகிறமாதிரி. ஆனால் தாஸ்தாவிற்கு உயர்வு கிடைக்க வில்லை; பிள்ளையும் பிறக்க வில்லை.

கமலிக்கு இப்பொழுது ஒன்பதாவது மாதம். அதற்காக மன்னி கோபப் படவில்லை. வருகிறவர்கள் சொன்னதுதான் ஆத்திரம் மூட்டியது.

"பெரியவளுக்குத்தான் அஞ்சும் பொண்ணைப் பொறந்திருக்கு. உனக்காவது புள்ளையாப் பொறக்கணும்" என்று கமலிக்கு அனுக்கிரகம் செய்தார்கள் வந்த ஸ்திரீகள். மன்னிக்குப் பற்றி எரிந்தது. "புள்ள பொறக்கணும்னுமட்டும் சொல்லிவிட்டுப் போங்களேன். அவளுக்கு அஞ்சும் பொண்ணு, ஆறும் பொண்ணுன்னு என்னைச் சந்தியில் இழுப்பானேன்?" என்று வந்த வெறுப்பை மனத்திற்குள்ளேயே அடக்கிக்கொண்டாள்.

"கமலிக்குப் புள்ளதாண்டி பொறக்கும். உடம்பு அழகு கொடுக்கலியே. பொண்ணு பிருந்தா மினுமினுன்னு இருக்கும் உடம்பு. கமலி இப்படிச் சோகை கண்டு சீம்பிக் கிடக்கிறளே. புள்ளதாண்டி, புள்ளதான்; என்னடி சந்தேகம்?" என்று ஆராய்ச்சி முறையில் ஜோஸ்யம் சொன்னாள் மேல்வீட்டுப் பாட்டி.

ஸ்திரீ வர்க்கந்தான் இப்படிச் சொல்லிற்றென்றால் புருஷர்களாவது வெறுமனே இருக்கக் கூடாதா?

"ஏய், உங்க அண்ணைதான் ஒண்ணும் பிரயோசனம் இல்லை. நீயானும் புள்ளையாப் பெத்து வைடா!" – மைத்துனனின் நண்பர்கள் பேச்சு இது. உள்ளே இருந்த மன்னிக்கு ஏக்கமும் குரோதமும் பொங்கின. வேண்டுமென்றே எல்லோரும் கூடிப் பேசிக்கொண்டு சூழ்ச்சி செய்கிறதுபோல் அவளுக்குத் தோன்றிற்று.

இதெல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் அன்று காலையில் அந்த ஊமை ஜோஸியன் வந்துசேர்ந்தான். அடுத்த வீட்டுப் பெண்மணிகள் கையைக் காண்பித்தார்கள். கமலியின் கையைப் பார்த்துவிட்டு அவன் மீசையை முறுக்கிக் காட்டினான், பிள்ளை என்ற அர்த்தத்தில். மன்னி முகத்தில் ஈயாடவில்லை.

கமலியைப் பார்க்கப் பார்க்க அவளுக்குப் பொங்கிக்கொண்டு வந்தது. ஊர்ப் பேச்சும், ஊமை ஜோஸியமும் கமலிக்குப் பிள்ளைதான் பிறக்கும் என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டன. மன்னிக்குக் கமலியினால் தன்னுடைய கௌரவமே ஒழிந்து விட்டதுபோல் இருந்தது.

அண்ணன் தம்பிகளும் ஆபீஸுக்குப் போய்விட்டார்கள். மன்னிக்குச் சமயம் வாய்த்தது. வாய் போனபடி கமலியைக் குடைய ஆரம்பித்துவிட்டாள்.

"ஏ கமலி, தவலே நெறையத்தான் ஜலம் கொட்டினு என்ன? ரெண்டு சொம்பு மொண்டால் ஆயிடறது. கூட ரெண்டு தோண்டி கொட்டி விடுகிறது" என்று சொன்னாள். அது செய்து முடிந்ததும், "கமலி, செத்தெ இந்த ரவிக்கைக்குச் சவுக்காரத்தைப் பூசி ரெண்டு அடி அடித்து விடேன்" என்றாள். முற்றத்தில் அடிக்கும் வெயிலைக்கூடப் பாராமல் கமலி அதையும் முடித்து விட்டுத் துணியை விரித்துப் படுத்துக்கொண்டாள்.

"அதுக்குள்ளே என்ன படுக்கை? சாதத்திற்குத் தீர்த்தம் கொட்டிவிட்டு, பத்துப் பாத்திரங்களை யெல்லாம் கொல்லையிலே கொண்டு போடப் படாதோ! ஒலகத்துலே ஒருத்தரும் புள்ளையாண்டே இருந்ததில்லையா என்ன? இதென்னமோ எனக்கு அதிசயமாத்தான் இருக்கு! செத்தைக் கொருதரம் காஞ்சிருக்கிற இடமெல்லாம் படுத்துண்டு; ஐய! என்ன வேண்டியிருக்கு?" என்று மன்னி ஆரம்பித்தாள்.

கமலிக்கு இப்பொழுதுதான் கண்ணில் நீர் துளும்பிற்று. ஆனால் அடக்கிக் கொண்டாள்.

மத்தியான்னம் மூன்று மணி இருக்கும்; சிற்றுண்டி பண்ணுவதற்காக மன்னி வாழைக்காயை நறுக்கி விட்டு எண்ணெய்ச் சட்டியை அடுப்பில் போட்டாள். அடுப்பு திகுதிகு வென்று எரிந்ததில், வெகு சீக்கிரத்தில் எண்ணெய் காய்ந்து விட்டது. கடலை மாவு கரைத்து வைத்துக் கொள்ளவில்லை என்று அப்பொழுதுதான் மன்னிக்கு நினைவுவந்தது. பளிச்சென்று இந்த யோசனையும் தோன்றிற்று.

"கமலி!" என்று கூப்பிட்டாள். அடுப்பை மெழுகிவிட்டு, படபடப்புத் தாங்காமல் இடைக்கட்டில் ஒருக்களித்துப் படுத்திருந்தாள் கமலி. மன்னி கூப்பிட்டதும் மெதுவாகக் கையை ஊன்றி எழுந்து உள்ளே வந்து, "ஏன் மன்னி, கூப்பிட்டேளா?" என்று கேட்டாள்.

"ஆமாம், செத்தெ மச்சுமேல் ஏறி, கடலை மாவை எடுத்துத் தரயோ? முடியுமோ? இல்லாட்டா நான் எடுத்துக் கொள்கிறேன்" என்று கெஞ்சுகிற பாவனையில் சொன்னாள் மன்னி.

"இல்லை, மன்னி! நான் எடுத்துத் தருகிறேன்" என்று கமலி ரேழிப் பக்கம் போய் ஏணியை எடுத்து வந்தாள்.

ஏணி குறுகல். படி தூரத் தூர இருந்தது. ஒரு படியின் மூங்கில் ஒடிந்து போய்க் கயிறு போட்டு ஒட்டுப் போட்டிருந்தது.

கமலி முதல் படி ஏறினாள். இரண்டாம் படியும் ஏறி விட்டாள். மூன்றும் படி ஏறுவதற்குள் மேல் மூச்சு வாங்கிற்று.

சற்று ஆசுவாசப் படுத்திக்கொண்டு நான்காவது படி ஏறினாள். வலி பொறுக்க முடியவில்லை.

நின்று கொண்டே மன்னியைக் கூப்பிடலாமா என்று யோசித்தாள். கூப்பிடுவதற்குத் தைரியம் இல்லை. திணறிக் கொண்டே நின்று கொண்டிருந்தபோது, அண்ணு தாலுகா ஆபீஸிலிருந்து திரும்பி வந்து ரேழியைக் கடந்து உள்ளே வருவதைப் பார்த்தாள். அவர் உருவம் மறைந்ததும் கொல்லைப் பக்கத்திலிருந்து மன்னி வந்தாள், கமலியின் சிரமத்தைக் கண்டு களிப்பதற்காக. அண்ணு வந்தது மன்னிக்குத் தெரியாது.

"இன்னும் எடுக்கலே?" என்று மன்னி கேட்டாள்.

"சிரமமா இருக்கு, மன்னி" என்று தாழ்ந்த குரலில் சொன்னாள் கமலி. 'மன்னித்து விடுங்களேன்' என்று முகம் கெஞ்சிற்று.

"சிரமமாயிருக்குன்னு இறங்கி விடேன். முடியுமான்னு கேட்டதுக்கு, நான் எடுத்துத் தரேன்னு சொன்னியேன்னு பேசாமல் இருந்தேன். அப்பவே சிரமமா யிருக்குன்னு சொல்லப் படாதோ? அப்படிப் பயப்படறத்துக்கு என்னடீம்மா இருக்கு எங்கிட்ட, புலியா சிங்கமா?" என்று மன்னி புகைய ஆரம்பித் தாள்.

கமலிக்கு ஏன் சொன்னோம் என்று ஆகிவிட்டது. மேலே ஏறவும் மன்னி விடமாட்டாள். கலவரத்தை மறைக்கப் புன் சிரிப்புச் சிரித்துக்கொண்டே இறங்க ஆரம்பித்தாள். படிகள் தூரத் தூர இருந்தன. குளத்தில் காலை விட்டு ஆழம் பார்ப்பது போல் பார்த்துத்தான் இறங்கவேண்டும். குடித்தனம் வந்தது முதல் அதில் ஏறி ஏறிப் பழக்கம் உண்டு அவளுக்கு. ஆனால் இப்பொழுது வயிறு இடித்தது. ஆழம் பார்த்த வலது கால் படியைத் தாண்டிவிட்டது. அவ்வளவுதான். முறிந்து போன முருங்கைக் கிளைமாதிரி திடீரென்று சரிந்து கீழே விழுந்தாள் கமலி.

மன்னி இப்படி முடியும் என்று எதிர் பார்க்கவே இல்லை. பயத்தில் அவள் முகம் வெளுத்துவிட்டது.

"என்னடீ அங்கே?" என்று கச்சத்தை அவிழ்த்துத் தட்டுச் சுற்றுக் கட்டிக் கொண்டிருந்த அண்ணு ஓடிவந்தார். மன்னிக்கு அவர் வந்ததே தெரியாதாகையால் திடீரென்று அங்கு அவரைக் கண்டதும் திகைத்துப் போய்விட்டாள்.

"ஏணிமேல் அவளை ஏதுக்காகடி ஏறச் சொல்றே? தரித் திரமே! அஞ்சு குழந்தையைச் சுமந்திருக்கியே, ஞானமில்லை?" என்று கூச்சல் போட்டார் அண்ணு. தம்பி வந்தால் என்ன சொல்லுவான்? யாருக்கு எப்படிப் பதில் சொல்லுவது? அவ மானமும் பழியும் பெரிதாக வந்து விடும்போல் இருக்கிறதே என்று அவர் உடம்பு பதறிற்று. உடனே கச கசவென்று

நனைந்திருந்த பனியனைக்கூடக் கழற்றாமல் டாக்டரைக் கூப்பிடுவதற்காக ஓடினார்.

மன்னியும் ஓடிப்போய் ஜலத்தைக் கொண்டு வந்து முகத்தில் தெளித்தாள். கமலியின் தலையை மடியில் வைத்துக்கொண்டு விசிறிவிட்டு வயிற்றை மெதுவாகத் தடவினாள். உள்ளே இருந்த ஜீவன் துடி துடியென்று துடித்துக்கொண்டே அரைச் சாண் உலகத்தில் சுழன்று கொண்டிருந்தது.

கமலி மெதுவாகக் கண்ணைத் திறந்தாள். ஆனால் பேச முடியவில்லை. மன்னியின் குற்றம் செய்த கண்கள் கெஞ்சின. சற்றுக் கழித்து, இடுப்பைப் பிடித்துக் கொண்டே, "மன்னி ஏணியிலே ஏறினேன்னு ஒத்தரிடமும் சொல்லாதேங்கோ, மன்னி" என்று கமலி கெஞ்சினாள். அப்பொழுதுதான் மன்னியின், ஐந்து குழந்தைகளைப் பெற்றவளின், கண்களில் கர கர வென்று நீர் பெருக்கெடுத்தது.

பிறந்தகம் போனதும் வரப்போகிற இடுப்பு வலி இப் பொழுதே கண்டு விட்டது. வர வர அதிகமாகியும் விட்டது. டாக்டரும் அண்ணாவும் சற்று நேரத்தில் வந்துசேர்ந்தார்கள்.

காமிரா உள்ளே ஒழித்துப் படுக்கையைப் போட்டுக் கமலியை அழைத்துப் போனாள் மன்னி. மருத்துவச்சியும் கொஞ்ச நேரத்தில் வந்தாள்.

இரவு ஏழு மணி. அண்ணா கவலையினால் இங்கும் அங்கும் இருப்புக் கொள்ளாமல் அலைந்து கொண்டிருந்தார். கோளாறு ஒன்றும் ஆகாமல் இருக்க வேண்டுமே என்று காமாக்ஷி கோயில் வாசல் திண்ணையில் இருக்கும் பெரிய பிள்ளையாருக்கு அபிஷேகத் திற்கு வேண்டிக் கொண்டார். தம்பி இன்னும் ஆபீஸிலிருந்து வரவில்லை. இரவு ஒன்பது மணிக்குத்தான் வருவான். அவனிடம் என்ன சொல்லுவது என்று வேறு அவருக்குக் கவலை.

மன்னி மருந்து அரைத்துக் கொண்டும், வெந்நீர் போட்டுக் கொண்டும், வெளியே இருந்தபடியே மருத்துவச்சிக்கும் கமலிக்கும் சுசுருஷை செய்து கொண்டிருந்தாள். அவளுடைய தாய்மனம் கோட்டை கட்டிக் கொண்டிருந்தது. தனக்குப் பிள்ளை பிறந்தால் 'ராகவா' என்று கூப்பிடவேண்டும் என்று உதேசித்திருந்த பெயரையே கமலியின் பிள்ளைக்கு வைத்து விடுவது என்று தீர்மானித்துவிட்டாள். வேதனை தாளாமல் கமலி முனகும் சப்தம் உள்ளே இருந்து வந்தது.

ஏழரை மணி இருக்கும். மருத்துவச்சி, "அம்மா, அம்மா!" என்று கூப்பிட்டாள். அவசரம் அவசரமாக மன்னி ஓடினாள். மூச்சைப் பிடித்துக்கொண்டே, "என்ன?" என்று கேட்டாள்.

"பிரசவம் ஆயிடுத்தம்மா."

"என்ன?"

"பெண் குழந்தை!"

"பெண்ணே?"

"ஆமாம்."

மன்னி அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டாள். இப் பொழுதும் அவள் முகத்தில் ஈயாடவில்லை. குரலில் சுரத்து இல்லை சம்பிரதாயமாக, "தாயார்க்காரி எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டாள்.

"அதெல்லாம் ஒண்ணும் பயம் இல்லை, போம்மா!"

ஊர்ப் பேச்சையும் ஊமை ஜோஸியத்தையும் வைது கொண்டே மன்னி உள்ளே போய்ச் சர்க்கரையை எடுத்துவந்து வாசல் திண்ணையில் இருந்த அண்ணைவிடம், "இந்தாங்கோ!" என்று நீட்டினாள்.

கே. ஸ்ரீநிவாஸ், பி. ஏ.

என் தோட்டம் 71

"அப்பா அப்பா! நோ.....செடி கூப்பா! செடி கூப்பா!" என்று என் குழந்தை தாழ்வாரத்திலிருந்து கொஞ்சிக் கூப்பிடுகையில், நான் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்று விட்டேன்.

காற்றில் ஓய்யாரமாக ஆடும் செடி. அதன் கொம்பு முழுவதும் முத்துமுத்தாய்ப் பூத்துத் தொங்கும் புஷ்பக் கொத்துகள். அதன் களிப்பில் தானும் கலந்துகொள்ளத் துடிக்கும் என் செல்வப் பெண் மல்லிகா. குழந்தையின் குதூகலத்தில் தங்களுக்கும் பங்கு உண்டு என்று அலறும் புள்ளினங்கள். இந்த ஆனந்தக்காட்சியில் தேனுண்ட வண்டைப் போல என் மனம் லயித்துக் கிடந்தது.

"அப்பா, வம்மாட்டே?" என்று மல்லிகா அழாக் குறையாய்க் கேட்டதும் நான் அவளிடம் ஓடி அவளை வாரி எடுத்து அணைத்துக்கொண்டு என் தோட்டத்திற்குள் நுழைந்தேன்.

அடாடா! புஷ்பங்களின் சந்தோஷத்தைப் பார்க்கவேண்டுமே! ஒவ்வொன்றும் போட்டி போட்டுக்கொண்டு எங்களை வரவேற்றன. மைனாப் பறவைகள் மரக்கிளையிலிருந்து கீழே இறங்கி எங்களைச் சூழ்ந்துகொண்டன. வெகு வேகமாக அங்கும் இங்கும் ஓடும் அணில் சட்டென்று நின்று என்னை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தனக்கு அலுவல்கள் இருப்பதுபோல அப்புறம் நகர்ந்தது.

"அப்பா! அணில், நேக்கு அணில்" என்று குழந்தை கேட்கவும், தன் சம்பந்தமான விஷயந்தான் என்று எப்படியோ அறிந்த அந்த அணில், குழந்தையை ஏறிட்டு ஒரு பார்வை

பார்த்தது. அந்தப் பார்வையில்தான் என்ன அர்த்த வேகம்! குழந்தையின் இஷ்டத்தைத் தானே நிறைவேற்ற என்மீது ஏறி, குழந்தை கையில் வந்து எங்கே உட்கார்ந்துவிடுமோ என்று நான் சந்தேகிக்கும்படி இருந்தது அந்தப் பார்வை. மறுகணம் க்ரீச் என்ற சப்தம்; அணிலைக் காணோம். அணிலின் செய்கை என் மனத்தில் பல எண்ணங்களை எழச் செய்தது. ஹூம், என்னைக் கண்டுதான் அது பயந்து ஓடிவிட்டது. குழந்தையைக் கண்ட வுடன் அதன் முகத்தில் அரும்பிய குளிர்ந்த பார்வை, அப்படி என்னைக் கண்ட மறுவிநாடியே மங்கியா மறையவேண்டும்? என் மீது அந்த அணிலுக்கு ஒரு தனிப்பட்ட துவேஷம் இருப்பதற்கு வினையாட்டாகக் கூட ஒரு புல்லையும் அதன்மீது நான் எடுத்துப் போட்டதில்லை. தாழ்வாரத்தில் போடப்பட்டிருக்கும் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, அன்று வந்த பத்திரிகையைப் படித்துக் கொண்டிருப்பேன். குழந்தை மல்லிகா தள்ளாடிக் கொண்டு கீழே இறங்க யத்தனிப்பாள். அணில் அவள் கால் விரல்களைத் தொட முயல்வதுபோல நெருங்கி வந்து விளையாடும். அகஸ்மாத்தாய் நான் பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு அதைப் பார்த்துவிட்டேனுனுல் போதும். வந்தது ஆபத்து. ஓடி மறைந்துவிடும் அணில். என் குழந்தையும், "அப்பா, அணில் போச்சு" என்று கண்ணில் நீர் துளிக்க என்னிடம் முறையிட வருவாள்.

மனிதன்மீது எத்தனை அவநம்பிக்கை! என்ன செய்து விடுவானோ என்ற பயம். அணில் என்மீது எத்தனை அவநம்பிக் கைகொண்டாலும், நான் அதன்மீது வைத்திருந்த அன்பு சிறிதேனும் குறையவில்லை. நான் அதற்கு ஒரு தீங்கும் நினைக்க வில்லை என்று அதற்குப் புரியும்படி மேற்கொண்ட முயற்சிக ளெல்லாம் வியர்த்தமாயின. ஆனுல் ஒன்று: இவைகளெல்லாம் ஒன்றை மட்டும் பிகுதிபடுத்தின; என் குழந்தைமீது கொண்டிருக் கும் வாஞ்சையைத்தான் சொல்லுகிறேன். மல்லிகா வயசு முதிர முதிர, அணிலுடன் சர்வசாதாரணமாக விளையாட ஆரம்பித்து விடுவாள். நான் கடையிலிருந்து பிரதிதினமும் வாங்கிவரும் தின் பண்டங்களுக்கு அணிலும் போட்டி போட்டுக்கொண்டு வந்து விடும். அணில் எங்கள் தினசரி அதிதி என்று சொன்னுல் மிகையாகாது.

என் தோட்டந்தான் எனக்குப் பிதுரார்ஜிதம். என் அப்பா மிகவும் முன் ஜாக்கிரதைக்காரர் என்றே நினைக்கிறேன். மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் கண்ணுக்கு எட்டின தூரம் வயல்களும் ஒரு சிலரே பிதுரார்ஜிதமாக அடைகின்றனர். 'சிறு வயசிலிருந்தே என் தகப்பனுர் கஷ்டப்பட்டுச் சேர்த்த இந்தச் சிறு பூமி, இந்தப் பரந்த உலகில் எங்களுடையது என்று நாங்கள் தயங்காமல் கூறும்படியான மண், இதுதான் என் சுவர்க்கம், என் ஆஸ்தி, என் ஐசுவரியம்' என்ற ஆனந்த உணர்ச்சி வேருன்றி விட்டது.

தோட்டந்தான் என் வீடு; ஏன்? என் உலகம். பெற்றோர் கனிச் சிறு வயசிலேயே இழந்தேன். நான் பதினெட்டு வயசு அடைவதற்குள் என்னை வளர்த்துவந்த பாட்டியும் மறைந்தாள். எனக்கு மிஞ்சி நின்று, "கவலைப்படாதே; யார் மறைந்தாலும் நாங்கள் உன்னைக் கைவிடமாட்டோம்" என்று கூவுவதுபோல் அழைக்கும் என் தோட்டத்துச் செடிகளும் மரங்களுமே என் சாந்த வாழ்வில் பங்கு எடுத்துக்கொள்ள, சாந்தாவை மணந்தேன். அவளும் மல்லிகாவை எனக்கு அளித்துவிட்டு மறைந்தாள். மல்லிகா, தோட்டம் - இந்த இரண்டின் நடுவே நான் இருந்தேன்.

குழந்தை மல்லிகாவுக்குத் தோட்டம் என்றால் உயிர். சதா மரத்தினடியில் நாங்கள் இருவரும் இரவு முழுவதும் உறங்குவது என்றால் அவளுக்குச் சம்மதந்தான். தொட்டில் எதற்கு? தாலாட்டுப் பாட்டு எதற்கு? உற்ற துணைக்குக் குறைவா? இம்மி அளவும் ஓர் அம்சத்திலும் குறைவு இல்லை. தோட்டத்தில் வளரும் ஒவ்வொரு செடியும் மல்லிகாதான் தங்கள் யஜமானி என்று அறிந்ததுபோல அவளைத் தன் மலர்க்கரங்களால் கூவி அழைக்கும். அடாடா! அவள் மான்போல் குதித்து அதை வாரித் தன் மார்போடு அணைத்துக்கொள்ளும்போது, மரக்கிளைகளினின்றும் பறவைகள் குதூகலிப்பதைப் பார்க்கவேண்டுமே! அது மட்டுமா? அங்கு மாயமாய் ஆஜராகும் அணில் தன் முத்துப் பற்களால் அவள் விரல்களைக் கவ்விய பிறகுதான் மல்லிகாவுக்குத் தன் சுயநினைவு வரும். மறுகணமே அணில் அவள் கைகளில் ஏறிவிடும். அவளுடைய மிருதுவான விரல்கள் அதன்மீது பதியும். கண்களில் நீர் பொங்க, நான் இந்த ஆனந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே நிற்பேன். அந்தக் களிப்பில் கலந்துகொள்ள வேண்டும் என்பது என் துடிப்பு. ஆனால் அணிலின் அவநம்பிக்கை மல்லிகாவின் சந்தோஷத்தை அல்லவா கலைத்துவிடும்?

மாலை வேளையில் சூரியனின் சுவர்ண ஒளி மரக்கிளைக்குத் தங்கமுலாம் பூசும். தரையில் வாய்திறந்து பேச யத்தனிக்கும் நிழலின் துடிப்பைக் கூர்ந்து கவனிக்கும் மல்லிகா, "அப்பா, நிழல் பேச்சு, நிழல் பேச்சு!" என்பாள். அவள் கற்பனை உள்ளத்திற்கு நிழல் ஒரு பாஷை மட்டுமா பேசும்? ஒரு காவியம் அல்லவா பாடும்?

மல்லிகா பூங்கொடிபோல வளர்ந்து பதினாறு வயசு நங்கையானாள். மரத்தடியில் நான் உட்கார்ந்துகொண்டிருப்பேன். வீட்டிலிருந்து வெளியே வருவாள். ஆடிவரும் ஓவியம்போல் தோன்றும் மகளைக் கண்டு மனம் மகிழ்வேன். என் மகள்தான். தோட்டத்தை நோக்குவேன். மகளை நோக்குவேன். பூமியை நோக்குவேன். இம்மூன்றும் உள்ளத்துள் திகழும்; மனிதன் கற்பனைக்கெட்டாத காலம்முதல் தோன்றி, கவிகளும் தத்துவ ஞானிகளும், முற்றும் துறந்த முனிவர்களும் முடியாது என்று கைவிட்ட மாயப் பிரச்னையைப் பகிரங்கமாக நடித்துக் காட்டும்

நாடக உலகம். இன்று பொட்டல்; நாளைப் பூந்தோட்டம்; நாளைச் சூன்யம். இந்த மகத்தான மாறுதல்களுக்கு மனம் கலங்காத பூமி, யௌவனத்தில் பூரிப்பாகப் பூத்து நிற்கும் மல்லிகா: இவைகளின் மர்மந்தான் என்ன? நிலை உண்டா? யாரைக் கேட்டுத் தோன்று கின்றன? யாரைக் கேட்டு மறைகின்றன? - இந்த எண்ணங்கள் என் மூளையைக் குழப்பிக்கொண்டிருக்கையில், மல்லிகா என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, "அப்பா, ரொம்ப நாளாக உங்களிடம் ஒன்று கேட்க நினைத்தேன்" என்று ஆரம்பித்தாள்.

"மல்லிகா, ஒன்று ஏன்ன? எத்தனை வேண்டுமானாலும் கேள்" என்றேன்.

"அப்பா, எனக்கென்று ஒரு மல்லிகைச்செடி வேண்டும்."

"இப்போதே உனக்குக் கொண்டு வருகிறேன்" என்று நான் சொல்லிவிட்டு, மறுநாளே ஒரு நல்ல மல்லிகைச் செடி அவளுக் கென்று கொண்டுவந்தேன்.

தன் கையாலேயே அதை அவள் நட்டாள். நட்ட முகூர்த்தம் என்றே நினைக்கிறேன், மல்லிகாவுக்கு மணமும் ஆகிவிட்டது.

அவள் கணவனுடன், என்னையும் தோட்டத்தையும் தன் மல்லிகைச் செடியையும் விட்டுப் பிரியும் நேரமும் நெருங்கி விட்டது.

தெருவில் வண்டி வந்து நின்றது. கலங்கின கண்களுடன் மல்லிகா என்னை நோக்கி, "அப்பா, மல்லிகைச் செடியைப் பார்த்துக் கொள்ளுங்கள். மரங்களெல்லாம் ஜாக்கிரதை" என்றாள்.

அவள் பிரிவை உணர்ந்ததுபோல அணில் கிளையிலிருந்து வெளியே ஓடி வந்து அவள் காலைப் பற்றிக்கொண்டுவிட்டது. அதைத் தூக்கி எடுத்து முத்தமிட்டாள். அதன் முதுகும் மறு கணமே நனைந்தது.

"அப்பா, நான் வருகிறேன்" என்று மறுவார்த்தை கூறுமல் விர் என்று வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். அவள் கணவனும் அவளைப் பின்தொடர்ந்தான். வண்டி புறப்பட்டுத் தெருக் கோடியில் மறைந்தது.

அன்று கண்ட மகரிஷி பட்ட துன்பத்தை இன்று நான் அநுபவித்தேன். 'ஓ' என்று அலறவேண்டும் போல் இருந்தது எனக்கு. உள்ளே செல்ல மனம் வரவில்லை. அணிலும் என் நிலைமையை உணர்ந்ததுபோல் என்முன் வந்து உட்கார்ந்தது. செடிகள் அசைவற்று நின்றன.

ஆனால் மல்லிகைச்செடி மட்டும் துடித்துத் துடித்து அலறு வதை என்னால் எப்படி மறக்கமுடியும்?

மல்லிகாவும் என் பக்கத்தில் இல்லையாதலால் நான் சதா தோட்டத்திலேயே இருப்பேன். அதுவும், அவள் வைத்த

மல்லிகைச் செடியின் அருகிலேயே உட்கார்ந்திருப்பேன். அது மணிக்கு மணி வளர்ந்துகொண்டே இருக்கின்றதென்று நான் எண்ணினேன்.

ஒரு வருஷமாயிற்று. மல்லிகைச் செடியைப் பார்த்தேன். என்ன சௌந்தரியம்! மல்லிகா அதன் அழகைப் பார்த்து மகிழப் பக்கத்தில் இல்லையே என்ற குறை எனக்கு. கூர்ந்து கவனித்தேன்.

என்ன ஆச்சரியம்! ஒரு மல்லிகை மொட்டுத் தென்பட்டது. நான் புளகாங்கிதம் அடைந்தேன். ஆம், அவள் நட்ட செடிக்கு ஒரு புது ஜீவன், ஓர் ஆனந்த சோபை. உணர்ச்சிப் பெருக்கில் செடியை மார்போடு தழுவிக்கொண்டேன்.

"தபால்" என்ற சப்தம். திரும்பிப் பார்த்தேன். தபாற் காரன் ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

உடைத்துப் பார்த்ததும் என் சந்தோஷத்திற்கு எல்லை இல்லை. மல்லிகா எழுதிய கடிதந்தான். ஆவலுடன் படித்தேன்.

ஆம்; சில நாளில் எனக்குப் புதுப் பதவி அளிப்பது என்றும் எனக்குக் குதூகலந்தான் உண்டாகும். மல்லிகாவுக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது என்ற செய்தி என்னைச் சந்தோஷத்தில் திளைக்கச் செய்தது.

மல்லிகை மொட்டை இமைகொட்டாமல் கவனித்தேன். பிறப்பும், வளர்ச்சியும், பூர்ணப் பொலிவும் அதன் இதழ் உள்ளத்தில் ஊறிக் கிடக்கின்றன. நாளை அதன் கவிழ்ந்த இதழ்கள் விரியும். அழகு கமழும். மணம் பொங்கும். இந்த அலை மோதும் ஆனந்த வேகத்தில் நான் மெய்ம்மறந்தேன்.

எத்தனை நேரம் அங்கு நின்றேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சுய அறிவு வந்தவுடன் விண்ணை நோக்கினேன். அந்திப் பொழுது பகலின் பிரம்மாண்டமான கதவுகளை மூடிக்கொண்டிருந்தது. வானத்தில் நக்ஷத்திர விளக்குகள் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்றப்பட்டன.

மறுநாள் குதூகலச் செய்தி கிடைக்கும் என்ற சந்தோஷத்தில் நான் சிறிது நேரம் பத்திரிகைகளைப் படித்துவிட்டு உறங்கி விட்டேன்.

ஆம்; அந்தச் சப்தம் என் தூக்கத்தைக் கலைத்தது மட்டு மல்ல; என்னைக் குலைநடுங்கச் செய்துவிட்டது. அகோர மழை. உலகம் கிடுகிடுக்கும்படி இடி ஓலி. மின்னலின் அசுரக் களிப்பு. சூறாவளியின் கரங்கள் பூமியின் விருக்ஷக் கூந்தலைச் சின்னபின்னமாகப் பிய்த்துக்கொண்டிருந்தன.

என் தோட்டம்! என் தோட்டம் என்ன நிலைமையில் இருக்கிறதோ? நான் என் உயிருக்கு மேலாக மதிக்கும் தோட்டம் அழிந்தாலும் பரவாயில்லை.

ஆனால், மல்லிகை மொட்டு, நாளைக்குப் பூக்கப்போகும் மொட்டுக்கு என்ன கதி நேர்ந்துவிட்டதோ! தெய்வமே! என் உள்ளத்

கொதிப்பு என்னைப் பதறச் செய்தது. எண்ணுத எண்ண மெல்லாம் எண்ணினேன்.

வெளியே தலையை நீட்டக்கூட முடியவில்லை. அத்தனை மழை. பளிச்சிடும் மின்னலொளியில் தோட்டத்தின் பரிதாப கரமான காட்சி எனக்குத் தென்பட்டது.

'உனக்கு இரக்கம் இல்லையா? என்னை இந்தப் பேய்க் காற்றின் அசுரக் களிப்பினின்றும் காப்பாற்ற மாட்டாயா?' என்று கெஞ்சிப் பதறுவதுபோல விண்ணைத் தொட்டுக்கொண்டு நின்ற மரங்கள் மண்ணைத் தொட்டு என்னை வேண்டின. நான் இத்தனை நாட்களாக இத்தனை கஷ்டப்பட்டு வளர்த்துவந்த மரங் களுக்கும், போஷித்த செடிகளுக்கும் இந்தச் சோதனையா வரவேண்டும்? எனக்கு இருந்த வேகத்தில் அவைகளைக் கட்டி அணைத்துக்கொண்டு ஆறுதல் அளிக்கவேண்டும் என்று என் உள்ளம் பதறிற்று.

அந்த மல்லிகைக்கொடி, என் மல்லிகா வளர்த்த செடி, என்ன ஆகியிருக்குமோ! ஆ! திடீரென்று என் பெண்ணின் நினைவு வந்தது. அவளுக்கும் வாழ்வில் இது ஒரு பெரிய புயல்; சோதனைக் காலம். அவள் வைத்த செடி புயலில் அடிபட்டு வீழ்ந்திருக்குமா? அதில் தோன்றிய மொட்டு! அவள் கதி - அவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தை - நினைக்கும்போதே நெஞ்சம் படபடத்தது.

கதவு தட்டும் சப்தம்.

"ஸார், தந்தி ஸார்!" என்ற குரல். தந்தியா? என் பெண்? அந்த மொட்டு! என் மனம் குழம்பிற்று. நெஞ்சு துடித்தது.

என்ன சமாசாரம் வந்திருக்கிறதோ? கை வெடவெடத்தது. குடல் நடுங்கிற்று. தந்தியை வாங்கினேன். பிரித்துப் பார்க்கத் துணியவில்லை. கடைசியில் எப்படியோ பிரித்துப் படித்தேன்.

"மல்லிகாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது; குழந்தையும் தாயும் சௌக்கியம்.

என் கண்களில் என்னை அறியாமலே ஆனந்த பாஷ்பம் பொங்கிற்று. தந்திக்காரன் சும்மா நின்றுகொண்டிருந்தான். அவனிடம் ஒரு ரூபாயை எடுத்துக் கொடுத்தேன். அவன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"எனக்குப் பேரன் பிறந்திருக்கிறது. மிட்டாய் வாங்கிக் கொண்டு போய் உன் குழந்தைகளுக்குக் கொடு" என்றேன். எனக்கு இருந்த ஆனந்தத்தில் அவனும் பங்கு போட்டுக்கொண் டான். மல்லிகைச் செடியின் நினைவு மீண்டும் வந்ததும் தோட்டத் திற்கு ஓடினேன். தோட்டம் அலங்கோலமாக இருந்தது. புயலில் பெரிய மரங்கள் வேரற்று வீழ்ந்து கிடந்தன. இந்த அழிவில் அந்த மல்லிகைச் செடி, சற்றுச் சாய்ந்து வாங்கி நின்றது. அதன் மேற்கிளையில் இருந்த மொட்டு மலர்ந்து விகசித்து விளங்கிற்று.

என் தோட்டம் பாழாகவில்லை.

ரா. ஸ்ரீநிவாஸன்

அவியாச் சுடர் 72

செக்கச்செவேலென்ற மேனியுடன் சுமுகமாக இழைந்துகொண்டிருந்த அழகுக் கதிர்களை அள்ளி இறைத்துக்கொண்டே வாசலில் வந்து நின்றுகொண்டிருந்தாள் ஜகதா. அன்று கார்த்திகை அல்லவா? கண்ணைக் கூசவைக்கும் பேரொளியின் நடுவே மலரிதழ் போன்ற உதட்டிலே புன்னகை தவழ நின்றுகொண்டிருந்த அச்சோதிப் பிழம்பின் உருவம் என் கண் திரையில் விழுந்ததுதான், நகர முடியவில்லை. "பொரி உண்டையெல்லாம் பாக்கி இருக்கட்டும் ஜகதா! காலையிலே 'ட்யூஷனு'க்கு வரபோது முதல்லே அதைத் தான் கேட்பேன். அப்பறந்தான் பாட்டு" என்று சொல்லிக் கொண்டே நழுவ முயன்றேன்.

"அதெல்லாம் இல்லே; சூட்டோடு சூடாகச் சாப்பிட்டு விட்டுப் போகலாம் வாருங்கள்" என்று கூறிக்கொண்டே உள்ளே அழைத்துச் சென்றாள்.

"பொரி உண்டைக்குப் பதில் ஒரே ஒரு கீர்த்தனை, உம்!" என்று ஆக்ஞை கொடுத்துவிட்டுத் தம்புராவை அருகில் கொணர்ந்து 'ஙொய், ஙொய்' என்று சுருதி போட ஆரம்பித்து விட்டாள். அவள் பாடத்தான் சொன்னாள். அதைத் தட்ட முடியவில்லை.

ஆனால் இதே ஒரு பாட்டைத்தானே நான் வீட்டை விட்டுக் கிளம்பியபோது 'வேதா' கேட்டாள். "கார்த்திகை வருஷத் திற்கு ஒரு நாள். ஒரே ஒரு கீர்த்தனை பாடிட்டுப் போயேன்" என்றாள் வேதா. அவள் கேட்டதுமே என் முகத்தில் ஏற்பட்ட சுருக்கத்தைப் பார்த்து வேதாவின் முகம் சிவந்தது. 'உம்! என்றும் இல்லாமல் இன்றுதான் சங்கீதத்தில் பிரேமை ஏற்பட் டிருக்கிறதுபோலிருக்கிறது' என்ற எண்ணை அலைதான் அம்முகச் சுருக்கத்திற்குக் காரணம். நான் சங்கீதத் தொழிலை மேற்கொண் டது. ஏதோ கேவலமாய்த் தோன்றியது என் அத்தைக்கு. ஏன் வேதாவுக்குந்தான். அம்மாவைப்போலத்தானே பெண்ணும்? "அப்பா! வாண்டாண்டா இந்தக் கூத்தாடிப் பொழைப்பு" என்று எவ்வளவோ தடவைகள் வேதாவின் தாய் கூறியிருக்கிறாள். அதைப் பின் தொடரும் வேதாவின் 'களுக்' என்ற சிரிப்பு. 'சங்கீதத்திற்குத்தான் எவ்வளவு மதிப்புக் கொடுக்கின்றன இந்த வறட்டு இருதயங்கள்!' என்று நினைக்கும்போது என் உடல் பதறும். கலையற்ற உள்ளந்தான் வேதாவின் தாய்க்கு. ஆனால் அதில் அநுதாபம் நிறைந்திருந்தது. மழலை மாறுத வெகு இளம் வயசிலேயே என்னை விட்டுச் சென்ற என் தாயின் ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டு கண்ணின் கருமணியைப் போன்று என்னைக் காத்து வந்தாள் என் அத்தை. அவள் என்னைக் கையெடுத்து

வளர்த்து ஆளாக்கிவிட்டாள். அதற்குப் பிரதிபலனை என்னிட மிருந்து எதிர்பார்க்காமல் போகவில்லை. நான் வேதாவைக் கைப் பற்றுவேன் என்று இருதயத்தில் பெருங்கோட்டை கட்டியிருந் தாள். அவள் கனவை நனவாக்கவேண்டியது என் பொறுப்பு.

மழலை தேய்வதற்கு முன்னமே நான் வேதாவின் மலர்க்கரங் களைப் பற்றி உரிமைகொண்டுவிட்டேன். ஆனால் அன்று எங்கள் எதிரே அக்கினி குண்டம் இல்லை; தகுதிணைக்காகத் தொண்டை வறளக் கத்தும் வைதிகர்கள் இல்லை. அப்பா! அவளது பூவிதழ் போன்ற கன்னங்களைக் கிள்ளி விடுவேன். "அச்சோ! வலிக் கிறதா, இந்தா வலி போய்டும்" என்று சொல்லி அதில் என் உதட்டைப் பதிய வைப்பேன். பாவம்! அவளுக்கு எங்கே ஸ்பரிச உணர்ச்சி இருந்திருக்கப் போகிறது அப்போது? இளமையிலேயே என் சரீரத்தில் இனிமை இழையும். ஏதேதோ 'காவாலிப் பாட்டுக்'களெல்லாம் பாடுவேன். அன்று கொடுத்த கூத்தாடிப் பட்டந்தான் இன்னும் நிலவிவருகிறது.

அப்போதெல்லாம் அதே வார்த்தை அவ்வாயினின்று வந்த போது எனக்கு வேடிக்கையாயிருந்தது. ஆனால் இன்று அதே வார்த்தை என் அத்தையின் வாயினின்று உதிரும்போது, அத் துடன் மின்வெட்டுப்போன்ற சிரிப்பு ஒன்றும் தொடரும்போது என் உள்ளத்தீ மூண்டு மனம் வெதும்புவேன். கூத்தாடி — ஆம்! 'இவ்வார்த்தை என்னை இழிவு படுத்துவதா? அன்றி அரிய சங்கீதக் கலைக்கு இழுக்குத் தேடுவதா?' என்று நினைக்கும்போது என் உள்ளம் சிதறும். வேதாவின் கலைச்சுவை தெரியாத உள்ளம் கண்டு மனம் வெதும்பினேன். அவள் முகத்திலே இழையும் மின்னெழிலிலே சிருங்காரத்தைக் காண மறுத்தது என் உள்ளம். நாளடைவில் என் வெறுப்புக்கு இலக்கானாள் அவள்.

அப்படிப்பட்டவள், கார்த்திகையன்று என்றுமில்லாப் புது நாளாகக் கீர்த்தனை பாடு என்றால் என் உள்ளம் குழைந்து கொடுக் குமா? "இல்லை வேதா? என் தொண்டை ஒரேயடியாக வலிக் கிறது" என்ற வார்த்தையுடன் வெளியேறிவிட்டேன். 'இங்கே ஜகதாவிடம் அந்தத் தொண்டை வலி எங்கே போயிற்று!' என்று யார் கேட்கப்போகிறார்கள்? ஆம்! ஜகதா கலையின் பிரதி; வேதா கலையற்ற பிம்பம். ஜகதாவுக்கு நான் வெறும் வீணைதான் கற்றுக்கொடுத்தேன். ஆனால் நான் சொல்லிக் கொடுக்காமலேயே என் இருதய வீணையை மீட்ட ஆரம்பித்துவிட்டாள் அவள். அது செய்யும் 'ஜங்கார' ஒலிக்கு முன்னால் வேதாவின் குழைந்த குரலுடன் கூடிய பேச்சுக்கள் எங்கே?

மனச் சஞ்சலத்துடன் ஜகதா கோரியபடி ஒரு கீர்த்தனை பாடி விட்டு வெளியேறினேன். உடலில் பெருங்கொதிப்பு உண்டா யிற்று. வீட்டிற்குப் போய்ப் படுத்தேன். "ஏண்டாப்பா! கார்த் திகையும் அதுவுமா, படுத்துண்டிருக்கயே! வா கொஞ்சம் பட்சணம் சாப்பிட்டுவிட்டுப் போ" என்ற கனிவு ததும்பிய குரலில் என் அத்தை அழைத்தாள். மூலையில் வேதாவா நின்று

விசித்துக்கொண்டிருக்கிறாள்? ஆம்! நான் பாட மறுத்தது அவள் மனத்தைத் தைத்து, இருதயப்புண்ணைக் கிளரிவிட்டது. "சீ! பைத்தியம்! இதுக்கெல்லாமா அழறது? என்னிக்குமே இல்லாமே புதுசாப் பாடுன்னு வேடிக்கையாயிருந்தது. பாடல்லே. இதுக்கெல்லாமா கோபம்?" என்று தேறுதல் கூறினேன். அவள் முகம் மறுபடியும் பொலிவுற்றது.

ஒரு நாள் அவ்விபரீதமான சம்பவம் நடைபெற்றது. என் முக்மெல்லாங் குங்குமத் தழும்புகள் இருந்தன. தேகம் முழுவதும் கம்மென்ற மணம் வேறு. இதைத் தவறுக எடுத்துக்கொண்டு விட்டாள் வேதா. அன்று ஜகதாவினிடந்தான் போயிருந்தேன். வெள்ளிக்கிழமை. ஜகதாவின் தங்கை, பச்சிளம் சிறுமியின் கூத்தடிப்பு இவ்விபரீதத்தில் கொண்டு விட்டது. "வெள்ளிக் கிழமை யோல்லியோ! வெத்தெலே பாக்கு எடுத்துண்டு குங்குமம் இட்டுண்டு போங்கோ" என்று சொல்லிச் சிறு குழந்தை என் முகத்திலெல்லாம் குங்குமத்தைத் தடவிவிட்டது. அதைச் சரி வரக் கவனியாமல் வந்ததன் பலன், வேதா விபரீதமாய் அர்த்தம் செய்துகொண்டுவிட்டாள். கூத்தாடிப் பிழைப்பு இப்படித்தான் இருக்கும் என்று ஊர்ஜிதம் செய்துகொண்டாள். துக்கம் மூட்டியது என் இருதயத்தில். "வேதா, இப்படி என்ன மூளை கெட்டு விட்டது உனக்கு? என் விஷயம் தெரியாதா உனக்கு? பிறர் வர்ய்க்காகப் பயந்துகொண்டு கத்தி முனையில் நிற்பதுபோல் நடந்துவருகிறேன். என் நிலை அறியாமல் பேசுகிறாய். ஏதோ அந்தச் சிறு குழந்தை விளையாடிவிட்டது. அதை விபரீதமாய் எடுத்துக்கொண்டு விட்டாய். இதோ பார், வேதா, உங்களால் வளர்க்கப்பட்ட தேகம் இது. எனக்காக உன் தாய் பட்ட கஷ்டங் களை எல்லாம் அறிவேன். உங்களது மனசைப் புண்படுத்த நான் சிறிதும் விரும்பவில்லை. நான் சங்கீதத் தொழிலை மேற்கொண்டது முதல் உங்கள் இருவரது மனவெறுப்பிற்கும் காரணமாயிருக் கிறேன். அதனால் என் மனச்சஞ்சலம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இன்று நீ இப்படிக் குயுக்தியாய் அர்த்தம் செய்து கொண்டு விட்டாய். உண்மையைச் சொல்கிறேன்: சங்கீதம் எனக்குப் பெரிதல்ல. உங்கள் அன்புதான் எனக்குப் பெரிது. அதனால், வேதா, கடைசியாகச் சொல்கிறேன்: இனி இந்தத் தொழிலே வேண்டாம். இன்றைத் தினத்திலிருந்து விட்டுவிடு கிறேன். என்ன, திருப்திதானே?" என்று ஏக்கம் நிறைந்த பார்வையுடன் பார்த்தேன்.

அவள் சந்தேகத்தை அவளது கண்ணீரே சுத்தம் செய்து விட்டது என்று அறிந்தேன். இருதய பாரம் கழிந்தது. உண் மையில் அவளுக்காக என் கலையைத் தியாகம் செய்துவிட்டேன். இனியேனும் மன ஒருமிப்பு இருக்கும் அல்லவா?

மறுநாள் என்னைத் தேடிக்கொண்டு ஜகதாவே நேரில் வந்து விட்டாள். என் நிலை கண்டு வெதும்பினாள். கண்ணில் நீர்த் திரை படர அன்று என்னிடமிருந்து பிரிந்தவள் தான்.

வேதா என்னுடன் ஒன்றினாள். இன்பத்தில் திளைத்துக் கொண்டு சென்றது எங்கள் வாழ்வு. என் அத்தை எங்கள் இருவர் சேர்க்கையைக் கண்குளிரப் பார்த்துவிட்டுக் கண்மூடினாள். இது வரையில் எவ்வளவோ கார்த்திகைகள் கடந்துவிட்டன. இவ் வருஷந்தான் வேதாவைப் படுக்கையில் கிடத்திவிட்டது. அந்நேரம் மிகவும் கஷ்டப்பட்டாள். என் மாணிக்கம் என் கையை விட்டு நழுவி விடுமோ என்று கூடச் சில சமயம் பயந்தேன். ஆனால் எங்கள் இன்ப வாழ்க்கைப் படகைக் கவிழ்க்கத் திடம் கொள்ள வில்லை இறைவன். சிறிது சிறிதாக உடல் தேறினாள்.

அன்றுதான் கார்த்திகை. முன்னெல்லாம் ஜோதி நிறைந்த வீட்டை இருள் கவ்வியது. "கார்த்திகையும் அதுவுமா, தலையிலே கையை வச்சிண்டு உட்கார்ந்துகொண்டிருக்கிறேளே! வாசலிலே ரெண்டு அகல் விளக்கை ஏத்தி வெச்சுட்டு அப்புறம் மருந்து வாங்கிண்டு வரக்கூடாதா?" என்றாள் வேதா. அவள் கூறிய படியே அகல் விளக்கை ஏற்றி வைத்தேன். எங்கள் விட்டிற்கு எதிர் சாரியிலேதான் 'டாக்டர்' இருந்தார். அன்றுதான் அவ ருடைய மனைவியும் வருவதாகச் சொன்னார். 'வந்திருக்கலாம்' என்ற எண்ணத்துடன் அவர் வீட்டுக்குப் போனேன். உள்ளே நுழைந்தேன். பழகின முகம் ஒன்று கண்ணில் பட்டது. முதல் பார்வையில் அடையாளம் தெரியவில்லை. 'யார்? ஜகதாவா.....' ஆம்! ஜகதாவேதான். குறுகுறுப்புடன் கூடிய ஓர் இளம் சிறுவன் பக்கத்தில். என் களிப்புக் கரை புரண்டது. அது என் வாயையும் அடைத்துவிட்டது. "விச்வாஸ்!" என்ற அப் பழகிய அமுதக் குரலைக் கேட்டதும் என் உள்ளம் குழைந்து கொடுத்தது. பிரிவின் ஏக்கம் மறைந்து கண்கள் பூரித்தன. "நான் பையன் கிட்ட மருந்து கொடுத்தனுப்பறேன். நீங்க உட்காருங்கோ" என்றாள்.

மறுப்பேது? ஏதேதோ அளவளாவினோம். நான் நிறுத்திய அன்றைத்தினமிருந்து அவளது வீணை தட்டி எழுப்புவாரின்றித் துயிலைக்கொண்டு விட்டது என்று கேட்டு மனம் வெதும்பினேன். அப்போதுதான் வாசல் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. ஜகதா என்னை உள்ளே வந்த டாக்டருக்கு அறிமுகம் செய்து வைத்தாள். அவரும் மிகவும் சந்தோஷப்பட்டார். பிறகு அவர் உள்ளே போய்விட்டார்.

நாங்கள் பேசிக்கொண்டே இருந்தோம். "ஜெகு, இங்கே அலமாரியிலே தனியா வச்சிருந்தேனே ஒரு நீல பாட்டில்! அது எங்கேம்மா?" என்று சொல்லிக்கொண்டே வந்தார். "அதைத் தானே இவர் கிட்டே கொடுக்கச் சொன்னேன்? அதைப் பையன் எடுத்துண்டு போய்ட்டானே!" என்ற பதிலைக் கேட்டு டாக்டரின் முகம் வெளுத்தது. ஏன் அந்த மாறுதல்?

"ஐயையோ! அதையா நான் கொடுக்கச் சொன்னேன்? அதிலே விஷம் கலந்திருக்குமே! மேஜை மேலே இருந்த நீலப் பாட்டிலைத்தானே கொடுக்கச்சொன்னேன்?" என்றதும் எனக்குச் சொரேல் என்றது. "விஷமா? ஐயோ!" என்று தொண்டை

கிழியக் கத்தினேன். அப்படியே இடிந்துவிட்டேன். அவ்வீட்டை ஒரே தாவாகத் தாவ எப்படித்தான் பலம் வந்ததோ? உடல் வெதிரிக்கொண்டே வாசற்படியை மிதித்தேன். நான் உள்ளே நுழையப் போனேன். சுடர் விட்டெரிந்த அகல் விளக்கானது சமயம் பார்த்து 'பட்' என்று அணைந்தது. 'என் வாழ்வின் சுடரும் அணைந்திருக்கும்' என்று கூடத் தோன்றி விட்டது எனக்கு. உள்ளே நுழைந்துவிட்டோம். அங்கு நாங்கள் கண்ட காட்சி: ஜகதாவின் குழந்தை – மருந்து, அல்ல, விஷம் எடுத்துச் சென்ற குழந்தை - வேதாவின் மார்பின்மீது உட்கார்ந்து கொண்டு கொஞ்சிக்கொண்டிருந்தான். மருந்தைச் சாப்பிட்டு விட்டாள் போலிருக்கிறது வேதா!

"வேதா! மருந்து எங்கே?" என்று பயங்கரம் தோய்ந்த குரலில் கேட்டேன்.

"பாவம்! குழந்தை எடுத்துண்டு 'குடுகுடு'ன்னு ஓடி வந்தானும். வாசல்லே மாடு ஒன்று பக்கத்திலே பாய வந்ததாம். இது பாவம்! அலறிப்புடைச்சுண்டு வந்ததிலே வாசற்படியிலே இடிச்சுப் பாட்டில் ஒடைஞ்சுடுத்தாம்" என்றதுதான். அப்பா! அவ்வார்த்தைகள் இப்பாழும் இருதயத்தை எவ்வளவு குளிரவைத்தன? சரேலென்று குழந்தையை எடுத்துக்கொண்டு மார்புடன் அணைத்துக் கன்னங்களில் மாறி மாறி முத்தங்கள் கொடுத்தேன். என் வாழ்வின் ஒளிச்சுடர் அவியாமல் காத்த அதற்கு முத்தந்தானு பரிசு?

கா. மு. ஷெரீப்

கடமை 73

"நீம் வீட்டுக்கு ஒரு வேலைக்காரியை வைத்திருக்கிறேன்; உங்களுக்குச் சொல்லவில்லையே!" என்றாள் கல்யாணி.

"பிரமாதம்! இதை என்னிடத்தில் ஏன் சொல்லவேண்டும்? அவள் உன் வேலைக்காரி; நான் தெரிந்துகொண்டு என்ன ஆக வேண்டியிருக்கிறது?" என்றான் சங்கரன். அவன் முகத்தில் வழக்கத்திற்கு மாறுகச் சிறிது கோபக்குறி தென்பட்டது.

"ஆமாம், நான் ஒரு காரியம் செய்தால் அது உங்களுக்குப் பிடிக்கிறதில்லை. பிடிக்கவில்லை என்று பட்டவர்த்தனமாகச் சொல்லுவதும் கிடையாது!" என்று ஆத்திரம் கலந்த குரலில் சொல்லிவிட்டு, மூஞ்சியை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள். அது சங்கரனுடைய கோபத்தைத் தணிக்கக் கல்யாணியினுல் உபயோகிக்கப்படும் அஸ்திரம்.

"இதோ பார் கல்யாணி: எதற்கெடுத்தாலும் நீ இப்படிக் கோபித்துக் கொள்கிறாயே! நான் ஒருவன் இந்த வீட்டில்

இருப்பதாக நீ மதித்து நடக்கிறாயா? என்னைக் கேட்காமல் நீ எப்படி வேலைக்காரியை அமர்த்துவது?" என்றான்.

"பெரிய தவறுதான்; உங்களைக் கேட்காமல் வேலைக்காரியை அமர்த்திவிட்டேனே! நீங்கள்மாத்திரம் என்னைக் கேட்டுக் கொண்டுதான் எல்லாக் காரியமும் செய்கிறீர்களோ? ஒரு வாரத் திற்கு முன்பு தோட்டக்காரனை வைத்தீர்களே; அதுகூட என்னைக் கேட்டுக்கொண்டுதானே?" என்றாள் கல்யாணி. அவளுடைய கண்கள் ஒருவிதக் குறும்புடன் அவனை நோக்கின.

"கல்யாணி, விஷயம் அறியாத பெண் என்பது நீதான். அவன் எனக்குத் தெரிந்தவன்; என் நண்பன் வீட்டில் வேலை பார்த்தவன்; மேலும் யோக்கியன். அப்படிப்பட்ட ஒருவனை நான் வேலையில் அமர்த்துவதில் உன்னைக் கேட்டுத்தான் ஆக வேண்டுமா?" என்றான் சங்கரன். அவனுடைய உதட்டின் கடைசியிலே புன்னகை ஒன்று ஒட்டிக்கொண்டிருந்தது.

"அதைப் போலத்தான் சௌந்தரமும். யோக்கியப் பொறுப்பும், நல்ல நடத்தையும் உடையவள் என்று தெரிந்த பின்புதான் அவளை வேலைக்கு அமர்த்தினேன். நம் வீட்டிற்குப் பால் கொடுக்கிறாள் பாருங்கள் மரகதம், அவளுடைய தங்கை தான் சௌந்தரம்.....பாவம்! அவள் வாழ்க்கை மிகவும் துயர மானது. அன்று அதைச் சொல்லும்பொழுது மரகதம் 'கோ' வென்று அழுதுவிட்டாள்" என்றாள் கல்யாணி.

"ஓகோ! அவளுடைய அழுகையில் மயங்கி, அவள் சொன்ன கதையைக் கேட்டு ஏமாந்துபோய், அவள் தங்கையை வேலையில் சேர்த்துக்கொண்டாய் என்று சொல்லு. நானே கதை எழுது கிறவன். என்னுடைய மனைவி, இன்னொருத்தி சொன்ன கதையைக் கேட்டு ஏமாந்துவிட்டாளே!" என்றான் சங்கரன். உண்மையிலேயே அவன் ஒரு பெயர் பெற்ற எழுத்தாளன்தான்.

"ஆமாம்; உலகத்திலே உண்மையின் சொரூபம் நீங்கள் ஒருவரே. அவள் சொன்னது கதை என்றே வைத்துக்கொள் ளுங்கள். ஆனால், அவ்வளவு அருமையான கதை உங்கள் கற்பனையில் உதயமாகக் காணுமே! சௌந்தரத்தின் வாழ்க்கை எவ்வளவு சோகம் நிறைந்தது தெரியுமா?" என்று மடக்கினாள் கல்யாணி.

"வீண் வளர்த்தல் தேவையில்லை. உன் பீடிகை எனக்குத் தெரியும். நீ சொல்லப் போவதை நான் கேட்கத் தயார். ஆரம்பிக்கலாம் உன் கதாப் பிரசங்கத்தை" என்றான் சங்கரன்.

அவன் முன்னால் ஒரே காகிதமாகக் காட்சியளித்த மேஜைமீது அமர்ந்துகொண்டு, சௌந்தரத்தின் துயரம் தோய்ந்த வாழ்க்கை ஓவியத்தை வார்த்தை கொண்டு வரையலானாள் கல்யாணி.

* * *

இளமையிலேயே தாய் தந்தையரை இழந்த சௌந்தரம், தன் அத்தை மகன் ராமலிங்கத்தைத் தன் பதினைந்தாவது வயசில்

மணந்துகொண்டாள். அவளுக்குக் கல்யாணம் ஆன ஒரு வருஷத்திற்கெல்லாம் அவள் புருஷனுக்குப் போலீஸில் உத்தியோகம் கிடைத்தது.

"சௌந்தரம் நல்ல அதிருஷ்டசாலி. அவள் வந்தாள், என் கஷ்டமும் தீர்ந்தது!" என்று தன் நண்பர்களிடத்திலே பெருமை யாகக் கூறிக்கொள்வான் ராமலிங்கம். அதைக் கேட்கும்போது சௌந்தரத்தின் உள்ளம் மகிழ்ச்சியினல் பூரிப்படையும்.

ராமலிங்கம் மிகவும் யோக்கியமானவன். அவன் தம்பி முருகையனுக்குத் தான் வேலைப் பார்க்கும் ஊரிலேயே ஒரு சிறிய வெற்றிலே பாக்குக் கடை வைத்துக் கொடுத்திருந்தான். அவனுடைய தாய்தந்தையர் கொஞ்ச காலத்திற்கு முன்பே இறந்துபோய்விட்டார்கள்.

ராமலிங்கம் தன் தம்பி முருகையனிடத்தில் எவ்வளவு அன்பு வைத்திருந்தானே, அவ்வளவு பற்றுதல் தேசத்தின்மீது முருகைய னுக்கு. ஒவ்வொரு நாளைக்குச் சாப்பிட வரும்பொழுது தன் அண்ணி சௌந்தரத்திடம், முருகையன் வேடிக்கையாகப் பேச்சை ஆரம்பிப்பான். "இதோ பார் அண்ணி, நம் நாட்டின் விடுதலைக் காகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டால் அதில் சேர்ந்து தொண் டாற்றுவதற்கு அண்ணுவின் இந்த உத்தியோகம் அவருக்கு இடமளிக்குமா? நாம் ஏழையாக வாழ்ந்தாலும் வாழலாமே தவிர, அண்ணு இந்த உத்தியோகம் பார்ப்பதில் எனக்குத் துளிகூட இஷ்டம் இல்லை" என்பான்.

முருகையன் இப்படிப் பேசுவது சிறுபிள்ளைத்தனம் என்று முதலில் சௌந்தரம் கருதினுள். ஆனல், வரவர அவன் நடத்தை எல்லாம் அவன் பேச்சைப்போல் தேசத்தைப் பற்றியதாக இருக்கவே, அதைத் தன் கணவனிடத்தில் ஒரு நாள் சொல்லி வைத்தாள்.

ராமலிங்கம் தன் தம்பி தேசியவாதியாகிவிட்டதை நினைத்து மிகவும் துக்கப்பட்டான். எத்தனையோ 'காங்கிரஸ் வாலா'க் களுக்குத் தன் கையால் சவுக்கடி கொடுத்ததெல்லாம் ஒரு கணம் அவன் நினைவுக்கு வந்தது. அதைப்போலத் தன் தம்பியும் அடி படுவதா? ஆகவே, எப்படியாவது அவனையும் ஒரு சர்க்கார் ஊழியனக ஆக்கிவிட்டால்? 'ஆம்; அதுதான் சரி' என்ற முடிவுக்கு வந்தான்.

தன் கணவனுடைய முடிவைச் சௌந்தரம் அறிந்தபொழுது அதை முருகையனிடம் தெரிவித்தாள். அதற்கு அவன், "எங்கே யாவது நாடோடியாக ஓடிப்போனலும் போவதே தவிர, அடிமை வாழ்வில் மூழ்கிக் கிடக்கும் உத்தியோகம் பார்க்கத் தயாராக இல்லை" என்று திண்ணமாகக் கூறிவிட்டான்.

முருகையனுடைய முடிவை அறிந்த சௌந்தரம் அவனி டத்தில் ஒன்றுமே பேசவில்லை. தன் கணவனிடத்தில், "அவன் விஷயத்தில் குறுக்கிடாமல் இருப்பதே மேல்" என்று மட்டும் சொல்லி வைத்தாள்.

சௌந்தரத்தின் வார்த்தை அவள் கணவனுக்குத் தேவ வாக்குக்குச் சமானம். எனவே, அதன் பிறகு ராமலிங்கம் தன் தம்பியை ஒன்றுமே கேட்பதில்லை.

* * *

வருஷங்கள் சில கழிந்தன.

போர்முழக்கம், உலகை ஒரு புறத்திலிருந்து கபளீகரம் செய்யத் தலைப்பட்டது. ஜப்பானியப் படை 'இந்தோ பர்மா' எல்லை வரையில் வந்துவிட்டது. இந்தச் சமயத்தில் இந்தியாவின் தலைவர்கள் சிறையில் இடப்பட்டனர். இதைக் கண்டு ஆத்திர மடைந்த மக்கள் உள்ளக் கொதிப்பால் நாட்டில் நாச வேலையை ஆரம்பித்தனர். 'சுதந்தரப் பைத்தியம்' தலைக்கேறிப் போயிருந்த முருகையன், தன் செய்கை சரியா, தப்பா என்று யோசிக்க வேண்டிய அறிவை இழந்துவிட்டான். தலைவர்கள் சிறைப் படுத்தப்பட்டார்கள் என்ற செய்தி அவன் ரத்தத்தைக் கொதிப் படையச் செய்தது. முன் பின் யோசியாமல் அந்தக் கலகக் கும்பலில் சேர்ந்துகொண்டான்.

ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தீயிட்டுவிட்டுக் கிளர்ச்சிக்காரக் கூட்டம் தாலூகா ஆபீஸை நோக்கிப் புறப்பட்டது. கூட்டத்தில் ஒருவன், "கஜானாவைக் கொள்ளையிடுங்கள்" என்றான். உடனே ஆயிரக்கணக்கான வாலிபர்கள் கஜானா இருக்குமிடம் நோக்கிப் பறந்தனர்.

சர்க்காரின் சார்பாகக் கஜானாவின் பாதுகாப்பாளராக நின்று கொண்டிருந்த 'கான்ஸ்டேபிள்' இருவரில் ராமலிங்கமும் ஒருவன். அவன் தம்பி முருகையன்தான் கஜானாவை உடைக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான்.

நிலைமை மிஞ்சிவிட்டது. அதை அறிந்த அவ்விரு கான்ஸ் டேபிள்களும் தற்காப்பின் நிமித்தம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது. அவசரத்தில் யார் யாரை நோக்கிச் சுடுகிறோம் என்பதைக்கூட ராமலிங்கம் உணரவில்லை.

மார்பிலே துப்பாக்கிக் குண்டு பாயவே, முருகையன், "ஆ!" என்ற அலறலுடன் கீழே சாய்ந்தான். அந்தக் குரல் ராமலிங் கத்தின் காதிலே நாராசம் பாய்ச்சியது போல இருந்தது. தன் தம்பிதானா அப்படி அலறியது? ஆம்! அவன்தான்! "ஐயோ! அட பாவி!" என்று கதறிக்கொண்டே கையில் இருந்த துப்பாக் கியைக் கீழே எறிந்துவிட்டு முருகையன் கிடந்த இடத்திற்கு ஓடினான். அந்தத் தேசியவாதியின் கரத்திலே இருந்த மூவர்ணக் கொடி அவன் மார்பிலிருந்து பீரிட்டெழுந்த ரத்த வெள்ளத்தால் நனைந்துகொண்டிருந்தது.

ஆவேசத்துடன் பாய்ந்து தன் தம்பியை மார்புடன் தழுவிக் கொண்டான் ராமலிங்கம். துப்பாக்கியின் சப்தத்தால் வீராவேசம் கொண்ட வாலிபர்களில் ஒருவன் ராமலிங்கத்தைத் தன் பலம்

கொண்டவரையில் தாக்கினான். கூட்டம் சிறிது நேரத்திற்குள் அவனை உருத் தெரியாதபடி சின்னபின்னமாக்கிவிட்டது.

அன்று மாலைக்குள் வெளியிலிருந்து ஆயிரக்கணக்கான 'சோல்ஜர்'கள் வரவழைக்கப்பட்டுக் கலகம் ஒருவாருக அடக்கப் பட்டது.

இரவு மணி பதினொன்று இருக்கலாம். தன் கணவனும் மைத்துனனும் வரவில்லையே என்று கவலையால் துடித்துக் கொண்டிருந்த சௌந்தரத்தின் மூன்பு இருவருடைய பிரேதங் களும் கொண்டுவந்து கிடத்தப்பட்டன.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சியால் மனம் இடிந்துபோன சௌந்தரம், உயிரற்ற கற்சிலை போல ஆனாள். வந்தவர்கள் ஏதேதோ கூறி அவளைத் தேற்றினார்கள்.

* * *

"சௌந்தரம் அநாதையாகி விட்டபடியால், தன் தமக்கை வீடு வந்து சேர்ந்தாள். மரகதம் என்ன, பணக்காரியா? நம்மிடத்திலே சௌந்தரத்தை வேலைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறாள்" என்று கூறி முடித்தாள் கல்யாணி.

இந்தக் கதையைக் கேட்டுக்கொண்டிருந்த சங்கரன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

"ஏன்?... என்ன? கதை மிகவும் சோகமாக இருக்கிறதா?" என்றாள் கல்யாணி.

"இல்லை. கலைஞன்தான் சோகத்திலும் ஓர் இன்பத்தைக் காண்பவனாயிற்றே! 'நம் நாட்டின் நிலை, எத்தனை வாலிபர்களின் உயிரைப் பலி கொள்வதாக இருக்கிறது! இதற்கு ஒரு முடிவே இடையாதா?' என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் சங்கரன்.

"ஸத்யதாமா"

குழந்தையின் பிரார்த்தனை 74

காலைக் கதிரவனுடைய இளம் கிரணங்கள் மெல்லத் தட்டி எழுப்பக் குழந்தை பத்மா நித்திரை கலைந்து கண்களை விழித்துப் பார்த் தாள். ஜன்னலுக்கு வெளியே மலர்ந்த புஷ்பங்களுடன் நிற்கும் அந்த ரோஜாச் செடியின்மீது உட்கார்ந்து வாலை அடித்துக் கொண்டு ஒரு சின்னஞ்சிறு பறவை கத்துவது, 'பத்மா! இதோ பார்: பொழுது புலர்ந்துவிட்டது. நீ இன்னும் எழுவில்லையா? நல்ல குழந்தைகள் அதிகாலையிலேயே படுக்கையைவிட்டு எழுந்து விடுவார்களே!' என்று உபதேசிப்பதுபோல இருந்தது. இளம் வெயிலில் பனித் துளிகளுடன் மலர்ந்து நிற்கும் அந்த ரோஜாப்

புஷ்பங்களும், பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அச்சின்னஞ் சிறு பறவையின் பல வர்ண அழகும் பத்மாவின் உள்ளத்தைக் கவர்ந்தன. கட்டிலை விட்டு இறங்கிய அவள் ஜன்னல் அருகில் போய், இயற்கை வனப்பில் மயங்கி மெய்ம்மறந்து நின்றுகொண் டிருந்தாள்.

'கிரீச்' என்று வாசல் கேட்டின் கதவு திறக்கும் ஓசையைக் கேட்டு உணர்ச்சி பெற்ற பத்மா எட்டிப் பார்த்தாள். 'கதவைத் திறந்து உள்ளே வந்துகொண்டிருந்த ஒரு கிழட்டு உருவத்தைக் கண்டதும், "முனியா!" என்று கூவிக்கொண்டே வெளியே ஓடினாள். புத்தம் புது மலர்களையும் சின்னஞ்சிறு பறவை யையும் விடவா அழகு வாய்ந்தது அக்கிழட்டு உருவம், அவளை அப்படிக் கவர்ந்து இழுக்க?

வயசு ஐம்பது இருக்கலாம். எலும்புகள் வெளியே தெரிய ஒட்டி உலர்ந்த உடல்; வயிறு இருக்கும் இடங்கூடத் தெரியாமல் ஒட்டிக் கிடக்க, சற்றே கூன்விழுந்த முதுகு; ஆழ்ந்த குழிகளில் கிடக்கும் ஒளிமங்கிய கண்கள்; தலையில் ஒரு முண்டாசு; இடை யில் ஒரு முழ அகலமுள்ள அழுக்கடைந்த கந்தை. இதுவே அக் கிழட்டுருவம்.

"முனியா!" என்று கிழவனின் கழுத்தைக் கட்டிக்கொண் டாள் பத்மா.

"எப்ப வந்திங்க அம்மா? சொகமா இருக்கிறீங்களா? பொங்கலுக்குத் தாத்தா வீட்டுக்கு வந்திங்களா?" என்று அன் பொழுகக் கேட்டுக்கொண்டே முனியன் குழந்தையை வாரி அணைத்துக்கொண்டான்.

"ஆமா, முனியா, சோமுவை ஏன் அழைச்சுண்டு வரவில்லை?" என்று கொஞ்சினாள் குழந்தை.

"நாளைக்கு அழைச்சிட்டு வரேனுங்க" என்று முனியன் பத்மாவைக் கீழே விடுத்தான்.

"பத்மா!" என்ற அதட்டலைக் கேட்டுத் திரும்பினாள் குழந்தை.

"ஏண்டி, காலையில் எழுந்ததும் பல்கூட விளக்காமல் அவனிடம் என்னடி பேச்சு?" என்று கேட்டுக்கொண்டே திண்ணையில் நிற்கும் தாயைக் கண்டதும் பத்மா மெல்லக் கிணற் றண்டை சென்றாள். அதே சமயம், "முனியா!" என்ற வார்த்தை காதில் விழுந்து வெளியே வந்த ஐயரும், "டேய் முனியா, காலையில் வந்தால் வேலையைப் பார்க்காமல் குழந்தையுடன் என்னடா வீணாட்டு?" என்று அதிகாரத் தொனியில் கேட்டார்.

"இல்லிங்க எசமான்! இப்பத்தான் வந்தேனுங்க!" என்று பதிலளித்துவிட்டு முனியன் தோட்டத்தை நோக்கிச் சென்றான்.

* * *

சிறுவாளூர் என்பது காவேரிக் கரையில் இருக்கும் செழிப்பு வாய்ந்த சிறு கிராமம். அக்கிராமத்திற்கே நடுநாயகமாக விளங்

குவது ராமசாமி ஐயரின் வீடுதான். ராமசாமி ஐயருக்கு வயசு ஐம்பது இருக்கலாம். படித்திருந்தாலும் சர்க்கார் உத்தியோகம் ஒன்றும் பார்த்தவர் அல்ல. பூர்விகச் சொத்தாக இருந்தவை ஒரு பெரிய வீடும், அதைச் சார்ந்த பெரிய தோட்டமும். அவற்றைத் தவிரப் போதுமான வட்டி வரக்கூடிய பணமும் பாங்கியில் இருந்தது. இந்தத் திரண்ட சொத்துக்களை வைத்துக்கொண்டு சுக ஜீவனம் நடத்திவந்தார், ராமசாமி ஐயர்.

பத்மா, ராமசாமி ஐயரின் ஐந்து வயசுப் பேத்தி. பொங்கலை முன்னிட்டு ராமசாமி ஐயர் பெண்ணையும் பேத்தியையும் அழைத்து வந்திருந்தார்.

அவர்கள் வீட்டுத் தோட்டக்காரன்தான் முனியன். புத்தி தெரிந்த நாள் முதலே அவர்கள் வீட்டிலேயே வேலை செய்து வந்தவன். செய்த வேலையை அளந்துதான் கூலி கொடுப்பார் ராமசாமி ஐயர். முனியனுக்கும் அப்படி ஒன்றும் பெரிய குடும்பம் அல்ல. அவன் மனைவி வெகுநாள் முன்னரே இவ்வேழை உலகை விட்டுச் சென்றுவிட்டாள். பெண்ணுக்குப் பருவம் வந்ததும் கட்டிக்கொடுத்தான் முனியன். மூவருமாகக் கூலி வேலை செய்து கிடைத்ததைக்கொண்டு அமைதியுடனும் திருப்தியுடனும் வாழ்க்கையை நடத்திவந்தனர். மெல்ல மெல்ல இரண்டு குழந்தைகள் பிறந்தன, முனியனின் பெண்ணுக்கு. மூத்த குழந்தை சோமுவும், பத்மாவும் ஒரே வயசினர்.

முனியன் தனக்கு ஓழிந்தபோதெல்லாம் சோமுவையும் பத்மாவையும் தன் இரண்டு தோள்களிலும் சுமந்துகொண்டு தோட்டம் முழுவதும் சுற்றுவான். பலவித அழகிய பூக்களைப் பறித்துக் கொடுப்பான். வேடிக்கையாகப் பல கதைகள் சொல்லுவான். ஆமாம். அவனது கள்ளமற்ற கிழ உள்ளம் சோமுவையும் பத்மாவையும் ஒரு மாதிரியாகப் பாவித்து நேசித்து வந்தது.

முனியனின் அமைதியைக் காணக் கடவுளுக்குப் பொறுக்க வில்லை போலும்! ஒரு நாள் காலை வெளியே சென்ற முனியனின் மருமகன் வீடு திரும்பவே இல்லை. அந்தோ! தேயிலைத் தோட்டக் கங்காணியின் பசப்பு வார்த்தையில் மயங்கிய அவன் வீட்டில் கூடச் சொல்லிக்கொள்ளாமல் சிலோனுக்குச் சென்றுவிட்டான். அவன் போய் ஒரு மாதம் பொறுத்து, தான் வந்துவிட்ட விவரத்தைக் குறித்து ஒரு கடிதம் வந்தது. அதற்கு அடுத்த மாதம் ஐந்து ரூபாய் மணியார்டரும் வந்தது. அவ்வளவுதான். பிறகு அவனிடமிருந்து கடிதமோ பணமோ ஒன்றுமே வரவில்லை. முனியன் எழுதிய கடிதங்களுக்கும் பதிலில்லை.

முனியன் தன் பெண்ணுக்கு எவ்வளவோ தேறுதல்கள் கூறினன். ஆயினும் பாவம்! அவள், கணவனின் பிரிவை எண்ணி எண்ணி ஏங்கினாள். நாளாக ஆக அவள் உடம்பு துரும்பாய்க் கொண்டே வந்தது. கடைசியில் அவள் மனம் இடிந்துவிட்டது.

எழுந்து நடக்கவும் சக்தியற்று வீட்டிலேயே சுருட்டிப் படுத்துக் கொள்வாள்.

பாவம்! முனியனின் தள்ளாப் பருவத்தில் குடும்பத்தை ஏற்று நடத்தும் பொறுப்பு அவனைச் சார்ந்தது. தன் சக்தியையெல்லாம் ஒருங்கு திரட்டி, ராமசாமி ஐயர் தோட்டத்திலேயே வேலைசெய்து வந்தான். அவர் கொடுக்கும் கூலிக்கு அரிசி முதலியன வாங்கிக் கொண்டு விளக்கு வைக்கும் நேரத்திற்கு வீட்டுக்குத் திரும்புவான். அவன் பெண் தள்ளாடிக்கொண்டே அதைக் கொண்டு ஒருவாருக உணவு தயாரிப்பாள். பிறகு சோகமே உருவெடுத்தாற் போல ஒரு மூலையில் படுத்துக்கொள்வாள்.

மறுநாள் காலை: பத்மா தன் தாய் கொடுத்த சூடான இட்டலியையும் காபியையும் சாப்பிட்டுவிட்டுக் குதித்துக்கொண்டே வெளியே வந்தாள். திண்ணையில் சோமுவைக் கண்டதும் அவள் பத்மக் கண்கள் ஆனந்தத்தால் மலர்ந்தன. குழந்தைகள் இருவரும் தம் மழலைமொழிகளில் ஏதேதோ பேசிக்கொண்டனர். கைகோத்துக் கொண்டு தோட்டத்தில் உல்லாசமாகத் திரிந்தனர், சின்னஞ்சிறு சிட்டுக்குருவிகளே போல.

"அடியே பத்மா!" என்றது அவள் தாய் அதட்டும் குரல். குழந்தைகள் இருவரும் மௌனமாகத் திண்ணைக்குத் திரும்பினர். தூணின்மேல் சாய்ந்து நின்றுகொண்டிருந்த பத்மாவின் தாய், "இப்படிப் பனியில் அலைந்து திரிந்தால் உடம்புக்கு வந்து விட்டால் என்ன செய்வது? இப்படித் திண்ணையிலேயே உட்கார்ந்து விளையாடிக்கொண்டிருங்கள்" என்று அன்புடன் கண்டித்தாள். ஆமாம், மார்கழி மாதக் கடைசியாகியும் இன்னும் பனியின் கொடுமை தணியவில்லை. காலை எட்டு மணியாகியும் பனிபெய்துகொண்டுதான் இருந்தது.

பத்மாவின் கண்கள் தற்செயலாய்த் தோட்டத்தின் கோடியை நோக்கின. அங்கே முனியன் மண்வெட்டியால் ஏதோ வெட்டிக்கொண்டிருந்தான். பத்மாவின் தாத்தாவும் அருகிலேயே நின்று வேலை வாங்கிக்கொண்டிருந்தார். குளிருக்குப் பயந்த ராமசாமி ஐயர், உள்ளே ஒரு பனியன், அதன்மீது ஷர்ட்டு, அதற்குமேல் கம்பளிச் சட்டை, தலையில் கம்பளி மப்ளர், இத்தனையும் அணிந்திருந்தார். அடிக்கு ஒருதரம் பிளாஸ்கிலிருந்து சூடான காபி வேறு ஒவ்வொரு வாயாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். ஆனால் முனியன்? அவன் உடம்பில் மட்டும் அந்தப் பழைய மூண்டாசும் அழுக்கடைந்த கந்தையுந்தான் இருந்தன.

பத்மாவின் கண்கள் ஒரு கணம் அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்தன. குழந்தையின் உள்ளத்தில் என்ன தோன்றியதோ என்னவோ, திடீரென்று, "ஏம்மா! முனியன் மட்டும் பனியிலே நின்று வேலை செய்யறானே? அவனுக்கு மட்டும் பனி ஒண்ணும் செய்யாதோ?" என்று கேட்டாள்.

"ஷ்! அசடே!" என்று கடிந்தாள் தாய்; "அப்படி வேலை செய்து செய்து அவனுக்குப் பழக்கம். மழை, வெயில், பனி,

காற்று அவனுக்கு ஒன்றும் செய்யாது" என்று கூறிவிட்டுச் சமையலறைக்குச் சென்றுவிட்டாள்.

தாய் மறையும்வரையில் பார்த்துக்கொண்டிருந்தாள் பத்மா. பிறகு குதூகலமாக, "சோமு, நாளைக்குப் பொங்கலல்லவா? உனக்குப் புதிசாச் சட்டையும் வேட்டியும் வாங்கிவிட்டாரா ஒன் தாத்தா? எனக்கு நேத்தே வாங்கிவிட்டார். காட்டறேன் பார்!" என்று உள்ளே ஓடினாள். இரண்டு நிமிஷங்களுக்குள் ஒரு சிறு பொட்டலத்தைப் பாவாடைக்குள் மறைத்து எடுத்துக்கொண்டு சுற்றிலும் மருள மருளப் பார்த்துக்கொண்டே வந்தாள். எங்கே தன் தாய் பார்த்துக் கோபிப்பாளோ என்று பயம்!

பத்மா பொட்டலத்தைப் பிரித்தாள். அதற்குள் பச்சை நிறப் பாவாடையும் நீலநிறச் சட்டையும் கண்களைப் பறித்தன. சோமு, பாவம்! ஆசை தீர அவற்றைத் தடவிப்பார்த்து அவற்றின் மிருதுத்தன்மையை அநுபவித்துக்கொண்டிருந்தான்.

பொட்டலத்தைக் கட்டிப் பத்மா ஒரே ஓட்டமாக ஓடி அதை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு வந்தாள். "ஏன் சோமு, உனக்கு ஒண்ணும் வாங்கல்லையா?" என்றாள் மீண்டும்.

என்ன பதில் சொல்வான் சோமு? அவன் முகத்தில் அசடு வழிந்தது. அவளைப் பரிதாபகரமாகப் பார்த்துக்கொண்டே, "புதுத் துணி ஏது பத்மா? எங்கிட்டத்தான் பணம் இல்லையே!" என்றான் துக்கம் நெஞ்சம் அடைக்க.

"பணம் இல்லையா? தாத்தாதான் தெனமும் கூலி கொடுக்கறாரே!" என்றாள் பேதை பத்மா.

"ஆமாம், கொடுக்கறாரு. ஆனால் எங்க தாத்தா சொல்றாரு: 'நாளெல்லாம் வேலை செஞ்சா நாலணாச் சிக்குது. ஆனால் அந்தக் கூலி கஞ்சிக்கே பத்துவதில்லை' என்று. என்னவோ சண்டையாம். அதனாலே சாமானெல்லாம் விலை அதிகமாம். தினமும் ஒரு படி அரிசியும் கொஞ்சம் உப்புப் புளி மிளகாயும் வாங்கி வருவாரு தாத்தா. அதை எங்கம்மா சமைச்சு எங்கள் இருவருக்கும் போட்டு மிகுந்ததை அம்மாவும் தாத்தாவும் சாப்பிடுவாங்க. ஒவ்வொரு நாள் காச்சலாய்ப் படுத்திடுவாரு தாத்தா. அன்னிக் கெல்லாம் அம்மாவும் தாத்தாவும் பட்டினிதான். எங்களுக்கு மட்டும் எங்கே இருந்தாவது சோறு வாங்கி வருவா எங்க அம்மா. நேத்துக்கூட அப்படித்தான், பத்மா. சாயங்காலம் மழை வந்து விட்டதால் முழுதும் வேலை செய்யவில்லையாம், எங்க தாத்தா. அதனால் அரையணா குறைவாகத்தான் கொடுத்தாங்களாம் உங்க தாத்தா. அதனால் அம்மாவும் தாத்தாவும் நேத்து வயிறுகிறையச் சாப்பிடல்லை."

சோமுவின் கதை பத்மாவின் மனத்தை உருக்கியது. அதிலும் தன் தாத்தா குறைவாகக் கூலி கொடுத்தது அவளுக்குச் சகிக்க வில்லை. "ஏன் சோமு? முனியனுக்குத்தான் மழையில் நனைஞ்சு பழக்கம்னு அம்மா சொன்னாளே; பின்னே ஏன் முனியன் வேலை செய்யல்லை?" என்றாள் கபடமற்றபத்மா.

"ஆமா; மழை வந்தாலும் நனைஞ்சுக்கிட்டேதான் வேலை செய்வாரு. ஆனால் பத்மா, சேத்திலே எப்படிக் குழி வெட்டுவது?"

பத்மாவுக்குக் கண்களில் நீர் துளித்தது.

"அப்படீன்னு சோமு, ஒங்க வீட்டிலே துணியே வாங்கமாட்டாங்களா?" என்றாள்.

"எப்படி வாங்குவது பத்மா? எங்க தாத்தா ஆரையாவது கேட்டுப் பழசு வாங்கி வருவாரு. அதைத்தான் தச்சுத் தச்சுக் கட்டிப்போம்" என்றான் சோமு.

பத்மா ஒன்றும் பதில் பேசவில்லை. அவள் சின்னஞ்சிறு கண்கள் சோமு கட்டியிருக்கும் துணியிலுள்ள தையல்களையே இமைகொட்டாது நோக்கின.

அன்றிரவு ஒன்பது மணி இருக்கும். ராமசாமி ஐயர் சாப்பிட்டுவிட்டு மெத்தையை விரித்துப் படுத்துக்கொண்டார். பத்மாவும் வந்து மெத்தையில் படுத்துக்கொண்டாள். பத்மா தினமும் தாத்தாவிடந்தான் படுத்துக்கொள்வது வழக்கம். அவர் கூறும் கதைகளைக் கேட்டுக்கொண்டே தூங்கிவிடுவாள்.

"தாத்தா; கதை சொல்லு" என்று அன்று பத்மா கேட்கவில்லை. அவள் கவனமெல்லாம் சோமு சொன்னவற்றிலேயே இருந்தது. தாத்தாவிடம் அதைப்பற்றிச் சொல்லவேண்டுமென்று எண்ணினாள். ஆனால் அவர் கோபிப்பாரோ என அஞ்சியது அவள் பயந்த உள்ளம்.

மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு மெல்ல ஆரம்பித்தாள்: "சோமு சொல்லுகிறான் தாத்தா; அவனுக்குப் பொங்கலுக்குப் புதுத் துணியே வாங்கவில்லையாம்" என்றாள். ஐயர் ஏதோ கவனத்தில் "உம்" கொட்டினார். அவள் சொன்னது அவர் செவிகளில் அரைகுறையாகத்தான் விழுந்தது.

"ஏன் தாத்தா, முனியனுக்கு நேத்துக் கூலி கொறைச்சுக் கொடுத்தாய்? பாவம்! அதனால் அவன் வயிறுநெறையச் சாப்பிட முடியல்லையாம்" என்றாள் பத்மா மேலும்.

ஐயரின் தியானம் கலைந்தது; "ஆமாம். நேற்று ஒரு மணி நேரம் குறைவாகத்தான் வேலை செய்தான். அந்தக் கணக்குப்படி அரையணாக் குறைத்துக் கொடுத்தேன். செய்த வேலைக்குத்தானே அம்மா கூலி?" என்றார்.

குழந்தைக்கு அந்தக் கணக்கு ஒன்றும் புரியவில்லை. "முனியனுக்குச் சாப்பிடப் போராட்டால் நாம் கொஞ்சம் அதிகம் காசு குடுத்தா என்ன தாத்தா?" என்றாள்.

"அசடே, போதாவிட்டால் நாம் என்ன செய்வது? எல்லோரும் கொடுப்பதுபோலத்தானே நானும் கொடுக்கிறேன்? நாம் மட்டும் ஏன் அதிகம் கொடுக்க வேண்டும்?" என்றார் ஐயர்.

பத்மாவுக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. ஏதேதோ எண்ணினாள். அவள் இளம் மனத்தில் என்ன தோன்றியதோ

என்னவோ, "ஏன் தாத்தா, நீ மட்டும் ஒண்ணுமே வேலைசெய்யறதில்லையே? ஒனக்கு ஆர் கூலி கொடுக்கறா? ஒனக்கு மட்டும் ஏது இவ்வளவு பணம்?" என்றாள் வெடுக்கென்று.

குழந்தையின் எதிர்பாராத கேள்வியைக் கேட்டதும் ராமசாமி ஐயர் திடுக்கிட்டார். அவர் மனத்தில் என்னவோ செய்தது. குழந்தைக்கு என்ன பதில் சொல்வது என்று விழித்தார். "எல்லாம் சாமி கொடுத்தார் குழந்தாய்?" என்று மழுப்பினர்.

"அப்படியானா முனியனுக்கு மட்டும் ஏன் சாமி நெறையக் காசு கொடுக்கல்லே?" என்றாள் பத்மா விடாமல்.

கள்ளம் கபடற்ற குழந்தையின் கேள்விகள் அவர் மனத்தை ஏனோ வாட்டின. மேலும் அதைக் கேட்க விரும்பாத அவர், "எல்லாம் கொடுப்பார், வேண்டிக்கொண்டால். தொண தொண என்று அலட்டாமல் பேசாமல் தூங்கு. எனக்குத் தூக்கம் வருகிறது" என்று மறு பக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டு விட்டார் தாத்தா.

பத்மாவுக்கு மட்டும் அவ்வளவு சீக்கிரத்தில் தூக்கம் வரவில்லை. 'ஏன் அந்தக் கடவுள் முனியனுக்கு மட்டும் நிறையப் பணம் கொடுக்கவில்லை? முனியன் பட்டினியுடன் கஷ்டப்படுவது அவருக்குத் தெரியாதா? பாட்டிதான் சொல்லியிருக்கிறாளே, கடவுள் நாம் செய்வதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருப்பார் என்று? அப்படியானால் ஒரு வேளை தாத்தா சொன்னபடி முனியன் வேண்டிக்கொள்ளாததால்தான் அவனுக்குக் கொடுக்கவில்லையா? அந்த அசட்டு முனியன் கடவுளை வேண்டிக்கொள்வதற்கு என்ன?' என்று எண்ணக் குவியல்கள் தோன்றி மறைந்தன அவள் பேதைப்புத்தியில். சற்று நேரத்திற்குள் தன்னையும் அறியாமல் அவள் ஆழ்ந்த நித்திரையில் ஈடுபட்டாள்.

உலக மக்கள் உவந்து அளிக்கப்போகும் பொங்கலைப் பெற்றுக்கொள்ளும் ஆர்வத்துடனே பொங்கி வந்தான் காலைக் கதிரவன், தன் செங்கதிர்களை எங்கும் பரப்பிக்கொண்டே. அவனுக்கு நல்வரவளிப்பதேபோல இன்னிசை இசைத்துக்கொண்டே புள்ளினங்களும் துள்ளித் திரிந்தன. வீடுகள் தோறும் மக்கள் புனித நீராடிப் புத்தாடைகள் புனைந்து பொங்கல் தயாரித்துக் கொண்டிருந்தனர். வயல் வெளிகளிலிருந்தும் பொங்கலோ பொங்கல் என்ற ஆரவாரம் எழுந்துகொண்டிருந்தது.

ராமசாமி ஐயர் வீட்டிலும் எல்லோரும் நீராடிப் புதுவஸ்திரம் தரித்துக்கொண்டனர். குழந்தை பத்மாவை நீராட்டிப் பட்டாடைகள் அணிந்தார்கள். அவள் தாய் முற்றத்தில் கோலமிட்டுச் செம்மண் காப்புக் கட்ட, ஐயரின் மனைவி பொங்கல் பானையையும் நிவேதனப் பொருள்களையும் கொணர்ந்து வைத்தாள். குழந்தை பத்மா எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு மௌனமாக ஒரு புறமாய் நின்றுகொண்டிருந்தாள். ஆனால் அவள் கமலவதனம்

பனியால் வதங்கிய தாமரையேபோல் பொலிவிழந்து காணப் பட்டது.

ராமசாமி ஐயர் தேங்காய் உடைத்துக் கர்ப்பூரம் பற்றவைத்து நிவேதனத்தை முடித்துவிட்டு ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, "சுவாமி, சூரிய நாராயண, நானும் என் குழந்தை குட்டிகளும் எல்லாச் சம்பத்துக்களையும் பெற்று என்றென்றும் சுகவாழ்வு வாழ அநுக்கிரகிப்பாயாக!" என்று வேண்டிக்கொண்டார். அதற் குப் பிறகு பத்மாவின் தாயும் பாட்டியும் வணங்கி எழுந்தனர். பத்மா மட்டும் சும்மா நின்றுகொண்டிருந்தாள்.

"ஏண்டி! நீயும் சாமியை வேண்டிக்கொள்ளேண்டி" என்று அவள் தாய் தூண்டினாள். பத்மாவின் மனக்கண்முன் கிழிந்த ஆடையுடன் சோமுவும் பட்டினியுடன் முனியனும் ஒரு கணம் தோன்றி மறைந்தனர். மறுகணம் அவளும் ஆவேசம் வந்தவள் போல விழுந்து வணங்கினாள்.

"சாமி! பகவானே! எங்க முனியனுக்கும் நெறையப் பணம் குடுக்கமாட்டாயா? சோமுவுக்கும் புதுத் துணி குடுக்கமாட் டாயா?" என்ற வார்த்தைகள் அவள் வாயினின்றும் கணீரென்று கிளம்பின. பத்மாவின் வாயினின்று வந்த அவ்வார்த்தைகள் ராமசாமி ஐயரை மயிர் சிலிர்க்கச் செய்தன. அப்படியே ஸ்தம் பித்து நின்றுவிட்டார் அவர்.

'கிரீச்' என்ற ஓசையுடன் வாசல் 'கேட்டு' திறக்கப்பட்டது. சோமுவையும் அழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்த முனியனைக் கண்டதும் அவர் ஆச்சரியம் பின்னும் அதிகரித்தது. ஆம்! அவன் இடையில் தொங்கியது ஒரு புத்தம் புதிய கதர் வேஷ்டி; தலையில் ஒரு கதர் முண்டாசு. சோமுவும் புதுச் சட்டையும் வேட்டியுமாகக் காட்சி அளித்தான்.

"ஏதுடா முனியா, புதுத் துணிகள்?" என்று தம்மையும் மீறிக் கேட்டார் ராமசாமி ஐயர்.

"ஆமாங்க ஏசமான்! கங்காணியின் வலையில் சிக்கிச் சிலோன் போயிருந்த மருமவன் நேத்துத்தான் தப்பி வந்தானுங்க. இத்தினி நாளா உசிரெக் கொடுத்துச் சம்பாரிச்ச பணத்திலே கொஞ்சம் புதுத் துணி வாங்கி வந்தானுங்க!" என்று கூறி வணங்கினான் முனியன்.

பத்மாவின் கண்கள் சூரியனையும் விட ஒளியுடன் பிரகாசித் தன. அவள் வதனம் அன்றலர்ந்த தாமரையையும் விடச் சோபை யுடன் விளங்கியது. குழந்தைகள் இருவரும் ஆனந்தம் பொங்கக் குதித்து விளையாடலானார்கள்.

தெய்வப் பெண் 75

சித்திரை மாதம், கடுமையான வெயில்; மாலை ஐந்து மணி சமயம். குளிர்ந்த தண்ணீரில் குளித்துவிட்டு, என்னுடைய உடுப்பறையில் நுழைந்தேன். "உஸ் அப்பாடா! என்ன வெயில்" என்று முனகிய வண்ணம் அருகில் இருந்த சாய்வு நாற்காலியில் படுத்தேன். எதிரே உள்ள என் அருமைச் சுகந்தியின் படம் என்னைப் பார்த்துச் சிரிப்பதுபோல இருந்தது. அவள் கண்களில் சோகம் ததும்பி நின்றது. அந்தச் சோகப் புன்னகை என்னை எங்கேயோ இழுத்துச் சென்றது. என்னையும் அறியாமல் என் மனம் பழைய நினைவுகளில் சுழன்றது.

ஆம்! இன்று நேற்று நடந்ததன்று. அந்தத் துக்க மயமான சம்பவம் நடந்து பன்னிரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. ஆயினும் பேதைச் சுகந்தியின் ஏங்கிய முகம் இன்னமும் என் மனத்தை விட்டு அகலவில்லை. அச்சம்பவம் இன்றுதான் நடப்பதைப்போல் என் மனக்கண்களின் முன்பாகத் தோற்றம் அளித்தது. மனம் சொல்லமுடியாத வேதனையில் ஆழ்ந்தது. சில நிமிஷங்கள் கண்களை மூடிக் கனவுலகில் சஞ்சரித்தேன்.

"மணி ஐந்து அடித்துவிட்டது. இன்னுமா தூக்கம்? நன்றாய் இருக்கு. இனிமேல் போனால் ஒரு 'ஸெட்' கூட ஆட முடியாதே! வாயாடி மீனாக்ஷி வந்துவிட்டால் நம் ஆட்டம் திண்டாட்டந்தான். 'கோர்ட்டை'ப் பிடித்துக்கொண்டு அட்டகாசம் செய்வாள். நன்றாய்த் தூங்கினாய்! எழுந்திருடி, கமலா" என்று அதட்டிய விமலாவின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன்.

"இல்லை விமலா, நான் இன்று 'கிளப்பி'ற்கு வரவில்லை. நீ போய்விட்டு வா" என்றேன்.

"கமலா, என்ன சமாசாரம்? ஏன் உன் கண்கள் இப்படிக் கலங்கி யிருக்கின்றன?" என்று பதற்றமாகக் கேட்டாள்.

"ஒன்றும் இல்லை விமலா; ஏதோ பழைய ஞாபகம். என் சுகந்தியின் நினைவு வந்தது. மனம் சற்றுச் சஞ்சலமாய் இருக்கிறது."

"என்ன, சுகந்தியா? யார் அவள்? உன் தங்கையா? அவளுக்கு என்ன?"

"ஆமாம் விமலா, என் சுகந்தி என் சகோதரிக்கும் மேலான வள். பாவம்! பேதைப் பெண். அவளுடைய வாழ்க்கையில் அவள் கண்ட கனவு, கனவாகவே முடிந்துவிட்டது."

"அது என்ன? அப்படி என்ன நடந்தது? எனக்குச் சொல்லேன். எப்படியும் நேரமாகிவிட்டது. நான் இன்று பந்து

விளையாடப் போகவில்லை" என்று கூறியவண்ணம் அருகிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"சொல்ல வேண்டுமா? அது சாதாரணக் கதைதான். ஆனால் மனசைக் கலக்கிவிடும்" என்று சொல்ல ஆரம்பித்தேன்.

* * *

சுகந்தியும் நானும் இணைபிரியாத தோழிகள். அவள் என்னைப் பாராமல் ஒரு நாள்கூட இருக்கமாட்டாள். என்ன மழையானாலும், வெயிலானாலும், சாப்பாடு முடிந்ததும் நான் அவள் வீட்டிற்கு ஓடிவிடுவேன். அவளும் அப்படித்தான். அவளுடைய பங்களா எங்கள் வீட்டிற்கு அருகிலேயே இருந்தது.

பாரிஸ்டர் சிவக்கொழுந்து முதலியாருடைய கடைசிப் பெண் தான் சுகந்தி. நல்ல சிவப்பு; கொடி போன்ற சரீரம்; புன் சிரிப்புத் தவழும் முகம்; கபடமற்ற உள்ளம்; நிதானமான பேச்சு; சாந்த குணம். எப்பொழுதும் குழந்தையைப் போல் விளையாடுவாள். அவள் கலகலவென்று சிரிக்கும்பொழுது கவலை எல்லாம் பறந்துவிடும்.

பாவம்! தாயற்ற குழந்தை. அவளுக்குத் தாயும் தந்தையும் ஆசாரியனும் விளையாட்டுத் தோழனுமாக இருந்தவர் அவள் தந்தை ஒருவரே. தாயில்லாக் குறையை அறியாமல் இருக்க அவளை மிக்க செல்வமாக வளர்த்தார். அவர் 'கோர்ட்டு'க்குப் போகும் வரையில் சுகந்தி அவருடைய 'ஆபீஸ்' அறையிலேதான் இருப்பாள். அவரை விட்டு ஒரு நிமிஷங்கூடப் பிரியமாட்டாள். தினமும் அவருக்குத் தலைவாரி நெற்றிக்குப் பொட்டு இட்டுச் சட்டைகளை எடுத்துக் கொடுத்து, 'பூட்ஸ்' அணிவித்து வண்டி வரையில் கொண்டுவிட்ட பிறகுதான் மற்ற வேலைகளைக் கவனிப்பாள். சாயங்காலம் அழகிய வெள்ளைக் குதிரை பூட்டிய 'கோச்' வண்டியில் வந்து இறங்கியதும் முதலியார் "சுகந்தி!" என்றுதான் கூப்பிட்டுக்கொண்டே உள்ளே நுழைவார். அவ்வளவுதான். "இதோ வந்தேன் அப்பா" என்று கையில் எது இருந்தாலும் போட்டுவிட்டுக் குடுகுடுவென்று ஓடிவந்து விடுவாள்.

முதலியார் மிக்க அடக்கமான சுபாவமுடையவர். சாந்த குணம். யாவரிடமும் இனிமையாகப் பேசுவார். அன்புடன் உபசரிப்பார். தூய வெண்மையான உடை தரித்துப் பரிசுத்த மாக விளங்குவார். முகத்தில் களை சொட்டும்; லக்ஷ்மீகடாக்ஷம் தாண்டவமாடும்.

முதலியாரின் தங்கை நீலாம்பிகை அம்மாள்தான் வீட்டிற்கு எஜமானி. அவள் இஷ்டப்படியே எல்லாம் நடக்கவேண்டும். குடும்ப காரியங்களில் கை தேர்ந்தவள். வேலைக்காரர்களிடம் வேலை வாங்குவதில் மிக்க சாமர்த்தியமுள்ளவள். கண்டிப்பான

ஆசாமி. ஆரத் தீர ஆலோசிக்காமல் ஒரு வேலையிலும் தலையிட மாட்டாள். மிகவும் கெட்டிக்காரி.

சுகந்தியின் விவாகத்தை ஒரு விதத்தில் சுயம்வரம் என்றே சொல்லலாம். நீலாம்பிகைக்கு அந்த வரன் இஷ்டமே இல்லை. பாரிஸ்டருக்கும் சற்றுச் சம்மதக் குறைவுதான். என்ன செய்வது? தம் செல்வப் புதல்வியின் இஷ்டத்திற்கு விரோதமாகச் சொல்ல அவர் மனம் துணியவில்லை. கடைசியில் விவாகம் விமரிசையாக நடந்தது.

சுகந்தியின் கணவன் துரைசாமி அப்பொழுது பி. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டு இருந்தான். அவன் தகப்பனார் பணக்காரர்; கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்; நல்ல குணமுள்ளவர். ஆனாலும், என்ன காரணத்தினாலோ பாரிஸ்டருக்கு அந்தச் சம்பந்தத்தில் இஷ்டம் இல்லை. துரைசாமி அவ்வளவாக அழகும் இல்லை. சுகந்தி எதைக் கண்டு மயங்கிவிட்டாளோ? யாருக்குத் தெரியும்?

உடல் இரண்டும், மனம் ஒன்றுமாக ஒற்றுமையுடன் இருந்த தந்தைக்கும் மகளுக்கும் நடுவில் இப்பொழுது மானஸிகத் திரை போடப்பட்டுவிட்டது. சுகந்தி புக்ககத்தில் ஒரு மாதம் இருந்து விட்டு வந்தாள். அதற்குப் பிறகு ஓயாமல் கணவனைப்பற்றிய பேச்சுத்தான்.

"என்ன அழகோ, காண்டா மிருகம் போல! நீதான் புகழ்ந்துகொள்ள வேணும், உன் அகமுடையானை" என்று பரிகசிப்பேன்.

"உஸ்! பேசாதே. அவரா அழகில்லை? என் கண்ணைக் கொண்டு பாரடி, தெரியும். கொஞ்சம் பருமன். இருந்தால் என்ன? உனக்கும் கல்யாணம் ஆகட்டும் சொல்லுகிறேன். இரு, இரு" என்பாள்.

இவ்விதம் வேடிக்கையும் விளையாட்டுமாக இரண்டு வருஷங்கள் ஓடி மறைந்தன.

* * *

ஒரு நாள் மாலை ஆறு மணி இருக்கும். சுகந்தியின் வீட்டுக்குப் போனேன். அவள் தோட்டத்தில் இருப்பதாக அத்தை சொன்னாள். தோட்டத்தில் நுழைந்து சுற்றுமுற்றும் பார்த்தேன். சுகந்தி கிணற்றுக் கைப்பிடிச் சுவரின்மீது, கன்னத்தில் கை வைத்தபடியே உட்கார்ந்திருந்தாள். அவள் கண்கள் வெட்ட வெளியை வெறித்துப் பார்த்தன. கண்ணீர் மாலை மாலையாக வழிந்து கொண்டிருந்தது. என் உள்ளம் துடித்தது. "சுகந்தி, என்ன இது?" என்றேன். அவள் பரபரப்புடன் கண்களைத் துடைத்துக்கொண்டு நாலுபுறமும் சுற்றிப் பார்த்தாள். சட்டென்று குனிந்து கீழே ஒரு கல்லின் கீழிருந்த காகித உறையை எடுத்துக் கிணற்றில் போட்டாள். எனக்குச்

சந்தேகம் உண்டாயிற்று. மனத்தில் பலவித எண்ணங்கள் ஓடின. 'இவளுடைய மன வருத்தத்திற்குக் காரணம் என்ன? சந்தோஷமாகத்தானே இருந்தாள்? அப்படி ஏதாவது இருந்தால் நம்மிடம் சொல்லாமல் இருப்பாளா?' என்று எண்ணமிட்டேன். மனிதருடைய மனம் அப்படி லேசில் அடங்கிவிடக் கூடியதா? எண்ணங்களின் அலை எழும்பிக்கொண்டே இருந்தது.

அருகிலுள்ள திண்ணையில் அமர்ந்தோம். வெகு நேரம் ஆகியும் அவள் பேசவில்லை. என் தோளில் சாய்ந்தபடியே தூரத்தில் எதையோ கண்கொட்டாமல் பார்த்தாள். நீண்ட மௌனம். அந்த நிச்சப்தத்தைக் கலைத்தது, 'கூ!' என்ற சப்தம். உடனே சுகந்தி நிமிர்ந்து உட்கார்ந்தாள். அருகிலுள்ள ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து, புகைவண்டித் தொடர் வேகமாகச் செல்லும் சப்தம் கேட்டது. சுகந்தி மெதுவாகச் சிரித்தாள்.

என்னால் இந்த மௌனத்தைச் சகிக்க முடியவில்லை. பல கேள்விகளை அடுக்கினேன். பதில் இல்லை. பெருமூச்சுடன் என்னை உற்றுப் பார்த்தாள். ஐயோ! அந்தக் கண்களில்தான் என்ன சோகம்! என்ன ஏமாற்றம்!

"என்ன சுகந்தி, இவையெல்லாம் என்ன? உனக்கு என்ன வருத்தம்? என்னிடம் சொல்லக்கூடாதா?" என்று வேண்டினேன்.

"கமலா, உனக்கு எதற்கு அம்மா வீண் கஷ்டம்? என் துக்கம் என் உள்ளத்திலேயே கிடந்து, என்னுடனேயே அழியட்டும்" என்று அடக்கமாகக் கூறினாள்.

"இல்லை; நீ சொல்லத்தான் வேண்டும். மனசில் உள்ள கஷ்டங்களைப் பிறரிடம் சொல்லிக்கொண்டால் சற்று ஆறுதலாக இருக்கும். என்னிடம் கூடவா ஒளிக்கவேண்டும்? சொல்லு" என்று கூறும்பொழுதே, அருகில் குதிரையின் காலடிச் சப்தம் கேட்டது. தொடர்ந்தாற் போல்! "சுகந்தி" என்ற குரல்.

"இதோ வந்தேன் அப்பா" என்ற வண்ணம் ஓட்டம் எடுத்தாள். அச்சமயம் அவளுடைய கவலைகள் எங்கே ஓடி மறைந்தனவோ; நான் பிரமித்து நின்றேன்.

* * *

பிறகு அத்தையிடம் கூறினேன். "ஐயோ! பாவிப் பெண் இணற்றில் விழுந்து கிடக்கப் போகிறாளே! எனக்கு அப்போதே தெரியும். என்ன செய்ய? அவனைத்தான் கட்டிக்கொள்வேன் என்று ஒற்றைக் காலிலே நின்னுதே. அசடு! கிளியாட்டமாப் பெண்ணை வீட்டில் அடைச்சு வச்சிருக்கு. இந்தக் கண் செய்த பாவம்!" என்று கண்ணீர் விட்டாள்.

"ஏன்? மாப்பிள்ளைக்கு என்ன? கடுதாசு வரதோ இல்லையோ?"

"ஐயோ! அதை என் கேட்கிறே? வாரம் வாரம் கடுதாசு. மாசம் மாசம் வந்து குலாவல். எல்லாம் ரொம்பத்தான் ஆடினான்.

இந்த அசட்டுப் பெண்ணுக்கு உலகமே தெரியல்லே. 'என்னமோ சிறுசு' என்று இருந்தோம். படிப்பு முடிப்பாப் போச்சு. இரண்டு வருஷத்துக்கு முன்னே எப். எல். பரீக்ஷையில் குண்டு வாங்கி விட்டான். திருவனந்தபுரம் போய் ஒரே வருஷத்தில் புரட்டி விடுவேனுக்கும் என்று பிடிவாதம் செய்தான். எவ்வளவோ சொன்னேம். கேட்டால் தானே? விதி இருக்கே. பிடிச்சுது சனியன்! ஒரு வருஷமாக் கடுதாசுகூட இல்லே" என்று கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

"அப்படியா சமாசாரம்? சுகந்தி என்னுடன் சொல்லவே இல்லையே! போன வருஷங்கூட வந்திருந்தார்போலே இருக்கே? ஆறு மாசமாய் நான் ஊரில் இல்லாதபடியால் எனக்கு ஒன்றுமே தெரியவில்லே."

"உன்னேடையா? வீட்டிலே மாத்திரம் யாரோடாவது சொன்னளா? பேச்சே எடுக்கமாட்டாள். போன வருஷம் வந்திருந்தபோது கல்லாட்டமா இருந்த நாற்பது பவுன் காசுமாலையைத் தூக்கிக் கொடுத்துட்டுது. அசடு! ஐய! அவன் வந்திருந்தப்போ என்ன சிரிப்பு! என்ன விளையாட்டு! அந்தப் பாவியினுடைய பசப்பு வார்த்தையில் மயங்கிவிட்டது. எனக்கு என்னவோ சந்தேகந்தான். சொன்னல் இந்தப் பெண் நம்பாது. அந்த ராக்ஷசனிடம் ஒரே நம்பிக்கை, ஆசை. நெனச்சு நெனச்சு உருகிப் போறது."

"கமலா, இங்கே வாயேன். ஒரு வேடிக்கை" என்று கத்தினுள் சுகந்தி. நான் மாடிக்கு ஓடினேன்.

"என்ன? அத்தை அளக்கிருளோ? அவளுக்கு என்ன வேலே? ஏதாவது உளறுவாள். அவரைக் கெட்டவர் என்கிருளோ? இல்லவே இல்லே. ஒருவேளை பரீக்ஷை தவறிவிட்டிருக்கும். வெட்கப்பட்டுக்கொண்டு எழுதாமல் இருக்கிருரோ என்னவோ? திடீரென்று ஒரு நாள் வந்து நிற்பார்."

எனக்கு ஒன்றுமே தெரியவில்லே. அவள் முகத்தில் நம்பிக்கை நிரம்பியிருந்தது. அவளையே கவனித்தேன்.

"ஆனல் கமலா, இதோ பார்: என் தேகம் எப்படி நடுங்குகிறது பார். எத்தனே இரவுகள் நான் தூங்கவில்லே தெரியுமா? என் ரத்தம் கொதித்துப்போய்விட்டது. என் கையைத் தொட்டுப் பார். என்னல் அவரைப் பிரிந்து இருக்கவே முடியவில்லே" என்று பெருமூச்சு விட்டாள். அவள் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருந்தது.

இப்பொழுது நாங்கள் உலாவச் செல்வதில்லே. ஓயாமல் தன்னுடைய கணவனேப்பற்றியும் அவன் தன்னிடத்தில் எவ்வளவு அன்பாக இருக்கிருன் என்பதைப் பற்றியுந்தான் பேசுவாள். அதனல் அவள் மனம் சற்றுச் சாந்தியடையும். நானும் அலுத்துக் கொள்ளாமல் கேட்பேன். எப்படியாவது அவள் மனம் திருப்தி அடைந்தால் போதும் என்று நினேப்பேன். தன் கணவன் எழுதிய

பழைய காதற் கடிதங்களைத் தினம் ஒருமுறை பாராயணம் செய்வாள். ரெயில் வண்டி எஞ்சின் கூவும் சப்தம் எப்போது கேட்டாலும் தாய்ப் பசுவின் குரலைக் கேட்டுத் தலை நிமிர்ந்து நோக்கும் கன்றைப்போல ஆவலுடன் நிற்பாள். " ஒருவேளை இந்த ரெயிலில் வரலாம் " என்று அவள் வாய் முணுமுணுக்கும். ஆவலுடன் வாசற்படியில் போய் நிற்பாள்.

" சாயங்காலத்தில் நான் எங்கும் வரமாட்டேன். திடீரென்று அவர் வந்தால்? அவர் வரும்போது நான் வீட்டில் இல்லாவிட்டால் என்ன நினைப்பார்? " என்று கூறுவாள்.

' ஐயோ! இதென்ன பைத்தியம்? ' என்று நினைப்பேன்.

* * *

நாட்கள் ஓடின. சுகந்தியின் கணவன் வரவில்லை. அவளோ நாளுக்கு நாள் இளைத்துத் தும்பாகிவிட்டாள். டாக்டர்கள் காச நோய் என்றனர். மருந்து ஒன்றும் குணமளிக்கவில்லை. வெளியூர்வாசம் நல்லதென்று கூறினர். ஆனால் அவள் அவ்விடத்தை விட்டு அசையவே மாட்டேனென்று சொல்லி விட்டாள். " அவர் எந்த நிமிஷம் வருவாரோ! நான் இங்கே தான் இருப்பேன் " என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள்.

பகல் இரண்டு மணி இருக்கும். நான் அவள் வீட்டிற்குச் சென்றேன். அவள் பெட்டியில் சாமான்களை அடுக்கிக்கொண்டிருந்தாள். " என்ன, ஊருக்கா? " என்றேன்.

" இல்லை. அவர் வந்து ' உடனே புறப்படு ' என்றால், அதற்காகத் தயாராக இருக்கலாமென்றுதான் " என்றாள்.

' ஐயோ! இதென்ன பேதைமை! ' என்று மனத்திற்குள் எனையே வருந்தினேன். ஒரு பெட்டி நிறையச் சிறு பாத்திரங்கள், ஒரு பெட்டியில் அவளுடைய உடைகள், ஒரு சிறிய தோற்பெட்டியில் நிறையப் பனியன்களும் அரை நிஜார்களும் வைத்திருந்தாள். இவைகள் அவள் கணவனுக்காக அவளே தைத்தவை.

" அதிருக்கட்டும் சுகந்தி; அத்தை சொல்வதுபோல் உன் கணவருக்கு இன்னொரு மனைவி இருப்பது உண்மையா? "

" இருக்கட்டுமே. நான் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டு அவருடைய அருகிலேயே இருப்பேன். அதுவே எனக்குத் திருப்தி " என்று பாதியில் வெடுக்கென்று பதில் சொன்னாள்.

அவளுடைய இணையற்ற பிரேமையைக் கண்டு அதிசயம் அடைந்தேன். பல சம்பவங்களுக்கிடையில் சில தினங்கள் சென்றன. " என்னை அவரிடமே கொண்டு விட்டுவிடுங்கள் " என்று அவள் மன்றாடினாள். முதலியார் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. யாவரும் திருவனந்தபுரத்திற்குப் புறப்பட்டார்கள். " ஊர்களைச் சுற்றிப் பார்த்துவரலாம். நீயும் வாயேன் "

என்று அத்தையும் சுகந்தியும் என்னை வற்புறுத்தினபடியால், என் பெற்றோர்கள் என்னையும் அனுப்பிவைத்தனர்.

வழியில் மதுரையில் தங்கினேம். அங்கே ஒரு மகான் இருப்பதாகவும், அவரைத் தரிசித்து ரக்ஷை வாங்கிக்கொண்டால் சகல கஷ்டங்களும் நீங்குவதாகவும் அத்தையிடம் யாரோ கூறிவிட்டனர். ஆகையால் அத்தை மதுரையில் சிலநாள் தங்க வேண்டுமென்று கண்டிப்பாக உத்தரவு போட்டுவிட்டாள். மகானைத் தரிசித்தோம். ரக்ஷை கொடுத்தார். அங்கிருந்து புறப்பட இன்னும் நான்கு நாட்களே இருந்தன. சுகந்தியின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. அத்தை மாத்திரம் எப்பொழுது பார்த்தாலும் மௌனமாக ஏதோ யோசித்த வண்ணமே இருந்தாள்.

திடீரென்று ஒரு நாள் முதலியாரைக் கூப்பிட்டு, "திருவனந்தபுரம் போகக்கூடாது; ஊருக்கு உடனே திரும்பவேண்டும்" என்றாள். முதலியாரும் நானும் எவ்வளவோ சொல்லியும் அத்தை கேட்கவில்லை.

"அண்ணா, உனக்குத் தெரியாது. அவன் அயோக்கியன். ஏதாவது எக்கச்சக்கமாகிவிட்டால், பாவி எதை வேணுமானாலும் சொல்லுவான். பிறகு நம் குழந்தைக்கும் குடும்பத்துக்கும் அபகீர்த்தி. தவிர அவனை நம்பிக் குழந்தையை எப்படி விடுவது? சொல்லாமல் ஓடிவிடுவான். மூகம் அறியாத ஊரில் சிறிசு என்ன செய்யும்? மண்டபத்தில் கொஞ்சநாள் இருந்து குழந்தை உடம்பைப் பார்த்துக்கொண்டு போகலாம்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

அதற்குப் பிறகு சுகந்தி படுத்த படுக்கைதான். குளிப்பதும் இல்லை. சாப்பிடுவதும் இல்லை. அழுது அழுது கண் வீங்கி விட்டது. அத்தையின்மீது கோபம் இவ்வளவென்று சொல்ல முடியாது. முதலியார் ஒரு வழியும் புரியாமல் தவித்தார். அத்தை மூட்டை முடிச்சுகளைக் கட்ட ஆரம்பித்துவிட்டாள். கடைசியில் மண்டபத்திற்கும் போகவில்லை. எல்லாரும் ஊர்வந்து சேர்ந்தோம்.

* * *

வியாதி முற்றிவிட்டது. சுகந்தி படுத்த படுக்கையில் கிடந்தாள். மனுஷியாதிக்கு மருந்து ஏது? மெருகிடப்பட்டது போன்ற அவள் சரீரம் சுருங்கி உலர்ந்துவிட்டது. தங்கப் பதுமை போல இருந்த அவள், கறுத்து இளைத்து விகாரமாகி விட்டாள். இடுப்பில் ஒரு சிறு பாவாடைதான். அவள் வெகு ஆவலுடன் சேர்த்த புடைவைகளும், விதவிதமான ஜாகெட்டுகளும் ஒரு மூலையில் கேட்பாரின்றிக் கிடந்தன. அத்தையினுடைய கண்ணீர் வற்றவே இல்லை.

ஒரு நாள் என்னைக் கண்டதும் சுகந்தி ஓவென்று கதறி அழுதுவிட்டாள். என் இருதயமே வெடித்துவிடும்போல் இருந்தது. அவள் முகத்தோடு முகம் வைத்து நானும் அழுதேன்.

"அம்மா, கமலு, இப்படி வா" என்று பரிவுடன் அழைத்தார் முதலியார். பிறகு என்னைத் தனியே அழைத்துச் சென்று, "கமலு, நீயும் பலஹீனக் குழந்தை. அவளுக்கோ க்ஷயரோகம். கிட்டப் போகக்கூடாதம்மா! ஓட்டிக்கொள்ளும்" என்றார். அவர் குரல் கம்மியிருந்தது. நான் முகத்தை மூடிக்கொண்டு அழுதேன். அத்தை வந்து என்னைக் கீழே அழைத்துச் சென்றாள்.

இரண்டு வேளையும் நான் அங்கே செல்வேன். என்னைக் கண்டதும் சுகந்தி சற்று நிம்மதி அடைவாள். அத்தையைக் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொள்வாள். தினமும் நான் போனதும் அறைக்கதவைத் தாழிடவேண்டும். பிறகு அவளுடைய கழுத்திலிருந்து சாவியை எடுத்துக் கொடுப்பாள். நான் அவள் பெட்டியைத் திறந்து, அவள் காதலன் படத்தையும் கடிதங்களையும் எடுத்துக் கொடுப்பேன். கடிதங்களைச் சிறிது படிப்பாள். காதலன் படத்தைக் கண் கொட்டாமல் பார்ப்பாள். பிறகு கழுத்தில் உள்ள திருமங்கல்யத்தை எடுத்துக் கண்களில் ஒத்திக்கொள்வாள். மறுபடி எல்லாவற்றையும் அவள் இஷ்டப் படியே பெட்டியில் வைத்துப் பூட்டுவேன். இதற்கு என்னதான் அர்த்தமோ? அவள் மனத்தில் தோன்றும் எண்ணங்கள் என்னவோ? இதுதான் அவள் என்னைச் செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டது.

இவ்விதமாக நான்கு மாதங்கள் ஓடின. அவள் கணவனுக்குப் பல கடிதங்கள் எழுதினார் முதலியார். பதிலே கிடைக்கவில்லை. ஒருவரை நேரில் அனுப்பிக் கூப்பிட்டதற்கு, "இதெல்லாம் வேஷம்; பொய். என்னை வரவழைக்கச் செய்யும் சூழ்ச்சி" என்று கூறினானும். இதை யாரும் அவளிடம் கூறவில்லை. எப்படிச் சொல்வது?

"கமலா, தபால்காரன் வந்துவிட்டானு?" இதுதான் காலையில் நான் போனதும் அவள் கேட்கும் முதற் கேள்வி. "கடிதம் இல்லை" என்றதும் அவள் முகத்தில் தோன்றும் ஏக்கம் என் மனத்தைப் பிளக்கும். ஆனாலும் அவள் இன்னமும் நம்பிக்கையை இழக்கவில்லை. அப்போதும் அவளுடைய சூனிய இருதயத்தில் கணவனின் உருவம் ஓட்டிக்கொண்டுதான் இருந்தது.

காலை எட்டு மணி. முதலியார் வீட்டில் இல்லை. தபால்கள் வந்தன. அவைகளிலிருந்து ஒரு கவரை வெகு ஆவலுடன் எடுத்தாள். அது அவள் கணவனின் கையெழுத்து. முதலியார் பெயருக்கு வந்திருந்தது. தந்தை வரும் வரையில் காத்திருக்க முடியவில்லை. பிரித்தாள்; பாவம்! அதுதான் அவளுடைய மரணத்தின் அழைப்பு என்று எப்படித் தெரியும்? படித்தாள். உடனே அவள் முகம் போன போக்கை நான் என்னவென்று சொல்வேன்? "அம்மா!" என்று வீரிட்ட வண்ணம் மார்பை அழுத்திப் பிடித்துக்கொண்டாள். நினைவிழந்து படுக்கையில் சாய்ந்தாள்.

"உடனே இரண்டாயிரம் ரூபாய் வேண்டும். பணம் அனுப்பி னால்தான் வர முடியும். உங்கள் பெண்ணுக்கு உடம்பு சரியில்லை என்பதை நான் நம்பவில்லை. என்னை இப்படி மேலும் மேலும் கடிதம் எழுதி வரச்சொல்லி அவசரப்படுத்துவதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். உங்கள் பெண் நல்ல நடத்தையுள்ளவளாக இருந்தால் நீங்கள் இப்படி அவசரப் பட மாட்டீர்கள். எதற்கும் பணம் அனுப்பினால் வர முடியும்." – இதுதான் கடிதத்திலுள்ள விஷயம்.

"நான்தான் சொன்னேனே; அவன் எதற்கும் துணிந்த படு பாவி!" என்று கத்தினாள் அத்தை. முதலியார் தலை நிமிரவே இல்லை. டாக்டரிடம் ஆட்கள் ஓடினர். அவளுடைய இருண்ட வாழ்க்கையில் நம்பிக்கை என்னும் சூரியனும் மறைந்துவிட்டான்.

* * * *

மறுநாள் காலை ஏழு மணி: சுகந்தாவுக்கு வலிப்பு வந்து இழுப்பதாக ஆள் வந்து கூறினான். நாங்கள் எல்லாரும் போனோம். டாக்டர், "இனி நம்பிக்கை இல்லை. தலையிலுள்ள ரத்த நரம்பு அறுந்துவிட்டது" என்று சொல்லிவிட்டார். உடனே அவள் கணவனுக்குத் தந்தி கொடுத்தனர். இருநூறு ரூபாய் அனுப்பி வைத்தனர். நான் அங்கேயே இருந்தேன்.

பகல் மூன்று மணிக்கு நினைவு வந்தது. என்னை ஜாடை காட்டிக் கூப்பிட்டாள். ஏதோ சொல்ல முயன்றாள். பேச முடியவில்லை. அவள் இஷ்டத்தை ஒருவாறு ஊகித்துக்கொண்டு, அவள் கணவனுடைய படத்தைத் தலையணையடியில் வைத்தேன். உடனே அந்த ஒட்டி உலர்ந்த முகத்தில் வறண்ட சிரிப்புத் தோன்றியது. அப்பப்பா! அந்தக் காட்சியை என்னால் மறக்கவே முடியாது. பிறகு வீடு சென்றேன்.

இரவு முழுவதும் ஒரே கலவரம். நான் தூங்கவே இல்லை. விடியற்காலம் ஐந்து மணி இருக்கும். என் உயிர்த்தோழி இவ் வுலகத்திலிருந்து மறைந்துவிட்ட செய்தி வந்தது. எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தூரத்திலிருந்தே அத்தையின் அலறல் கேட்டது. மாடிப்படி ஏறும்பொழுது முதலியார் என் இரு கைகளையும் பிடித்துத் தம் மார்பின்மீது வைத்துக்கொண்டு கதறி விட்டார். என் தந்தை எவ்வளவுதான் ஆறுதல் கூறியும் ஆற வில்லை. எப்படி ஆறும், விமலா? தங்கப் பதுமை போன்ற குண வதியான பெண்ணை இழந்த அவர் மனம் துடித்தது. அவள்தான் தம்முடைய சகலவிதமான சொத்துக்களும் என்று இருந்தார். அன் பின் உருவமாக இருந்த ஒரு பிறவியை இழப்பதென்றால் யாருக் குத்தான் மனம் வரும்? அப்பப்பா! மிகவும் துக்ககரமான காட்சி.

சுகந்தாவின் முகம் நிர்மலமான சாந்தியுடன் விளங்கியது. கபடமற்ற புன்னகை தவழ்ந்தது. அந்த இடிந்த உள்ளம் கணவனின் காதல் நினைவிலே இளைப்பாறிக் கொண்டிருந்தது.

பரிசுத்தமான பதிவிரதை; பிரேமையின் உருவம்; தன் பதியின் நிந்தனையைச் சகிக்கமுடியாமல் உயிரை விட்டாள். அவளுடைய பஞ்சை யுள்ளம் கடைசி வரையில் அவனை நம்பியது. அவள் வாழ்க்கையில் கண்ட கனவு, எண்ணிய எண்ணங்கள் யாவும் மறைந்தன. தூய்மையான அன்பை, தெய்விகக் காதலை அடையக் கொடுத்து வைக்காத பாவி, கல் நெஞ்சன், கடைசிக் காலத்திலே கூட வரவில்லை.

எல்லாம் முடிந்து வீடு வந்துசேர்ந்தோம். முதலியார் பங்களா ஊருக்கு வெளியில் ஒரு வெட்டவெளிப் பிரதேசத்தில் இருந்தது. அன்று நாங்கள் அங்கேயே இருந்தோம்.

மாலைக் கதிரவன் மலைவாயில் விழுந்துகொண்டிருந்தான். முன் வராந்தாவின் திராதியைப் பிடித்துக்கொண்டு நின்றேன். என் மனம் சூன்யமாக இருந்தது. உலகமே பாழடைந்து விட்டது போலத் தோன்றியது. ஒரே வெட்டவெளி. தூரத்தில் புகைப் படலம் எழுந்தது. என் கண்கள் மங்கின.

"எந்த நேரமும், அப்பாவி தன்னையே
பற்றி மறக்குதில்லை, பஞ்சை யுள்ளமே"

என்னும் வாக்கியங்களை என் மனம் கூறியது. "சுகந்தியின் பஞ்சை உள்ளமும் அப்பாவியை மறக்கவில்லை" என்று முணு முணுத்தேன். கண்ணீர் வழிந்தது. "பேதை சுகந்தி!" என்றேன்.

"அழாதேயம்மா, கமலா, உடம்பு கெட்டுவிடும். பாவம்! குழந்தை மனம் திருப்தி அடையாமலே போய்விட்டதே! அது தான் மறக்கவே முடியவில்லை; கஷ்டம்" என்று கூறிய வண்ணம் முதலியார் என் அருகில் வந்து நின்றார்.

* * * *

"அதோ பார்! விமலா! அதுதான் என் சுகந்தியின் படம்" என்று கூறி அவளைக் கண்கொட்டாமல் பார்த்தேன்.

"ஐயோ பாவம்! தெய்வப் பெண்" என்று கூறிப் பெரு மூச்சு விட்டாள் விமலா.